161400

# ஆனந்த போதினி

தொகுதி 4

1919

D

JL
M211 N19
161400

உ

# ஆனந்தபோதினி

## ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

### தொகுதி 4

யுக்தி௵ ஆடி௴ முதல்—சித்தார்த்தி௵
ஆனி௴ வரையில்
ஜூலை௴ முதல் 1919௵ ஜூன்௴ வரையில்

நா. முனிசாமி முதலியார்,
ஆனந்தபோதினி ஆபீஸ்
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

*All Rights Reserved.*

1919

கலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0

தபால் சார்ஜ் அணா 0—4—0 பிரத்யேகம்.

# ANANDA BODHINI

## GOLDEN OPINIONS

From Rao Saheb T. Ramakrishna Pillay Avl. B.A., F.M.U., F.R.H.S. Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Annanda Bodhini" the Tamil monthy published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

*Madras, 28th Nov. 1915,*
THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKRISHNA PILLAY.

---

From Rao Bahadur A.C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, *now* Registrar of Books Nungambakkam.

I have read several numbers of "Ananda Bodhini." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I Can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
*Madras, 5th Dec. 1915.* } (Sd.) A. C. PRANATARTIHARA IYER.

---

We have received the current number of the Tamil monthly "**Ananda Bodhini**" containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to women either in the form of abstract statements or small stories containing moral lessons.—*Hindu, 22-9-15.*

---

Dear Sir,

Your Tamil monthy entitled "ANANDA BODHINI"............is written in *easy, clear* and *readable* style, *well-suited, particularly,* to *ladies* who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their character. That such a monthly should now be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt with in the short compass of the monthly are such that they deserve to be *read* and *re-read* from the view point of quality, in contradistinction from style and rhetoric, which a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.,* pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuance of the monthly, since it is being and has to be read by both sexes. ... ... ... ... ... It is very much to be envied that there should be over 10000 subscribers on the rolls, which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception. I wish the monthly all success.

Trivandram
28-1-17. } A. V. SUBRAMANIA AIYAR,
F. N. S. A. (Lon.) F. C. I. (Birm.)

# ஆனந்தபோதினி

4-ம் தொகுதி விஷய அட்டவணை

(காளயுக்தி௵ ஆடி௴ முதல் சித்தார்த்தி௵ ஆனி௴ வரையில்)


| விஷயம் | | பக்கங்கள் |
|---|---|---|
| கடவுள் வணக்கம் | ... | 1, 41, 81, 121, 161, 201, 241, 281, 321, 361, 401, 441 |
| வாசிப்பதேன் | ... | 3 |
| **பகவத்கீதை:**—கர்மயோகம் | ... | 7, 57, 109 |
| க்ஷேத்திர யாத்திரை | ... | 9 |
| வியாசமும் பத்திரிகாசிரியரும் | ... | 12 |
| இராஜபக்தி | ... | 15 |
| செந்தமிழ் சீர்மை | ... | 16 |
| வறுமையிற் செம்மை | ... | 18 |
| ஜன்மபலன் | ... | 21 |
| **நித்தியவிதி:**—ஓர் வேண்டுகோள் | ... | 22 |
| தமிழின் சரித்திரம் | ... | 23 |
| அன்பு | ... | 24 |
| **நித்தியவிதி:**— | ... | |
| புண்ட்ரதாரணம் | ... | 26 |
| ஜபம்:—பிராணயாமம் | ... | 74, 106 |
| பூர்வான்னம் | ... | 134 |
| மத்தியான்னம் | ... | 181, 220 |
| போஜனம் | ... | 249, 287, 339, 371, 418, 469 |
| குற்றங் கண்டித்தல் | ... | 29 |
| பெரியோரை வழிபடல் | ... | 33 |
| கோபம் | ... | 37 |
| நான் | ... | 42, 82 |
| ஒரு அறிவிப்பு | ... | 47 |
| இல்லறமல்லது நல்லறமன்று | ... | 47 |

| விஷயம் | | பக்கங்கள் |
|---|---|---|
| விபூதி | ... | 50 |
| அறம் | ... | 52 |
| நித்தியவிதி-சந்தேகவினா | ... | 54 |
| ஆனந்தபோதினி | ... | 55 |
| தமிழ்ப்பாஷை | ... | 56 |
| ஆலோசியாமை | ... | 61 |
| நல்லொழுக்கம் | ... | 63 |
| சாந்தமென்பது பலகீனமல்ல | ... | 65 |
| நவராத்திரி | ... | 88 |
| நாராயணதாஸர் உபன்யாசம் | ... | 90, 139, 209, 256 |
| ஜீவகாருண்யம் | ... | 93 |
| தாய்ப்பாஷை | ... | 95 |
| உபாத்தியாயர்களும் அதிகாரிகளும் | ... | 97, 149 |
| புராதன வழக்கங்கள் | ... | 100 |
| வைப்பு | ... | 104, 172 |
| ஐயவினாவிற்கு விடை | ... | 106 |
| ஞயம்பட உரை | ... | 113 |
| கடவுளும் மதங்களும் | ... | 122, 162, 202, 218 |
| வேண்டி வினைசெயேல் | ... | 129 |
| நாட்டுக் கோட்டை செட்டி மாருடைய கலியாணம் | ... | 131, 191, 224 |
| தேசபாஷைப் பத்திரிகைகள் | ... | 136 |
| தீபாவளி அல்லது நரக சதுர்த்தசி | ... | 144 |
| கேதார கௌரீ விரதம் | ... | 146 |
| நண்பர்களுக்கோர் விஞ்ஞானம் | ... | 147 |
| மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம் | ... | 152 |
| பழமொழிகள் | ... | 155, 190, 231, 384, 467 |
| நமது வாழ் நாட்களின் வெற்றி | ... | 165 |
| கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி | ... | 166 |
| ஆத்திச்சூடி உதாரணக் கதைகள் | ... | 168, 169, 211, 296, 415, 461 |
| தமிழின் தற்கால நிலைமை | ... | 170 |
| கார்த்திகை தீபதரிசனம் | ... | 174 |
| இன்சொல் | ... | 185 |





| விஷயம் | | பக்கங்கள் |
|---|---|---|
| இராஜயோகம் | ... | 188, 205 |
| கீழ்ப்படிதல் | ... | 203 |
| கம்பரை யிழிவாய்க் கூறுவானேன் | ... | 208 |
| இயற்பகை நாயனார் சரித்திரம் | ... | 214 |
| உபாத்தியாயர் முறைமை | ... | 217, 270, 370 |
| ஓர் அறிவிப்பிற்கு மறுப்பு | ... | 223 |
| செட்டு | ... | 225 |
| நம் கடமைகளைப்பற்றிய குறிப்புகள் | | 227 |
| அனுபவ ஞானம் | ... | 228 |
| ஓர் வேண்டுகோள் | ... | 229 |
| ஓர் அதிசயக் கணக்கு | ... | 232 |
| நாம் செய்யத் தகாதவைகள் | ... | 232 |
| ஓர் சந்தோஷ சமாசாரம் | ... | 233 |
| ஆனந்தம் | ... | 242 |
| கம்பராமாயணத்தின் மூலகாவியம் | ... | 252 |
| தான் பெற்ற செல்வம் | ... | 254 |
| சுளிக்கச்சொல்லேல் | ... | 255 |
| உடையது விளம்பேல் | ... | 258 |
| தெய்வச்செயலின் அந்தரங்கம் | ... | 259, 326 |
| நடராஜமூர்த்தி | ... | 265 |
| கொடிய பொறாமை | ... | 269 |
| நமது விஷயம் | ... | 282 |
| வர்த்தகரின் கல்வி | ... | 283 |
| மானம் | ... | 291 |
| கடவுளை நம்பினோர் கைவிடப்படார் | | 294 |
| பால் தாயின் பானம் | ... | 297 |
| வினையாண்மை | .. | 300 |
| ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம் | ... | 302 |
| அறிவாட்ட நாயனார் புராணம் | ... | 308 |
| ஒரு விஞ்ஞாபனம் | ... | 309 |
| கம்பரை யிழித்துக் கூறுவதுண்மையா | | 311 |
| நற்புத்தி | ... | 322 |
| தையல் சொற் கேளேல் | ... | 330 |

| விஷயம் | பக்கங்கள் |
|---|---|
| கீழ்தரப் பாடசாலைகளின் நிலைமை ... | 335 |
| கைவல்ய நவனீத வசனம் ... | 342, 391, 423, 462 |
| அகங்காரம் ... | 347 |
| வாய்மை ... | 349 |
| தற்கால புத்திமதிகள் ... | 362 |
| விதியும் மதியும் ... | 367 |
| மோரின் குணம் ... | 370 |
| பிரபஞ்ச உற்பத்தி ... | 376 |
| நமது நாட்டுப் பூர்வீகக் கிரந்தங்கள் | 377 |
| கண்ணப்ப நாயனர் சரித்திரம் ... | 379 |
| சன்மார்க்க விதிகள் ... | 382 |
| கணவனும் மனைவியும் ... | 385, 402 |
| தாய்ப்பாஷையின் மூலமாய்க் கல்விகற்பித்தல் ... | 412 |
| ஜாதிபேதம் ... | 428 |
| தேசாபிவிர்த்தி ... | 442 |
| கைகள் ... | 446 |
| மனவுறுதி ... | 451 |
| ...ரியாதையின் பெருமை ... | 454 |
| ...மையும் கீழ்ப்படிதலும் ... | 457 |
| ...ர்ணப்பம் ... | 474 |
| **...பக்கங்கள் :—** | |
| ...ழுக்கம் ... | 32 |
| ...ள்ளபோதே தூற்றிக்கொள் ... | 375 |
| **...திரிகள் பக்கங்கள் :—** | |
| ...ற்பெனப்படுவது சொற்றிறம் பாமை | 34, 70 |
| ஸ்திரீகளின் சுபாவமும் நிலைமையும்... | 66, 115 |
| மாதரொழுக்கம் ... | 68, 305, 333 |
| பெண்கல்வி ... | 141, 234, 271, 299 |
| ஓர் ஐயவினா :—உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு... | 154, 198 |
| சிலகேள்விகளும் அவற்றிற்கு விடைகளும் ... | 213 |
| தற்காலப் பெண்களின் கெடுதிகள் ... | 272 |
| பெண்கல்வியும் சங்கீதமும் ... | 434 |
| **வைத்தியக்குறிப்பு :—** | |
| க்ஷயரோகம் ... | 118, 314 |
| சுரம் ... | 153, 192, 350, 393, 474 |
| நாட்டு வைத்தியம் ... | 352 |
| **காவல் :—**கற்கோட்டை ... | 38, 78, 119, 157, 197, 237, 276, 317, 355, 395, 437, 476 |
| **ஆனந்தபோதினி யறிவிப்பு :—** | 2, 313, 410, 449, 473 |
| **பஞ்சாங்கம் :—** | 40, 79, 80, 120, 160, 200, 240, 280, 320, 360, 400, 440, 480 |



**TAMIL POETICAL SELECTIONS**

**for Form IV—1919-1920**

Price Annas 4; Postage Extra.

Approved by the S. S. L. C. Board and the Director of Public Instructions, Madras.

"...NANDA BODHINI" PRESS,
...reet, Sowcarpet, MADRAS.

...will be supplied on application.

மதியானந்தவல்லி என்னும்

# அற்புத நவநீத ரம்பை

—(o)—

இது மிகவும் அற்புதம் வாய்ந்த தமிழ்க்கதை. ஆண், பெண், பாலர், விருத்தர், பண்டிதர், பாமரர் முதலிய எல்லோரும் வாசித்து மகிழ்ச்சி யடையும்படி செம்பாகமான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இதில், நவநீதரம்பை என்னும் கதாநாயகியும், அவள் சகோதரனும், பிறந்த பொழுதே மாற்றாந்தாயினால் வஞ்சிக்கப்பட்டு ஆற்றிலெறியப்பட்டும் சாகாமல் ஓர் உபாத்தியாயரின் மனையிற்சேர்ந்து, தங்களைப்பெற்ற தாய்தந்தையர் இன்னவர்களென் றுணராமலே வளர்ந்து, அந்த உபாத்தியாயர் இறந்தபின் வேட்டையாடச் சென்று, ஒருவரை யொருவர் விட்டுப்பிரிவதும், நவநீதரம்பையின் சகோதரனை நவரத்தின மென்பவனைக் காலராக்ஷசன் தூக்கிக்கொண்டுபோய் பாதாள லோகத்தில் வைப்பதும், நவநீதரம்பை அவனைத்தேடிப் பெரியோரின் அநுக்கிரகத்தால், பாதக்குறடு முதலிய சில சாதனங்கள் பெற்று அந்த ராக்ஷசனுடைய உயிர்நிலையைக்கண்டு அவனைக் கொன்றும், தன் தமையனை மீட்பதற்கு முன் ஒரு தாசியின் வஞ்சனைக்குள் அகப்பட்டு தன்னுடைய அரிய பொருள்களை யெல்லாமிழந்து படாத பாடெல்லாம் பட்டு மீண்டும் ஓர் ரிஷியின் அநுக்கிரகத்தால் தாசியை நாசஞ்செய்து இழந்த பொருள்களை அடைந்து தன் தமையனைக்கண்டு அழைத்துக்கொண்டுவந்து தன் தந்தை இருக்கும் நகரத்தைச் சார்ந்தபோது அவன் தன்னை மகள் என்றுணராமல் மணஞ் செய்துகொள்ள பிரயத்தனப்பட்டதை யுணர்ந்து அவனை ஏமாற்றிவிட்டுத் தன் நகர்க்குச்சென்று தன் தாய்தந்தையரை இன்னாரென்றறிந்து, தன் மாற்றாந்தாய் செய்த வஞ்சனைகளை யெல்லாம் வெளிப்படுத்தி அவளுக்குத் தண்டனை விதித்து தானுந் தன் தமையனும் இராச்சிய முதலிய ஐச்வரியங்களைப் பெறுவதும் படிக்கப்படிக்க மிகுந்த ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்கும். இதனைப் படிப்பதனால் வஞ்சனை செய்வார் கேட்டை யடைவரென்... பதையும், பொறுமையுடையார் நன்மையடைவாரென்பதையும் ...த்தர்களுக்கு எவ்விதத்தாலும் தீங்குவராதென்பதையும், ஆர் ...ஞ் செய்வார்க்கு பலதீங்குகளும், நிந்தையும், உண்டாமென்பதையும், இன்னும் பல அரிய நீதிகளையும், நன்குணரலாகும். இன்னும் இதில் இதைப்போன்ற வேறொரு விநோதமான கிளைக்கதையு முண்டு. இது ஒவ்வொருவரும் வாசிக்கத்தகுந்தது. இக்கதை இவ்வாறு சிறந்ததாயிருப்பதனாலேயே இதன் முதற்பதிப்பு புஸ்தகங்கள் வெகுசீக்கிரமாகவே செலவாகிவிட்டன. இப்பொழுது இது இரண்டாம் பதிப்பாக உயர்ந்த கடிதத்தில் மிக்க சீர்திருத்தங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. பிந்துவோர்க்கு புஸ்தகம் கிடைப்பது அருமையாகும்; வேண்டுவோர் விரைவில் வாங்கிக் கொள்க.

இதன் விலை ரூபா 1. தபால்கூலி ...

எமது விலாசம் :—

ஆனந்தபோ...

நெ...

---



# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

| தொகுதி | காளயுக்திவருஷம் ஆடிமீ கவ | பகுதி |
|---|---|---|
| 4 | 1918-ம்வருஷம் ஜூலைமீ 16வ | 1 |

## கடவுள் வணக்கம்.

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்று மெனவாற்
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவ தில்லை
சிந்தையறி யார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க் கமாந்
தெய்வகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்ய ரலரோ
இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
ரிருக்காதி வேத முனிவ
ரெண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்க
ளிரவிமதி யாதி யோர்கள்
கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்க ளியாவருங்
கைகுவித் திடுதெய் வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்க டவுளே.

---

ஆக்குவை மாயை யாவு மொடுயினி லவற்றை மான
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறைப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளா னந்தங்
காக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே.

---

...ணவரை யன்றி வேறோ
...ரு மின்ப வாழ்வுந்
...னலோதார் தெய்வம்
...தாரண னந்த வாழ்வே.

# ஆனந்தபோதினி

காளயுக்தி௵ ஆடி௴ கஉ

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாய், யாவும் தந்து காத்தழிக்கும் ஏகநாயகனாய், எங்கணுநிறைந்த கருணையங்கடலாய், மாசற்ற மெய்ஞ்ஞான மேனியனாய், யாவுந் தானாய், எதிலும் தாக்கற்று, ஆனந்த நடம்புரியும் பரமநாயகனும் கிருபாமூர்த்தியின் திருவருளால் நமது ஆனந்தபோதினியின் மூன்றுமாண்டு செவ்வனே முற்றுப்பெற்று, இம்மதி நான்காமாண்டு தொடங்கி யிருப்பதற்காக அப்பரம்பொருளைத் திரிகரணங்களோடும் வாழ்த்திப் போற்றுகின்றோம். யாவும் ஆண்டவனே செய்கிறாரெனினும் மனிதரூப மூலமாகவே நாம் நன்மை தீமைகளைப் பெறுகிறோம். அதனால் அன்போடு நமது சஞ்சிகைக்குச் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து இதை ஆதரித்து வருவதோடு, சிரமம் எடுத்துக்கொண்டு இதற்குச் சந்தாதாரர்களைச் சேர்த்து விர்த்தி செய்வோர்க்கும், சற்றும் சுயநலங் கருதாது இதன் க்ஷேமாபிவிர்த்தி யொன்றையே கருதி இதற்கு விஷயதானம்புரிந்து உதவிவரும் கற்றுணர்ந்த ஆன்றோர்களுக்கும் மிக்க நன்றி யறிதலோடு வந்தனம் புரிகிறோம்.

இப்போது காகிதம் முதலிய அச்சுக்கருவிகள் அளவுமீறி விலையேறியிருப்பதால், பத்திரிகைகள் சஞ்சிகைகள் இவற்றில் பெரும்பாலானவற்றிற்கு சந்தா வுயர்த்தப்பட்டும், சில அளவில் குறைக்கப்பட்டு மிருக்கின்றன. பெரும்பாலான சஞ்சிகைகள் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஒன்று சேர்ந்து வெளிவருகின்றன. தவறாது மாதமாதம் வெளிவரும் சஞ்சிகை
டென்றே கூறலாம். கஷ்டங்கள் மற்
ளவை போலவே நமக்கு மிருக்
வாவது, சஞ்சிகையைக் கு
கிறோம். அதற்கு மாறாய் இ



செய்ய ஆவலுடையோம். நமக்கு இந்தத் தைரியத்தை அளித்திருப்பது நம் சந்தாநேயர்களுடையவும், விஷயதானம்புரியும் அறிவாளிகளுடையவும் பேருபகாரமேயாகும். இவர்களுடைய அன்பும் சிரத்தையுமே நமது சஞ்சிகை யிதுகாறும் அடைந்துள்ள அபிவிர்த்திக்குக் காரணம். அநேகர் சந்தாதாரர்களைச் சிபாரிசு செய்தாலும், நம் சந்தாதாரர்களின் தொகையை நோக்க இன்னும் அநேகர் இவ்விஷயத்தில் தயவு பாராட்டாமலே யிருக்கிறார்கள். ஒருவர், தன் நண்பர்கள் பலரில், ஒரே யொருவரைச் சேர்ப்பது பிரயாசையான காரியமல்ல. ஆயினும் அதுகொண்டு சஞ்சிகை எவ்வளவோ விர்த்தியடையு மென்பது திண்ணம்.

ஆதலின் நம் தாய்நாட்டின் முன்னேற்றத்தையும், நம் தாய்ப் பாஷையின் அபிவிர்த்தியையும் கவனித்து, எல்லாச் சந்தாநேயரும் நமது கோரிக்கையை நிறைவேற்றுவீர்களெனப் பிரார்த்திப்பதோடு, நமது அன்பார்ந்த சந்தாநேயர்களும், விஷயதானம்புரியும் அறிஞர்களும் ஆயுள் விர்த்தியும், சுகதேகமும், கவலையற்ற சந்தோஷகரமான மனமும் பெற்று நமது ஆனந்தபோதினியை ஆதரித்து வரும் வண்ணம் அருள்புரியுமாறு கருணைக்கடலாகிய எங்கும் நிறைந்த சச்சிதானந்தப் பரம்பொருளை மனதாரப்போற்றித் துதிப்போமாக.

ஓம் தத்ஸத்.

---

## வாசிப்பதேன் !

ஆதியில் மனிதர்கள் ஒருவர்க்கொருவர் தங்கள் மனோபாவங்களைப் பலவித சத்தங்களாலேயே வெளியிட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்கே பாஷை யென்று பெயர். அந்த நிலைமையில் ஒருவருக்கொருவர் நேரில்மட்டுமே பேசிக்கொள்ள முடியுமன்றி தூரத்திலிருப்பவர்களுக்கு ஒரு சங்கதியைத் தெரிவிக்கவேண்டுமாயின், ஒருவரிடம் அச்சங்கதியைக் கூறித்தான் அனுப்பவேண்டும். மூன்றாவது மனிதனுக்குத் தெரிவிக்கலாகாத இரகசிய சங்கதியை நமது மனிதனுக்கு அறிவிக்கவேண்டுமாயின் சாத்தியப்படாது. அக்காலத்தில் ஒன்றைக்கற்றுக்கொள்ளவேண்டுமாயின், உபாத்தியாயரிடத்தி லிருந்துகொண்டு அவர் வாயாரக் கூறக் கேட்டு மனப்பாடம் செய்துகொள்ளவேண்டும்.

பிறகு பலவித சத்தங்களுக்கும் [illegible] பரிந்தமட்டில்

அறிந்துகொள்ளக்கூடிய வண்ணம், வரிவடிவாலாகிய பலகுறிகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளே எழுத்துகளாகும். இதன் பிறகே சுவடிகளுண்டாகி வாயாற் கூறக்கேட்டே கற்றுக்கொள்ளும் கஷ்டம் நீங்கிற்று. ஒரே உபாத்தியாயரிடம் ஏககாலத்தில் பல பிள்ளைகள் பலநூற்களைக்கற்க சௌகரியம் உண்டாய்விட்டது.

ஆயினும் அப்போதும் கல்விகற்பதில் இப்போதுள்ளது போன்ற சௌகரியங்களும், குறைந்த பணச்செலவும் கிடையாது. ஒருவன் ஒருநூலைக் கற்கவேண்டுமாயின் முதலாவது அந்தநூல் யாரிடத்தி லிருக்கிறதென்றறிந்து, அவர்களை யடுத்து, அவர்கள் கேட்கும் தொகையை யளித்து, அவர்களிடமுள்ள நூலைப்பார்த்து தானே எழுதிக்கொள்ளவேண்டும். ஓலையில் எழுத்தாணிகொண்டு நன்றாய் எழுதத் தனக்குத் தெரியாதெனின், அதற்கு வேறே ஒருவர்க்கு கூலிகொடுத்து எழுதிக்கொள்ளவேண்டும். பிறகு உபாத்தியாயரைக் கண்டுபிடித்து அவருக்குச் சகல பணிவிடைகளும் செய்துகொண்டே அவரிடம் கல்வியைக் கற்கவேண்டும். அக்காலத்தில் ஒரு இராமாயணம் வேண்டுமாயின் எவ்வளவோ பொருள் கொடுத்து, அதை யெழுதி முடிக்கு மட்டும் எத்தனையோ மாதகாலம் காத்திருந்து அதைப்பெறவேண்டும்.

நேயர்களே! அக்காலத்தில் கல்விச் செல்வத்தைப் பெற வேண்டுமாயின் எத்தகைய கஷ்டம் இருந்திருக்குமென்பதையும், இக்காலத்தில் எல்லா சௌகரியங்களுமிருந்தும், இக்காலத் தவர்களில் ஒருவரும் தங்களுக்கிணையில்லாத, கம்பர், காளமேகர், ஒட்டக்கூத்தர், திருவள்ளுவர், ஔவை, முதலியவர்களும், இன்னும் சங்கப்புலவர்களும் எத்தகைய கஷ்டப்பட்டு அத்தகைய மேதாவிகளா யிருந்திருக்கவேண்டும் என்பதையும் நீங்களே சற்று சிந்தித்துப்பார்த்தால் உணரலாகும்.

இக்காலத்தில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபின் எத்தகைய நூல்களையும் சொற்ப விலைகொடுத்து நினைத்தகாலத்தில் பெறலாம். அப்படியிருந்தும் இக்காலத்தில் அவர்களைப்போன்ற மேதாவிகள் கிடைப்பது அருமையா யிருத்தற்குக் காரணமென்னை?

அக்காலத்தவர் கல்வி கற்பதில் மிக்க சிரத்தையும் பக்தியும் உடையவர்களா யிருந்தார்கள். குருவினிடத்தில் தெய்வபக்தி வைத்து அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறாமலும், அதை



யலட்சியஞ் செய்யாமலும், அதையே வேதவாக்காகப் போற்றி நடந்துகொண்டார்கள். அதனால் கல்வியாலாய இம்மை மறுமைப் பயன்கள் இரண்டையு மடைந்தார்கள்.

உலகில் ஒவ்வொருவரும் முதலில் குருவினிடம் கல்வியைக் கற்றுக்கொள்ளவேண்டும். கற்று அதன்படி உலக அனுபவத்தில் தேர்ச்சியடைந்த பின்பேதான் இன்னொருவனுக்குப் போதிக்கத் தகுதியுடையவனாகிறான். இதே உலக அனுபவம்.

இப்போது கல்வி கற்பதென்பது குருவின் போதனைப்படி நடப்பதென்றாகிறது. முற்காலத்தில் புத்தகமில்லாமலும் அருமையாயும் இருந்தபோது ஒரு உபாத்தியாயர் ஒருவர் இருவர்க்கு மேல் ஏககாலத்தில் போதிக்கக்கூடாதவரா யிருந்தார். இப்போதோ தன் போதனையை யெழுதி அச்சடிப்பித்துத் தாம் எங்கிருந்தாலும் பலபேருக்கும் போதிக்கிறார். குரு நம் எதிரி லிராவிடினும் அவர் நூல் நம் கையிலுள்ளவரையில் அவர் நமக்கு நேரில் போதிப்பவரே யாகிறார். ஏனெனில் அவர் வாயாற் போதிக்கும் விஷயங்களே அந்த நூலில் இருக்கின்றன.

குருவின் போதனைகளை ஒரு செவியிற் கேட்டுக்கொண்டு மறு செவியில் விட்டுவிட்டால் நாம் அவரிடம் கேட்டென்ன பயன்? அவர் கூறி யென்னபயன்? ஒன்றுமேயில்லை. ஒரு நூலை வாசிப்பது என்றால், அந்த ஆசிரியர் முன்னிலையிலிருந்து அவர் போதனைகளைக் கேட்பதேயன்றி வேறல்ல. குருகூறும் போதனையைக் கேட்டால் எப்படி அதையலட்சியம் செய்யலாகாதோ, அப்படியே அவர் தமது நூலின் மூலமாய் நமக்குப்போதிப்பதை வாசித்தால் அதன்படி நடக்கத்தவறலாகாது. இரண்டிலும் வார்த்தை பேதமேயன்றி விஷயமும் பொருளும் ஒன்றே. எப்படி குருவின் போதனையைக் கேட்பது அப்போதனையின்படி நடப்பதற்கோ, அப்படியே அவருடைய போதனைகளை வாசிப்பதும் அப்போதனைகளின்படி நடப்பதற்கே.

ஆகையால் நாம் ஒருநூலை வாசிப்பதெல்லாம் எற்றிற்கெனின் வாசித்தபடி நடப்பதற்கே. அப்போதுதான் கல்வியால் அடைய வேண்டிய பயனை யடைவோம். அப்படி நடவாத வரையில் வாசிப்பது வீணே.

கற்றபடி நடந்தால்தான் நன்மை பெறுவோம் என்று

ஆன்றோர் கூறியிருக்கிறவரையில், நாம் அவ்வார்த்தையை யலட்சியம் செய்து நடப்பது துன்பம் விளைவிக்கும் காரியமாகும். மேலும் அப்படி நற்போதனையை யலட்சியம் செய்வோரை ஆன்றோர் இழித்துக் கூறுகின்றனர். திருட்டாந்தமாய், 'ஸ்ரீராமர் தாடகைமேல் எய்த பாணம் அவளுடைய மார்பின்வழியே நுழைந்து (அங்கு தங்காது) பின்னுள்ள முதுகின்வழியே வெளிதாண்டிற்று' என்று கூறிய கம்பர், அதற்குத் திருட்டாந்தம் கூறமுயன்று, 'அயோக்கியருக்குச் சான்றோர் ஒரு நற்புத்தியைக் கூறின் அதை யவர்கள் (மனதிற்றரித்து அதன்படி நடவாமல்) ஒரு செவியில் நுழையவிட்டு எப்படி மறுசெவியில் வெளியில் விட்டுவிடுகிறார்களோ, அவ்வாறு, அப்பாணம் போயிற்று ("புல்லோர்க்கு நல்லோர் சொன்னப் பொருளெனப் போயிற்றம்மா") என்று கூறினார்.

இன்னும் ஒருமகான் "படிக்கும்படி நடக்கப் படிக்காவிடிகள் மோக்ஷப் பதமற்றுப்போனாலும் போகட்டும் *" என்றார்.

ஆகையால் நமது அன்பார்ந்த சந்தாநேயர்களனைவரும் இதைக் கருத்தில்வைத்து, எதை வாசித்தாலும் அதிலடங்கியுள்ள நற்போதனைகளின்படி நடந்துகொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறோம். இக்காலத்தில் நாகரீகச் சீர்திருத்தமென்ற மயக்கங்கொண்டு, நமக்கு அனாவசியமானவைகளும், கெடுதியை விளைவிக்கக் கூடியவைகளுமான அன்னிய ஆசாரங்களை நம்மவரில் அனேகர் பின்பற்றுகிறோம் என்பது யாவருமறிந்ததே. அவற்றைப்பற்றி பன்முறை விரிவாய் நமது சஞ்சிகையில் பிரசாரம்செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில், பெயரைக் குறுக்கி எழுதுவதுமொன்று. நம்முன்னோர் நாமம் சூட்டுவதின் விசேடத்தையும் மற்ற நாட்டாரின் பெயர்களையும் பற்றி சஞ்சிகையில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இராமசாமி என்பதை க. இ. பிள்ளை யென்றால், இரண்டிற்கு முள்ள வித்தியாசத்தைச் சற்று கவனித்தால் அறிவாளிகளுக்கு நன்குவிளங்குவதோடு அதிலுள்ள தோஷமும் மனதிற்கு வருத்தத்தையுமுண்டாக்கும்.

இது ஒருபக்கமிருக்க, ஆயிரக்கணக்கான சந்தாதாரர் இருக்குமிடத்தில் அப்படி எழுதினால் (ஒரு எழுத்தையே முதலாகவுடைய



பெயர்கள் பலவிருப்பதுபற்றி) நமக்கு வீண்குழப்பத்தை யுண்டாக்குவதால், முழுபெயரையே எழுதியனுப்புமாறு பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம். நெ. 5174 சந்தாதாரராகிய ம-ா-ா-ஸ்ரீ அ. விநாசித்தம்பி பிள்ளை அவர்கள் (நெ. 10. புது செட்டித்தெரு, கொழும்பு) மட்டும் தமது முழுப்பெயரையும் வரைந்தனுப்பினார். மற்ற நண்பர்கள் எக்காரணத்தாலோ பாராமுகஞ்செய்துவிட்டார்கள். அன்பார்ந்த சகோதரர்களே! உங்கள்மேல் குற்றம் கூறவேண்டி இது எழுதப்பட்டதென்று எள்ளளவும் கருதாதீர்கள். வாசித்தபடி நடக்கவேண்டும் என்ற விஷயத்தை மனதில் உறுத்தச் செய்யக்கருதி இச்சிறு விஷயத்தை எடுத்துக் காட்டியதன்றி வேறில்லை. அப்படியும் குற்றமாய்த்தோன்றின் நம்மை மன்னித்துவிட்டு உங்கள் சுயநலத்தைக்கருதி விஷயத்தை யேற்றுக்கொண்டு நமது சந்ததியாரின் முன்னேற்றத்திற்கு உதவுகோலாயிருப்பீர்களென்று பிரார்த்திக்கிறோம். ஓம் தத் ஸத்.

---

## பகவத்கீதை—கர்மயோகம்.

(458-வது பக்கத் தொடர்ச்சி)

அத். 3. ச்லோகம் 25: ஏ பார்த்த, ஆத்மஞானமில்லாதவர்கள் கருமத்திலே பலாபேக்ஷையுள்ளவர்களாய் அதை யெப்படி செய்கின்றார்களோ அப்படியே ஆத்மஞானமுள்ளவன் பலாபேக்ஷை இல்லாதவனாய் ஜனங்களுடைய பிரயோஜனத்தைச்செய்ய இச்சித்தவனாய்ச் செய்யவேண்டும்.

என் அன்பார்ந்த, சகோதர, சகோதரிகளே! மேல்கண்ட ச்லோகத்தின் கருத்தை உய்த்துநோக்கி யறிந்து பார்க்கக் கேட்டுக்கொள்கின்றனன். ஏனென்றால் ஜனங்களின் பிரயோஜனத்தைக் கருதிசெய்ய வேண்டுவதால் நன்மை கிடைக்குமென்ற கருத்தே. அப்படிச் செய்வதில் அவர்களிடமிருந்து பதில் பிரயோஜனம் கருதலாகா. கருதினால் காமியகருமமாகிறது. கருதாவிட்டால் நிஷ்காம கருமமாகிறது. காமியகருமம் வினையை யுண்டுசெய்யுஞ் சக்தியினால் பிறவிறப்பு உண்டாகுவதோடு அநேக இம்சையுமுண்டாகும். நிஷ்காம கருமம் மேல்குறித்த ஒன்றையும் உண்டாக்காமல் முடிவில் மோக்ஷத்தைக் கொடுக்கும் இகத்திலிருக்கும் வரையிலும், மேன்மையான பெருமை யெல்லாம்கொடுக்கும். எங்ஙனமெனில், உதாரணமாக, பாலகங்காதரதிலகர், காந்தி, லாலாலஜபதிராய், விபினசந்திரபாலர் இன்னுமுள்ள மற்றவர்களும் எந்தப் பிரதி பிரயோசனத்தைக் கருதிச் சொல்லொணாத கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து நமது தேசத்துக்கும் நமது சகோதரர்களுக்கும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்? மேல் எழுதப்பட்ட ச்லோகக்கருத்தும் இவர்கள் கருத்தும் ஒற்றுமையோ, அல்லது வேற்று

மையே கவனித்துப்பாருங்கள்! அவர்கள் பூத உடம்போடு இருக்கும்போதே புகழுடம்பும் கிடைக்கப் பெற்றார்கள். நன்மைசெய்ய முன்னிற்பவர்கள் ஒரு காலத்திலும் கேடடையார்கள். ஆகலால் நாம் ஒருவருக்கொருவர் ஒற்றுமை மேலிட்டு விகற்பத்தை ஒழித்திருப்பதோடு, அவரவர்களால் இயன்ற உதவியை மற்றவர்களுக்குச் செய்து கெட்டவழியிலிருப்பவர்களை நல்வழியில் வரச்செய்து நமது தாய்நாடும், நமது தாய்பாஷையும் கீர்த்தி யடையும்படியான எத்தனத்தை ஒவ்வொருவரும் திரிகரண சுத்தியோடுசெய்ய முயன்றால் அடையக்கூடிய நன்மையை அனுபவத்தில் காணலாம்.

அத். 3. சு. 30. ஏ அர்ச்சுனா! சகல கருமங்களையும் *என்னிடத்தில் ஒப்பித்து நான் பரமாத்மாவின் வேற்காளாய்ச் சகல கருமத்தையுஞ்செய்து பரமாத்மாவுக்கு ஒப்பிக்கவேண்டியவ னென்னு மெண்ணத்தோடு பலாபேக்ஷையின்றியும் (தனதென்னும்) மமதையைவிட்டும், தாபத்தை (விசனத்தை) விட்டும் யுத்தத்தைச் செய்.

அத். 3. சு. 31. எந்தமனிதர்கள் என்வாக்கியத்தில் விசுவாசமுள்ளவர்களாயும், என்னிடத்தில் துவேஷமற்றவர்களாயும், எனது இந்த அபிப்பிராயத்தை எப்பொழுதும் அநுசரித்து நடக்கின்றார்களோ அவர்களுங்கூட கருமங்களாலே விடப்படுகின்றார்கள்.

அத். 3 சு. 32. எவர்கள் எனது இந்த அபிப்பிராயத்தைத் துவேஷிக்கின்றவர்களாய், அதை அநுசரித்து நடப்பதில்லையோ, அவிவேகிகளாயும், பிரமவிஷயமாயும், சகல கருமம் விஷயமாயுமுள்ள ஞானத்தில் மூடர்களாயுமிருக்கின்றவர்களைக் கெட்டுப்போனவர்களாக அறி என்று பகவான் அருச்சனனுக் கருளியிருப்பதால், ஒவ்வொருவருஞ் செய்யக்கூடிய பரோபகாரங்களை நல்ல மார்க்கத்துக் கேகும்படியாகச் செய்ய முயலவேண்டும். செய்யத்தகுந்ததை யுணர்ந்து செய்யவேண்டும். மனம்போனபடியான பரோபகாரங்களை தீயவழியில் நடத்தலாகாது. அப்படி நடப்பவர்களைத் தீயவழியினின்று நீக்கி நல்லவழியில் நடக்க மார்க்கம் தேடவேண்டும். அப்படிச் செய்யத் தலைப்பட்டால் நாமும் நமது தாய்ப்பாஷையும் நமது தாய்நாடும் எவ்வளவு மேன்மை அடையுமென்பதை இன்னமாய்க் காணலாம். எப்பொழுது தீயச்செயல் ஒழியுமோ அப்பொழுது அதற் கெதிரிடையான நல்லமார்க்கம் உதயமாகும். அப்படியானால் பரமாத்துமாவும் பிரகாசிப்பார். அப்பொழுது நமக்குவேண்டிய வரங்களைத்தந்து ரக்ஷிப்பார். நமக்கேற்பட்ட குறைகளெல்லாம் தீர்ந்து சுகமடைவோம்.

நா. அ. குருசாமிநாயுடு, போத்தனூர்.

---

* சர்வேஸ்வரனான பரமாத்மாவிடத்தில்.



## க்ஷேத்திர யாத்திரை

என்னு மிவ்வரிய விஷயத்தை முற்று முணர்ந்த முதியோர்முன் சிற்றறிவுடைய சிறியேன் சுருக்கி எழுத முன்வந்ததானது, கமலக்கண்ணனை யேந்துங் கருடன் முன் சிறிய கொசுகானது தானும் ஒரு பறவையெனப் பறக்கும் பான்மையதெனினும் கற்றோர்கள் குற்றங்களை நீக்கி குணத்தைக் கொள்வார்களென்று துணிந்தே இதை எழுதலாயினேன்.

க்ஷேத்திரமென்பதற்கு தெய்வத்தன்மை பொருந்தியதும், மகான்களால் பூஜிக்கப்பெற்றதும், செயற்கையா லாகாமல் இயற்கையாகவுண்டாயதும், மூர்த்திகள் விளங்கிக்கொண்டிருப்பதும், மூழ்கினோருடைய பாவங்களை எளிதில் பரிகரிக்க வல்ல புண்யதீர்த்தங்கள் வாய்க்கப்பெற்றதும், மகான்களால் (அடியார்களுக் கரும்பருத்தியதுபோன்ற) அற்புதச் செயல்கள் நடந்தருளியதும், மகான்கள் பிறப்பிடமும் முத்தியடைந்ததுமான அநேக மகிமைகள் பெற்று விளங்கும் புண்யஸ்தலமே க்ஷேத்திரமெனப்படும். க்ஷேத்திரமென்பதற்குச் சில வேறுபொருளு முரைப்பரெனினும், இக்கெடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதனையே பொருத்தமாகக் கொள்ளவேண்டியதா யிருக்கிறது.

இதிலும் சில இடங்கள் தீர்த்தங்களால் விளங்கியும், சில தீர்த்த விசேடம் பொருந்தியும், சில ஸ்தலமகிமையமைந்தும், சில இம்மூன்றையாலும் விசேடித்து விளங்கி யிருக்கின்றன. மேலும் நமது புண்யபூமியாகிய பரதகண்டத்தில் இமயமலை தொடங்கி தென்கடல் இறுதியாகவுள்ள இடங்களில் அளவில்லாத க்ஷேத்திரங்கள் இருக்கின்றனவென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். தவிர நம் முன்னோர்களும் நாமும் ஒருவன் யாத்திரை செய்வதாகப் புறப்பட்டால் "என்ன, காசி ராமேசுவரம்போய் வருகிறாயா" என்று இன்றும் வழங்கி வருகிறோமல்லவா? இதனால் காசியிலிருந்து தென்கடலிறுதி இடையிலுள்ள க்ஷேத்திரங்க ளிருக்கின்றனவென்பது தெற்றெனத் தெரிகிறது. இதிலும் சுயம்புவாக வுண்டானதும், அன்பர்கள் பொருட்டு உண்டானதும், ஊழிகாலத்திலும் அழியாமல் நிலைபெற்றதுமாகிய க்ஷேத்திரங்கள் நம்மைத்தவிர இதரமதங்களில் இராதென்றே நிச்சயமாய்ச் சொல்லலாம். இதனை யோசிக்கில் நம் நாடு சிருட்டிகாலந்தொடங்கி ஆசாரங்களிலும் ஆன்மார்த்தவிஷயங்களிலும் தெய்வ வழிபாடுகளிலும் மற்ற நாடுகளைவிடச் சிறந்துவிளங்கி யிருக்கிறதென்பது ஒருவராலும் மறுக்கமுடியாத விஷயம்.

நம் நாட்டிலுள்ள புண்யதீர்த்தமாகிய காவிரிபாயும் தென்னாட்டில் (சோழமண்டலத்தில்) நிலைபெற்ற ஆலயங்கள் தானே வுண்டாகினவென்பதை விளக்க சைவசமயாசாரியராகிய வாகீசமுனிவரும் (திருவாரூர் திருத்தாண்டகம் 10-வது) "...................தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாய்க் கொண்டாளே" என்று தமிழ்ப்பாசுரம் பாடியருளியிருக்கின்றனர். சைவசமயாசாரியர்களாகிய நால்வரும் மெய்ஞ்ஞானச் செல்வர்களாகிய பட்டினத்தடிகளும் ஆழ்வார்களும் யாத்திரை முடிந்தபின்பே சித்திபெற்றிருக்கின்றனர். அழியாத அந்தணரென வந்த நந்தனாரும் சிதம்பரம் தரிசித்தே வீடடைந்தனர். முற்காலத்திய அரசர்களில் இவரில் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை முடித்தே தன் பாவத்தைப் போக்கிப் பரமனிடம் பாசுபதம்பெற்றுப் பகைவர்களை வென்றான். *அருணையில் ஓரரசன் வேட்டையின்பொருட்டு எறிந்த குதிரையும் அவன் துரத்திவந்த நாயும் ஜோதியடைவாய்ச் சார்ந்தனவென்பது நாம் அறிந்த விஷயமே. இவையெல்லாம் யோசிக்கில் யாத்திரைபோய் வருவது

---

* அருணாசலபுராணம். புளகாதிபன் சருக்கம்.

எவ்வளவு புண்ய மிருந்த விஷயமென்பது விளங்குகிறது. இதைபற்றியன்றோ நம் மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவரும்,

" மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றொடங்கினர்க் கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். ஆதலால் நாமும் நமக்கு இறைவனருளியிருக்கும் அற்ப ஆயுளினும் நம் சக்தியானுசாரம் யாத்திரைபுரிந்து அதனால் வரும் பயனை அடைவோமாக.

சிலர் சொல்லுவது "காசி காசி யென்று நீர் கால்கடுக்க வோடுறீர்" என்று சிவ வாக்கியர் சொன்னதை அந்தரங்கார்த்தம் தெரியாமல் மூடத்தனமாய் நம்பிக்கொண்டு காசிமுதலிய தலங்களுக்கு போவதால் யாதுபயன்? நம் திரேகசுகத்திற்கும் திரவியத்திற்கும் கெடுதியேயொழிய வேறில்லை. காசிமுதலிய தலங்களில்தான் கடவுள் இருக்கிறாரா? அந்தக் கடவுள் இங்கில்லையா எங்கும் நிறைந்த கடவுள் இங்குமிருக்கிறார். இங்கிருந்து கும்பிட்டால் அந்தத் தெய்வம் ஏற்றுக்கொள்ளாதோ, "காசிக்குப்போனாலும் கர்மம்விடாது" என்ற பழமொழியை மொழிகின்றனர். அதே சிவவாக்கியர்

" †பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே ஜெபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
மிண்டனாய்த் திரிந்தபோ திறைத்தநீர்க ளெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சுற்றிவந்த தெத்தனை

* * * * * *

என்று அன்னவரும் பண்டையிலே யாத்திரைசெய்தே இந்நிலைமைக்கு வந்திருக்கின்றனரென்பது விளங்குவதை அறியாதவர்போலும். சிலர் "பணமிருந்தால்தான் யாத்திரை போய் வரமுடியும்; பணமில்லாதவன் எவ்விதமாய் யாத்திரைபுரிவது; பணம் வைத்துக்கொண்டிருக்கிற நீ போய்வந்தால் அதில் கொஞ்சம் புண்ணியம் எனக்குக் கொடுத்துவிட்டால் தீர்ந்துபோய்விடுகிறது" என்று அலட்சியமாய்க் கூறிவிடுகிறார்கள். அவரவர்கள் சக்தியானுசாரம் இயன்றமட்டில் பக்கங்களிலுள்ள ஸ்தலங்கட்காவது போய்வரலாமல்லவா? ஓர் பிரபு ஒரு சமயம் ஓர் சிவாலயத்திற்கு தரிசனத்துக்குப் போயிருந்தபொழுது குருக்கள் ஆலயத்திலிருக்கும் விக்கிரகங்களின் பெயர்களை ஒவ்வொன்றாய்ச் சொல்லிக்கொண்டே வரும்பொழுது பக்கத்திலிருந்த விக்னேசுரரைச் சுட்டிக்காட்டி இவருடைய பெயர் என்னவென்று அக் குருக்களைக் கேட்டதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அன்னவர் வேணுமென்றே கேட்டாரோ அல்லது அறியாமையினால் கேட்டாரோ அக்கடவுளுக்குத்தான் தெரியும். இவைகளெல்லாம் நம் நாட்டில் மதாசாரக் கல்வியில்லாததின் குறையேயாகும். இக்குறைகளையெல்லாம் நீக்கக் கருணாநிதியாகிய பரம்பொருள் என்று கருணைபுரிவாரோ அறிகிலோம்.

நிற்க, யாத்திரை போவதால் என்ன பயன் என்பதை இங்கு சற்று ஆராய்வோம். ஒருவன் ஓர் மரத்திலிருக்கும் கனியைக் குறிபாராமலே பல் கற்களை எறிந்துகொண்டிருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவன் எறிகிற கற்களில் ஒரு கல்லேனும் அக்கனியில் படாதோ? பட்டு விழுந்தால் அவன் எதிர்பாராமல் விழுந்த கனியை எவ்வளவு சந்தோஷத்தோடு எடுத்து அதன் ருசியை நுகர்வான். அதுபோல நாமும் பற்பல க்ஷேத்திரங்கட்கு சாஸ்திரங்களில் சொல்லிய முறைப்படி செல்லாவிட்டாலும் காரணார்த்தமாய்ப் போனாலுங்கூட

† பூர்வம்.



நம் நல்லதிட்டானுகூல வசத்தால் நமக்கு ஆசான்கிடைத்து அதினால் பிறவிப்பிணி ஒழிந்தாலும் ஒழியலாம். தவிர ஆங்காங்கு ஆனந்த பரவசத்தால் ஆடிப்பாடி மெய்யுருகிக் கண்ணீர் ததும்பித் துதித்து நிற்கும் பக்தர்களைப் பார்ப்போமேயானால், நமக்கும் அம்மாதிரியான பரவசம் உண்டாகுமென்பது திண்ணம். அப்பரவசத்தால் பக்தி அதிகரிக்கின்றது. அதினால் முமுட்சுவத்திற் கேதுவான மார்க்கமுண்டாகின்றது. இதல்லாமல் அடியார்கள் ஓதுகிற திருவாசகம் திருவாய்மொழி முதலிய திவ்யபாசுரங்களைக்கேட்பதினாலும் 'கற்றலிற் கேட்டலினிது' என்று நாயனார் சொல்லியபடி அதிலும் புண்யமிருக்கின்றது. இவையெல்லாம் உத்தேசித்தே நம் ஔவைப்பாட்டியாரும் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்ற விலையில்லா மாணிக்கத்தை யிலவசமாயளித்திருக்கின்றனர். ஓர் சொரசொரப்பான கல்லைப் பலபேர் நடக்கும் வழியிற்போட்டுவிட்டால் ஜனங்கள் அதின்மீது நடக்க நடக்க எப்படி அதன் சொரசொரப்பு நீங்கி வழவழப்பு உண்டாகிறதோ அதுபோலப் பலபுண்ய தீர்த்தங்களில் மூழ்கிக்கொண்டே வந்தால் பாவங்களெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் நசித்துப் போய்விடுகின்றன. இதுவுமல்லாமல் புண்ணியங்கிடைக்காவிடினும் வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறபடி ஓடும் ஜலத்திற்கு ஓர்வித ரசாயன சக்தி இருக்கிறபடியால் ஆற்றுநீரில் குளிப்பதால் நமை சொறி சிரங்கு முதலிய ரோகங்களும் நீங்குகின்றன. இதுவரை தலம் தீர்த்தத்தைப்பற்றிச் சொன்னோம். இனி மூர்த்தியைப்பற்றி ஆராய்வோம்.

பிறவி ஒழிவதற்கும் பிறவி வருவதற்கும் மனம்தான் முக்கியமான காரணம் என்பது நம்மவர் அறிந்த விஷயமே. ஒருவன் மரணத்தருவாயில் தன் மனம் எதைப்பற்றிக்கொண்டிருக்கிறதோ அந்த எண்ணத்திற்குத்தக்க பிறவி எடுக்கிறானென்று ஞானவாசிட்டம் முதலிய பிரபல நூல்கள் கூறுகின்றன. நம் முன்னோர் அனுபவமும் அவ்வாறே, ஒருவன் சிதம்பரத்திற்குப்போய், கனகசபையின்கண் தேஜோமயமாய் விளங்கும் ஸ்ரீ நடராஜப்பெருமானை தரிசிப்பானேயாகில், அந்த நவரத்ன கசிதமாய்விளங்கும் மாற்றறியாத் தங்கத்தினாற் செய்யப்பட்ட சபாமண்டபத்தின்சிறப்பும், அதின்மத்தியில் ரத்தினங்கள்பதித்த ஆபரணங்களின் பிரகாசமும், அரவாபரணம், பன்மலர்கள் தொகுத்த திருமாலைகள் இவைகளின்பொலிவும், ஒருபதமூன்றி மறுபத மந்தரத்தில் நடித்துக்கொண்டிருக்கிற சிங்காரத்தையும், வாமபாகத்தில் வாட்டமில்லாமல் தளிர்த்துப் புஷ்பித்த இளம்பசுங்கொடிபோன்ற உலகமாதாவாகிய சிவகாமிவல்லித்தாயார் வீற்றிருக்கும் சிறப்பையும், இருபுறத்திலும் பாம்பும் புலியும் கைகுவித்த வண்ணமாய்த் தரிசித்து நிற்கும் கோலத்தையும் ஒருமுறை தரிசிப்பானேயாகில், அக்காட்சி அவன் மனத்தைவிட்டு அவன் ஜன்மபரியந்தம் நீங்குகிறதில்லை. அப்படி அவன் பல உலகவிவகாரத்தில் அதை மறந்திருந்தபோதிலும் ஒருவன் வந்து தில்லை என்றும் சிதம்பரம் என்றும் சொல்வானேயாகில் முன்சொன்ன தோற்றங்களெல்லாம் மின்னல்போல உடனே அவன் மனதில் உதிக்கின்றன. இப்படியே அவன் மரணத்தருவாயிலும் யாராவதொருவர் தில்லையென்று ஞாபகமூட்டிவிட்டால் உடனே அத்தோற்றம் அவன் மனதில் உதித்து அவனுக்கு ஜென்மசாபல்யமளிக்கிறது. தமிழ்மாதா பிறந்தவுடன் இன்னும் வரவில்லையேயென்று சந்தாநேயர்கள் அன்போடினிதுடன் எதிர்பார்க்கும் நமதானந்தபோதினியில் VOL. 2. மார்கழி, தை, மாசி மாதங்களில் பிரசுரமாயிருக்கும் மானஸ பூஜை என்ற சகுணோபாசனையின் பலனும் அளித்து முடிவில் நித்தியமானதும் அகண்டாகாரமானதும் பிறப்பிறப்பற்றதுமாகிய மோட்சவீட்டைத்தருமாதலால் இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தத்தமியல்புக்கேற்றவாறு சக்தி

யானுசாரம் ஆண்டவன் கொடுத்த அற்பாயுளிலும் உலகவிவகாரங்களில் போக்கியதுபோக மீதிநாட்களையாவது வீணாக்காமல் தங்கள் பதிக்குச் சமீபத்திலுள்ள க்ஷேத்திரங்கட்காவது சென்று வரக்கூடிய சக்தியை அளிக்குமாறு எல்லாம் வல்ல பரம்பொருளை அனுதினமும் ஆராதிப்போமாக.

குமரன், சேக்காரப்பட்டி.

---

## வியாசமும் பத்திரிகாசிரியரும்.

(415-ம் பக்கத்தொடர்ச்சி)

நுண்ணறிவுடையவராய், நல்லாசிரியர் பக்கல் அநேகநாளாய் வருந்திக் கற்ற கல்வியுடையவராய், குடிப்பிறந்தாருக்குரிய விருப்பத்தைத்தரும் ஒழுக்கத்திற் சிறந்தவராய், உலகநடை யறிந்தவராய், பேராசைபிடித் தலையாதவராய், பாஷாபிமான தேசாபிமானம் ததும்பப்பெற்றவராய், ஓரஞ்சொல்லாதவராய், மனமொன்று வாக்கொன்று செய்கையொன்று இல்லாதவராய், உறுதியாய்ப் பேசவல்லவராய், துரைத்தன உத்தியோகத்திற் பற்றில்லாதவராய், நல்லெண்ணத்தோடு நற்செய்கையுமுடையவரே பத்திரிகாசிரியராதற்குந் தகுதிபொருந்தியவர்.

“குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலைபயில்தெளிவு கட்டுரைவன்மை
நிலம்மலை நிறைகோல்* மலர்நிகர்மாட்சியும்
உலகிய லறிவோடு உயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே.”

இக்குணங்களெல்லாம் பத்திரிகாசிரியர் ஒருங்கே அமையப்பெற்றிருக்க வேண்டுமென்பது சொல்ல வேண்டியதில்லை.

இவர் சனங்களுக்கு நல்லறிவுறுத்துவதோடு அரசுக்கும் ஏற்றபுத்தி சொல்லுவதினால், ஒருநாட்டுக்கும் அதனைக்காக்கும் அரசுக்கும் இன்றியமையாதவராவர். தற்காலம் கவர்ன்மெண்டார் பத்திரிகையின் உதவியினாலும் தேசத்தை ஆளுகின்றனர். அதனால் பத்திரிகையை வேண்டி வாசிக்கின்றனர். முற்காலத்தரசர் தமது சமஸ்தானங்களில் புலவரை ஆதரித்து அவருறுதிமொழியினால் தேசத்தை இனிதோம்பி வந்தனர். தற்கால அரசுக்குப் பத்திரிகையே புலவர்போன்று உறுதியெடுத் தியம்பத்தக்கதாக விருக்கின்றது. பத்திரிகாசிரியர் சனங்களின் குறைமுறைகளைப் பத்திரிகைமூலமாக அரசு அறியச் செய்வதினாலும், அரசர் ஏற்படுத்தும் விதிகளை ஜனங்களுக்குத் தெரிவிப்பதனாலும், அரசுக்கும் ஜனங்களுக்கும் இடையில் ஏற்பட்டதோர் தூதன்போன்றிருக்கிறார். இவர் சிலசமயங்களில் அதிகாரிகள் பிரசைகளுக்கு இடையூறு செய்யநேர்ந்தால், கலங்காத உள்ளத்தோடு அவ்வதிகாரிகளைக் கண்டிப்பதினால் தாம் சங்கடத்துக்குள்ளாகிறார். இதனால் இவர் ‘தனக்கெனவாழான் பிறர்க்குரியாளன்’ ஆகின்றார். தற்காலம் அச்சுச்சட்டத்தினால் பத்திரிகாசிரியர் தொழில் ஆபத்தாயிருக்கிறது. பல பத்திரிகாசிரியர்கள் சிறைவாசஞ்செய்ய நேர்கின்றது. பலர் தாம்கட்டிய ஜாமீன்தொகையை இழக்கவேண்டி வருகிறது. இத்தகைய அரிய பெரிய தேச ஊழியமாகிய பொறுப்புள்ள பத்திரிகாசிரியத் தொழில் மிகவும் சிலாகிக்கத்தக்கதா யிருக்கின்றது. ஆனால் சிலரோ, இதனருமை பெருமை ஒன்றும் அறியாராய், ஒரு பாலார்மீதுகொண்ட துவேஷத்தினாலும்,

* நிறைகோல் = துலாக்கோல்; தராசு.



ஒரு சமயத்தின்மீதுகொண்ட வெறுப்பினாலும், நன்மதியாளர்செய்யும் நற்செய்கைகளுக்கு இடையூறு செய்யவேண்டுமென்ற ஒரே மஹாபாதகமான எண்ணத்தினாலும், இன்னும் இதுபோன்ற அந்தரங்கமான சில கெட்ட எண்ணங்களைச் சாதிப்பதற்காவும் ஒரு பத்திரிகையைத் தொடங்கிக்கொண்டு, அதனைத் தமது எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்றதோர் ஆயுதமாக உபயோகிக்கிறார்கள். இவர்களால் சிலசமயங்களில் நல்லவர்கள்செய்யும் அரும்பெருமுயற்சிகள் பழுதுபடுகின்றன. ஒரு கிறிஸ்தவர் சைவசமயத்தின்மீதுகொண்ட வெறுப்பினால் ஒரு பத்திரிகையைத் தொடங்கிக்கொண்டு சைவசமயத்தைப்பற்றித் தமது மனம்போனவாறெல்லாம் எழுதுகிறார். இவருக்குத்தானெழுதியதை நிரூபணஞ் செய்யவேண்டிய பொறுப்பில்லை. இவருடைய தொழில் தூஷிப்பதே. ஒரு சைவசமயி வைஷ்ணவ சமயத்தின் மீதுகொண்ட வெறுப்பினால் இக்கிறிஸ்தவரைப் பின்பற்றுகிறான். இப்படியே அநேகர் பத்திரிகாசிரியத்தொழில் புரிகின்றனர்.

ஒரு அன்னியதேசத்தவனோ அல்லது ஒரு தேசத்துரோகியோ, ஒரு தேசமுன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஒரு பத்திரிகையை ஆரம்பித்துக்கொண்டு, தேசாபிமானிகள், “இச்சீர்திருத்தம் வழங்கப்படவேண்டும்,” என்பதுபோன்ற தேசத்தொண்டைச்செய்ய முன்வந்தால், “ஓ, இச்சீர்திருத்தம் இப்பொழுது அவசியமில்லை; இவ்வரி விதிக்கப்படத்தான்வேண்டும், இது நீக்கப்படவேண்டிய அவசியமில்லை” என்று இதுபோன்றதெல்லாம் தமது பத்திரிகையில் எழுதி நிரப்பிவிடுகின்றனர். இவைகள் குலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்புகள் போன்று தாய்நாட்டிற்கே துரோகம்செய்யும் மாபாதகப் பத்திரிகைகளேயாகும். இப்பாவிப் பத்திரிகாசிரியர்களால் விளையும் நன்மை கலகமும் அதனால் நேரிடுந்துன்பமுமே. இத்தகையார் பத்திரிகாசிரியத் தொழிலிற்கு ஒரு சிறிதாவது யோக்கியர்களல்ல. இவர்களுடைய பத்திரிகையை வாங்கி ஆதரிப்பது பெரும்பாவமாகும். அறிவுள்ளவர்களுக்கு இவர்களுடைய மாபாதக எண்ணமும், இவர்களுடைய எளிய ஆயுதமாகிய பத்திரிகையின் கெடுதியும் இவர்கள் இத்தொழிலிற்கு ஏற்றவர்களல்லவென்பதுந் தெரியும். ஆனால் பாமரசனங்களோ, ஒருசமயமில்லாவிடினும் ஒருசமயம் இவர்களாற் சிறிது ஏமாற்றமடையவுங்கூடும். அறிவுள்ளவர்கள் தேசோபகாரமாகத் தொடங்கி நடத்தும் பத்திரிகைகளை ஆதரிப்பவர் கிடைப்பது அருமை. இவர்களையோ ஆதரிப்பவருண்டு. ஆகையால் இவர்கள் சந்தாதார்கள் கொடுக்கும் சிறுதொகைப் பொருள்போதாதே யென்று வருந்தவேண்டிய வில்லங்க மில்லாதபடியால் இவர்களுக்குத் துணிவதிகம். தாமே கொஞ்சந் திரவியமுமுள்ளவர்களானால் இவர்கள் செயல் சொல்லவும் வேண்டுமோ?

இனி ஒரு சிலர், பத்திரிகை நமது தேசத்திற்கு இன்றியமையாத தென்பதை மாத்திரம் உணர்ந்துகொண்டு, தாம் இவ்வுத்தமத்தொழிலைச் செவ்வனே நடத்தும் தகுதியில்லாதவர்க ளென்பதைச் சிந்தையிற் சற்றும் வையாது, ‘எண்ணித்துணிககருமம்’ என்பதைப் பொருட்படுத்தாது, ஒரு பத்திரிகையைத் தொடங்கிவிடுகிறார்கள். இவர்கள் கலைபயில் தெளிவில்லாது சில பத்திரிகைகளைப்படித்த பழக்கமொன்றினாலேயே, வில்லங்கத்துடன் சிலநாட்களிற்குத் தமதுதொழிலைச் செய்துகொண்டு, தாமாகவே ஒருவிஷயத்தை நன்கு எழுதத்தக்க அவ்வளவு கல்வியறிவில்லாதவர்களாகையால், தமது பத்திரிகையை மெல்லக் கைகழுவ விட்டுவிடுகிறார்கள். பத்திரிகைக்குக் காசு செலுத்திய சந்தாதார்கள் சிலநாட்களிற்குப் பத்திரிகை வருமென எதிர்ப்பார்த்துக்கொண்டு இருந்துவிட்டுப் பின்பு ‘இவன் போக்கிரி’ என்று ஏசிவிட்டு, யோக்கியமான தகுதி

பொருந்தியவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளையும் அழைப்பிக்கப் பயங்கொள்கின்றனர். இன்னொரு சிலர் சில சங்கத்தவர்கள் நடத்தும் பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாகச் சம்பளத்துக்கு ஏற்படுகின்றனர். சிலர் தகுதிபொருந்திய யோக்கியர்களா யிருக்கிறார்கள். ஒரு சிலரோ குணக்கேடர். இவர்களுக்குக்காசேகண். சனங்களுக்கு வேண்டுவன செய்யவேண்டிய பொறுப்புத் தங்களுக்கு இல்லையென்பது இவர்களதெண்ணம். வருவாயுண்டாயின் உண்மைக்கு விரோதமானவற்றையும் எழுதிச் சனங்களுக்கு ஏமாற்றத்தை யுண்டுபண்ணுவர். ஒருவர் ஒருநூலிற்கு உரையெழுதி, அது நூலாசிரியர் கருத்துக்கு முரண்பட எழுதப்பட்டு முரட்டுக்கடிதத்திற் பதிப்பிக்கப்பட்ட குசிலிக்கடைப் புத்தகமேயாயினும், பத்திரிகாசிரியரைக் காசாற் கவனிப்பரேயாயின், "நச்சினார்க்கினியரும் நாணத்தக்கவிதமாக எழுதி, அழகிய கிளேஸ்கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களோடு அழகாக வெளிப்படுத்திய இவ்வுரையாசிரியருக்கு எவருங் கடமைப்பட்டவராவர். நமது பார்வைக்கு அனுப்பியதற்காக நன்றி கூறுகிறோம்," என்று இதுபோன்ற அதிகம் எழுதுவர். சனங்கள் இவர் கூற்றை நம்பி இப்புத்தகத்தைவாங்கி ஏமாற்றமடைவர், அரியநூலையும் வாங்கப் பின்னர்ப் பயங்கொள்வர். பத்திரிகாசிரியர் எப்பொழுதும் பொதுநோக்கத்தோடு பகைவர் சிநேகிதர் என்ற பேதம்பாராது விஷயத்தளவில் நோக்கவேண்டும்.

இந்த ஆனந்தபோதினி பத்திராதிபரவர்கள், தன்னை யாரோ உயர்நடைத் தமிழ் எழுத வல்லமையில்லாதவர் என்று எண்ணுவதா யறிந்து, தாம் அப்படி வல்லமையுடையேம் என்று அகங்காரங்காட்டாது, "உயர்நடைத் தமிழ் அவசியமாயின், அது நம்மிடம் இல்லையாயின் விலைகொடுத்தாவது வாங்குவோம்." என்று எழுதியிருக்கிறார். (இதனை 2-தொகுதி-7-வது பகுதியில் காணலாம்) இதனால் பத்திரிகாசிரியரிடத்துள்ள கல்வி ஒரு சிறிதாவது குறைவானதாய்க் கருதப்படமாட்டாது.

இன்னொரு பத்திராதிபருடைய செயலும் இங்கு காட்டாம லிருக்கமுடியவில்லை. சமீபத்தில் நான் ஒரு பத்திரிகையில் 'சபை' என்றொரு வியாசம் எழுதினேன். இதனைக் கண்ணுற்ற இன்னொருவர் பொறாமைகொண்டு, "என்து வியாசத்தின் ஆரம்பத்தில் "சபைகூடுவோரை அதைரியப்படுத்தும் மொழிகள் எழுதினேன்," என்று நான் எழுதிய அதே பத்திரிகையில் எழுதினர். இது *விதண்டாவாதமெனப் பத்திரிகாசிரியர் அறிந்தும் தமது பத்திரிகையில் அதனை யெழுத இடங்கொடுத்தனர். அதைரியப்படுத்தும் மொழிகள் எவையென அறியவிரும்பி, அம்மொழிகளை விளக்கிக்காட்டுமாறு, எழுதிய கனவானை விளித்து மூன்றுமுறையாகப் பத்திரிகையில் எழுதமுயன்றும், அம்மும்முறையும் பத்திராதிபர் இடந்தந்தாரில்லை. ஆகையால், எழுதிய கனவானாவது, பதிப்பித்த பத்திராதிபராவது, படித்த பிறராவது, என்னால் எழுதப்பட்ட சபைகூடுவோரை அதைரியப்படுத்தும் மொழிகள் இவைதான் என்று சரியாய் நிரூபிப்பார்களானால், அன்னவர்களில் முதல் நிரூபிப்பவர்க்குமாத்திரம் ரூ. 25 இனாம் கொடுப்பேனென்று எவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொ. நடராஜன், மேலைப்புலோலி.

குறிப்பு:—தன் பத்திரிகைக்கு விஷயதானம் புரிந்தோருடைய விஷயத்தை ஏற்றுக்கொண்டு வெளியிட்டுவிட்டுப் பிறகு, அந்தவிஷயத்தில் ஒருவர்

* விதண்டாவாதம் = கல்வியறிவில்லாத மூர்க்கர்களால் செய்யப்படும் வீண் வாதம்.



குற்றங்கூறி யெழுதியதையும் வெளியிட்ட பிறகு, முதல் விஷயம் எழுதியவர் தன்மேல் வந்த குற்றச்சாட்டிற்குச் சமாதானம் கூறும்போது, அந்த வியாசத்திற்குப் பத்திரிகாசிரியர் இடந்தா மறுத்தது உண்மையாயின் அப்பத்திரிகாசிரியர் தன் முதற்கடமையினின்றே தவறினவராவார். ஏனெனில் அந்த விஷயத்திற்கு எப்போது குற்றம் ஏற்பட்டதோ அதற்குப் பத்திரிகாசிரியரே சமாதானம் கூறிவிட்டு விஷயத்தை யடக்கிவிடவேண்டும். அல்லது அச்சமாதானம் விஷயம் எழுதியவரே கூறவேண்டிய தன்மைத்தாயின் அவரிடமே அதைப் பெற்று அதோடு முடிவாய்த் தமது நடுநிலையான அபிப்பிராயத்தை வெளியிட்டு, அதற்குமேல் வீண்வாதத்திற் கிடந்தராமல் விஷயத்தை முடிவு செய்துவிடவேண்டும். அதை விட்டு அதை வெளியிட மறுப்பதாயின் அது நீதிக்கு விரோதமென்றும், அதுமட்டுமல்ல பத்திரிகாசிரியர் வேண்டுமென்றே விஷயமெழுதியவரை அகௌரவப்படுத்தியதாகவும் யாவரும் கருத விடந்தருகிறது. மேல் நாம் "இது உண்மையாயின்" என்று ஐயுறக்கூறிய காரணம் என்னையெனின், எந்தப் பத்திரிகாசிரியரேனும் தமது முதற்கடமையை மறந்து இத்தகைய குற்றத்திற் காளாவரோ? என்ற வியப்பேயாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## இராஜபக்தி

ஒரு தேசத்தில் வாழும் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் உபத்திரவஞ் செய்யாமலும், ஒருவர் சொத்தை இன்னுமொருவர் அபகரியாமலும், பாதுகாத்து, அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டி, தேசோபகாரமான பற்பல நன்மைகளைச் செய்வதற்காக இராஜா ஏற்பட்டிருக்கிறார். ஆகையால் பிரஜைகளாகிய நம் நன்மைக்காக ஏற்பட்டிக்கும் நம் அரசனுக்கு நாம் கீழ்ப்பட வேண்டுதல் அத்தியாவசியம். "அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி" என்றபடி அரசன் கட்டளைக்கு நாம் எப்பொழுதும் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும். "எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்றாற்போல இராஜாங்கமாகிய உடலுக்கு இராஜா தலையாயும் பிரஜைகள் மற்றும் அவயவங்களாகவு மிருக்கின்றார்கள்.

"மாதாவுக்குச் சுகமிருந்தால் கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்கும் சுகம்" என்றாற்போல் இராஜா சுகமாயிருப்பதுதான் பிரஜைகளாகிய நமக்கும் சுகம். நம்மைப் பாதுகாக்க நம் இராஜா எவ்வளவு பிரயாசைப்படுகிறார்? பெற்றோர் தம் பிள்ளைகளைப்பாதுகாப் பதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக நம்மைப் பாதுகாக்கிறாரல்லவா? நம்மைப் பாதுகாப்பதற்கு வேண்டிய செலவுக்காக நம் ஒவ்வொருவராலும் செலுத்தப்படும் அற்ப பணமே வரியெனப்படும்.

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவர்க்
கிறையொருங்கு நேர்வது நாடு. திருக்குறள்.

அதாவது:—பிறநாட்டுப் பாரந் தன்மேல் வரும்போது அவற்றைத் தாங்கித் தன் அரசனுக்கு இறைப்பொருள் முற்றுந் தருவதே நாடு.

ஆகையால் நம் மரசனுக்குக் கொடுக்கவேண்டிய வரிகளை நாம் அவ்வக் காலத்திலேயே செலுத்தி வரவேண்டும். நாம் கொடுக்கும் வரிகள் நமக்கே உபயோகமாகின்றன வென்பது அடியிற்கா ணும் சிறு கதையால் விளங்கும்.

இத்தாலியிலுள்ள ரோமாபுரியிலே அநேக வரிகள் ஏற்பட்டிருந்ததனால் அவ்வூரி லிருந்த ஜனங்களில் அநேகர் தாங்கள் அவ்வரிகளைக் கொடுக்கமாட்டோமென்று பிறவூர்களுக்கு ஓடிப்போய்விட்டார்கள். அவ்வூரரசன் ஒரு

சங்கங்கூடிக் கடைசியாய், தன் தளகர்த்தனைப் போய்த் தன் ஊரிலிருந்து போனவர்களைத் திரும்பவும் அழைத்துவரும்படி சொன்னான். அத்தளகர்த்தன் அச்சனங்கள் குடியேறிய ஊர்களுக்குப் போய், அவர்களுக்கு 'வயிறும் அவயவங்களும்' என்ற ஒரு கட்டுக்கதையை உபதேசித்தான். அது வருமாறு:-

"ஒருநாள் கை, கால், கண், மூக்கு, முதலிய அவயவங்கள் ஒன்றுசேர்ந்து "இந்தப் பாழும் வயிற்றுக்கு நாமெல்லோரும் உழைத்துச் சோறு போடுகிறோமே; இந்த வயிறோ ஒருவேலையுஞ் செய்யாமல் சும்மா இருக்கிறதே; இந்தச் சோம்பேறி வயிற்றுக்காக உழைப்பதைப் பார்க்கிலும் சும்மா இருப்பது நலம்" என்று ஒத்துப்பேசிக்கொண்டு வயிற்றுக்கு உணவு கொடாமல் இருந்து விட்டன. மறுநாள், கண்கள் 'பார்க்கமாட்டோம்,' என்றும், கால்கள் 'நடக்கமாட்டோம்' என்றும், கைகள் 'வேலைசெய்ய மாட்டோம்' என்றும், மூக்கு 'வாஸனை அறிய இயலாது' என்றும், நாக்கு 'ருசி அறியமாட்டேன்' என்றும், பற்கள் 'உணவை மெல்ல மாட்டோம்' என்றும், காதுகள் 'கேட்கமாட்டோம்' என்றும், இப்படியாக மற்றைய அவயவங்களும் தத்தம் வேலையைச் செய்ய மாட்டோம் என்று சும்மா இருந்து விட்டன. இரண்டு மூன்று நாளாகவே, கண்களுக்குப் பார்வைக் குறைவும், கைகால்களுக்கு பலக் குறைவும், நாவிற்குத் தாகமும், இப்படியே மற்ற அவயவங்களுக்கும் மெலிவும் துன்பமும் நாளுக்கு நாள் அதிகரித்தன. அப்பொழுதுதான் அவைகளுக்குப் புத்திவந்தது. "ஐயோ! நாம் புத்திகெட்டுப் போனோமே! இந்த வயிறும் பார்வைக்குச் சும்மாயிருந்தாலும், நமக்கு வலிவைக் கொடுத்துக் கொண்டல்லவா வந்தது. இனிமேலாகிலும் நாம் சீக்கிரமாக இவ்வயிற்றுக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் நாம் இறந்துபோவோம்" என்று சொல்லிக்கொண்டு சீக்கிரமாக உழைத்து வயிற்றுக்கு ஆகாரங் கொடுத்தன. வயிற்றில் ஆகாரம் விழவே அவயவங்களுக்கும் சற்று பலம் உண்டாயின. நாலைந்துநாளில் எல்லா அவயவங்களுக்கும் பூர்ண பலம் உண்டானது. அதன் பின் அவை வயிற்றுக்காக உழைத்துவந்தன. அதைப்போல் நீங்கள் செலுத்தும் வரிகளை உங்கள் பிரயோஜனத்துக்காகவே நம் இராஜா உபயோகிக்கிறாரென்பது விளங்கிற்றா?" என்றான். அதைக்கேட்ட ஜனங்கள் திரும்பவும் தம் தாய் நாடாகிய ரோமாபுரியை அடைந்து வழக்கம்போல தாம்தாம் கொடுக்கவேண்டிய வரிகளை பூர்ணமனதுடன் செலுத்தி சுகமாக வாழ்ந்துவந்தார்கள்.

ஆகையால், நாம் இராஜத் துரோகத்தைக் கனவிலுஞ் சிந்திக்காமலும், இராஜநிந்தை பேசாமலும், பிறர்பேச இடங்கொடுக்காமலும், நம்மரசனை இரக்ஷித்தருளும்படி கடவுளைப் பிரார்த்திப்போமாக.

சி. பத்மனாப ஐயர், மூனிஸ்வரம்.

---

## செந்தமிழின் சீர்மை

அன்பர்காள் !

பல ஆண்டுகளுக்குமுன் சேர சோழ பாண்டியர் என்ற புகழ்பெற்ற மன்னர் மாநிலம் புரக்குங் காலத்தில், சரஸ்வதி தேவியின் அவதாரமே யெனப் புகழ் பெற்றவரும், புலவர் கோஷ்டியில் பெண்பாலாயினும் பெருமையை ஓங்கி வளரச்செய்தவரும், தன் சீரிய வெண்பாவால் விண்ணுலகத்தையும் வாட்டும் திறமை பெற்றவரும், தங்களை யொப்பார் யுயர்ந்தார் ஒருவரும் இல்லையென்று இருமாப்பு கொண்டிருந்த சங்கப்புலவர்களை அதி சூக்ஷமமாய் ஓர் க்ஷணத்தில் தலை கவிழச் செய்தவரும், இப்பூவுலகில் புகழ்பெற்றவருமான, ஒளவையார் எனத் திருப்பெயர் பூண்ட ஓர் மாதுசிரோமணி வாழ்ந்திருந்தனர்.



நிற்க, பாண்டிநாட்டை ஒரு கோலோச்சி யாண்டுவந்த பாண்டியனொருவன் தன் சமஸ்தானக் கவிவாணர்களையும் மற்றும் முறையே, சங்கப்புலவர் முதலிய பூர்ண பாண்டித்யம் பெற்ற பண்டிதர்களையும் அவரவர்களுடைய கல்வித் திறமை யறியுமாறு, மாற்றுயர்ந்த செம்பொன்னால் கனமான கொலுசுகள் செய்வித்து அதிற் படியும்படி ஓர் தங்கப்பலகை யமைத்து, அதன்மேல் நவரத்ன மணிகளைத் திரளாகக்குவித்து "இந்த நான்கு கொலுசுகளும் அற்று விழும்படி இன்னதினத்தில் யாராயினும் ஒருவர் பாடுவாராயின் தகுந்த மரியாதையுடன் சன்மானம் செய்யலாகும்" எனப் பறை சாற்றுவித்தனன்.

ஷெ சங்கதி ஊரெங்கும் பரவலாயிற்று. லக்ஷம், கணக்கான வித்வசிரோமணிகள் வந்து கூடினர். ஆனால் எவரும் முன்வந்து அரசன் ஆஞ்ஞையைப் பூர்த்திசெய்விக்க அஞ்சி நின்றனர். அத்தருணம் அங்கு அகஸ்மாத்தாய் வந்து தோன்றின நம் ஒளவையார், கோமான் கோரியபடி தாம் செய்து முடிப்பதாக வாக்குறுதிகூறி நேர்நின்று பின்வரும் செய்யுட்களில் ஒவ்வொன்றாகப் பாட ஒவ்வொரு சங்கிலியாக நான்கும் அற்று விழுந்தன.

"ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர்—பூர்த்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதா கோடிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு."

"தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயா னெச்சம்போ லறு."

"உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறு மென்றா லறு."

"வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சறு மென்றா லறு."

அம்மம்ம! நேயர்காள்! என்ன அற்புதம்! இத்தெய்வீகமான செய்யுட்கள் எப்பாஷையிலுள்ளது? எத்தேசத்தில்? யாருக்குச் சொந்தம்? அனாதிகாலம் தொடங்கி, ஆதியும் பிறப்பும், தனக்கு ஒப்பும் உயர்வுமில்லாமல், தொல்லரசராலும், உலகத்தாராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டுவந்த செந்தமிழ் பாஷையன்றோ! மகிமை பொருந்திய இந்தியாவல்லவோ அதன் பிறப்பிடம், வளர்ந்தவிடம், வளருமிடம்! ஆதலின் இந்தியாவிற்கு சொந்தமும், அவள் அருமை மக்களாகிய நமக்குச் சர்வ சொந்தமுமல்லவா?

இப்படி இருக்கத் தற்கால நாகரீக ரீதிப்படி, நம் தாய்நாட்டில் தெய்வத்தாலும் புகழ்ந்துகொண்டாடப்பட்டுவந்த நம் அமிழ்தினு மினிய தமிழைப் போற்றிப் புகழாக்குவது நம் கடமைகளுள் முதன்மையானதல்லவா? நாம் நம் தாயைக் கைவிடத் தகுமோ? தர்மமோ? நீதிக்கழகோ?

செந்தமிழென்னும் செல்வத்தாயின் செல்வப் புதல்வீர்! நம் தமிழ் தவிர, மற்ற பாஷைகளில் மேற்கண்ட சம்பவமும், ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடுவதற்குமுன் தரிக்கப்பட்ட தலைகள் எல்லாம், சரஸ்வதி கருணை கடா

கூத்தால், அதன் அதன் முண்டத்தோடுபோய் ஒட்டிக்கொண்டதுபோன்ற ஆச்சரியமும் மற்றும் பிறவும் வேறெங்கேனும் நடந்ததெனக் கேள்விப்பட்டதுண்டா? பார்த்ததுண்டா? இம்மட்டோ நம் பாஷையின் மகிமை! மேற்சொன்ன ஔவையாரே, பாரி என்ற இடையனுடைய மக்களுக்குப் பாணிக்கிரகணம் செய்விக்கக்கருதி சேரசோழபாண்டியரை வரவழைத்து அவர்கள் திரும்பும்போது மரியாதை செய்ய ஒன்றுமில்லாமையால், அவர்கள் கோரியபடி வெட்டி விறகாய் உலர்ந்திருந்த பனந்துண்டை பச்சை மரமாக்கி, குருத்துவிடச்செய்துபூத்து, காய்த்து பழமாகக் கொடுக்கும்படிவேண்டி நின்று ஓர்பாட்டுபாட அதுநிறைவேற்றிக்கொடுத்ததே! அப்பாடல் எப்பாஷையிலுள்ளது? கம்பர் குருவின் ஆணைகொண்டு கம்பங்கொல்லையைக் காவல்செய்யுங்கால், அக்கொல்லையில் வந்து மேய்ந்த குதிரையின் உயிரைக்கொண்டு போம்படி பாடினரே! திரும்பி உயிரைக் கொண்டுவரும்படி பாடினரே! இம்மகிமை பொருந்திய பாட்டுகள் எத்தேசத்தன? வித்வ ரத்தினமாகிய அதே கம்பர் சோழனோடு மனம் நொந்து சேரனிடம் சேர, சேர சமஸ்தானக் கவிஞர் பொறாமையால் மயிர் வினைஞனைக் கொண்டு அவமானப்படுத்தியபோது, அவர் தம்மானம் காக்கச் செந்தமிழால் முப்பது செய்யுட்களை அந்தாதித் தொடராக சரஸ்வதிதேவியார்க்கு மாலைசூட்டி நிற்ப, அத்தெய்வம் அவர் வேண்டுகோளுக்கிரங்கி தம் கால்பொன்சிலம்பை ஈந்தனரே! என்ன தெய்வீகம்! செந்தமிழ் செய்யுட்களுக்கு தெய்வத்தையும் தாழ்ந்துபோகச் செய்யும் வல்லமையு முளதன்றோ?

அளவிறந்த மகிமையையுடைய இத்தெய்வீகத் தமிழைச் சில கற்றறிமூடர் "தமிழில் என்ன சுவையுள்ளது? என்ன வின்பம் இருக்கிறது?" என்றவைபோன்ற நிந்தைவார்த்தைகளால் இழிவுபடுத்திப் (அளவற்ற அருளுடைய ஆண்டவன் இருக்கும்போதே இல்லையெனச் சொல்லி 'எல்லாம் இயற்கையால் விளைவன' என்று ருசுப்படுத்த முயலும் சில நாஸ்திகர்களுடைய சூக்ஷ்மஞானபுத்திக் கூர்மைபோன்று) பிதற்றுவதென்னை?

செந்தமிழுக்குச் சொந்தக்காரராகிய நாமே பிறர்க்கு, அறிவீனத்தாலும் ஆராய்ச்சியின்மையாலும் நமது பாஷை சுவையற்றதென்று பொய்ப்போதனை போதிப்பின் அவர்க்கு நம்பாஷையிலும் அதையுடைய நம்மிடத்தும் மிக்க அவமதிப்பேயுண்டாகு மென்பதில் சற்றேனும ஐயமின்றாம்.

ஆதலின், தெய்வத்தினிடமிருந்து தோன்றிய தமிழை—நம்தாய்க்கொப்பான தமிழை—தவஞ்செய்து மடைதற்கரிய தமிழை—தொல்லரசரால் ஆதிக்கப்பெற்ற தமிழை—தாழ்மைப்படுத்தாமல் இருத்தலே மேன்மை. தேசாபிமானம் மதாபிமானம் முதலியவற்றோடு பாஷாபிமானிகளாயும் இருப்பதுதான் அறிவுடையோர்க்கழகு—எவனொருவனும் அறிவுடையனாயிருக்க முயலுவதேயன்றி யல்லாமல் அறிவீனனாயிருக்க ஆசைப்படான். யாவரும் பெருமையை யடைய வேண்டுமென்று ஆசைப்படுவரேயன்றி தாழ்மையடையச் சம்மதியார்கள். நாமும், நம் தேசம் க்ஷேமமடையவேண்டுமானால் நம்பாஷையாகிய செந்தமிழைச் சீராட்டிப்போற்றி பெருமைப்படுத்தினால் ஆண்டவன் நம்மை மேலோங்கச் செய்வான் என்பது திண்ணம்.

A. வெங்கடாச்சாரியார், வேலூர்.

---

## வறுமையிற் செம்மை.

உலகின்கண் நல்லோரையும், வாட்டி இழுக்குப்படச்செய்து இம்மைக்கும் மறுமைக்கும் துன்புறச் செய்வது மறுமையாம்.



வறுமையானது:—"தாங்கொணுவறுமை வந்தாற் சபைதனில் செல்லநாணும்—வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர் காண நாணும்—பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக் கிணங்கச்செய்யும்—ஓங்கிய வறிவுகுன்றும் உலகெலாம் பழிக்குந் தானே"

அந்தோ இவ்வித வறுமை வந்துவிட்டால்:—வனப்பழிக்கும் வாய்மைநல் லழிக்கும் மானங்—நினைப்பழிக்கும் நெஞ்சஞ் சிதைக்கும்—வினைப்புகுத்தும், காதலி காந்தர்க்குள் கலாம்விளைவிக்குங் காசினியில்—வேதனைகள் செய்யுமிடி"

என்ற உண்மை வாக்கினும்கூட "வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை" என்றவாக்கை குசேலர் முதலியவர்களின் சரிதங்களால் படித்துணர்ந்துள்ளோம். ஆயினும், ஆனந்தபோதியினிடத்து கண்ணெதிராக அறிகிறோம். எவ்வாறெனின்:—

நாம் தற்போது கண்ணால் கண்டுணரும் சிலர் தர்ம சிந்தையாயிருந்து, ஒருவாறு செல்வம் வந்துவிட்டால், முன்னிருந்த குணத்தைமறந்து பணப் பேய்பிடித்து, பிறர் தம்மை மெச்சும்படி தம் குடும்பத்தாருக்கும் தமக்கும் ஏற்றவாறு சத்திரம் சாவடி உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள். சிலர் வறுமை வந்தகாலத்து வறுமைக்குமுன் செம்மையாக நடந்ததாகவும் வறுமைவந்த பிறகு வயிற்றின் கொடுமையால் விதி தவறி நடப்பதாகவும் கூறுகின்றனர். குசேலர் அநுபவித்த வறுமையில் ஆயிரத்தில் ஒருபங்கு அநுபவிக்க வல்லார்யாவர்? அக்காலத்தும் அவர் தம்பத்தினியோடும் இருபத்தேழு குழவிகளோடும் வருந்தாது கண்ணன்கழலிணையை இறைஞ்சிவறுமையிற் செம்மை என்பதைக்கைவிடாது விளக்கிக்காட்டினர். இஃது சரித்திர மூலமாய் விளங்குவதன்றோ.

கண்ணெதிராக இக்கடும் போரில் காகிதம் பஞ்சத்தால், கலங்காத சர்க்கார் ஆபீஸிலுங்கூட ஒருபக்கம் எழுதிய கடிதத்தையே திருப்பி மறுபக்கத்தில் எழுதுகிறார்கள். விலாசமெழுதிய கடித உறையைப் பிரித்துத் திருப்பி மறுபடி உபயோகிக்கிறார்கள்—சிலபத்திரிகைகளின் கடிதத்தைத் தொட்ட மாத்திரத்தில் பஞ்சாய்ப் பறக்கின்றன. சில சஞ்சிகைகள் இரண்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறையே வெளிவருகின்றன.

இஃது ஒருவாறு இருக்க, மற்றும் ஒரு விஷயம் என் அறிவில் உறுத்துகிறது—அஃதாவது சிலவற்றின் விஷயதானம் புரிவோர் முழுதும் கற்றுணர்ந்த பண்டிதரல்லர் ஆதலின் தம் கல்விக்கும் அனுபவத்திற்கும் தக்கவாறுதான் விஷயம் எழுதுவார்கள். இதனால் காகம் வேப்பங்கனியை விரும்புவது போல் நன்மையை முற்றும் விட்டு குற்றம் என்ன உளதோவென்று முன்வக்காலத்து பத்திரிகைகளிலேயே தூஷித்துக் கூறுகின்றனர். அவை வாங்கிக்கொண்டு பத்திரிகாசிரியர்கள், போன்றவற்றைப் பத்திரிகாசிரியர்கள்,

"இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மநுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர்க் காகினும்
வழிவழி யீர்வதோர் வாளா குமே"

என்பதை உணர்ந்து குற்றத்தைக் கண்டித்து பாரபட்சமின்றித் தமது அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுவது அவர்தம் கடமை.

அவ்வாறிருக்கத் தற்காலம் நடைபெறும் போாசிரியன் பத்திரிகையில் ஸ்ரீமான் பி. பரிமணப் பல்லவராயர் 1917 செப்டம்பர் மாதத்திய சஞ்சிகையில் "உபாத்தியாயரும் பஞ்சப்படியும்" என்ற வியாசத்தில், "உபாத்திமைத் தொழிலை நினைக்குந் தோறும் நகைப்புண்டாகிறது" என்று எழுதியுள்ளார் அஃதைக் குறித்து சி. முத்துச்சாமி என்பவர் 1918 மார்ச்சுமாதத்திய சஞ்சிகையில் "உபாத்தியாயர் தொழில் சிறப்புடையது அவர் அப்படிக் கூறுவது புத்தியீனம்" என இழித்துக் கூறுகிறார். ஆயின் விஷயதானம் புரிந்தவரின் நோக்கம் இன்னது என்று கருதாதவராகக் காண்கிறார். கனம் போாசிரியன் பத்திராதிபராவது இஃதை எடுத்துக் காட்டியிருக்கலாம்.

முற்காலத்தில் மிக்க சீரும் சிறப்பும் பொருந்தியதா யிருந்த உபாத்திமைத் தொழில் இப்போது அதற்கு நேர்மாறாய் இருப்பது பிரத்யக்ஷ அனுபவமே—அக்காலத்தில்தான் அஃது நடந்து நன்னிலை யடைந்தது. அரசனுக்கு அடுத்தவர் குரு என்று கொண்டாடினார்கள். தற்காலத்தில் டே! வாத்தி! வீட்டிற்கு வந்து பையனை அழைத்துப்போ வென்று சொல்லும் நாகரீகம் பரவும் இன்னாட்டில், எவ்வளவு உயர்வு இருக்கிறதென்று அனுபவத்தில் கீழிட்டபாடசாலைகளில் இருந்து அறியாதவர் போல் காண்கிறது. அஃதையும் நீக்கிப்பார்த்தால் உத்தியோகம் பெருமைதான் சம்பளம் வாங்குந் தோறும் நினைக்க நகைப்புண்டாக்குகிறது உண்மைதான். இக்காலத்து அகவிலையையும் கிடைக்கும் சம்பளத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தவர் அல்லர்போல் காண்கிறது. அனுபவித்தால்தான் கஷ்ட நஷ்டம் தெரியும். ஜீவனோபாயத்திற்கு முன்பணம் சேகரித்து வைத்துக்கொண்டு உபாத்திமைத் தொழிலைப் பூண்டவராக இருக்கலாம் என்று எண்ணுகிறேன்.

இவ்வாறு இருப்பதைப் பத்திராதிபர் அவர்கள் "குறிப்பு.—"என்று எழுதி உணர்த்தி இருந்தால் விஷயதானம் புரிவோர் மனக்கிலேச மடையாது இன்னும் விஷயதானம் புரிவார்கள். இப்படி விட்டுவிட்டாலோ ஒருவர்க்கொருவர் இப்போது ஆயுத யுத்தம் நடப்பதுபோல், இவர்கள் கடிதயுத்தம் நடத்துவார்கள் என்பதில் தடையிராது.

இவ்வித இழுக்கு நம் ஆனந்தபோதினி யிடத்து பற்றுததால்தான் அனேக மகான்கள் தம்மாலியன்றவாறு விஷயதானம் ஏராளமாய்க் கூட்டுவிக்கிறார்கள். அவை அனைத்தையும் வெளியிட இக்கொடூர யுத்தம் தணியாத மும்முரத்திலும் தன் இலக்ஷணம் பிறந்தது முதல் குன்றாது, வறுமையிலும் மேன்மையடைந்து வறுமைப்பிணியால் உழலாது மானிடர் முன்னேற்றத்திற்கு சொற்ப சந்தாத்தைக்குத் தலைகொடுத்து உதவிவருகிறது. ஆனந்தபோதினியின் நான்காம் ஆண்டு பிறந்ததைப்பற்றி, வறுமை வந்தகாலத்தும் தம் ஒழுக்கங்களைக் கைவிடாது முயற்சி என்ற கேடயம் கைபிடித்து நம்நாடு நன்னிலைக்குவரப் போதினியை ஆவலுடன் வருவித்து ஏனையவர்களுக்கு ஊட்டுவிப் போருக்கும்,

இம்மை மறுமைக்குத் துணைக்கோல் கொடுத்து முயற்சி செய்விக்கத் தூண்டும் விஷயதானம் புரிவோருக்கும்,

இவ்வொருகுழந்தையால் நம் அனைவரையும் மகிழ்விக்கும் பத்திரிகாசிரியருக்கும், பத்திராதிபருக்கும் நான்காவது ஆண்டு வந்தனத்தைச் செலுத்தி இன்னல் விளையாது சீரோங்கும் வண்ணம் எங்களிறைவனை வணங்குகின்றோம்.

"அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை"
"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றலறிது"

வெள்ளைய முனிஷி வித்தியாசாலை பி. சண்முகம், திருச்சிறுப்பள்ளி



குறிப்பு—ஸ்ரீமான் பரிமணப் பல்லவராயரவர்கள் கற்றுணர்ந்த அறிஞர்களில் ஒருவராகிய உபாத்தியாயராவர். அத் தொழிலில் மிக்க சிரத்தையும் விசுவாசமு முடையவர். பொதுநலத்திற்குழைப்பவர். உபாத்திமைத் தொழிலில் முன்னிருந்த கௌரவ நிலைமையை யடையவேண்டு மென்று பத்திரிகைகள் சஞ்சிகைகளின் மூலமாய் பிரயத்தனம் செய்துகொண்டிருப்பவர் என்பனவற்றை நாம் நன்கறிவோம். அத் தொழில் முன் இருந்த உயர்நிலையை யிழந்து இப்போதிருக்கும் நிலைமையை நினைக்க மனதில் உண்டாகும் வருத்தத்தால் அவ்வாறு வெறுப்பாய்க் கூற நேர்ந்தது சுபாவமே யாகும். அவர் கருத்து அவ்வாறே யென்று அதை வாசிப்போரும் சுலபமாகவே யறிந்து கொள்ளக் கூடியதே.

பத்திரிகாசிரியர்.

---

## ஜென்மபலன்,

### ஓரபிப்பிராயம்.

நமது போதினியின் காளயுக்தி௵ வைகாசி௴ சஞ்சிகையின் 407-ம் பக்கத்தில், நமது நண்பர் ம–ா–ா–ஸ்ரீ இலத்தூர் இ. வெ. மகாதேவையரவர்கள், ஜென்மபலன் என்ற தலைப்பின் கீழ், சுயநலம் பிறர்நலத்தைப்பற்றி அற்ப சொற்ப அறிவாளிகளும் எளிதிலுணருமாறு நன்கு தெளிவாகக்கூறியிருக்கின்றார். அதற்கு யாமும் எமது ஆனந்தபோதினி அன்பர்களும் வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆயினும், 408-ம் பக்கத்தில் இரண்டாம் பாராவின் முடிவில், மிஸ்டர். இராமகிருஷ்ண கோக்கலே என்பது ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோக்கலே என்றிருத்தல் வேண்டும். அன்றியும்,

"இக்காலத்தில் ஆலயங்களுக்கு 8 அணாவிற்கு ஒருசூடன் தட்டு வாங்கி வைத்தாலும் அதிலும் தன்பெயரைச் செதுக்கவேண்டு மென்கிறான்" எனக் கூறுகிறார். கட்டிடங்கள், ஆலயங்கள், குளங்கள் முதலிய தருமஸ்தாபனங்கள், ஞாபகச்சின்னங்கள் முதலியன, சரித்திர ஆராய்ச்சிக்கும், முற்கால தற்கால நிலைமைக்கும் குறிப்பு எழுதிவைத்தல் இன்றியமையாததன்றோ?

ஆகவே, பொதுஸ்தாபனத்திற்காக உதவிய பொருளில், உதவுவோர்களின் பெயரையும் உதவுவதன் விபரத்தையும் செதுக்குதல் மிக்க அவசியமேமாகும். முற்காலத்திலும் சிற்சில விஷயங்களில் அவ்வித விபரங்கள்செய்து (செதுக்கி—எழுதி) வைக்கப்படாமைக்காக, நாமும், (திருட்டு முதலிய தவறுதல்களுக்கு) அதிகாரிகளும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் எவ்வளவு ஆயாசப்படுகின்றோம்—சிரமப்படுகின்றோம். மற்றும்,

அக்குறிப்பைக் கண்ணுறும் பாமரரும், தருமசிந்தையில்லாத தற்பெருமைக்காரர்களும், 'இன்னார் இன்னதருமம் செய்திருக்கின்றார்களே, நாமும் ஏன் செய்யப்படாது? செய்தால் நாமும் பெருமையாக எண்ணப்படுவோமே' எனக் கருதியாவது பல தருமவழிகளில் பிரவேசிக்கும்படி அச்சின்னம் அன்னவரைத் தூண்டிவிடுவதற்கும் ஓர் உதவியாயிருத்தலாலும் பிரஸ்தாப விஷயம் மிக முக்கியமானதே. ஆதலின் அது சுயநலமாகாதென்னும் எமது அபிப்பிராயத்தை அவருக்கும் ஆனந்தனின் அன்பர்களுக்கும் அறிவிக்க ஆவலுறுகின்றேன்.

P. பரிமணப்பல்லவராயர்.

குறிப்பு:—மேற் கூறப்பட்டவாறு சாதனங்கள் பலகாரணங்களால் வேண்டற்பாலனவே. இச்சந்தர்ப்பத்தில் அதை யெடுத்துக் காட்டியதற்காக ஸ்ரீமான்

பரிமணப்பல்லவராய ரவர்கட்கு நாமனைவரும் வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். குறித்த விஷயத்தில் தானம்செய்வோர் அத்தானத்தால் தமக்கு உலகப்புகழ்ச்சியாவது வேறு எவ்வித பிரதிபலனாவது கிடைக்கவேண்டுமெனக் கருதிச் செய்வதால் பயனில்லை யென்பதையே முக்கியகருத்தாய்க் கொள்ளல் வேண்டும். இக்காலத்தில் பெரும்பாலோர் சுயப்பெருமையைக் கருத்தில் வைத்தே சொல்ப விஷயத்திலும் அவ்வாறு நடந்துகொள்கிறார்களாதலின், விஷயதானம்புரிந்த நமது நண்பர் அத்தகையார்க்கு சுயநல நோக்கம் கூடாதென்று அறிவுறுத்தும் ஒரே நாட்டங்கொண்டு அவ்வியாசத்தை வரைந்துள்ளார் என்று விளங்குகிறது.

பத்திரிகாசிரியர்.

---

## நித்தியவிதி—ஸ்நானம்.

### ஓர் வேண்டுகோள்.

நமது போதினியின் சென்ற வைகாசமாத சஞ்சிகையின் 427-ம் பக்கத்தில் ஸ்ரீமான் சிவானந்த யோகீஸ்வரர் அவர்கள் எழுதியுள்ள ஸ்நானவிதியில், 328-ம் பக்கத்தில் முதல் பாராவின் முடிவில் 'புண்ணிய நதியைப்பற்றி இங்கு விவரித்துக்கூற அவகாசமின்மையால் வெகு சுருக்கமாகக் கூறினோம்' என்கிறார்கள்.

இரண்டாவது பாராவின் முதலில் 'மலாபகர்ஷ ஸ்நானத்தினால் பின்னால் ஒரு அரியவிஷயம் விளக்கப்படுமாதலால் இது குறித்துக்கொள்ளத் தக்கதொன்று' என்கிறார்கள்.

429-ம் பக்கத்தில் 4-வது பாராவின் இறுதியில் 'இந்த (அப்பியங்கன) ஸ்நானத்தினால் ஒரு அதிசயமான செய்கையை நமது முன்னோர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். அது பின்னால் விளக்கப்படும் ஆதலால் இது எல்லாரும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது' எனவும் கூறியிருக்கின்றார்கள்.

இஃதிங்ஙனமாக 5-வது பாராவின் இறுதியில் 'நித்தியவிதியில் ஸ்நானத்தை எடுத்துக்கொண்டமையால் அதற்கு சம்பந்தமாயுள்ளவற்றையும் சேர்த்து முடிக்கவேண்டியதாயிற்று. வேறிடத்திற் கூற அவகாசம் நேரிடாதென்பது கருதியே இவ்விடத்தில் சேர்த்து முடிக்கப்பட்டது' எனவும் கூறியிருப்பனவற்றில், முந்திய சஞ்சிகைகளை மிக்க ஆவலோடு எதிர்பார்க்கத் தூண்டுங்கால், பிந்திய கடைசி உரை அத்தூண்டுதலை பின்னடையச் செய்கிறதேயென விசனமும் முரணும் ஏற்படுகின்றது.

ஆகவே, நித்தியவிதிகளைப்பற்றி யாமும் எம்போன்ற நண்பர்கள் பலரும் அறியுமாறு மிக்க தெளிவாகக் கூறிவரும் யோகீஸ்வரரவர்களுக்கு வந்தனமளிக்கக் கடமைப்பட்ட யாங்கள், பின்னால் விளக்கப்படும் எனக்கூறிய அவ்விஷயங்களை நமது ஆனந்தன் வாயிலாய் வெளியிடுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

P. பரிமணப்பல்லவராயர்.

குறிப்பு:—பிரம்மஸ்ரீ யோகீஸ்வரரவர்கள் மேற்கண்ட கோரிக்கையை யீடேற்றி யருள்வார்களெனப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

---



## தமிழின் சரித்திரம்.

கடல்சூழ்ந்த இப்பாரதகண்டத்தில் வழங்கும் பல பாஷைகளில் மிகவும் உன்னதஸ்தானம் பெற்றிருப்பது தமிழ். இந்தத் தமிழானது சிவபிரானால் குமாரவேளுக்குச் சொல்லப்பட்டு, அவரால் அகஸ்தியருக்கு உபதேசிக்கப்பட்டு அம்மாதவரால் உலகத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழின் பிறப்பிடம் மத்ய ஆசியா என்று அநேககாரணங்களினால் தெரிகிறது.

இப்படிப் பிறந்ததமிழ் மெதுவாகப் பரவலாயிற்று. அப்படி அது குமரிநாடு முழுவதும் பரவிற்று. குமரிநாடானது ஆஸ்ட்ரேலியா, ஜாவா, சுமத்ரா, மடகாஸ்கர் முதலிய தீவுகளையெல்லாம் அடக்கிக்கொண்டிருந்தது. ஆரியர் படையெடுப்புக்கு முன்னே பாரதகண்டமுழுவதும் தமிழ் இருந்ததாகத் தெரிகிறது. ஆரியர் படையெடுப்பினால் தமிழ் என்னும் பெண் தன் ஆடரங்கைச் சுருக்கினள். அப்போதுதான் இப்பாஷைக்கு திராவிடம் அல்லது ஓடி ஒளிக்கும் சொல் என்று ஆரியர் பெயரிட்டனர். இப்படி இடம்விட்டு இடத்திற்குத் தமிழ் ஓடும்பொழுது இதனிடமிருந்து அநேக பாஷைகள் பிறந்தன. அவற்றுள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவை முக்கியமானவை. திராவிடம் என்பது திரமிடம், திரமீளம், தமிளம், தமிள், தமிழ் என்று வந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் தமிழுக்குத் திராவிடம் என்று பெயரிட்டனரே யொழியத் திராவிடத்திற்குத் தமிழ் என்று பெயர் வரவில்லை.

முச்சங்கங்கள் வீற்றிருந்தகாலம் முதலியவற்றைக் கவனித்தால் 8000-வருடங்களுக்கு முன்னமேயே தமிழ் எழுதப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆரியர் படையெடுப்பினால் அநேக வடமொழிகள் தமிழ்ப்பாஷையுடன் சேர்ந்துவிட்டன. அப்போதுதான் தமிழில் இல்லாததான ஜ, ஸ, ஹ, க்ஷ என்னும் 5 எழுத்துக்கள் உண்டாயிருக்கவேண்டும்.

(i) தமிழின் ஆதிகாலமானது கி. பி. 100-க்கு முற்பட்டது. இந்தக் காலத்தின் முதற்சங்கமும் இடைச்சங்கமும், கடைச்சங்கத்தின் முற்பகுதியும் நடைபெற்றன. முதற்சங்கத்தில் சிவபிரான், முருகக்கடவுள், குபேரன், அகஸ்தியர் இவர்கள் வீற்றிருந்தார்கள் இது 4440 வருடங்கள் வீற்றிருந்ததாகத் தெரிகிறது.

(ii) இடைச்சங்கம் வெண்டோட்செழியனால் ஏற்படுத்தப்பட்டது. இதன் வாழ்நாள் 3700 வருடங்கள். இதை ஆதரித்தோர் 59 பாண்டியர்கள். (iii) கடைச்சங்கத்தின் இருப்பிடம் உத்தரமதுரை. இதில் 49 புலவர்கள் இருந்தனர். இச்சங்கம் 1850 வருடங்களிருந்தது. திருவள்ளுவர், திருக்குறளும், ஔவையார்செய்த ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை முதலியவைகளும் இக்காலத்தவையே.

தமிழின் இடைக்காலம் கி. பி. 100 முதல் கி.பி. 1400 வரையில் உள்ளது. அக்காலத்தில் தமிழ் ஐம்பெருங் காப்பியங்களான. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி முதலியன எழுதப்பட்டன. ஐந்து சிறு காப்பியங்களான சூளாமணி, யசோதரகாவியம், நாககுமாரகாவியம் உதயணன் சரித்திரம் இவைகளும் இக்காலத்தன. திருவாசகம் என்னும் நூலும், மேருமந்தர புராணமும், திவாகரம், பிங்கலம் என்னும் நிகண்டுகளும், இக்காலத்திலேயே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவர்களின் தேவாரங்கள் வெளிவந்தன. 9-ம் நூற்றாண்டில் நாலாயிரப் பிரபந்தம் என்னும் வைணவ நூலும், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரமும் வெளிவந்தன. 10-ம் நூற்றாண்டில் நன்னூல், நேமிநாதம் முதலியவை வெளிவந்தன. 11-ம் நூற்றாண்டில் கம்பர்

இராமாயணம் ஆறுகாண்டமும், ஒட்டக்கூத்தர் இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தரகாண்டமும், புகழேந்தியார் நளவெண்பாவும், ஔவையார் நல்வழியும், நீதிவெண்பாவும் செய்தார்கள்.

தமிழின் பிற்காலம் கி. பி. 1400 முதல் இற்றை நாள்வரையில் கொண்டது. இக்காலத்தில் அதிவீரராம பாண்டியர் இருந்து நைடதம், கூர்ம்புராணம், காசிகாண்டம் முதலியவற்றை இயற்றினர். புகழ்பெற்ற தேசிகர் சேதுபுராணம் செய்தார். சிவஞான முனிவர் அநேக நூல்களை இயற்றிப் பெரும் புகழ் அடைந்தார். சிவப்ரகாசஸ்வாமிகள் பிரபுலிங்கலீலையும், நன்னெறியும், நீதிவிளக்கமும் செய்தனர்.

ஆதிகாலத்தில் புலவர்களை ஆதரித்தவர்கள் சங்கத்தவர்கள் இக்காலத்திலுண்டான நூல்களெல்லாம் மனிதர்கள் இயல்பையும், இயற்கை யழகையும் பற்றிக் கூறுகின்றன. மத்யகாலத்தில் தமிழ் சிற்றரசர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் பௌத்தமதம் ஜைனமதம் இவ்விரண்டு மதங்களும் இந்தியாவில் பிரபலமாக இருந்ததால் தமிழ் காவியங்களில் பெரும்பான்மையாய் இவைகளின் சரித்திரங்களாகவே இருக்கின்றன. பிற்காலத்தில் தமிழ் திருவாவடுதுறை ஆதீனத்தார் சில சிற்றரசர் முதலியவர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. இக்காலத்து நூல்கள் சில தெய்வஸ்துதிகளாகவும், சில நீதி நூல்களாகவும் சில சமய சம்பந்தப்பட்டவைகளாயு மிருக்கின்றன.

“ பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்று பலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே ”

என்றபடி மனோன்மணியம் தமிழ்த் தெய்வ வணக்கத்தில் சொல்லி யிருக்கிறது.

நமது தாய்பாஷையின் பெருமைக்கும் இதை விருத்திசெய்வதற்கு மிகவும் சிரத்தையும் தேக சிரமமும் எடுத்துக்கொண்டு தமிழ் நூல்கள் இறைக்குந்தருவாயிருந்தவற்றை யெல்லாம் மறுபடியும் உயிரடையச் செய்யும் நமது பிரம்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர் ஸ்வாமிநாதய்ய ரவர்கள் பெருமைக்கும் ஸ்ரீமான் களாளபாண்டித் துறைத்தேவர், பெத்தாச்சி செட்டியார், சேது பதிராஜா இவர்களது புகழுக்கும் அளவுண்டோ? தமிழின் பெருமையைக் கூறப்புகின் விரியும். ஆகையால் இதை இம்மட்டோடு நிறுத்தி மறுபிரசுரத்தில் இதைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுவோம்.

கே. அனந்தாசாரி.

---

## “ அன்பு ”

புருடன் புருடனிமீது ஏற்படும் அன்பைக் காதல் என்றும், சிநேகன்மீது ஏற்படும் அன்பை நேசமென்றும், ஏழைகள்மீது காட்டும் அன்பை கிருபாநோக்கமென்றும், பட்சி மிருகங்களின்மீதுண்டாகும் அன்பை ஜீவகாருண்யமென்றும், கடவுளிடம் செலுத்தும் அன்பை பக்தியென்றும் இன்னும் பற்பல விதமாய் அன்பின் மாட்சி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தூய்மையான நல்ல எண்ணத்துடன் பொறுமையாகவும், இரக்கத்துட



னும், சலனமற்ற சாந்தத்துடன் நன்மையடைந்திருப்பதே அன்பு என்று சொல்லப்படும்.

எவன் சகல பொருள்களிடத்தும் சமதிருஷ்டியுடையவனாயிருக்கிறானோ, அவன் ஞானியாய் மோட்சவீட்டை யடைகிறான்.

“ நீ என்னிடத்து மனதையுடையவனாய் அனன்னிய பக்தியுடையவனாய் (அனன்னியமாகாத அன்புடையவனாய்) என்னை வணங்கவேண்டும். அவ்விதம் செய்தால் என் ஆநந்தமயனாகிறாய். அப்பொழுது சுய ஸ்வத்தைத் துறக்கிறாய். எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுகிறாய். அருச்சுனா! உன்னிடமுள்ள நான் என்ற அகங்காரத்தை நீக்கி சகல ஜீவர்களிடத்தும் அன்பை செலுத்துவாயாக ” என்று ஸ்ரீ கண்ணன் பார்த்தனுக் கருளியிருக்கிறார்.

ஸ்ரீமான் புத்தர் அன்பை ஆபரணமாய் பூண்டவரல்லவா? அவருடைய மதம் இன்றைக்கும் அழியாத குன்றின்மீதிட்ட தீபம்போன்று பிரகாசிக்கிறது. அன்பே கடவுள் என்றும், மற்ற கடவுள் வேறு இல்லையென்றும் அருளியிருக்கிறார். புத்தர்சொன்னவை உண்மையாக [illegible] கண்டங்களிலும் பரவியிருந்தால் ஆடு, மாடு, கோழி, மீன் முதலியவைகளுக்கு ஆபத்தே வராது. [illegible] [illegible] விவகாரங்கள் இராது. ஹோமம் [illegible] வேறுயாக வேண்டாம், பிராமணர் பிராமணரல்லாத ஜாதிகள் முதலிய வேறுபாடும் கிளம்பியிராது. நம் தாய்நாடு வறுமை நிலையிலிராது; ஐரோப்பாவில் கொடும் போரும் நடைபெறாது. இவைகளுக்கெல்லாம் அன்பில்லாக் குறையே காரணம்.

கடவுளிடத்தோ, மனிதரிடத்திலோ, பெண்டாட்டி பிள்ளைகளிடத்தோ, மிருகங்களிடத்தோ, பட்சிகளிடத்தோ, இன்னும் மற்றெந்த ஜீவர்களிடத்தோ [illegible] அன்பு ஏற்படுவது கண்டிலம். ஸ்ரீமான் புத்தர், சிபி சக்ரவர்த்தி, [illegible] இராமானுஜர், சங்கரர், மாத்வர் ஆகிய மதாச்சாரியர்கள் முதலிய இவர்கள் எல்லா ஜீவர்களிடத்தும் அன்பைக் காட்டியதினாலல்லவா இன்றும் இப்புண்ணியபூமியில் அவர்களைப் போற்றி கொண்டாடி வணங்கி வருகிறோம். [illegible] ஒருவன் பெண்டாட்டி பிள்ளைகளின்மீது தன்னைச்செலுத்தி, அவர்களைப் [illegible] பொய் பித்தலாட்டம்செய்து காசுசம்பாதிப்பதே தொழிலாய்க்கொண்டு உழைத்து [illegible] பாசத்தில் கட்டுண்டு, ஸ்திரீலோக [illegible] டிருக்கிறான். ஒருவன் [illegible] பொய்சாட்சி சொல்லல், கொலை புரிதல், மதுபானம் குடித்தல், சூதாடல் முதலிய பஞ்சமகாபாதகங்களைச் செய்கிறான். ஒருவன் பட்சியை [illegible] அப்பட்சியைக்கொண்டு மற்ற பட்சிகளைப் பிடித்து [illegible] வளர்க்கிறான்; நாய், ஆடு, மாடு, கோழி, பன்றி, முதலிய மிருகங்களின்மீது [illegible] கிறான். [illegible] பெரும்பாலாக ஒவ்வொரு மனிதனும் தன் சுயகாரியத்துடன் அன்பு காட்டுகிறான் என்பது எல்லோருக்கும் பட்டவர்த்தனமாய்த் தெரியும். கடவுள்மீது பக்தி [illegible] கருதப்படுவோர்கள் பல்வித கோட்பாடுகளுடையவர்களாக இருக்கிறார்கள். ஆண்டிகள், பரதேசிகள், சன்னியாசிகள், கோயில் அர்ச்சகர்கள், தாசர்கள், பக்தர்கள், போதகாசிரியர்கள், உபதேசியார்கள் முதலிய இவர்களிடம் பெரும்பாலும் ஏதாவது சுயகாரியத்தைப்பற்றிய அன்பு [illegible] அன்பைக் காண்பது கடினம். [illegible] குரோதம், பொறாமை, [illegible] புறங்கூறல், [illegible] காமம், அகங்காரம், வீண்பெருமை [illegible] முதலிய துர்ச்செய்கைகளில் ஏதாவது [illegible] மேலே விஸ்தரிக்கப்பட்டிருக்கும் துர்ச்செயல்களில் ஏதாவது ஒன்றைத் [illegible] பெரும்பாலாய்க் [illegible] பிடித்து நடக்கும் மனிதர்கள் [illegible] வர்கள்.

அன்பு என்பது சற்றேனும் உலகத்திலில்லாவிட்டால் பெண்சாதி பிள்ளைகள், சுற்றத்தார், உறவின்முறையார், பட்சி, மிருகங்கள், ஊர்வன, முதலியவை ஏது? எந்தவிதத்திலோ ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒருவித சிறியஅன்பு (அஞ்ஞானத்தலாகிய ஆசையென்னும் பாசபந்தம்) இருப்பதால் இவ்வுலகம் இந்த மட்டிலாவ திருக்கிறது.

ஸ்ரீமான் புத்தர் கண்டதும் அன்பு, அறிந்ததும் அன்பு, அனுபவித்ததும் அன்பு, அவர் போதித்ததும் ஸ்தாபனம் செய்ததும் அன்பு, "அரும்பொனே மணியே யென்னன்பே யென்னன்பான அறிவே * *" என்று தாயுமானவரும், "முன்பு பின்பின்றி மூவுலகத்திலும் அன்பினல்லதோர் ஆக்கமுண்டாகுமோ" என்றும், "அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்—கென்புதோல் போர்த்த வுடம்பு" என்று திருவள்ளுவரும், "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார், அன்பே சிவமாவ தியாரும் அறிந்தபின், அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே" என்று சிவவாக்கியரும் பாடி யுள்ளார்கள். "என்னேயும் என்வாக்கியத்தையும் நம்பினால் என் பிதாவை அன்புடன் சேவிக்கலாகுமென்கிறேன்" என்று கிறிஸ்து சொல்லுகிறார். இவைகளால் எம்மதஸ்தருக்கும் அன்பே பிரதானமென்பது தெற்றென வெளியாகிறது.

சகோதர சகோதரிகளே! நீங்கள் உங்கள் ஆண்டவன்மீது காட்டும் பக்தியென்கிற அன்பையே உங்கள் காதலி சேய்களின்மீதும் காட்டுகிறீர்கள். அதே அன்பை உங்கள் பணியாளர், விழுமார்ந்தார்கள், கீழான உத்தியோகஸ்தர்கள், மிருகம், பட்சி, ஈசன் முதலானவர்கள்பேரில் காட்டுங்கள். ஒவ்வொரு மதமும் அன்பைப்பற்றியேதான் கொஷிக்கின்றது. அன்பையே ஆபரணமாய் அணியுங்கள். கடவுள் அந்த அன்பு என்னும் பக்தியாகிய வலையொன்றிற்கே அகப்படக்கூடியவர். "பக்திவலையிற் படுவோன் காண்க" என்றருளினர் மாணிக்கவாசகப்பெருமான். அந்த வலையில்மட்டுமே அகப்படுவானெனின் அவன் அன்பே உருவாக உடையவன் என்பது வெளிப்படை.

எஸ். அயோத்திதாஸ்.

---

## நித்தியவிதி, புண்ட்ரதாரணம்.

(456-ம் பக்கத்தொடர்ச்சி)

காலையிலெழுந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து சுத்தமான இரண்டுவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டபின் நெற்றியில் புண்ட்ரம் தரித்தல்வேண்டும். புண்ட்ரந்தரியாவிட்டால் எவ்வித கருமங்களையும் செய்ய அருகர்களாகமாட்டோம். பிரேதகிருத்தியம் ஒன்று தவிர மற்றைய கன்மங்களெல்லாம் புண்ட்ரந்தரித்துக் கொண்ட பின்னரே செய்யப்படலவேண்டும். இதனால் புண்ட்ரந்தரிப்பதில் ஏதோ ஒரு விசேஷமிருக்கிறதென்று புத்திமான்களுக்கு நன்கு விளங்கும். ஆதலாலதைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

புண்ட்ரம் இருவகைப்படும். ஊர்த்வபுண்ட்ரம், திரிபுண்ட்ரம் என்பனவையாம். ஊர்த்வபுண்ட்ரமென்பது மேல் நோக்காகத் தரிக்கப்படுவது. (ஊர்த்வம் = மேல்நோக்கல்) "ஊர்த்வகதியை விரும்புகிறவன் ஊர்த்வபுண்ட்ரம் தரித்தல்வேண்டும்" என்று ஒருவாக்கியம் வேதத்தில் கூறப்படுகின்றது. இது திருமாலடியார்கள் தரித்துக்கொள்ளத்தக்கது. ஊர்த்வபுண்ட்ரம் இடுதற்குரிய பொருளும் இருவகையாம். இது நம்மாற்கேவரம்பட்டால்



கொள்ளப்படுவது. அவற்றிலொன்று பொன்மைநிறமுடையது. மற்றொன்று வெண்ணிறமுடையது. இரண்டும் ஒருவகையான மண்ணேயாம். வெண்சந்தனம் செஞ்சந்தன மென்பவற்றாலும் தரித்துக்கொள்வாருமுளர். இவற்றுக்குச் சரியான ஆதாரங்களில்லை ஆயினும் அனுஷ்டானத்தில் உள்ளன. சிஷ்டர்களாலும் ஆசரிக்கப்படுகின்றன. சில ஸ்மிருதிகள் சந்தனமட்டே விதிக்கின்றன வாதலால் அதுவு மொப்பத்தக்கதேயாம்.

நிற்க, கோபீசந்தனத்தாலும் வெண் திருமண்ணாலும் இடப்படும் ஊர்த்வபுண்ட்ரங்களுள் கோபிசந்தன மென்னும் வேதத்தில் கூறப்பட்டது ஊர்த்வகதியாகிய மோட்சத்தை விரும்புகிறவன் ஊர்த்வபுண்ட்ரமிடுகவென விதித்தமையால் என்க. கோபீமண் பொன்னிறமுள்ளது. அதற்குப் பிரமதேவனே தெய்வம். குணம் ரஜோகுணம். புருவமத்தியிலிருந்து நெற்றியினிறுதிமட்டும் பட்டையாகவேனும், இடைவெளியிட்டேனும் தரிக்கவேண்டும். இப்படியிடுவதைத் திருமாலின் சீர்பாதகமலமென்பர் "சர்வேசுவரனுடைய திருமேனியி லுற்பவித்துச் சுதரிசன முத்திரைபெற்ற கோபீசந்தனம் என்னை நன்னெறியிற் செலுத்துக" என்று பிரார்த்தனை செய்துகொண்டு தரிக்கவேண்டுமென்று வாசுதேவோபநிஷதம் கூறியது. இதனைக் கோவிந்தன் திருவடிகளாகக் கருதித் தரித்திடலால் அதை நினைக்கும்போதும் காணும்போதும் அத்திருவடி மனதில்தோன்றும். மார்பு புஜங்களிலும் தரிப்பதுண்டு. ஈசன் திருவடிகளால் ஸம்ஸ்காரம் செய்யப்பெற்ற சரீரம் பரிசுத்தமாகும் என்பது ஊர்த்வபுண்ட்ரமணிதலின் கருத்து. வெண்திருமண் புண்ட்ரம் எந்த வைதிக நூலிலும் விதிக்கப்படவில்லை. பாஞ்சராத்திரம் வைகானசமென்னும் ஆகமங்களில் கூறப்பட்டுளது. ஆகமங்களும் ஜீவாத்மாக்களுக்கு அந்தமில இன்பமடையும் மார்க்கத்தையே போதிக்க வெழுந்தனவாதலால் அவற்றின் உபதேசங்களையும் கைக்கொள்ளவேண்டியதே, வைணவசமயாசாரியர்கள் மேற்குறித்த ஆகம வலிகொண்டு ஸ்தாபித்திருப்பதினால் அதுவும் பயனளியாமற் போகாது என்பதே யெமது துணிபு.

இனிப் புண்ட்ரங்களிடுவதின் பயனை வைத்தியம் முதலிய சாத்திரப்படி ஆதாரம்கொண்டு பரிசோதிப்பதே நன்று. புருவமத்தியஸ்தானம், ஞானஸ்தானம், ஆன்மஸ்தானமென்று புகழப்படும். அவ்விடத்தில் ஆன்மா ஏழுப்பத்தாறு கருவிகளுடன் வசிக்கும். அதுவே ஜாக்கிரம் எனப்படும். ஜாக்கிரஸ்தானமே ஞானஸ்தானமுமாம். அவ்விடத்து இடைகலை பிங்கலை சுழுமுனை என்கிற மூன்று நாடிகளும் கூடும் சந்தியுண்டு. இடைகலை பிங்கலை வழியே சுவாசம் வந்து போமென்பது யாவருமறிந்த விஷயம். சுவாசமியக்கும் வேகத்தால் பேனேர்க்கியெழும் சில அம்சங்கள் ஆவிவடிவாய் அந்த சந்திஸ்தானத்தை யடையும். அது நாட்பட்டுத்தங்கினால் ஞானஸ்தானம் மலினமடையும். மலினமடையவே அதி சூட்சுமமான பிரமப்பொருளை அங்ஙனம்கண்டு தரிசிப்பது அசாத்தியமாம். தியானம் ஜபதபங்களெல்லாம் அந்தப் புருவமத்திய ஸ்தானத்தையே நோக்கிச் செய்யப்படும். அவ்விடம் அசுத்தப்பட்டு மலினமாயிருந்தால் அங்கேயப்பெறின் ஒளிவடிவமான பிரமப்பொருள் தோன்றுதாம். புண்ட்ரமாவது ஊர்த்வபுண்ட்ரமாவது தரித்தால் அது அவ்வசுத்தமலத்தை விலக்கிச் சுத்தப்படுத்தும். அதுகாரணமாகவே புண்ட்ரந்தரிக்க விதித்ததாமென்க. மண் அசுத்தத்தை விலக்குந் தன்மையுடையதாயினும் சூரிய உஷ்ணத்தை அகாலியோகிற்கும். இத்தகைய விசேஷ குணமுடைய மண் சூரிய உஷ்ணத்துடன் கலக்கும்போது அதிக சக்திபெற்று அதிகமான சத்தை அவ்விடத்தினின்று சோஷித்துவிடும். வெண் திருமண் கோபீசந்தனத்தைவிட அதிகக்காரமுடையது. அதனாலேதான்
திருமண்

வைதிகநூல்கள் அதை யங்கீகரிக்கவில்லை. கண் முதலிய விடங்களில் நீர் கோத்துக்கொண்டு வியாதியுண்டானால் வெள்ளைமண்ணை அவ்விடத்துப் பூச அந்நீர் விலகுமென்று வைத்தியநூல்களிற் கூறப்பட்டதனாலும். அது இடப்பட்ட இடத்தில் தோலினியற்கைமாறி வெண்மைநிறம் காணப்படுதலாலும் வெண்மண் அதிக காரமுடையதென்பது புலப்படும். இவ்வூர்த்துவ புண்டரம் பலவகையாகத் தரிக்கப்படுதலால் தத்தம் வருணம் குலம் இவற்றின் ஆசாரம் பற்றியும், உபதேசக்கிரமத்தை யனுசரித்தும் தரித்துக்கொள்ள வேண்டுவதே முறையாம். இவ்வாறு தரித்துக்கொண்டபின் எவ்வகைப்பட்ட வைதிககன்மங்களையும் செய்ய அருகனாகிறான் என்று உண்மைநூல்கள் கூறுகின்றன. சிஷ்டாசாரமுங் காணப்படுகின்றது.

இனி திரிபுண்டரத்தைப்பற்றிச் சிறிது கூறுவாம். இது சிவபெருமான் அடியார்களால் தரிக்கப்படுவது. இதில் வேற்றுமை யாதுமில்லை. எல்லாரும் ஒரேவிதமாகத் தரிக்கின்றனர். திரியக் புண்ட்ரம் என்பதுவே திரிபுண்ட்ரமென மருவிற்று. குறுக்காக இடப்படுவதால் இப்பெயர் கூறப்பட்டது. இது நீறு என்னும் பஸ்மத்தாலிடப்படுவது. இந்தத் திருநீற்றை வேதம் எட்டு உபநிஷதங்களால்புகழ்ந்து அதை உண்டாக்கும்முறை, அதற்குப் பெயர், அப்பெயர்களுக்குக் காரணம், அதனாலுண்டாகும்பலன், அதைத் தரிக்கத்தகுந்த அதிகாரிகள் எல்லாவற்றையும் விரித்துக்கூறியது. ஜாபால உபநிடதமானது விபூதி, பஸ்பம், பஸிதம், க்ஷாரம், ரக்ஷை யென்று திருநீற்றுக்கு ஐந்துபெயர்கள் கூறிற்று. ஐசுவரியத்திற்குக் காரணமாயிருப்பதால் விபூதி, சரீரத்தில் மலரூபமாய் அமைந்திருக்கும் பாபகன்மங்களை யொழிப்பதால் பஸ்பம், மறைந்திருக்கும் பரம்பொருளை விளக்கிக்காட்டுவதால் பஸிதம், ஆபத்துக்களை நீக்குவதால் க்ஷாரம், பூதப்பிரேத பிசாசங்களையும், அபஸ்மாராதி மஹாரோகங்களையும் விலக்கிக் காப்பாற்றுவதால் ரக்ஷை யென்று ஜாபாலோபநிஷதம் காரணங்களோடு ஐந்துபெயர்கள் கூறிற்று. இத்தகைய திருநீற்றை எக்காலமும் தரிக்கவேண்டுமென்றும், நீராடியவுடனே அவசியந்தரிக்கவேண்டுமென்றும் உண்மைநூல்கள் கூறுகின்றன. இவ்வண்ணந் தரித்தல் திருநீற்றுக்கும் திருமண்காப்புக்கும்பொது. நீராடியவுடன் தரித்தால் முன் ஸ்நான விசேடத்தில் கூறியவாறு உள்ளிருந்து மேலெழும் ஆவிரூபமான மலத்தை அது அபகரிக்கும். மல அபகரித்தலே புண்டரங்களினாலாகும் பெரும்பயன். ஜீவான்மாக்கள் செய்யும் பாபகர்மங்கள் காலாந்தரத்தில் தடித்து மலரூபமாய்ச் சரீரத்திலமையும். நாளடைவில் அது சூட்சும சரீரத்தையும் பற்றும். இதே பூர்வகர்மம் என்று கூறப்படுவது. இந்த மலத்தை யொழித்தற்கே புண்டரங்களிடவேண்டு மென்பது கூறியது. கர்ம விசேடங்கூறு மிடத்து இது விரிக்கப்படு மாதலால் இதனை யிம்மட்டோடே நிறுத்துகின்றோம். சில பாபகர்மங்களுக்கும் வியாதிகளுக்கும் இதைப் பிராயச்சித்தமாக நூல்கள் விதித்திருக்கின்றன. அதாவது "கபத்தால் வருந்துகிறவன் ஒருமாதம் திருமண்ணைத் தரித்து, பிறகு சாந்திராயண விரதமிருந்து நீல இரத்தினத்தைத் தானஞ்செய்தால் அந்த வியாதி தீரும்" என்றும் "அபஸ்மாரரோகமுள்ளவனும் மஹாபாவியா யிருப்பவனும் பன்னிரண்டு வருஷம் உடல் முழுதும் திருநீறு பூசிக்கொண்டு விரதமிருந்தால் அவை நீங்கும்" என்றும் கூறியிருக்கின்றது. இதனால் சரீரத்தில் மலரூபமாய் நிற்கும் பாபத்தைப் போக்கும் சக்தியின் உண்மை புலப்பட்டது. ஜபதபாதிகளைப் பாபரஹிதனாய்ப் பரிசுத்தனாய்ச் செய்யவேண்டுமென்று விதி யிருப்பதினால், எல்லாரும் தத்தம் மதகுல ஆசாரங்களுக்குத் தக்கபடி புண்டரதாரணம் செய்து கொள்வது அவசியமாயிற்று.



இனி திரிபுண்டரத்துக் குரிய திருநீறு சிலாக்கிய முடையதென்பதைப் பதார்த்த குணங்களைக் கொண்டு ஆராய்வோம். பசுவின் சாணம், கோமயம், நெய், பால், தயிர் முதலியவற்றால் உண்டாக்கப்படுவது. நெய் பால் முதலியவற்றின் தன்மை யெல்லாருக்குந் தெரியும்.

"ஆவினது சாணம் அடிபடுவீக்கம் முதிரம்
தாவி வருகிருமி சார்ந்தகபம்—மேவுசுரம்
சங்குதா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியப்பால்
தெங்கின் பாலுக்கொக்குஞ் செப்பு.
விடபாண்டு சோகை பலவீக்கஞ் சகல
விடமுதிர மாலையென மெத்தப்—படவிதனிற்
பேசலக்க ணோடுதந்தப் பீடையும் சன்றிடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு"

என்றதனால் சரீரத்தி லுண்டாகும் பலவிதமான நோய்களையுந் தீர்க்கும். கோமூத்திரம் காய்ச்சின இரும்பைத் துளைக்கும். ஸ்தூல ரோகங்களைத் தீர்க்கும். ஆதலால் இவ்வைந்து பொருள்களையும் சேர்த்துப் பிசைந்துருட்டிக் காயவைத்தபின் நெற்பதரிலிட்டுத் தீவைத்துப் பஸ்மமாக்கப்படும். பஸ்மமானது காற்று, நெருப்பு, நீர் முதலியவற்றாலும் சன்னற்றல் கெடாது நிலைபெறும். மந்திரவாதிகளுக்கும் யோகிகளுக்கும் திருநீறே பிராணாதாரமாயுள்ளது. பூதப்பிரேத பைசாசக் கணங்களைத் துரத்தவும், பாம்பு தேள் முதலியவற்றின் விஷங்களை நீக்கவும், வியாதிகளைப் போக்கவும் உபயோகப் படுத்துவது பிரத்தியட்சமும் பிரசித்தமுமானது. நீரினால் தலைவலியுண்டானவர்கள் சாம்பலைமூட்டையாகக்கட்டித் தலையணையாக உபயோகப்படுத்தினால் அந்நீரை யிழுக்கும். கட்டியான சாம்பலை நீரில் தோய்த்தால் தன் சக்தி யளவு நீரை யிழுத்துக்கொள்ளும். இதனால் நீர் முதலிய வற்றைக்கிரகிக்கும் சக்தி பஸ்மத்துக்குண்டென்று நன்கு புலப்படுகிறது. அப்படியே சரீரத்தினுள்ளும் அதிக சூக்குமமாகப் பிரவேசித்து நீரையிழுக்கும்; உஷ்ணத்தை யுண்டாக்கிப் பிராணாக்கினியை விருத்தியாக்கும். இதனாலேதான் தண்ணீரில் ஸ்நானம் பண்ணச் சக்தி யில்லாதவன் ஆக்கினேய ஸ்நானம் செய்யவேண்டும் என்று ஸ்மிருதிகள் விதித்தன. வைத்தியநூல்களிலும் கூறியதுண்டு. ஆக்கினேயஸ்நானமாவது சர்வாங்கமும் திருநீற்றைப் பூசிக்கொள்ளுதலேயாம். இந்த உண்மையினாலேயே யோகிகளிற் சிலர் சர்வாங்கமும் விபூதியைத் தரித்துக்கொள்கின்றனர். அது நாளடைவில் சூட்சும மலமான பாபத்தையும் தொலைக்கும். இப்படிப்பட்ட மகிமையுள்ள விபூதியை ஸ்நானஞ்செய்தவுடன் மேனி உத்தூளனம் செய்துகொண்டு அதன் மேலே திரிபுண்டரந்தரித்தால், அவன் பரிசுத்தனாய் ஜபதபாதிகளுக்கு யோக்கியனாகிறானென்பது கொண்டே புண்டரம் தரியாமல் ஜபாதிகள் செய்யக்கூடாதென எல்லா நூல்களும் கூறுகின்றன. விரிவஞ்சிச் சுருக்கிக் கூறினோம்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## குற்றங் கண்டித்தல்

மனித தேகத்தையுடைய ஒவ்வொருவருக்கும் ஏதாவது சில குற்றங்கள் இயல்பாய் இல்லாமலில்லை. சில வீணர்கள், அயலார் மாட்டுள்ள அற்ப குற்றங்களைக் கவனித்து அதைப் பிதற்றிப் புறங்கூறி மகிழாநிற்பர்.

"பீதெடுத்த வஞ்சராதி வெகுளிசெய்தல் பிறர்பெருங்
கோதெடுத் துரைத்தனன்பு கொண்டுயிர்த்தல் கொடியவெஞ்

[illegible]

"என்றும் வில்லிபாரதச் செய்யுள் ... [illegible]

[illegible]



பொருத்தமேயப்படி? தன்னிடத்துள்ள குற்றத்தை [illegible] குணமுடையவன்.

[illegible]

பொ. [illegible]

## மாணவர் பக்கம்

### நல்லொழுக்கம்.

(1) பிராமணர், சித்திபெற்ற பெரியோர்கள், ஆசாரியர் இவர்களைப் பூசித்தல்வேண்டும். இரண்டு காலங்களிலும், சந்தியை வணங்கவேண்டும். எப்போதும் நல்ல வஸ்திரங்களையும், நல்லவாசனையுள்ள புட்பங்களையும் சூடிக்கொள்ளவேண்டும். கொஞ்சமாகிலும் பிறர்பொருளை அபகரித்தலும், ஒருவர்க்குப் பிரியமில்லாத பேச்சுக்களைப் பேசுவதும், பொய்யான வார்த்தைகளையும், பிறர் குற்றங்களையும் எடுத்துச் சொல்வது கூடாது.

(2) அயலான் மனைவியை விரும்புகிறவன், விபசாரியைச் சேர்ந்தவன், வெள்ளாட்டியைக் கொண்டவன், அற்பன், பொய்யன், மிகவும் செலவு செய்பவன், வஞ்சகன், இப்படிப்பட்டவர்களோடு சினேகம் செய்யலாகாது. வாய் மூடிக்கொள்ளாமல் கொட்டாவி விடுவதும், பெருமூச்செறிவதும், விட்டு ஒழிக்கவேண்டும். சேக்கவிட்டு சிரிப்பதையும், ஓசையுடன் அபானவாயு விடுவதையும், நகங்களைக் கடிப்பதையும், துரும்பைக் கிள்ளிக்கொண்டிருப்பதையும், மீசையைக் கடிப்பதையும், உதட்டைக் கசக்கிக்கொண்டிருப்பதையும் செய்யாதிருக்கவேண்டும். அம்மணமாயிருக்கும் பெண்பிள்ளையையும், உதயகாலம் சூரியனையும், பார்க்கவே கூடாது. பூசிக்கத் தக்கவர், ஆசிரியர், பிராமணர், சோதிடன், இவற்றின் நிழலைக் கடக்கலாகாது. அம்மணமாயிருந்து கொண்டு, குளித்தல், தூங்குதல், ஆசமனஞ் செய்தல், தேவபூசைசெய்தல், முதலானதும் ஆதரிக்கவேண்டாம். ஆசமனஞ்செய்யாமல் ஜபம் முதலியவைகளை ஒற்றை வஸ்திரத்தோடுஞ் செய்யவேண்டாம். ஒருவர் பகையினாலேயே கஷ்டம் வந்தாலும் சகித்துக் கொள்ளவேண்டியதல்லாமல், அதனால் வரும் பாபத்தைக் கைக்கொள்ளலாகாது.

ஸ்நானம் செய்தவுடன் உலர்ந்த வஸ்திரத்தினாலே உடம்பைத் துடைக்கவேண்டும். அல்லாமல் கையினால் துடைத்துக்கொள்ளக்கூடாது. பிறர்மேல் நீர் தெறிக்கும்படி மயிரை உதறலாகாது. நின்றுகொண்டு ஆசமனஞ் செய்யலாகாது. இரண்டு பாதங்களை ஒன்றோடொன்று தேய்த்துக்கொள்ளவுங்கூடாது. பெரியோர்களுக்கெதிரில் பாதத்தை நீட்டவுங் கூடாது. சூரியன், சந்திரன், அக்கினி, தண்ணீர், காற்று, பெரியோர் இவர்களுக்கு எதிரில் காரியுமிழ்வதும், மலமூத்திரங்கள் விடுவதும் கூடாது. வழியில் கோழை, மலம், மூத்திரம், உமிழ்நீர் இப்படிப்பட்டவைகளை மிதித்துப்போகவேண்டாம். அப்படித்தெரியாமல் மிதித்துக்கொண்டால் உடனே கால்களைக் கழுவிக்கொள்ளவேண்டும்.

(4) போசனஞ்செய் காலங்களிலும், ஹோமார்ச் சனகாலங்களிலும், சபைக் கூட்டங்களிலும், கோழை யுமிழ்தல், மூக்குச்சிந்தல் முதலான செய்கைகளைச் செய்யலாகாது. பெண்மக்களை அவமதிக்கவும் ஆகாது, அவர்களிடத்தில் கண்மூடித்தனமாய் நம்பிக்கையும் வைக்கலாகாது. வேதசாஸ்திரங்களில் வல்லவரான சான்றோரை அடுத்திருக்கவேண்டும். எவன் கோபித்தவர்களைச் சமானப்படுத்தி எவரும் யாரிடத்தும் மாச்சரியமில்லாமல் சகலருக்கும் உறவினன்போலிருப்பவனும், பயப்பட்டவர்களுக்குத் தேறுதல்சொல்லுகிறதுமாய்ச் சாதுவாய் இருக்கிறானோ அப்படிப்பட்டவனுக்குச் சொர்க்கமும் அறப்பலமென்றே சொல்லவேண்டும். தனக்குத் துரோகம் செய்தவனிடத்திலேயும், துரோக சிந்தனையில்லாமலும், தன்னை வைதவனிடத்திலும் பிரியமாய்ப் பேசுகிறவனுமாய் யாவரிடத்தும் கருணை யென்கிற சற்குணத்தினாலே மனவுருக்கத்தோடு எவன்



இருப்ப[…]னோ அவனுக்கு மோக்ஷமானது கையினிடத்திலேயே இருக்கின்றது. எவர்கள் காமக்குரோத லோபாதிகளுக்கு உட்படாதவர்களாய் நல் லொழுக்கத்தில் நின்றிருக்கிறார்களோ, அவர்களுடைய சத்தியப் பிரபாவத்தினாலேதான் பூமி நிலைபெற்றிருக்கின்றது. சுருக்கிச் சொல்லுங்கால் இம்மையிலும் மறுமையிலும் எது பிராணிகளுக்கு நன்மையுண்டாக்கத் தக்கதோ அப்படிப்பட்ட காரியத்தையே மனோ வாக்கு காயமென்கிற மூன்று கரணங்களினாலும் செய்து வரவேண்டுமென்பது நமது ஆன்றோர் கட்டளை.

S. V. பழனியப்பன், போர்டு பாடசாலை,
மொடக்குறிச்சி, ஈரோடு தாலுகா

---

### பெரியோரை வழிபடல்

1. தாய், தகப்பன், தமையன், தமக்கை, பாட்டன், பாட்டி, மாமன் உபாத்தியாயர், குரு முதலாகிய இவர்களைப்போன்ற பெரியோர்களை அச்ச[…]தோடும் அன்போடும் வழிபடல்வேண்டும்.

2. பெரியோரெதிரில் உயர்ந்த ஆசனத்தில் இருப்பதும், காலை நீட்டி[…]கொண்டிருப்பதும், காலின்மேல் கால்போட்டுக்கொண் டிருப்பதும், சயனி[…]த்துக்கொண்டிருப்பதும், சிரிப்பதும், எதிர்த்துப்பேசுவதும், கையைச்சுட்டி[…] பேசுவதும், எச்சில் உமிழ்தலும், அரையிலே கையூன்றி இருப்பதும் காலை[…] தூக்கி உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு நிற்பதும், போர்த்துக்கொள்[…]தலும், இரைந்துபேசுவதும் குற்றமாகும்.

3. பெரியோர் முன்னே நிற்கும்பொழுது மரியாதையாய் நிற்கவேண்டும்.

4. பெரியோர் முன்னே போம்பொழுது, நாம் வேஷ்டியை ஒதுக்கி[…] கொண்டு தணிந்த நடையுடனே பின்னேபோகவேண்டும். அவர் சமீபத்திலே[…] நின்று பேசும்பொழுது வாய்புதைத்து நின்று பேசவேண்டும். அவர் உங்[…]ளுடனே பேசும்பொழுது, நீ ஒன்றையும் பாராமலும் வேறொன்றிற்கு[…] செவிகொடுக்காமலும் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு, அவர் வார்த்தை[…]யிலேயே செவிகொடுத்துக் கேட்கவேண்டும்.

5. பெரியோருடனே நாம் பேசும்பொழுது வேறொன்றையும் பாராமல் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு பேசவேண்டும். பெரியோரை சுவாமி[…] ஐயா, என்பவை முதலிய வார்த்தைகளினாலே உயர்த்தியும், நம்மை அடியே[…] நமியேன் முதலிய வார்த்தைகளினாலே தாழ்த்தியும் நாம் பேசவேண்டும். பெரியோர்முன் அவமரியாதையான வார்த்தையைப் பேசக்கூடாது.

6. பெரியோர் நமக்கு ஒன்றைத் தரும்பொழுது, நாம் எழுந்து வணக்[…]மாய் இரண்டு கைகளினாலும் வாங்கவேண்டும். பெரியோருக்கு நாம் ஒன்றை[…] கொடுக்கும்பொழுதும் எழுந்து வணங்கி இரண்டு கைகளினாலும் கொடுக்க வேண்டும்.

7. பெரியோர்கள் நம் வீட்டுக்குவந்தால் நாம் விரைந்து சில அடி[…] ளவு தளதிர்கொண்டுபோய் வணக்கமாயழைத்துவந்து அவருக்கு ஆசனமளித்து வீற்றிருக்கச்செய்து, அவர் இரு என்று சொன்னபின் நாம் அமரிக்கையாய்[…] இருக்கவேண்டும். பெரியோர் அருகிலிருந்து நாம் பிரியும்போது உடனே[…] அவர் முகத்தின்பக்கம் நம்முதுகைத் திருப்பிக்கொண்டு செல்லாமல், பின்[…]லேயே சற்று அவருக்கு மறையுமட்டும்சென்று பிறகு திரும்பிச்செல்ல வேண்[…]

டும். அவர் போம்பொழுது, அவர்பின்னே சிறிது தூரம் போய் விடை பெற்றுவரவேண்டும்.

8. நாம் எந்தக்காரியம் செய்யப் புகுந்தாலும் பெரியோர் உத்திரவின் பேரில் செய்யவேண்டும்.

K. S. சுப்பய்யர் முதலியார், கோனுபட்டு.

---

## ஸ்திரீகள் பக்கம்.

## கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

என்பது நமது மூதாட்டியாகிய ஔவையின் அமுத வாக்கியங்களி லொன்று, அதாவது:—சொல்தவறா திருப்பதே; கற்பு எனப்படுமென்பது இவ் வாக்கியத்தின் பொருளாகும். மனிதருக்குள் தவறா திருப்பது மாத்திரமன்று மனுடரினுமுயர்ந்த விண்ணவர் அறிய உறுதிப்படுத்திய வார்த்தையைப் பிசகா திருப்பது கற்பாகும். அதாவது:—விவாகத்தில் மாங்கல்ய தாரணம் செய்யும் போது திரிமூர்த்திகள், பூமிதேவி, ஆகாயவாணி, திசைக்காவலர், சூர்ய சந்திரர், இந்திரன், முதலாகிய சர்வதேவர்களும் அறியும்படியாக, அக்கினிப் பிரமாணமாக இன்னானுக்கு இன்னாள் சதி, இன்னாளுக்கு இன்னான் பதி, எனத்தத்தம் பெற்றோராலும், ஆசார்யராலும், சதியுள்ளவரையில் பதி அவளை இரக்ஷிக்கத் தக்கவன், பதியுள்ளவரையில் சதி அவனுக்கு ஒழுக்கங் குன்றா தொழுகத்தக்கவள், எனப்பகர்ந்து, மாங்கல்யாபரணம் சூட்டுவது இந்துக்களுக் கேற்ற விதியாகும். இவ்வாறு செய்வதனால், மேற் குறித்தவர்களனைவரும் அம் மன்றலுக்கு வந்தவர்களாகிறார்கள். ஆனதுபற்றி அம் மணத்தின்பின் அவ் விண்ணோர்களைத் தத்தம் பதிக்கு விடைகொடுத்த லென்னும் பாவனையாக அம் மாளிகையின் கணுள்ள ஸ்தம்பங்களுக்கு பூசைபுரிவது விதி. ஏனெனில், நரர்க ளாகிய நாம், இமையோரைக் காணமுடியாததலால் சர்வசாக்ஷியாகிய பகவானை விக்கிரகத்தினிடத்து வழிபடுவதைப் போல் ஸ்தம்பபூசை செய்கிறோம். இவ் விதமியற்றுவதனால் வதுவைக்குப் பண்ணவர் சாக்ஷியாகிறார்களன்றோ? இத்தகைய சான்றோரின் முன்னால் உறவாகிய சதிபதிகள், தங்களுக்குண்டா கிய யாதாமொரு விவாதத்தினாலாவது, வேறு காரணத்தினாலாவது, நேசங் கெட்டு மோசஞ்செய்வா ராயின், சொற்றறிவனவராகிறார்கள். இதனாலாகிய தேவதண்டனைக் குட்படுகிறார்கள். இதைநோக்க இம்மட்டில் இவ்வாக்கியம் சதி பதிகள் இருதிறத்தார்க்கும் பொதுவிதியேயெனவும் கூறலாகும். ஆனால் வணக்க முறைமையைக் கவனிக்குங்கால், சதிக்குப் பதியே தெய்வம் பதிக்குப் பரமாசா ரியனே தெய்வம், என்னும் முதுமொழி இருப்பதைப்பற்றி, மனையாளெனப் படும் மங்கை மணாளனையே மாதவனென மதித்து மகிழ்ந் தொழுகல்வேண்டும், எதிர்த்து நின்று முரணுகமொழிதற் கூடாதென ஔவை, "பெண்டிர்க்கழ கெதிர் பேசாதிருத்தல்" எனவும் பகர்ந்தனள். ஆடவன் தனது ஆசிரியனையே ஆண்டவனென அன்புடன் தொழுது அனுக்கிரகம் பெற்றுய்ய வேண்டியது கடமையாம். இறைவனுக்கு இறைவன் யாரெனச் சிந்தித்தற் கூடாதகாரியம் ஏனெனில் (ஆசார்யஸ்யஹரிஸ்ஸாக்ஷாத் ஸாரூபிநஸம்ஸய:) அதாவது:—அகண் டானந்தஸ்வரூபியாகிய பகவான் ஜீவர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஓர் வடிவங் கொண்டுவரு மவசரமே ஆசார்ய மூர்த்தமாம்; இதிற் சந்தேக மில்லை, என் பதனாலும்; இன்னும்.

> மானிடவனென்றுங் குருவை மலர்மகள் கோன்
> றானுகந்த கோலமு லோகமென்றும்—ஈனமதாய்



> என்னுகின்ற நீச ரிருவருமே யெக்காலும்
> நண்ணிடுவோர் கீழாம் நரகு.

எனச் சான்றோர் சாற்றியிருப்பதனாலும், ஆசார்யாது அதிபதியை ஆராயும் அதிகாரம் அழிவதேகன்று. மேலும் கற்பு என்னும் பதம் பெண்களுக்கே பூஷணமாக விருப்பது உலகியற்கை யாதலால் கற்புடைப் பெண்டிரைப் பற்றி சற்று ஆராய்வாம்.

கற்பென்னும் பூண்பூண்ட கன்னிகையை அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்குதோழிகளும், கண்ணினிமையைப் போலக் காத்துக்கொண்டே யிருப்பார்கள். "இல்லறமல்லது நல்லறமன்று" என்பதை யுன்னி யொழுகத் தக்க ஆடவர்க்கு, முன்னுரைத்த நாற்குணமு மமைந்த நாரிகள் நன்கமையின், நவையின்றி நடக்கலாகும், நல்லறமாகிய இவ்லறத்தோ டொழுகும் கணவர்க்கு முரணாய் நடக்கும் நாரிகள், "கூற்றமே, இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்" என்றபடி, எமனாக வந்தமைந்தவர்க ளாகிறார்கள். இத்தகையருடனிருந்து இல்ல றம் நடத்துவதை விட,

> பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டாயின்
> எத்தாலுங் கூடி யிருக்கலாஞ்—சற்றேனும்
> ஏறுமா றாக விருப்பளே யாமாயின்
> கூறாமற் சந்நியாசங் கொள்.

என்பதை யுன்னி நடத்தல் மேன்மையே யாகுமன்றோ? நிற்க, சாதாரண மாய் ஸ்திரீகளுக்கு ஆறுவித குணங்கள் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின் றன. அவற்றை யனுசரித்து நடக்கும் பெண்டிர், மகா பதிவிரதை யெனப் பெறுவர். அக்குணங்களாவன:—

> கார்யே ஸுதாஸீ கரணேஷு மந்த்ரீ
> ரூபேச லக்ஷ்மீ க்ஷமயாத ரித்ரீ
> போஜ்யே ஸுமாதா ஸயனேது வேஸ்யா
> ஷட்கர்ம யுக்தா குலதர்ம பத்னீ.

அதாவது:—கற்புள்ளமங்கை குடும்பத்தலைவியாயிருக்கினும், பதிசேவையிலும், இல்லத்தொழிலிலும், ஓர் ஊழியன் எஜமானனிடத்துப் பரிசுபெறவேண்டி எவ் வளவு அடக்கமாகவும், விநயமாகவும் இருந்து உழைத்துப் பரிசுபெறுவனோ, அவ்விதமாக எவரையும் எதிர்நோக்காமலுழைத்துப் பதிக்கு உவப் புண்டுபண்ண லென்னும் பரிசுபெற்றுவாழ்வள். இதற்கு நிதர்சனமாக நளாயினியை யொரு வாறு கூறப்பெறும். எப்படியெனில்:—பூர்வத்தில் நளாயினி யென்னும் மங்கை,

> பதிர்ஹிதைவதம் நார்யா: பதிர்பந்து: பதிர்கதி:
> ப்ராணே அபி, ப்ரியம் தஸ்மாத் பர்த்ரு: கார்யம்விசேஷத:

(அதாவது:)—மங்கைகட்கு மணாளனேயன்றோ மாதவனும், பந்துவும், பதி யும்? தன் பிராணனைவிட பிரியமுள்ளவனும் பர்த்தாவே யாதலால், பர்த்தா வின் கார்யமே மேன்மையாகும், என்னும் வார்த்தையை மதித்து ஒழுகுங்கால், கணவன் நாளடைவில் நன்மைகுன்றி நாற்றமுறும் நோயையடைந்து புண் ணெனியும் புழுக்கூட்டமுடைய மேனியை யுடைத்தானவனாய் அவஸ்தையுறும் நாளில், கண்டு, ஐயையோ! நமது கணவனுக்கித்தகைய கஷ்டமும் கிட்டி யதே! இனி நீண்டகாலம், ஆன்மா மேனியிற் றங்கியிராதுபோற் றோன்று கிறதே! ஓர்காற் பிரிந்தேகிவிடுமோ! அவ்விதமாயின் நமது கதியோ!!

"என்ன அழகுவாய்ந்த வீணையேனும், தந்தியின்றேற் பிரயோசனமற்றதைப்போலும், எவ்வளவு பெரியரதமாயினும், சகடமின்றேற் சஞ்சரிப்பின்றியதைப்போலும், எத்தனையோ சுற்றத்தாரேற்பட்டிருக்கினும், மணாளனின்றேற் சௌக்யம் மங்கைக் கேற்படாது" என்னும் முதுமொழியைப்போ லொழியுமே" எனப் பலவாறுயுன்னி, அந்நோயைப்போக்கத் தன்னாற்கூடியவரையிற் பாடுபட்டுச் சிகிச்சைசெய்துகொண்டிருக்க, ஓர்நாள் கணவன்றானோர் வேசியினிடமேக ஆவற்கொண்டு மனையாளிடமுரைக்க, அதை யன்புடனேற்று, இவ்வித வியாதியையுடைய, அன்பர்க்கு எந்தவேசி யிணங்குவளெனப் பலவாறுயுன்னி, முடிவில், அவ் விலைமாது மகிழத்தக்க வேலையைச் செய்து, இவரது எண்ணத்தை ஈடேற்றவேண்டுமெனத்தீர்மானித்து, அன்றுமுதல் யாருமறியாவண்ணம் அதிகாலையிலவ்வேசியி னில்லமடைந்து முற்றமலங்கரித்து வருவாளானாள்.

அவ்விலைமாது, ஒவ்வொருநாளும் இவ்வாறுய்த் தன்முற்றம் இனி தலங்கரிக்கப்பட்டிருப்பதற் காச்சரியமுற்று, இக்காரியமியற்றுபவரைக் கண்டுபிடிக்கவேண்டுமெனக்கருதி, ஓர்நாள் மறைந்து கவனிக்குங்கால், இப்பதிவிரதாசிரோமணி தன்றொழிலைச் செய்வதைக்கண்டு, தனக்குள் இவள் புத்தேட்கொடியோ! பூமகளோ! யாரோ அறியேனே யெனப்பயந்து அன்பாயோடி அடிகளிற்றாழ்ந்து, எ நான் தொழும் தெய்வமே! இப்பாவியின் முற்றம் அலங்கரிக்குங் காரணமேதோ. அதை யுரைக்கொணாதோ, எனப் பணிவாய்ப் பகரும்போது, அக்கற்பரசி, தனது எண்ணத்தை உள்ளபடிவெளியிட, அதைச் செவியுற்ற வேசி நான் தங்களா லிவ்வளவு காரியம் அடைந்திருக்கப் பதிலுக்கு ஒருதவியாயினும் தங்களுக்குச் செய்யாவிடிற்றோஷமேற்படும்; ஆதலால் நான் உமது எண்ணத்திற்கிசைந்தேன்; உமது பதியைச் சாக்கிரதையாக அழைத்துவாருமம்மா வெனச் சொல்லியனுப்ப, களாயினி தன்காரியம் பலித்ததென்றுவகைகொண்டு நடந்ததை நாதனிடம் நவின்று, நடக்க சக்தியற்றதன் பதியை ஓர் தொட்டியி லுட்காரவைத்துச் சிரசிற் சுமந்து செல்லுங்காலம் இரவாதலால், வழியில் தனது விதியின் வலியால் கழுவிலேற்றப்பட்டுத் துன்புறும் மாண்டவ்யரின் பாதத்தில் தொட்டி தாக்கியதால் அவர் துடித்துச் சீற்றங்கொண்டு, சூரியோதயமானதும் பதியை யிழக்கக்கடவா யெனச் சாபமிட்டதைக் கேட்டுத் திடுக்கிட்டு ஐயையோ! இனி என்னசெய்வது, பதியிழந்த பேதைப் பெண்களுக்குத் தமது வாழ்நாளில் என்ன பிரயோசனம், மயானத்தில் வளர்ந்துள்ள ஆலமரமெப்படியோ அப்படி விதவாசரீரம் பயனற்றுப் போகுமே யெனச் சிந்தித்து, சூரியோதய மாகாதிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டதால், இவளது கற்பின் மகிமையால் அருணோதய மாகாதிருக்க, உலகம் துன்புறுவதைக் கண்டு தியானித்த ரிஷி, தேவகணங்களால், திரிமூர்த்தி ஸ்வரூபனாகிய பகவான் மாண்டவ்யரின் துன்பத்தை யகற்றி, இவ்வம்மணியின் துன்பத்தையும் துக்கத்தையு மகற்றிச் சுகமாய் வாழ்வாயாகவென் றாசி கூறி மறைந்தன ரென்பதை, புராணேதிகாசங்களில் விரிவாய்க் காணலாம், இங்கு அவ்வம்மை வேசியின் முற்ற மலங்கரித்ததும் தனது பதிக்குச்செய்த கின்றுணையில் ஒன்றே.

(தொடரும்.)

ஆ. இராமசாமய்யர்.

# கோபம்.

ஒருவன் யாதுகாரணம்பற்றியோ அறிவின்மையாலோ தமக்குத் தீங்கு செய்தவிடத்து உண்டாகும் சினத்தை வரம்பின்றி மிகுதியாகக் கொள்வதே கோபமெனப்படும். இது அரிஷ்டவர்க்கங்களி லொன்று. மற்றவை காமம், லோபம், மோகம், மதம், மாற்சரிய மெனப்படும். இவ்வறுவகை குற்றங்களி லொன்றேனும் ஒருவன் உடைத்தாயின் அவனை யாவரும் இகழாதிரார். இப் பிறவியில் சுகத்தையே விரும்பு மியல்பினையுடைய மாந்தரின் குணம், செயல், மொழி இவையெலாம் செம்மையாயிருத்தலே நன்று. அதற்குமாறாகத் தென்படுதல் எல்லாம் யாவரும் இகழ்பனவன்றோ. இது நிற்க,

கோபம் ஏற்படுங்கால் நம்மறிவு சிதைந்து, முகவொளி மழுங்கி, குதர்க்கம் பெருகி, வன்சொல்வளர, நம்தேக நிலைமை முற்றினும் மாறுதலடைகின்றதே. ஆழ்ந்த அறிவுடைத்தாலென்ன, ஆரவன்புடைத்தாலென்ன, கோபத்தீயுற்ற உடனே அவையெல்லாம் மாய்ந்து போகின்றன. 'எல்லாம் வெகுண்டார்முற் றோன்றாக் கெடும்' என்ற முதுமொழிப்படி கோபம் மிகும்போது நன்மை தன்மை தோன்றாமற் கெடுக்கின்றனர் பலர். இதுவே அறிவாளிக்கும் செல்வர்க்கும் முதியோர்க்கும் ஏனை எவர்க்கும் நித்ய சத்ருவாயிருந்து அளவில்லா நலங்கள் பலவுமழிய ஆன்றோர் தேகநிலை தளர்ந்து பிராணசக்தியும் பாழடையச் செய்கின்றது. பிராணசக்தி பாழடைய வாழ்நாள் குன்றும். மூங்கிலில் பிறந்த தீயே அப்பண்ணை முற்றிலும் அழித்தல்போல நம்மனத்தெழும் மாற்றத்தால் நாமே வளர்க்குங் கோபமே நம் வாழ்நாளைக் குன்றச்செய்து இந் நிலவுலகின் கண் பெரும்பழியைச் சுமத்தி மறுமையில் பாழ்நரகில் அமிழ்த்தி ஓயாத்துயரைப் பெருக்கி வருத்துகின்றது. ஆனதுபற்றியே இக்கோபத்தை

'வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந்தீவினை
வெகுளியே குணந்தவம் விரதமாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்'

'மூங்கிலிற்பிறந்த முழங்குதீ மூங்கின் முதலற முருக்குமா போலத்
தாங்கருஞ்சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சயிக்கு
* * * * * *
* * * * * *

என்று கூறியுள்ளார்.

நித்யசத்ருவாகிய இக்கோபாக்கினி தணிய இன்சொல்லான அரும்பெரும் மருந்தே சான்றாகும். மெல்லிய மொழியால் பாகுபடுத்தி அம்மருந்தினை உட்கொளவே, அவ்விடாநோய் தணிவுற்று அமைதியெனும் ஆனந்தம் மேலிடுமே. இவ்வமைதியின் பலனே பொறையெனும் பெரும்புணை இப்புணையே நம் பிறவிக்கடலை நீந்த ஓர் துணையாகும். இதையே,

'வெறுப்பவொருவன் காரணத்தான் மிக்கமடத்தாற் புரிபிழையைப்
பொறுப்பினதுவே பொறுமாம் புகழுநிறையு மிகவளரும்
கறுப்பொன்றறியா வறிவினர்கள் கருத்தின் மகிழ்ச்சியுளவாகு
மொறுப்பின் வருவதொன்றில்லை யதனாற்பொறுமை யுயிர்த்துணையாம்.'

என்ற விநாயகப் புராணச்செய்யுளால் நன்குணர்க.

ஆகவே கோபநோய்தீர நாம் பேசும்போதெல்லாம் மெல்லெனப் பேச

வேண்டும். இன்சொல் பழகவேண்டும், பொறையெனும் சாகரத்தை யடைய வேண்டும். நம் குற்றத்தை நாமே நினைத்து கடிந்துகொள்ளல் வேண்டும். அன்றி அந்நோயானது நம்மை விடாதுபற்றி பஞ்சிற்புகு மழல்போல் எரித்து நம்மையும் கெடுத்து என்று மழியாப்பழியைச் சுமத்திவிடும். 'பொறுத் தவர் பூமியாள்வர் பொங்கினவர் காடாள்வர்' என்ற பழமொழியை மறவா திருப்போமாக. சுபம்.

A. அகஸ்திலிங்கம் பிள்ளை, அராவாய்மொழி.

---

## கற்கோட்டை—நாவல்

(479-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனே படகோட்டிகள் பயந்து "ஒகோ இவர் விடுதலை பெற்றுவிட்டார்" என்று தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு பேசாமல் படகைவிட்டார்கள். இப்போது பிரபுவின் முகம் மாளிகையின் மறுபக்கம் பார்த்தபடியிருக்கிறது. திரும்பித் திரும்பிப்பார்த்தால் படகாட்கள் சந்தேகப்படுவார்களென்று திரும்பா மலே யிருந்தார். சற்றுநேரத்திற்குள் படகோட்டிகள் "ஓஹோ! படகுத் துறையில் என்ன இப்படிப்பட்ட குழப்பம்!" என்றார்கள். உடனே பிரபு திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தார். துறையிலிருந்து மூன்று நான்கு படகுகள் பல திக்குகளிலும் துரிதமாய்ச் செல்கின்றன. அவற்றில் போர்வீரர்கள் இருக் கிறார்கள். உடனே சங்கதி தெரிந்துகொண்டார். தன்மடியிலிருந்த பணப் பையை யெடுத்துப் படகோடிகளுக்குக் காட்டி "இதோ இப்பை யுங்களுடை யது. என்னைக் காப்பாற்றுங்கள்" என்றார்.

முன்பு சந்தேகங் கொண்டவன், "பிரபுவே! முன்பு கூறியிருந்தாலும் நாங்கள் ஒப்புக்கொண்டிருப்போம். எனக்குள் சந்தேகம் தோன்றிற்று பார்த்தீர்களா. இதோ வேகமாய்விடுகிறோம். தாங்கள் படகிற்குள் படுத்து விடுங்கள்" என்றான்.

பிரவு அவ்வாறே படுத்தபோது, அவர் காலில் ஒரு மூட்டை தட்டிற்று. இது என்னவென்றார். படகாள் "மாலைக்கு அடுத்த கிராமத்தில் திருவிழா. அங்கு செல்வதற்காக எங்களுடைய சுத்தமான உடுப்புகளைக் கொண்டுவந்திருக்கி றோம்" என்றான். பிறபு அம்மூட்டையை யவிழ்த்துப்பார்த்து, "ஆ இந்த உடுப்பு எனக்குச் சரியாய்ப்பிடிக்கும். இதைக் கொடுத்தால்தான் நீங்கள் என்னைக் காப்பாற்றியதாகும். இந்த உதவியை நான் மறக்கமாட்டேன்" என்று கூறிக்கொண்டே தன் உடுப்புகளைக் கழற்றிவிட்டு அந்த உடுப்புகளில் ஒன்றை யணிந்துகொண்டார்.

அச்சமயம் படகுக்காரன், "ஆ ஒரு படகு நம்மை நோக்கி வேகமாய் வருகிறது" என்றான். பிரபு பணப்பையைக் காட்டிக்கொண்டே துரிதம் என்றார். அச்சமயம் படகு ஒரு திருப்பத்தில் திரும்பிவிட்டது. அதனால் தொடர்ந்துவரும் படகு சற்றுநேரம் கண்ணுக்கு மறைந்துவிட்டது. முன்னே சற்றுதூரத்தில் ஒரு சிறுகப்பல் நின்றுகொண்டிருக்கிறது. அதற்கு சுமார் ஒருமைல் தூரத்திற் கப்பால் இன்னொரு படகுத்துறை யிருக்கிறது. பிரபு துரிதமாய் அந்தக்கப்பலைத் தாண்டுங்கள் நான் அதன் மறைவில் கரையிலிறங்கி விடுகிறேன் என்றார். படகு வேகமாய் ஓட்டப்பட்டதால் பின்னால்வரும் படகு திருப்பத்தில் திரும்புவதற்குள் இது கப்பலின் மறைவில் வந்துவிட்டது. பிரபு தன் உடைகளைப் படகிலிருந்த இரும்பு நங்கூரத்தில் சேர்த்து மூட்டையாய்க்



கட்டி ஆற்றில் போட்டுவிட்டார். கரையில் மரங்கள் அடர்த்தியாய் இருந்த விடத்தில் படகை போட்டச்செய்து, பணப்பையைப் படகோட்டிகளிடம் கொடுத்துவிட்டுக் கரையில் குதித்து "நான் கூறுவதைக் கவனமாய்க் கேளுங் கள். அந்தப் படகு பார்வைக்கு வருவதற்குள் நீங்கள் வேகமாய் படகுத் துறையை நோக்கிச் செல்லுங்கள். உங்களைக் கேட்டால், படகில் ஏறிவந்தவன் ஒரு குடியானவன் என்று சாதியுங்கள். இன்றேல் உங்களுக்கும் பலத்த தண்டனை கிடைக்கும்" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ப் போய்விட்டார்.

படகுக்காரர் படகை வேகமாய் ஓட்டிக்கொண்டு துறையருகில் வந்து நிறுத்தினார்கள். சற்றுநேரத்திற்குள் பின்னால் துரத்திவந்த படகும் வந்து விட்டது. அதிலிருந்த போர்வீரர் படகுக்காரரை நோக்கி,

"இந்தப் படகில் ஏற்றிக்கொண்டிருந்த ஆள் யார்? எங்கே அவன்?" என்று கேட்டார்கள். அதற்குப் படகோட்டிகள்,

"ஆ! அவன் ஒரு குடியானவன். கிராமத்திற்குக் கோழிவிற்ற பணத்தை வசூல் செய்யப்போகிறான். அடடா, அவன் நல்ல தூங்குமூஞ்சியோ, அல்லது நன்றாய்க் குடித்திருக்கிறானோ, பலகைமேல் உறங்கிக்கொண்டே கிடந்தான். அவன் அத்திருப்பத்தில் இறங்கி அதோ அந்தத்திக்கே சென்றான்" என்று பிரபு சென்ற திக்கிற்கு மாறான திக்கைக் காட்டினார்கள்.

இவர்கள் சற்றும் களங்கமற்றவர்கள் போல் கூறிய மொழிகளைக் கேட்ட வீரர்கள் சற்றும் சந்தேகங் கொள்ளாமல், உடனே படகைத் திருப்பிக்கொண்டு, பிரபுவைத் தேடச்சென்ற மற்றையாரில் யாரேனும் அவரைப் பிடித்து வந்தார் களா பார்ப்போம் என்று துரிதமாய்ச் சென்றார்கள்.

அதற்கிடையில் பிரபு இப்போது எங்கு செல்லலா மென்று சிந்தித்துக் கொண்டே, வெளியிடத்தைத் தாண்டி வெகுதூரம் சென்று ஒரு சந்தில்நுழைந் தார். அவர் கையில் ரொக்கப்பணம் ஒரு காசுமில்லை. ஆனால் விலையுயர்ந்த கொஞ்சம் நகைகள் மட்டும் உள்சட்டையில் மறைவாய் வைத்துக்கொண்டிருக்கி றார். முன்னே ஒரு குதிரை சம்பாதித்துக்கொண்டு நகர வெல்லையைக் கடந்து போய் விடவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டே அச்சந்தில் நுழையும்போது, ஒரு குடியானச் சிறுவன் ஒரு மட்டக்குதிரையை நடத்திக்கொண்டு எதிரில் வருவதைக் கண்டார்.

பிரபு அச்சிறுவனை நோக்கி, "சிறுவனே, இது யாருடைய குதிரை?" என்றார். சிறுவன் "ஏன்? என் தகப்பனுடையது" என்றான்.

பிரபு உடனே தன்னிடமிருந்த விலையுயர்ந்த மோதிரமொன்றை யெடுத்து "குழந்தாய்! எனக்கொரு ஆபத்து, ஆகையால் இக்குதிரையை நீ யெனக்குக் கொடுத்துவிட்டு, இந்தா, இம் மோதிரத்தை யெடுத்துக் கொண்டுபோய் உன் தந்தையிடம் கொடு. இது இக்குதிரையின் விலைக்குப் பன்மடங்கு அதிகம் பெறும். பயப்படாதே தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ஒரு பிரபு ஆபத்தைக் கருதி யிப்படி நடந்துகொள்ள நேர்ந்ததால், மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டா ரென்று உன் தந்தையிடம் இரகசியமாய்க் கூறு. உன்மேல் கோபிக்கமாட்டார்" என்றார்.

பிரபுவின் உடை எழ்மைத்தனத்தைக் குறித்தாலும் அவர் முகத்தைநோக்க "இவர் உயர்ந்த பதவியிலிருப்பவரே" என்று சிறுவன் புத்தியிற்பட்டது. அதோடு மோதிரத்தின் இரத்தினங்கள் ஜொலிப்பதைக்கண்டு அது மிக்க விலை யுள்ளதாகவே யிருக்கவேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டான். ஆகை யால் அவன் குதிரையைச் சந்தோஷமாய்க் கொடுத்துவிட்டுச் சென்றான். பிரபு உடனே அக்குதிரைமேலேறிக்கொண்டு துரிதமாய்ச் சென்றார். (தொடரும்.)

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

காளயுக்தி வருஷ ஆடிமீ—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,

பசலி 1327-28—கோல்ல 1093-94,

இங்கிலீஷ் 1918-ம் வருஷ ஜூலைமீ—ஆகஸ்ட்மீ

| ஆடிமீ | ஜூலைமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செ | அஷ்-45-23 | சித்-45-45 | சித்த 60 | தக்ஷிணாயன புண்யகாலம் |
| 2 | 17 | புத | நவ-49-31 | சுவா-51-23 | சித்த 60 | கரிநாள் |
| 3 | 18 | வி | தச-52-49 | விசா-56-17 | சித்த 60 | லோகபாத்திரம் புழங்க |
| 4 | 19 | வெ | ஏகா-54-55 | அனு-60-0 | சித்த 60 | |
| 5 | 20 | ச | து-55-48 | கேட்-60-0 | சித்த 60 | ஆபரணமழித்துசெய்ய |
| 6 | 21 | ஞா | திர-55-28 | கேட்-2-32 | மா 3 அ | வித்தியாப்பியாசம்செய்ய |
| 7 | 22 | தி | சது-53-46 | மூல-3-40 | சித்த 60 | தனியநாள் |
| 8 | 23 | செ | ○பௌர50-12 | பூரா-3-1 | சித்த 60 | காஞ்சி கஜேந்திரமோக்ஷம் |
| 9 | 24 | புத | பிர-47-6 | உத்-2-45 | அ 58 சித் | |
| 10 | 25 | வி | துதி-42-41 | திரு-58-9<br>அவி-57-47 | சித் 58 மா | கரிநாள் |
| 11 | 26 | வெ | திரி-37-21 | சதை-54-25 | சித் 60 | |
| 12 | 27 | ச | சது-29-26 | பூரட்-48-26 | மா 48 சி | |
| 13 | 28 | ஞா | பஞ்-25-40 | உத்-46-27 | அமி 60 | |
| 14 | 29 | தி | சஷ்-19-5 | ரேவ-43-24 | சித் 60 | |
| 15 | 30 | செ | சப்-13-38 | அசு-38-40 | சித்த 60 | |
| 16 | 31 | புத | அஷ்-7-45 | பர-34-59 | சித் 39 அ | |
| 17 | (1918 ஆகஸ்டு) 1 | வி | நவ-2-28<br>தச-55-23 | *கார்-31-54 | மரண 60 | |
| 18 | 2 | வெ | ஏகா-54-57 | ரோக-30-46 | மா 31 சி | |
| 19 | 3 | ச | து-51-19 | மிரு-28-27 | சித்த 60 | |
| 20 | 4 | ஞா | திர-49-41 | திரு-28-13 | சித்த 60 | கரிநாள், தனியநாள் |
| 21 | 5 | தி | சது-48-51 | புன-29-11 | அமி 29 சி | அதிகாரம்பெற |
| 22 | 6 | செ | ●அமா-50-9 | பூச-31-21 | சித் 60 | ஆடி அமாவாசை விரதம் |
| 23 | 7 | புத | பிர-52-19 | ஆயி-34-59 | சித்த 60 | கிணற்றில் கல்கட்ட |
| 24 | 8 | வி | துதி-55-35 | மக-39-23 | அமி 39 சி | மந்திரம் பிரயோகிக்க |
| 25 | 9 | வெ | திரு-59-39 | பூரம்-44-39 | சித் 45 மர | கோபந்தனம்செய்ய |
| 26 | 10 | ச | சது-60-0 | உத்தி-48-57 | மரண-60 | |
| 27 | 11 | ஞா | சது-4-31 | அஸ்த-60-0 | அமி 60 | வித்தியாப்பியாசம்செய்ய |
| 28 | 12 | தி | பஞ்-9-21 | சித்-60-0 | சித்த 60 | சஷ்டிவிரதம் |
| 29 | 13 | செ | சஷ்-14-4 | சித்-3-42 | சித்த 60 | கன்று காலிகள் வாங்க |
| 30 | 14 | புத | சப்-18-23 | சுவா-9-17 | சித்த 60 | |
| 31 | 15 | வி | அஷ்-21-14 | விசா-14-37 | சித்த 60 | உற்பத்தியான தானியம் |
| 32 | 16 | வெ | வெ-24-6 | அனு-18-30 | சித் 18 ம | [அறுக்க |

| | | | |
|---|---|---|---|
| | | கேது சுக் | குரு |
| | 4-மிது-சுக் | | சனி ர-பு |
| | 10 சிம்-பு | | |
| | 21-து-செ | | |
| | 30-கட-சுக் | | |
| | ராகு | | செ |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி 4 } காளயுக்தி வருஷ ஆவணிமீ கஉ } பகுதி 2
1918-ம் வருஷ ஆகஸ்டுமீ 16உ

### கடவுள் வணக்கம்

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துளரிடு மவத்தையாகி
உருவுதான் காட்டாத வானவமு மொளிகண்
டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டாதொருங்கவிரு வினையினாற்
றுவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற்
றடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பின்னு கீழ்மே லடுப்பக்க மென்னுமன்
முற்றுமா னந்தநிறைவே
என்னிலைமை யாய்நின்ற வியல்புகூ றருள்வடிவ
மென்னாளும் வாழிவாழி
இகபா விரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

---

வாழ்வினைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேதா னப்பாலோர் வழி பாராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
தடையுற்றுன் மேற்கதியுந் தடைய தாமே
ஊழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்ந்தா யின்னம்
பாழ்வதிப் படிவெனக்கு முடியா தெல்லாம்
பண்டைத்தனித்துத் துடைக்கவல்ல பரிபூ ரணனே.

# ஆனந்தபோதினி

காளயுக்திஞு ஆவணிமீ 1௳

## நான்

சகோதர சகோதரிகளே! உலகில் யாவரும் நான், என்னை, என்னுடையது என்று பலகாலும் கூறிக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். நாமும் அப்படியே கூறிக்கொள்கின்றோம். நான் எனது என்ற இந்த இரண்டு உணர்ச்சிகளே நமது இன்னல்களுக்கெல்லாம் காரணமாயிருக்கின்றன. உண்மையில் இந்த நான் என்பது எது என்று பார்ப்போம்.

நீயார் என்று ஒருவனைக்கேட்டால் " நான் பிராம்மணன் என் பெயர் கிருஷ்ணையர் என்கிறான். இதே கேள்விக்குப் பலர் இதேவிதமாய் ஜாதிப்பட்டத்தோடு வேறு வேறு இடுகுறிப் பெயரையோ காரணப் பெயரையோ சேர்த்துக் கூறுவார்கள். இருக்கட்டும்—அதுவரையிலாவது நான் என்றது நிலைக்கிறதா பார்ப்போம். என்ன காரணத்தால் பிராம்மணன் என்று பார்த்தால் சதாசாரம் ஞானம் இவைகளை யுடையவனாயிருத்தலால் என்றே முடியும். மற்ற கண்ணுக்குப் புலப்படும் எதனாலும் அல்ல. ஏனெனில் பிராம்மணன் ஒத்தைக்குடுமி, பூணூல், மீசையின்மை இவைகளையுடையவனென்றால், குயவன், தட்டான் இன்னும் பலர் ஒத்தைக்குடுமியும் மீசையின்மையும் உடையவர்களே. பிராம்மணர்களிலேயே சில வகுப்பார் மீசைவைத்துக்கொண்டிருக்கிறார்கள், பூணூலோ யாவர்க்கு முரியதே. தக்க விதிப்படி ஆசாரத்தோடு எப்போதும் நடப்பவர்கள் எப்போதுமே யணிந்துகொள்கிறார்கள். மற்றபேர் ஆகமவிதிப்படி ஏதேனும் கிரியைகளைச் செய்யுங்கால் அப்போதுமட்டும் அணிந்துகொண்டு ஆசாரத்தோடு அக்கிரியையைச் செய்துவிட்டு பிறகு எடுத்து விடுகிறார்கள். சிலர் அணிந்துகொண்டே ஆசாரந்தவறியே நடக்கிறார்கள். எப்போதுமே ஆசாரம் தவறி நடப்பதால் இதுகாறும் கிரியை செய்யும்போதுமட்டுமே பூணூல் அணிந்துகொண்டிருந்த ஜாதியாரிற்



10 SEP 1918

சிலர் கலியின் கொடுமையால் இப்போது பிராம்மணரைப்போல் எப்போதுமே யணிந்துகொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள். அந்தோ, இதனால்நாமும் பிராம்மணராய்விடலாமென்று கருதுகிறார்களாக்கும். இதனால் தீமையேயன்றி நன்மை யொருபோதுமுண்டாகாது. இனி யிதனாலெல்லாம் ஆளைக்குறிப்பிக்கக்கூடாவிட்டால் நான் என்பதினால் எப்படி குறிப்பிப்பது?

இப்போது நாமாக வைத்துக்கொண்ட பெயர்கள் யாவற்றையும் நீக்கிவிடுவோம். பிறகு கண்ணுக்குப் புலப்படும் வெறும் ஸ்தூலதேகங்களே யிருக்கின்றன. ஒவ்வொரு தேகமும் நான் நான் என்று கூறிக்கொள்கின்றது. இத்தேகங்களில் ஒன்றுக்கொன்று அமைப்பில் வித்தியாசமேயில்லை.

தேகத்தை நானென்றால் தேகம் என்பது பலவஸ்துக்கள் சேர்ந்ததாயிருக்கிறது. எவ்வாறெனின். கண்கள், செவிகள், நாசி, வாய், நாக்கு, மண்டை, அதற்குள் மூளை, முதலியவை சேர்ந்த சிரசு, கைகள், கழுத்து, மார்பு, வயிறு, கால்கள், இன்னும் இவற்றிற்குள் இருக்கும் பல உறுப்புகள், இவையாவும் சேர்ந்த மொத்த உருவத்திற்கே தேகம் என்கிறோம். இவைகளில் தனியே எதையும் தேகம் என்பதில்லை; எதுவும் தேகமாகாது.

வண்டியை யெடுத்துக்கொள்வோம். சக்கரங்கள், இரிசு, மையக்கட்டை, பார், நுகத்தடி, ஏர்கால், சவாரி, கடையாணிகள் முதலிய யாவையும் சேர்ந்ததையே வண்டியென்கிறோம். தனித்தனியாய்ப் பார்க்கும்போது, சக்கரத்தை வண்டி எனலாமா? ஏர் காலை வண்டியெனலாமா? இரிசை வண்டி யெனலாமா?

இல்லை; ஒன்றையும் கூறலாகாது. ஏனெனில் எதுவும் வண்டியாகாது. இதில் திருஷ்டாந்தமாய் இன்னொருவிஷயம் நாம் அங்கீகரிக்கத்தக்கதுளது. அதாவது:—நாம் ஒரு வண்டியில் ஏறி வந்தபோது ஒரு வேஷ்டி காணாமற்போயிற்று. நாம் அந்த வேஷ்டியைத் தேடப்போய், மேற்கண்டபடி வண்டியின் ஒவ்வொரு பாகத்திலும் பார்த்தோம். வேஷ்டி யகப்படவில்லை. எப்போது ஒவ்வொரு பாகத்திலும் வேஷ்டியில்லையோ, வண்டியில் வேஷ்டியில்லையென்று கூறத்தடையென்னை: ஒன்றுமேயில்லை.

இதுபோல் நான் என்பது தேகம் என்று கருதலாமெனில், தவறாகவே முடிகிறது. எவ்வாறெனின்:—

கையை நான் என்றால், கையில்லாத ஒருவனும் நான் என்கிறான்; இதுமட்டுமல்ல, கையுடைய ஒருவன் கையை யிழந்துவிட்டால் பின்பும் நான் என்கிறானேயன்றி, நான் வெட்டுண்டு போய்விட்டேன் என்பதில்லை. கையிவனல்ல என்பதற்கு இவன் வாயாலேயே ருசு ஏற்பட்டுவிடுகிறது. எவ்வாறெனில், என்கை வெட்டுண்டுபோயிற்று என்கிறான். எனதுகை என்னுடையகை என்பது ஆறும்வேற்றுமைப் பிறிதின் கிழமையாதலால் எப்போதும் இரண்டு பொருள்கள் என்று பிறித்துக்காட்டுகிறது. தான் ஒன்று, தனக்கு உரித்தாகக்கூறும் தன்னின் வேறாகிய பொருள் ஒன்று. தன்னின் வேறாகிய அப்பொருள் ஒருக்காலும் தானாகாது. அது தற்சமயம் தன்னுடையதா யிருக்கிறது. பிறகு தன் உரிமையினின்றும் பிறிந்துபோய்விடவும் கூடும். ஆகையால் ஒருபோதும் அது தானாகாது. இவ்வாற்றால் கையிவனல்ல இவனுக்குச் சொந்தமான தொன்று. இவன் அதையறிந்து, தன் இஷ்டப்படி அதுசெய்யுமாறு அதை ஆள்கிறான். கை ஜடப்பொருள்; அது இவனை யுணராது.

இவ்வாறே மற்ற அவயவங்களும் இவனாகமாட்டா. தூலதேகம்போல சூக்ஷுமதேகக் கருவிகளும் இவனாகமாட்டா. தூலதேகக் கருவிகள்போலவே அவற்றையும், "என்மனம், என் புத்திக்குப் படவில்லை. என்சித்தப்படி நடப்பேன்" என்கிறான். அவற்றையும் அவற்றின் தொழில்களையும் அறிகிறான். அவற்றையெல்லாம் ஆட்டிவைக்கும் கர்த்தாவாயிருக்கிறான். வேண்டும்போது அவற்றோடு கூடித்தொழிற் செய்கிறான். வேண்டாதபோது அவற்றின் சம்பந்தத்தை நீக்கிக்கொண்டு தனியாய்விடுகிறான். ஆகையால் தேகத்திலுள்ள எந்த அங்கமும் இவனல்ல. ஆதலால் வண்டியில் வேஷ்டியில்லாததுபோல, முழுதேகமும் இவனல்ல. மற்றபடி யார் அந்த நான் எனில், நான் தேகமல்ல. தேகத்திற்கு வேறாகவே கண்ணுக்குப் புலப்படாமல் தேகத்திற்குள் இருக்கும் ஒருவஸ்து என்று கூறலாம்.

இப்போது தேகங்கள் என்றமட்டில் எதிலும் வித்தியாசமின்றி எல்லாவற்றிலும் சமமாகவே யிருக்கின்றன. விதியின்படி கைகால் கண்முதலிய அங்கங்களில் ஒவ்வொருதேகத்தில் ஒன்றிரண்டு குறைவாயிருப்பினும், பிறகு இடையிற் குறைவு நேரினும் அவைகளின் உற்பத்தியானது ஒரேவிதமான பொருட்களின் சேர்க்கையாலேயே. சர்மம், உதிரம், மாம்சம், எலும்பு, நரம்பு, மூளை, சுக்கிலம் என்கிற இந்த சத்த தாதுக்களாலேயே எல்லாத் தேகங்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு ஒரு வித்தியாசமுமில்லாத தேகங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நான் இருந்துகொண் டிருக்கிறது. தேகம் முழுமையும் நான் அல்லவாயினும் பிராணன் கூட நான் அல்லவோ? எனின்,

அல்ல. பிராணன் என்பது உஸ்வாச நிஸ்வாசம் செய்வதும் தேகத்தில் நடக்கவேண்டிய கருவிகளின் தொழில்களை நடக்கச் செய்து தேகத்தை அழிந்துபோகாவண்ணம் காப்பாற்றிக்கொண்டிருப்பதுமாகிய ஒரு தத்துவமேயன்றி வேறல்ல. அதுவும் ஜடமே. அதுவும் நான் என்பதை யுணராது. நித்திரையில் அது இயங்கிக் கொண்டிருந்தாலும் எதையுமுணராது. நான் என்பதே "என் பிராணன் போனாலும் நான் இதைச் செய்யேன்" என்கிறது. இதனாலேயே பிராணன் நான் அல்லவென்றுணரலாம்.

இந்த நான் என்ன செய்துகொண்டிருக்கிறதெனில், அதன் தொழிலை மூன்றாய்ப் பிரித்துக்கூறலாம். 1. சாக்கிரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி. இந்த மூன்றிற்கும் அவஸ்தைகள் என்றும் பெயர். இம்மூன்றையும் மாறி மாறி யனுபவிக்கிறதே இந்த நான்' என்பதற்குத் தொழில்.

1. சாக்கிரம்:—சாக்கிரத்தில் இந்த நான் என்பது லலாடமத்தியில் நின்று ஜடக்கருவிகளாகிய தன் பரிவாரங்கள் 35-டனும் கூடி மாயா சம்பந்தத்தால் எனது எனது என்று கருதியிருக்கும் உலக விவகாரங்களைச் செய்கிறது.

35—கருவிகளாவன.

| | |
|---|---|
| ஞானேந்திரியங்கள்—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆக (சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணம்.) | 5 |
| கன்மேந்திரியங்கள்—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, ஆண்குறி அல்லது பெண்குறி | 5 |
| சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் இவற்றை யுணர்தலாகிய ஞானேந்திரியங்களின் தொழில்கள் | 5 |
| வசனம், தானம், கமனம், விசர்ஜனம், ஆனந்தம் ஆகிய கன்மேந்திரியங்களின் தொழில்கள் | 5 |

அந்தக்கரணங்கள்—மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் ஆக 5

வாயுக்கள்—பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆக 10

ஆக 35

இந்தத் தத்துவங்களின் உற்பத்தி, தொழில் முதலிய விவரங்களை ஞானஜீவவாதக் கட்டளை முதலிய நூல்களில் கண்டுகொள்ளலாம்.

2. சொப்பனம்:—சொப்பனாவஸ்தையில் இந்த நான் கண்டத்தில் நின்று, மேற்படி 35 கருவிகளில் வாயுக்கள் 10-ம் நீங்களாக மீதி 25-கருவிகளோடும் முன் பின் சாக்கிரத்தில் நினைத்தவை, கண்டவை, கேட்டவை, அநுபவித்தவைகளை (தின்ற தீனியைமாடு மறுபடி அசைபோடுவதுபோல்) மறுபடி யநுபவிக்கிறது.

3. சுழுத்தி:—சுழுத்தியவஸ்தையில் நான் என்பது பிராணன், சித்தம் இவற்றோடுமட்டும் கூடி, மற்ற கருவிகளின் கூட்டில்லாததால், நிம்மதியடைந்து மாயையோடு கூடியிருப்பதால் தன்னையுமறந்து சுகமாய் இளைப்பாறுகிறது.

இந்த எல்லா "நான்" களுக்கும் இதேதான் தொழில். இதில் எவ்வித வித்தியாசமுமில்லை.

தேகங்களெல்லாம் ஒரேபொருளிலிருந்து உற்பத்தியானதால் அவைகளுக்குள் வித்தியாசமில்லையென்று முன்பு கூறினோம். இப்போது இந்த "நான்" களெல்லாம் உருவமில்லாமல், ஒவ்வொரு தேகத்தில் ஒவ்வொன்றாய்க் குடியிருந்துகொண்டு ஒரேவிதத் தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன என்றோம்.

இனி இந்த "நான்" என்பவற்றிற்குள் வித்தியாசமுண்டா, இவற்றின் உற்பத்திஸ்தானமெது? இவற்றின் தற்காலநிலைமை சாசுவதமானதா? இல்லையேல் எந்தநிலைமை சாசுவதமானது? அதாவது இவற்றின் சாசுவதமான சொரூபம் எது? என்பவற்றை அடுத்த சஞ்சிகையில் கூறுவாம். (தொடரும்)

ஓம் தத்ஸத்.



## ஒரு அறிவிப்பு.

ஆனந்தபோதினி பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா, சென்ற ஜூலை மாதம் 16-ம் தேதி வெளிவந்த தங்கள் ஆனந்தபோதினியை எனது நண்பர் ஒருவரிடமிருந்து வாங்கிப்பெற்று பார்வையிட்டேன். மேற்படி ஆனந்தபோதினியின் 32-வது பக்கம் S. V. பழனியப்பன் போர்டுபாடசாலை, மொடக்குறிச்சி, ஈரோட் தாலூகா என்கிற கைச்சாத்திட்ட ஒரு நிருபரால் மாணவர்பக்கத்தில் நல்லொழுக்கம் என்னும் விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. மேற்படி விஷயம் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீமான் ஆறுமுக நாவலர் அவர்களால் இயற்றப்பட்ட நான்காம்பாடத்திலுள்ள விஷயத்திற்குச் சரியான நகல் என்பதை யாவரும் நன்கறியலாம். இதுவும் ஒரு புதுமையே. ஒருவரால் எழுதப்பட்ட விஷயத்தை தாம் எழுதியதாகக் கருதி பத்திரிகையில் பிரசுரிக்கச்செய்வது மிகவும் வெட்கமான காரியமென்பதை அந்த நண்பர் ஒரு சிறிதும் உணரவில்லைபோலும். அப்படித் தம்பெயர் பத்திரிகையில் வெளிவரவேண்டுமென விருப்பங்கொண்டால் தமது சொந்த அபிப்பிராயத்தைக்கொண்டு எழுதவேண்டும் அல்லது இன்ன புத்தகத்தின் மொழிபெயர்ப் பென்றாவது காட்டவேண்டும். அப்படிக்கின்றி நானும் விஷயதானம் செய்தேனென்று வீண் பெருமையை வெளிக்குக்காட்டுவது.

> கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
> தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
> பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
> கல்லாதான் கற்ற கவி

என்பதை யொக்கும். ஆதலின் நண்பரவர்கள் இனிமேலாவது இத்தீயவழக்கத்தை விடுத்து போதகாசிரியர் போதித்த நல்லுபதேசத்தை நாடி நலம்பெறுவாராக.

N. வேணுகோபால புத்தகசாலை, கோயமுத்தூர்.

குறிப்பு:—இரண்டொருவர் ஏற்கனவே இந்த இழிந்த குற்றத்தைச்செய்து பத்திரிகை வாயிலாய் அறிவுறுத்தப்பட்டிருந்தும், நமது சஞ்சிகைக்கு அகௌரவத்தை யுண்டாக்கக் கருதி இன்னும் செய்து வருகிறார்கள்; இனியும் செய்வார்களேல் அவர்கள் செய்கையை இதர பத்திரிகைகள் யாவற்றிலும் பிரசுரம் செய்வதே தகுதியெனக் கருதுகிறோம்.

பத்திராதிபர்.

நாராயணதாஸர் உபந்நியாஸம்.

## "இல்லறமல்லது நல்லறமன்று."

(தத்துவார்த்தம்.)

(இல்=வீடு அல்லது மோக்ஷம்) இல்லறமல்லது=மோக்ஷ தர்மத்தையல்லாமல், (அந்நிய அறம்) நல்=சிரேஷ்டமான, அறம்=தருமம், அன்று=அல்லவாம் என்றவாறு.

அஃதாவது:—"மோக்ஷதர்மத்தைக் காட்டிலும், இதா தர்மம் உத்க்ருஷ்டமானதன்று." என்பது கருத்து. (இஃது வேதமாதாவென்னும் ஔவைப் பிராட்டியாருடைய திருவாய்மொழி.)

இவ்வாக்கியத்திற்குச் சிலர் "க்ருகஸ்தாஸ்ரமத்திற் கன்னியமான தர்மம் இல்லதன்று." என பாஷியமாகவே அர்த்தஞ் செய்துவிடுகின்றனர். சண்டிது பொருத்தமாயின், லோகோபகாரார்த்தமாய் இப்புவியின்கண் ணவதரித்தருளிய, நமதன்னையார் சுமார் இருநூறாண்டு பரியந்தம் ஜீவன்முக்தராயிருந்தும், கிருகஸ்த தர்மத்தில் பிரவேசிக்கக் கருதவேயில்லை என்ற உண்மை அவர் வாக்கிற்கு மாறாயிருக்கிறது. ஆனால், இவர்கொண்ட கோலந்தான் சரியெனத் தீர்மானிப்போமாயின், திருக்குற ளாசிரியராகிய தெய்வப்புலமை ஸ்ரீமத் திருவள்ளுவநாயனர் இல்லற (கிருகஸ்த) தர்மத்தையே நன்கனுஷ்டித்துக் காட்டுவாராயினர். இவர் துறவறம் இல்லறம் இவ்விரண்டிலேதாவதொன்றை தூஷிக்கவோ வல்லது பூஷிக்கவோ விருப்பங்கொண்டதாகப் பிரமாணங் காணப்படவில்லை. இது நிற்க, மாதுரு பூதேஸ்வராம்ஸபூதரான ஸ்ரீமத் தாயுமானவஸ்வாமிகளும் "இல்லறந் துறவற மிரண்டும் மேன்மையே" எனக்கூறியுளார். இப்படியே இன்னும் பல மகாத்மாக்களுந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். இவ்வாறிருக்க, நாமெங்ஙனம் நமதன்னையின் திருவாக்குக்குமாறாக 'இல்லறம் அல்லது துறவறம்' நல்லறமெனப்பாஷியமாகவே பொருட்கொளவது. அஃதெவ்வாற்றானும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

[illegible]ன, இந்நிமொழிக்கு திருவருளின் பிரேரேபணையால் என்னிருதயத்திருந்து ஓர்வித அர்த்த முதையமாகிறது. அஃதாவது:—

இல்லறந் துறவறம் முதலிய எந்த ஆஸ்ரமத்தாராயினும், ஜனனமரண ஸ்வரூபமான சம்சார பந்தத்தினின்றும், விடுபடுவதற்கு 'மோக்ஷதர்மத்தை' விட வேறொரு சாதனம் வேதோபநிடதங்களில் விதிக்கப்படாமையாலும், அதற்கிணங்கவே நமதுமாதாவும் "இல்லற மல்லது நல்லற மன்று" என்றருளி, இத்தன்மை வெளிப்படையன்று அதிஸூக்ஷ்மமா மென்பதைக் குறிப்பாயுணர்த்துவான்வேண்டி துறவறத்திலிருந்துவிட்டமையாலும் இதற்கு, "மோக்ஷதர்மத்தைக்காட்டிலும் அந்நியதர்மஞ் சிரேஷ்டமானதன்று" என்பதுதான் சரியான அர்த்தமாயிருக்கலா மென்பது துணிபு. இனி மோக்ஷதர்மம் ஈதென்பதைப் பற்றிச் சிறிது விசாரிப்பது அத்தியாவசியமானபடியால் மேலதைக் கூறுவோம். அஃதாவது:—

'மோக்ஷம்' என்றால், 'விடுபடுதல்' என்றர்த்தம். அதாவது.—சம்சாரபந்த (சர்வதுக்க)த்தினின்றும் விடுபடுதலாம். இந்த சம்சாரபந்தமானது காமத்தா (ஆசையா)லுண்டாகிறது. கர்மத்திற்கிருப்பிடம் மனமாம். இந்த மனமெங்கே விலய மடைகின்றதோ, அங்கே மோக்ஷ (பரமபத)மாம். மோக்ஷமாகிய 'பரமபத' மடைவதற்கு முக்கியசாதனம் பக்தியாம். அந்த பக்தியான தெப்போக்கொத்ததெனின்? தனது யதார்த்த ஸ்வரூபத்தையறிதலாம். இதைப்பற்றி ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகள் அருளிச்செய்திருக்கிறதாவது:—



"மோக்ஷகாரண ஸாமக்ரியாம், பக்திரேவ கரீயஸீ |
ஸ்வ ஸ்வரூபாநுஸந்தானம், பக்திரித்ய பிதீயதே ||" (விவேகசூடாமணி)

(தாத்பர்யம்) மோக்ஷத்துக்குக் காரணமான சாமக்கிரியைகளில் பக்தியே விசேஷமானது. அந்த பக்தி யெப்போக்கொத்த தெனின், தன் ஸ்வரூபாநுசந்தானமாம். என்றவாறு,

இதனால், முக்திக்கு பக்தியே மூலகாரணமென்றும், பக்தியென்பது தன் ஸ்வரூபா (ஆத்மா)நு சந்தானமென்றும் நிர்மானமாகிறது. எவன் ஸதா ஸ்வரூபாநுஸந்தான (ஆத்மத்தியான)ஞ் செய்கின்றானோ அவன் தன் நிஜ சொரூபத்தைக் காண்கிறான், தன்னைக் காண்கிறவன் (அதாவது தன் ஆன்ம சொரூபத்தைத் தரிசிக்கிறவன்) தலைவனையும் (பரமான்மாவையும்) காண்கிறான். தன்னைக் கண்டவனுக்குண்டாகும் பரமானந்த சுகத்தைப் பற்றிக் கைவல்ய நவநீதத்தில்.—

"தன்னையுந் தனக்காதாரத் தலைவனை யுங்கண்டானேல்
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுய தேசித் தேனே."

என, ஸ்ரீமத். தாண்டவராயஸ்வாமிகள் அருளிச்செய்திருக்கின்றனர். இவ்வாறே, எல்லா ஸ்ருதி, ஸ்மிருதி, புராணேதிஹாசாதி கிரந்தங்களிலும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலின், கைவல்லியமாகிய மோக்ஷசுகத்தின்பொருட்டு தன்னையும், (ஆன்மாவையும்) தலைவனையும் (பரமான்மாவையும்) அறியவேண்டும். இன்றேல், காலசக்கரங் கழுத்தைச் சேதிப்பது நிச்சயம். தன்னைத்தானறிந்துகொள்ள வேண்டுமோனால் பரமாத்மாவைச் சரணடைவதற்கல்லாமல் அந்நிய சாதனங் கிடையாது. ஸ்ரீபகவத்கீதை 18-வது அத். 65-66, இந்த சுலோகங்களைப் பார்க்க. ஸ்ரீபகவானைச் சரணமடைவதென்றால், ஸ்ரீபகவத்கீதை 5-6 இந்த அத்தியாயங்களிற் கூறியவண்ணம் ஸ்வரூபாநு சந்தானம் அல்லது ஆத்மாநுசந்தானஞ் செய்தலேயாம். அந்த ஆத்மாநு சந்தானமாகிய யோகாப்பியாசமானது குரு சீட சம்வாத ரூபமாகிய குப்த விஷயமானமையால், அதைப்பற்றி வெளிப்படையாய்க் கூறுதல் கூடாதாயினும், எப்படி அவதாரராகிய ஸ்ரீமத் தத்தாத்திரேய ஸ்வாமிகள் 24 குருமூலமாய்த் தானே தத்துவரகஸ்யத்தைக் கிரகித்துக்கொண்டதுபோல், இதைப் பாகவதத்தில் அவதூதயது சம்வாதத்திலாவது, அவதூத கீதையிலாவது பார்க்கக் காணலாம். இதுவும், ஒருகால் உத்தம முமுக்ஷுக்களுக்கு உபகாரமாயிருக்கலா மெனக் கருதி, பிரபல சுருதிகளினின்றும் ஆராய்ந்தெடுத்த சில பாகங்களையுஞ் சுலோகங்களையும் மாத்திரஞ் சுருதி கூறுகிறோம். அவை வருமாறு:—

ஆத்மாநுசிந்தனம்:—

"க்மத்யேச குருசாத்மானம் ஆத்ம மத்யேச க்கம் குரு |
ஆத்மாநம் க்மயம் க்ருத்வா, நகிஞ்சி தபிசிந்தயேத் ||" (உத்தரகீதை)

(தாத்பர்யம்) ஆகாயமத்தியில் ஆத்மாவைச்செய், ஆத்மமத்தியில் ஆகாயத்தைச் செய். ஆத்மாவை ஆகாய மயமாகச் செய்து, கொஞ்சமாகிலும் அந்நியத்தைச் சிந்திக்கக்கூடாது.

பரமாத்மாவைத் தியானிக்குமிடம் :—

"புடத்வய விநிர்முக்தோ, வாயுர் யத்ர விலீயதே |
தத்ர ஸம்ஸ்தம் மந: க்ருத்வா, தம்த்யாயேத் பார்த்தாசலம் ||" (யோ. கீதை)

(தா-ம்) இரண்டு நாசியினின்றும் வெளிப்பட்ட வாயுவானது எங்கேலயமடைகின்றதோ, அங்கே மனதைச் செவ்வையாக நிற்கச் செய்து, பார்த்தா! அந்த பரமாத்மாவைத் தியானிக்கவேண்டும்.

தேவாலயம், தேவன், பாவனை, பூஜை முதலியன :—

"தேஹோ தேவாலய: ப்ரோக்தோ, ஜீவோ தேவஸ் ஸதாசிவ:"
த்யஜே தஞ்ஞான நிர்மால்யம், 'ஸோஹம்' பாவேந பூஜயேத்||"

(ஸ்கந்தோபநிஷத்) (தா-ம்) தேஹமே தேவாலயமென்று சொல்லப்படுகிறது. ஜீவனானவன் எப்போதும் மங்களகரமான தேவனாயிருக்கிறான். அஞ்ஞானமாகிய நிர்மால்யத்தைத் தள்ளிப்போட்டு, "அது நானாயிருக்கிறேன்" என்னும் பாவனையுடன் பூஜிக்கவேண்டியது. (இந்த சுலோகத்தில் 'அஜபா' (வெளிப்படையாய்ச் சொல்லாது கண்டத்திற்குள்ளேயே ஜபிக்கும்) மந்திரம் ரகஸ்யமாயிருக்கிறது.)

ஆலயம், தேவதை, ஏகாந்தமந்திரம் :—

"தேகால யத்தில் சிதாகாச தேவதையை
ஆகாச சாந்தி மலராலே—யேகாந்த
மந்திரத்தால் பூசைசெய்து மாதவரை யாதரித்து
சந்ததம் வாழ்வார்க் காரசரி." (சொரூபசாரம்)

சிவ (ஏகாந்த)மந்திரம் அல்லது 'ஒருமொழி' சமாதி:—

"சிந்தனை புறஞ்செலாச் 'சிவோஹம்' பாவனை
சந்தத முருற்றிடிற் சமாதி வந்துறும்
அந்தநற் சமாதியா லறிவு மேவிடும்
இந்தநன் னிலையிலே யிருக்கற் பாலையே." (வள்ளலார்)

முக்கண்ணனை மகாவாக்கியத்தால் சிந்தித்துப் பிறப்பறுத்தல்:—

"கல்லா லமர்ந்தாரைக் கண்மூன் றுடையாரைச்
சொல்லாமற் சொல்லவந்த தூயாரைப்—பல்காலுஞ்
சிந்தி சிவோகஞ் சிவோகஞ் சிவோகமென
வுந்தி பிறப்பது மாறு." (வள்ளலார்)

(தொடரும்.)

A. அர்த்தநாரி சர்மா, பனமரத்துப்பட்டி, சேலம்.

குறிப்பு :—மேற்கண்ட சூத்திரங்கள் பாசுரங்களுக்கு அனுபவமாகப் பொருளறிய விரும்புவோர் அனுபவமுடையோரிடம் நேரிற் கேட்டறிந்துகொள்ளவேண்டும். எவ்வளவு கல்விமான்களாயினும் சுய அனுபவமில்லாதாரைக் கேட்பதில் பயனில்லை. அவர்களிடமும் நேரிற் கேட்காது கடிதமூலமாய்க் கேட்பதால் சற்றும் பயனில்லை. (பத்திரிகாசிரியர்.)

---

## விபூதி.

சிவபெருமானது அருட்சத்தியாராகிய உமாதேவியாரது சொரூபமாயும், சைவசமயிகள் யாவரும் தரிக்கவேண்டிய இன்றியமையாத சின்னங்களுள் முதற் சின்னமாயும், தரித்தோரது பாவங்களை யெல்லாம் போக்கிப் பரஞானம் தலைக்கூடும்படி செய்து பரமுத்தியைத் தரத்தக்கதாயும், எச்சமயத்தாரும் தங்கள் சமய வழிபாட்டில் கொள்ளத்தக்க சாதனமாயும், தேவர், முனிவர், மனிதர், நாகர் முதலிய எவ்வகையினராலும் விரும்பித் தரிக்கப்படும் திருவுடையானதாயும், வேத, சிவாகம, புராண, இதிகாச, ஸ்மிருதிமுதலிய எல்லாப் பிரமாணநூல்களாலும் புகழ்ந்து பேசுவதாயும், சான்றோர் மனத்தைக் கவர்ந்து வசீகரிக்கத்தக்கதாயும், அணிந்தோர்களை ஆபத்தினின்றும் நீக்க வல்ல மெய்க்கவசமாயும் உள்ளது விபூதியாம்.



இவ்விபூதி இகபர மிரண்டிலும் எத்தகைய செல்வத்தினையும் தருதலால் விபூதி என்றும், தரித்தோர்க்கு சிவனைத் தோற்றுவித்தலால் பசிதம் என்றும், அணிபவர்களது பாவங்களை வேரறப்பறித்தலால் பஸ்மம் என்றும், மெய்க்கவசமாக இரக்ஷித்துக் காத்தலால் இரக்ஷை என்றும், உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரம் என்றும், பாவங்களை நீக்குதலால் நீறு என்றும் பெயர் பெறும்.

நித்த முத்த சித்தனாகிய சிவபெருமான் சகளீகரித்து தம்முடன் தோன்றிய பராசக்தியாரை நோக்கி பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும்படி கூறித்தாம் சுயேச்சையா யிருந்தனர். அதற்குப் பராசக்தியார் அப்பஞ்ச கிருத்தியங்கட்குக் காப்பாகிய திருவுடையானத்தைத் தமக்கு அருளும்படி வேண்டிக்கொள்ள சிவபெருமான் தம்மைத்தாமே ரிஷப மூர்த்தியாகத் தோற்றுவித்து பராசத்தியை ஆவாது கலைகளுள் தருமகலைகளைக் கொண்டு திருப்பாற்கடலில் பசுவாயுதிக்கும்படி பணித்தருளினார். அக்கலைகளும் அவ்வாறே பாற்கடலில் நந்தை, சுரபி சுமனை, சசிலை, சுபத்திரை யென்னும் ஐந்து பசுக்களாயுதித்து சிவலோகத்தையடைந்து விருஷபமூர்த்தியோடு கலந்திருந்தன. சிவபெருமான் அவைகளின் கோமயத்தை சிவாகம விதிப்படி விபூதியாய் விளைத்து தமது நெற்றியில் அணிந்துகொண்டு உமாதேவியார் கையில் கொடுத்து இதுவே நீ வேண்டிய காப்பாகுமென்று சொல்லி யருளத் தேவியார் அதனைக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களையும் செய்தருளினார். ஆதலால் சிவசொருபமே விபூதியென்று வேத முதலிய சகல சாஸ்திரங்களும் கூறுகின்றனும். இதுவே விபூதியின் தோற்றம்.

இனி இவ்விபூதி குற்றமற்ற சுத்தமான பசுவின் கோமயத்தை மந்திரபூர்வமாக சிவாக்கினியில் தகித்தபோது கற்ப விபூதி எனப்படும்.

இப்படி விளைந்த விபூதியுள் கருத்த விபூதி வியாதியையும், செந்நிற விபூதி கீர்த்தி நாசத்தையும், புகைநிற விபூதி ஆயுர் நாசத்தையும் உண்டாக்குமாதலால் அவைகளை நீக்கி வெண்ணிற விபூதி அளவில்லாத புண்ணியத்தை விளைக்குமாதலால் இதனையே தரித்தல் வேண்டும்.

இத்தகைய விபூதியைப் புலித்தோல், மான்தோல், பட்டு முதலியவைகளால் செய்த பையிலேனும், வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை, சம்புடம் இவைகளிலேனும் வைத்து உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் கிரமப்படித் தரிக்க வேண்டிய தானங்களில் மந்திர பூர்வமாக சொல்லப்பட்ட அளவுகளில் கூடாமலும் குறையாமலும் தரித்தல் வேண்டும். (உத்தூளனம் என்றால் அப்படியே பூசிக்கொள்ளுதல். இது எக்காலத்திலும் தரிக்கத்தக்கது. திரிபுண்டரம் என்பது ஜலத்தில் குழைத்து மூன்று கீற்று களாய்த் தரித்தல். இது மாலை ஆகிய முதலிய காலங்களில் தரிக்கலாகாது.)

விபூதியின் மகிமை பல உபநிஷத்துக்களாலும் யஜுர்வேதம் முதலிய வற்றாலும் கோஷிக்கப்படுகின்றன. தமிழ் வேதமும் "நீறு வெண்ணீறணியாத நுதல் திருவில்லாநுதல்" என்றும் அடக்காமை என்றும் கூறுகின்றது. மணிவாசகர் சிவபெருமானது சேவடி பரவி—"வெண்ணீறணிகிலாதவரைக்—கண்டால் அம்ம நாமஞ்சுமாறே" என்று துதியருளினார். ஔவைப் பிராட்டியாரும் "நீறில்லா நெற்றிபாழ்" என்று வற்புறுத்தினார்.

மதுரையில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கூன் பாண்டியரது சுர நோயைத் தீர்த்து சமணரை வாதில் வென்று சைவஸ்தாபனம் செய்தருளியது விபூதியினாலன்றோ? மனிதர்களுக்கு நெற்றி வார்த்துவயாகப் படைக்கப்படாது குறுக்காகப் படைக்கப்பட்டிருப்பதால் தரிக்கத்தக்கது விபூதி திரிபுண்டரமே யென்று ஊகிக்கற்பாலதாகும். விபூதியைச் சரீரத்தில் தரிப்பதினால் மன அழுக்கை மாற்றுவதுடன் புற அழுக்கையும் நீக்குவதால் வைத்தியசாஸ்திர விசாரத்திலும் உத்த மோத்தமான தாகக் கொள்ளப்பெறும். இது அக்கினியில் நீற்றப்பட்டமையின் எத்துணைக்காலமிருப்பினும் கெடாது நிலைபெற்றிருக்கும்

சிவ சின்னமாகிய விபூதியை மெய்யன்போடு தரிப்பவர் சிவபதமடைவர். அது,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகெதி
சிங்கார மான சிவனடி சேர்வீரே.

என்னும் திருமந்திரத்தா லுணர்க. இவ்விபூதியிலே மிகுந்த பக்தியுடையோர் இவ்விபூதியைத் தரித்த அடியார்களைக் காணின், அவர்களுக்கும் சிவனுக்கும் பேதம் நோக்காமல் அவர்களை வழிபடுவர். அதனை,

" எவரேனுந் தாமாக விலாடத்திட்ட, திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி—யுவராதே யவரவரைக்கண்டபோது, வுகந்தடிமைத் திறநினைந் துகந்து வந்துநோக்கி—யிவர் தேவ ரவர் தேவ ரென்றுசொல்லி, யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக் — கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே, கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே " என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தா லறிக.

இத்தகைய விபூதியை நமது சைவ சமயிகள் யாவரும் எப்போதும் இடைவிடாது தரித்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

இது தூத்துக்குடி ஸ்ரீமான் க. சங்கர லிங்கம் அவர்களால் பொதுவில் எழுதி வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரிகையிலிருந்து எடுத் தெழுதப்பட்டது.

A. M. சங்கர நாராயணன், அம்பா சமுத்திரம்.

குறிப்பு.—இந்த வியாசம் "புண்டரதாரணம்" என்ற வியாசம் நமது ஆடி சஞ்சிகையில் வெளியிடுவதற்கு முன்பே, அதாவது 29—6—18 லேயே நம்மிடம் வந்து சேர்ந்ததால் மேற்கண்ட வியாசத்தில் காணும் இரண்டொரு விஷயங்கள் அதிலுமிருப்பதைப் பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ளற் கிடமில்லை, மேலும் சாத்திரங்களி லுள்ளவை யாவர்க்கும் உரித்தானவையே.

பத்திராசிரியர்.

---

## அறம்.

அறம் தருமம் (Duty) ஒரு பொருட்சொற்கள் அறமாவது வரையறுக்கப்பட்டது. அதாவது: நம் முன்னோரால், உலக நன்மையின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சிலவிதிகள். அவையாவும் மனிதர் ஒவ்வொருவரும் செய்யக் கடமைப்பட்டிருப்பதால் அவைகள் கடமைகள் என்றும் வழங்கப்படும். அவையாவும் ஒழுக்கம், வழக்கு, தண்டம், என மூவகைகளில் அடங்கும்.



அவற்றுள் ஒழுக்கம் என்பது முன்னோர் ஒழுகிய சிலவிதிகளைக் கைப்பற்றி யவர்கள் நோக்கத்தை நிறைவேற்றல். அவர்கள் நோக்கமாவது உலகில் மானிடர் பிறர்க்குத் துன்பம் விளைக்காமலிருப்பதாம் பிறர் துன்பம் கண்டுழி இரங்கி உதவி புரிவதும் தங்கள் கடமை எனக் கொள்வதாம்.

இனி வழக்கு என்பது மானிடர் தனக்குத் தன் உரிமையான பொருள் காரணமாக வாதிடல். இது உண்டாக, கொடுக்கல் வாங்கல் முதலிய பல காரணங்களிருப்பினும் ஒழுக்கந் தவறிய விடத்தேயுண்டாம்.

தண்டம் என்பது அவ்வாறு தவறியவர்களைத் தண்டித்தல்.

இவற்றுள் ஒழுக்கமே உயர்ந்தோரால் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. மற்றவை தேசத்திற்கு தேசம், காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மைய. மனிதர் தனித்து வாழமுடியாதவர். ஏனெனில் இவர்க்கு ஆகாரம், உடை, மற்றும் பல்வேறு பொருள்கள் எல்லாம் தமக்குத்தாமே தயாரித்தல் ஒண்ணாது. ஆகையால் ஒவ்வொருவரும் யாதாவது ஒன்றைத் தயாரித்து மற்றோர்க்கு உதவி அவரிட மிருந்து தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் மனிதர் (ஒருவர்க்கு மற்றொருவருக்கும்) நெருங்கியசம்பந்தம் ஏற்படுகிறது. அப்பொழுது ஒவ்வொருவரும் சிலவிதிகளை யனுஷ்டிக்க வேண்டும். அவ்விதிகளை நம்முன்னோர் வரையறுத்து 'அறம்' என்று பெயரிட்டனர். ஆகவே நாம் அவ்வறத்தை யனுஷ்டிக்கா விட்டால் ஒவ்வொருவரும் பசியால் தூண்டப் பட்டு பலவழியுஞ் சென்று தன்னயம் கருதித்தவிப்பார். அப்பொழுது உலகில் கொலை, களவு மல்கி உயிர் வாழ்தல் முடியா தொழியும். இதை நோக்கி மனிதர் செய்யவேண்டிய அறம் செய்கின்றனரா என்று கவனிக்கும் பொருட்டு வேந்தரையும் ஏற்படுத்தினர் நம் முன்னோர்.

கடவுள் பசியால் உலகில் உயிர்களைப் பொருள்நாடச் செய்தார். அரசர் அவர்களைப் பலதொழில்களில் செலுத்துகின்றனர் என்ற கருத்தையான் ஆங்கிலத்தில் கண்டனன். அதை ஓர்பாவால் அடியில் வரைகின்றேன்.

உலகத்துள்ள ஓங்கிய சக்திகள்
பலபல வாயினும் பலத்தில் மிக்கவை
ஓங்கிய பசியும் உயர்ந்த வேந்தும்
பாங்குட னிவற்றைப் பலவழி யாய்ந்தால்
துயர்மிகு பசியும் தூண்டி மானிடரை
நயத்துடன் பலபொருள் நாடச் செய்யும்
அப்பொருள்தேடி யலைந்த மனிதரை
தப்பொன்றில்லாத் தனியறத் தொழிலில்
நிலைக்கச் செய்து நீண்முடியரசு
அலைகடல் ஞால மாண்பால் காக்கும்.

இதனால் மானிடர் உலகில் வாழ அறம் அவசியமென்றும், அதிற்றவறின் அரசனால் ஒறுக்கப்படுவர் என்றும் ஒருவாறு பெற்றாம்.

இனி பரலோகத்திற்கும் இதுவே துணை யாதலைக்காட்டுதும்.

ஆன்மா உடல் எடுக்கும்போது உலகில் சிலகாரியங்களைச் செய்ய உத்தேசித்தே எடுக்கிறது. ஆனால் உலகில் பிறந்தவுடன் மாயையால் சூழப்பட்டு தன் னறிவொன்றி கட்டுப்பட்ட ஓர்தன்மையை அடைகிறது. அப்படிப்பட்ட உயிர்களிடத்து இரங்கிய பெரியர் தம் அநுபவத்தில் கண்ட சிலவிஷயங்களால் சிலவிதிகளை ஏற்படுத்தி அதன்படி நடந்தால் ஒவ்வொரு உயிரும் செய்யவேண்டிய

காரியங்கள் முற்றுப் பெறும். அப்பொழுது கட்டுப்போன்ற தேசம் அவசிய மின்மையால் மீண்டும் பிறப்பதில்லை.

இவ்வாறு இருமையுந் தருவதால்,

"சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தி னூங்கு
ஆக்கமெவனோ உயிர்க்கு"— என்றார் வள்ளுவர்.
அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை.

என்று ஆசிரியர் கூறியிருப்பதால் அறம் செய்தாரும் உலகில் பிறந்து அதன் பயனை அனுபவிப்பது அவசியம் என்று விளங்குவதால் அவர் பிறவியை நீத்தார் என்பது யாங்கனம் எனின், அற்றன்று, அறத்தைச் செய்தோரெல்லாம் மறுபடி பிறந்து அதன்பயனை யனுபவிப்பா ரென்றல்ல—பிரதிபலனைக் கோரிச் செய்தோரே யப்படி பிறந்து அனுபவிப்பார்கள். இருவினைப் பயன்களையு மொழித்தா லன்றோ வீடுபெறல் ஆகலின் பிரதிபலனைக் கருதாது ஈசுரார்ப் பணமாய் அறத்தைச் செய்தோர் இருவினைப் பயனையு மொழித்து பிறப்பில் லாப் பேரின்ப வீடடைவார்.

இவ்வறம் மூன்றாக முற்கூறி யாங்குப் பிரிக்கப்படினும் அதை அனுஷ் டிக்க ஏற்பட்ட வழிகளில் முக்கியமானவை இல்லறம், துறவறமென இரண் டாகும்.

பரமசிவ முதலியார். பாப்பான்குளம்.

---

## சந்தேக வினா?

### நித்தியவிதி—வஸ்திரதாரணம்

சென்ற ஆனி (ஜூன்) மாத ஆனந்தபோதினியின் 454-ம் பக்கத்தின் முதல்வரியில் 'உஷ்ணகாலஸ்நானம் கிரகஸ்தாசிரம தர்மத்தை யனுஷ்டிக் கும் ஆடவர்க்கே சிறப்புடையதாம்' எனக் கூறிவிட்டுத் தொடர்ந்தாற்போல 'உஷ்ணம் உண்டானபின் ஸ்நானம் செய்வதால் சரீரத்திலுள்ள மலம் அதிக மாய் வெளிப்படும்' என்பதால் சரீரத்திற்குச் சுகமே. 'அதனால் சரீரசக்தி (வலு) குறையும்' என்பதால் அவ்வுஷ்ணகால ஸ்நானம் தகுதியுடையதன்று எனத் தோன்றுகிறதே? 'கிரகஸ்தனுக்கு வலு அதிகமாய் வேண்டப்படுவ தால் அவனுக்கு உஷ்ணகாலம் சிறந்ததாயிற்று' என்பதிலிருந்து கிரகஸ்தனுக்கு வலுவேண்டுவதாலும் உஷ்ணகாலத்திய ஸ்நானம் வலுவைக் குறைப்பதாலும் அது எங்ஙனம் சிறந்ததாகும்? அதே பக்கத்தின் கடைசி வரியில் 'வெயில் தோன்றியபிறகு ஸ்நானம் செய்வதும் அனுகூலமேயாம்' என்று கூறியிருப் பதும் முரணுவதோடு, வைகாசிமாத சஞ்சிகையிலும் சூரியன் உதயமாகி அவ் வுஷ்ணம் (ஒளி) சரீரத்திற் படுமுன்னமே ஸ்நானம் செய்தால்தான் தேகத்தி லுள்ள மலம் வெளிப்படும், இல்லாவிடின் அவ்வுஷ்ணத்தால் மேலேயுள்ள மலம் உலர்ந்து, உள்ளேயுள்ளனவும் வாராதபடி தடைப்படுத்தும் ஆதலால் பிரா தக்காலத்திலேயே ஸ்நானம் செய்வதுதான் உசிதம் எனவும் கூறப்பட்டிருக் கின்றதே.

ஆகவே, நமது முன்னோர், நமது நன்மைக்காகவே, முற்காலத்தில் ஏற் படுத்தியுள்ளதும், அவற்றைத் தற்போது, நம்மவர்களில் தெரியாத பாமரர்களுக் கும் தெரியும்படி, நமது போதினியில் வெளியிட்டுக்கொண்டுவரும், ஸ்ரீ யோகா



னந்த யோகீஸ்வரரவர்களுக்கு அடியேன் அனேக வந்தனங்கள் அளிக்கக் கட மைப்பட்டவனா யிருப்பதோடு, முன்னோர்களின் ஏனைய ஏற்பாடுகளையும் நமது போதினியில் வெளியிட்டு, நமது சகோதரப் பாமரர்கள் அறிந்து அவ்வழியே உய்யுமாறு வெளியிடவும், மேற்போந்த எனது சந்தேகத்தினையும் நமதானந்த போதினிமூலமாகவே நிவர்த்திக்குமாறும் நமதானந்தன் மூலமாகவே ஸ்ரீயோ கீஸ்வரரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

P. பரிமளப்பல்லவராயர்.

---

## ஆனந்தபோதினி

சனம். பத்திராதிபரவர்கட்கும் சகோதர சந்தாநேயர்களுக்கும் சந்தாநேயர் களி லொருவனுகிய அடியிற் கையொப்பமிட்ட யான் தெரிவித்துக் கொள்ளுவ தாவது:—

நமது ஆனந்தனின் ஆனி (ஜூன்) மாத சஞ்சிகையின் 471-ம் பக்கத்தில் நமது சந்தாநேயர்களி லொருவரும் சிலோன் வாசியுமாகிய ம-ா-ா-ஸ்ரீ பேர் னர்து அவர்களுடைய பிரார்த்தனையையும் பத்திராசிரியரவர்களின் குறிப் பையும் பார்வையிட்டேன்.

நமது ஆனந்தன் நமது சந்திப்பைப்பெற, மாதமிருமுறையல்ல, மும்முறை வரினும், சந்தாவை ரூபாய் ஒன்றரையல்ல, இரண்டாக உயர்த்தினும், அவன் தனது அங்கங்களில் ஏந்திவரும் மிக்க ஏற்றம் பொருந்திய பொருள்களுக்குப் போதுவன வாகாதென்பது திண்ணமே.

ஆயினும், யுத்தகாலத்திய அகவிலை ஏற்றத்தினால் ஏழைகள்முதல் ஏற்ற முள்ளோர்கள்வரை, இயம்பொண்ணா இன்னலை அனுபவிக்கும் சமயமாகிய இப்போது எக்காரணத்தைக்கொண்டும் சந்தாவை உயர்த்துதல் உசிதமன்றென் பது எனது முழுநோக்கமாகும்.

ஏனெனில், நமதானந்தனுடையவும் நம்முடையவும், முக்கியநோக்கம், 'நம தானந்தனை வறியோர்முதல் வலுத்தோர்வரை யாவரும் வாங்கி வாசித்து நற் பயனை யடையவேண்டுமென்பதன்றோ?' ஆகவே அவ்வவர்களின் சௌகரி யத்தின் பொருட்டு சந்தாவும் தற்போதிருக்கும் அளவிலேயே இருத்தலவசியம். இல்லையேல் சந்தாதாரர்களின் சங்கியை குறைவுபட நேரிட்டாலும் நேரிட லாம்.

P. பரிமளப்பல்லவராயர்.

குறிப்பு.—நமது நண்பரது மேல்கூறிய அபிப்பிராயம் கவனிக்கத்தக்கதே. அதைக் கவனித்தே இவ்வளவு குறைந்த சந்தா ஏற்படுத்தினோம். இப்போது காகிதவிலை யேறியிருக்கும் அளவைநோக்க, இச்சந்தா அளவுமீறிக் குறைந்த தாய்விட்டது. ஒன்றரை ரூபா யாகினும் அது அவ்வளவு கஷ்டமானதா யிராது என்பதே பலர்கருத்து. ஒருமாதத்திற்கு இத்தகைய விஷயத்திற்காக 2-அணா செலவழிப்பது அவ்வளவு கஷ்டமாய்த் தோன்றாது. அன்றாடம் 0—4—0 சம்பாதிப்பவன்கூட அரையணா வரும்படியை இதற்காகக் கொடுக்க லாம். அப்படியிருக்கச் சந்தாவையுயர்த்த அஞ்சவேனெனில், நம்மவர்களில் பெரும்பாலார்க்கு கல்வியின் அருமை இன்னும் தெரியவில்லை. அதிலும் நம் அருமைத் தமிழின் மகிமையை யுணர்ந்து அதை விர்த்திசெய்வதைவிட்டு அன் னிய பாஷையைப் புகழ்ந்துகொண்டாடும் தன்மையுடையவர்களா யிருக்கிறார் கள். செல்வமுடையவர்களோ யிதிலபிமானமின்றி இதற்கு ஒரு ரூபா செலவு செய்

விட நாடகத்திற்குத் தினம் 5, 10 செலவுசெய்யச் சந்தோஷமுடையவர்களா யிருக்கிறார்கள். அனேகர் தாங்கள் அலட்சியமாய்ச்செய்யும் அநாவசிய செலவில் பலபாகங்களில் ஒரு பாகத்தை இதற்குக் கஷ்டமின்றி கொடுத்து கஷ்டமின்றி தங்களுக்கும் தாய்ப்பாஷைக்கும் நன்மை செய்யக்கூடும். அவர்கள் மனத்திரும்பாக்குறையே யன்றி வேறில்லை. அக்குறையை நீக்குமாறு கருணாநிதியைப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

---

## தமிழ்ப் பாஷை.

தமிழபிமானிகளாகிய சந்தா நேயர்களே! மேலே எடுத்துக்கொண்ட விஷயம் மிகப் பெரியது. இரண்டொரு வியாசங்களுக்குள் எழுதி முடித்த லரிது. இம்பூமண்டலத்துட் பிறந்துள்ள ஆறறிவுள்ள ஜீவராசிகள் தங்களுடைய கருத்தைப் பிறருக்கு அறிவிப்பதற்கு இன்றியமையாத கருவியாயிருப்பதே பாஷை. தேசங்கள் தோறும் பலவகையான பாஷைகள் வழங்கிவருகின்றன. தமிழ்ப் பாஷை எவ்வளவோ காலத்திற்குமுன்பு தோன்றி, வடக்கே வேங்கடத்திற்கும் தெற்கில் கன்னியா குமரிக்கும் மத்தியிற் பரவி பாண்டிய மன்னரால் ஆதரிக்கப்பட்டு வந்ததென விளங்குகின்றது. "தமிழ்ப் பாஷை அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்றுச், சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடித், திராவிட தேசம் முழுவதும் ஏகச்சக்ராதிபத்யஞ் செலுத்திவந்தது." என்று வித்துவான் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமிழின் அருமையைப் பற்றிக் கூறியுள்ளனர்.

முற்காலத்தில் தமிழ்ப் பாஷையில் பாட்டுகளும், பாசுரங்களும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருக்கன அத்தகைய புத்தகம் ஒரே புஸ்தகம் தான் குருவினிடம் இருக்கும். அந்த ஒரு மாணுக்கன் படிக்க மற்றவர்கள் பின்னே சொல்லுவார்கள். பின்னிசுளுக்குச் சந்தேகம்வருமாயின் குருவினிடம் சென்று நிவர்த்தி செய்துகொள்ளுவார்கள். இக்காலத்தில் அச்சியந்திரத்தின் உதவியால் வசன நடையில் வேண்டுமான பிரதிகள் அச்சில் பதிப்பிக்கப்படுகின்றன. ஒரே மாதிரி புத்தகங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் அகப்படுகின்றன. ஒரேலேயே மாணுக்கர்கள் ஒரு புத்தகம் போனால் மற்றொன்று கிடைக்கின்றது என்ற தைரியத்துடன், படிப்பில் சிரத்தை அதிகமின்றி யிருக்கின்றனர். முற்காலத்தில் வித்துவான்கள் கவிகளும், பாசுரங்களும் எழுதி அரசர்களிடம் சென்று அரங்கேற்றி, அரசனால் அளிக்கப்படும் வெகுமதியைப் பெற்று ஜீவித்து வந்தனர். தற்காலத்திலோ பண்டிதர்கள், அநேக பிரதிகளை அச்சிற் பதிப்பித்து, அவைகளை வித்து சௌகரியமாகப் பிழைத்து வருகின்றனர். இக்காலத்தில் தமிழ்ப்பாஷையை அபிவிருத்திசெய்ய சௌகர்யங்கள் குறைவின்றியிருந்தும் தாய்ப்பாஷையை அலக்ஷியஞ்செய்து அன்னிய பாஷைகளில் காலமெல்லாம் போக்குவது தமிழ்நாட்டிற் பிறந்த மக்களுக்கு அழகாகுமோ? தமிழ் நாடு செழிப்புற் றிருந்த காலத்தில் தமிழ்ப் புலவர்கள் பலர் எழுதிவைத்துப் போயிருக்கின்ற அருமையான நூல்களைப்படிக்காதவர்களும், பெயரைக்கேட்டிராத அறிவிலிகளும் தவிர மற்றெவரும் தமிழ்ப் பாஷையை அலக்ஷியம் செய்யமாட்டார்கள்.

இப்படியாக சுயபாஷையில் வசன நூல்கள் ஏற்பட்ட பிறகு நம் தாய்ப் பாஷையாகிய தமிழ்ப் பாஷையை ஆதரிசெய்து அபிவிருத்தி செய்யா



திருத்தல் நம்முடைய தேசத்தின் க்ஷீணதசைக்கு அறிகுறியாகும். ஆயினும் இத்தகைய கேடுகி நம்முடைய நாட்டை அணுக வொட்டாமற் றடுக்கும் பொருட்டு தேசாபிமானிகள் பலர் ஒன்றுகூடி தேசிய கல்விச் சாலைகளை ஸ்தாபிக்க முயன்று வெற்றிபெற்று வருகிறார்கள். இக் கல்விச் சாலைகளில் தாய்ப் பாஷையை சிரத்தையுடன் போதிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இத்தகைய கல்விச் சாலைகள் பற்பல விடங்களில் ஸ்தாபிக்கப்படுமாயின் நமது தாய்நாடு மேம்பாடடையு மென்பதற்கு ஐயமில்லை.

அன்பர்களே! கடைசியாக யான் உங்களுக்குள், அறிவைப் பாலச்செய்வதில் சஞ்சீவியை யொத்த இப்பத்திரிகையின் பத்திரிகாசிரியருக்கும், ஓர் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகிய யாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து அவ்வவ்வூர்களில் தமிழ்ச் சங்கங்கள் ஸ்தாபித்து தாய்ப் பாஷையின் அபிவிருத்திக்காக உழைப்போமாயின் நம்முடைய இந்திய நாட்டில் தமிழ்ப் பாஷை, முற்காலத்திலிருந்த உன்னத நிலைமையை யடையுமென்றே யான் நம்புகிறேன். இத்தகைய சங்கங்கள் ஸ்தாபிக்க முயலும் வண்ணம் அருள்புரிய வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

N. K. இராஜகோபாலன்.

குறிப்பு:—நமது சந்தாநேயர்கள் இதை வாசிப்பதோடு விட்டு விடாது மனதில் வைத்து அநுபவமாய்ச்செய்ய முயல்வார்களேல் நல்ல பலனை யடையலாம் என்பதிற்றடையில்லை. ஆண்டவன் அவர்கள் மனந்திருப்பி இது விஷயத்தில் சிரத்தை கொள்ளுமாறு செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## பகவத்கீதை—கர்மயோகம்.

அத் 4: சு, 1-2-3, நாசமற்ற பலனைக் கொடுக்கக் கூடியதான இந்த கர்மயோகத்தை ஸ்ரீ வாசுதேவனாகிய நான் ஆதிகாலத்தில் சூரியனுக்குச் சொன்னேன். சூரியன் மநுவுக்குச் சொன்னான். மநு இக்ஷ்வாகுவிற்கு உபதேசித்தான். ஏ! அருச்சுன, இவ்விதம் பரம்பரையாய் வந்த இந்த கர்மயோகத்தை ராஜாக்களும் ரிஷிகளும் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையாலே அந்த கர்மயோகம் இந்தலோகத்தில் நஷ்டமாய்விட்டது, நீ என்பக்தனாயும் தோழனாயுமிருக்கின்றா யாதலாற் பழமையான அதே கர்மயோகம் என்னாலே இப்பொழுது உனக்குச் சொல்லப்பட்டது, இது ரகசியமுஞ் சிரேஷ்டமுமாயது.

மேலேயுள்ள சுலோகத்தில் "ரகசியம், சிரேஷ்டம் என்பது என்னவென்றால், அத்தியாயம் 2 சுலோகம் 40, 50, 51, இம்மூன்றிலுள்ள பொருள்களைக் கண்டு தெரிந்து நடப்பதே யாகும். அப்படித் தெரிந்து நடந்தால் மோக்ஷ சாதனம் கைகூடும்.

சு, 14-ல், என்னைக் கர்மங்களடைதலில்லை. எனக்குக் கருமபலத்திலாசையில்லை. இவ்வாறென்னை எவன் தெரிந்துகொள்கின்றானோ அவன் கருமங்களாலே கட்டப்படுதலில்லை என்றருளியதற்கு (ராகவேந்திர சுவாமிகள்) ஜீவன் போல பலாபேக்ஷையாலே நான் கருமங்களைச் செய்யாமையாற் கருமங்களாவது பலனாவது என்னைக் கட்டுதலில்லை. அந்தந்தப் பிராணிகள் பூர்வஞ்செய்த நல்வினைத் தீவினையை யநுசரித்துச் சிருஷ்டித்தலாற் பல விசித்திர சிருஷ்டி செய்த பக்ஷபாத தோஷமென்னை யடைதலில்லை. இவ்வாறென்னை யறிந்தவ

னுக்கே பந்தமிலாதபோது எனக்குப்பந்தமேது, "இவ்வாறென்னை யறிகிறவன்" என்றவாக்கியத்தால் ஸ்ரீகண்ணபிரான் பரமாத்துமன் அறிகின்றவன் என்பதும் ஜீவன் அறியப்படுகின்றவன் என்பதும் தெரிகின்றமையாற் ஜீவேசுவரபேத முறுதிசெய்யப்பட்டது என்றும் (பாஷியக்காரர்) பிராணிகளின் பிராசீன கருமங்களுக்குத் தக்கபடி, தேவர், மநுஷ்யர், பசு, பக்ஷியாதிதேகங்களாய்ச் சிருஷ்டிக்கின்றேனே யல்லாது என்னிஷ்டப்படி அவ்வாறு சிருஷ்டிக்கின்றேனல்லேன் பிராணிகளின் தேகத்திற்குக் காரணம் அவற்றின் பூர்வகர்மமாதலாற் பக்ஷபாத தோஷமென்னைச் சார்தலில்லை. பிராணிகளின் பூர்வகர்மத்திற்குத் தக்கபடியே அவற்றிற்கும் வேண்டிய வஸ்துக்களையுங் கொடுக்கின்றேன். இங்ஙனம் நான் நிமித்திய காரணமாக * மாத்திரமிருத்தலாற் பலன் என்னைச் சார்தலில்லை. இவ்வாறென்னை அறிகின்றவன், அவனது கர்மயோகத்துக்கு விரோதியான பூர்வகர்மத்தாற் கட்டப்படுதலில்லையென்பது கருத்தென்றும், (சங்கராச்சாரிய சுவாமிகள்) அகங்காரமாவது பலாபேக்ஷையாவது பகவானுக்கில்லாமையாற் கர்மபலன் அவனைச் சார்தலில்லை தானே பிரமமென்பதையும் ஒரு கர்மத்திற்குத் தான் கர்த்தா அல்லனென்பதையுமுணர்ந்து அகங்காரம், ஆணவம், ஆசை டம்பம் முதலியன இல்லாமலிருக்கின்றவனையுங் கர்மங்கள் கட்டுப்படுத்தலில்லை யென்றும் சொல்கிறார்கள். சுலோகம், 15-ல், இவ்விதமறிந்து முன்னோர்களான மோக்ஷ இச்சையுள்ளவர்களாலுங்கூட கர்மயோகஞ் செய்யப்பட்டது. ஆதலால் முன்னோர்களாலே செய்யப்பட்டதும் நீடித்து நடந்து வந்ததுமான கர்மயோகத்தை அருச்சுனா நீ செய்யென்றும் சொன்னார். மேலே சுலோகம் 14-ல் என்னைக் கர்மங்களடைதலில்லையென்று காரணங்கூறாமலே அருளியதும் இணங்க சண்டும் இவ்விதமறிந்து என்று 15-வது சுலோகத்திலும் அருளினன். காரணங்கூறாமிடத்துப் பாஷியக்காரர்கள் தத்தம் மதக்கொள்கைக்கிணங்கக் கூறுதலாற் காரண விஷயத்தி லிறையவன் திருவுள்ளம் யாதோ? ஆராய்ந்து உணர்க. சுலோகம் 18-ல், கர்மத்தில் அகர்மத்தை யெவன் பார்க்கின்றானோ அகர்மத்திற் கருமத்தை யெவன் பார்க்கின்றானோ அவன் மனிதர்களில் விவேகமுள்ளவன். மனச்சமாதானமுள்ள யோகி. அவன் சகல கர்மயோகங்களையுஞ் செய்தவனுமாகின்றான் என்றதற்கு (சங்கரர்) ஆத்மாவுக்குச் செய்வதுஞ் செய்யாமலிருப்பதுமாகிய கர்மாகர்மங்களிரண்டுமில்லை யாகையால், தேகம், மனம், இந்திரியங்கள் என்பனவற்றின் செய்கையை கருமமென்றும் அவற்றாற் செய்யப்படாமை அகருமமென்றுஞ் சொல்லப்படும். அவிவேகிகள் கருமாகருமங்களை ஆத்மாவிடத்தி லாரோபித்து அகங்காரங்களாலே நான் செய்கின்றேன் செய்யாமலிருக்கின்றேன் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதால் ஆத்மா கருமஞ்செய்தல்போலக் காணப்பட்டாலும் கருமஞ் செய்வது

* காரியகாரணங்களில் காரணங்கள் மூன்று வகைப்படும். 1. முதற்காரணம், 2. துணைக்காரணம், 3. நிமித்தகாரணம். குயவன் பானை சட்டி செய்கிறான்; அதிலுள்ள முக்கிய காரணங்கள், 1-மண், 2-திரிகை, (சக்கரம்) 3-செய்யும் ஆளாகிய குயவன். இவற்றில் மண் முதற்காரணம்—திரிகை-துணைக்காரணம்—குயவன் நிமித்த காரணம். அதைப்போலவே சிருட்டியில் — மாயை முதற்காரணம்—கடவுளின் சத்தி துணைக்காரணம்—கடவுள் நிமித்தகாரணம்.

"காரணகாரியங்கள் முதற்றுணை நிமித்தங்கண்டாம்
பாரில் மண் திரிகை பண்ணுமவன் முதற்றுணை நிமித்தம்
தேரில் மண் மாயையாகத் திரியை தன் சத்தியாக
ஆரியன் குலாலனாய்நின் றமைப்ப னிவ்வுலகமெல்லாம்"

(சித்தியார்.)



தேகாதிகளென்றும் ஆத்மாகருமஞ் செய்தலில்லையென்றும் அறிகின்றவன் கருமத்தில் அகருமத்தை பார்க்கின்றான். எவ்வாறெனின், நதியில் படகேறி வேகமாய்ப்போகின்றவன் அந்நதிக்கரையிலுள்ள மரங்கள் வேகமாய்ப்போதல்போலத் தனக்குத் தோன்றுதலாலே வேகமாய்ப் போகிற செய்கை ஓடத்திலிருக்கின்றதனிடமிருக்க அஃதறியாது செய்கையற்ற மரங்களிற் செய்கையைப் பார்க்கின்றான். அவ்வாறு தேகாதிகள் செய்யுங் கருமத்தை ஆத்மா செய்வதாகப் பார்க்கின்றான். மரங்களிற் கருமமில்லாமைபோல ஆத்மாவினுங் கருமமில்லையென்று பார்க்கின்றவன் கருமத்திற் அகருமத்தைப் பார்க்கின்றான், செய்யாமலிருந்தாலும் அகங்காரத்தின் குணமாயிருக்க, அதைத்தான் செய்யவில்லையென்று மூடன் சொல்லுகின்றான். எங்ஙனமெனில் நான் அதைச் செய்யாமையாலே சுகியாயிருக்கின்றேன் என்கின்றான். அந்தச் செய்யாமையாகிய அகருமத்தில் "நான் அதைச் செய்யாமையாலே சுகியாயிருக்கின்றேன்" என்னும் அகங்காரத்தில் கருமமிருக்கின்றமையாற் செய்யாமையினுங்கூட கருமம் அடங்கியிருக்கின்றதென்று விவேகி அறிகின்றான் என்றும் சொல்கிறார் ஆனால் ஆத்மாகர்மஞ் செய்தற்கு அதற்கென்னுள்ளன? கைகால் முதலியனவுண்டோ? அவையில்லாமையால் அது ஒருகருமமுஞ் செய்கிறதில்லை கருமஞ்செய்தல் தேகாதிகளென்றால் ஆத்மாவைப் பிரிந்த தேகம் கருமஞ் செய்யுமோ? செய்யாது இவ்வாறாகக் கருமஞ்செய்வது தேகாதிகளேயன்றி ஆத்மா அன்றென்றாயினும் கருமஞ்செய்தல் ஆத்மா என்றாயினும் சொல்வதிற்கில்லை. ஆனால் சப்தாதி விஷயங்களை இந்திரியங்கள் கிரகித்து மனதில் சேர்ப்பிக்கின்றன மனம் தான் கிரகித்த உடனே புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கிறது புத்தி ஆத்மாவிடத்தில் சேர்ப்பிக்கிறது என்று சுருதிகள் கூறுவதாலும் 'அன்றறிவாமென்னாதறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை' என்னும் குறளின் விசேட வுரையில் "பொன்றாத்துணை யென்றார், செய்த வுடம்பழியும் உயிரோடொன்றி ஏனையுடம்பினும் சேறலின்" என்றும் 'ஒருமைக் கட்டான் கற்றகல்வி-யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து' என்னுங் குறளின் விசேடவுரையில் வினைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப்புகுமாகலின், எழுமையு மேமாப்புடைத்தென்றார்," என்றும் பரிமேலழகர் கூறுதலாலும் ஆத்மாவுக்குக் கருமசம்பந்தயில்லையென்பது பொருந்தாது. ஆத்மாவுக்குக் கரும சம்பந்தமில்லையென்பது உண்மையானாற் புண்ணியகருமமின்னது பாபகருமமின்னது என்று பகுத்தலேவேண்டா, பகுத்தலாற் பயனில்லை, "அறஞ்செய்து துறக்கம்புக்கான்" என்ற வழி அறஞ் செய்தது யார்? துறக்கம் புக்கதுயார்? செய்தது உடம்பு, புக்கது உயிரென்று கூறுமலே உணரக்கிடத்தலால் தேகாதிகள் செய்யுங் கருமத்திற்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தமுண்டென்பது (ஸ்ரீதரசுவாமிகள்) கருத்தும் இவ்வாறே என்பதை மேலே எடுத்துக்காட்டியிருத்தலாலும் அவர் முன்னர்க் கூறுதலாலுமுணர்க, பிராணியானவன் கருமத்தாற் கட்டபடுகின்றான் என்னும் பிரமாணத்தாற் கருமசுபாவமே பந்தப்படுத்துவதாக விருக்கின்றது. பந்தஞ் செய்வதாகிய கருமத்தை பலாபேக்ஷையில்லாமலும் அகங்காரமற்றும் பகவானுக் கருப்பணஞ் செய்யவேண்டுமென்கிற புத்தியோடு செய்பவனுக்குத் தன் சுபாவமான பந்தத்தைச் செய்யாமற் பூர்வகருமபந்தத்தையுங்கூட நிவர்த்தித்து மோக்ஷபிரயோசனத்தை யுண்டாக்குகின்றது. ஆதலாற் பந்தரூபமான கருமத்திற் பந்தநிவர்த்தியான அகருமத்தைப்பார்க்கின்றான். அதாவது செய்கிற கர்மமே அகர்மமாகிறது. சோம்பலாலாவது தோஷபுத்தியாலாவது சத்கருமங்களைச் செய்யாது விடுதலே, தோஷத்தையும் பந்தத்தையு முண்டுபண்ணுதலாற் கருமத்தைச் செய்யாது விடுதலாகிய அகருமத்தில் தோஷமாகிய பந்தத்தைக் கொடுப்பதாகிய கருமம் அடங்கி யிருக்கின்

றனென்றும் கருமத்தை விடாமற் செய்யவேண்டுமென்றும் அறிகின்றவன் அகருமத்தில் கருமத்தைப் பார்க்கின்றான் என்று கூறினார். என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, மேலேயுள்ளவற்றை யுய்த்து நோக்குங்கள் அவரவர் மனதில் பட்டதைப் பொருத்தமாக பாருங்கள். (தொடரும்.)

நா. அ. தநசாமிராயுடு, போத்தனூர்.

குறிப்பு.—மேலே கூறிய வியாசத்தில் இரண்டொரு விஷயங்களில் சற்று ஐயமுண்டாகக் காரணமிருப்பதாய்த் தோன்றுவதால் அவற்றைப் பற்றி மட்டும் சுருக்கமாய் விவகரிப்பது அவசியமென்று நமக்குப் புலப்படுகிறது. அவை பின் வருமாறு:—

14-வது சூத்திரத்திற்கு ராகவேந்திர சுவாமிகள் நான் பலாபேட்சையின்றி கருமங்களைச் செய்வதால் என்னை யக்கருமங்கள் சாருவதில்லை யென்றும், நான் ஜீவன்கள் செய்த நல்வினை தீவினைகளை யனுசரித்து சிருட்டியாதி தொழில் புரிவதால் பலவிசித்ர சிருஷ்டி செய்த பக்ஷபாத தோஷம் என்னைச் சாருவதில்லையென்றும் பொருளுரைத்ததாகவும், பாஷியக்காரரும் ஏறக்குறைய அவ்வாறே கூறியிருப்பதாகவும், சங்கராசாரிய சுவாமிகள்,

“அகங்காரமாவது பலாபேக்ஷையாவது பகவானுக்கில்லாமையால் கர்ம பலன் அவனைச் சாருவதில்லை, தான் பிரம்மமென்பதையும், தான் கருத்தா அல்லவென்பதையும் உணர்ந்து அகங்காரம், ஆணவம், ஆசை, டம்பம் முதலியனவில்லா திருப்பவனையும் கர்மமணுகுவதில்லை” என்று கூறியதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இப்போது மேற்கண்ட விஷயங்களில் ஒன்றைப்பற்றியும் குற்றமாவது ஐயமாவது நாம் கூற வரவில்லை. அவற்றிற்குப் பின்வரும் (நமது நண்பர் கூறும்) கீழ்க்கண்ட வாக்கியத்தாலே வாசிப்போர்க்கு மேற்கண்டவற்றில் இன்னும் ஏதோ விசேஷ அர்த்தம் இருக்கிறது போலும் என்ற சந்தேகம் தோன்றும் என்பதே. அவ்வாக்கியமாவது :—

“மேலே சுலோகம் 14-ல் என்னைக் கருமங்களடைதலில்லை யென்று காரணங் கூறாமலே அருளியதற்கிணங்க ஈண்டும் இவ்விதமறிந்து என்று 15-வது சுலோகத்திலும் அருளினார். காரணங் கூறுமிடத்துப் பாஷியக்காரர்கள் தத்தம் மதக்கொள்கைக் கிணங்கக் கூறுதலால் காரண விஷயத்தில் இறைவன் திருவுளம் யாதோ? ஆராய்ந்துணர்க” என்பதேயாகும்.

மேலே கூறப்பட்டவைகளுக்கு மேல் நாமாய் ஆராய்ந்தறியத்தக்க காரணம் வேறொன்றுமில்லை யென்பதே நாம் கூறவந்தது. ஏனெனில்,

கர்மம் பிறப்பிறப்பை யளிப்பதேனும் அதைப் பலாபேட்சை யின்றிச் செய்வாயாயின் அக்கர்மம் உன்னைச்சாராது என்று அர்ச்சுனனுக்குப் போதிக்கவே கர்மயோகத்தை விரிவாய்க் கூறினாராதலால் தன்னைக் கர்மங்கள் கட்டுப்படுத்தமாட்டா வென்பதற்கு இன்னும் காரணம் அவர் கூறவேண்டிய தநாவசியம்.

அதற்குப் பாஷியக்காரர் கூறிய காரணங்கள் யாவும் பொருத்தமேயன்றி ஒன்றுக்கொன்று சற்றும் விரோதமானதாய்த் தோன்றவில்லை. எவ்வாறெனின், அவர் பகவானெனினும் தற்சமயம் மனிதாவதாரம் பொருந்தி நம்மில் ஒருவனாய்த் தோன்றி யிருப்பதால் அவர் கருமங்களைச் செய்தாலும் மற்ற மனிதர்க்கு ஒத்ததுபோல் சற்றும் பலாபேட்சையின்றி யாவும் உலக நன்மைக்காகவே கருதிச்செய்வதால் அவரைக் கருமங்கள் சாராவென்பது வெளிப்படை. அவரே பரமாத்மாவாய்ச் சிருஷ்டியாதிகளைச் செய்யும்போது, அப்போதும்



மேல்கூறிய காரணத்தையே பலாபேட்சையின்றி செய்கிறார் என்றும், தன்னிஷ்டப்படி செய்யாமல் ஜீவர்களின் கர்மங்களுக்குத் தக்கவாறு செய்வாராகவும் செய்வதால் கர்மங்கள் அவரைச் சாருவதில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறதும் ஒப்பத்தக்கதே.

ஆயினும் அதில் சங்கரர் கூறியபடி “அவர் எங்கும் நிறைந்த பரமாத்மா, எதிலும் தாக்கற்று ஏகமாய், சலனமின்றி, ஒரு கிரியையுமின்றி யிருப்பவர், உலகில் ஓயாது தன் சந்நிதான மாத்திரத்தில் பஞ்சகிருத்தியமும் நடந்து வந்தாலும் தான் ஒரு தொழிலும் இல்லாமல் சச்சிதானந்த மயமாயிருப்பவர், மேலும் தனக்கு அன்னியம் ஒன்றுமில்லாதவர், *சஜாதி, விஜாதி, சுவகதபேத மற்றவர் தனக்கு வேறாய்ச் சிலரிருந்து ஒருவருக்கொரு மாதிரி இன்னொருவருக்கொரு மாதிரியாய்ச் செய்தாலன்றோ பாரபக்ஷம் உண்டாகும். தனக்கு வேறாய் ஒருவருமில்லை. ஜீவன் மாயா சம்பந்தத்தால் பரமாவினின்றும் தன்னை வேறாய் நினைத்துக் கொண்டாலும் உண்மையில் பல ஏரிகள், குளங்கள், மடுக்கள், குடங்கள் இவற்றிலுள்ள ஜலங்களில் பிரதிபலித்திருப்பது எப்படி ஒரே சூரியனோ அதுபோல் எல்லா தேகங்களிலுமிருக்கும் ஆன்மாக்களும் அவனேயன்றி வேறில்லை. தோட்டியாய் இழிவான வேலை செய்பவனும் அவனே, பிராம்மணனாய் வேதமோதுவதும் அவனே, ஏழையாய்ப் பிச்சை யெடுப்பவனும், சகலபோகத்தோடு ஏகசக்கிராதிபதியாய் அரசாள்பவனும், எஜமானனாய்ப் பல்லக்கிலேறிச் செல்வோனும், ஊழியனாய் அப்பல்லக்கைச் சுமந்து செல்வோனும் யாவும் தானாகவே யிருந்து ஆனந்தத் திருவிளையாடல்புரிந்து கொண்டிருக்கும் அவனுக்குப் பாரபட்சம் என்ற குற்றம் வர வழியேது, கருமமேது, வினையேது ஒன்றுமேயில்லை.” என்பதே சிறந்த உண்மையாகும்.

இன்னொரு விஷயம் எதுவெனில் :—

பின்பாகத்தில் சங்கராசாரிய சுவாமிகள் ஆன்மா கருமம் செய்வதில்லை தேகாதிகள் செய்கின்றன தான் செய்யாத கருமத்தை தான்செய்ததாய் ஆன்மா பாவித்துக்கொள்கிறான் என்று கூறிய விஷயத்தைப்பற்றி நமது நண்பர் எழுதியுள்ளவற்றைப் பார்த்தால் ஆசாரிய சுவாமிகள் குற்றமாய்க் கூறியதுபோலும் நமது நண்பர் அதைக் கண்டித்துக் கூறுவதாகவும் விளங்குகிறது.

உண்மையில் ஆசாரிய சுவாமிகள் வாக்கியத்தில் ஒரு குற்றமுமில்லை. சாதாரணமாய் நமக்கு வெளிப்படையாய்த் தெரிந்திருக்கும் விஷயம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லையென்று நாம் கருதலாகுமோ. எப்போது அப்படிப் பட்டது நமக்கு முரணாய்த் தோன்றுகிறதோ உடனே நாம் அவர் கூறியதின் கருத்தை நன்குணரவில்லையென்று அறிந்துக் கொள்ளவேண்டும். (தொடரும்)

பத்திரிகாசிரியர்.

---

## ஆலோசியாமை.

எந்த காரியத்தை செய்யப் புகுந்தாலும் முன்யோசனை யில்லாமல் செய்யவாரம்பிப்பது பின்னால் மனோவியாகுலத்திற்கு இடமாயிருக்கிறது. இருந்து யோசிப்பதே திருந்திய முடிவாகும்! ஊக்கத்தை செலுத்தி உழைப்பதே புத்தி

* சஜாதி = மனிதனைப்போலவே இன்னொரு மனிதனிருப்பது.
விஜாதி = அன்னியஜாதி புளியமரம்—வேப்பமரம்போல்.
சுவகதம் = மரத்திலிருந்து பூ, காய், பழம் முதலியவை உற்பத்தியா யிருப்பதைப்போல்.

யாகும். எண்ணித் துணிக் கருமம்—துணிந்தபின்—எண்ணுவ மென்பதிழுக்கு இதற்கு ஸமயோசித புத்தியும் இன்றி யமையாததாகும். ஆலோசியாமை அற்ப புத்தியால் ஏற்படுவதாகும். இதற்கு திருட்டாந்தமாக ஒரு வைதீகனது செய்தி அறிவிப்பாம்.

ஏழை வைதீக னொருவன் ஒரு தனவானிடஞ் சென்று அரிகதா காலக்ஷேபஞ்செய்யும் ஸமயம் கேட்டுக்கொண்டார். தனவானும் அதற்கு 100 ரூபாய் தருவதாகவும் ஒப்புக்கொண்டான். அன்று மாலை ஏழையும் ஒரு கதை செய்தார். தனவந்தன் இன்று பணமில்லை நாளை இருநூறு ரூபாயாகத் தருகிறேன் என்று சொன்னதின் பேரில் படிச் செலவு செய்து தாமதித்தான் ஏழை. மறுநாள் கேட்டபோது அடுத்தநாள் வந்தால் மூன்னூறு தருவதாய் ஒப்புக்கொண்டான். அடுத்தநாளும் வந்தார்; நாளை வாரும் நானூறு ரூபாய் தருகிறேன் என்றார். அதற்கடுத்த நாள் வந்ததும் தனவான் கொஞ்சமேனும் கூச்சமில்லாமல் 100-ரூபாயே கொடுத்தார். இதென்ன ஸ்வாமி! 400-தருவதாய் உத்தரவாயிற்றே என்று வினவினான் ஏழை. அதற்குச் செல்வப் பிரபு அட புத்திகெட்டவனே! நாளை (இங்கு) வரு 100 ரூபாய் தருகிறேனென்றேன். பிறகு அடுத்தநாள் வா முன் (கூறிய) 100-ரூபாய் தருகிறேன் என்று சொன்னேன். பிறகு நாளைவாரும் நான் நூறுரூபாய் தருகிறேன் என்றேன். நான் ரூ. 100-தருவதாய்ச் சொல்லியதுபோல் தந்திருக்கிறேனே என்றார். செவி சாய்த்த வித்வான் சிரித்துக்கொண்டு அத்துடன் 400 - ரூபாயும் கூட சேகரித்துக்கொண்டு ஒரு வண்டிமாடு வாங்குவதற்காகக் கட்டுச் சாதங்கொண்டு புறப்பட்டு அடுத்த ஊராகிய புராதன புரியிற்சென்று ஒருநாள் கழித்து அடுத்த நாள் காலை வீதி வழிச் செல்லும் ஒரு சிறுவனிடம் பையா! இந்த ஊரில் என்ன விசேஷம்? என்றார். சிறுவன் சிரித்துத் திகைத்து ஐயா! ஒரு விசேஷ மிருக்கிறது. அதாவது இந்த ஊருக்கு மேற்கே ஓர் சிறு குட்டம் (குளம்) இருக்கிறது. அதன் கரையிலுள்ள தென்னை மரத்தில் எந்தப் பிராமணனொருவன் ஏறுகிறானோ அவனுக்கு ஒருவராகனும், ஒரு ஸோமனும் இனமா யளிக்கப்படும் என்றான். இவரை வைதீகனென்றும், பழைய பேர்வழி யென்றும் ஏசித்துக் கேலி செய்யக் கருதி விளையாட்டாகச் சொன்னான். அப்படியா என்று கேட்டுக்கொண்டு அந்தணன் அந்த மடுவிற்கு சென்று சேறும் நீரும் நிறம்பி யிருப்பது கண்டும் கரையின் மேலுள்ள தென்னைமரத்தில் ஏறினார். ஓர் தடையுமில்லை. சில காய்களும் பறித்தார். இவர் நின்று கொண்டிருந்த பச்சைமட்டையானது இவரைத் தாங்காமல் சரிந்து தொங்கிவிட்டது. ஆனால் பச்சையாகலின் விழவில்லை. பிராம்மணனும் அதைப் பிடித்துக்கொண்டு பிழைத்தோம் என்னும் ஸமாதானத்துடன் தொங்கினார். அச்சமயம் யானைப்பாகனொருவன் தன் யானையைக் குளிப்பாட்ட வந்தான். அவனுக்கு நல்லவார்த்தை சொல்லி தன் மடியிலுள்ள ரூ. 500-ஐத் தருவதாய் சொன்னார். ஆதலால் யானைப்பாகன் தன் யானையை நிறுத்தி அதன்மேல் ஏறி நின்று இவரை யானையின்மேல் இறக்கிக் கொள்ள நினைத்து இவர் காலைப் பிடித்தான். பிடித்தானோ இல்லையோ உடனே யானை பீதியுடன் கரைக்கோடிவிட்டது. யானைப்பாகன் "ஐயரே, பத்திரமாய் மட்டையை விட்டு விடாதீர்" என்று கூறித் தான் அவர் கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தொங்கினான். அச்சமயம் தற்செயலாய்குதிரைக்கார னொருவனும் அதை குளிப்பாட்ட வந்தான். அப்போது தன் மடியிலுள்ள 600 ரூபாயையும் தந்து விடுவதாய்ச் சொன்னான் யானைப்பாகன். ஆசையின் மோசத்தால் இவனும் குதிரைமே லேறிகொண்டு குதித்து குதித்து யானைப் பாகன் காலைப் பிடித்தான். உடனே குதிரை ஓடி விட்டது. இப்போது குதி



ரைக்காரன் முதலாவதிருக்கும் பாப்பானைக் கூவி "கைவிடாதே! என்னிடமுள்ள ரூபா 700-தருகிறேன் கைவிடாதே! என்றான்; "என்னிடமுள்ள ரூபா 600 தந்துவிடுகிறேன்" என்றான் யானைப்பாகன். உடனே பாப்பான் "ஆஹா! என் மடியிலுள்ள ரூபா 500 பே பெரிய மூட்டையா யிருக்கிறதே. அவ்வளவுமான ரூபா 1800 மானால் எத்தனை பெரிதாகும், இவ்வளவு பெரிதாகும்" என்று தன் கையைவிட்டு அளவு காட்டிகொண்டான். உடனே யாவரும் குளத்தில் விழுந்தார்கள். அடியிலிருந்த குதிரைக்காரனை சேற்றில் காணவேயில்லை. ஆனைப்பாகனும் அழுந்தினான். பாப்பானும் பரிதபித்தான். ஒருவருக்காவது முன்யோசனை யென்பதிருந்தால் இப்படி நேர்ந்திரா. அதிலும் அந்தப் பிராமணர் மூளை யென்பதே நாஸ்தியாகிவிட்டது. பொறுமையுடனே ஆலோசியாமையே காரணமாகும். சுபம்.

இ. வே. மஹாதேவ பிள்ளை, இலத்தூர்.

## நல்லொழுக்கம்.

ஸகோதரர்களே!

நமது ஆனந்தபோதினி பூ உலகத்தில் வெளித்தோன்றி, ஸகோதர ஸகோதரிகளுக்குப் பல அரிய விஷயங்களைப் புகட்டுவதில் முன்னுக்கு வந்திருப்பதைப் பற்றி, இது ஒரு அவதாரபுருஷனென்றே மதிக்கலாகும்.

ஆதலால், இது நாம் நீடூழிவாழ்கவென்று பகவானைப் பிரார்த்திப்போமாக, நாமும் நம் சிற்றறிவிலடங்கிய சிற்சில விஷயங்களை வரையத் துணிந்தனம்.

1. நாம் செய்யும் எந்தவிஷயத்திலும் நமது மனதை எது தீமை எது நன்மையென்று விசாரித்து அந்தந்த காரியங்களைச் செய்தல் உத்தமம். அப்படிக்கின்றி தீயவழிகளிற் பிரவேசித்தால் தற்கால நன்மையும் பின்னால் நம் சுகத்துக்கு நீடித்த விரதத்தையும் உண்டாக்கும்.

2. "கிட்டாதாயின் வெட்டனமற" என்ற முதுமொழியின் பிரகாரம் நம்மால் முடியாத காரியத்தை சொற்பனத்திலும் நினைக்கவேகூடாது. அப்படிக்கின்றிப் பிரவேசித்தால் அதிக பணம் விரையமும் அதிக பிரயாசையும் ஏற்பட்டு நாளைக்குக்கெடுதியை விளைவிக்கும், பிறகு மலையைத்தோண்டி எலியைப் பிடித்தால்போலாகும்.

3. நமக்கு திடீரென்று வரும் நஷ்டத்துக்கு அதிக விசனத்தை யடைதல் கூடாது. நம்மால் என்னசெய்யமுடியும் வருவது வந்துதான் தீரும் வரும் விதி வழியில் தங்காது ஊழ்வினையின் வலியை யாரால் தடுக்கமுடியும் என்று நம் மனதை விசாரித்து மனமகிழ்ந்திருத்தல் நன்று. அப்படிக்கின்றி விசனத்துக்கு இடம் கொடுத்தால், இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கெல்லாம் விக்கினமும், பயித்தியமும் ஏற்படும். இதில் பொறுமை அவசியம்.

4. பொறுத்தவர் பூமியாள்வார், பொங்கினவர் காடாள்வார் என்றவசனத்தின் பிரகாரம் எந்தக்காரியமும் ஆத்திரப்படாமல் பொறுத்து நிதானித்து மனதைத் தேற்றி இது செய்யவேண்டும் இது செய்தல்கூடாது என்று விசாரித்து காரியத்தை முடிவுசெய்தல் நன்று. அப்படிக்கின்றி ஆத்திரத்துடன் வேலையைச் செய்தால், ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்ற வசனத்தின் பிரகாரம் ஒன்றுக் கிரண்டாய் கெட்டுபோவோம்.

5. முனிவுவந்தால் நாம் ஏன் கோபம் செய்யவேண்டும் தெரியாமலொருவன் செய்துவிட்டான் இதற்கு நாம் கோபத்துக்கு இடம்கொடுக்கக்கூடாது கோபம்

பொல்லாதது என்று கின்சிற்று மனதைச் சாந்திப்படுத்தி மனதைத் திருப்புதல் நன்று.

நண்பர்களே! நம்மில் சிலர் வேணுமென்றே கோபத்துக்கு வழியேற்படுத்தி பக்கத்தில் நிற்கும் பெண்கள் நம்மை மதிக்கட்டும், என்று அகங்காரம் கொண்டு கோபத்துக்கு ஓர் நல்வழியை யேற்படுத்திவிடுகிறார்கள். அந்தோ! இவர்கள் எல்லாருக்கும் சத்துருவாகி முடிவில் தம் ஆன்மாவுக்கு அழிவு ஏற்படுத்தி விடுகிறார்கள் இவைகளில் நான் என்ற அகங்காரம் கூடாது.

6. "கீழோராயினும் தாழவுரை" என்ற முதுமொழியின் பிரகாரம் நாம் எல்லா ஏழைகளிடத்திலும் அன்பும் இரக்கமும் காட்டுதல் நன்று. நாம் கீழ் வருணத்தோரிடமும் முகமலர்ச்சியுடன் பேசுதல் நன்று அவர்களிடத்தில் அன்பும் தயையும் முக்கியமாய்க்காட்டவேண்டும். தம்மிடத்தில் பேசவருவோர்களை முகமலர்ச்சியுடன் கண்பார்வையினால் வருக, வருக, என்ற உபசாரம் காட்டுதல் நன்று. அவர்களும் மனமகிழ்ச்சியோடு உரையாடி இரண்டுவார்த்தையில் முடிவாகும் மொழியானது கூட 10-20 வார்த்தைகளுக்குமேல் முடிவு செய்வார்கள். அவர்கள் தம்மிடமின்றி அன்றபொழுது வேறொருவனிடத்தில் இவரைப்பற்றி புகழ்ந்துபேசுவதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். ஆதலால் இவர் எல்லாராலும் புகழப்படுவதற்குக் காரணமாகும்.

7. பரஸ்திரிகமனம் இவை சொற்பனத்திலும் கருதாது இருத்தல் நன்று. இது பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகும் அந்தோ? இப்பாவிகள் சரீர சுகத்துக்கோர் இழிவும் மறுமையில் நரகப்பிராப்தியும் தேடிக்கொள்கிறார்கள். அவ்யமன்பக்கம் நெருங்கவிடாமல் ஜாக்கிரதையாய் பாதுகாத்தல் நன்று.

ஓர் அன்னிய ஸ்திரீ அழகுடன் நம்முன் தோன்றினால் பிரமைகொள்ளாமல் முதலாவது எடுத்துப் பார்க்காமல் இருக்கவேண்டும். பக்தவிஜயத்தில் ஆதமராம் தன் மகன் துளசிதாசருக்குப் புகன்ற வாக்கியம் பின்வருமாறு.

"பார்த்தெனதருள்குமார பரசுகமடைந்த தூயோர்
ஏத்திடுங்கண்ணே பெண்ணைவிப்படி யலையலாமோ
ஊத்தையுமுதிரஞ்சீயு மொழுகிடு புண்ணுந்தோலை
நாற்றமென்றகற்றிடாதே நண்ணிடலாமோ வென்றான்.

குடல்வழும் பென்புந்தோலுங் குருதியுநரம்பிறைச்சி
கொடுமலசலமுமீன்க கோழையுங் கொழுப்புமுற்றச்
சுடுபிணமனைத்திற் கெட்டதூர்க்கந்தம் வீசாநின்ற
மடந்தை மீதாசையாதல் வளமதோ மகனேயென்றான்.

என்ற மேல்சொன்ன வசனத்தின் பிரகாரம் சீயென்று வெறுத்து நீக்குதல் நன்று. நண்பர்களே, பரஸ்திரீயின்பேரில் ஆசைவைத்தல் நன்றல்ல. இவ்வாசையை பரமாத்மாவாகியும், பாஞ்சுடருமாகியும், எம்பெருமானுமாகியும், கைலையங்கிரி வாசஸ்தனுமாகியும், மனதுக்கு எட்டாதவஸ்துவுமாகி நின்ற சிவபெருமானிடம் வைத்துத் தியானிப்போமாயின் இப்பாசபந்தக்கடலை எளிதல் தாண்டி பிர்ம்மானந்தத்தில் மூழ்கியிருப்போம்.

மங்கையர்தம் மேல்வைத்தக் காதல்தனை நூறு
பங்காக்கி யதிலோர் பங்கெடுத்து—கங்கையணி
வேணியன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணுத கதிகா ணலாம்.

(வள்ளலார்)

M. T. தங்கவேலுபிள்ளை, நேவி.

# மாணவர் பக்கம்.

## * சாந்தமென்பது பலஹீனமல்ல.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்" என்பது பழமொழி. எந்தக் காரியத்திலும் அளவுக்கு மிஞ்சி நடப்பது வெகு இலகுவானதும் நியதே. எந்த நற்குணத்தையும் அதிக தூரம் உபயோகிக்கப்புகுந்தால், அதுவே துர்க்குணமாகும். உதாரணமாக, சிரமப்பட்டு படிப்பது நல்லதுதான். ஆனால் அதிக தூரம் கொண்டுபோய், அதை அக்ரமமான முரட்டுப்பிடிவாத மாக்கிவிடலாகாது. புஷ்பங்களிடத்தும் மரஞ் செடி கொடிகளிடத்தும் அபிமானம் மிக நல்லதே. அவைகளை நன்றாய்ப் பரிபாலிப்பது அவசியமே. ஆயினும், எப்போது பார்த்தாலும் தோட்டத்திலேயே உட்கார்ந்துகொண்டு மற்ற முக்கிய கடமைகளைக் கவனியாதிருத்தல் உதவாதல்லவா? நமது வாழ்நாளில் வல்லாவிதமான வேலைகளும் கடமைகளும் நிறைந்துள்ளன என்பதையும், அதற்கேற்ற, நேர் நிறையான குணங்களோடு கூடியவர்களாய் நாமிருத்தல் வேண்டுமென்பதையும் நன்கு ஞாபகத்திற் கொள்ளவேண்டும்.

"என்ன ஐயா இது! அளவுக்கு மிஞ்சி சாந்தமாயிருந்தால் அதனின்று எப்படி தீமை விளையக்கூடும்? என்று பலர் சந்தேகிப்பார்கள். முற்றிலும் சாந்தமாயிருப்பதாக எண்ணங்கொண்டு, பிறர் விஷயத்தில் தலையிடுவானேன் என்று பலர் பேசாமலிருக்கிறார்கள். பிறருக்கு அவர்கள் உதவியும் செய்கிறதில்லை, கெடுதலும் செய்கிறதில்லை. இப்படிச் சும்மாவே தனித்திருப்பதால், தைரியம் குறைந்தவர்களா யிருக்கிறார்கள். தைரியம் குறைந்தவர்கள் தொந்தரவுகள் வரும்போது பலஹீனத்தால் பின்வாங்குகிறார்கள். இத்தகையவர்களைத்தான் கோழை மனத்தவர் என்று சொல்லுகிறோம். பிறர்மனத்தை எங்கு நோகச் செய்துவிடுவோமோ என்று நினைத்து, பிறரிடம் போய் ஆகவேண்டிய காரியங்களில் இவர்கள் முயற்சிக்கிறதே யில்லை. ஆகையால் பொறுப்பான வேலைகளை இப்படிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கக் கூசுகிறோம். எல்லாவற்றிலும் அதிக சாந்தமாகவே இருப்பதால், இவர்களிடம தாமஸபுத்தியும், கோழைமனமும்தான் அதிகமாயுள்ளன. புத்திக்கூர்மையும் பரபரப்பும், திடசித்தமும், சாந்தத்தைப்போலவே அவ்வளவு அவசியம் என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். முதுகெலும்பு இல்லாதவர்களைப்போல், பயந்தவர்களா யிராதீர்கள். எந்த அக்கிரமத்தையும், தவறுகளையும், குற்றங்களையும் ஒழித்து சீர்திருத்துவதில் தைரியமாயிருங்கள். பலஹீனமுள்ளவர்கள் எல்லாவற்றிலும் பிரியங்கொண்டபோதிலும் அவைகளைப்பற்றிய முக்யமான உள் விவரங்களையும் கூடக் கவலை உதவாதென்று தவிர்ப்பார்கள். சிரமமாயிருந்தாலும் அவைகளை எப்படியும் அறியவேண்டும் என்ற ஆவல் இவர்கட்கில்லை. இதெல்லாம் சாந்தமாகா. சாந்தமென்பது மந்தமாயிருத்தல் அல்ல. அது ஒருபோதும் பலஹீனமல்ல.

பலசாலிகளா யிருப்பவர்கள் சாந்தமாயிருப்பது சிரமமென்று உங்களுக்கொருவேளை தோன்றலாம். ஆனால் அப்படியல்ல. உங்கள் பலத்தைத் தவறான வழியில் உபயோகித்துவிடுகிறீர்கள். அது பிழையே. பலசாலிகள்தான் சாந்தமாயிருக்கக்கூடும். பட்டணங்களில் வழிதப்பி அலறும் சிறுகுழந்தைகளைப் போலீஸ்காரன் எவ்விதம் வைத்துக்கொண்டு, அதை சமாதானப்படுத்தி நல்ல கதைகளைச்சொல்லி ஏதாவது தின்பண்டம் வாங்கிக்கொடுத்துப் பிறகு விசா

* இது நியூஸீலண்டு ஸ்வர்ணமாலைப் பத்திரிகையிலிருந்து பூர்ண சந்திரோதயம் பத்திரிகையில் வரையப்பட்டது.

ரித்துப் பெற்றோர்களிடம் ஒப்புவிக்கிறான் உங்களுக்குத் தெரியுமா? எவ்வளவு மெதுவாய் அக்குழந்தை கையைப்பிடித்துச் செல்லுகிறான்! எவ்வளவு பிரியமாய் அதோடு பேசிக்கொண்டு, கண்ணைத் துடைக்கிறான் பார்த்திருக்கிறீர்களா? இதுதான் சாந்தம். ஏனெனில் அவன் தன்பலத்தைத் தனக்குள்ளே அடக்கிவைத்துக்கொண்டு, வேண்டிய அளவுமட்டும் உபயோகிக்கிறான். உங்கள் பலத்தை அறிவோடும் அன்போடும் உபயோகிப்பதே சாந்தம் என்று அறிக.

வழவழவென்று இருப்பவர்களைச் சாந்தர்கள் என்று நினையற்க. அவர்களிடத்தில் உண்மையான சாந்தம் இல்லை. நீங்கள் சாந்தர்களாயிருக்கவேண்டுமானால், பலமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கிருஷ்ணபகவான் பாலர்களிடத்தில் மிகப்பிரியமாயிருந்தார். எப்படி? அவருடைய போறிவையும் பலத்தையும் பாலர்களைப் பயமுறுத்துவதில் உபயோகித்தாரில்லை; அப்பாலர்களுக்கு உபகாரம் செய்வதற்கே தம் பலத்தையும் போறிவையும் உபயோகித்தார்.

ஆஸ்பத்திரிகளில் வியாதியாகக் கிடப்பவர்களுக்கு வைத்தியம் செய்பவர் எவ்வளவு சாந்தமாயிருக்கிறார்! அவர் முரட்டுத்தனமாக ஒன்றும் செய்வதில்லை, கடிந்து ஓர்வார்த்தை பேசுவதும் இல்லை. வியாதியால் நொந்து மெலிந்திருக்கும் சரீரத்தை வெகு சாவதானமாயும் மெதுவாயும் தூக்குகின்றார். அவருடைய அமைதியான நன்மாதிரிகளும் வேலைத்திறமும் வலியை ஆற்றி வியாதியைத் துரத்துகின்றன அல்லவா? அவர் எத்தனையோ புஸ்தகங்களையும், எத்தனையோ சாஸ்திரங்களையும் படித்திருக்கிறார். சாமானியர்களைக் காட்டிலும், வியாதிகளையும், அவைகளின் சிகிச்சை முறைகளையும் நன்கு அறிந்தவர். அதனால்தான் அவ்வளவு நன்மைசெய்ய அவருக்கு இயலுகின்றது. அவருக்கு அறிவின்பலம் இருக்கிறபடியால், அதை உபகாரமானவழியில் செலுத்துகிறார். அவருடைய சாந்தம், அன்பு, தன்னடக்கம், அறிவு இம்மூன்றினாலுமல்லவா ஏற்பட்டது? நீங்களும் சாந்தமாயிருக்கவேண்டியவர்கள்தான். அவ்விதமிருப்பதற்கு, பிறருக்கு உபகாரம் செய்ய ஆவலோடிருத்தல்மட்டும் போதாது. அறிவோடு உபகரிப்பது எப்படி என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும்.

S. V. பழனியப்பன், சாலியபாளையம் துப்பம், கரூர் தாலுகா.

---

## ஸ்திரீகள் பக்கம்

## ஸ்திரீகளின் சுபாவமும் நிலைமையும்.

ஸ்திரீகளின் நிலைமையைக் குறித்து எழுதும் முன் அவர்களது சுபாவத்தைக் கவனிப்பது அவசியமாகும். அவர்களது சுபாவமே தெரியாவிட்டால் சரியான நிலைமை இன்னதென்று நிச்சயிக்க முடியாது. அது சில விஷயங்களில் நல்லதாகவும் இருக்கிறது.

" பேய் கொண்டாலும் கொளலாகும்
பெண் கொள்ளலாகாதே "

என்ற சிவப்பிரகாச சுவாமிகளின் வாக்கே பெண்களது கெட்ட சுபாவத்தைக் காட்டப் போதுமான ஆதாரமாக இருக்கிறது. பெண்களது கொடுமை பேய் கொடுமையினும் கொடியது. ஒருவேளை பேயைக் காட்டிலும் பெண்கள் கொண்டவனை ஆட்டி வைப்பார்கள் போலும்.

வீடுகள்தோறும் நடக்கும் சண்டை சச்சரவுகளுக்குப் பெண்மணிகளே காரணம். புறங்கூறும் வழக்கமும் பொறாமைக் குணமும் அவர்களை விட்டும் நீங்



குமோ? ஊரிலிருப்பவர் நடத்தையை வீட்டினுள் இருப்பவள் கவனிப்பானேன். கவனிப்பினும் பிறரிடம் சொல்லாவிட்டால் வாயாறுதோ? அடுத்த வீட்டுக் காரி நல்ல நகை பெற்றால் தனக்கு வயிறெரிய வந்த கேடென்ன!

பெண்களின் மனம் மிகக்குறுகியது. அறச்செட்டுக் காரிகள், புருஷனை ஏதாவது ஒரு சமயத்தில் இதஞ்சொல்லி தாட்சணியப்பட்ட ஒருவருக்கு சாப்பாடு போடச் சொன்னாலும், அவனைச் சும்மா விடுகிறதில்லை; ஓட்டோடும்படி வைக்கிறார்கள்.

இவர்களது பேராசையையும், வம்பையும், பிடிவாதத்தையும் விரிக்கில் பெருகும். பிறர் என்ன கஷ்டப்பட்டாலும் தன் கை நிறம்பினால் சரி என்பவர்கள். நினைத்த காரியத்தை நிலையில் சாதித்துக்கொள்ளுகிறவர்கள். குடும்பத்தில் வருவாய் குன்றினால் பெண்கள் புருஷனையும் மதியார்கள்.

இதுகாறும் பெண்களது கெட்ட சுபாவத்தைக் குறித்து சிறிது எழுதினோம். இனி அவர்களது நற்சுபாவத்தைக் குறித்துச் சிறிது எழுதலாம்.

ஸ்திரீகளது நற் சுபாவத்தை ஆராய, அது கொஞ்சம் அல்ல. ஞாபகசக்தியில் பெண்களை வெல்லுபவர் யாருமில்லை. அவர்கள் வெகு காலத்திற்கு முன் நடந்ததை இப்பொழுது நடந்ததைப் போல் வெகு ஞாபகத்துடன் தெளிவாகச்சொல்லுவார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் வெவ்வேறு குழந்தைகளைப் பெற்ற பலமாதம் தேதிகளையும் தனித்தனியாகத் தங்கள் தங்கள் கிழப்பருவத்தில் கேட்டபோதிலும் குறிப்பாகச் சொல்லுவார்கள்.

அவர்களது மதிநுட்பம் மிகக் கூரியது. பிறர் நோக்கம் இன்னதென்பதை எளிதிலுணர்ந்து வசிகரிப்பார்கள். மதுரவசனிகளின் கட்டுரைவன்மையும், காந்தமலைகளைக்கும், ஆடவரின் மனத்தை நைபச்செய்யும். அவர்கள் வெகு தந்திரமாகவும், இனிமையாகவும், நயமாகவும் பேசும் ஆற்றலுடையவர்கள். வெவ்வேறு விதமான சாப்பாடு, கறிவகை பட்சணங்களுக்கு சுவை கூட்டுவதில் பெண்களன்றி ஆடவர் துணிந்தால் தோல்வியடைவார்கள்.

பணம் சேர்ப்பதில் பெண்கள் சாமர்த்திய முடையவர்கள் என்பதும் மிகையாகாது. சிறுகச் சிறுக ஆடவர் பணத்தைத் திருடித் திருடிச் சேர்த்தே அவ்வாடவர்களுக்கே அண்டை வீட்டு இரங்கம்மாளிடம் கடன் வாங்கிக்கொடுப்பதுபோல் கொடுத்து, "ஐயோ அவன் புருடனுக்குத் தெரியாதபடி சீக்கிரம் கொடுத்துவிடவேண்டும்" என்று பாசாங்குக் கூறி வட்டிபோட்டு வாங்கிவிடுவார்கள். புருஷனையும் அதிகச் செலவு செய்யக் கண்டால் கண்டனம் செய்கிறார்கள்.

" மனைகாக்க மாண்டமகளிர் "

என்றபடி மனைக்குச் செல்வம் மாட்சிமை யுடைய மகளிராகும். பெண்ணில்லா வீட்டில் இலட்சுமி தங்காள் என்பது உயர்வு நவிர்ச்சியணி அன்று. பெண்க ளில்லா வீடு எப்பொழுதும் பாழே. அவ் வீடுகள் அசுத்தமாகவே இருக்கும். அதிதிகளை ஆதரிக்க வழியிராது. அவ்வீட்டாடவரும் விசனமுடையராகவே இருப்பார். பொழுது விடியுமுன் சமையல் துவக்கும் வேலையின் கவலை அவ்வாடவர்களுக்கு உண்டாய்விடும்.

ஆடவர்களிட மில்லாத குணங்கள் பெண்களிடமும், பெண்களிட மில்லாத குணங்கள் ஆடவரிடமும் அமைத்தே கடவுள் இரு பாலரும் ஒன்றியே குறைவு நிறைவுகளைச் சீர்படுத்திக் கொள்ளும்படி சிருஷ்டித்திருக்கிறார். ஆடவர்கள் விசால மனமுடையவர்கள், அதிகச் செலவுசெய்பவர்கள், வெளிநாத்

நணமாய்ப் பேசுபவர்கள், தைரியசாலிகள், மெய்மறதியோடு கூடியவர்கள்; பெண்களோ, குறுகிய மனமும், மிகச் செட்டும், வஞ்சகமும், பயமும், ஞாபக சக்தியும் இவை போல்வன பிறவும் உடையவர்கள்.

பெண்களே ஆடவர்களைக் காட்டிலும் முக்கியமானவர்களென்பதற்கு பின்னும் அநேக ஆதாரங்களுள. குழந்தைகளுக்குப் புத்தியும், நடத்தையும், சிறு பிராயத்தில் தாய் மூலமாகவே உண்டாகிறது. தாயிடமே குழந்தைகள் 7 வயது வரையில் தங்கி இருக்கிறது. இளமையிற் கற்பனவே ஆழமானவைகளும் ஸ்திரமானவையும் ஆகும். தாய் நல்ல சுபாவமுடைய வளல்லாவிடின் குழந்தைகளின் நடத்தை ஆயுசுவரையில் கெட்டுவிடும். 7 வயதுக்குப் பிறகே படிக்கவைப்பதுமுதல் தகப்பன் வேலை தொடங்குகிறது. சற்று ஸ்திரமான புத்தியைக் குழந்தைகளின் ஏழு வயதுக்குப் பிறகு திருப்புவது கஷ்ட சாத்திய மாகும்.

பெண்களது முக்கியம் தோன்றவே கடவுளும் பாலைத் தாயின் மார்பகத்தே வைத்துள்ளார்.

மேலும் பெண்கள் தங்களது ஆயுசுக்குள் அநேக பருவங்களில் அநேகவித மாக நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒருவருக்கு மனைவி யானவுடன் அவரிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் தெரிந்து கொள்ள வேண்டியவளாயிருக்கிறாள். மிருகத்தைப் போலிருந்தால் அவர்களுடன் ஒத்து நடப்பது கடினமாகும். அப்பொழுது, பிறந்த இடம்விட்டுப் புகுந்தவிடம் போவதால் இடம் வேறும், பழகின மனிதர்களை விட்டுப் புதிய மனிதர்களிடம் பழக வேண்டி யிருப்பதால், பழக்கம் வேறாகவும், ஆகவேண்டி யிருக்கிறது. மாமன் மாமியார் இவர்களிடம் கீழ்ப்படிந்து அவர்களைத் தகப்பன், தாய்போல் பாவிக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இத்துடன், குழந்தை பிறந்தவுடன் தாயார் வேலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகளின் தேகசவுக்கியத்தைப் பாது காத்து, அறிவு, நடத்தை முதலியவைகளைக் கற்பிக்க வேண்டியவர்களாக இருக் கிறார்கள்.

குழந்தைக்கு மணம் முடிந்தவுடன் மாமி வேலையும் சேர்ந்து விடுகிறது. அந்தோ! பெண்கள் குறைந்த அறிவு உடையவர்களாக இருப்பின் எப்படி மருமகளை மகளைப்போல் பாதுகாப்பார்கள்.

இத்தகைய வேலைகளின் மாறுதல்களும், இடம்மாறுதல்களும், பழக்க மாறுதல்களும், ஸ்திரீகளுக் கன்றி ஆடவர்களுக்கு அமைந்து கஷ்டப்படுத்துவ தில்லை. ஆகையால் ஸ்திரீகள் மிகவும் நற்சுபாவ முடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தொடரும்.

R. திருவேங்கடம் பிள்ளை, மிராசுதார், இராஜேந்திரம்.

---

## மாதரொழுக்கம்

சகோதரிகளே!

முன் சமது வியாசத்தில் கண ஸ்திரீகளின் தர்மத்தைப்பற்றி விவரித்துக் கூறினோம். தற்பொழுது ஸ்திரீகளின் ஒழுக்கங்களையும் லக்ஷணங்களையும் அவர்கள் அறியவேண்டியவைகளையும்பற்றி சிலது கூறுவோம்.

சிருஷ்டியில் பலவற்றுள், ஆறறிவும் ஆசாலாபமும் புருஷார்த்தமும் பெறத்தகுந்த மானிடஜன்மமும், அந்த ஜன்மத்தில் தர்மார்த்த காமமோக்ஷ



மென்கிற பதங்களால் முறையே அர்த்தத்தினால் தர்மமும் அபேக்ஷையால் மோக்ஷமும் பெற இல்லறமுமே ஏற்ற தானமாய் இருக்கிறது. இத்தகைய மேன்மைபெற்ற இல்லறத்தை அலங்கரிக்க நல்லில்லறக்கிழத்தியும் வேண்டி இருக்கிறது. அத்தகைய மங்கையானவள், நம் ஔவைப்பிராட்டியார் அருளிய அமுதவாக்கைப்போல் கற்பிற்சிறந்தவளாயும் நற்குணமுடையவளாயும், ரூபமுடையவளாயும், நற்சகோதரர்களை உடையவளாயும், டாம்பீகம் இல்லாதவளும், குடித்தனப்பாங்கை அறிந்தவளாயும், இருக்கவேண்டும். அதுவுமல்லாமல் வரவிற்குத் தகுந்த செலவு செய்யவும், தனக்கு ஆண்டவனால் அன்புடன் கொடுக்கப்பட்ட மக்களைப்பெரிதும் நல்வழியில் பயிலுவிக்கவும் கல்வி இன்றியமையாச் சாதனமாய் இருக்கிறது.

ஆனால் சில ஸகோதரிகள் புருஷர்களைப்போலவே தாங்களும் F.A. B.A. L.T. M.B.C., முதலிய பரிக்ஷைகள் பாஸ்செய்து (Degree) கள் வாங்கினால் தான் கௌரவம் என நினைக்கிறார்கள். அந்தோ! இது மிகவும் பரிதாபகரமானது!! ஏனெனில் ஜீவனத்தின் பொருட்டு புருஷர்கள் பாஸ் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். பெண்களோ வென்றால் தகுந்தபடி குடித்தனம் செய்யவும் வேலைசெய்து களைத்துவரும் தன் நாயகனுக்கு தகுந்தபடி பணிவிடைகள் செய்யவும் வீட்டைச் சுத்தமாகவும் ஆரோக்யமாகவும் வைத்துக் கொள்ளவும், மக்களுக்குத் தகுந்த கல்வி கற்பிக்க அறிதலும் போதுமானது.

ஆகையால் இவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய கல்வியும் தெரிந்து கொள்ளவேண்டிய மாதிரிகளுமே வேறுவிதமாய் இருக்கிறது. நல்விதைகளாய் இருந்தபோதிலும் எவ்வாறு நல்ல நிலத்தில் விதைத்தால்தான் செழுமையாய் விளைகிறதோ அதுபோல் கல்வி நன்மையுள்ளதாய் இருந்தபோதிலும் நல்வழியில் அதை உபயோகிப்பதே மேன்மையாகும். குழந்தைகளுக்கு வரும் சில்லரை வியாதிகளைத் தடுக்கவும் தகுந்தபடி ஔஷதங்கள் கொடுக்கவும் பெண்கள் கற்றுக்கொள்ளவேண்டும். மற்றும் வியாதியஸ்தர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யவும் அறிந்திருக்கவேண்டும். இவ்வாறு பயனுள்ள கல்வி கற்றிருந்தால் ஒழிவு நேரங்களில் பொழுதை வீணே போக்காமல் பயன்பெறச்செய்யலாம். நற்கல்வி பயில்வதுமல்லாமல் தங்களின் கடமையையும் நன்கறிய வேண்டும்.

மஹாமதிநுட்பமும் ஸர்வகலையிலும் வல்லவியுமான ஸாகுந்தலையைக் கண்வ மஹாரிஷியானவர் துஷ்யந்தன் மனைக்கனுப்பும் கால் "ஹே ஸாகுந்தலா நீ மஹா புத்திசாலியாய் இருந்தபோதிலும் உன் புருஷன் வீட்டில் நடந்துகொள்ள வேண்டிய விதிகளைப் பிதாவான என்னால் செய்வனே அறிந்துகொள்ள வேண்டியவளாய் இருக்கிறாய். உன் புருஷன் மனையில் அனேகம் வேலையாள்களும் காவற்காரர்களும் இருப்பார்கள். அவர்களை பக்ஷமாகவும் தயவாகவும் நடத்தி நல்ல எஜமானி எனப் பெயர் எடுப்பாயாக. பெரிய ராஜவம்சமாகையால் அநேகம் ஊழியக்காரர்களும்மாமிகளும் இருப்பார்கள். அவர்களிடம் அன்பாகவும் வணக்கமாகவும் நடந்துகொள்வாயாக. பெரிய சக்ரவர்த்தியானதால் அவருக்கு அனேகம் பட்ட மஹிஷிகளும் ஸ்திரீகளும் இருக்கக்கூடும். அவர்களுக்கு நன்மை செய்துகொண்டும் துவேஷமும் அஹங்காரமும் பாராட்டாமலும் அவர்கள்மேல் கோள் புரளிகள் சொல்லாமலும் ஸகோதரிகளைப்போல் நேசிக்க வேண்டும்" என்று பலவாறும் புத்திமதிகள் கூறியதாக ஸாகுந்தலா நாடகத்தில் விரிவாகக் கூறி இருக்கிறது. மஹா உத்தமியான ஸாவித்ரியானவள் விவாகமாய்த் தன் பர்த்தாவீடு செல்லுங் காலையில் அவர்கள் வனவாஸிகளாய் இருந்தமையால் தன் ஆடை யாபரணங்கள் முதலியவைகளைக் கழற்றி மாமனாரி

பூண்டதைக்கண்ட மத்ராதிபன் "ஹே ஸுகுமாரி ஸர்வவஸ்த்ராபரணாலங்க்ருதை யாய் சோபிசையாய் இருக்கும் நீ யாதுகாரணத்தால் மர உரி பூணத்துணிந்தாய் என்று கேட்க; மிகுந்த அறிவுடைய ஸாவித்ரியானவள், "ஐயனே அவர்கள் வனவாஸிகளாய்ச் சுகமற்று மர உரி தரித்திருக்குங் கால் நான் பட்டுவஸ்திரம் தரிப்பது அழகன்று. எவ்வளவு தனிகள் செல்வியாய் இருந்தபோதிலும் கணவன் வீட்டில் எப்படி இருக்கிறார்களோ அப்படித்தான் இருக்கவேண்டும். பெண்களுக்குப் புகுந்த அறமே சிறப்பு ஒழிய பிறந்த அறம் சிறப்பில்லை. எந்த மங்கையானவள் கணவனுக்கிணங்கி நடந்து பெரியோர்கள் அனுக்கிரஹத்துக்குப் பாத்திரையாகிறளோ அவளே இருகுலத்தையும் சிறப்பிப்பவளாவாள்." என்று ஸாவித்ரி கூறியதாக புராணத்தில் கூறி இருக்கிறது. தன் கணவன் வீடுசென்ற பின்பும் மிகச் செல்வமாய்வளர்ந்த ஸாவித்ரியானவள் மிக ஒழுங்காய் வீட்டுவேலைகள் செய்து குருடான மாமி மாமனுக்குத் தொண்டுசெய்து பெரியோர்கள் அனுக்ரஹத்தைப்பெற்று தெய்வ ஆராதனை விரதங்கள் செய்து தன் பர்த்தாவின் உயிரை மீட்டுக்கொண்டு வந்தாள் என்றால் அத்தகைய மஹா உத்தமியின் கற்பு அளவிடற் பாலதன்றோ? இன்னும் சரித்திரங்களில் கூறிய அனேகம் உத்தமிகளின் கற்பின் மஹிமையை வாசிக்குங்கால் வியப்பும் அவர்களின் மனோவல்லமையும் ஊக்கமும் தென்னற விளங்குகின்றது. ஆகையால் ஸ்திரீகளாய்ப்பிறந்த நாமெல்லோரும் தெய்வபக்தி குருபக்தி தேசபக்தி பெற்றோர் பெரியோர்களிடத்து பக்திகளிற் சிறந்து விளங்கி மேன்மையடைய ஸர்வேசுவரன் அருள்புரிவாராக.

ஓர் ஸஹோதரி.

---

## கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

"காரியேஷு மந்த்ரீ" யோசனையிலோ ;

ஓர் அமைச்சன் அரசனருகிலிருந்து, இராச்சியம் நிலைத்தும் செழித்தும் இருக்கவும் மன்னனுக்குப் புகழும் வெற்றியும் உண்டாகத்தக்க காரியங்களை யோசித்து இயற்றுவதற்கு இறைவனிடம் சம்பாஷித்து, மன்னனது மயகத்தை யெப்படிக் களைவனோ, அத்தன்மையாக கற்புடையபெண் தன் கணவனுக்கேதாவது துன்பம், தயாம், கெடுதி, பாபம், அபவாதம், முதலியவை யேற்படக் கண்டால், அவ்வச்சமயத்திற் கேற்றபடி யோசித்து, மஹாளன் மனத்திற்கு உற்சாக முண்டாக்கிக்கொண்டும், அறிவிலியாயின், ஏற்றபடி அறிவுறுத்திக்கொண்டும் இருப்பள்.

இதற்கு உதாரணமாக ஓர் இதிகாசம். அதாவது:—

தொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்றவ மாறறுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே.

என்னும் வாக்கியத்தைத் தனக்குரைத்ததாக எண்ணி ஒழுகும் மமதாதேவியென்னும் மாது, தன் கணவனுகிய தூளிதாசரிஷ்டப்படியிருந்து, மாமியின் வார்த்தையாலும், அக்பர் பாதுஷாவின் அழைப்பினாலும், பாலும் நீரும்போலுமிருந்த இருவரும் பிரிக்கப்பட்டுத் துளிதாசர் பாதுஷாவையும், மமதாதேவி தன்தாய்வீட்டையு மடைந்திருக்கையில், சிலநாட்கழிந்து துளிதாசர் பாது



ஷாவைநீங்கி மனையையாடி மமதா தேவியைத்தேடி காணுமல்வாடி, பெருமழை பொழிவதையுங் கவனியாது, இடிமின்னலுடன் இருளாயிருக்கு மவ்விரவில் அச்சமின்றி ஆசையாலுழன்று மாமனார்வீடடைந்து மதில்கள் மூடப்பட்டிருப்பதற்கிடைந்து, மனையாள்மேற் காதலாகித் தவித்து பலவாருய்க் கூவிச் சுற்றிச் சுற்றிப் பார்க்கையில், மின்னலின்ஒளியால், மாடியின் சாளரம்முதல் பூமிவரையில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்த பாம்பு, பழுதையைப்போற் றோன்ற "காமாதுராணும் நபயம் நலஜ்ஜா" என்றபடி அதைப்பற்றி யேறிசென்று, சதியை யழைக்கத் தூக்கநீங்கிய மனைவி மணாளனைக் கண்டாச்சரியமுற்று பணிந்தெழுந்து, சுவாமி! எங்கிருந்து வருகின்றீர்? எவ்வழியாய் இம்மாளிகையை யடைந்தீரெனப் பணிவாய்ப் பகரும்போது, தாசர் தான்வந்த வழியைக் காட்ட, அதுகண்டு பாம்பெனப் பயந்து திகைத்து, ஆஹா! என்மீ தெவ்வளவு பற்றிருந்தால் இக்கட்செவி இவருக்குக் கயிற்றைப்போற் றோன்றியிருக்கும், ஐயையோ! அனியாயமாய்ப் இப்புன்புலால் யாக்கைமே லிச்சையூன்றி அளவு கடந்த பேரின்பத்தை அவமதிக்கிறரோ; ஐயோ! தான் கற்ற வேதாகமங்களெல்லாம் இப்பாவியின் முன்னிலையில் தன்மனத்திற் றங்காமற்றவிக்கின்றதே! இதனு லனேக ஜன்மமெடுத்து நமது பதி துன்பமடைய நேரிடுமே! மானுடப்பிறவியோ அரியதே! இதுபோனால் இனி யிப்பிறவி வாய்க்குமோ! வேறு எச்சென்மம் வரினும் ஆன்மஞானம் சித்திக்குமா! சித்தியாதே! ஐயோ தெய்வமே! என் பதிக்கு இத்தகைய கதியும் வாய்க்குமோ; எனப்பலவாருய்ச் சிந்தித்து, முடிவில் சுவாமி? இப்பாவியேனது ஆக்கையிற் சுகமிருப்பதாக வெண்ணியன்றோ ஆலவத்தைக் கயிறெனமதிக்கும்படியாயிற்று. ஆஹா! ஜீவர்கள் ஆசையென்னும் பைசாசத்தாற் பீடிக்கப்பட்டன்றோ, சச்சிதானந்தமயமான பரமாத்மாவை, அனுர்த ஜடதுக்கமயமான உலகமென மதிக்கிறார்கள். தான்யார்? உலகமென்பதியாது? என ஏகாந்தமா யிருந்து சிந்திக்குங்கால், நாமரூபங்களற்று சுயம்பிரகாசமாய் விளங்குமன்றோ? தன்னை மறந்திருப்பதனாலன்றோ, உலகம் பலவாருய்த் தோன்றுகின்றது. "நிஸ்ப்ருஹஸ்ய த்ருணம் ஜகத்" என்றபடி, ஆசையற்றவனுக்கு உலகம் அணுமாத்திரமல்லவோ? விரித்துச் சொல்லவோ, ஓ, ஸ்வாமி! தமது ஆசைக்குக் காரணமாயுள்ள இவ்வுடலைப்பற்றி ஆராயின், இவ்வாக்கை,

"அமேத்யபூர்ணம் க்ருமிஜால ஸங்குலம், ஸ்வபாவதுர்க்கந்தம சௌசமத்ருவம்
கலேபரம் மூத்ரபுரீஷ பாஜனம், ரமந்திமூடா: நரமந்தி பண்டிதா:"

அதாவது:—மலத்தால் நிறைந்ததும், புழுக்கூட்டம் நிறைந்ததும், இயற்கையிலேயே துர்நாற்றமுள்ளதும், சுத்தமில்லாததும், அழியத்தக்கதும், பிணத்திற்கொப்பானதும் மலமூத்திரங்களுக்குப் பாத்திரமாகியதுமான, இவ்வுடலைக் கண்டு, கண்டதேகாட்சி, கொண்டதேகோலம், மரணமேமுத்தி, மறுஜன்மம் நாஸ்தி யென்றுள்ள அவிவேகிகளன்றோ ரமிப்பார்கள். சகல கலைகளையுங்கற்று, மந்திரித்தொழிலிலமர்ந்திருந்து, ஆத்மாராமனென்னும் ஞானியைப் பிதாவாக வுடையவரும், மகா விவேகமுடையவருமாகிய தாங்கள், இதை யொரு லக்ஷியம் செய்யப்போமா? ஆயினும் தாங்க ளப்படி பிரமித்திருக்கமாட்டீர், ஏதோ என் மனதைச் சோதிக்கவெண்ணி யிப்படி நடிக்கின்றீரோ? அல்லது மாயனது மாயை மயக்குகின்றதோ? இவ்வுடலைநம்பி இவ்வளவு விபரீதங்கள் செய்யப்போமா? இது அனந்த ஜன்மங்களுக்கேதுவாகுமன்றோ? "ஜன்மது: கம் ஜராது: கம் ஜாயாது: கம்புன: புன ஸம்ஸாரஸாகரம்து: கம்தஸ்மாத் ஜாக்ரதோ ஜாக்ரத:" என ஆன்றோர் அறைந்திருக்கவில்லையா? தாங்களறியாத கல்வியா? ஓ என் பிராணவல்லபா! இப்பாவியேன்மேலுள்ள பற்றெல்லாம்

ஒருங்குசேர்த்து பரமாத்மாவிடம்வைத்தால் பேரின்பமடையலாமே, அதனை
பிறவித்துன்ப மொழிந்துபோமே! யெனப் பலவாறான பக்திஞானமார்க்கங்
களை விரிவாயெடுத்துரைத்துத் துளசிதாஸரின் மயக்கத்தையழ்க்க; பத்தி
வைராக்யாதி சாதனங்களாற் றுளசிதாசர் ஞானத்தைப் பெற்று பேரின்பக் கட
லில் மூழ்கினர்.

இன்னும், ரூபேச லக்ஷ்மீ

அழகில் மகாலக்ஷ்மியைப்போலும்,

கொழுநன் உண்டபின் தானுணுங் கொள்கையும்
விழி துயின்றபின் துஞ்சலு மென்றுயில்
எழுதன் முன்னம் எழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே.

என்னும் முதுமொழியை யனுசரித்தும், அகத்தை யலங்கரித்து, தனக்கேற்
பட்ட தூய்மையுடன், லலாடத்தில் திலத குங்குமங்களில் ஏதாவதொன்றிட்டு
விலக்ஷணமுகத்துட னிருத்தல் ஆகும்.

" க்ஷமயா தரித்ரீ."

பிராணிகளால் எவ்வளவு கியாயாங்கியாயங்கள், துஷ்கிருத்தியங்க ளேற்பட்டா
லும் அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு அப்பிராணிகளைச் சுமக்கின்ற
பூமியைப்போல, பதிவிரதை கணவனாலாவது, மக்களாலாவது, மற்றவரா
லாவது அறியாமையாற் செய்யப்படுங் கொடுமைகளைத்தான் பொறுத்துக்
கொள்ளவேண்டும். இதை விளக்கச் சுருக்கமாக ஒருதாரணம் கூறுவாம். அதா
வது:—27–மக்களைப்பெற்று இன்னலின்றி இறையைத் தியானிக்கும் குசேல
ரது பத்னியாகிய சுசீலையென்னும் பெண்மணி தன்பதியினால் தேடித்தரப்பட்ட
அரிசியைப் பாகஞ்செய்து அதிதிக்கும், அப்தருக்கும் பங்கிட்டு மக்களுக்கு
வார்க்குங்கால் அம்மக்கள் ஒருநாளாயினும் வயிறாரக் கூழருந்தியதில்லையாதலால்,
கூழ்வெறியும் பசியும், அதிகரித்தவர்களாகி,

ஒருமகவுக்கு அளித்திடும்போது ஒருமகவு கைநீட்டும் முந்திமேல் வீழ்ந்து
இருமகவுங் கைநீட்டும் மும்மகவும் கைநீட்டும் என்செய்வாளால்
பொருமி ஒருமகவழுங் கண்பிசைந்தழும் மற்றொருமகவு புரண்டுவீழாப்
பெருநிலத்திற் கிடந்தழும் மற்றொருமகவு மெங்ஙனம் சகிப்பாள் பெரிதும்பாவம்

இதுமாத்திரமன்று, இன்னும்

அந்தோ வென்வயிற்றெழுந்த பசியடங்கிற்றில்லையென வழுமால் ஒருசேய்
சிந்தாதகஞ்சி வார்க்கிலையெனக்கு அன்னாய் எனப் பொய்செப்பும் ஒருசேய்
மூந்து ஆர்வத்து ஒருசேய் மிசையப்புகும்போதினி லொருசேய் முடுகியீர்ப்ப
நந்தாமற்று அச்சேயுங் எதிரீர்ப்பச் சிந்துதற்கு நயக்கும் ஒருசேய்.

இவ்வாறு தமது பசிக்கொடுமையாற் சகிக்கமுடியாமற்செய்யும் அம்மக்களின்
செயல்கட்கு மனங்கோணாது, ஐயோ என்னசெய்வது, இக்கொற்ற வறுமைத்தீ
நம்மைச்சூழ ஏதுதீவினை விளைத்தோமோ எனத்துயரடைந்திருக்கும்போது,
அம்மக்கள், வெளியிற்சென்று திரிந்து,

மேறுமனைச் சிறான் அயின்ற பழுணங்கண்டோடிவந்து விழிநீர் வாரச்
சிறுதலிலாத அன்னைமுக நோக்கி இன்னான் இன்னதின்றான் என்வாய்
ஊறுவதால் இப்போதே செய்தளித்தியென உடுத்த உடை தொட்டீர்க்கும்
தேறுதல் இல்மகவையெடுத்து மார்பிடையணைத்துச் சிந்தை நோவாள்.



அன்பர்காள்! உலகத்தில் சாமான்யருக்கும் இத்தகைய பொறுமை யேற்
படுமோ? சாமான்ய ஸ்திரீகளாயின், இத்துன்பங்கட்குச் சகியாராகி, கணவ
னைக்கண்டோ, காணுமலோ, தாபங்கொள்ளலும், தூஷித்தலும், ஏற்படுமன்றோ?
சுசீலாவோ, இவ்வளவு அவஸ்தையிலும், தன்கஷ்டங்களைத் திடமொன்று
தெரிவிக்கவில்லையென்றால் அன்னாது பொறுமையை என்னவென்றியம்ப
லாம்? தான் உணவும் இன்றி பன்னாளாகப்பட்டினியிருந்து, மக்களின் துன்
பத்தைப் பார்க்கச் சகியாதவளாய், இது கணவனிடத்திற் கட்டுரைத்தாற்றான்
தீரும், இன்றேல் மக்கள் மடிவதே நேரும் என்றுன்னி, சின்னாட்களா
யெதிர்நோக்கி ஓர்நாளில் அன்பும், அடக்கமும், அச்சமும் தன்னைச்சூழ, கணவ
னடிபணிந்து கழன்ற மொழிகளை மென்மென்றுரைக்குதும், பக்திவினயங்
களாலலங்கரிக்கப் பெற்றுள்ள, சுசீலாவின் அச்சமயத்து மொழிகளை அன்னார்
சரித்திரத்தைக் கண்ணுற்ற புண்ணியரே யறிவர்.

விஷயம் இவ்விதமாக ஒன்றைப்பற்றி யொன்றுவிரியும் அதனாற் சஞ்சி
கையு மடங்கொடாதென்றஞ்சி மேல்விஷயத்தை ஒருவாறு சுருக்கி முடிக்
கின்றனன்.

" போஜ்யேஷு மாதா "

மக்களின் தன்மையயறிந்து அன்னமிடத்தக்கவள் அன்னையேயாகும். இத
னாலேயே தாயற்ற மக்களுக்குத் தக்க வுணவு கிடைப்பதரிது என்பதை விளக்க
'தாயொடறுசுவைபோம்' என்னும் முதுமொழியு மேற்பட்டது. தாய்க்குப்
பின் தாரம் என்றபடி உணவை ஊட்டும் திறமையில் மனைவியே பெற்ற
அன்னையைப் போன்றவளெனவும்.

" சயனேது வேஸ்யா "

பள்ளியறையில் விலைமாதைப்போன்ற நடிப்புடனிருத்தல், ஆகிய இவ்வாறுவித
குணமும் பொருந்திய மடந்தையைக் குலத்திற்குகந்த பத்தினியெனச் சாத்திரங்
கள் சாற்றுகின்றன. ஒருவருடைய ஸ்திரீ இக்குணங்களை யனுசரித தொழு
கத் தலைப்பட்டால் அன்னார் மகிமை மிகவுன்னதமானதாகும். விரகங்கொண்ட
வேடன் தமயந்தியாலெரிந்ததும், தீயாறு சந்திரமதியால் நீராறியதும், கள்
வர்கள் கண்ணகியாலசைவற்றுநின்றதும், வியக்கத்தக்க காரியங்களன்றோ?
இன்னும், மரித்த மணாளனை உயிர்ப்பித்த சாவித்திரியின் கற்பை யென்னென்
றுரைக்குதும்! ஆஹா! கற்பரசிகட்குக் கைகூடாத காரியமும் ஒன்றுண்டோ?
தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

எனப்பகர்ந்தனர் பலவாறென்? திரிமூர்த்திகளும் அனசூயா தேவியின்
மகிமையால் குழவிகளாயினரெனின், கற்பின் பிரபாவத்தை யெவ்வா
றென்று வரையறுத்துரைக்க முடியும்? அசாத்தியம்; இவ்விஷயத்தைப் புரா
ணேதிகாசங்களிற் கண்டறிந்த அன்பர் பலர் திரிமூர்த்திகளின்மேல் குற்றஞ்
சாற்றிக் கும்பிடத் தெய்வமின்றி குருட்டு வழியாய் மதப் பிரஷ்டர்களாவது
பேதைமையாகும்; ஐயறிவும் கூடியுள்ள நரனுடை ஜன்மத்தை யடைந்த ஜீவர்கள்
பல்வேறு தொழில்களால் பல்வேறு வேற்றுமைகளை யடைந்திருப்பதோடு தத்

* அந்தோ! இது நமது பிள்ளைகளுக்கு நம் மதக்கல்வியைப் போதிக்காத
குற்றத்தால் நேர்வதேயாகும். அறிவுடையோர் இக்குற்றத்தைச் சீக்கிரம்
நீக்க முயல்வார்கள். பத்திராசிரியர்.

தம், தர்மகர்மங்களைக் குன்றா முயற்சியா யனுஷ்டித்தாலன்றி முக்தி யெளிதன்று, என்று ஏற்படுத்திய ஈசன், அவ்வேற்பாட்டையறிவுறுத்தும் பொருட்டு திரிமூர்த்தி ஸ்வரூபமாகவும், பல அவதாரங்களைக் கொண்டும், அனுஷ்டித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு தர்மத்தின் உயர்வையும் அப்போதைக்கப்போது விளக்கிக்கொண்டிருக்கிறார். பக்தியே மேன்மையென்பதைத் திருஷ்டாந்தப் படுத்தும் பொருட்டு, அப்பக்தி யோகத்தாராகிய மகான்களுக்கு பல பல விதமான காரணங்களை முன்னிட்டு ஊழியமும் செய்யத் தலைப்படுகிறார். இப்படி ஒவ்வொரு தர்மத்தினு மிவ்விதமே. பகவத்கீதையில் உள்ள கருத்தும் அதற்கேற்றபடி பக்தவிஜயத்திலும், பாகவதத்திலும் உள்ள சரிதைகளையும் கண்ணுறில் தெளிவாய் விளங்கும், அத்தகைய எம்பெருமான் கற்பின் மகிமையை அளவிட முடியாதென்பதை அனசூயாதேவியின் மூலமாய் உலகத்திற்கு விளக்கிக் காட்டினர். மிற்க, ஸ்திரீகளுக்குக் கல்வி இன்றியமையாதது. கல்வி யுண்டானால் சாஸ்திர ஆராய்ச்சிசெய்யவும், அதனால் புத்திக் கூர்மையும், தீர்க்க யோசனையும், உண்டாகி யுக்தா யுக்தங்களைச் செவ்வனே அறிந்து நமக்கென்ன விதி ஆடவர்க்கென்னவிதி எனப்பகுத்தறிந்து ஆடவரெத்தகையரேனும், தத்தம் விதிக்கு வழுவின்றி நடப்பார்கள். முற்காலத்துக் கற்பரசிகளின் தன்மைகளையும் ஊகித்தறிந்தொழுகுவார்கள். அதனால் உளக்களிப்பும், புகழும், தெய்வகடாக்ஷமும், முடிவிற் சாயுச்சியமும் அடைவார்கள். அதுவன்றி உலகமும் தெளிவடைந்து செழிக்கும்; ஆதலால், ஆண்களைவிடப் பெண்களுக்கு சாஸ்திர ஆராய்ச்சிக்குத் தக்க கல்வி அத்தியாவசியமானது என்பதை யுணர்ந்து பெற்றோர் தத்தம் பெண் பிள்ளைகளுக்கும கல்விச் செல்வத்தைச் சீதனமாய்க் கொடுப்பார்களாக. அம்மகளிரும் தமக்குண்டாகும் மேன்மைக்கு ஆதாரம் ஈதெனக் கல்வி கற்பார்களாக. சுபம்.

ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வரூபாய நம:

ஆ. இராமசாமய்யர்.

---

## நித்தியவிதி—ஜபம்.

### பிராணாயாமம்.

நாமிப்பொழுது எழுதத்தொடங்கியது "ஜபம்" என்ற விஷயமாயினும், வைதிககருமங்கள் எல்லாவற்றுக்கும் பிராணாயாமம் அங்கமாய்ச் சிறந்திருக்கின்றதாதலால் பிராணாயாமம் செய்யாமல் எவ்விதமான கருமமும் விதிக்கப்படவில்லை. ஸ்மிருதிபுராண இதிகாசங்களும், கற்பசூத்திரங்களும் கர்மாரம்பத்தில் பிராணாயாமத்தை விதிக்கின்றன. அந்தணர் ஜபிக்கத்தக்க காயத்திரி ஜபத்திலும் முதலிற் பிராணாயாமத்தைச் செய்தபின்னரே காயத்திரியை ஜபிக்கும்படி விதி கூறப்பட்டுள்ளது. பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர ஜபாரம்பத்திலும் அவசியம் பிராணாயாமஞ் செய்யும்படி விதி கூறப்பட்டிருக்கிறது. பல கூறுவதிற் பயனில்லை. ஜபதாபாதி சகல கிரியைகளும் பிராணாயாமமின்றி நடைபெறுமாறில்லை. இத்தகைய பிராணாயாமம் ஆரியர்களுக்குச் சர்வ சிலாக்கியமுடையதென்று கொள்ளப்படுகிறது. ஆதலின் ஜபத்துக்கு முதலங்கமாகச் சிறந்து நிற்கும் அந்தப் பிராணாயாமத்தைச் சிறிது கூறியபின் மேலே செல்வாம்.

"பிராணாயாமம்" என்றால் பிராணவாயுவை உள்ளடக்குதல் என்பது பொருள். அதனால் பிராணாயாமத்தினாலாகும் பயன் பிராணவாயுவை வெளியிற் செல்லாமல் உள்ளடக்குவதே யாம். அவ்வளவேயாயின் இது ஜபத்துக்கு அங்கமாயிருந்து நற்பயன் அளிப்பது எவ்வாறெனின், "வாயுநிற்க மனமுமட-



னிற்கும், நோயகிற்குநினிற்குந் திரும்புமே" என்ற பிரமாணவசனத்தால், பிராணவாயு வடங்கிநிற்கவே மனமும் தன் செயலற்று அடங்கிநிற்கும். மனமடங்கவே புலன்கள் புறவிடயங்களைச்செலா. அப்போது ஒருபொருளையே பற்றி நிற்குமியல்புள்ளமனம் தனக்குப் பற்றுக்கோடில்லாமையால் அக்குறிக்கப்படும் பரம்பொருளைப்பற்றி நிற்கும். இவ்வாறு மனம் பிரமப்பொருளைப்பற்றி நிற்பதையே யோகமென்று பெரியோர் கூறுகின்றனர். ஆதலாற் பிராணாயாமத்திற் பயின்று சித்தியடைந்த பெரியோரே யோகியென்று புகழப்படுகிறார்கள்.

அன்றியும் மனிதர் விரும்பத்தக்கது தீர்க்காயுசு. ஆயுசில்லாதபோது மற்றெவ்வகைப் பயன்களிருந்தும் பயன்படுமாறில்லை. "தானில்லாதபோது மற்றவை யிருந்தாவதென்ன?" என்று வைத்தியநூலில் கூறப்பட்டது. யோகிகளும், வைத்தியர்களும் அதிக சுவாசம் செலவழியாதிருப்பதே ஆயுள் விருத்திக்காதாரமென்று நிச்சயித்துரைத்தனர். உலகத்தார் சாத்திரமானப்படி முந்நூற்றறுபது நாட்களை ஒரு வருஷமாகவும், ஸௌரமானப்படி முன்னூற்றறுபத்தைந்து நாட்களை ஒரு வருஷமென்றுங் கொண்டு, அவ்வருஷம் நூறுகொண்டது ஒரு புருஷாயுசு என்பர். யோகிகள் சூரியோதயாஸ்தமான காலங்களையே நாட்களாகக்கொண்டு ஆயுளைக் கணக்கிடுவதில்லை. இருபத்தோராயிரத் தறுநூறு சுவாசத்தையே ஒருநாளென்று கணக்கிடுவார்கள். அதனால் சுவாசம் எவ்வளவு செலவழியாமற் காப்பாற்றப்படுகின்றதோ அவ்வளவு ஆயுளின் விருத்தியேயாம். அந்தணரியற்றவேண்டிய தினகர்மங்களைச் சரிவரச்செய்யும் அவ்வந்தணனுக்கு நூறுபிராணாயாமங்கள் ஆகும். நூறுபிராணாயாமங்களுக்கும் 20½-விநாடியாம். இதனால் நித்தியகர்மத்தைக் குறைவற நிறைவேற்றும் அந்தணன் மூன்று நாட்களில் ஒருநாளாயுளை விருத்தியாக்கிக் கொள்ளுகிறான். அவ்வாறின்றி யோகத்திலிருந்து பலநாள் சுவாசத்தை அடக்கியிருக்கும் பெரியோர்கள் எத்தனைநாள் யோகத்திலடங்கி யிருக்கிறார்களோ அவ்வளவு நாட்களும் ஆயுசின் அதிகமேயாம். இவ்வாறே பூர்வகாலத்திருந்த தபோதனர்கள் வருஷக்கணக்காக யோகத்தி லடங்கியிருந்து மிருத்தியுவையும் கடந்து அநேக கற்பகாலங்களையும் கண்டதாக நூல்கள் கூறுகின்றன. இத்தகையோகிகள் உடலுடன் கூடியிருக்கும்போதே யிந்திரலோகம், சந்திரலோகம், சூரியலோகம், எமலோகம் முதலிய வுலகங்களுக்குப்போய் மீண்டுவந்ததாகவும் கூறுகின்றன. அணிமாதி அஷ்டசித்திகளையும் பெற்றாரென்றுங் கூறுகின்றன. பரகாயப்பிரவேசம் முதலிய மகிமைகளும் இதனாற் பெற்றார்களாம். ஆதலாற் பிராணாயாமத்தின் மகிமைகள் அளவிடங்காவாம்.

இதனை நமது ஆரியர்களே கண்டுபிடித்துப் பெரும்பயனை அடைந்தார்கள். வேறு எத்தேசத்தாராலும் கண்டறியப்படாத கற்பம்போன்றது. தன்னை முறைதவறாம லநுஷ்டிப்பவனைத் தேவனாகவும், தேவனுக்கு மேலாகவுமாக்கவல்லது. குப்பையுண்மாணிக்கம்போலத் தத்துவக் காட்டினுண் மறைந்து நிற்கும் ஆன்மாவின் இயற்கைத்தன்மையை விளக்கிக்காட்டுந் தகையது. ஆஸ்திக நாஸ்திகர்களால் "உண்டு," "இல்லை" என்று வழக்கிடும்படி எங்கும் நிறைந்து ஒருவராலும் உணரப்படாத பதிப்பொருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல உள்ளுக்குள்ளே உணர்த்தவல்லது. இருந்தவிடத்தில் நின்றே சர்வாண்டங்களிலும் நிகழ்ந்தவை, நிகழ்கின்றவை, நிகழப்போகுமவை எல்லாவற்றையும் கண்டறியத்தக்க நிர்மல மெய்ஞ்ஞானத்தை யளிக்கவல்லது. சர்வகர்ம சித்திகளையும், மந்திர சித்திகளையும் கொடுக்கவல்லது. இத்தகைய பிராணாயாமத்தை ஜபம் செய்யும் முன் அனுஷ்டித்துப் பின்னர் ஜபித்தால் சித்தியுண்டாகும்.

இந்தப் பிராணாயாமம் வைதிகநூல்களில் துவிஜர்களுக்கே விதிக்கப்பட்டது. ஆயினும் ஆகமங்களில் எல்லாரும் அனுஷ்டிக்கலாமென்கிற கட்டளையுண்டு. ஆகமங்களும் வேதத்தைப்போலவே, சர்வஜீவான்மாக்களின் க்ஷேமத்தைக் கருதிச் சர்வேசுவரனால் அளிக்கப்பட்டதாகையால் எல்லாரும் தத்தம் சக்திக்கியன்றமட்டில் அனுஷ்டிக்கலாம். இந்தப் பிராணாயாமம் "சகர்ப்பம்" எனவும் "அகர்ப்பம்" எனவும் இருவகைப்படும். இவற்றுள் சகர்ப்பம் என்பது மந்திர உச்சாரணத்துடன் கூடியது. இம்மந்திரம் எழு வியாகிருதிகளையும் முதலில் வைத்து, நடுவில் காயத்திரி மஹாமந்திரத்தையும் கடையில் காயத்திரி சிரசு என்கிற மந்திரத்தையும் சேர்த்து ஜபிக்கும்படி அந்தணர்களுக்கு விதிக்கப்பட்டது. மற்றைய வருணத்தாருக்குத் தம்வழிபாடுகளைக் குறித்த மந்திரமே மந்திரமாம். அன்றியும் ஆசிரியனுபதேசிக்கும் எந்த மந்திரமுமாம். ஆதலால் இம்மந்திரம் குருமுகத்தால் அடைந்து ஜபிக்கத்தக்கது. இது அகர்ப்பத்தைப் போல அவ்வளவு சிறப்புடையதல்லவாயினும் அகர்ப்பப்பிராணாயாம சித்திக்கு இதுநேரே காரணமாய் நிற்றலால் மிக்க பிரயோசனந் தரத்தக்கதே. இந்தப் பிராணாயாமத்தால் உள்ளிருந்த துர்மலங்கள் சுவாசத்தின்வழியே வெளிப்பட்டுப்போய்விடும். அப்போது இருதயகமலம் பரிசுத்தமாயிருக்கும். அச்சமயம் மந்திரார்த்தமாகிய பரம்பொருளை மனம் தியானிக்க, வாக்குமந்திர அட்சரங்களை யுச்சரிக்கக் காயம் பிராணனைத் தடுத்து நிறுத்தக் கண்கள் நாசி நுனியைநோக்கிநிற்க நேரிடுமாதலால் திரிகரணங்களும் ஒருங்குசேர்ந்து நிற்கும் பாக்கியம் உண்டாகும். திரிகரணங்களும் ஒன்றுபட்டு நிற்பதே பிரமதரிசன மூலமாதலால் அதன் பெருமை யளவிலடங்காது. இப்படிப் பிராணவாயுவைத்தடுத்து முக்கரணங்களையு மொருங்கு சேர்த்துத் தெய்வத்தியானஞ்செய்யும் புண்ணியசீலர்கள் காலாந்தரத்தில் அகர்ப்பப் பிராணாயாமசித்தியைப்பெற்று, எங்குந்நிறைந்துள்ள ஏகபிரம்மத்துடன்கலந்து ஜீவன் முக்தியையும், பின் விதேகமுக்தியையும் பெறுவார்கள். இவ்வாறு சகர்ப்பப்பிராணாயாம முறையை அனுஷ்டித்து ஜகதீசுவரனுடைய திருமேனியைத் தியானஞ்செய்யும் முறைமை ஸ்ரீபாஞ்சராத்திராகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சொரூபதியானத்துடன் கூடியிருத்தலால் இது எல்லாராலும் செய்யக்கூடியது. இனி அகர்ப்பத்தைக் கவனிப்போம்.

அகர்ப்பத்தையே யோகிகளும் யோகநூல்களும் புகழ்ந்துகூறுவது. சகர்ப்பப் பிராணாயாமம் பன்னிரண்டு அல்லது பதினாறு மாத்திரையளவு குறிக்கப்பட்டது. சிலநூல்களில் இருபத்துநான்கு மாத்திரையளவும் கூறப்பட்டது. அகர்ப்பத்துக்கோ எல்லையேயில்லை. ஒருமஹாயுகமளவும் ஒரு பிராணாயாமத்தைச் செய்யலாமென்று நூல்கள் கூறுகின்றன. இதை யனுஷ்டிக்கும் யோகிகளே பலகற்பங்கள்வரைக்கும் அழியாமலிருந்தார்கள் என்று நூல்கள் புகழ்ந்துகூறின. இக்காலத்திலும் மூன்றுநாள் ஐந்துநாள்மட்டும் ஒரேபிராணாயாமஞ் செய்கிற மஹாத்மாக்களைத் தென்னாட்டில் காணலாகும். இதுகொண்டே வெகுகால மனுஷ்டிப்பவர்களு மிருக்கலாமென்று உய்த்துணர்ந்து கொள்ளலாம். இந்தப் பிராணாயாமத்தில் இரேசகம், பூரகம், கும்பகமென்று மூன்று வேற்றுமையுண்டு.

இரேசகம் என்பது உட்சென்ற பிராணவாயுவை மெதுவாக வெளிப்படுத்துவது. பூரகம் என்பது பிராணவாயுவை நாசித்துவாரத்தின்வழியாக உட்செலுத்துவது. கும்பகமென்பது பூரணகும்பத்தில் நீர் நிறைந்து நிற்பதுபோலச் சரீரத்துட் பிராணவாயு நிறைந்து நிற்கும்படிசெய்வது. உள்ளிருக்கும் வாயுவை வெளியில் ரேசிப்பதினால் உள்ளிருக்கும் அசுத்தம் வெளிப்பட்டுப்போகும். இது சாதாரணம் குவிந்து கவிழ்ந்திருக்கும் இதயதாமரை நிமிர்ந்து மலர்ந்துநிற்கும்



என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன. "இருதயம் தாமரை மொட்டைப்போலக் கீழ்நோக்கிநிற்கும்" என்று வேதம் கூறிற்று. அதற்குக் குவிதலுக்கும் விரிதலுக்கும் தக்கசக்தி ஈசனால் அமைக்கப்பட்டுள்ளது. இரேசகத்தால் விரிதலும், பூரகத்தால் குவிதலுமாம். இதனால் மலம் வெளிப்படுதலும் இரத்தம் சுத்தமாதலுமுண்டாம். கும்பகத்தினால் சுத்தமான இரத்தம் மூளையின் ஸ்தானத்தையடையும். அந்த மூளையே பிரமஸ்தானம் அறிவுஸ்தானம் என்று கூறப்படும். அதில் சுத்த இரத்தம் பிரவேசித்தால் அந்த ஸ்தானம் சுத்தமாய்ப் பிரகாசிக்கும். அப்பொழுது அதைச் சார்ந்திருக்கும் மனமும் பரிசுத்தமாய் விளங்கும். புத்தி களங்கமற்றுநிற்கும். உள்மலமொழியும் ஆயுள் விருத்தியாகும். சரீரம் நிர்மலமாம். புலன்கள் நற்பொருள்களைக் கவரும் வலிபெறும்.

இரேசகபூரகங்களை இரண்டு நாசித்துவாரங்களாலும் மாறிமாறிச் செய்ய வேண்டும். ரேசகபூரகங்களின் அளவுகாலம் எல்லாருக்கும் ஒரேமாதிரியாகவிருக்கும். கும்பகம் அவ்வாறின்று. யோகாப்பியாசியின் சரீர சக்தியைப் பொறுத்தது. அறுபத்துநாலு விநாடிமுதலில் அநேகநாழிகைவரை அல்லது அநேகநாள்வரையும் செய்யக்கூடும். இந்தக் கும்பகமே ஆயுசை விருத்தியாக்குவது. இதனால் மூலாக்கினி மூண்டெரியும். அதனால் சுழுமுனைநாடியின் அடியில் பாம்பின் வடிவாயமர்ந்திருக்கும் குண்டலிசக்தியின்று பிராணவாயுவை அந்நாடியுட்புகாமல் தடுத்துக்கொண்டிருக்கும். மூலாக்கினி மூளுதலால் குண்டலி அவ்விடம்விட்டுப் பெயரும். பெயரவே பிராணவாயு சுழுமுனை நாடியினுட்பிரவேசிக்கும். இந்த நாடியே பிரமரந்திரம் மோட்சமார்க்கமென்று நூல்களாற் புகழ்ந்து கூறப்படுவது. அந்நாடிக்குட்சீவன் பிரவேசித்தால் அச்சீவனுக்கு மரணபயமில்லை. எமன் அவ்விடம் அணுகான். அதுவே அமிர்தமார்க்கமாம். அவ்வழிசென்ற ஜீவன் துவாதசாந்தஸ்தானத்தில் விளங்கும் பரசிவத்தை அடைந்து அமிர்தமயமாய்என்றுமழியாநிலையைப்பெறும். இரேசகபூரகங்களையும் பாங்கமாகக்கொண்ட இந்தக்கும்பகமே பிராணாயாமம் என்பதுமாம். இதுவே யோகசித்தியுமாம். இதனால் சரீரம் அமிர்தமயமாகும். சகலாருவிகரணங்களும் அமிர்தமயமாய் நிர்மலமாய் ஒளிவீசிநிற்கப் பிரமசொரூபம் வெளிப்படும். இதை யோகிகள் அப்பியசித்துச் சித்திபெறவேண்டும். இந்த அகர்ப்பத்தின் விரிவு யோகநூல் வைத்தியநூல்களிலும், புராணஇதிகாச ஸ்மிருதிகளிலும் உபநிஷத்துகளிலும் நன்குவிளக்கப்படும். இந்த யோகசித்தி படைத்தவருக்குச் சகல மந்திரசித்திகளும் உண்டாகும். இவ்வகர்ப்பம் குருவின்றிக் குறிக்கப்படுதலால் எல்லாருக்கும் சாத்தியமாகாது. ஆதலால் சகர்ப்பவிதிப்படி பிராணாயாமம் செய்து மந்திர ஜபம்செய்யவேண்டும். அது செய்யாவிடில் மனம் நிலைபெறாது. களங்கமறாது. அதனால் மந்திரசித்தியாகாது. ஆகையால் சற்குருவின் சரணாரவிந்த சேவைசெய்து பிராணாயாமவிதியை உணர்ந்துகொண்டு அவ்வழிநின்று மந்திரசித்தி செய்துகொள்வதே சன்மார்க்கமாம்.

குறிப்பு.—ஆடிமீ வெளிவந்த ஆனந்தனில் ஓர்வேண்டுகோள் என்று எழுதியிருந்த விஷயத்தைக் கண்ணுற்றோம். வைதிகநெறியை வேப்பங்கனியை யொப்ப வெறுத்தொதுக்கு மிக்காலத்திலும் வைதிகவிதிகளை உள்ளன்போடும் ஆவலுடனும் விரும்பி யெதிர்பார்த்திருக்கும் மெய்யன்பரும் உளர் என்பதை நோக்க எமதுள்ளம் பூரிக்கின்றது. சிந்தையிலானந்தம் கரைகடந்து பொங்குகின்றது. நித்ய மலாபகர்ஷஸ்நாநாதிகள் நித்தியமானதன்று. ஒருகாரணம்பற்றியே செய்யப்படுவனவாதலால் நித்தியஸ்நானத்திற் சேர்க்கப்படாமல் நைமித்திகம் என்றே கொள்ளப்படும். ஆதலின் வேறுபிரித்தே கூறவேண்டும். ஸ்நானம் என்னும் இணைப்புமைபற்றியே நித்தியஸ்நானத்துடன்சேர்த்து முடிக்கப்பட்

டன. அதைப்பற்றியே "வேறிடத்தில்கூற அவகாசமின்மையால்" என்றெழுதப்பட்டது. ஆயினும் மஸாபஹுர்ஷங்களில் ஒன்றாகிய அப்பியங்களஸ்னானம் அதிகவிசேஷமுள்ளதாகையால் மேலே சமயம் வரும்போது அவசியம் கூறப்படும். அதுவும் சீக்கிரம் வரும்.

சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

---

## கற்கோட்டை—நாவல்

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் எங்கேசெல்வது! தன் சகோதரர்களைச் சந்திக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அரியநாயகி அவர்களைச் சந்தித்திருப்பாளென்று நம்பக்கூடவில்லை. ஏனெனில் தானும் அவளும் ஓடிவிட்ட சங்கதி வெளியாய்விட்டதால் அவளையும் ஆட்கள் தேடிச் சென்றிருப்பார்கள், தன்னைப்போலவே அவளும் தப்பித்துக்கொண்டாளென்று எப்படி நினைப்பது. மேலும் தான் இப்போதிருக்கும் மாறுவேடத்தில், யாராவது தன்னைத் தெரிந்துகொள்வது மிக்க கஷ்டமே. ஆகையால் நகரத்தில் சற்று ஆலஸியம் செய்வதில் ஆபத்து நேரிடாதெனத் துணிந்து, தன் சகோதரர்களைச் சந்திக்கவெண்ணி மாரப்பன் காட்டை நோக்கிக் குதிரையை விரைவாய்விட்டார். சற்று நேரத்திற்குள் வெள்ளைக் குடிசையை யடைந்தார். அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. சாவி யொளித்து வைக்கப்பட்டிருக்குமிடம் தனக்குத் தெரியுமாதலால், உடனே யதை யெடுத்து கதவைத்திறந்து உள்ளே சென்றுபார்த்தார். அங்கிருந்த குறிகளால் நெடுநேரமாய் அங்கு ஒருவரும் இருந்திருக்க வில்லையென்று தெரிந்தது. உடனே ஒரு சிறு கடிதம் எழுதி சாவியோடு சேர்த்துக்கட்டி கதவைப் பூட்டிக்கொண்டு சாவியை மறைவிடத்தில் வைத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

குடிசையைத்தாண்டிக் கொஞ்சதூரம் செல்லும்போது ஒரு பையன் பசுக்களை மேய்த்துக்கொண்டு ஒரு மேட்டின்மேல் உட்கார்ந்திருந்தான். பிரபு அவனை நோக்கி,

"சிறுவனே, இங்கு என்னேரமா யிருக்கிறாய்?" என்றார்.

சிறுவன்.—ஏன்! காலத்தாலே இருந்துதான் மாடு மேச்சிகினு இருக்கிறேன்.

பிரபு.—உயரமான இரண்டுபேர் கறுத்த உரோமமுடையோர், குதிரைமேல் இவ்வழியே வந்ததைப் பார்த்தாயா?

சிறு.—ஆ! ஆமா ஆமா. அவங்கொ அதோ அந்த மரத்தண்டெதான் சண்டெ போட்டாங்கோ.

பிரபு திடுக்கிட்டு "என்ன? சண்டையா? யாரோடு விவரமாய்க் கூறு பார்ப்போம்" என்றார்.

அதன்மேல் சிறுவன் முதலில் ஒரு அழகிய மாதும் இரண்டு ஆட்களும் ஊரப்பக்கமாயிருந்து வந்தார்களென்றும், எதிர்பக்க மிருந்து நான்கு சிப்பாய்கள் வந்து அவர்களை யெதிர்த்து சண்டை தொடங்க, அச்சமயம் மேற்குறித்த இரண்டுபேரும் வந்து அம்மாதின் பக்கம் சேர்ந்து போர்வீரரோடு சண்டையிட்டார்களென்றும், முடிவில் போர்வீரர் தோல்வியடைந்து வந்தவழியே செல்ல, ஸ்திரீயும் அவள் ஆட்களும் அந்த இரண்டு பேரும் ஒரு வழியே சென்றார்களென்றும் கூறினான்.

(தொடரும்.)

ஆரணி—குப்புசாமி முதலியார்.



காளயுக்தி வருஷம் ஆவணிமீ—சாலிவாகன 1840— கலியுகாதி 5019

பசலி 1327-28—கொல்லம் 1093-94,

இங்கிலீஷ் 1918-ம் வருஷம் ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ

| ஆவணிமீ | ஆகஸ்டுமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | ச | தச-25-9 | கேட்-21-19 | சித்த 60 | ஆபரணமழித்துச்செய்ய |
| 2 | 18 | ஞா | ஏகா-25-25 | மூல-23-19 | அமி 60 | சரிநாள் |
| 3 | 19 | தி | து-23-18 | பூரா-23-6 | சித் 23 மர | பழைய வீடு சீர்திருத்த |
| 4 | 20 | செ | திர-20-42 | உத்-22-59 | சித்த 6 | பூ முடிக்க |
| 5 | 21 | புத | சது-17-7 | திரு-20-32 | சித் 21 மர | ரிக்வேதிசிராவணம் |
| 6 | 22 | வி | பௌர13-3 | அவி-17-52 | சி 18 மர | யஜுர்வேதி சிராவணம் |
| 7 | 23 | வெ | பிர-7-24 | சதை-14-35 | சித்த 60 | புதுபசுக்களைக்கட்ட |
| 8 | 24 | ச | துதி-1-44<br>திரி-54-4 | பூரட்-10-47 | மர 11 சி | புது அடுப்பு போட |
| 9 | 25 | ஞா | சது-49-40 | உத்-6-46 | அமி 60 | திருவலஞ்சுழி விநாயகர் ரதம் |
| 10 | 26 | தி | பஞ்-43-41 | ரேவ-2-39<br>அசு-56-0 | சித்த 60 | உதயம் 7க்கு கஞ்சுகதாரணம் |
| 11 | 27 | செ | சஷ்-38-1 | பர-56-0 | சித்த 60 | பாகசாலையில் அடுப்புபோட |
| 12 | 28 | புத | சப்-32-47 | கார்-51-51 | அ 52 சித் | கிருத்திகைவிரதம் |
| 13 | 29 | வி | அஷ்-29-13 | ரோக-49-28 | மரண-60 | கிருஷ்ண ஜயந்தி |
| 14 | 30 | வெ | நவ-24-9 | மிரு-47-52 | சித்த 60 | |
| 15 | 31 | ச | தச-21-46 | திரு-47-28 | சித்த 60 | |
| 16 | செப்டம்பர் 1918 ௵ 1 | ஞா | ஏகா-20-3 | புன-48-7 | சித் 60 | |
| 17 | 2 | தி | து-19-45 | பூச-50-8 | சித் 60 | |
| 18 | 3 | செ | திர-20-29 | ஆயி-53-54 | சித்த 60 | |
| 19 | 4 | புத | சது-23-20 | மக-57-40 | சித் 54 அ | |
| 20 | 5 | வி | அமா-25-52 | பூரம்-60-0 | சித்த 60 | |
| 21 | 6 | வெ | பிர-30-21 | பூரம்-3-19 | சித்த 60 | |
| 22 | 7 | ச | துதி-34-50 | உத்தி-8-48 | மரண 60 | |
| 23 | 8 | ஞா | திரு 30-45 | அஸ்த-15-8 | அமி 15 சி | சாமோபாகர்மம் |
| 24 | 9 | தி | சது-44-42 | சித்-21-25 | சி 21 அமி | விநாயக சதுர்த்தி |
| 25 | 10 | செ | பஞ்-49-2 | சுவா-27-30 | சித் 27 மர | வித்தியாப்பியாசம்செய்ய |
| 26 | 11 | புத | சஷ்-52-37 | விசா-32-41 | சித்த 60 | சஷ்டிவிரதம் |
| 27 | 12 | வி | சப்-54-54 | அனு-36-54 | சித்த 60 | நாமகரணம் செய்ய |
| 28 | 13 | வெ | அஷ்-56-1 | கேட்-40-1 | மர 40 அ | சரிநாள் |
| 29 | 14 | ச | நவ-56-56 | மூல-4-53 | சித்த 60 | மதுரை பிட்டுத் திருவிழா, |
| 30 | 15 | ஞா | தச-54-27 | பூரா-42-23 | சித் 42 அ | திருவையாறு தெப்பம் |
| 31 | 16 | தி | ஏகா-51-53 | உத்தி-41-56 | மர 42 சி | ஸ்ரீரங்க பவித்ரோத்ஸவாரம்பம் |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 10-சு-வ-பு<br>18-சி-சனி | | சுக் சனி |
| | 20-சிம்-பு<br>22-சிம்-சுக் | | ரவி புத |
| | ராகு | செ | |

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்தி௵ புரட்டாசி௴—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,

பசலி 1327-28—கோல்லம் 1093-94,

இங்கிலீஷ் 1918ம்௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴

| புரட்டாசி௴ | செப்டம்பர்௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | செ | து-48-16 | திரு-40-14 | சித்த 60 | பும்ஸவனம் |
| 2 | 18 | புத | திர-43-54 | அவி-37-48 | மா 38 சி | கிருகப்பிரவேசம் |
| 3 | 19 | வி | சது-38-41 | சதை-34-37 | ம 35 சித் | மந்திரம் ஜெபிக்க |
| 4 | 20 | வெ | ○பௌர்33-10 | பூரட்-30-57 | சித்த 60 | கிரமணி உத்ஸவம் |
| 5 | 21 | ச | பிர-27-18 | உத்-26-37 | சித் 27 ம | மாளய ஆரம்பம் |
| 6 | 22 | ஞா | துதி-21-13 | ரேவ-22-50 | அ 23 சித் | வித்தியாப்பியாசம் |
| 7 | 23 | தி | திரு-15-16 | அசு-18-48 | சித்த 60 | தனுசு கேசகண்டனம் |
| 8 | 24 | செ | சது-9-40 | பர-16-51 | சித்த 60 | கிருத்திகை விரதம் |
| 9 | 25 | புத | பஞ்-4-23<br>சஷ்-55-27 | கார்-11-44 | அமி 12 சி | தனியமான |
| 10 | 26 | வி | சப-56-5 | ரோக-9-52 | மரண 60 | |
| 11 | 27 | வெ | அஷ்-53-23 | மிரு-7-23 | சித்த 60 | |
| 12 | 28 | ச | நவ-51-43 | திரு-3-37 | சித்த 60 | |
| 13 | 29 | ஞா | தச-52-16 | புன-6-59 | சித்த 60 | |
| 14 | 30 | தி | ஏகா-53-42 | பூச-8-18 | சித்த 60 | |
| 15 | 1 | செ | து-55-33 | ஆயி-11-29 | சித்த 60 | |
| 16 | 2 | புத | திர-57-59 | மக-15-34 | சி 16 அமி | |
| 17 | 3 | வி | சது-60-0 | பூர-15-34 | சி 16 மா | |
| 18 | 4 | வெ | சது-2-5 | உத்தி-20-36 | சித் 21 அ | மாளய அமாவாசை |
| 19 | 5 | ச | ●அமா-6-53 | அஸ்த-26-29 | மரண 60 | ஆலய நவராத்திரி |
| 20 | 6 | ஞா | பிர-12-1 | சித்-39-11 | சித்த 60 | |
| 21 | 7 | தி | துதி-16-59 | சுவா-45-14 | அ 45 மா | |
| 22 | 8 | செ | திரு-21-23 | விசா-50-42 | மா 51 சி | |
| 23 | 9 | புத | சது-24-59 | அனு-55-4 | சித்த 60 | மழை 7-க்குள் |
| 24 | 10 | வி | பஞ் 28-8 | கேட்-58-51 | சித்த 60 | திருப்பதி கருடசேர்வை |
| 25 | 11 | வெ | சஷ்-28-49 | மூல 60-0 | அமிர் 60 | |
| 26 | 12 | ச | சப-28-39 | மூல-1-7 | சித்த 60 | சஷ்டிவிரதம் |
| 27 | 13 | ஞா | அஷ்-27-23 | பூரா-1-33 | சித் 2 அ | 1-க்குள் மழை |
| 28 | 14 | தி | நவ-24-20 | உத்தி-1-19<br>திரு-58-32 | அமி 1 சி | மருந்து சாப்பிட |
| 29 | 15 | செ | தச-20-35 | அவி-57-37 | சித்த 60 | திருப்பதி மகாரதம்<br>தாமான் |
| 30 | 16 | புத | ஏகா-17-45 | சத-55-14 | சி 55 அ | சங்குஸ்தாபனம் |

(செப்டம்பர்௴ column, rows 15–30: அக்டோபர் 1918)

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 4-வி-செ<br>13-கட-பு<br>16-கட-சு<br>0-அ-பு | | |
| | | | சுக்<br>ச-பு |
| | ராகு | செ | ரவி |

PRINTED BY T. R. RAMA IYAR AND CO., MADRAS.

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

45

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி 4 | காளயுக்தி௵ புரட்டாசி௴ க௳ 1918ம்௵ செப்டம்பர்௴ 17௳ | பகுதி 3

## கடவுள் வணக்கம்

பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
பக்ஷமோ வெனது பக்ஷம்
பார்த்தவிட மெங்கணுங் கோத்ததிலை குலையாத
பரமவெளி யாக வொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சோரம லாராக நான்
சிறுவீடு கட்டியதி லடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள் போல
நட்டணைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலைய மாக வுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்த மனதைக்
கட்டவறி யாமலே வாடினே னெப்போது
கருணைக் குறித் தாவனோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே.

---

நில்லாத வாக்கைநிலை யென்றெணவே கண்டாய்
நேயவருள் மெய்யன்றோ நிலையமதா நிற்கக்
கல்லாதே யென்படித்தாய் கற்றதெல்லாம் மூடம்
கற்றதெல்லா மூடமென்றே கண்டனையு மன்று
சொல்லாலே பயனில்லை சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல் தொட்டதுபற் றுதல்
எல்லாரு மறிந்திடவே வாய்ப்பறைகொண் டடித்தே
இராப்பகலில் லாவிடமே யெமக்கிடமென் றறிந்தே.

# ஆனந்தபோதினி

காளயுக்திஹு புரட்டாசிமீ 1௳


## நான்

(81-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறியபடி ஒரேவிதமாயிருந்தும் தனித்தனி ஒவ்வொரு தேகத்தில் இருக்கும் இந்த நான்'கள் யார்? எல்லாம் ஒரேவிதமாயிருப்பதால் இவைகளெல்லாம் ஒரே வழியில் தான் இருந்து வந்திருக்கவேண்டும். அவ்வாறேதான் வந்திருக்கின்றன. இவை யாவும் சச்சிதானந்தப் பரம்பொருளாகிய பரமாத்மா அல்லது பரப்பிரம்மத்தின் சாயல்களேயாகும்.

உலகில் பல ஏரிகள், குட்டைகள், குளங்கள், குடங்கள் இருக்கின்றன. இவற்றில் ஜலம் இருக்கும்போது சூரியன் இவை யாவற்றிலும் பிரதிபலிக்கிறது. இதனால் அந்த ஒரே ஆதித்தன் பல ஆதித்தர்களாய் நமக்குப் புலப்படுகிறது. உண்மையில் இப் பிரதி பலிதங்களனைத்தும் அந்த ஒரு சூரியனே. இதைப்போலவே நமது தேகமே குடம், இதில் உள்ளிருக்கும் அந்தக்கரணமே ஜலம். அந்தக்கரணம் யாவர்க்கும் ஒவ்வொன்றளிக்கப்பட்டிருக்கிறது. இது சத்துவ குணத்தில் உற்பத்தியான தாகையால் சொச்சபதார்த்தம், அதாவது கண்ணாடி, ஜலம் இவற்றைப்போல் பிரதிபலித யோக்கியமானது. இவற்றில் பரமாத்மா பிரதிபலித்திருக்கிறது. உப்பும் நீரும் ஒரு இனமாயிருப்பதால் ஒன்றிலொன்று கலந்து விடுகிறது. அதுபோலவே ஆன்மாவும், பரமான்மாவைப்போல் சச்சிதானந்த இலக்ஷணமுடையதாகலால் பரமான்மாவில் ஐக்கியமாய் விடற்கு யோக்கியதை யுடையதாகிறது.

> அப்பொருளு மான்மாவும் ஆரணநூல் சொன்னபடி
> தப்பில்லாச் சித்தொன்றும் ஜாதியினு—லெப்படியும்
> தேறித் றவிதஞ் சிவாகமமே சொல்லு நிட்டை
> யாருமிடத் தத்துவித மாம்.

இதன்பொருள்:—ஆன்மாவும் பரமான்மாவும் இரண்டும் சித்து. ஆதலால் தவறுதலின்றி ஒரே ஜாதியாம்; அதனால் அந்



ஞான நிலைமையில் இரண்டு பொருள்களாய்த்தோன்றியும் ஆன்மா தன்னையறிந்து தலைவனிற் சேர்ந்தபோது இரண்டும் பிரிக்கப்படாத ஒன்றாகவே ஆய்விடும்.

> இதன்றி:—"சிவனென்னச் சிவனைவேறிலைச்
> சிவனார் சிவனை யறிந்திலர்
> சிவனார் சிவனை யறிந்தபின்
> சிவனார் சிவனாயிட் டிருப்பரே"

"தன்னை யறிந்தவர் தம்மைத் தானாகச் செய்தருளும் சமர்த்தை * * "

(தாயுமானவர்.)

இவ்வாறுள்ள தன் உண்மையான நிலைமையை ஆன்மா மறந்துவிட்டிருக்கிறது. எப்படியெனில் ஒரு குடம் ஜலத்திலுள்ள பிரதிபலிதசூரியன், தன்மேலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஏக சூரியனுடைய சாயையென்பதையும், அதைவிட்டுத் தனக்குவேறு இருப்பில்லை யென்பதையுமுணர்ந்து தான் அதுவாக வெண்ணியிருப்பதைவிட்டு, தன் உண்மைநிலையைமறந்து தான் வேறாக வெண்ணிக்கொண்டு ஜலத்தின் அசைவால் தனக்குண்டாகும் அசைவை உண்மையாகவே தான் குதித்தாடுவதாய் எண்ணிக் கொண்டால் எப்படியோ அதுபோலவே,

ஆன்மா தன் நிலையைமறந்து, சாட்சிமாத்திரமா யிருப்பதைவிட்டு, மனதில் பிரவேசித்து ஜீவபாவத்தை யடைந்து, தான் வேறு பரமான்மாவேறென்று தன்னை வேறுபிரித்துக்கொண்டு, தனக்கு தேகாதிகரணங்களுண்டென்றும், அவைகளைக்கொண்டு கருமங்களைச்செய்வதும் பாபபுண்ணியங்களை யனுபவிப்பதும் தன் இயற்கைக்குணமென்றும், இல்லாத சுமையைத்தானே தன்மேல் ஏற்றிக்கொண்டது. "நான்" என்று தன்னை வேறு பிரித்துக் கொண்ட மயக்கமே மற்றவெல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகும்.

> "நானென்னு மோகக்கதை யெவர்க்கும் வந்து
> நலிந்தவுடன் ஜகமாயை நானு வாகித்
> தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
> சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்"

* * * * *

* * * *

என்று தாயுமான சுவாமிகள் அருளியிருக்கிறார். ஆன்மா மாயா சம்பந்தத்தால் தன்னை வேறாய் எண்ணிக்கொண்டு அவஸ்தைப்படு

வதே யன்றி உண்மையில் அப்படிப் பிரிந்திருக்க வழியேயில்லை. "நீக்கமற மயிர்முனைக்கு மிடமற மன்றிலெங்கும் நிறைந்து நிற்கும்" பரம்பொருளைவிட்டுப் பிரிந்திருக்க வேறு இடமேது? தனக்கன்னியமாய் வேறொன்றுமில்லாததாய்த் தானே யாவுமாய், ஏகமாய், எங்குமாய் இருக்கும் வஸ்துவிற்கு வேறாய் ஒன்றுமே யில்லையெனின், பிரிவினைக்கிடமேது? பிரிவதற்குத் தனக்கன்னியமான வஸ்து ஏதாவது சேர்ந்திருந்தாலன்றோ பிறகு அது பிரியப் போகிறது.

அப்படியிருக்க சீவன்கள் எப்படி வெவ்வாறாய்த் தோன்றின, தோன்றினும் உண்மையில் பிரியவில்லை யென்ப தெப்படியெனின்,

ஆகாயம் எங்கும் வியாபகமா யிருக்கிறது. இருந்தும் ஒரு குடத்திலிருக்கும் ஆகாயம் வேறாய்க் கருதப்பட்டு கடாகாயம் என்று கூறப்படுகிறது. குடத்திலுள்ள ஆகாயத்தை அக்குடம் மகாகாயத்திலிருந்து வேறாய்ப் பிரித்துக்காட்டுகிறது. ஆயினும் உண்மையில் அதுமகா காயத்திலேயே யிருக்கிறது. குடத்திற்கும் மகாகாயத்தைவிட்டு வேறு இருப்பில்லை. மகாகாயம் ஒரே நிலையில்தான் இருக்கிறது. குடத்தை யுடைத்துவிட்டால் கடாகாயம் மகாகாயத்தில் ஒன்றாய்க் கலந்துவிட்டதென்று விவகரிக்கிறோம். பேச்சுமட்டில்தான் இவை பிரிந்ததென்றும் பிறகு கலந்ததென்றும் நிகழ்கிறதேயன்றி உண்மையில் ஆகாயம் பிரிவுபடவுமில்லை பிறகுகூடவுமில்லை. கடலிலிருக்கும் அலைநுரை முதலியவைகளும் அப்படியே தோன்றுவதும், வேறாகத்தெரிவதும், அழிவதுமாய்த்தெரிவதும். உண்மையில் எப்போதும் அவை கடலைவிட்டு அன்னியமாகவில்லை. எப்போதும் அவைகள் கடல்நீரேயன்றி அன்னியமுமல்ல.

இதைப்போலவே ஆன்மா* தன் நிலையை மறந்துவிட்டிருக்கிறது. இப்போது அதை யுணர்ந்து அந்நிலையில் நின்றுவிடவேண்டியதேயன்றி மற்றபடி தன்னைவிட்டன்னியமாய் ஒன்றைத்தேடி யடைவது ஒன்றுமில்லை.

> "நீயென நானென வேறில்லை யென்னு நினைவருளத்
> தாயென மோனகுருவாகிவந்து தடுத்தடிமைச்
> சேயெனக் காத்தனையேபாடாமே நின்றிருவருளுக்
> கேயெனச் செய்யுங் கைம்மாறுளதே சுத்தவேழையனே." (தாயுமானவர்)

நமக்குள் சீவன் சிவசாட்சி என விவகாரத்தில் இரண்டிருக்கின்றன. சிவசாட்சியாகிய ஆன்மா ஒரு தொழிலுமின்றி யாவற்



றிற்கும் சாக்ஷியா யிருப்பது. அது அவ்வாறேயிராது அந்தப்பரிசுத்தநிலையைவிட்டு மாயா சம்பந்தத்தால் சீவபாவமடைந்து கன்மத்தைச் செய்கிறது. அந்த ஆன்மாதவிர மற்றதேகாதிகள் யாவும் ஜடமே. மனமும் சடமே. அந்த ஆன்மா தன் பிரகாசத்தைக்கொடுத்தால் மனம் சலனமடைகிறது. பிறகு ஆன்மா சீவபாவமடைந்து, தான் தனது என்ற பற்றுகளையென்று கொண்டுப் பிரபஞ்சமாயையில் அலைகிறது. மனமென்பதற்கு ஆன்மாவைவிட்டு இருப்பில்லை.

இங்கு அவ்வுண்மை விளங்கச் சற்று சிரமமெடுத்துக்கொண்டால், சுலபமாய் விளங்கிவிடும். மேல் போக்காய் வாசித்துவிட்டால் விளங்காது—அதாவது,

சற்றுநேரம் உட்கார்ந்து வெளிச்சிந்தனைகளை யொழித்து, நான் என்பதைக்கொண்டு அதே சிந்தனையோடு மனம் எங்கென்றுதேடினால், மனமே எங்குமில்லாமலே மறைந்துபோம். இங்கு நான் என்கிற நிலையை மறவாது வேலைசெய்யவேண்டும். பிறகு அதைவிட்டு மனம் என்பதைக்கொண்டு நான் என்பதைத் தேடினால், அப்போது மனம் எப்படியோ நழுவிப்போய் நான் என்பதே அந்தஸ்தானத்தில்நிற்கும். அதாவது நான் என்பதைத் தேடும் மனமே நானாய்மாறிவிட்டதுபோலாவது, அல்லது நான் என்பதைத் தேடிக்கொண்டிருந்த மனம், எப்படியோ மறைந்துவிட நான் என்பதே அந்தவிடத்தில் முளைத்துக்கொண்டதுபோலாவது அனுபவமாம் விளங்கும்.

இவ்வாற்றால் ஆன்மாவை விட்டு மனமென்ற ஒருபொருள் வேறாய் உண்மையில் இல்லை என்று உணரலாம்.

இதுகாறும் நாம் விவகரித்தவாற்றால் இந்த "நான்" என்பது யாரென்று ஆராயும்போது, முடிவில் அது அடியோடு போய் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய பரமான்மா, பரப்பிரமம், முதலிய பல நாமங்களால் அழைக்கப்படும் எங்கும் பரந்து நிறைந்த ஏக வஸ்துவாகிய பரசிவ சொரூபம் ஒன்றேயுள்ளதாய் விளங்குகிறது. ஆனால் "நான்" அடியோடில்லையோ? அப்படியல்ல, அந்த ஏகத்தில் நான் என்பது பிரிக்கக்கூடாதபடி கலந்திருக்கிறது. எதுபோலெனில், ஒரு குடம் சலத்தைக் கடலில் விட்டு விட்டால் பிறகு பார்த்தால் அங்கு யாதும் கடல்தான்

இருக்கிறதென்பார்கள். கடலும் குடஜலமு மிருக்கிறதென்று யாரும் கூறமாட்டார்களெனினும் அதில் குடஜலம் இருப்பது உண்மையே.

"நீயற்ற வன்னிலையே நிட்டையதில் நீயிலையோ
வாயற் றவனே மயங்காதே—போயற்
றிருந்தாலு நீபோகா யென்றமுள்ளாய் சும்மா
வருந்தாதே யின்பமுண்டு வா"

என்ற தாயுமானவர் வாக்கு இதையே விளக்குவது காண்க.

இப்போது "நான்" என்பது உண்மையில் எதுவாயிருக்கிறதென்பதை இதை வாசிப்போரே யுணர்ந்து கொள்ளலாம்.

நீ யுன் உண்மையை மறந்திருப்பதால்தான் இப்பிறப் பிறப்பில் அவதிப்படுகிறாய். நான் உன் உண்மையைக் கூறுகிறேன். அறிந்து இத்துன்பத்தினின்று நீங்கிவிடு என்று வேதம் "நீ சீவனல்ல—நீ யுண்மையில் இன்னவன்" என்று கூறிற்று. அதாவது,

"அகம்பிரம்மாஸ்மி" "பிரக்ஞானம் பிரம்மம்" "அயம் ஆத்மா பிரம்மம்" "தத்துவமஸி" என்ற நான்கு மஹா வாக்கியங்களால் விபரமாய் "நீ பிரம்மமா யிருக்கிறாய்" என்று கூறிற்று. இம்மந்திரங்கள் மிக்க இரகசியமாய் வைக்கப்பட்டிருந்தன. ஏனெனில் குருவிடம் அறியவேண்டியவற்றை யறிந்து தக்க பக்குவமடைந்த பின்பு குரு இதை யுபதேசித்தால் உடனே சித்தியடைவான். (நிலத்திலுள்ள முள் கல் செடி கொடி யாவற்றையும் களைந்து உழுது எருவிட்டு சேடையாக்கிய பின் நெல் விதைப்பது போல்).

இக்காலத்தில் இவை அதிக பகிரங்கத்திற்கு வந்துவிட்டபடியால் சிலர் நான் பிரம்மம் எனக்கு விதி நிஷேதமில்லை. யாவும் பிரம்மம். நானும் பிரம்மம். ஆடும் பிரம்மம். பிரம்மத்தைப் பிரம்மம் தின்கிறது. பாபமேது புண்யமேது என்று மூடத்தனமான நாஸ்திக நிலைக்கு வந்துவிட்டு அன்னியரையும் இம்மூடர் கெடுத்து விடுகின்றனர். வேதம் கருணையோடு உண்மையைக் குறிப்பாய் அறிவித்ததே யன்றி எவனும் "நான் பிரம்மம்" என்று கூறிக்கொள்ள வழியேயில்லை. அப்படி கூறுவதே அவன் மூடத்தன்மையை வெளியிடுகிறது. பிரம்மம் "நான் பிரம்மம்" என்று யாருக்குக் கூறுவது ?

ஓர் இராஜனுடைய ஆண் குழந்தையை அவனுடைய விரோதி களவாடிப்போய் ஒரு புலையன் வீட்டில் விட்டு விட்டான். அவன் அங்கேயே வளர்ந்து இயற்கை யுணர்ச்சியால் புலைத்தொழிலை வெறுப்போடும் துக்கத்தோடும் செய்துகொண் டிருக்கிறான். இவனுக்கு வயது வந்துவிட்டது. அச்சமயம் இவன் தந்தையாகிய அரசன் இறக்கப் பட்டம் காலியாயிருக்கிறது. இவனுடைய உண்மையை யறிந்த உத்தமன் ஒருவன் இவனிடம் வந்து "உன் பிறப்பு இவ்விதம். நீ அந்த அரசன் மகன்" என்று கூறிவிட்டான். அப்போது அவன் செய்யவேண்டியதென்ன ?

தனக்கு உண்மை கூறிய அந்த நண்பன் உதவியைக்கொண்டே, தான் அரசகுமாரன் என்பதற்கு வேண்டிய அத்தாட்சிகளையும் உதவிகளையும் சேகரித்துக்கொண்டு நகர ஜனங்களுக்கு அறிவித்து மெய்ப்படுத்தி சிம்மாதனத்தில் ஏறி இராஜபோகத்தை யனுபவிக்க வேண்டியதே. அதைவிட்டு நண்பன் தன் உண்மையைக் கூறியதே "நான் அரசன். நான் அரசன்" என்று வாய்ப்பறை யறைந்தால் அம்மூடன் கெதி யென்னாகும். பைத்தியக்காரர் வைத்தியசாலையில்தான் இவன் அரசாளவேண்டும். இவன் உண்மையில் முதல் கூறியவாறு அத்தாட்சி காட்டி அரசனாய் விட்டாலும் அப்போதும் "நான் அரசன்" என்று எங்கேனும் கூறிக்கொள்வானோ ?

குரு முன்னிலையில் சாத்திர ஆராய்ச்சிசெய்து, படிப்படியாய் அறிய வேண்டியவைகளை யறிந்து, தன் நிஜசொரூபத்தை அனுபவமாயறிந்து, முறைப்படி தன்னைப் பரம்பொருளில் கரையவிட்டுத் தானற்று, அதுவாய்விட முயல்வதைவிட்டு, "நான் பிரம்மம்" என்று முன்கூறியபடி நடக்கும் மூடர்கள் மேற்கண்ட இராஜகுமாரன் நான் அரசன் என்று கூறிக்கொண்டாலடையும் பயனையே யடைவார்கள்.

மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் மேற்கண்டபடி இந்த "நான்" என்பதன் உண்மையை யறிந்துய்யவே ஆண்டவன் நமக்கு இப்பிறவியை யளித்தார் என்ற உண்மையை யுணர்ந்து இதற்காக முயலவேண்டும். கருணையங்கடலாகிய பரம்பொருள் கிருபைசெய்ய வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

## நவராத்திரி

நவராத்திரி என்பது இரண்டுவகையுடையது. கோடைகாலத்தில் வருவது வஸந்த நவராத்திரியென்றும், குளிர்காலத்தில் வருவது சாரத நவராத்திரியென்றும் அழைக்கப்படுகின்றது.

சித்திரை மாசத்து அமாவாசை கழிந்த ப்ரதமையிலிருந்து ஒன்பதாம்நாள் வஸந்த நவராத்திரியும், புரட்டாசிமாசத்து அமாவாசை கழிந்த ப்ரதமையிலிருந்து ஒன்பதாம்நாள் சாரதநவராத்திரியும் கொண்டாடப்படுகிறது.

(இங்கு நாம் இரண்டு நவராத்திரிகளைப்பற்றி வரைந்தால் போதினி இடந்தராது ஆகவே இப்போது வர எதிர்பார்க்கும் சாரதநவராத்திரியைப்பற்றி மட்டும் வரைவாம்).

இச்சாரத நவமியை ஹிந்துக்களில் யாவரும் சம்மதமாகக் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீமஹாலக்ஷ்மி அலர்மேல் மங்கையாக அவதரித்து ஸ்ரீமஹாவிஷ்ணுவைக் கோரி தவமிருக்க அவ்வெம்பெருமான் ஸ்ரீ அலர்மேல் மங்கைக்கு நவமியன்று பிரசன்னராகி மணம் செய்துகொண்டதால் வைஷ்ணவர்கள் நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள்.

இதேகாலத்தில் ஸ்ரீ சரஸ்வதி நான்முகனை நாயகனாக அடையத் தவமிருந்து சித்திபெற்ற நாளாகையால் அந்நவமிநாளை கல்வியில் விருப்பமுடையோர் சரஸ்வதிபூஜையாகக் கொண்டாடுகிறார்கள்.

இதேகாலத்தில் ஈசுவரி பரமசிவனைநோக்கி நோன்பிருக்க ஆரம்பித்த காலமாதலால் இதனை சைவர்களும் கொண்டாடுகிறார்கள்.

சரஸ்வதி, லக்ஷ்மி இருவர் நோன்பும் பிரதமைமுதல் நவமியோடு முடிவாகும். இதனை சரஸ்வதிபூஜை ஆயுதபூஜை என்று அழைப்பார்கள்.

பார்வதி நவமிகழிந்த தசமிமுதல் 21-நாள் நோன்பு இருக்க 21-வது தினம் ஈசுவரன் பிரசன்னமாவதனால் இதனை கேதாரீ விரதம் என்பார்கள். இஃது ஒவ்வொரு தீபாவளி மறுதினம் அமாவாசையன்று வருகிறது.

மூவருடைய நோன்பும் ஆரம்பம் நவமியாகையால் சிலவகுப்பார் தசமி பிரதமைமுதல் நவமிவரையிலும், சிலவகுப்பார் தசமிமுதல் தீபாவளி அமாவாசைவரையிலும் நோன்பு எடுக்கிறார்கள். இவையாவையும் பெண்களுக் குரியதென்றாலும், சரஸ்வதி இருபாலர்களுக்கும் பொதுவாகையால் எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

இப்புண்ணியகாலத்தில் ஒவ்வொருவரும் தம் தம் அகங்களின் சிறந்த கூடத்தில் ஓர் பூஜாமண்டபம் ஏற்படுத்தி கதலி, கமுகு, தெங்கு, பனை, ஈஞ்சு, மாவிலை, கூந்தல், தோரணம் முதலியவற்றால் அணிபெறச்செய்து நடுவில் உயர்ந்த பீடம் ஏற்படுத்தி அதின்மீது ருத்திரன், விஷ்ணு, ப்ரஹ்மா என்னும் மும்மூர்த்திகளின் சக்திகளான, ஈசுவரி, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்ற மூன்று விக்ரஹங்களை எழுந்தருளச்செய்து, அவைகளின்முன் பலவிதமான பாவிகைகளை நிரப்பி தேவேந்திரன் கொலுப்போல் ஜோடிப்பார்கள். பிரதமைமுதல் நவமி



வரையுள்ள ஒன்பதுநாட்களும் மாதர்கள் மேற்கண்டபடி அலங்கரித்து கீதவாத்தியங்களாலும் தேவவாத்தியங்களாலும் பலவித கோலாகாலத்துடன்பூஜித்து ஆடிப் பாடி களிப்பார்கள்.

ஒன்பதாம்நாளாகிய மஹாநவமி தினத்தன்று ராஜாங்க விடுமுறைநாள் கோர்ட்டுகளும், பாடசாலைகளும், கைத்தொழிற்சாலைகளும் உழவர்களும், வர்த்தகர்களும் கொண்டாடும் நாள். இது ஒன்றே கல்வி பயின்றவர்கள் புஸ்தகங்களையும் எழுதுகவிருவையும் மற்றையோர் தங்கள் ஆயுதங்களையும் சுத்திசெய்து வைத்து மிகவும் பக்திசிரத்தையுடன் தேங்காய், பழம், அவல், கடலை, பொரி, கனிவர்க்கங்கள் சந்தனம், குங்குமம், புஷ்பம், தாம்பூலம் முதலியவைகளை ஸரஸ்வதிக்கு நிவேதனம் செய்து மிகவும் பயபக்தியுடன் வழிபடுவார்கள்.

பத்தாவது நாளாகிய விஜயதசமியன்று வன்னிமரத்தில் அம்புபோடுதல் என்ற உத்ஸவம் நடைபெறும். இத்துடன் நவராத்திரி முடிவுபெறும்.

இங்கு நாம் நவராத்திரியின் உட்கருத்தைப்பற்றி சற்று ஆராய்வோம்.

நவம், நவம் என்றால் ஒன்பது, இராத்திரி என்றால் தடை, இருட்டு, அஞ்ஞானம், மாய்கை, பாசம், என்று அர்த்தங்கொள்ளும். அதாவது நவராத்திரி என்பதற்கு ஒன்பதுவித தடைகள் என்று அர்த்தங்கொள்ளலாம்.

சோதரங்களே! மேலே செப்பியவைகள்யாவும் பிரபஞ்சப் போக்கைப்பற்றியே. இனித் தொடரும் விஷயங்கள் அகத்தைப்பற்றியவைகள் ஆகவே சற்று ஆழ்ந்துய்த்துணர்க.

ஒவ்வொரு மனிதனும் மேல்நோக்கிச் செல்லத் தடையாயிருப்பவை நவத்துவாரங்களே. எவ்விதத்தடைகள் செய்கின்றனவெனில்:—

1-வாய், பொய், புறங்கூறல், நிந்தித்தல் முதலிய பாஷைகளைப் பேசுகிறது.

2-இடக்கண் 3-வலக்கண் இவை இரண்டும் பிரபஞ்சத்தைக் கண்ணுற்று அதிலுள்ளவற்றில் ஆசைமூட்டி அலக்கழியச் செய்கின்றன.

4-இடதுசெவி 5-வலதுசெவி இவை இரண்டும் சகல சப்தங்களையும் கிரகிப்பதும், செவிக்கினியவற்றில் ஆசைமூட்டுவதும் செய்கின்றன.

6-இடதுநாசி 7-வலதுநாசி இவை இரண்டும் வெளிக்காற்றை உள்ளே செலுத்தி உள்ளே இருக்கும் காற்றை வெளியில் தள்ளி இந்த அநித்தியதேகத்தைப் பாதுகாப்பதோடு இனியகந்தங்களிலாசைமூட்டுகின்றன.

8-குதம் 9-குய்யம் இவை இரண்டும் இச்சரீரம் தின்று ஜீரணிப்பதைக் கழிக்கும்படிசெய்து நோய் நொடி யில்லாமல் செய்கின்றன.

ஒரு மனிதன் மோட்சவீட்டை அடைய விரும்பினால் மேலே சொல்லப்பட்ட நவத்துவாரங்களின் செய்கையை முதலாவதாக சிறுகச் சிறுக ஒழிக்க வேண்டும். இல்லாவிடின் அவனுக்கு ஞானம் கைகூடுவ தருமை.

(இந்திரியங்களின் தொழில் நாட்டம் வைக்காமல் அவை தன் தொழிலல்லவென்று நீங்கி ஆன்மாசலனமற்று தன் நிலையில் நிற்கவேண்டுமென்பதே கருத்து ப-ர்.)

ஸ்ரீ பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் 96 தத்துவங்களை அடக்குந்தனிலும், தாங்கள் கோரியவை சித்தியாகாதென்று தெளிந்தே நவத்துவாரங்களை அடக்கும் மார்க்கங்களைக் கண்டுபிடித்தார்கள்.

அத்தேவதைகள் பிரதமைமுதல் தினம் ஒவ்வொன்றாக சகல இந்திரியங்களை அடக்க ஆரம்பித்தார்கள். அவைகளை அடக்க 9 நாளாகிவிட்டன. நவமி

யன்று நிர்விகற்ப சமாதியிலிருந்தார்கள். வன்னிமரத்தில் நெருப்பானது நிரந்தரமாக யிருந்தும், பார்வைக்கு மரமாக எப்படித் தோற்றுகிறதோ, அதனைப் போன்று இருபுருவங்களுக்கும் மத்தியில் பிரகாசமற்று இருந்த நெருப்பானது, அறிவாகிய அம்பைக்கொண்டு எய்யவும் சுடர்விட்டெரிய ஆரம்பித்தது.

தசமியாகிய பத்தாவதுநாள் உலகப்பற்றற்றவர்களாக யிருந்தார்கள். அன்றே அவர்கள் ஜெயம்பெற்ற நாள். ஆகவே இதனை விஜயதசமி என்று கொண்டாடுகிறார்கள்.

சகோதரங்களே, நவத்துவாரங்களின் செய்கைகளை சிறுகச் சிறுக ஒழித்து அறிவாகிய விளக்கை கொளுத்திவிட நாம் முயற்சி செய்யவேண்டும் என்பதை நவராத்திரி உற்சவத்தின் மஹிமையால் அறிந்துகொள்கிறோம்.

> " அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா
> லத்துவித வாநந்த சித்தமுண்டா நமது
> குடி முழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
> கோலமெலா நன்றாகும் குறைக நிறை வறவே
> விடியு முதயபோல வருளுதயம் பெற்ற
> வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
> படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
> பாலருட னுன்மத்தர் பசாசர் குணம் வருமே. (தாயுமானவர்)

எஸ். அயோத்திராம்.

---

## நாராயணதாஸர் உபன்யாஸம்.

> ஸர்வாத்மஹம் ஸர்வஸமம், ஸச்சிதானந்த விக்ரஹம் |
> ஸர்வாதாரம் ஸர்வபூரணம், ஸதா நாராயண குரும்பஜே ||

பரமபதம் :—(பரம—உத்க்ருஷ்டமான, பதம்—ஸ்தானம்) உத்க்ருஷ்டமான ஸ்தானமெதுவோ, அது 'பரமபதம்' ஆயின் அந்த 'பரமபதம்' எங்கேயிருக்கிறது என்கிற ப்ரஸ்னைக்கு 'ஸ்ரீ பகவான்' வாக்யம்:— "தந்மனோ விலயம் யாதி தத்விஷ்ணோ பரமம் பதம்" அந்த 'மனம்' எங்கே விலய மடைகின்றதோ அது விஷ்ணுவின் பரமபதமாம்) என்றவாறு. (இது உத்தரகீதா)

மனோவிலயம் :—மனோவிலய (நாச) ம் என்றால், ஸ்வரூபத்தில் மனம் ஏகாக்ரதை யடைதலாம். மனோசஞ்சலம் நீங்குதலே ஸ்வரூபத்தில் ஏகாக்ரதை யடைதலெனப்படும். மனதிற்கும் ஸ்வரூபத்தி (ஆத்மாவி) ற்கும் பரஸ்பரம் (ஒன்றுக்கொன்று) சம்பந்த மிருத்தலால் இரண்டும் ஒன்றேயாம். அது அஞ்ஞானத்தால் பேதமாகத் தோன்றுகிறது. "பொன்போல விலங்குமனம் சஞ்சலத்தால் குரங்காம்" என்று உபதிஷ்ட வாக்யமிருப்பதால் மனதிற்கு ஆத்மாவும், ஆத்மாவுக்கு மனதும் அன்னியமென்று சொல்லவழியில்லை. ஆகலின், மனதிலேயே முக்தியிருக்கிறது அதாவது மனம் விலயமடைதலே முக்தி அல்லது பரமபதமாம். இதற்கு

'கடுவெளி' சித்தர் வாக்யமாவது:—

> "மனமென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே-முத்தி
> வாய்த்த தென்றெண்ணடா தாண்டவக்கோனே" என்றும்,

வேமன்ன யோகிகள் :—"மனசுலோனே முக்தி மரிமுக்தி லேதயா" (மனதினிடத்திலேயே முக்தி யிருக்கிறது. அதற்கன்னியமாக முக்தி யில்லவேயில்லை) என்றும் இன்னும்,



> "மனமனமெங்குண்டு மாயையுமங்குண்டு
> மனமன மெங்கில்லை மாயையு மங்கில்லை."

என்று ஆன்றோர் அருளி யுளர்.

இவ்வாறு பல க்ரந்தங்களிலும் சொல்லி யிருப்பது காண்க.

கடவுள் :—'கடவுள்' என்றால், கடம்=தேகம், உள்=தேஹி (ஆத்மா) அதாவது:—தேகத்திற்குள் ளிருக்கும் 'பரமாத்மா' என அர்த்தமாகிறது. சரீரத்திற்குள் நித்யவாசஞ் செய்பவராகலின், அவருக்குக் 'கடவுள்' என்னும் நாமமுண்டாயிற்று. அக்கடவுளைத் தனக்குத்தானே தன்னுள் ளறிந்தவனே முக்தனாகின்றான். (ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகிறான்.) எவன் பிழைத்திருக்கும் பொழுதே முக்தனாகவில்லையோ அவன் காலசக்ரத்தி லகப்பட்டுப் பெரும் நாசத்தை யடைகின்றான்.

யோகாப்யாஸம் :—யோகம்=சேர்க்கை, அல்லது கூடுதல் என்றர்த்தம். என்றால், ஜீவாத்ம பரமாத்ம ஐக்யத்திற்குச் செய்யும் முயற்சியே யோகமெனப்படுகிறது. ஜீவாத்மா பரமாத்மாவின் ஐக்ய முண்டாவதற்கு யோகாப்யாஸம் இன்றி யமையாததா யிருக்கிறது. ஆகலின், யோக மப்யஸிக்கக் கருதிய முமுக்ஷுவானவன் (மோக்ஷமடைய இச்சைக்கொண்டவன்) யோகத்துக் கென்றமைக்கப்பட்ட ஏகாந்தமும் பரிசுத்தமுமான அறையில் சமமான விடத்தில் தர்ப்பாஸனம் (தர்ப்பைப் புல்லால் செய்தபாய்) பரப்பி, அதன்மேல் க்ருஷ்ணாஸனமாவது (மான்தோல்.) வியாக்ராஸனமாவது (புலித்தோல்) விரித்து, அதன்மேல் வெள்ளை வஸ்திரத்தை மடித்துப் போடவேண்டும். ஸமமான பூமியில் நெடுநேரம் உட்கார்ந்திருக்கும்பொருட்டு, மிருதுவான ஆஸனம் அமைக்கவேண்டும். அவ்வாஸனமானது அதிக உயரமும் தாழ்மையுமின்றி ஒழுங்காய் பரப்பப்படவேண்டும்.

குறிப்பு:—தர்ப்பாஸனம்-மோக்ஷமும், மான்றோல்-ஞானமும், புலித்தோல்-செல்வமும் வைராக்யமு முண்டுபண்ணும், சித்ராஸனம் அல்லது ரத்னகம்பளம் - நன்மை - வெள்ளை வஸ்த்ரம் - தீமையகற்றும், ரத்ன கம்பள மகப்படாவிடின், சாதா கம்பளியும் அநுபவிக்கலாம். தோஷமில்லை. ஒரு எந்த ஆஸனத்தை அமைப்பினும் அவசியம் வெள்ளை வஸ்த்ரம் மேலே மடித்துப்போட்டுட்காருதல் யுக்தம். இதனால் சீதோஷ்ணம் ஸமமா யிருக்கும். அதன் மேல் நீண்டகாலம் தேகமசைவின்றி யிருக்கும் பொருட்டு, அங்கவாதனஞ் சேர்த்தல் வேண்டும். (தேகமசைவின்றி அதிகநேரம் வீற்றிருப்பதால் வாயுவேகம் சிறிது சிறிதாய்க் குறையும். அதனால் மனோசாந்தி கிடைக்கும்.) அதாவது:— ஒரு புலியாதனத்தின் மீது உத்தர முகமாய் சித்தாஸனமாவது, பத்மாஸனமாவது விதிப்படி செவ்வையாய் சேர்த்துட்கார்ந்து முது கெலும்பு கோணலின்றி உடம்பு, கண்டம், தலைமுதலிய அங்கங்களை நெடுநேரம் அசையாமல் ஸ்தம்பம் போல் நேரொக்குமாறு செய்து, திக்குகளைப் பாராமல் மனம் ஏகாக்ரசித்ததை யடைவதற்காக தனது மூக்கு நுனியில் பார்வையை மனதோடு அசையாமல் நிறுத்தி, என்றால்,—இருவிழியும் ஒரு விழியாகிய மனதை ஜகமுகத்தி னின்றும் அகமுகமாகத் திருப்பி, குருவாக்யப் பிரகாரம் ஞானஸ்தான மென்னும் நாஸாக்ரம் அல்லது நாஸிகாக்ரத்தைப் பார்ப்பதுபோல் ஸ்திரமா யிருந்து கொண்டு,

'ஸ்ரீ உத்தரகீதா' வசனப்படி,— "ஆகாஸமத்தியில் ஆத்மாவைச் செய், ஆத்ம மத்தியில் ஆகாஸத்தைச் செய். ஆத்மாவை ஆகாஸ மயமாகச் செய்து, அன்னியத்தைக் கொஞ்சமாகிலும் சிந்திக்கக் கூடாது." இவ்வாறு, ஸதா 'சிதம்

பரத்திலேயே (சித் + அம்பரம் = உள்ளமாகிய ஆகாயம்) வாசஞ் செய்பவனும் உள்ளது விளங்குகிற பரியந்தம் யோகசாதனை செய்துவந்தால்துக்க 'துக்க நிவர்த்தியும் ஆனந்த ப்ராப்தியும்' லபிக்கும். இதனால், ஸ்ரீமந் நாராயண பரமாத்மாவின் வாசஸ்தானமாகிய 'பரமபதம்' ப்ராப்தமாகும். இது சத்தியம்.

யோகாப்யாஸ கால நிர்ணயம் :—யோக மப்யசிப்பதற்குச் சாந்தியான வேளையே சிறந்தது. அருணோதயத்திற்கு முன்னும் பின்னுமாக ஒரு யாம நேரமும், அவ்வாறே சூர்யாஸ்தமன மாவதற்கு முன்னும் பின்னுமாக ஒரு யாம நேரமும் சாந்தியாயுள்ள சமயம். இவ்விரண்டு காலங்களிலும் நமது ஹ்ருதயம் பரிசுத்தமா யிருப்பதால் மனம் மிகவும் சாந்தத்தன்மையடைந்து, அதனால் புத்தி அதிகமாய்த் தெளிவாகி உற்சாகம்மேலிடுகிறது. இவ்விரண்டு வேளைகளிலும் தனது லக்தியானுசாரம் சாதனை புரிந்து வரவேண்டும் அதாவது முதலில் ஆஸனமும் அதன்பின் ப்ராணயாமமும் விதிப்படி அப்யஸிக்கப் படவேண்டும். மத்யானத்திலும் அர்த்தராத்ரியிலும் த்யானம் செய்யவேண்டும் என்பது குரு வாக்கியம். இந்த அப்யாஸமானது நிலைதிரின விர்த்தியாய்க் கொண்டுவரக் கூடியமட்டும் பிரயத்னம் செய்பவன் மநுஷ்யன். நல்ல ப்ரஹ்மசர்யமும் நியதமான வுணவும், ஜாக்ரதையும், ஸாவதானமு முடையவனும் சுருதி - யுக்தியை ஆதாரமாகக்கொண்டு, குருவாக்யத்தில் நம்பிக்கைவைத்துச் சுறு சுறுப்போடும் யோகமப்யஸிக்கும் மாணாக்கன் ஒரு ஸம்வத்ஸரத்திற்குமேல் யோகஸித்தியைப் பெறுகிறான். மந்தபுத்தியை யுடைய சிடனுக்கு பன்னிரண்டு வருட மப்யஸித்தால் தான் ஞானோதய முண்டாகும்.

அப்யாஸத்திற்குத் தகாத இடங்கள் :—ஜனசஞ்சாரமுள்ள விடங்களிலும், துர்ச்சனர்கள் வசிக்குமிடங்களிலும், மேடு பள்ளமான விடங்களிலும், ஈரமான தரையிலும், செடிகொடி மரம் மட்டைகள் அழுகி துர்நாற்றம் வீசுமிடங்களிலும், ஆடுமாடுகள் கட்டுந்தரைக் கருகிலும், மலஜலவிசர்ஜனம் செய்யப்பட்ட இடம், சுடுகாடு முதலான விடங்களிலும், மனம் பிடிக்காத விடங்களிலும் சாதனை செய்யலாகாது. தவிர, கல், மணல், வெறுந்தரை, கோரைப்பாய், அறுபட்டபலகை, பச்சிலை முதலிய நிஷேதிக்கப்பட்டவைகளின்மீதமர்ந்து எந்த கார்யமுஞ் செய்வதடாது. (கல்-வியாதி, மணல்-நன்மையில்லை, வெறுந்தரை சிதோஷ்ண முண்டாம், கோரைப்பாய், அறுபட்ட பலகை இதுபோன்றவைகள் - தீமையை விளைவிக்கும், பச்சிலை - மனநெச்சம் இன்னும் மற்றவைகளை யுக்தியால் அறிந்துகொள்க. சுருதியாதிகளில் விதிக்கப்படாத ஆஸனங்களை மறந்தும் உபயோகிக்கக்கூடாது.) மேலும், ஈ, கொசு, எறும்பு, பல்லி, பாச்சை, தேள், பாம்பு முதலிய துஷ்டப் பிராணிகள் வசிக்குமிடங்களிலும், மைதானங்களிலும், இடம் - பொருள் - ஏவல் முதலிய சகசௌகரியங்களில்லாதவிடங்களிலும், அவ்வாறே ஆலயம் தீர்த்தம் பெரியோர் முதலியவைகளில்லாத ஊர்களிலும் யோகசாதனை செய்யத் துணிவது யுக்தமன்று. அப்படியொருகால் செய்தாலும் ப்ரதமாப்யாஸியின் எண்ணம் நிறைவேறாது இடையிடையே அநேக விக்னங்களேற்பட்டுச் சாதனங் கெடுவதுமன்றி, நிராதரவையு முண்டு பண்ணிவிடும். ஆகலின், எப்போதும் ஏகாந்தமும், பரிசுத்தமும், மனோஹரமும், யோகத்திற்கு வேண்டிய ஸர்வஸாமக்ரியைகளும் அமைந்துள்ளதுமான ஸ்தானங்களிருந்தே ஞான ஸாதனம் செய்யவேண்டும். அப்படி விடா முயற்சியுடன் அநுஷ்டித்துவருபவன் 'ப்ரஹ்மஜ்ஞானி'யாவது நிச்சயம். ஹரி: ஓம் தத் ஸத்.

(தொடரும்.)

A. வர்த்தநாரி சர்மா. பனமரத்துப்பட்டி, சேலம்.



## சீவகாருண்யம்.

சீவகாருணியமென்பது, ஓர் சொற்றொடர். இது, சீவ + காருணியம் எனப் பிரிவுபெற்று சீவர்களிடத்து அருள், தயவு, இரக்கம், கருணை எனப் பொருள்படும். ஓரறிவு பெற்ற புல்பூண்டு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள மக்களீறாய எல்லா சீவர்களையும் கருணையங்கடலாகிய எம்பெருமான் படைத்தருளினனென்பதில் ஐயமென்னை. இச்சீவர்களுள் நன்மை தீமைகளைப் பகுத்துணரும் ஆறறிவுபெற்ற மக்களே இக்காருணிய வொழுக்கத்திற் குடையராவர். மற்றவைகளோ, பகுத்தறியும் சக்தி அமையாதுபற்றி அவைகளை நாம் சிந்திக்கும் பாடில்லை. சீவகாருணிய குணமோ, மானிடர்க்கே வுரித்தாகும் ஓர் அரும் பெரும் பொருளாம். இப்பெரும்பொருளை யடையாத மாந்தர் ஈசன் அருளை எங்ஙனம் பெறுவர். சீவர்களெல்லாம் ஈசனால் படைத்தமைபற்றி, எல்லோரும் அவர்க்குரிய மக்களேயாவர். இம்மக்களுள் ஒருவர் வருந்தும்போது மற்றவர் கண்டு மனம் உருகாமல் ஆனந்தங்கொண்டாடுங் கால் பிதாவாகிய எம்பெருமான் சகிப்பரோ, அந்தோ, சகியார். அன்பே யுருவாக பெற்ற ஐயன் மனவுருக்கமில்லாத மாந்தருக்கு திருவருளை அளியாதுவிடுத்தல் நீதியன்றோ. மூத்தான் பாலோடுண்பதும் இளையான் பசியோடிருப்பதும் தாய்க்கு ஒன்றாகுமா? ஆகவே, சீவர்களிடத்து பசி, பிணி, கொலை முதலான துன்பம் தென்படுங்கால் அவைகளை நிவர்த்திக்க மனமுருகி இயன்றளவுசெய்வதே சீவகாருணியமெனப்படும்.

'பசியினாலும் கொலையினாலும் வருந்துன்பத்தை நீக்குதலே சீவகாருண்யத்திற்கு முக்கிய இலட்சியமென்றும் ஒரு சீவன் பசியினால் கொல்லப்படுமென்பதை யறிந்து காருணியத்தால் பசியை நீக்கி யுயிர்பிழைக்கும்படி செய்பவர் வேறுவகையால் உயிர்க் கொலைநேரிட்டா லதற்கிரங்கி யந்தக் கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்யாம லிரார்களென்றும்' திருவருட்பாவில் பலவாறு வலியுறுத்தல்பற்றி சீவர்களுக்கேற்படும் பசித்தீயைத் தணிக்கத் தொடங்குவதே சீவகாருணிய குணம்பெற முயல்வோர் முன்னறிவாம். எறும்பு முதல் மக்களீறாய எல்லா வுயிர்களும் இப்பூவுலகின் கண் தோன்றிய கணமே பசியினாலேதான் துன்புறுகின்றன. இழிகுணங்கள் சிறிதுமறியாத குழவிகளும் பிறந்தக்கால், காச், காச் என அழுவதும் இப்பசித்தீயாலன்றோ உணவூட்டி அப்பசி நோய் தணிவுற உடனே அதனதன்பால் இன்பம் மேலிடுகின்றதே. ஆகவே, சீவர்களுக்கு சர்வேசுவரன் திருவுள்ளம் பற்றி முதலாக அமைத்துள்ளதும் இப்பசித்துயரேயாம். பசியினால்வருந்தும் ஒருவனுக்கு அன்னமளித்து மகிழ்விக்கும் மற்றவன் ஏழையேனும் அவனை, 'மகாராசப்பிரபு' எனவே அழைக்கிறான். போதுமான செல்வத்தையோ, ஏனை எவற்றையோ ஒருவனுக் களித்தாலும் அவனது பசித்தீயை ஆற்றுவதுபோல அவனுக்கு மகிழ்வளிக்காது. மைடாஸ் என்பவர் தான் தொடுவதெல்லாம் தங்கமாகபெற்றும், பின் தன் பசிநோயைத் தணிக்க வழியற்று பரிதபித்ததும் அறியாததோ. கொடும்பசியினாலேயே எல்லா சீவராசிகளின் தேகமும் பாழ்பட்டு அழிதல்பற்றி மனம் முதலான காரணேந்திரியங்களும் அதன்வழிசார்ந் தழிவடைய முறையே, ஒருவன் பாலுள்ள எவ்வித நற்குணங்களும் மாய்ந்துபோகின்றன. ஆனதுபற்றியே நம் ஔவை மூதாட்டியாரும்—

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம்—என்று கூறியுள்ளார்.

ஆகவே இப்பெருங் கொடியநோயை நம்மான்ம வருக்கத்தால் மாற்றிடில் அந்நோயால் வருந்தும் சீவர்கள் அகமுக மகிழ்ச்சிபொங்கி பொலிவுற்றிருப்பர்.

இதனையே வள்ளலார் அவர்களும் நம்மை நல்வழிப்படுத்த சீவகாருணிய வொழுக்கத்திற்கு முதற்பாடமாக்கினார்கள். பட்டினத்தடிகளும் 'பசித்தோர் முகம்பார்' என்றனர். வறியவனானாலென்ன, செல்வனானாலென்ன, தன்னாலியன்றளவு பசித்தோர்க் கிட்டுண்பதே அருளெனும் குணத்திற் கறிகுறியாம். இக்குறிப்பினையே 'விருந்தினர், மூத்தோர், பசு, சிறைபிள்ளை, இவர்க் கடன் கொடுத்தலா னன்றோவென்றும் ஒழுக்கம் பிழையாதவர்' என்று கூறியுள்ளதும். இவ்வருமை குணம் பெறாதுவாழ்ந்திடும் மாந்தர் ஈசன் திருவடி நிழலையடைவ தெங்ஙனம் 'அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே' என்ற திருவாக்கும் அன்பும் இன்பமும் உடையவர்களே ஈசனாய் விளங்குவர் என்பதைப் புகட்டுகின்றதன்றோ. இது நிற்க.

கொல்லாமை யென்பதும் சீவகாருணியத்திற்கு முன்னிலைப்பட்டதே யாகும். புலி கடுவா முதலிய காட்டுமிருகங்கள் ஆடு மாடுகளைப் பிடித்துத் தின்பதும், பறவை தவளை முதலியன தம்மிலும் சிறிய வுயிர்களைத் தின்பதும், வழக்கமேபோல் மானிடராகிய நாமும் சீவப்பிராணிகளைக்கொன்று தின்பதானால் நமக்கும் அவைகட்கும் பேதமென்னை? காரணம்பற்றி ஒருவன் நம்மை யடித்தாலும் நாம் எவ்வளவு மனத்துயரடைகின்றோம். இதனைச் சிந்தியாது, நன்மை தீமை யறியாத சீவப்பிராணிகள் யாதொரு தீங்கும் செய்யாதிருக்க, நாவின் ருசிக்கோ, தேகப்பலத்தினுக்கோ, வினை மருந்தினுக்கோ, என பலவாறு பேசி அவைகளைக்கொல்வதும் தின்பதும் அவைகளைக் கண்ணுறும் பிதாவாகிய முழுமுதற் கடவுளுக் கொப்புமோ கொல்லாவிரதம் பூண்டவன் எல்லாத்தருமமும் செய்தவன் போன்றும்.

தன்னுயிர் நீப்பினுங் கருதற்க தான்பிறிதோ
ரின்னுயிர் நீக்கும் வினை. (குறள்)

தன்னுயிருக்கு கெடுதிநேர்ந்தாலும் பிறவுயிரைக் கொல்லலாகாது என்ற வேதவாக்கியமும் தவிர்த்து, நோயாளிகள் சிலர், பலவித பட்சிகள் முதலியவற்றை நன்றென நினைந்து வதைத்து பாழ்நரகில் வீழ்கின்றனர். அந்நோய் சாந்தியானாலும் சிலவதையினால் அப்படியானதல்ல வென்பதும் அதோடுசாரும் வினைமருந்துகளினால் மாத்திரமென்பதும் தெற்றெனச் சொல்லலாம். அன்றேல், வேறுமருந்துகளு மில்லாமலில்லை. சுருங்கச்சொல்லுமிடத்து நம்மால் சீவர்களுக்கு ஏற்படும் எவ்விததுன்பமும் பெரிய பாவமேயாம். இதனையே,

கொன்றான் கொலையை யுடம்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்—கொன்றதனை
யட்டா னட்டுண்டா னைவரினு மேலாக
கட்டெறிந்த பாவங் கருது—என்ற பாவால் நன்குணர்க.

ஆங்காங்கு நடைபெறும் "அம்மன் கொடை"களி லெல்லாம் சீவப்பிராணிகளைப் பெலியிட்டு மகிழ்வுறுகின்ற பாமரஜனங்களும் மிருகியாகவே யிருக்கின்றனர்.

இக்கொடுஞ்செயல் சில சைவவேளாளரும் கைப்பற்றுகின்றனராயின் மற்றவரைப் பழியுரைப்பதேன். தொன்றுதொட்ட வழக்கமென கூறுகின்றார். அஃதோர் பரிதாபம். 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றியவாம் எனும் எவையும் தீதாகா' என்றுரைத்துளது யாதுபற்றியோ என அவரறியார்போலும்.



"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே."

என்ற ஞானியுரையும் நன்குணரத் தக்கதேயாம். அன்பர்களே! இன்பப் பொருளை விளக்கும் சிவமெனும் அடியாகப் பிறந்த சைவம் எனும் பேரினம் பூண்பதினா லென்பலன். உயர்குலத்தில் பிறந்தோம் என்பதினா லென்பலன். ஒழுக்கம் உயர்குலமாம். இதனையே தெய்வப்புலமை திருவள்ளுவரும்,

" ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்"—என்றருளியுள்ளார். ஆனதுபற்றி,

குலபேதம் மதபேதமின்றி எல்லா மானிடர்களும் சீவர்களிடத்து இரக்கமும் அன்புமுடையவரா யிருத்தல்வேண்டுமென்பதே ஆதிகற்பனை. இதனைக் கைப்பற்றும் மாந்தர் இம்மையில் இன்பம்பெருகி வாழ்தலோடு மறுமையிலும் இறைவன் பேரின்பத்தையடைந்து என்று மழியா ஆனந்தமெய்துவர்.

ஆகவே, அருமைச் சகோதரர்களே! வள்ளலார் அவர்கள் முதுமொழியை நன்குணர்ந்து சீவகாருணியத்திற்கு முக்கிய இலட்சியமாகிற, பசியினாலும் கொலையினாலும் வருந்துன்பந்தவிர்த்து "எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி இரங்கவும்நின்—தெய்வ அருட்கருணை செய்யாய்பராபரமே" என்ற பாமாலையை நினைந்து, நம்பால் தென்படும் சிற்சில குறைகளை நல்வழிப்படுத்தி சீவகாருணிய வொழுக்கமேவிட்டு என்றுமழியா பேரின்பமடைந் துய்யுமாறு நம் சைவசமயாசாரிகள் வேதமொழிப்படி இப்பிறவிக் கடலைக் கடப்போமாக.

குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழி தவறாமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டு
புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து
நிலைபெற அறத்தின் நிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே. (கபிலரகவல்)

**என். அகஸ்திலிங்கப் பிள்ளை, ஆரைவாய்மொழி.**

---

## தாய்ப்பாஷை.

ஐயா,

சென்ற மாதம் பத்திரிகையிலே "தாய்ப்பாஷை" என்ற விஷயத்தையும் அதற்கு தாங்கள் எழுதிய குறிப்புரையையுங்கண்டு மிகவுங் கவன்ற மனத்தனாய் இதை எழுதுகின்றனன். நந்தமிழ் மாது முற்காலத் திருந்த நிலையையும் இப்போ இருக்குஞ் சீரையும் ஊன்றி நோக்குங்கால் இன்னுஞ் சில காலத்தின் பின் தமிழ் மணம் தானும் வீசாது போய்விடுங்கொ லெனத்துக்கப் படவேண்டிக் கிடக்கின்றது. அனாதி தொட்டுள்ளதாய் சச்சிதானந்த சொரூபியான சிவபிரானாற்றரப் பட்டதாய், இனிமை யுடையதாய், பிறவியாகிய பெருங் கடலினிடத்திருந்து தூக்கிச் சிவானந்தப் பெருவாழ்வாகிய முத்திக் கரையை யடையச்செய்யும் முதன்மை வாய்ந்த சாஸ்திரங்களை யுடையதான நந்தமிழ்ப் பாஷையைக்கல்லாது, பூரணமில்லாததாய், இடையிற்றோன்றியதாய், அன்னியபாஷை

யாய், சாண்வயிற்றை வளர்க்கத் தற்போது வேண்டப் பட்டதாய், காதிற்கு காடின்னியமான ஓர் பிறபாஷையை நாங்கற்றல் எம்மை யீன்றாள் ஒருவ ளிருக்க அயலே செல்லும் அன்னியமாது ஒருத்தியைத் தன்னன்னையெனக் கூறும் ஓர் மௌடீகனின் செயலை யொத்த தன்றோ, அந்தோ ! பாவம் !! எஞ் செந்தமிழ் மாது முன்னிருந்த நிலையென்ன ? செந்தமிழ்ப் புலவர்கட்கு முன் னிருந்த சங்கையென்ன ? அரியாசனத்தமரும் அரசினரும் வித்துவ சிரோன் மணிகளைச் சிவிகைகளின் மேலேற்றித் தாமே தண்டு தாங்கிச் சென்றனரென் றால் நாமா அவரின் பெருமையை எடுத்துரைக்க வல்லவர்! சந்தனப் பொதியத் தவமுனிவனுக்குச் சங்கப் புலவனாகிய சண்முகக் கடவுள் தர, அம் முனிவர் பிரான் தமது திருமடியிலே வைத்துச் சீராட்டி ஆவின்பா லொடு ஆலைக் கரும் பின் சாற்றையும் அறுகால் தொகுத்த சுவை நறவுடன் முக்கனிபிழிந்த தேனும் ஊற்றி, அடு தொழின் முற்றிய கைவலா னொருவன் அளவளாய முடித்த தெளிசுவைப் பாகோ, (இப்பாகும் உண்டுழிச் சுவைத்துக் கேட்டுழியின் மையில்) அன்றி வேறு யாதென உவமை கூறவொண்ணாத இனிமையான மொழிபயிற்றி முச்சங்கத் தொட்டிலி லேற்றிவிட எம் தமிழ்மாது அனந் தம்புலவர் திருமடியில் நடைபழகி இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் மணிமுடிசூட்டி நஞ்சைவசமய விருத்தி குன்றுங்கால் அதனை நன்னெறிக்க ணுய்ப்பான் அவதரித்த சமயகுரவர்களில் ஒருமூவரின் தேவாரமே ஆரமாக வணிந்த அடியார்க்கெளியன் ஆணிச்செம்பொனம்பலவன் எழுதமணிவாசகப் பிரான் மொழிந்த தேனூற்றொழுகும் நானூறு பாக்களாலாய மாவயிரியக் கோவையுடன் இளங்கோவடிகளியற்றிய சிலம்பும் இன்னும் பல பூஷணங்களை யுந்தாங்கி, சேரசோழபாண்டியரென்னும் மூவேந்தரும் பரவ மற்றைய பாஷைக ளாகியசேடியர்கள் பக்கத்தேயிருக்கத் தன்னரசு நடாத்தினாள். அரசியல் நடத்தி யதுமன்றி அளவிடா வற்புதங்களுஞ் செய்தனள். எம் தமிழ் பாஷையின் அற்புதங்கள் வேறெந்தப் பாஷையில் விளங்குகின்றன. ஆனால் தற்கால நிலை யென்ன ! தன்னை ஆதரித்த மூவேந்தருமின்றி தன்னை மடியின்மீது வைத் துப்போற்றும் புலவ சிகாமணிகளுங் குறைந்து எவ்விடம் சென்றாலும் “ஓ” “ப்” “ஓ” “டீ” என்று வெருட்டுபவர்களே யல்லாது தன்னை யாதரிப்பார் யாரு மின்றி அழுக்கடைந்த மாணிக்கம்போல் கிடக்கின்றனள். தற்காலம் தமிழ் பாஷையைக் கற்ற மிகச் சிலரையேனுங் கனம்பண்ணுவார் யாருமில்லை ஆத லினாலன்றோ ஒருவர் “ அடகெடுவாய் பலதொழிலுமிருக்க கல்வி அதிகம் என்றே படித்துவிட்டோம் ” எனப் புலம்பினார்.

செந்நாப்போதார் புகன்ற தேவாமிர்தத்தையொத்த திருக்குறளையேனும், மூதாட்டியாகிய ஔவையா ரருளிச்செய்த சிரோரத்தினங்களாய நீதிநூல்களை யேனும் வேறு எப்பாஷையிற் காணலாம். எம் தமிழ்பாஷையைக் கற்று அதில் அதிக பாண்டித்தியம் அடைந்தால் சீவனஞ்செய்ய வியலாதா ? ஆங்கில பாஷையும் அரசும் வருமுன்னிருந்த நம்முன்னோர் சீவனஞ்செய்யாதுவாளா விருந்து மடிந்தனரோ ? எம்முன்னோர் தன் சிறுவயதிற்படித்த நீதிநூல்களில் ஒன்றையாவது தற்காலத்துச் சிறுவர் அறிந்திருக்கின்றார்களா ? இளவயதிலே நீதிநூல்களை நம் சமய ஆசாரங்களுக் கிணங்க பள்ளிக்கூடங்களிலே கற்று வந்ததாலன்றோ எம் முன்னோர் கடவுட் பக்தியிலும், சமய அறிவிலும் தேக ஆரோக்கியத்திலும் சிறந்து விளங்கினர். எம் தமிழ்மாதின் நிலையைக் கண்டு அனுதாபங்கொண்டு அறிவானுயர்ந்த மேதாவிகளின் செவியில் தன் இனிய மழலையால் அத்தமிழ்மாதின் குறையை நிவர்த்திக்கவேண்டுமென அடிக்கடி ஓதிவரும் எமது இளங்கையான “ஆனந்தபோதினி” நீடுழிவாழவும்,



அந்நங்கையின் எண்ணம் சித்தியெய்தவும் எல்லாம்வல்ல சிவபிரான் திருவருள் புரியவென அவன் பொன்வந்த சேவடிகளை அனுதினந் துதிக்கின்றேன்.

— க. வேலுபிள்ளை, அழகொல்லை.

---

## 61-ம் பக்கத்திலே கர்மபோக சம்பந்தமாய்க் கூறப்பட்டிருக்கும் குறிப்பின் தொடர்ச்சி.

எவ்வாறெனின்:—

இந்திரியங்களைக் கொண்டு சீவன் கருமஞ்செய்கிறது. நான் செய்கிறேன். நான் செய்தேன் என்றும், இதனால் வரும் பாபபுண்ணியத்தையும் தான் அனுப விப்பதாகவும் கருதுகிறது அப்படிக்கின்றி இந்திரியங்கள் செய்வதெனின் அவை ஜடம் ஆகலால் செய்யா-மேலும் அவை செய்த கன்மங்களுக்குச் சீவன் அனுபவிப்பானேன். ஒருபோதும் ஒவ்வாது. இதுசுலபமாய் யாவரும் ஒப்பிக் கொள்ளவேண்டிய நியாயமே - இது சங்கரருக்குத் தெரியாமற் போய்விட்ட தென்று யார் நினைக்கக்கூடும் ?

மற்றபடி யவர் கூறிய தென்னெனின்:—

மேற்கண்டவாறு கன்மத்தைச் செய்யும் ஜீவன் தன் உண்மை நிலையை மறந்து மாயையிற்சிக்கிய படியால் அப்படிச் செய்து பிறப்பிறப்பில் சிக்கி யுழல் கிறது. அது தன் நிலைமையை மறந்ததே மூல அஞ்ஞானமாகும்.

“ பிரமமாந் தன்னைமறந்த பேதைமையே யஞ்ஞானம்
..................................”
(கைவல்யம்.)

ஆகையால், “பாராதி பூதம் நீ யல்லை—யுன்னிப்பார்இந்தி ரியம் கரணநீ யல்லை—யாரா யுணர்வு நீ யென்றான்.........” (தாயுமானவர்) என்றபடி நீ அறிவு அதாவது ஆன்மா. உன் தொழில் சாக்ஷி மாத்திரமா யிருப்பதே யன்றி வேறில்லை நீ அசையாது ஒரு கருமமுமின்றி ஆனந்தமா யிருக்க வேண்டிய வன். உன் நிலைமையை மறந்துத் தவிக்கிறாய் “உன்னை நீ யறிவாயாகில் உனக் கொரு கேடுமில்லை” என்ற உபதேசவாக்கியப்படி ஆன்மாவின் உண்மை நிலை யைக் கூறினவரே யன்றி, சீவன் கர்மம் செய்வதில்லை யென்று கூறியதல்ல. இவ்வாறு கூறுவதாலேயே ஆன்மா சீவபாவத்தை விட்டொழித்து தன் சுய தரி சனத்தைக் கண்டு கைவல்ய மடைய வழியுண்டாகிறது. இவ்வாறு ஏககாலத்தில் மனதையொழித்துச் சாட்சி மாத்திரமாய் நின்று ஆத்மதரிசனம் பெறமுடியாமல் மனதோடு சேர்ந்து கன்மம் செய்துகொண்டிருப்போர்க்கே, துர்க்கருமத்தை விட்டு சத்கருமத்தைப் பலாபேட்சை யின்றி செய்யென்று கன்மயோகம் கூற வந்ததே யன்றி, கன்மயோகமே செய்யவேண்டுமென்ற கட்டாய மில்லை.

பத்திராசிரியர்.

---

## உபாத்திமார்களும் அதிகாரிகளும்

அநாமம் சேவகாவிர்த்தி என்பதை நமது ‘ஆனந்தபோதினி’ யில் மாணவர் பக்கங்களிலும், தொழில்—தொழிலாளர் விஷயத்திலும் நன்கு தெரிவித்திருப் பினும், உபாத்திமைத் தொழில் சேவகாவிர்த்தியல்லாதிருந்த காலம்போய், தற் போது சேவகாவிர்த்தியாகவே நடைபெறுகின்றது. இவ்வுத்தியோகத்தில் இவர் கள்படுங் கஷ்டங்களும் சிரமங்களும் இவ்வளவென்றுசொல்ல முடியாதாயினும் இதற்குமுன் நமது போதினியில் மகா-ா-ா-ஸ்ரீ ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்களும் ஏனையோர்களும் இயம்பி இருப்பினும், எனது அனுபோகத்தில்

அறிந்துள்ளதும் அனுபவித்துள்ளதுமான இரண்டொரு விஷயங்களை இயம்பினால், நமது ஆனந்தபோதினிக்குச் சந்தாதாரர்களாயுள்ள பல்லாயிரம் பேர்களில், இவ்வுத்தியோகத்தில் மதிப்பும் கௌரவமும் வைத்துள்ள அதிகாரிகளும், அதிகாரிகள் அல்லாதாரும் கவனித்து தேசத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் முற்காலத்திய நிலைமையை நிலை நிறுத்தவும், தற்காலத்திய தாறுமாறான விஷயங்களைப் புறத்தே ஒதுக்கவும் முன் வருவார்களெனவும் எண்ணியே எழுதலானேன்.

உபாத்திமார்களுக்கோ தம் சாப்பாட்டுக்கே போதாத சொற்ப சம்பளம் கிடைக்கிறது. இச்சப் போதாத சம்பளமும் 3-4-மாதங்களுக்கு ஒருமாத சம்பளமாகக் கிடைக்கிறது. இதற்கு யாதொரு பரிகாரமுங் கிடையாதென்னலாம். கவனிப்பாரில்லை. 10—8—18-ல் நடந்த திருவையூர் (S.I.Ry.) உபாத்திமைச் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய உபாத்திமார்கள் இதுவிஷயமாய் திருச்சினாப்பள்ளி ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களுக்கும், தாலுகாபோர்டு பிரசிடெண்டு அவர்களுக்கும் அனுப்பிக்கொண்டிருக்கும் விண்ணப்பத்தையும் இதன்கீழ் குறிப்பிடுகிறேன்.

‘ஏழை எலிமெண்டரி உபாத்திமார்களாகிய எங்களுடைய சம்பளபில்லானது, கனம் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் அவர்களிடமிருந்து போய்க் கொண்டிருந்தபோதோ, சம்பளம் காலதாமதமாய்க் கிடைக்கிறதென்று உபாத்திமார்களே பில் தயாரித்து நேரே தாலுகா போர்டுக்கு அனுப்பும்படி செய்தீர்கள்.

சமீபத்தில் தாலுகாவாக ஏற்படுத்தப்பட்ட சமயபுரத்தோடு சேர்க்கப்பட்ட சிலபாடசாலைகள், திருச்சிதாலுகா போர்டோடு சேர்ந்திருந்தபோதோ, சம்பளம் காலாகாலத்தில் கிடைத்துவந்ததானது, எங்களுக்கு மிக்க சௌகரியமாயிருந்தது.

சமயபுரந்தாலுகாவோடு, திருச்சிதாலுகாவிலுள்ள சிலபாடசாலைகள் சேர்ந்த பிறகும், திருச்சிதாலுகாபோர்டில் குறைந்த பிறகுமான தற்போதோ, 3-4-மாதங்களுக்குப்பிறகு ஒருமாத சம்பளம் கிடைத்து வருகிறது.

இச்சப் பஞ்சகாலத்தில், இந்த சொற்ப சம்பளமும் ஜீவனத்திற்குப் போதாதென்பதும், நாட் சென்று கிடைப்பதால்,

‘மானங் குலங்கல்வி வண்மை பொருளுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்’

ஆதலால், பசியோடு போதிக்கும் போதனையானது பயன்தராதென்பதும் தங்களுக்குத் தெரிந்ததே.

உபாத்திமார்களை அடிக்கொருதரம் மாற்றுவதிலிருந்தும், அயலூராரென்பதிலிருந்தும் கிராமங்களிலுங்கூட கடன் கேட்பதும் கிடைப்பதும் கஷ்டமாயிருக்கிறது. சென்னை. பிரஸிடென்ஸிகாலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதராகிய, கனம். மகா மகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்களால் பிரசுரமாகும் ‘விவேகசிந்தாமணி’ யின் அபிப்பிராயப்படி உபாத்தியாயர்களை, அவரவர்களின் சொந்த ஊர்களிலேயாவது, சொந்த ஊர்களுக்குச் சமீபத்திலுள்ள ஊர்களிலாவது அவரவர்களுக்குச் சௌகரியமான ஊர்களிலாவது, நியமித்தால் காலதாமதமாய் சம்பளம் வரினும் ஒருவாறு கஷ்டந் தோன்றாதிருக்கும்.



ஆகவே, எங்கள் சம்பளமானது, அடுத்தமாதம் 15-தேதிக்குள்ளாவது கிடைக்கும்படியான ஏற்பாட்டை (சௌகரியத்தை)ச் செய்துகொடுக்கும்படியாய்க்கோருகின்றோம்.” என்பதே.

உபாத்திமார்கள் கற்றறிமூடர் என்று சிலர் கூறுவதற்கிணங்க இவர்கள், “இப்படிச் செய்யுங்கள்! அப்படிச் செய்யுங்கள்” எனப் பலருக்கும் புத்தி புகட்டுவார்களே யொழிய, தங்கள் குறைகளைத் தங்கள் சங்கத்தின் மூலமாகவாவது எடுத்துச்சொல்லி, நிவர்த்தித்துக்கொள்ள முன்வருகின்றார்களில்லை. இவர்கள், உலகத்திய எந்தவியவகாரங்களிலும் சம்மந்தப்பட்டு, யாருக்கும் உதவி செய்யவும்—சொல்லவும் முன்வராமலிருப்பதுமில்லை. தம் காரியங்களிலோ, ‘எல்லோருக்கும் சொல்லுமாம் பல்லி, தானே விழுமாம் காடிப்பானையில்’ என்பதற்கிணங்கவும், இத்தொழிலைப்பற்றி வேறு பலர் கூறும் வசைமொழிகளுக்கும் இணங்கியவர்களே! என்னே இவர்களின் மதியீனம்! பலர் இவர்களைக் குரும்பாடு (செம்மறி ஆடு) என்பர். ஏனெனில், ‘ஆண்டிகள் கூடி மடங்கட்டுவது’ போல் ஆங்காங்கு சிற்சிலராய்க்கூடி, “அவ்வித குறை இருக்கிறது இவ்வித குறை இருக்கிறது; இது என்ன இப்படி, அது என்ன அப்படி. அப்பப்பா இப்படி இருந்தால் எப்படி? ஏதப்பா முடியாது, எல்லோரும் ஏகோபித்து இந்த மீட்டிங்கில் இயம்பவேண்டும் இயம்பவேண்டும்” என வாய்ப்பறையறைந்து சபைக்கு வந்ததும், எலிகளெல்லாங்கூடி ‘யார் பூனைக்கு மணி கட்டுவது’ என்று யோசித்தது போல், “யாராவது சொல்லட்டும் - யாராவது சொல்லட்டும்” என்று ஒவ்வொருவரும் ஏகாந்த நிலையிலிருந்து விடுவர். நிற்க,

சில பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கும் சொற்ப சம்பளத்தைவாங்கி, குறித்த தேதியில் கஜானாவிற்கு மணியார்டர் செய்யாவிட்டால், செலுத்த வேண்டிய ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா அபராதமும் அல்லது சஸ்பெண்டும் கிடைக்குமாம். அல்லது ஒரு நாளைக்கு இரண்டணா வீதம் அபராதம் விதிக்கப்படுமாம். இனியும், உபாத்திமார்களுக்குச் சம்பளங் கிடைக்கும் சௌகரியத்தையும் ஒத்திட்டுப்பாருங்கள்! அதுவோ ‘மாமியுடைத்த மண்கலம் போலும் இது மருமகளுடைத்த பொன்கலம் போலவு’ மன்றோ இருக்கின்றது. அவ்வேலை, பழங்காலத்திய மாமிக்குக் கீழ் மருமகள்போல் இருக்கின்றதேயன்றி, தற்காலத்திய நவீன நாகரீக மாமிக்கு மருமகளாகவும், கணவன் வீட்டுக்குச்சென்ற தன் மகளுக்குப்பதில் மகனாய்த் தனக்கு வந்த, தன்மகனின் மனைவி எனவும் எண்ணாது, தனக்குப் புழுக்கை வேலைசெய்யவந்த புழுக்கச்சிபோல் பாவிக்கும் பாமர மாமிகள்போலன்றோ இருக்கின்றது. இந்த விஷயம் மட்டுமல்ல, எந்த விஷயமும் இப்படித்தானிருக்கிறது.

ஒருபாத்தியாயர், புதிதாக ஓர்பாடசாலைக்குக் காலை 8-மணிக்கு முன்பே சென்று, அங்குள்ள பழய உபாத்தியாயரிடம், சகலசாமான்களையும் (சார்ஜும்) பெற்றுக்கொண்டு அவரை மத்தியானம் சுமார் 11-மணிக்கே அனுப்பிவிடுகின்றான்றால், பாடசாலையின் புதிய உபாத்தியாயர் காலை 8-மணிக்கு முன்பே வந்துவிட்டதால் முழுநாள் சம்பளமும், பழய உபாத்தியாயர் 11—மணிக்கே பாடசாலையைவிட்டுப் போய்விட்டதால் இவருக்கு அரைநாள் சம்பளமுந்தானே கிடைக்கவேண்டும்? இல்லாவிடில் இருவருக்கும் சரிபாகமாக அனுக் கரைநாள் சம்பளமாவது கிடைக்கவேண்டாமா? அரைநாள் வேலைசெய்த பழய உபாத்தியாயருக்கு முழுநாள் சம்பளமும், முழுநாள் வேலைசெய்த புதிய உபாத்தியாயருக்கு அன்று சம்பளமே இல்லாமல், மறுநாள் முதலே சம்பளங் கிடைத்தது. இதைப்பற்றி மேலதிகாரிகளுக்கு ஒருமுறைக்கு இருமுறையும், இருமுறைக்கு மும்முறையும் விண்ணப்பித்துக்கொண்டும் யாதொரு பயனுமில்லை

யேல், இந்நடவடிக்கை, ஜாதியபிமானத்தின்பேரில் ஒருதலைப்பக்ஷமாய் நடந்திருக்கின்றதெனச் சொல்வதா ? அதிகாரிகளுக்கு அல்லது அவர்களைச்சேர்ந்த குமாஸ்தா முதலியவர்களுக்கு, அப்பழய உபாத்தியாயரால் செய்துள்ள சந்தோஷ விஷயத்தால்—நன்மையால், ஒருதலைப் பக்ஷமாய் நடந்திருக்கின்றதெனச் சொல்வதா ? ஒன்றுமேயில்லையென்று வைத்துக்கொண்டாலும், விண்ணப்பித்துக்கொண்ட விண்ணப்பங்களுக்குச் சமாதானமான உத்திரவுகளாவது கிடைத்திருக்கவேண்டாமா ? பாருங்கள் இவ்வுத்தியோகத்தின் தன்மையை ! அதிகாரவர்க்கத்தினின் ஆட்சியை ! !

ஒருபாத்தியாயர் ஒருதாலுகா போர்டிலிருந்து, மற்றோர் தாலுகா போர்டுக்கு மாற்றிக்கொண்டு போய்விடுகிறார். அவர் முன்னிருந்த தாலுகா போர்டில் தவறுதலாக அதிகமான தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார். பழய தாலுகாபோர்டார் புதியதாலூகா போர்டாருக்கெழுதி, அவ்வதிகத் தொகையை வசூல் செய்துவிடுகின்றனர். இஃதிங்ஙனமாக, பழயதாலுகா போர்டில் சம்பளத்தோடு ஏற்பட்ட காஷியல் லீவு—எடுத்துக்கொள்ளப் படாமலிருந்ததை, புதியதாலுகா போர்டின் (புதியரேஞ்சின்) பரீக்ஷாதிகாரி அந்த லீவை இங்கு கொடுக்கப்படாதா ? அல்லது தற்போது ஏற்பட்டிருக்கிறபடி, வருஷத்திற்கு 15-நாள் வீதம், $1\frac{1}{4}$-நாள் வீதம் ஆகிறது. இவ்விதமாலவது வேலைசெய்த மாதங்களுக்கு கொடுக்கவேண்டாமா ? அவ்விதமின்றி, அவசியமாய் வேண்டிய அந்த லீவுநாட்களுக்கு சாப்பாட்டுக்கே போதாத சொற்பசம்பளத்தில் பிடித்தஞ் செய்துவிடுகின்றனர். இதைப்பற்றியும் பன்முறையும் எழுதினும் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. பாடசாலைவிஷயமாய் ஏதாவது தகவல்கேட்டு, உபாத்தியாயர்களிடமிருந்து அதுகிடைக்க இரண்டொருநாள் காலதாமதமாயினும் 'ரிமைண்டர்' அனுப்பிவிடுகின்றார்கள். தாமதத்திற்குக் காரணம் சொல்லவிடில், 'உம்மையேன் அப்படிச்செய்யக்கூடாது ! இப்படிச் செய்யக்கூடாது ? என்று கேட்டுவிடுகின்றார்கள். என்னே ! அதிகாரிகளும் உபாத்திமார்களும் இருக்கும் இருப்பு ! ! நேர்மை ! ! !

(தொடரும்).

பி. பரிமளப் பல்லவராயர்.

---

## புராதன வழக்கங்கள்.

நம்முதாதையர், வெகுவாய் ஒவ்வொரு விஷயத்தையும், ஒவ்வோர் அனுஷ்டானத்திலும் பிணைத்திருக்கிறார்கள். இவ்வனுஷ்டானங்கள் சுகாதாரம், ரஸாயன சாஸ்திரம் முதலிய தறகாலத்திய நூல்களுக்குப் பொருத்தமுடையனவாகவே விருக்கின்றன. ஆதலால், முன்னோர்களுடைய அனுஷ்டானங்களையும், நம்பிக்கைகளையும், மூடத்தனமென்றும், குருட்டுத்தனமென்று, இகழ்வது அறிவின்மையையேயென்று குறிக்கற்பாலது. இரண்டொரு திருட்டாந்தங்களால் இதனுண்மையைத் தெள்ளிதிற் காணலாம்.

1. அருணோதயத்திற்கு முன்னதாகவே, நீராடல் நம்மிந்தியர்களுடைய அனுஷ்டானமல்லவா ? அவ்வாறு செய்வதினாலுண்டாகும் பலன்களுக களவுண்டோ ஐசுவரியம், புத்திக்கூர்மை, ஆரோக்கியம் முதலியவற்றோடு சரீரத்திற்கே ஓர் தாவள்யத்தையும் கொடுக்கின்றது.

2. நீராட்டத்தின் பின், விமானப் பிரதக்ஷணஞ்செய்வது நம்முதாதையோர் வழக்கமாகும். இவ்வாறு பிரதக்ஷணஞ்செய்வது, தற்காலம் அனுஷ்டிக்கப்படும் உலாவுதலா (Walk) ல் கிடைக்கும் பயன்களனைத்தையும் தரவல்லதென்பதற்கோ ஐயமுண்டோ ? அதுமாத்திரமல்ல ! அதற்கு மேலும் பயனளிக்கும். உலாவுதலால் கால்களுக்குப் பலத்தைக்கொடுக்கும். பிரதக்ஷணஞ் செய்வது, இத்தகைய பலத்தையுங்கொடுத்து, பகவத்சிந்தனையையும் கொடுக்கும். ஆகையால், இது இகபரலோகங்களுக்கு பயனளிக்கவல்லது.



3. ஆன்றோர், காலைவேளையில், ஆவின்பாலையன்றி பிறிதோர் ஆகாரத்தையும் உட்கொள்ளார். பால் திரவபதார்த்தமன்றோ ? அதிலும் பாலில் கொழுப்பைக்கொடுக்கும் சத்தும் உளவாம். இதை உட்கொண்டால் இது ஒருவனுக்கு ஊக்கம், முயற்சி, சுறுசுறுப்பு முதலியவை யளிப்பதுமன்றி உயிரையே ஓம்பும் தன்மையுடைத்து. கடினபதார்த்தங்களைக் காலையில் புசிக்க, தற்கால சாஸ்திரங்களும் இடந்தருவதாக காணப்படவில்லை.

இது நிற்க, முன்னோர் விலைப்பாலருந்தினரோ ? அன்று ! அன்று ! அப்பால், நீரில் சேர்க்கப்பட்ட பாலேயன்றி பிறிதில்லையென்பதை அன்றும் அறிந்துளார் ? அன்னார் இம்மோசமறிந்தே, பசுக்களை வளர்க்கலாயினர். இது மட்டுமோ ஆவினங்களை, கடவுளின் சின்னங்களெனப் போற்றிவந்தனர். இம்மிருகங்கள் விவசாயத்திற்கும் வேறு பல உபயோகங்களுக்கும் இன்றியமையாதன வன்றோ ? இப்பசுக் குழாங்கள் விருத்தியடைவதற்கே கோயிற்களுக்கு காளைகளை விரையஞ்செய்தனா போலும். ஜனங்கள் கோவிலின் கண்வைத்த பக்தியால் அப்பசுக்கள் நன்கு போற்றப்பட்டுவாறேது உண்டு.

4. உண்ணுங்கால் பேசக்கூடாதென்று பெரியோர்கள் அடிக்கடி சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கலாம். இதில் ஓர் ஆன்ற உண்மைகிடக்கக் காண்கலாம்.

வாயின்கண், ஆகாரஞ்செல்வதற்கோர் குழாயும் (Eosophegus) சப்தமெழுவதற்கோர் குழாயும் (Voice bou) உள. ஆகாரஞ்செல்லும் குழாய், மூடபெறுமலிருக்கும். சப்தக்குழாயோ, சப்தம் எழும் அமயத்தைத்தவிற மற்ற நேரங்களில் மூடியிருக்கும் தன்மையது. இத்தகைய வாயில் ஆகாரத்தைமென்று உண்ணுங்கால் பேசின் சப்தக்குழாயிலும், ஆகாரஞ்செல்வது அதிசயமல்ல. அக்குழாயில் சென்ற ஆகாரம் சிறிதுநேரத்தில் அன்னவனை அநேகவித யிடையூறுகளுக் குள்ளாக்கிவிடும். இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் பெருமைதான்; அன்றேல் சிறுமையே! இப்பெருந் துன்பசாகரத்தில் அழுந்தகாரணம், உண்ணுங்கால் பேசுதலன்றோ? ஆதலின் உண்ணுங்கால் வேறு சிந்தனையின்றி ஆகாரத்தின்மேல்வைத்த நாட்டத்தோடு உண்ணவேண்டும் என்பது பெரியோர் கட்டளை.

5. சகோதரங்களே, நம்மிலனேகர் இன்றும், தங்கப்பவித்திரம், ஐம்பொன்மோதிரம் அல்லது வெள்ளிமோதிரம முதலியன வலக்கைவிரல்களில் அணிந்துவருகின்றனர். இது சாஸ்திரோக்தமானதென்று கூறப்படும். இதனுண்மையைக் கவனிப்பாம். உண்ணுங்காலும் மேற்கூறிய மோதிரங்களை நாம் அணிந்துகொண்டிருக்கிறோம். நாள்படவே இம்மோதிரங்களுடைய சற்று சிறிது உட்செல்கிறது. அதனிமித்தம் தேஜஸும் நீடித்த ஆயுளும் அடைகின்றோம். (ஸ்வர்ண திராவகத்தின் மகிமையை நோக்குக) ரஸாயன ஸாஸ்திரங்களும் இவ்வுண்மையை ஆமோதிக்கின்றன.

6. ஏகாதசிபோன்ற தினங்களில் உபவாசஞ் செய்பவர்களுக்குப் பசியான கொடுமை உண்டன்றோ ? அக்காலை அன்னவர்கள் வருத்தமுறுகிறார்கள். வருத்தமுற்றகாலே, வாமனனை வணங்குகினறவர்கு துன்பமே துணைவனை காட்டவல்லது. மேலும் உபவாசம் அஜீரணத்தைத் தடுத்து உடலுக் கிதம்

161600

செய்யாவல்லது. பண்டையக்காலங்களில், ஐரோப்பிய நாடுகளில், குற்றவாளிகளுக்கு மதாசாரியர்கள் விதித்ததண்டனைகளி லிதுவும் ஒன்று.

நம்நாட்டுக் கோயில்களின் மகிமை, அறிவிற்கடங்காவாறு சிந்திக்கிடக்கின்றன. இக்கோயில்களை குகைக்கோயில்கள் (Cave Temple) என்று பரிகசிக்கின்றனர் சிலர்; பாவம், என்செய்வார்கள். அறியாமை அடுத்ததுபோலும். இக்குகைக்கோயிலுட்சென்ற மாத்திரத்தானே பெருங்கூட்டத் திடைப்படுகினும். உட்சென்றவர்கட்கு பெரும்புழுக்கம் உண்டாக வியர்வை ஆறாய் ஓடுகின்றது. வியர்வை வெளிப்போந்தபின், தேகத்திற்கு சௌகரியக் குறைவு மேற்படுமோ? நோயாளிகள் இம்மாறுபாட்டால் குணமேபடைவர். இவ்வுண்மையை தற்காலமும் கோயில்களில் தபசிருக்கும் நோயாளிகளின் சுகத்தாலறியலாம்.

8. இன்னும் ஓர் தத்துவ உண்மையை நோக்குவாம். செந்தூரில் நடக்கும், கந்தசஷ்டி, மாசி ஏழாம் உஸ்தவம் முதலிய பெருங்கூட்டம் கூடும் தினங்களில் மழைபொழியுமென்று வைதீகர்கள் அநேகயாக சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். உண்மையே. இப்பெருங் கூட்டத்தில் ஜனங்கள் அங்குமிங்கும் அடிக்கடி நடக்க தூசி உயரே கிளம்புகின்றது.

உயரேகிளம்பியவை, சிலமாறுபாடுக ளடைந்து மேகங்களை கலைத்து வருஷிக்கச் செய்கிறதாம். இதனுண்மையை தற்காலம் ரஸாயன சாஸ்திரிகள் வியக்தமாயறிவர்.

9. இறுதியாக, நேயர்காள்; நம் முன்னோர் இரவில் மரநீழலில் தங்குவதனால் உயிர்க்கே ஹானி ஏற்படும் என்பர். அநேகர், மரத்தடிகளில் சர்ப்பங்களிருப்பதாகவும் ஆங்குசென்றால், விஷம் தீண்டப்பெற்று உயிர்விட நேரிடுமென்றும் சொல்வர். ஆயினும் உண்மைவேறு. இரவிலே தான் புல்பூண்டுகள் கரியமல வாயுவை வெளிவிடுகின்றன. அதை நாம் உட்கொண்டால் மரணமே சம்பவிக்கும். இதற்கென்ன சந்தேகம்?

இத்தகைய, உண்மைகளை அறிந்து நமக்கு விதித்திருக்கிற அனுஷ்டானங்களை இகழ்வது எங்ஙனம் பொருந்தும். உற்றுநோக்குங்கள்! ஊன்றிப் பாருங்கள்!! முன்னோர் மகிமை முழுவதும் உணர்வீர்.

வி. கிருஷ்ணசாமி தென்திருப்பேரை.

குறிப்பு.—உலகில் சாதாரணமாய் ஒரு விஷயம் நமது புத்திக் கெட்டாதவரையில் அதை நம்புவதேயில்லை. இது உலக சுபாவமே. திருஷ்டாந்தமாய்க் கூறுகிறோம். இங்கிலாந்தில் முதல் முதல் புகைவண்டி செய்யப்பட்டு பாதையில் விடப்பட்டபோது, குதிரை மாடு முதலிய ஒன்றாலும் இழுக்கப்படாமல் பாரமான இரும்பால் செய்யப்பட்ட ஒரு வண்டி தானே யோடுவதைக் கண்ட ஜனங்கள் " ஓஹோ அவ்வண்டியி லிருக்கிற பெரிய பீப்பாய் போன்ற குழாயில் (தண்ணீர் எரிக்கும் பாய்லர்) ஆட்கள் மறைந்து இருந்து உள்ளே ஏதோ எந்திரத்தைச் சுற்றுகிறார்கள், இப்படி நம்மை யேமாற்றுகிறார்கள் என்று கோபங்கொண்டு கழிகளையும் இன்னும் பல ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு உள்ளிருப்போரை யடிப்பதென்று கிளம்பி விட்டார்களாம்.

அவ்வாறே முதல்முதல் மின்சாரத்தைக் கண்டுபிடித்த ஆள் ஆயிரக்கணக்கான மயில்களுக்கப்பா லுள்ளவர்களோடும் பேசக்கூடிய வழியைக்கண்டு பிடித்திருக்கிறேன் என்றபோது, அரைத்தனத்தாரே இவன் பிசாசோடு சம்பந்தமுடையவனென்று அவனைப் பலவருடங்கள் சிறையில் வைத்து விட்டார்கள். பிறகு அவன் எவ்வளவோ பாடுபட்டு பிரத்தியட்சமாய் தந்தி ஏற்படுத்திக் காட்டியபின்



அவனைப் புகழ்ந்தார்கள். இவ்வாறே நமது முன்னோர்களின் ஏற்பாடுகளை யெல்லாம் மூட புத்தியென்று மேல் நாட்டார் முதலில் இகழ்ந்து வந்தார்கள். அதைக் கண்ட நம்மவர்களில் சில அறிவிலிகளும் நாமும் அப்படிக்கூறினால்தான் நாமும் மேல் நாட்டாரைப்போல் மிக்க நாகரீகமடைந்த அறிவாளிகளாய் மதிக்கப்படுவோமென்று கருதி, தன் மான மென்பதையுங் கருதாமல், தம் முன்னோர்களின் ஆசார ஒழுக்கங்களையும் சாத்திரங்களையும் இகழ்ந்து கூறத் தொடங்கினார்கள்.

நமது முன்னோர் சகல சாத்திரங்களையும் அறிந்தேயிருந்தார்கள். அவைகளையனுசரித்தே சகல இலௌகீக ஆசாரங்களையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் ஒருவிஷயம் - நம்மவர்கள் மறுமைப் பயனையே யாவற்றிலும் முதன்மையாய் மதிப்பவர்களாதலால் யாவற்றையும் அதிலேயே சம்பந்தப்படுத்தி, ஒவ்வொரு இலௌகீக விஷயத்திலும் ஈசுவர சிந்தனை யிருக்கும்படியாக அமைத்துவிட்டார்கள். நம்மவர் பாவத்திற் கஞ்சுபவர்கள்—இக்காலத்திய வாலிபர்கள் குதர்க்கவாதம் செய்வதில் மிக்க சமர்த்தர்கள். இரவில் ஜலக்கரைக்குச் சென்றால் கரங்களைத் தட்டவேண்டும் என்றால், ஏன்? என்னத்திற்கு என்பார்கள்-ஜலத்திலுள்ள ஜந்துகளில் பல கரையில் வந்திருக்கும் - நாம் காலால் மிதித்துக் கொன்றுவிட்டால் - ஜீவஹத்தி உண்டாகும். அதோடு விஷஜெந்துக்களாயின் நமபிராணனுக்கே யாபத்துநேரிடும் என்று கூறினால் " அட போ வேலையைப் பார் " என்பார்கள்—" இரவில் கங்காபவானி நித்திரை செய்வாள் - எச்சரிக்கை செய்யாமல் தொட்டால் மகதோஷம் " என்றால் எவனுக்கும் உள்ளுக்குள்ளாகிலும் பயமே.

மேல் நாட்டார் ஜடசாத்திரங்களை யொவ்வொன்றாய்க் கண்டுபிடித்து நமது முன்னோர் ஏற்பாடுகள் அவற்றிற்கு ஒத்திருப்பதை யறிய அறிய ஒவ்வொன்றாய் நம்பி வருகிறார்கள். திருஷ்டாந்தமாய் வடக்கே தலைவைத்துச் சயனித்தால் சிரரோகம், பித்தரோகம், சித்தப்பிரமை, பைத்தியம் முதலிய வியாதியுண்டாகுமென்று முன்னோர் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. இதுகாறும் இதை யலட்சியம் செய்துவந்தார்கள். இப்போது பூமியைச் சுற்றி இராக்காலங்களில் ஒருவித மின் சாரசக்தி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி யோடுகிறதென்றும், அது எப்பாகத்தில் பிரவேசிக்கிறதோ யப்பாகத்திற்கு நன்மையையும், எப்பாகத்தை விடுகிறதோ வதற்குத் தீமையையும் செய்கிற தென்றும் கண்டுபிடித்தார்கள். அதன்படி நாம் வடக்கே சயனித்துக் கொண்டால், அந்த மின்சாரம் கால்வழியே பிரவேசித்துச் சிரசின் வழியே வெளிப்படுகிறது. அப்போது கால்களுக்குநன்மையையும் சிரசிற்குத் தீமையையும்செய்கிறது. சிரசின் மேல்பாகத்தில் மூளை யிருப்பதால் அதற்குக் கெடுதிசெய்கிறது. அதனால் சிரநோய், பித்தநோய், சித்தப் பிரமை, பைத்தியம் முதலியவை யுண்டாகுமென்று நம் முன்னோர் கூறியது உண்மையேயென்று நன்கு விளங்குகிறது.

சகோதர சகோதரிகளே! இவ்வாறே நமது முன்னோர் ஏற்பாடுகள் யாவையும், வீட்டைச் சாணம் கோசலம் இவற்றால் மெழுகுதல், வாயிற்படிகளில் மஞ்சள் குங்குமம் இட்டுதல், அரசமரம் வேப்பமரம் சேர்ந்திருப்பதைப் பூஜித்தல் பிரதக்ஷணம் செய்தல், விரதங்கள் அனுஷ்டித்தல் முதலிய ஒவ்வொன்றும் பயன் தரத்தக்கவைகளே. சிலவற்றிற்கு நமக்குக் காரணம் தெரியாததனாலேயே அவற்றைத் தூஷித்தலும் அலக்ஷியம்செய்தலும் அறியாமை யாகும் என்பதைக் கருத்தில்வைத்து நாம் நடந்துகொள்ள வேண்டும்.

பத்திரிகாசிரியர்.

## வைப்பு.

இது, சேமதிரவியம் முதலிய பலபொருள் குறிக்கும் ஓர்வகைத் திரிசொல். 'வைப்பு' 'விகுதி' பெற்றதொழிற்பெயர் 'வை' பகுதி-இதை அறிந்தோ அறியாமலோ யாவரும் அனுஷ்டிக்கின்றனர். எறும்பாதிய அஃறிணைச் சீவன்களும், தமக்குக் கஷ்டம் தருவதாகிய மாரிகாலத்திற்காக கோடைகாலத்திலேயே தம்புற்றுக்குள் பண்டசாலைகளியற்றி, தானிய தலசங்களைச் சேமித்து வைத்துக்கொள்ளுகின்றன. நாமும் நமக்கு வேண்டியவற்றை, இரவின்பொருட்டுப் பகலிலும், நம்மாயுளின் பிற்பாகத்துக்குதவ முற்பாகத்தும், சிறுகச் சிறுக இயன்றவரை, சேமித்துவைத்துக் கொள்ளுகின்றோம். ஈட்டும் பொருளுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாவண்ணம், "சேவிங்ஸ்பாங்கி," என்னும் சேமநிதிகளிற் சேமித்துவைக்கிறோமன்றோ? இதுவே வைப்பு, எனப் பெயர்பெறும்.

தோட்டிமுதல் தொண்டைமான் வரையுள்ள சகலரும், சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க்கடல் கடந்தும், பாராண்டும், பாட்டிசைத்தும், அரும்பாடு பெரும்பாடுபடுவதெல்லாம் பொருளின் பொருட்டே. பொருளாலுண்டாம் பயனென்ன? துன்பத்தை யாவரேனும் விரும்புவரோ? உலகத்தில் நாமனுபவிக்கவேண்டிய சுகங்களெல்லாம் பொருளாலேயே யாவது. பொருளிலார்க் கிவ்வுலகமே யில்லை. உலகமே பொருள்பயம். பணமில்லான் பிணமே யாவன்.

பொருளிலார்க் கின்பம் இல்லை
புண்ணியம் இல்லை என்றும்
மருவுறு கீர்த்தி யில்லை
மாந்தருட் பெருமை யில்லை
கருதிய கருமம் இல்லை
கதிபெறு வழியும் இல்லை
பெருநிலத் திடை நடக்கும்
பிணமெனப் படுவ ரன்றே.

இச்செய்யுளொன்றே, பொருளின் பெருமையை விளக்கப் போதுமாகையாலும், அதன் பெருமையை யுணராதா ரெவருமிலராகையாலும், இம்மட்டோடுவிட்டு மேலேசெல்வோம். அப்பொருளைப் பெறுமா றெங்ஙனே? யெனக் கடாவுவார்க்கு யாதுரைப்பது? நன்மையாகவோ, தீமையாகவோ அநந்தம் மார்க்கங்களுள. அவையாவும் "முயற்சி திருவினையாக்கும்," என்றதில் அடங்கும். கல்விகற்பதும், பொருள்முயற்சியே யென்பது பெரும்பாலோருடைய கொள்கை. இதனாலன்றோ, "கல்விகற்று உத்தியோகம் செய்யப் போகிறார்களோ?" என்கிற வாக்கியம் பெண்கல்வி விஷயத்தி லுபயோகப்படுத்தப்படுகின்றது. கல்வியாற்றான் பணம் சம்பாதிக்கக்கூடு மென்பதில்லை, என்னை? கல்லாதவனும், காய்கறி விற்றுக் கருந்தனம் பெற்றுக் களிப்படைகிறான். செல்வம் முயற்சியாற் கிடைப்பதாயின், சிலர் வறியோராகவும் சிலர் செல்வராகவும் காணப்படுவதேன்? முயற்சியளவிற் பேதமோ? அப்படியுங் காணோம். காலியாயிருக்கும் ஒரிராஜாங்க நீதிபதி உத்தியோகத்திற் கேற்ற பட்டதாரிகள் பல்லோர் முயன்றாலும் பெறக்கூடியவர் ஒருவரேயன்றோ?

இது ஒன்றற்கொன்று இரண்படுதலின், 'திருவும் வறுமையும் சென்றநாட் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப நிகழ்வனவேயாகும்' என அறியக்கிடக்கின்றது.



"ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்."

* * * * * *

"தக்கமுற் பவத்திலான்ற தருமநன் கியற்றினோர்கள்
ஒக்கவிப் பவத்திலின்ப மொருங்களு பவிப்பர் இன்றேல்
மிக்கவெந் துயரத்தாழ்வர்."

முற்பிறவியில் தக்க தருமமியற்றினோர் இப்பிறவியில் பொருளை நிரம்பப் பெற்று அதன்பயனுய சுகமனுபவிப்பர். அப்படி முற்பிறப்பில் தருமம் செய்யாதார்க்கு துக்கப்ராப்தியே. அந்தோ! எத்தனைகோடி ஜனங்கள் மிடியால் வருந்துகின்றனர். பல முயற்சிகள் செய்வோரும், 'விடியாமூஞ்சி வேலைக்குப் போனால், வேலைகிடைத்தாலும் கூலிகிடைக்காது,' என்ற வாக்கியத்திற் கிலக்காகின்றனர். "வருந்தி யழைத்தாலும் வாராதவாரா வன்றோ?

"எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லால்"

எப்படிவரும்? வெறும் பானைபொங்குமோ மேல்? நல்ல சம்பாதனைக்காலத்திலேயே பின்னுக்கென்று வைப்புவைத்துக்கொள்ளாதவன் வருந்துவது நியாயந்தானே.

முன்னே தருமம்செய்தோமோ யில்லையோ? இப்போது செல்வம் அனுபவிக்கின்றோமோ யில்லையோ? அது எண்ணத்தக்கதன்று. கழிவுக்குக் கவல்வானேன். முற்கூறியவாறு கூடுமானபோதே இயன்றவரை தருமம்செய்து வைத்துக்கொள்ளவேண்டுவ தத்தியாவசியமாகின்றது. நாளைநாளை என்பதிற் பயனின்மை யுணர்க. இன்றுள்ளதாகிய செல்வம் நாளையுண்டாங்கொல்? சகடக்கால்போன்ற தன்றேவஃது. "ஆறிடுமேடும் மடுவும்போ லாஞ்செல்வம்" யாக்கையும் நீர்மே லெழுத்தொப்பது.

"காலைச் செய்வோ மென்றறத்தைக் கடைப்பிடித்து
சாலச் செய்வோரே தலைப்படுவர்—மாலை
கிடந்தா னெழுத லரிதால் மற்றெங்கொல்
அறங்காலை செய்யாத வாறு."

இம்மையில் நாம் எத்தனைச் செல்வம்பெற்றிருப்பினும் உடன்வரும் தகைமைத்தோ? இன்று மறுமையினுதவுமோ? அறமொன்றேவரும்; அஃதொன்றே உதவும்.

"தன்னொடு செல்வது வேண்டி னறஞ்செய்க" என்னும் அரும்பொருள் இங்கு அறியத்தக்கது. பிறகு வறுமையா லலைப்புண்டு தடுமாறுங்காலத்து தெய்வத்தை நோவதிற் பயனென்? "செய்தீ வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால், எய்தவருமோ இருநிதியம்." "உழுகிறநாளில் ஊர்திரிந்து, அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டுபோனால் யாதுபயன்? ஆகையால்,

"அறமேவைப்பு; அறமேவைப்பு."

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு—மத்தகத்
தக்குழிநோக்கி யறஞ்செய்யி னஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது."

இம்மையிற் பெற்று மறுமைக் களிப்பதால் யாசிப்போரே உண்மையில் நமக்கு நன்மைபுரிவோ ராவர்.

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா
லயத்திற் கீந்தும்
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு
கேட் டுவந்தும்
வைப்பென இரப்போர்க் கீந்தும் வருபவ
ருளரேல் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ
னின்பத் தாழ்வார்.

" அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை "

அவ்வாறாயின் பிறவி நீடுதெனக்கண்டு பவசாகரத்தைக் கடக்க என்னுழி யான் அறஞ் செய்யவேண்டிய அவசியமில்லை யன்றோ வென்னும் வினா வுண்டாகுமோ? ஆம். இது நல்லவினாவே. இதற்கு விடையாக ஆன்றோர் கூறியுள்ளதனையே யீண்டுகூறி மற்றதைக் கவனிப்போம்.

" இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
யிடும்பொய்யை மெய்யென் றிராதே—யிடுங்கடுக
வுண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. (நல்வழி)

(இ-ள்) நிலையில்லா உடம்பு உள்ளபொழுதே சற்பாத்திரத்திலே தானஞ் செய்தவருக்கு, அந்தத் தருமத்தினாலே சற்குரு கடாக்ஷமும், அதனால் ஞானமும், அந்த ஞானத்தினாலே முத்தியும் சித்திக்கும். (தொடரும்)

பூ. ஸ்ரீநிவாஸன், ராணிப்பேட்டை.

---

## ஐய வினாவிற்கு விடை

(1) 454-ம் பக்கம் முதல்வரியிலிருக்கும் உஷ்ணகாலஸ்நானம் என்பதை உதயகால ஸ்நானம் என்று மாற்றிக்கொள்ளவும். ஏனெனில் இது எமது கைப்பிழையோ அச்சுப்பிழையோ அறியக்கூடவில்லை.

(2) வெயில் தோன்றியபிறகு ஸ்நானம் செய்வதும் அனுகூலமேயாம் என்றது ஸ்திரீகள் விஷயமாதலால் முரணுமாறில்லை யென்க.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## நித்தியவிதி—ஜபம்.

(78-ம் பக்கத்தொடர்ச்சி)

முற்கூறியவாறு ஸ்நாநாதிகளால் சுத்தியடைந்து பிராணாயாமத்தால் நாடி சோதனைசெய்து ஹ்ருதயகமலத்தைமலர்த்தி, யதனுள் சர்வேசுவரனுடைய சொரூபத்தைப் பாவித்துக்கொண்டு நிச்சலசித்தமுடையவனாய் ஜபம்செய்ய வேண்டும். ஜபம் என்பது மஹாமகிமையுடையதென்றும், சர்வகாரிய சித்தியளிக்கவல்லதென்றும் தோன்றுகிறது. ஆதலால்தான் ஆஸ்திகசம்பந்தம்பெற்ற எல்லா மதஸ்தரும் ஜபத்தை மகிமைப்படுத்துகின்றனர். ஆனால் அந்நியதேசத்தார் செய்யும் ஜபத்திற்கும் நமது ஜபத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அதைப்பற்றி யிங்கெழுதுவது அவசியமன்று. எல்லாதேசத்தாராலும் ஜபம் என்பது மகிமைப்படுத்தப்பட்டுள்ளது என்பதுமட்டுமே யீங்குகொள்ளத்தக்கது. ஜபமென்பது பிரமதியானமேயாம்.



இந்த ஜபம் வருணங்களுக் கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் எல்லா வருணத்தாருக்கும் ஜபமென்பது பொதுவாம். ஆதலால் எல்லாரும் ஜபம் செய்தேதீரவேண்டும். அந்தணர்களுக்குக் காயத்திரி மஹாமந்திரஜபமே சிலாக்கியமுடையது. அதை ஜபிப்பதே அவர்களுக்கு இம்மை மறுமைகளுக்கு நன்மை பயக்கும். அன்றியும் வம்ச பரம்பரையின் வழக்கப்படியே பஞ்சாட்சரம் அஷ்டாட்சரம் முதலியவும் ஜபிக்கத் தக்கன.

வைணவசமயிகள் அஷ்டாக்ஷரத்தையும், சாம்பவர்கள் சிவபஞ்சாட்சரத்தையும் முறைப்படி ஜபிக்கவேண்டும். ஏனைய வருணத்தாருக்குப் பரம்பரையை ஒட்டி அட்சாட்சரமாவது, பஞ்சாட்சரமாவது ஜபித்தற் குரியதாம்.

அடங்காக் குதிரையைக் கடிவாளத்தால் அடக்குவதுபோலப் பிராணாயாம பலத்தால் மனதைப் புலன்வழி ஓடாமல் அடக்கி வசப்படுத்திக்கொண்டு, பகிர்முகப்பார்வையை ஒழித்து, உண்முகமாக நோக்கி நின்று, விழிகளைப் புருவமத்தியில் அமைத்துக்கொண்டு, தமது குருவின் உபதேசப்படி தெய்வச் சொரூபத்தைச் சிந்தித்து ஜபிக்கவேண்டும். அப்போது மனம் தெய்வ சொரூபத்தைச் சிந்திக்கும். வாக்குமந்திரத்தை உச்சரிக்கும். கட்புலன் வேறு பொருளைக் கவனியாது தெய்வ சொரூபத்தையே பார்க்கும். கை மந்திர உருவைக் கணக்கிடும். இதனால் வாக்கு மனம் காயம் மூன்றும் ஒருங்குசேர்ந்து ஒரே தொழிலைச் செய்யும். இங்ஙனம் திரிகரணங்களும் ஒன்றிநிற்பதே சகலகாரிய சித்திகளுக்கும் மோட்சத்துக்கும் ஹேதுவாம். இவ்வாறு ஜபித்தே முன்னோர்கள் அளவிலாப்பேறுபெற்றார்கள். அது சகுணோபாசனை யென்னப்படும்.

அளவிலாற்றலுடையதும், வரம்பிலின்பமுடையதும், ஆதிமத்தி யாந்தமில்லாததும், செல்காலம் நிகழ்காலம் வருங்காலமென்கிற முக்காலத்துமுள்ளதும், ஒப்புயர்வற்றதும், சத்து சித்து ஆனந்தமாகிய சொரூபத்தை யுடையதும், எல்லாவற்றுக்குங் காரணமாயுள்ளதும், தனக்கு ஒருகாரணமில்லாததும், மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாததும், பக்தியில் தோன்றுவதும், ஆகியுள்ள பரம்பொருளுக்குச் சகுணம் நிர்க்குணம் என இரண்டு சொரூபங்களுள. இவையே சகளசொரூபம் நிஷ்களசொரூபம் என்று கூறப்படும். இவற்றுள் நிர்க்குண சொரூபதியானம் எல்லாருக்கும் சாத்தியமன்று. கீழ்ச்சென்ற அநந்தகோடி ஜன்மங்களில் செய்த புண்ணியபலம் நிறைந்து மஹாத்மாக்களுடைய மெய்ஞ்ஞான அறிவில் ஜோதி சொரூபமாய் விளங்குவது. ஆதலால் அதுமாயையைக் கடந்த மஹான்களுக்கே யுரியது. சகுணசொரூபமோ எல்லாராலும் தியானிக்கக்கூடியது. ஆதலால் மந்திரஜபம் யாவருக்கும் பொதுவாய்க் காரியசித்தியளிப்பதுமன்றி நிர்க்குணபிரம உபாசனைக்குக் காரணமாய்நின்று காலாந்தரத்தில் பயன்படுவது என்பர் மேலோர்.

சகுண சொரூபமென்பது, தனக்கென ஒரு உருவமில்லாத பரம்பொருள் பக்தானுக்கிரக காரணமாகத் தனது இச்சையாலெடுத்துக்கொண்ட திருவுருவம். இந்தச் சொரூபங்கள் வேதாகமபுராண இதிகாசங்களிலும், தரும சாஸ்திரங்களிலும் விளங்கக்கூறப்பட்டுள்ளன. மந்திரங்களும் பரபிரமத்துக்கு வர்ணசொரூபமென்னப்படும். வர்ணம் என்பது எழுத்து. " மாதுருகை " என்னப்பட்ட மந்திரம் ஈசுவரியின் சொரூபமென்னப்பட்டது. பஞ்சாட்சரத்தைச் சிவசொரூபமென்பது சைவாகமங்களில் பரந்துகிடக்கின்றது. அஷ்டாட்சரமும் மஹாவிஷ்ணுமூர்த்தியின் சொரூபமேயாம். ஆதலால் எவ்வித சொரூபத்தையும் சிந்தியாது மனவொற்றுமையுடன் இம்மந்திரங்களில் ஒன்றைச் சிந்தித்தாலும் அளவுகடந்த பேறுபெறலாம். இக்காரணம்பற்றியே யந்திரங்களில் அட்சரங்களையே அமைத்துப் பூஜிப்பதுமாம். அன்றியும் சில மந்திரங்களுக்குப்

பொருள் காண்பதரிது. ஆயினும் அதைச் சிந்தித்து உருவேற்றில் பெறும் பேறு அளவுகடந்தது. இதனால் மந்திரதியானமென்பது தெய்வ சொரூபதியானமேயாம். ஆதலால் எல்லா வருணத்தாரும் தத்தம் மரபுக் கேற்றவாறு குறிக்கப்பட்ட மந்திர உபதேச முறைப்படி ஜபித்தே தீரவேண்டும். அதனால் காரிய சித்தி யுண்டாவதைச் சுயமாகவே அனுபவித்திருக்கலாம்.

சூரியனுக் கெதிர்முகமாக விருந்தேனும், வடக்குமுகமாக விருந்தேனும் மௌனமாயிருந்து ஜபிக்கவேண்டும். லௌகிக விஷயங்களைக் கவனித்துக் கொண்டு ஜபிக்கலாகாது. ஜபிக்கும்போது சோம்பல் நித்திரை தும்மல், கொட்டாவி விடுதலாதி துர்க்குணங்களில்லாம லிருக்கவேண்டும். அப்படி யேதாவது சம்பவித்தால் உடனே பிராணாயாமஞ்செய்து பரிசுத்தனாகவேண்டும். ஆசமனம் செய்தலும் விதியாம். பிறர் காதில் படும்படி மந்திரங்களையுச்சரித்து ஜபித்தல் கூடாது. பிறருக்குக் கேளாம லுச்சரிக்கவேண்டும். இப்படி ஜபித்தால் ஒன்று நூறுபங்கு பலனைக்கொடுக்கும். நாவசையும் அளவே யுச்சரித்தால் ஆயிரம் பங்குபலனுண்டாம். மனதால் எழுத்துக்களை வரிசையாகத் தியானித்து ஜபித்தால் பதினாயிரம்பங்கு பலனதிகமாம். ஆயிரத்தெட்டுத்தரம் உச்சரிப்பது உத்தமம். இல்லாதாயின் நூற்றெட்டுத் தடவையேனும் ஜபிக்கவேண்டும். இதனை மத்திமம் என்பர். அதுவும் இல்லாதாயின் பத்துத்தரமாயினும் முறைப்படி ஜபித்தல்வேண்டும். இது அதமபட்சமென்னப்படும். உத்தமம் ஆயிரத்திருபத்து. நாலு, மத்திமம் நூற்றிருபத்தெட்டு, அதமம் பதினாறு என்பதுமோர்கொள்கை. இவை பரம்பரை வழக்கம், உபதேசமுறை இவற்றை யனுசரித்துச் செய்யத்தக்கது.

இவ்வெண்ணிக்கைகளைக் கைவிரல்களால் எண்ணி ஜபிப்பது ஒருபங்கு பலன்; விரலின்கணுள்ள ரேகைகளைக்கொண்டு கணக்கிடுவது எண்மடங்கும், ஜீவாத்தினங்களினால், பத்துமடங்கும், சங்கமணியால் நூறுபங்கும், பவளத்தால் ஆயிரம்பங்கும், ஸ்படிகமணியால் பதினாயிரம்பங்கும், முத்துக்களால் நூறாயிரம்பங்கும், தாமரைமணிகளால் பத்துலட்சம்பங்கும், பொன்மணிகளால் கோடிபங்கும், தர்ப்பமுடி ருத்திராட்சமாலைகளால் அளவில்லாபங்குபலனுண்டாகும் என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இவற்றுள் ஏதேனுமொன்றைக் கொண்டு கணக்கிடுவது உசிதமாம். ஜபமாலையில் நூற்றெட்டு மணிகளிட்டுக் கட்டுவது உத்தமமென்றும், ஐம்பத்துநாலு மத்திமம் என்றும், இருபத்தேழு அதமம் என்றும் கூறப்படுள்ளது. கணக்கிடாமலும், நடுவில் பேசிக்கொண்டும், நடந்துகொண்டும் செய்யும் ஜபம் பலன் தவாராது. ஏனெனில் அடச்ரலட்சம் ஜபித்தலே மந்திரசித்தியென்று நூல்கள் விதித்தலால் என்க. வீட்டிலிருந்து ஜபிப்பதைவிட நதிக்கரையிலிருந்து ஜபிப்பது இருமடங்குபலன்தரும். பசுத்தொழுவம் அக்கினிசாலை யிவற்றிலிருந்து ஜபித்தால் நூறுபங்கு பலனதிகம். புண்ணியதீர்த்தம் தேவாலயங்களிலிருந்து ஜபித்தால் கோடிபங்கு பலனதிகமாம் என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இனி "அக்ஷரமாலிகை" என்று ஒரு ஜபமாலையுண்டு. அது வடமொழி ஐம்பத்தோரட்சங்களாலாக்கப்பட்டமாலை. அதைக்கொண்டு ஜபிப்பது அளவுகடந்த பலனைக்கொடுத்து மந்திரசித்தியையுமுண்டாக்கும். இந்த மாலையால் நடக்கிறபோதும் வேலைசெய்யும்போதும் எப்போதும் ஜபிக்கலாம். இப்படி ஜபிப்பது மனவொற்றுமையைத் தடையின்றி யுண்டாக்கும். தெய்வசித்தனை மாறாது. இதனைக் குருமுகத்தால் உணர்ந்துகொள்ளவேண்டியது. இந்த அட்சாமாலிகா பிரபாவத்தினாலேயே ரிஷிகளெல்லாரும் மந்திரசித்தியை யடைந்தார்கள். நிற்க ஜபம்செய்யும் ஜபமாலையைப் பிறர்காணாதபடி மூடிக்கொண்டே ஜபிக்கவேண்டும். ஆசாரியனுங்



காணாதபடி" ஜபிக்கவேண்டும் என்பர். கூறிய எல்லாவற்றையும் பரம்பரை முறைப்படி குருமுகத்தாலுணர்ந்து முறைதவறாது ஜபம் செய்தால் காரிய சித்தியுண்டா மென்பதில் சந்தேகமில்லை.

(தொடரும்.)

எஸ்: சிவானந்த யோகீஸ்வரர்.

---

## பிழை திருத்தம்.

75-வது பக்கம் (பிராணாயாமம்) 2-வது பத்தி 15-வதுவரியில் "ஒருநாளாயுசை" என்பதை "ஒருநாழிகை ஆயுசை" என்று திருத்திக்கொள்ளவும்.

"ஆவணி சஞ்சிகையில் வெளியான பொது சமாசாரங்களிலுள்ள "உலகில் பெரிய இரயில் ஸ்டேஷன்" "இலங்கை புதுகவர்னர்" என்ற இரண்டு விஷயங்களும், ஆடிமாத சஞ்சிகையில் 29-ம் பக்கத்திலுள்ள "குற்றங்கண்டித்தல்" என்ற விஷயமும் சில அசந்தர்ப்பங்களால், தவறாய்ச் சேர்க்கப்பட்டன.

போன ஆவணிமீ சஞ்சிகையில் சுதேசிபொத்தான் விளம்பரத்தில் 3-வது வரியை ரூபாய் 1-க்கு டஜன் 16 என்றும், நெ. 16 ஷாப்பு நாகூர் என்பதை ஷாப்பு நாகூர் என்றும் 63-ம் பக்கத்தில் இ. வே. மகாதேவபிள்ளை என்பதை இ. வே. மகாதேவ அய்யர் என்றும் திருத்திக்கொள்ளவும். பத்திரிகாசிரியர்.

---

## பகவத்கீதை—கருமயோகம்.

(61-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத். 4. சு. 19, 20. எவனது சகலகருமங்களும் ஆசை சங்கற்பம் என்பன அற்றிருக்குமோ, ஞானமாகிய அக்கினியா லெரிக்கப்பட்ட கருமத்தையுடைய அவனை ஞானிகள் விவேகியாகச் சொல்கின்றார்கள். கருமத்தில் அபிமானம் பலனில் ஆசை யென்பனவற்றைவிட்டு எப்பொழுதும் நித்திய திருப்தியுள்ளவனும் ஒருவரையும் ஆசிரயிக்காமலு மிருக்கின்றவன், கருமத்திற் பிரவிருத்தித்திருந்தபோதிலும் அவன் ஒரு கருமத்தையுஞ் செய்யவேயில்லை (கருமபந்தமில்லையென்பது கருத்து)

சு. 21. ஆசையில்லாமலும், மனம் இந்திரியங்கள் என்பனவற்றை யடக்கியும் சகல சம்பாத்தியத்தைவிட்டும், சரீரம் நிலைத்திருப்பதற்காக கான கருமத்தைமாத்திரஞ் செய்கின்றவன் பாபத்தை யடைதலில்லை. (சு-ம்) பாப புண்ணியங்களின் பலனாகிய சம்சாரத்தையடைதலில்லை யென்றும் (பாஷ்ி) பாபபுண்ணியங்களின் பலனாகிய சம்சாரத்தை யடைதலில்லையென்றால், கருமயோகத்தாலே ஆத்மாவைப் பார்க்கின்றானென்பது தாத்பரியமென்றும், சொல்கிறார்கள் (இதற்கு பாசுரம்)

திருமாலை தமிழ்வேதம்.

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையே மிகவுணர்ந்து
ஆம்பரி சறிந்துக்கொண்டு ஐம்புல னகத்தடக்கிக்
காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும்
சோம்பரை யுகத்திபோலும் சூழ்புன லரங்கத்தானே.

சு. 22-23. விரும்பாமற் கிடைத்தலாபத்தால் திருப்தி யடைந்தவனாகவும் சீதோஷ்ண சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பற்றவனாகவும், மாச்சரியமில்லாதவனாகவும், (அநிச்சையா பிராரப்த நிவர்த்திக்குவேண்டியவை) கிடைப்

பினும் கிடையாவிடினும் உவப்பாவது வெறுப்பாவது இல்லாமற் சமமாயிருக்கின்றவன் கருமங்களைச் செய்தபோதிலுங் கருமபந்தத்தை யடைதலில்லை. அபிமானங்களை விட்டும் காமக்குரோதங்களைத் தவிர்த்தும் ஞானத்தாலே ஸ்திரமான மனமுடையவனாய்ப் பகவதாராதனார்த்தமாகவே செய்கின்றவனது கருமம் பலனோடு நசிக்கும்.

சு. 25. சில கருமயோகிகள் தெய்வங்களை யுத்தேசித்த யாகத்தையே செவ்வையாய்ச் செய்கின்றார்கள். சில ஞானயோகிகள் பிரமார்ப்பணமான யாகத்தாலே ஆத்மாவைப் பிரமமாகின்ற அக்கினியில் ஓமஞ்செய்கின்றார்கள்.

சிலர் காது முதலிய இந்திரியங்களை விஷயங்களிற் பிரவேசியாமல் அடக்குதலாகிய அக்கினியில் ஓமஞ் செய்கின்றார்கள். வேறு சிலர் சப்தமுதலிய விஷயங்களை இந்திரியங்களாகிய அக்கினியில் ஓமஞ்செய்கின்றார்கள். (விஷயங்களை அநுபவித்தாலும், அநுபவிக்கின்ற விஷயங்களை ஈசுவர ஆராதனமாக எண்ணுதலே ஓமமென்று இராகவேந்திர சுவாமிகள் சொல்கிறார்.)

சு. 27. சிலர் ஞானேந்திரிய கருமேந்திரிய வியாபாரங்களையும், பிராண வாயு முதலிய பத்து வாயுக்களின் வியாபாரங்களையும், ஞானத்தாற் பிரகாசிக்கின்ற பிரம ஞானநிஷ்டையில் மனத்தை நிறுத்தலாகிய யோகமென்னும் அக்கினியில் ஓமம் செய்கின்றார்கள்.

சு. 28. சிலர் பொருள் ஈதலை யாகமாகச் செய்கின்றார்கள். சிலர் தவத்தையே யாகமாகச் செய்கின்றார்கள். சிலர் யோகத்தையே யாகமாகச் செய்கின்றார்கள். சிலர் அவ்வாறே வேதசாஸ்திரங்களைப் பாராயணஞ்செய்தல், அவற்றின் அர்த்த விசாரஞ்செய்தல், இவற்றையே யாகமாகச் செய்கின்றார்கள். இவ்வித யாகங்களைச் செய்பவர்கள் கடினமான விரதத்தையுடையவர்களா யிருக்கின்றார்கள்.

சு. 29. பிராணாயாமம் செய்பவர்களாகிய வேறு சிலர் பிராணாபான வாயுக்களின் நடைகளைத்தடுத்து, அபானவாயுவிற் பிராணபானவையும் அப்படியே பிராணவாயுவில் அபானவாயுவையும் ஓமஞ்செய்கின்றார்கள். (ராமாநுஜர்) இந்த அத்தியாயம் சுலோகம் 25 முதல் இதுவரையிலும் கருமயோகம் பலவிதமென்றருளினான் என்று சொல்கிறார்.

சு. 30. சிலர் மிதமான ஆகாரஞ் செய்துகொண்டு இந்திரியங்களின் வியாபாரங்களைத் தமக்கு வசப்பட்ட இந்திரியங்களிலே ஓமஞ் செய்கின்றார்கள். இவர்களெல்லாம் யாகத்தை அறிந்தவர்கள். யாகத்தால் தமது பாபத்தைப் போக்கடித்துக் கொண்டவர்கள்.

சு. 31. நித்திய நைமித்திய முதலிய யாகங்கள்செய்து மிச்சமாகிய அமிர்தமான அன்னத்தை யுண்பவர்கள் சாசுவதமான பிரமத்தை யடைவார்கள். ஏ குருவம்ச சிரேஷ்ட! யாகஞ்செய்யாதவனுக்கு இந்த லோகமில்லை மற்றது ஏது.

சு. 32. இப்படிப்பட்ட அநேகவிதமான யாகங்கள் வேதத்தின் முகத்தில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வெல்லா யாகங்களையும் கருமத்தாலுண்டானவையாக அறி. இவ்விதம் அறிந்தால் கருமபந்தத்தினின்றும் விடப்படுவாய். (சங்கரர்) "இவ்விதம் அறிந்து" என்றதின் தாத்பரியம் யாக முதலிய கருமங்கள் ஆத்மாவைச் சார்ந்ததல்ல, மனோவாக்குக் காயங்களின் செய்கையென்றறிந்து ஆத்மஞான நிஷ்டையிலிருந்தால் கருமந்தொடரா தென்பதென்றும் (ராமாநுஜர்) அநேகவித கருமயோகங்கள், ஆத்மசொரூப நிச்சயமடைதற்குக் காரணங்களா யிருக்கின்றன. மேலேகூறிய எல்லாக் கருமயோகங்களும்



தினந்தோறும் அநுஷ்டிக்கின்ற நித்திய நைமித்திக கருமங்களாலுண்டாயினவென்று அறி என்றும், இவ்விதமறிந்து அநுஷ்டித்துவந்தால் மோக்ஷமடைவாயென்றுஞ் சொல்கிறார்கள்.

சு. 33. எதிரிகளைப் பரதபிக்கக்கூடிய புஜபல சக்தியுடைய அர்ச்சுனா! திரவியத்தாற் செய்யக்கூடிய யாகத்திலும் ஞானமாகியயாகஞ் சிரேஷ்டமாகும். ஏ பார்த்த! பகவதருப்பணமாகச் செய்யப்படும் சகல கருமங்களும் பலன்களோடு ஞானத்திலே யடங்கியிருக்கின்றன யென்றதற்கு ராமாநுஜர் அல்லது பாஷியக்காரர் திரவிய முதலியவற்றால் செய்யப்படுகின்ற கருமமாகிய யாகத்தில் ஞானம் அடங்கியிருக்கின்றது, எவ்வாறேனெனின், யக்ஞரூபமான ஒவ்வொரு கருமத்திலும் ஒருபாகம் கருமமாயும் மற்றொருபாகம் ஞானமாயுமிருக்கின்றது. கருமபாகத்திலும் ஞானபாகஞ் சிரேஷ்டமாயது. ஏ. பார்த்த? சகல கருமங்களும் அவற்றிற் குபயோகமான சகல வஸ்துகளும் ஞானத்தி லடங்கியிருக்கின்றதென்றால், இப்படிக் கருமஞ் செய்துவந்தால் அந்தக் கருமமே ஞானகாரமாய் விடுமென்பது என்று கருத்தென்றுஞ் சொல்கிறார்.

சு. 34, 35. "ஓ பாண்டவ! ஆத்தும தத்துவத்தை யறிந்த பிரம ஞானிகள் எந்தப் பிரமஞானத்தை உனக்கு உபதேசிப்பார்களோ, எந்த ஞானத்தையடைந்து மீண்டும் இவ்வித மோகத்தை யடைய மாட்டாயோ, அடையமாட்டாமையானமையாலே எந்த ஞானத்தால் சகலப் பிராணிகளையும் அந்தர்யாமி யாகிய என்னிடத்திலே பார்ப்பாயோ அந்தஞானத்தை, அல்லது எந்த ஞானத்தாலே சகலப்பிராணிகளையும் உன்னிடத்திலும் அப்படியே என்னிடத்திலும் பார்ப்பாயோ அந்த ஞானத்தை, சாஷ்டாங்க நமஸ்காரத்தாலுஞ் செவ்வையாய்க்கேட்பதாலும் ஆசாரியசேவையாலும் அறிந்துகொள்" என்றதற்கு (ஸ்ரீதர சுவாமிகள்) சகல பூதங்களையும் உன்னிடத்தில் அபேதமாய்ப் பார்த்துப் பின்பு உன்னையும் என்னிடத்தில் அபேதமாய்ப் பார்ப்பா யென்றும், (ராமாநுஜர்) இப்பொழுது சொல்லிப் போந்தவிதமாய்க் கருமயோகத்தை நீ அநுஷ்டித்து வந்தால் அவ் யோகத்தின் சித்தியுண்டாகும்; அந்தச் சித்தியுண்டாகுங் காலத்தில் பெரியோர்களைச் சார்ந்து சேவை செய்வாயாயின் அவர்களுனக்கு ஞானோபதேசஞ் செய்வார்களென்றும், எந்த ஞானத்தை யடைந்தால் தேகாதிகளில் ஆத்மாபிமானமும் அத்தாலுண்டாகிய மமதை முதலியவைகளு மாகிய மோகத்தை யடையமாட்டாயோ, "எந்த ஞானத்தை யடைந்தால் தேவ, மநுஷ்ய, மிருகாதி, ஆகாரத்தோடு இருக்கின்ற சகலபூதங்களையும் உன்னிடத்திற்பார்ப்பாயோ" என்றால், பிரகிருதியினின்று நீங்கிய ஜீவாத்ம சொரூப மெல்லாம் ஒரு தன்மையாய் உன் ஆத்ம சொரூபம்போலே ஞானகார சொரூபமென்று பார்ப்பாயோ என்பது கருத்தென்றும், இந்த அர்த்தம். அத். 5 சு. 13 ல் கூறப்பட்டிருக்கின்றதென்றும், "அவ்வாறே, என்னிடத்திற் சகல பிராணிகளையும் பார்ப்பாயோ" என்றால் பிரகிருதி விமுத்தமான சகல ஜீவசொரூபத்தையும் எனது சொரூபத்திற்குச் சமமென்று பார்ப்பாயோ யென்பது கருத்தென்றும், இந்த அர்த்தம். அத். 14. சு. 2 ல் கூறப்பட்டுள்ளது இவ்வாக்கியங்களாலே சகல ஜீவாத்ம சொரூபம் ஒன்றோடொன்று சமானமாய தென்றும், அச்சொரூபங்களும் பரமாத்ம சொரூபத்திற்குச் சமானமாய தென்றும் பார்ப்பாய் என்பது கருத்தென்றுஞ் சொல்கிறார்.

(சு. 41, 42.) ஏ தனஞ்செய! பலாபேக்ஷையை விட்டுப் பகவதர்ப்பண புத்தியோடு செய்கின்ற கருமயோகியாயும், ஞானத்தாலே சகல ஐயங்களையும் போக்கிக்கொண்டவனாயும், பிரமநிஷ்டனாயு மிருப்பவனைக் கருமங்கள் பந்தஞ் செய்யமாட்டா. ஏ. பார்த்த! ஆதலால் உனது புத்தியி லிருக்கின்றதும் அஞ்ஞா

னத்தாலுண்டாயதுமான இந்த சந்தேகத்தை ஞானமாகிய வாளாலே சேதித்துக் கருமயோகத்தை அநுஷ்டானஞ் செய், எழுந்திரு.

(தொடரும்.)

குறிப்பு:—என் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே. யாவருக்கும் அடியேன் ஓர் ஞாபகஞ் செய்ய முன்வந்ததைக் கவனியுங்கள். சென்ற சஞ்சிகையில் எழுதப்பட்டுள்ள கருமயோக விஷயத்தில் பத்திரிகாசிரியர் குறிப்பி லெழுதிய விஷயத்தை அடியேன் கண்ணுற்றனன். ஆகிலும் அவர் வியாசமுடிவு பெற்றதாகத் தெரியவில்லை இறுதியில்,

ச. 14. 15. லும் கூறியதை, பாஷியக்காரர்கள் தம் தம் கொள்கைக்கு இணங்கக் கூறுவதால் காரண விஷயத்தில் இறையவன் திருவுள்ளம் யாதோ. ஆராய்ந்துணர்க என்றதற்கு (ப-ர்) நாமாக ஆராயவேண்டிய தொன்றுமில்லை யென்பதாம். அடியேனுக்கு நானென்கிற ஆணவமில்லாமல் அவரவர்கள் அபிப்பிராயம்போல் தெளிவு அடையவேண்டு மென்பதே எழுதியது ஸ்ரீமத் சங்கரர் பாஷியத்தைக் கண்டித்து யெழுதியதாகவும் எழுதியுள்ளார். அடியே னெழுதியது ஒவ்வொரு மதக் கொள்கையின்படி அந்தந்த ஆச்சாரியர்கள் யெழுதியதையும் அடியேனுடைய குரு எழுதியதையு மெழுதினேன். ஆகிலும் பகவானுடைய திருவாக்கும், ஆச்சாரிய பாஷியங்களும், ஒவ்வொருவர் அபிப்பிராயங்களையும் ஓர்ந்து மனதுக்குப் பொருந்துமாறு பாருங்கள்.

நா. அ. துருசாமி நாயுடு போத்தனூர்.

ப-ர். குறிப்பு:—நமது நண்பர் தமக்கு அகங்காரம் இல்லாத படியால், மேற்கண்ட விஷயங்களை யவரவர்கள் அபிப்பிராயம்போல் எண்ணிக் கொள்ளட்டும் என்று தாம் கூறினதாக வெழுதுகிறார்.

நமக்கு அகங்காரம் பூரணமா யிருக்கிற தெனினும், ஆத்மவிசாரணைக்குள்ள மூன்று தடைகளில் சந்தேகம் என்பது ஒரு கொடியதடை ஆகையால் "அவர் அப்படி கூறுகிறார், இவர் இப்படி கூறுகிறார்" என்று கூறிவிட்டு முடிவில், "யாவர் கூறுவதும் ஒரு பொருள்தான்" என்றாவது அல்லது "மொத்தக்கருத்து இதுதான்" என்றாவது கூறாமல், "அவரவர்கள் அபிப்பிராயப்படி எண்ணிக் கொள்ளுங்கள்" என்று கூறிவிடுவது சந்தேக விபரீதங்களை யுண்டாக்கிவிடும் என்று கருதியே நாம் கூறியதன்றி வேறில்லை. "நாம் ஆராய்ந்துணர்க என்றதற்கு (ப-ர்.) நாமாக ஆராயவேண்டிய தொன்றுமில்லை என்பதாம்" என்று நண்பர் மேலே கூறுகிறார். நாம் அவ்வளவோடு நிறுத்திவிடவில்லை. பகவானே கூறியிருக்கும் காரணத்தை யெடுத்துக்காட்டி, அதனால் காரணத்தை யறிய நாமாய் ஆராயவேண்டியது ஒன்றுமில்லையெனக் கூறினோம். அகங்காரமொழிந்தோரும் நம்மைப்போல் அகங்காரம் உள்ளோரும் யாவரும் "வாசிப்போர்க்குச் சந்தேகம் உண்டாகும் வண்ணம் இடந்தரலாகாது" என்றே கருதுவார்க ளென்று நம்புகிறோம்.

சங்காராசாரியர் அருளியதைப்பற்றி நமது நண்பர்,

"சங்கரபாஷியத்தை நாம் கண்டித்து எழுதியதாகவும் (ப-ர்.) எழுதியுள்ளார். அடியேன் எழுதியது, ஒவ்வொரு மதக்கொள்கையின்படி அந்தந்த ஆசாரியர்கள் எழுதியதையும், அடியேனுடைய குரு எழுதியதையும் எழுதினேன் ......" என்று கூறுகிறார்.

ஆனால் நண்பர் எழுதியுள்ள வியாசத்தில் (58-வது பக்கத்தின் கடைசி பாகத்திலும் 59-வது பக்கத்தின் முதல் பாகத்திலும்) சங்கராசாரியர் கர்மம் செய்வது தேகமேயன்றி ஆன்மாவல்லவென்று கூறியதாக வெழுதியிருப்பதும், பிறகு (59-வது பக்கத்தின் பிற்பாகத்தில்) "ஆத்மா கர்மம் செய்வதற்கு அதற்கென்னுள்ளன? கைகால் முதலியன உண்டோ? ஆத்மா பிரிந்துவிட்டால் தேகம் எப்படி கர்மம் செய்யும்?" என்பது முதலிய கேள்விகளாலும், குறளில் எடுத்துக் காட்டியிருக்கும் மேற்கோள்களாலும் ஜீவனே கர்மம் செய்கிறது என்று ஸ்தாபித்து, முடிவிலும் "அறஞ்செய்தது யார்? துறக்கம் புக்கது யார்?" முதலிய கேள்விகள் போட்டு, இதனால் தேகாதிகள் செய்யும் கர்மத்திற்கும் ஆன்மாவிற்கும் சம்பந்தமுண்டு என்று நிர்மானித்து, ஸ்ரீ தா சுவாமிகள் கருத்தும் இவ்வாறே யென்பதை மேலே யெடுத்துக் காட்டியிருக்கிறோம்" என்று இவ்வளவு விவரமாய் கண்டித்தெழுதி யிருப்பது பிரத்யக்ஷமாதலால், ஆசாரியஸ்வாமிகள் கருத்து அப்படியல்ல வென்றும் அவர் அவ்வாறு கூறினதாய் நினைக்கச் சற்றும் ஆதாரமில்லை யென்றும் விவகரிக்க நேர்ந்தது. மற்றவை வெளிப்படை யாதலின் இதை வாசிப்போரே நாம் குற்றமாய் ஒன்றையும் கூறவில்லை யென்று அறிந்துகொள்ளலாம்—நாம் முன் கூறிய குறிப்பிற்குப் பதில் வரையவேண்டியது அவசியமென்று நமது நண்பர்க்கு எக்காரணம்பற்றி தோன்றியதோ நாமறியேம். நாம் கூற நேரிட்ட காரணத்தையே இப்போதும் தெளிவாய்க் கூறிவிட்டோம். ஆதலின் இவ்விஷயம் இதோடு முடிவுபெற்றதாகக் கருதப்படுகிறது.



பத்திரிகாசிரியர்.

---

## "ஞயம்பட வுரை"

ஔவையாரருளிய இந்நீதிவாக்கியத்தின் பொருள் "இன்பமுண்டாகப் பேசு" என்பதாம்.

பட்டினத்துப்பிள்ளை யியல்பு.

தொட்டடித்தோ னன்றிசெய்த தூயோ னிருவருக்கும்
பட்டினத்துப் பிள்ளை பகர்ந்ததுபார்—மட்டலருந்
தென்பாகை புன்னைவன நீரனே யாரிடத்தும்
அன்பாய் ஞயம்பட வுரை. (இ-ள்)

ஞயம்பட வுரை என்னும் ஔவை நீதியை அனுசரித்து மனிதர் எவரிடத்தும் இனிமை யுண்டாகும்படி நல்ல வார்த்தைகளைப் பேசவேண்டும். அங்ஙனம் பேசி வரின் பலர் நேயமு மேற்படும். இம்மையில் நன்மையும், மறுமையில் மேன்மையு முண்டாகும்; இதுபற்றியே பட்டினத்துப் பிள்ளை- பட்டினத்தடிகளும், தொட்டு அடித்தோன் - தம்மைத் தீண்டி (வருந்தும்படி) அடித்தவனும், நன்றி செய்த—தமக்கு நன்மைச்செய்த, தூயோன்—பரிசுத்தமுடையவன் (ஆகிய). இருவருக்கும்—இரண்டு பேருக்கும். (சமமாகப்) பகர்ந்தது—நன்மொழி கூறியதை. பார்—நீ ஆராய்ந்து பார்ப்பாயாக. (அஃதிவ்வாறு நன்மை யுடையதா யிருத்தலாலே) யாரிடத்தும்—எவரிடத்திலும். அன்பாய்—பிரியமாகி—ஞயம்பட—இனிமை யுண்டாக—உரை—பேசுவாயாக.

நமது திருவள்ளுவ நாயனாரும்,

பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(க-ரை) ஒருவனுக்கு அணியாவது, எல்லாரிடத்தும் இனிய சொல்லை யுடையவ னாகுதலேயாம் அன்றியும்

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்—(திருக்குறள்)

(க-ரை) இன் சொற்களானவை இருபிறப்பிலு மின்பத்தைத் தரும் என்பதாம்.

பட்டினத்துப்பிள்ளை இருவர்க்கும் இன்சொல்கூறிய சந்தர்ப்பம் பின்வருமாறு:—

திருவெண்காடரென்னும் பட்டினத்தடிகள் எல்லாச் செல்வங்களையும் நீத்து வெளியேறிப் பலவிடங்கட்கும் போய் ஆங்காங்கே பல அற்புதங்களையியற்றி ஒருசமயம் கொங்குநாடு சென்றிருந்தபோது அங்குள்ள பேரையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய திருப்பதிகட்குப்போய்ச் சிவபெருமானைத் தொழுது வாய்பேசா மௌனவிரதத்தை யனுஷ்டித்து அந்நாட்டிற் சஞ்சரித்திருந்தார். அவ்வாறு சஞ்சரிக்கும்போது ஒருநாள் பாதியிரவில் அவருக்கு வடவைக்கனல்போலப் பசித்தீயெழுந்து வருத்தியது. அவர் அதைத் தாங்க முடியாது. அப்பசிநோயைத் தணித்துக்கொள்ளும் பொருட்டு, ஒரு மூர்க்கனுடைய வீட்டுத் தலைவாயிலில் நின்று கையைத்தட்டித் தமக்கேதாவது கொடுக்கும்படி சாடைகாட்டினார்.

அதைக் கண்டவுடன் அம்மூர்க்கன் அவருடைய பெருமையை உணராமல் அவரைத் தன் மனைவிபால் வந்த காமக்கள்வ னென்றெண்ணி, உடனே ஒரு தடியை யெடுத்துக்கொண்டு ஓடிவந்து அவர்மீது மாறி மாறி யடித்துத் தீங்கு செய்தான். அப்போது, பட்டினத்தார் 'நின்ற நிலைபெயராமல், சிவ சிவ என்று ஜபித்துக் கொண்டு நின்றார்.

அச்சமயம் இச் செய்கையை அடுத்த வீட்டுப் புறந்திண்ணையிற் படுத்துப் பார்த்துக்கொண்டிருந்த அவ் வீட்டுக்காரன், பட்டினத்தடிகளை மகா னென்று நினைத்து ஓடிவந்து அம்மூர்க்கனை விலக்கி, அடா அறிவிலியே! இவர் சிவ யோகத்திற் சிறந்த பெரியவரன்றோ. இவர்க்கேனிந்தத் தீங்கு செய்தனை என்று அவனை நிந்தித்துப் பேசிவிட்டுப் பட்டினத் தடிகளை வணக்கத்துடனே அழைத்துச் சென்று தன் வீட்டில் அவருக்குத் திருவமுதுபடைத்து அவர் பசிப்பிணியைத் தணிவித்து உபசரித்தான்.

இங்ஙனம் இருவர் செய்கைகளையுங் கண்டும் அவர் ஒருவனை நிந்தித்தும், ஒருவனைப் புகழ்ந்துங்கூறாமல் பொதுவாகச் சிவபெருமானுடைய திருவருளை மாத்திரம் நினைத்து,

"பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே." என்றும்,

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி.

என்றும் கூறிச் சென்றனர். இச்செய்யுட்களால் அவர் இரண்டிடத்தும் நன்மையான வார்த்தைகளையே கூறினது உணரப்படும்.

இதனால் நாம் எப்போதும் யாவரிடத்தும் அவர்கள் மனம் நோகாதபடி இனிமையான நன்மொழிகளே புகலவேண்டுமென்று நன்குணரவேண்டும். இதனால் நாம் அகமமதைகளற்று ஆன்றோர் அருள்பெற்று மெய்ஞ்ஞானப் பேறடைவோம். ஆண்டவன் நம்மனைவர்க்கும் நன்னெறியருளுமாறு பிரார்த்திக்கின்றோம்.



(முன் அனுப்பப்பட்ட "பேதமையகற்று" என்ற வியாசமும் இதுவும் இராமபாரதியார் இயற்றிய ஆத்திச்சூடி வெண்பா (ஆறுமுகம் சேர்வை யவர்கள் உரை) என்ற நூலிலிருந்து எடுத்தெழுதப்பட்டவை.)

ஸி. தங்கவேலு முதலியார், ஓர்லயன்பேட்டை, புதுவை.

குறிப்பு:—வியாசம் அனுப்புவோர் "வேறு நூல்களிலிருந்தெடுக்கப்பட்டது" என்ற குறிப்பை முதல்பாக மனுப்பும்போதே தெரிவித்தல் நலம். இன்னன்பர் அப்படிச் செய்யாததால் முன்வியாசத்தைக் கண்டபோதே இரண்டொருவர் இதைப்பற்றி நமக்குத் தெரிவித்தனர். அதற்கிடையில் இந்த வியாசமும் வந்துவிட்டதால் அவர்கெழுதியதை நாம் வெளியிடலது அருமையாயிற்று.

பத்திராசிரியர்.

---

## ஸ்திரீகள் பக்கம்.

## ஸ்திரீகளின் சுபாவமும் நிலைமையும்.

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்திரீகளின் சுபாவத்தைக் குறித்துச் சென்ற சஞ்சிகையில் சிறிது எழுதியுள்ளோம். இனி அவர்களது பூர்வீக தற்கால நிலைமைகளைப்பற்றி சொற்பம் எழுதுவோம்.

முற்காலத்திய இந்திய ஸ்திரீகளின் நிலைமை மிகவும் மேலானது; அவர்கள் இல்லறம் வழுவாது, புகுடனுக்கடங்கி, நல்லொழுக்கம் வாய்ந்து நடந்தார்கள்.

அவர்களைத் தற்காலத்திய சிலர் படியாதவர்க ளென்பதும், அல்லது மிகக் குறைந்தபடிப்புள்ளவர்க ளென்பதும் முழுப் பொய். அவர்கள் உத்தமமான தேசபாஷைகளில் தெய்வத்தன்மைவாய்ந்த அநேக நீதிநூல்களைக்கற்று நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற நால்வகை நற்குணங்களையும் அற அறிந்து அவைகட் கடங்கி நடந்துவந்தனர்.

"கடுகைத் துளைத்தெழு கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்தக் குறள்" என்ற திருவள்ளுவர் குறளையும் விருத்தியுரை என்றே கொள்ளுந் தன்மைவாய்ந்த ஆத்திச்சூடி என்னும் நூல்களால் பாடிய மூதாட்டி ஔவையார் நூலே முற்காலத்திய பெண்மணிகளின் கல்விப் பெருமையைக்காட்டப் போதுமான சான்றுபகரும். அவரது புகழும் மேன்மையும் இந்நிலவுலகுள்ள அளவும் அழியாதென்றே அறியலாகும்.

தற்காலத்தில் எவ்வளவு கற்ற மகளிருளரேனும் அம்மூதாட்டி ஔவையைப்போல் கல்வியில் கீர்த்திபெற்று முன்வந்தவர் ஒருவருமில்லாதது மிகவும் விசனிக்கத்தக்கதே. ஒருவேளை தற்காலத்தவர் கல்விக்குறைவால்தான் வெளிக்கு வரமுடியவில்லைபோலும்.

நாகரீகத்திலும் அவர்கள் பின்போனவர்களல்ல. இக்காலத்தவர்களைப் போல் இருந்தவர்கள் மிகச் சிலரே. அவர்கள் தங்கள் நாயகர்களைத் தற்காலத்துள்ள சிலர்போல், தாங்களேதேடி வரித்துக்கொண்டிருக்கிறார்கள். சகுந்தலை தனது ஆச்ரமத்திற்குவந்த துஷ்யந்தனை, தகப்பனார் கண்ணுவாது சம்மதத்தை எதிர்பாராமலே விவாகம்செய்துகொண்டு பாரதத்திற்கே காரணமான பரதனையும் பெற்றிருக்கிறாள். அன்றியும், தன்னை மீண்டும்வந்து அழைத்துப்போகாத

துஷ்யந்தனுக்கு, அவள் அநேகந்தடவை கடிதம் எழுதியிருப்பதைப் பார்க்கக் காணலாம்.

அவர்கள் கற்பின்திறமோ ஒப்புயர்வற்றது. சீதாதேவியின் கற்பன்றோ கனலையும் குளிரச்செய்தது. கோவலன் இறந்ததைக் கேள்வியுற்ற கண்ணகி மதுரையம்பதியை எரிந்துவிடச்செய்ததும் கற்பின் மேன்மையாலேயே.

இனித் தற்காலத்திய ஸ்திரீகள் எந்நிலைமையர் என்பதைச் சிந்திப்பாம்.

இவர்கள் நிலைமை—பூராவும்—கெட்டதல்ல! இவர்களுள் சிலர் முன்னடைந்திருப்பதை ஒருவிதத்தில் புகழப்படாது!

சுயேச்சையை பூராவும் அனுபவிப்பவர்கள் இவர்களே. தங்கள்மனம்போன படி நடக்கிறார்கள். புருஷர்களுக்கு மேலும் மரியாதையைத் தாங்கள் தேடிக் கொள்வது இவர்களுக்கு இப்பொழுதுள்ள அபிஷ்டமன்று! இப்பெண்கள் "புருஷனுக்கு எஜமானிச்சி" என்று பொருள்படும் "மிஸ்ட்ரஸ்" (Mistress) என்னும் ஆங்கிலபதத்தால் மனைவிகளைக் கூப்பிடுவதைக் கேட்க ஆவலுடைய புருஷர்களையும் தாங்களே தேடிக்கொள்கிறார்கள்.

கனவான்களே! நாகரிகம் என்பது இதுமட்டும் அல்ல; பின்னும் விர்த்தி அடைந்து இருக்கிறது. இத்தகைய மாதர்கள் தாய்ப்பாஷை படிக்கத் தவறினும், ஆங்கிலத்தில் அளவுக்குமேல் கற்றிருக்கிறார்கள். பெரிய சபைகளில் முன்னேறி அழகிய உருவத்துடன் கம்பீரமாக நின்றுகொண்டு நேர்த்தியான பிரசங்கம்புரிவது காலத்துக்குத்தக்க கோலமேபோலும்.

இங்கிலாந்து ஸ்திரீகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர்கள் முற்றும் முன்னுக்குவரவில்லை என்பது வெளிப்படை. மேல்நாட்டுஸ்திரீகள் வாசித்து உத்தியோகம் செய்கிறார்கள். அது அவர்கள் தேசாசாரத்திற்கு ஆதிமுதல் ஒத்ததாயிருக்கிறது மதாசாரத்திற்கும் பொருத்தமானது. இதை விரிக்கிற் பெருகும்.

இந்தியஸ்திரீகளுள் மிகச் சிலர் நிலவரம் இப்படி இருக்க, பலர் நிலைமை எப்படி என்பதைக் கவனிப்போம்.

இந்தியாவில் அநேக ஸ்திரீகள் நிலைமை நிலைகுலைந்தது. இவர்கள் எழுத்து என்றால் இன்னதென்று அறியாதவர்கள். சொற்ப பண்ட மாற்றும் விஷயத்திலும் காசுவாங்கக் கொடுக்கக்கூட தெரியாதவர்களாயிருக்கக் காணலாம். கற்புமுதலிய நீதிகளை இவர்கள்படித்தறியார் என்று எழுதுவதுமிகையே. இவர்களுக்கு மிருகத்தனமான சந்தோஷமும், அனாவசியமான துக்கமும் ஆகிய இரண்டைத்தவிர வேறு தெரியாது.

இவர்கள் நிலைமை உண்மையில் பரிதாபப் படத்தக்கதன்றோ? பருவத்துக்கு முன்னமே கலியாணம் செய்விக்கப்பட்டு, அதற்குப் பிறகே குறிப்பிட்ட கணவர்களின்மேல் நேசத்தை விருத்தி செய்துகொள்ளவேண்டி நேருகிறது. சிலருக்கு இவ்வாசை கைகூடாமலேயே இல்லறம் கெட்டுவிடுகிறது. நேசம் கிட்டிய சிலரும் உரியகாலத்திற்குமுன் கர்ப்பிணிகளாகி, தாட்கோல்போன்ற மெலிந்த குழந்தைகளைப்பெற்று, எலும்பாகிச் சீக்கிரம் கிழப்பருவம் அடைந்து விடுகிறார்கள். இக்குழந்தைகளுக்கு அறிவு நடத்தை கற்றுக்கொடுக்கப் போதுமான நுண்ணறிவு இவர்களுக்கே இல்லை என்பது உண்மை. இவ்வளவு சிறு பிராயத்தில் குடும்பபாரத்தை வகிக்க இவர்களுக்கு திறமை எப்படி உண்டாகும். புருஷன் மனப்படி நடக்கவாவது அறிவு வேண்டுமே. சிறு குழந்தைப்பருவத்தில் அவ்வறிவுதான் எப்படி உண்டாயிருக்கும்.

தற்காலத்தில் இந்தியர்களுள் அநேகமாய்ப் பிராமணர்களில், கைம்பெண்



களாயுள்ள ஸ்திரீகள் அநேகர். பருவத்துக்குமுன் கலியாணம் பெண்களுக்கு நடத்தப்படாமலிருந்தால் கைம்பெண்கள் கணக்கு ஒருவிதத்தில் குறையாதோ? இத்தகைய முக்கிய விஷயத்தில் சீர்திருத்தம் செய்ய முயல்வதைவிட்டு நமக்குத் தகாத ஆசாரங்களில் அன்னியரைப் பின்பற்ற ஆவல்கொள்வது, அந்தோ! என்ன அறியாமை!

இஃதிங்ஙனமாக:—இவர்கள் முன்னேற ஏதாவது வழியுண்டா என்பதை ஆராய்வோம்.

இவர்களது முன்னேற்றத்திற்கு முக்கியமான வழி உடனே சிறு பெண்களுக்கு மணம்புரிவதை நிறுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியதே யாகும். அதுநிறைவேறுமட்டும் கைம்பெண்களின் உதவிக்காகச் சிலசாதனங்களைக் கையாடலாம். திருட்டாந்தமாய் சென்னைப்பட்டணத்தில் கைம்பெண்கள் வீடு (Widows' home) என்ற ஒரு கட்டிடத்தில் விருப்பமுள்ள கைம்பெண்களைச் சேர்த்து வித்யாபோதனை செய்துவருகிறார்கள்.

பூனா தேசத்திலுள்ள மகாராஷ்டிர பிராம்மணர் ஸ்ரீமான் "கார்வி" என்பவர் பெண் கல்விக்காக முயற்சி எடுத்து உழைத்து வருகிறார். சீக்கிரம் கைகூடும். இவர்கள் முன்னேற இது ஒரு நல்ல வழியேயாகும்.

இவ்வியாசத்தை சில முடிப்புரையுடன் பூர்த்திசெய்துவிடுவோம். "உருவோ டறிவுடையா ரில்வாழ்க்கைப் பெண்ணென்ப" என்றபடி ஸ்திரீகள் பொது அறிவிற்குப் போதுமான கல்வி பயிலவேண்டுவதவசியமே. 10-வது (School final) வகுப்புக்கு மேல்கொண்ட கல்வி இவர்களுக்கு அவசியமில்லாதது. பின்னும் நோக்குழி தாய்ப்பாஷையி லெழுதப்பெற்ற கணக்கு, தேசசரித்திரம், பூகோளசாஸ்திரம் இவைகளின் முக்கியமான அம்சங்களிலும், வே தாய்ப்பாஷையிலெழுதப்பட்டுள்ள 'தெய்வத்தன்மை பொருந்திய நீதிநூல்களிலும், சொற்ப அறிவு இருந்தால் போதுமானது. சன்மார்க்கம் நம் மதத்தைத் தழுவியதாதலால் மாணவர்களின் மதத்தை ஒட்டிய பெண் உபாத்திமார்களே இவர்களுக்கு போதகாசிரியராக உரியவர். ஆங்கிலமே இந்தியச் சிறுமிகளுக்குத் தேவையில்லாததால் கூடாது.

"பெண்மைக் கணியென்ப நாணம்"
"நாணின்வரை நிற்பர் நற்பெண்டிர்"

என்று விளம்பிய ஆன்றோர் வாக்குக் கிணங்க இந்திய பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, நாயக விஸ்வாச முடையவர்களாக இருந்து, நாயகர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே சகல சம்பத்தையும் பெண்களுக்கு ஊட்டும் என்பதே ஆன்றோர் திருவாக்கு. (குற்றம் பொறுக்க.)

ஆர். திருவேங்கடம்பிள்ளை, மிராசிதார், ராஜேந்திரம்.

## குறிப்பு.

இக்காலமாதரில் சிலர் கொஞ்சம் அதிக கல்விகற்றுவிட்டால் மேல்நாட்டு ஆசாரங்களை யதிகமாய்த் தழுவுவதும், அச்சம், மடம், நாணம் இவற்றை யலட்சியம் செய்வதும், ஆடவரைப்போலவே தாங்களும் நடக்கமுயல்வதும், முன்னோர் அருளியவாக்கியங்களுக்கு ஸ்திரீகள் பூரணசுயாதீன மடையவேண்டும் என்றதுகள் பிரியத்திற்குப் பொருத்தமானபடி உரைகூறி, இதுகாறும் கூறிவந்த உரைகளைக் கண்டிருப்பதும், ஆடவர்சபையில் பிரவேசித்து அச்சம், நாணம் விட்டு எந்தப்புருடரோடும் புழங்குவதும் ஆகிய இவ்வித நடவடிக்கைகளில் பிரவேசித்துவிடுகிறார்கள். இத்தகையோர்க்காகவே சிலர் ஓரேயடியாய் ஸ்திரீ

களுக்குக் கல்வியே கூடாதென்கிறார்கள். முற்காலத்தில் யுகதருமத்தை யனுசரித்துச் சில வகுப்பார்க்கு காந்தருவவிவாகம் முதலிய சில சுயாதீனங்கள் விதிக்கப்பட்டிருந்தன.

இக்காலத்தில் அவை விலக்கப்பட்டன. சிலர் இப்போதும் அப்படி நடக்க வேண்டுமென்கிறார்கள். முக்காலத்தவர் சுபாவமும், குணமும், நடக்கையும், பெரியோர் பக்தியும் நல்லவழியிலிருந்தது. வேலியைவிட்டுத் தாண்டமாட்டார்கள். இக்காலத்தவர்க்கு அந்த சுயாதீனம் கொடுத்துவிட்டால் கற்பென்ற வார்த்தையே அடியோடு போய்விடும். அக்காலத்தில் சகுந்தலை கணவன் யோக்யதை யறிந்து, தந்தை சம்மதிப்பார் என்பதையு முணர்ந்து காந்தர்வவிவாகத்திற்குச் சம்மதித்துக்கொண்டு, பிறகு கற்பைக் காத்துக்கொண்டாள். இக்காலத்திய பெண் அப்படிச் செய்திருந்தால் (அந்த சந்தர்ப்பத்திற்கு) பின்னால் எத்தனை காந்தர்வவிவாகமோ நடந்துபோயிருக்கும். இக்காலத்திய மனிதர்கள் சிறுவயதிலேயே துர்நடக்கைகளில் பிரவேசிக்க உணர்ச்சி உடையவர்களாகவும், அக்கிரமத்திற்கு அஞ்சாதவர்களாகவும், பெரியோரை அலட்சியம் செய்பவர்களாகவும், உலகபோக அனுபவத்தில் அதிக விருப்பமுடையவர்களாகவும் இருப்பது சுபாவமாயிருக்கிறது. அக்காலத்தவர் இதற்கு நேர்மாறாயிருந்தார்கள்.

இதனால் நம்முன்னோர் யாவுமுணர்ந்தே காலத்திற்குத் தக்கவாறு விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை யுணர்ந்து, பெண்கள் எவ்வளவு வாசித்தாலும் அச்சம், மடம், நாணம், கற்பு இவைகளுக்கு அழிவு நேரிடாவண்ணம் நடந்துகொள்ளவேண்டும். பெற்றோரும் அவர்களுக்கு நம் தாய்ப்பாஷையில் அவசியமாய்வேண்டிய கல்வியைமட்டும் கற்பிக்கவேண்டும். மதக்கல்வி எவ்வளவேனும் கற்கலாம்.

அக்கல்வியைக்கொண்டு அவர்கள் தங்கள் மக்களுக்கும் கணவனுக்கும் நன்மைசெய்யவும், சுற்றத்தார் அதிதிகள் இவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரத்தைச் சரியாய்ச்செய்யவும், தங்கள் மறுமைப்பயனுக்கு முயற்சிசெய்யவும், கூடுமானால், தங்களைப்போன்ற ஸ்திரீ சமூகத்திற்கு நன்மைசெய்யவும் பாடுபடவேண்டும்.. இதைவிட்டு உலககௌரவத்தை நாடியேனும் வேறெதை நாடியேனும் ஆடவர் சமூகத்தோடு கலத்தல் எப்போதும் தகுதியற்ற ஒழுக்கமேயாகும். கற்பு என்ற மகிமை அழிவது ஸ்திரீக்கு ஆடவரால்—அப்படியே ஆடவர்க்கு ஏகபத்னிவிரதம் அழிவது ஸ்திரீகளால்—ஆகையால் இருவரும் தத்தம் கணவன் மனைவி தவிர (எதிர்பாலாரில்) மற்றபேரை அன்னியராய்ப் பாவித்துக் கூடியவரையில் அதிகமாய் நெருங்காமலே யிருக்கவேண்டும்.

பத்திராசிரியர்.

## க்ஷயரோகம்

(478-வது பக்கத் தொடர்ச்சி)

க்ஷயம் என்னும் வியாதி நம் தேசத்தில் அநேகரைத் துன்பப்படுத்திவருவதால் அத்தகைய வியாதியை நிவர்த்திக்கும்பொருட்டு பலநாடுகளிலும் பற்பலவிதமாய்ப் பரிசோதித்தும் இன்னும் வியாதிக்குத்தக்க ஔஷதங்களை நாளதுவரையில் கண்டுபிடித்ததாய்க் காணப்படவில்லை ஆதலால் இனி ஔஷதம் கண்டுபிடிக்கும் முயற்சியை விட்டுவிட்டு நம்தேசத்தில் பூர்வீகமாய்ப் பெரியவர்களால் அனுஷ்டித்து வந்த விதிகளை கைப்பற்றுவார்களேயானால் மேற்சொல்லும் கோரமான வியாதியினின்றும் நம்தேசம் சுகமடையும் என்பது நிண்ணம். ஆனால் அத்தகைய பூர்வீக அனுஷ்டானமானது யாதென வினவில் ஆகாரநியமங்களும்; அனுஷ்டான விதிகளும், ஆசாரவிதிகளுமேயாகும். இவற்றுள் அனுஷ்டிக்கவேண்டிய அனுஷ்டானமானது சௌசம், ஆசமன்னியம், ஸ்நானம், பிராணாயாமம், சந்தியாவந்தனம் ஆகிய இவைகளே. ஆகாரநியமம்: தேகத்துக்குத் தகுந்த குளிர்ச்சியுள்ள ஆகாரமும் சீக்கிரம் ஜீரணிக்கக்கூடியதும், குறைந்த அளவில் உட்கொள்ளுதலும், நியமப்படி உண்பதும் ஆக இவைகளே. ஆசாரமாவது: வசிக்குமிடம் உண்ணுமிடம் இருக்குமிடம் உடுக்கும் ஆடை பரிசிக்கும் வஸ்துக்கள் இவைமுதலானதுகள் சுத்தமாய் இருக்கப் பார்த்துக் கொள்ளுதலே. ஆகிய இத்தகைய விதிகளை அனுஷ்டித்துவந்தால் க்ஷயம் என்னும் வியாதியானது இருக்குமிடம் தெரியாது போய்விடுமென்பது திண்ணம். இனி அனுஷ்டானத்தின் விதிகளையும் ஆகாரநியமங்களையும் அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோமாக.



மே. மாசிலாமணி முதலியார்.

## கற்கோட்டை—நாவல்

(78-வது பக்கத் தொடர்ச்சி)

இவற்றாலும் அவன் கூறிய மற்ற குறிப்புகளாலும் அரியநாயகியைத்தான் இராணியின் ஆட்கள் தேடிப் பிடித்துக்கொண்டார்களென்றும், தனது சகோதரர்களே அவளைக் காப்பாற்றினார்களென்றும் தெரிந்து மிக்க சந்தோஷமடைந்தார். இப்போது தன் சகோதரர்கள் அரியநாயகியோடு கற்கோட்டைக்குச் சென்றிருப்பார்களென்று கருதக் காரணமிருக்கிறது. ஆகையால் அத்திக்கே சென்றால் பெரும்பாலும் அவர்களைச் சந்திக்கலாகும். அப்படி அவர்கள் நேர்படாவிட்டாலும் அரியநாகியையேனும் கண்டு நடந்த விசேடங்களைப்பற்றியும், சகோதரர்கள் என்ன உத்தேசத்தோடு எங்கு சென்றார்களென்பதைப்பற்றியும் தெரிந்துகொள்ளலாம் என்று தீர்மானித்து கற்கோட்டையை நோக்கிச் சென்றார். வழியில் தன் சகோதரர் காணப்படவில்லை, கற்கோட்டை யருகிற்சென்று அதனருகிலுள்ள சந்தில் குதிரையின் சேணம் முதலியவற்றை யொளித்து வைத்துவிட்டுக் குதிரையையும் மறைவானவிடத்தில் கட்டிவிட்டுத் தோட்டத்தின் ஓரமாய்ச் சென்று சற்றுநேரம் பல பாகங்களிலும் பார்த்தார். அரியநாயகி புலப்படவில்லை. அதன்மேல் "இந்த மாறுவேடத்தில் கற்கோட்டையிலுள்ள வேலைக்காரர் யாரும் நம்மைத் தெரிந்துகொள்ளமாட்டார்களாதலால் நேராய்த் தெருப்பக்கம் போய் விசாரிப்போம் என்று சிந்தித்து, அவ்வாறே சென்று தெருக்கதவைத் தட்டினார்.

உடனே ஒரு வேலைக்காரன் வந்து கதவைத் திறந்தான். பிரபு அவனை நோக்கி, "நான் அரியநாயகி யம்மாளைக் காணவேண்டும்" என்றார். வேலைக்காரன் "வாருங்கள், இதோ அந்த வெளிக்கூடத்தில் உட்காருங்கள், நான் அந்தம்மாளைக் கண்டு வருகிறேன்" என்றான்.

அதே சமயம் படபடவென்று குதிரைகள்வரும் சத்தத்தைக்கேட்டு அவன் வெளியில் எட்டிப்பார்த்ததும், வருகிறவர்கள் இராணியின் மெய்க்காப்பு வீரரைச் சேர்ந்தவர்களென்றறிந்து, அட சனியனே, இதென்ன சங்கதி யென்று கூறிக்கொண்டே வெளியில் சென்றான். பிரபு வெளிக்கூடத்திலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்து கொண்டார். அதே வேளையில்தான் அரியநாயகி ஓடிப்போய் கள்ள அறையில் ஒளிந்து கொண்டது.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## “ ஆனந்தபோதினி ” பஞ்சாங்கம்

காளயுக்திஞு ஐப்பசிமீ—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,

பசலி 1327-28—கோல்லம் 1093-94,

இங்கிலீஷ் 1918ம்-ஞு அக்டோபர்மீ—நவம்பர்மீ

| ஐப்பசிமீ | அக்டோபர்மீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | வி | து-12-48 | பூரட்-57-37 | சித்த 60 | துலா ஸ்நானம் |
| 2 | 18 | வெ | திர-6-33 | உத்-46-58 | சி 47 மா | கர்ப்பாதானம் |
| 3 | 19 | ச | சது-0-45<br>Оபௌ 54-4 | ரேவ-42-52 | ம 43 சித் | சிவாலய அன்னாபிஷேகம் |
| 4 | 20 | ஞா | பிர-47-35 | அச-37-36 | சித்த 60 | ஆபரணம் தரிக்க |
| 5 | 21 | தி | துதி-41-50 | பர-35-0 | சித் 35 ம் | விருக்ஷங்கள் நட |
| 6 | 22 | செ | திரு-38-20 | *கார்-31-38 | சி 32 அமி | கிருத்திகை விரதம் |
| 7 | 23 | புத | சது-38-26 | ரோக-29-15 | சித்த 60 | |
| 8 | 24 | வி | பஞ்-30-20 | மிரு-26-51 | மரண 60 | |
| 9 | 25 | வெ | சஷ்-29-31 | திரு-25-52 | சித்த 60 | |
| 10 | 26 | ச | சப்-28-30 | புன-25-39 | சித்த 60 | |
| 11 | 27 | ஞா | அஷ்-28-36 | பூச-27-44 | சித்த 60 | |
| 12 | 28 | தி | நவ-27-56 | ஆயி-29-48 | சி 30 மா | |
| 13 | 29 | செ | தச-29-20 | மக-33-34 | சித்த 60 | |
| 14 | 30 | புத | ஏகா-34-11 | பூர-38-50 | அமிர் 60 | |
| 15 | 31 | வி | து-37-6 | உத்தி-44-11 | மா 39 சி | |
| 16 | 1 | வெ | திர-42-5 | அஸ்த-50-26 | அமி 50 சி | |
| 17 | 2 | ச | சது-48-18 | சித்-56-51 | மா 56 சி | தீபாவளி பண்டிகை |
| 18 | 3 | ஞா | ● அமா-52-25 | சுவா-60-0 | சித்த 60 ம | கேதார கௌரிவிரதம் |
| 19 | 4 | தி | பிர-56-46 | சுவா-3-4 | அ 3 மா | கோவர்த்தனபூஜை |
| 20 | 5 | செ | துதி-60-0 | விசா-8-35 | ம 9 சித் | தனியாரான் |
| 21 | 6 | புத | துதி-0-26 | அனு-13-16 | சித்த 60 | மாயூரநாதர் உத்ஸவாரம்பம் |
| 22 | 7 | வி | திரு-3-0 | கேட்-16-53 | சித்த 60 | வியாபாரம் செய்ய |
| 23 | 8 | வெ | சது-4-11 | மூல-19-15 | அ 19 சித் | பேஸா மாற்றிவைக்க |
| 24 | 9 | ச | பஞ்-4-10 | பூரா-20-27 | சித்த 60 | சஷ்டிவிரதம் |
| 25 | 10 | ஞா | சஷ்-2-58 | உத்தி-21-3 | அமி 60 | சுப்ரமண்ய சுவாமிக்கு விவா |
| 26 | 11 | தி | சப்-1-36<br>அஷ்-56-21 | திரு-17-53 | அ 18 சி | [கோத்சவம் |
| 27 | 12 | செ | நவ-52-42 | அவி-17-20 | சித் 17 ம | மழை 9-க்குள் |
| 28 | 13 | புத | தச-47-39 | சத-14-27 | சி 14 அமி | திருநாராயணபுரம் அஷ்ட |
| 29 | 14 | வி | ஏகா-42-7 | பூரட்-11-1 | சித்த 60 | பத்மநாபர் தீர்த்தம் [தீர்த்தம் |
| 30 | 15 | வெ | து-35-53 | உத்தி-6-41 | சித் 7 மா | அன்னமலையார் ரதம் |

(1918ம்-ஞு நவம்பர்மீ)

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 10 துலா-சு | | |
| | 15-சா-செ | | |
| | 18-விரு-பு | | சனி |
| | ராகு செ | ரவி புத | சுக் |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ”—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)


| தொகுதி | காளயுக்திஞு ஐப்பசிமீ கவ | பகுதி |
|---|---|---|
| 4 | 1918-ம்ஞு அக்டோபர்மீ 17வ | 4 |


## கடவுள் வணக்கம்

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கியோ
ரென்னுமொரு மகர வாய்ப்பட்
டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத
மெனக்கொங்கை வரிசை காட்டும்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்தடிப்ப
சோராத வாசையாங் கானுறு வானதி
சார்ந்தெனை மேலு மார்ப்ப
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங்
கைவிட்டு மதி மயங்கிக்
கள்ளவங் கக்காரர் வருவரென் றஞ்சிநிய
கண்ணருவி காட்டு மெளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
செய்வையோ சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே.

---

பாராதி யண்டமெலாம் படர்காணத் சகம்போற்
பார்த்தனையே முடிவினின்று பாரொதுதான் நின்ற
தாரானு மறியாத சத்தன்றோ வதுவா
யங்கிருந் தெங்கிருந்து மறுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாய்ப் புத்தியை நாட்டாதே
ஓராதே யொன்றையுநீ முன்னிலை வையாதே
யுள்ளபடி முடிவிலொன் முன்னபடி நாளே.

# ஆனந்த போதினி

**காளயுக்தி௵ ஐப்பசி௴ 1௳**

## கடவுளும்—மதங்களும்

பூவுலகிலுள்ள மானிடர்களில் ஆஸ்திகர்களனைவரும் கடவுள் உண்டென்றே நம்புகிறார்கள். முற்காலங்களில் சிலர் மரம், கல், கிரகங்கள், பதுமைகள் இவற்றைக் கடவுளென்று வணங்கிய போதிலும் கடவுள் உண்டென்பதே யவர்கள் நம்பிக்கையும். பிற்காலத்தில் ஞானவான்களாகிய மகான்கள் ஆங்காங்கு தோன்றிய பின் கடவுளுக்கு நாமரூபமில்லையென்றும் அவர் எங்கும் நிறைந்தவரென்றும் நம்பலானார்கள்.

இத்தகைய கடவுள் ஒருவரே யென்பதே எல்லாருடைய நிச்சயமும். அதுவே சுருதியுக்தி அனுபவங்களுக்கு ஒத்ததோருண்மை. சாதாரணமாய் ஒருநாட்டிற்கு ஒரு அரசனேயன்றி இரண்டரசர்கள் எங்கேனுமுண்டோ? ஒருசேனைக்குத் தலைமை சேனாதிபதி ஒருவரேயன்றி இருவரில்லை. அப்படி யிருவராயிருந்தால் அந்த நாடும் சேனையும் அடியோடழிந்தே போகும். உலகமதிந்தவரை எல்லா மதங்களும் கடவுள் ஒருவரென்றே கூறுகின்றன.

அவ்வாறு கூறினும் எல்லா மனிதர்களும் அனுபவத்தில் அவ்வாறுணர்ந்தவர்களாய் நடந்துகொள்வதில்லையென்பது யாவரும் பிரத்தியக்ஷமாய்க் காணும் அனுபவமே.

இதற்குக் காரணமென்னை?

"சமயகோடிக ளனந்தம்" என்று தாயுமானவர் கூறியபடி பலசமயங்கள் இருப்பதாலும், அச்சமயபேதங்களு மனந்தமாயிருப்பதாலும், பெரும்பாலான சமயிகள் தத்தம் மதமே உண்மையென்றும் தத்தம் வேதமே கடவுளாலளிக்கப்பட்டதாகையால் அதன் கொள்கைகள் மட்டுமே கடவுளுக்குப் பிரியமென்றும் கருதுவதே யிதற்குக் காரணம். பூரணமான கடவுள் லக்ஷணங்களும், ஆன்மவிலக்கணமும், மெய்ஞ்ஞானமார்க்கமும் தெளிவாய்க்



கூறப்படாத சமயத்தவர்கள், தங்கள் மதம் ஒன்றே புவியில் உண்மை மதமென்றும் தங்கள் மதக்கடவுளே மெய்க்கடவுளென்றும், தங்கள் மதத்தில் சேர்ந்தவர்களுக்குமட்டுமே மோக்ஷமுண்டென்றும், மற்றமதங்களும் அம்மதங்களில் கூறப்பட்ட தெய்வங்களும் பொய்யென்றும் கருதி அவ்வாறே வெளிப்படையாகவும் கூறுகிறார்கள். இத்தகைய மதங்கள் அஞ்ஞான மதங்களென்று நமது முன்னோர்கள் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

சற்று சிந்தித்துப்பார்த்தால் ஒருமதமும் அதில் கூறப்பட்ட கடவுளும் மட்டுமே மெய்யென்றும், அதில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே மோக்ஷம் கிடைக்கும் என்றும் கருதுவது அறியாமையேயென்று விளங்கும். எவ்வாறெனின் முதலாவது ஒவ்வொரு மதத்தவரும் அவ்வாறே கூறிக்கொண்டிருந்தால் கடைசியில் எதுதான் உண்மையென்று கருதப்படுவது? இந்த வழக்கு உலக முடிவு வரையில்கூட ஒரு தீர்மானத்திற்கு வரப்போகிறதில்லை. இந்த அண்டாண்ட சராசரங்க ளனைத்திற்கும் ஆண்டவன் ஒருவரேயென்பதும், ஆன்மாவானது அப்பரமான்மாவை யடைந்து சுகித்திருத்தலே முடிவான உயர்பதவி என்பதும், அறிவாளிக ளனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயமாதலால் ஆண்டவன் ஒருவனே, முடிவான மோக்ஷமும் ஒன்றேயென்று ஏற்படுகிறது.

அந்த ஆண்டவனே யாவற்றையும் படைத்து இரக்ஷிப்பவர். அவர் எல்லா ஆன்மாக்களிடத்தும் பாரபக்ஷமின்றிப் பூரண கிருபையுடையவர். எல்லா மதஸ்தரும் கடவுளையே தொழுகிறார்கள். ஒரு வட்டமான தட்டில் சுற்றி பலவர்ணக் கண்ணாடிகளைப் பதித்துவைத்திருக்கிறோம். அதில் நம்முகத்தைக் காட்டினால் நம்முருவம் எல்லாக் கண்ணாடிகளிலும் ஒரே உருவமாய்த் தோன்றினாலும், சிகப்புக்கண்ணாடியால் சிகப்பாகவும், கறுப்பில் கறுப்பாகவும், மஞ்சளில் மஞ்சளாகவும், அந்தந்தக் கண்ணாடியின் நிறம்போல் மாறித்தோன்றும். ஆயினும் பார்ப்பது ஒரு முகமே. எல்லாக் கண்ணாடிகளிலும் வேறுவேறாய்த் தோன்றினும் அதே ஒரு முகமே.

அதைப்போலவே அந்தந்த மதஸ்தர்களும் அவரவர்களின் மாறுபாடான கொள்கைகளின்படி கடவுளைப் பிரார்த்தனை செய்த போதிலும் எல்லாப்பிரார்த்தனைகளும் அவரையே யடையுமன்றி அவற்றை பெற்றுக்கொள்ள வேறே யொரு கடவுளில்லை.

" * * அறுசமயக்கூத்தாமாடி நின்றாயே *

என்றும்,

" * * ஆறெல்லாம் புகுங்கடல்போல் சமயகோடி
யத்தனையும் தொடர்ந்து புகுமாதி கட்டே "

என்றும்,

" * * யாது சமயமும் வணங்கு மியல்பதாகி "

என்றும்,

" எம்மத மாயினும் சம்மதமா மென்றுந்தீபற * * "

வென்றும்,

ஆன்றோர்கள் அருளியுளர்.

"அவனன்றி யோரணுவு மசையாது" என்றபடி அவன் அருளாலன்றி எந்த மதமும் எந்த வஸ்துவும் சிருஷ்டிகளிலொன்றாய் அமைய முடியாது. அப்படியிருக்க அந்த ஆண்டவனுக்குச் சர்வவல்லமை யுளதாகையால் தனக்குப் பிரியமல்லாத மதங்களில் ஆன்மாக்களைச் சிருட்டி செய்யாது நிறுத்தி அம்மதங்களை யொழித்துவிடலாமே. அதைவிட்டு ஒருமதத்திலிருப்பவர்க்குமட்டுமே மோக்ஷமளிப்பதானால் அவர் கடவுள் தன்மையே எடுபட்டுப்போய்விடும். ஆண்டவனால் அளிக்கப்பட்டதாய்க் கூறப்படும் வேதங்களிலும் ஆண்டவனை வணங்கவேண்டிய முறைமையும் விதிநிஷேதங்களும் மட்டுமே கூறப்பட்டிருக்கின்றனவன்றி எந்த வேதத்திலும் "இந்த சமயம் ஒன்றே நான் உண்டாக்கினேன் நான்மட்டுமே மெய்யான கடவுள்—மற்ற மதங்களும் அவற்றில் கூறப்படும் கடவுளரும் நானல்ல" என்று கூறப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை.

இவ்வாற்றால் கடவுளுக்கு எல்லா மதங்களும் சம்மதமேயென்பது நிச்சயம். எல்லா மதங்களும் அவருக்குச் சமமே. ஏற்றத் தாழ்வு ஒன்றுமில்லை. ஒருமதத்தில் அதிக ஜனங்களிருப்பதாலாவது, ஒருமதத்திலுள்ளோர் இவ்வுலகவாழ்வில் சிறப்புற்றிருப்பதாலாவது, அம்மதமே யுயர்ந்ததென்றாவது, அதுவே கடவுளுக்குப் பிரியமானதென்றாவது கூற நியாயமில்லை.

அப்படிக் கூறுவதாயின் எம்மதத்தில் அதிக ஏழைகளிருக்கிறார்களோ, எம்மதத்தில் அதிகமானபேர் உலகபோகத்தை வெறுத்து ஞானவான்களாய்த்—தம்மைமறந்து தனிமையிற் கலந்திருக்கிறார்களோ, அம்மதமே சிறந்ததென்று கூறுவதே மறுக்க



முடியாத நிச்சயமாகும். ஏனெனில், ஆண்டவனுக்கு மிகப்பிரியமானவர்கள், அதாவது அவன் அன்பைப் பெற்றவர்கள், அவன் உண்மையையும் புகழையும் உலகத்தார்க்கு அறிவித்து அவர்களை யுய்யச் செய்வதற்கென்று அவதரித்த அவனது அன்பார்ந்த மகான்களாகிய மதாசாரியர்களும் அவனருள்பெற்ற மற்ற ஞானிகளுமேயாவர். அவர்களெல்லாம் மேற் கூறப்பட்ட நிலைமையிலிருந்தார்களேயன்றி உலகில் சாதாரண போகபாக்கியங்களைக் கூட அனுபவித்துக்கொண்டிருக்கவில்லை.

அதற்குமாறாக இவ்வுலக போகபாக்கியங்களை யிழிவானவையென்றே போதித்தார்கள். அவர்கள் போதித்தவாறே நடந்தும் காட்டினார்கள். ஏசுக்கிறிஸ்து இருந்த நிலைமையும் அவர் "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம், பணக்காரன் மோக்ஷத்தைப் பெறலாமென்று நினைக்கலாகாது" என்று (பொருள்படும் வாக்கியத்தைப்) போதித்திருப்பதும் யாவரும் அறிந்ததே. மஹம்மது ரசூலேகுதா ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்களோ, ஒருகாலத்தில் ஒருசெல்வவந்தன் சில ஒட்டகங்களின்மேல் பொற்காசுகளைப் பரிசாயனுப்பியபோது, ரசூலவர்கள் அவற்றை வீதியிற்கொட்டச்செய்து ஏழைகளனைவரும் எடுத்துக்கொள்ளும்படி ஏவிவிட்டார். தமக்கென்று ஒருநாள் உணவிற்குப் போதுமானதைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. அவருக்கு அப்போது வேண்டியதில்லாதிருக்கும் என்று கருதுகிறீர்களோ, உண்மையில் அன்று வீட்டில் ஆகாரத்திற்கு ஒன்றுமேயில்லை. விளக்கேற்ற எண்ணெய்கூட இல்லை. இன்னும் பட்டினத்தடிகள், பத்திரகிரியார் முதலிய நமது நாட்டு எண்ணிறந்த மகான்களைப் பற்றி நாம் கூறவேண்டுவதின்றாம்.

ஆயினும் எந்த மதமும் மோக்ஷத்தை யடையாறும் வழியின் ஓர்படி. போன்றதேயாதலால் அவைகளில் உயர்வு தாழ்வு இல்லை. மற்றப்படி வெளிக்கு அப்படித் தோன்றுவதெல்லாம் "வெற்றியும் தோல்வியும் எல்லாமதங்கட்கும்—காலபேதத்தினன்றுந்தீபற—அது கருத்தன் செயலென்றுந்தீபற" என்றபடிக்கேயன்றி வேறில்லை.

பலமதங்களின் வெளித்தோற்றங்களில் ஒன்றுக்கொன்று பேதங்களிருப்பினும் உட்கருத்து யாவற்றிலுமொன்றேயென்பது உண்மை. அனேகர் தமது மதத்தையே ஆராய்ச்சி செய்வதில்லை.

அன்னியமதங்களின் வெளிவித்தியாசங்களைக் கேள்விப்படுவதாலேயே அனேக விஷயங்களைத் தவறாய் அர்த்தம் செய்துகொண்டு அம்மதங்களைத் தூஷிக்கிறார்கள். இது அறியாமையேயாகும். இவ்வித்தியாசங்களைப்பற்றி பின்னால் கூறுவாம். முன்னே எல்லாமதங்களின் உட்கருத்தும் ஒன்றேயென்பதைக் கூறுவாம்.

கடவுள் ஒன்றேயென்பதும், நாம் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு, நன்மையையும் தண்டனையையும் அளிக்கிறார் என்பதுவும், அவரால் நாம் அடையக்கூடிய உயர்பதவி ஒன்றுண்டென்பதும் அதற்கு மோக்ஷம் என்றுபெயர் என்பதும் எல்லா மதங்களும் ஒப்புக்கொண்டிருப்பவைகளேயாகும். (அந்த உயர்பதவியின்னதென்று விவரிப்பதில் மதங்கள் வித்தியாசப்படுகின்றன. அதை மற்ற வித்தியாசங்களைப்பற்றி கூறும்போது கூறுவாம்.)

இந்த உயர்பதவியை யடைவதற்கு ஞானமே இன்றியமையாத காரணமாகும். கருமங்கள் எத்தகைய சத்கருமங்களேயெனினும் புண்ணியத்தையும் அதனாலனுபவிக்கும் போகங்களையும் தருவனவேயன்றி ஞானத்தையளிக்கா. பலனைக்கோராது ஈசுரார்ப்பணமாய் செய்யும் நிஷ்காமகருமமும் சித்தசுத்தியைமட்டுமே தரும். அந்த சித்தசுத்தித் துவாரா ஈசுவரனிடத்து அன்புமிகுந்து குருவருள்பெற்று, விசாரணைசெய்து ஞானத்தை யடையவேண்டுமேயன்றி நிஷ்காம கருமமே நேரே ஞானத்தை யளிக்காது—

“போனசன் * * * * *
* * * * * * *
ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயின சுசியோஞ் சுசியாம்
மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே ”

(கைவல்யம்)

கருமங்கள் எப்படி நேரே ஞானத்தை யளிக்காவென்றேமோ அவ்வாறே அவை நேரே அஞ்ஞானத்தையும் அழிக்கா—அஞ்ஞானமழிதலே ஞானம் ஆதலின். ஆதலின் ஒரு மலையின் குகையில் இருக்கும் கொடிய இருள் சிருஷ்டிதொடங்கி யிருப்பதாயினும் தீபவொளி ஒன்றே கண்டதட்சணம் அதை யழிக்கக்கூடியது அதுபோல் ஞானம் ஒன்றே அஞ்ஞானத்தை யுடனே அழித்து மோட்சமளிக்க வல்லது.

இத்தகைய ஞானத்தைப்பெற பலபடிகளிலேறவேண்டும். இவைகளுக்கெல்லாம் மூலதாரமான குணங்கள் இரண்டு அவசிய



மானவை. அவை கடவுளிடத்து பக்தியும் ஜீவகாருண்யமும். இந்த இரண்டும் எல்லாமதங்களாலும் போதிக்கப்படுகின்றன. கடவுளைத் துதிக்கவேண்டும் என்றும் அவரிடம் பூரணபக்திவைப்பதே மனிதராய்ப் பிறந்தவர்களுடைய முதற்கடமையென்றும், அவரிடம் பக்திவைத்தால்தான் அவருடைய அருளைப் பெறலாகுமென்றும் எல்லா மதங்களும் போதிக்கின்றனவென்பது யாவரும் வெளிப்படையாய் அறிந்த விஷயமே.

ஆனால் எல்லாமதங்களும் ஜீவகாருண்யத்தைப்பற்றி போதிக்கின்றனவா வென்பது பலபேர்க்குச் சந்தேகமாயிருக்கலாகும். இன்னும் சில சமயங்களில் அதைப்பற்றிப் போதிக்கப்படவேயில்லையென்றும் அம்மதத்தினர்களுடைய நேர்மாறான நடக்கையே யதற்கு அத்தாட்சியாகவும் தோன்றும். ஆயினும் உண்மையப்படியில்லை. திருட்டாந்தமாய் இப்போதுலகிலிருக்கும் பிரதான மதங்களாகிய நமது ஹிந்துசமயம், மஹம்மதிய சமயம், கிருஸ்து சமயம் இவை மூன்றையும் எடுத்துக்கொள்வோம்:—

1-வது:—ஹிந்து மதத்தில் மேற்கண்ட இரண்டைப்பற்றியும் ஆதிமுதல் அந்தம்வரையில் விரிவாய்க் காணலாம்.

மற்ற இரண்டு மதங்களிலும் ஜீவகாருண்யத்தைப்பற்றி விரிவாகவும் கட்டாயமாகவும் கூறப்படாததற்குக் காரணங்களிருக்கின்றன. ஆயினும் அடியோடு கூறப்படாமலில்லை.

கிருஸ்து மதத்தில் கீழ்க்கண்ட விரதங்கள் அநுஷ்டிக்கப்படுகின்றன:—

லென்டென்ற 40 நாட்கள், லென்ட் முதல்ஞாயிறுக்குப்பின் பரிசுத்த ஆவியின்பண்டிகை—ஸெப்டெம்பர் 14உக்குப் பின்னும் டிஸம்பர் 13உக்குப் பின்னும் வரும் புதன், வெள்ளி, சனி-கிறிஸ்து பிறந்தநாள் முதலியன. இவற்றில் பெரும்பாலான விரதநாட்களில் மாமிசாதி பட்சணம் கட்டாயமாய் விலக்கப்பட்டிருக்கின்றன.

இனி மகம்மதியமார்க்கத்தைக் கவனிப்போம். மகம்மதியர் ஹஜ்ஜுயாத்திரைக்காக மெக்காவிற்குச் செல்லும்போது மெக்கா ஒருவாரதூரத்தில் இருக்கும்போதே அன்றுமுதல் ஒரே யுடைத்ரிக்கவேண்டும். மெக்காசேருமட்டும் அவ்வுடையைச் சுத்தப்படுத்தலாகாது. ஏனெனில் அதில் சேர்ந்துள்ள சிறு ஜீவன்கள் மடியுமென்றே. கல்லில் சிப்பிடலாகாது. பேன் ஈர் எதையும்

கொல்லலாகாது. எத்தகைய சிறிய ஜெந்துவாயினும் அதைக் கொல்லலாகாது. மஹம்மது நபியே அவர் ஆயுட்காலத்திற்குள் ஏழுமுறையே மாமிசம் புசித்ததாகத்தெரிகிறது. அவர் சரிதையை நோக்கினல் அவருடைய ஜீவகாருண்யமும் ஈசுவரபக்தியும், ஆண்டவனிடம் அவர் வைத்திருந்த நம்பிக்கையும் மிக்க அருமையானவையென்று நன்குவிளங்கும். மேலும் அந்த 7-நாட்கள்கூட அவர் மாமிசம்புசித்தது பட்டினத்தடிகள் பறையர்சேரியில் மாட்டிறைச்சி புசித்ததற் கொப்பானதேயென்று அறிவாளிகளுக்கு நன்குவிளங்கும். மாமிசபோஜனம் அஹங்காரம்முதலிய மிருககுணங்களாகிய தமோகுணங்களையுண்டாக்கி ஆண்டவன் நினைப்பிலிருந்து மனதைத் தூரவிலக்கிவிடு மென்பதே யவருடைய போதனையென்று நன்கு புலப்படுகிறது. அவர் காலத்திற்குப்பின் சுமார் 30 ஆண்டுகள் கழித்து ஒருவன் ஒருநாள் மாமிசம் வாங்கியதை மற்றொருவன்கண்டு குருவிடம்கூற அம்மனிதன் அக்குற்றத்திற்காக நகரிலிருந்து வெளிப்படுத்தப்பட்டானெனில் அங்கு ஜீவகாருண்யம் இருந்ததென்பதைப்பற்றி யதிகம் கூறவேண்டுவதில்லை. "நாம் அன்னிய மதஸ்தருக்கு ஒரு தீங்கும் செய்யலாகாது. அவர்களோடு சண்டையிடலாகாது. நமக்கு அவர்கள் என்ன தீங்குசெய்யினும் பொறுத்துக்கொள்ளவேண்டும். நமது மதத்தை அன்போடும் சந்தோஷத்தோடும் பொறுமையோடும் அன்னியர்க்குப் போதிக்கவேண்டும்" என்பதே யவருடைய கட்டளை. இஸ்லாமானவர்களுக்கு அக்ரமமாய் எவ்வளவோ கொடுமைகளைச் செய்த மெக்கா வாசிகளான அன்னிய மதஸ்தாகிய விரோதிகள் வலியப் போருக்குவந்தபோது பத்ரு என்றவிடத்தில் நடந்த யுத்தம்வரைக்குமே நபிநாயகம் அவர்களின் நடக்கையைக் கவனித்தால் அவர் விரோதிகளாகிய அன்னியமதஸ்தரை யெப்படி நடத்தினர் என்பது விளங்கும். அச்சரித்திரத்தால் அவர் அளவுமீறிய கருணையே காட்டியிருக்கிறாரென்பது எளிதில் விளங்கும். அன்னிய மதஸ்தரைப்போர்புரிந்தும், வேறுவழிகளில் துன்பப்படுத்தியும் பயமுறுத்தியும் தம்மதத்தில் சேர்க்கும்படி இஸ்லாம்மார்க்கம் கற்பிக்கிறதென்றாவது, மகம்மதுநபி யப்படிக் கட்டளையிட்டாரென்பதாவது அடியோடு ஆதாரமற்ற பெரும் பொய்யினும் பொய்யாகும். இன்னும் மகம்மது நபி பரிசுத்தமான மெய்ஞ்ஞானி யென்று ஐயமறவிளங்குகிறது. எவ்வாறெனில் நூதனமதம் சீக்க



ளாக மகம்மதிய மதத்தில்மட்டுமே சுத்தவைதிக மெய்ஞ்ஞான மார்க்கம் கூறப்பட்டிருக்கிறது. இதைப் பின்னால் விரிந்துக் கூறுவாம். (தொடரும்)

---

## வேண்டி வினைசெயேல்.

மேலே காணப்பெற்ற "வேண்டி வினைசெயேல்" என்னும் இவ்வேத வாக்கியமானது பரம்பொருளின் உண்மை நிலையையுணர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வியும் நமது மூதாட்டியுமாகிய ஒளவைப்பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளிய வாக்கியமென்பது தமிழர் யாவரும் நன்குணர்ந்ததே.

இதன்பொருள் யாவருக்கும் நன்கு தெரிந்திருக்கலாம். ஆனதால் இங்கு வரையவில்லை.

ஆனால், தற்போது யாதொரு பிரயோஜனத்தையும்வேண்டி தீங்கு செய்யாவிட்டாலும், பொறாமையென்னும் அறியாமையால் தீவினைகளைச் செய்கின்றனர். அன்னவர்களுக்கு நாம் சொல்லப் புகுந்தோமானால், "ஏழைசொல் அம்பலம் ஏறாது" என்பதற்கிணங்க அன்னவர்கள் செவிகளில் ஏறவில்லை. இவன் சொல்லுகிறானே யென்று, பாஷாணமனத்திலும் பதியவில்லை. "மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டா" மென்று சொல்லியிருக்க, மனம்போனபடியெல்லாம் போகவேண்டுமென்று பதில் சொல்லி, நம்மைப்போலொத்தவர்கள் யாராவது சொன்னால், அவர்கள்மேல், அன்னவர்கள் வெறுப்புற்று அவரையும் மதிக்காமல் திரிகின்றனர். இவைகளுக்குக்காரணம் அறிவில்லாமையேயாகும்.

அத்தகைய அறிவைப் பரவச்செய்யும்பொருட்டு, நமது "ஆனந்தபோதினியும்" அதன் ஆசிரியர் அவர்களும் அவதரித்திருக்கின்றனர். நமது "ஆனந்தபோதினி" தொடங்கிய, மூன்றாண்டுகளாக நல்லறிவையும், நல்லொழுக்கத்தையுமே போதித்துவருகின்றது.

இப்போது நான்காவ தாண்டும் ஆரம்பித்துப் பலமேதாவிகளின் உள்ளக்கருத்தையும், மேலும், மேலும் நல்லொழுக்கத்தையும் நல்லறிவையும் புகட்டுகின்றது. இப்போதினி இன்னும் முறையே மாதா மாதம் வெளிவந்து வருடா வருடம் ஓர் ஆண்டுகளாக மாறி மாறி, என்றும் சிரஞ்சீவியாக விளங்கப் பரமகருணாநிதியாகிய எம்மிறைவன்றாளைப் பிரார்த்திப்போமாக. இது நிற்க, மேற்கூறப்பட்ட ஒளவையாரின் வாக்கை விளக்க ஓர் கதை கூறுவாம்:—

ஓர் ஊரில் பெரியோரெனப் பெயர்வாய்ந்த யோகீஸ்வரரொருவர் வெகுகாலம் தவஞ் செய்துவந்தார். அவர் சதாகாலமும், மேலே காணப்பெற்ற "வேண்டி வினைசெயேல்" என்பதையே தமக்கு வேதமந்திரமாகச் செபித்துவந்தனர். இவர் அவ்வூர் ஆரணியத்தில் வசித்துவருவதை அவ்வூர் அரசன் கேள்வியுற்று அவரை நேரில்காண ஆவல்கொண்டு தன்னுடைய வேலாளர்களை யனுப்பி யோகீஸ்வரரை யழைத்துவரும்படி திட்டஞ்செய்தான். வேலாளர் அரசன் உத்தரவைச் சிரத்தில் தரித்து யோகீஸ்வரரை யழைக்க ஆரணியம் சென்றனர். அங்கே யோகீஸ்வரரைக் கண்டு நமஸ்காரஞ்செய்து, ஐயா! பெரியவரே! தங்களை எங்கள் எஜமானர் அழைத்துவரச் சொன்னார் என்று சொல்ல, அதற்கு அவர் உங்கள் எஜமானனை வரச்சொல் என்று சொன்னார். அதைக்கண்ட வேலாளர்கள் கோபங்கொண்டு யோகீஸ்வரரை ஹிம்சைசெய்ய ஆரம்

பித்தனர். உடனே யோகீஸ்வரர் என்னை ஒன்றும் ஹிம்ஸை செய்யவேண்டாம், உங்கள் எஜமானனிடத்தில் போய் உங்களை நேரில் வரச்சொன்னாரென்று சொல்லுங்களென்று சொல்ல அவர்கள் நகரமேகினர். இவர்களைக் கண்ணுற்ற அரசன் ஏன் அவரை அழைத்துவரவில்லையென்று வினவ, அவர்கள் உம்மை நேரில் வரச்சொன்னார் என்று சொல்ல, அரசன் அப்படியாசங்கதி நானேபோய் அழைத்துவருகிறேன் என்று சொல்லி ஆரணியமேகினன். அங்கு வெகு அருமையாகத் தவஞ்செய்யும் யோகீஸ்வரரைக்கண்டு நமஸ்காரஞ்செய்துவணங்கி நிற்க, யோகீஸ்வரர் அப்பொழுதும், "வேண்டா வினை செயேல்" என்ற மந்திரத்தைச் சொல்லலுற்றார். அரசன் இம்மந்திரத்தைச் சோதிக்கவேண்டும், இவருக்கு நாம் வினைசெய்து பார்ப்போம் என்று எண்ணமுடையவனாய் யோகீஸ்வரரை நோக்கி சுவாமி இன்று நம்மில்லிற் கெழுந்தருளவேண்டுமென்று வெகு விநயத்துடன் வேண்ட அவர் வருவதாக ஒப்புக்கொண்டு அப்போதும் அதே மந்திரத்தைச் செபித்துக்கொண்டே செல்லலானார். இருவரும் அரசன் இல்லிற்குச் சென்றவுடன், அங்கே அரசன் தக்கமரியாதைகள் செய்து யோகீஸ்வரருக்கு ஓர் ஆசனமளித்து அதில் வீற்றிருக்கச்செய்து, தன்னருமைப் பத்தினியை யழைத்து யோகீஸ்வரருக்கு சமையல் செய்யும்படி திட்டம்செய்து ஒவ்வொரு பதார்த்தத்திலும் விஷம் கலந்துவைக்கும்படி ஆக்ஞாபித்தார். அதன்படி செய்து முடிந்தவுடன் அரசன் யோகீஸ்வரரைநோக்கி சாப்பாட்டிற்கு இலைபோட்டிருக்கிறது, வாருங்களென்றுசொல்ல யோகீஸ்வரர் நான் இலைபோட்டுச் சாப்பிடுகிறவழக்கமில்லை. ஆகையால்......என்று சொல்வதற்கு முன்னே அரசன் இலைபோட்டுச் சாப்பிடாவிட்டால் கைபோட்டுச் சாப்பிடலாம் வாருமென்று சொல்ல, யோகீஸ்வரர் அரசனின் முகத்தை சற்று நிதானித்துப்பார்த்தார். அடடா இம் மூடனிடத்திலிருந்து திரும்பிப்போவது மிக்க கடினமாயிருக்கும் என்று தன்மனதி லெண்ணிக்கொண்டார். உடனே அன்னவர் "அகத்தினழகு முகத்திற்றெரியும்" என்றபடி யோகீஸ்வரரின் முகக்குறிப்பை யறிந்த அரசன் தன் மனதிற்றானே எண்ணுகிறான்:—

இவனை நாம் சோதிக்க எண்ணினோம். இவன் நம்மைச் சோதித்துவிடுவான்போ லிருக்கிறது என்று எண்ணி ஒரு தாதியையழைத்து தங்கத் தாம்பாளம் ஒன்றில் விஷங்கலந்த பதார்த்தங்களைக் கொண்டுவந்து யோகீஸ்வரர் முன்னேவைக்கும்படி ஆக்ஞாபிக்க அவள் அதன்படி செய்யலாயினள்.

அதன்பிறகு அரசன் அத்தாம்பாளத்தில் பதினாயிரம் பொன்னும் இரத்தினங்களாற் செய்யப்பட்ட ஆபரணங்களும் வெகுமதியாகவைத்து உபசரித்தான்.

இவற்றை யெடுத்துக்கொண்டு யோகீஸ்வரர் ஆரணியமேகினார். அங்கு சாலையிலிருந்து அன்ன ஆகாரமில்லாமல் வேட்டையாடிக் களைத்திருந்த மேலே சொன்ன அரசனுடைய குமாரனைக்கண்டார். அவன் வருந்தியிருக்கும் சமயத்தில் யோகீஸ்வரர் தான்கொண்டுபோன தாம்பாளத்தையும் அதிலிருந்த பதார்த்த வகைகளையும் அவனிடத்தில் கொடுத்து பசியைத் தணித்துக்கொள்ளுமென்று சொல்லிப்போனார்.

பசியால் களைத்திருந்த அரசன் குமாரன் விஷங்கலந்த சாதத்தை ஒருபிடி சாப்பிடவும் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகுக் கேகினான். இவன் மரணமடைந்ததை அரசன் கேள்விப்பட்டு அங்குவந்து பார்க்கும்பொழுது முன் தான் யோகீஸ்வரரைப் பரீக்ஷிக்கவெண்ணி விஷங்கலந்தனுப்பிய சாதத்தையும் தங்கத் தாம்பாளத்தையும் கண்டு மிக வருத்தமுற்று, ஐயோ மகனே! உன்னைக்கொல்ல நானே எமனாகயிருந்தேனே! பாவியாகிய எனிருந்தென்ன பிரயோஜனம்! என் கண்ணுக்குக்கண்ணான கண்மணி நீயே



போனபிறகு இனி எனக்கென்னவேலை என்று இவ்விதமாகப் புலம்பித் தானும் மடியலானான்.

நண்பர்களே! "வேண்டா வினைசெயேல்" என்பதும், "தன் வினை தன்னைச்சுடும்" என்னும், "செய்தார் வினை செய்தாருடன்" என்பதும், "மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்" என்பதும், இதனால் நன்கு விளங்குகின்றது.

ஆகையால், இத்தகைய வினைகளைச் செய்யாமலிருப்பதற்கு பரமகருணாநிதியாகிய ஸர்வேஸ்வரன் அருள்புரிவாராக. சுபம்!

எஸ். குப்பய்யா முதலியார், கோனுபட்டு.

---

## நாட்டுக்கோட்டை செட்டியாருடைய கலியாணம்.

ஐயா, கடந்த ஆனந்தபோதினி 3-வது தொகுதி வைகாசிமாத சஞ்சிகையில், பிராம்மணர்கள் கலியாணமென்பதில், மாப்பிள்ளையின்கொண்டாட்டமும், மாமனார் திண்டாட்டமு மென்றும், பெண்ணைப்பெற்றவன் பெரும்பாவத்தைச் செய்தவனென்றும், ம-ா-ா-ஸ்ரீ, அனந்தாசாரியா ரவர்கள் யெழுதியிருப்பதற்கு யெதிர்மாறாக, இப்போது நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களில் நடக்கும் கலியாணத்தில் மாமனார் கொண்டாட்டமும், மாப்பிள்ளையின் திண்டாட்டமும், வரனைப்பெற்றவர் மகா துர்ப்பாக்கியமுள்ளவராயும், பெண்ணைப்பெற்றவர் பாக்கியசாலியும் அதிஷ்டமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்.

வரனைப்பெற்றவர் தன்மகனுக்கு கலியாணஞ் செய்யவேண்டுமென்றால், பெண்ணுக்குக் கொடுக்க ரூபா பதினாயிரமும் கலியாணச் செலவுக்கு ரூபா ஐயாயிரமும் பெட்டியில் வைத்திருக்கவேணும். இருபதினாயிர ரூபாய்க்குக் குறைந்தசொத்துடையவன் கலியாணமென்பதைக் கனவிலும் நினைக்கப்படாது. பிரமச்சாரி விரதம் அனுஷ்டிக்கவேண்டியதுதான். அப்படிக்குறைந்த ஆஸ்தி உள்ளவர் கலியாணஞ்செய்ய நினைத்து, தன்னிடம் பதினாயிர ரூபா யிருந்தால் பாக்கித்தொகைக்காக தன் வீடு நிலம் நகை நட்டு முதலானதுகளை யடுவைத்து கடன்வாங்கி கலியாணத்தை முடிக்கிறார். கலியாண முடிந்த ஒருவருஷத்துக்குள் கடன்காரன் கடனைக்கேட்கிறான். பணங்கொடுக்க வேறு வகையில்லாமல் கடன்காரனுக்குத் தன்னுடைய சொத்துகளைக் கிரயம்செய்து கொடுத்துவிட்டு தங்க வீடுமில்லாமல் சாப்பாட்டுக்கும் கஷ்டப்படுகிறான்.

பணமில்லாதவன் எவ்வளவு சொந்தபந்துவாயிருந்தாலும், யோக்கியனாயும் கல்வி யறிவுடையோனாயிருந்தாலும், பணம்வாங்காமல் பெண்கொடுக்க மறுத்துவிடுகிறார்கள்.

சிலரை யாராவதுவந்து பெண்கேட்டால், "நம்மள் விசாலாக்ஷிக்கு இன்னும் வயதுவரவில்லை. இப்ப என்ன, அந்த ஊர் கருப்பஞ்செட்டியார் மகன், காசிவிஸ்வநாதனுக்குக்கூடக் கேட்டார்கள். பெண்ணுக்காகப் பணமும் பதினாயிர ரூபாய் தருவதாய்ச் சொல்லுகிறார்கள். பையனும் அழகானபையனல்ல. படிப்பும் அவ்வளவு ஜாஸ்தியாய்த் தெரியாவிட்டாலும், பேர் ஊர் எழுதத் தெரியுமாம். கொஞ்சம் முரட்டுக்குணமுடையவனாம். சூதாட்டம் கொஞ்சம் ஆடுகிறானாம். தாசிவீடுகளுக்கும் அவ்வளவு ஜாஸ்தியாய்ப் போகிறதில்லையாம். பணமும் ரொக்கமாய் எழுபதினாயிர ரூபா யிருக்குமாம். மற்ற நிலம், வீடு, நகை முதலானதுகள், ரூபாய் இருபத்தையாயிரத்துக்குக் குறையாமலிருக்குமாம்;

அவன் ஒரேபிள்ளையானபடியால், செல்வமாய்வளர்த்து, அவன் மனம்போல் திரிய விட்டுவிட்டார்கள். கலியாணஞ் செய்துவிட்டால் சூதாட்ட முதலிய கெட்டவிஷயங்களுக்கு ஜாஸ்தியாய்ப் போய்விடமாட்டான்,' ஒத்துப்போகும், அவனுக்குத்தான் கொடுக்கவேணும். இருந்தாலும் நீங்கள் சொந்தமாகச்சே பதினேழாயிர ரூபாய் தந்தால் தங்கள்மகனுக்குக்கொடுக்கத் தடையில்லை'' என்று ரொம்ப நாணயமாகவும் பட்சமாகவும் சொல்லுகிறார்—அந்தோ இவருக்குப் பணத்தின்மேல்தான் நோக்கமெல்லாம்—தன் மகளும், மருமகனும் எப்படிப் போனால்தானென்னவென்று இவர் நினைக்கிறார்—

இனி பணமிருக்கிறவர்களுக்குப் பெண்கொடுக்கிற வழிகளை பார்ப்போம். நொண்டியானாலும், குருடனானாலும், செவிடனானாலும், ஊமையானாலும், தொண்ணூறுவயது சென்ற துவண்ட கிழவனானாலும், எட்டுவயது சிறுவனானாலும், குஷ்டரோகியானாலும் கல்வி யறிவில்லாதவனானாலும், பெண்ணுக்கென்று வாங்குகிற ரூபாய் பதினாயிரமோ, பதினெண்ணாயிரமோ, தந்துவிட்டால் ஆடு மாடுகளை விற்பதுபோல் விற்றுவிடுகிறார்கள். மாட்டிலும் உயர்வான ஒருமாட்டிற்கு வாங்குவது முன்னூறு அல்லது நானூறு ரூபாய்தான். பெண்ணைவிற்று வாங்குவதோ அளவிலடங்கவில்லை. இவ்வளவு ரூபாய் வாங்குவது யெதற்காக? முதலாளியென்ற பேரும் பணக்காரனென்ற பெயரும் பெருவதற்கே போதும்.

இனி மாப்பிள்ளையைக் கவனிப்போம். இவன், இருபதினாயிர ரூபாய் சம்பாதிக்க எவ்வளவுகாலஞ் சென்றிருக்குமென்பதையும், தன்பாட்டன் பூட்டன் தகப்பன் முதலானவர்கள் தேடிவைத்த பொருளையும் தான்தேடின பொருளையும் கொடுத்து, கலியாணஞ்செய்த மனைவி ஒருசமயம் விதிவசத்தால் இறந்துவிட்டால் புருடன்மனம் எவ்வளவு வருத்தமும் வேதனையும் அடையுமென்பதை அடியேன் சொல்லவேண்டுவதில்லை. அதிலும் முதல்மனைவி ஒருசிசுவைவீன்றுவிட்டு இறந்துவிட்டால், அதை ஆதரிக்கவும் மறுகலியாணஞ் செய்துகொள்ளவும் பொருளில்லாமல் படுகிறகஷ்டமும் அடியேனால் சொல்லத்தரமன்று. சிலர் கலியாணஞ்செய்யப் பொருளில்லாமலே தாழ்ந்தசாதிப் பெண்களோடும் விலைமாதர்களோடும் வாழ்ந்துவருவதைக் கண்ணாறக் கண்டிருக்கிறேன்—இங்கொரு கதையும் அடியேன் அவசியம் யெழுதவேண்டியதிருக்கிறது. ஒரு ஊரில் இருபதினாயிர ரூபாய் சொத்துள்ள ஒரு பையனிருந்தான். அவனுக்குக் கலியாணம் நடந்தது. அவனுடைய பொருளில் பெண்வீட்டார், பெண்ணைவிற்று ரூபா பதினாயிரம் பெற்றுக்கொண்டார்கள். பாக்கி ரூபா ஐயாயிரமும் கலியாணச் செலவில்முடிந்துவிட்டது. கலியாணமுடிந்த பதினைந்துநாட்கள்சென்று பெண்ணின் தாய் தகப்பன் சுற்றத்தார் முதலானவர்கள் பெண்ணைப் புருடன்வீட்டுக் கழைத்துபோகக் கூப்பிட்டார்கள். பெண்ணோ கண்ணீர் தாரைதாரையாய்விட்டழுதது. இதைக்கண்ட தாய் தகப்பன் முதலானவர்கள் செல்வமாய் வளர்த்த மகளாகையால் புருடன் வீட்டுக்குப்போக அழுகிறதாக்கும் யென்று நினைத்து ''வா அம்மா, புருடன் ரொம்ப நல்லவர் உன்மாமனும் மாமியும் ரொம்ப நல்லவர்கள். அன்பாய்.நடத்துவார்கள். நம்மள்வீட்டிலிருந்ததற்கு கூட பதின்மடங்கு மேன்மையாயிருக்கும். நேரமாகிறது, புறப்படு அம்மாவென்று கூப்பிட்டார்கள். அதற்குப் பெண்ணும் என் புருடன்வீட்டில் என்ன யிருக்கிறது? இருந்த ரூபா இருபதினாயிரத்தில் என்னைவிற்று ரூபா பதினாயிரம் பிடுங்கிக்கொண்டீர்கள். பாக்கியிருந்த ரூபா ஐயாயிரமும் கலியாணச்செலவில் அழிந்துவிட்டது. இனி நானங்கேபோய் என்னசெய்வது? சோற்றுக்குப் பிச்சையெடுக்கவேண்டியதுதான். பொருளென்பதோ என் தாலியைத்தவிர வேறென்னவிருக்கிறது''



என்று கண்ணீர் உதிர்த்தாள். அதன் பிறகு சிலர் பெண்ணின் தகப்பனிடம் கெஞ்சிக்கேட்டு ரூபா ஐயாயிரம்வாங்கிப் பெண்ணின்கையிற்கொடுத்து பெண்ணைப் புருடன்வீட்டுக் கனுப்பிவைத்தார்கள்.

அந்தோ! இதென்ன அநியாயமாயிருக்கிறதே? சொற்ப ஆஸ்தியுள்ளவன் கலியாணஞ்செய்ய முடியவில்லையே பாபமல்லவாவென்று சில நகரத்தார்களைக் கேட்டேன்—அவர்கள், பாபந்தான் நாம் என்னசெய்வது, வழக்கமாய் நடந்துவரும்போது, நாம் சொல்வதற்கில்லை யென்கிறார்கள். எல்லோரும் இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் எப்போதுதான் இக்கொடியவழக்கந் தொலையும்—நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களெல்லோரும் ஒரு கூட்டங்கூடி இவ்வழக்கத்தை அடியோடு நிறுத்தினாலன்றி பஞ்சுக்குள்வைத்த நெருப்புப்போலப் பற்றிக்கொண்டேதா னிருக்கும்.

இக் கொடியவழக்கத்தைக் கையாடிவரும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களின் ஊர்களிலும் அவற்றிற்கருகிலுமுள்ள மற்ற சாதிக்காரரும் இவ்வழக்கத்தை அனுசரித்து இப்போது, பெண்ணுக்காக ரூபா ஆயிரம் இரண்டாயிரமென்று வாங்குகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் அளவிலாத ஆனந்த விஷயங்களையும் ஞானங்களையும் பக்திகளையும் நமக்குவந்து உபதேசிக்கும் அரிய நண்பனாகிய ஆனந்தபோதினி சந்தாநேயர்களாக அநேக நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களிருப்பார்களே, அவர்களாவது ஒருகூட்டங்கூடி இந்த வழக்கத்தை முற்றிலும் நிறுத்தி, பழையகாலத்து வழக்கப்படி கலியாணம் நடத்தும்படியாயும், இக்கொடியவழக்கம் அடியோடு நீங்கவேணுமென்றும் எல்லாம்வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கிறேன்.

கட்டுக்குடிப்பட்டி. மு. வெ. நல்லதம்பி, பயிஞ்சலோ.

குறிப்பு:—மேல்கண்ட விஷயத்தை யறிய நாம் உண்மையாகவே மிக்க விசனப்படுகிறோம். புள்ளிமானுக்கு ஒரு புள்ளி யேறினாலும் குறைந்தாலும் யாருமறியார்கள். இதோ வெள்ளைபூசிப் பரிசுத்தமாயிருக்கிற சுவரில் ஒரு பெரிய கறுப்புப்புள்ளி வைத்ததுபோ லல்லவோ யிருக்கிறது.

பூர்வ ஜன்ம புண்ணியத்தால் மிக்க செல்வம் பொருந்தியவர்களாய், ஜீவ காருண்யம், ஈசுர பக்தி முதலிய குணங்களிலும் தானதர்மம் செய்வதிலும் இணையற்றவர்களாய் சிவபுண்ணியத்தை யடியோடு கொள்ளை கொள்ளும் இப்புண்ணியவான்கள் மேல்கண்ட கெட்ட வழக்கத்தால் நேரிடக்கூடிய கெடுதிகளைச் சற்றும் சிந்திக்காது இன்னும் பாராமுகமா யிருப்பதென்றால், யார்தான் விசனமடைய மாட்டார்கள். பொருட் செல்வத்தை விட கல்விச் செல்வமே சிறந்ததாகையால் அதை விருத்தி செய்யக் கொஞ்சம் கல்வி கற்றிருக்கும் வாலிபர்க்குப் பெண்களைக்கொடுத்து, அவர்கள் இன்னும் உயர்ந்த கல்விகற்கப் பொருளுதவி செய்வது எவ்வளவோ உயர்ந்த செய்கையன்றோ. செட்டிமார்களில் சீர்திருத்தங்களை யுண்டாக்க முயன்றுகொண் டிருப்பவர்களும் உளர் என்றறிகிறோம். அந்த அறிவாளிகள் ஜாதனை சீர்திருத்தங்களை யுண்டாக்குமுன் தங்கள் குலத்திற்கே கேட்டை விளைவிக்கும் இக்கொடிய வழக்கத்தை யுடனே நிறுத்துவார்கள் என்று மிகவும் வேண்டிக்கொள்கிறோம். இனியும் செட்டிமார்கள் இதுவிஷயத்தில் ஆலசியம் செய்யமாட்டார்களென்று பூரணமாய் நம்பி எல்லாம் வல்ல பரம்பொருளாகிய பொன்னம்பலத்தடியைப் போற்றி யேற்றுவாம்.

பத்திரிகாசிரியர்.

# நித்தியவிதி—பூர்வான்னம்.

(109-ம் பக்கத்தொடர்ச்சி)

முப்பது நாழிகை கொண்ட பகற்காலத்தை ஐந்து கூறாகப் பகுத்துப் முறையே பூர்வான்னம், பரான்னம், மத்தியான்னம், அபரான்னம், சாயான்னமென்னப் பெயரிட்டழைப்பர் முன்னோர். இவை முறையே காலை, முற்பகல், நடுப்பகல், பிற்பகல் மாலை யென்று தமிழிற் கூறப்படும். ஒவ்வொரு கூறும் ஆறு, ஆறு நாழிகை அளவு கொண்டது, பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருந்து மலஜலவிசர்ஜ்ஜனாதி புண்ட்ரம் இறுதியாகக் கூறப்பட்ட விதிகளை முடித்துக் கொண்ட பின்னர் ஜபம் செய்யவேண்டியதாகையால், அது பூர்வான்னமாகிய காலைப் பொழுதிலேயே விசேஷித்து நடைபெறும் அந்தணர்கள் சூரிய உதயத்துக்கு முன் சூரியனை உத்தேசித்து அர்க்கியம் அளித்த பின் காயத்திரி மஹா மந்திரத்தை ஜபிக்கவேண்டும். கிரமப்படி ஆயிரத்தெட்டு ஆவர்த்தி செய்வதானால் ஒரு முகூர்த்த காலம் (மூன்றே முக்கால் நாழிகை) கொள்ளும். இது த்விஜர்கள் எல்லாருக்கும் பொது. நன்றாய்ச் சூரியோதயமான பிறகே உபஸ்தான மந்திரம் கூறி ஜபத்தை முடிக்கவேண்டும். அதன் பிறகு அக்கினி காரியம், சூரிய நமஸ்காரம், முதலியன செய்யவேண்டும். இக்கிரியைகளைச் செய்து முடிப்பதானால் பூர்வான்னமாகிய காலைப்பொழுதில் முக்கால் பாகம் கழிந்துவிடும். மற்றைய வருணத்தாருக்கும் தந்தமக்கு விதித்த வைதிக கன்மங்களை முறைப்படி செய்யவும் அவ்வளவு காலமாகும். ஆதலால் நித்திரை தெளிந் தெழுந்திருந்த காலந்தொடங்கி இது பரியந்தமும் பரபிரம்ம தியானமே ஆரியர்களுக்கு விதிக்கப்பட்டது.

சூரிய உதயமான காலமே சமையல் செய்வதற்கும் குடிப்பதற்கும் தண்ணீர் எடுத்துச் சேர்த்துக்கொள்ளும் காலமாக விதிக்கப்பட்டது. சூரிய சந்திர கிரணங்களும் காற்றும் சம்பந்தப்பட்ட நீரே பாகத்துக்கும் பானத்துக்கும் அருகமாகு மென்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. சூரிய உதயத்துக்கு முன்னுள்ள நீர் ஸ்நானத்துக்கு மட்டுமே அருகமாகும். சூரிய கிரணத்தால் சற்று உஷ்ண குணத்தையும் பெற்ற நீரே பானாதிகளுக்கு அருகமாகு மென்று வைத்தியசாஸ்திரம் எடுத்துக் கூறுகின்றது. இதில் விசேஷமென்ன வென்றால், இரவில் சந்திரகிரணத்துடன் சம்பந்தப்பட்ட நீர் தனதியற்கையான குளிர்ச்சியுடனே மாத்திரமிருக்கும். கீழ்த்திசையில் சூரியனுதித்தபோது அதன் உஷ்ண கிரணம் பூமியை ஊடுருவிச்செல்லும். அப்போது பூமியின் சாரம் மேலெழுந்து நீரோடுகலக்கும். நீரின்மேலே சூரியகிரணம் தாக்க அந்நீரில் உஷ்ண குணமும் சிறிது கலக்கும். காற்று வீசுவதால் வாயுவின் அம்சமும் அதிற் சேரும். ஆகவே பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும் ஒன்றுபட்டுக் கலக்கும் என்பது விளங்கும். நான்கு பூதாம்சங்களுடன் கூடின நீரே பான பாகங்களுக்கு அருகமாகு மென்று வைத்திய நூல்கள் கூறுகின்றன வென்பது தான் நாமிங்கு தெரிந்துகொள்ள வேண்டுவதாம். ஆகையால் சூரிய உதயமானவுடனே வீட்டுக்கு உபயோகமான அளவு நீரைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும் நீர் திரட்டும் போது வஸ்திரத்தினால் வடிகட்டியே எடுக்கவேண்டு மென்பது வைத்திய நூல் விதி. திரட்டிய நீரைச் சுத்தம் செய்யப்பட்ட மண் பாத்திரத்திலேயே வைக்கவேண்டும். உலோக பாத்திரங்களில் வைப்பது உசித மன்று. உலோகபாத்திரங்களில் வைக்கும்படியான அவசியம் நேரிட்டால் முறைப்படி சுத்திசெய்த பாத்திரங்களில் வைத்துக் கொள்ளலாம். இது மத்திம பட்சமே யன்றி மண்பாண்டத்தைப் போல அவ்வளவு சிலாக்கிய



முடையதல்ல. பானத்துக்கென்று வைக்கப்பட்ட நீரைத் தேற்றாம்விரை முதலியவற்றால் தெளியவைத்து வடிகட்டி சுத்தமான மண்பாண்டத்தில் வைத்து, அதில் திரிபலை யென்று கூறப்படுகிற நெல்லிப்பழம், கடுக்காய்ப்பழம், தான்றிப் பழம் இம் மூன்றையும் போட்டு வைத்தால் அதுபல வியாதிகளைப்போக்கு மென்றும், திரிதோஷங்களையும் நீக்கு மென்றும் சில வைத்திய நூல்கள் கூறுகின்றன. அப்பழங்கள் அகப்படாதகாலத்தில் அவற்றின் வற்றல்களை உபயோகிக்கலாம். நீர் திரட்டு முன் குளித்துச் சரீரத்தைச் சுத்தி செய்து கொண்டு நீர் திரட்டவேண்டும். அதிகநாழிகை செல்லக் கூடாது. நாழிகை சென்றால் மிருகபட்சி மனிதர்களால் நீர் அசுத்தமாய் விடும். அசுத்தமான நீர் பானத்துக்கும் யாகம் செய்வதற்கும் உபயோகமாகாது. இத்தொழிலைப் பெரும்பாலும் ஸ்திரீகள் செய்வதே நமதுதேசத்து வழக்கம். தனவந்தர்களானால் வேலைக்காரர்களைக் கொண்டு நீர்திரட்டலாதித்தொழில்களைச் செய்து கொள்ளவும் கூடும். எவராயிருந்தாலும் சரீர சுத்திசெய்து கொண்ட பிறகு தான் இத் தொழில்களைச் செய்தல் வேண்டும். இதற்குமுன் வீட்டை அலகிட்டு மெழுகிச் சுத்தப்படுத்திக் கொள்ளல்வேண்டும். பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருந்த இருவருக்கும் அவரவர்களுக் குரிய தொழில்களைச் செய்து முடிக்கப் போதுமான காலம் இதுவே.

இனி முற்பகலில் (பூர்வான்னம்) பரப்பிரம்ம தியானாதிகள் விதிக்கப்படவில்லை. ஏனென்றால் அதிகாலையில் எழுந்திருந்து வைதிககன்மங்களை விதிப்படி முடித்துக்கொண்டவன் தன் குடும்பகாரியங்களைப் பார்க்கவேண்டியது அவசியமாகையால் மேல் பகல் பன்னிரண்டு நாழிகை வரைக்கு முள்ள முற்பகலில் இலௌகிக விர்த்திகளைப் பார்ப்பதே முக்கியமான காரியம். இதுவரைப் பிரம்மத்தியானத்தினால் சரீரமும் மனமும் சுத்தியாய்க் களங்கமற்றுச் சாந்தமுதலிய நற்குணங்களைப் பெற்றுக், கோப முதலிய துர்க்குணங்களையொழித்து நிர்மலமாயிருக்கும் சமயமே குடும்ப சம்ரக்ஷணையாகிய இலௌகிக விர்த்தியைச் செய்ய உசிதமானகாலம். இலௌகிக விருத்தி வருணங்களுக்கும் ஆசிரமங்களுக்கும் ஏற்றவாறு வேறுபட்டே யிருக்கும். எவ்வாறிருப்பினும் ஒவ்வொருவரும் தத்தம் தொழில்களைச் செய்ய இதுவே காலமாக விதிக்கப்பட்டது. இக்காலத்தில் அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழில்களையும் செய்வது உசிதம். க்ஷத்திரியர்கள் லோக விசாரம்புரிதலும், யானையேற்றம் குதிரையேற்றம் ஆயுதப்பிரயோகம் முதலியவற்றைப் பயன் படுத்திக்கொள்ளவும் இதுவே தக்ககாலம். அரசன் தேச விசாரணை செய்தல், வழக்கறுத்தல், குடிகளை விசாரித்தல், அமைச்சரை உசாவுதல், வேலைக்காரர்களுக்கேற்ற தொழில்களைச் செய்யவிதித்தல் ஒற்றர்களுக்குக் கட்டளை யிடுதலாதிகளுக்கும் இதுவே காலமாக, விதிக்கப்பட்டது. வைசியர்களுக்குக் கொள்ளல், விற்றல், வட்டிக்கு விடுதலாதிகளும் விதிக்கப்பட்டன. பசுக்களைப் போஷித்தல், நிலத்தைப் பண்படுத்தல் முதலியன வைசியர்களுக்கும் வேளாளராதி நாலாம் வருணத்தவர்களுக்கும் பொதுவாதலால் அதற்கும் இதுவே தகுந்த காலமாக விதிக்கப்பட்டது.

ஆயினும் கலியுகத்தில் பயிர்த்தொழிலை நான்குவருணத்தாரும் செய்யலாமென்று விதிக்கப்பட்டது. அந்தணராதியோர்க்கு விதிக்கப்பட்ட சுவதர்மங்கள் இக்கலியிற் பெரும்பாலும் பயன்படாமைபற்றியே பயிர்த்தொழில் யாவர்க்கும் பொதுவாக விதிக்கப்பட்டது. இத்தொழில் செய்வதற்கும் இது காலமாம். இரண்டுஜாமம் (பதினைந்து நாழிகை) வரை உழவுத்தொழில் விதிக்கப்படுதலால் அதே ஏககாலத்தில் செய்துமுடிக்க வியலாது. ஆதலால் காலையில்

ஒருஜாமமும், அதன்பிறகு மாலையில் ஒருஜாமமுமாக உழவுதொழிலைச் செய்யவேண்டும். உழவுக்குரிய ரிஷபம் பசியுடையதும், தாகமுடையதும், இளைப்படைந்ததும், காலில் ஊனமுள்ளதும், வியாதியுடையதும், கடும்ஸகமானதுமா யிருத்தல்கூடாது. இவற்றுக்குமாறான வியல்புள்ள ரிஷபங்களைக்கட்டி யுழவேண்டும். உழும்போது கயிறு கோல்களால் அவற்றை அடிக்கக்கூடாது. தாற்றுக்கோலால் இரத்தம்வடியக் குத்துவது தகாது. வாயினால் அதட்டியே ஓட்டவேண்டும். இலைகளோடுகூடிய சிறிய கிளைகளால்தட்டி ஓட்டலாம். மூடத்தனத்தினால் உழும் எருதை இரத்தம்வடிய அடிக்கிறவன் பசுஹத்தி தோஷத்தை அடைவானென்று பாரதம் அசுவமேதபர்வத்தில் சொல்லப்பட்டது. உழுதபின் எருதுகளைக் குளிப்பாட்டி ஆகாரம் தண்ணீரும்கொடுத்து அவைகளைத் திருப்திசெய்வித்து அதன்பிறகுதான் புசிக்கவேண்டுமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இவ்விஷயம் இவ்விடத்தில் விரிப்பது அநாவசியமாயினும் ஜீவனோபாயமாகக் கிருஷியும் விதிக்கப்பட்டிருப்பதால் அதற்குரிய உழவின் முறையும் சிறிது கூறப்பட்டது.

க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் கிருஷி, வர்த்தகம், சிற்பம் இத்தொழில்களையும் செய்யலாமென்று கூறப்பட்டுள்ளது. பணத்தை வட்டிக்குக்கொடுத்து ஜீவிப்பது வைசியரைத் தவிர மற்றவர்களுக்கு ஒருபோதும் செய்யத்தகாது என்று விலக்கப்பட்டது. அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து ஜீவிப்பதும் உசிதமென்று கூறப்பட்டபோதிலும், அது சுவவிருத்தியென்றும், அதை வைதிகாசாரமுடையவர்கள் ஒருபோதும் செய்யத்தகாதென்றும் ஸ்மிருதிகள் விதித்தன. சுவவிருத்தி என்றால் நாய்த்தொழில் என்று பொருள்தரும். சுவதந்திரமற்றுப் பிறருக்கடிமைப்பட்டு நாய்போல உழைக்கவேண்டுவதுபற்றி அத்தொழிலைச் சுவவிருத்தியென்று நூல்க ளிகழ்ந்துகூறின. எவ்வகையிலாயினும் தன்னையும் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்குரிய பொருளைத் தேடுவதற்கு இந்தகாலமே தக்கதென்று விதிக்கப்பட்டது. குறிப்பிட்டகாலமாகிய பன்னிரண்டு நாழிகைக்குள் பொருள் வரவுக்கு ஏற்பாடு செய்துகொண்டு வீடுவந்துசேரவேண்டுமென்பது நூல்களின்கருத்து. ஆதலால் பரான்னமாகிய ஆறு நாழிகையும் இலௌகிகவிருத்திக்கே உரியகாலமென்பது பூர்வீகர்கள் கருத்து என்பதை யறிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் மத்தியான்னத்தில் வேறு வைதிககன்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன வாதலால் அதற்கு இடையூறு நேராதவாறு பரான்னத்திலேயே இலௌகிகத்தொழிலை முடித்துக்கொண்டு வரவேண்டு மென்க.

(தொடரும்.)

சிவானந்தநாதா யோகீஸ்வரர்.

---

## "தேசபாஷைப் பத்திரிகைகள்"

செந்தமிழ் நண்பர்காள் !

நம்மாகாணமாகிய சென்னை மாகாணத்தில் வழங்கிவரும் தேசபாஷைகளில் முக்கியமானதும் முதன்மையானதாயு மிருக்கிறது தமிழ்பாஷையே யென்ற விஷயம் யாவரு மறிந்ததே. ஆயின் மேற்கண்ட விஷயமாய்ச் சிறுவனாகிய யான் ஏதோ சில எழுத முன்வந்ததற்காக குற்றங்குறை யிருப்பின் பொருட்படுத்தாது பொறுத்தருளவேணுமாயும், தயவுசெய்து யாவரும் கவனித்து வாசிக்கும்படியும் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



சகோதர சகோதரிகளே.

உலகிலே வாழும் மக்களுக்கு உணவு எங்ஙனம் இன்றியமையாததோ அங்ஙனமே பத்திரிகையும் இன்றியமையாதது. உணவு உடலை யோம்புவது. பத்திரிகை அறிவை யோம்புவது. பத்திரிகையென்பது பலர் அறிவினின்றும் போதரும் அரும்பொருள்களை ஒருங்கே அடக்கியுள்ள ஓரறிவுப்பிண்டமாம். இது காலம் நம்மாகாணத்தில் நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் உலவாநிற்கின்றன. அவைகளிற் பல ஆங்கிலபாஷையிலும் பல தேசபாஷைகளிலும் எழுதப்படுகின்றன. இவ்விருதிறப்பத்திரிகைகளுள் ஆங்கிலப் பத்திரிகைகள் பொன்னேபோற் போற்றப் பெறுகின்றன. தேசபாஷைப் பத்திரிகைகள் அங்ஙனம் போற்றப்படுதலில்லை. இந்தியர்களே தேசபாஷைகளையும் தேசபாஷைப் பத்திரிகைகளையும் வெறுத்து நிற்பது கலியின் வன்மைபோலும். இதற்கு யாது காரணமென சிந்திப்போமானால் நமது கலாசாலைகளில் (யூனிவர்சிடி) சர்வ கலாசாலை பரிக்ஷைகளுக்கு தேசபாஷைப் படிப்பு முன் கட்டாயபாடமா யிருந்ததை இப்போது இஷ்டபாடமாக மாற்றிவிட்டதே முக்கிய காரணமாயிருக்கிறது. அதைப் பழையபடியே கட்டாயபாடமாகச் செய்யவேண்டுமென்று நமது தேசபக்தர்கள் பலதடவைகளில் கேட்டு வந்ததை நம் மாகாண வித்யா இலாகா அதிகாரி வீண்வார்த்தையென்று ஒரு சமயம் பரிகாசம் செய்திருக்கிறார். அவர் அம்மாதிரி கேலிசெய்வதற்கு நாமேதான் காரணமென்று சொல்வேன். ஏனெனில் நம்மவர்களில் பி. ஏ. முதலான உயர்தரப் பரிக்ஷைகளில் தேர்ந்த பலர் ஏதாவது ஒருசபையில் அல்லது மேடையில் பேசவேண்டுமானால், தமக்குத் தேசபாஷையில் பேசத்தெரியாதென்றும், அதனால் ஆங்கிலத்தில் பேசுவதாகவும் அதற்காக மெத்த விசனிப்பதாயும் கொஞ்சமும் வெட்கமன்னியில் பகிரங்கமாகச் சொல்லுகின்றார்கள். அந்தோ, இவர்களின் அறியாமையை என்னென்று சொல்லுவது. தேசபாஷை கட்டாய பாடமாகச் செய்திருக்கும் பக்ஷத்தில் தேசபாஷைப் பத்திரிகைகளல்லவோ பொன்னேபோற் போற்றப் பெறும். மேற்கண்டவாறு விசனத்தோடு கூறும் நம்மவர் இனியாவது நம் தாய்ப்பாஷையைக் கட்டாயபாடமாய் வைக்கவேண்டியதற்கு அவசியமான முயற்சிகளை உடனே எடுத்துக்கொள்ளவேண்டியது மிக்க அவசியமன்றோ !

தற்காலம் தேசபாஷையில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றனவாயினும் அவைகளில் முறையாகவும் ஒழுங்காகவும் நடை பெறுபவை யொருசிலவே. பலதோன்றி நீண்டகாலம் நிலைத்தலின்றி அதிவிரைவில் மறைவுறுகின்றன. இதனால் தேசபாஷைப் பத்திரிகைகள் சிறுமையுற்றுப் பழிப்பிற்கும் இடம் பெறுகின்றன. ஆனால் நமது "ஆனந்தபோதினியோ" மற்ற பத்திரிகைகளைப்போலில்லாமல் முறையாகவும் ஒழுங்காகவும் மிகவும் குறைந்த சந்தாவிலும் நடைபெறுவதுடன், இக்கொடிய காகிதப்பஞ்சத்திலும் சந்தாவை உயர்த்தாமலும் பக்கங்களைக் குறைக்காமலும் பற்பல அரியபெரிய விஷயங்களுடன் மாதா மாதம் தவறாமல் வெளிவருவதனாலல்லவோ நமது போதினிக்குச் சுமார் பதினாயிரம் சந்தாதாரர்களுக்குமேல் சேர்ந்திருக்கின்றார்கள். ஆனால் இது ஒரு அதிகமென்று சொல்ல வாயில்லை. இதைப்போன்ற பத்திரிகைகளுக்கு குறைந்தது ஒரு லக்ஷம் சந்தாதாரர்களாவது இருக்கவேண்டுவது மிகவும் அத்தியாவசியம். நமது போதினியை வாசிக்கும் சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் சிற்சிற்று முயற்சியெடுத்துக்கொண்டால் இது ஒரு கஷ்டமான காரியமல்ல.

பத்திரிகைகளின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் சந்தாதாரர்களேயாவர். மேனாடுகளில் சந்தாதாரர்களின் ஊக்கத்தாலும் ஒற்றுமையாலும் பொரு

ளின்றித் தொடங்கப்படும் பத்திரிகைகளும் இடையூறின்றி நீண்டநாள்நின்று செவ்வனே நடைபெறுகின்றன. தமிழ்நாடு ஜனத்தொகையிற் குறைவுபெற்றுளதோ? தமிழ்நாட்டில் ஜனத்தொகை இரண்டுகோடி. தமிழ்நாட்டிற் பொருளுடையார் தத்தமில்லங்களில் நேரும் நற்காரியங்களிலும் தீக்காரியங்களிலும் அளவிலாப்பொருளை பெருமகிழ்ச்சியோடு செலவிடுகின்றனர். "நமது ஆனந்தபோதினி"க்கு சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து வருஷம் ஒன்றுக்கு ஓர் ரூபாய் (அதாவது மாதம் ஒன்றுக்கு ஓரணா நான்கு பைசா) சந்தா கொடுப்பது வீண்செலவெனக் கருதுகின்றனர். இஃதென்ன அறியாமை. மாதம் ஒன்றுக்கு பதினாறு பைசா கொடுப்பதற்காக ஆனந்தபோதினியெனும் சிசு மாதம் மாதம் தவறாமல் சந்தாதாரர்களாகிய நம் ஒவ்வொருவரையும்வந்து காண்கின்றதே. இது வீண்செலவாகுமோ. இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் நூற்றுக்கு தொண்ணூறுபேர்களுக்குமேல் பத்திரிகை வாசிக்கின்றனர். அங்கு கூலிவேலை செய்பவர்களும் வாசிக்கத் தெரியாதவர்களுங்கூட பத்திரிகையை விலைக்குவாங்கி வாசிக்கத் தெரிந்தவர்களை வாசிக்கும்படி கேட்டு விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளுகின்றார்களென்றால், அவர்கள் எவ்வளவு அக்கறையோடு தங்கள் தேசாபிவிர்த்தியில் நாட்டம் வைத்திருக்கின்றார்கள் என்பதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள். நம்தேசத்தில் பத்திரிகைகளுக்கு சந்தாதாரர்களாகச் சேர்ந்து பத்திரிகை வரவழைப்பவர்களே மிகவும் குறைவு. அப்படி வரவழைப்பவர்களில் பலர் பத்திரிகை வாசிக்கிறதற்காக வரவழைக்காமல் யாராவது ஒருவருடைய தாக்ஷண்யத்திற்காகவோ அல்லது ஒரு கௌரவத்திற்காகவோ பத்திரிகைக்குப்பணம்கட்டி வரவழைத்து மேல் உறையை (கவரை)க் கூடகிழிக்காமல் அப்படியே கட்டாய்க்கட்டி வைத்திருந்து அதிகமாகச் சேர்ந்ததும் மிட்டாய்க் கடைக்கு விற்றுவிடுகிறார்கள். ஒரு நண்பரை ஏன் இப்படி வைத்திருக்கிறீரென்று கேட்டதற்கு "எப்பொழுதும் பத்திரிகை வாசித்து வழக்கமில்லை இப்பொழுதுமட்டும் புதுவழக்கம் ஏன்செய்யவேண்டும்?" என்று சொல்லுகின்றார். சிலர் தங்களுக்கு ஆங்கிலம் கிஞ்சிற்றும் தெரியாவிட்டாலும், தங்களுக்கும் ஆங்கிலப்பத்திரிகைகள் வருகிறதென்றால் அதுவே ஒரு கௌரவமென்று வரவழைக்கின்றனர். இதற்கெல்லாம் முக்கியகாரணம் கல்வியில்லாமையே ஒழிய வேறில்லை.

ஆகையால் கனம் கோபாலகிருஷ்ணகோகலே முதலான தேசாபிமானிகளால் பல வருஷங்களுக்கு முன்னமேயே கேட்டுவந்த ஆரம்ப இலவசகட்டாயப்படிப்பு ஏற்படுத்தவேண்டுவது மிகவும் அவசியமென்பதை நமது மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டாரவர்கள் கவனித்து வேண்டிய ஏற்பாடு செய்யவேணுமாய் நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

நிற்க தேசபாஷைப் பத்திரிகைகள் செழித்தோங்கவேண்டியதற்குச் சந்தாதாரர்களின் ஊக்கமே மிகவும் அவசியமென்பதை சந்தாநேயர்கள் யாவர்களுக்கும் யான் ஞாபகப்படுத்துகின்றேன். சாதாரணஜனங்களைச் சந்தாநேயர்களாக்க ஒவ்வோர் பட்டணங்களிலுங் கிராமங்களிலுமுள்ள அறிவுடையோர் முயற்சியெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் நமது போதினியை மாதம் இருமுறையாகவோ அல்லது இப்போது வெளிவரும் பக்கத்தைவிட இரண்டத்தனையாகவோ செய்வதற்கு கிஞ்சிற்றும் தயங்கவேண்டியதேயில்லை. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழியைப்போல் அந்தப்படி எல்லோரும் முயற்சி செய்யின் இப்போது ஐரோப்பாவில் நடக்கும் கொடிய யுத்தத்தையும் அதனால் ஏற்பட்டிருக்கும் இக்காகிதப்பஞ்சத்தையும் நாம் பொருட்படுத்தவேண்டிய அவசியம் கிஞ்சிற்றும் கிடையாது சந்தாதாரர்களின் ஊக்கத



தினாலல்லவோ கராச்சியில் பிரசுரமாகும் "நியூ டைம்ஸ்" என்ற பிரபல ஆங்கில தினசரிப்பத்திரிகை முன்பிரதி ஓரணாவுக்கோ இரண்டணாவுக்கோ விற்கப்பட்டுவந்தது. இக்கொடிய பஞ்சத்திலுங்கூட பிரதி அரையணாவுக்கு விற்கப்பட்டு வருகின்றது. இதுசங்கதி சமாசாரப் பத்திரிகைகள் வாசிக்கும் நேயர்கள் கவனித்திருப்பார்களென நினைக்கிறேன்.

ஆகையால் நம்நேயர்களெல்லோரும் இதைவாசிப்பதுடன் நின்றுவிடாமல் அவசியம் செய்கையிலுங்காட்டவேணுமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்வதோடு எங்கும் நிறைந்த சச்சிதானந்த பரம்பொருளையும் சதா துதித்துக்கொண்டிருக்கிறேன். மேலும் நம்பத்திராதிபர் அவர்களுக்கும் மாதாமாதம் பல அரியவிஷயதானம் செய்துவரும் ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துவதுடன் அவர்கள் சுகஜீவியாய் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருக்கும்படி கிருபாநிதியாகிய பரம்பொருளை வணங்குகிறேன்.

திருச்செங்கோடு, ஓர் தமிழ்ப்பிரியன்.

---

## நாராயணதாஸர் உபன்யாஸம்.

அப்பியாஸ விக்கினங்களும், அதை நிவர்த்திக்கு முபாயமும் :—

யோகாப்பியாசம் செய்யத் துவக்குங்கால் பல விக்கினங்கள் வலியவந்து சம்பவிக்கும். அவையாவன :—ஆலஸ்யம், தூர்த்தசங்கம், ரஸவாதம், மந்திரஸாதனம், யோக (த்ரிகால்) ஜோஸ்யம், தேவதாவைத்தியம், இந்திரத்துவம், பிரம்மபட்டம் முதலியவைகளில் இச்சையும் இவ்வாறே, ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் முதலிய மஹான்களுக்கமைந்திருப்பதுபோல் இடம்பொருளேவலென்னும் ஸர்வ ஸாமக்கிரியைகளும் பொருந்திய மடாலயமொன்று அவசியம் வேண்டுமென்றும், புசண்டர் ஆஞ்சநேயர் மார்க்கண்டேயர் முதலிய சிரஞ்சீவிகளைப்போல் தீர்க்காயுசுமானாய் விடவேண்டுமென்றும், அப்படியே மச்சேந்திரநாத் கோரக்கர் கோண்டர் ஜாலந்திரநாத் முதலிய சித்தர்களைப் போன்று அணிமாதி அஷ்டைஸ்வர்யங்களையும் பெற்றுச் சர்வலோகங்களிலுந் தடையறச் சஞ்சரித்துக்கொண்டு சுகித்திருத்தல் உத்தமமென்றும், காயசித்தி பெற்று நீண்டகாலம் நிர்விகற்ப நிஷ்டையி லெழுந்தருளி யிருந்துவிடவேண்டுமென்றும், தத்தாத்திரேயர் ஜடபாதர் சுகர் நவநாதசித்தர் ஸனகாதி மகரிஷிகள் முதலிய மகாத்மாக்களைப்போல் அவதூதாஸ்ரமத்தை யடைந்து ஓரிடத்தில் நிலையாயிராமல் ஜகமெங்குஞ் சுற்றித்திரிந்து பரிபக்குவ முடையோர்களுக்கு உபதேசஞ் செய்வதோடு ஸர்வ ஜனங்களாலும் பூஜிக்கப்பெற்றுச் சுகித்திருக்கவேண்டுமென்றும்—இத்தியாதி பல சங்கல்பங்கள் உள்ளத்தின் கண்ணுதித்து மனதைப் பேய்போல் பிடித்தாட்டுவதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கலாம். இச்சமயம் அப்பியாஸியானவன் சற்று ஏமாந்திருந்து விடுவானாயின், சஞ்சலவிருத்திப்பாட்டால் அது ஸ்வப்னமா (சகலாவஸ்தையா)க மாறிவிடுகிறது. அதனால் ஸ்தூலதேகஸ்மரணை யில்லாமற் போகவே ஜாக்ரதையற்று மனமானது பாலனைப்போல் பல விசித்திரங்களா யோடியாடிக் களைத்துப் பின்னுறக்கத்தை (ஸுஷுப்தியல்லது கேவலாவஸ்தையை) யடைகிறது. ஈண்டு, மனம் அவித்தையின் வசமாய்ப் போய்விட்டபடியால் பிரஜ்ஞையற்றுத் தக்ஷணத்தில் சரீரம் சாய்ந்துவிடும். பின்னரிவனுக்குத் தேகஸ்மரணை யுண்டாகவே, யோசிக்கிறான். "ஆஹா! இதுவென்ன விந்தை!! நாம் தியானஞ்செய்யும்பொருட்டமர்ந்தோம். அவ்வாறிருக்க இங்கே தூங்கிவிழுந்த காரணமென்ன? சீ! சீ! இது நமது அஜாக்கிரதையேயாம்." எனவுணர்ந்து, தூங்கினதாலுண்

டான கண்ணெரிச்சலாலும் ஆயாசத்தாலும் மறுபடி தியானஞ்செய்ய சரிப்படாதவனாய் 'நாளை பார்ப்போம்' எனக்கருதி, அப்பியாசத்தை யறவொழித்துக் கவலைக்குள்ளாகிறான். இவ்வனுபவத்தையே மறுநாளுமடைகிறான். பலவிதமாய்ப் பேசியென்ன குரு கிருபையால் ஸூக்ஷ்ம வழிவகைகளைப் பெற்றநுஷ்டிக்காதவர்கள் முன்சொன்ன துக்கத்தைத்தான் ஸதாகாலமும் அநுபவிக்க நேரிடும். ஏனெனின்? இவர்களெப்போதும் சங்கல்பத்தை (சிந்தனையை)யே கவனிக்கின்றமையால் அதனுகாரத்தை (சகல கேவலாவஸ்தைகளை) யடைந்து விடுகிறார்கள். இதனால், அப்பியாசம் நிஷ்பிரயோஜனமாகிறது. ஆதலின், ஓ பாலர்களே! நீங்களியற்றுஞ் சாதனையானது நிர்விக்னமாய் முடியும்பொருட்டு, உங்களுக்குச் சுலபமானவொரு மார்க்கம் கூறுகின்றேன். சற்று கவனமாய்க் கேட்பீர்களாக. அதாவது:—

நீங்கள் முதலில் கீதை முதலிய பிரபல சுருதிகளிற் கூறியவண்ணம் விதிப்படி ஆஸனத்திலுட்கார்ந்து, இடை முதுகு கண்டம் சிரம் முதலியவங்கங்களை நேரொக்குமாறு செய்து சத்குரு திருவருளாற் பெற்ற ஒருமொழியை பரை நினைவாகச் சிந்தித்து, [பரை நினைவு-என்றால் ஜபிக்காமற் ஜபித்தலாம் அல்லது 'அஜபா' வென்றுங் கூறுவர்.] அச்சிந்தனை யுதிக்கு மிடத்தையே தைலதாரைபோல் நாடி நிற்கவேண்டும். இப்பழக்க முதிர்ச்சியால் ஆண்டு ஒருவித ஸ்புரிப்பு அல்லது சலனம் (அசைவு) கோசரமாகும். இச்சலனமானது நீடித்தால் மனம் அதைவிடாமற் பற்றிக்கொள்ளும். அதன்மேல் வாக்கிய சிந்தனை யிறந்துபோவதால் சகல கேவல தாக்கற்று நாதாரம்பமுண்டாகிறது. இந்நாதமானது முதலில் சுரோத்திர துவாரத்திற் கேட்கப்பட்டு, பின் ஹிருதயாம்பர வீதியில் விசேஷமாய் அநுபவிக்கப்படுகிறது. இவ்வாறு நிகழுங்காலத்தில் மனம் மிகவுஞ் சாந்தியைப்பெற்று முடிவில் ஸூன்ய பதவியை யடைகிறது. இந்த அவசரந்தான் சங்கல்ப ஸூன்யமெனப்படும். சங்கல்ப (நினைவு) ஸூன்ய (நாச)த்தைப் பெற்றவன் ஜன்ம ரகிதனாகின்றான். இதிலோரணுவு மையமில்லை. ஆகலின், நீங்களும் இவ்வாறநுஷ்டித் தநுபவமடைந்து சுகித்திருக்கக் கடவீர்கள்.

'ஸூன்யபாவனை' யைப் பற்றிச் சிறிதாராய்ந்து பார்ப்போம்:—ஸூன்யமென்றால் முற்கூறியபடி சங்கல்ப ஸூன்யமேயாம். அதாவது சங்கல்பம் (நினைவு) இறந்தவிடம் ஒன்றுமில்லையாகையால் அந்த அவசரம் ஸூன்யமெனப்பட்டது. இந்த ஸூன்யத்தை 'சிதம்பரம், வெட்டவெளி, சிதாகாயம், அருள்வெளி, ஞானகாயம், பரமபதம் (வைகுண்டம்), சிற்றம்பலம், இருதயாம்பரம்' எனப் பலவாறாகப் பெரியோர்கள் வசனிப்பார்கள். இதுவானது தேகமத்தியில் ரகஸ்யமாயுள்ள ஸூக்ஷ்ம நாவிற்குள் அந்தர்க்கதமா யிருக்கிறது. இந்த ஸூன்ய ஸ்தானத்தை யடைவதற்கு சற்குரு கிருபாகடாக்ஷம் இன்றியமையாதது. இப்பதவியானது குருபக்தியில்லாத சாமான்யர்களால் ஒருபோதும் அடையத்தக்கதன்று. மகா மகிமைபொருந்திய இச்சூன்யத்தை மகரிஷிகள் தனியிடத்திருந்து சாவதானமாய் ஸ்மரித்து வந்ததால் மேலான சிரேயஸை அடைந்தார்கள். ஆகையால், நாமும் இந்நிலையடைந்து ஆனந்தமாய் வாழ்ந்திருப்போமாக;

ஸூன்யத்தைப் பாவித்தலா லுண்டாகும் பலனைப் பற்றிய பிரமாணம் வருமாறு:—

"'ஸூன்ய' பாவித பாவாத்மா, புண்யபாபை: ப்ரமுச்யதே"

(தா-ம்.) ஸூன்ய பாவனையையுடைய ஆத்மாவானவன், புண்ய பாபங்களினின்றும் விடுபடுகின்றான். (உத்தரகீதை.)



"மருவிய பொருண்மே லன்பாய்—வானாம் போற்சரித்துத்
திரியு மச்சித்தந் தன்னைத்—திருத்திச் *'சூன்யத்தே' நின்றால்
மரிவிறோர் பிரித லின்றி—வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்த சுத்தப்—பொருளினை யடைவ ரன்றே."

—தேவிகாலோத்தரம்.

(தொடரும்)

ஏ. அர்த்தநாரி சர்மா, பனமரத்துப்பட்டி, சேலம்.

* குறிப்பு:—இங்கு சூன்னியம் என்றால் சிந்தனை அதாவது மனோசலனம் அற்றவிடம். மனம் இலயமடைந்தவிடம் என்பதைக் குறிக்கவே சூன்னியம் என்பதன்றி ஒன்றுமேயில்லை என்கிற சூன்னியவாதம் (Nihilism) அல்ல. தோற்றம் ஒடுக்கமின்றி சதோதயமான விடமாதலால், ஒன்றுமில்லை யென்பதற்கு

"இல்லையில்லை யொன்னின் ஒன்று மில்லாதல்ல
வியல்பாகி யென்று முள்ள வியற்கையாகி
சொல்லரிய தன்மையதா யான்று னென்னத்
தோன்று தெல்லாம் விழுங்கும் சொரூபமாகி"

* * * *

என நம்மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவர் கூறியதுவே தக்க பொருளாகும்.

பத்திரிகாசிரியர்.

---

# பெண் கல்வி

## பெண் கல்வியும், பெண் கல்வியின் களவும்

பெண்களுக்குக் கல்வி கூடாதென துராக்ஷேபம் செய்வோர்களின் இருதயத்தில் வாசம்செய்யும் அஞ்ஞானமென்னும் இருளையகற்றி நல்லறிவு புகட்டுமாறு முன்னரோ வெளிவந்துலாவும், ஞானானந்த சுபோதமாகிய அதிர்ஷ்ட பொக்கிஷமென்னும் நூலினின்று மெடுத்து இப்பெண் கல்வியை சுருக்கி வரைந்துளேன்.

இத்தேசத்துப் பெண்கள் கல்வியறிவின்றி அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக்கின்றனரென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பெண்களின் மனமும் புருஷர்களின் மனமும் ஒரே தன்மையா யிருப்பதால்; பெண்களுக்கு மட்டும் கல்வியைப் போதியாவிடில், அவர்களின் சித்தம் எங்ஙனம் நன்மார்க்கத்தில் நிலைகொள்ளும்? காசுக்கோர் புரவியும் வேண்டும்—காற்றைப்போற் பறக்கவும் வேண்டும், புல்லுண்ணாப் பசுவும் வேண்டும்—பூரணமாகக் கறக்கவும் வேண்டும் என்பதுபோல, ஸ்திரீகள் கல்லாதவர்களா யிருக்கவும் வேண்டும், உத்தமிகளாய் நடக்கவும் வேண்டும் என்றால், எங்ஙனம் நம்மனோரதம் நிறைவேறும்!

"விலங்கொடுமக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"—குறள்.

மானிடருக்கும் விலங்கினங்கட்கும் எத்தன்மை பேதமோ, அத்தன்மை பேதம் கற்றோர்க்கும் கல்லார்க்கும் உண்டு என, நம் நாயனார் கூறியிருப்பதற்கிணங்க, புருஷர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்குமுள்ள பேதத்தை நாம் தினே தினே காண்கிறோமன்றோ? கற்றவன் தன் படிப்பிற்குத் தகுந்த புத்தியும், நல்லொழுக்கமும் பழிபாவமில்லாத வழியில் ஜீவனஞ்செய்யத் தகுந்த திறமையுமுடையவனா யிருக்கின்றனன். படியாதவனோ பரமசண்டனாய் மாயமெய்க்க

வும், விறகு தூக்கவும், மண், கல் இவைகளை வெட்டிச் சுமக்கவுமே உபயோகப்படுகின்றனன். மேலும், கொலை, திருட்டு, கன்னம், பெருங்கொள்ளை முதலிய குற்றங்களைச் செய்கின்றவர்கள் கல்லாதவர்களேயன்றி, கற்றவர்கள் அக்குற்றங்களில் யாதேனுமொன்றைச் செய்வது மிக்க அரிது. ஆடவர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் எணிவைத்துப் பார்க்கும்படியான இத்தகைய பாராதூர வித்தியாசமிருக்க, பெண்களுக்கு மட்டும் படியாமலே சகல சுகுணங்களும் உண்டாகுமென்று நினைப்பது வீணே. படியாத ஸ்திரீகள் ஏதோ கடவுளுடைய கிருபையால் இவ்வளவாவது நற்குணமுடையோரா யிருப்பதற்கு நாம் ஆச்சரியப்பட வேண்டியதை விட்டு, அவர்களில் சிலர் துர்க்குண முள்ளவர்களா யிருப்பதற்கு நாம் ஆச்சரியப்பட இடமேயில்லை. கல்லாத ஸ்திரீகள் விவேகிகளா யிருப்பது எத்தகைய ஆச்சரியமெனில், முடவர்கள் ஆடவும், குருடர்கள் அவ்வாட்டத்தைப் பார்த்துக் களிக்கவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அப்பாட்டைக் கேட்டு மகிழவுங் கண்டால் எத்தகைய அதிசயமோ, அத்தகைய அதிசயர்தான். பெண்கள் கல்வி கற்பதனால் அவர்கட்குப் பதிவிரதா தர்மம் முதலிய சுகுணங்கள் அதிகரித்து, புருடன்மீது உண்மையான பக்தியும் விஸ்வாசமும் உண்டாகுமே தவிர, அவர்கள் எந்நாளும் புருஷத் துரோகிகளாகார்கள். நாம் இப்படிக் கூறுவது உண்மையென்பதற்கு நமது நாட்டுமாதர்களில் அநேகர் சாக்ஷியா யிருக்கின்றனர். புருடர்களில் சிலருக்கே கல்வி கற்றும் நற்குணமுண்டாகாம லிருப்பதுபோல, ஸ்திரீகளிலும் சிலர் வித்தையை அப்பியாசித்தும் பிரயோஜன மடையாமற் போனாலும் போகலாம். அக்காரணத்தைக்கொண்டு ஸ்திரீகளுக்குப் படிப்பிக்கக் கூடாதெனச் செப்புவது முற்றும் பொருத்த மில்லாததா யிருக்கின்றது.

"பொருந்து நற்கலை தெரிபூவை கற்பது
திருந்தியே யிருக்குமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்தரு மருந்தை மானுடர்
அருந்திடிற் சாவரென் றறைத லொக்குமே."

நற்கல்வியை உணருகிற ஸ்திரீயின் கற்பானது திருந்திவளருமேயன்றி கெட்டுப்போமெனச் செப்புவது, சாகும் உயிரை நீடித்திருக்கச்செய்யும் தேவாமிர்தத்தை மானிடர் புசிக்கில் இறந்துவிடுவார்களெனச் செப்புவதற்குச் சமானமென்று நீதிநூல், மாதரைப் படிப்பித்தலென்னும் அதிகாரத்திற் கூறப்படுகின்றது.

சர்வலோக கர்த்தாவும், சர்வஜீவதயாபரரும், ஆகிய பகவானைக் கல்வி ஆகிய அறிவினால் அறியலாமேயன்றி வேறொன்றினாலும் அறியக்கூடாதே.

பூகோளம், அண்டசாஸ்திர முதலிய நூற்களை வாசியாவிடில், கடவுளுடைய பெருமையும், சர்வசக்தியும், மகிமைப்பிரதாபமும் ஸ்திரீகளுக்கு எங்ஙனம் விளங்கும்? பகவானுடைய மகிமையை அறியாத ஸ்திரீகளுக்கு அவர்மேல் எங்ஙனம் பக்தி ஜனிக்கும்? அக்ஷரரூபமாயிருக்கிற வேதவிதிகளையும் நீதிசாஸ்திரங்களையும் வாசித்தறியாப் பெண்கள் எங்ஙனம் நல்வழியில் ஒழுகக்கூடும்?

கோவிலில் தான் தெய்வமுண்டென்றும், கோவிலிலிருக்கிற விக்கிரகங்களைத் தவிரவேறுதெய்வமில்லையென்றும் நினைக்கிற பாமரஸ்திரீகள், விக்கிரகங்களில்லாவீடுகளிற் பாவங்களைச்செய்ய அஞ்சார்களன்றோ?

கல்விக்குத் தெய்வமாகிய சரஸ்வதியே பெண்ணெனச்செப்பும் இத்தேசத்தோர் பெண்ரூபமாயுள்ள கல்வியைப் பெண்கள் கற்கக்கூடாதெனப் புகல்வது பூர்வோத்தர விரோதமாயிருக்கின்றதே. புருடர்களுடைய நாவில்



தான் வசிப்பேனென்றும், தன்னைப்போன்ற ஸ்திரீகளின் நாவில் பிரவேசிக்கிறதில்லையென்றும், சரஸ்வதி பிரதிக்ஞை செய்திருக்கின்றனளா? இல்லையே. அங்ஙனமிருக்க பெண்கள் கல்விகற்றால் தோஷமென்னை? உலகத்திலிருந்த பல கல்விமான்கள் பற்பல காலங்களிற் பலவிஷயங்களைப்பற்றி அவர்களின் ஆயுளெல்லாம் செலவழித்துக் கிரந்தரூபமாகச் செய்திருக்கின்ற விஷயங்களே கல்வியென்று கூறப்படுகின்றன. அப்புத்தகங்களை வாசிக்கிறவர்கள் அத்தனை வித்வான்களின் புத்தியையும் ஞானத்தையும் சுலபமாகக் கிரகித்துக்கொள்ளுகின்றன ரன்றோ? இத்தகைய பரமபிரயோஜனத்தைப் புருடர்கள்மட்டும் அடைவதுதான் நியாயமோ! பெண்களையும் அடையச் செய்வது நியாயமல்லவோ? இஃதென்ன அநியாயம்.

பெண்கள் படிப்பது பூர்வீகசம்பிரதாயமன்றென சிலர் துர்வாதம் செய்கின்றனர். பாட்டனும் தகப்பனும் படியாத மூடர்களாயிருந்தால், பிள்ளையும் மூடனாயிருக்கவேண்டுமோ? தகப்பன் உத்தியோகம்செய்யாமலிருந்தால், பிள்ளையும் உத்தியோகம் செய்யக்கூடாதா? பிராமணர்கள் வேதம் ஓதுதலையன்றி மற்றொரு தொழிலும் செய்யக்கூடாதென்றும், மற்ற வருணத்தார்களும் தங்கள் தங்களுக்குரிய தொழில்களைச் செய்யவேண்டுமென்றும், மனுநீதியிற் கூறப்பட்டிருக்க, தற்காலம் பிராமணர்கள் வேதத்தை உபேக்ஷையாக விட்டுவிட்டு, மற்ற வருணத்தாருடைய தொழில்களை ஆக்ரமித்துக்கொண்டு செய்யவில்லையா? காலபேதத்தை யனுசரித்து பழையவழக்கங்களில் நீக்கவேண்டியவற்றை நீக்கிச் சீர்திருத்தமடைய விரும்பும் நாம் நமது ஸ்திரீகளின், பாவத்தைக் கட்டிக்கொள்வதற்காகமட்டும் அவர்கள் விஷயத்தில் பூர்வீகவழக்கத்தை அனுசரித்து அவர்களை அஞ்ஞானக்கடலில் அமிழ்த்துவது நீதியோ? பெண்கள் படிப்பது புராதான வழக்கமன்றெனச் செப்புவது அபத்தமேயன்றி யதார்த்தமன்று, திருவள்ளுவரின் உடற்பிறந்தோர்களாகிய ஒளவை, உப்பை, உருவை, வள்ளியம்மை முதலானவர்கள் கல்விகற்று அநேக பிரபந்தங்களைச் செய்யவில்லையா? சைவர்களுடைய பெரியபுராணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையும், வைஷ்ணவர்களின் குரு பாரம்பரை பிரபாவத்தில் கூறப்பட்ட ஆழ்வார்களில் ஒருவராகிய குடிக்கொடுத்த நாச்சியாரும் பெண்களாயிருந்து கற்று அநேகம் ஸ்தோத்திரப்பாடல்களைச் செய்யவில்லையா? அன்றியும் சீதை, திரௌபதி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை மற்றுஞ்சில ரிஷிபத்தினிகளும் பாண்டியன் பத்தினியும், கம்பர்வீட்டு வெள்ளாட்டியும் கற்றவர்களென்பது விசிதமாகத் தோன்றுகின்றதே. இது மட்டோ? தற்காலத்திலும் தஞ்சாவூர் முதலான நகரங்களில் வசிக்கிற ராஜஸ்திரீகளும் கற்றவர்களென்பது ஜகத்பிரசித்தமன்றோ?

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

எனக் கூறியிருப்பதால், மயிரழகும் வஸ்திர மழகும் மஞ்சளழகும் அழகல்ல; கல்வி யழகே அழகு என்பது தெளிவாய்த்தோன்றுகின்றது. குஞ்சியென்பது ஆண்மயிராதலால், மயிரழகைவேண்டுமானால் புருடர்களெடுத்துக்கொள்ளட்டும். சேலைகட்டுவதும், மஞ்சள்பூசுவதும் பெண்களுக்குரிய அழகாதலால், அவ்வழகு தங்களுக்குரியதென்று புருடர்கள் கூறத் துணியார்களென நம்புகிறோம். ஆதலின் பெண்கள் படிக்கவேண்டுமென்பது வெ. நூலாசிரியருடைய கருத்தென்று பட்டப்பகல்போல வெளியாகின்றது.

(தொடரும்)

இவ்வியாசம் எப்புத்தகத்தினின்றும் எடுத்து யான் வரைந்துள்ளேனோ, அப்புத்தகத்திலுள்ள விஷயங்களை எடுத்தே ஒரு நண்பர் (பெண்கல்வி) என்று தாம் வரைந்ததாக வரைந்துள்ளார். அதனை மூன்றாவது வால்யம் 12-வது புத்தகம் 476-ம் பக்கத்தில் காணலாம். அஃது அதிர்ஷ்ட பொக்கிஷம் என்னும் நூலிலிருந்தெடுத்து வரைந்துள்ளாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்குகின்றது. அந்தோ! இஃது இன்ன புத்தகத்திலிருந்தெடுத்துவரைப்பட்டது என்பதைக்குறித்தால் அதனால் அவருக்குண்டாகும் இழிவு என்னையோ? இத்தகைய களவு கூடாவென்பதைப்பற்றி, மூன்றாவது வால்யம் ஒன்பதாவது புத்தகம் 339-தாவது பக்கத்திலும், 11-வது புத்தகம் 430-தாவது பக்கத்திலும், (ஓர்கடிதம் களவு) என்னும் நண்பர் A. M. சங்கரநாராயணரவர்களும், பத்திரிகாசிரியரும், வற்புறுத்தியிருக்க, இன்னும் களவு நிகழ்ந்துகொண்டே வருகின்றது. அப்பெண்கல்வியைக் களவாடியவர், இத்தகைய களவு நிகழ்ந்துவருகின்றதெனத் தெரிந்தே, அப்புத்தகத்திலுள்ள விஷயங்களை கீழும்மேலும், மேலும்கீழுமாகவும், சிற்சில பதங்களைமாற்றியும் வரைந்திருக்கின்றனர். ஆயினும் விஷயங்கள் அப்புத்தகத்திலுள்ளதே. ஆ! இவருடைய அறிவின்பிரகாசமே பிரகாசம்! மானிடருக்கு எவ்வளவு கூறவேண்டுமோ, அவ்வளவும் A. M. சங்கரநாராயணர் கூறியிருக்க சிற்றறிவினனாகிய யான் இன்னும் அதிகம் வரைய எனக்கே அசங்கிதமாயிருக்கின்றது. இனி இத்தகைய களவு வியாசங்களென்னும் களைகள் நம் ஆனந்தபோதினியென்னும் தோட்டத்தில் முளையாவண்ணம் காக்குமாறு சச்சிதானந்த பரம்பொருளாகிய கருணாகரக்கடவுளை நாம் முழுமனதுடன் பிரார்த்திப்போமாக.

E. V. துப்புசாமிமுதலி, ஏழூர். (ஈச்சிபுரம் தாலுகா)

குறிப்பு:—மேற்கண்ட குறிப்பில் கூறப்பட்ட விஷயத்தை (3-வது வருட 12-ம் சஞ்சிகைக்கு) அனுப்பிய நண்பர் இதைக் கவனிக்குமாறு கோரிக்கொள்கிறோம்

பத்திரிகாசிரியர்.

---

## "தீபாவளி அல்லது, நரக சதுர்த்தசி"

பூர்வத்திலே மகா பல பராக்கிரமசாலியான ஓர் அசுரனிருந்தான். அவன் பாதாளலோகத்தில் மலைக்கோட்டை நிர்மாணித்து பூமியை பாயாகச்சுருட்டி எடுத்துச்சென்று ஒளித்துவைத்திருந்தான். ஸ்ரீமந்நாராயணன் வராக அவதாரமெடுத்து நரகக்கோட்டையை நாசஞ்செய்து, அசுரனைக்கொன்று பூமியைபழமைபோல் நிலைநாட்டினார். நரகக்கோட்டையை நாசஞ் செய்யும்போது ஸ்ரீ எம்பெருமானுக்குண்டான வியர்வைக்கும் பூமாதேவிக்கும் ஜனித்தவன் நரகாசுரன். "இவன் பிராக்ஜோதிஷ என்னும் பட்டணத்திலே இருந்துகொண்டு தேவர், சித்தர், கின்னரர் இவர்களுடைய கன்னிகைகளையும், ராஜகுமாரிகளையும், அபகரித்துக் கொண்டுபோய் தன் மாளிகையில் வைத்திருக்கிறான். வருணனுடைய குடையையும், மந்திரகிரியின் சிகரத்தையும், அதிதியின் குண்டலங்களையும், கவர்ந்துகொண்டுபோனான். என்னுடைய ஐராவதம் என்னும் வெள்ளையானையையும் பிடுங்கிக்கொள்ளப்பார்க்கிறான்" என்று தேவராஜன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் விண்ணப்பம் செய்யலாயினான்.

சத்தியபாமாளுடனாய் ஸ்ரீ கிருஷ்ணன் கருடன்மீது எழுந்தருளி ஆகாய மார்க்கமாய்ப் பிராக்ஜோதிஷபுரம் சென்று நரகாசுரனுடைய மந்திரி, முரன், அயக்கிரீவன், பஞ்சஜனன் முதலானவர்களையும் நரகாசுரனையும் ஹதம்செய்தார். அவன் இறந்தநாள் ஐப்பசிமாதத்து கிருஷ்ணபக்ஷத்து சதுர்த்தசி என்றும், அந்த



நாளில் உஷத்காலத்தில் அப்பியங்க ஸ்நானம் செய்பவர்களுக்கு கங்கை, காவேரியில் ஸ்நானம் செய்தவர்களுக்கு கிடைக்கும் பலனும் அவர்களுக் களிக்கவேண்டுமென்றும், எல்லா ஜனங்களும் புதிய ஆடைகள் அணிந்து சந்தோஷம் கொண்டாடவேண்டுமென்றும் வரங்கேட்டுக்கொண்டதாகவும் ஐதீகம்.

ஸ்ரீ க்ருஷ்ணன் ராதாவுடன் சுவர்க்கத்திற்கு சென்று பாஞ்சசன்னியத்தை ஊதவும் அமரர்கள் எல்லோரும்வந்து திருவடிதொழுது அவரவர் இழந்த சாமான்களை திருப்பப் பெற்றுச்சென்று, விடியற்காலம் 5-மணிக்கெல்லாம் அப்பியங்கனம்செய்து, புதிய ஆடைகளை அணிந்து, பண்டு பலகாராதிகளை உண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள்.

தேவேந்திரனாலும் அதிதிதேவியாலும் பூஜிக்கப்பட்டு, ராதாவுடன் நந்தனத்திற்குச் சென்றார்: தேவராஜன் புறக்கடையிலுள்ள பாரிஜாத விருக்ஷத்தைக் கடாக்ஷித்து சத்தியபாமாவானவள் பகவானைப்பார்த்து, என் பிராண நாயகனே! நீதான் எனக்குப் பிரியையானவள் என்று உரைத்ததுமெய்யானால் இந்தப் பாரிஜாதத்தை துவாரகைக்குக் கொண்டுவரவேண்டும். என் புறக்கடைக்குப் பூஷணமாயிருக்கும், என் சக்களத்திமார்களுக்கு மத்தியில் பூங்கொத்துக்களால் அலங்கரித்துக்கொண்டு நான் சிரேஷ்டமாயிருக்கவேண்டும்" என்று சொன்னதைக்கேட்டு திருச்செவிசாத்தி *நகைத்து அந்த விருக்ஷத்தைப் பெயர்த்து திருத்தோளின்மீது வைத்தருளினார். அந்த விருக்ஷம் இந்திரனுடைய தேவியான சசிதேவியால் மிகவும் அருமையாகவைத்து காப்பாற்றப்பட்டுவந்தது. இம்மரத்தை ஸ்ரீகிருஷ்ணன் எடுத்துக்கொண்டு போகும் விஷயம் தெரிந்த தேவராஜன் தேவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்து பகவானுடன் போர்செய்து, கடைசியாய்த் தோற்றுப்போய் சரணாகதி யடைந்தான்

இந்த யுத்த விஷயத்தைக் குறித்தே சிறுகுழந்தைகள், படாஸ், வெங்காயக்குண்டு, வாணம், மத்தாப்பு முதலிய சீனவெடிகளைவாங்கி சுட்டு குதூகலிக்கிறார்கள்.

இத்தீபாவளி சுவர்னமெண்டு விடுமுறை நாளாக கருதப்படும், இதனை சைவ, வைஷ்ணவ, மாத்வ, சைதன்ய மதஸ்தர்கள் வித்தியாசமின்றி கொண்டாடுவார்கள்.

இன்று கடை கணக்கப்பிள்ளைகளுக்கும், தோட்ட வேலைக்காரர்களுக்கும், இன்னுமற்ற வேலைக்காரர்களுக்கும் அவரவர்கள் எஜமான்மார்கள், புதிய வஸ்திரம் வாங்கி பரிசளிப்பார்கள். உலுப்பை முதலானவைகள் கொண்டுபோய் அநேகர் தங்கள் எஜமானர்களையும் நேயர்களையும், பெரியமனிதர்களையும் கண்டு கொள்ளுவார்கள்.

பெண்கள் தங்கள் புருடர்களை நோக்கி தங்களுக்கு தீபாவளிக்கு உடுத்திக்கொள்ள, விலையுயர்ந்த புடவைகளும், நகைகளும் வேண்டுமென்று கேட்பார்கள். (இந்தவழக்கம் பெரும்பான்மை தென்னாட்டிலேயே நடைபெறுகிறது.)

இத்தீபாவளியின் உட்கருத்தை பின்காணும் பிரார்த்தனையால் அறிந்துகொள்ளலாம்:— "ஏ, ருஷிகேசா! நீங்கள் எரிகின்ற வாய்க்காலால் எல்லா உலகங்களையும் விளங்குகிறவராய், தீபவளிவால் பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து எங்கும் ருசிபார்க்கிறீர்கள். ஏ க்ருஷ்ணா! நீர் இச்ச நிமிடம் வரை உபதேசித்த பரிசுத்த எண்ணமாகிய எண்ணெயை அங்கத்தில் தடவி, சித்தமாகிய அரப்பைக்கொண்டு நன்றாய்த் தேய்த்து அழுக்காறு

* பெண்பிள்ளைகள் புருஷனை வசப்படுத்திக்கொண்டு அனார்த்தமுண்டாக்குகிறார்கள் என்று நகைத்தது.

களை நீக்கி ஞானமாகிய வெள்ளை ஆடையை அணிந்து பரிசுத்தனானேன். ஏ, பகவானே! இந்திரியங்களாகிய ராக்ஷதர்களை படாஸ்வானம், மத்தாப்புகளாகிய அன்பைக்கொண்டு சுட்டெறித்தேன். ஞானமயிர்தத்தை உண்டேன். ஆனந்தங்கொண்டேன், தாண்டவம்செய்தேன். ஏ கோபாலா! என் அகத்தில் ஒருபிரகாசம் தோற்றுகிறது. இந்தத் தீபத்தின்வளிவை என்னவென்றுரைப்பேன். ஆதியில்லை, அந்தமில்லை, எங்குமாய் ஏகமாய்த் தோற்றுகிறது. ஏ, அச்சுத! என்னைச் சதுர்வித உபாயத்தால் நரகத்திலிருந்து விடுவித்தாய். தீப ஒளியே! சதுர்விதபோதகா! நரககாதக! உன் முன்புறத்திற்கும் பின்புறத்திற்கும் நமஸ்காரம். ஏ, எல்லாமே ஏகமே உனக்கு ஆயிரம் நமஸ்காரம்.''

சகோதரர்களே! சதுர்த்தி என்னும் நான்வித உபாயங்களை ஒரு ஆசான் மூலமாக அறிந்து ஞானமாகிய தீபவளிவைத் தெரிசித்து ஆனந்தசாகரத்திலிருக்க முயற்சியுங்கள். வெளிவேஷ தீபாவளிக்கொண்டாட்டம் துக்கத்தையே அளிக்கும். இன்பத்தை நாடுங்கள்

தீபாவளி என்றால்:—தீபத்தின்வரிசை, தீபக்காற்று, தீபத்தின் பிரகாசம், தீபத்தின் மார்க்கம் என்ற அனந்தம் பொருள்.

எஸ். அயோத்திராம்.

---

## "கேதார கௌரி நோன்பு"

ஸ்ரீ கயிலாயத்திலே பரமேஸ்வரும், பரமேஸ்வரியும் கொலுவாக வீற்றிருக்கையில், தேவர்கள், ரிஷிகள் முதலிய அனைவரும வந்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து தோத்தரம் செய்யும்போது ரிஷிகளுக்குள் பிருங்கி என்பவர் ஈசுவரியை நீக்கி பரமசிவனைமாத்திரம் வணங்கினார். ஸ்ரீபார்வதி பிருங்கிமஹா ரிஷி மீது வெகுண்டு, அவன் என்னை புறம்பாகத் தள்ளித் தம்மை மாத்திரம் வணங்க வேண்டிய காரணம் என்னவென்று, கேட்க, பரமேஸ்வரன் சொல்லுகிறார். அவன் பாக்கியத்தைக் கோரினவனல்ல. மோக்ஷத்தை நாடியவன். ஆகவே அவன் இவ்விதம் செய்தான் என்று சொல்ல, அம்மையார் 'ஓய், பிருங்கியே! உன்னுடைய அங்கத்திலுள்ள என்னுடைய இரத்தம் மாம்ஸங்களைக் கொடுத்து அதன்பின் பரமேசுவரனை வணங்கும் பிள்ளாய் என்று சொல்லவும், அவ்விதமே பிருங்கிரிஷி அவ்வாறே செய்துவிட, நிற்கவும் சக்தியற்றவராய் விட்டார். பரமசிவம் கருணைகொண்டு, அவர்க்கு மூன்றாவது ஒருகாலும் ஒரு ஊன்றுகோலுமளித்தார். இதைக்கண்ட அம்மை ஓகோ இவரோரிஷிக்கு உடைக்கையாயிருக்கிறார். நாம் பரம சிவத்தினின்று வேறாயிருப்பதால் இந்த ரிஷி நம்மை நீக்கிப் பிரதக்ஷணம் செய்தார். நாம் சுவாமியின் உருவத்திலேயே ஓர் பாதியாயிருந்தால் இவர் நம்மையும் சேர்த்துத்தானே பிரதக்ஷணம் செய்யவேண்டும் என்று சிந்தித்து அவ்வாறே பாதிபாகமடைய முயன்று, புரட்டாசிமாசத்து சுக்கிலபக்ஷப் பிரதமையன்று பூலோகத்தில் வால்மீகிரிஷி ஆச்சிரமம் வந்தடைந்தார்கள். ஒன்பதாவது நாள் அதாவது நவமியன்று வால்மீகிரிஷி வில்வமரத்தடியிலுள்ள பரமேஸ்வரியை வணங்க இருபேரும் ஒருவருக்கொருவர் குசலங்களை உசாவினார்கள். (இன்று சைவர்களுக்கு விசேஷதினம்) பார்வதி ரிஷியை நோக்கி ஏ, விருடியே! நான் ஏதாவது நோன்பிருக்கவேண்டும். தரணமான தேதாவது இருந்தால் அதனைச் சொல்லுவீராக? என்றார்—இருடி அன்னையே! பூலோகத்திலே ஒருவராலும் அனுஷ்டிக்காதது கேதாரி ஈசுவரநோன்பு அதனை அனுஷ்டித்தால், இஷ்ட காரியசித்தியுண்டாகும் புரட்டாசி மாசத்து சுக்கில பக்ஷத்து தசமி முதல் ஆரம்பித்து கிருஷ்ணபக்ஷம் அமாவாசை வரை 21 நாள்



நோன்பிருக்கவேண்டும் இருபத்தொருநாளும் திரிகால ஸ்நானம் செய்து பரிசுத்தமாக ஒரு ஆலவிருக்ஷத்தின் கீழே மணலினால் லிங்கம் பிடித்து வைத்து, ஒரு வெல்லவுருண்டை, ஒரு சந்தனவுருண்டை, ஒரு மஞ்சள் உருண்டை, ஒரு அதிரசம், ஒரு தேங்காய், ஒருபழம், ஒரு வெற்றிலை, ஒருபாக்கு, ஓரிழை நூல் இவைகளை வைத்து லிங்கத்திற்கு நைவேத்தியம் செய்து தூபதீபம கொடுத்து வரவேண்டும். மேலே சொல்லிய சாமான்களை தினம் ஒவ்வொன்றாக அதிகப்படுத்தி 21வது தினம் அமாவாசையன்று எல்லாம் 21சாமான்களுடன் நைவேத்தியம்செய்து தூபதீபம் கொடுத்து வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்ய வேண்டும் இருபத்தொரு இழை நூலையும் ஒன்றாகச் சேர்த்து இருபத்தொரு முடியிட்டு கயிறாக்கி கரத்தில் அணிந்து கொள்ளவேண்டும். இவ்விதம் செய்தால் பரமேஸ்வரன் பிரசன்னராவார் என்றுசொல்ல, அவ்விதமே பரமேஸ்வரி அனுஷ்டித்து தீபாவளி அமாவாசையன்று 21 வது தினம் ஈசுவரன் பிரசன்னராகி என்ன வரம் வேண்டுமென்று கேட்க, உம்மிடத்தில் அர்த்தசரீரம வேண்டுமென்றுகேட்க அவ்விதமே கொடுத்தருளினார்.

கௌரி, அர்த்தநாரி, கேதாரி, இவையாவும் ஒரே அருத்தம் தரும். ஆண் பாதி, பெண் பாதி என்ற பொருள் கொடுக்கும்.

இந் நோன்பை நேமநிஷ்டையுடன் அனுஷ்டித்து அநேகர் சித்திபெற்றுள்ளார்கள்.

எஸ். அயோத்திராம்.

---

## நண்பர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு என்னும் தகைமைத்தான கல்வியின்கண் விருப்புற்ற நண்பர்காள், இவ்வானந்த போதினியின் மூலமாய் நாமெல்லாம் அறிதற் கரிதானதும் அநந்தம் நன்மையை பயப்பிப்பதுமான பலவித அரும் பெரும் விஷயங்களை அறிவதால் நாமதனிடத்து அளவிறந்த அன்பு பூண்டு அதனபிவிருத்தியில் நாட்டமுடையவர்களா யிருத்தல் வேண்டுமென்பது நமது கடமையல்லவா?

எவர் எந்த வியாசத்தை எழுதினாலும் நாம் அதை முற்றிலும் வாசித்து அவற்றிலுள்ள நன்மை தீமைகளை பகுத்தறிந்து தீமைகள் காணப்படின் அவற்றை நீக்கி நன்மைகளைக் கைக்கொள்வதே கல்வி யறிவுக்கழகு அங்ஙனமின்றி பண்ணுடையானது தன்னிடங்கிடைத்த இனியதேனை ஒழுகவிட்டு பூச்சி புழுக்களையும் சாரமற்ற குப்பை செதைகளையும் கெட்டியாய்ப் பற்றிக் கொள்வதைப்போல் வியாசங்களில் காணப்படும் நல்லவிஷயங்களை விட்டுவிட்டு, இவற்றில் ஏதேனும் குற்றங்கிடைக்காதா வெனக் கவலைகொண்டு தேடி சாரமற்றதாகவாவது ஓர் குற்றங் கண்டுபிடித்து வியாசம் எழுதிய நண்பர்மீது மறுப்பெழுதுதல் என்னும் அம்பைத் தொடுத்து யுத்தாரம்பம் செய்வதானது விஷயதானம் செய்யும் நண்பர்களுக்குள்ள உத்ஸாகத்தைக் குறைத்து கவலைக்கிடந்தருவதால், நம் ஆனந்தபோதினியின் மூலமாய் தாய்நாடு க்ஷேமமடைந்து பாரதமாதாவின் புத்திரர்கள் மேம்பாடடைய வேண்டுமென்றும் விருப்புள்ள நண்பர்கட்கு அழகல்லவென் றெண்ணுகிறேன்.

இவ்வருடத்திய ஆனந்தபோதினி 82-ம் பக்கத்தில், ஈரோடு தாலூக்கா மோடக்குறிச்சி S. V. பழனியப்பன் என்பவரால் நல்லொழுக்கம் என்னும் விஷயம் எழுதப்பட்டிருந்தது; 47 ம் பக்கத்தில் கோயம்புத்தூர் வேணுகோபால புத்தக சாலையினின்றும் ஒரு நண்பரால் அத்தற்கு மறுப் பெழுதப்பட்டிருக்கிறது.

இதிலுள்ள ஒரு விஷயத்தைச் சற்று கவனியுங்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் நல்லொழுக்கம் என்னும் விஷயம் தமது பாலபாடம் நான்காம் புத்தகத்தில் 97 வது பக்கத்தி னிறுதியி னின்றும் தொடங்கி 69 பத்திகளில் எழுதி 113-ம் பக்கத்தில் முடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வறுபத்தொன்பது பத்திகளுள் ஒன்றாவது பழனியப்பன் என்னும் நண்பரால் எழுதப்பட்ட நான்கு பத்திகளுள் ஒன்றுடனும் ஒத்திருக்க வில்லை. என்றாலும்,

"இவர் ஒருபோதும் பொய் பேசாதவர்
இவர் எப்போதும் உண்மையைப் பேசுவதில் விருப்பமுடையவர்"

என்றும் இவ்விரண்டு வாக்கியங்களிலும் உள்ள பதங்கள், எழுவாய் பயனிலை முதலிய வற்றுள் ஒற்றுமையின்மையும் கருத்தில் மட்டும் ஒற்றுமையும் எப்படியிருக்கிறதோ அப்படியே நாவலரவர்களால் எழுதப்பட்ட விஷயங்களுக்கும் பழனியப்பன் என்பவரால் எழுதப்பட்ட விஷயங்களுக்கும் சிற்சில பாகங்களில் மட்டும் ஒற்றுமை யிருக்கிறது. இவ்வற்பகாரணத்தையே பெருங்குற்றமாய்க் கொண்டு இவ்விஷயம் நான்காம் பாடத்திற்குச் சரியான நகல் என்று மறுப்பெழுதுதல் எங்ஙனம் பொருந்தும்?

புதுவை தங்கவேலு முதலியா ரவர்களால் எழுதப்பட்ட 'பேதமையகற்று', 'ஞயம்படவுரை', என்பனவற்றை முற்றும் வாசித்து அவற்றிலுள்ள சத்விஷயங்களை கிரகிக்காமலும் வியாசம் முடிந்தபின் அவரது அபிப்பிராயம் எத்தன்மைத்து என்பதை உணராமலும் அவர் தமது வியாசத்தை முடிக்குமுன்னரே செய்யூர்-சு-பழனி நாயகர் என்பவரால் மறுப்பு எழுதி யனுப்பப்பட்டதுந் தவிர பத்திரிகாசிரியர் மீதும் கல்வி யறிவில்லாதவர்களால் உபயோகிக்கப்படும் பதங்களை உபயோகித்து குறை கூறப்பட்டிருப்பதை நோக்க,

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை — நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு—— நாலடியார் என்னும் நூலிற்

சொல்லிய விப்பாசுரத்திற் கிணங்க நாயானது கோபங்கொண்டு தன் வாயினால் ஒருவனைக் கடித்தாலும் மீட்டும் தன் வாயினால் அந்நாயைக் கடிப்பவர் இவ்வுலகி லில்லை. அதுபோல் ஒருவர் இழிவான சொற்களைச் சொன்னாலும் மேன் மக்கள் தங்கள் வாயினால் இழிவான சொற்களை சொல்லமாட்டார்க ளென்பதை நமது ஆனந்தபோதினியின் பத்திரிகாசிரியர் நன்குணர்ந்தவ ராதலால், அவரால் பழனி நாயகரின் கடிதத்திற்குபதில் வரைந்திருப்பதை காளயுக்தி ௵ புரட்டாசி மீ வெ-யுள்ள தொகுதி 4 பகுதி 3-ன் கடைப்பாகத்தில் பார்க்குங்கால் அவரது நற்குணங்களும பெருந்தகைமையும் பொறுமையும் நன்கு விளங்கும்.

விஷயங்களை முற்று முணராமல் அவசரப்பட்டு குறை கூறுவதால் விஷயமெழுதும் நண்பர்கட்கு மனவருத்தத்தையும் பத்திரிகாசிரியருக்கு கவலையையும் வீண் சிரமத்தையும் உண்டாக்கு மாதலால் நண்பர்காள் பத்திரிகையில் காணப்படும் வியாசங்களைச் சற்று பொறுமையோடு முற்றிலும்வாசித்து அவற்றிலுள்ள நல்லவிஷயங்களை ஆராய்ந் தறிந்து கிரகித்துக் கொள்ளுமாறும்; ஒருகால் சரியான குற்றங் காணப்படின் அக்குற்றத்தை வியாசமெழுதிய நண்டருக்கு கடித மூலமாக நாமே நேரில் தெரிவித்து அக்குற்றத்தைத் தவிர்த்து சரியான மார்க்கத்தில் செல்லும் வண்ணம் தெரிவிப்போமாயின் நமது நற்குணம் வாய்ந்த பத்திரிகாசிரியரவர்கட்கு தொந்தரவின்மையையும், விஷயமெழுதுவோர்க்கு குற்றத்தைத் தமக்கு எடுத்துக் காட்டிய நண்பர் மீது சந்தோஷத்தையும், மேலும்



மேலும் விஷய மெழுதுவதில் ஊக்கத்தையும், ஆநந்தபோதினியின் விருத்திக்கு நன்மையையும் உண்டாக்கு மாதலால் நண்பர்களை மேற்கண்டவாறு செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்வதோடு,

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ் ——என்னும திருக்குறளிற்கிணங்க இவ்விஞ்ஞாபனத்தின் கண்ணுள்ள குற்றங்களைத் தள்ளி குணமா யுள்ளவற்றைக் கொண்டு புகழ்பெறும் வண்ணம் இதனைக் கண்ணுறும் நண்பர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனந்த போதினியும் அதன் ஆசிரியரும் அதனை ஆதரித்துவரும் நண்பர்களும் நன்மையும் செல்வமும் பெற்று நீடுழிவாழ என்று மழியா இறைவனை வணங்குவாம்—சுபம்.

நா. கு. தேசிகர், அனுக்கப்பட்டு.

---

## உபாத்திமார்களும் அதிகாரிகளும்

(100-ம் பக்கத் தொடர்ச்சி)

இதோடு நிற்கின்றதா? சிறுபான்மை அதிகாரிகளுக்கும், பெரும்பான்மை குமாஸ்தாக்களுக்கும் எல்லா விஷயங்களிலும் திருப்தியாய் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உபாத்திமாருக்கோ அவர்கள் சொல்ப சம்பளத்திலும் வீண்செலவு நேரிடுகிறதேயன்றி அவர்களுடைய சம்பளத்திற்குமேல் ஒருகாசு கூட கொடுப்பவரில்லை. குமாஸ்தாக்களின் கொள்கையே கொள்கை! காரியங்களெல்லாம் இவர்களால்தான் ஆகவேண்டியிருக்கிறதாம்! ஆபீஸ்காரியமா? உபாத்திமார்களின் காரியமா? உபாத்திமார்களுடைய காரியங்களுந்தான். உபாத்தியாயர்கள் தங்கள் காரியங்கள் ஆலசியமில்லாமலும் நன்மையாகவும் முடியவேண்டியிருந்தால், அதிகாரிகளின் ஆக்ஞைக்குப்பயந்து அவர்களிடம் செல்லாது, குமஸ்தாக்களின் தயவுக்கு எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது அவர்களோ "வாரும் வாரும்" என்று கூறி வந்த காரியத்தைக் கேட்டறிந்து கொண்டு "எங்கே நம்மைக் கவனிக்கிறதேயில்லை. கடைக்கண்ணால்கூட பார்க்கிறதில்லை" என்று அஸ்திவாரம்போட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் மனப்பிரியங்களைத் திருப்திசெய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. என்ன செய்வது 4 மாதம் 5 மாதங்களுக்கொரு சம்பளமாவது கிடைக்கவேண்டுமே. இவர்களோ என்றென்றும் அவ்வாபீஸிலிருப்பவர், ஒவ்வொரு உபாத்திமாருடைய அனுபோகமும் தெரிந்திருப்பவர், அதிகாரியோ, அடிக்கொருதரம் மாற்றப்படுபவர். அதிகாரிகள் உபாத்திமார்கள்மீது நல்லபிப்பிராயஞ்சொல்வதும், கெட்ட அபிப்பிராயஞ் சொல்வதும், இவர்களால் தானும். இவ்வித மூட அபிப்பிராயங்களைக்கொண்ட உபாத்திமாரிகளும் குமாஸ்தாக்களும் இருக்கின்றார்களாயினும், அவர்களின் இவ்வித மூடக்கொள்கைகளுக்காக யான் பெரிதும் விசனிக்கின்றேன். அன்றியும், உபாத்திமார்கள் உண்மையான விஷயங்களையும், குமாஸ்தாக்கள் பொதுநலங்கருதியும், தங்களைப் பலரும் பரோபகாரிகளென்று போற்றும்படி திருத்திக்கொள்ளவும் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

ஒருவாறு மேலேகூறிய மூடக்கொள்கைகள் என்பனவற்றை, உண்மையான கொள்கையென்றுஞ் சொல்லலாம். எவ்விதமெனில், அதிகாரிகள்;

குமாஸ்தாக்கள் சொல்வதையுங் கேட்டு அவர்கள் அபிப்பிராயப்படியுந்தானே நடக்கவேண்டி யிருக்கிறது. இதற்குக்காரணம், அதிகாரிகள் உபாத்திமார்களின் சௌகரியா சௌகரியங்களை நன்குணர்ந்து அதற்குத் தக்கபடியும், எதெது எவ்வெப்பொழுது எப்படிச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்யாமலும் விடுவதாலேயே. இதற்கு இங்கு ஓர் சம்பவத்தைக் குறிப்பிடுதல் பொருந்துமென எண்ணுகின்றேன்.

ஓர் பாடசாலையில் இரண்டு உபாத்திமாரிருந்தனர். அவர்களிருவருக்கும் இரண்டொரு நாள் முன்பின்னாக ஏககாலத்தில் தேக அசௌக்கியம் ஏற்பட்டு விட்டது. அக்கிராமத்தில் பலருக்கும், பள்ளிப்பிள்ளைகளில் பலருக்கும் அச்சமயம் தேக அசௌக்கியம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆகவே, இவ்விருவர்களுக்கும் ஏககாலத்தில் அசௌக்கியம் நேர்ந்தது ஆச்சரியமல்ல. அவ்விருவருக்கும் உதவிசெய்யவும் ஒருவருமில்லை. ஒருசாராருமல்லர், ஒருவர், வேறு ஒருவர்வீட்டில் மாதாந்தத் தொகைகொடுத்து உண்டும், மற்றொருவர் தாமே சமைத்துச்சாப்பிட்டும் வந்தவர்கள். இருவரும் பாடசாலைக்குச்செல்லமுடியாத காரணத்தால், பாடசாலையைமூட நேர்ந்ததும் ஆச்சரியமல்ல. இது விஷயத்தை மேலதிகாரிக்குத் தெரிவித்தும், தெரிவித்த சிலநாட்களில் தங்களுக்கு அவ்விடம் ஆதரவு ஒருவருமில்லாத காரணத்தால், தத்தம் சொந்தவூருக்குப் போக நேர்ந்ததும் ஆச்சரியமல்ல. இது விஷயத்தையும் மேலதிகாரிக்குத் தெரிவித்துவிட்டு, தத்தம் சொந்த ஊர்சென்று சிகிச்சை செய்துகொண்டு தொடர்ச்சியாய் 2, 3 தடவை ஒவ்வொருவாரமாக 3-வாரங்களுக்கு, லீவை அதிகப்படுத்தும்படி விண்ணப்பங்கள் அனுப்பிக்கொண்டிருந்து. சௌக்கியமான பிறகு பாடசாலை செல்லலாயினர்.

சென்ற நாள் (பாடசாலை திறப்பதற்கு முதல்நாள் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னமேயே) பரீக்ஷாதிகாரி பாடசாலைக்குச் செல்லவே, சாலை மூடப்பட்டிருந்ததைப் பார்த்துக் கோபங்கொண்டு செல்வது ஆச்சரியமல்லவாயினும், அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் அவ்வதிகாரிக்கு, அவர் ஆபீஸின் குமாஸ்தாக்களால் கிடைக்கப்பெற்று அவர் பார்த்திருப்பாரேயாகில் பாடசாலைக்குவந்தது ஆச்சரியந்தான். குமாஸ்தாக்கள் அவ்விண்ணப்பங்களைத் தமக்குக் காண்பிக்காததால், தமக்கு யாதொருதகவலும் தெரியாமல் செல்வது ஆச்சரியமல்ல. அவர்களுக்கு (குமாஸ்தாக்களுக்குக்) கொடுக்கவேண்டியதைக் கொடுத்திருந்தால், காண்பித்து உபாத்திமார்களுக்கு நன்மைசெய்துதான் இருப்பார்கள்! பாடசாலை மூடியிருக்கும்போது, பாடசாலைக்கு வந்து பாடசாலை மூடியிருப்பதைக்கண்டு, தேக அசௌக்கியங் காரணமாகச் சொந்த ஊருக்குச் சென்று பாடசாலை மூடியிருப்பின், தெரிவித்திருக்க வேண்டாமா? யென்று அதிகாரி கோபித்துக் கொள்ளுவதற்குக் காரணராயுள்ளோர் குமாஸ்தாக்களேயாயினும், அவர்களுக்குக் கொடுக்காதகாரணம் உபாத்திமார்கள்தான் போலும்! குமாஸ்தாக்களுக்குக் கொடுக்காத காரணத்தால் இவ்விதம் நேர்ந்தது என்பதற்கு இன்னும் தக்க ஆதாரமுன்னவெனினும் ஈண்டு விரிவுபற்றி இதோடு நிறுத்துகிறோம்.

இக்காரணத்தால் குமாஸ்தாக்கள், இல்லாததும் பொல்லாததும் இயம்பி, அதிகாரிக்குக் கோபமூட்டுவதும் சகஜமே! உபாத்திமார் சொல்வதைக்கேட்டு, ஆராய்ந்துபாராமல் கோபிப்பதும் கோபப்பட்டுக்கொள்வதும் அதிகாரிகளின் அறியாமையே. இதற்காக இவர்கள் பால் மிகவும் விசனமுறுகின்றேன்.

பரிமளபல்லவராயர்.

குறிப்பு:—ஆரம்பக்கல்வி போதிக்கும் உபாத்திமைத் தொழிலிலிருப்போரின் மேற்கண்ட நிலைமை மிக்க பரிதாபமானதென்பது நாம் கூறாமலே



யாவர்க்கும் புலப்படும். அதில் ஒருவிஷயமட்டும் நாம் எடுத்துக்காட்டுகிறோம். ஒரு உத்தியோகஸ்தன் ஒருவிடத்திலிருந்து மற்றொருவிடத்திற்கு மாற்றப்பட்டபோது அவன் தன்வேலையை பின்னொருவனுக்கு ஒப்புவித்துவிட்டு ஒருநாளோ அதிகநாட்களோ பிரயாணம்செய்து தான் மாற்றப்பட்ட விடத்திற்குச் சென்று அங்குள்ளவனிடம் வேலையை யொப்புக்கொள்கிறான். முற்பகலோ பிற்பகலோ எப்படியாயினு மிருக்கட்டும். அவன் தன் முன்வேலையை விட்டுவிட்டுப் பின்வேலையை யொப்புக்கொள்ளும்வரை இடையிலிருந்தகாலம் உத்தியோகமுறைமையின்மேல் அதிகாரியிட்ட சட்டளைப்படி செலவழிக்கப்பட்டதேயன்றி அவன் சொந்தவேலையில் அவன் பிரியப்படி செலவழிக்கப்படவில்லை. அவன் இடையில் அனாவசியமாய் அதிககாலம் செலவழித்து ஆலஸியம் செய்தாலன்றி அக்காலம் முழுமையும் உத்தியோகத்தில் செலவழித்ததேயாகும். ஆகையால் ஸ்ரீயும் கருணையுமுடைய ஆங்கிலதுரைத்தனத்தார் அந்த நாட்களில் அவன் வேலைசெய்ததாகவே பாவித்து முழுச்சம்பளமும் கொடுக்கிறார்கள். இதுமட்டுமல்ல. பிரயாணச்செலவும் (இரயிலில் சென்றால் இரட்டை இரயில் சத்தமும்-வண்டி பாதையாயின் மைலுக் கிவ்வளவென்றும்) கொடுக்கிறார்கள்—பிரயாணகாலம்போக பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்வதற்காகவென்று 5 நாட்களோ 6 நாட்களோ சேர்த்து அதற்கும் சம்பளம் கொடுக்கிறார்கள். (ஸிவில் ஸர்விஸ் சட்டத்தின்படி.) இத்தகைய துரைத்தனத்தில் இந்த ஏழையுபாத்தியாயர்களுக்கு மாற்றப்பட்டகாலங்களில் அடியோடு சம்பளத்தையே பிடித்துவிடுவதென்றால், அந்தோ! இது கடவுளுக்கு ஒப்பத்தகுந்ததாயில்லையே. இவ்விஷயமும் இவர்களுக்கு மாதமாதம் சம்பளத்தைக்கொடாமல் இக்கஷ்டகாலத்தில் இவர்களை யல்லற்படுத்துவதும் அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகட்குப் பெரும்பாதகமாகவன்றோ முடியும்.

நமதுநாட்டில் கல்வி மிக்க குறைவென்பதும் அதே நமது முன்னேற்றத்திற்கு இடையூறாயிருக்கிற தென்பதும் யாவருமறிந்ததே. கல்வியிலும் ஆரம்பக்கல்வியே மிக்க பிரதானமானது. அது ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரம் போன்றது. பிள்ளைகள் கல்வியின் நன்மையையும் அவசியத்தையும் அறியாத காலமாதலால், முழுதும் உபாத்தியாயரின் சிரத்தையாலும், அக்கறையாலும், மனவாக்குக்காயங்களை ஒரு நிலையில் நிறுத்தி யோகசாதனை செய்பவர்கள்போல் பிள்ளைகளின் மனதோடு கலந்துசெய்யும் போதனையாலும் கல்வி அவர்களுக்கு ஊட்டப்படவேண்டும்.

அந்தோ! அத்தகைய உபாத்திமார்களுக்கு வயிற்றிற்குப்போதாத உணவையும் சதா பலவிதகவலைகளையும், தொழிலில் மனதிருப்தியின்மையையும் அளித்து, அவர்கள் சற்றேனும் மனோநிம்மதியும் சந்தோஷமுமின்றி கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்படி செய்தால், ஆரம்பக்கல்வி நம்மக்கட்கு எங்ஙனம் நன்மையை யளிக்கும்? அது திருப்தியாய் நடைபெறாவிட்டால் உயர்தரக்கல்வி எங்ஙனம் நற்பயனருளும். கடவுளே! இந்த உபாத்திமாரை யிவ்வாறு நடத்துவதால் நம்சந்ததியாரின் க்ஷேமாபிவிர்த்திக்கே நாம் அழிவைத் தேடிக்கொள்கிறோமென்பது-அங்கை நெல்லியென விளங்குகிறதே.

நமது நாட்டிலுள்ள தேசாபிமானிகளும், கல்விமான்களும், நம் நாடு முன்னுக்கு வரவேண்டுமென்று ஆங்காங்கு நகரச் சங்கங்களிலும் சட்டசபைகளிலும் இன்னும் பல துறைகளிலும் தாய் நாட்டிற்காக உழைக்கிறார்களே! அறிவாளிகளாகிய இந்த உத்தமபுருஷர்கள் இனியேனும் தாய்நாட்டின் க்ஷேமத்தைக் கருதி இவ்வுபாத்திமார்கள் மேல் கருணைவைத்து அவர்களுடைய குறைகளை நீக்க முயற்சி யெடுத்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறோம். இன்றேல் தேச

க்ஷேமத்திற்காக அவ்வுத்தமர்கள் செய்யும் பெருமுயற்சிகளெல்லாம் பயனின்றி யொழியும் என்பதைக் கவனிக்கப் பிரார்த்திக்கிறோம். எல்லாம்வல்ல கருணாநிதியாகிய அம்பலக் கூத்தனும் ஆதி பரமன் அருள்புரிவாராக.

பத்திரிகாசிரியர்.

---

## மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்.

இதற்கு. பெரியோர்கள் சொல்லுகிறவார்த்தை தேவலோகத்திலிருக்கும் அமிர்தத்திற்கு ஒப்பாகுமென்பது அர்த்தம். பெரியோர்கள் இட்டவேலையை நாம் அவசியம் செய்துதீரவேண்டும் அவர்களுடைய வார்த்தைகள் சில சமயங்களில் வெறுப்பை உண்டாக்கினாலும்கூட, கடைசியில் அது நமக்கு நன்மையே தரும். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு கதையைச் சொல்லலாம்:—

புராதனகாலத்தில் தெய்வபக்தர்கள் அநேகர் இந்தியாவில் வாசஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நல்லொழுக்கமுடையவர்கள். ஆனால் இவ்வளவு நல்ல புண்ணியபூமியில் பாபிஷ்டனொருவன் இருந்தான். சுயபுத்தியாவது, பிறர்சொல்லி கேட்கிறதன்மையாவது இவனிடம் கிடையாது. கையில் அகப்பட்ட காய், கனிகளையும், தான் காலையில் பிச்சையெடுத்த அன்னத்தையும் தின்று ஜீவிப்பவன். காலக்கடன்களையாவது, பல்லைத்துலக்கலாவது, ஸ்நானம் செய்கிற வழக்கமாவது இவனிடத்திலில்லை. இவன் பிறர்செய்யும் நன்மார்க்கத்தைப்பார்த்து பரிகாசம் செய்பவன். அதனால் இவனிடத்தில் எல்லாவித கெட்டவழக்கங்களும் படிந்திருந்ததாகவே சொல்லலாம். ஆனால் மற்ற எல்லா ஜனங்களும் இவனுடைய மூடத்தன்மைக்கு விசனமடைந்து அவனை நல்வழியில்கொண்டுவரும்பொருட்டு தினந்தோறும் அவனுக்கு உபதேசித்துவந்தார்கள். அவனோ எதற்கும் அடங்கவில்லை. இப்படி இருக்க ஒருநாள் ஒரு கிழப்பிராம்மணர் அவனிடம் சென்று பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "காலையில் எழுந்திருந்த உடனே காலக்கடன்களை முடிக்கவேண்டும். பிறகு ஸ்நானம் செய்து ஜபம் முதலியவைகளை முடித்துக்கொள்ளவேண்டும். பிறகு உன்னுடைய வழக்கம்போல் சாப்பிடு" என்று சொல்ல அவன் எதற்கும் இணங்காமல் தன்னால்முடியாது என்று மறுத்துவிட்டான். இதைக்கேட்ட அக் கிழப்பிராம்மணர் இவனுக்கு பொருளாசைகாட்டி நல்மார்க்கத்தில் கொண்டுவரலாமென்று எண்ணி அவனைப்பார்த்து 'அடே மூடா! நீ ஒன்றும் செய்யவேண்டாம். ஆனால் ஒரு சுலபமான காரியத்தைச் சொல்லுகிறேன் கேள். நீ இமயமலைக்குப்போய் அங்குள்ள ரிஷிகளையும், தேவர்களையும் பார். அப்படிசெய்தால் அஷ்ட திரவியங்களை அடைவாய்" என்று சொல்லிப் போய்விட்டார்.

இவன் தனக்கு கிடைக்கப்போகும் பொருளாசையினால் இரவும் பகலுமாய் அநேகநாட்கள் நடந்து, கடைசியாக இமயமலையின்மேல் தாமரைகளால் நிறைந்த ஒரு தடாகத்தை அடைந்தான். அவன் அங்கு ஐந்துநாட்கள் இருந்தும் ஒருவரையும் காணவில்லை. அவ்விடத்தில் இவனுக்குச் சரியான ஆகாரம் கிடைக்காததால் உடம்பு மெலிந்துவிட்டது. பணத்தின் பேராசையும் நீங்கிவிட்டது. பிறகு தனது இருப்பிடத்துக்குபோக நிச்சயித்து திரும்பிவருகையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டு இருக்கும் ரிஷியைப் பார்த்து, அவரை நமஸ்கரித்து, கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான். அவர் இவனுடைய அவலக்ஷணங்களையும், சோர்வையும்கண்டு மனம் நொந்து அக் கிழப்பிராம்மணர் முன்சொல்லியபடியே உபதேசிக்கத் தொடங்கினார். அவன் இதை எல்லாம் கேளாது தனக்கு திரவியம் கிடைத்தால் போதுமென்றான்.



பிறகு அந்த ரிஷி இவனுடைய சண்டித்தனத்தைக் கண்டு "நீ ஒன்றும் செய்ய வேண்டாம். ஆனால் தினந்தோறும் காலையில் எழுந்திருந்த உடனே ஸ்நானம், ஜபம் முதலியவைகளை முடித்துக்கொண்டு, நெற்றியில் விபூதி இட்டுக்கொண்டிருக்கிற யாராவது ஒரு பிராம்மணரைப் பார்த்துவிட்டு போஜனம் செய்தால் நீ மிக்க திரவியங்களை அடைவாய்" என்று சொன்னார் இவன் அவர் சொற்படியே நாள்தோறும் ஆற்றங்கரைக்குப்போய் அவ்விடத்தில் ஸ்நானம் செய்து விபூதி இட்டுக்கொண்டிருக்கிற பிராம்மணரைப் பார்த்துவிட்டு பிறகு போஜனம் செய்துவந்தான். இப்படி இருக்கையில் ஒருநாள் இவன் அகாலத்தில் இரண்டுமணி சுமாருக்கு ஆற்றங்கரைக்குப்போக, அவ்விடத்தில் விபூதி இட்டுக்கொண்டிருந்த பிராம்மணர் ஒருவரையுங் காணாமல், தான் பசியால்வாடி அதிவேகமாய் ஒரு அக்கிராரத்தின்வழியாய்த் தன் வீட்டுக்குச் செல்லுகையில், குயவன் ஒருவன் தான்போட்டிருந்த சூளையிலிருந்து பானைகளை எடுத்து தன்வீட்டில் பத்திரம்செய்துகொண்டிருக்கையில் அவ்விடத்தில் தற்செயலாயிருக்கும் ஒரு புதையலைக்கண்டு ஆச்சரியமடைந்து ஒருவருக்கும் தெரியாமல் எடுக்க முயன்றுகொண்டிருந்தான். குயவன் சாம்பலில் வேலைசெய்ததினால் அவனுடைய உடம்புமுழுவதும் விபூதிபூசினால்போல் வெள்ளையாக இருந்தது.

தன்வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த அந்த பாபிஷ்டன் குயவன் வெள்ளையாயிருப்பதைக் கண்டு விபூதி இட்டுக்கொண்டிருக்கிறான் என்று நினைத்து "கண்டேன் கண்டேன்" என்று உரக்கச்சொல்லிக்கொண்டு சந்தோஷமாய் தன்வீட்டுக்குப்போக, குயவன் அந்த கூக்குரலைக்கண்டு பயந்தவனாய் அவன்பின் ஓடி, அவனுக்கு சமாதானம்சொல்லி அழைத்துவந்து, அந்தத் திரவியத்தை இரண்டாய்ப் பங்கிட்டு ஒரு பாகத்தை யவனுக் களித்து, அந்த விஷயத்தை வெளியிடக்கூடாது என்று, அவனைக் கெஞ்சிக்கொண்டான். அவன் தனக்குக்கிடைத்த திரவியத்தைக்கண்டு மெச்சி, சந்தோஷமடைந்து வீடுபோய்ச்சேர்ந்தான்.

வி. வாசுதேவ் ராவ்.

---

## மாய ஜுரத்தின் காரணம்.

### ஒரு நிபுணரின் அபிப்பிராயம்.

சென்னை பிரபலவாசியும் ஆங்கில வைத்திய நிபுணருமாகிய டாக்டர் எம். வி நஞ்சுண்டராவ் அவர்கள் இப்போது வட இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார். அவர் டில்லியிலிருந்து அக்டோபர் 4-ந் தேதியிட்டு நமக்கு அடியிற்கண்ட ஓர் கடிதம் எழுதி யிருக்கிறார்:—

மாய ஜுரம் எனப்படும் புதிய பம்பாய் ஜுரத்தினால் மைலாப்பூரிலுள்ள என்னுடைய நண்பர்களில் சிலர் மாண்டுபோனதாகத் தெரிந்து மிகவும் வருத்தப்படுகிறேன். அனுபோக மில்லாத வைத்தியர்கள் பலர் மேற்படி ஜுரத்துக்குக் கொடுத்துவரும் மருந்தின் திறமைக்குறைவை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்டுவது முற்றிலும் பொருத்தமுடையதாகும். ஒருவருக்கு ஜுரம் கண்டதும் 'ஆஸ்பிரின்' என்ற மருந்தைப் பெரும்பாலான வைத்தியர்கள் பம்பாயில் கொடுக்கிறார்கள் நாளுக்குநாள் அங்கே ஜுரம் அதிகரிப்பதற்குக் கேட்பானேன்! அத்தகைய மருந்து கொடுப்பதனால்தான் புதிய ஜுரத்தின் அட்டூழியம் அதிகரிக்கிறதென்று நான் சொல்லுவதாக நினைக்கக் கூடாது. ஆனால் ஜுரத்தின் வேகம் தணியாமலிருப்பதற்கு மற்றக் காரணங்களுடன் இதுவும் ஓர்காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை.

'ஆஸ்பரின்' ஒரு நல்ல ஜுரமருந்தென்று பலர் தப்பாய் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்ற மருந்துகளைப்போல் அதுவும் இரத்த உற்பத்திப் பைகளுக்குக் கெடுதலையே உண்டு பண்ணுகிறது. ஆகையால் ஜுரம் கண்டவர்களுக்கு ஆரம்பத்தில் இந்த மருந்தைக் கொடுத்தால், அது பின்னிட்டு கபவாத ஜுரத்தில் கொண்டுவந்து விடுகிறது. மரணவிகிதங்களும் அதிகரிக்க வாரம்பிக்கின்றன.

ஆகையால் என்னுடைய சகோதர வைத்தியர்களுக்கு நான் சொல்லுவதென்னவெனில், பம்பாய ஆல்கலாய்டல் கம்பெனியில் அகப்படக்கூடிய "டோஸ்மெட்ரிக் இரீனிடி" 'வடபர்வெஸண்ட் கிரானுலர்' என்ற மாத்திரைகளை வாங்கி, ஜுரங்கண்டவர்களுக்கு ஆரம்பத்தில் கொடுக்கவேண்டும். மலசுத்தியாக மருந்து கொடுத்தபின், ஐஸ்போட்டஜலத்தை ஒரு பஞ்சு உண்டையால் உடம்பெங்கும் ஒத்திக்கொடுக்கவேண்டும்; இப்படிச் செய்யின், ஜுரத்தின் உக்கிரம் தானாகவே தணிந்துவிடும். இவ்வாறு செய்தபின்கூட கபவாத ஜுரம் வந்துவிட்டால் 'க்ரியோஸோடல்' என்ற மருந்தை ஒரு நாளைக்கு நாலைந்து தடவை 20 அல்லது 30 துளி பாலில் போட்டுச் சாப்பிடவும். வியாதியஸ்தரை மரணம் அண்டாது. ஜுரம் நின்ற ஐந்தாறு தினங்கள் வரையில் வியாதியஸ்தர்கள் வெளிக்கிளம்பவோ, காரியங்கள் செய்யவோகூடாது. எனது சகோதர வைத்தியர்கள் இதைத் தயவுசெய்து கவனிக்கவும். (சு-மி.)

---

## ஓர் ஐயவினா.

உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு.

"உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்பது ஔவையியற்றியபாடல்களிலொன்றாகக் காணப்படுகின்றது. பொருளுரைத்த புலவர்களும் உணவைச் சுருக்கி அருந்துதல் பெண்களுக்கழகு எனவும் உரை தந்திருக்கின்றனர். அங்ஙனம் உணவைக்குறைத்து அருந்துவதென்றால் பெண்களுக்கு பலமுடைத்தலெங்ஙனமாகும்? பலவீனமன்றோ அடையக்கூடும். அடையுங்கால் வீட்டிற்கு வேண்டிய வேலைகளும் (பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த-மக்கட்பேறல்லபிற) எனும் நன்மக்கட்பேறடைதலும் எவ்வாறு சாத்தியப்படும்? உணவு குறைவதாயின் தேகபலங்குன்றி அதனால் பிறக்கும் குழந்தைகளும் பலம் குறைய அறிவுமழுங்கி யறிவறிந்த மககட்பேறடைவதற்கு வியலாதன்றோ பெண்கள் உணவைக்குறைப்ப தழகென்றால், ஆண்கள் உணவை மிகப்படுத்துவதழகாமோ ஆடவர்களைப்பார்க்கினும் பெண்டிர்களுக்கன்றோ பல காரணங்களானும் உழைத்தல் மிகுதி! அங்ஙனமிருக்க உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்றல் பொருத்தமாமோ? அன்றியும் ஔவைப்பிராட்டி பெண்பாலாயிருக்கத் தன்பால்பற்றி யிங்ஙனம் பாடுவாளோ அல்லது இதற்கேதேனும் வேறு பொருளுளதோ அன்றேல் வாக்கியம்வரைந்த புலவர்களின் வாய்க்குற்றமோ ஆகவே அடிமையின் ஆசங்கையை நிவர்த்திசெய்து தருமாறு ஆனந்தபோதினியின் அன்பர்களாகிய நண்பர்களை வேண்டிக்கொள்கிறேன்.

ரா. சங்கரநாராயணன், ஆலவாய்மொழி.

குறிப்பு:—இதற்கு விடை எழுதும் அறிவாளிகள் அக்டோபர் 31-க்குள் அது நம்மிடம் சேரும் வண்ணம் அனுப்பிவிட வேண்டுமென்றும், கூடிய வரையில் சுருக்கமாகவே எழுதி யனுப்புமாறும் வேண்டிக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்

## * பழமொழிகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
அஞ்சிலே விளையாதது ஐம்பதிலே விளையுமா?
அடிக்கும் ஒருகை, அணைக்கும் ஒருகை.
அடியாதமாடு படியாது
அண்டத்திற்கொத்தது பிண்டத்திற்கு.
அணைகடந்த வெள்ளத்தை அடைப்பாருமுண்டோ.
அதிக ஆசை அதிக நஷ்டம்
அதிகாரிவீட்டில் திருடி தலையாரிவீட்டில் ஒளித்துவைத்தான்.
10. அதிர்ஷ்டமும் ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல.
அயன் இட்டகணக்கு ஆருக்கும் தப்பாது.
அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்.
அத்தி பூத்ததுபோல்.
அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
அரிசி அழாக்கானாலும் அடுப்புக்கல் மூன்றுவேண்டும்.
அரியும்சிவனும் ஒன்றே அறியாதவன் வாயில் மண்ணே
அவசரக்காரனுக்கு புத்திமட்டு.
அவசரக்கோலம் அள்ளித்தெளி.
அவன் அன்றி அணுவும் அசையாது.
20. அழுகுக்கு இட்டால் ஆபத்துக் குதவும்.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
அள்ளாது குறையாது சொல்லாது பிறவாது.
அறையிலாடி அம்பலத்தில் ஆடவேண்டும்.
அற்பர் சிநேகம் பிராண சங்கடம்.
அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறிக.
அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?
அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்.
அன்னமிட்டவீட்டில் கன்னமிடலாமா.
அன்னியமாதர் அவதிக்குதவார்.
30. ஆகாயத்தில் எறிந்தால் அங்கேயே நிற்குமா?
ஆசைக்கு அளவே இல்லை.
ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும்.
ஆசைநோய்க்கு அவிழ்தம் பலிக்குமா.
ஆசை வெட்கம் அறியாது.
ஆடமாட்டாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்.
ஆடுபிடிக்க காடி அகப்பட்டதுபோல்.
ஆத்திரம உடையான் கோத்திரம் அறியான்.
ஆயிரம் காக்கைக்கு ஒரேகல்.
ஆலைக்குள் அகப்பட்ட சோலைக்கரும்புபோல்.
40. ஆட்டுக்கிடங்கி ஓநாய் அழுதாப்போல்.
ஆவேபுதிறமாயின் பால்நிறம் மாறுமோ.
ஆற்றில் கரைத்த புளியைப்போல்.

---

* இது ஆனந்த தீபிகையிலிருந்து சுடது மாணவர்களுக்கு வேண்டுமென்று எழுத ஆரம்பித்தேன்.

ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை.
ஆனைக்கவடும் பூனை திருடும்
ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன்பெறும்.
ஆனைமேல்போகிறவனைச் சுண்ணாம்புகேட்டதுபோல்.
ஆனைவரும்பின்னே மணியோசை வரும்முன்னே.
ஆனை அடங்கும் அங்குசத்தினால்
ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.
50. இடம்கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
இடுகிறதெய்வம் எங்கும் இடும்.
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்.
இரப்பவனுக் கெங்கும் பஞ்சமே இல்லை.
இரவல் சீலையைநம்பி இடுப்புச்சீலையை எறிந்தாளாம்.
இராமுழுதும் ராமாயணம்கேட்டுச் சீதைக்கு ராமன் என்ன வேண்டும் என்றதுபோல்.
இரும்புத்தூணைக் கறையான் அரிக்குமா.
இளங்கன்று பயமறியாது.
இல்லையென்றவீட்டில் பல்லியும் சேராது.
உண்ணச் சொத்து மண்ணைப்போகும்.
60. உண்ணாமல் ஊரெல்லாம்திரியலாம் உடுத்தாமல் வெளியில்போகாதே.
உண்மைசொல்லிக்கெட்டாருமில்லை பொய்சொல்லிவாழ்ந்தாருமில்லை
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உள்ளங்கைபுண்ணுக்கு கண்ணாடிஏன் ?
உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை.
உள்ளேபகையும் உதட்டிலே உறவும்
உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா.
உளவில்லாமல் களவில்லை.
ஊசிக்குக் கள்ளன் உடனே வருவான்.
ஊத்தைபோனாலும் உள்வினைபோகாது.
70. ஊமையன்கண்ட கனவுபோல்.
ஊரார் பண்டம்உமி தன்பண்டம் தங்கம்.
ஊர்வாயைமூட உலைமூடி உண்டா.
எட்டிபழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.
எட்டிச்சுரைக்காய் கறிக்காகுமா.
ஏழை அழுதகண்ணீர் கூரியவாள் ஒக்கும்.
ஐங்காதம்போனாலும் தன்பாவம் தன்னோடே.
ஒருஊருக்கு ஒருவழிதானா ?
ஒருகுடம்பாலுக்கு ஒருதுளிபிரை.
ஒருபானைச்சோற்றுக்கு ஒருசோறுபதம்.
80. கசடருக்கில்லை கற்றோர்உறவு.
கசிந்துவந்தவன் கண்ணைத்துடையாய்.
கடலில்பெருங்காயம் கரைத்ததுபோல்.
கடல்பெருகினால் கரையும் பெருகுமா.
கடுகுசிறுத்தால் காரம்போகுமா ?
கடைத்தேங்காயெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற்போல்
கட்டின வீட்டிற்கு பழுதுசொல்வார் பலர்.
கண்ணாடியிற்கண்டபணம் கடனுக்குதவுமா ?



கப்பல்ஓட்டிப்பட்டகடன் கொட்டைநூற்றுத்தீருமா ?
கரும்புதின்னக் கூலிவேண்டுமா ?
90 கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
கல்லார் உறவினும் கற்றோர் பகைநலம்
கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே
காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு
காமத்திற்குக் கண்ணில்லை.
காயாமரத்திற் கல்லெறிபடுமா.
காலத்திற்கேற்ற கோலம்
காலுக்குத்தக்கசெருப்பும், கூலிக்குத்தக்க உழைப்பும்.
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கிட்டநெருங்கினால் முட்டப்பகை
100. கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்
குடிக்கிறதுகூழ் கொப்பளிக்கிறது பனிநீர்
குதிரைகுருடானாலும் கொள்தின்பதில் குறைவில்லை.
குப்பைஉயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது. (இன்னும்வரும்)

S. V. பழனியப்பன்.

---

## கற்கோட்டை—நாவல்

(119-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரபு மறைந்துகொண்ட மறு நிமிடம் போர்வீரர்கள் வாசற்படி யருகில் வந்து குதிரையைவிட் டிறங்கினார்கள். அவர்களில் தலைவனாய் வந்தவன் லெப்டினெண்ட் முனிலிங் என்பவன். அவன் குரூர முகமும் கருணையற்ற பார்வையும் கடினசித்தமும் முரட்டுக்குணமு முடையவன். இத்தகைய ஒருவன் இருப்பதும் சமயத்திற்கு நலமேயென்று இராணி யிவனைப் படையில் வைத்துக்கொண் டிருக்கிறாள். முனிலிங் அங்கிருந்த வேலைக்காரனை நோக்கி, "அடே ! அரியநாயகி யம்மாள் வீட்டிற்குள் இருக்கிறார்களா? உண்மையைக் கூறு. பொய் கூறினையோ பத்திரம் ....." என்றான்.

வேலைக்காரன் 'நானல்ல பொய் கூறுகிறவன். எஜமானனிடம் பதினைந்து வருடங்களுக்கு அதிகமாய் இருந்து வருகிறேன். ஆ ! அதோ எஜமானனே வருகிறார். உனக்கு அவரே தக்க விடை யளிப்பார்" என்றான். ஏனெனில் அச்சமயம் செல்வராயர் நகரத்திலிருந்து திரும்பிவந்து குதிரையைவிட் டிறங்குகிறார். வீரர்களைக் கண்டதே, இது நேற்று மாலைத் திரவியசிங்கம் பிரபுவை நமது தோட்டத்தில் கைது செய்தார்களே, அதன் சம்பந்தமாகத்தா னிருக்க வேண்டும் என்று கருதிக் கொண்டார்.

முனிலிங் அவரைக் கண்டதும் வந்தனமளித்து, "ஸர்தார் அவர்களே ! தாங்கள் நகரமேயராக விருப்பதால் அரியநாயகி யென்கிற மாதை யென்வசம் ஒப்பிக்கச் செய்வதில் உதவி புரியவேண்டும்" என்றான்.

ஸர்தார் செல்வராயர்.—"அவளை என்ன குற்றத்திற்காகக் கைதுசெய்யக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது ?" என்றார்.

முனிலிங்.—"அதைப்பற்றி தாங்கள் சிந்திக்கவேண்டாம். அம்மாதைச் சமாதானத்தோடு என் வசம் ஒப்பித்துவிடும்" என்றான்.

பிரபு.—"அவள் இப்போது எங்கிருக்கிறாளோ என்னால் கூறமுடியாது. நான்

ஒரு விஷயமாய்க் காலையில் நகரத்திற்குச் சென்றவன், காரியசித்தி பெறாமல் இப்போதுதான் திரும்பிவருகிறேன்" என்றார்.

முனிசிங் மறுபடி வேலைக்காரனை நோக்கி மரியாதையோடு "ஏனப்பா, அந்தம்மாள் எங்கிருக்கிறாள், தயவுசெய்து கூறு!" என்றான். வேலைக்காரன் எஜமான் உண்மையை யுரைக்கச் சொல்லுகிறாரென்று குறிப்பாலறிந்து "உள்ளே யிருக்கிறார்கள். சற்று முன்புதான் வந்தார்கள்" என்றான். முனிஸிங் உடனே தன் ஆட்களில் சிலரிடம் குசுகுசு வென்று என்னமோ கூறினான். அவர்கள் தட்டென்று குதிரைகளை விட்டிறங்கி மாளிகைக்குள் நுழைந்து, பின்புறத்திலிருக்கும் வாசற்படிக்கு எப்படி போகவேண்டுமென்று வேலைக்காரரைக் கேட்டார்கள். அச்சமயம் அரியநாயகியின் தோழி அங்கு வர, முனிஸிங் "அரியநாயகியம்மாள் எங்கிருக்கிறாள். சீக்கிரம் கூறு," என்றான்.

அம்மாது "அந்தம்மாள் சற்று முன்தான் வந்தார்கள். இப்போது பார்த்தால் தன் அறையிற் காணோம். மற்ற விடங்களிலும் காணோம்" என்றாள்.

முனிஸிங் மிக்க ஆத்திரத்தோடு தன் ஆட்களை நோக்கி, "சீக்கிரம் பிரிந்துபோய் மாளிகையின் எல்லா வழிகளையும் காத்துக்கொள்ளுங்கள். நானே முழுமையும் சோதித்துவிடுகிறேன். யாராயிருந்தாலும் எக்காரணத்திற்கும் வெளிசெல்ல விடாதீர்கள்" என்றான். உடனே அவ்வீரர் பிரிந்து மாளிகையின் பலதிக்குகளிலும் ஓடி மாளிகையைச் சூழ்ந்துகொண்டார்கள். இரண்டு மூன்றுபேர் தங்கள் தலைவன் கூடவே உட்புறத்திற்கு நுழைந்தார்கள்.

செல்வராயர் அச்சமயம் அங்குவந்த தன் அந்தரங்க ஆளாகிய தம்புசாமி என்பவனை நோக்கி "அடடா! என்ன இக்கட்டுகள்! என்ன குழப்பங்கள்! அரியநாயகி உண்மையில் வீட்டிற்குள் இருக்கிறாளா அல்லது தப்பித்துக் கொண்டு போய்விட்டாளா?" என்று கேட்டார். தம்புசாமி "எஜமானே! நானறிந்தமட்டில் அந்தம்மாள் உள்ளேதானிருக்கவேண்டும். சற்று முன்பு பார்த்தேன். ஒரு சமயம் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்களோ வென்னவோ" என்றான். செல்வராயர் "எப்படியாயினும் என்னதான் நடக்கிறதோ பார்ப்போம் வா!" என்றார். உடனே யிருவரும் உள்ளே சென்றார்கள்.

திரவியசிங்கம் பிரபு அறைக்குள் இருந்தபடி நடந்த சம்பாஷணை முழுதும் கேட்டுக்கொண்டார். "அடடா பெரிய இக்கட்டிலல்லவோ சிக்கிக்கொண்டோம். என்ன செய்வது? மாளிகைமுழுதும் போர்வீரர் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எந்த வழியாய்ச் சென்றாலும் சிக்கிக்கொள்வோம். இங்கேயே யிருந்தாலும் சோதனை செய்துகொண்டு வரும்போது சிக்கிக்கொள்வோம். என்ன செய்யலாம்?" என்று சிந்தித்துக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தார். அறையின் மற்றொருபக்கம் ஒரு கதவிருந்தது. அதைத்திறந்துகொண்டு ஒரு சிறு கூடத்தில் சென்று அங்கு இரண்டுபக்கம் இரண்டுவழிகள் இருப்பதை நோக்கி மனதிற்குத் தோன்றியபடி ஒருவழியிலிருந்த கதவைத் திறந்துகொண்டு உள் நுழைந்தார். அது இரண்டுபக்கமும் சுவருடைய ஒரு நீண்ட தாழ்வாரமாயிருந்தது. அங்கு சொல்பவெளிச்சமே இருந்தது அவ்வழியே சென்றார். அப்பாதையிலிருந்து இரண்டு இடங்களில் பாதைகள் பிரிந்திருந்தன. பிரபு நேரே சென்றார். சற்று நேரத்திற்குள் இருபுறமும் சுவர்களில் பலகைகள் தைக்கப்பட்டிருந்த நீண்ட பாதையில் நுழைந்தார். அங்கு நிர்ச்சத்தமாயிருந்தது. இந்த வழி யெங்குசெல்லுமோவென்று சிந்தித்துக்கொண்டே மெதுவாய்ச் சென்றார். அச்சமயம் எதிர்பக்கமிருந்து யாரோ வருவதுபோல் காலடிசத்தம் கேட்டது. சற்றுநேரத்திற்குள் ஒரு போர்வீரன் அவர் எதிரில் நெருங்கிவிட்டான்.



அவன் முன்னுள் பிரபுவை யடையாளம் தெரிந்துகொண்டு காட்டிக் கொடுத்த அதேபோர்வீரன். அவன் பிரபுவின் உருவத்தைக்கண்டதும் முதலில் வீட்டுவேலைக்காரரில் ஒருவன் என்று எண்ணி,

"அடேதில், அரியநாயகி எங்கே" என்று கூறிக்கொண்டே அருகில் வந்து முகத்தைக்கண்டதும் "ஹோ.... பிரபு" என்றான். பிரபுவினிடம் ஆயுதமில்லை. ஆகையால் அவன் தன்னை யறிந்துகொண்டானென்பதை யுணர்ந்ததும் ஒரேபாய்ச்சலாய் அவன்மேற் பாய்ந்தார். அவன் முன் சாக்கிரதையோடு தன்கையிலிருந்த வாளால் ஓங்கிவீச பிரபுவின் இடது புயத்திலிருந்து முழங்கைவரையில் நீண்டகாயம்பட்டு இரத்தம் பீரிடத்தொடங்கிறது. ஆனால் மறுநிமிடம் பிரபு அவன் வாளைப் பிடுங்கிக்கொண்டு ஓங்கிக் கீழ்நோக்காய் அவன் தலைமேல் வெட்ட, அவன் சிரசிலணிந்திருந்த இரும்புக்கவசம் இரண்டாய்ப் பிளக்கப்பட்டு அவன் சிரம் உச்சியிலிருந்து கழுத்துவரையில் இருபாகமாய்ப் பிளந்துவிட்டது. அவன் ஒருசத்தமும் இன்றிச் சவமாய் விழுந்தான்.

அவன் கவசமணிந்த தேகம் தடாலென்று கீழே சத்தத்தோடு விழுந்தது. அதேநிமிடம் இரண்டுபேர் அங்கு ஓடிவந்தார்கள். அவர்கள் செல்வராயரும் தம்புசாமியுமே. அவர்கள் சவத்தைக்கண்டு பிரமிக்கையில் பிரபு "ஸர்தார்! என்னைக்காப்பாற்றும் காப்பாற்றும். உமக்கு இக்கட்டை யுண்டாக்கி விட்டேன் சண்டாளன். என்னை அரியநாயகி தப்பவைத்ததற்காகவே இவர்கள் அந்தம்மாளைச் சிறைசெய்ய வந்தார்கள்..." என்று கூறிக்கொண்டே, இரத்தப் போக்கால் மூர்ச்சித்து செல்வராயர்மேல் சாய்ந்துவிட்டார். செல்வராயர் பிரபுவென்று தெரிந்ததும் பிரமிப்படைந்து அவரைத் தாங்கிக்கொண்டு "அடடா! என்னசெய்வது. ஆ! நற்காலம், தம்புசாமி, சீக்கிரம் சீக்கிரம், இவரை யொருபக்கம் பிடி" என்று தூக்கிக்கொண்டு அருகில் சுவரிலிருந்த கள்ள அறையின் கதவைத்திறந்து, துரிதமாய்ப் பிரபுவை அறைக்குள் கிடத்திவிட்டு, அவசரத்தால், உள்ளே ஒரு மூலையில் பதுங்கி நிற்கும் அரியநாயகியைக்கூட பாராதவர்களாய்க் கதவை மூடிக்கொண்டு சென்றார்கள். இவர்கள் வெளியில் வந்த மறுநிமிடம் முனிஸிங்கும் அவனாட்களும் அங்கு வந்து சவத்தைக்கண்டதும்,

முனிஸிங் கோபாவேசங்கொண்டு,

"ஆ கொலை! படுகொலை!!! இராணியின் ஆளை.....அடே இவர்கள் இருவரையும் தட்சணம் கைதுசெய்யுங்கள். துஷ்டர்கள். பிடித்துக் கரங்களைக் கட்டுங்கள். என்ன சொன்னாலும் கேட்கவேண்டாம். சீக்கிரம் சீக்கிரம்" என்று கண்களில் கோபத்தனல் வீசக்கூறினான்.

## 21-வது அத்தியாயம்

தங்கம்மாள் அரண்மனைக்குச் சென்று தன் பெயரைக் கூறித் தான் ஒரு அவசியகாரியமாய் இராணியை யுடனே தரிசிக்க விரும்புவதாய்ச் சொல்லி யனுப்பியதே இராணி அனுமதியளித்தாள். உடனே ஒருவன் அம்மூதாட்டியை யழைத்துக்கொண்டுபோய் உள்ளே விசாலமான கூடத்தின் ஒரு அறையில் உட்காரவைத்தான். இராணியைத் தரிசிக்க வருகிறவர்களை யந்த அறையிலிருந்து இராணியின் அரண்மனைக்காரியஸ்தர் வந்து அழைத்துப்போய் இராணியின் சமூகத்தில் விடவேண்டும்.

தங்கம்மாள் அந்த அறையில் உட்கார்ந்ததே ஓர் அழகியமாது அங்கு வந்ததும் "அரியநாயகி க்ஷேமந்தானா?" என்றாள். தங்கம்மாள் அதைக்கேட்டு முதலில் திடுக்கிட்டாளெனினும் பிறகு அரியநாயகி கூறியயாவும் நினைவிற்குவர, "ஆ! நீ கோகிலாம்பாளா யிருக்கவேண்டும்" என்றாள். அம்மாது "ஆம், ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ?" என்றாள். (தொடரும்.)

ஸ்ரீமான். குப்புசாமி முதலியார்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்தி௵ கார்த்திகைமீ—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,
பசலி 1327-28—கொல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1918ம்௵ நவம்பர்மீ—டிசம்பர்மீ

| கார்த்திகைமீ | நவம்பர்மீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ச | திர-30-21 | ரேவ-2-53 அசு-55-56 | ம 56 சித் | கரிநாள் |
| 2 | 17 | ஞா | சது-24-41 | பர-54-58 | சித்த 60 | சர்வாலய தீபம் |
| 3 | 18 | தி | ○பௌ19-5 | *கார்-51-23 | மர 51 அ | அண்ணாமலை தீபம் |
| 4 | 19 | செ | பிர-14-2 | ரோக-47-57 | அ 48 சித் | சாந்திசெய்ய, விஷ்ணுபலி |
| 5 | 20 | புத | துதி-9-41 | மிரு-46-18 | சித்த 60 | விவாகம் |
| 6 | 21 | வி | திரு-5 44 | திரு-44-41 | மர 45 அ | ஆயுதம்பிரயோகம் செய்ய |
| 7 | 22 | வெ | சது-3-11 | புன-44-37 | சித் 46 ம | தனியநாள் |
| 8 | 23 | ச | பஞ்-1-50 | பூச-45-31 | சி 46 மர | ருதுசாந்திசெய்ய |
| 9 | 24 | ஞா | சஷ்-1-42 | ஆயி-47-48 | மர 48 அ | |
| 10 | 25 | தி | சப்-2-51 | மக-51-15 | ம 51 சித் | காலபைரவாஷ்டமி தீர்த்தம் |
| 11 | 26 | செ | அஷ்-5-23 | பூர-55-52 | சி 56 அமி | சித்திரமெழுத |
| 12 | 27 | புத | நவ-9-2 | உத்தி-60-0 | அமிர் 60 | சர்ப்பாதானம் |
| 13 | 28 | வி | தச-13-28 | உத்-1-19 | மர 2 சி | பணியாரம்பம் |
| 14 | 29 | வெ | ஏகா-18-36 | அஸ்த-7-34 | அமி 8 சி | தனியநாள் |
| 15 | 30 | ச | து-23-56 | சித்-14-2 | மர 14 அ | திருச்சானூர் அலமேலுமங் |
| 16 | 1918௵ டிசம்பர்மீ 1 | ஞா | திர-29-17 | சுவா-20-31 | சித்த 21 ம | [கைத்தாயார் உத்ஸவாரம்பம் |
| 17 | 2 | தி | சது-33-22 | விசா-26-33 | ம 27 சித் | |
| 18 | 3 | செ | ●அமா-37-16 | அனு-31-3 | சித்த 60 | |
| 19 | 4 | புத | பிர-40-0 | கேட்-34-57 | சித் 35 மர | |
| 20 | 5 | வி | துதி-41-14 | மூல 37-40 | சித்த 60 | |
| 21 | 6 | வெ | திரு-42-29 | பூரா-39-9 | சித்த 60 | |
| 22 | 7 | ச | சது-39-41 | உத்தி-41-23 | சித்த 60 | |
| 23 | 8 | ஞா | பஞ்-37-12 | திரு-38-33 | அமி 39 ம | |
| 24 | 9 | தி | சஷ்-33-58 | அவி-36-54 | சித்த 60 | |
| 25 | 10 | செ | சப்-29-25 | சத-34-0 | மரண 60 | |
| 26 | 11 | புத | அஷ்-24-27 | பூரட்-30-41 | அ 31 சி | |
| 27 | 12 | வி | நவ-18-0 | உத்தி-26 53 | சித்த 60 | |
| 28 | 13 | வெ | தச-13-19 | ரே-22-55 | அமி 60 | |
| 29 | 14 | ச | ஏகா-7-35 | அசு-18-57 | சித்த 60 | கௌசிக ஏகாதசி |
| 30 | 15 | ஞா | து-1-34 திர-54-33 | பர-14-55 | சித்த 60 | பசுக்களை வாங்க |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 4—விரு-சுக் 24—மக-செ 28—சாப-சி | | |
| | | | சனி |
| செ | ரவி ராகு | சுக் | |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

10 DEC
MADRAS
86

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி 4 | காளயுக்தி௵ கார்த்திகைமீ கவ
1918ம்௵ நவம்பர்மீ 16வ | பகுதி 5

## கடவுள் வணக்கம்

எறிதி ரைக்கட னிகர்த்த செல்வமிக
வல்ல லென்றொருவர் பின்செலா
தில்லை யென்னுமுரை பேசிடா துலகி
லெவ்வு மாமென மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிகிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவுமெந் நாளுமே
அறிவி னின்றுகுரு வாயு ணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீருளை
யைய வையவினி யென்சொல்கேன்
சிறிய னேழைநம தடிமை யென்றுனது
திருவு ளத்தி லிருந்ததோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

என்னுடை யுயிரே யென்னுளத் தறிவே
யென்னுடை யன்பெனு நெறியாய்
தன்னன்முக் கனிதேன் கண்டமிர் தென்னக்
கலந்தெனை மேவிடக் கருணை
மன்னிய வுறவே யுன்னைநான் பிரியா
வண்ணமென் மனமெனுங் கருவி
தன்னது வழியற் றென்னுழைக் கிடப்பத்
தண்ணருள் வரமது வேண்டும்.

# ஆனந்தபோதினி

**காளயுக்தி௵ கார்த்திகை௴ 1௳**

## கடவுளும்—மதங்களும்

(129-ம் பக்கத்தொடர்ச்சி)

மகம்மதிய மதத்தவரை இரண்டு பிரிவாய்க் கூறலாகும். ஒரு பிரிவார் மார்க்கத்தில் கூறப்பட்ட கட்டளைகளின்படி மட்டும் நடந்துகொண்டால் போதும் என்றிருக்கிறவர்கள் — மற்றொரு பிரிவார் நபிநாயகம் அவர்களுடைய நடக்கைகளைப் பின்பற்றி அவர் அடைந்திருந்த ஞான மார்க்கத்தை யடையவேண்டுமென்ற நோக்க முடையவர்கள்.

நமது மார்க்கத்திலும் "ஞானமார்க்கம் அதற்குத் தகுதியுடையவர்களுக்கே போதிக்கப்பட வேண்டும், அதுவும் குருவானவர் சீடனுடைய பக்குவமறிந்து, தக்க பருவத்தில் தாமே உபதேசிக்க வேண்டும்" என்றிருந்தாலும், ஞானமார்க்கம் பல நூல்களில் பகிரங்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பக்குவமடையாதவர்கள் கூட அவற்றை வாசித்துவிட்டு வாசாஞானமேனும் பே[illegible]கிறார்கள். ஆனால் பலர் பக்குவமடையாமலும், குரு முன்னிலையில் பயிற்சி யடையாமலும், நூற்களிலுள்ளவற்றை மட்டும் படித்துவிட்டுத் தங்கள் மனப்போக்கின்படி அர்த்தம் செய்துகொண்டு, தவறான வழிகளில் பிரவேசித்து குதர்க்கம் பேசுவதில் மட்டும் தேர்ந்தவர்களாய் முடிவில் ஞானமுமடையாமல், தமக்குத் தக்க கீழ்ப்படியில்நின்று பயிற்சி செய்வதாலடையும் பயனையும்பெறாமல் வீணாய்க் கெட்டுப் போகிறார்கள். இதற்காகவே தாயுமானவரும்,

> "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
> தான்வந்து முற்று மெனலால்
> சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது
> சதாநிஷ்டர் நினைவ தில்லை
> சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே
> செப்பினும் வெகுதர்க்க மாம்
> *　　*　　*　　*　　*　　"

என்றருளி யிருக்கிறார்.



மகம்மதிய மதத்திலோ ஞான மார்க்கத்தைக் கூறும் நூல்களே மிக்க மறைவில் வைக்கப்படுகின்றன. அதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் தவிர ஏனையோர் கண்களுக்கு அது புலப்படவே கூடாது என்று கருதுகிறார்கள். இதனால் பெரும்பாலார்க்கு சுத்த மெய்ஞ்ஞான மார்க்கம் நம்மதத்தில் கூறப்பட்டிருக்கிறதென்றே தெரியாது. அங்ஙனமாயின் அன்னிய மதத்தினர்க்கு எப்படித் தெரியும்? அரபி, உருது, பார்ஸி முதலிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்போர்கூட அவற்றில் ஞானமார்க்கமிருந்தால் அந்த அம்சத்தை மட்டும் அடியோடு விட்டுவிட்டு மற்ற இலௌகிக சம்பந்தமான கட்டளைகளை மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள். திருஷ்டாந்தமாய் ஒன்று கூறுகிறோம்.—

இமாம்கஸ்ஸாலி என்ற மகானுலியற்றப்பட்ட கீமியாயெஸாதத் என்ற ஒரு நூல் மூல பாஷையிலிருந்து இப்போது ஒருவரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சில பாகங்களே வெளிவந்திருக்கின்றன.

மூலநூலில் ஆரம்பத்திலேயே "ஓ மனிதனே, நீ யுன்னை யறிந்துகொண்டால் பிறகு உன் ஆண்டவனை யறிந்துகொள்வாய்" என்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும், தாயுமானவர் கூறியுள்ள "நீயற்ற வன்னிலையே நிஷ்டையதில் நீயிலையோ—வாயற்றவனே மயங்காதே......" என்ற அதே பொருளைத்தரும் வாக்கியமும், "அவனுமில்லை நானுமில்லை யாருமில்லையானதே"—"தத்வமசி" முதலிய வாக்கியங்களும் பாஷை வித்தியாசமேயன்றி மற்றபடி யப்படி யப்படியே கூறப்பட்டிருக்கின்றன. விரிவஞ்சி மிக்க சுருக்கமாய்க் கூறினோம். மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் கீமியா யெஸாதத்தில் இந்த விஷயங்கள் அடியோடு கூறப்படவில்லை.

மதஸ்தாபகர்கள் எல்லாம் ஞானவான்களே. ஆனால் ஒரே விதமாய் எல்லாமதங்களிலும் மெய்ஞ்ஞானமார்க்கம் கூறப்படாமலிருப்பதற்கும் மற்றவித்தியாசங்களுக்கும் காரணம் காலதேச மாறுபாடுகளேயாகும். மஹம்மது நபிநாயகம் அவர்கள் "யாரார் ஆண்டவனைத் தன் உயிரினும் அதிகமாய் நேசிக்கிறார்களோ அவர்களெல்லாம் இஸ்லாம் மார்க்கத்தவர்களே" என்று கூறியிருக்கிறார். மற்றபடி அந்தந்த காலத்தில் ஜனங்கள் இருந்த மனோநிலைமைக்குத் தக்கவாறு அவர்கள் உபதேசம் செய்யவேண்டி

யிருந்தது. ஊர்க்குருவியின் தலைமேல் பனங்காயை வைத்தால் சுமக்குமோ. கேவலம் மண், மரம், கல் இவற்றால் செய்யப்பட்ட பதுமைகளையே பிரத்யட்ச தெய்வமாய் நம்பியிருந்தவர்களுக்கு மனோவாக்குக் கெட்டாத பரம்பொருளைப்பற்றி கூறினால் அக் குருவை நம்புவார்களோ! மாமிசம் மச்சம் இவற்றையே மூல ஆகாரமாக உண்டுகொண்டிருந்த ஜனங்களுக்குச் சிவகாருண்யத் தையும் அஹிம்ஸையையும்பற்றி போதித்தால் நம்புவார்களோ? சாதாரணமாய் ஜீவகாருண்யத்தின் பெருமையைப்பற்றி அனாதி காலந்தொடங்கி அறிந்திருந்த நம்நாட்டாருக்கே:

> “ கள்ளுமூனுநீ விரும்பினால் மகங்கள்செய் காமத்தின் மனதானால்
> கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந் தொடா [னென்றே
> தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும்
> விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன்றே. ”

இதன் கருத்தாவது:—

“ மதுமாமிசங்களில் உனக்குப் பிரியமிருப்பின் அவற்றைக் கட வுளுக்கு நிவேதித்து ஈசுரார்ப்பணம்செய்து பிறகு புசி. காமத் தில் இச்சைவந்தால் அக்னிசாக்ஷியாய் மணம்புரிந்த மனைவியிடம் சுகித்திரு என்று வேதம் கூறியதேனெனில், அப்படிக் கூறினால் இவன் கண்டகண்டபோதெல்லாம் நேரிடும் மற்றபோகங்களையும் அன்னிய ஸ்திரீகளையும் தொடமாட்டானென்று கருதியே யப்படி கூறியது—மற்றபடி வேதத்தின்கருத்து யாவற்றையும் அடியோடு தவிர்க்கவேண்டு மென்பதே—அப்படியாயின் மேற்கண்ட விதி யேன் கூறப்பட்டதெனில், இவன் நாளாவட்டத்தில் அவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாய் நீக்கிவிடவேண்டுமென்று ஒருவாறு கூறி யதேயன்றி, கட்டாயம் அப்படியே செய்யவேண்டும் என்றும் கூறிய கட்டளைகளல்ல.”

நேயர்களே! நாம் இதுகாறும் கூறியவாற்றால், பலசமயங் களிலும் பகிர்முகத்தில்தோன்றும் வித்தியாசங்கள் காலதேச பேதத்தால் ஏற்பட்டவையேயென்றும், எல்லாமதங்களின் உள் நோக்கமும் ஒன்றேயென்றும், இம்மதங்கள் யாவரும் முடிவான ஒரு உயர்ந்த விடத்தை யடைய ஒரு ஏணியின் பலபடிகளைப் போன்றனவென்றும், ஒரே நகரத்திற்குச் செல்லும் பல பாதை களுக்குச் சமானமானவைகளே யென்றும், எல்லாமதங்களாலும் பிரதிபாதிக்கப்படுவது ஒரேகடவுளென்றும், அவருக்கு எல்லா மதங்களும் சம்மதமேயென்றும் நன்குணரலாகும்.

இவ்வாற்றால் எந்தமதத்திலுள்ள கடவுளைத் தூஷித்தாலும் நாம் எதைக்கடவுளென்று நம்பியிருக்கிறோமோ அந்தக்கடவுளைத் தூஷித்த பாபத்திற்கே யாளாவோம். நம் கண்களுக்குப் புலப் படும் ஒவ்வொருபொருளும் கடவுள் மயமேயென்று கூறப்பட் டிருக்கிறது. கேவலம் கழுதையைக்கண்டபோது அதையும் பரம சிவம் என்று கையெடுத்துக் கும்பிட்ட இரண்டொரு மகான்களை நாம் நேரில் தரிசித்திருக்கிறோம்.

ஆகையால் அரிய சகோதர சகோதரிகளே! யாரார் எதை தைக் கடவுள் என்றாலும் அவையாயும் நமது கடவுளென்றே நாம் நம்பிக்கையோடு கையெடுத்துக் கும்பிடுவதே தகுதியாகும் அதுவே நமக்கு நற்கதிபெறவழிகாட்டும். இதுவே மகான்கள் அநுபவம். நாம் நமது கடவுளை யெவ்வளவு குறுகிய எல்லைக்குள் இருப்பதாய் மதிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நாம் கடவு ளுக்குத் தூரமாய்விடுகிறோம். எவ்வளவு அடிக்கடி கண்டகண்ட இடங்களிலும் பொருள்களிலும் கடவுளைக்காண்கிறோமோ அவ் வளவிற் கவ்வளவு அவரை நெருங்குகிறோம்.

மேற்கூறியவாறு அப்பியாசிப்பதால் நாம் அடையக்கூடிய அரியபெரும் பேற்றைப்பற்றி சற்று அநுபவமாய் அடுத்த சஞ்சி கையில் கூறுவாம். (தொடரும்)

---

## “ நமது வாழ்நாட்களில் வெற்றி ”

இவ்வுலகின்கண் நம்முடைய காரியங்களில் வெற்றியடைய வேண்டு மாயின் கௌரவம், முயற்சி, திரேகசுகம், என்ற மூன்றுகுணங்களும் அவசியம் வேண்டும். மிகுந்த புத்தி நுட்பம் இல்லாமல் பிரபலமான வெற்றியடைய இயலாது என்பது உண்மையே. ஆயினும் இயற்கையிலே மிகப் புத்தி நுட்பம் வாய்ந்த அநேகர் மேற்கூறிய குணங்கள் இல்லாமையால் அவர்களுடைய காரி யங்கள் அநுகூலமாகாமல் போயின. சதாரண சக்தியை யுடைய ஒருவருக்கும் இந்த மூன்று குணங்களும் அவசியமாய்வேண்டும். இவ்வாறு இருந்தால் புத்தி சாலித்தனமாய் வாழ்வதற்காக முயற்சி எடுக்கின்ற ஒவ்வொருவரும், திரேக சுகத்தை அடையலாம். மற்றைய இரண்டு குணங்களும் முற்றிலும் நம்மையே சார்கின்றன.

நோயாலும், பலவீனத்தாலும், தங்கள் வாழ்நாள் முழுதும் வருந்துதல் சில ருடைய துர் அதிர்ஷ்டம் என்பது உண்மையே. அவ்வித வருத்தத்தினின்றும்

அவர்கள் தங்கள் முயற்சியால் துன்பம் அடையாமலிருத்தல் அசாத்யம். ஆனால் அத்தகைய மாந்தர் பொதுவிதிக்கு விலக்காயிருக்கின்றனர். உணவு முதலியவைகளில் மிதமாயிருந்து ஒழுங்காக தேக அப்பியாசம்செய்வது முதலிய சுகாதார விதிகளை அனுசரிப்பதனால் அநேகர் நிச்சயமாய் தேக சுகத்தை அடையலாம்.

கௌரவம், முயற்சி முதலிய குணங்கள் சம்பந்தப் பட்ட விஷயங்களில் விதிவிலக்கே இல்லை. கௌரவமாயும் சுறுசுறுப்பாயும் இருக்கத் தீர்மானிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் மேற்கூறியவாறு இருக்கலாம்.

இம்மாதிரியே நமது வாழ்நாட்களின் வெற்றிக்கு வேண்டிய அம்சங்கள் நம்மிடத்திலேயே வாய்ந்துள்ளன. காரியசித்தி யடையாதவர்கள் தங்கள் காரியங்களில் தவறிப்போனதற்காக தங்கள் அதிர்ஷ்டத்தைப்பற்றி அல்லது விதியைப்பற்றி குறை கூறுகின்றார்கள். ஆயினும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி எல்லா சந்தர்ப்பங்களையும் நாம் அறிந்திருந்தால், பத்தில் ஒன்பது பங்கு மனிதர்கள் தங்கள் காரியங்களில் தவறிப்போனதற்கு காரணம் துர் அதிர்ஷ்டமல்ல. ஆனால் அவ்வாறு தவறிப்போவதின் காரணம் அவர்களுடைய அறியாமையும் புத்திக் குறைவுமேயாம் என்றுணரலாம்.

சகோதர சகோதரிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் மேற்கூறிய மூன்று குணங்களையும் பெற்று, உங்கள் காரியாதிகளில் செவ்வென நடப்பீர்களானால், அக்காரியங்கள் முற்றிலும் ஜெயமடைந்து மேன்மையடைவீர் மென்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆர். வெங்கிட்ராஜ் வர்மா, பழனி.

---

## கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி.

இவ்விஷயம் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள் நூலினின்றும் மொழி பெயர்த்தெழுதி யனுப்பப்பட்டது.

எந்தக் காரியம் செய்து முடிப்பதிலும் மனத்திட்பம் வேண்டும். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிவிட்டு ஒருக்காலும் பின்வாங்காதே. சிலசமயங்களில் ஒன்றைத் தொடங்கிவிட்ட பிறகு அதனைச் செய்யுமாறு இன்னதென்று தோன்றாமல் மயங்கும்படி நேரிடும். அப்பொழுதும் தைரியத்தைக் கைவிடாதே. கரை தோன்றாமலிருக்கவும் கடலிற் செல்லும் மரக்கலத்தை வடதிசையிலிருக்கும் துருவ நக்ஷத்திரம் நேரிய வழியிற் செலுத்துதல்போல, இனிச் செய்யவேண்டுவது இன்னதென்று தோன்றாமல் மயங்கியவிடத்தும், மனத்திட்பத்துடனும் அடக்கத்துடனும் காரியம் செய்ய முயலுவோரை நல்வழியில்நடத்துவதோர் நக்ஷத்திரம்போல்வ தொன்றுண்டு. அது "கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி" என்பதேயாம். ஒரு காரியம் செய்து முடிப்பதற்குள் இடையூறுகள் பல நேரிடலாம். அதனால் அடையவேண்டிய பயனை யடைவதன் கண்காலம் நீடிக்கலாம் சிலசமயங்களில் ஒன்று நினைக்க மற்றொன்று முடியினு முடியும் என்றாலும், மனத்திட்பத்தைக் கைவிடாமல் எடுத்த காரியத்தில் முயல வேண்டும்.



"பட்டவகையாற் பலரும் வருந்தாமற்
கட்டுடைத்தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத்தாக இடைதவிர்ந்து வீழ்தலின்
கட்டறுதலே நன்று."

என்னும் முன்னுறை யரையனார் வாக்கினையும், முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் என்னும் முதுமொழியினையும் உற்று நோக்கிக் "கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி."

செய்யப்புகுந்த காரியம் நற்காரியமாயிருப்பதுடன் அதனைச் செய்துமுடிக்கும் மார்க்கமும் நன்மார்க்கமா யிருத்தல் வேண்டும். கள், காமம், பொய், களவு, சூது, வாது, முதலிய எவற்றினையும் உபயோகப் படுத்தக்கூடாது. சூதும் வாதும் வேதனைசெய்யும் என்றார் ஔவையாரும். காரியம் சித்தியானாலும் காரியம் சித்தியாகாமற்போனாலும் நீ யென்றென்றும் கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி. ஒன்று நற்றொழில் என்பதும் தீத்தொழில் என்பதும் புறத்தோற்றத்தால் நிச்சயித்த லியலாது. தூண்டில் முள்ளின்கண் இரைபோல் மனத்தை வசீகரித்துப் பின் கேட்டை விளைவிப்பனவும் பலவுள. முன்னோர் அமயம் ஓர் ஓநாய் ஆட்டுத் தோலை மேலேபோர்த்துக்கொண்டு ஓராட்டுமந்தையில் நுழைந்து இடையனுக்கு ஒருநாள் ஆடாகவே தோன்றிப் பல ஆடுகளைத்தின்று கொண்டு வந்ததாம். அதுபோலவே பலதீச்செயல்கள் முதலில் அறச் செய்கைகள்போலத் தோன்றிப் பின்னர் நம்மை நரகத்திற் கொண்டுபோய்த் தள்ளுகின்றன; ஆதலாற் புறத்தோற்றத்தால் மருண்டு மோசம்போகாதே. எவற்றையும் ஆராய்ந்து பார்த்துப் பின்னர் செய். ஆன்றோர் வழக்காயினும், செல்வர்கள் ஒழுக்கமாயினும், மதக்கொள்கைகளே யாயினும், நன்மை தீமை ஆய்ந்த பின்னரே அவற்றின்படி யொழுகல் வேண்டும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

என்ற நீதியை யுணர்ந்து கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி.

யாவரும் எளிதிற் பின்பற்றி யொழுகக்கூடிய விதி யொன்றுளது. அது நல்வழியிலுய்க்குந் தன்மைவாய்ந்த சிறந்ததொரு கருவியாம். அது மனமகிழ்ச்சியையும் மனத்திட்பத்தையுந் தரவல்லது. அது நேர்வழி காட்டும் ஒருநல்லொளியாகவு முள்ளது. அது எதுவெனில் கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி என்பதே. மனிதனை நம்புவதிற்பயனொன்றுமில்லை. சிலர் உன்னை நேசிக்கின்றனர் சிலர் உன்னைப் பகைக்கின்றனர். வேறு சிலர் நம் மெதிரேயே முகமன் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர் நம்மைப்பற்றிப் புறங்கூறுகின்றனர். ஆதலின் மனிதனை முற்றும் நம்புவதை விட்டுவிடு. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ஆதலின் உன் முழுமனதோடுங் கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி.

இறைவனை நம்பினோரே யிம்மையினின்ப முற்று
மறுமையின் முத்திபெற்று வாழுவ ரளவில் காலம்.

K. R. கணபதி பிள்ளை, துணியை.

## ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

### " அறஞ்செய விரும்பு. "

ஒருநகரத்தில், ' தருமசீலன் ' என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் தாய் தந்தையர்மீது மிகுந்த விசுவாசம் உள்ளவன்; மகாசாது; எவரோடும் படபடப்பாகப் பேசமாட்டான்; எப்பொழுதும் தெய்வசிந்தனை மறவாதவன்; படிப்பதில் மிகுந்த விருப்பமும் சுறுசுறுப்பும் உள்ளவன். குரு விசுவாசம் அவனுக்கு அதிகம் உண்டு ; அவன் நாள்தோறும் தவருமல் பள்ளிக்கூடத்திற்குப் போய்வருவான். இவ்வாறு அவன் படித்துவருங்காலத்தில் ஒருதினம் உபாத்தியாயர் அவனுக்கு, ' அறஞ்செய விரும்பு, ' என்னும் நீதிவாக்கியத்தைச் சொல்லி, அதன்பொருளையும் விளக்கிக்காட்டினர்.. அதுமுதல் அவன் உலகத்தில் தருமமே சிறந்ததென்று கண்டுகொண்டான். தினந்தோறும் தன்னல் இயன்றவரை தருமம் செய்யத்தலைப்பட்டான்; தாய்தந்தையர் தின்பண்டங்கள் வாங்கித் தின்னும்படி தனக்குக் காலணுகொடுத்தால், அதில் மூன்றில் ஒரு பாகத்தையோ, 2-பாகத்தையோ ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவான் ; தான் வீட்டிலிருக்கும்போது எவர்வந்து அன்னம்கேட்டாலும் தடையின்றி அவருக்கு அன்னம் கொடுப்பான்; சிலசமயம் தனக்குமட்டும் சாப்பாடிருந்தாலும் தான் பட்டினியிருந்துகொண்டாவது, அதைப் பிச்சைக்காரருக்குப் போட்டுவிடுவான். இந்த தருமகுணத்தினுல் அவனுக்கு அநேகம்பேர் அறிமுகமாயிருந்தார்கள். அவனை எல்லோரும் கொண்டாடிவந்தாலும், அவனேடு படித்துவந்த நாகலிங்கம் என்னும் ஒருபையன்மாத்திரம் அவனை நிந்தித்து வருவான்; ' உனக்கு என்னதெரியும் ? நீ தருமம்செய்து என்ன தலையில் வாரிக்கொள்ளப் போகிருய், ' என்று இகழ்ச்சி செய்வான். அதற்கு தருமசீலன், " நாகலிங்கம்! அப்படிச் சொல்லாதே; தருமம் தலைகாக்கும், " என்று சொல்லி வருவான். இப்படியிருக்கும்போது ஒருசமயம் தருமசீலனும் நாகலிங்கமும் சிலமனிதர்களோடுசேர்ந்து, ஓர் ஊருக்குப் போகும்பொருட்டு இரவில் பிரயாணம் செய்தார்கள். அப்போது நடுவழியில் சிலதிருடர்கள்வந்து இவர்களை மடக்கிக்கொண்டு, பலங்கொண்டடித்து, இவர்களிடம் இருந்தபொருள்களைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர்கள். அவ்வாறு தொடங்கி எல்லோரிடமும் கொள்ளையடித்துவிட்டு நாகலிங்கத்தினிடம் வந்தார்கள். அவன் ஆபரணங்களை அதிகமாயணிந்திருந்தபடியால், அவற்றைத் திருடர்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று பிடிவாதம் செய்தான். உடனே திருடர்கள் கோபங்கொண்டு, இடுப்பு நொறுங்கும்படி உதை உதையென்று உதைத்து, அவனிடம் இருந்தவற்றையெல்லாம் பிடுங்கிக்கொண்டார்கள். நாகலிங்கம் உபத்திரவம் சகிக்கமுடியாமல் ஒருபக்கத்தில் அழுதுகொண்டுநின்றான். அதன்மேல் திருடர்கள், தருமசீலனிடம் சென்றார்கள். அப்போது தருமசீலன், " ஐயா, என்னை அடிக்கவேண்டாம்; இதோ என்னிடமிருக்கும் ஆபரணங்களைக் கழற்றிக்கொள்ளுங்கள்," என்றான். ஒரு திருடன் அவன் சமீபத்தில் வந்து அவனுடைய முகத்தை உற்றுப்பார்த்தான். இவ்வாறு பார்த்த மாத்திரத்தில். அவன், " ஓஹோ ! இந்தப் பையன் நம்



முடைய தருமசீலன்; இவனை ஒன்றும் செய்யாதீர்கள்; இவனுக்கு ஏதாவது கொடுத்தனுப்பவேண்டும்" என்று சொன்னான். உடனே திருடர்கள் எல்லாரும் முகமலர்ந்து தங்களிடமிருந்த நாணயங்களிற் சிலவற்றை அவனுக்குக் கொடுத்து, 'நீ பயப்படாதே' என்று சொல்லிப் போய்விட்டார்கள். இந்தத் திருடர்கள், முன்னே தரித்திரப்பட்டு, பிச்சையெடுத்துத் திரிந்தவர்கள்; அக்காலத்தில் இவர்கள் பலதடவைகளில் தருமசீலனிடம் அன்னம் வாங்கி சாப்பிட்டிருந்தார்கள் ; அதனுலேயே அப்பொழுது தருமசீலனை இன்னுனென்று அறிந்து, அவனுக்கு உதவிசெய்து போனார்கள். தருமம் செயயக்கூடாதென்று நடித்த நாகலிங்கமோ, அப்பொழுது தன் பொருளையும் பறிகொடுத்து உதையும் பட்டு அவமானத்தையும் அடைந்து நின்றான். தருமசீலனே தன்னுடைய தரும குணத்தினுல் அடைந்த மேன்மையைப்பற்றி மகிழ்ச்சி யடைந்தவனுய், "நம்முடைய உபாத்தியாயர், 'தருமத்தைச் செய்வதற்கு நீபிரியப்படு,' என்று அருத்தமாகிற, 'அறஞ்செய விரும்பு', என்னும் வாக்கியத்தைக் கற்றுக் கொடுத்ததனுல் உண்டான பயனை இப்பொழுது நான் அடைந்தேன்," என்று குருவைப் புகழ்ந்து கொண்டான்.

---

### " ஆறுவது சினம் "

ஒரு குடும்பத்தில் கோபாலன், பார்த்தசாரதி என்னும் இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்குப்போய் கல்விகற்றுக்கொண்டு வருவார்கள்; இவர்கள் பிரியத்தோடு பள்ளிக்கூடம்போய் வருவதற்காக, இவர்களுடைய தாயார், ஒவ்வொரு நாளும், இவர்களுள் ஒவ்வொருவனுக்கும் காலணு கொடுத்து வருவாள்; அதைப்பெற்று இருவரும் தின்பண்டங்களை வாங்கித் தின்று மகிழ்ச்சி யடைவார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் இவர்களுடைய தாயார் கையில் துட்டு அதிகம் இல்லாத படியால் கோபாலனுக்கு ஒரு பைசாவும், பார்த்தசாரதிக்கு ஒரு பைசாவும் கொடுத்தாள். பார்த்தசாரதி, கோபமில்லாதவனும் புத்திசாலியுமாதலால், அதைப் பிரியத்தோடு வாங்கிச் சென்றான். கோபாலனே மிகுந்த பேராசைக்காரனும் கோபமுள்ளவனுமாதலால், "எனக்கு ஒரு பைசாவேண்டாம்," என்று சொல்லிக் காலகளை உதறி அழுதுகொண்டே முடுக்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டான். பார்த்தசாரதியும் பள்ளிக்கூடம் போய்த் தனக்குப் பசியெடுத்த நேரத்தில் ஒரு பைசாவுக்கு வாழைப்பழம் வாங்கித்தின்று, தன் பசியைத் தணித்துக் கொண்டான். கோபாலனே அவனைப்பார்த்து முணுமுணுத்துக் கொண்டிருந்தான். பசி அதிகமாய்விட்டபடியால் அவன் மிகவும் களைத்துப்போனன் பின்பு இருவரும் வீட்டிற்கு வந்தார்கள். கோபாலனுக்கு பசி அதிகமா யிருந்தபடியால் கோபத்தை யெல்லாம் ஒழித்துவிட்டு, தாயாரிடம்போய், "அம்மா! அந்த ஒரு பைசாவையாவது கொடு," என்று கேட்டான். அதற்கவள், "உனக்குப் பைசாவும் கொடுப்பதில்லை ; சோறும் போடுவதில்லை," என்று சொல்லி அன்றிரவு அவனுக்கு அன்னமிடாம லிருந்துவிட்டாள். அதனுல் அவன் இரவெல்லாம் பசிவருத்தத்தால் அழுதுகொண்டு தூங்காமல் படுத்திருந்து மறுநாள் விடிந்தவுடன், ' எப்பொழுது நமக்கு அன்னமிடுவார்க ' ளென்று எதிர்பார்த்தவனுய், தாயார் கொடுத்த ஆகாரத்தை வெகு ஆவலோடுவாங்கி உண்டான். அதன்மேல் பார்த்தசாரதி, அவனைப்பார்த்து, " நம்முடைய உபாத்தியாயர் உபதேசித்த கோபம் விட்டுவிடக்கடவது " என்னும் கருத்தடங்கிய, ' ஆறுவது சினம் " என்னும் ஔவை வாக்கியத்தை நீ மறந்ததினுல் வந்தகஷ்டத்தை அறிந்து

கொண்டாயா?'' என்று கேட்டான். அதுமுதல் கோபாலனும் கோபத்தை நீக்கிச் சாந்தமுடையவனுகி விட்டான்.

(தொடரு

---

## "தமிழின் தற்கால நிலைமை"

ஏ தமிழ் நங்காய்! நம் நாட்டுச் சிறார் நின்மாற்றுளாய ஆங்கில மங்கையை விரும்புவதெல்லாம் உத்தியோக பதவியை அடையவேண்டு மென்றேயன்றி, நின்னினுஞ் சிறந்த சொற்பொருணயம் அங்குண்டென்று நினைத்தல்ல. ஆதலின் அவர்கள் பால் உனக்கு வெறுப்புத்தோன்ற நியாயமில்லை. அன்னாய்! நின்சிறாரை மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பாயாக. தாழ்ந்தோருயர்வதும், உயர்ந்தோர் தாழ்வதும் காலவேற்றுமையானே. ஆகையால் நீயும் அத்தகைய காலபேதத்தின்பாற் பட்டனை. "குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" அன்றோ? வீணே கழிவிரக்கங் கொள்வதிற் பயனில்லை. ஓ தமிழணங்கே! நீ இந்நிலைமையினின்றும் நன்னிலைமையை யடையவேண்டுமானல், நின் பண்டித இரத்னங்கள் கால சுபாவத்துக்கேற்ற கடமைகளைச் செய்து நிறைவேற்ற வேண்டுமாதலால், இனி அன்னோர்க்குக் கூறுவ கூறி நிறுத்துவாம்.

முற்காலத்திற் இலைமறை காய்போற் கோப்பியமாக மறைந்து கிடந்த அரிய பெரிய இலக்கண இலக்கிய நூற்களெல்லாம் சொற்ப விலைக்குக் கிடைக்கக் கூடியதான இக்காலத்தில், தமிழ்ப் பண்டிதமணிகள் பலர் ஆங்காங்கு காணப்படுகின்றனர். இது நம் தமிழ் நாட்டிற்குச் சாலவும் பெருமைதான்.

ஆயினும், பெரும்பான்மையோர் தம் கல்வித் திறமையைப் பாத்திரமறிந்து உபயோகிக்காது அவமே செலவிடுகிறார்கள். அதனால் அவர்கள் நம் தமிழ் நாட்டிற்குச் செய்யும் உபகாரம் அவலமாகிறது. காலரீதிக்கேற்ப அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தல் வேண்டும். தமிழிற் சில நூற்களையேனும் ஆராய்ந்தாக் கற்குமுன்னரே சுயமாக நூதன கவிகளியற்றிக் கியாதிபடைக்க வேண்டுமென்னும் ஆத்திரத்தால் ஏதோ சில செய்யுட்களியற்றி அத்தமட்டில் ஆவலடங்கித் தம் ஜனனதேசத்திற்குத் தாம் செய்யவேண்டிய பெருபகாரம் முற்றும் செய்தாயிற்றெனக் கருதிப் பெருமகிழ்வையுற்றிருக்குங் கவிஞர் பலர் இக்காலத்தில் மலிந்துள்ளார். தமது கல்வித்திறன் கவி இயற்றுவதிலேயே நிரம்பிற் றென்பதே அவர்கள் கொள்கைபோலும். நம் செந்தமிழ் மாது செய்தவப்பயனுற் பூர்வத்திலேயே தெய்வத்தன்மைக் கவிஞர் பலர் தோன்றி கற்பனை, சொற்சுவை, பொருட்பொலிவு, சந்தபேதவின்பங்கள் சிறக்க, நவரசங்களும் சொட்டும் வண்ணம், அறிவிற்கெட்டுதலுக் கின்றியமையாத லௌகிக, வைதிக சம்பந்தமான நுட்பவிஷயங்கள் பலவற்றையும் புராணேதிகாசங்களின் மூலமாகப் பத்திய ரூபத்தில் செய்தளித்துச் சென்றனர். நந்தமிழ்க் கன்னிகைக்குத் தன்கட் செய்யுணூற்கள் பலவில்லையே என்னுங் குறையொன்று மின்று. அங்ஙனமாகவும் மீட்டும் மீட்டும் தமிழாராய்வோர் யாவரும் செய்யுணூற்களை இயற்றப்புகுவதை நோக்குமிடத்து நந்தமிழ்த்தேயமே செய்யுட்களாற் பொதியப்படுமோ வென்னையமும், செய்யுளை படிக்கவறியாச் சாமானியருக்குத் தமிழிலுள்ள சொற்ப அபிமானமும் எங்கே நீங்கிவிடுமோ என்றொரு பக்கத்திற்கு பயமும் உதிக்கின்றன. அப்படித்தான் கவியியற்றினும்.

சிந்தாமணியின் நந்தாப்பொருண்மையும்
மணிமேகலையின் அணிகெழு போக்கும்



சிலப்பதிகாரத் திலக்கியச்செலவும்
திருவள்ளுவரின் ஒருமொழிநயமும்
கம்பன்கவியின் செம்பொருளின்பமும்
பத்துப்பாட்டின் வித்தகநடையும்
கல்லாடத்தின் எல்லாச்சிறப்பும்
இன்றோரன்ன பன்னூன்மாண்பும்
பல்லூழிகாலம் பாடுகிடப்பினும்
வருமோமற்றோர் வாக்கின்வழித்தாய்?

வாராதுவாராது. வரினும் அவற்றிற் சிறவாது. சிறப்பினும் இக்காலத்தோர்க்குச் சிறிதும் பயன்படாது. நாம் ஊகிக்கிற கற்பனைகளெல்லாம் தொன்னூற்களிலெங்கேனும் காணப்படாதிரா. ஏனெனில் நம்முன்னோர் பூரணபண்டிதர். ஸாரமான கற்பனுதிசயங்களை நம்மைக் கூறச்சொல்லி மீத்துவைத்திரார். அவர்களுடைய மிச்சிற் கற்பனைகளை நாம் நாவாற் கொள்ளாமற்றீராது.

ஆதலின், நமது பண்டிதமணிகள், தமக்கும், பிறர்க்கும் பயன்கொடாக் கவிகளை இயற்றுவதிற் காலத்தையும் புத்தியையும் வெகுவாய்ச் செலவிடாமற் பின்கண்டவிதமாகக் காலரீதிக்கேற்ற கடமைகளைப்புரிந்து ஜனனதேசத்திற்கும் தாய்ப்பாஷைக்கும் தருணசகாயம் புரியவேண்டுமாக மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

1. சங்கமருவிய அங்கநூற்களும், அவைபோற் சிறந்த தொன்னூற்களும் யாண்டுளவோ வென ஊருராய்த்தேடிச் சேகரித்து அவற்றின் அருமை பெருமைகளையும் சொற்றொடர்ப் பொலிவையும் அரும்பதப் பிரயோகங்களையும், யாவர்க்கும் விளக்கிக்காட்டி யுரை எழுதுவதிலும், முற்காலக் கொள்கைகளையும் நாகரீகங்களையும் சரித்திரமாகத் தொகுப்பதிலும் தமது பூரண கல்வித் திறமையை உபயோகித்துத் தமிழ்நாட்டுக்கோர் பெருந்திருப்பணி செய்யும் நமது ஸ்ரீமான் மஹாமஹோபாத்தியாய V. ஸ்வாமிநாத அய்யரவர்கள்போலும், நீதிமாலினி, தத்துவதரிசனி, ஞானத்திரட்டு முதலிய உத்தம புத்தகங்களை இயற்றிய, "லோகோபகாரி" பத்திராதிபர் V. நடராஜய்யர் போலவும், நீதி, யுக்தி, தெய்வபக்தி, ஞானம் முதலியவற்றை எளியவசன நடையில் எழுதுவது.

2. ஆங்கிலத்திலுள்ள நவீனகங்கள் (Novels) போன்ற கற்பனைக் கதைகள், நமது பாஷையில் அநேகமாய் இல்லை யாதலால், கற்போர்க்குச் சன்மார்க்கம், கடவுள்பக்தி, யுக்தி, ஞானம் முதலியன மேம்படுமாறு செந்தமிழ்நடையில் இரசாலங்காரம் நிறைய முன்பின் முரணுறமல் இக்காலத்தோர் நம்பக்கூடிய விதமாய் எழுதும் ஸ்ரீமான். ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களைப்போல் எளியநடையில் எழுதுவது.

3. ஏனையபாஷைகளில் உள்ளனவும், இதுகாறும் நம் பாஷையில் மொழி பெயர்க்கப்படாதனவுமான இரசாயன, பௌதிக, ககோல, கிருஷிக, கணித சாஸ்திராதிகளை மொழிபெயர்ப்பது. (இது பிறபாஷைகளில் விற்பனரும், தாய்ப்பாஷையில் அபிமானமுமுள்ள கல்விமான்களால் மாத்திரம் செய்யக்கூடியது.)

4. தாய்ப்பாஷைப் பத்திரிகைகளை பல்குவித்துப் போஷிப்பது, உபயோகமுள்ள விஷயங்களை எழுதி விஷயதானம் செய்வது.

இவைபோன்ற காலரீதிக்கேற்ற கடமைகளை யூகித்துணர்ந்து ஜனனதேச சகோதர சகோதரிகளுக்கும், நமது பாஷைக்கும் கண்ணியத்தையுண்டாக்கும் புண்ணியத்தை கையாளும்படி கருணாநிதியை பிரார்த்திப்போமாக. சுபம்!

ஸ்ரீ. S. ஜெகந்நாதன்.

குறிப்பு:—இதில் பெரும்பான்மை "மதுரை வித்யாபானு" வி னின்றும் எடுத்தெழுதப்பட்டது. (S. ஜெ.)

---

## வைப்பு

106-ம் பக்கத் தொடர்ச்சி.

இதனாலும் கூறியவற்றா லறம்புரிவ தத்தியாவசிய மென்பது பெற்றாம். இது எம்மதத்தினர்க்குஞ் சம்மதமானதே.

பொதுவாக நோக்குமிடத்து யாவருமே தரும மியற்றக் காண்கின்றோம். யாவராலும் உலோபியெனக்கருதப்படுபவனும், அறம்புரிவ தனைவோர்க்குங் கடனென்கின்றான். ஆயினும் தருமத்தின் சொரூபம் இன்னதென்றறிந்தோர் மிகச் சிலரேயாவர்.

தருமமானது பாத்திரா பாத்திரமறிந்து செய்யப்படவேண்டியது. சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கும் தருமமே பயனளிப்பது. அபாத்திரதானம் ஆபத்திற்கிடமே.

புண்ணியவானாகிய பிரபு ஒருவர் தம்மிடம் வந்திரந்தானொருவனுக்குச் சிறிது பொருள் தந்தார். அவ்வறியவன் அப்பொருளைக் கைக்கொண்டு 'இதை என்னசெய்வது. பசியின்பொருட்டு எதையேனும் வாங்கிப் புசித்துவிட்டோமாயின் பயனில்லை. யாகையால், இதைக்கொண்டே ஓர்தொழிலிற் பிரவேசிப்போமெனக் கருதியவனாய், அப்பணத்திற்குத் தூண்டில்முள் முதலிய வாங்கி, நாகப்பூச்சிகளையும் சேகரித்துக்கொண்டு, ஏரி தடாகங்களுக்குப்போய் அமோகமான மீன்களைப்பிடிப்பதும் விற்பதுமாயிருந்து, சிறிதுகாலத்திற்குள் திரண்ட செல்வவந்தனானான். இவ்வாறு இவனியற்றிய கொடும்பாதகத்தொழிலுக்குக் காரணமாயிருந்தவர் மேற்படி பிரபுவேயாகையால், அவர் மறுமையில் கரையிலா நிரயத்தாழ்ந்து வருத்தமடையநேரிட்டது" என்பதாக ஓர்கதையும் கூறுவதுண்டு. "பாத்திரமறிந்து பிச்சையிடு," என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்தும்.

இன்னும் அவ்வகைத் தானம் புரிவதால் தேசாபிவிருத்தியையும் தடுத்தவர்களாகிறோம். எத்தனையோ கோடிஜனங்கள் நன்றாய் உழைத்துப் பிழைக்கக்கூடியவர்களாயிருப்பினும், சோம்பல் முதலிய துர்க்குணங்கள் காரணமாக சந்நியாசிகளென்றும், சாமிகளென்றும் பெயர்கள் புனைந்து ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர். இவர்களது ஒழுக்கங்களை உய்த்து உணர்வோமாயின் உண்மை விளங்கும். பொய்யடிமையில்லாப் புனிதரின் பெருமையைப் போக்கக் காரணபூதர்களாகிய இப்போலிகளை குலத்தைக்கெடுக்கவந்த கோடரிக்காம்புகளென்னின் மிகையாகுமோ? "ருசிகண்ட பூனை உறியை உறியைத்தாவுமாம்" என்பதுபோல் இதுவே சுகஜீவனமென் றனுபவமாயறிந்தோர்களல்லரோ இவர்கள்! "பிச்சைச் சோற்றுக்குப் பேச்சில்லை எச்சில்லை," பிச்சை சோற்றுக்குப் பஞ்சமுண்டோ? சம்சாரசகிதமாய் கூட்டங்கூட்டமாய்ப் புறப்படும் போலிச்சந்நியாசிகள் "தான்கெட்ட குரங்கு வனத்தையும் கெடுத்தது" என்பதுபோல் தங்கள் பிள்ளைகளையும் இத்தொழிலிலேயே பயிற்றுகின்றனர். இவர்களது சுகத்தைக் காணும் இன்னோரன்னோரும் இதையே மேற்கொள்கின்றனர். இவர்களது சிறப்பினைக் கூறப்புகின், "பன்னியுரைத்திடிலோ பாரதமாம்," என்றவாறு மிகப் பெருகுமாதலின், விரிவஞ்சிவிடலாயிற்று. திருத்தணிகை, திருப்பதிமுதலாகிய க்ஷேத்திரங்களில் உத்ஸவகாலங்களில் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் காணலாம்.



அந்தோ! நாம் பாடுபட்டுத் தேடும்பணத்தைப் பாழிலாயிழக்கவேண்டும். இத்தகையோர்க்கு என் தருமம் செய்யவேண்டுமோ தெரியவில்லை. நெல்லுக்கிறைப்பதே நீரன்றிக் காட்டு முள் புல்லுக்குமிறைப்பரோபோய், 'தீவினைவிட்டீட்டல்பொருள்,' என்றபடி நன்மார்க்கத்திலாக்கிய செல்வத்தை அகப்பற்று, புறப்பற்றுக்களாகிய யான், எனது என்னும் அகங்காரமமகாரங்களை யறவேயொழித்து முக்குற்றங்களைக்காய்ந்த அருந்தவத்தினரைத்தேடி பயபக்தி விசுவாசத்துடன் வேண்டி யளித்தல்வேண்டும். இதுவே தலைப்படுதானமெனப்படும். இதுவே இம்மை மறுமைப் பயன்களை யெளிதிலளிக்கவல்லது. முடம், மொண்டி, குருடுமுதலிய ஏழை எளியோர்க்கு சிறுமைகண்டிரங்கிக் கொடுத்தல் இடைப்படுதானமாகும். இவைகட் கன்னியமானவையெல்லாங் கடைப்படுதானமே.

மற்றுமோர் விஷயத்தை வரையாமல் விடக்கூடவில்லை. விசேஷகாலங்களில் ஆங்காங்கு நடைபெறும் சமாராதனைகளில் அநேகர்க்கு அன்னதானம் புரிகின்றனர். பெரும்பான்மையும் நல்ல அந்தஸ்திலுள்ள அந்தணராதிய வருணத்தினர்க்கே அறுசுவையோடுங்கூடிய நால்வகையுண்டியும் நயந்தளிக்கப்படுகின்றன. வறியோர்க்கு வெறும் புற்கையும் ஈகின்றாரில்லை. *இஃதென்னோ இதுவுந் தருமத்தின்பாற் படுமோ?

"வறியார்க் கொன்றீவதே யீகை; மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" என்னும்

அருமைத் திருவாக்கை யறியார் போலும்.

அறம்புரிவோர் அனுசரிக்கவேண்டிய விதிகளும் சிலவுண்டு.

பிறரால் புகழப்படவேண்டுமென்றேனும், பிரதிபலன் கருதியேனும் புரியாது, வாய்மை, பொலிவு, அடக்கம், ஆஸ்திகபுத்திமுதலிய நற்குணங்கள் வாய்ந்து மனச்சுத்தியுடையரா யிருத்தல்வேண்டும்.

கற்றதங் கல்வியும் கடவுள் பூசையும்
நற்றவ மியற்றலும் நவையில் தானமும்
மற்றுள வறங்களும் மனத்தின் பாலழுக்
கற்றவர்க்கே பயனளிக்கு மென்பரால்."

என்ற ஆன்றோர் வாக்கே ஒன்றிய சான்றாம்.

மனத்துக்கண் மாசற்றிருத்தலே அறத்தின் உண்மைச் சொரூபம். அழுக்காறு, அசத்தியம்முதலிய துர்க்குணங்கள் வாய்க்கப்பெற்றுள்ளாரொருவன் எத்துணை யறம்புரியினும் என்ன பயனுடைத்தாம். வேதங்களில் விதித்தவை யறுக்கப்பட்டதன்றோ "அறம்" என்பதன் பொருள் அறு—பகுதி. அம் விகுதி. எதிர் பதம்; மறம். விலக்கப்பட்டது; அதாவது மறுக்கப்பட்டது என்பது பொருள் மறு—பகுதி. கொடுத்தற் றொழிலால் மாத்திரம் அறத்தின் பயனடையலாமெனில், அது செல்வவந்தராகிய ஒருசாரார்க்கன்றோ அமையும், தன் குடும்ப சவரக்ஷணைக்கும் போதாத சொற்ப வருவாயுள்ள குசேலனின் கதியென்ன? இதனால் முன்கூறியது மறுக்கப்பட்டதாகாது மனமாசகன்றால் தருமகுணம் தானேதோன்றும். இதுபற்றியே பொய்யாமொழியாரும்

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்."

என்றார்.

ஆகலின் தினைவிதைத்தவன் தினையறுப்பான்; வினைவிதைத்தவன் வினை

யுறுப்பான், என்னும் பழமொழிப்படி இம்மையினியற்றிய புண்ணியபாபங்களின்படியே மறுமையில் இன்பதுன்பங்களை யனுபவிக்கவேண்டியவர்களாயிருத்தலின்; மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களையும் பரிசுத்தமாயிருக்கச்செய்து அறம்முதலியன அன்பினுற்றின் அதுவே நாம் சேகரிக்கும் மறுமையின் வைப்பாகும். அறத்தால் வருவதே யின்பம்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பூ. ஸ்ரீநிவாசன், ராணிப்பேட்டை.

* குறிப்பு.—நமது நண்பர் கூறுகிற இவ்விஷயத்தைத் திருட்டாந்தமாய்ச் சென்னையில் அடிக்கடி காணலாம். இங்குள்ள செட்டிமார்களாகிய வர்த்தகச் செல்வர்கள் விசேஷ தானதருமங்களைச் செய்கிறார்கள். ஆனால் இவர்கள் பிராம்மணரையன்றி மற்றை வருணத்தார்க்கு தருமம் செய்யின் அது பயனில்லையென்று கருதுகிறார்கள் போல் காண்கிறது. அதிலும் உயர்ந்த காஞ்சிபுரப் பட்டுவேஷ்டியைப் பஞ்சகச்சம் வைத்து உடுத்திக்கொண்டு மேலுக்குக் காசி துப்பட்டா அல்லது விலையுயர்ந்த காஸ்மீரச் சால்வை யணிந்து கையில் தங்கக் காப்பு கொலுசு மோதிரங்க ளணிந்துகொண்டிருக்கும் பிராம்மணர்களையே உள்ளே யழைத்து 2, 3, 4, 5, ரூபாய் தட்சணை யளிக்கிறார்கள். சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டு கந்தல் துணியை யுடுத்திவரும் பிராம்மணர்க்கு வாசற்படியிலேயே 2 அணு 1 அணு கொடுக்கிறார்கள். பிராம்மணரல்லாதாரிலேயே மிக்க பரிதாபமான ஏழைகளிருக்கிறார்க ளென்பது உண்மை. அந்தோ இத்தகைய தருமத்தால் பயனுண்டோ? பத்திராசிரியர்.

---

## கார்த்திகை தீபதரிசனம்.

அக்நி.

"தீத்தானுங் கண்ணிலே தீத்தானுங் கையிலே
தீத்தானுமுன் றன் சிரிப்பிலே—தீத்தானும்
மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா வுன்னையிந்த
தையலா ளெப்படி சேர்ந்தாள்."

காளத்தி கண்டத்தே காளத்தி நெற்றியிலே
காளத்தி யுன்றன் கரத்திலே—காளத்தி
அங்கமெங்கும் வெவ்வழலை யாற்றினான் ஞானப்பூங்
கங்கையெனும் பெண்ணொருத்தி கண்டு. (கு. புலவர்)

அக்நி, நெருப்பு, வன்னி, கொடுவேலி, செந்தீ, எரி, அங்கி, தபனன், வேதயோனி, இவை யாவும் ஒருபொருட் சொற்கள்.

அக்கியை மூன்று ரூபமாகப் பிரித்து படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூவகைத் தொழிலையுங்கொடுத்து சோமன், சூரியன், அக்கி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. சந்திரனை இடக்கண்ணாகவும் சூரியனை வலக் கண்ணாகவும் கூறுவார்கள்.

பஞ்சவர்கள் பத்தினியாகிய துரோபதையும், மீனாட்சியும், வீரபத்திரக் கடவுளும், தபனனென்னும் மனுமகாராஜாவின் தந்தையும், பிருகு மகாரிஷியும், ஆங்கிரஸ் மகாரிஷியும், கவி என்னும் ரிஷியும், உக்கிரகுமார பாண்டியனும்



இன்னும் அனந்தமானவர்களும் செந்தழலினின்று வெளி தோன்றினதாக புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

இழிகுலமொழிந்து ஸ்ரீ நடராஜப்பெருமானை அடைய நந்தனென்னும் பக்தன் செந்தழலில் மூழ்கிப் பரிசுத்தனுன். ஸ்ரீ ஜானகி தன் கற்பிற்குப் பங்கமில்லை எனக் காட்டும்பொருட்டு அக்நிப்பிரவேசமாகி நிதர்சனம் செய்தாள். கற்புடையமங்கையர் உயிர்துறந்த தன் கணவருடன் உடன்கட்டை ஏறி விண்ணுலகம் அடைந்தார்கள். புகழ்சோழ நாயனாரும் கொழுந்துவிட்டெரியும் அக்கியில் மூழ்கி திருவருளை யடைந்தார். நம் நாட்டிலே, எங்கள் குலதெய்வமென்றும், பெண்தெய்வமென்றும், தீப்பாஞ்சி யம்மன் என்றும் அநேகர் நாமமிட்டு வணங்கிவருகிறார்கள். தங்கள் தங்கள் வம்சத்திலே ஒரு பெண்பால் அக்நிப்பிரவேசமாகி விட்டதாகவும், அந்தப்பெண் தேவாம்சமாக இருந்து தங்கள் குடும்பங்களை ரக்ஷிப்பதாகவும், அநேகர் சொல்ல நாம் கேள்வியுற்றிருக்கிறோம். நம் இந்துதேச சகோதரர்கள் இறந்தவர்களைத் தகனம் செய்யும் கோட்பாடுகளையும் உடைத்தாயிருப்பதன் கருத்தைக் கவனித்தால், மாண்டவர்களைப் பரிசுத்தம்செய்யும் தன்மை அக்கிக்கு இருப்பதாகவே யூகிக்க வேண்டியிருக்கிறது.

"கடையுகத்தினிற் பொழில்க ளேழையுங்
கனல்கொளுத்திய சுடலை யம்பலத்
தடலைபூசி யென்னம்மை
காணநின் றாடுமையன்."

ஸ்ரீ சிவபாஞ்சுடர், மயானத்தில் வாசம்செய்பவர் என்றும், சுடலையின் சாம்பலை விபூதியாக அணிபவர் என்றும், சுடலை யம்பலத்தில் நடிக்கும் நடராஜன் என்றும் கூறுவதால், சிவபெருமான் இறந்தவர்களைச் சுடலையிலிருந்து பரிசுத்தர்களாகச் செய்வதாகக் கருதவேண்டும்.

இவ்வுலகமே காமத்தீயால் உற்பத்தியாகி கோபத்தீயால் நாசமாகிறது. காமம் என்றால் ஆசை, அவா, காதல் என்று பொருள்படும். அக்கியின் அம்சம் அதிகப்பட்டாலொழிய காதலுண்டாகாது. இச்சையில்லாவிடின் உலகமேது. அக்கியின் கனி அவா! இந்தக்காதல் இல்லாத ஜீவர்கள் உலகத்திலுண்டோ.

"ஆதியே யண்டமு மளித்து மாயொளிர்
சோதியே கொன்றையந் தொங்கல் மௌலியாய்
வாதியே மரகதவல்லி யாளொரு
பாதியே புவனமாம் பரமரூபியே."

"பையரா வணிமணிப் பவளமேனியாய்
செய்யவாய் மரகதச் செல்வி பாகனே
ஐயனே சேவடி யடைந்த வர்க்கெலா
மெய்யனே யெங்குமாய் விளங்கு சோதியே."

என்னும் பாரதத்தாலும் சகலமும் வன்னிமயமெனத் தெற்றெனப் புலனாகிறது.

தேவார திருவாசக திருவருட்பாக்களில் பொதிந்து இருக்கும் தெய்வத் திருவருளாளர்கள் அருளியபாக்களில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவோம்:—

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதியே"

"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி

வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி ”

“ வானாகி மண்ணாகி வெளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய் ”

“ வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிருளாயினார்க் * * ”

“ ஒருசுடரா யுலகேழு மானான் கண்டாய் ”

“ சொல்லானைச் சுடர்பவளச் சோதியானை ”

“ விட்டுருவங் கிளர்கின்ற சோதியானும் ”

“ செவிகாள் கேண்மின்களோ—சிவனெம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்—திறமெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ ”

“ எரிசுடராய் நின்ற விறைவா போற்றி ”
நீராகி நீறுமுழு நெருப்புமாகி ”

என்ற திருவாசகங்கள் ஏழுலகங்களும் அக்கிமயமெனத் தெளிவுறுத்துகின்றன. சிவபரஞ்சுடர் தன்மயமாகவே பிரபஞ்சத்தை உற்பத்திசெய்துளார். இந்த வியாசத்தின் தலையங்கத்தில் கொடுத்திருக்கும் காளமேகப்புலவர் பாடலைக் கவனித்தால் நமக்கே ஓர் ஆச்சரியத்தை யளிக்கும். நாம் எல்லோரும் அக்கியின் அம்சமாகிய சிவபரஞ்சுடரின் சேய்கள் என்பதற் கையமுண்டோ ?

ஸ்ரீராமபிரான் ராக்ஷதர்களைக் கொன்றபாவம் நிவர்த்தியாக அக்கியினால் யாகம் செய்தார். பஞ்சவர்கள் தங்கள் பாவம் நீங்க அஸ்வமேதயாகம் செய்தார்கள். ஜெனமேஜெய மகாராஜன் சர்ப்பயாகம் செய்தான். காண்டீபன் காண்டாவனத்தை அக்னிக்கிரையா யளித்தான். தபசிரேஷ்டர்கள் அக்கியின் வலிமையால் சித்தியடைந்தார்கள். நாம் மணம்செய்யுங்காலத்து ஓமம்வளர்த்தி அக்கி சாக்ஷியாக திருமங்கல்யதாரணம் செய்கிறோம். அருணன் ஒளியற்ற காலங்களில் தீபமே உதவிசெய்கிறது. மாரியம்மன் முதலிய உற்சவகாலங்களில் தீச்சட்டி பிரார்த்தனைக்காரர்கள் நெருப்பைப் பிரார்த்தனைக்கு உபயோகம் செய்வதையும், திருக்கழுக்குன்றத்தில் மழுவைத் தழுவுவதும், மகமதியர்கள் தீக்குழி இறங்குவதையும் நோக்கும்போது அக்கி எவ்வளவு முக்கியமானதெனத் தெரியவருகிறது. நம்மை உற்பத்திசெய்ததும் நெருப்பு, நம்மை வளர்ப்பதும் நெருப்பு, நம்மை நோய்நொடிக்குள்ளாக்கிக் கொல்லுவதும் நெருப்பே !

சகோதரர்களே! எல்லாம் நெருப்பின் மயம் என்று சொல்லிவிட்டோம். ஆனால் அநேகருக்கு மேலே செப்பிய விஷயங்களில் சங்கை தோன்றலாம். அக்கி எங்கும் நிறைந்துள்ளதற்கு சில திருஷ்டாந்தங்களைச் சொல்லி அதன் மேல் இவ்வியாசத்தை முடிப்பாம்.

சகலருக்கும் தெரிந்துள்ள உவமானங்களையே, குறிப்பிடுகிறோம். மூங்கில் மரங்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்துகொண்டு தீப்பிடித்துக்கொள்வதைக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். வன்னிமரமும் இவ்விதமே. கற்களை கற்களைக் கொண்டே அடிப்பதினால் நெருப்புண்டாகும். மேகத்திற்கு மேகம் மோதுவதால், நெருப்புண்டாவதையும் இடி மேல்விழுந்து நெருப்புப்பற்றி எரிவதையும் கண்ணுற்று இருக்கிறோம். “ நித்தானுங்கண்ணிலே ” என்றார். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளும்போது சண்டையிடுபவர்களின் கண்ணில் கோபாக்கினியைக் காணலாம். கோபாக்கினி தணல் கொண்டெரியும்.



மன்மதனை ஈசுவரன் கண்ணால் எரித்ததால் அக்கினி கண்ணிலிருக்கிறது. “ நித்தானும் கையிலே” என்றார். இருகரங்களையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து தேய்த்துக் கொண்டிருந்தால் அஸ்தத்தில் நெருப்புண்டாவதைக் காணலாம். தாருகவனத்து ரிஷிகள் ஈசுவரன்மீது விடுத்த அக்கினியை கரத்தில் ஈசுவரன் வைத்திருக்கிறார். “ நித்தானும் உன் சிரிப்பிலே ” என்றார். சிரிப்புகளில் பலவிதமுண்டு. சந்தோஷச்சிரிப்பு, ஆனந்தச்சிரிப்பு, பரிகாசச் சிரிப்பு, காமச் சிரிப்பு, ஒப்புச் சிரிப்பு, பொய்ச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, சீற்றச் சிரிப்பு, முதலியவைகள். இவைகளில் சீற்றச் சிரிப்பினிலேயே அக்கினி நிறைந்திருக்கிறது. சீற்றச் சிரிப்பில் அக்கினி நிறைந்திருப்பதால் பகைகொண்டவரை நாசம் செய்யும். சிவ பரஞ்சுடர் திரிபுரத்தின்பேரில் கோபாவேசங்கொண்டு சிரித்தார். அக்காலத்தில் திரிபுரம் தகனமானது, “ நித்தானும் மெய்யெலாம் ” என்றார். ஒருவனைநோக்கி அடே ! உனக்கு வெட்கமில்லையா ? மானமில்லையா ? ரோஷமில்லையா ? உன்தேகத்தில் குளிர்ந்த ரத்தமா ஓடுகிறது ? என்ற கேள்விகள் அநேகர் கேட்பதுண்டு. இக்கேள்விகளின் உட்கருத்து என்னவென்றால், உன்னிடத்தில் அக்கினி இல்லையா ? என்று கேட்ட கேள்வியேயாகும். ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் அர்ச்சுனனை நோக்கிச் சொல்லுங்காலத்து, “ ஏ, அருச்சுனா! இந்த பேடித்தன்மையை எவ்விதம் கொண்டாய் (குளிர்ந்த ஜலத்தை எவ்விதம் சம்பாதித்தாய்) பகைவரைத் தகிக்கும் அக்கினி உன்னிடமில்லாமலாபோயிற்று” என்று கேட்டனர். நம் தேகத்தில் உண்டாகும் வியர்வை எக்காரணத்தால் உண்டாகிறது என்று கவனித்தால் நம் சரீரத்தில் நெருப்புநிரந்தரமெனத் தெரியவரும். ஈசுவரன் கார்த்திகை மாசத்து பௌர்ணமையன்று திருவண்ணாமலையில் மால் அயன் இவர்களுக்கு மத்தியில் அக்கி ரூபமாக எழுந்தருளவில்லையா ? நாமும் நாளதுவரை கார்த்திகை உற்சவத்தை தீபங்களை வரிசையாகவைத்து அகங்களிலும் ஆலயங்களிலும் கொண்டாடவில்லையா ? மதுரை, திருப்பரங்குன்றம், திருவண்ணாமலை முதலிய ஸ்தலங்களில் கார்த்திகைமாசத்து பௌர்ணையன்று தீப ஒளியால் சிங்காரிப்பு செய்திருக்கும் காட்சியை என் ஒரு நாவால் சொல்லப்போமோ ? ஜனங்களின் திரளைக் கணக்கிட முடியுமோ? ஈசுவரன் தான் அக்கினிமயமெனக் காட்டும் பொருட்டு அக்கியாக காட்சி கொடுத்தனர். ஈசுவரனுக்கு அழலாடி எனப் பெயரும் வழங்குவது இக்காரணத்தினாலேயே.

மானிடனாக உற்பத்தியான ஒவ்வொருவனும், அக்கினியைப் பூஜிக்கவேண்டும், அக்கினியை வணங்கவேண்டும், தீபஒளியைத் தரிசிக்கவேண்டும், அக்கினி வடிவமாகவேண்டும் என்றே நம் வேதம் கூறுகிறது.

வேள்வி செய்யாதவன் சுத்தமில்லாத ஆன்மாவையுடையவனாய்க் கிழிந்த இலைகளைப்போல் விழுந்துவிடுவான் என்றும், யாருக்கு அக்கினி ஹோத்திரமில்லையோ, ஹோமமில்லையோ, அவை அவனுடைய புண்ணியலோகத்தை ஏழு தலைமுறைவரையில் கெடுக்கின்றன.

என்னருமைச் சகோதரர்களே ! அக்கினியின் மகிமையை அறியாமல் கைநழுவவிட்டு புதியநாகரீகமென்னும் மாய்கையைக் கைப்பற்றி யுள்ளீர்கள் தாய்ப் பாஷையை யலக்ஷியம்செய்யும் மதியீனம் ஏன் வந்தது ? விவாகம் செய்யும் பெண்ணின் பெற்றோர்களிடம் வரதக்ஷிணைவாங்கும் காரணம் யாது ? சகோதரர்களே ! விளக்கின் வெளிச்சத்தில் மடியும் விட்டில் பூச்சியைப் போன்று, மேல்நாட்டார்களின் நல்ல கொள்கைகளை அனுசரிக்காமல் அவர்களின் வெளிநடை யுடைபாவனைகளை மட்டும் அனுசரிக்கக் கற்றுக்கொண்டீர்களே ! உங்கள் கோட்பாடுகளை மறந்தீர்களே ! ஐயோ, பரிதாபம் !

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களில் நீங்கள் எதனைக் கைப்பற்றியுள்ளீர்கள் மேல்நாட்டார் எதனைக் கைப்பற்றியுள்ளார்கள் என்பதை கவனித்தீர்களா? சகோதரர்களே! உங்கள் சுயரூபத்தையும், உங்கள் கடவுளையும் மறந்துவிட்டீர்களென்றே சொல்லத்தகும். ஆகவே நீங்கள் பிரிதிவியின் அம்சம் ஒன்றைமட்டும் கைப்பற்றியுள்ளீர்கள். மேல்நாட்டார் அப்பு, தேயு, வாயு மூன்றையும் கைக்கொண்டு ஐந்தாவதாகிய ஆகாயத்தையும் அடைய முயற்சிக்கிறார்கள். "புலித்தோலை போர்த்தியுள்ள பசுவின்" கதை போல் நம்மவர்களில் அநேகர் ஐரோப்பாவின் நடையுடைகளைப்பின்பற்றியுள்ளார்கள். நாகரீகம், கைத்தொழில், கல்வி, என்று அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். சோதரர்களே! நீங்கள் உங்களால் புறக்கணித்து தள்ளப்பட்ட அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய நான்கையும் எக்காலத்தில் திரும்பக் கைகொள்ளுகிறீர்களோ, அக்காலமே நீங்கள் மேன்மையடையும்காலம். அதுவரை நீங்கள் கீழான ஸ்திதியிலேயே இருப்பீர்கள் என்பது உண்மையிலும் உண்மையே.

சகோதரர்களே! உங்கள் மகிமை எல்லாம் போய்விட்டது. அஞ்ஞானம் அதிகரிக்கவே ஒருவனை ஒருவன் மோசம்செய்யவும், திட்டவும், வெட்டிக்கொண்டு சாகவும் நேர்ந்துளது. இப்போது நம் சகோதரர்களில் சிலர் திராவிடக்கக்ஷியார் என்றும், சிலர் சுராச்சியக்கக்ஷியார் என்றும் கிளம்பியுளார்கள். இவர்கள் இருவர் சொல்லும் நியாயங்களிலும் சில நீதியாகவும் சில அநீதியாகவும் உள்ளன. இக்கக்ஷி கிளம்பியதற்குகாரணம் என்னவெனில், பூர்வீகக்கொள்கையைவிடுத்து மேல்நாட்டு வேஷத்தை அணிந்ததே காரணம். நீங்கள் உங்கள் முன்னோர்கள் கண்டு அனுபவித்துவந்ததைச் சொல்லக் கேட்டு மனப்பாடம் செய்துகொண்டு வாய்த் தம்பட்டம் அடிக்கிறீர்கள். உண்மையில் நீங்கள் நமது முன்னோர் வழியில் நடக்கிறீர்களாவென்று மனதாரச் சிந்தித்துப் பாருங்கள்.

சோதரர்களே! நம் தந்தையாகிய சிவபாஞ்சுடரின் சொரூபமாகிய அக்கினியை பயபக்தியுடன் திரிகாலமும் வழிபடவேண்டும். வேள்விசெய்து புசிக்கவேண்டும். நாம் எத்தொழில் செய்தாலும் அத்தொழில்களுக் கெல்லாம் அக்கினியே மூலாதாரமாக இருக்கவேண்டும். வீட்டைவிட்டு நீங்கித் துறவறம் கொள்பவர்கள் அக்கினியை ஆதாரமாகக்கொண்டு தபசுசெய்யவேண்டும். இல்லறவாசிகள் தங்கள் அகத்தில் கனல் கொண்டெரியும் அக்கினியை வணங்கவேண்டும். இவ்விதம் நாம் கைக்கொண்டால் முன்னுக்கு வருவோம். நம்மினும் மேலோங்கியிருக்கும் நாட்டார்களுடைய ஆசாரங்களில் நமக்குத் தகாதவைகளையெல்லாம் பின்பற்றும் கொடிய பழக்கத்தை அடியோடறவேவிட்டு, அவர்கள் எத்தகைய முயற்சிகளால் முன்னுக்கு வந்தார்களென்பதைக் கண்டறிந்து அம்மார்க்கங்களைப் பின்பற்றி நடவுங்கள். ஒருவர்மீதும் குற்றஞ் சொல்லாதீர்கள்.

பிழையுளதேல் ஆன்றோர் பொறுக்க.

எஸ். அமிர்தலிங்கம்.

---

குறிப்பு:—இந்த அருமையான வியாசத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் மிக்க கவனத்தோடு பன்முறை வாசித்து சிந்தித்து உணரத்தக்கவையாகும். இதில் பிரத்தியட்சத்திற்கும் ஜடசாஸ்திரங்கட்கும் பொருத்தமானதோர் பெரிய உண்மையடங்கி யிருக்கிறது. அக்கினியே உலகிற்கு ஆதாரபூதமாயிருக்கிறதென்பதை நமது நண்பர் சமயோசிதப்படி போதியமட்டும் விவரித்துக் கூறியுள்ளாராதலின் நாம் அதிகமாய்க் கூறவேண்டியது அவசியமில்லையாயினும் இரண்டொரு அத்தாட்சிகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம்.



பஞ்சபூதங்களும் எந்த முறையாய் உற்பத்தியாயினவோ அந்த முறைப்படியே யந்தியத்தில் ஒடுங்குகின்றன. ஆதலின் வெளிக்குப் புலப்படும் வரையில் பிருதிவி அப்புவிலும், அப்புதேயுவிலும் ஒடுங்கியபின் தேயுவாகிய அக்கினி வாயுவில் ஒடுங்க வாயு ஆகாயத்தி லொடுங்கிவிடுகிறது. நாம் இதுவரையில் மட்டுமே கவனிப்போம். அக்கினி வாயுவில் ஒடுங்குகிறதெனின் சூக்குமவக்கினியாய் மாறிவிடுகிறது. அதற்கே பிராணவாயு (Oxygen) என்று பெயர். இந்தப் பிராணவாயுவே அதாவது இந்த அக்கினியே யில்லாவிட்டால் உலகம் ஒருவிநாடிகூட நிலைபெறாது என்பது யாவரு மறிந்தவிஷயம். ஜடசாஸ்திரக்காரர் பிராணவாயு அக்கினியல்லவென்று சற்று வித்தியாசமாய்க்கூறக் கூடுமென்றும், இது அக்கினிக்கு உயிர் என்பது பிரத்யக்ஷம். பிராணவாயுவின்றேல் அக்கினி யணைந்துபோம். ஆகையால் பிராணவாயு, தன் சக்தியை வெளியிடாது உள் அடக்கிக்கொண்டிருக்கும் அக்கினியே யாகும். அதனால் அதைத் தொட்டாலும் சுடாது.

இதுமட்டுமல்ல: கட்புலனுக்குத் தோற்றுகிறவரையில் பார்த்தால் உலகில் ஓரறிவுமுதல் ஆறறிவுவரையிலுள்ள சர்வஜீவராசிகளுக்கும் ஜலமே ஜீவாதாரமென்று புலப்படுகிறது. அவ்வாறே ஆன்றோர்களும் கூறியிருக்கிறார்கள்.

அந்த ஜலத்திற்கே அக்கினி யுயிராயிருக்கிறது. பிராணவாயுவும் (Oxygen) ஜலவாயும் (Hydrogen) ஆகிய இரண்டு வாயுக்களின் கலப்பில் ஜலம் உண்டானது. ஆதலால் வாயுரூபமாய் மாறிவிடக்கூடியது. இவ்வாறே யெல்லாபூதங்களும் ஒன்று மற்றொன்றாய் மாறக் கூடியனவே. இதைப்பற்றி பின்னால் கூறுவோம். ஜலத்திலுள்ள அக்கினி அவ்வியக்தமாய் (தன் சொரூபத்தைக் காட்டாது உள்ளடங்கி விடல்) விட்டால் அதாவது அதிலுள்ள உஷ்ணம் எடுத்துவிடப்பட்டால், ஜலம் திரவவுருவம் நீங்கி கல்போன்ற கடினருமாய் மாறிவிடுகிறது. அந்தநிலைமையில் அது ஒன்றுக்கும் பயனில்லை. இறந்தது மாதிரியே. அதில் உஷ்ணம் சாதாரண அக்கினியேயாவது, பிராணவாயுரூபமாய்ச் சாதாரணவாயுவோடு கலந்திருக்கும் அக்கினியாவது, அல்லது வேறு எவ்வித உஷ்ணமாவது தாக்கினாலன்றி (அக்கட்டியிலடங்கியுள்ள சூக்குமஅக்கினி தொழிற்பட்டு) அது பழைய திரவ உருவத்தை யடையாது. இதனால் ஜலத்திற்கே யக்கினி உயிராயிருக்கிறது என்றறியலாம்.

இதை யிம்மட்டோடு முடித்து நமது நண்பர் தமது வியாசத்தின் பிற்பாகத்தில்கூறிய பூதங்களைக் கையாளும் விஷயத்தைப்பற்றி சிந்திப்பாம்:—

பூதங்களில் சூக்குமபூதங்களென்றும் (கண்ணுக்குத் தோன்றாதவை) ஸ்தூலபூதங்களென்றும் இருவகை. சூக்குமபூதங்களிலிருந்தே ஸ்தூலபூதங்கள் உற்பத்தியாயின. இவற்றின் உற்பத்தி பரம்பொருளினிடமுள்ள ஒரு அபின்ன (அக்கினியிற் சூடுபோல் வேறு பிறிக்கப்படாத) சக்தியாகிய மூலப்பிரகிருதியிலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும்—சலனமின்றிய போது ஆகாயமும் சலித்தால் வாயுவுமாகிறது—வாயுவிலிருந்து அக்கினியும்—அக்கினியினின்று அப்புவும்—அப்புவினின்று பிருதிவியும் உண்டாயினவென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த உற்பத்தி வியாப்பிய வியாபக சம்பந்தம். அதாவது ஒன்றுக்குள் ஒன்றடங்கி முடிவில் யாவும் பெரிய பாத்திரத்தி லடங்கும் அடுக்குப்பாத்திரங்கள் போல். பெட்டிடப்பி யிருக்கிறது—டப்பி வியாபகம்—அதற்குள்ளடங்கியிருக்கும் பொடி வியாப்பியம். கடலிருக்கிறது—கடல் வியாபகம்—அதில் நிறைந்துள்ள நீர் வியாப்பியம். அந்த நீர் வியாபகம்—அதில் அடங்கியிருக்கும் உப்பு வியாப்பியம். இப்போது வியாபக வியாப்பிய மென்பது இன்னவிதமென்று நண்பர்கள் அறியலாகுமென நம்புகிறோம். ஒவ்

வொருவருள்ளத்திலும் ஆண்டவனிருக்கிறானென்ற வுண்மையில் ஜீவனுக்கும் ஆண்டவனுக்குமுள்ள சம்பந்தமும் இவ்வாறே. அதனால் தான் பாலில் நெய் கலந்திருப்பதுபோல் ஆண்டவன் நமக்குள்ளாகவே மறைந்திருக்கிறான் என்றும்—உள்ளத்திலேயே அவனைக் கண்டறியவேண்டுமென்றும் ஆன்றோர் கூறியுள்ளார்கள்.

"விறகிற் றீயினன் பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுக்கோல்நட்டு உணர்வுக்கயிற்றினால்
முறுகவாங்கிக்கடைய முன்னிற்குமே."

என்று தேவாரத்திலும்,

"கெடாதசிற்கண்ணு நீதான்
கிளர்மே லவர்களுடனே தான்
விடாதிவ்வுலகே தயாமாறென்று
விசாரிக்கமெல்ல உடன்பாடாய்
தடாதவுட்பொருள்தேர் வித்தைக்கு
விசாரந்தானே தனிஞானம்
கிட்டாவியறியத் தக்கதிற
காணும்பாலின் மதுரம்போல்."

என்று ஞானவாசிட்டத்திலும் கூறப்பட்டிருப்பதே சான்றாகும். அஞ்ஞான காலத்தில் ஜீவன் வியாபகமாகவும் பரமான்மா வியாப்பியமாகவும் இருக்கின்றன. ஞானமடைந்தபோது பரமான்மா வியாபகமாகவும் ஜீவன் வியாப்பியமாகவும் ஆகிவிடுகின்றன.

இந்த வியாபக வியாப்பிய சம்பந்தத்தால்தான், ஆகாயத்திலுண்டான வாயுவில், வாயுவின் குணத்தோடு ஆகாயத்தின் குணமுமடங்கியிருக்கிறது. வாயுவிலுண்டான அக்கினியில், அக்கினியின் குணத்தோடு மேற்கண்ட ஆகாயம், வாயு இரண்டின் குணங்களும் சேர்ந்து 3 குணங்களிருக்கின்றன. இவ்வாறே ஜலத்தில் 4 குணங்களும், பிருதிவியில் ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு 4 குணங்களோடு பிருதிவியின் குணமும் சேர்ந்து 5 குணங்களடங்கியிருக்கின்றன. இந்தப் பொருளை நமது நண்பர் மேலே கூறிய,

"பாரிடைஐந்தாய்ப் பரந்தாய்போற்றி
* * * * * *
வெளியிடையொன்றாய் விளைந்தாய்போற்றி."

என்ற திருவாசக அகவலில் அடங்கியுள்ளது.

மேற்கண்டவாறு உற்பத்தியான சூக்குமபூதங்களிலிருந்தே கண்களுக்குத் தோன்றும் ஸ்தூலபூதங்கள் தோன்றின (வாயுமட்டும் ஸ்பரிசத்தால் உணரத்தக்கது). இவையுண்டாகிய முறையை கைவல்லியத்தின் முதற்படலத்துள்ள "ஐந்துபூதமும் பத்தாக்கி * * *" என்ற தொடக்கத்தையுடைய பாவினால் அறிந்துகொள்ளலாம். அதனால் ஸ்தூலபூதங்களில் ஒவ்வொன்றிலும் ஐந்து ஐந்து சூக்குமபூதங்கள் கலந்தேயிருக்கின்றன வென்பது நன்குவிளங்கும். எந்த அளவில் எனில், ஸ்தூலபூதமாகிய பிருதிவியில் சூக்குமபூதமாகிய பிருதிவியில் அரையங்கும் மற்ற நான்குபூதங்களில் ஒவ்வொன்றில் அரைக்கால்பாகமும் அடங்கியிருக்கின்றன. இவ்வாறே ஒவ்வொரு ஸ்தூலபூதமும், சூக்குமபூதங்களில் தன் இனம் அரைபங்கும் மற்ற நான்கு சூக்குமபூதங்களிலும் ஒவ்வொன்றிலும் அரைக்கால் பங்கும் சேர்ந்தே உண்டானது.

இப்போது இப்பூதங்களின் உற்பத்தியைப்பற்றி யிவ்வளவு விரிவாய்க்



கூறியதேனெனில், இந்த விவரத்தால் இப்பூதங்கள் ஒன்று மற்றொன்றாய் மாறும் இயல்புடையன வென்பது நன்கு விளங்குகிறதெனக் காட்டும் பொருட்டேயாம்.

இப்போது மேல்நாட்டார் பூதங்களைக் கையாளுகிறார்கள் என்று நமது நண்பர் கூறியது ஸ்தூலபூதங்களையேயாகும். அந்தோ, நமது முன்னோர் சூக்குமபூதங்களையே கையாளும் சக்தியுடையோர். ஸ்தூலபூதங்களைக் கையாளுவது அவ்வளவு கஷ்டமாகாது. இப்போது நாம்கூட சாணியை யொருபாண்டத்தில்போட்டு பூமியிற் சிலகாலம் புதைத்துவைத்தால் அதில் கருந்தேள்கள் உற்பத்தியா யிருக்கக்காணலாம். சாணியோடு பழங்கோணியை நறுக்கிக் கலந்து அவ்வாறே புதைத்துவைத்தால் கட்டுவிரியன் பாம்புகள் உற்பத்தியாயிருப்பதையும், எள்ளுச்செடிகள் உலர்ந்தவற்றை மக்கவைத்தால் எண்ணெய்ப் பனையன்கள் என்ற கொடிய விஷப்பாம்புகள் உண்டாயிருப்பதையும் காணலாம். ஆனால், சாணியையும், கோணியையும், எள்ளுச்செடியையும் சிருட்டிக்க நம்மாலாகுமா?

நமது முன்னோர் ஒரு பூதத்தை மற்றோர் பூதமாய் மாற்றவும் இன்னும் பல அற்புதங்களைச் செய்யவும் வல்லவர்கள். உலகில் வேறொருவராலும் அறியக்கூடாத விஷயங்களை யெல்லாம் கடவுளுக்கு இரண்டாவதாய் அவர்களறிந்தவர்கள். தங்கள் ஆயுளையே விர்த்திசெய்துகொண்டு இன்னும் அநேகம்பேர் உளர். அவர்கள்வழியே வந்துகொண்டேயிருப்போரும் உண்டு. அவர்கள் தங்கள் ஸ்தூலதேகத்தையே காற்றினும் சூக்குமரூபமாய் மாற்றி காற்றுபுகாத ஒரு கட்டிடத்திலிருந்து நினைத்தமாத்திரம் வெளிப்பட்டு ஒருநொடியில் பல்லாயிரம் மைல்தூரம் சென்று மறுபடி முன்போல் ஸ்தூல உருவமாய் மாறிவிடுவார்கள். இவை யாவும் அட்டமாசித்திகளிலடங்கும்.

அந்தோ! நமது நண்பர்கூறியபடி நம்மவர் இதையெல்லாம் அடியோடு மறந்து தன்னிடமுள்ள தங்கத்தைக் கவனியாது எதிரிலிடமுள்ள இரும்பைக் கண்டு அதை யுயர்வாய்மதித்து அதற்காசைப்படுபவன்போல் நடந்துகொள்கிறார்கள். இதைச் சிந்திக்கும்போது யாருடைய மனந்தான் புண்ணாகி வெதும்பி வேதனைப்படாது! இப்போது மேல்நாட்டார் கஷ்டப்பட்டு புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு அபூர்வசாத்திர விஷயங்களும் நமது முன்னோரால் பல்லாயிர வருடங்களாகவே அறியப்பட்டிருக்கின்றன வென்று சொல்லும் நமக்கு அறிவு உதியாதிருப்பது என்ன பரிதாபமான விஷயம்! கருணாநிதியாகிய பரஞ்சுடர் சீக்கிரத்தில் நமது மயக்கத்தை நீக்கி நம்முன்னோரின் உண்மையையும் மகிமையையும் உணர்ந்து அவர்கள் தெய்வவாக்குகளை நம்பி அவ்வழியே சிரத்தையோடும் சுறுசுறுப்போடும் ஊக்கத்தோடும் சென்று இருமைப்பயனையும் அடையும்வண்ணம் அருள்செய்ய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## நித்தியவிதி—மத்தியான்னம்.

(136-ம் பக்கத் தொடர்ச்சி)

பகல் பன்னிரண்டு நாழிகைக்குமேல் ஆறு நாழிகையாகிய கால அளவை மத்தியான்னம் என்னப்படும். இக்காலத்திற்செய்யவேண்டிய கிரியைகள் அதிக சிறப்புடையன. பிராதக்காலத்தில் ஸ்நான ஜபாதிகிரியைகளைமுடித்து, முற்பகலில் லௌகிகவிருத்திகளைக் குறைவறச்செய்து மனத்திருப்தியுடன் மனைக்குத் திரும்பிவரும் ஆடவனால் மத்தியான்னத்தில் மாத்தியான்னிக சந்தியோ

பாசனை, பஞ்சமஹாயக்ஞம், தேவதார்ச்சனை, அதிதிபூஜை, தன்னை யடுத்திருக்கும் பரிசனங்களை ஆகாரத்தால் போஷித்தல், இறுதியில் தன்னைப் போஷித்தல் முதலியவை செய்யப்படுகின்றன. இப்பொழுது மாத்தியான்னிக ஸ்நானம் விதிக்கப்படுகிறது. இந்த ஸ்நானம் நித்தியம் அல்ல. காலையில் நீராடிய ஆடவன் அதுமுதல் வெளியிற் போகாமலும், ஒருவரையும் தொடாமலும், பாபிகளைப் பாராமலும், அவர்களுடன் சம்பாஷியாமலும், அவர்களுடைய நிழலை மிதியாமலும் இருப்பானானால் அவனுக்கு மாத்தியான்னிக ஸ்நானம் அனாவசியமாம். மேற்குறித்தவாறு செய்யாது அசுத்தப்பட்டிருந்தால் அவனுக்கே இந்த மாத்தியான்னிக ஸ்நானம் விதிக்கப்படுதலால் இது நைமித்திக ஸ்நானமேயாம்.

இந்த ஸ்நானத்துக்கு வெய்யிலேபடாமல் குளிர்ந்திருக்கும் ஜலமும், அக்கினியால் கொதியாக்கப்பட்டு அதிகமான சூடுகொண்ட வெந்நீரும் ஆகாது. ஏனெனில் இப்போது சூரியன் அதிக உக்கிரமானகிரணங்களை வீசுவதால் அக்கிரணவெப்பத்தை யடைந்த சரீரம் குளிர்ந்திருக்கும் ஜலத்தில் முழுகுவதால் குளிர்ச்சியையடையும். அதனால் பிராணாக்கினி பலம் குறையும், மந்தப்படும், வாதம்மேலிடும், இரத்தம் உறையும், அதுபற்றிப் பல வியாதிகள் உற்பத்தியாம். உண்ட உணவு சரியாய் ஜீரணமாகாது. உணவு ஜீரணிக்காமற்போனால் உண்டாகும் கெடுதி யாவரும் உணரக்கூடியதே. ஆதலால் முற்றும் குளிர்ந்திருக்கும் நீரில் ஸ்நானம்செய்தல் விலக்கப்பட்டது. உஷ்ணமான வெந்நீரில் ஸ்நானம் செய்தால் ஏற்கனவே சூரியகிரணங்களால் வெதுப்பப்பட்ட சரீரம் அதிக உஷ்ணத்தை யடையும். அதனால் நரம்புநாடிகள் மெலிந்து தளர்ச்சியடையும். அடையவே உட்கருவிகள் பலஹீனப்படும். சரீரக்கட்டு தளர்ந்து சதை தொங்கும், தொந்தி சரியும்; அறிவிலாப்பேதையர் இவ்வாறு உண்டாகும் கெடுதிகளையுணராமல் சரீரம் பருத்துப் புஷ்டியடைந்ததெனக் கருதி மேலும் மேலும் வெந்நீர் ஸ்நானத்தையே அதிகமாக விரும்புவாராயினர். அந்தோ! பாவம்! இவ்விதம் பருத்ததுபோற் காணப்படுவதும் ஓர்விதத்திரையே யென்று உணர்ந்தார்களில்லை. இந்த வெந்நீர் ஸ்நானத்தினால் உட்கருவிகளும் புறக்கருவிகளும் தளர்ச்சியடையவே அஜீர்ணம் மலச்சிக்கலாதிப் பல நோய்களுக்கிடனாய் ஆயுளும் குறையும்; தாது க்ஷீணித்துவிடும். அதனால் உலக இன்பானுபவமும் குறையும் என்பதைப் புத்திமான்கள் உணராதிரார். நிற்க:

இப்போது ஓடுகிற ஆறு குளங்களிலேயே ஸ்நானம் விதிக்கப்பட்டது. அந்த நீர் சூரியகிரணங்களால் மேற்புறம் உஷ்ணமாயும், அடிப்புறம் குளிர்ச்சியாயும் இருக்கும். அதனால் தண்ணீரின் மேற்புறத்திலுள்ள தண்ணீரின் குணம் உட்புறம் அழுந்திச்செல்லும். அடியிலுள்ள தண்ணீரின் குணமாகிய அமிர்தத்தன்மை சூரியவெப்பத்தால் மேல்நோக்கி யெழும். அதனால் இருவகைக் குணங்களும் ஒன்றுபடும். அந்தத் தண்ணீர் யாதொரு தீங்கும் செய்யாது. ஆதலால்தான் சூரியகிரணம் நன்றாய் படக்கூடிய ஆறுகுளங்களே மத்தியான்ன ஸ்நானத்துக்கு விதிக்கப்பட்டது. முன் ஸ்நானபேதங்களில் கூறிய மிருத்திகா ஸ்நானமென்பது இப்பொழுதுதான் செய்யத்தக்கது. ஆதலால் மிருத்திகாஸ்நானமும் நித்தியமன்று. வெளியிற்சென்று வருவதாலுண்டாகும் வெயர்வையின்கொடுமை தணியவும், நீசர்கள் பாபிகள் முதலியவர்களைத் தொடுவதனாலுண்டாகும் தீமைகள் ஒழியவுமே மிருத்திகா ஸ்நானம் உபயோகப்படுவதால் இதுவும் நைமித்திக ஸ்நானமே. இக்காலத்தில் அந்தணர்க்கு அகமர்ஷண ஸ்நானமும் விதிக்கப்பட்டது. அதாவது சிறிதுநேரம் தண்ணீருக்குள் முழுகியிருந்து அகமர்ஷணம் என்ற வேதமந்திரத்தை ஜபிப்பதாம். இதுவும் ஒருவகைப் பிராணாயாமமேயாம். இவ்வகையாக ஸ்நானம்செய்தபின் காலை



விதியிற் கூறியபடியே சுத்தவஸ்திரந் தரித்துத் தத்தம் மதக்கொள்கைக்குத் தக்கவாறு ஊர்த்துவபுண்ட்ர திரிபுண்ட்ரங்களைத் தரித்தல்வேண்டும். உடனே அந்தணர்கள் மாத்தியான்னிக சந்தியை முடித்துக் கூடிய அளவு காயத்திரி மஹாமந்திரத்தை ஜபித்து, உபஸ்தானமந்திரத்தினால் சூரியனை யாராதிக்க வேண்டும். பிறகு பிரமயக்ஞம் என்ற ஒருதர்ப்பணம் அந்தணர்க ளியற்றவேண்டிய அவசியம் உண்டு. தம்மை அனுக்கிரகிக்கவேண்டிய தேவர்கள் ரிஷிகள் பிதுர்க்கள் இவர்களைத் தர்ப்பணத்தால் திருப்தி செய்வித்து வழிபடுமுறைமையாம். மற்றைய வருணத்தார் தமது குருமுகத்தால் உணர்ந்தவாறு நடக்க வேண்டும்.

இதற்குமேல் தேவாராதனை யென்ற சிறந்த கிரியை ஒன்றுண்டு. இது மஹா சிறப்புடையது. வைதிககன்மங்கள் எல்லாம் செய்துமுடித்தபின் இது செய்யப்படுவது. ஏனெனில் அக்கன்மங்களில் மந்திரலோபம் தந்திரலோபம் முதலியக் குற்றங்கள் நம்மையறியாமலே நேரிடக்கூடும். அக்குறைகளை நீக்கியருள்வது சர்வஜ்ஞகாரணனாகிய பிரமாவுக்கேயன்றி மற்றவர்களால் முடியாது. ஆதலால் கன்மபூர்த்திசெய்து, சித்தசுத்தியளித்து, ஞானத்தைக்கொடுத்து, எங்கும் நிறைந்த பரிபூரணனாந் பரம்பொருளை யிதயாந்தரத்தில் தரிசிப்பித்துப் பாசபந்தங்களைந்து மோட்சானந்தத்தைத் தந்தருளும்படி யிறைவனை ஆராதிப்பது பரமோத்தமமாகும். இந்த ஆராதனையை நமது ஆரியோத்தமர்கள் தமது தபோமகிமையாற் கண்டறிந்து யாமெல்லாரும் கரையேறும்படி அதற்குரிய விதிகளைத் தமது சிஷ்யவர்க்கத்தாருக்கு அனுக்கிரகித்தார்கள். அது பரம்பராக்கிரமமாக நமது பாரதவருஷத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. தேவபூஜைகளில்லாத வீடுகள் நமது நாட்டில் காணப்படுவதரிது. தேவதாபூஜையின்றி ஒருவரும் புசிக்கமாட்டார்கள். இதனாலுண்டாகும் பயன் அளவு கடந்தது. அநாரியர்களும் பற்பல மதவாதிகளும் தோன்றிய இக்கலி காலத்தில் தேவாராதனை முறைமையும் மறந்து கைவிடப்பட்டது. கலியின் கொடுமையை வெல்ல எவராலாகும். எல்லையற்ற மகிமையையுடையதும் அளவற்ற பயனளிப்பதுமான இந்தத் தேவாராதனை சிறிதும் பயனற்றது என்று இக்காலத்தில் பற்றற ஒழிக்கப்பட்டது. இத்தேவாராதனை நடத்தப்பட்டுவந்த முற்காலத்தில் கொள்ளைநோய்முதலிய கொடியவியாதிகள்காண்பதரிது. இந்தத் தேவாராதனை கைவிடப்பட்ட இக்காலத்தில் இன்னதென்று பெயர்கூற முடியாத பற்பல நோய்கள் உற்பத்தியாய் உலகத்தைப் பாழ்படுத்துகின்றன. இவையெல்லாம் கலிமஹாராஜனுடைய அதிகாரத்தின் கொடுமையென்று ஒழித்துவிட்டு மேலே சொல்வோம்.

விஷ்ணுவைத் தெய்வமாகவும், தேயுவைப் பூதமாகவும், சத்வ சிவத்தைக் குணமாகவும்கொண்டு சூரியகிரணம் நிறைந்திருக்கும் இக்காலத்தில் தேவனை யாராய்ந்ததேயுசிதம். தேவனை விக்கிரகத்திலும், பாணலிங்கம், சாளக்கிராமங்களிலும் ஆராதிக்கவேண்டும். பார்த்தலிங்க பூஜையென்று ஒன்றுண்டு. அது சந்தனம், மண், மணல்முதலியவற்றில் மஹாதேவனை ஆவாஹனம்செய்து பூசித்தல். இந்தத் தெய்வவழிபாட்டினால் ஒருவன் தன்னையும், தன்பரிசாரர்களையும், மனைவிமக்கள் மாதாபிதா முதலிய பந்துக்களையும் பரிசுத்தமாக்கி நற்கதிபெறச் செய்கிறான். இம்மட்டோ! வீட்டுப் பிராணிகளாகிய காக்கை நாய் குருவி பூனை எறும்பு முதலியவற்றையும் புனிதமாக்குகிறான். இதைப்பிறகு கூறுவோம். காலையில் எழுந்திருந்து புதியபசுவின் சாணத்தைக்கொண்டு பூஜாகிரகத்தைமெழுகிச் சற்று ஈரம் புலர்ந்ததும் மறுசருகனையிட்டுச் சுதுபோக்கி திருவலகுகொண்டு குப்பையை விலக்குவதும், பூஜாபாத்திரங்களைச் சுத்திசெய்வ

றும், கோலமிட்டு அலங்கரிப்பதும், தேவாராதனத்துக்கு வேண்டிய மலர்களைச் சேகரிப்பதும், சந்தனமரைப்பதும், நைவேத்தியத்துக்குரிய அன்ன முதலியவற்றைச் சித்தம்செய்வதும், அபிஷேகத்துக்கென்று நீர்கொட்டிச் சுத்தப்படுத்தி வைப்பதும், ஆகிய இவைகளெல்லாம் மக்கள் மனைவி சகோதரர்கள் பரிசாரகர் இவர்களுடைய வேலைகளாம். இவர்கள் எல்லாரும் விதிப்படி ஸ்நானம்செய்து பரிசுத்தர்களாய் இக்காரியங்களைச் செய்கின்றார்கள். இவற்றைச் செய்யும்போது தெய்வசிந்தனை யுண்டாகின்றது. தெய்வத்தினிடத்தில் பயபக்தியுண்டாகின்றன. ஆதலால் எல்லாருமே தேவாராதனை செய்தவர்களாகிறார்கள். பரிசாரகர்களில்லாதவீட்டில் மனைவிமக்களே எல்லாக்காரியங்களையும் செய்கிறார்கள். ஆதலால் தேவாராதனைசெய்யும் வீட்டிலுள்ள சகலரும் ஈசனை வழிபடுகிறார்கள் என்பது திண்ணம். தன்வீட்டை அடுத்த இடங்களில் வாழும் பாமரர்களையும் பாவிகளையுங்கூடப் புனிதமாக்கும்.

இப்பூசை வியக்தம் அவ்யக்தம் என இருவகைப்படும். கரசரணாதி அவயவங்களுடையதாகக் கற்பிக்கப்பட்ட விக்கிரக சொரூபத்தில் ஈசனை ஆவாகனம் செய்து பூசிப்பது வியக்தபூஜை எனப்படும். பாணலிங்கம் சாளக்கிராமங்களில் செய்யப்படும்பூஜை அவ்யக்தம் என்னப்படும். இவ்விருவகையுள் அவ்யக்த பூஜையே மிகவும் சிலாக்கியமானது. வியக்தம் அவ்வளவு சிறப்புடையதல்ல என்பர் நூலுணர்பெரியோர். என்னென்றால் விக்ரகம் பஞ்சலோகக் கலப்பினால் செய்யப்படுவது. அதனிடத்தில் லோகசக்தியும் பஞ்சலோகக்கலப்பினாலுண்டான மின்சாரச்சக்தியும் உண்டு. அதனிடத்தில் இதயாரவிந்தத்திலுள்ள பரமாத்மாவை ஆவிர்ப்பிக்கச்செய்து அபிஷேகாதிகளாலுபசரித்துப் பூஜிக்கவேண்டியது. இவ்வாறு விக்கிரகத்தில் பூசிப்பதினால் பயனில்லையென்று கருதுவாருமுண்டு. அது தவறு. எவ்விடத்தில் மின்சாரசக்தியுண்டோ அவ்விடத்தில் ஆகர்ஷணசக்தியுமுண்டு. பரிசுத்தமான இதயதாமரையில் வசிக்கும் ஈசனை முதலில் மானசிகமாகப்பூசித்து ஆராதித்துப் பின் பிராணாயாமபலத்தால் அம்மூர்த்தியை எதிரிலிருக்கும்பிம்பத்தில் வேதமந்திரபூர்வமாக ஆவாகனம் செய்யும்போது, அம்மந்திரதொனியின் வழியாகப்பிரமா அவ்விக்கிரகத்தில் ஆவிர்ப்பவிப்பர். பஞ்சலோகத்தாலியன்று மின்சாரத்துடன் கூடியிருக்கும் அந்த விக்கிரகமும் அந்தத் தொனிவடிவமான பரமான்மாவைத் தன்னிடம் ஆகர்ஷித்துக் கொள்ளும் என்பது பதார்த்தகுணமுற்றும் கசடறத்தேர்ந்த நமது முன்னோர்களின்கருத்து. இதனை யிங்கே விரிக்கப்புகின் மிகவிரியுமாதலால் வேறிடத்தில் விரிப்போம். ஆவாகன முறைமையால் விக்கிரகசொரூபத்தில் ஈசன் எழுந்தருளி நாம் செய்யும் ஆராதனையை அவசியம் ஏற்றுக்கொள்வார் என்க. இத்தகைய விக்கிரகத்துக்கு அபிஷேகஜலத்தை உட்கொள்ளுதலாலும், சிரமேற் புரோக்ஷித்துக்கொள்வதாலும், அதற்குச் சாத்தின சந்தனபுஷ்பங்களைத் தரித்தலாலும் மிக்க பயனுண்டென்றே கருதுக. அந்தப் பகவானுக்கு நைவேத்தியம் செய்த நிர்மாலியத்தைப்புசிப்பதால் பூஜாகைங்கரியத்தில் சம்பந்தப்பட்டவரும் சம்பந்தப்படாதவரும் புனிதமாவார்களென்க. ஆயின் விக்கிரகவழிபாடு பாணலிங்கமுதலியவற்றைப்போல அவ்வளவு சிறந்ததல்லவென்பது எதனால் எனின், பால், நெய், தேன் முதலிய வஸ்துக்களை அடிக்கடி அந்த விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்யக்கூடாது. பால் தயிரோடுகூடிய அபிஷேகநீர் சிறிதுகளிம்பு பெறும் ஆதலால் அவ்வளவு சிலாக்கியமில்லையென்றது. அன்றியும் நம்மாற் கற்பிக்கப்பட்ட சொரூபத்தில், பூஜைசெய்பவனுடைய மனோபாவம், பக்தி, சிரத்தைமுதலியவற்றுக்குத் தக்கவாறு, ஈசனது விளக்கமும் ஏற்றத்தாழ்வாகவே யிருக்கும். சிலகாலம் பூசைசெய்யாமலிருந்தால் அதன் சக்தியும் குன்றும்;



அப்போது மறுபடியும் அபிஷேகமுதலியவற்றாலும், மந்திரபலத்தாலும் சக்தியை உண்டாக்கியே பூசிக்கவேண்டும்.

பாணலிங்க சாளக்கிராமங்கள் ஒருவராலுண்டாக்கப்படாமல் சுயம்புவாய்த் தாமாகவே யுற்பத்தியாவன. அவற்றினிடம் இயற்கையிலே சர்வசக்திகளும் அமைந்திருக்கின்றன. அவற்றில் ஈசனை ஆவாஹனம்செய்து பூசிப்பதில், நெய், தயிர், பால், பழங்கள், இளநீர், சந்தனக்குழம்பு, சங்கத்திலூறிய நீர், எண்ணெயாதிகளை அபிஷேகம் செய்யலாம். திரவியபட்டை கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரமும் அபிஷேகதிரவியங்களாகும். (தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்,

---

## இன்சொல்

இன்சொல்லென்பது, இனிமை+சொல், எனப் பிரிவுபெற்ற ஓர் சொற்றொடர். இனிமையான வார்த்தையெனப் பொருள்படுவதாகும். நம் முகத்தின் சாயலைப் பளிங்கால் நாமே காணலாமென்றிருக்க, நம்மனப்பான்மையை முகச்சாயலும் நம் நாவுரையுமே பிறர்க்கு நன்குபுலப்படுத்துமென்பது வுண்மை. நாம் விசனிக்குங்கால் முகம்வாடி நாவுரைதேம்பவும், மகிழுங்கால் முகம்மலர்ந்து நாவுரை அன்புடைத்ததுமே யியல்பு. பிறரைக் கோபிக்க வன்குரல் பெருகிய மொழிகளே முன்வந்துறும். அஃதும் விசனத்தின் சிற்சொரூபமேயாம். மாறாக கர்வம்பற்றற நீங்கியமனத்தான் எஞ்ஞான்றும் அன்பார்ந்த அரும்பெரும் மெல்லியமொழிகளே வெளியிடுவான். இதனையே இன்சொல்லெனப்படும். ஆகவே இன்சொல்லென்பது அன்புடையார்மாட்டு தோன்றும் உளநெகிழ்ச்சியைத் தெரிவிப்பதான இன்ப வாய்மொழியாம்.

நம்வார்த்தையிலே பிறர் துன்புறவும் சிலகால் அவரே இன்புறவும் இருவகைத் தன்மை பெறப்படுதல்பற்றி அஃது அவ்வளவு பெருமை சிறுமையுடைத்தா யிருக்கின்றதென உணரலாகும். அன்பு, சாந்தம், உண்மை முதலிய நற்குணங்களமைந்து நம்வார்த்தை மிக அழகாயிருத்தல் வேண்டுமென்பதே முறையாயிருக்க, அதனைக் கைப்பற்றாது பிறர்க்குத் துன்பந்தருதலும், கோபம் மூட்டலும், பொய் விளைதலுமாகிய சொற்களைப் பிதற்றுபவன் தர்மநீதி தவிர்ப்பவனாவன். தன்னைப்போல் பிறரையுங் கருதவேண்டுமென்பதே தர்மநீதியாயிருக்க, அதனைத்தவிர்த்து பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் கடுஞ்சொல்லினாலே யாதேனும் பயனுறுமோ! இம்மையில் அபகீர்த்தியையும் மறுமையில் பாவத்தையுந் தரக்கூடிய இவ்விழிகுணத்தைத் தவிர்த்து என்றும் மேம்பாடுடையதான இன்சொல் பழகுவதே அழியாப்புகழும் நன்மையும் தந்து மறுமையில் புண்ணியத்தை விளைவிக்கும் ஓர் அருமைக்குணம். இதனையே தமிழ்வேதமாகிய திருக்குறளும்,

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

என ஓதினமைகாண்க. ஆகவே நம்வார்த்தையிலே எவ்வளவு மனோசுத்தமும் வேண்டுமென்பதை நாம் உற்றுணரவேண்டும்,

காமவெகுளி மயக்கந்தோன்றும் இளமைப்பருவத்திலேயே நம் சிறுவர் மெல்லியமொழி பழகுங்கால் அஃதாம் வயது முதிரமுதிர அம்முதிர்ச்சியிலே இன்சொல்லாய் மாறுபட்டு நிற்கும். சிறுவர்மனமோ நிழற்றுக்கண்ணாடி (Photograph) போன்றது அவ்வா எத்தகை வழக்கத்திற் குட்படுத்துகிறோ

போ அதனையே அவர்களும் பின்பற்றுவர். அன்புகொண்ட வசனங்களையே நாம் பேசுங்கால், அஃதும் சிறுவரிடம் வேறன்றி அதனையே அவரும் பழகி தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பதற்கிணங்க என்றும் இன்சொல்லே புடைத்தவராவர். அவரும் இவ்வினியகுணத்தைப் பள்ளிக்கூடச் சிறு வயதிலே பழகி மேன்படுமன்றே. 'ஞயம்படவுரை, நேரோரயினுந் தாழவுரை, கடிவதுமற வெட்டெனப் பேசேல், சுளிக்கச்சொல்லேல்,' எனும் நம் மூதாட்டியார் நன்மொழிகளை நாடோறும் ஓதி வருகின்றனர். இஃதும் நம் அருமைத் தமிழ் ஓதும் சிறுவர்கள் யாரேனும் உரையாததன்று. இவ்வரிய வாக்கியங்களை வாலிப தசையிலேயறிந்து அரும்பெரும்பொருளையும் உணர்ந்துள்ள நாம் வயதுமுதிர, கற்றதனை நிலை நிறுத்தாது அறிவொளி மழுங்கியழிவது அறியாமை யன்றோ. இவ்வறியாமைக்குணம் ஆணவம் வாய்ப்பட்டு நிற்றல் பற்றியே நம் முதுமைப் பருவத்தில் அக்குணம் நம்மைப் பொதிந்து நிற்கின்றதேயாம். செல்வம், கல்வி, உத்தியோகம் வாய்ந்த சில மக்களிடத்து ஆணவமெனும் விதை மனம் புக்க, முறையே கருவமெனும் முளைதோன்றி வன்சொல்லெனும் நச்சு மரம் கிளம்பி துன்பமெய்துவிக்கும் நச்சுக்காய்கனி வர்க்கங்களையளிக்குந் தன்மையை உணருங்கால், அதற்குக் காரணம் அவரிடத்து அறியாமை யெனும் வேறன்றி இலதே யென விளங்குகிறது. எல்லா ஜீவராசிகளும் ஆனந்தமே நாடி நிற்குமியல் புடைத்தல் பற்றி ஒருவன் வன்சொல்கூறி மகிழவும் மற்றவன் அதைக்கேட்டு வருந்தவும் நடந்துகொள்வதழகாமோ. 'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்'—எனும் வேதமொழி கற்றவர்க்குரித்தானதேயாம். இன்சொல்லும் தருமத்தின் கண்ணுள்ளதேயாமென விளங்குகின்றது. விருந்தோம்புவார்க்குரித்தான இன்சொல்லைக் குறித்து, ஆன்றோர் மொழிந்தபடி விருந்தினரைக் கண்டுழி குளிர்ந்தமுகமும், இன்சொல்லும் அன்புடைமையும், உடைத்தாயிருக்கவேண்டும். அன்றேல் அவரும் வாடி நீங்குவார் என்பதுண்மை.

'இன் சொலி ராமன் யிம்பரோனுலை செய்துன்ப மொழியே புகன்றான்' என்ற புராண கதையில் பரசுராம ரடைந்துள்ள மானக்கேடும் நாம் அறிந்ததேயாம்—ஆனதுபற்றி, ஆணவம் பொதிந்த அறியாமையினாலே வன்சொல் வழங்கி பாழ்பட்டழிவது பரிதாபமன்றோ. இது நிற்க:

அன்பைக் காரணமாகவுடைய இன்சொல்லும் அதனை வகுத்துரைக்கும் நம் தமிழணங்கும் வருமைப்பட்டு தெய்வீக வுண்மை பெற்றதேயாம். விரிவுரைக்கின், தமிழ் என்றால் இனிமை என்பது பொருள். தமிழ்ச்சொல்லென்றால் இனிமையான சொல்லெனப் பொருந்தும். ஆகவே இன்சொல், தமிழ்ச் சொல்லென்பது பொருளில் மாறுபடுவதில்லை. நம்மைப் பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததும் இத்தமிழேயாம். அப்பா, அம்மாவென்ற குழவிகள் வாய்ச்சொல்லும் இத்தமிழ் இனிமையிலேயே பிறந்து மெல்லோசையிலேயே வளர்ந்தன. இத்தகைய வினிமை, மெல்லோசை வாய்ந்த பிறபாஷைகள் காண்டலரிது. மெல்லோசை யின்பம் நம் தமிழ்ப்பாஷைக்கே உரித்தாகும். அஃது இப்பாஷையின் தெய்வீக வுண்மையினை விளக்குவதென்று காட்டிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களின் நல்லுரையே இங்குரைப்ப மிகச்சான்றாம்.*

"உலகத்திலுள்ள சப்தபேதங்களையெல்லாம் வகுத்துப்பார்த்தால் அவை வல்லோசை மெல்லோசை குறிப்போசையென மூன்றாயடங்கும். ஒருவன் மிகவுங் கோபங்கொண்டு பேசுவனாயின் அவன் அப்போது மிக உரத்துக்

* இவை ஞானசாகரமெனும் பத்திரிகையில் வெளிவந்தன. - இங்கு எடுத்தாண்டதற்காக சுவாமி அவர்களுக்கு மிக நன்றிபாராட்டுகிறேன்.



கூவுதலைக் காண்கின்றோம்; ஒருவன் ஓர் ஆற்றாமையால் வருந்தும்போது ஊ உஸ் என்று ஆவிபோக்குதலைக் காண்கின்றோம்; ஒருவன் இங்ஙனமின்றி அமைந்து ஆழ்ந்த சிந்தனையுடையனா யிருக்கும்போது மிக இனிய சொற்களினாலே சாந்தமாய்ப்பேசக் காண்கின்றோம்.

இவ்வாறு கண்டவிதனாலே சத்துவகுணம் மிகுந்தவிடத்து மெல்லோசை தோன்றுமென்பதும், இராசதகுணம் மிகுந்தவிடத்துக் குறிப்போசை தோன்றுமென்பதும், தாமதகுணம் மிகுந்தவிடத்து வல்லோசை தோன்றுமென்பதும் இனிது பெறப்படும். தாமத இராசதகுணங்களை ஒடுக்கிச் சத்துவகுணத்தை நிலைபெறுவித்தலே இறைவனுடைய பேரின்பானுபவத்தை எய்தற்குரிய சாதனமாகும். இன்னும் உலகத்தின்கட் சமாதானவாழ்க்கையை விரும்பிச் சிவகாருணிய ஒழுக்கம் பூண்டு நடப்பானுக்குச் சத்துவகுணமும் அதன் வழித் தோன்றும் மெல்லோசையுமே இன்றியமையாது வேண்டற் பாலனவாம். தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் "இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ—வன்சொல் வழங்கு வது" "இனிய உளவாக இன்னாத கூறல்—கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்று திருவாய்மலர்ந்தருளினார். சாந்தகுணமாய் இனியசொற் பேசுவானைக்கண்டால் எத்துணைத் தீயகுணமுடையாரும் தாமுஞ் சாந்தப்பட்டு அமைந்தொழுகக் காண்கின்றோம். கடுகடுத்து உக்கிரமாய்ப் பேசுவானைக்கண்டால் எத்துணைப் பொறுமையுடையாரும் தாமும் கோபித்துப் பேசுகின்றார். துன்பங்களால் ஆற்றாது வருந்துவாரைக்கண்டால் யாரும் துன்புறுகின்றார். ஆகவே சத்துவகுண முதலிய குணங்களுள்ளும் அவற்றின் காரியமான ஓசைகளுள்ளும் ஒருவரிடத்து எது தோன்றுமோ அதுவே பிறரிடத்துந் தோன்றுவதாகும். இதுகண்டே பட்டினத்தடிகள் 'நல்லாரிணக்கமு நின் பூசை நேசமு ஞானமுமே யல்லாது வேறு நிலையுளதோ......கச்சியேகம்பனே' என்று அருளிச்செய்தார். ஆகையால், தமிழ்ப்பாஷை யொன்றே சத்துவ குணத்தோடு ஒற்றுமைப்பட்ட மெல்லோசை யின்பமுடைத்தென்று காணப் படுதலால், அப்பாஷையின் பயிற்சியொன்றே விரிந்துசெல்கின்ற நமது சித்த விருத்தியினை ஒடுங்குமுகத்தால் தாமத இராசதகுணங்களைக் கீழ் அடக்கிச் சத்துவகுணத்தை மிகுவித்து நிலைபெறச்செய்து சிவானந்தப் பெரும்பேற்றை எய்துவிக்கும்."

இதனைச் சிந்திப்பின் இச்சத்துவகுணமே அன்பாய் மாறுபட்டு இன்பமான மெல்லோசையோடு வெளியாகின்றது. இவ்வன்பே சிவமாவது. "அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" என்னும் திருவாக்கால் இதை யறியலாம். ஆகவே அருமைத் தமிழர்களே! இம்மாதிரி மெல்லோசை சத்துவ குணம் பெற்ற நம் தமிழ்பாஷையிலேயே பிறந்து வளர்ந்து முதுமைபெற்றிருக்குங்கால் அஃதின் தெய்வீகத்தன்மைவாய்ந்த இன்சொல்லெனும் தேவாமிர்தமிழந்து கடுஞ்சொல் வாய்ப்பட்டு தத்தளிப்பது முற்கூறிய ஆணவம் பொதிந்த அறியாமையாலேயாம். இவ்வாணவத்தை நம் ஆன்மவறிவால் அழல் புகுபஞ்சுபோ லெரித்து பரிசுத்தம்செய்து, பின் ஆத்மஞானம் பெறவேண்டுவதே நம் முதற்கடமை.

ஆகவே அருமைச் சகோதரர்களே!

யாவர்க்கு மாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும்போ தொருகைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரைதானே.

எனும் திருமூலநாயனார் அருமைத்திருவாக்கை மனதில் பதியச்செய்து 'நாம்

எவ்விடக்கனுறினும் இன்சொல்லே பேசவேண்டுமென' சாதனையாகக்கொண்டு ஒழுகுங்கால் என்று மழியா சிவானந்தப் பேரின்பமடைந் துய்வோமெனும் நூற்றுணிவை மறவாதிருப்போமாக. சுபம்.

என். அகஸ்திலிங்கம் பிள்ளை, ஆலைவாய்மொழி.

---

## இராஜயோகம்

அடயோகம், லயயோகம், மந்திரயோகம், தந்திரயோகம், கர்மயோகம் முதலிய அநேக யோகங்களிருப்பினும், மோக்ஷத்தை அடைவதற்கு முக்கிய சாதனமாயிருப்பது இராஜயோகமே. இராஜயோகத்தை அனுஷ்டிப்பதற்கு மனிதனாயிருத்தலே போதுமானது. எம்மதத்தினராயிருந்தாலும்சரி, இலக்ஷாதிகாரியாயிருந்தாலும்சரி, பிக்ஷாதிகாரியாயிருந்தாலும் சரி, அதை அப்பியசிக்கலாம்.

இராஜயோகத்தின்படி சூக்ஷ்மமாயிருக்கிற மனமானது தடித்து ஸ்தூலமாயிருக்கிற இவ்வுலகாயிற்று. ஆகையால் ஸ்தூலமாயும், ஜடமாயுமுள்ள இவ்வுலகிற்கு சூக்ஷ்மமாயிருக்கிற மனமே காரணம். எவனொருவன் இம்மனதை யடக்கி ஆளுகிறானோ அவனே யோகியெனப்படுவான். எவனொருவன் மனதை யடக்கி தன்வசமாக்கிக் கொள்ளுகிறானோ அவன் அதைக் காரணமாயுடைய இவ்வுலகத்தையும் தன்வசமாக்கிக்கொள்ளுவன் என்பதில் என்னளவும் சந்தேகமில்லை. ஆதலால் மனதை யடக்குபவனுக்கு, இவ்வுலகும் அடங்கியே யிருக்கும்.

சாங்கிய தத்வசாஸ்திரமென்பதே இந்த இராஜயோகத்திற்கு ஆதாரமாயுள்ளது. இச்சாஸ்திரத்தின்படி விஷயங்கள் கண், செவி முதலான கருவிகள் மூலமாய் மனதிற்கு வருகின்றன. மனம் அவைகளை புத்திக்கு அனுப்ப, அது அவைகளை புருஷனுக்கு அனுப்புகிறது. புருஷன் அவ்விஷயங்களைப் பெற்றுக்கொண்டு உத்திரவிடுகிறான். புருஷனைத்தவிர மற்றெல்லாம் ஜடவஸ்துக்கள், ஆனால் மனமானது ஞான கர்மேந்திரியங்களைக்காட்டிலும் சூக்ஷ்மமானது. எவ்வஸ்துக்கள் சேர்ந்து மனமுண்டாயிற்றோ அவைகளே சற்று தடிப்புற்று தன்மாத்திரைகளாகின்றன. இவைகள் இன்னும் தடிப்புற்று பஞ்சபூதங்களாகின்றன. அவைகளால் உலகு உண்டாகிறது என்பதைத்தான் சாங்கியதத்வசாஸ்திரம் சொல்லுகிறது. இதனால் மனதிற்கும் வெளி உலகிற்கும் வித்தியாசம் அளவி லிருக்கிறதேயன்றி சொரூபத்திலில்லையென்று விளங்குகிறது. மனமானது புருஷன் கையில் ஒரு ஆயுதம்போலிருக்கிறது. ஆனால் இது ஸதா மாறிக்கொண்டேயிருக்கும். இது இந்திரியங்களோடு சேர்ந்தாவது, சேராமலாவது இருக்கும். ஓர் இந்திரியத்தில் மனமானது அதிக கவனமாயிருந்துவிட்டால் மற்ற இந்திரியங்கள் அச்சமயம் பயனற்றதாகவே யிருக்கும். உதாரணமாக ஒரு பள்ளிக்கூடத்துப் பையன் மிகவும் கவனமாக வாசித்துக்கொண் டிருந்தானானால், அவனை எவ்வளவுதரம் கூப்பிட்டாலும் அவனுக்குக் காது கேட்காது. ஏனெனில் மனமானது கண்ணோடு சேர்ந்திருக்கிறதேயொழிய காதோடு சேர்ந்திருக்கவில்லை. மேலும் இம் மனதிற்கு தன்னைத்தானே அறியவும் தனக்கு ஆதாரமான புருஷனை யறியவும் சக்தியுண்டு. ஆனால் இவ்விஷயங்களெல்லாம் மனதையடக்கி ஆளவல்ல யோகிகளுக்குத்தான் நன்கு தெரியும், மற்றவர்களறிவது கஷ்டமே.

எந்தசாஸ்திரம் அப்பியசிக்க விரும்பினாலும், எந்த வித்தையைக் கற்றுக்கொள்ள இச்சைகொண்டாலும், அவையவைகளுக்குச் சிலவிதிகளிருக்கின்றன. இப்பொழுது ஸாதாரணமாய் ஒருவன் சோதிடசாஸ்திரம் கற்கவிரும்பினால்



அவன் அச்சாஸ்திரங்களை மிக்க கவனத்துடன் வாசித்து சந்தேகங்களைப் பெரியோர்களைக்கொண்டு நிவர்த்திசெய்துகொண்டால் சோதிடசாஸ்திரம் வருமேயல்லாது "சோதிடசாஸ்திரம், சோதிடசாஸ்திரம்" என்று எவ்வளவு தடவை கத்தினாலும் வருமா? ஒருவன் நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமானால் தண்ணீரிலிறங்கமாட்டேன் என்றால் எவ்வாறு நீந்தக் கற்றுக்கொள்ளமுடியும். ஒவ்வொன்றும் அததன் விதிப்படி யனுஷ்டித்தால்தான் வரும். ராஜயோகாப்பியாசத்திற்கும் சிலவிதிகளிருக்கின்றன. அவ்விதிகளைச் சற்றேனும் பிசகின்றி விடாமுயற்சியுடன் அனுஷ்டித்தால்தான் யோகியாகலாமே யொழிய "இராஜயோகம் இராஜயோகம்" என்றால் யோகியாக முடியாது. யோகாப்பியாசம் செய்யவிரும்புவோன் முதலில் தன் தேகபலத்தைக் கவனிக்கவேண்டும். எவனொருவனுக்கு சரீரபலமில்லையோ அவனுக்கு மனோதிடமுமிராது. ஆகையால் நல்ல திடகாத்திரனாயிருத்தல்வேண்டும். எப்பொழுதும் மனதைச் சுத்தமாக்கும் ஆகாரத்தையே சாப்பிடவேண்டுமேயல்லாது, தூக்கத்தை உண்டுபண்ணும் ஆகாரத்தை உண்ணலாகாது. ஆகையால் ஆகாரவிஷயத்தில் முதலில் கவனமாயிருக்கவேண்டும். யோகாப்பியாசத்தில் நன்றாய்த் தேர்ச்சியடைந்த பிறகு அவ்வளவு கவனம் வைக்க வேண்டியதில்லை.

"எவர்கள் எப்பொழுதும் உபவாசிகளா யிருக்கிறார்களோ, எவர்கள் எப்பொழுதும் அதிகமாய்ப் புசிக்கிறார்களோ, எவர்கள் நித்திரையில்லாமலே யிருக்கிறார்களோ, எவர்கள் அதிக நித்திரைசெய்கிறார்களோ, எவர்கள் வேலை செய்யாமலே யிருக்கிறார்களோ, எவர்கள் அதிகவேலை செய்கிறார்களோ—இவர்களெல்லாரும் ஒருபொழுதும் யோகியாகமாட்டார்கள்" என்று கீதை முறையிடுவதால், யோகியாக விரும்புவோன் இவைகளை யொழித்து எப்பொழுதும் நடுத்தன்மையையே நாடவேண்டும். இராஜயோகத்தில் அஷ்டவிதப் படிகளுண்டு. அவைகள்:—

1. இயமம் 2. நியமம் 3. ஆஸனம் 4. பிராணாயாமம் 5. பிரத்யாகாரம் 6. தியானம் 7. தாரணை 8. சமாதி. இவைகளெட்டையும் தனித்தனியே கவனிப்போம்.

முதலில் சொல்லிய இயமம், நியமம் இவ்விரண்டும்தான் யோகாப்பியாசத்திற்கு அஸ்திவாரம் போன்றவை. இவைகளில்லாமல் ஒரு யோகாப்பியாசமும் பலிக்காது. இயமம் என்றால் பிராணிகளை வதைசெய்யாதிருத்தல், பொய் சொல்லாதிருத்தல், பிறர்பொருளை யபகரிக்காதிருத்தல், பிச்சைவாங்காதிருத்தல், தானம் வாங்காதிருத்தல் முதலிய தர்மங்கள். யோகியாக விரும்புவோன் ஒரு ஜந்துவையும் மனோவாக்குக் காயத்தால் ஹிம்சை செய்யக்கூடாது. 'அஹிம்சாபரமோதர்மம:' என்றபடி பிராணிகளை ஹிம்சிக்காமலிருப்பதே முதல்தரமான தர்மமாகும். எவனொருவன் எப்பொழுதும் சாந்தமாயும் பிராணிகளிடத்தில் பக்ஷமாயுமிருக்கிறானோ அவன்முன் துஷ்டமிருகங்கள் கூட சாந்தமாகிவிடும். எவனொருவன் பிறர்பொருளின்மே லிச்சைவையாது தனக்கிருப்பது போதுமென்று சந்தோஷமாயிருக்கிறானோ அவனிடமே ஸ்ரீதேவி குடியிருப்பாள். பொய் சொல்லாமை அல்லது எப்பொழுதும் சத்தியமே யுரைத்தல் என்பது மிகச்சிறந்த தர்மமாகும். எவனொருவன் "சத்தியம் தலைகாக்கும்' என்பதை யுணர்ந்து எப்பொழுதும் உண்மையையே கடைப்பிடித்து ஒழுகுவானோ அவன் எதுசொன்னாலும் அது அவ்வாறே நடக்கும். ஒரு பரம ஏழையைப் பார்த்துக் கோடீசுவரன் என்று சொல்லிவிட்டால் அவன் கோடீசுவரனாய்விடுவான். ஒரு வியாதியஸ்தனைப்பார்த்து திடகாத்திரமுள்ளவனென்றால் அவன் திடகாத்திரனாய்விடுவான். சுருக்கிச் சொல்லுங்கால் அவன்

வாக்யத்திறந்து எதுசொல்லினும் அது அவ்வாறே நடக்கும். மேலும் யோகியாக விரும்புவோன் ஸ்திரீ சம்போகத்தையே ஒழித்துவிடவேண்டும், ஸ்திரீ சம்போகமில்லாதவனுக்குத்தான் மனது சாந்தமாயிருக்கும், புத்திகூர்மையாயிருக்கும், தேகம், பலபராக்கிரமமாயிருக்கும். யோகிக்கு இதெல்லாம் அவசியமாதலால் யோகாப்பியாசம் செய்பவன் ஸ்திரீ சம்போக மில்லாமலிருக்க வேண்டியது அவசியம். அதாவது மனதில் அந்த நினைவே வரலாகாது. சுருக்கிச் சொல்லுங்கால் யோகாப்பியாசம் செய்ய இச்சையுடையோன், மனோ, வாக்கு, காயம் மூன்றிலும் சுத்தமா யிருக்கவேண்டும்.

இரண்டாவது:—நியமம்.

தேகசுத்தி ஜபதபங்கள், அத்தியயனம், ஈசுவர பக்தி முதலியவைகளைக் கவனிப்பது தான் நியமம் என்று சொல்லப்படும். இயமம் கைகூடிவிட்டால், நியமம் எளிதாயிருக்கும். இயமத்தில் கெட்டவைகளை எல்லாம் ஒழித்துவிட்டபடியால் மனதானது நல்ல விஷயங்களில் பற்றும். ஆகையால் ஜபதபங்களைச் செய்தல் ஈசுவரனித் தியானித்தல் முதலியவைகளைச் சுலபமாய் அனுஷ்டிக்கலாம் " Cleanliness is next to Godliness " என்று ஆங்கில கவியாரும் சொல்லியிருப்பதால் யோகாப்பியாசம் செய்வோன் உள்ளும் புறமும் சுத்தமாயிருக்கவேண்டும். உலக வஸ்துக்களில் பற்றிருத்தல் கூடாது. மேலும் ஞானத்தைப்பெற அத்தியயனமும் செய்யவேண்டும். முக்கியமாக ஈசுவரத்தியான மிருக்கவேண்டும். ஒருவன் எதைச் செய்தாலும் அதை ஈசுவரார்ப்பணமாக விட்டுவிட்டால்தான் கர்மபந்தத்தி லிருந்து விடுபட்டவனாகிறான். ஆகையால் எதைச் செய்தாலும் ஈசுவரார்ப்பணமாக விட்டு ஸதா ஈசுவரனையே தியானம் செய்யவேண்டும். யோகிக்கு இயமநியமங்கள் மிகவும் முக்கிய மாதலால் யோகியாக ஆசைப்படுவோன் முதலில் இவைகளை யனுஷ்டிக்க வேண்டியது அவசியம்.

மூன்றாவது:—ஆஸனம்.

இயம நியமங்கள் கைகூடின பிறகு சில ஆஸனங்களை வகித்தல் நல்லது. திடமாய் நிமிர்ந்து உட்காரவேண்டும். இதற்குச் சாதனமாய் அநேக ஆஸனங்களிருப்பதால் எது இஷ்டமோ அதை வகிக்கலாம். இடகலை, பிங்கலை யென்னு மிருநாடிகளுக் கிடையே சுஷும்நா என்னும் கால்வாயோடு கூடியதும் மூலாதாரத்திலிருந்து மூளைவரையிலும் முதுகுமத்தியிலுள்ளதாயு மிருக்கிற நாடியை (The spinal column) கோண நிறுத்தி உட்காரவேண்டும். இதற்குத் தலை கழுத்து மார்பு இவைகளை கோணகிறுத்தி அதிகநேரமிருக்கப் பழகவேண்டும். இவ்வாறிருக்கச் சாதனமான அநேக ஆசனங்களில் இராஜயோகிக்குச் சித்தாஸனமும், பத்மாஸனமும் முக்கியமானவை. இவ்வாறு ஒரு ஆஸனத்தை வகித்த பின் நரம்புகளைச் சுத்திசெய்யும் பொருட்டு ரேசக பூரக கும்பகங்களை யனுஷ்டிக்கவேண்டும். வாயுவை இடது நாசியால் உள்ளுக்கிழுத்தல் பூரகம். இழுத்த வாயுவை உள்ளே சற்றுநேரம் நிறுத்திவைத்தல் கும்பகம். நிறுத்திய காற்றை வலது நாசியால் வெளிவிடுதல் ரேசகம். காலை மத்தியானம் மாலை நடு இரவு இந்த நாலுகாலங்களிலும் இதைச் செய்து ஒருமாதகாலம்வரை யனுஷ்டித்தால் நரம்புகள் சுத்தியடையும். பிறகு பிராணாயாமத்தை ஆரம்பிக்கலாம்.

இந்த இராஜயோகமானது விவேகானந்த சுவாமிகள் எழுதியிருக்கும் புத்தகத்தை யொட்டி எழுதியது.

(தொடரும்.)

தே. சந்தானராமன், நீடாமங்கலம்.



## பழமொழிகள்

(பழமொழி 157-வது பக்கத் தொடர்ச்சி)

104. கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல்.
குயில் முட்டையிடக் காகம் அடைகாத்ததுபோல்.
குரங்கு கையில் பூமாலை அகப்பட்டதுபோல்.
குரங்கு ஏறாத கொம்பு உண்டா ?
குரங்கின் கையில் கொள்ளிகொடுத்ததுபோல்.
குலத்தளவே யாகும் குணம்.
110. குலைக்கிற நாய் கடிக்கிறது அரிது.
குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.
நிறைகுடம் நீர் தளும்பாது—குறைகுடம் தளும்பும்.
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
குன்றின்மேல் இட்ட விளக்கு.
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
கேடுவரும் பின்னே. மதிகெட்டுவரு முன்னே.
கேளும் கிளையும் கெட்டார்க்கு இல்லை.
கைக்கு வாய் உபசாரமா ?
கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
120. கைபட்டால் கண்ணாடி.
கைப்புண்ணுக்குக் கண்ணாடிவேண்டுமா ?
கைப்பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது.
கையில் உண்டானால் காத்திருப்பர் ஆயிரவர்.
கொட்டிக்கொட்டி அளந்தாலும் குறுணி பதக்கு ஆகாது.
கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி.
கொடிக்குக்காய் கனமா ?
கொல்லன் தெருவில் ஊசிவிற்றதுபோல்.
கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது.
130. கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன். (தொடரும்.)

S. V. பழனியப்பன்.

---

நாட்டுக்கோட்டை வைசிய சமூகத்தாரும் கலியாணமும்

ஐயா !

பூர்வஜென்மத்தில்செய்த புண்ணியவசத்தால் மிக்க செல்வம் பொருந்தியவர்களாயும் ஜீவகாருண்யம் ஈசுரபக்திமுதலிய குணங்களிற் சிறந்தவராயும் இணையற்ற சிவ கைங்கரியங்களிலேயே சதா காலத்தைக் கழித்துவரும் நாட்டுக்கோட்டை வைசிய மகாசமூகத்தைச்சேர்ந்த சகோதரசகோதரிகளே! நம் மகா சமூகத்தில் சிறிதுகாலமாய்ப் பெண்ணுக்குப் பணம் வாங்கும் வழக்கமொன்று ஏற்பட்டு அதினால் நம் சகோதரர்கள் ஆயிரக்கணக்காய்க் கலியாணம் செய்து கொள்ள வழியில்லாமலிருக்கிறார்களென்றும் அதை நிவர்த்திக்கவேணுமென்றும் நம தருமைமித்திரன்வாயிலாயும், நம்மவர்களால் கூட்டப்படும் சபைகளிலும் கண்டனங்கள்செய்துகொண்டுவந்தும் அதற்கு இன்னுமொரு முடிவான ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை.

இவ்விஷயத்தை யடியோடு ஒழிக்கவேண்டுமெனப் பரம்பொருளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்க (கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டதுபோல்) பெண் கொடுத்துப் பெண்ணெடுப்பதிலும் பெண்கள் சிறிது பெரிதாயிருக்குமாகில் சிறு பெண் வீட்டாரிடம் வியன்துகை கேட்பதாயும் அவ்விதம் ரூ. 6000, 7000 வரை கொடுத்து நடைபெற்றிருக்கிறதாகவும் தெரிகிறது. அந்தோ இதுமேற் சொல்லிய விஷயத்திலிருந்தும் பதின்மடங்கு விசனிக்கத்தக்கதாயிருக்கிறது.

பெண்ணுக்குத் தொகைகொடுக்கிறவழக்கம் சிறுவித்தாக விருக்கும்போதே ஒழிக்கமுயன்றிருந்தால் அப்போதே ஒழிந்துவிடுமல்லவா! அச்சமயம் கவனியாமலிருந்தபடியால் அது இப்போது பெரிய விருக்ஷமாகிவிட்டது. தற்சமயம் அதை ஒழிக்க அபிப்பிராயமாசையா யிருந்துகொண்டிருக்கிறது.

இப்போது பெண்ணுக்குப் பெண்ணும் கொடுத்து, வியன்துகை கொடுக்கிற விஷயம் சிறுவித்தாக உண்டாகிறது. அதை இப்போதே வேருடன் கிள்ளியெறிந்துவிட ஒவ்வொருவரும் முயற்சிசெய்யவேண்டும். இல்லாதிருந்தால் இதுவும் பெரிய விருக்ஷமாகிவிடும். இதுவிஷயத்தில் நம்மாபிமானமுள்ள சகோதர சகோதரிகள் முன்போல் நித்திரையிலிராமல் நம்மவர்களால் ஏற்பட்டிருக்கும் சபைகள் சங்கங்களிலும் பொதுவாய்க்கூடுமிடங்களிலும் (பெண்ணுக்கு அதிக தொகைவாங்குதல் பெண்கொடுத்துப் பெண்ணெடுப்பதில் வியன்துகை வாங்குதல்) இவைகளைக் கண்டித்து அடியோடு ஒழிக்க முயற்சிசெய்யவேண்டும்.

நம்மகாசமூகத்தில் புதிதாக வந்துதித்த வழக்கங்கள் ஒழிந்து பழையகால வழக்கப்படி கலியாணங்கள் நடைபெறுமாறு முயற்சிக்கவேண்டுமென்றும், நம ஆனந்தபோதினியை நம் சமூகத்தார் ஆதரிக்கவேண்டிய தவசியமென்றும் அது நீடூழிகாலம் நிலைத்திருக்கவேண்டுமென்றும் யெல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.

அ. சிறுவயல் வீரப்பன், கொளும்பு.

குறிப்பு:—செட்டிமார்களில் தலைவர்களாயுள்ளோர் இதில் கவனம் செலுத்தும்படி பிரார்த்திக்கிறோம். பத்திராசிரியர்.

---

## மாயஜுரம்

சென்ற சஞ்சிகையில் பொதுசமாசாரத்தில் மாயசுரம் என்றதைப் பார்த்தவுடன், சிலநாளாய் என்மனதில் குடியிருந்ததை, தற்சமயத்தில் சொல்லத் துணிந்தேன்.

இதில் சொல்லியபிரகாரம் காச்சல் நின்ற பிறகுதான், இடுப்பு, முதுகு, கழுத்து, தலைநோய் முதலியவற்றால், எப்பலம் உடைத்தவரேயாயினும் நான் பார்த்தவரையில் வருந்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் நம் ஆனந்தபோதினியின் சந்தாநேயர்களுக்கு அறிவிப்பது யாதெனில், அதிககாசுச்செலவும், அதிக சிரமும் கிடையாது, ஒருதோலா எடையுள்ள மிளகை நன்றாய் அம்மியில் பால்விட்டு வெண்ணெய்போல் மெழுகு அரைத்து கால்படி ஆவின்பாலில் கலக்கி வெறும்வயிற்றில், 3-வேளை சாப்பிட்டால் இருமல் முதலிய மேற்கண்டவலிகள் உடம்பில் இல்லை இல்லை என்று ஓடிவிடுகிறது. இதுநிச்சயம், நான் சுமார், 100-பேருக்குக்கொடுத்து சௌக்கியமாய் மறுநாளே தங்களுடைய வேலையைப்பார்த்து வருகிறார்கள். ஆகையால் இம்முறையை யாவருக்கும் தெரிவிக்கவேணுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கே. ராமாநுஜாச்சாரி, சேலம்.

(154-ம் பக்கத்தில் கண்ட)

## ஐயவினாவிற்கு விடை

### உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு

செந்தமிழுலக முய்யத் திருவவதாரஞ் செய்தருளிய ஔவையார் என்பவர் உத்தேசமாய் ஆயிரவருஷங்களுக்குமுன் "கொன்றைவேந்தன்" என்னும் நூலையியற்றியருளினார். அதுமுதல் நீண்டகாலம்வரையில் அக்காலத்துள்ள மஹாபண்டிதர்களில் எவரும் இதுவிஷயத்தில் ஆக்ஷேபனைகளை யெழுப்பவில்லை. இப்போது கொஞ்சகாலமாக இத்தாக்ஷேபனைகள் கிளம்புகின்றன. இதற்குக்காரணம் ஆரியர் சித்தாந்தம் மறக்கப்பட்டதும், அநாரியர் கோட்பாடுகளும் அன்னியர் சகவாசதோஷமும் மலிந்ததனாலேயாம். அவ்வாக்கியம் ஔவையாராலேயே கூறப்பட்டது. அது சரீர சாஸ்திரவியல்கொண்டு கூறப்பட்டது. அச்சரீரவியலைப் பின்னால் இவ்வானந்தபோதினியில் வெளிப்படும் விவாகப் பிரகரணத்தில் விரிப்பாம். ஆதலால் ஈண்டு சுருக்கமாய்ச் சிறிது கூறுகின்றோம்.

சரீரத்துக்குச் சுத்த இரத்தமே முக்கிய ஆகாரம். அதற்கு உணவே காரணம். உணவினாலேயே இரத்தவிருத்தி உண்டாகிறது. அவ்விரத்தத்தினால் காதலை விளைவிக்கிற சுரோணிதம் சுக்கிலம் என்பன உண்டாகின்றன. பெண்களின் தாதுவுக்குச் சுரோணிதம் எனவும் ஆடவர் தாதுவுக்குச் சுக்கிலமென்றும்பேர். பிறக்கும்பொழுதே கொண்டுவரப்பட்ட உதிரம் உணவினால் விருத்தியாய்ப் பிராணாக்கினியால் பரிபாகப்பட்டுச் சோணிதம் என்கிற இரண்டாவது நிலையையெய்தும். அந்நிலைமையெய்தி முதிர்ந்து காலக்கிரமத்தினால் சிரசிலிருந்து கீழ்நோக்கி வந்துகொண்டிருக்கும். வந்து கர்ப்பாசயப்பையில் நிரம்பிப் பிறகு சரீரத்துக்குள் தங்கியிருக்க முடியாமையால் கர்ப்பப்பையின் வாயைத் திறந்துகொண்டு வெளியில் சென்றுவிடும். இதனையே பூத்தல் என்பர். ஆடவர் சரீரத்தில் உள்ள தாதுவைப்போல நன்றாய்ப் பரிபாகப்பட்டு மூன்றாவது நிலைமையான சுக்கிலமாவதில்லை. ஏனெனில் ஆடவரைவிட ஸ்திரீகளுக்குப் பிராணாக்கினிப்பலம்குறைவு. உதிரம்பூரணபரிபாகம் அடையாமையாலே பெண்கள் சரீரம் ஆடவரது சரீரத்தைவிடப் பலமடங்கு பலக்குறைவுள்ளதாயிருக்கிறது. அன்றியும் அதிக மலநிறைந்ததாயுமிருக்கிறது. ஆதலால் அது தேகத்தில் தங்கக்கூடாது. அதனாலேதான் மாதமொருமுறை மூன்றுநாளாவும் சோணிதம் வெளிப்படுகின்றது. அது சரியாய் வெளிப்பட்டுச் செல்லாது சிறிது தடைபடுமானால் பெண்களுக்குப் பலவிதமான நோய்களுண்டாவது பிரத்தியட்சமாம். சீக்கிரம் ஜீரணிக்கக்கூடிய பதார்த்தங்களுடன் மிதமான (குறைந்த) போஜனம்செய்தால் அவர்களது சரீரத்திலுள்ள ஜீரணாக்கினி அந்த உணவை சீக்கிரம் ஜீரணப்படுத்தும். அதனால் சுத்த இரத்தவிருத்தியுண்டாய் சோணிதம் கிரமமான அளவுள்ளதாய்ப் பரிணமித்து மாதமொருமுறை வெளிப்படும். அப்போது பெண்கள் சரீரம் நோயற்றதாய், அதிகவனப்புடையதாய், வேலைகளைச் செய்யக்களைப்பற்ற சக்தியுடையதாய்ப், புத்திரோற்பத்தி செய்ய யோக்கியமானதாய்ச் சௌக்கியமாயிருக்கும். நீண்ட ஆயுளு முண்டாகும்.

அதிக உணவுகொண்டால் அஜீரணத்தினால் மலசக்தி அதிகப்பட்டுக் கர்ப்பாசயத்தில் தங்கிய இரஜஸ் கடினமாய்ச் சரியாய் வெளிப்படாது. அப்படியாவதால் கர்ப்பாசயத்தில் புழுபுழுத்தல், பாசிபிடித்தல், கட்டியாய்ப் தங்கிநிற்றல் முதலிய துர்க்குணங்களுண்டாகும். இதனால் சூதகவாய்வு, சரீரமெலிவு, நரம்புத்தளர்ச்சி, தேகமுலர்தல், தலைநோவு, சரீரம் முற்றும் நோவெடுத்தல், வேலைசெய்

யும் சக்தியின்மை, கர்ப்பநாசம், போகத்தில் வெறுப்புமுதலியன வுண்டாகும். சிலமாதர் மாதவிடாய் மூன்றுநாளும் பொறுக்கமுடியாத வயிற்றுநோயினால் புழுவைப்போலத்துடித்து வருந்துவது பிரத்தியட்சமாம். அநேக வியாதிகள் சூதகத் தடையாலுண்டாகின்றனவென்பது மேல்நாட்டு வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவை யெல்லாம் அதிக உண்டியால், இரத்தம் அசுத்தப்பட்டு உண்டாவதென்பதே வைத்திய சாஸ்திரங்களின் கருத்து. உண்டி சுருங்குதலால் தீபனசக்தி குறையாமலிருக்கும். அதனால் இரத்தம் சுத்தப்பட்டிருக்கும். படவே மாதவிடாய் தடையின்றிவெளிப்படும். அதனால் சரீராரோக்கியமும், சௌந்தரியமும், தேகவலிவும், நீண்ட ஆயுளுமுடையவர்களாய்ப் பல சற்புத்திரர்களைப்பெற்று இம்மை மறுமைப் பயன்களை அடைவார்கள் என்கிற சாரீரசாஸ்திரவிதியை அனுசரித்தே ஔவையார் தம்மினத்தாராகிய ஸ்திரீகளுக்கு உண்மையான சுகாதாரத்தைப் போதிக்கும்படி "உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்கிற அமிர்தவாசகத்தை உரைத்தருளினர் என்க.

S. சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

---

## (ஐயவினாவின் விடைக்குக் குறிப்பு)

குறிப்பு:—ஔவையார் அருளிய "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்ற வாக்கியத்திற்குமேலே கூறப்பட்டதே உண்மையான பொருள் என்பது அறிவாளிகள் எளிதில் உணரத்தக்கது. அதோடு அதன்படி நடப்பதால் ஸ்திரீகள் பலங்குன்றி விடுவார்கள் என்ற சந்தேகங்கொள்ளக் காரணமே யில்லையென்றும் நன்குணரலாகும்.

1. வித்வான் செம்பூர் ஆறுமுகம் சேர்வை. 2. திண்டுக்கல் வக்கீல் குமஸ்தா S. அயோதிராம் நாயகர். 3. N. S. இராமசந்திர அய்யர் B. A. முத்தியால் பேட்டை ஹைஸ்கூல். 4. இராதா கிருஷ்ணன், தஞ்சை. இவர்களும் மேல்கண்ட கருத்தையே எழுதி யிருக்கிறார்கள். இரண்டொருவர் "ஆகாரத்தின் குணமறிந்து தக்கவைகளை யுண்ண வேண்டுமென்று கருத்தேயொழிய ஆகாரத்தைக் குறைப்பதல்ல" என்று கூறியுளர். இப்பொருளை யேற்றுக்கொண்டாலும் 'ஆகாரத்தை அதிகமாயுட்கொள்ளலாகாது' என்ற பொருளும் இருக்கிறதென்பதே உண்மை. ஏனெனில் ஆடவரைக் காட்டிலும் ஸ்திரீகளுக்கு அதிக உணவால் மிக்க தீங்குகளுண்டாகும்—அவற்றில் சில மேலே யோகீஸ்வரர் அவர்கள் கூறியவற்றில் காணலாகும்.

மேற் கூறப்பட்டவர்கள் தவிர வேறு சிலரும் அதே கருத்தை வெளியிட்டாலும் காரணம் பலவாறு பொருந்தாதனவாய்க் கூறுகிறார்கள். சிலர் சம்பந்தப்படாத விஷயங்களை யெல்லாம் சேர்த்திருக்கிறார்கள்.

அந்தோ இவர்கள் போக, மீதியுள்ளவர்கள் அளித்த விடைகளைப் பற்றி சுருக்கமாயாவது கூற விரும்புகிறோம். இந்த நண்பர்களனைவரும் ஆரம்பத்திலேயே "இப்போது வழங்கும் உரை குற்றமே, இனி நாம் சரியான உரை கண்டுபிடிக்க வேண்டியதே" என்று தீர்மானித்து விட்டார்கள் போல் தெரிகிறது.

அவற்றில் சில பின்வருமாறு :—

ஒருவர் "சுருங்குதல் என்றால் யாவரும் புசித்தபின் புசித்தல் அல்லது வீட்டிலுள்ள பண்டங்களைச் சுருக்கமாய்ச் செலவிடல்" என்றும்,

ஒருவர் "உண்டி என்றால் பண்டங்கள் கொட்டுமிடம்—இங்கு ஆகாரம் கொட்டும் வயிறு. அது இடையி லிருப்பதால் இடையைச் சுருக்கல்" என்றும்,



ஒருவர் "உண்டி என்றால் உந்தி—அது பெண்களுக் குரிய ஒரு விளையாட்டு—அதை யதிகமா யாடலாகாது என்று பொருள்" என்றும்,

ஒருவர் "உண்டியென்றால், ஆகு பெயராய் வயிற்றையே யுணர்த்துகிறது" என்றும்,

ஒருவர் "நான் முன்பே யிதைப்பற்றி ஒரு புலவரைக் கேட்டேன்—அவர் உண்டி யென்பது எழுதிய புலவரின் வாய்க்குற்ற மென்றும் அது 'உண்டி' யல்ல 'பண்டி' என்றிருக்க வேண்டும் என்று கூறினர்" என்றும் கூறுகிறார்கள்.

இன்னொருவர் 'உண்டி'—என்பதை உண் + தி யென்று பிரித்து (நீட்டல் விகாரம் தோன்றியது எதனாலோ அறியோம்) உண்—என்றால் உண்ணத்தக்க நல்ல பண்டங்களை யுண் என்றும், 'தீ' என்பதோடு மறுபடி 'உண்' என்பதைச்சேர்த்து 'உண்-தீ' என்று எடுத்துக்கொண்டு, தீ = கெட்ட பண்டங்களை, உண் = உண்ணாதே—என்றும் கூறுகிறார். இதில் 'தி' காரத்திற்கு நீட்டல் விகாரமும், 'உண்' என்பதற்கே உடன்பாட்டிலும் எதிர் மறையிலும், அதிலும் ஓரே வாக்கியத்தில் பொருள் உண்டானதும் எப்படியோ தெரியவில்லை. இன்னும் சிலர் மனம்போனபடி பலவாறாகவும் எழுதியிருக்கிறார்கள்.

இன்னொருவர் ஔவை வாக்கியத்திற்கு தத்துவார்த்தம் கூறப் புகுந்து "உண்டி" என்பதற்கு "அங்குரம்போல் சிறியதாக உதிக்கும் சங்கல்பம்" என்று பொருள் கூறுகிறார்.

இந்த விபரீதங்களுக் கெல்லாம் காரணம் யோகீஸ்வரர் கூறி யுள்ளபடி தாய்ப்பாஷையில் அபிமானமும் அபிவிர்த்தியும் குன்றியதும், மேல்நாட்டு ஆசாரத்தைப் பின்பற்றத் தொடங்கியதுமே யாகும். கொஞ்சம் ஆங்கிலம் கற்கத்தெரிந்ததே "முன்னோர் முன்னோர் என்றால் அநாரிக காலத்தி லிருந்தவர்கள். அவர்கள் எப்போதோ கூறியவற்றை யெல்லாம் கண்மூடித் தனமாய் நம்பிக்கொண்டு அப்படியே நடக்கிறதென்றால் அதென்ன (nonsense) நான்ஸென்ஸ். நாம் ஒவ்வொன்றையும் பார்த்து நமது புத்திக்கு ஒத்திருப்பதைச் செய்யவேண்டும்" என்கிறார்கள். அந்தோ "பன்றியோடு கூடின கன்றும் மலமருந்தும்" என்பது போல் சேர்க்கை வாசனையால், சுமார் இரண்டாயிர வருடங்களுக்கு முன், காட்டு மிராண்டிகளாய் மலைக் குகைகளிலும் காடுகளிலும் வசித்துக்கொண்டு, பயிரிடவும் தெரியாது பச்சை மாமிச மச்சங்களை வெதுப்பியும், காய் கிழங்குகளையும் புசித்துக்கொண்டு மிருகங்களிலும் மூர்க்கத் தன்மையோடு இருந்தவர்கள் சந்ததியிற்றோன்றி, காலம் செல்லச்செல்ல, மிருகத் தன்மைக்கு வீரத்தன்மையென்று பெயர் வைத்துக்கொண்டு பூரண நாகரீக மடைந்ததாய்க் கருதியிருப்போர்களைப் போலவே இவர்கள் தங்களையும் எண்ணிக் கொள்கிறார்கள்.

நம் முன்னோருடைய கல்வியையும், அறிவையும், ஸரஸ்வதி யருளையும், தெய்வத்தன்மையையும், மற்ற அபூர்வசக்திகளையும், இவர்கள் சிந்தித்துப்பார்த்தால், அவற்றில் ஆயிரத்தில் ஒரு அம்சமேனும் நம்மிடமில்லையே யென்று வெட்கித் தலைகாணுவார்கள்.

தமிழ் கொஞ்சம் வாசித்ததே நாம் வித்வானாய் விட்டோம் என்று மதித்துக்கொண்டு, முன்னே குதர்க்கம்செய்யவும் பெரியோர்கள் நூல்களுக்கு குற்றம் கற்பிக்கவும் ஆரம்பித்துவிடுகிறார்கள். இனிமேல் "நோன்பென்பது = விரதமென்பது, கொன்றுதின் + ஆ + மை" என்று பிரித்து ஆ = பசுவையும், மை = ஆட்டையும், கொன்றுதின் = கொன்றுதின்பதே யாம்" என்றும் உரை யெழுதிவிடுவார்கள் போலும்.

ஔவையாரின் கல்வித்திறமை யாவருமறிந்ததே. அப்படியிருக்கத் தான் இயற்றிய நீதிநூற்களை நவரஸாலங்காரம் பொருந்திய சிறந்தபாக்களாய்க் கூருது, மிகச் சிறிய வார்த்தைகளாகவும் வாக்கியங்களாகவும் கூறியதேன்?

சிறுவர்களும் அற்பக் கல்வியுடையோருங்கூட அதை வாசித்துச் சுலபமா யறிந்துகொள்ள வேண்டுமென்பதே யன்றி வேறில்லை. ஆகையால் அவற்றி லுள்ள சொற்களுக்கு உலகில் சாதாரணமாய் யாவருக்குந்தெரிந்துள்ள பொருட் களே அர்த்தமன்றி, வேறே அந்தரார்த்தமாவது விசேஷ அர்த்தமாவது ஒன்று மில்லை யென்றே உணரவேண்டும்.

ஔவை பிராட்டியார் ஆன்மார்த்த நூல்களும் வரைந்துள்ளார். ஞான ஞானக்குறள் முதலியவை. அவற்றைவிட்டு ஆத்திச்சூடி முதலிய நீதிவாக்கியங் களில் தத்துவார்த்தமாவது ஞானார்த்தமாவது கிடையாது. ஒருவார்த்தைக்கு இது காறும் யாராலும் கூறப்படாததும், சற்றும் சம்பந்தமில்லாததுமான அர்த்தத்தை நாமே உண்டாக்கி எழுதுவதாயின் எல்லாவற்றிற்குமே ஞானார்த்தமும் தத்து வார்த்தமும் யாவரும் சுலபமாய்க் கூறிவிடலாம். திருட்டாந்தமாய் நாம் மேலே கூறியபடி 'உண்டி' என்ற பதத்திற்கு 'அங்குரம்போல் சிறிதாக வுதிக்கும் சங்கல்பம்' என்ற உரைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இதுவரையில் இருந்த தெய்வீகம்பெற்ற புலவர்கள் இத்தகைய நூல்களில் வேறுவிசேடங்களாவது குற்றமாவது இருந்தால் ஒருவரேனும் வெளியிடாதிரார் கள். தங்களுக்குத் தெரியாமல் நம்மைக்கண்டறிந்துகொள்ளும்படி யவர்கள் எதை யும் விட்டுப்போகவில்லை. நாம் திட்டிணமரத்தில் கூர்பார்ப்பதுபோல் அவர்களி டம் சிந்திப்போனவற்றில் ஆயிரத்தில் ஒருகூறு கூட தெரிந்துகொள்ளாமலே, அவர்கள் நூலில் நமக்கு ஏதேனும் விளங்காவிடின், இன்னும் நமது அறிவு போதாதென் றுணருவதைவிட்டு, அவர்கள் நூலில் குற்றங்கூறுவதும், மாரிலை கண்டு வான்கோழி யாடுவதுபோல் அவர்கள் நூலைப்பார்த்து அத்தகைய பெயர் வைத்து நாம் அதேமாதிரி வேறுநூலெழுத முயல்வதும் பெருங்குற்றமான செய்கைகளே யாகும். இப்போது மேல் குறித்ததுபோன்ற சந்தேகம் உதிக் கின், அதை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டியதே. ஆனால் அதற்கு இது காறும் எண்ணிறந்த தெய்வப்புலமை யுடைத்தாயிருந்தோர்களால் அங்கீகரிக்கப் பட்ட உரையைத் தள்ளிவிட்டு, வேறு உரை நம் மனப்போக்கின்படி கூறப் புகுவது, அப்புலவோர் நம்மினும் தாழ்ந்த அறிவினர் என்று கூறுவதுபோலா கிறது. அந்தோ, இது பாதகமன்றி வேறென்னை யெனலாம்? நாம் இவ்வாறு வெளிப்படையாய் எழுதியது சில நண்பர்களுக்கு நம்மேல் கோபத்தை யுண் டாக்கலாகும். ஆனால் நாம் எள்ளளவேனும் அக்கருத்து கொண்டாவது, ஒரு வரைக் குறித்தாவது எழுதியதல்ல வாதலால் மன்னிக்கும்படி பிரார்த்திக்கி றோம்.

பத்திரிகாசிரியர்.

---

நமது சந்தாதேயர்களில் ஒருவர் கீழ்க்கண்ட பாடலுக்குத் தெளிவாய் உரை யெழுதி வெளியிடுமாறு கோரிக்கொண்டார்:—

அடியில் குறிக்கப்பட்ட இச்செய்யுள் பேரூர் சாந்தலிங்க ஸ்வாமிகள் இயற்றிய "பிரபுலிங்கலீலை" யென்னும் அரியநூலில் உள்ள உமையவள் தோத்திரச் செய்யுளாகும்:—

ஆதி பகவன் றனதூட றணிப்பான் பணிய வவ்விறைவன்
பாத மிறைஞ்சு மதற்குநெற்றிப் பகையு மல்குற் பகையுமாம்



சீத மதியு மரவும்விழுஞ் செயற்கு முவகை செயாமலலை
மாது பணியு மதற்குமன மகிழு முமையை வணங்குவாம்.

இச்செய்யுள் சக்களத்திகள் பொருமை யதிகம் என்ற உலகவழக்கை யொட்டி வேடிக்கையாகவும் அலங்காரமாகவும் கூறப்பட்டது.

பதவுரை:—ஆதிபகவன் = பரமசிவன், தனது ஊடல்* = தன்னுடைய (உமாதேவியுடைய) கோபத்தை, தணிப்பான் = தணியச்செய்வதற்காக, பணிய = தன் பாதங்களில் வணங்க, அவ்விறைவன் = அத்தேவனுகிய பரமசிவனே, பாதம் = தன் பாதங்களில், இறைஞ்சும் அதற்கும் = வணங்குவதற்கும், நெற்றிப் பகையும் = (முறையே) தன் நெற்றிக்கு விரோதியும், அல்குல் பகையும் ஆம் = அல்குலுக்கு விரோதியும் ஆகிய, சீதமதியும் = குளிர்ச்சிபொருந்திய சந்திரனும், அரவும் = நாகமும், விழும் செயற்கும் = (தன் பாதங்களில்) வணங்கியதற்கும், உவகை செய்யாமல் = சந்தோஷமடையாமல், அலைமாது = கங்கை, பணியு மதற்கு = (தன் பாதங்களில்) வணங்குவதற்கு, மனமகிழும் = சந்தோஷமடை கின்ற, உமையை = உமாதேவியை, வணங்குவாம் = தொழுவாம்.

பரமசிவம் உமாதேவியின் கோபத்தைத்தணிக்க அவ்வம்மையின் பாதங் களில் பணிந்தபோது, அவருடைய ஜடாபாரத்தில் இருக்கும் கங்கை, நாகம், சந்திரன் மூவரும் கூட அம்மையின் பாதங்களில் வணங்கியவர்க ளாகிறார்கள்.

இவர்களில் சந்திரன் முகத்திற்கும், அரவப்படம் அல்குலுக்கும் ஒப்பிட்டுக் கூறப்படுவதாகையால், தன் இரண்டு அங்கங்களுக்கும் முறையே பகைவராகி றார்கள். அவ்வாறிருந்தும், இவர்களனைவரும் ஏககாலத்தில் தன் பாதங்களில் வணங்கியபோது, உமாதேவியார், சாக்ஷாத் பகவானே வணங்கி யதற்காவது, தன் அங்கங்களுக்குப் பகைவர்களாகிய சந்திரன் நாகம் இவர்கள் வணங்கியதற் காகவாவது சந்தோஷமடையாமல், தன் சக்களத்தியாகிய கங்கை தன் பாதங் களில் பணிந்ததற்கே சந்தோஷமடைந்தாள் என்றபடி. இது நாம் மேற் கூறிய படி ஆசிரியர் ஸ்திரீகளுக்குச் சக்களத்திமேல் துவேஷமதிகம் என்ற உலக வழக்கத்தை யொட்டி கற்பனையாய்ப் பாடியது. அதே நூலில் இவர் இன்னும் வேறு இத்தகைய பாசுரங்களையும் அருளியுள்ளார்.

பத்திரிகாசிரியர்.

---

## கற்கோட்டை—நாவல்

(159-ம் பக்கத்தொடர்ச்சி)

தங்கம்மாள்.—"அரியநாயகி க்ஷேமமாய் வீடு வந்துசேர்ந்தாள். உன்னைப் பற்றி மிக்க நன்றியோடு புகழ்ந்து கூறினுள்" என்றாள்.

கோகிலம்.—"ஆனால் முனிவரிருக்கும் அவன் ஆட்களும் வந்தார்களே அவர்களிடம் அரியநாயகி சிக்கவில்லையே?"

தங்கம்மாள்.—ஆமா! இன்னும் புதுசங்கடங்களா! நான் அவர்கள் வருமுன் வந்துவிட்டேன். ஆயினும் கடவுள் தயவால் ஆபத்திருந்தப்பும் வழியைக் கூறிவிட்டு வந்திருக்கிறேன்.

கோகிலம்.—நீங்கள் என்ன காரியமாய் இராஜனிடம் வந்தீர்கள்? அவன் எவ்வித வேண்டுகோளுக்கும் மனமிரங்குகிறவனல்ல. அது எப்படி நடந்தாலும் தான்கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றியேவிடும் சுபாவ முடையவன். அரியநாயகியைக் கொஞ்சகாலத்திற்கு தூரத்தில் எங்காவது மறைத்துவைப்பதுதான் நலம். ஆ! அந்தக் கிளையாழியை யென்ன செய் தானோ?" என்றாள்.

* ஊடல் = கலவியிற் பிணக்கல்.

அவள் அவ்வாறுகூறி வாய்மூடுமுன், அரண்மனை காரியஸ்தர் அறைக்குள் வந்தார். அதனால் தங்கம்மாள் கன்யாழியைப்பற்றி பதில்கூறச் சமயமில்லை. வந்த உத்தியோகஸ்தர் உடனே அம்மூதாட்டியை யழைத்துச் சென்று இராணியின் அறையிற் கொண்டுபோய், அவள் சமூகத்தில் விட்டுவிட்டு கதவை மூடிக் கொண்டு சென்றார். அதன்பின் தங்கம்மாளுக்கும் இராணிக்கும் கீழ்க்காணும் சம்பாஷணை நேர்ந்தது. இராணி மிக்க தந்திரசாலியாகையால் முதலில் நயமாகவும் அன்போடும் சம்பாஷிப்பதே நலமென்று கருதி,

"என்னிடம் என்னகாரியமாய் வந்ததோ?" என்றாள். தங்கம்மாளுக்குத் தன்னைப்பற்றிய இரகசியம் தெரிந்திருக்கும் என்றுமட்டும் இராணி யுணர்ந்தவளே யன்றி, எவ்வளவுமட்டும் தெரியும் எப்படி தெரியும் என்பதை யறிந்தவளல்ல. ஆகையால் உள்ளுக்குள் அவளுக்கு திகிலே.

தங்கம்மாள்.—மகாராணி! எனக்குக் கட்டாயமான அவசியம் நேர்ந்திராவிட்டால் நான் தங்களிடம் வந்திருக்கமாட்டேன். தாங்கள் அடியோடு மறைந்து போக வேண்டுமென விரும்புகிற விஷயங்களைப்பற்றி தங்களிடம் குறிப்பிட வேண்டுமென்று எனக்கு விருப்பமேயில்லை. பத்து பதினைந்து வருடங்களுக்குமுன் தாங்கள் கற்கோட்டைக்கு வந்திருந்தபோது நான் தங்களிடம் சம்பாஷித்தமாதிரியாலேயே தாங்கள் அதை யறிந்துகொண்டிருக்கலாம்.

இராணி.—இப்போது நீ கூறுவதன் கருத்துதானென்ன ?"

தங்கம்.—நான் வாய்விட்டுக் கூறவேண்டுமென்பதா உங்கள் கருத்து, இராது. ஒருக்காலுமிராது. ஆயினும் இப்போது நான் கூறும் நிபந்தனைகளுக்குச் சம்மதியாவிட்டால் நான் கூறியேதீர......

இராணி முகம் சிவந்து. "ஓ என்ன! என்னென்ன நிபந்தனைகள் என்கிறாய்?" என்றாள்.

தங்கம்மாள் சற்றும் கலவரமடையாது:—

"நல்லது வேண்டுகோள்கள், வரங்கள் என்று கூறுகிறேனே. நான் கேட்கும் வரங்களை யளிப்பீர்களென்றே நம்புகிறேன். ஏனெனில் இவ்வளவு நீடித்தகாலமாய் மனதிலேயே புதைத்து வைத்திருந்த சமாசாரத்தை யிப்போது வாய்விட்டுக் கூறுவதென்றால் எனக்குக் கஷ்டமாகவே தோன்றுகிறது. ஆயினும் வேறுவழி யில்லாவிடின் கூறியே தீருவேன்......" என்றாள்.

இராணி.—நீ என்னமோ குறிப்பாய்ப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறாய். அந்தப் பதக்கத்தை அரியாயனியிடம்கொடுத்து அவளை யென்னிடமனுப்பினாய். தாராளமாய்க்கூறு. உனக்கு என்னதான் தெரியும்? தெரியுமென்று நீ கருதுகிறாய்? என்னதான் உத்தேசித்துக்கொண்டாய்? எவ்வளவு தூரம் தெரியும்? எப்படி உனக்குத் தெரிந்தது?

தங்கம்மாள்.—சரி, தாங்களே கட்டளை யிடுகிறவரையில் கூறவேண்டியதே. சித்தானூர் என்ற கிராமம் தெரியு மல்லவா—இன்னும் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் அங்கு நடந்த ஒரு சம்பவத்தையும் கூறவேண்டுமோ?

இதைக்கேட்டதே இராணி சற்றுநேரம் முகத்தை யொருபக்கமாய்த் திருப்பிக்கொண்டிருந்து, பிறகு "ஆனால் நீ—அச்சம்பவத்தில் என்னவேலை செய்தாய்—எப்படி அங்குவந்தாய்? என்று கலவரமடைந்த குரலாய்க்கேட்டாள்.

தங்கம்மாள்.—கேளுங்கள். அந்தச் சிறுசத்திரத்தில் அச்சமயம் உமது ஆபத்தைக் கருதித் தன் அறையை யுமக்கு விட்ட ஸ்திரீ யார் தெரியுமா?

இராணி.—ஆம். ஆம். அவள் மங்கலட்சுமி என்ற ஒருத்தி.



தங்கம்.—அல்ல அல்ல அந்த ஸ்திரீ நான்தான்.

இராணி.—திடுக்கிட்டு "ஆ! அப்படியா? ஏன்? என்ன உத்தேசத்தைக் கொண்டு மாறுபெயர் கூறினாய்?" என்றாள்.

தங்கம்.—கூறுகிறேன். உமக்கு அறையை விட்டபின் சற்று நேரங்கழித்து என் சாமான் ஒன்றை யெடுத்துவர அறைக்குள் நுழைந்தேன். அங்கு தீபமில்லை. நீர் மட்டும் படுத்திருந்தீர். நான் இருட்டில் என் சாமானைத் தேடும்போது உம்மோடுகூட வந்திருந்த இரண்டு சீமாட்டிகளும் அறைக்குள் வந்து நானிருப்பதை யறியாமல் தீபத்தை யேற்றினார்கள். அப்போது நான் முகமூடியில்லாதிருந்த உமது வதனத்தைக் கண்டதும் திடுக்கிட்டேன். தாங்கள் அதைப்பார்த்து விட்டீர்கள். உடனே உன் பெயர் என்னவென்று கேட்டீர்கள். அச்சமயம் உமது முகத்தில் ஒருவித பயங்கரமான குறியிருந்தது. உடனே "நமக்கு இராணியின் பயங்கரமான பெரிய இரகசியம் தெரிந்துவிட்டதால் நமக்கு ஆபத்து நேரிடும்" என்று என்மனதிற் பட்டது. ஆகையால் சற்றும் சிந்திக்காமல் என் பெயரை மறைத்து வாயில் வேறு எந்த பெயர் அச்சமயம் வந்ததோ அதைக் கூறிவிட்டேன்.

இதைக் கேட்டதே இராணி மிக்க மனக்குழப்பமும் திகிலுமடைந்தாள். ஆயினும் இன்னும் இவள் மனதிலிருப்பதைப் பூரணமா யறியவேண்டு மென்றெண்ணி, "பிறகு சில ஏற்பாடு நடந்ததல்லவா, அவைகூட மங்கலட்சுமி யம்மாள் மூலமாகத்தானே நடந்தது?" என்றாள்.

தங்கம்.—"ஆம். என் மூலமாய்த்தான். பெயரை மறைத்து மாறுபெயர் கூறிவிட்டவரையில் பயமில்லையென்று நான்தான் மங்கலட்சுமி யென்று கையொப்பமிட்டு கடிதங்கள் எழுதி அந்த ஏற்பாடுக ளனைத்தும் செய்தேன்" என்றாள்.

இராணி இதைக்கேட்டுச் சற்று சிந்தித்து தங்கம்மாளை யுற்று நோக்கி, "ஆ என்ன! நீ என்மேற் சந்தேகமா கொண்டாய்?" என்றாள்.

தங்கம்.—நான் முன்சாக்கிரதையா யிருந்தேனே யன்றி வேறில்லை. பிறகு ஆகா நாம் அப்படி நடந்துகொண்டதே நற்காலமாய்விட்டது என்று பலதரம் சந்தோஷப் பட்டுக்கொள்ள நேர்ந்தது.

இதைக் கேட்டதே இராணி பின்னும் திகிலும் பிரமிப்பு மடைந்தாள், வாய் குழறிக்கொண்டே,

"என்ன நீ கூறுவது? நல்லகாலமென்று ஏன் எண்ணிக்கொண்டாய்? உன் மனதிலிருப்பதைக்கூறு" என்றாள்.

தங்கம்.—"சரி. தாங்களே கூறும்படி கட்டாயப்படுத்துவதால் கூறுகிறேன். சித்தானூரில் அந்த விசேஷ சம்பவம் நடந்தகாலத்தில் உமது தோழிகளாக இரண்டு சீமாட்டிகள் உம்மோடு வந்திருந்தார்கள். அவர்கள்தான் கிட்டவிருந்து அந்த ஆபத்தில் உமக்குத் தக்க உபசாரம்செய்து அந்த இரகசியம் வெளிசெல்லாவண்ணம் காவலா யிருந்தவர்கள். அவர்களிலொருத்தியாகிய காமகோடிச் சீமாட்டி, அச்சம்பவம் நடந்த ஆறுமாதங்களுக்குள் திடீரென்று இறந்து போனதாய்ச் சங்கதி பரவியது. மற்றொரு சீமாட்டியாகிய இராஜலட்சுமியம்மாள் பாஞ்சால நாட்டிற்குச் சென்றவள், அங்கே மாயமாய் மறைந்துவிட்டாள். என்னமானாளென்று ஒருவருக்கும் தெரியாது. ஆயினும் அம்மாது அங்குள்ள பெயர் பெற்ற பாதாளச் சிறையில் அடைக்கப்பட் டிருப்பதாய் வதந்தி. நான் என் பெயரை மறைத்துவிட்டதால் சந்தோஷமடைந்ததற்கு இதுவேகாரணம்" என்றாள். (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்தி௵ மார்கழீ௴—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,

பசலி 1327-28—கோல்லம் 1093-94,

இங்கிலீஷ் 1918ம்-௵ டிசம்பர்௴—ஜனவரி௴

| மார்கழீ௴ | டிசம்பர்௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | தி | சது-51-11 | *கார்-11-18 | மா 11 அ | தனுர்மாத பூஜை ஆரம்பம் |
| 2 | 17 | செ | ○பௌர்ண-59 | ரோக-8-16 | அ 8 சித் | |
| 3 | 18 | புத | பிர-43-21 | மிரு-6-18 | சித்த 60 | தனியகான் |
| 4 | 19 | வி | துதி-41-11 | திரு-4-19 | மா 4 அ | சிதம்பரம்முதலிய ஸ்தலங்க |
| 5 | 20 | வெ | திரு-39-57 | புன-3-51 | சித்த 4 ம | [ளில் ஆருத்ராதரிசனம். |
| 6 | 21 | ச | சது-40-0 | பூச-4-47 | சி 4 மா | கரிநாள் |
| 7 | 22 | ஞா | பஞ்-41-9 | ஆயி-5-38 | மரண 60 | |
| 8 | 23 | தி | சஷ்-43-45 | மக-9-47 | மா 10 சி | |
| 9 | 24 | செ | சப்-47-23 | பூர-14-10 | சி 14 அமி | கரிநாள், ஆயுதப்பிரயோகம், |
| 10 | 25 | புத | அஷ்-51-56 | உத்தி-19-15 | அ 19 மா | [விரகசாந்திசெய்ய |
| 11 | 26 | வி | நவ-57-6 | அஸ்த-25-37 | சித்த 60 | மந்திரம்ஜபிக்க |
| 12 | 27 | வெ | தச-60-0 | சித்-32-0 | சித்த 60 | வாகனம் வாங்க |
| 13 | 28 | ச | தச-3-26 | சுவா-38-22 | அமி 38 சி | புது தானியம் புசிக்க |
| 14 | 29 | ஞா | ஏகா-8-32 | விசா-44-18 | மரண 60 | |
| 15 | 30 | தி | து-12-7 | அனு-49-32 | சித்த 60 | |
| 16 | 31 | செ | திர-15-58 | கேட்-53-46 | சி 54 அ | |
| | **1919௵ ஜனவரி௴** | | | | | |
| 17 | 1 | புத | சது 18-17● | மூல-56-47 | மா 57 அ | |
| 18 | 2 | வி | ●அமா-19-35 | பூரா-58-30 | சித்த 60 | |
| 19 | 3 | வெ | பிர-19-25 | உத்தி-57-49 | சித் 58 ம | |
| 20 | 4 | ச | துதி-18-12 | திரு-58-27 | சித்த 60 | |
| 21 | 5 | ஞா | திரு-15-32 | அவி-56-52 | ம 57 சித் | |
| 22 | 6 | தி | சது-15-5 | சத-54-20 | சித் 54 மா | |
| 23 | 7 | செ | பஞ்-7-47 | பூரட்-50-31 | ம 51 சித் | ஷஷ்டிவிரதம் |
| 24 | 8 | புத | சஷ்-3-45<br>சப்-53-15 | உத்தி-47-17 | சித் 47 ம | திருவிடைமருதூர், சென்<br>[னை கந்தசுவாமி, குன்னக் |
| 25 | 9 | வி | அஷ்-51-25 | ரே-44-17 | சித்த 44 அ | [குடி பழனி உற்சவாரம்பம் |
| 26 | 10 | வெ | நவ-45-31 | அசு-39-7 | சித்த 60 | கஜசுகதாரணம் |
| 27 | 11 | ச | தச-40-0 | பர-36-12 | சித் 36 அ | மூலிகை உபயோகிக்க |
| 28 | 12 | ஞா | ஏகா-34-31 | கார்-31-29 | அமிர் 60 | வைகுண்ட ஏகாதசி |
| 29 | 13 | தி | து-29-13 | ரோக-27-52 | அமி 60 | போகிபண்டிகை |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 22-மக-சுக் | | |
| செ | 26-சா-புத | | சனி |
| ரவி<br>சுக் | ராகு<br>புத | | |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

---

உ.

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி 4 | காளயுக்தி௵ மார்கழீ௴ கூ | பகுதி 6
1918-ம்௵ டிசம்பர்௴ 15உ

105

1614

## கடவுள் வணக்கம்

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பெலா மாக வந்தும்
பாவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பரிதாக மின்றி யெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவே
வன்பசி தனக் கடைத்து
மவுனத் திருந்துமுயர் மலைமுழை தனிற்புகுந்து
மன்னுதச நாடி முற்றும்
சுத்திசெய் துமூல ப்ராணனோ டக்கினையெழுப்பி
சோமவட் டத்தை யடைத்தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோருநிலை நிற்க வீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

---

வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே யெளியனேன் மனமாமாயைக்
குடிகெடுக்கத் தசங்கட்டிக் கொண்ட மோன
குருவேயென் றெய்வமே கோதி லாத
படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் றிருக்கருணை பற்று மாறே
அடியெடுத்தென் முடியிலின்னம் வைக்க வேண்டும்
அடிமுடியொன் றில்லாத வகண்ட வாழ்வே.

# ஆனந்தபோதினி

காளயுக்திஞூ மார்கழிமீ 1உ

## கடவுளும்—மதங்களும்

(165-ம் பக்கத் தொடர்ச்சி.)

நண்பர்களே, நாம் 165-வது பக்கத்தில் கூறியபடி நமது கடவுளை யெவ்வளவிற் கெவ்வளவு குறுகிய எல்லைக்குள் இருப்பதாய்க் கருதுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு கடவுளுக்கு நாம் தூரமாகவே யிருக்கிறோம். அதிலும் நமது கடவுள் வேறு நாம் வேறு என்று கருதுவது சுத்த அஞ்ஞானமாகும். அன்னியர் வணங்கும் கடவுளைத்தான் நாமும் வணங்குகிறோம் என்று கருத மனம் பிடிக்காதவர்கள் நமது கடவுளையே மற்ற மதஸ்தரும் வணங்குகிறார்கள் என்று கருதலாகும்; நமது கடவுளே எல்லா மதங்களிலும் அவரவர்கள் நினைக்கும் வண்ணம் இருந்து நடம்புரிகிறார் என்பது உண்மையே. ஆதலால் எம்மதக் கடவுளானாலும் அந்த சச்சிதான பரப்பிரம்மம், பரசிவம் என்ற பலநாமங்களால் துதிக்கப்படும் ஒரே ஏகநாயகனே. அவனை விட்டு வேறு ஒன்றுமேயில்லை.

உண்மையில் அவர் அணுவிலும் அணுவிற் கணுவாகிய பொருளிலும், தூணிலும், துரும்பிலும், வளியிலும், வெளியிலும், நீரிலும் நெருப்பிலும் எங்கணுமே நிறைந்துள்ளவர். அவர் இல்லாத இடமேயில்லை யென்பது சத்தியமா யிருக்கும்போது, எதைத்தான் கடவுள் என்று நினைக்கலாகாது? ஆகையால் சகோதர சகோதரிகளே! நாம் எவ்வளவு அதிகமான வஸ்துக்களிலும் இடங்களிலும் கடவுளைக் காண்கிறோமோ, அதாவது கடவுளிருப்பதாய் மனப்பூர்வமாய் நம்புகிறோமோ, அவ்வளவும் ஆண்டவன் சமீபத்தில் நெருங்குகிறோம்.

நண்பர்களே, இப்போது நான் கூறப்போகும் அப்பியாச விஷயத்திற்கு முதலிலேயே யொரு ஆதாரம் வேண்டும். அதாவது கடவுளிடம் நிறைந்த பக்தி. அதில்லாவிட்டால் ஒரு பயனும்



னைகூடாது. அதோடு நித்தியாநித்தியவஸ்து விவேகமுமிருந்தால் பின்னும் அனுகூலமே—

எதுவரையில் நாம் கடவுளை நமக்கு அன்னியமாகிய இரண்டாவது வஸ்துவாய்க் காண்கிறோமோ அதுகாறும் பக்தியிருந்தாலும் அஞ்ஞானம் நம்மைவிட்டதல்ல. ஆனால் அவ்வாறு கருதுவது சுலபத்தில் நீங்காது. பட்டினத்தடிகள் கூறியதுபோன்று, ஒரு ஸ்திரீ நீர்நிறைந்த குடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு இரண்டு கரங்களையும் வீசிக்கொண்டு, பக்கத்திலிருக்கும் அண்டை வீட்டுக்காரியிடம் தன் குடும்பகாரியங்களைப் பற்றி அக்கரையோடு கூறிக்கொண்டு நடந்து செல்லும்போதும், அம்மாதின் கருத்து எப்படி குடத்தின் மேலேயே யிருக்குமோ, அதுபோல், உலகில் எத்தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும் கருத்தை நமது நாட்டத்தின்மேலேயே வைத்துக்கொண்டு வைராக்கியத்தோடு அப்பியாசம் செய்துகொண்டிருக்கவேண்டும்.

அதாவது மேல்கூறியவாறு, ஒருவஸ்துவில்மட்டுமே, ஒருவிடத்தில்மட்டுமே கடவுள் இருக்கிறார் என்ற எண்ணத்தைவிட்டு, எந்த விடத்தில் எதை யெதை யாரார், எந்த எந்தப்பெயரால் கடவுள் என்றாலும் அங்கெல்லாம் அந்த ஏகநாயகனே யிருக்கிறதாய்க் காணும் அப்பியாசத்தை விர்த்திசெய்யவேண்டும்.

(இதன் தொடர்ச்சியை 218-வது பக்கம் பார்க்க.)

## கீழ்ப்படிதல்.

கீழ்ப்படிதல் என்றகுணம் பூலோகத்திலுள்ள மனிடஜென்மமெடுத்த ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய குணமாம். இக்குணமில்லாதவன் கல்வியில்லாக்கசடர்போலும் கடிவாளமில்லாக்குதிரைபோலும் அங்குசமில்லாதயானைபோலும் பயனற்றழிவர். கீழ்ப்படிதலில்லாத மனிதன் ஒன்றற்கும் பயன்படாது போவதுமன்றிப் பெரும்பாலும் தனக்கே நிர்ப்பாக்கியத்தைத் தேடிக்கொள்ளுகின்றனன். கீழ்ப்படிதலென்பது கடவுளுக்கும், தாய் தந்தையர்க்கும், பெரியோருக்கும் அடங்கி நடத்தலாம். இவ்வித கீழ்ப்படிதலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1-வது கடவுளின் கட்டளையை அனுசரித்து அதனால் வரும் பயனைநோக்கிக் கீழ்ப்படிதல், 2-வது ஏதோ ஓர் காரணத்தினால் கீழ்ப்படிதல், 3-வது தனக்கிருக்கும் பலஹீனத்தினால் சமர்த்தருக்குக் கீழ்ப்படிதலாம். இவ்விதக் கீழ்ப்படிதலைப் பூண்டிருக்கும் மக்களையே, பெரியோர்கள் நன்மக்களென்று சொல்லுவர். இவ்விதகுணத்தினால் தாழ்மையமையும். தாழ்மை விருத்தியாக, அகங்காரம், பொறாமை, பொய், சூது, வஞ்சனை, மதியாமை முதலிய துர்க்குணங்கள் அவதரித்து அண்டா. கீழ்ப்படியாமையானது சகல

துன்பத்திற்கும் வித்தாயிருப்பதுபோல, கீழ்ப்படிதலானது சகல நன்மைகளுக்கும் காரணமாய் மனிதப்பிறவி எடுத்த நாள் தொடங்கி அவன் சுகஜீவியாய் வாழவும், செல்வசம்பத்து அதிகரிக்கவும், பெரியோர் மதிக்கவும், கடவுள் கிருபாநோக்கம் புரியவும், நல்ல புதல்வரைப் பெறவும், உலகத்தில் நற்கீர்த்தியடையவும் உரிமையாயிருக்கிறது. கீழ்ப்படிதலினால் அடியில்வரும் குணங்களமைகின்றன. 1-வது கடவுளுக்கு அந்தி சந்தி இருவேளையும் வந்தனைபுரிந்து அவருக்குப்பயந்து நடத்தல்; 2-வது தாய்தந்தையர்க்கு அடங்கி அவர்கள் சொற்படி நடத்தல்; 3-வது பெரியோருக்கு ஆசையோடும் வணக்கத்தோடும் வந்தனஞ்செய்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்; 4-வது எல்லோரிடத்தும் மரியாதையோடும் கனிவோடும் நடந்துகொள்ளல்; 5-வது எளியோர் முதியோர் பிணியாளர் குருபிகள் ஆகியவர்களுக்கு உதவி புரிதல்; 6-வது எந்த வேலையையும் ஊக்கத்தோடும் கவனத்தோடும் செய்தல்; 7-வது தேவாலயங்களைத் தரிசித்து வருதல்; 8-வது கடவுள் அடியார்க்கு வந்தனம் புரிதல்; 9-வது அதிகாலையில் எழுந்திருத்தல்; 10-வது நற்குணமுடையவரோடு நேசித்தல் முதலியனவாம். ஆதலால், பெற்றோர்களே ! உங்கள் பிள்ளைகட்குக் கீழ்ப்படிதலென்னும் சிறந்த பாடத்தைச் சிறு வயதிலேயே கற்பித்துவையுங்கள். இவ்வாறு செய்யின் நீங்கள் வருந்திப்பெற்ற புத்திரரால் நற்புகழ்ச்சி பெறுவீர்கள். சில பிள்ளைகள் அடங்காதிருத்தலும், தாய் தந்தையர்க்கு நீங்காப் பழிபாவத்தை வருவித்தலும், திருடராதலும், உலகத்தாரால் பழிக்கப்படுதலும் நேருவது இக்கீழ்ப்படிதலென்னும் குணத்தைக் கற்பியாத குறைவினாலேயேயன்றி வேறொன்றினாலன்று. இந்த விஷயம் சௌக்கியசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் வரைந்துள்ளது.

"தாழ்மையுற்றோர் சேழ்மையடையார்"

"தாழ்ந்தது தங்கம் உயர்ந்தது செம்பு" என்னும் பழமொழிகளின்படி தன்னைத்தான் தாழ்த்திக்கொண்டவனெவனோ அவனே உலகத்தில் கடவுளாலும் பெரியோராலும் அதிகாரிகளாலும் உயர்த்தப்படுவான். தாழ்மையென்பதும் கீழ்ப்படிதலின் ஒருபாகமே. தாழ்மையுள்ளவனிடத்தில் கோபம், வஞ்சனை, சண்டை முதலிய தூர்குணங்களிரா. சகலசம்பத்தும்தானே வந்தெய்தும். இவ்வித தாழ்மை நல்லோரிடத்தே நன்குவிளங்கும்.

சாதாரணமாக, தாழ்ந்து நடந்ததினால்தான் பாண்டவர் தாங்களிழந்த நாட்டை மறுபடியும் பெற்றதும், சத்துருக்களை வென்று கீர்த்திபெற்றதும், அரிச்சந்திரனும் அக்குணத்தாலேயே விஸ்வாமித்திரரைத் தோற்கச்செய்ததும், சத்தியவாக்கி என்ற சிறப்புப் பெயர்பூண்டதும். மேற்கண்ட குணங்கள் தாய் தந்தையரிடத்து விளங்கினால் பிள்ளைகள் அதிக சுலபமாய்க் கண்டு பாவிக்க ஹேதுவாகும். இன்றேல், மக்கள் இக்குணத்தைக் கொண்டிருப்பது அருமையாகும். இக்குணத்தினாலடைந்த கீர்த்திகளையும் செல்வங்களையும் தாய் தந்தையர் மக்களுக்குக் கதைகளாலும் பழமொழிகளாலும் போதித்துவரல்வேண்டும். சாதாரணமாய் இருவர் சண்டையிடும்போது, அவருள் ஒருவன் தாழ்மையானவனாயிருக்கின், அச்சண்டை சீக்கிரம் நின்றுவிடும். தாழ்மையே, சண்டை, கோபம், ஆகிய நெருப்புகளை அவிக்கும் ஜலம். தாய் தந்தையர்களே ! உங்கள் மக்கள் மேற்கண்ட ஆபரணத்தை அடிக்கடி தரித்துவருமாறு செய்வீர்களென்று நம் நாட்டில் நடந்தேறிவருகின்ற ஆனந்தபோதினி என்னும் ஆபரணத்தை தரித்துக்கொண்டிருக்கின்ற ஒரு சந்தாதாரனாகிய நான் வலியுறுத்துகின்றனன். நாமும் நாம் கையாடிவருகின்ற ஆனந்தபோதினியும் அதன் தாய்தந்தையராகிய பத்திராசிரியரும், பத்திராதிபரும் நீடூழிகாலம் வாழவேண்டுமாய் சச்சிதானந்த பரம்பொருளாகிய கருணாகரக் கடவுளை முழுமனதுடன் பிரார்த்திப்போமாக.



அந்தப்பன்பட்டி, O. S. முருகேசம் பிள்ளை, மல்லசமுத்திரம்.

---

## இராஜயோகம்.

(190-வது பக்கத் தொடர்ச்சி)

(4) பிராணாயாமம் என்பது சுவாசத்தைப் பற்றிய விஷயமென்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் அது தவறு. சுவாசமானது பிராணாயாமத்தையடைய ஓர் சாதனமாகும். பிராணனை யடக்கி நம் கைவசம் செய்துகொள்வதற்குத்தான் பிராணாயாமம் என்று பெயர். தத்வசாஸ்திரிகளின் படி இவ்வுலகானது இரண்டுவித வஸ்துக்களாலுண்டானது. அதில் ஆகாசமென்பது ஒன்று. இந்த ஆகாசம்தான். காற்றாகவும், நெருப்பாகவும், திரவபதார்த்தமாகவும், திடபதார்த்தமாகவும் ஆகிறது. இவ்வுலகத்தில் நாம் பார்க்கிற எல்லா வஸ்துக்களும் ஆகாசத்திலிருந்துதான் உண்டாகின்றன. ஆனால் ஆகாசம் சூக்ஷமமாயிருப்பதால், நாமதைப் பார்க்கமுடியாது. அது ஸ்தூலமாகி எதாவது ஒரு ரூபமெடுத்துக் கொண்டால்தான் பார்க்கமுடியும். சிருஷ்டி யாரம்பத்தில் ஆகாசத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. சிருஷ்டியந்தத்தில் திடதிரவ, வாயுபதார்த்தங்களெல்லாம் மறுபடி ஆகாசமாக மாறிவிடும். மறு சிருஷ்டியில் அவைகள் ஆகாசத்திலிருந்தே உண்டாகும். இந்த ஆகாசமானது எந்த சக்தியால் உலாவிற்று என்று கேண்மின். பிராணன் என்னும் சக்தியினால்தான். நினைத்தல், அசைத்தல், இழுத்தல் எல்லாம் இப்பிராணனின் காரியம்தான். சூக்ஷமமாகிய ஆகாசத்தை யசைத்து ஸ்தூலரூபங்களுடன் அநேகவஸ்துக்களை யுண்டாக்குவதும் இப்பிராணன்தான். ஆகையால் இப்பிராணனை யடக்கவல்லவனுக்கு இவ்வுலகும் அடங்கியேயிருக்கும்.

இப்பிராணனை யடக்க பிராணாயாமத்தால்தான் முடியும் இதற்கு அநேக அப்பியாசங்களிருக்கின்றன. அவைகளைச் சற்று கவனிப்போம் :—

முன்னே சொல்லியபடி ஏதாவதொரு ஆசனத்தைவகித்து சாய்வில்லாமல் நேராக உட்காருதல்வேண்டும். பிறகு ஒரே காலவளவில் சுவாசத்தை உள்ளுக்கிழுத்து வெளியேவிடப் பழகவேண்டும். இதோடு 'ஓம்' என்னும் பிரணவாக்ஷரத்தை உச்சரித்து சுவாசம்விடுதல் நல்லது. இவ்வாறு கொஞ்சகாலம் செய்து வந்த பிறகு வலது கட்டைவிரலால் வலது நாசியை மூடிக்கொண்டு, இடது நாசியால் காற்றைப்பூரகம் செய்யவேண்டும். இவ்வாறு உள்ளுக்கிழுத்த காற்று

னது நாடி வழியாய்ச்சென்று இருதுடைகளும் சேருமிடத்திலிருக்கும் மூலாதாரத்தைப் போய்முட்டும். அங்கேயே உள்ளுக்கிழுத்த காற்றை சற்றுநேரம் கும்பித்துவைக்கவேண்டும். இதற்கு இரண்டு நாசியையும் மூடிக்கொண்டால் சௌகரியமாயிருக்கும். பிறகு வலதுநாசியைத்திறந்து மூலாதாரத்தில் கும்பித்து வைத்த காற்றை மேலெழுப்பி ரேசகம் செய்யவேண்டும். இவ்வாறு காற்றையுள்ளே யிழுப்பதற்கும் கும்பித்துவைப்பதற்கும் ரேசகம் செய்வதற்கும் காலக்கணக்குண்டு. அதை யனுசரித்துச் செய்தால்தான் மனோசாந்தி யுண்டாகும். இவ்வாறு, விடாமுயற்சிகொண்டு அநேகநாள் செய்தால் மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி என்னும் சக்தியானது எழுப்பப்பட்டு மேலேகிளம்பும். இது மேலேகிளம்ப ஆரம்பித்துவிட்டால் மனிதனுக்கு ஞானோதயமாகும். நாம்மேலே சொல்லியபடி இடகலை, பிங்கலை யென்னு மிருநாடிகளுக் கிடையே நடுமுதுகெலும்பின் வழியே செல்வதற்குத்தான் சுஷும்நா என்று பெயர். சாதாரண ஜனங்களுக்கு இடகலை, பிங்கலை நாடிகள் திறந்திருந்தபோதிலும் சுஷும்நா நாடி மூடப்பட்டிருக்கிறது. யோகியின்வேலை அதைத்திறப்பதுதான். இந்த சுஷும்நா நாடியில் (1) மூலாதாரம் (2) சுவாதிஷ்டானம் (3) மணிபூரகம் (4) அனாகதம் (5) விசுத்தி (6) ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்களிருக்கின்றன. இவைகளில் மூலாதாரத்தில்தான் சர்வசக்திய மடங்கியிருக்கின்றது. இச்சக்திகளை யெல்லாம் மூளைக்குக் கொண்டுவருதல்தான் யோகியின்வேலை. இவைகளை மூளைக்குக்கொண்டுவர பிராணாயாமத்தால்தான் முடியுமாதலால், பிராணாயாமத்தைச் சரிவர அனுஷ்டிப்பது யோகியாக விரும்புவோனின் முக்கிய கடமையாகும்.

இவ்வாறு பிராணாயாமத்தை யனுஷ்டித்த மனம் சாந்தத்தையடைந்த பிறகு ஐந்தாவது அங்கமாகிய பிரத்யாகாரத்தை யனுஷ்டிக்கவேண்டும். விஷயங்களைக் கண்டவுடனே ஓடித்தாவும் மனதை அவ்வண்ணம் ஓடாமல் நிறுத்தி அதை யாளுவதுதான் பிரத்தியாகாரம். ஆனால் மனதையடக்கி யாள்வது இலேசான காரியமல்ல. விடாமுயற்சிகொண்டு சிறிது சிறிதாய் அடக்க முயலவேண்டும். இதற்கு ஒரு நல்ல உபாயமொன்றிருக்கிறது. அதென்னவெனின் *மனமானது உலகவிஷயங்களை நினைத்துக்கொண் டிருக்கையில் மனிதன்

*குறிப்பு.—மனம் பல ஜன்மப் பழக்கத்தால் அலைந்து திரிவது—தினம் சொல்பகாலம் அதை அடக்கப் பழகிவிட்டு பிறகு பழையபடி விட்டுவிட்டால் அது கொஞ்சத்தில் வழிக்கு வராது. நாம் அன்னியமாய் நின்று மனதைச் சாக்ஷியாய்ப் பார்த்துக்கொண்டிருப்பது பெரும்பாலாரால் முடியாத காரியம். இலௌகீகத்திலிருப்போர் அதிககாலம் அப்படிச்செய்யவுமுடியாது. அது கைகூடிவிட்டால் சவிகற்ப சமாதியே கைகூடியதாகும். பின்னால் கூறியமாதிரி நாம் எத்தொழிலைச்செய்தாலும் அச்சமயம் மனம் அதைவிட்டு வேறுசிந்தனையில்லாமலிருக்கப் பழகவேண்டும். அப்போது நாம் ஒன்றும் செய்யாதிருக்கையில் மனமும் தயங்கி நிற்கும் நிலைக்கு மெல்ல மெல்ல வந்துவிடும். சொரூபதியானத்தில் சுலபமாய் அதைவிட்டு வேறு சிந்தனையின்றி நிற்கும். இதனால் பெரும் பயன் கிடைத்து மனோலயத்திற்கு வழியுண்டாய்விடும்.

பத்திரிகாசிரியர்.



அதோடு கலவாமல் தான் வேறாக நின்று மனம் என்ன நினைக்கிறதென்று பார்த்துக்கொண் டிருப்பதுதான். இவ்வாறு செய்யின் மனதிற்குத் தனியாக ஒன்றை நினைப்பது அசாத்தியமாகும். மேலும், மனிதன், மனதின் எண்ணத்தையும் விருத்தியையும் அடிக்கடி பார்த்துக்கொண்டே வந்தால் அதனுடைய வேகம் நாளுக்குநாள் குறைந்துவிடும். இவ்வாறு அதின்வேகம் குறைந்துவிட்டால் பிறகு மனிதன் சொற்படி அது நடக்கும். இவ்வாறு மனதை யடக்கிய பின்பு அதை யாதானுமோர் விஷயத்தைப்பற்றி அதையே நாடியிருக்கும்படி செய்யப் பழகவேண்டும். இதற்குத்தான் தாரணை என்று பெயர். மனதை யடக்கிய பின்பும் அதை ஒரேவிஷயத்தை நாடி நிற்கச்செய்தல் மிகக் கஷ்டந்தான். ஒருவிஷயத்தில் நாட்டம்வைத்திருக்கும்போது, மனது மற்றொரு விஷயத்தில் பிரவேசித்தல்கூடாது. இத்தாரணையை யனுஷ்டிக்க, ஏகாந்தமாயும், நிச்சப்தமாயுமிருக்கிற ஓரறையிலுட்கார்ந்து பழகுவது நலம். இதில் கொஞ்சம் தேர்ச்சியடைந்த பிறகு மனதை, தேக அவயவங்களிலொன்றை நாடி நிற்கவாவது, மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலொன்றை நாடி நிற்கவாவது செய்யலாம். இவ்வாறு கொஞ்சநாள் பழகிவந்தால் இதில் நல்ல தேர்ச்சியையடைந்துவிடலாம். இதன்பிறகு தாரணையில் எந்த ஒருவஸ்துவில் மனது நின்றதோ அதிலேயே நீடித்தகாலம் அதை நிறுத்தப்பழகவேண்டும். இதற்கே தியானம் என்று பெயர். "தியானிப்பதற்கு விஷயமாய்நின்ற வஸ்துவின் ஸ்வரூபத்தை மறந்து, தியானிப்பதற்கு ஆதாரமாயுள்ள சைதன்னியமாத்திரமாகவே † நிற்றல் சமாதி" தாரணை, தியானம், சமாதி ஆகிய இம்மூன்றிற்கும் ஸம்யமா என்று யோகசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. "ஒரு வஸ்துவில் மனதை நிறுத்தி அந்த வஸ்துவிலேயே ஏகாக்கிரமாய் அநேகநாழிகை தியானித்து, பிறகு அத்தியானத்திற்கு விஷயமாய்நின்ற வஸ்துவின் நாமரூபத்தைவிடுத்து எதனுடைய காரியமாய் அவ்வஸ்து நாமரூபங்களைப் பெற்றதோ அந்த சைதன்ய மாத்திரமாய் நிற்கப் பழகுவதற்கு ஸம்யமா என்று பெயர்."

முதலில் ஸ்தூலவஸ்துக்களிலாரம்பித்தால்தான் பிறகு சூக்ஷ்ம வஸ்துக்களைத் தியானிக்க எளிதாகும். இதன்பிறகு சமாதியை யனுஷ்டிக்கலாம்.

ஸம்பிரக்ஞாத சமாதியென்றும் அஸம்பிரக்ஞாதசமாதியென்றும், சமாதி இருவகைப்படும். ஸம்பிரக்ஞாத சமாதியில் 1. ஸவிதற்கம் 2. நிர்விதற்கம் 3. ஸவிசாரம் 4. நிர்விசாரம் என்று நான்கு பிரிவுகளிருக்கின்றன.

ஸவிகற்ப சமாதியில் தர்க்கமுண்டு அதில் மனிதன் உலகவஸ்துக்களிலொன்றை தியானிக்கிறான். தர்க்கமில்லாத நிர்விகற்பசமாதியில் ஸ்தூலபூதங்களின் நிஜஸ்வரூபத்தையறிந்து அப்பூதங்களிடத்து மனதைப் பற்ற வைத்துத் தியானிக்கிறான். ஸ்தூலபூதங்க ளாராய்ச்சி முடிந்து சூக்ஷ்மமான தன்

†குறிப்பு.—தியானமுதிர்ச்சியில் அன்புமேலீட்டால் முன்னிலையாயிருக்கும் சொரூபம் நழுவ, நான் என்பதும் நழுவி அன்புருவமட்டுமாய் நின்றுவிடல்: அதாவது காண்பானும் (ஞாதுரு), காணப்படுபொருளும் (ஞேயம்) நழுவி, காட்சி (ஞான) மாத்திரமாய் நிற்றல்.

பத்திரிகாசிரியர்.

மாத்திரைகளை யாராய்ச்சி செய்வதே ஸவிசாரசமாதி. தன்மாத்திரைகளின் நிஜஸ்வரூபத்தை யறிந்தபின்னர் அதில் மனதை நிறுத்தலே நிர் விசாரசமாதி. இவ்வாறாய் ஸம்பிரக்ஞாத சமாதியில் எவ்வளவு விஷயங்களறிந்தபோதிலும் அஸம்பிரக்ஞாதசமாதியில்லாவிட்டால் மோக்ஷமடைய முடியாது. ஆகையால் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய அஸம்பிரக்ஞாத சமாதியே உயர்ந்தது. "மனதில் ஒரு சங்கற்பமும் உண்டாகாமல் தடுத்துவிட்டால் அதுதான் அஸம்பிரக்ஞாத சமாதி."

இவ்வாறு யோகப்பியாசத்தை எவனொருவன் விடாமுயற்சி கொண்டு அப்யசிக்கிறானோ அவன் ஆறுமாதத்தில் நல்ல யோகியாகிவிடலா மென்று யோகத்தில் தேர்ச்சியடைந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் யோகாப்பியாசம் செய்வதற்கு ஓர் நல்ல ஆசானையண்டியே பழகவேண்டும். ஆகையால் ஆரிய நேயர்களே, நீங்க ளொவ்வொருவரும் ஆசானையண்டி இராஜயோகத்தை அப்யசித்தல் நலமாகும். ஓம் தத்ஸத்.

கே. சுந்தரராமன், நீடாமங்கலம்.

இந்த இராஜயோகமானது விவேகானந்த சுவாமிகள் எழுதியிருக்கும் புத்தகத்தை யொட்டி எழுதியது.

---

## "கம்பரை யிழிவாய்க் கூறுவானேன்"

மேற்கண்ட தலைப்பெயரையுடைய வியாசத்தை 1918ஸ செப்டம்பர்மீ வெளிவந்த "பெண்கல்வி" என்ற சஞ்சிகையின் 304-வது பக்கத்தில் கண்டோம். அந்தோ அதைக்கண்ட நம்மனம் மிகுதியும் வேதனைப்பட்டது. அந்த வியாசத்தில் ம-ா-ா-ஸ்ரீ சிவத்தியாகராஜன் என்பவர் கம்பராமாயணத்தில் கம்பர் அகலிகை கல்லாய்ச் சபிக்கப்பட்டிருந்து பிறகு இராமர் பாததூளிபட்டு பெண்ணுருவமடைந்தாள் என்று கூறியுள்ளது பொய்யெனக் கூறப்புகுந்து கம்பரை "அவன், இவன்" என்றும் இதுபோல்வன அதிகம் இழிவாய்க் கூறியும், கம்பர் தன் இராமாயணத்தில் அதிக பொய்க்கதைகளை யெல்லாம் சேர்த்திருக்கிறாரென்றும் ஆகையால் அவர்கூற்றை ஒருபுறம் கட்டிவைப்போம்" என்றும் எழுதியிருப்பதாய்க் கூறப்பட்டிருக்கிறது.

அந்தோ, நாம் கல்விகற்பது பெரியாரைத் தூஷிக்கவும். அவர்கள் நூல்களிற் குற்றங்கூறிக் களிக்கவுந்தானோ? இச்சஞ்சிகையில் "ஐயவினாவிற்கு விடை" என்ற வியாசத்தின் குறிப்பில் பின்பாகத்தில் பத்திராசிரியர் கூறியுள்ளவற்றிற்கு இதுவும் ஒரு திருஷ்டாந்தமே யாகும்.

அகலிகை சாபவிஷயத்தைப்பற்றி தாயுமானவரும் கூறியிருக்கிறாரென்று மேல்கண்ட வியாசத்தில் குறிப்பிட்டபடி, அத்தகைய ஞானிகளையும் நாம் நம்பிலும் அறிவிற்குறைந்தவர்களாகக் கருதுவதாய் ஏற்படுகிறது.

ஒரு விஷயத்தைப் பொய்ப்படுத்துவதற்கு முன் அது ஏன் உண்மையாயிருக்கலாகாதென்பதைக் கண்டறியவேண்டும். அப்போது அது நிலைக்காவிடின், பொய்யென்பது தானே விளங்கிவிடும். அதுவரையில் அதைப்பொய்



யென்று ருசுப்படுத்தல் நிலைக்காது. நம்முன்னோர் பெற்றிருந்த சாபானுக்கிரக சக்திகளையும், இன்னும் பல அரிய தெய்வீகச்செயல்களையும், அவற்றை யடையவிப்போதும் வழியுண்டென்பதையும், கற்றோரும் இன்னும் உளரென்பதையும் அறிந்தோர் இதைப் பொய்யென்று ஒருபோது கூறார்கள். (மிகச் சுருக்கமாய்க் கூறுகிறோம்) அவற்றை யுணராது மேல்நாட்டு ஜடசாஸ்திரத்தைப் பூரணமாய் நம்பி யவற்றின்படியே ஆன்மார்த்தநூல்கள் இருக்கவேண்டுமென்று எதிர் பார்ப்போர்கள்தான் இதையும் இன்னும் நம்முன்னோர் செய்துள்ள அற்புத விஷயங்களையும் பொய்யென்று கருதுவார்கள். மேலும் அதை நம்புவதில் உலகத்தோர்க்கு என்ன கெடுதியுண்டாகும்? அந்தோ, இத்தகைய அனாவசியமும் காரணமற்றதுமான விஷயத்தை யாதாரமாகக்கொண்டு நம்முன்னோராகிய மகான்களையும், ஸரஸ்வதி கடாட்சம்பெற்ற பெரியோரையும் தூஷிப்பதும், அவர்கள்மேல் குற்றம் கூறுவதும் பெரும்பாதகமாகும். ஆனால் ஒன்று இத்தகைய கண்டனங்களனைத்தும் நீர்மேற் குமிழிபோல் ஒழிந்துபோமேயன்றி உலகில் நிலையாய் ஒருபோதும் நில்லா. அந்த முன்னோர் வாக்குகளே என்றும் நிலையாயிருக்கும் என்பது சத்தியம்.

ஆகையால் நண்பர்களே, இத்தகைய வீண் கூற்றுகளையெல்லாம் சற்றும் செவியேற்காதீர்கள். அத்தகைய குதர்க்கங்களுக்கு பதிலுரைக்கத் தலையிடாதீர்கள். பெரியோரை யலட்சியமாய் மரியாதையின்றிப் பேசுவோர் நமக்கும் மனவருத்தமுண்டாகப் பேசுவார்களென்பது உண்மை. ஆகையால் அவர்கள் கூறுவதைக் கூறிக்கொள்ளட்டும் என்று அதுவிஷயமாய் அவர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல், அக்கூற்றுகளைச் செவியேற்கா திருந்துவிடவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை. சீடன்.

---

## நாராயண தாஸர் உபந்நியாசம்.

### யோக ஸாதன ஸகாயங்கள்

(141 வது பக்கத் தொடர்ச்சி)

### கபதோஷ நிவர்த்தி:—

யோகசாதனை செய்ய முயலும் முமுக்ஷுக்களுக்கு கபமானது காலனைப்போல் விரோதியாம். இது கண்டத்தை இருப்பிடமாகக்கொண்டு, நாபிமுதல் வயிறு, மார்பு, கபால முறைபரியந்தம் வியாபித்திருக்கும். இக்கபமானது ஜலதோஷத்தால் விருத்தியாகி சிலசமயங்களில் இருமல், மூக்கடைப்பு, மார்டைப்பு. ஜுரம் முதலிய அபாயமான வியாதிகளை யுண்டுபண்ணி, மிகவுங் கஷ்டத்தை யளிக்கிறபடியால் அக்காலத்தில் யோகாப்பியாசஞ்செய்ய சாத்தியப்படாது. ஒருக்கால் செய்யப்படினும், அது வீண்பிரயாசை மாத்திரமேயாம். மேலும், இந்தக் கபதோஷ முதிர்ச்சியால் நரை திரையாதிகள் உண்டாகிறதென யோகநூற்களில் கூறப்பட்டிருக்கிறது. தவிர யோகத்தில் சிறிது அனுபவமடைந்தவர்களையுங்கூட கபதோஷமானது ஒவ்வொருசமயம் வாதிக்க ஆரம்பித்துவிடுகிறது என்றால் அப்பியாசிகளைப்பற்றிக் கேட்பானேன்? ஆகையால் இக்கபதோஷத்தை அவசியம் நிவர்த்திக்கப் பிரயத்தனஞ் செய்யவேண்டும்.

ஓ மாணாக்கர்களே! இதற்கோ ருபாயஞ் சொல்லுகிறேன் அதை ஸூக்ஷ்ம வுணர்வால் கிரகித்துக்கொள்ளக் கடவீர்கள். அஃதாவது:—

கரிசிலையாவது பொற்றலையாவது கொண்டுவந்து ஒருபலம் சார் எடுத்து அவ்வளவு ஆவின்நெய் அதனோடு கலந்து ரவியில் வைத்துச் சுண்டியபின்

எடுத்துவைத்துக்கொண்டு, காலையில் (அருணோதயத்திற்குமுன்) சவுசமான பிறகு, காயுருவிவேரல்லது கோலால் தந்தசுத்திசெய்துகொண்டு, ஷெ கிருதத்தில் சிறிதளவெடுத்து நடுவிரல் சுட்டுவிரல் (ஆள்காட்டி விரல்) பெருவிரல் இம்மூன்றின் நுனியிலுந் தடவி, பெருவிரலால் கபாலகுஹரத்திலும் மற்றிரண்டு விரல்களால் உண்ணாக்கிலுந் தடவிவரக் கபதோஷம் கதிரவனைக்கண்ட பனிபோல் நிவர்த்தியாகும்.

மேற்சொன்ன மூலிகைகள் எப்போதும் கிடைக்குமாகில் அவைகளிலொன்றைச் சிறிதளவுகொண்டுவந்து கசக்கிப் போதுமானவளவு சார் உள்ளங்கையில் பிழிந்து அவ்வளவு ஆவின்நெய் அதனோடுசேர்த்து செவ்வையாய் மத்தித்து முன்போல மூன்றுவிரல்களாலுந் தொட்டு உண்ணாக்கிலுங் கபாலகுஹரத்திலுந் தடவிவர செவ்வையாய்க் கபங்கழியும். ஷெ சக்கையை யெறிந்துவிடாமல் கபசுத்தி செய்வதற்குமுன் அதனால் தந்த சுத்தி செய்துகொள்வது நலம். கபதோஷத்தைக் கண்டிக்க இது சிறந்த முறையாம். குண்டலிசக்தியின் நித்திராபங்கத்திற்கு இதுவும் ஒரு தந்திரமென மேலோர் கூறுவர்.

[இதைவிட்டு வஸ்திரத்தை விழுங்கி யெடுப்பதாகிய தௌதிகர்மம் இராஜயோகிக்கடாத காரியமாகும்.]

மலபந்த நிவாரணி:—

கபதோஷத்தைப்போலவே மலபந்தமும் விசேஷமாய் யோகத்தைக் கெடுப்பதாயிருந்தால் இதையும் அவசியம் நிவர்த்திக்கவேண்டியதா யிருக்கிறது. ஆகலின், இராஜயோகிகளின்பொருட்டு, ஈண்டு சுலபமான மலபந்த நிவாரணதந்திரங்கள் சில கூறப்படுகின்றன. அவைவருமாறு:—

(1) பஞ்சசாகத்தி லொன்றாகிய சிறுகீரையென்னும் மூலிகையைக் கொணர்ந்து, சுத்தமான சிறிது லவணமும் மிளகு, சீரகம், கருவேப்பிலை, ஆவின்நெய் இவைகள் கூட்டிப் பக்குவஞ்செய்து, சாதத்தில் சேர்த்தாவது, வெறுமனேயாவது சாப்பிட்டுவர மூலவுஷ்ணம் நீங்கி மலம் தாராளமாய்ப் பிரவிர்த்தியாகும்.

(2) திரிபலமென்னுங் கடைச்சரக்குகளைச் சேகரித்துக் தனித்தனிச் சூர்ணஞ்செய்தபின், மூன்றையுஞ் சமனிடையாகக்கூட்டி, ஜாடியிலடைத்து மூடிவைத்துக்கொண்டு, இரவில் சயனிக்க ஐந்து நிமிஷத்திற்குமுன் திரிகடிகைப்பிரமாணஞ் சிறிது சர்க்கரையிற்கொள்ள காலையில் கட்டிப்போன அசுத்தமான மலங்களெல்லாந் தாராளமாய்க் கழியும். இவ்வா றடிக்கடி செய்துவருவதால் தேகத்திலுள்ள வாத பித்த கபசம்பந்தமான துர்நீர்களெல்லாம் நீங்கி யோகத்தில் நல்ல குணத்தைத் தருகிறது.

(3) இரவில் சீனியாவது கற்கண்டாவது சேர்த்துக் காய்ச்சிய போதுமானவளவு ஆவின்பாலைச் சாப்பிட்டுவருவதாலும்; திராக்ஷை, வாழை, அன்னாசிஸ், மா முதலிய மதுரமான பழவர்க்கங்களைத் தின்பதாலுஞ் சுகமாய் மலவிஸர்ஜனமாகும்.

(4) புத்திமானானவன் உஷத்காலத்திலாவது பிராதக்காலத்திலாவது எழுந்து அவசியம் மலபாதையைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒருக்கால் மலபந்தமானால், "மிருதுவான ஆஸனத்தில் படுத்து இடுப்பைப் பிடித்துக்கொண்டு, புஜம் முதல் முழங்கைவரையிலுமான புஜங்களாலும், பிடரி சிரவின் பின்புறமென்பவற்றாலும் பூமியைப்பற்றி மேலே காலைநீட்டியிருந்தலாகிய 'விபரீதகரணி' யில் பத்துநிமிஷமிருப்பதால் மலக்கட்டு விடுபடும்



உடனே ஆஸனத்தைவிட்டு மெதுவாயெழுந்துபோய் மலபாதையைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்."

[விபரீதகரணியானது ஹடயோகப்பிரதிபிகையின் மூன்றாவது உபதேசத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.]

(5) முற்கூறியவண்ணம் விபரீத கரணியைச் செய்ய சக்தியற்றவன் இரண்டுகையிலுமுள்ள சுட்டுவிரல்களின் நகத்தைச் சீவிவிட்டு, ஆழிவிரை யெண்ணெய் அல்லது விளக்கெண்ணெயிலாவது, நெய்யிலாவது விரலைத் தோய்த்துக் குதத்துவாரத்தில் முற்றும் புகும்படி அடிக்கடி செய்வதால் மலாசயத்தில் சுத்தக்காற்றுப் பிரவேசித்துக் காய்ந்து தீய்ந்துபோனவும், துர்நாற்றமுள்ளனவுமான மலங்களை இளக்கி வெளியே தள்ளவாரம்பிக்கிறது. அப்போது சவுசம் செய்துகொள்ளலாம். இதற்குச் சக்கிரிகர்மமென்றுபெயர். இந்தக் கர்மத்தை யடிக்கடி செய்துவருவதால், அஜீர்ணாதி ரோகங்கள் நாசமாவதுடன் தேகத்திற்குக் கனமின்மையையுண்டுபண்ணி, யோகாப்பியாசிகளுக்கு நல்ல ஊக்கத்தைக் கொடுக்கிறது.

(6) அருணோதயத்திற்கு முன்னெழுந்து ஸ்வஸ்திகாஸனத்திலுட்கார்ந்து நௌலிகர்ம அப்பியாஸஞ்செய்தால் மலசுத்தியாகும். ஒருகாலாகாவிடின், ஒருசொம்பு ஜலத்தைத் தைரியமாய்க் குடித்து முன்போல் (நௌலி) சாதனையை விதிப்படிமுடித்து ஆசானறிவித்தபடி குதத்துவாரத்தின் வழியாய் மலஜலங்களை விடவேண்டும். இப்படிச் செய்வதால் மலாசயம் பரிசுத்தமாகிறது.

[நௌலிகர்மமாவது :—ஸ்வஸ்திகாஸனத்திலுட்கார்ந்து, தோள்களை வளைத்து நாபியைப் பார்த்தவண்ண மிருந்துகொண்டு, வயிற்றை வலமிடமாக நீர்ச்சுழியைப்போற் சுழற்றுதலாம். ஸ்வஸ்திகாஸனமாவது:—தொடைக்கும் கணைக்காலுக்கும் இடையாகிய முழந்தாள்மத்தியில் இரண்டுபாதங்களையும் வைத்துக்கொண்டு யோகிகளிருப்பதெதுவோ, அதைச் சுவஸ்திகமென்று ஸ்ரீதரரால் சொல்லப்பட்டது.]

இக்கர்மத்தால் ஜடராக்கினி விருத்தியாவதால் குண்டலி சீக்கிரம் விழிப்பையடையும். தவிர நல்ல பசியுண்டாவதுடன் ஸர்வரோகங்களுந் தீரும்.

தொடரும்.

A. அர்த்தநாரி சர்மா. பனமரத்துப்பட்டி, சேலம்.

---

## ஆத்திச்சூடி—உதாரணக் கதைகள்.

(170-வது பக்கத் தொடர்ச்சி.)

### " இயல்வது கரவேல் "

ஓர் கிராமத்தில் முனிசாமி என்ற ஒரு சிறுவன் பள்ளிக் கூடத்தில் வாசித்து வந்தான். அவனுக்கு உபாத்தியாயர், தினந்தோறும் ஆத்திச்சூடி நீதிகளைப் போதித்து வருவது வழக்கம். "ஒருவன், தன்னிடத்தில், பிறருக்குக் கொடுத்து உதவக்கூடிய பொருளிருந்தும். (செல்வம், கல்வி, வேறு எப்பொருளாயினும்) அதனை, யாசிப்பவருக்குக்கொடாமல் மறைத்துவைப்பது கூடாது" என்னும் கருத்தை விளக்கிக் காட்டும், "இயல்வது கரவேல்," என்னும் சூத்திரத்தை அவர் விசேஷமாக முனிசாமிக்குப் போதிப்பதுண்டு. அப்படியிருந்தும் அவன் தன்னிடத்திலுள்ள தின்பண்டங்களை, மற்ற சிறுவர் விரும்பிக் கேட்டாலும் கொடாமல் மறைத்து விடுவான். அதனால், 'அவன் மிகுந்த சர்மி,'

என்றபழி, பள்ளிக்கூடத்தில், அவனுக்கு மிகுந்திருந்தது. இப்படியிருக்க, அவன் ஒருநாள் பள்ளிக்கூடத்துக்குப்போகும்போது, ஒரு அப்பத்தை வாங்கி மடியிற்கட்டிக்கொண்டு சென்றான். அதைப்பார்த்திருந்த மற்றொரு சிறுவன் அவனிடம், "முனிசாமி! எனக்கு மிக்க பசி; உன்னிடமிருக்கிற அப்பத்தில் கொஞ்சம்கொடு," என்று கேட்டான். அதற்கு அவன், "என்னிடம் அப்பமே கிடையாது," என்று சத்தியம் செய்துவிட்டான். அந்தச் சிறுவன், மனவருத்தத்தோடு போய்விட்டான். பிறகு முனிசாமி, ஒரு தனியிடம்சென்று இரகசியமாகத் தின்பதற்கு அப்பத்தைக் கையில் எடுத்தான். உடனே ஓர் பருந்து திடீரென்று பாய்ந்து, நகங்களால் அவன் கையைக் கீறி, அப்பத்தையும் கௌவிக்கொண்டு போயிற்று. முனிசாமியின் கரத்தில் இரத்தம் பீறிட்டு வடிந்தது; அவனுக்கு வேதனை அதிகரித்தது; அவன், ஓவென்றலறியழுதான். முன் அவனிடம் அப்பங்கேட்டுச் சென்ற சிறுவன் ஒருபக்கத்தில் மறைந்திருந்து, முனிசாமிக்கு நேர்ந்ததைக்கண்டு ஓடிவந்து அவனிடம், "எனக்கு அப்பம் இல்லையென்றாயே; அதற்குக் கிடைத்த பலனைப்பார்த்தாயா," என்று சிரித்தான். அப்பொழுது அவனுக்கு வெட்கமும் துக்கமும்அதிகரித்துவிட்டது. உபாத்தியாயர், "இயல்வது கரவேல்," என்று உபதேசித்ததும் நினைவில் வந்தது. உடனே அவன் தன்னுடைய உலோபத்தனத்தை விட்டுவிட்டான். ஆதலால், ஒவ்வொருவரும் "இயல்வது கரவேல்," என்ற வாக்கியத்திற்கிணங்க நடத்தல்வேண்டும்.

## "ஈவது விலக்கேல்"

ஒரு பள்ளிக்கூடத்தில், 'சுந்தரராஜன்' என்னும் ஓர் பிரபு குமாரனும், சங்கரன் என்னும் ஓர் ஏழைச் சிறுவனும் கல்விகற்று வந்தார்கள். சுந்தரராஜன் தயாளகுண முள்ளவனாயும், செல்வவந்தர்பிள்ளையாயும் இருந்தபடியினாலே சங்கரன் அவனிடத்தில் சகாயம் பெற்றுக்கொள்ளலாமென்று, அதிகமாக சிநேகித்து வந்தான். சுந்தரராஜன் தனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களை மற்ற ஏழைச் சிறுவருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவருவான், வேண்டியோருக்கு எவ்வித உதவியும் செய்வான். இவ்வாறு அவன் கொடுத்து வருவதைச் சங்கரன் தினந்தோறும் பார்த்துவந்தான். இவன், பொறாமைக் குணமும், சுயநலப்பிரியமும் உள்ளவனாதலால், "சுந்தரராஜன் அதிகமாகச் செலவிட்டு வருகிறான், நாம் அவனுக்கு நற்புத்தி கூறுவதுபோல் அவன் ஈகையைத் தடைசெய்து செலவை நிறுத்திவிட்டால், அவன் நமக்கு எதையும் அதிகமாகக் கொடுப்பான்," என்று நினைத்து, சுந்தரராஜன் யாருக்கேனும் ஒன்றைக் கொடுக்கும்போதெல்லாம், "நீ இப்படிச் செலவு செய்யாதே; நாளைக்கு உனக்கொன்று இல்லாமற்போனால் எவன் கொடுப்பவன்?" என்று சொல்லித் தடுத்துவந்தான். சுந்தரராஜன் தயாளகுணமுள்ளவனாயிருந்தாலும், "அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும்" என்றபடி, சங்கரன் ஓயாமல் சொல்லிக்கொண்டு வந்தபடியால், நாளுக்குநாள் அவன் ஈகையைக் குறைத்து உலோபத் தன்மை யுடையவனாய் விட்டான்.

சங்கரனுக்கும் சிறிதுகாலம் வரை வேண்டியதை அதிகமாகக் கொடுத்துக்கொண்டு வந்து பின்பு அதையும் நிறுத்திவிட்டான். அதன்மேல் ஒருதினம் சங்கரன், "வீட்டில் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லை; எனக்கு மிகுந்த பசியாயிருக்கிறது, ஏதாவதுகொடு," என்று சுந்தரராஜனிடம் கேட்டான். அதற்கு அவன் "ஐயோ! இப்பொழுது என் கையில் ஒன்றுமில்லை; வீட்டிற்குப்போய் ஏதாவது எடுத்துக்கொண்டு வரலாமென்றால் என் தகப்பனார் முந்தினகாலத்தைப் போல் இல்லை; இப்போது எதற்கும் என்னைக் கண்டிக்கிறார்; ஆகையால், ஒன்றும் முடியாது; நீ போய்வா," என்று சொல்லிவிட்டான். சங்கரனுக்கு அப்போது தான் புத்திவந்தது. அவன், "சுந்தரராஜன் செலவைத் தடுத்தால் நலம் கிடைக்கும்," என்று நாம் அவனுக்கு துர்ப்போதனை செய்து வந்தோம்; அதனால் அவன் உலோபத் தனமுடையவனாகி நம்மிடத்தும் அதைக்காட்டி விட்டான்; இது நம்மால் வந்த கேடுதான்; 'ஈவது விலக்கேல்,' என்று நமக்கு உபாத்தியார் போதித்தும் நாம் அதை மறந்தபடியால் நமக்கு இக்கேடு சம்பவித்தது," என்று அதுமுதல், ஈவது விலக்கும் குணத்தை நிறுத்தி விட்டான். ஆதலால் ஈவது விலக்கலாகாது என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

(தொடரும்.)



---

## சில கேள்விகள்

இரங்கூன்வாசியாகிய நமது சந்தாநேயரில் ஒருவர் கீழ்வரும் கேள்விகளுக்கு விடையறியவிரும்புவதால், கேள்விகளையும் நமதுசிற்றறிவிற் கெட்டிய விடைகளையும் இங்கு வெளியிடுகிறோம்:—

1. கேள்வி:—"காவல்தானே பாவையர்க்கழகு" என்ற வாக்கியப்படி பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளக்கூடுமா? அல்லது மற்றவர்கள் உதவிசெய்யவேண்டுமா?

விடை:—முதலாவது பெண்கள் அச்சம், மடம், நாணம் என்ற வேலிகளால் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளவேண்டும். இதற்காகவே பெண்கள் அன்னியபுருடர் எதிரிற்செல்லவாவது பேசவாவது நாணமடைந்து அவற்றைத் தவிர்க்கவேண்டுமென்றும், பலபுருடர்கள் உள்ளவிடத்தில் செல்லலாகாதென்றும், அன்னியபுருடர்கள் கூட்டத்தில் தன்புருடனிருந்தால் அச்சமயம் புருடனிடம் போய் பேசலாகாதென்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த விதியின்படி பிறர் உதவியின்றி தன்னைக்காத்துக்கொள்ளக்கூடியது எல்லாமாதராலும் முடியாதகாரியம்—எங்கோ ஒருவரால்தான் அதுமுடியும்.

ஆகையால் பெண்களுக்குத் தாய்தந்தையர் புருடர் துணையும்வேண்டும்.

அதாவது முதலாவது தாய்தந்தையர் தம்பெண்கள் ஆசாரம்பிசகி நடவாதபடி கவனித்துவரவேண்டும். பிறகு கொஞ்சம் புத்திவந்ததுமுதலே, மேற்கண்ட அச்சம், மடம், நாணம் முதலிய வேலிகளை யழிக்காது பாதுகாத்துவரும்படி பயிற்சிசெய்யவேண்டும். தாய்வீட்டில் பெண்கள் கலியாணமாகாதிருக்கும்வரை சுலபமாய் இப்பழக்கத்தில் படிந்துவிடுவார்கள். ஏனெனில், கலியாணமாகும்வரையில் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தவிர வேறெந்த புருடர் முன்னும் எதிரில் செல்லலாகாது, வாயிற்படியில் கூட சென்று எட்டிப்பார்க்கலாகாதென்று விதிக்கப் பட்டிருப்பதால்.

கலியாணமாய்விட்டாலோ இக்காலத்திய பெண்களிற் பலர் "அப்பா! சனிவிட்டது. நமது விலங்கு அறுபட்டுப்போயிற்று. இனிதாராளமாய் எங்கும் செல்லலாம்" என்று எண்ணிக் கொள்கிறார்கள். ஆகையால் அதற்கப்புறம் புருடன் காவல் உதவிவேண்டும். இதோடு ஸ்திரீகள் இயற்கையாகவே தேகவல்லமையிலும் மனோவல்லமையிலும் புருடரைவிட மிகக் குறைந்தவர்கள். அவர்கள் மனம் மிக்க சுலபத்தில் கரைந்துவிடும். இதற்காகவே ஸ்திரீகள் அன்னிய புருடர் முன் பேசலாகாதென்றும், தனியே எங்கும் செல்லலாகாதென்றும், ஸ்தலங்களுக்குச் சென்றாலும் புருடன் அல்லது புத்திரன் உதவியோடேயே செல்லவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் புருடன் தன் மனைவி மேற்கண்ட விதிகளின்படி நடக்கிறளா வென்று கவனித்து, அவசியமாயின் கண்டித்து வரவேண்டும்.

அந்தோ ! இக்காலத்தில் சில அறிவுகெட்ட ஆடவர்கள் மேல் நாட்டு ஆசாரப்பேயின் வசப்பட்டுத் தாங்களே மாதர்க்குத் தூர்வழி கற்பிக்கிறார்கள். இச் சென்னையில் ஒருவர் (நமது மதஸ்தர் நற்குலத்தவர்) கலியாணமாகாத தம் புதல்விகளைத் தாமே திறந்த வண்டியி லேற்றிக்கொண்டு பகற்காலத்திலேயே உலவப்போய் பழக்கிவைக்கிறார் என்றும், அவருடைய நெருங்கிய சுற்றத்தார் இது குலத்திற்கு மானக்கேடா யிருக்கிறதே யென்று வருந்துகிறார்களென்றும் அறிகிறோம். அந்தோ, இது நம்மதாசார நூல்களைக் கற்பியாது, ஆங்கிலம் மட்டுமே பிள்ளைகளுக்குக் கற்பிப்பதால் வரும் கெடுதியே யன்றி வேறில்லை. கற்புடையமாதர் இத்தகைய கணவர்களைக் கண்டித்து இடித்துப் புத்தி புகட்டுவது பாபமாகா தென்பதே நங்கருத்து. விரிக்கிற் பெருகும்.

2. கேள்வி:—பெண்கள் பதிவிரதைகளாகவே பிறக்கிறார்களா ? அல்லது பெண்களை நாம் பதிவிரதைகளாக்கிக் கொள்ளவேண்டுமா ?

விடை:—பூர்வபுண்ணிய வசத்தால் பிறப்பிலேயே பத்தினிகளாய்ப் பிறக்கும் மாதர்களு முண்டு. ஸ்திரீகளுக்குக் கற்பேயாபரணமென்றும், புருடனுக்குத் துரோகம்செய்ய மனதில் நினைத்தாலும் பாபமென்றும், கற்பினால் கடவுளை யடையலாம் என்றும், கற்பின் மகிமை யளவுகடந்த தென்றும், ஏறக்குறைய நம் தேசத்து மாதர்கள் அனைவரும் அறிவார்கள். இதுவே நம் நாடு தெய்வீகம் பொருந்திய தென்பதற்கும் பதிவிரதா சிரோன்மணிகளும், தெய்வீகம் பெற்ற மகான்களும், தேவர்களும் அவதரிக்கும் புண்ணிய நாடென்பதற்கும் அத்தாட்சி.

ஆயினும் சேர்க்கைவாசனையால் கேடுறுவதுண்டு. ஆதலினால் மேற்கூறிய படி தாய்தந்தையர் பயிற்சியும் புருடர் கவனிப்பும் பாதுகாவலும் அவசியம் இருக்கவேண்டுமென்பதே ஆன்றோர்விதி. ஆனால் மாதர் முதுமைப்பருவம் அடையுங் காலந்தொடங்கி மேற்கண்ட விதிகளில் பல அவ்வளவு அவசியமல்ல. ஆயினும் இப்போதும் 50 வயதிற்குமேற்பட்டபின்பும் அன்னியபுருடருடன் தாராளமாய்ப்பேசவும், புருடர் சபைமுன் செல்லவும்கூட நாணப்படும் ஸ்திரீகள் நம்நாட்டில் பலருளர்.

பத்திராசிரியர்.

---

## * இயற்பகை நாயனர் சரித்திரம்.

காவிரி நதி கடலில் சங்கமமாகும் இடத்தில் பூம்புகார் அல்லது காவிரிப் பூம்பட்டினமென்ற சிறந்த க்ஷேத்திரம் உண்டு. அந்த ஊர் முற்காலத்தில் துறைமுகப்பட்டணமாயிருந்தது. அந்த நகரில் வியாபாரம் பெருத்த செட்டி மக்கள் இருந்து வேற்று நாடுகளுடன் கடல் வியாபாரம் கப்பல்மூலமாய்ச் செய்துவந்த விஷயம், பழைய சரித்திரங்களால் பிரக்கியாதியாய்த் தெரிகின்றது. ஆகவே, இந்நகரம் ஒருகாலத்தில் மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்து, மிகவும் வளம்பொருந்தியதாய் இருந்ததற்கு அடையாளங்கள் இப்போதும் தெரிகின்றன. முன்னம் குபேரபட்டணம்போலச் சிறந்த நகரம், இப்போதும் காவேரிப்பட்டணம் என்ற பெயருடன் கடற்றுறையில் விளங்கிவருகிறது. இந்த நகரத்தில் முற்காலத்தில் ஒரு செட்டியார் வசித்து வந்தார். அவர் சிறந்த சிவபக்தர். யார் வந்தாலும் அவர் இல்லையென்னமல்

* ம-ள-ள-ஸ்ரீ, பண்டித வி. சுப்பிரமணிய ஐயரவர்களால் "ஜனோபகாரி" என்னும் பத்திரிகையி லெழுதியதை, நமது நேயர்களுக்காக எழுதலானோம்.



அவரவர் வேண்டியதைக் கொடுத்துதவும், தன்மையையுடையவரா யிருந்தார். அந்தச்செட்டியார் பெயர் இயற்பகையார். இவர் எப்போதும், சிவனடியார்களுக்குக் கைங்கரியம் செய்வதில் தம் பொருளைச் செலவழிப்பதற்கே சிவன் தமக்குப் பொருளைக் கொடுத்திருக்கிறார் என்று நினைப்பவர். அவ்விதமே அவர்களுக்குத் தொண்டுசெய்வதல்லது வேறெதைச் செய்வதிலும் காலத்தை அவர் செலவிடுவதில்லை. இப்படியிருக்கும் நாளில், பரமசிவன் தன்னுடைய சுயரூபத்தை விட்டு, பக்தருடைய, மனப்பாங்கைப் பரிசோதிக்க வேண்டியதற்காக, பக்தர் விரும்பக்கூடிய அடியார் வேஷத்தைத் தாங்கிக்கொண்டு இயற்பகை நாயனர் முன் தோன்றினர். இயற்பகை நாயனர் தம்வீட்டின் வாயிற்படியில் அடியாரைப் பார்த்ததும், அவரை எதிர்சென்று வணங்கி, அவருடைய க்ஷேமலாபங்களை விசாரித்து, 'யான் என்னதவம் செய்தோ தாங்கள் இங்கு எழுந்தருளும் பாக்கியம் பெற்றேன் ? என்று கூறினர்.

சிவனடியார்களில் எவர்கள் எவைகளைக் கேட்டாலும் மறுக்காமல் கொடுக்கும் குணம் தங்களுக்குண்டு என்று கேள்விப்பட்டு வந்தோம். உங்களிடத்திலிருந்து நாம் பெறவேண்டியபொருள் ஒன்றுஉண்டு. அதற்காகத்தான் நாம் உம்மிடம்வந்தது. வந்தகாரியத்தைச் சொல்லலாமென்றால், நாம் சொல்லுகிறோம்" என்று, வேதியர் வேஷம்பூண்ட அடியார் நாயனரிடம் சொன்னர். நாயனரும், "என்னிடத்தில் அகப்படக்கூடியது எதுவானலும், அதைத் தாங்கள் என்னிடத்திலிருந்து அடையலாம் ; அதில் சந்தேகமே யில்லை. உங்களுக்கு வேண்டியதைக்கேளும்" என்று கூறினர். அடியார் "தங்கள் மனைவியைத்தவிர வேறொன்றையும் இச்சிக்க நாம் இங்குவரவில்லை. அவளைத்தான் எமக்குத் தாங்கள் தரவேண்டும்" என்று அடியார் கேட்டார். இதைக் கேட்டதும் நாயனர்; அடியார் தம்மிடத்துள்ளதையே கேட்டார் என்று அதிக சந்தோஷமடைந்தாரே யல்லது, வருத்தமடையவில்லை. உடனே இயற்பகை விதிப்படி தான் விவாகம் செய்துகொண்ட மனைவியிடம் சென்றார். "கற்புடைய பத்தினியே! இன்று அடியவராகவந்த இந்தப் பிராமணனுக்கு உன்னைக் கொடுத்துவிட்டேன்" என்று தம்மனைவியை நோக்கிக்கூறினர். இதுகேட்ட இயற்பகையாரின் மனைவி கொஞ்சம் மனக்கலக்கமடைந்து பிறகு தெளிந்தாள். "ஐயனே! கணவன் சொல்லுக்கு மனைவி மாறு சொல்வதற்கில்லை. நான் தங்கள் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்லவில்லை. தங்கள் இஷ்டப்படியே நடக்கக் காத்திருக்கிறேன்" என்று சொல்லி, தன் கணவனையும் வேதியனையும் அவள் தொழுது நின்றாள். வேதியரும் இயற்பகையினிடமிருந்து அவரது மனைவியைப் பெற்று சந்தோஷமடைந்தார். அப்போது இயற்பகை, 'வேதியரே! இனியேல் நான் வேறு ஏதாவது காரியம் செய்யவேண்டுமென்றாலும் செய்யக் காத்திருக்கிறேன்" என்று சொல்லிக் கைதொழுது நின்றார். அப்போது வேதியர், "ஐயா! செட்டியாரே! நீர் உமது மனைவியை எமக்குக் கொடுத்துவிட்டீர். உம்மூரின் எல்லையைக் கடந்து உம்முடைய மனைவியை அழைத்துக்கொண்டு போகும்வரையிலும் நீர் உதவி செய்யவேண்டும். அதுதான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் ஒத்தாசை" என்று நாயனரைப் பார்த்துச் சொன்னர். "இக்காரியத்தை தாங்கள் கேட்குமுன்பே நான் செய்திருக்கவேண்டும். இஃது என் பிழையேயாகும். இதோ தங்களுக்கு உதவி செய்வதற்குச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லி, நாயனர் தமது வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு, வேதியரைக் காவல் காக்கத்தகுந்த ஆயுதங்களையும் எடுத்து அணிந்து, வேதியர்க்கும் அவர் அழைத்துப்போகும் பெண்ணுக்கும் காவலாகச் சென்றார்.

"நாயனருக்கு ஏதோ பித்துப்பிடித்துவிட்டது. இன்னது செய்யத்

தகுந்தது, இன்னது செய்யத்தகாதது என்று அவர் அறியவில்லை. ஒரு வேதியர்வந்து தம்மனைவியைக் கேட்டால், இவ்விதம் எப்படி அவளைக்கொடுக்க இசைவர்? நாயனரை இந்தச் செய்கையைச் செய்யவிடுவதில்லை" என்று நாயனரைச் சேர்ந்த பந்துக்களும், நாயனர் மனைவியைச் சேர்ந்த பந்துக்களும் வந்து வழியில் இவர்களை மடக்கி மறித்துக்கொண்டு சண்டையிட்டார்கள். அப்போது அடியார் வேஷத்துடனிருக்கும் பிராமணர் என்னசெய்வதென்று பயந்தவர்போல நாயனர் மனைவியைப்பார்த்தார். நாயனர் மனைவியும் அடியாரைப்பார்த்து, "நீங்கள் பயப்படவேண்டாம். இயற்பகையார் எல்லோரையும் ஒழித்துவிடுவார்" என்று தைரியம் கூறினள். இவ்வார்த்தைகளை நாயனரும் கேட்டு, வேதியர் எதிரில் வந்து, "நீர் பயப்படவேண்டாம். நான் ஒருவனுகவே இவ்வளவுபேரையும் ஜயிப்பேன். தாங்களே அதைப் பார்ப்பீர்கள். நீங்கள் தைரியத்தைமாத்திரம் கைவிடாதிர்கள்" என்று சொன்னார். அப்போது அத்தம்பதிகளின் பந்துக்கள் நாயனரைநோக்கி, ஏடா இந்தப் பித்துபிடித்தது? நீ செய்த காரியத்தை உன்குலத்தார் பழிப்பார்களென்று கொஞ்சமும் நீ எண்ணவில்லையே! நீ புண்ணியம் சம்பாதிப்பது மனைவியைத் தத்தம் பண்ணித்தானே? நாங்கள் மடிந்தாலும் எங்கள் குலத்துப் பெண்ணை விடமாட்டோம்" என்று கூக்குரலிட்டு ஆயுதங்களுடன் மீட்டும் எதிர்த்தனர். அப்போது நாயனர், "இப்படிச்சொன்ன உங்களை எல்லாம் என் கைவாளுக் கிரையாக்கி, என் மனைவியுடன் வேதியரைப் போகச்செய்வேனே யொழிய, உங்கள் வார்த்தைகளை நான் கேட்கமாட்டேன்" என்று கோபித்து அவர்களை எதிர்த்தார்; அநேகர் தலைகளைத் துணித்தார்; பலபேர்களுடைய கால்களை வெட்டித்தள்ளினர்; இன்னும் பலருடைய கைகளையும், மற்ற அங்கங்களையும் வீழ்த்தினர். இவ்வாறு நாயனர் தமது உறவினர்களை நாசமாக்கித் தம் யுத்த வன்மையை வேதியருக்குக் காட்டினர். இந்த யுத்தத்தில் தப்பியோடிய சிலர், மூலைக்கு மூலைவந்து நாயனரைத் தாக்க அவர்களையும் இவர்விடாமற் கொன்றார்.

பிறகு நாயனர் அடியாரிடத்திற் சென்று, "நீர் இனி யாதுக்கும் அஞ்ச வேண்டாம். எனது மனைவியை யழைத்துக்கொண்டு சுகமாய் உமது ஊர் போய்வாரும்" என்று சொல்லி அவருக்கு உத்தரவுகொடுத்துத் தம் மனைவியைத் திரும்பிப்பாராமலேயே தம்மூர்நோக்கித் திரும்பினர். இப்படி இயற்பகை நாயனர் தாம்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றிச் சந்தோஷமாய் போகும்போது, செய்வதற் கருமையான காரியத்தைச் செய்தபோரும் இயற்பகையை அடியார்மீளவும் கூப்பிடலானர். இதனையே சேக்கிழார் நாயனர்,

> "இயற்பகைமுனிவா வோலமீண்டு நீவருவாயோலம்
> மயர்ப்பிலாதானே யோலமன்பனே யோலமோலஞ்
> செயற்கருஞ்செய்கை செய்தநீரனே யோலமென்றான்
> மயக்கறுமறையோ விட்டு மாலயன் தேடநின்றான்"

என்று கூறியிருக்கிறார்.

இப்படி கூப்பிட்டது கேட்ட நாயனர், "நான் செய்த சண்டையில் பிழைத் தொளித்தவர் உம்மை இப்போது இம்சை செய்கிறார்களா? அவர்களையும் ஒழித்து உங்களை இரக்ஷிக்க இதோவருகிறேன்" என்று மறுபடியும் திரும்பிவந்தார். அப்போது வேதியர் தம்கோலத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதற்காக மறைந்துபோக, இயற்பகையார் அங்குத் தம் மனைவியைமட்டும் கண்டு வேதியர் எங்கென விசாரித்தார். அவளும் அவர்போன இடத்தை அறியாமல்,திகைத்து நின்றாள். அப்போது பரமேசுவரன் பார்வதி சமேதராய் விருஷபாரூடராய்ப் பூதகணங்கள் சூழ்ந்துவர இயற்பகைநாயனருக்கும் அவரது



மனைவியாருக்கும் காட்சி கொடுத்தார். ஈசுவரனைக் கண்டதும் இயற்பகை நாயனர் விசேஷமான பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து வாழ்த்தினர். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

> "சொல்லுவ தறியேன்வாழி
> தோற்றிய தோற்றம்போற்றி
> வல்லவந் தருளியென்னை
> வழித்தொண்டு கொண்டாய்போற்றி
> யெல்லையி லின்பவெள்ள
> மெனக்கருள் செய்தாய்போற்றி
> தில்லையம் பலத்துளாடுஞ்
> சேவடி போற்றியென்ன" என்று கூறியிருக்கிறார்.

ஈசுவரனும் இவர்செய்த ஸ்தோத்திரத்திற்கும் பக்திக்கும் சந்தோஷப்பட்டு, பணிந்த பக்தனைநோக்கி, "உலகத்தில் உன்னைப்போல் என்னிடத்தில் பக்திபண்ணினவரில்லை. உன்னுடைய பக்தியை மிகுதியும் மெச்சினேம். நீயும் உன்னுடைய மனைவியும் நம் உலகம் சேர்வீர்களாக. உம்முடைய சுற்றத்தார்களும் வீரசுவர்க்கம் அடைவார்களாக" என்று சொல்லி மறைந்தார். அப்போது தேவதைகள் மலர்மாரி பொழிந்தார்கள். நாயனரும் பக்தனா ஈசனன்பனென மதித்துத் தமது தாரத்தைக்கொடுத்த பெருமையால் பேரின்பமடைந்தார்.

V. M. முகம்மதுசம்சுத்தீன், கொழும்பு.

---

## உபாத்தியாயர் இருக்கவேண்டிய முறைமை.

உபாத்தியாயருக்கு வேண்டிய லக்ஷணங்களாவன:—

1. தேகசம்பந்தமான யோக்கியதை; 2. மனேசம்பந்தமான யோக்கியதை; 3. நடத்தை சம்பந்தமான யோக்கியதை என மூன்று வகைப்படும்.

I. தேக சம்பந்தமான யோக்கியதை என்றால் என்ன?

ஐம்புலன்களும் சரியாக இருக்கவேண்டும். இவற்றில் காதும், கண்ணும், முக்கியமானவை. ஏனென்றால் இவைகளின் குறைவால் பிள்ளைகளுக்கு நம்மிடம் பயமிராது. அப்படிக் குறைவாக இருந்தாலும் அதை நாம் பிள்ளைகளுக்குக் காட்டக்கூடாது.

வாய்:—சுத்தமானது ஒரே அளவாகவும் அமைதியாகவும் இருப்பதோடு, கெட்டவார்த்தைகள் வெளிவாராமல் இருக்கவேண்டும்.

தேகம்:—சுறுசுறுப்பும் ஊக்கமுள்ளதாக இருக்கவேண்டும். கூடுமான பரியந்தம் தேக சௌக்கியமுள்ளவர்களா யிருத்தல்வேண்டும்.

II. மனே சம்பந்தமான யோக்கியதை என்றால் என்ன?

1. உபாத்தியாயர் நன்றாகப்படித்தவராகவும், அந்தவகுப்புக்குத்தகுந்தமாதிரி பாடங்களை நடத்த பூர்ணமான சக்தி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. அவர் எந்தவகுப்பிற்கு எந்தபாடத்தை போதிக்கப்போகிறாரோ அதை முன்னடி தயார் செய்துகொள்ளவேண்டும்.

3. உபாத்தியாயரும் மாணக்கர்போலவே நன்றாகப் படிக்கவேண்டும். அதாவது உபாத்தியாயரும் எப்போதும் மாணக்களாக இருத்தல்வேண்டும்.

4. உபாத்தியாயருடைய சிநேகம், தம்மில் அதிகம் படித்தவர்களின் சிநேகமாய் இருத்தல் வேண்டும்.

5. பிள்ளைகளுக்கு (மாணாக்கர்களுக்கு) போதிப்பதை விவரித்தும் சுருக்கியும் சொல்லக்கூடிய சக்தி யுடையவராக இருத்தல் வேண்டும். (தொடரும்)

தேவிக்குப்பம்—எஸ். பி. ராஜகோபால்செட்டி.

## கடவுளும் மதங்களும்

(203-வது பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு காணும்போது பலவுருவங்களையும் நாம் கடவுளென்று கருதுவதால் உருவத்தை மட்டும் கடவுளென்று நினைத்த பழக்கம் நாளாவட்டத்தில் கைநழுவும். அப்போது நாமரூபத்தைக் கவனியாது, எங்கும் உள்ளும் புறம்புமாய் நிறைந்துள்ள சித்துப் பொருளிலேயே நாட்டம் விழும். இந்த அப்பியாச முதிர்ச்சியில் கண்களுக்குப் புலப்படும் யாவும் ஒரே அகண்ட வெளியாய்ப் பாவிக்கும் நிலைமை ஏற்படும்.

"   *   *   *   *   *   *

கண்டன வெலாமோன வுருவெளிய தாகவே
கருதியஞ் சலிசெய்கு வாம்"

என்று தாயுமான சுவாமிகள் அருளியது கண்டு ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

ஆனால் இந்த அப்பியாசம் யாவராலும் செய்யக்கூடியதல்ல. உலகில் அதிகாரிகளின் பேதங்கள் பலவாறாயிருக்கின்றன. ஒவ்வொருவர்க்குத் தேகம் வேறு, மனம்வேறு, ஆன்மாவேறு என்று பேதமாய் உணரவே தெரியாது. சிலரிடம் கடவுளுக்கு உருவமுண்டு என்றால்தான் கடவுள் உண்டென்று நம்புவார்கள். அத்தகையோர் கடவுளை அருவமாய்த் தியானிக்க முடியவே முடியாது. ஆகையால் பலஜன்ம அநுபவத்தால் அறிவுவிளக்கம் பெற்றிருக்கும் "தீவிரம்" 'தீவிரதரம்" உடைய அதிகாரிகளே இதையப்பியாசிக்க முடியும்.

சாத்திரங்களில் முன்னுடி சில சாதனங்களை யடைந்த பின்பே ஞானம் வரும் என்று கூறுகின்றனரே என்றாலோ? அது உண்மையே. ஆனால் இந்த அப்பியாசத்தை யனுசரிக்கக் கூடிய அதிகாரிக்கு இயற்கையாகவே சில அவசியமான சாதனங்கள் கைவந்தேயிருக்கும். மனமொழிந்தால் மாயையொழிந்தது. மனதிற்கு வேர் இச்சை—ஆதலில் இச்சை யொழிந்தால் பிறகு மனமிறந்ததேயாகும். இச்சைக்கு ஆதாரம் நாமரூபமே. சற்று சிந்தித்துப் பார்த்தால் கீழ்க்கண்ட விஷயங்கள் நன்கு விளங்கும்:—

மனதிற்கு இச்சை வேராயிருப்பதுபோல், நினைத்தல் (மனம் ஒன்றை நினைத்தல்) முளையாயிருக்கிறது. இடமொன்று மனம் ஒன்றை நினைக்கிறது. எப்போதும் நாம் எக்காரணத்தைக் கொண்டாவது இச்சித்திருக்கும் விஷயத்தைப்பற்றியே மனம்நினைக்கும். விரோதியைப்பற்றி நினைக்கிறதே என்றாலோ, அப்போதும் அந்த விரோதிக்குத் தீங்குசெய்து சந்தோஷத்தையடையவேண்டுமென்ற இச்சையைப் பூர்த்திசெய்யவே நினைக்கிறது. இச்சையோ—நாமரூப சம்பந்தமானவற்றில்தான் இச்சை எழும். நேயர்களே இச்சந்தர்ப்பத்தில் நாமரூபமில்லாத எதிலேனும் நமக்கு இச்சை யுண்டாவென்று சற்று சிந்தித்துப் பாருங்கள். உடனே உண்மை விளங்கிவிடும். மண், பெண், பொன் என்ற மூவாசையும் நாமரூபமேயன்றி வேறில்லை.

ஆகையால் எப்போது நாமரூப நாட்டத்தை விடுகிறோமோ அப்போதே இச்சையொழிந்தது. மனம் ஒன்றில் முளைப்பது இச்சையால்தான். ஆகவே மனமும் ஒழிந்தது. மனமே மாயையாகையால் மாயையும் ஒழிந்தது. உலகம் நாமரூபத்தோற்றமேயாதலால் உலகத்தோற்றமே அவனிடத்தில் இல்லை. எப்போதும் எங்கும் இரண்டே வஸ்துக்களிருக்கின்றன. அவற்றில் ஒன்று சத்தியம்; ஒன்று (மாலைக்கண்ணனுக்கு வெயில் மஞ்சள் நிறமாய்த் தோன்றுவது போன்ற) பொய்த்தோற்றம் அவையெவை யெனின்,



1. நாமரூபத் தோற்றமாகிய உலகம்.

2. எங்குளும் உள்ளும் புறம்பும் ஏகமாய், அகண்டமாய் மயிர்முனைக்குமிடமின்றி நிறைந்து நிற்கும் சச்சிதானந்த சொரூபமே.

சச்சிதானந்த சொரூபமே சத்தியமாயுள்ளது. இதுவே மாயை மறைப்பால் நாமரூப உலகமாய்த் தோன்றுகிறது.

" விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம்—சுத்த
வெயில்மஞ்ச ளென்னவே வேதாகமங்கள்
மதிக்கு மதனை மதியார்—அவர்
மார்க்கந் துன்மார்க்கஞ் சன்மார்க்கமோ மானே சங்கரா-
னந்த சம்போ"

என்ற தாயுமானவர் திருவாக்கு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

அஞ்ஞான தசையில் மாயை மறைப்பால் சொரூபமே உலகமாய்த்தோன்றுகிறது. "மாயையெனும் திரையை நீக்கி நின்னை யாரறிய வல்லார்" என்றது போல் நாமரூபநாட்டம் நீங்கினால் மாயை யொழிகிறது.

எப்போது நாமரூபம் ஒழிந்ததோ உடனே இதுகாறும் நாமரூபமாய்த் தோன்றிக்கொண்டு தன் நிஜரூபத்தை மறைத்திருந்த, அல்லது இதுகாறும் மாயையால் நமக்கு நாமரூபமாய்த் தோன்றிக்கொண்டிருந்த, சச்சிதானந்த சொரூபம் தானேதோன்றும். ஒன்றே மற்றொன்றாய்த் தோன்றிக்கொண்டிருப்பதால் ஏககாலத்தில் (நாமரூபமான உலகும்—சச்சிதானந்தமுமாகிய) இரண்டும் ஒருபோதும் தோன்றா. நாமரூப நாட்டம் நீங்கினால் சச்சிதானந்த சொரூபம் தோன்றும். இவ்வாற்றால் என்றும் உள்ள சத்தியமானபொருள் சச்சிதானந்த சொரூபம் ஒன்றே யாகும். மெய்த்தோற்றமாய் அஞ்ஞானதசையில் தோன்றி ஞானதசையில் பொய்யெனவிளங்கி மறையும் சித்திர உருவம் போன்ற உலகம் என்றும் இல்லாத பொய்யேயாகும்.

சித்தாந்தத்தில் ஜக, ஜீவ, பரம் மூன்றும் நித்தியமே யென்றிருக்கிறதேயெனில், அதுவும் ஒரு நிலையில் உண்மையே.

நாம் முன்கூறியது ஞானநிலை தன்வரையில் மாயையை ஒருவன் நீக்கிக் கொண்டால் அவன்மட்டில் மாயையொழிந்ததேயாகும். அவன்மட்டும் உண்மை நிலையை யடைகிறான். மற்றபடி உலகமாயை யழிந்துபோகாது இருந்துகொண்டேதான் இருக்கும். அதாவது அஞ்ஞானநிலையில் எப்போதும் மூன்றும் இருந்துகொண்டே தான் இருக்கும். அவ்வளவேயன்றி அனுபவத்தில் சீவன்—பரம் இரண்டும்மட்டுமே அநாதி—நித்தியம். உலகமாயை அநாதி அநித்தியம் என்பது சத்தியமே—

நாமரூபத்தோற்றம் பொய்யாயொழியும் என்பதைப்பற்றி பட்டினத்தடிகள்.

" ஓவியப்புலவன் சாயல்பெற வெழுதிய சித்திரவிகற்ப மனைத்தும், ஒன்றிற்றவிராது தடவினர் தமக்குச், சுவராய்த்தோன்றும். துணிவுபோன்றனவே" என்று அருளிய திருட்டாந்தம் உய்த்துணரத்தக்கது.

மேற்கண்டவாறு நாமரூபநாட்டம் மறைந்ததே மனம் மடிந்ததால் ஆன்மதரிசனம் தோன்றிப் பின்பு அதுவும் அகண்ட நிலையில் கொஞ்சங் கொஞ்சமாய்க் கலந்து ஐக்கியம் கூடி எல்லாம் ஏகவெளியான பேரானந்தக் கடலாகிய அழியாநிலை யுண்டாகும். நான் என்பதற்ற அந்நிலையில் நாமும் தோன்றாது இருப்பதால் அந்நிலைமை ஒன்றென்றும், இரண்டென்றும் கூறக்கூடாத ஆனந்தமயமான ஒரே அகண்டாகார மயமாகும்.

ஆனால் இவ்வளவும் சும்மா செய்யும் பாவனையாயிற்றே, முடிவு மெய்யான நிலையாகுமோவெனில்—ஆகும். எப்படியெனில், ஒருவன் தான் என்றும் காணாத யானையைத் தன் பிரியப்படி இரண்டுதலைகளும், சிகப்பு நிறமும், குதிரையின் கால்களைப்போல் கால்களுமுடையதாய்ப் பாவித்துக்கொள்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பிறகு அவன் மெய்யான யானையைக்காணும்பொழுது தன் பாவனை யானை பொய்யாகவே முடியும். ஆனால் யானையின் புகைப்படத்தையே கண்டு அதைப்பாவனை செய்பவன் பிறகு யானையையே காணும்போது அவனுடைய பாவனை யானை மெய்யாகவே முடியும். மேலும் பொய்யான காரணத்தாலும், மெய்யான முடிவு வருவதுண்டு. கனவில் ஒருவன் சிங்கம் தன்னைப்பிடிக்க வருவதுகண்டு, அலறி விழித்துக்கொள்கிறான். கனவில்கண்டசிங்கம் பொய்யேயாயினும், அது அவன் நித்திரையைக்கெடுத்து விழித்துக்கொள்ளச்செய்தது மெய்யே என்பதைப்போல், இப்பாவனை சத்தியமாகவே முடியும்.

மேற்கண்டவாறு ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள். இதில் சுருக்கமாய்க் கூறப்பட்ட விஷயங்களைப்பற்றி விரிவாயுணரவேண்டுவோர் ஆசானிடமாவது அனுபவிகளிடமாவது கேட்டுணரத்தக்கது.

ஓம் தத் ஸத்.

---

## நித்தியவிதி—மத்தியான்னம்

(185-ம் பக்கத்தொடர்ச்சி)

சாளக்கிராமம் விஷ்ணு சொரூபம் என்றும் பாணலிங்கம் சிவசொரூபமென்றும் நூல்கள் கூறுகின்றன. இமாலய பர்வதத்தின் பக்கத்திலேயுள்ள கண்டகி நதிக்கரையில் சாளக்கிராமம் என்ற ஒரு சிறு கிராமம் இருந்தது. அவ்விடத்தில் சிவனும் மோகினி அவதாரமெடுத்த விஷ்ணு மூர்த்தியும் கலந்து ஐயனாரைப் பெற்றார்களென்றும், அதனால் அந்தப் புத்திரனுக்கு அரிஹர புத்திரனென்று ஓர் திருநாமம் சூட்டப்பட்டதென்றும், அப்போது விஷ்ணு மூர்த்தியின் சரீரத்திலுண்டான வியர்வை கண்டகி நதியில் சிதற அத்துளிகள் வஜ்ரகீடம் என்ற ஜலஜந்துவாயிற்றென்றும், அதன் முதுகெலும்புதான் சாளக்கிராமம் என்றும், சாளக்கிராமம் என்றவிடத்தில் உற்பத்தியானபடியால் அதற்குச் சாளக்கிராமமென்று பெயரிடப்பட்டதென்றும், அது விஷ்ணுவின் சரீரத்திலிருந்துண்டானபடியால் நித்திய ஜீவனுள்ளதென்றும், அதைப் பூஜிப்பதினால் சர்வசித்திகளும் பெறலாமென்றும் ஸ்காந்த மஹாபுராண முதலிய நூல்கள் கூறுகின்றன.

விஷ்ணு மூர்த்தியின் வியர்வையில் தோன்றியதாலும், இமயமலையின் உச்சியிலிருந்து நல்ல காற்று, அநேகவிதமான செடி கொடிகள், பனிக்கட்டி, பலபோகங்கள், தாதுக்கள் உபதாதுக்கள் இவற்றுடன் சம்பந்தப்பட்டு வருகிற கண்டகி நதியில் உற்பத்திமுதல் விருத்தியாய் வந்த சாளக்கிராமங்கள் இயற்கையில் ஜீவசக்தி யுடையனவாம் என்பது ஆச்சரியமல்ல. பாணலிங்கத்துக்கும், சோணநதி, சுவர்ணமுகி யிங்குநதிகளில் உற்பத்தியான சிலைகளுக்கும் மேற்கூறிய சக்தி உண்டு. பாணலிங்க பூஜை முறையில் பரமசிவனை அந்த லிங்கத்தில் ஆவாகனம் செய்வது மாத்திரமே விதிக்கப்பட்டது. விக்கிரகங்களைப் போல பிராண பிரதிஷ்டை விதிக்கப்படவில்லை. பாரதத்தில் உரைக்கும் அவர்களுக்கும் ஜன்மம், கன்மம், தவம், யோகம் இவைகள் சமமாயிருந்தாலும் அவர்கள்



(கிருஷ்ணார்ஜுனர்கள்) லிங்கத்தில் சிவனை ஆராதித்தார்கள். நீ அர்ச்சையில் (விக்கிரக சொரூபத்தில்) பூஜித்தாய். அதனால் அவர்கள் மேன்மை பெற்றார்கள்" என்று அசுவத்தாமனை நோக்கி வியாசபகவான் அருளிச் செய்தார். ஆகலால் பிம்பத்திலாவது, சாளக்கிராமம் பாணலிங்கம் முதலியவைகளிலாவது முறைப்படி ஆவாகனம் செய்து பூஜிக்கவேண்டும்.

சங்கற்பஞ் செய்துகொண்டு முதலில் தன் சரீரத்தையே ஆலயமாகக் கொண்டெழுந்தருளி யிருக்கும் பரமான்மாவைத் தான் ஆராதனை செய்வதற்காகச் சிந்தித்து ஷோடசோபசாரங்களும் மானஸிகமாகச் செய்து பூஜித்து, அதன்பின் பிராணாயாம பலத்துடன் அப்பரமாத்மாவை பாணலிங்காதி சொரூபங்களில் ஆவாகனம் செய்யவேண்டும். அப்போது உச்சரிக்கப்படும் மந்திரத் தொனியின் வழியாகப் பரமான்மாவின் சக்தி அச்சொரூபத்தில் வந்து சேரும். எங்கும் நிறைந்துள்ள சர்வ சக்தியை இருதயத்துக்குள் பாவனையில் அமர்த்தி அந்தச் சர்வசக்தியை பகிர்முகமாகக் காணப்படும் சொரூபத்தில் சேர்ப்பதே ஆவாகனம் எனப்படும். ஜீவசக்தி அமையப்பெற்ற அச்சொரூபங்களும் பரமான்ம சக்தியைத் தன்னிடம் கிரகியம் செய்துகொள்ளும். தொனியானது சரீரத்திலுள்ள மாம்ச அணுக்களுடன் கலந்து வெளிப்பட்டு வருதலால் அதைக் கிரகியம் செய்த சொரூபத்திலும் அந்த அணுக்கள் அமையப்பெறும். அதனுடன் மலர்களாலும் சந்தனாட்சதைகளாலும் பரிசுத்தம் செய்யப்பட்ட கலச நீரினாலும், சங்கத்திலூறிய நீரினாலும் அபிஷேகம் செய்யவேண்டும். அதன்பின் பால், தயிர், நெய், பழரசம், சந்தனக்குழம்பு முதலியவற்றால் அபிஷேகம் செய்யப் பாசகம், பௌதிகம், ஔஷதம் எனப்பட்ட மூவகைச் சக்திகளும் அச்சொரூபத்தில் அமையப்பெறும். அதன்பிறகு சுத்தவஸ்திரம், சந்தன புஷ்பங்களைச் சாத்தி மலராலும், துளசி, வில்வம் பத்திரங்களாலும் அட்சதைகளாலும், அர்ச்சனை செய்து சுகந்ததூபம், நெய்யிட்டேற்றிய தீபம் முதலியவற்றால் உபசரித்து, அதற்கென்று செய்யப்பட்ட அன்னம் முதலியவற்றை நைவேத்தியம் செய்யவேண்டும். பின் கற்பூர ஆரத்திசெய்து, கடவுளைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களாலும், ஸ்தோத்திரங்களாலும் வழிபட்டுப்பிறகு இருதய கமலத்திலேயே சேர்த்துவிட வேண்டும். இதற்கு யதானம் செய்தல் என்று கூறப்படும். அதன்பின் பூதபலி கொடுக்கவேண்டும்.

இங்ஙனம் பூசை செய்வதால் பயன் யாதோவெனின், காலையிலெழுந்திருந்தது முதல் பரமாத்மாவைத் தியானத்தில் அமைத்து இருந்தாலும், அது மனதுக்கு மாத்திரம் சுத்தியேயன்றி மற்றவற்றுக்குப் பயனின்று. இந்தத் தேவாராதனத்தினும் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களும் சுத்தியாம். கன்மங்களெல்லாம் மனோ வாக்குக் காயங்களினாலேயே யியற்றப்படுகின்றன. அக்கன்மங்கள் ஒழிவதற்குத் திரிகரணங்களாலும் சற்கருமங்களைச்செய்யவேண்டும். அதற்கு இந்த தேவாராதனத்தை விட வேறு வழியில்லை. பாருங்கள், ஆராதனைகாலத்தில் பரமான்மாவை மனசாற்சிந்தித்தலும், கண்களால் தரிசித்தலும், கைகளால் பரிசித்தலும், மந்திர தொனியைச் செவிகளால் கேட்டலும் தெய்வ சொரூபத்தின்மேல் அணியப்பட்ட மலர் சந்தனம் முதலியவற்றின் சுகந்தத்தையும் தூபதீபங்களினாலும், கற்பூர ஆரத்தியினாலும் உண்டாகிற வாசனையையும் மூக்கால் முகருவதும், கால்களால் வலம் வருதலும், அஷ்டாங்கங்களும் நிலத்தில் தோயும்படி நமஸ்கரித்தலுமாகிய செயல்களால் சர்வாங்கமும் ஈசன் பணிவிடையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அபிஷேக தீர்த்தத்தையும், துளசி வில்வம் முதலிய நிர்மாலியங்களையும் உட்கொள்வதனால் உட்கரணங்கள் பரிசுத்தமடைகின்றன. ஆகலால் சரீரத்தின் அகம்புறமாகிய எல்லாமும் சுத்தி

பெற்று நிர்மலமாம். சர்வாலயங்களும் ஈசனுக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. முற்கூறியபடி 'வீட்டிலுள்ளவர்களுடைய சர்வாலயங்களும் ஈசனுக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. பூஜாகிருகத்தை அலகிடுதல், மெழுகுதல், கோலமிடல், பூஜா பாத்திரங்களைத் துலக்குதல் மலரெடுத்தல், நீர்திரட்டல், நிவேதனம் அமைத்தல் முதலியவற்றால் பரிஜனங்களுடைய மனோவாக்குக் காயங்களும் ஈசனுடைய கைங்கரியத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. பூஜித்த நிர்மாலியத்திற் சிறிது பூதபலியாக இடப்படுகிறபடியால் காகம், குருவி, எறும்பு, ஈ முதலியவைகளும் பரிசுத்தமாக்கப்படுகின்றன. ஒருவன் தேவபூஜை செய்வதனால் எத்தனை ஜீவாத்மாக்கள் கரையேறுகின்றன. இவையெல்லாம் மஹா புண்ணியமாய்க் கர்மபந்தத்தை யொழித்து அந்தத்தில் மோட்சத்தையுங் கொடுக்குமென்பதே நமது பூர்வகாலத்துப் பெரியோர் கண்டறிந்த நல்வழி.

பூசை செய்யும்பொழுது தேவசொரூபத்தைக் கிழக்கு முகமாக விட்டுத் தான் வடக்கு முகமாய் உட்கார்ந்து கொள்ள வேண்டுமென்பது விதி. அதற்குக் காரணம் வடதிசையிலிருந்து மஹா வேகமாய்ச் செல்லும் பூமியின் மஹா சக்தி அந்தப் பிம்பத்தில் தாக்கிப் பின் பூசை செய்யும் புருஷன் சரீரத்திற் படும் என்பதேயாம். பிம்பத்தில் ஆவாஹனம் செய்யப்பட்ட பரமான்மாவின் சக்தியாலும், பௌதிக, ஔஷத, பாசகங்களின் சக்தியாலும், லோக சம்பந்தத்தாலுண்டாகும் (இயக்கும் சக்தி) மின்சார சக்தியாலும், மந்திரோச்சாரணம் முதலிய கிரியைகளினாலும் சரீரத்திலுள்ள நாடிகளில் ஓர் வகையான அசைவுண்டாகும். அதனால் வாயுபந்த மலபந்தங்களும், சுக்கிலக்கட்டும் ஒழியும். அக்கினி விருத்தியாகும். இச்சமயம் தீபதரிசனத்தால் கண்மலம் ஒழியும். கற்பூர வாசனையாலும், அதன் புகையைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதாலும், தூப சுகந்தத்தினாலும் மிக்க நன்மைகளுண்டாகும். துளசி, வில்வம், சங்கம் பாலுடன் கலந்தநீர் முதலியவற்றை உட்கொள்வதால் அநேக வியாதிகள் ஒழிவதுமல்லாமல் நாடிகளும் சுத்திபெறும். கற்பூரப்புகை உட்செல்லுதலால் வயிற்றில் அபக்குவமாயிருக்கிற அன்னம் பக்குவப்படும். அஜீரணத்தினாலுண்டாகிற துர்வாயுக்களை ஒழிக்கும். விஷஜுராதிகள் அணுகாமல் காக்கும்.

### வில்வம்.

வில்லுவத்தின் வேருக்கு வீறுகுன்மம் வாயுசபம்
சொல்லவொண்ணாப் பித்தந் தொடர்சோபை—வல்லகப
தாகசுர நீரேற்றஞ் சந்நியொடு மெய்வலியும்
வேக மொடுநீங்கு மே.

அக்கினிமந்த மரோசி யதிசாரம் விக்கல்
நிற்கரிய பித்தசுர நீள்வாந்தி—சுட்கநோய்
ஆதியநோ யேகும் அழகோடு புஷ்டியுண்டாம்
கோதில்வில்வ வேரதனைக் கொள்.

(வேருக்குமிலைக்கும் குணம் ஒன்றாகவே கூறப்படுகிறது.)

### துளசி.

ஐயம் வயிற்றுளைச்சல் அஸ்திசுரந் தாகமும்போம்
மையசுரமாந்தம் பறக்குங்காண்—மெய்யாக
வாயின் அரோசகம்போம் வன்காசஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.



### கர்ப்பூரம்.

கிருமிசல தோஷங் கிளைவலிப்பு சந்நி
பொருமுமந்த மங்கிபட்ட புண்ணோ—டெரிசாங்கள்
வாந்திபித்தஞ் சீதமுறு வாதஞ்செவி முகநோய்
சாந்திகர்ப் பூரமென்றுஞ் சாற்று.

### சாம்பிராணி.

வாதசீதல் கண்ணோய் மாறாத் தலைவலியும்
ஓதமுறு பீநசமு மோட்டுங்காண்—பூதலத்தில்
வெம்பிதுதாவென்ன மிருகசப்பை வாய்க்களிக்குஞ்
சாம்பிராணி யென்னும் சரக்கு.

எனப் போந்த இச்செய்யுட்களால் வில்வமாதிகளின் குணங்கள் விளங்கப் பெறுதல் காண்க. காலைமுதல் ஆகாரமேதுமில்லாமலிருந்து தேவாராதனை செய்து மேற்குறித்த புகைகளை முகர்ந்து, பத்திரங்களை யுட்கொள்ளுதலால் அநேக நோய்கள் நீங்கும் அன்றியும் தேகத்தில் சேரும் விஷவாயுக்கள் கர்ப்பூர சாம்பிராணிப் புகைகளால் ஒழியும். சில விஷப்பூச்சிகள் மடியும். ஒரு நாளைக்கே இவ்வளவு குணமுண்டானால் தினந்தோறும் தவறாமல் செய்துவருவதனால் எவ்வளவு பயன் உண்டாகுமென்பது அறிஞர்கள் கண்டுகொள்வர். பரலோகத்துக்கேயன்றி, இகலோக வாழ்வுக்கும் தேவாராதனை விசேஷமென்பது விளங்குவதுகாண்க. முற்காலத்தில் தேவாராதனையில்லாத வீடிரா. எல்லாவீட்டிலும் தேவாராதனை செய்யப்படும். ஆதலால் இல்லங்கடோறும் கர்ப்பூரப்புகை, சாம்பிராணி குங்கிலியம் கலந்த தூபப்புகை நிறமாயிருக்கும். இதனால் அவ்வூர் முழுமையுமே அப்புகை மணமும் கமழும் என்பர் பெரியோர். இக்காரணத்தினால் வாந்திபேதி முதலிய கொடிய நோய்கள் அக்காலத்தில் மிகுதியாயில்லை. தேவாராதனை பற்றற ஒழிந்த இக்காலத்தில் மேற்குறித்த கொள்ளைநோய்களும், தொத்துநோய்களும் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றிப் பரவுகின்றன. சாத்திரங்களில் கூறப்படாதவைகளும், இத்தன்மையது எனக் கண்டறியப்படாதவைகளுமான வியாதிகளும் காணப்படுகின்றன. மனிதர்களுக்கும் ஆயுசு குறைவாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம் யாதெனின், தேவபூஜை செய்துவந்த காலத்தில் இருவேளை போஜனத்தையே கொண்டார்கள். அந்தவியவஸ்தை ஒழியவே காலை ஆறுமணிமுதல் படுக்கிறவரையில் ஏழெட்டுத் தடவை ஆகாரமும் சிற்றுண்டிகளும் கொள்ளப்படுகின்றன. இவ்விதக் கெடுதி நேராதிருக்கவே தேவபூஜைசெய்து அதன்பின் புசிக்கவேண்டுமென்று கூறி, இருதடவை உணவே விதிக்கப்பட்டன. இக்காலத்தில் அவ்விதிகடந்து தேவாராதனையையொழித்து பலதடவை புசித்தலுமேற்பட்டுவிட்டது. இது கலிகாலத்தின் கொடுமைகளில் ஒன்று. தேவனே இத்தத்துர்க்குணத்தை யொழித்து ஆரியர்களைக் காப்பாற்றவேண்டும். (தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## நல் ஒழுக்கம்

### ஒரு அறிவிப்பிற்கு மறுப்பு

1. சகோதரர்களே, சகோதரிகளே! நானது சாலயுக்தி௵ ஆவணிமீ வெளிவந்த ஆனந்தபோதினிப் பத்திரிகையில் 'அறிவிப்பு' என்ற தலைப்பின் கீழ் "வேணுகோபால் புத்தகசாலை, கோயமுத்தூர்" எனக் கைச்சாத்திட்ட

ஓர் நண்பர் ஆடிமீ வெளிவந்த ஆனந்தபோதினிப் பத்திரிகையின் 32-ம் பக்கம் S. V. பழனியப்பன் என்பவரால் எழுதப்பட்ட "நல்லொழுக்கம்" என்னும் விஷயத்தை ஷெ S. V. P. திருபர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் இயற்றிய பாலபாடம் நான்காம் புத்தகத்தினது சரியான நகல் என வரைந்துள்ளார். என்னே இவர் தம் கூற்று? உலகத்தில் ஒவ்வொருவரும் பல சாஸ்திரங்களையுங் கற்று அதன் சாரத்தைத்தான் பேசவும் எழுதவும் உபயோகிப்பது என்பதை நண்பர் உணரவில்லை போலும். S. V. பழனியப்ப உபாத்தியாயர் எழுதிய நல்லொழுக்கம் என்னும் விஷயம் பாலபாடத்திலுள்ள "நல்லொழுக்கம்" என்னும் விஷயத்தின் நகல் அல்ல. ஆனால் பாலபாடத்தை பன்முறை வாசித்து உலக நன்மையையும் மாணவர் ஒழுக்கத்தையும் உத்தேசித்து அதை சுருக்கமாய்த் தம் சொந்த அபிப்பிராயத்துடன் எழுதி முடித்துள்ளார் என்பது திண்ணம். திண்ணம்.

2. வேணுகோபால் என்னும் நண்பர் எழுதிய விஷயத்திற்கு வருந்துகின்றனம்.

3. நண்பர் வேணுகோபால் புஸ்தக வியாபாரம் செய்வதால் புஸ்தகத்தின் பெயரும் பைண்டும் விலையும் அறிவரே யன்றி புஸ்தகத்திலுள்ள விஷயம் கவனியாதவர்போலும்.

4. ஆலோசியாமை. ஆகஸ்டு 16உ ஆனந்தபோதினியின் 61-ம் பக்கம் வந்த "ஆலோசியாமை" என்ற கதையைப் பன்முறையும் படித்து ஞானிப்புல் லாராயாது அதன் உண்மையை உய்த்துணர்வாராக.

5. நண்பர் கோபாலே, எமது S. V. பழனியப்ப உபாத்தியாயர் தம்பெயர் பத்திரிகையில் வர அதைக் கண்ணுற்றுப் பெருமையடைய வேண்டுமென்னை கை கூசாது எழுதுகின்றீர். அவர் அத்தகையோர் அல்லர் என்பது அவரிடம் நெருங்கிப் பழகியவர் அவர் மனத்துறவை அறிவரே யன்றி உம்போலியர்க்கு அது லேவில் விளங்கவே விளங்காது.

6 'சாந்தமென்பது பலஹீனமல்ல' என்னும் விஷயம் 4-ம் வால்யூம் 2-ம் சஞ்சிகை ஆனந்தபோதினியின் 65, 66-ம் பக்கத்தில் அப்பெரியாரே, "பூர்ண சந்திரோதயப் பத்திரிகை" யினின்றும் எடுத்து எழுதியதாய் குறிப்புக் காட்டி யிருப்பதே அவர் தம் பெருந்தன்மையை குறிக்கின்றபடியால் இனி இதை இத்துடன் நிறுத்துகின்றோம்.

P. M. R. மாணிக்கசுந்தரம் அண்டு பிரதர், கோயமுத்தூர்.

குறிப்பு:—இன்னவர் இன்ன விஷயத்தை இந்த நூலிலிருந்தெடுத்தெழுதினரென்று குற்றங்கூறி எழுதுவது ஒரு சந்தோஷவேலையென்று சிலர் எண்ணுகிறார்கள். அந்தோ நன்மையைக்கோரி எந்தக் காரியத்தையும் செய்தல் வேண்டும். பிரஸ்தாப கடிதத்தை நாம் வெளியிட்டதற்காக மிக்க விசனிக்கிறேன். இத்தகையோர் குற்றஞ்சாட்டால் S. V. பழனியப்பன் அவர்கள் பெருந்தன்மை வெளியாக நேரிடுகிறதே பயன்; அன்றி அகௌரவம் ஒருபோதும் உண்டாகாது.

பத்திராசிரியர்.

---

## நாட்டுக்கோட்டை வைசிய சமூகத்தாரும் கலியாணமும்

சகோதரர்களே !

சென்ற இரண்டு சஞ்சிகைகளில் இவ்விஷயத்தைப் பற்றி நண்பர்கள் எழுதிய விஷயங்களைப் படித்திருப்பீர்கள். மற்றை சமூகங்கள் 1000, 2000 ரூபாய்களை வைத்துக்கொண்டு சுகமாய் வாழ்வதைப் பார்க்கிறோம். உலகத்தில். அதிலும் நம்முடைய ஏழை தேசத்தில் சொற்ப பொருள் வைத்துக்கொண்டு எவ்வளவு சுகமாக வாழலாமென்பதை யோசித்துப் பாருங்கள்! நம் சமூகத்தில் 10000, 20000 ரூபாய்களை வைத்துக்கொண்டு பெண் கிடைக்காமல் வயது 20க்கு மேலாகியும் பிரமசாரியா யிருப்பவர்கள் எத்தனை பெயர்? இவர்களைப் பற்றி கவனிக்கவேண்டியவர் யார்? கேவலம் ஒரு பெண்ணைக் கட்டிக்கொள்வதற்காக கடல் கடந்து கப்பலேறி ஆயுளில் முக்கால்பாகம் அன்னிய நாட்டில் தொலைக்கவேண்டி யிருக்கின்றதே? சிலர் சேர்ந்து இவ்விஷயங்களைப் பற்றி ஜனங்கட்கு எடுத்துக்கூறி செல்வாக்கும் செல்வமும் நிறைந்துள்ளவர்களை முன்வரச்செய்து சமூகத்திலுள்ள குறைபாடுகளை நீக்க முயற்சி செய்யவேண்டியது முதலாவது கடமை அல்லவா? இந்த நாட்டில் பல சபைகளிருக்கின்றன. இவைகளின் முக்கியஸ்தர்கள் இதையேன் கவனிக்கப்படாது! இந்த சங்கங்கள் தற்போது செய்கிற வேலைகளோடு இதையும் ஒரு முக்கிய வேலையாகக் கைக்கொண்டால் சீக்கிரம் சித்திபெறலாம். சில மாதங்கட்கு முன் நமது நண்பர்களுள் படித்த சிலர் முன் வந்து இவ்விஷயங்களைப் பற்றி உபந்யாசங்கள் செய்தனர். தூண்டுப் பத்திரிகைகளும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அம்முயற்சி தற்போது யாது காரணத்தினாலோ நின்றிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து முயற்சிப்பார்களானால் முடிவுபெறு மென்பதில் சந்தேகமில்லை. ஜாதியத் திருத்தத்திற்கென்று தனியான பத்திரிகை யொன்று நடத்த முயல வேண்டும். பெரிய மனிதர்களைக்கண்டு அவர்களின் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தல் வேண்டும். பின்னர் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவைகளைச் சில கற்ற புண்ணியவான்கள் தங்கள் லௌகிக காரியங்களைக் கூடியவரை ஒழித்துக்கொண்டு முன்வந்துழைக்கவேண்டும். சில பணக்காரர்கள் உதவி செய்யவேண்டும். முன் வருவார்களா? பணம் வைத்துக்கொண்டும் ஏழைகளாயிருக்கிற மக்களின் கஷ்டங்கள் நீக்கப்படுமோ?

சி. மு. நா. மு. நாராயணன் செட்டி.

---



## செட்டு

நேயர்களே !

நாம் ஒவ்வொருவரும் வருமானத்துக்கு தக்கபடி செலவுசெய்யவேண்டும். உழைப்பாளியாய்மட்டும் இருத்தல்போதாது. நாம் தேடினபொருளை மிதமிஞ்சி செலவழித்தால் அதன் பலன் என்னமாகும்? இப்படி மிதமிஞ்சி செலவழித்தால் நமக்குண்டான பொருள்கள் யாவுமிழந்து தரித்திரானுவோம். இதனால் செட்டற்ற குடித்தனம் மட்டற்ற தரித்திரம் என்று ஆன்றோர் கூறுகின்றார்கள். வீண்டம்பம் செய்வதினாலாய பிரயோஜனமென்ன? சிலர் ஒவ்வொரு விதமான வீண் செலவுசெய்து கெட்டுப்போகிறார்கள். சிலர் வேசைவீட்டுக்குப் போயும், சிலர் கல்யாணம் முதலியவைகளில் ஆடம்பரமான செலவுகள் செய்தும், இன்னும் சிலர் குடியாலும் கூத்து நாடகம் பார்த்தல் முதலியவைகளில் வீண் செலவுகள் செய்தும் கெடுகிறார்கள். வீணிலழிக்கும் பொருளால் எவ்வளவோ ஏழைகளைப் பிழைக்கச் செய்யலாமே!

கிழப்பருவத்தில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பாருங்கள்—ஓர் சிற்றெறும்பை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவைகள் வேனிற்காலத்தில் நிரனான தானியத்தைச் சேகரித்து மாரிகாலத்தில் சுகமாயிருக்கின்றன. இதைப்பார்த்தாவது நாம் செட்டாயிருக்க முயலுவோமாக. ஆகையினால் நேயர்களே யான் சொல்வதில் ஏதேனும் பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்

கள். வீண் செலவுகள் செய்து பின்னால் தரித்திரதசை யடையுங்காலத்தில் நம்முடைய கௌரவமிழந்து யாவரு மிகழக்கூடியவர்களாவோம்.

"ஆன முதலி லதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்வனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" (ஔவையார்)

முன்பணத்தை வீண் செலவுகள் செய்து பின்னால் வருத்தப்பட்டாலாய பலனென்ன? சிக்கனம் குடித்தனத்தை முன்னுக்குக் கொண்டுவரும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் வரவுக்குத் தக்கவாறு செலவுசெய்ய முயலுவோமாக.

முத்துக்குமாரசாமி, கோவில்பட்டி.

குறிப்பு.—செட்டு என்கிற இவ்விஷயத்தை நமது சகோதரிகளே அவசியம் அதிகமாய்க் கவனிக்கவேண்டியது. அதற்குரியவர்கள் அவர்களே. நமது நாட்டில் வருமானத்தைத் தன்கையிலேயே வைத்துக்கொண்டே செலவு செய்யும் ஆடவர்கள் மிகச்சிலரே. பெரும்பாலும் குடும்பபொக்கிஷக்காரர்கள் மாதர்களே. வீண்செலவுசெய்யும் ஆடவரும் தங்கள் மனைவியரை நன்மொழிகளால் ஏமாற்றி, அல்லது எதாவது பொய்ச்சாக்குகூறி, அல்லது அவர்களை மிரட்டி அவர்களிடமிருந்தே பணத்தைப் பெற்றுக்கொண்டுபோய் தீயவழிகளில் செலவிடுவது பலரும் அறிந்தவிஷயம். மாதர்கள் குடும்பகாரியங்களில் செட்டாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன.

புருடர்கள் வீண்செலவுசெய்தால் அவர்களைக் கண்டித்துத் தடுக்க மாதர்க்குச் சொந்தமும் அதிகாரமுமிருக்கிறது. ஆனால் ஒரு ஸ்திரீ குடும்பத்தில் செட்டாய்நடக்காமல் பண்டங்களைவீணழிவுசெய்தால் புருடனால் அதைக் கவனிக்க முடியாது. ஒரு ஸ்திரீ தன் கணவன் வருவாய்க்குத் தக்கபடி செலவுகளைக் கவனித்து வீட்டுப்பொருள்களில் எள்ளளவேனும் வீண்போகாதபடி செட்டாய் நடந்து புருடனுக்குக் கடன் உண்டாக்காமல் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். தன்கணவன் வருவாய்க்கு அதிகமான பொருள்களில் இச்சைவைத்து அவனைக் கடன்காரனாக்கலாகாது. சிலர் தமது கணவர் வருமானம் தெரிந்திருந்தும், "அவள் இந்த நகைபோட்டுக்கொண்டிருக்கிறாள்—இவள் அந்த நகை போட்டுக்கொண்டிருக்கிறாள். என் தலைவிதி என்றைக்கும் இந்தகெதியாயிருக்கிறது........" என்று தம் கணவரிடம் முறையிட்டு அவர்களுக்குத் துயரத்தை யுண்டாக்குகிறார்கள். சிலர் புருடனைத் தொந்தரைசெய்து நகையையோ உடைகளையோ வாங்கிக்கொடுக்கும்படி தொந்தரைசெய்து அவனைக் கடன்காரனாக்கி விடுகிறார்கள். பிறகு அவன் மாதமாதம் வட்டியைக் கொடுத்துக்கொண்டு வரவே முடியாமல் அதற்கு வேறே சில்லரைக் கடன்களை வாங்கி கடைசியில் திராவியாகூலத்திற்காளாகி ஆயுள் க்ஷீணமடைகிறான். இவ்வாறு ஸ்திரீகளால் சில குடும்பங்கள்கெட்டுப் போயிருக்கின்றன. இத்தகைய ஸ்திரீகளே பெண்ணல்ல பேயென்னப்பட்டவர்கள்.

சிலர் சிக்கனத்தை உலோபத்தனமாக்கிக்கொண்டு அறுபட்டகைக்கு சுண்ணாம்பும் உதவாத மனமுடையவர்களாகிவிடுகிறார்கள். இது பெரும் பாபத்தையும் கெட்டபெயரையும் உண்டாக்கிவிடுகிறது. தன் கணவனது வருமானத்திற்குத்தக்க தருமம் செய்யவேவேண்டும். தம்மிலும் ஏழைகளிடமும் கிராதாவாய் உள்ளவர்களிடமும் கருணைவைத்து தம்மால் இயன்றவரை யுதவிசெய்யவேண்டும். தன் உலோபகுணத்தால் தனக்கும் தன் கணவனுக்கும் பழிப்பை



யுண்டாக்கிக்கொள்ளாது புருடனுக்குக் குடும்பவிஷயத்தில் எள்ளளவும் கவலையுண்டாகாவண்ணம் நடந்துகொள்கிறவளே நம் உயிர்போல் நேசிக்கத்தக்க உத்தமபத்தினியாவாள்.

பத்திராசிரியர்

---

## நமது கடமைகளைப்பற்றிய சில குறிப்புகள்.

1. நாம் ஒவ்வொருநாளும் விடியற்காலையில் எழுந்திருந்து கடவுளை தியானிக்கவேண்டும்; பின் காலைக்கடனை முடித்துக்கொண்டு மனம் சரியாய் இருக்கவே அவசியம் காலையில் ஸ்நானம் செய்யவேண்டும். இதனால் தேகாரோக்கியமும் புத்திதெளிவும் உண்டாகும். உடனே உலர்ந்தமடி தரித்து தம் மதாசாரப்படி விபூதியோ அல்லது வேறு சாதனங்களையோ அணிந்துகொண்டு கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

2. உண்டி முதலியவைகளைச் சுத்தமாயும் சரியாயும் புசிக்கவேண்டும். குடும்பகாரியங்களில் ஒழுங்கு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். உள்ளமட்டில் வீடுவாசல்களையும் தெருக்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். சுத்தம் சோறிடும் என்பது உலகப்பிரசித்தம்.

3. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றார் ஔவையார். அதாவது நம்மை அன்போடு பெற்றுவளர்த்த தாய் தந்தையர்களை தெய்வமாகப் பாவித்து அவர்கள்சொல்லும் நீதிவசனங்களை வேதவசனமாய்க்கொண்டு வணங்கி நடந்து அவர்களுக்குப் பிணிமூப்பு முதலானதுகள் உண்டாகும்போது அருகிலிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை உண்மையான உள்ளத்துடன் செய்து பாதுகாக்கவேண்டும்.

4. இகலோக சுகத்திற்கும் பரலோக பாக்கியத்திற்கும் பொருத்தமானவள் மனைவியாகையால் அவளிடம் புருஷன் மிகவும் அன்புவைத்து அவள் நமக்குத்தக்கபடி விரும்பும் உண்டி, உடை, ஆபரணங்கள் சகிதமும் அளித்து மாமி நாத்திகள் கொடூரத்திற்கிடங்கொடாமல் கல்வி ஞானம் தெய்வபக்தி முதலானதுகளைப் போதித்தும் மாதவிடாய், கர்ப்பம், பிணி முதலான அசந்தர்ப்ப காலங்களில் அவளருகிருந்து அன்போடு வேண்டிய உதவிகளனைத்தும் செய்து அவளிடம் பேசும்போது சாந்தமாகவும் மரியாதையாகவும் பிரியமாகவும் பேசி அவளது விருப்பத்தைக் குறிப்பினாலறிந்துசெய்தும் உண்மையான வாழ்க்கைத் துணைவியாகக்கொண்டு கௌரவப்படுத்தவேண்டும்.

5. நமது குழந்தைகள் கேவலம் காமசாந்தியின் பலனாக வந்தவர்களல்ல. அவர்கள் பரமேசுவரருடைய பரிபூரண அன்பினால் பிரகாசிக்கும் பிரபஞ்சத்தின்கண் பிரஜாவிருத்தியாக்கத் தேவதூதராக அனுப்பப்பட்டவர்கள். அப்படி அனுப்பப்பட்டவர்களைத் தக்கபடி போஷித்துக்காத்துப் பிரபலமாக்க பெற்றோராகிய தாய்தந்தைகளைப்பரிபாலகராக பரமேசுரர்நியமித்திருக்கிறார். ஆகவே பெற்றோர் தமது மக்களை உணவு, உடுப்பு தேகாப்பியாசம் முதலானதுகளால் தக்கபடி பாதுகாத்தும் கல்வி, கைத்தொழில் கடவுள் பக்தி முதலானதுகளைப் போதித்தும் தாம் போதிக்கிறபடி தாமும் முன்மாதிரியாக நடந்தும் தமது நடவடிக்கைகளை அவர்களும் பின்பற்றும்படி வளர்க்கவேண்டும்.

6. நமது சுற்றத்தார் ஒவ்வொருவரும் நமது பிரியமுள்ள பந்துக்கள் நமக்குக் கஷ்டம் நேரிடுங்காலத்தில் சுற்றத்தார் உதவி செய்வதைப்போல் வேறேயோர் உதவிசெய்தல் அபூர்வம். ஆகவே சுற்றத்தாரில் எவராவது நல்லதசையிலிருந்தால் அவர்களைக் கண்குளிரக் கண்டு சந்தோஷிக்கவேண்டும். அவர்கள்

கெட்டதசையிலிருந்தால் அவர்களுக்குவேண்டிய உதவிகளைச் செய்து ஆதரித்து வரவேண்டும்.

7. இப்பிரபஞ்சத்தில் செல்வவான்கள் சிலராகவும் அவர்களுடைய உதவியினால் ஜீவிப்பவர்கள் பலராகவும் இருக்க பரமேசுவரர் நியமித்திருக்கிறார். இப்படி சிலராகவிருக்கும் செல்வவான்களில் பெரும்பான்மையோருக்குச் செல்வத்தைச் சீரானவழியில் செலவழிக்கத் தெரியாமல் கெட்டவிஷயங்களில் செலவழித்து இகத்துக்கும் பரத்துக்கும் தீமையை விளைவித்துக்கொள்வார்கள். ஆகவே செல்வவான்களுடைய திரவியத்தைத் தக்கபடிநல்லவிஷயங்களில் செலவழிக்க புத்திமான்கள் அடிக்கடி அறிவிக்கவேண்டும்.

8. உலகில் பெரும்பான்மையோரை ஏழைகளாகவும் சிறுபான்மையோரைத் திரவியவான்களாகவும் நியமித்து போஷித்துவரும்படி கடவுள் நியமித்திருக்கிறார். ஆகவே வேலைசெய்ய வகையற்ற பெரியோரையும் கூன், குருடு, நொண்டி, மூடம், மூப்பு முதலியவைகளால் யாதொரு தொழில்செய்யவும் சக்தியற்ற ஏழைகளையும், ஆதரவில்லா அநாதைகளையும், தாய் தந்தையில்லாச் சிறுவர்களையும் தமது மக்களைப்போல பாவித்துப் பாதுகாக்கவேண்டும்.

9. நாம் எப்பொழுதும் பக்கத்துவீட்டார்களைப் பகைத்துக்கொள்ளவும் அயல்வீட்டாரை அலக்ஷியம் செய்யவும்கூடாது. ஏனெனில் நாம் பிறருடைய சகாயமின்றிச் சுகமாய்ப் பிழைத்தலரிது. அவ்வித சகாயங்கள் பெரும்பாலும் அக்கம்பக்கத்தாரிடம் அடைவது அநுபவம். ஆகவே அவர்கள் தனவந்தர்களாயினும் சரி தரித்திரர்களாயினும் சரி அவர்களுக்கு நேரிடும் சுகதுக்கங்களுக்கு தம்மாலியன்றவரை உதவிகளைச் செய்துவரவேண்டும்.

10. எவரைக்கண்டாலும் மரியாதையாகவும் வணக்கமாகவும் அழைத்து உபசரிக்கவேண்டும். பிறரிடத்தில் உண்மை பேசவேண்டும்; அவர்களிடம் சொன்ன சொல்லின்படி நடக்கவேண்டும். அடைக்கலம் புகுந்தோரை அன்போடும் ஆசையோடும் ஆதரிக்கவேண்டும்; கெட்டவழியில் நடப்போரை நல்வழியில் நடக்கும்படி சீர்திருத்தம் உண்டாக்கவேண்டும்.

11. ஒவ்வொரு ஜீவஜந்துக்களிடத்தும் உண்மையாகவே இரக்கம் பாராட்டவேண்டும். உயிர்ப்பிராணிகளை ஒருபோதும் வீணாகவும் கொடூரமாகவும் வதைத்து வருத்தப்படுத்தக்கூடாது. அவைகளின் சுகதுக்கங்களைத் தமது சுகதுக்கத்தைப்போல் பாவித்துப் போஷித்துப் பாதுகாத்து ஜீவகாருண்யராக விளங்கவேண்டும்.

12. ஒவ்வொருவரும் தமது விஷயத்தில் தகுந்த கல்வியினாலும், தகுந்த தொழில்களினாலும், சாதுஜனசகவாசத்தினாலும், பெரியோர்களுடையபோதனைகளினாலும், ஞானவிருத்தியடைந்தும், சத்தியம், சாந்தம், பரிசுத்தம் முதலான திவ்ய குணங்களினால் ஆத்மபரிசுத்தம் பெற்றும் பிரகாசிக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் மேற்கூறிய ஒவ்வொரு கடமைகளுக்கும் இலக்காகி சத்தியமார்க்கத்திலும் தர்மமார்க்கத்திலும் நன்மார்க்கத்திலும் நடப்போமாயின் ஆனந்தமான அழிவற்ற பதவியை அடையவல்லோம்.

K. R. கணபதிப்பிள்ளை, துனியமுத்தூர்.

---

## அநுபவஞானம்.

உயிர்வாழ்தலாவது என்ன? ஒருவன் தன் கடமைகளைச் செவ்வனே செய்யக்கற்றுக்கொள்வது என்பர் சிலர், சிலர் நல்வழியில் பழகி நன்னடக்கையைக்



கைக்கொள்வது என்பர். மற்றொரு சாரார் பிரபஞ்சத்தின் இயற்கை சுபாவங்களில் உழன்று, சுகதுக்கங்களால் பண்படுத்தக்கூடிய காரியகாரண தத்துவக்களஞ்சியம் எனப் புகல்வர். இப்படியிருக்கையில் பிரபஞ்சவாழ்வு நமக்கு சந்தோஷத்தையே தரக்கூடியதென்று கொள்ளற்பாலதன்று. அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு பிரபஞ்சவாழ்வு ஒரு சாதனமென்றே எண்ணுவது சான்றாகும். "நல்வினையும் தீவினையும் உண்டு இரிதரும், செய்வினைக்கும் வித்தாம் உடம்பு" என்ற நம் மூதாட்டியின் பொய்யாமொழிக்கேற்ப உற்று நோக்குமிடத்து உயிர்வாழ்வின் நிலைமையை அறிய விரும்புவோர் தாம்தாம் செய்யவேண்டிய கடமையையே முக்கிய கொள்கையென கடைப்பிடித்து ஒழுகவேண்டும். சுகதுக்கங்கள் ஒளியும் இருளும்போன்றதாதலின் அநுபவத்தால்வரும் ஞானம் விசேஷமே.

அநுபவத்தாலாய பயன் காலக்கிரமத்தில் குணகுணங்கள் சீர்திருத்தப்பட்டு உண்மை, பரிசுத்தம், திடம், பண்பு, இவை நிறைந்த ஒழுக்கமாம். சொல்லிக்கொடுத்த வார்த்தையும் கட்டிக்கொடுத்த சோறும் புத்தியில்லா ஒருவனுக்கு எப்படிப் பயன்படாவோ, அங்ஙனமே அநுபவத்தால் விளையும் அறிவை நடவடிக்கைகளில் உபயோகப்படுத்தா ஞானம். மேலும் சிறுவயதில் எண்ணும் எண்ணமெல்லாம் பிற்காலத்தில் நிறைவேறாது போகக்காண்பதினாலும்,

"ஒன்றை நினைக்க அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—என்றும்
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன்செயல்" என்பது பலமுறை மெய்க்கக்கண்ட பின்னும் நமது செயலும் எண்ணமும் சாசுவதமில்லையென்று மனப்பூர்வமாய்த் தெரிந்துகொண்டு சுயநலங்கருதாது பிறர்நலங்கருதி "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்—பண்பு பாராட்டு முலகு" என்ற தமிழ்ச் சுருதிக்கேற்ப எவ்வகைச் சீவனிடத்தும் அன்புவைத்து நடக்கும் அநுபவமே பெரிது. மூடனும் காலக்கிரமத்தில் புத்திமான் என்று பலர் சொல்லக் கேள்விப்படுகிறோம். தன்னைத் தானே அறிந்துகொள்வதற்கும் தன் நடக்கையிலுள்ள குறைகுணங்களைத் தெரிந்து சீர்திருத்தம் செய்துகொள்ள, நுட்பபுத்திவாய்ந்த புண்ணிய ஆத்மாக்களுக்கு முக்கிய சாதனம் அநுபவஞானம்.

N. S. ராமச்சந்திர அய்யர், பி. ஏ.,

---

## ஓர் வேண்டுகோள்.

ஆனந்தபோதினியின் சந்தாநேயர்களுக்கும் விஷயதானம்புரியும் அன்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளும் ஓர் பெருங்கடமை:—இந்த ஆனந்தபோதினி என்னும் அருமையான ஞானமணியை ஆதரித்து நீடூழிகாலம் நிலைநிற்கும்படிக்கும் அதனால் நம் தாய்நாடும் நம் தாய்ப்பாஷையும் க்ஷேமமடையவும் கருதி முன்வந்த என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இப்பரதகண்டத்தில் நம்முடைய முன்னோர்கள் அநேக அதிரகசிய சன்மார்க்க ஞானவிஷயங்களைப் பல பாஷைகளிலும் பலவிதமாக எழுதிவைத்து அதில் சிலவிஷயம் சிலருக்குமட்டும் வெளியாகியும் அப்படி வெளியானது அபூர்வமாக சிற்சிலர் அனுஷ்டானத்திற்கு கொணர்ந்தும் சிலர்விட்டும் அது பலவிதமாகவும் இன்னும் அநேக விஷயங்கள் இரகசியமாகவே இருந்துகொண்டும் இருக்கின்றனவென்பது யாவருமறிந்த விஷயமே. இத்தகைய அரிய அதிரகசிய ஞானவிஷயங்கள்

எல்லாம் நம்தருமைவாய்ந்த ஆனந்தபோதினி தன்பத்திரிகாசிரியரிடமிருந்தும், வேறு சில கற்றுணர்ந்த ஆன்றோர்களிடத்திலிருந்தும் பெற்றுக்கொண்டுவந்து நம்மனைவருக்கும் களிவோடளிக்கிறது.

இச்சஞ்சிகைபிறந்து 3-ளு 5-மீங்களேயாகியும், இம்மழலைப் பருவத்திலேயே இவ்வளவு சன்மார்க்க அதிரகசியங்களை வெளியாக்கும் இந்த ஞான மணியான போதினி வயது அதிகப்பட அதிகப்பட இன்னும் நமக்கு எட்டாத அதிரகசிய சன்மார்க்கங்களை எடுத்து ஓதும் என்பதில் ஐயமேயில்லை. இச் சஞ்சிகை பொதுநலங்கருதியே உழைத்து வருவதென்பதும், எப்பத்திரிகையிலும் இது சிறந்ததென்பதும் எல்லோரும் எளிதில் வாங்குவதற்கு சந்தாதொகையோ மிகவும் குறைவுள்ளதென்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. இவ்விஷயமனைத்தும் நன்குணர்ந்த நண்பர்களில் ஒருவரான ம-ள-ள-ஸ்ரீ, புதுவை ஓர்லயன் பேட்டை ச. பழனிநாயகம் என்னும் புண்ணிய புருஷர், நமது நண்பர் புதுவை ஓர்லயன்பேட்டை ம-ள-ள-ஸ்ரீ, வி. தங்கவேலுமுதலியார் என்பவர் நமது பத்திரிகையில் பேதமையகற்று என்ற வியாசம் எழுதியதன் சம்பந்தமாய், அது எதிலிருந்து எடுத்து எழுதியது என்று உடனே தெரிவிக்காத விஷயத்திற்காக புரட்டாசிமீ சஞ்சிகையில் இனி அவரால் வெளியாகும் வியாசத்தை அச்சிட்டு வெளியிடக்கூடாது என்றும் அப்படி வெளியிடுவீர்களாகில் சஞ்சிகைக்கும் பத்திரிகாசிரியருக்கும் அவமானம் நேரிடும் என்றும் பிறகு நாம் யெழுதிய மறுப்பை பதியாவிட்டால் நான் வேறு பத்திரிக்கையில் பேசிக்கொள்ளுகிறேன் என்று இவர் 24-8-18-ல் எழுதிய நிருபவிஷயத்தையும் இந்த ஐயா எழுதி பத்திரிகாசிரியருக்கு வந்ததும், ஷெ வி. தங்கவேலு முதலியார் அவர்களால் அடுத்த ஞயம்படை உரை என்ற வியாசம்யெழுதி அதில் முன் எழுதிய பேதமையகற்று என்ற வியாசமும் இதுவும் இராமபாரதியார் அவர்கள் இயற்றிய நூலிலிருந்து எழுதப்பட்டது என்ற வியாசமும், பத்திரிகாசிரியருக்கு வந்துவிட்டது. இதுவிஷயம் ஒருவிதமான திருப்திகாமே என நமது பத்திரிகாசிரியர் அச்சில் ஷெ ஞயம்படவுரை என்ற வியாசத்தையும் பதித்துவிட்டார். இதற்குள் நமது நண்பர் கனம் பழனிநாயகம் என்பவர்க்கு வந்துவிட்டதையா கோபம். இவர் 31-8-18-ல் எழுதிய மூர்க்கங் கொண்டெழும் அக்கினி சுவாலைபோல் கோபவெறிகொண்டு, நமது பத்திரிகாசிரியரை அகாரணமாகவும் அநீதியாகவும் பலவிதமாகத் தூஷித்தெழுதியது நம்மனைவர்க்கும் மிக்க மனவருத்தத்தை யுண்டாக்கியது. இது கற்றுணர்ந்த அறிவாளிகளும், பெருந்தன்மையுடையோரும் செய்யத்தக்ககாரியமோ, இது அடாதகுற்றமல்லவோ, இவ்வாறு தூஷித்ததற்கு நமது பத்திரிகாசிரியரெழுதிய (சந்தாநேயர்களாகிய அறிவாளிகளே என்ற) குறிப்பில் அவருடைய கல்வியும் அடக்கமும் பொறுமையும் நன்கு விளங்குகிறதை யாவரும் அறிந்திருப்பீர்கள். (ஆனால்) விஷயதானம்புரியும் நண்பர்களில் சிலருக்கு ஒருசமயம் ஒருவித எண்ணமிருக்கலாம். அதாவது நாம் தானே விஷயங்களை மாதமாதம் எழுதுகிறோம். பத்திரிகாசிரியருக்கு என்ன தெரியும், நாம் எழுதிய வியாசங்களை அச்சிட்டு வெளிப்படுத்தவேதான் தெரியும் என்று ஓர்வித நினைப்பிருக்குமோவென்று கருதவேண்டியதாயிருக்கிறது. அப்படி நினைப்பிருக்கும் பட்சத்தில் அந்தத் தப்பெண்ணத்தை இன்றோடே விட்டொழியப் பிரார்த்திக்கிறேன்.

அவர் ஒவ்வொரு சஞ்சிகையிலும் எழுதும ஒவ்வொருவியாசமும், விஷயதானம்புரிவோர் எழுதும் வியாசங்களுக்கு குறிப்பு எழுதுகிற தன்மை முதலியவற்றையும் யோசித்துப்பாருங்கள். இவர் எவ்வகையான சாஸ்திரப் பயிற்சியுடையார் என்பதும் எவ்வகையான நற்காரியங்களிலும் பழக்கப்பட்டு



இருக்கிறார் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலதெளிவாகும். ஆகையால் என் அன்பார்ந்த சந்தாநேயர்களே! விஷயதானம்புரியும் கல்விமான்களே! இனி இத்தகைய விஷயங்கள் நமது சஞ்சிகையில் தலைகாட்டாவண்ணம் பாதுகாருங்கள். இனி நம்முடைய ஆனந்தபோதினி மிக்க தீவிரத்துடன் ஆனந்தமாய் விர்த்தியடையவும் அதனால் நம்முடைய தாய்நாடும் நம் தாய்ப்பாஷையும் க்ஷேமமடையவேண்டி நம்மாலான உதவியைச் செய்யவும் கடமை யுடையோம் என ஆனந்தமாய் ஆசைகொள்வதோடு, பொதுநலங் கருதி இரவு பகல் ஓயாக்கவலையுடன் மேற்சொல்லிய காரியங்களுக்கு கங்கணங்கட்டிக்கொண்டு திரிகாணத்தோடு உழைத்துவரும் நமது பத்திராதிபருடையவும் பத்திரிகாசிரியருடையவும் மனதிற்கு எள்ளளவு வருத்தத்தையும் அளிக்காமலிருக்கவேண்டுமாய் மிக்க வந்தனத்துடன் பிரார்த்திக்கிறேன்.

K. தொளசி அய்யா எத்தண்டார், எட்மாஸ்டர் போர்டுஸ்கூல்.
எத்தண்டார்பட்டிகிராமம், தோகூர் P. O.

---

## பழமொழிகள்.

(191-ம் பக்கத்தொடர்ச்சி)

கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொள், பாத்திரம் அறிந்து பிச்சை இடு.
கோபமுள்ள இடத்தில் குணம் உண்டு.
கோல் இறந்த குருடனைப்போல்.
கோழி அடிக்கக் குறுந்தடி வேண்டுமா.
கோழி மிதிக்கக் குஞ்சு முடமாகுமா ?
சட்டி சுட்டது கை விட்டது.
சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பெய்ததுபோல்.
சாக்த் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்.
140. சாகுபிக்காரன்காலில் வீழ்வதினும், சண்டைக்காரன்காலில் விழலாம்.
சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்.
சுண்டைக்காய் காற்பணம், சுமைக்கூலி முக்காற்பணம்.
சுவர் இருந்தல்லோ சித்திரம் எழுதவேண்டும்.
சூரியனைக்கண்ட பனிபோல்.
செத்தவன் கண் செந்தாமரைக் கண்.
செவிடன்காதில் சங்கு ஊதினதுபோல்.
சேற்றில்நாட்டிய கம்பம்போல.
தரித்திரப்பட்டாலும் தைரியம் விடாதே.
தலை இருக்க வால் ஆடுமா ?
150. தலை இடியும் காய்ச்சலும் தனக்குவந்தால் தெரியும்.
தலைச்சன் பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக்காரிக்கு மருத்துவம் சொன்னாற்போல்.
தலைக்குமேல் வெள்ளம் சாண் ஓடி என்ன முழம் ஓடி என்ன?
தன் குற்றம் தனக்குத் தெரியாது.
தன் வினை தன்னைச் சுடும்.
தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சீலை.
தாய் அறியாச சூலுண்டோ ?

தாய்க்குப் பின் தாரம்.
தானே கனியாபழத்தைத் தடிகொண்டு அடித்தால் கனியுமா?
160. தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்.
திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
திருடனைத் தேள்கொட்டினதுபோல்.
திருப்பதி அம்பட்டன் க்ஷவரம் செய்ததுபோல்.
தீ இல்லாமல் புகை கிளம்பாது.
தீட்டின மரத்தில் கூர்பார்க்கிறதா?
தீப்புண்ணாறும், வாய்ப்புண்ணாறாது.
தீவட்டிக்காரனுக்குக் கண்தெரியாது.
துறவிக்கு வேந்தன் துரும்பு.
துள்ளுகிறமாடு பொதி சுமக்காது.

(தொடரும்)

S. V. பழனியப்பன்.

---

## ஓர் அதிசயக் கணக்கு.

இங்கு காட்டியுள்ள படத்தில், ஓர் வரிசையிலுள்ள நான்கு எண்களைக் கூட்டினாலும், ஒரு கட்டளை ஒட்டியுள்ள, நான்கு எண்களைப் பிரதட்சணமாய் கூட்டிப்பார்த்தாலும், மூலைக்கு மூலையாய் நேராக, கூட்டினாலும், நான்கு மூலைகளிலுமுள்ள நான்கு எண்களைக் கூட்டினாலும், அல்லது 1, 2, 3, 4, என்று குறிப்பிட்டிருக்கின்ற எண்களை வரிசையாய் சேர்த்துப்பார்த்தாலும் ஒரே எண் வரும்.

| | | | |
|---|---|---|---|
| 22 | 1 | 20 | 7 |
| 19 | 8 | 21 | 2 |
| 5 | 18 | 3 | 24 |
| 4 | 23 | 6 | 17 |

S. சுந்தரேசன், தஞ்சாவூர் குளத்தெரு, திருச்சிராப்பள்ளி.

---

## நாம் செய்யத்தகாதவைகள்.

1. குழப்பமாயிருக்கும் ஒரு கூட்டத்திற்குள் ஒன்றும் அறியாமல் உள்ளே நுழையலாகாது. அதனால் ஆபத்துகளும் நேரிடலாகும்.

2. பலருமறிந்த துஷ்டர்கள் அயோக்கியர்கள் என்று தெரிந்த ஆட்கள் இருக்குமிடத்தில், அருகில்கூட நிற்கலாகாது. இதனாலும் ஆபத்தும் வீண் தொந்தரையும் உண்டாகும்.

3. நாம் செய்யாத குற்றத்திற்கு மன்னிப்பு கேட்கலாகாது. கேட்டால் நீயே குற்றத்தைச் செய்ததாய் ஒப்புக்கொள்வதாகும். பயத்தால் கேட்டாயோ கோழையென்று கருதப்படுவாய். கோழைத்தனமுடையவன் புருஷனும் மதிக்கப்படுவதில்லை.

ஆனால் குற்றம் செய்துவிட்டாயோ அதை மறைக்காமல் ஒப்புக்கொள்வதே புருஷத்தனமும் பெருந்தன்மையுமாகும்.

4. ஒருபோதும் ஒருவருடைய அங்கத்திலுள்ள குற்றம் குறைகளைப் பற்றி பேசாதே. அவற்றை நீ கவனித்ததாகவே அவர்களிடம் காட்டிக்கொள்



ளாதே. ஒருசமயம் அவற்றைப்பற்றி நல்ல எண்ணத்தோடு பிரஸ்தாபிக்க நேர்ந்தால் அப்போதும் அது அவர்கள் செவியில் விழாவண்ணமாய்ப் பேசு.

5. "எப்போதும் மனிதரைப்பற்றி சம்பாஷிப்பதைவிட, இதரவஸ்துக்களைப்பற்றி சம்பாஷிப்பதே நலம்" என்பதை மறவாதே.

6. எதிரிலுள்ளவர்களைப் பற்றியேனும் பின்னாலுள்ளவர்களைப் பற்றியேனும் ஏளனத்தையுண்டாக்கத்தக்க விஷயங்களைக் கூறாதே.

அப்படி வேடிக்கையார்த்தமாய்க் கூற நேர்ந்தால் அவர்கள் பெயர் இடம் முதலியவற்றை மறைத்து மாறுபெயர்கள் வைத்துக்கூறு.

7. ஒருவரும் கேட்காமுன்னம் உன் அபிப்பிராயங்களைப்பற்றி நீயே தம்பட்டமடியாதே.

8. ஒருவர் அக்கரையோடும் உன்மேல் நம்பிக்கையோடும் தம் விஷயத்தைப்பற்றி ஆலோசனையோ புத்திமதியோ கேட்டாலன்றி நீயே யொருவர்க்கும் வலியக்கூறாதே.

9. ஒருவர் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி தம் அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டிருந்தால் அது தவறாயினும் நீ வலியப்போய் அதைக் கண்டனம் செய்யாதே.

10. அன்னியரிடம் காணும் அற்பகுற்றங்களை யெல்லாம் திருத்திக் கொண்டிராதே.

11. ஒருவர் கேட்கப் பிரியப்படாத விஷயங்களைப் பற்றி அவர்கள் எதிரில் பிரஸ்தாபிக்காதே.

12. உன் மனைவி தவிர மற்ற எந்த மாதரிடம் பேசினாலும் 'அம்மா' என்கிற மொழியைப் பின்னால் கூட்டியே பேசு.

(இவற்றில் ஐந்தாறு "இந்தியவர்த்தக விளம்பரம்" என்ற ஒருவித ஆங்கில சஞ்சிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன.

சீடன்,

---

## சந்தா நேயர்களுக்கும் நமது சஞ்சிகாபிமானிகளுக்கும் ஓர் சந்தோஷ சமாசாரம்.

இச்சங்கதியைத் தெரிவிப்பதற்காக நாம் கொஞ்சகாலமாய் மிக்க ஆவலோடு சமயத்தை யெதிர் பார்த்திருந்தோம். அதோடு ஒருகாரியம் பூரணமாய் நிறைவேறுமுன்பே அது நடக்கப்போகிறதாய்ப் பிரஸ்தாபிக்க நமக்குப் பிரியமில்லாதிருந்தது. இப்போது பரிவத்தினருளால் நமது நோக்கம் பூரணமாய் நிறைவேறியதால் இதை யாவர்க்கும் வெளியிடலானோம்.

இதுகாறும் நமக்குச் சொந்த அச்சுக்கூடம் இல்லாமல் வேறிடத்தில் நமது ஆனந்தபோதினி அச்சிடப்பட்டு வந்ததும், அதனால் சில சந்தர்ப்பங்களில் ஆலஸ்யமும், இன்னும் பல அசந்தர்ப்பங்களும் நேர்ந்ததென்பதும் சந்தாதாரர்களில் பெரும்பாலர் உணர்ந்த விஷயமே. இப்போது நாம் மின்சாரத்தால் இயக்கக்கூடிய யந்திரங்கள் முதலிய சகல கருவிகளும் வாங்கி "ஆனந்த போதினி அச்சுக்கூடம்" என்ற பெயரால் ஒரு அச்சுக்கூடத்தை ஸ்தாபித்திருக்கிறோம். அதற்கு வேண்டிய துரைத்தன உத்திரவு முதலியவையும் பெற்று முடிந்தபோதிலும், தைப்பூச தினமாகிய உத்தராயண புண்யகாலத்தில்தான் அதைத் திறந்து வேலைசெய்யத் தொடங்கவேண்டியதாய்ச் சான்றோர் அருளியிருக்கின்றனர்.

அதுமுதல் நமது சஞ்சிகை தன் சொந்த அச்சுக்கூடத்திலிருந்தே வெளிவருமாதலால் அதற்குப்பல அனுகூலங்கள் ஏற்படுமென்பது நாம் கூறாமலே விளங்கும். அதன் பிறகு பிரதி மாதமும் முதல் தேதி முதலே சஞ்சிகைகளை வெளியனுப்பும் வண்ணம் பூரண முயற்சியும் ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

அதோடு பல விஷயங்களுக்கும் இடையூறா யிருந்த கொடிய யுத்தம் ஆண்டவனருளால் ஒழிந்தவளையில் கூடியசீக்கிரத்தில் காகிதம் முதலிய அச்சுக்கருவிகள் சாதாரண விலைக்கு இறங்கும். அதுமுதல் நமது ஆனந்தபோதினி தன் உருவத்திலும் அமைப்பிலும் அழகிலுங்கூட விர்த்தி யடையும் என்றே பூரணமாய் நம்பலாகும்.

ஆனால் யாவற்றிற்கும் நமது சந்தா நேயர்களுடையவும் விஷயதானம் புரியும் அன்பர்களுடைய பேருதவியும் அன்பும் மிகுதியும் வேண்டற்பாலது. மேற்கண்ட நண்பர்கள் இதுகாறும் மிக்க அன்போடும் சிரத்தையோடும் ஆனந்தபோதினியின் அபிவிர்த்தியைக் கவனித்து வருவதால், நாம் புதிதாய் யவர்களை யப்படிச் செய்யும்படி கோரினால், இதுகாறும் அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்று நாம் கருதியதாய் ஐயத்தை யுண்டாக்கும் என்று மிக்க அஞ்சுகிறோம். தனக்கு அமைந்திருக்கும் சந்தாதாரர்கள்போல் அன்பும் சஞ்சிகையின் அபிவிர்த்தியைக் கருதி யெடுத்துக்கொள்ளும் சிரத்தையும் உடைய சந்தாதாரர்களும் விஷயதானம் புரிவோரும் வேறெந்த சஞ்சிகைக்கும் அமைந்திருக்க வில்லையென்று ஆனந்தபோதினி சந்தோஷத்தோடும் பெருமையோடும் மனப்பூர்வமாய்க் கூறக்கூடும்.

ஆகையால் இது விஷயத்தைப் பற்றி நாம் அதிகமாய்க் கூறாமல் சந்தா நேயர்களும் விஷயதானம்புரியும் அன்பர்களுக்கும் இதுகாறும் ஆனந்தபோதினியின் அபிவிர்த்திக்காக எடுத்துக்கொண்டு வரும் சிரத்தையைக் காட்டிலும், இனியெடுத்துக் கொள்ளும் சிரத்தை பூரணமான பலனை யளிப்பதோடு, ஆனந்தபோதினியைத் துரிதமாய் அபிவிர்த்தி யடைந்து மேலோங்கச் செய்து நம் தாய் நாட்டிற்கும் தாய்ப்பாஷைக்கும் மிக்க நன்மைசெய்து, நமது அன்பார்ந்த சந்தா நேயர்களுக்கும், விஷயதானம் புரியும் நண்பர்களுக்கும் என்றுமழியாத கீர்த்தியையும், பெரும் புண்ணியத்தையும் அளிக்கும் என்று மிக்க நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்,

பத்திரிகாசிரியர்.

---

## பெண் கல்வி

(144-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களுக்குக் கல்விகூடாதென்று எந்நூலினும் விலக்கப்படவில்லை. எண்ணும் எழுத்தும் கண்ணுக்குச் சமானமென்று ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகப் பலவித்வான்கள் சொல்லி யிருக்கின்றனர். "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று ஔவையும், "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்—கண்ணென்பவாழுமுயிர்க்கு" என நம் நாயனாரும் கூறியிருக்கின்றனரே. பின்னும் "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு—புண்ணுடையர் கல்லா தவர்" என்று குறளில் கற்றவர்களே கண்ணுடையவர்கள், கல்லாதவர்கள் முகத்தி லிரண்டு புண்ணுடையவர்களென்று நம் நாயனார் ஸ்திரீ புருஷர்களுக்குப் பொதுவாகக் கூறியிருக்கின்றனரே யன்றி புருஷர்களுக்குமட்டும் சொல்லவில்லையே! படியாதஸ்திரீகளின் கண்களை நீலோற்பலமென்றும், வண்டென்றும், மானென்றும், மீனென்றும், மற்ற வித்வான்கள் எவ்வளவுதான் வர்ணித்தாலும், நாமொருநாளு மொப்ப மாட்டோம், புண்ணென்றே சாதிப்போம். ஏனெனில், திருவள்ளுவருக்கு மற்றப்புலவர்கள் அநுகஜாந்திரமன்றோ? கல்வியென்னும் ஔஷதப் பிரயோகஞ் செய்து மேலே கூறப்பட்ட புண்களைக் கண்களாகக் காதவரையில் நாம் நம்மின் கக்ஷியை விடோம். கற்பு என்கிற பதத்திற்கு கல்வி என்று அர்த்தமாகிற படியால், பெண்களுக்குக் கற்புவேண்டுமாயின் கல்வியும் வேண்டுமென்பது அப்பதத்தினாலேயே விளங்குகிறது.



ஸ்திரீயும் புருஷனும் ஒருதேகமென்பது சர்வமத சம்மதமானதால், புருஷன் மட்டும் வாசித்துப் பெண்சாதி வாசியாமலிருப்பது பாதியுடலிற் பிராணனும் பாதியுடலிற் பிராணனில்லாமலும் செய்கிற பாரிசவாயுபோலவும், பாதி உடலை அலங்கரித்துப் பாதி உடலை அலங்கரியாமல் விடுவதுபோலு மிருக்கின்றது. பெண்கள் படித்தால் அவர்களுக்குச் சகல விவேகமுமுண்டாகி, அவர்கள் புருஷர்களுக்கு மந்திரிகளைப்போலச் சமயத்தில் புத்தி புகட்டுவர். காரியஸ்தர்களைப்போலக் கிரகக்ருத்தியங்களையெல்லாம் நடப்பித்துக் கொள்வர். கணக்கர்களைப்போல வீட்டைச்சேர்ந்த கணக்குகளனைத்தும் வரைந்து கொள்வர். தாய்போலப் புருஷர்களைச் சம்ரக்ஷிப்பர். காவற்காரரைப்போல வீட்டுப் பண்டங்களையெல்லாம் காத்துக்கொள்வர். நற்சமயபாகிகளைப்போலப் புருஷர்களின் நாவுக்கிதமான பக்ஷணங்களைச் செய்துகொடுத்து உபசரிப்பர். வைத்தியர்களைப்போலக் குழந்தைகள் புருஷர்களின் தேகசௌக்கியங்களுக் கடுத்த காரியங்களைத் தேடிச்செய்வர். இங்கிதமான வார்த்தைகளைப்பேசி புருஷர்களின் வருத்தங்களைத் தீர்ப்பர். உத்தம சிநேகிதர்களைப்போலப் புருஷர்களின் ஆபத்திற் குதவுவர். புருஷர்கள் பிசகி நடந்தால் அவர்களுக்குக் குருவைப்போல உபதேசம் செய்வர். பெண்களுக்குப் படிப்பியாமையினால் இத்தகைய நன்மைகளையும் புருஷர்க ளிழந்துபோவது எத்தகைய மதியீனம்! இப்போது பெண்கள் படியாதவர்களா யிருப்பதனால் புருஷர்கள் தத்தம் தொழிலைச் சேர்ந்த வெளி வேலைகளுடன் கூட வீட்டைச் சார்ந்த காரியங்களையும் வகித்துக்கொண்டு இரண்டு புரவிகள் கட்டி யிழுக்கவேண்டிய சகடத்தை ஒரு புரவிமட்டும் இழுப்பது போலச் சிரமப்படவேண்டி யிருக்கின்றது. பெரிய குடும்பங்களில் அநேக பந்துக்களும் பிள்ளைகளும் வேலைக்காரர்களும் இருக்கிறபடியால், அடிக்கடி கலகங்களும், மனஸ்தாபங்களும் உண்டாகுமே! குடும்பத்தலைவி படியாத அவிவேக சிரோமணியா யிருப்பின் அவள் அக்கலகங்களை நிவர்த்தி செய்யவும், மற்றவர்கட்குபுத்தி கற்பிக்கவும் எங்ஙனம் சாத்தியமாகும்? குருடனுக்குக்குருடன் வழிகாட்டவும், மூடவனுக்குமூடவன் சிலம்பங் கற்றுக்கொடுக்கவும் கூடுமா? நிரக்ஷரகுக்ஷியா யிருக்கிற தலைவியானவள் வேலைக்காரர்கள் செய்கிற திருட்டுகளையும் புரட்டுகளையும் மோசங்களையும் கண்டுபிடித்துப் பொருட் சேதமின்றி குடும்பத்தை எப்படிப் பராமரிக்கக் கூடும்? மூடன் ஆஸ்தி முழுதும் நாஸ்தி என்பது போலப் பெண்களுக்குப் படிப்பின்மையால் திரவியநஷ்டம் சம்பவிக்கவும் இடமுண்டாகின்றது. பெண்கள் வாசித்திருந்தால் அவர்கள் வீட்டுவேலை செய்கிற நேரம் போக மற்றநேரம் நல்ல புத்தகங்களை வாசித்துத் தத்தம் அறிவை அபிவிர்த்திசெய்யவும், குழவிகட்குப் படிப்பிக்கவும் தக்கவர்களாயிருப்பர். அங்ஙனமின்மையால் ஸ்திரீகள் வீண் பேச்சும், வம்புவார்த்தைகளும், கோளும், புறணியும் பேசி, துன்மார்க்கங்களைக் கற்றுக்கொள்ள இடமுண்டாகின்றது. சிறு குழவிகட்குத் தகப்பனைவிடத் தாய்மாரிடம் அதிக பழக்க மிருப்பதனால், பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தையுங் கூடப் பிடித்தது போலப் படிப்

பில்லாத் தாய்மார்களின் அறியாமையும் தூர்க்குணமும் பிள்ளைகளையும் சாரும் படியாயிருக்கின்றது. புருஷர்களைப் பார்க்கிலும் பெண்களுக்கு அதிக அவகாசமான நேரமிருப்பதால், அவர்கள் படித்தவர்களாயிருப்பின் ஒளவை முதலானோர்களைப்போல அநேக பிரபந்தங்களை யுண்டுபண்ணவும், நூதன காரியங்களைக் கண்டுபிடித்துச் செய்யவும், அதனால் நம் தேசம் ஐரோபா தேசத்தைப் போலச் சீக்கிரம் நாகரீகமடையவும் இடமுண்டாகு மென்பது கரதலாமலகம் போல விளங்கவில்லையா? பிள்ளை பெற்றவர்களைப்பார்த்து மலடி பெருமூச்சுவிட்டது போல, ஐரோபா தேசத்தைப்பார்த்து நாம் பெருமூச்சு விடவேண்டியதே யன்றி பெண்கள் கல்வி கற்காதவரையில் நம் தேசம் திருந்தவேமாட்டாது. பெண்களின் கல்வியினால் புருஷர்களின் கல்வியும் அதிகரிக்கு மென்பது பிரகாசமாயிருக்கின்றது. எவ்வாறெனின், பெண்கள் தங்களைக் கல்வியில் வெல்லாமலிருக்கும் பொருட்டும், பரிகாசஞ் செய்யாமலிருக்கும் பொருட்டும் புருஷர்களுக்குக் கல்வியில் அதிக கவனமும் முயற்சியும் உண்டாகு மென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

கல்வி கல்லாதபெண்கள் எத்தகைய அழகுடையவர்களாயிருப்பினும், அவர்களின் அழகானது எட்டிமரம் பழுத்ததுபோலும், பிரேதத்தை அலங்கரித்தது போலும், சுத்த நிஷ்பிரயோசனமாயிருக்கின்றது. உயிரில்லா மண்பாவைக்கு நகைகள் பூட்டினாற்போல கல்லாத பெண்களுக்குண்டாகிய அழகினால் பிரயோஜனமென்னை? சில புருஷர்கள் தத்தம் பத்தினிகள் எத்தகைய சுந்தரமுள்ளவர்களாயிருந்தும், அவர்கள் படியாதவர்களாயும் மதுரமான சம்பாஷணை செய்யத் தகாதவர்களாயு மிருப்பதால், வீட்டுப் பெண்சாதி வேம்பும், நாட்டுப் பெண்சாதி கரும்பும், என்பதுபோல, சொந்த ஸ்திரீகளை விட்டு அழகில் மூதேவிக்கு மூத்தவளாயிருக்கிற தாசிகள் பாதமே கதியென ஓடுகின்றனர். தாசிகள் கல்வி கற்று மதுரமாய்ப் பேசுவதே இதற்குக் காரணம். பெண்கள் கல்வி கற்றிருந்தால், அவர்கள் அழகில்லாதவர்களாயிருந்தாலும் அவர்களைப் புருஷர்கள் விரும்புவார்க ளென்பதற்கும், பெண்களின் கல்வியானது புருஷர்கள் தாசிகளின் வீட்டிற்குச் செல்கிற வழியை அடைக்கு மென்பதற்கும் இதுவே சாக்ஷியாம். ஒரு புருஷனுக்குத் தன் பெண்சாதியின் மீது சந்தேகமுண்டாகி அவளைக்கண்டித்துத் தலைமண்டை யுள்ளவரையில் சோரநாயகனைச் சேருகிறதில்லை யென்று சத்தியம் பண்ணும்படி கேட்டனனும். அவள் புருஷனுக்குத் தெரியாமல் ஒரு மண்டையோட்டை யெடுத்துத் தலையின்மீது வைத்துக்கொண்டு தலைமண்டை யுள்ளவரையில் விபசரிக்கிறதில்லை யென பிரமாணஞ் செய்து கொடுத்து பழையபடியே நடந்துவந்தனளாம். இத்தகைய படியாத ஸ்திரீகளின் கற்பைப் புருஷன் தடியெடுத்துக் காக்கவேண்டி யிருக்கின்றது. பெண்கள் படித்தால் அவர்களின் கல்வியே கற்புக்குக் காவலாயிருக்குமென்பது நிச்சயமே. "சிறை காக்குங்காப் பெவன் செய்யுமகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" என நம் நாயனார் கூறுவது உண்மைதானே.

புருஷர்கள் தூரதேசம் சென்றிருக்குங்கால் அவர்கள் அனுப்பும் அந்தரங்கமான கடிதங்களைப் பெண்கள் வாசிக்கத் தெரியாமையினாலே அன்னிய புருஷர்களிடம்கொடுத்து வாசிக்கச் சொல்வதும் அவர்களைக்கொண்டே பதில் வரைவதும் வழக்கமாயிருக்கின்றது. பொருளுக்குத் திருடனையும் கிளிக்குப் பூனையையும், பசுவுக்குப் புலியையும், துணைவைத்ததுபோல, ஸ்திரீ புருஷர்களின் அந்தரங்கங்களை அன்னியபுருஷர்கள் அறிவது எத்தகைய பிரமாதமான காரியம்? வாசித்திருந்தால் அவர்கள் சுயமாகக் கடிதங்களை வாசிக்கவும், மறுமொழி யெழுதவுங் கூடுமன்றோ?

(தொடரும்.)

E. V. குப்புசாமிமுதலி, ஏழூர். ராசிபுரம் தாலூகா.



## நற்கோட்டை—நாவல்

(199-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவைகளைக் கேட்டதே, இராணி முதலில் மிக்க கோபமடைந்தவள்போல் அபிநயித்து, யாவற்றையும் அடியோடு மறுத்துக் கூறலாமென்று நினைத்தாள். அப்படிச் செய்தால் தங்கம்மாள் மிக்க கோபமடைந்து விபரீதத்திற்கு வழிதேடி விட்டாலும் விடக்கூடும் ஆகையால் இப்போது இவள் என்னகாரணமாய் வந்தாள், என்ன கேட்கிறாள் என்பதையும் தெரிந்துகொண்டு சமயோசிதப்படி வயவஞ்சக தந்திரத்தாலேயே நமக்கு ஆபத்து நேராவிதமாய், நமது இரகசியம் அடியோடு மறைந்துபோம் வண்ணம் செய்யவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, சட்டென்று அந்த விஷயத்தை யடியோடு விட்டு விட்டு.

"ஆ, இப்போது என்ன கோரிக்கையாய் என்னிடம்வந்தாய்? அதுதானே முக்கிய விஷயம். அதைக்கூறு" என்றாள்.

தங்கம்.—"எனக்கு மூன்று வரங்கள் வேண்டும். முதலாவது கண்ணபிரான் பிரபு மன்னிப் படையவேண்டும்" என்றாள்.

இராணி.—"காரியம் மிஞ்சிப் போய்விட்டது. சட்டப்படி நடத்த வேண்டுமென்று முன்னமே கட்டளை யனுப்பி விட்டேன்" என்றாள்.

தங்கம்மாள் அதைச் செவியேற்காதவள் போல் "பிறகு இரண்டாவது திரவியசிங்கம் பிரபுவிற்கும் அவருடைய சகோதரர்களுக்கும் கிருபைபாலித்து பூரண மன்னிப் பளிக்கவேண்டும்" என்றாள்.

இராணி.—"ஹா! அப்புறம் உன் மூன்றாவது வேண்டுகோ ளென்ன?" என்றாள்.

தங்கம்.—"மூன்றாவது இன்னதென்று தாங்களே யுத்தேசித்துக் கொள்ளலாம். அரியநாயகியை யிம்சிக்காமலாவது விட்டு விட்டால் போதும்" என்றாள்.

இதைக்கேட்டதே இராணிக்கு உண்மையாகவே கோபமும் மனக்கலக்கமும் வியாகுலமும் உண்டாய்விட்டது.

அவள் தங்கம்மாளை நோக்கி, "என்ன சொன்னாய் இம்சிக்கிறேனா! நானா இம்சை செய்கிறேன்? நான் அவளுடைய க்ஷேமத்திற்கே பாடுபடுகிறேன். அவளை யுயர்ந்த அந்தஸ்தில் நிலைக்க வைக்கவேண்டும். அதுவும் சீக்கிரத்தில் செய்ய வேண்டுமென்பது என்விருப்பம். ஆகையால் நீ யெனக்கு உதவிசெய்ய வேண்டும். ஹா! அவள் இங்கிருந்து தப்பித்துக்கொண்டு வந்தபிறகு நீ யவளைக் கண்டாயோ?" என்றாள்.

தங்கம்மாள், கண்டேன் அதனாற்றான் இங்குவந்தேன், என்றாள். இராணி "ஓ! அப்படியானால் நான் அவளைக் காப்டென் தினகரனுக்கு மணம்செய்து வைக்கும் முயற்சியில் நீ யெனக்கு உதவி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் நீ கேட்ட இரண்டாவது கோரிக்கையை நிறைவேற்றுகிறேன். திரவிய சிங்கம் பிரபுவையும் அவர் சகோதரர்களையும் மன்னித்துவிடுகிறேன்" என்றாள்.

தங்கம்.—சரிதான். அவள் பிரியத்திற்கு மாறாய்த் தினகரனை மணம் புரியும்படி யவளை யேன் கட்டாயப்படுத்த வேண்டும்.

இராணி.—அடி கிழமே, உனக்கென்ன பைத்தியமா? சங்கதி தெரிந்தா கேட்கிறாயே. அவள் திரவியசிங்கம் பிரபுமேல் காதல்கொண்டிருக்கிறாள். இப்போது உனக்கு விளங்குகிறதா?

தங்கம்.—அவன் அப்பிரபுமேல் காதல்கொண்டிருக்கிறான் என்பது தவறு.

இராணி.—(கோபத்தோடு).—" அவன் அப்பிரபுமேல் காதல்கொண்டிருக்கிறானென்று நான் கூறுகிறேன்.

தங்கம்.—நான் இல்லையென்று கூறுகிறேன்.

இராணி.—"காதல் கொண்டிருக்கிறான். என்னிடம் ஒப்புக்கொண்டான். கடவுளறிய நான் உண்மையே கூறுகிறேன். அச்சங்கதி தெரியாவிட்டால் நான் அவன் விஷயத்திற்கூட இம்மாதிரி ஏற்பாடு செய்வேனென்று நினைக்கிறாயா? நான் பொய்கூறுவேனென்று நினைக்கிறாய்? இல்லை யில்லை. இந்த விஷயத்தில் அவன் உன்னை யேமாற்றிவிட்டிருக்கிறான். அவன்மட்டுமல்ல, காதல் என்ற விஷயத்தில் எல்லாப்பெண்களும் அவ்வாறேதான்" என்றாள்.

இவை யாவும்கேட்ட தங்கம்மாள் கலக்கமுடையவளானாள். அரியநாயகி யிந்த விஷயத்தில் தமக்கு உண்மை கூறவில்லைதான் என்று எண்ணிக்கொண்டாள். கடைசியில் இராணி கூறியது உண்மையாய்த்தான் இருக்குமென்று எண்ணினாள். இராணி அவள் சிந்தனையின் நோக்கத்தை யறிந்து,

" இப்போது அந்த விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்யவேண்டியது அவசியந்தான் என்று தோன்றுகிறதா ?" என்றாள்.

தங்கம்.—ஒருபோதும் செய்யேன்.

இராணி.—என்ன? நான் கூறிய யாவும் கேட்ட பிறகு கூடவா! அவனே தான் அப்பிரபுவின்மேல் காதல்கொண்டிருப்பதாய் ஒப்புக்கொண்டான். இன்னும் அதைப்பற்றி திரவியசிங்கம் பிரபுவைக் கேட்டதற்கு அவரும் அரியநாயகி கூறிய யாவும் உண்மையென்று தான் ஒப்புக்கொள்வதாய்க் கூறினார், என்று இவையாவும் நான் கூறுகிறேன். இன்னுமுமா உனக்குத் தெரியவில்லை ?

தங்கம்.—"அப்படி யிருந்தாலும்கூட அவளுக்குச் சற்றும் விருப்பில்லாதவனை மணம்புரியும்படி அவளைக் கட்டாயப் படுத்துவதேனோ " என்றாள்.

இராணி.—அப்படிக்கின்றி அவன் அப்பிரபுவை மணம்புரியாமற் றடுப்பது எப்படி ?

தங்கம்.—" ஏன், அப்படிக் காரியம் மிஞ்சி விடுவதாயின் அவளிடம் மர்மத்தை வெளியிட வேண்டியதே " என்றாள்.

இதைக்கேட்டதே யிராணி திடுக்கிட்டு ஆத்திரத்தோடு " ஒருக்காலும் வெளியிடக்கூடாது. கூடாது! கூடாது !!" என்றாள்.

தங்கம்மாள் நான் கூறுவதைக்கேளுங்கள். "இந்த விஷயத்தில் தலையிடக் கூடியவர்கள் இரண்டேபேர். என்வரையில் நான் என் கடமையைச் செய்யத் துணிந்திருக்கிறேன். தங்கள்முன் இப்படித் துணிவாய்ப் பேசுகிறேனென்று கோபங்கொள்ள வேண்டாம். ஜீவகாருண்யத்தைக் கருதியேனும் செய்யக் கடமைப்பட் டிருக்கிறேன்" என்றாள்.

இராணி தன் கோபத்தை யடக்கிக்கொண்டு " பொறு பொறு. இப்போது நீ கோருகிறபடியெல்லாம் செய்துவிட்டால் அப்போது அரியநாயகிக்கு இரகசியத்தை வெளியிடவேண்டிய அவசியமில்லையே ?" என்றாள்.

தங்கம்மாள்.—அப்போது வெளியிடவேண்டாம்.

இராணி இந்த இரகசியம் உன்னையன்றி வேறு யாருக்கும் தெரியாதே யென்றதற்கு, தங்கம்மாள் " சிறையிலிருக்கும் அந்த இராஜலட்சுமி உயிரோடு வெளிவந்தாலன்றி அதை யறிந்தவர்கள் நம் மிருவரையன்றி வேறு ஒருவரு மில்லை யென்றாள்.



இராணி சற்றுநேரம் சிந்தனையி லிருந்தாள். அச்சமயம் காரியஸ்தர் வந்து " மகாராணி ! கற்கோட்டையிலிருந்து ஒரு ஆள் வந்திருக்கிறான் " என்றார்.

## 22-வது அத்தியாயம்

கற்கோட்டையிலிருந்து ஆள் வந்திருக்கிறான் என்றதைக் கேட்டதே தங்கம்மாள் மனதில் சந்தோஷம் உதித்தது. ஆயினும் அதைத் துரிதமாய் மறைத்து எப்போதும்போல் மர்மமாய் இருந்தாள். இராணி ஆத்திரத்தோடு " ஆ கற்கோட்டையிலிருந்தா ? யார் வந்தது ? என்ன சங்கதி ?" என்றாள்.

காரியஸ்தர்.—" மகாராணி முனிவரிடமிருந்து ஆள் வந்திருக்கிறான். அரியநாயகியை யெங்கு தேடியும் அவள் அகப்படவில்லையாம். மாளிகை முழுதும் நன்றாய்ச் சோதித்துப் பார்த்தார்களாம். சற்று முன்பு அவள் மாளிகையிலிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டுபோய்விட் டிருக்கிறாள் " என்றார்.

இதைக்கேட்ட இராணி மிக்க கோபமடைந்து காலால் பூமியை யுதைத்து " அப்புறம் " என்றாள்.

காரியஸ்தர்.—"இதுமட்டுமல்ல. இன்னொரு சமாசாரம்" என்று கூறி, தங்கம்மாள் முகத்தைப்பார்த்து மயங்கினார்.

இராணி.—" என்ன நிகழ்ந்து சம்பவித்திருந்தாலும் இந்தம்மாள் தைரியமாகவே சகிப்பார்கள். எதாயிருந்தாலும் அதைச்சீக்கிரம் கூறு " என்றாள்.

தங்கம்.—" ஐயோ, எங்கள் குடும்பத்தில் இடிமேல் இடிவிழுகிறது என்ன கெட்டகாலமோ ! பாபம் அரியநாயகி இம்சை பொறுக்காது எங்கோ ஓடிவிட்டாள். பகவானே! இதெல்லாம் எப்படித்தான் முடியுமோ வறியேன் " என்றாள்.

காரியஸ்தர்.—மகாராணியே. அங்கு ஒரு கொடிய கொலை நடந்திருக்கிறது. தங்கள் மெய்க் காப்பாளரில் ஒருவன் குரூரமாய்க் கொல்லப்பட்டான். அவன்றான் நேற்று திரவியசிங்கம் பிரபுவை அடையாளமறிந்து சிறையாக்கச் செய்தவன். ஆகையால் அவனைக் கொன்றது வேணுமென்ற வஞ்சத்தாலேயே யென்று தெரிகிறது. கொலைசெய்தது செல்வராயரும், அவருடைய தம்புசாமி யென்ற வேலைக்காரனுமே. இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் " என்றார்.

இதைக்கேட்டதே தங்கம்மாள் மனம் துடிதுடித்துவிட்டது. அவளுடைய அடக்கமும் பொறுமையும் பறந்துபோய்விட்டது. அவள் கோவென்றலறி,

" ஓகோ இது பொய். வெறும் பொய். செல்வராயன், என் சகோதரன் கொலை செய்கிறவனா? ஒருக்காலுமில்லை. இதெல்லாம் ஏதோ சதியாலோசனையால் வேண்டுமென்றே என் குடும்பத்தை யழிக்கவெண்ணி யாரோ செய்கிற வேலைகள். அவன் ஒருபோதும் கொலைபாதகத்திற் றலையிடான். என் சகோதரன் சிறைச்சாலையி லிருக்கிறானா " என்று பிரலாபிக்கத் தொடங்கினாள்.

இராணி அவளை நோக்கி " பொறுமையாயிரு. நடந்தது உண்மையாகவே யிருக்கவேண்டும் " என்று கூறும்போது, அம்மூதாட்டி பின்னும் துயரமும் ஆத்திரமும் கொண்டு கூச்சலிட்டு " இல்லை யில்லை. இது வெறும்பொய். அபாண்டம், அப்படிக்கின்றேல் அவன் மாளிகையில்போய் அவளை அவமரியாதையாய் அவன் பொறுக்கமுடியாத விதமாய் அவனை நடத்தி யிருக்க வேண்டும். இல்லை யில்லை. அப்போதும் அவன் ஒருவர் இரத்தத்தைச் சிந்த மாட்டான்......" என்று முறையிட்டாள். (தொடரும்)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

காளயுக்தி௵ தை௴—சாலிவாகன 1840—கலியுகாதி 5019,
பசலி 1827-28—கொல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1918ம்-௵ ஜனவரி௴—பிப்ரவரி௴

| தை௴ | ஜனவரி௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | செ | திர-25-27 | மிரு-25-47 | சித் 26 மா | உத்தராயண புண்ணியகாலம் பொங்கல் பண்டிகை. |
| 2 | 15 | புத | சது-22-5 | திரு-23-57 | சித்த 60 | மாட்டுப்பொங்கல் |
| 3 | 16 | வி | ○பௌர 19-49 | புன-23-20 | அமி 60 | கந்தசுவாமிகைலாய விமானம் |
| 4 | 17 | வெ | பிர-18-45 | பூச-23-48 | மரண 60 | திருவிடைமருதூர் தைபூசம் |
| 5 | 18 | ச | துதி-18-49 | ஆயி-25-26 | மா 25 அ | ஜபம் பூர்த்திசெய்ய |
| 6 | 19 | ஞா | திரு-20-29 | மக-28-2 | மா 28 சி | ஆயுதப்பிரயோகம்செய்ய |
| 7 | 20 | தி | சது-23-3 | பூர-32-33 | சித்த 60 | கிரகபாதை நிவர்த்திசெய்ய |
| 8 | 21 | செ | பஞ்-26-44 | உத்தி-37-35 | அமி 38 சி | |
| 9 | 22 | புத | சஷ்-31-41 | அஸ்த-43-42 | மா 44 சித் | |
| 10 | 23 | வி | சப்-36-48 | சித்-49-57 | சி 50 அமி | |
| 11 | 24 | வெ | அஷ்-41-52 | சுவா-56-16 | சித்த 60 | |
| 12 | 25 | ச | நவ-47-0 | விசா-60-0 | சித்த 60 | |
| 13 | 26 | ஞா | தச-51-20 | விசா-2-23 | மரண 60 | |
| 14 | 27 | தி | ஏகா-54-54 | அனு-7-50 | சித்த 60 | |
| 15 | 28 | செ | து-56-14 | கேட்-12-14 | சி 12 அமி | |
| 16 | 29 | புத | திர-58-12 | மூல-15-41 | ம 16 அ | |
| 17 | 30 | வி | சது-58-1 | பூரா-17-35 | சித்த 60 | |
| 18 | 31 | வெ | ●அமா-56-34 | உத்தி-19-30 | சித் 20 ம | தை அமாவாசை |
| 19 | 1 | ச | பிர-53-48 | திரு-17-58 | ம 17 சித் | பூமுடிக்க, விருந்துண்ண |
| 20 | 2 | ஞா | துதி-50-9 | அவி16—34 | சித் 14 ம | சீமந்தம் |
| 21 | 3 | தி | திரு-45-45 | சத-14-21 | சித் 14 ம | மிதுனம் ருதுசாந்தி |
| 22 | 4 | செ | சது-40-41 | பூரட்-11-17 | மா 11 அ | திருவள்ளூர் வீரராகவர் தீர்த் |
| 23 | 5 | புத | பஞ்-35-6 | உத்தி-7-38 | சித் 8 மா | தம் |
| 24 | 6 | வி | சஷ்-29-19 | சே-3-42<br>அசு-55-53 | அ 56 சித் | ஷஷ்டிவிரதம் |
| 25 | 7 | வெ | சப்-23-29 | பர-55-32 | சித்த 60 | கன்றுகாலிகள் வாங்க |
| 26 | 8 | ச | அஷ்-17-56 | கார்-51-47 | அமிர் 60 | கிருத்திகை விரதம் |
| 27 | 9 | ஞா | நவ-12-20 | ரோக-48-22 | சித்த 60 | புதுவுரல்புழங்க |
| 28 | 10 | தி | தச-7-35 | மிரு-45-43 | அ 46 சித் | விவாகம் |
| 29 | 11 | செ | ஏகா-3-24<br>து-56-37 | திரு-43-45 | ம 44 சித் | ஆயுதாப்பியாசம்செய்ய |

1919௵ பிப்ரவரி௴

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| | 4-கும்-செ<br>16-மக-புத<br>17-கு-சுக் | | |
| செ<br>சூ-சு | | | சனி |
| புத | ராகு | | |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி 4 — காளயுக்தி௵ தை௴ கஉ — 1919-ம்௵ ஜனவரி௴ 14உ — பகுதி 7

## கடவுள் வணக்கம்

சொல்லா லறிற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டி யாட்டி
துடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றில்
தொடுக்குந் தொடுத் தழிக்கும்
பொல்லாத வாதனை யெனுஞ்சத்த பூமியிடை
போந்துதலை சுற்றி யாடும்
புருடனி லடங்காத பூவைபோற் றனே
புறம்போந்து சஞ்ச ரிக்கும்
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடுங்
காணுது கேட்ட வெல்லாம்
கண்டதாக் காட்டியே யணுவாய்ச் சுருக்கிடுங்
கபட நாடக சாலமோ
எல்லாரும் வலதிந்த மனமாயை யேழையா
மென்று லடக்க வசமோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணெ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேயுன் னருள்வடி வாருமே.

வடிவெ லாநின் வடிவென வாழ்ந்திடாக்
கடிய னேனுமுன் காரணங் காண்பனோ
நெடிய வானென வெங்கு நிறைந்தொளிர்
அடிக ளேயரு ளேசய ருத்தனே.

# ஆனந்தபோதினி

## காளயுக்திஸூ தைமீ 1உ

### ஆனந்தம்

இப்போது நாம் வரையப்புகும் விஷய சம்பந்தத்தில் சந்தோஷம், ஆனந்தம் என்ற இரண்டுசொற்களும் ஒருபொருளை யுடையவைகளே. சாதாரணமாகவே சந்தோஷத்தின் மிகுதியையே ஆனந்தம் என்கிறோம்.

சகலப்பிராணிகளும் துக்கம் துன்பம் இவற்றைத் தவிர்த்து சந்தோஷத்தையும் இன்பத்தையுமே விரும்பும் சுபாவமுடையன. ஆயினும் பூர்வபுண்ணியத்தால் ஆறறிவுடைய மக்களாய்ப்பிறந்தோரே துக்கத்தை யொழித்து ஆனந்தத்தையடைய முயற்சி செய்வோர்.

ஆனால் பெரும்பாலர் உண்மையான ஆனந்தம் எதுவென்றும் அது எங்குளதென்றும் அறிய முயலாது, இவ்வுலகபோகங்களிலேயே ஆனந்தத்தை யனுபவிக்கிறார்கள். உண்மையாய்க் கூறுமிடத்து, உலகபோகங்களில் ஆனந்தம் இருப்பதாகவும் அதைத் தாங்கள் கஷ்டப்பட்டுத் தேடி யனுபவிப்பதாகவும் நம்புகிறார்கள்.

இது மிச்ரம (நன்மையும் தீமையும்—பாவமும் புண்ணியமும்—சுகமும் துக்கமும் கலந்த) உலகமாதலாலும் நாம் நமது மிச்ரம (பாவமும் புண்ணியமும் கலந்த) கன்மத்தை யனுபவித்தொழிக்கவே யிங்கு ஜனனமெடுத்தோமாதலாலும், அனுபவமாகவே சுகம் துக்கம் இரண்டையும் கலந்தே யனுபவிக்கிறோம். இவ்வுலகிலுள்ளவற்றாலேயே நமக்குத் துக்கங்கள் உண்டாகின்றன; அவற்றாலேயே துன்பமனுபவிக்கிறோம் என்று கருதுகிறோம். அதுபோலவே நாம் அனுபவிக்கும் சுகம் அல்லது ஆனந்தமென்பதும் இவ்வுலகிலுள்ள வஸ்துக்களாலேயே நமக்குக் கிடைக்கிறதென்று கருதுகிறோம்.

உண்மையில் சுகம் அல்லது ஆனந்தம் என்பது இந்த உலக வஸ்துக்களிலிருக்கின்றதாவென்று சிந்தித்துப் பார்ப்போம்.



நாம் எந்த வஸ்துவில் இச்சை வைக்கிறோமோ அந்த வஸ்துவால்தான் நாம் துக்கத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிக்கிறோம். இச்சைவைக்காத வஸ்துவால் நமக்கு துக்கமுமுண்டாவதில்லை சுகமுமுண்டாவதில்லை. ஒரு திருட்டாந்தம் எடுத்துக்கொள்வோம்:—ஒருவன் ஒரு கணையாழியை யணிந்துகொள்ள இச்சிக்கிறான். உடனே அதையடையப் பிரயாசை யெடுத்துக்கொள்கிறான். அது கிடைத்த வுடனே சந்தோஷமடைந்து அதை யணிந்துகொண்டதே பூரணதிருப்தியாகிய ஆனந்தமடைகிறான். பிறகு அக்கணையாழி மூளியாகியோ தேய்ந்துபோயோ அதற்கு ஏதாவது குறைவாவது இடையூறாவது நேர்ந்துவிட்டால் அதைச் சரிப்படுத்தும்வரையில் துன்பத்தை யனுபவிக்கிறான். அது அடியோடு கைசோர்ந்துவிட்டால் அல்லது களவு போய்விட்டாலோ அவனுக்குண்டாகும் துயரம் அதிகமே. அத்துயரம் அவன் அந்த வஸ்துவின்மேல் வைத்த வாஞ்சையின் அளவாயிருக்கும். அதாவது அதன்மேல் எவ்வளவு அதிகமாய் வாஞ்சை வைத்திருந்தானோ அவ்வளவு அதிகமாயிருக்கும் அவன் துயரம்.

அவன் அந்த வஸ்துவின்மேல் இச்சைவைக்காமலிருந்தாலோ அதைக் கண்டபோது சந்தோஷமுமுண்டாகாது. அது தற்செயலாய் தன்வசம் இருந்திருந்து பிறகு காணமற்போனாலும் எக்கதியானாலும் எள்ளளவு விசனமுமுண்டாகாது.

ஒரு பொருளில் ஒருவன் இச்சைவைக்கிறான். அது கிடைத்து அதை யனுபவிக்கும்போது உண்டாகும் ஆனந்தம் அப்பொருளினிடத்திலிருந்து உண்டானதென்று கருதுகிறான். இவ்வாறு ஆனந்தமுடையதென்று இவன் நம்பும் அப்பொருளை யிச்சிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து அதனால் என்ன அனுபவிக்கிறான் என்று கவனிப்போம்.

இச்சை யுண்டானதே அப்பொருளை யெப்படி யடைவது என்ற சிந்தனையும் கவலையும் உண்டாகிறது. சிந்திக்கும்போது அதை யடைவதற்குவேண்டிய பொருள் முதலிய உபகரணங்களைச் சம்பாதிக்கத் தன்னால் முடியாதென்று கண்டால் விசனமும் ஏக்கமுமடைகிறான். அது கைக்கெட்டாதது என்று தெரிந்தாலோ அதனால் அடையும் ஆனந்தம் நிராத்துயரமாகவே முடியும். அப்படிக்கின்றி அதை யடைவதற்குவேண்டிய உபகரணங்களைச் சம்பாதிக்கத் தன்னால்கூடுமென்று கண்டாலோ அவற்றைச்

சம்பாதிக்க கவலையும், கஷ்டமும் எடுத்துக்கொள்கிறான். அம்முயற்சியும் நீதியானவழி யில்லாமல் அநீதவழியில் அதற்கு வேண்டியவற்றைத் தேடமுயன்றாலோ, பாபமும் இராஜதண்டனையும் அடையவேண்டும். அப்படிக்கின்றி நியாயமான வழியிலேயே அம்முயற்சியை யெடுத்துக்கொண்ட பின்னும் அதை யடைவோம் என்ற நம்பகமில்லை. ஏனெனில் இடையில் அதற்கு யாவற்றினும் நம்மைவிட அதிக பலமுடைய வேறொருவன் போட்டியாய் வந்துவிடலாகும். அல்லது இடையில் அப்பொருளுக்கே ஏதாவது குற்றமோ அழிவோ நேரிட்டுவிடலாகும். அப்போதும் அதற்காக எடுத்துக்கொண்ட பெருங்கஷ்டமும், பொருளும் நஷ்டமாகித் தீராத்துயரமே அதனால் அடைந்த பலனாகமுடியும்.

இவ்வளவு வியாகுலத்தையும், கவலையையும், கஷ்டத்தையும் அனுபவித்துக்கொண்டு அப்பொருளை யடைந்தால் கொஞ்சம் சந்தோஷமடைகிறான். ஆயினும் சந்தேகமும் கவலையும் இன்னும் விட்டவையல்ல. ஏனெனில் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை யென்பதுபோல் அதை யனுபவிப்பதற்குள் எந்த இடையூறாவது நேர்ந்து அதைத் தான் அனுபவிக்கமுடியாதபடி நேரிட்டுவிடக்கூடும். உலகில் அதற்கு அத்தாக்ஷியாக எத்தனையோ சம்பவங்களைக் காண்கிறோம்.

ஒருவன் மிக்க ஆவலோடு கடையிலிருந்து ஒரு பொருளை வாங்கி வீட்டில் கொண்டுபோய் புசிக்கவெண்ணிச் செல்கிறான். வழியில் அதைப் பருந்தடித்துக்கொண்டுபோகிறது. அல்லது அது கைதவறிக் கீழேவிழுந்து மறுபடி யுண்ணத்தகாததாய்ப் போகிறது. ஒருவன் ஒரு கன்னிகைமேல் மிக்க காதல்கொண்டு எவ்வளவோ பிரயாசையின்மேல் அவள் பெற்றோரின் சம்மதிபெற்று, மிக்க பணச்செலவுசெய்து அவளை மணம்செய்துகொள்கிறான். அவன் அவளைச் சேர்வதற்குமுன்பே இருவரில் ஒருவர்க்கு மரணமே நேர்கிறது.

இத்தனை கண்டங்களுக்கும் தப்பி அப்பொருளை யனுபவிக்கும்போது அதனால் ஆனந்தம் அனுபவிப்பதாய்க் கருதிக்கொள்கிறான். இங்கிருந்துதான் அந்த ஆனந்தத்தின் பிறப்பையும், உண்மையையும், சத்திய நிலைமையையும் ஆழ்ந்து கவனிப்பது அவசியமாகும்.

ஆழ்ந்து கவனித்தால் இச்சித்தவஸ்துவை யடைவதில் பட்டக்



கவலையும் கஷ்டங்களும், துன்பமும், ஆவலும் நீங்கிய பிறகு உண்டாகும் மனோதிருப்தியையே ஆனந்தமென்று கருதுகிறோமென்பது நன்குவிளங்கும். ஆனந்தத்தை யுடையதாய் நாம் கருதும் அப்பொருளையடைந் தனுபவிப்பதில் முன்பாகமெல்லாம் பலவிதத் துன்பமே யென்பதும், பின்னாலும் அதை வேறொருவர் அபகரித்துக்கொள்ளாதபடி காப்பாற்றுவதிலும், அதற்கு இடையூறு நேரிடில் வருந்துவதிலும் கவலையும் கஷ்டமும் துயரமுமே யிருக்கின்றன வென்பது நன்கு புலப்படுகிறது. இடையில் மிக்க அற்பகாலம் அதனாலடைவதாய்க் கருதும் ஆனந்தமாவது நிலையானதா வென்று கவனித்துப் பிறகு அது அப்பொருளினிடத்தி லிருக்கிறதா வென்று கவனிப்போம்.

எத்தகைய வஸ்துவின்மேலிருக்கும் இச்சையும் வரவரக் குறைவது சுபாவம். ஆகையால் அதனிடத்திலுள்ளதாய் நாம் கருதும் ஆனந்தமும் வரவரக் குறைந்து முடிவில் வெறுப்பாகவும் மாறிவிடுகிறது. அல்லது இடையில் வேறொரு வஸ்துவின்மேல் அதனினும் அதிக இச்சையுண்டாயின் முன்னையதன் ஆனந்தம் குறைந்து அடியோடு மறந்துவிடவும் படுகிறது. இக்காரணங்களால் அற்பகாலம் தோன்றும் அந்தப்போலி யானந்தமும் நிலையானதல்ல வென்பது நிச்சயம்.

இனி ஆனந்தம் அந்தப் பொருளிலிருந்தா உண்டாயிற்றென்று பார்ப்போம்.

ஒரு பொருளில் ஆனந்தம் இருப்பது உண்மையாயின் அந்த ஆனந்தம் எப்போதும் யாவருக்குமே தோன்றவேண்டும். வெல்லத்தில் இனிப்பும், எலுமிச்சம்பழத்தில் புளிப்பும் இருக்கின்றன. யார் எப்போது அவற்றை யருந்தினாலும் அக்குணங்கள் அவற்றில் இருக்கவே இருக்கின்றன. இங்கு ஒரு பொருளில் ஒருவனுக்கு ஆனந்தம் தோன்றுகிறது. அதே பொருளில் இன்னொருவனுக்கு வெறுப்பு தோன்றுகிறது. இன்னும் ஒருவனுக்கே ஒருகாலத்தில் ஆனந்தமாய்த் தோன்றுவது வேறொருகாலத்தில், அடுத்தநிமிடமேகூட, வெறுப்பாய்த் தோன்றுகிறது.

திருஷ்டாந்தமாய் ஒரு ஸ்திரீயினிடம் ஆனந்தமிருப்பதாய்த் தோன்றுகிறது. அதே ஸ்திரீயினிடம், இன்னொருவனுக்கு அது தோன்றுவதில்லை. மனைவியிடத்தில் சுகமிருப்பதாய்க் கருதுகிறவன் புத்திரியிடம் அல்லது சகோதரியிடம் அப்படிக்கருதி இச்

சிப்பதில்லை. ஒருவேளையில் மனைவியிடம் ஆனந்தம் காண்கிறவன் வியாதியுற்ற போதும் வேறு சிலகாலங்களிலும் அவளிடமே வெறுப்பைக் காண்கிறான். இக்காரணங்களா லெல்லாம் இவன் அனுபவிக்கும் அந்த அற்ப ஆனந்தமும் இவன் கருதிய பொருளி லிருந்து உண்டானதல்ல வென்றும் அதில் ஆனந்தம் இல்லை யென்றும் நன்கு விளங்குகிறது.

அப்படியாயின் ஆனந்தமென்பது எங்கிருக்கிறது என்றால்;—

நாம் இச்சைவைக்கிற பொருளில்மட்டுமே ஆனந்தமிருப்பதாய் அனுபவிக்கிறோமேயன்றி, இச்சிக்காத பொருளில் அதைக் காண்பதில்லை யென்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆகையால் நாம்கொள்ளும் வாஞ்சைக்கும் அதாவது பிரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் சம்பந்தமிருக்கிறதே யன்றி நாம் வாஞ்சைகொள்ளும் வஸ்துவிற்கும் ஆனந்தத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை யென்று நன்றாய் விளங்குகிறது. ஆகையால் நாம் உண்மையில் எல்லாவற்றிலும் எதன்மேல் மிக்க வாஞ்சை வைத்திருக்கிறோமோ, எதன்மேல் எப்போதும் குறையாததும் சலிக்காததுமான அழியா வாஞ்சை வைத்திருக்கிறோமோ, அங்குதான் உண்மையானதும், தாக்கக்கலப்பில்லாததும், தெவிட்டாததும், அழிவில்லாததுமான பூரண ஆனந்தம் இருக்கவேண்டும். அங்குதான் அது வெளியாகவும் வேண்டும்.

ஆகையால் இப்போது நாம் எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் எதன்மேல் அதிக வாஞ்சை யுடையவர்களா யிருக்கிறோம்? எதற்குமேல் அதைக்காட்டிலும் அதிக வாஞ்சை வைப்பதற்கு ஏதுவில்லை? அந்த வஸ்து எதுவென்று பார்ப்போம்.

உலகபோகங்களில் ஒருவன் ஒன்றை யிச்சிப்பது அந்தவஸ்துவிற்காகவே யல்ல. அதனினும் தனக்குப் பிரியமான வேறொன்றிற்காகவே யதை யிச்சிக்கிறான். இப்படி அதையும், அதனினும் பிரியமான வேறொன்றிற்காகவே யிச்சிக்கிறான். உத்தரோத்தரம் இப்படியே படிப்படியாய்ச் சென்று கடைசியில் தன் ஆன்மாவிலேயே எல்லாவற்றிலும் அதிக பிரியமென்றும் அதற்காகவே மற்ற யாவற்றையு மிச்சித்ததென்றும் ஐயமற விளங்கும்.

ஒருவனுக்கு உலகில்முன்னே தனத்தில்மேல் இச்சையுண்டாகிறது. ஏன் அதைக்கண்டு ஆனந்தித்துக்கொண் டிருக்கவா? இல்லை, அதைக்கொண்டு தனக்குப் பிரியமான போகங்களை யனுபவிக்கவும், தாரம் மக்கள் முதலியவர்களைப் போஷிக்கவும், புண்ணியம் தேடிக்கொள்ளவுமேயன்றி, தனத்திற்காகவே யதை யிச்சிக்கவில்லை. இதனால் தனத்தின் மேலுள்ள பிரியத்தைவிட மனைவிமக்கள்மேல் அதிக பிரியம் வைத்திருக்கிறானென்று தெரிகிறது. அவர்களுக்கு ஆபத்துவரின் காப்பாற்றத் தனத்தை யிழந்துவிடுகிறான். இப்படியே தன் தேகத்தைக் காப்பாற்ற மனைவி மக்களையும் அலட்சியஞ்செய்துவிடுகிறான். தன்தேகத்திற்குப் பலஹீனம்நேர்ந்தபோது அதை நீக்குவதற்காக மனைவிமக்களையும் விட்டு விட்டு தான்மட்டும் நல்ல ஆகாரங்களைப் புசிக்கிறான். வீட்டில் தீப்பற்றிக் கொள்ளல் முதலிய பெரிய ஆபத்து நேரும்போது அவர்களை விட்டுவிட்டுத் தன் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்கிறான். தன் பாபங்கள் நீங்கி தான் நற்கதியடையும் பொருட்டு புத்திரனைப் பெறவும், தனக்கு உபசாரம்செய்து போஷித்துத் தான் இல்லறம் நடத்த உதவியாயிருக்கவுமே மனைவியை விரும்புகிறான். தன் வயோதிகப்பருவத்தில் தன்னைக்காப்பாற்றுவதாலும் பிறகு பிதுர் கர்மம் செய்து தன் ஆன்மாவிற்கு உதவிசெய்வதாலும் புத்திரன் மேல் விருப்பம் வைக்கிறான்.



இதனால் மற்ற எல்லாரைவிடவும் தன் தேகத்தில் அதிக பிரியம் வைத்திருக்கிறான் என்று விளங்குகிறது. தேகத்தைவிட கன்மேந்திரியங்களில் பிரியம் அதிகம். கையில் சிலந்திவந்து பிறகு கையே யடியோடு போய்விடும்போலிருந்தால், அப்போது அதைக் காப்பாற்றிக்கொள்ள தேகத்தை யுறுத்தாலும் துன்பத்தைச் சகித்துக்கொண் டிருக்கிறான். கன்மேந்திரியங்களைவிட ஞானேந்திரியங்களில் அதிகப் பிரியம். எப்படியெனில்—கண் பார்வையைப் போக்கடித்துக்கொள்வதை விட காதைப் போக்கடித்துக் கொள்வான். ஞானேந்திரியங்களை விட அந்தக்கரணத்தில் அதிகப் பிரியம். எவ்வாறெனின் மனம் பைத்தியம் முதலியவற்றால் கேடடையாது நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்காக சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களை யுணரும் ஞானேந்திரியங்களி லொன்றை வேண்டுமாயின் இழந்துவிட ஒப்புக்கொள்வான்.

ஆகையால் இதுகாறும், மற்றயாவற்றிலும் அந்தக்கரணமாகிய மனதின்மேல்தான் அதிக பிரீதியென்று காண்கிறோம். ஆனால் தானாகிய ஆன்மாவையறிய மனதையே அடியோடு கொன்றுவிடுகிறானாதலால், முடிவில் எவனுக்கும் தன் ஆன்மாவில்தான் அதிக

பிரியம் என்பது அனுபவமான உண்மை. அதுவே முடிவென்றது எனெனின், இதுவரையில் உத்தரோத்தரமாய் ஒன்றிற்காக ஒன்றின்மேல் பிரியம் வைத்ததுபோல் ஆன்மாவின் மேல் பிரியம் வைக்கவில்லை. அதன்மேல் வைத்த பிரியம் அதற்காகவே—அது இயற்கையாகவே யமைந்துள்ளது. மற்ற வஸ்துக்களின் மேல் வைத்த பிரியம் மாறும் குறையும்; ஆன்மாவின் மேலுள்ள பிரியம் வேறெதற்காகவும் மாறாது குறையாது. மற்றவஸ்துக்களின்மேல் நாமே பார்த்து பிரியம் வைக்கிறோம். நாமே அதை வேறொன்றிற்காக மாற்றிவிடலாம். ஆன்மாவின் மேல் வைத்த பிரியம் நாமாகப் பார்த்துவைத்ததல்ல. அதை மாற்றவும், குறைக்கவும், நீக்கவும் ஒருவராலும் முடியாது.

ஆகையால் "ஆனந்தம்" என்பது ஆன்மாவினிடத்தில் தான் இருக்கிறது. வேறெந்த உலக வஸ்துக்களிலுமில்லை யென்பது சத்தியம். ஆன்மாவினால் ஆனந்த முண்டாகிறதென்றும், அதை நாம் அனுபவிக்கிறோம் என்றும் கருதலாகாது. அப்படியாயின் ஆனந்தத்தைத் தரும் ஆன்மா வொன்றும், அதை யனுபவிக்கும் 'நாம்' என்ற ஆன்மா வொன்றும், ஆக இரண்டான்மாக்களிருக்கவேண்டும். அப்படியில்லை; இருப்பது நாமாகிய ஒரு ஆன்மாவே. ஆகையால் நம்மிடத்திலேயே ஆனந்தம் இருக்கிறது. அந்த ஆனந்தம் அக்கினியிடத்தில் உஷ்ணமும், ஜலத்தினிடத்தில் குளிர்ச்சியும் எப்படி பிரிக்கக் கூடாத விதமாய் அததன் சொரூபமாகவே யிருக்கிறதோ, அப்படியே ஆன்மாவின் சொரூபமே ஆனந்தம்.

ஆகையால் நம் ஆனந்தத்தையே நாம் அன்னிய வஸ்துவிலிருந் துண்டாவதாய்க் கருதி யனுபவிக்கிறோம். அப்படியும் மயங்கி நினைக்கக்கூடுமோ வெனில், கூடும்—அதற்கொரு திருட்டாந்தமுண்டு. ஒரு கிணறுவெட்ட பூமியைத் தோண்டுகிறோம். பத்து முழத்திற்குக் கீழிருந்து சில எலும்புகள் அகப்படுகின்றன. அவை எத்தனையோ வருடங்களாய் அங்கு புதையுண்டு கிடக்கின்றன. அவற்றில் எள்ளளவு சத்தாவது கிடையாது. அப்படியிருக்கும் நாய் அந்த எலும்பைக் கடித்து நாவினால் ருசிக்கிறது. ஏனெனில் அதைக் கடிக்கையில் அதன் ஈறிலிருந்து இரத்தம் வருகிறது. தன் வாயிலிருந்து வந்த அந்த இரத்தத்தையே நாய் அந்த எலும்பிலிருந்து வரும் சத்தென்று கருதி நக்குகிறது.



அதுபோலவே நாம் மாயையால் நம் நிஜவடிவை மறந்திருப்பதால் நாம் ஆனந்த சொரூபமென்பதை நினையாது அன்னிய வஸ்துக்களிலிருந்து ஆனந்த முண்டாவதாய்க் கருதுகிறோம்.

நாம் நமது நிஜவடிவை அறிந்தால் அப்போது உண்மையை யுணர்வோம். அதாவது நம்மை நாம் அறிந்தால் நமது சொரூபம் ஆனந்த மயமென்பது பிரத்யக்ஷ அனுபவமாய்த் தெரியும்.

ஆகையால் நமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நாம் கொஞ்சம் கொஞ்சமாய் இவ்வநித்திய உலக போகங்களில் இச்சை வைப்பதை யொழித்து, நமது நிஜானந்த சொரூபத்தைக் காண முயலவேண்டும். இன்றேல் நாம் ஆறறிவுடைய மனிதர் என்று அழைக்கப்படுவதற்கு அருகராகமாட்டோம். நாம் மட்டும் முயற்சிசெய்தால் கருணாநிதியாகிய பரம்பொருள் நமக்கு அருள் புரிவார் என்பது திண்ணம்.

ஓம் தத் ஸத்

---

## நித்தியவிதி—போஜனம்

(223-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலத்தின்கண் வளர்ந்தும் நடந்தும் வாழும் பிராணிகளுக்கும், வானத்திலும் தண்ணீரிலும் பறந்தும் நீந்தியும் வாழும் பிராணிகளுக்கும் இன்றியமையாததும், மனிதர்களுக்குள் பாவபுண்ணியங்களும், அவற்றின் பயனாகிய சொர்க்க நரகங்களும் இல்லையென்று வாதிக்கிற நாஸ்திகர்களாலும், சிற்றின்பப் பிரியர்களாலும் உலகானுபவத்திற்கு இன்றியமையாததென்று கிலாகித்துக்கொள்ளப் படுவதும், வேதாதிசாஸ்திரங்களை யோதியுணர்ந்த ஆன்மஞானிகளால் மோட்ச மூலமாகிய ஞானத்துக்குக் காரணமென்று கொள்ளப்பட்டதும், கன்மயோகிகளால் இகபரயிரண்டுக்கும் காரணமாகவும், ஞானத்துக்காரணமாகவும் கொள்ளப்பட்டதுமான போஜனமென்கிற சிறந்த விஷயத்தை யிப்பொழுது நாம் கவனிப்போம்.

ஜீவப்பிராணிகள் எல்லாவற்றுக்கும் ஆகாரம் உண்பது அவசியமாயினும் அவற்றுக்குப் பசியுண்டாகும்காலமே ஆகாரமுண்ணும் காலமாகவிருக்கின்றது. இதனால் அவற்றுக்குக் காலதேசவியவஸ்தையில்லை. என்றதனால் பசிநீவிர்த்தியே அவைகளுக்கு ஆகாரத்தின் பயனாம். இது மனிதர்களுக்கும் ஒவ்வத்தக்கதாம். இதைப்பற்றி நாம் விவரிக்கவேண்டுவதில்லை. ஆயினும் அரியோத்தமர்களானது நமது பூர்வீகப் பெரியோர்கள் இது விஷயத்தில் ஏற்படுத்திய முறைகளுள் சிலவுள. இது பட்சிக்கத்தக்கது, இது பட்சிக்கத்தகாதது என்கிற விதிவிலக்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனாற் பெறப்படும் இம்மைப் பயன் சகல ஜீவாத்மாக்களுக்கும்பொது. யோகசித்தி ஞானசித்தி யிவைகள் பயன்களாம்.

விதை, கிழங்கு, இலை, காய் இவைகளே போஜனத்துக்குச் சரியானவை என்பது ஆன்றோர் கருத்து. விதை யென்பதில், நெல், கோதுமை, துவரை, உளுந்துபோல்வன வெல்லாமடங்கும். கிழங்குவகையில், கருணைக்கிழங்கு, வெங்காயமாதிகளடங்கும், இலையில் கீரைவகைகளெல்லாமடங்கும் காய்

வகையில் பூசணிக்காய், அவரைக்காய் புடலங்காயாதிகளடங்கும். இவையெல்லாம் ஓஷதிவர்க்க மென்னப்படும். நெய், பால், தயிர் முதலியன பாகசம் என்னப்படும். இவைகளே எப்போதும் புசிக்கத்தக்கவைகளாம். ஒன்றே உணவினுடு கொள்ளப்படும். இது பௌஷ்டிகப் பொருளாம். உலோகசம்பந்தமானவைகள் மருந்துவகையாலன்றி உண்ணப்படுவதில்லை. பாகசவர்க்கத்தில் நெய், பால், தயிர்களைப்போலவே ஜந்துக்களின் மாம்சமும் உணவுக்குரியதாம் என்று சிலர் ஆக்ஷேபனை செய்வார்கள். ஏனென்றால், மாம்சம் மாம்சத்தால் விருத்தியாமென்பது புஷ்டி சாஸ்திரத்தால் பெறப்படுவதால் என்பர். பூர்வ காலத்துப் பெரியோர்களும் சமயம் நேர்ந்தபோது மாம்சபோஜனம் செய்ததாகத் தெரிகிற தென்பர். இதைச் சிறிது விசாரிப்போம்.

மிருகங்களில் இருவகையுண்டு. ஒன்று மாம்சத்தையே உண்பன. மற்றொன்று புல்லையும் தழைகளையு முண்பன. இவ்விருவகைக்கும் பல், சொள் (வாயிலூறும் நீர்) குணம் இவைகளில், வேற்றுமையுண்டு. புலாலுண்ணும் விலங்குகளுக்குப் பல் அடிபருத்து நுனிசிறுத்து ஒன்றுடனொன்று நெருங்காது மேடுபள்ளமாயிருக்கும். வாய்நீர் உவர்நிறைந்து விஷம்கலந்து பச்சை மாம்சத்தையும் பசனம்பண்ணும் சக்தியுள்ளதாயிருக்கும். புல்லுண்பவைகளுக்கு அடிசுருங்கி நுனியகன்று கூர்மையின்றிச் சமனமாய் மேற்பல்லும் கீழ்ப்பல்லும் சேரும் தன்மையுடையனவாயிருக்கும். வாய்நீரும் மனிதரையே ஒத்திருக்கும். குணமும் சாந்தமானது. மற்றொன்றுக்கு மூர்க்ககுணம், கோபம், க்ரூரபார்வையாதி குணங்களுண்டு. இவற்றால் ஈசுவரனே மாம்சமுண்டு ஜீவிக்கும் ஜந்துக்கள் வேறாகவும், தழையுண்டு ஜீவிக்கும் ஜந்துக்கள் வேறாகவு மிருக்குமாறு சிருஷ்டித்திருக்கிறார் என்றுவிளங்கும். உண்ட ஆகாரத்தை ஜீரணம் செய்வதற்கு வாய்நீர் ஒருமுக்கிய வஸ்துவாம். ஆதலால் மாம்சத்தை ஜீரணம்பண்ணும் வாய்நீர் உவர்ப்பும் விஷமும் உள்ளதாயிருக்கவேண்டும் என்றும், தானியாதிகளை யுண்ணும் ஜந்துக்களுக்கு அத்தகவெக்காரமான சொள் வேண்டுவதில்லையென்றும் அறியப்படும். தழையுண்ணும் ஜந்துவின் சொள்ளும் மனிதர் வாய்ச் சொள்ளும் ஒரேதன்மைத்தா யிருத்தலால் மானிடர்க்கு இயல்பிலமைந்த உணவு தானியாதிகளேயாமென்று தெளியப்படும். மனத்திற் பொறுமையும் சாந்தமுமுடையவர்களா யிருக்கவேண்டிய மனிதர்கள் மாம்ச பக்ஷணத்தால் மூர்க்ககுணமும், கோபக்குறியமைந்த முகத்தோற்றமும் உடையவர்களாவார்கள்.

அங்ஙனமாயின் மாமிசத்தைப் புசிக்கும் மனிதர்களு மிருக்கின்றார்களே யெனின், உண்மையே. அது இயற்கையன்றென்பது. ஏனெனின் மாம்சத்தை உண்போர் உப்பும் காரமும் அதிகமாய்ச் சேர்த்துண்பார்கள். அதனால் அவர்களுடைய ஜீர்ணசக்தி செயற்கையாலமைந்ததேயாம். மாம்சம் கொஞ்சமாயும் தானியாதிகளை அதிகமாகவும் உண்பவர்க்கே மிதக்காரமும் உப்பும் பயன்செய்யும். மாம்சத்தை அதிகமாயும் மற்றதைக் கொஞ்சமாயும் கொள்வோர்க்குச் சாராயம் சோடா முதலியவும் அதிகமாய்க்கொள்ளவேண்டும். எவ்வகையாயினும் மாமிசத்தை ஜீரணிக்கும் சக்தி மனிதர்க்குச் செயற்கையாலுண்டாவதேயன்றி இயற்கையில் அமைந்ததல்லவாம். உண்மையில் முற்றும் மாம்சத்தையே உண்டு ஜீவிப்போரில்லை. அவர்களும், பால், வெண்ணெய், ரொட்டி, கனிகள் முதலியவற்றையும் சேர்த்தே யுண்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்கள் ஜடராக்கினி மாம்சத்தை ஜீரணிப்பிக்கும் சக்தியற்றதாய் சாராயம் முதலிய கொடிய வஸ்துக்களின் உதவியையே தேடுகிறது. அன்னம் காய்கறிகளை யுண்பவர்களுக்கு இயற்கையிலேயே ஜீரணிப்பிக்கும் சக்தியமைந்த ஜடராக்



கினியுண்டாயிருக்கிறது. அதற்கு மனிதர் வாய்ச் சொள்ளே உதவியாயிருக்கும். ஆதலால் மனிதரினியற்கை யமைப்பு அன்ன முண்பதற்கே யேற்றதாயிருக்கிறது. முதலில் வேறொருபொருளாயிருந்து மிருகங்களுக்காகாரமாய், அதன் ஜாடராக்கினியால் பரிபாகப்பட்டு, மலாம்சம் ஒழிந்து தேறினசாரம் மாம்சமாகின்றது. அதனிடத்துச் சாராம்சம் சேராது. அதினின்று மலபாகம் அதிகமாய்ப்பிரியாமையால் மலசலம் நிரம்புகிறதில்லை. அதனால் குதம் மலரும்படியாகப்பருத்து மலமிறங்காது. ஆகவே மலச்சிக்கல் நிச்சயமாகவே மாம்சமுண்பாரிட மிருந்துகொண்டேயிருக்கும். அதைச் சாராய முதலிய கொடுங் காரவஸ்துவால் இளக்கியே வெளிப்படுத்தவேண்டும். அதனு இயற்கை மாறுகின்றது. செயற்கையாலேயே ஆகவேண்டியிருக்கிறது. இந்த அற்ப விஷயத்துக்காக இயற்கையை மாற்றிக்கொள்வதினால் என்னபயன்? அன்றியும் மாம்சத்தை மிகுதியாய்ப் புசிப்போர் சரீரமும் மிருகத்தன்மையை அடையும். எவ்வகையான குணமுள்ள ஆகாரமுண்ணப்படுகிறதோ அந்தக்குணத்தையே சரீரம் அடையும் என்பதைப் பதார்த்தகுண விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியுடையார் மறுக்கமாட்டார்கள். அன்றியும் பஞ்சேந்திரிய ஞானத்தொடுகூடியின்பதுன்பங்களை அறியும் சக்தியுள்ள ஜீவனை இம்சிப்பது மஹாபாதகமாகும். அற்பமாகிய உலக இன்பத்தைத் தான் அடைய விரும்பி, அதினிமித்தம் மற்றொரு ஜீவஜந்துவைக்கொன்று இம்சிப்பதைப் பேரறிவாளர் ஒவ்வார்கள். இதர தேசத்தாரைப்போலாது பரதகண்டவாசிகள் பேரறிவாகிய மெய்ஞ்ஞானத்தையே பெரிதெனக்கொள்ளு மியல்பினராதலால் அவர்களுக்கு ஜீவ இம்சை செய்து அதன் மாம்சத்தைப்புசித்துத் தங்களுடலைப் பருக்கச்செய்வது அடாததேயாம்.

இவ்விஷயத்திலும் சிலர் ஆக்ஷேபனைசெய்வதுண்டு: அதாவது, பூர்வ காலத்தில் நமது முன்னோர்கள் மாம்சபோஜனம் செய்ததாகக் கேள்வியிருக்கிறபடியால் அதுகுற்றமாவது எப்படி? ஸ்மிருதிகளில் மாம்சபோஜனம் விதிக்கப்பட்டிருக்கிறதே என்பது. இதுவிஷயத்தில் ஸ்மிருதி புராணங்களின் கருத்தைச் சிறிதுகாட்டுவோம்.

"ப்ரோக்ஷிதம் பக்ஷயேன் மாம்சம் ப்ராம்மணானாஞ்ச காம்யயா
யதாவிதி நியுக்தஸ்து ப்ராணானாமே வசாத்யயே"

என்ற மநுஸ்ம்ருதி வசனத்தால் ஒருவன் மாம்சம் உண்ணும்படி பிரார்த்தித்து அழைத்தகாலத்திலும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டபோதும், வேறு ஆகாரம் கிடைக்காமல் மரணமுண்டாகும்படியானசமயம் நேரிட்டகாலத்திலும் மந்திரத்தினால் விதிப்படி கொல்லப்பட்ட மாம்சத்தைப் புசிக்கலாம் என்றும்,

"யக்ஞாய ஜக்திர்மாம் ஸஸ்யேத்யேஷதை வோவிதிஸ்ம்ருத:
அதோன்யதாப்ர வ்ருத்திஸ்து ராக்ஷஸோவிதி ருச்யதே"

என்றதனால் யாகம்செய்து அதில் மிகுந்த மாம்சத்தைப்புசிப்பது தேவகாரியமென்றும் தனக்காகக் கொன்று தின்பது இராக்ஷஸகாரியமென்றும் சொல்லப்படும் என்றும்,

"க்ரீத்வாஸ்வயம் வாப்யுத்பாத்ய பரோபக்ருத மேவவா
தேவான் பித்ருஞ்ச்சார்ச்சயித்வாகாதன்மாம்ஸந்துஷ்யதி"

தேவபிதிர்க்களை. யுத்தேசித்துக் கிரயத்துக்கு வாங்கினாலும், தானாகவே சம்பாதித்தாலும், மற்றொருவன் இஷ்டப்பட்டுக்கொடுத்தாலும், அவைகளைத் தேவர்

களுக்கும் பிதிர்க்களுக்கும் நைவேத்தியம்செய்து புசித்தால் தோஷமுண்டாகாது.

> " நதாத்ருசம்பவத்யேநோம்ருகஹந்தார்தநார்த்தின:
> யாத்ருசம்பவதிப்ரேத்யவ்ருதாமாம்சாநிகாதத: "

(மேற்குறித்த பிதிர்க்காரியமின்றி) வீணாக மாம்சத்தைப் புசிக்கிறவனுக்குண்டாகிறபாவம், பொருளாசையால் மிருகங்களைக் கொன்றுவிற்கிறவனுக்கும் உண்டாகாது.

> " யாவந்திபசுரோமாணிதாவத்க்ருத்வோஹமாரணம்
> வ்ருதாபசக்ந: ப்ராப்நோதிப்ரேத்யஜந்மநிஜந்மநி "

(மேற்குறித்தகாரணமின்றி) வீணாகப்பசுவைக் கொல்லுகிறவன் அந்தப்பசுவுக்கு எத்தனை மயிர்களிருக்கின்றனவோ அத்தனை ஜனனம் பசுவாகப் பிறந்து கொல்லப்படுவான்.

> " மதுபர்க்கேசயக்ஞேசபித்ருதேவத கர்மணி
> அத்ரைவபசவோஹிம்ஸ்யாநாந்யத்ரேயப்ரவீன்மநு:

மதுபர்க்கம், யக்ஞம், சிராத்தம், இந்தக்கர்மங்களில்மாத்திரம் பசுஹிம்சை செய்யலாம், மற்றவிஷயத்திற் கூடாதென்று மநுவிதிக்கிறார்.

> " க்ருஹேகுருாவரண்யேவாநிவஸந்நாத்மவானத்விஜ:
> நவேதாவிஹிதாம்ஹிம்ஸாமாபத்யபிஸமாசரேத் "

ஆத்மஞானமுள்ள த்விஜன் கிருஹஸ்தனாயிருந்தாலும், பிரமசாரியாயிருந்தாலும், வானப்பிரஸ்தனாயிருந்தாலும் ஆபத்துக்காலத்தில்கூட வேதத்தில் சொல்லப்படாத ஹிம்சையைச் செய்யக்கூடாது.

> " யோஹிம்ஸகாநிபூதாநிஹநஸ்த்யாத்மஸுகேச்சயா
> ஸஜீவம்ச்சம்ருதச்சைவநக்வசித்ஸுகமேததே "

ஒருவருக்கும் இம்சைசெய்யாத (மான்முதலிய) ஜந்துக்களைத் தன்சுகத்துக்காக இம்சிக்கிறவன் இம்மைமறுமைகளில் சுகமாய் விருத்தியடையமாட்டான்.

> " நாக்ருத்வாப்ராணிநாம்ஹிம்ஸாம்மாம்ஸமுத்பத்யதேக்வசித்
> நசப்ராணிவதஸ்வர்க்யஸ்தஸ்மாந்மாம்ஸம்விவர்ஜயேத் "

பிராணிகளை இம்சிக்காமல் மாம்சம் கிடைப்பதில்லை. ஜந்துக்களைக் கொல்வதனால் சொர்க்கம் கிடைக்காது. ஆகையால் மாம்ஸத்தை அவசியம் நீக்கவேண்டியது.

> " ஸமுத்பத்திஞ்சமாம்ஸஸ்யவதபந்தௌசதேஹிநாம்
> ப்ரஸமீக்ஷ்யநிவர்த்தேதஸர்வமாம்ஸஸ்யபக்ஷணாத் "

சுக்கிலசோணிதத்தால் ஜந்துக்களுண்டாகிறதையும், அவைகளைக் கட்டவேண்டியதையும், கொல்லவேண்டியதையும் நன்றாக யோசித்தால் ஒருமாம்சத்தையும் புசிக்கக்கூடாதென்று தோற்றப்படும். (தொடரும்)

எஸ். சிவாநந்தசாகர யோகீஸ்வரர்.

---

## கம்பராமாயணத்தின் மூலகாவியம்.

1918ஞு செப்டம்பர் மாதத்திய 'பெண்கல்வி' சஞ்சிகையின் 305-ம் பக்கத்தில் மகா-ள-ள-ஸ்ரீ பி. நடராஜன் அவர்கள் எழுதிய 'கம்பனை இழிவாய்க் கூறுவானேன்'? என்பதில் 'கம்பராமாயணம் வால்மீகி ராமாயணத்துக்கு முரண்படவிருக்கும்' என்கிறார்.



> தேவபாடையினிக்கதை செய்தவர்
> மூவரானவர் தம்முளுமுந்திய
> நாவினுருரை யின்படி நான்றமிழ்ப்
> பாவினுலிது ணர்த்திய பண்பரோ.

என்ற கம்பரது செய்யுளில், தேவபாஷையாகிய சமஸ்கிருதத்தில் இராமாயணத்தைச் செய்தவர் மூவரெனவும், அவர்களில் முதலிற் செய்தவரின் நூல்வழியே தாம் செய்ததாகவும் 'முந்திய நாவினுருரையின் படி நான் றமிழ் பாவினுலிதுணர்த்தி' என்பதிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகின்றது. நடராஜனவர்களோ 'கம்பர் பாடிய (இராமாவதாரம்) இராமாயணம் மூன்று முதனூல்களின் வழிவந்த நூலென்பது விளங்கும்' என்கிறார். கம்பரின் செய்யுளிலேயே, மூவரினும் முதலில் செய்தவரின் நூல்வழி செய்ததாக விளங்குகிறது. கம்பர் காவியத்தின் வசனஞ் செய்த திருச்சிற்றம்பலதேசிகரவர்களும், வான்மீகம் வசிஷ்டம் போதாயனம் முதலிய நூல்களை வைத்துக்கொண்டு கவிசெய்ததாக அவ்வசனத்தில் கூறியிருக்கின்றார். இவை கம்பரது கவிக்கே முரணாக இருக்கின்றது.

ஆதியில் இக்காவியம் செய்த மூவரில் முதலில் இராமாயணம் செய்தவர் யாரென ஆராயுங்கால், "இராமாயணம்—இது ஸ்ரீராமருடைய திவ்விய சரித்திரத்தைக் கூறுவதாகிய இதிகாசம், — வடமொழியிலே வால்மீகி பகவானால் கூறப்பட்டது. இது ஆதிகாவியம் எனவும் படும்" என்றும், இந்த ராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் காவியரூபமாக அருளிச் செய்தவர் கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார்......இவர் மொழிபெயர்த்தது ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தையே யென்பது "தேவபாடையி............பண்பரோ" என்னுங் கம்பர்வாக்கினாலே அறியப்படும். முதலிற்செய்தவர் வான்மீகி பகவான். அதன்பின் செய்தவர் வசிட்டர், அதன் பின்னே செய்தவர் போதாயனர். "கம்பராமாயணத்துச் சரித்திரம் பெரும்பாலும் வால்மீகி ராமாயணத்தை ஒத்திருப்பதேயாயினும், கற்பனை வர்ணனை முதலியவும் கம்பருடையனவேயாம்" என்று, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கரின் மாணாக்கராகிய, மேலைப் புலோலி வித்துவான், நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் பதிப்பித்த பெயரகராதியோடு, சித்தாந்த சரபம்—அஷ்டாவதானம்—பூவை—கலியாண சுந்தர முதலியாரவர்கள் மாணவகரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவருமாகிய, வண்ணைக் களஞ்சியம் — சாத்தி நாகலிங்க முதலியாரவர்கள் ஆயிரக்கணக்கான சொற்களைச் சேர்த்துக் கொடுக்க; பிருங்கிமாநகரம்—வேம்புலி முதலியாரவர்கள் குமாரர் நமசிவாய முதலியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்ற 'தமிழ்மொழி யகராதியில் கூறப்பட்டிருக்கின்றது.

'இந்து தியலாஜிகல் ஜர்னல்' என்று பி. ஜே. என். ஸ்ரீநிவாஸ சர்மா அவர்களால் சஞ்சிகையாகப் பதிப்பிக்கப்பட்டு வெளிவரும் 'ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்' என்ற நூலின், முதற் சஞ்சிகையின் 5-ம் பக்கத்தில் 'இதை ஸ்ரீ வால்மீகி பகவான் அருளிச் செய்தார். ஆதியில், பிரஹ்மா நாரத முனிவர் மூலமாய் ஸ்ரீராமாயணத்தைச் சங்கிரமாக ஸ்ரீவால்மீகி மகரிஷிக்கு உபதேசிக்க, அதை ஸ்ரீ வால்மீகி அருளிச்செய்தார்' எனக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆனல், வசிஷ்டரும் போதாயனரும் தாம் செய்த நூல்களை வான்மீகத்தின் வழியாகத்தான் செய்தனரோ? அன்றி, வேறு யாவரா லறிந்து எழுதினரோ அறியக் காண்கிலேன். ஆயின், வான்மீகம் இலௌகிகார்த்தமாகவும், ஏனைய விரண்டில் வாசிட்டம் தருமார்த்தமாகவும், போதாயனம் வேதசாரமாகிய வேதத்தி னுட்பொருளைக் கொண்டதாகவும் தெரிகிறது.

ஆகவே, நடராஜனவர்களின் உரையும், திருச்சிற்றம்பல தேசிகரவர்களின் உரையும் முரண்படக் காண்பதற்கு மேற்கூறியவைகளே போதிய சான்றாகின்றது.

இதிலிருந்து, கம்பராமாயணம் வால்மீகி ராமாயணத்துக்கு முரண்படாதென்றும், கம்பராமாயண விஷயங்கள் எவ்வெவருடைய மாறுபட்ட உரைகளுக்கும் விலக்கானதல்லவென்றும் பலரும் உணரக் கூடியதே.

P. பரிமணப் பல்லவராயர்.

---

## தான்பெற்ற செல்வம்.

"மேலைத்தவத்தளவே யாகுமாம் தான்பெற்றசெல்வம்" என்னும் ஒளவையார் வாக்கிற்கிணங்க முற்பிறப்பில் செய்த நல்வினை வசத்தால் பொருளும், ஏனைய இன்ப சுகங்களும், தீவினை வசத்தால் வறுமை, கொடிய நோய் முதலிய ஏனைய துன்பங்களும் நம்மை வந்து அடைகின்றன. செல்வத்தை யடையப் பெற்றவர்கள் தங்களுடைய பொருளால் அகங்காரங் கொண்டவர்களாகித் தங்களுடைய சரீரத்திற்கு நரைதிரை மூப்பு சாக்காடு முதலியவைகள் இல்லையெனக் கருதி, "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பதையு முணராமல் தங்கள் இந்திரியங்கள் போனவாறு சென்று மதுபானம், வேசியர் நட்பு, ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முதலிய தீச்செய்கைகளிலே தங்கள் வாழ்நாட்களைப் பாழாக்குகின்றார்கள். தவிர மேற்கூறிய துர்ப்பழக்கங்களினால் கொடிய நோய்களை வருவித்துக் கொள்கிறார்கள். மன்னுயிரைத் தன்னுயிராக நினைக்கும் தன்மையற்றவர்களாகிறார்கள்.

வருத்தமடைந்தவர்களைக் கண்ணுற் காண்பார்களாயினும் அவர்கள் வருத்தத்தை யுணர்ந்து அவற்றை நீக்க நினையார்கள். பிறர் துன்பம் தங்களின்பமாகக் கருதுகிறார்கள். அவர்களிடம் கல்வியும் குடிபெறுகிறதில்லை.

வறுமையை யடையப் பெற்றவர்கள் அகங்காரமில்லாதவர்களாயும், தம்முயிர்போல எல்லா உயிர்களையும் நேசிக்கும் அருளை அவர்கள் உள்ளத்திலே குடிகொண்டவர்களாயும், பரோபகார சிந்தனை யுள்ளவர்களாயும், உத்தம குணங்களையுடைய பெரியோர்களின் நட்பை யுடையவர்களாயு மிருக்கிறார்கள். அப்பெரியோர்களின் நட்பால் அவர்களைத் தீவினை தீண்டுகிறதில்லை. அவர்களின் இதயம் பரிசுத்தமடைந்து சதா எல்லாம்வல்ல இறைவனின் திருவடித் தியானத்தை யடைகின்றது. பெரும்பாலும் வறியோரிடத்தே கலைமகளும் வாசஞ்செய்கிறாள். சத்திமுற்றப் புலவர், ஒளவையார் போன்ற முற்காலத்திய புலவர்களும், குசேலர்போன்ற தவசிரேஷ்டர்களும் வறியவர்களே யாவர். தற்காலத்திலும் உயர்தர உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர்களிற் பலரும் தங்கள் பிறப்பில் பெரும்பான்மையும் வறியவர்களே யாவர். அவர்கள் தங்கள் தரித்திரத்தை நீக்குதற் பொருட்டு,

"தொடங்குங்காற் றுன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன்று அறிவகற்றும் கல்வி"

என்னும் திருவாக்கிற்கிணங்க கஷ்டப்பட்டுக் கல்விபயின்று பெரும் புகழை யடைகிறார்கள். அவர்கள் கல்விகற்கும் காலத்துப் பெரும்பாலும் செல்வர்களால் உணவு, ஆடை முதலியவைகள் கொடுத்து ஆதரிக்கப்படுகிறார்களில்லை. அந்தோ! அக்காலத்து அவர்கள் படும் கஷ்டங்கள் பல. இது நிற்க,

ஒருவனுடைய செல்வச் செருக்கையும், தீக்குணங்களையும் அடக்குவது வறுமையே.



"பெருத்திடு செல்வமாம் பிணிவந்துற்றிடில்
உருத்தெரியாமலே யொளி மழுங்கிடும்
மருத்துளதோவெனின் வாகடத்திலை
தரித்திரமென்னுமோர் மருந்திற்றீருமால்."

"அறம் நிறம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும்
பெறலரும் திருபெற்றபின் சிந்தனை வேறுபிறந்தாம்—"

ஆதலின், நாம் வறுமையினை அடைந்த போதிலும் நம்மனத்தைத் தளரவிடாது, அழுக்காறென்னும் பாவியை ஒழித்து, "தம்மின் எளியோரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென் றகமகிழ்க" என்பதற்கிணங்க, மனத்திருப்தியுடையவராகி, வருவாய்க்கேற்றபடியே செலவும் ஏற்படும் என்பதை யுணர்ந்து, பரோபகார சிந்தையை மேற்கொண்டு, உலகத்தோரால் பழிக்கப்படுங் காரியங்களை விட்டு, போற்றப்படுங் காரியங்களையே செய்து, சதாகாலமும் சர்வேஸ்வரனுடைய திருவடித் தியானத்தை மேற்கொண்டால் சகல கஷ்டங்களும் நீங்கிச் சுகமடைவோமென்பது திண்ணம்.

முற் பிறப்பிற் செய்த தவப்பயனால் செல்வமடைந்திருக்கும் செல்வவான்களும் மேற்குறித்த நற்குணங்களைக் கைக்கொண்டு பரோபகார சீலர்களாய் விளங்குவார்களானால் அவர்களுக்கு இகலோக பரலோக சுகமுண்டு. அவர்களின் பரோபகாரத்தால் பலவறிஞர்களும் உதவிபெற்றுத் தங்கள் துன்பம் நீங்கிச் சுகமடைவார்கள். நாட்டிற்கும் நலமுண்டு. ஆதலால் செல்வரும் வறிஞரும் (அனைவரும்) மேற்கூறிய நற்குணங்களை விருத்தி செய்து சுகமடையுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக!

P. G. சுப்பிரமணியன், திருநெல்வேலி.

---

## "சுளிக்கச் சொல்லேல்."

நீர்சூழ்ந்த வையத்து திலகம்போன்ற நம்நாட்டுத் தமிழ்த்தாயின் பழமொழி 'சுளிக்கச் சொல்லேல்'. இதன்பொருள் முகம் வேறுபடக் கடுஞ்சொல் சொல்லலாகாது என்பதாகும். யாரிடத்தும் கடுஞ்சொல் மொழியலாகாது என்று பார்க்கில் பகுத்தறிவில்லாத பிராணியிடத்தும், பகுத்தறிவுடையோரிடத்தும், கூடாவென்றால் இதில் அன்பு உடன்பட்டு தாழ்ந்தோர் மேலோர் யாவரிடத்தும் என்று வற்புறுத்துகின்றது.

பிராணிகளை அன்போடு அழைத்தால் வாலைக்குழைத்துக்கொண்டு அல்லது துள்ளிக்கொண்டு ஓடிவரும். குழந்தைகளை இனிமையாய் அழைத்தால் தாவிவரும். மற்றோரிடம் இனியமொழி புகலின் இனிமையாய்க் கேட்பதுடன் மென்மேலும் புகல வற்புறுத்துகின்றனர்.

இது நோக்கியல்லவா, அத்தாயே,

"இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே"

என்றார். ஒரு பிராணியை அன்போடு அழைத்தால் வரும். கடிந்து கூப்பிட்டால் வரா. வேலைக்காரனையும் பிரியமொழியால் நயப்படுத்தினால் தன் வேலையைச் செவ்வையாகச் செய்கிறான். கடுமையாய்ச் சொல்லின் அவ்வேலை தாறுமாறுகிறது, எஜமானிடத்தும் தாழ்ந்து வணக்கமொழியால் கூறின் அங்கீகரிக்கின்றார். கடுமொழியானால் கோபமுறுகின்றார். மனைவியரிடத்தும் இனியமொழி காட்டினால் பணிவிடை இனிதாகிறது. கடுமொழிகாட்டினால், பிடாரி

பூஜையாகிறது. சினேகிதரிடத்தும் இனியமொழியாலன்பு பாராட்டு கின்றார்கள்; கடுஞ்சொல்லாலவர் வெறுக்கின்றார்கள். பகைவரும் இனியமொழி கேட்டால் ஆனந்தமடைகின்றனர், கடுஞ்சொல்லால் சீற்றங்கொண்டு வாட்டு கின்றனர்.

இவ்வாறு இழுக்குப்படச்செய்யும் கடுமொழியும், நன்மைபயக்கும் இனிய மொழியும், எவ்வாறுண்டாகின்றனவென்று பார்க்கில் மேல்மாடிகீழ்மாடி என்ற இருமாடிக்கும் நடுவிலுள்ள முப்பத்திரண்டு காவலர் நடுவில் எச்சமயமும் அவர்களால் துன்பத்திற்கு உட்படாமல், அவர்களால் நன்மையை மட்டும் பெற்றுக் கொண்டு வாழும் இந்த நாவரசன் செய்கையாம். ஒரே மொழியை இனிமை யாய்க் கூற அன்பையும், அதேமொழியைக் கடிந்துகூற சினத்தையும் உண்டாக் கும். இந்நாக்கை நிதானப்படி காத்துக்கொள்ளாவிட்டால் துன்பமடைவீர்கள் என்று நாயனார்,

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக் குப்பட்டு"

என்று கூறினார். அத்தகைய நாக்கை சர்வஜாக்கிரதையாக காத்துக்கொண்டு பேசவேண்டும்.

"பேச்சென்றால் இனமறிந்து பேசவேண்டும்
பேச்சென்றால் பெரியவர்தம் நட்புவேண்டும்
பேச்சென்றால் பிழைமொழியா திருக்கவேண்டும்
பேச்சென்றால் பெருகுடலும் சிறுகுடலும் பிரண்டுபோமே.

என்ற நீதிமொழியை அறியாத துரியோதனன், தனது சிறிய தந்தை விதுர மகாராஜன் இல்லத்திற்கு தூதுசென்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் கபடமாக எழுந் தருளி போஜனம்உண்டுகளித்துப்பிறகு துரியோதனன் சபைசெல்ல,இவற்றை யறிந்து சகுனியின் தூண்டுகோலால், சிறிய தந்தையென்றும், மகா வில்லாளி என்றும் பாராது இனிய மொழியால் விதுரமகாராஜன் நோக்கத்தை அறியாது, கடுமொழியால் சினந்துகூற, செவிக்கொண்ட விதுரன் வில்லொடித்து எறிந் தனர். இன்சொல் இல்லாததினாலன்றோ தன் சேனைகளையும் குடும் பத்தினரையும் மாளவைத்தான். நமது ஆனந்தபோதினியின் நாலாம் ஆண்டு தலையிற்று சஞ்சிகையில் அடிமை "வறுமையிற் செம்மை" என்ற ஒரு விஷ யத்தை வரைந்து, அஃதில் பத்திரிகைகளைப் பலரும் பார்வையிட்டு நல்வழிப் படுவதால், முகம்கோணும் வார்த்தைகள் எல்லாப் பத்திரிகைகளுக்கும் பொருத் துதல் தகுதியல்லவென்று போசிரியன் பத்திரிகைமூலமாக எடுத்துக் காட்டி யதே ஒழிய அஃதில் உயர்வு தாழ்வு வேறெஃதும் கூறிக்கொள்ளா பாத்திர மானன்று என்பதை கனம் போசிரியன் பத்திராதிபர் ஒத்துபொறுப்பாராக.

S. சண்முகம், வெள்ளையமுனிஷ் வித்தியாசாலை, திருச்சிறப்பள்ளி.

---

## நாராயண தாஸர் உபந்நியாசம்

யோக ஸாதக ஸகாயங்கள்.

கபதோஷ நிவர்த்தி.

(211-ம் பக்கத்தொடர்ச்சி)

(7) முன்சொல்லிய பிரகாரம் உஷத்காலத்திலாவது பிராதக்காலத்தி லாவது எழுந்து பத்தல்லது பன்னிரண்டு விழுங்கு சுத்தஜலஞ் சாப்பிட்டு, உட னே பூமியில் கால்விரல்களின் பாகத்தைமாத்திரம் இடமாயூன்றி யுட்கார்ந்தபின்



முழந்தாட்களின்மேல் முழங்கைகளிருக்கும்படி செய்வதோடு தலையி லுள்ளங் கைகளும் விரல்களும் சரியாய்ப் படியும்படி பலமாய்வைத்து (கால்விரல் பாகங் கள் மாத்திரமும், விரலுடன் உள்ளங்கையும் பூமியிலும், முழந்தாட்களிரண்டும் மேலேயும் அமைத்திருப்பதுடன் முழந்தாட்களுக்கு மத்தியில் ஓரடி இடை வெளிவிட்டுக்காரவேண்டும்) முன்பக்கஞ் சாய்ந்த வண்ணமாய் நாபிப்பிரதேசத் தில் திருஷ்டியைநிறுத்தி, மூச்சடக்கி வயிற்றைச்செவ்வையாய் எக்கி (நாபியின் மேல் கீழ்பாகங்களை முதுகோடொட்டும்படி பலமாய்ப் பின்னுக்கிழுத்து) மறு படி முன்னுக்குத்தள்ளி மறுபடியும் எக்கி முன்போல முன்னுக்குத்தள்ளி இப் படி முன்னுக்கும் பின்னுக்குமாக சக்தியுள்ளமட்டுஞ் செய்யவேண்டும். அதன் பின் மூச்சை மிருதுவாய்விட்டு நேரேயுட்கார்ந்து சற்று இளைப்பாறிய பின் னெழுந்துநின்று இடுப்பில் கையைவைத்து முன்போல் மூச்சைப் பிடித்து வயிற்றை வேகமாய் எக்குவதும் முன்னுக்குத் தள்ளுவதுமாக சக்தியானுசாரஞ் செய்யவேண்டும். இப்படிச் சற்றுநேரம் உட்கார்ந்தும் சற்றுநேரம்நின்றும் இவ்வாறு இரண்டு மூன்றுதரஞ்செய்வதால் தாராளமாய் மலங்கழியும்' இந்த அப்பியாசந் தினந்தோறு மியற்றிவந்தால் சிலநாளைக்குள் இரண்டாவதுதரமுஞ் சலங்குடித்து மலத்தைக் கழிக்கச் சக்தியுண்டாகிறது. இதை நீண்டகால மப் பியசித்தால் நாலைந்து தடவை முன்னளவு ஜலத்தைக்குடித்து மலங்களைக் கரைத்துக் கரைத்து வெளியிற் றள்ளுவதோடு வயிற்றில் மிஞ்சிய ஜலத்தையும் மலஜலத் துவாரங்களின் வழியே சுலபமாய் விட்டுவிடச் சக்தியுண்டாகிறது. இச்சாதனை மேலும் விடாமல்புரிந்து வருவதால் நான்குசேர் கொள்ளும்படி யான ஒருசெம்பு ஜலத்தை ஒரேதடவையிற் சாப்பிட்டு வயிற்றையோ ரசக்கு அசக்கியவுடன் காலை விரித்துட்கார்ந்து வேகமின்றி விதிப்படி வெளியில் விட தனக்குத்தானே சாமர்த்திய முண்டாகிறது.

(இவ்வப்பியாசத்தில் குடல் வயிறுமலாசயம் முழுதும் சலவை செய்த வஸ் திரத்தைப்போல் பரிசுத்தமாய் விடுவதால் கடைசியில் குடித்த தண்ணீரை மல ஜலத்துவாரங்களின் வெளியே வெளிப்படுத்தும்போது அந்த ஜலம் சுத்தமா யிருப்பதை அநுபவித்திற்காணலாம்.)

இவ்வாறு முறைப்படி மலஜல துவாரங்களின் வழியே தண்ணீர் முற்று லுங் கழித்த பின்புங்கூட சிறிது ஜலந் தீனிப்பையிற் றங்கியிருக்கும். அதைக் கிலி கர்மத்தால் வாயின் வழியே வெளிப்படுத்தவேண்டும்.

[கிலிகர்மமாவது:—சுட்டுவிரல் நடுவிரல்களால் உண்ணாக்கைப் பிடித்து மத்தித்தலோடு, ஷை இரண்டு விரல்களையுந் தொண்டைத் துவாரம் வரையிலுஞ் செலுத்தி வாந்தியுண்டாகும்படி உண்ணாக்கின் மேல் பாகத்திற் செவ்வையாய் நீவிவிடுதல் கிலிகர்மமாம்.]

அதனால் உள்ளே சந்துகளி லொட்டியுள்ள எல்லாக் கபங்களுங் கரைந்து நுரைரூபமாய் வெளியில் வந்துவிடுகிறது.

இக்கர்மம் முடிந்தவுடனும் முன்சொன்ன பிரகாரம் ஆவின் பாலைச் சாப் பிடவேண்டும். இன்றேல் கெடுதிசம்பவிக்கும்.

ஓ பாலர்களே! இறுதியிற் கூறிய இந்தக் கர்மத்தால் கபதோஷம் மலக்குற் றம் இவ்விரண்டும் ஏககாலத்தில் நிவர்த்தியாகிறது. ஆகலின், இதை நீங்கள் அவசியம் சாவதானமா யிருந்துகொண்டு பழகி வருவீர்களே யாகில், பிராணா யாமங் கஷ்டமின்றி சித்திப்பதோடு சமீபகாலத்தில் சமாதி கைகூடி "சர்வதுக்க நிவர்த்தியும், பரமானந்தப் பிராப்தியும்" எளிதி லடையக்கூடும்.

[ஷை கர்மத்திற்கு சங்கப்பிரக்ஷாளன மென்ற பெயர்.]

குறிப்பு:—கபமும் மலமும், நாபியினுட் பிரதேசத்திலுள்ள சுழுமுனைத் துவாரத்தில் மூடத்தையைத்துக்கொண்டு, தூங்குகின்ற குண்டலி சக்தியைச் சிறிது மசைய வொட்டாமல் பந்தித்துக் கொண்டிருப்பதால் 'தியானம்' நிலைக்கிறதில்லை. தியானம் நிலைக்காத பரியந்தம் பிராண மனோவிலயங்க ளுண்டாகமாட்டாது. பிராணன் மனம் இவ்விரண்டும் ஜீவித்திருப்பதால் 'பிந்து' (வீர்யம்) சலித்துக்கொண்டிருக்கிறது. விந்து (கஷ்டத்தால்) 'சலனத்தால் பிறப்பிறப்பு லபிக்கிறது. பிறப்பிறப்பை யுடையவன் ஒருபோதும் முக்தனுகமாட்டான். ஆகலின், முதலில் கபதோஷம் மலக்குற்றம் இவ்விரண்டையும் அவசியம் நிவர்த்தி செய்துவிட வேண்டும். அதன்மேல் தியானத்திலுட்கார, தங்கு தடையின்றி 'குண்டலிப்பாம்பின் கூத்தும், வானிங்கதிர்த்தனத்தின் காக்ஷியும், வேணுகான விநோதமுங்கண்டு களிப்பெய்தி, மோனநிலையில் மூழ்கி, வானத்திடை மேலேறி வாழ்ந்திருக்கலாம்.' ஓம் தத்ஸத் ஸாம்பமயம் ஓம்.

A. அர்த்தநாரி சர்மா. பனமரத்துப்பட்டி, சேலம்.

## ஓர் எச்சரிக்கை

குறிப்பு:—இத்தகைய அப்பியாசங்களை (மிக்க இலேசான இரண்டொன்றைத் தவிர) இவற்றில் தேர்ச்சியடைந்தோர் உதவியைக்கொண்டு அவர்கள் முன்னிலையிற் செய்து பழகவேண்டுமே யன்றி, வீணாசைகொண்டு தாமே செய்யத் தொடங்கினுல் தவறுகள் நேர்ந்து கெடுதி சம்பவிக்கு மென்பது உண்மை.

பத்திராசிரியர்.

---

## "உடையது விளம்பேல்"

ஓர் கிராமத்தில் பொன்னன் என்னும் வாலிபன் ஒருவன் கல்விச்சாலையில் படித்துவந்தான். "ஒருவன் எவ்வளவு கெட்டிக்காரனு யிருந்தாலும், தன்னிடமுள்ள பெருமையைத் தானே சொல்லிக் கொள்ளலாகாது; அவ்வாறு தற்பெருமை கூறித்திரிந்தால் மிகுந்த இழிவுண்டாகும்," என்னும் கருத்தடங்கிய, "உடையது விளம்பேல்," என்னும் சூத்திரப் பொருளை உபாத்தியாயர் அடிக்கடி அவனுக்கு உபதேசித்து வருவார். அப்படி உபதேசித்தும் அவன் அதை கவனிப்பதில்லை. அவன் ஒரு சமயம் அடுத்த ஊருக்குப்போயிருந்தான். அங்கிருந்து திரும்பி வரும்போது ஒருமனிதன், ஒரு மோதிரத்தை அவன் கையிற் கொடுத்து, "இரண்டு தினங்களுக்கு முன் இதை நான், உன் தகப்பனுரிடத்தில் இரவலாக வாங்கியந்தேன்; இதனை மிகுந்த ஜாக்கிரதையுடனே கொண்டுபோய் அவரிடத்தில் கொடுத்து விடு," என்று சொல்லி அவனை அனுப்பினுன். அவன் அதைவாங்கிக் கொண்டு, பிரயாணமாகி நடந்து, இராத்திரி காலம் வந்தவுடன் நடுவழியிலுள்ள ஒரு சத்திரத்தில் படுத்திருந்தான். அவன் எப்பொழுதும் தற்பெருமை கூறிக்கொண் டிருப்பவனுதலால் அச்சமயத்திலும் தன்னுடைய பெருமையைக் கூறுவதற்கு, "யாரேனும் இங்கே இருக்கிறார்களா?" என்று பார்த்தான். அப்போது பக்கத்தில் ஒரு சிறுவன் படுத்திருந்தான். அவனைக் கண்டவுடன் பொன்னன், தொந்தரவுசெய்து அவன் தூக்கத்தைக் கலையவிட்டு, அவனோடு வலிய சிநேகிதங்கொண்டு, அவனிடத்தில், "நண்பா! நான் எவருக்கும் நம்பிக்கை உண்டாகும்படி நடந்துகொள்வேன்; அதனுல் முன் பின் அறியாத ஒரு மனிதன்கூட ஒரு மோதிரத்தை என் தகப்பனுரிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி என்னிடம் கொடுத்தனுப்பி யிருக்கிறான்," என்று சொல்லி, இன்னும் பலவிதமான தற்பெருமைகளையே பேசிக்கொண்டிருந்தான். அவன் சொல்லியவற்றை யெல்லாம் அங்கு படுத்திருந்த மற்றவர்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பின்பு எல்லோரும் தூங்கிவிட்டார்கள். அங்கே படுத்திருந்த பக்காத் திருடன் ஒருவன், பொன்னனிடம் மோதிர மிருப்பதை, அவன் வார்த்தையினுலேயே தெரிந்துகொண் டிருந்தானுதலால், அவன் நன்றாகத் தூங்கும் சமயத்தில், அம்மோதிரத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டான். பொன்னன் விழித்துப் பார்த்தான்; மோதிரம் காணப்படவில்லை. அவ்வாறாகவே, "தந்தை என்ன செய்வாரோ," என்று அவன் பயந்து விம்மலும் பொருமலுமாய் வீடுபோய்ச் சேர்ந்து, தந்தையிடம் நடந்ததைக் கூறினுன். அவர் அவனுக்குப் புத்திவரும்படி அவன் முதுகில் நன்றாகப் புடைத்தார்; அவன், அடிபொறுக்கமாட்டாமல், ஓவென்று கதறி, "நம்முடைய உபாத்தியாயர், 'உடையது விளம்பேல்,' என்று கற்பித்ததை நாம் மறந்ததினுல் நமக்கு இத்தீங்கு சம்பவித்தது," என்று, அன்று முதல் தற்பெருமை கூறுவதை விடுத்தான். ஆதலால், ஒவ்வொருவரும், "உடையது விளம்பேல்," என்னும் நீதியைப் பின்பற்றி நடக்கவேண்டும்.



---

## தெய்வச்செயலின் அந்தரங்கம்

விவேகிகளாய யாவரும் தமக்கு ஒரு நன்மையோ, அல்லது தீமையோ நேரிடின் அது ஈசனுலளிக்கப்பட்டதேயென மனத்துட்கொள்ளுவார்கள்; உண்மையில் இது அறிவுடையோருடைய செய்கையேயாம். தேவன் நீதி பார்வை என்பதே யாவருடைய—எம்மதத்தினருடைய—கொள்கையுமாம்.

பஹிரங்கமாக நாம் செய்யும் அக்ரமங்களுக்கு நம்மைத் தண்டிக்க இராஜாங்கம் இருக்கிறது; பஹிரங்கமாகவன்றி, அந்தரங்கத்தில் தீக்காரியம் செய்யின் நம்மைத் தண்டிப்பவர் யார்? அது ஈசனேயாம். கடவுள் நீதி பாராகவே இருக்கவேண்டும்; இல்லாவிடில் அவரைக் கடவுளென்னலாமோ? நீதிமானுக்கு நன்மையும், அக்ரமக்காரனுக்குத் தீமையும் செய்யவேண்டுவதே கடவுளின் நீதி; அப்படியின்றி நன்மைக்குத்—தீமையும், தீமைக்கு—நன்மையும், நீதிக்கு—அநீதியும், அநீதிக்கு—நீதியுமாகவே இவ்வுலகில் எல்லாம் நடக்கின்றனவெனப் பல்லோர் மனத்திற் பதிந்திருக்கிறது. இது சரியன்று; உண்மையில் ஈசன் செயல்களெல்லாம் நியாயமானதாகவே இருக்கும். அது நமக்கு மறைபொருளாக இருக்கும்; அதன் உண்மையான அந்தரங்க மர்மம், நமக்கு ஒருபொழுதும், ஒரு சிறிதும் விளங்காது. அனவரத, அனந்தஞானத் தெய்வத்தின் திருச்செயல்களைக் குற்றங்கூற நாம் துணிவது எவ்வளவு அறியாமை? நம்மடத்தனந்தான் என்னே!

சில விவேகிகள்கூட கஷ்ட சமயங்களில் "தெய்வத்துக்குக்கூடக் கண்ணில்லையே! கண்ணவிந்துபோய்விட்டதோ? அதன்கோவிலிடிந்து குட்டிச்சுவராய்ப்போக! நாங்கள் எத்தனையோ தானதர்மம்செய்தோமே எங்களுக்கிப்படியாசெய்யவேணும்? மஹாபாபியாகிய அவன் எத்தனையோ தீச்செயல்களைப் புரிந்திருப்பான். அவனுக்கென்ன? செல்வம் முதலியவைகளுக்கு குறைவேது? இன்பத்திற்குத்தான் குறைவேது? சாமியேது? பூதமேது?" என்று ஆரம்பித்து விடுகிறார்கள்.

"காயாத மரமீது.....................
வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர்
வைவதுவு மெங்களுலக
வாய்பாடு...... ............" என்றனர். (தாயுமானவர்)

ஹா! இது முற்றிலும் பிசகே! ஈசன் செய்வதெல்லாம் நீதியே யென்பதற்கு உதாரணமாக பண்டைக்கதை யொன்றை யீண்டெடுத்துக் கூறுவாம். நண்பீர்!, சற்று கவனமாய்க் கீழ்வரும் கதையைப்பற்றிச் சிந்திப்பின் அவ்வுண்மை தெள்ளிதின் விளங்கும்.

இளமைப் பருவத்தே இல்வாழ்க்கையைத் துச்சமென வொதுக்கித், துறவறம்பூண்ட வோர் சந்நியாசி,

" இனிதினிது ஏகாந்தமினிது
அதனினுமினிது ஆதியைத்தொழுதல்
அதனினுமினிது அறிவினர்சேர்தல்
அதனினுமினிது அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பதுதானே "

என்பது உண்மையிலும் உண்மையே யாதலால் அப்படியே செய்வேன். வனங்களில் அநேகமஹான்கள் நாளைக்கும் இருப்பதாகக்கேள்வி; அங்குசென்றால் அநேக மஹான்களைத் தரிசிக்கலாம்; அது முடியாவிடினும் ஏகாந்தமாயிருந்து ஈசனைத்தொழலாம்" என்று சிந்தித்துப் பின்னர் தாம் முடிவுசெய்தபடியே வனத்திற்சேர்ந்து சிறு ஆச்ரமம் ஒன்றமைத்து அதில் வசித்து வருவாராயினர்.

இவ்வண்ணம் சிலநாட்சென்றபின்னர், அக்காட்டிற் சில பிரயாணிகள் திசைதப்பி வந்து சேர்ந்தபொழுது, அவர்கள் இவரைத்தரிசிக்க நேர்ந்தது. இவருடன் அவர்கள் சம்பாஷிக்க நேர்ந்தபொழுது பலவிஷயங்களையும், உலகில் நடக்கும் அக்ரமங்களைப்பற்றியும், அக்ரமக்காரர்கட்கு நன்மையும், நீதிமான்களுக்குத் தீமையும் நேர்ந்த பல சம்பவங்களைப்பற்றியும் பேசினார்கள். அற்றைப்பொழுதை ஆண்டுகழித்த பிரயாணிகள் மறுநாள் விடியற்காலையிலேயே புறப்பட்டுத் தம் வழிச்செல்வாராயினர்.

பிரயாணிகள் சென்றபின்னர் நமது சந்யாசி "இப்புவியில் அநியாயமும், அக்ரமும் அதிகரிக்கின்றனவென்றும், நன்மைசெய்யக்கேடும், தீமைசெய்ய நன்மையும் விளைகின்றனவென்றும் இப்பிரயாணிகள் சொல்லினார்களே! இஃதென்னபுதுமை! சர்வேஸ்வரருடைய ஆளுகையில் நல்வினை தீவினையென்னு மிரண்டினை யியற்றுவோர் தத்தமக்குரிய பலாபலன்களை யடையவேண்டியதாயிருக்க இவ்விபரீதம் நேரிடக் காரணம் யாது? இஃது உண்மையோ? அன்றோ? இதன் உண்மையை நேரிலேயே நமது கண்ணாற் கண்டு தெளியவேண்டும்" என்று நிச்சயித்து, முடிவில் ஆச்ரமத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, தாம் காணும் ஒவ்வொரு விஷயத்தையும் கூர்மையாய்க் கவனித்துக்கொண்டே வருகையில் ஓர் யௌவன புருஷனை இவர் சந்திக்க நேர்ந்தது. அவனுடன் சிறிது பேசிக்கொண்டிருக்கையிலேயே அவன் தனது சிஷ்யனாக விரும்புகிறான் என்பதை யறிந்தார்; அவனைச் சிறிது பரீக்ஷித்த பின் திருப்திகரமாயிருந்தபடியால் தனது சிஷ்யனாக அவனை அங்கீகரித்தார்.

பின்னரிருவருமாக, ஒருமனப்பட்டுப் பிரயாணம் செய்யலாயினர். இருவருமாக அற்றை இராப்பொழுதை ஓர் பெரிய பிரபுவின் வீட்டிற் கழிக்கலாயினர். இப்பிரபு மஹாதர்மவான்; அறநெறிவழுவாத இத்தர்மசீலன் எவ்விருந்தினரையும் நன்றே உபசரிப்பதுவழக்கம்'; 'வந்த விருந்தினரைப் புறத்தே வைத்துத் தேவாமிர்தமேயாயினும் இவர் உண்ண ஒருபொழுது மெண்ணார்' என்று கூறின் மேற்சொல்லவேண்டுவதுமுண்டோ? இதனால் முன் இவர் வீட்டில்,

' அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில் '



என்றவாறு, திருமகள் வாசம் செய்கிறாள்போலும்! விருந்தினரைக் காப்பவருக்குச் சகலசித்திகளும் கைகூடுமன்றோ? விருந்தினரை உபசரியாதவன் தாழ்மையை, நக்கீரரை சங்கப் புலவர்களயிர்ப்புடன் நீவிர் தமிழறிவாரை வென்று விட்டுத் திரும்புவீரோவெனக் கேட்டபொழுதவர்,

" சென்றுரை யூர்புக்கிச் சேயிழையாள் யான்கண்டு
வென்று தமிழுரித்து மீளேல்—மண்ணில்
விருந்திருக்க வுண்ட வெறுவலியோ டொப்பேன்
வருந்துபவரோ சங்கத் தவர் "

என்று பிரதிக்ஞைசெய்து கொண்டதினின்றும் நன்கறியலாம். நிற்க,

இத்தர்மப்பிரபு நமது விருந்தினரை, அன்புடன் முகமலர்ந்து, அகங்குளிர்ந்து, இன்சொலாலுபசரித்து, தேவாமிர்த மன்ன உண்டியளித்துச் சர்வோபசாரமும் செய்தனர். இவர்கள் வெகு சம்பிரமமாயுண்டு, அப்பிரபுவை மனதாரவாழ்த்தி, அன்றிரவு அக்கிரஹத்திலேயே தங்கியிருந்து, விடியற்காலையில் எழுந்து வெளிப்புறப்பட்டுச் செல்லும்போது, அத்தர்மசீலன் வீட்டினின்றும் ஓர் பொற்கிண்ணத்தைத் தன்சிஷ்யன் திருடிக்கொண்டுவந்ததைக் கண்ணுற்றார் துறவி, "இதென்ன ஆச்சர்யம்! உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்யலாமோ? களவு என்பதைக் கனவிலும் கருதலாகாதே; அந்தோ! இத்தகைய சிஷ்யனு நமக்கு வாய்க்கவேண்டும்?—இருக்கட்டும்; 'பக்தன் கார்யம் முற்றும்சோதி' என்றவண்ணம் இன்னம் பார்ப்போம்" என்று தனக்குட்டானே கூறிக்கொண்டார். அன்றிரவு வானமிருண்டு, மழையும், மின்னலும் விளைந்துகொண்டது; காற்றோ பலமாக அடிக்க ஆரம்பித்தது. இவ்விருவரும் மிகவும் கஷ்டப்பட்டு ஓர் கிராமத்தை அடைந்தனர். அக்கிராமத்தில் அரண்மனைபோன்ற ஓர் இல்லம் இவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. இவ்வீட்டில் இற்றை இராப்பொழுதை இனிதே கழிக்கலாமென வுட்கொண்டு, சந்தோஷமாய்த் தலைவாயிலருகிற் சென்று கதவைத்தட்டிக்கொண்டு நின்றனர். இவ்வீட்டின் சொந்தக்காரனோ பெரும்பாதகன்; அறம் என்பதையே அறியான்; விருந்தினருக்கென்று இவன் கதவைத் திறந்ததே இன்றென ஒரே வார்த்தையாய்க்கூறி மேற்சொல்ல ஆரம்பிப்போமே! இக்காரணங்களால் இவர்கள் எவ்வளவு பலமாய்த் தட்டினும் கதவைத்திறப்பா ரொருவருமின்று. ஆயினும் இவர்களோ—உள்ளே ஆளரவமுண்டெனத் தோன்றினமையின்—விடாக்கண்டர்களாகக் கதவைத் தட்டிக்கொண்டே நிற்பாராக, பிரபுவின் மனத்திற் சிறிது துக்கமுண்டாயிற்று. 'இதென்ன சங்கடம்?' என்று கூறிக்கொண்டே வேண்டாவெறுப்போடும், அரைமனதோடும் கதவைத் திறந்து, 'உள்ளே வம்மி னென்றழைத்து' 'நீவிர் எவ்வூர்' என்றும் 'எவ்விடம் செல்கின்றீர்?' எனவும் பலகேள்விகளைக் கேட்டுக் கடைசியில் சிறிதசன மளித்து, வெளிக்குச் சில உபசாரவார்த்தைகளைக் கூறி, அன்புடன் பேசுபவன்போற் பரிவுடன்பேசி, அவர்க ளதையுண்டபின் அவர்கட்குச் சயனித்துக்கொள்ள ஓர் அறையைக் காண்பித்து, 'நல்ல தரைதான்; வழவழப்பாக நன்றாகஇருக்கும்; மேற்றுணியைக் கீழேபோட்டுப் படுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறி தன்மனத்துட்டானே 'தடியன்கள்; வெறும் முண்டங்களாக வந்திருக்கிறார்கள். ஏதாவது கொண்டுவந்திருந்தாலும் அபகரித்துக்கொள்ளலாம். இன்றைக்கு வீண் தண்டச்சோறு' என்று கூறிக்கொண்டே சென்றான்.

இவனுக்கு இரவு முழுமையும் நித்திரையே வரவில்லை; எங்கு மறுநாளும் தன் வீட்டிலேயே தங்கிவிடுகிறார்களோ வென்ற பயமே அவன் சிந்தையைக் கலக்கியது. இக்கொடாத கண்டன் விடியச்சாம மிருக்கும்பொழுதே, இவர்

னைத் தட்டியெழுப்பி, "பொழுது விடிந்துவிட்டதே! இன்னம் தூங்கலாமா? பிரயாணிகளுக்கு நித்திரை சத்துருவன்றோ? வெயிலேறுமுன் வேறோர் ஊர்போய்ச் சேரலாகுமே" என்று சொல்லித் துரிதப்படுத்தினான்.

சந்நியாசி இம்மனிதனுடைய மூடத்தனத்திற்கும் துர்க்குணத்திற்கும் வியந்து, "இதென்ன பணம்காக்கும் பூதம்!

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.'

என்பதின் உண்மையை யறியாதோ இம்மூடம்! அந்தோ! இவ்வளவு திரவியமிருந்து மென்பயன்? ஹா! இம்மனிதனையும் ஈசன் சிருஷ்டித்தாரே!" என்று சொல்லிக்கொண்டே வெளிச்செல்கையில் மற்றோர் விபரீதம் நேர்ந்ததைக் கண்டார். தமது சகபாட்டைசாரியாய சீடன் முதனாட் தங்கட்கன்னமிட்ட தர்மசீலன் வீட்டிற் றிருடிய பொற்கிண்ணத்தை இவ்விலோபியின் மனையில் வைத்து வருவதைக்கண்ட சந்நியாசியின் மனத்திற் றிகைப்புண்டாயிற்று.

"முதலில் இவ்வாலிபனது சுகுணபாவனையையும், பேச்சலங்காரத்தையும் கண்டு மெத்த நல்லவனென்றெண்ணிச் சேர்த்துக்கொண்டோம்; அப்புறம் இவன்செய்த களவைக்கண்டு இவன் பொல்லாத் திருடனெனவும் நன்றிகெட்டவனெனவும் உத்தேசித்தோம். இப்பொழுதிவன் செய்கையைக் கவனிப்பின், நாம் எண்ணியவண்ணம் இவன் அயோக்கியனும், திருடனு மன்றெனவும், ஏதோபித்துக் கொண்டவன்போற் றன்செய்கைக்கு ஓர் வழியேனும், வாய்க்காலேனு மின்றித், தன் மனம்போனபடி யெல்லாம் நடக்கின்றவனெனவும் கருதவேண்டியதா யிருக்கிறது—அந்தோ! பாபம்! அழகிய, நல்ல வாலிபன்! எப்படியாகிலும் நம்மை அண்டிவிட்டானன்றோ? 'அண்டினபேரைக் கைவிடல் மஹா பாபமாகுமன்றோ?' இவனை நல்வழிப் படுத்தவேண்டியது நமது கடமையேயாகும். நாம் ஸ்திரமாக ஓர் இடம்போய்ச் சேர்ந்தபின் இவனுக்கு உத்தம உபதேசங்கள் செய்து இவனை நல்வழிப்படுத்தவேண்டும்" என முடிவுசெய்துகொண்டு, ஒன்றும் சொல்லாது மௌனமாக மறுபடியும் இவ்வாலிபனுடன் பிரயாணம் செய்யலானார்.

அன்றிரவு இவர்களிருவரும் ஓர் சமுசாரி வீட்டில் தங்கியிருந்தார்கள். இவனும் முதலில் இவர்கட்கு விருந்தளித்த தர்மசீலனைப்போன்றவனே யாதலின் இவர்களை வெகுவாக உபசரித்துத் தன்னாலியன்றவ்வளவு நல்லமுதளித்த பின்னர் மூவருமாகப் பல விஷயங்களைப்பற்றியும் சம்பாஷித்துக் கொண்டிருந்து முடிவில் நித்திரைபோயினர். சந்நியாசி மட்டும் ஏகாந்தமாக இரவில் பல விஷயங்களைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் நடுநிசியில், அப்பித்தனாகிய வாலிபன் எழுந்திருந்து, அவ்வீட்டில் தொட்டிலில் நித்திரைபோய்க்கொண்டிருந்த உலகறியாப் பச்சைப்பாலகன் மூக்கைப்பிடித்து, மூச்சுவிடமுடியாது திக்குமுக்காடி யுயிர்துறக்கச் செய்தான்; அதாவது 'அக்குழந்தையைக் கொலை செய்துவிட்டான்.' இக்குழந்தை இப்பிரபுவுக்கு அருமருந்தன்னது; வெகுகாலமாகப் பிள்ளையில்லாதிருந்து ஈசனைநோக்கிப் பலநாட்கள் பிரார்த்தித்து "ஓர் சற்புத்திரனை யருளவேண்டும்!" என்று பிரலாபித்த இச்சமுசாரிக்கிரங்கி ஈசனாலளிக்கப்பட்டது இச்செல்வம். ஹா! இதைக்கொன்றான் இப்பாதகனாய வாலிபன்.

இதைக்கண்ட சந்நியாசிக்கு மெய்சிலிர்த்தது; அவரால் நிற்கவும் முடியவில்லை; கால் தள்ளாடியது; பேச நாவெழவில்லை; வாயுலர்ந்து போயிற்று.



"ஹா—ஹா!—மஹா—மஹா பாவி!—துரோகி! என்செய்தாய்!—அந்தோ!—ஹே! துராத்மாவே என்னகாரியம் செய்தாய்!—உன் முகத்திலும் விழிக்கலாகாதே!—" என்று கூறிவிட்டு,

"தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது"

என்பது முதியோர்வாக்கன்றோ? ஏன்? பிரத்தியக்ஷமாகவே நாம் அறிந்தவிஷயம்—இத்தீயனின் சேர்க்கையால் நம் இரக்கமுள்ளமனதும் மாறிவிட்டதே" என்று கூறிக்கொண்டே வெளியே ஓட்டம்பிடிக்கலானார். ஆனாலும் அவருக்கு ஓடவேனும், வேகமாய் நடக்கவேனும் சக்தியில்லை. என்செய்வார்? பாபம்! கைகால்கள் நடுக்க மெடுத்துக்கொண்டன.

உலகில் இது சகஜந்தானே! தீயவர்கள் ஓர் தீக்காரியம் செய்யின் கூடவிருந்தவர்களுக்கும் கஷ்டம்தானே!! ஏனெனில் அவர்களையும் சாருமன்றோ இப்பழி? ஹா! இச்சங்கடங்களை யெல்லாம் நினைப்பின் தீயவர்களுடன் பேசவும் மனமிசையுமோ? இதுநிற்க, நமது சந்நியாசி இவ்வண்ணம் தத்தளித்து நிற்க, நமது வாலிபனும் இவருடன்வந்து சேர்ந்துகொண்டான். அன்று தினமும் இருவரும் ஓர் குடிசைவீட்டிற் றங்கநேர்ந்தது. அவ்வீட்டின் சொந்தக்காரன் பரம ஏழை. ஆனாலும் மஹா ஸ்ரீமான். "ஐயம்புகினும் செய்வன செய்" என்ற மேலோர்வாக்கை உண்மைப்படுத்தவே உதித்தவன்போலும்! இவர்களை அவன் வெகு உபசாரணையாக நடத்தினான். இருவரும் காலையில் அவ்வீட்டை விட்டுப் புறப்படும்பொழுது தனது சிஷ்யன் அவ்வீட்டின் கூரையில் கொள்ளிவைத்து வருவதைக் கண்ட சந்நியாசியின் மனம் பகீரென்றெரிந்தது. "சூதகாரபாவீ! துரோகி! சண்டாளா! உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யும் பாவீ! உன்னையும் ஈசுவரன் இன்னம் உயிருடன் வாழவிட்டிருக்கிறாரே? ஹா! ஹா!! என்னபாதகம்? எத்தகைய பாதகங்கள்! எவ்வளவு!!" என்று பலவாறு வைதார்.

இவ்வசைமொழிகள் காதில் வீழ்ந்தவுடன், சிஷ்யன் மிகப்பயந்து, சந்நியாசியிடம் மன்னிப்பு பெறவேண்டி யிருந்த பயபக்தியுடன் உரைப்பவன்போல "தேவ! சீரிய! யான் எத்தகைய பாதகங்களை இதுவரையிற் செய்திருப்பினும் கிருபைசெய்து மன்னித்தருளவேண்டும்" என்று பலவாறு வேண்டவும், துறவி மனமிரங்கி, சமாதானத்துடன், சிஷ்யனை மன்னித்து அவனுடன் பின்னும் பிரயாணம் செய்யலானார். சிறிது தூரம் சென்றபோழ்து காளாறொன்று குறுக்கிட்டது. இவர்கள் அதைக் கடக்க வழிதெரியாது மயங்கிநிற்கையில் சமீபத்தில் ஓர் வயலில் வேலைசெய்துகொண் டிருந்த ஓராடவன், தன் வேலையைப் போட்டு "அஞ்சன்மின்! யான் வந்து, இவ்வாற்றைக் கடக்க உங்கட்கு வழிகாட்டுகிறே"னெனக் கூறிச் சிறிது தூரத்திற்கப்பால் அவ்வூர் மாக்களியற்றிய ஓர் ஒற்றைமரப் பாலத்தின் வழியே இவர்களை யழைத்துச் செல்கையில், நடுபாதியிற் செல்லும்பொழுது, துறவியின் சிஷ்யனாய வாலிபன், தனக்கும், தன் குருவுக்கும் தயாளத்தோடு வந்து வழிகாட்டிய உபகாரியின் காலைப் பிடித்திழுத்து, பிரவாகத்தில் தலைகீழாகத் தள்ளி உயிர் துறக்கச்செய்தான். சந்நியாசி இச்சதியைக் கண்டவுடன் தனது கண்களினின்றும் அக்கினிப் பொறிபறக்க "அடே துராத்மா! இதுவரையிற்செய்த பாதகங்கள்போதாவா? அடா துரோகி! படுபாவீ! இவ்வளவு அநியாயஞ்செய்த நீ இன்னம் உயிருடன் இப்புவியிலிருப்பின் இன்னம் எத்தனை நல்லுயிர்கட் கிடையூறு செய்வாயோ? உன்னைக்

கொன்றாலும் பாதகமில்லை—ஆம்; உன்னைக் கொன்றே விடுகிறேன்,'' என்று கூறி அவனைப் பிரவாகத்தில் தள்ளி யுயிர்துறக்கச் செய்யவேண்டுமென்ற உத்தேசத்துடன் அவன்மீது கையைநீட்டலும், தன் முன்னின்ற வாலிபன் ஓர் ஜோதிர்மயமாகிய தேவனாகப் பிரத்தியக்ஷமானதைக் கண்ணுற்றார் சந்நியாசி. இக்காட்சியைக் கண்ட தபசி சித்திரம்போ லசைவற்று நின்றார்.

அத்தேவன் அக்கணமே சந்நியாசியை விளித்து "தொண்டனே! யானே தேவராஜ னென்றும், இந்திர னென்றும் கூறப்படுவோன். தபசியாகிய உனது சம்சயங்களை நீக்கவே ஈச்வரன் என்னை அனுப்பியுள்ளார். ஹே! தபஸி, சர்வஞ்ஞனாகிய ஈச்வரனுடைய செயல்களின் உண்மை அந்தரங்கத்தினை என்னாலும், எனக்கு மேற்பட்டவர்களாலும் அறியவியலா. ஆதலின் நினது அற்பமதியைக் கொண்டளந்தறிய வியலுமோ? நினது அறிவு சிற்றறிவே யன்றோ? "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர் நாழி முகவாது நானாழி" என்பதுபோல அளவுக்குட்பட்ட உனதறிவு அளவுகடந்த அனந்த ஞானத்தைத் தனக்குள்ளமைத்துக் கோடல் அசாத்தியம். உண்மை யிது. தேவத்திருச் செய லெப்படித் தோன்றினும் அவருடைய காரியங்களெல்லாம் நீதியும் நியாயமு மானதே யென்றுன்மனதில் நன்கு பதிப்பாயாக. தேவன் நீதிபரர். அவர் நீதிபரரே. அவர் இவ்வுலகையாளும் விதம் மானிடப் பார்வைக்கு மறைவாக இருக்கிறது. கருவிகளையும், ஹேதுக்களையும் கொண்டே தமதுசித்தத்தை நிறைவேற்றுகிறார். மானிடர் எம்பிரானுடைய அநந்தகலியாண குணங்களையும், அவரது அதிசயச் செயல்களையும் அறியாது ஐயுறுகின்றனர். இது தப்பிதம், இப்பொழுது நீ கண்ட சங்கதிகளைவிட விகல்பமும், விபரீதமுமான நடவடிக்கைகள் வேறுயாவுள. ஆயினும் இவற்றின் உண்மை அந்தரங்கத்தினை யறிவாயாயின் தேவனின் நீதிக்கும், ஆச்சர்யப்படத் தக்க ஞானத்துக்கும்; வியந்து, தேவன் நீதிபரர்! அவர் நீதிபரரே! என்று சொல்லித் துதிப்பாய். நீ கண்ட காக்ஷிகளின் விபரத்தின் உண்மை அந்தரங்கத்தினை யெனக்குத் தெரிந்தவரை யுனக்கெடுத்துரைக்கிறேன்'' என்று கூறிப் பின்வருமாறு பகரலானார்.

"முதலாவது:—நமக்கு விருந்தளித்து, உபசரித்தவன் உண்மையிலேயே மஹாதர்மவான். அவனுக்கு ஓர் விரோதியுளன். அவன் இந்நிமானுக்குப் பலவிதத்தும் இடைஞ்சல் செய்தும் பலிக்காமற் போனமையின் இவனுடன் சமாதானமாவதுபோலப் பாசாங்கு செய்து அதற்கறிகுறியாக ஓர் பொற்கிண்ணத்தினை யேற்கவேண்டு மெனக்கூறி யளித்தான். அப் பொற்கிண்ணம் நிறைய விஷம் தடவப்பட்டிருந்தது. அப்பொற்கிண்ணமே யான் திருடியது. அப்பொற்கிண்ணத்தை யான் திருடாவிட்டால் அந்நிமானுக்குத் தீங்கு நேரிட்டிருக்குமன்றோ?

இரண்டாவது:—நாம் கண்ட லோபி மஹா பாபி. எப்பொழுதும் அவனால் பிறருக்கு இடைஞ்சலே. அவன் இன்னம் சிறிதுகாலம் மட்டில் உயிருடன் இருப்பானேல் அநேகருக்கு இடைஞ்சல் புரிவான். சமீபத்தில் பல மானிடர்க்கும் கெடுதி யுண்டாகத் தக்க ஓர் பெரிய தீக்காரியத்தைச் செய்ய உத்தேசித்திருந்தான். இக்காரணங்களால் இவன் சீக்கிரம் இறக்கவேண்டு மென்பது ஈச்வரனது சித்தம். பொற்கிண்ணத்தில்—யான் கொண்டுவந்து வைத்த பொற்கிண்ணத்தில்—பானம் செய்து இறக்கவேண்டுமென்ற ஈச்வர சங்கல்பப்படியே அவன் இறந்தும் போய்விட்டான்.

மூன்றாவது:—நாம் கண்ட சம்ஸாரி ஈச்வரனுடைய பக்தன் அவன் சதா ஈசனையே தியானம்செய்து கொண்டிருப்பது வழக்கம் அவனுக்கு வெகுகாலம்வரை பிள்ளையே இல்லாதிருந்து, பிறகு இப்பொழுதுதான் தேவகிருபை



யால் ஓர் குழந்தை ஜனித்தது. அக்குழந்தை பிறக்கும்வரை சதா ஈச்வரனையே தியானம் செய்துகொண்டிருந்த இத்தம்பதிகள் இக்குழந்தை பிறந்தபின் இதன்மீது அளவுக்கு மிஞ்சிய ஆவல்கொண்டு, சதா இக்குழந்தையைக் கொஞ்சுவதிலேயே காலத்தை அவமேகழித்து, பகவானை மறந்திருப்பதைக் கண்ட ஈசன் 'அந்தோ' நமது நற்றொண்டன் நம்மை மறந்து சதா உலகபோகத்தில் மயங்கி விட்டானே? யென்றிரங்கி, அக்குழந்தையை யிழக்கச்செய்யின் மனந்திரும்பிப் பழையபடி நம்மீது அன்பு செலுத்துவா னென்றெண்ணி அவ்விதமே நடப்பித்தார்; இப்பொழுது அவன் தன் குற்றத்தை யுணர்ந்து சதா ஈசனையே தியானம் செய்துகொண்டிருக்கிறான்.

நான்காவது:—நாம் கண்ட குடிசையில் வசித்தவன் மஹா ஏழை. ஆயினும் மஹா யோக்கியனாதலால் ஈசன் திருவுளமிரங்கி அவ்வீட்டுச் சுவரில் உள்ள சுவர்ணப்புதையலை யவனுக்களிக்கச் சித்தமாகி, அவ்வீடெற்றி யெரியும்படி யென்னால் செய்யச்செய்யவும், வீட்டின் சுவர்களிற் சில இடிந்துவிழ அவற்றினின்றும் ஏராளமான சுவர்ண நாணயங்கள் அவனுக்கு அகப்பட அவன் மஹாப்ரபுவானான்.

ஐந்தாவது:—நமக்குப் பிணைமரப் பாலங்காட்டிய உபகாரி மஹாத்துரோகி. இவன் நாம் முற்கண்ட சம்சாரியின் வீட்டிற்சென்று, வீட்டிலுள்ள யாவரையும் கொன்று கொள்ளையடிக்க வெண்ணியிருந்தான். இதை உத்தேசித்தே யிவனைக் கொன்றது. அன்பனே! இவற்றின் உள்ளுரைப் பொருளை உணராதார் யாவரும் இவற்றை விகல்பமாகவே விபரீதமென நினைத்து ஈசனை யிகழ்வார். ஆயின் கருணையங்கடலாகிய இறைவனின் செய்கைகளனைத்தும், அன்பும், நீதியும், இரக்கமும் பொருந்தியவைவையே யென்றறிந்து, யாவும் ஈசன் சித்தப்படியேயாகு மென்றெண்ணி முடிவில் நற்கதியை யடைவாயாக'' என்று கூறி மறைந்தனன் தேவராஜன். சந்நியாசியும் ஈசனின் உண்மை அந்தரங்கத்தின் நீதியை யறிந்து ஈசனைத் துதித்துச் சென்றார்.

மேற்கூறிய கதையினின்றும் ஈச்வர சங்கல்பத்தின் உண்மை யந்தரங்கத்தினை யுள்ளவாறு கண்டறிவது யாவர்க்கு மியலாக் காரியமென்பதும் அதையறிவதில் முயற்சிப்பதைவிட்டுத் தங்களுக்கு இன்பமேயாயினும், துன்பமேயாயினும் யாதுவரினும் ஈச்வரச் சித்தமென்றெண்ணி, இன்பத்தினின்று துன்பமும், துன்பத்தினின்று மின்பமும் தரவல்லவர் கடவுளெனமதித்து, எது எப்படியாயினும் நம் கண்ணுக்குத் தீயதாகவேனும், நன்மையாகவேனும் எப்படித்தோன்றினும், எல்லாகாரியங்களும் ஈசனால் நமது நன்மைக்காகவே யியற்றப்படுவன வெனவுட்கொண்டு வருவோர் சதா இன்பத்தையே அடைவர் என்று நாமறிந்து அவ்வாறே நடந்துய்யும் வண்ணம் ஆண்டவன் அருள்புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஓம் தத் ஸத்.

T. G. ரங்கநாத அய்யங்கார், தஞ்சாவூர்.

## நடராஜமூர்த்தி.

(இது பிரம்மஸ்ரீ V. நடராஜய்யர் அவர்களால் நடத்தப்பட்டுவந்த "ஞானசந்திரிகா" என்ற பத்திரிகையிலிருந் தெடுத்தெழுதப்பட்டது.)

நடராஜன் என்றால் நடனசபைக்கு அதிபதியென்று அர்த்தம். இவ்வுலகமே நடனமாடும் ஸ்தலம். நாடகத்தில் பற்பலவேஷங்கள் வருகின்றன. அதுபோல் இவ்வுலகத்தில் பற்பல ஜீவராசிகள்தோன்றி நடித்து மறைந்துபோகின்

தன. இப்படி இளையர், விருத்தர், ஆண், பெண், மனுஷன், மிருகம், புல், பூண்டு முதலிய பொம்மைகள் உலகமாகிய நாடகஸ்தலத்தில் தோன்றி ஆடுவதெல்லாம் ஆத்மா அல்லது கடவுளின் சக்தியாலேயன்றி வேறல்ல. பொம்மையை யாட்டினால் அது ஆடாமலிருக்குமா? வீணையை மீட்டினால் அது பாடாம லிருக்குமா? அதுபோல் எல்லா யாட்டிவைக்கும் ப்ரமாத்மாவுக்கே நடராஜன் என்று பெயர். அந்தராத்மா வொன்றில்லையானால் இவ்வுலகமெல்லாம் ஜடமா யன்றோ விருக்கும். மனிதனுடைய மனதுக்கு ஆத்மாவே உண்மையான உபாத்தியாயர். ஆதலின் நடராஜனே நம்முடைய குரு. உலகத்தில் இரண்டு விதமான ஆசாரியர்களுண்டு. பெயருக்கு ஆசாரியர் ஒருவர். உண்மையான ஆசாரியர் ஒருவர். முன்னர் கூறப்பட்டவர் சிஷ்யனுக்கு எல்லாவற்றையும் கற்பித்து அவனைத் தன்வழியில் நடத்துகிறார். இப்படி செய்பவரைத்தான் நாம் குருவென்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் கற்றுக்கொண்ட விஷயங்களெல்லாம் நமக்குள்ளிருந்தே வந்தன. செடிகள் பூமியிலிருந்து தாமே உண்டாகின்றன. நாம் கொட்டும் தண்ணீரும் போடும் எருக்களும் அவைகள் வளருவதற்கு அனுகூலமேயன்றி வேறல்ல. இம்மாதிரியே நமக் குள்ளிருக்கும் மனம் தானே விர்த்தியாகவேண்டும். அப்படியானால் நடராஜனே ரூபத்தோடுகூடிய உண்மையான குரு. குருவின் முக்கியமான கடமை என்ன? பிறருக்குப் போதிப்பதைப்போல் தான் நடப்பது. அதாவது தான் நடந்து காட்டுவதால் பிறருக்குத் தான் போதிப்பதை விளக்குவது. நடராஜமூர்த்தியின் வலதுகை யொன்றில் உடுக்கை என்ற ஓர் வாத்தியமிருக்கிறதே அதென்ன? அது இவ்வுலகத்துக்கான காரணத்தை குரு கொண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிடுவதற்கு. சப்தத்தினாலே இவ்வுலகம் நிலைபெற்றது என்று சாஸ்திரம். சப்தத்தையுண்டாக்கும் உடுக்கை நடராஜன்கையில் வைத்திருப்பதால், அவர் தம்முடைய இஷ்டப்படி உலகத்தை யெப்படி வேண்டுமானாலும் ஆட்டலா மென் றேற்படுகிறது. ஞானிகளுக்கு, வேண்டுமானால் இவ்வுலகமிருக்கும். வேண்டாவிட்டால் உலகமில்லை. நடராஜமூர்த்தியின் ஓர்பக்கத்திலுள்ள மான், மனதைக்குறிக்கிறது. ஏனெனில், மானைப்போல் மனம் ஓரிடத்திலிருந்து மற்றொருவிடத்துக்குத் தாவுகிறதால், மானைப்போல் தாவும் மனதையுடைய மனிதர்களுக்கு ஆத்மாவின் தரிசனம் அகப்படுவதருமை. நடராஜன் தாம் கொன்ற புலியின்தோலை தரித்துக்கொண்டிருக்கிறார். அகங்காரம்தான் அப்புலி அகங்காரமென்னும் புலி யாரைக்கண்டாலும் எதிர்க்கிறது. அதைக் கொல்வ தற்கு நடராஜமூர்த்தியே தகுந்தவர். நடராஜன் தம்தலையில் கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கிறார். கங்கைதான் சித்சக்தி, அதுதான் ஞானம், வெகு குளிர்ச்சி பொருந்தியது. அவர் சிரசிலிருக்கும் சந்திரன் சீதளமாயும் பிரகாச மாயுமிருப்பதால் ஆத்மாவின் பிரகாசத்தைக் காட்டுகிறது. ஸ்ரீ நடராஜமூர்த்தி ஓர் காலினடியில் முயலகனைப்போட்டு மிதிக்கிறார். அந்த முயலகன்தான் மகாமாயை. இந்த மாயையே பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம். இன்னொரு பாதத்தை மேலே தூக்கிக்கொண்டிருப்பது துரியத்தின் நிலைமையை யுணர்த்து கிறது. இது ஜாக்கிரஸ்வப்ன ஸுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளையும் கடந்து அப்பாலுள்ள ஸ்திதி. இதற்குப்பின்னால் மனஸு, மாயை, உலகம் இவைகள் கிடக்கின்றன. இன்னொரு வலதுகை ஸமாதானத்தைக் காட்டு கிறது. அதாவது ஞானி அனுபவிக்கு மௌனமாகிய ஆனந்தத்தை குறிக் கிறது. நடராஜனது இடதுகையொன்றில் இருக்கும் மழு அதாவது நெருப்பு அவர் ஆத்மாவின் ஸ்வரூபமாகிய ஜோதியை சிஷ்டர்களுக்கு நேரில்காட்டி யுபதேசிப்பதை யுணர்த்துகிறது. இவ்வாறு நடராஜன் நடனமாடும் ஸ்தலம் தில்லைவனம். மானிட சரீரத்தையும் இப்பேருலகத்தையும் வனத்துக்கு



உவமையிடுவதுண்டு. வனத்தில் பற்பல மரங்களும் செடிகளும் விலங்குகளு மிருப்பதுபோல் மனிதனுடைய சரீரத்திலும் அநேக வஸ்துக்க ளிருக் கின்றன. நாடகஸ்தலத்தின் உயர்ந்தமேடை மசானம், இந்த மசானத்தில் ஆசாபாசங்களும் நாமரூபங்களும் உலகமாகிய மாயையின் தோற்றமும் அழிந்து பஸ்மீகரமாகின்றன.

மேற்கூறிய நடராஜமூர்த்தியின் சில லக்ஷணங்களால் நாம் அறிந்து கொண்ட விஷயங்களாவன. நடராஜன் என்னும் குரு மாயையைத்தொலைத்து, உலகத்தை நம்முன்னடக்கி, நாம் அதில் அகப்பட்டு விழிக்காமல், சலனமனதைப் பின்னால் தொலைத்து, அகங்காரத்தை யழித்து எவ்வகையான ஆசையும் பாசமு மின்றி ஆத்மாவின் சொந்தஸ்தானமாகிய சிதாகாசத்தை அடைந்து, பிரம்மானந் தத்தை யனுபவிக்கும்படி நமக்கு போதிக்கிறார். இப்படிப்பட்ட நடராஜ விக்கிர கத்தைக் கேவலமாய் நினைக்கும் மாந்தர்கள் பிறவிக் குருடர்களன்றோ? இத் தகைய மூர்த்தியையும் அம்மூர்த்தி எழுந்தருளிய சிதம்பரத்தையும் தரிசிப்பது நமது கடமை.

பழனிக்குமாரு.

குறிப்பு:—சிதம்பரக்ஷேத்திரம் மற்றெல்லா க்ஷேத்திரங்களிலும் சிறந்து விளங்குவது. அது எல்லா மதஸ்தர்க்கும் பொதுவான ஒரு குறிப்பைக் காட்டு கிறது. என்ன குறிப்பெனில், "நமது தேகமாகிய கோயிலில் ஆண்டவன் வசிக்கிறார். நமது உள்ளத்தில் ஆண்டவன் நடனம் புரிந்துகொண்டிருக் கிறார்" என்ற குறிப்பைக் காட்டுகிறது.

ஆதலால் ஒரு மனிதன் தெற்கே பாதமும், வடக்கே சிரசும் வைத்துக் கொண்டு மல்லாந்துபடுத்திருந்தால் அவன் தேக அங்கங்கள் எவ்வாறு அமைந்து நிற்குமோ, அவ்வாறே எல்லா அங்கங்களையும் விளக்கிக் காட்டும் குறிகளோடு அக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. எதைக் காட்டி விலக்க கோயில் கட் டப்பட்டிருக்கிறதோ அவை யாவற்றிற்கும் குறிகள் பூரணமாய் அங்கு அமைக் கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் "கோயில்" என்றாலே சிதம்பர க்ஷேத் திரத்தைக் குறிக்கும்.

அதில் அமைந்துள்ள கடவுளும் சமயாதீதக் கடவுளே. அவர் உருவத்தி லடங்கிய அங்கங்கள் முதலியயாவும் அவர் சொரூபத்தை விவரமாய் விளக்கிக் காட்டும் குறிகளேயாகும். அவர் நடிக்குமிடம் பொன்னம்பலம் என்றும், சிதாகாசம் என்றும், சுடலை என்றும் கூறப்படும். அம்பலம் எனின் ஆகாயம், வெருவெளி என்று பொருள். சிதாகாயம் என்றால் சித்தத்தில் உள்ள ஆகா யம். நமது மனம் பஞ்சபூதங்களால் படைக்கப்பட்டதால் அதற்கு ஐந்துவித குணங்களும், 5-பெயர்களும் உண்டு. அவையே மனம், புத்தி, சித்தம், அகங் காரம், உள்ளம் என்று அந்தக் கரங்கள் ஐந்து என்று கூறுவது. இவற்றில் உள்ளம் என்பதே ஆகாய அம்சம்-சத்துவமானது-களங்கமற்ற ஆகாயம்போல் பரிசுத்தமாய்ச் சலனமின்றியுள்ளது-அதனால் அதற்குச் சிதாகாசம் என்று பெயர்-மனதிலுள்ள அகங்காரம்-காமம்-குரோதம், லோபம், மோகம் முதலிய எல்லாப்பேய்களும் ஞானக்கினியால் சாம்பலாய் எரிக்கப்பட்டபிறகே உள்ளம் தன் சொரூபமட்டுமாய்த் தனித்து நிற்கிறது. மேற்கண்ட பேய்களெல்லாம் அங்குத் தகனம் செய்யப்படுவதால் அதற்கு மயானம் என்றும், சுடலை என்றும் பெயர் வந்தது. அதில் நடனம் செய்யும் பகவானுக்கு சுடலையாடி எனப் பெயர்வந்தது. அப்பேய்கள் தகனம் செய்யப்பட்ட பிறகு ஏற்படும் ஞானநிலை யில் அங்கு நடிக்கும் பகவான், அவை தகனமாகுமுன் இருக்கும் அஞ்ஞான

சபையிலும் அங்கு நடித்துக்கொண்டுதானிருக்கிறார். ஆகாயம் மற்ற எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக்கொண்டிருப்பதுபோல் உள்ளமே மற்ற எல்லாக் குணங்களுக்கும் இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறது. அஞ்ஞான காலத்தில் ஆண்டவன் அங்கு நடிக்கும்போது இப்பேய்களுமிருப்பதால் அவருக்குப் பேயோட்டி என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இவ்வுண்மையை யறியா மூடர்கள் அசுத்தமான சுடுகாட்டில்போய் பிசாசுகளோடு கூத்தாடுவோனும் தேவனுவனோ என உளறலாகும். இந்த உள்ளம் நமது தேகத்தில் இருதயத் தானத்தைக் குறிக்கிறது. இது நமது தேகத்தின் நேர் மையத்திராது இடதுபக்கம் இருப்பதால், சிதம்பரத்தில் சுவாமி நடிக்கும் பொன்னம்பலமும் கோயிலின் மையத்தி லமைக்கப்படாது மையக்கோட்டிற்கு இடதுபக்கமே அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டவன்செய்யும் நடனத்திற்குப் பஞ்சகிருத்திய நடனம் என்றும் பெயர். அதனால் அவர் நடனம் அவர் பஞ்சகிருத்தியங்களையும் செய்பவர் என்று குறிப்பிடுகிறது. எவ்வாறெனின். (1) அவர்கரத்திலிருக்கும் உடுக்கை சிருட்டியையும், (2) அணைத்த கரம் திதியையும், (3) மழுவாகிய அக்கினி சங்காரத்தையும், (4) ஊன்றியபாதம் திரோபவத்தையும் (5) தூக்கிய பாதம் அனுக்கிரகமாகிய மோக்ஷத்தையும் குறிக்கின்றன.

மேற்கண்ட வியாசத்தில் சில விஷயங்களைப்பற்றிய குறிப்புகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றியின்னும் கூறவேண்டுவது அனுவசியமாகும்.

நடராஜருடைய சொரூபம் அவர் உண்மை நிலையையே காட்டுகிறது. இப் பிரம்மாண்ட சொரூபமே அவர். ஆகையால் அண்டமுகடே அவருடைய சிரம். மின்னலும் ஜலமும் சந்திரனும் அண்டமுகட்டிலேயே யிருக்கின்றன. மின்னற்கூட்டங்களே அவருடைய சடைகள். அதனால் அச்சடைகள்சோதிமயமான பொன்னிற முடையவையென்று கூறப்பட்டிருக்கிறது. கங்கையும் சந்திரனும் அவர் ஜடாபாரத்தில் இருக்கின்றனவென்றும் கூறப்பட்டது. நாகம் குண்டலி சக்தியைக்குறிக்கிறது. "மின்னிய மின்னலின் பிரக்கம் நின்சடையே" என்றனர் பட்டினத்தடிகள். பூலோகமே அவர்தேகம். காற்றே அவர் சுவாசம். பாதாளமே அவர் பாதங்கள். தேகமுழுதும் விபூதி தூளனம் அவர் சத்துவ சொரூபமான ஞானரூபியென்பதைக் குறிக்கிறது. கையில் தரித்த முத்தலைச் சூலம் மூவரும் ஒருருவே என்பதைக் குறிக்கிறது. சிதம்பரக்ஷேத்திரம் இவ்விதமாய் ஆண்டவன் உன் உள்ளத்தில் நடனம் செய்துகொண்டிருக்கிறார், இங்கு காண்பதுபோல உன் உள்ளத்தில் கண்டு தரிசியென்கிற சமயப்பொதுவான குறிப்பையே காட்டுகிறது.

இதனால் அவர் சமயாதீதக்கடவுளென்பது விளங்கும். இதுபற்றியே தாயுமானவர் " எல்லாம் வெளியே யென்ன வெச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்" என்றார்.

தாயுமானவர் அருளிய " விளங்குவெண்ணீறுபூசி......" என்று தொடங்கும் பாட்டையும் அதற்கடுத்த பாட்டையும், " சிதம்பர இரகசியம் " என்ற பதிகத்திலுள்ள " சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு......" என்று தொடங்கும் பாட்டையும் அதற்கடுத்த பாட்டையும் பார்க்க இஃது நன்கு விளங்கும்.

இவ்வாறே பஞ்சாக்ஷரமும் யாவற்றையும் குறிக்கிறது. மந்திரங்கள் யாவற்றிலும் பிரணவமே சிறந்தது. பஞ்சாக்ஷரம் அதற்குச் சமன்தயானதே. பிரண



வமும் அகாரம், உகாரம், மகாரம், அ என்ற மாத்திரை, அர்த்தமாத்திரை—(அ என்ற மிகக் குறுகிய சத்தம்—பின் இரண்டும் சத்தம்மட்டுமே யுடையன) என்ற ஐந்து எழுத்துக்களையுடையது. இந்த ஐந்து எழுத்துகளும் பஞ்சகிருத்தியத்தையும், பஞ்சபூதங்களையும். அவற்றாலுண்டான சகலசிருஷ்டிகளையும் குறிக்கும். அதுபோலவே பஞ்சாக்ஷரத்தின் ஐந்து அக்ஷரங்களும் யாவற்று சிருட்டிகளையும் குறிக்கும் (பஞ்ச கிருத்தியங்கள் — பஞ்சபூதங்கள் — பஞ்சசத்திகள் — பஞ்சகர்த்தர்கள் முதலிய யாவும்)

மேலும் பஞ்சாக்ஷரத்திலுள்ள நகாரம் பாசத் (திரோபதை) தையும், மகாரம் மலத்தையும். சி காரம் சிவத்தையும், வ காரம் அருட்சத்தியையும், ய காரம் ஆன்மாவையும் குறிக்கும். இப்பஞ்சாக்ஷரம் தூலபஞ்சாக்ஷரம், சூக்குமபஞ்சாக்ஷரம், காரணபஞ்சாக்ஷரம், மகாகாரணபஞ்சாக்ஷரம், முத்திபஞ்சாக்ஷரம் என, ஐந்துவகையாய்மாறும் இதுமுத்தியளிக்கவல்லது " முத்திபஞ்சாக்கர முறைமை யயிக்கியமம்—சத்தியமிதுவெனச் சான்றோர்க் குரைத்தோர்" என்று தாயுமானவரைப்பற்றி அவர் சீடர் கூறியுள்ளார்.

இவ்வாற்றால் பிரணவமும் பஞ்சாக்கரமும் நெல்லும் அரிசியும் போன்றனவேயன்றி வேறல்ல. பிரணவம் ஆண்டவனுடைய வெளிவடிவத்தையும் பஞ்சாக்ஷரம் உள்வடிவத்தையும் குறிக்கும். ஆகையால் மற்ற மந்திரங்களைத் தாம் பிரணவசகிதமாயச் சபித்தாலே பயனுண்டென்று கூறியிருக்க, பஞ்சாக்ஷரம்மட்டும் பிரணவமின்றிச் சபித்தாலே முத்திசித்திக்குமென விதித்திருக்கிறது. இவற்றைப்பற்றி விரிவாயுணர விரும்புவோர் (பஞ்சாக்கர இரகசியம் முதலிய) நூல்களில் கண்டுகொள்க.

ஓம் தத் சத். பத்திரிகாசிரியர்.

---

## கொடிய பொறாமை

நமது நண்பர் ஒருவர் தங்கள் ஜாதியார் இதுகாறும் சுற்றத்தாரை முறைகொண்டாடுவதில் ஆத்தா—அப்பாத்தே முதலிய அநாகரீகவார்த்தைகளையுபயோகித்து வந்ததாகவும், இப்போது அவற்றை விட்டுவிட்டு நாகரீகமான வார்த்தைகளை யுபயோகிக்கப் பழகிக்கொண்டதாகவும், அதைக்கண்ட அக்கிராமத்திலுள்ள கீழ்ச்சாதியாரும் அவ்வாறு நாகரீகவார்த்தைகளைத் தாங்களும் உபயோகிக்கத் தொடங்கியதாகவும், அதைக்கண்ட நமது நண்பரின் ஜாதியைச் சேர்ந்த ஒருவர் மனம்பொறாது, தாழ்ந்த ஜாதிப்பயல்கள் நம்மைப்போலவே நாகரீகவார்த்தைகளை உபயோகிப்பதாவென்று கோபமடைந்து, அவர்கள் பழையபடி அநாகரீக வார்த்தைகளையே பேசவேண்டுமென்று வற்புறுத்துகிறார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

அந்தோ இது என்ன மடமை—சாதாரணமாய்த் தம்மிலும் வேறொருவர் அதிக செல்வம், பதவி, புகழ், முதலியவற்றையடைந்தால் அறிவிலிகள் அதைக்கண்டு பொறாமைப்படுவது உலகில் சாதாரணம். அப்படிப் பொறாமை யடைந்தாலும் அவன்மட்டும் அப்படி யாய்விட்டானே நாமும் ஆகவேண்டுமென்று அதற்கு முயற்சிப்பவன் புத்திசாலியேயாவான். அப்படிக்கின்றி அவனும் நம்மைப்போல் இராமல் மேலோங்கினனே என்றாவது, அவன் தாழ்ந்த நிலையிலேயே யிராமல் நம்மைப்போல் சமமாய் உயர் நிலைக்கு வந்துவிட்டானே என்றாவது மனந்தாளாதவன் ஒருபோதும் ஈடேறமாட்டான்.

அதிலும் நமது நாட்டில் கீழ்த்தரத்திலிருப்போரும் நாகரீகமான சம

நிலைக்கு வந்தால்தான் நம்நாடு மேலோங்கி க்ஷேமமடையும் என்றும் ஒற்றுமையுண்டாகுமென்றும் அறிவாளிகளனைவரும் கருதி, அதற்காகவுழைக்கும்போது, தாழ்ந்தோராகியார் நம்மைப்போல் நாகரீகவார்த்தைகளைப் பேசுவதைக்கண்டு சந்தோஷமடைந்து அவர்களை யுற்சாகப்படுத்தி இன்னும் விர்த்தியடையச் செய்வதைவிட்டு, அதற்கு மனந்தாளாமல் பொறாமைப்படும் அறிவிலிகளும் நம் நாட்டிலிருப்பது மிக்க ஆச்சரியமான சங்கதியே. ஆயினும் அத்தகையோர் அதிசயிப்பார் என்றே நம்புகிறோம். அன்பர்களே! நாம் நமது க்ஷேமத்திற்கு மட்டும் உழைப்பதை விட்டு ஒவ்வொருவரும் அன்னியர் க்ஷேமத்திற்கும் பாடுபடுவதே நமது நாடு முழுமையும் க்ஷேமமடைவதற்குத் தக்கவழியென்பதை மறவாதொழுகும் வண்ணம் பராபரன் அருள்புரியுமாறு பிரார்த்திப்போமாக.

ஓம் தத் சத்.

பத்திராசிரியர்.

---

## உபாத்தியாயர் இருக்கவேண்டிய முறைமை.

(217-ம் பக்கத் தொடர்ச்சி.)

III. நடத்தை சம்பந்தமான யோக்கியதை என்றால் என்ன?

1. நடத்தையில் ஒருமாசும் இருக்கக்கூடாது. அதாவது பொடிபோடுதல் என்பதை எடுத்துக்கொள்வோம். அதை உபயோகப்படுத்துவது அவசியமாக இருந்தபோதிலும் பிள்ளைகளுக்கு (மாணாக்கர்களுக்குத்தெரியாமல் உபயோகிக்க) ஏனென்றால் நம்மிடத்தில் மாணாக்கர்கள் ஒருபகலில் 6 மணி நேரம் பழகுகிறார்கள். அதனால் அவர்களில் சிலர் அதை உபயோகப்படுத்துவோம் என்று நினைப்பார்கள். அதனால் குற்றமாகும். இப்படியே இதைச் சுருக்கிச்சொல்லில் ஒரு கிராமத்தில் உபாத்தியாயரையே பார்த்தும் அவருடைய சொல்லையே கேட்டும் நடக்கக்கூடியவர்கள் அதிகமானதையால் உபாத்தியாயர் நடத்தையில் யாதொரு தூர் நடத்தையும் இருக்கக்கூடாது.

2. மேற்கூறிய காரணங்களினால் கோபத்தையும் அடக்கவேண்டும். மேலும் இதனால் பிள்ளைகளுக்குத் தாங்கள்செய்யும் வேலை விளையாட்டாகவும், சந்தோஷமாகவும் இருக்கும். இது எப்படி? பையன் எப்படி சந்தோஷமாகச் செய்வான் என்றால், பையனுக்கு நாம் இன்றையதினம் இதைச் செய்து கொண்டுபோனால் நமக்கு 5 மார்க்கு கொடுப்பார் அல்லது நாம் முதலாக இருந்தால் ஓர் இனாம் கொடுப்பார் என்ற ஒரு எண்ணம் அவனிடத்தில் உண்டாகும்படி செய்யவேண்டும். அதோடு மாணவரிடம் எப்போதும் அன்பா யிருக்கவேண்டும். அவர்கள் உபாத்தியாயரின் அன்பை யிழந்துவிட ஒருபோதும் பிரியப்பட மாட்டார்கள்.

3. இரக்க மிருக்கவேண்டும்:—ஏன்? அவர் ஜனப்பிரியராக இருப்பர். மேற்கூறியதைச் சுருக்கில் ஒரு உபாத்தியாயர் எப்பொழுதும், 1. நல்லவழக்கங்களில் அப்பியசிக்கவேண்டும். 2. நல்ல சேர்க்கையாக இருக்கவேண்டும். 3. அந்த நல்ல வழக்கத்தையே மேலும் மேலும் விருத்தியாகும்படி செய்து இவரும் விருத்தியடையவேண்டும். என்பதேயாம்.

உபாத்தியாயரிடத்தில் இருக்கவேண்டிய முக்கிய கருவிகளில் ஒன்று..

I. பரிக்ஷித்தல் ஏன்?

அதனால் பிள்ளைகளின் தேர்ச்சி நன்றாக உபாத்தியாயர்களுக்கு ஏற்படும்.



இது 1. எழுத்துப் பரிக்ஷை என்றும்; 2. வாய்மூலமான பரிக்ஷை என்றும் 3. மேற்கூறிய இரண்டையும்சேர்த்து பரிக்ஷித்தல் என்றும், மூன்று வகைப்படும்.

1. எழுத்துபரிக்ஷை எதற்காக? எப்படி?

நாளையதினம் தமிழ்ப் பரிக்ஷை என்று மாணாக்கர்களிடம் சொன்னாலும் அவர்கள் அதை (a) முன் தயார் செய்துவருகிறார்கள், (b) பிள்ளைகளின் சக்தியே அதிகமாகிறது, (c) கவனம் உண்டாகும், (d) சுயமுயற்சி ஏற்படுகிறது, (e) வியாசம் நன்றாய் எழுதத் தெரிந்துகொள்ளுகிறார்கள். கேள்வியைக் கேட்டு காகிதத்திலோ பலகையிலோ மறுமொழி எழுதச்செய்தல். இதனால் காலசேதமாகும் என்பது ஒன்றுதான் பிரதிகூலமாகத் தோன்றும்.

(தொடரும்.)

நெல்லிக்குப்பம்—எஸ். பி. ராஜகோபால் செட்டி.

---

## பெண் கல்வி

(236-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரீகள் வாசித்தால் புருஷர்களுக்கு அடங்காரகளென சிலர் சொல்லும் ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் கூறுகின்றோம். பக்ஷி எவ்வளவு உயரப்பறக்கினும் ஆகாயத்திற்கு உட்பட்டிருப்பதுபோல, ஸ்திரீகள் எவ்வளவு வாசிக்கினும் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களேயன்றி மேற்பட்டவர்களன்று. சிருஷ்டிக்கிரமத்தில் ஸ்திரீயைவிடப் புருஷன் சிரேஷ்டனென்பதற்கு அநேகசாக்ஷியங்கள் உண்டு. சகல சமயத்தாரும் தெய்வத்தை ஆண்பாலாகப் பேசுகின்றனரேயன்றி பெண்பாலாக ஒருசமயத்தாரும் பேசுகின்றதில்லை. கடவுள் முந்தி ஆணை உண்டுபண்ணினபிறகு பெண்ணை உண்டுபண்ணினதாகச் சகல மதஸ்தர்களும் நிராக்ஷேபமாக அங்கீகரிக்கின்றனர். சரீரபலம், தைரியம், பராக்கிரமம், விவேகம், அறிவு இத்தகைய சாமர்த்தியங்களில் ஸ்திரீகளைவிடப் புருஷர்கள் விசேஷித்தவர்களென்பது நிச்சந்தேகமா யிருக்கின்றது. சில ஸ்திரீகள் மேற்கூறிய சாமர்த்தியவிஷயங்களிற் சில புருஷர்களுக்கு மேற்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆயினும் அத்தகைய சாமர்த்தியமுள்ள பெண்களையும் புருஷர்களையும் எண்ணிப்பார்க்கில் புஜபலபராக்ரம், புத்தி தீக்ஷண்யம், விவேகம் இவற்றில் புருடர்க்குச் சமதையான மாதர் எங்கோ மிகச் சிலரே இருப்பர் என்பதிற் சிறிதும் சந்தேகமின்றாம். அரசர்கள், மந்திரிகள், பிரதானிகள், தளகர்த்தர்கள், படைவீரர்கள் முதலான சகல அதிகாரிகளும் மற்ற உத்தியோகஸ்தர்களும் புருஷர்களேயன்றி பெண்களல்லவே. இங்கிலீஷ் தேசமுதலிய சிலதேசங்களில் தவிர இதரதேசங்களில் பெண்கள் பட்டாபிஷேகத்திற்கு அருகரன்றென நிரஸ்கரிக்கப்படுகின்றனர், இங்கிலீஷ்தேசத்திற்கூட ராஜகுடும்பங்களில் புருஷ சந்ததியில்லாமற்போனால்மட்டும் ஸ்திரீகளுக்கு பட்டங்கட்டலாமென்ற விதியிருக்கின்றது. இவ்வாற்றால் ஸ்திரீ எவ்வளவு வாசித்தாலும் புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டியவளேயன்றி அதிக்கிரமிக்கக் காரணமின்றாம். அவ்வாறு நடவாக்கால் மாதரின் பெருமையும், கௌரவமும், மரியாதையும் குறைந்துபோமென்பது உண்மை.

கற்காத ஸ்திரீகளுக்கு கல்வியின் அருமை தெரியாதபடியால் அவர்கள் பிள்ளைகளின் படிப்பிற்கு விக்கினமாயிருக்கின்றனர். பிள்ளைகளை வாசிக்கும்

படித் தகப்பன்மாரும் உபாத்திமாரும் கண்டிக்குங்கால் அன்னோரைத் தாய்மார் கண்டித்துப் படிப்பிற்கு ஊனம் செய்கின்றனர். [புருஷனை யிழந்த ஒரு ஸ்திரீயினுடையபிள்ளை கல்வியில் அதிக முயற்சியுள்ளவனாய் தர்மபாடசாலைக்குற்சென்று வாசித்து வந்தனன் அவன் வீட்டிலும் பூகோளம், வானசாஸ்திரம் முதலிய புஸ்தகங்களை ஓயாமல் வாசித்து வந்தனன். அவன் தாய் இனி நீ வாசிக்கவேண்டாம். வாசித்துக்கொண்டேயிருந்தால் சாப்பாட்டிற்கு வந்துவிடுமா ? இனி நீ கூலிவேலைசெய் என பலதடவை சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஒருநாள் அவன் வெளியே போயிருக்கும் சமயத்தில் அப்பாமசண்டாளி பிள்ளையின்மேலுள்ள கோபத்தைப் புத்தகங்களிடத்திற்காட்ட ஆரம்பித்தனள். அவள் பூமிசாஸ்திரத்தைக்கிழித்துப் பூமியின்மேல் எறிந்துவிட்டனள். வானசாஸ்திரத்தைக் கிழித்து வானத்திற் பறக்கவிட்டனள். அக்கினிசாஸ்திரத்தைக் கிழித்து அக்கினியிற் போட்டு விட்டனள். கூட்டல், கழித்தல், பெருக்கல், தொகுத்தல் முதலிய விதிகளடங்கிய கணிதசாஸ்திரத்தைக் கிழித்துத்துண்டுகளாக்கி, அவைகளைக்கூட்டிப் பெருக்கிக் கழித்துக்குப்பைக்குக் கொடுத்துவிட்டனள். இவ்வகையாக ஒரு நிமிஷத்தில் எல்லாப் புத்தகங்களையும் கிழித்தெறிந்து தன் பிள்ளையின் படிப்பைப் பூரணம் செய்துவிட்டனள். அந்த ஸ்திரீபடியாமையினாலன்றோ தன்பிள்ளைக்குச் சத்துருவானாள்.

(தொடரும்)

E. V. குப்புசாமி முதலியார், (ராசிபுரம் தாலூகா)

---

## தற்காலப் பெண்கல்வியின் கெடுதிகள்.

ஆடவர்களைப்போலவே பெண்களும் கல்வி அறிவுடையவர்களாயிருத்தல் வேண்டும் என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். புருஷர்கள் படிக்காவிட்டாலும் பெண்கள் படித்தே தீரவேண்டுமென்றாலும் பொருந்தும். குடும்பமாகிய தேருக்குப் பெண்களே அச்சாணி. இல்லறம் பெண்களையின்றி நிகழமாட்டாது. இல்லறத்தையின்றி உலகம் நடைபெறமாட்டாது. ஆகவே, உலகம் நடைபெறுவதற்குப் பெண்களே முக்கியமானவர்கள். இங்ஙனம் பெண்கள் படியாதவர்களாயிருந்தால் இல்லறமும் அது காரணமாக நடைபெறும் உலகமும் எப்படி நடைபெறும் என்பதைத் தெரிவிக்கவேண்டியதில்லை.

உலகத்திலுள்ள எல்லா ஜாதியார்க்கும் அந்தந்த ஜாதியே அவரவருடைய தாய் எனப்படும் அந்தந்த ஜாதிக்குரிய தர்மங்களை நடத்துவதற்கும் காப்பதற்கும் ஸ்திரீகளே காரணமாக யிருக்கிறார்கள். அவர்களிடத்திலேதான் அந்தந்த ஜாதி தர்மங்கள் நிலை நிற்கின்றன. இந்துக்களாகிய நாம் விருத்தியடைய நம் ஸ்திரீகளே ஆதாரமாயிருக்கின்றனர். இல்லற தர்மத்தை ஒழுங்காக நடத்த நம் ஸ்திரீகள் இந்து ஆசார முறைப்படியாயுள்ள கடமைகளில் பயிற்றப்பட வேண்டும்.

இக்காலத்தில் மேனாட்டு நாகரீகம் எங்கும் பரவிவருகிறது. புருஷர்கள் வயிறு பிழைப்பதற்கு மேனாட்டுக் கல்வியைப் படித்து நம் பூர்வீக இந்து ஆசாரங்களை முற்றிலும் துறந்து அழிந்துபோகும்படியான நிலையில் இருக்கிறார்கள்: இந்த நிலைமையில் இருப்பவர்களாகிய புருஷர்களை ஸ்திரீகளே காப்பாற்றி நம் ஆசாரங்களை மறக்காதபடி அடிக்கடி எச்சரிக்கை செய்துவருகிறார்கள். முற்கால இந்துப்பெண்களைக் காட்டிலும் தற்காலத்திய நம் பெண்களுக்குப் பொறுப்பு அதிகம். அவர்கள் தங்கள் பொறுப்பை அறிய சரியானபடி கல்வி



கற்கவேண்டும். இந்தக்காலத்தில் கல்வி கற்கும் பெண்கள் மேனாட்டு ஆசாரங்களில் பயில்வதனால் அவர்களும் அவர்களை மணம் செய்யும் வாலிபரும் ஒன்று சேர்ந்து காற்றும் நெருப்பும் கூடினாற்போல் நம்ஜாதி தர்மத்தை அடியோடு தொலைத்துவிட இருக்கிறார்கள்.

நம் பெண்கள் கற்கவேண்டிய கல்வி எழுத வாசிக்கப் பயில்வதல்ல; ஆர்மோனியம் வீணை மீட்கப் பழகுவதல்ல; ஆடவர்களோடு கைகோர்த்துக்கொண்டு வீதிகளிலே உலாவத் திரியப்பயில்வதல்ல; வாசனைகள் பூசிக்கொண்டு முகத்தில் சுண்ணாம்பு அடித்துக்கொள்வதல்ல; தலைமயிரைக் குலைத்துக் காற்றுக்குப் பறக்கவிட்டு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்மைக் குணங்களைக் கடைகளில் விற்றுவிட்டு பரபுருஷர்களோடு சிறிதும் கூசாது சம்பாஷணை செய்யப் பழகுவதல்ல; நம் ஸ்திரீகளுக்குத் தேவையான கல்வி இந்து மதாசாரங்களைப் பாதுகாத்தற்குரிய கல்வியேயாகும். நம் தர்ம சாஸ்திரங்களைக் கற்பதும், அவைகளின்படி ஒழுகுவதும் அவசியமானதாகும். புருஷர்களையும் குழந்தைகளையும் நம்ஜாதி மதாசாரத்தில் நிறுத்தி அவர்களுக்கு எக்காலத்தும் காவலாயிருத்தற்குரிய கல்வியே அவர்களுக்குச் சிறந்த கல்வி. நம் ஸ்திரீகளுடைய இயற்கை உணர்ச்சியில் ஜாதி மதாபிமானம் ததிக்கப்பெற்று அது அவர்களுடைய பிள்ளைகளிடத்திலும் செறிந்து புருஷர்களிடத்திலும் பாய்ந்து நம்ஜாதி ஆசாரங்களை நிலை நாட்டுதற்குரியது. கணவனுடைய கருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யத் தெரியவும், குடித்தன விவகாரங்களில் சிரத்தை கொண்டு சமையற் தொழிலில் சாமர்த்தியமடைந்து பிரகாசமாக விளங்குவதே முக்கியமான கல்வியாகும். நம் ஜாதி மதாசாரத்தில் அத்தியந்த அபிமானம் பூண்டு இல்லற தர்மத்தை இனிது நடத்தப் பயிலுவதே உத்தமோத்தமமான கல்வியாகும்.

சகோதர சகோதரிகளே ! பட்டண வாசங்களிலுள்ள பாடசாலைகளுக்குப் பெண்கள் படிக்கப்போகும்போது அவர்களைக் கொஞ்சம் கவனித்துப்பார்த்தால் எந்த உத்தமமான ஸ்திரீ புருஷர்களும் மனக்கொதிப்பை யடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

பெற்றோர்கள் பெண்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்போது மேனாட்டார்களின் உடுப்பை உடுத்தி தலைமயிரை இரண்டு கன்னத்திலும் தொங்கும்படி நாடாவால் முடிச்சிட்டு, காலுக்குச் சப்பாத்திட்டு வெள்ளைக்காரப் பிள்ளைகளாக்கி விடுகின்றோம். உடுப்பு மாத்திரமா ? அவர்களுடைய உணவும் என்ன? கோழிமுட்டையும், கோழி இறைச்சியும் காப்பியும், தேநீரும், ரொட்டியும் கொடுத்து பழக்குகிறோம். பள்ளிக்கூடங்களில் அவர்கள் படிக்கும் புத்தகம் என்ன ? அந்நியதேச சரித்திரமும், அந்நிய சமய போதனைகளும், அந்நிய ஜாதிக்குரியப் பாடங்களுமாகும். நம் மூதாட்டியான ஔவைப்பிராட்டி செய்தருளிய அருமருந்தன்ன நீதிகளை அடியோடு தள்ளிவிட்டோம்.

அவர்கள் பள்ளிக்கூடங்களினின்று வீடுகளுக்கு வந்தால் சமையல் செய்யும் பக்கமே கால்வைக்கமாட்டார்கள். ஏனெனில் ஸோப்புபோட்டமுகம் புகைபட்டுப்போமாம். அவர்கள் வீடுகளில் நாற்காலி மேஜைகளிலே உட்காரப் பிரியப்படுகிறார்கள். இலையில் சாப்பிடுவது அகௌரவமென்று நினைத்து பீங்கான் அலுமீனம் தாலத்தில் சாப்பிடுகிறார்கள்.

ஆசாரம் என்பதே அவர்களுக்குத் தெரியாது. வீட்டிலுள்ள வயதானவர்கள் ஏதாவது சொன்னால் "அடிபோடி, படியாத மடைச்சி, இதுவும் படித்தவர்கள் செய்யும் காரியமா" என்று நிந்தனை செய்கிறார்கள். இவ்வாறு படித்த

பெண்கள் இல்லறம் நடத்தப்போகும்போது அவர்கள் எப்படி இல்லற தர்மம் நடத்துவார்கள்? இவர்களுக்கு வாய்க்கும் நாயகனுடைய கதி யாதாகும்? இவர்களுடைய வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளின் கோலம் யாதாகும்? நம் தாய்மார்களிடத்திலிருந்த தெய்வபக்தியில் நூற்றில் ஒரு பங்குகூட நம் சிறு பெண்களிடத்தில் இல்லையே! அவர்கள் தங்கள் தங்கள் புருஷனிடத்தில் வைத்திருந்த பக்தியில் கொஞ்சமாவது இருக்கவேண்டாமா? ஆஹா இது என்ன கோலம்.

ஸ்ரீ ஆர். ஜெயலக்ஷ்மி அம்மாள்.

குறிப்பு:—நமது சஞ்சிகையில் (நம்மாலும், விஷயதானம் புரியும் நண்பர்களாலும் வரையப்பட்டு) மாதர்கள் கவனிக்கவேண்டிய பல விஷயங்கள் அடிக்கடி பிரசுரிக்கப்படுகின்றன வென்பது யாவரு மறிந்த விஷயமே. அப்படியிருக்க மாது ஸ்ரீ ஆர். ஜெயலட்சுமியம்மாள் என்ற சகோதரியால் வரையப்பட்டு 1918ஞு செப்டம்பர்மீ வெளியான "பெண்கல்வி" என்ற சஞ்சிகையின் 299 ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த மேற்கண்ட வியாசத்தை எடுத்து நமது சஞ்சிகையில் ஏன் பிரசுரிக்க நேர்ந்ததெனின், கூறுதும்:—

நமது சகோதரியார் கூறியவாறு இப்போது கல்விகற்கும் மாதர்களில் பலர் நம் புண்ணியநாட்டு ஆசாரங்களுக்கு மாறானவற்றைக் கூறும் நூல்களை வாசிப்பதோடு அத்தகைய வழிகளிலும் பழக்கப்படுத்தப்படுகிறார்கள். அதனால் அவர்கள் மேல்நாட்டு ஆசாரப்படி நாம் கட்டுக் கடங்காது இஷ்டப்படி நடப்பது தான் நாகரீகம் என்ற விபரீதக் கருத்துடையவர்களாய், நாம் எல்லாவற்றிலும் புருடர்களுக்குச் சமானமானவர்களே, நமது ஆடவர்கள் நம்மை யடிமைகள் போல் அடக்கி யாளவே இப்பூர்வீக ஆசாரங்களைப்பற்றி போதிக்கிறார்கள் என்று கருதவும், மற்றவர்களுக்கு அப்படியே போதிக்கவும் துணிந்துவிடுகிறார்கள்.

ஆகையால் அத்தகையோர் தங்களைப்போன்ற ஸ்திரீயும், தங்கள் நாட்டிற் பிறந்த சகோதரியும், கல்வியறிவுடைய மாதர் மாணிக்கம்போன்றவருமாகிய ஒரு சகோதரியே கூறும் நற்போதனைகளை யுணர்ந்தால், அப்போதேனும் ஆடவர் கூறுவது நமது நன்மைக்கேயென்று உணர்ந்து அவ்வழியே நடந்துய்வார்கள் என்று நம்பியே மேற்கண்ட வியாசத்தை இதில் எடுத்து பிரசுரித்திருக்கிறோம்.

சகோதரியார் கூறியுள்ள விஷயங்கள் பூரணமாகவும், திருட்டாந்தங்கள் உண்மையாகவுமே யிருப்பதால் அவற்றைப்பற்றி நாம் மறுபடி யொன்றுங்கூற வேண்டியதின்றாம். ஆயினும் இதை வாசிக்கும் சகோதரிகளுக்கு நம் நாட்டின் க்ஷேமத்தைப்பற்றிய பொறுப்பு எத்தகையதென்றும், அவர்கள் அதற்குத் தக்கவாறு நடந்து கொள்கிறார்களாவென்பதும் அவர்கள் மனதிற்கே நன்றாய்ப்புலப்படவேண்டியதற்காக இரண்டொரு விஷயங்களைப்பற்றிமட்டும் சற்றுகூற விரும்புகிறோம்.

சகோதர சகோதரிகளே! நம் நாடு எப்போதும் தெய்வீகம் பொருந்திய புண்ணியபூமியென்று புகழ்பெற்றது. தேவர்களும், மெய்ஞ்ஞானிகளும் அவதரித்துக்கொண்டேயிருப்பது. மூவரும் தேவரும் அஞ்சத்தக்க சாபானுக்கிரக சக்திவாய்ந்த தெய்வீகத்தன்மை பொருந்திய பதிவிரதா சிரோமணிகள் அவதரித்துக்கொண்டிருப்பது. எப்போதும் கற்புடைய மாதர்களையுடையது. எப்போதும் மெய்ஞ்ஞான ஒளி வீசிக்கொண்டேயிருப்பது. இத்தகைய பெருமை உலகில் வேறெந்த நாட்டிற்கும் அமைந்தில்லை. நமது மாதர்க்கிருக்கும் கற்பின் புகழ்ச்சி உலகில் வேறெந்த நாட்டுமாதர்க்குமில்லை.



நமது நாட்டின் வைதீக, லௌகிக ஆசாரங்கள் (நம் சகோதரியார் கூறியதுபோல்) நம்மாதராலேயே பாதுகாக்கப்படுகின்றனவென்பது அன்னிய நாட்டாரும் அறிந்ததோருண்மை. அதற்கோர் திருட்டாந்தம் மட்டும் கூறுகிறோம்:—நமது நாட்டிற்கு வந்துள்ள அன்னிய மதஸ்தர்கள் "கம்புக்கும் களை பறித்ததுபோலும், தம்பிக்கும் பெண் பார்த்ததுபோலும்" என்ற பழமொழிபோல் கல்வியை விர்த்திசெய்யவென்று பாடசாலைகளை ஏற்படுத்தி அவற்றில் நம்மதச் சிறுவர்களுக்குத் தங்கள் மதத்தையும் போதித்து வருகிறார்களென்பது யாவருமறிந்த விஷயமே.

ஆனால் அதனால் தங்கள் கருத்து நிறைவேறுவதில்லையென்று அறிந்தார்கள். ஏனெனில் நமது ஆண்பிள்ளைகள் அன்னியபாஷையில் எவ்வளவு தேர்ச்சியடைந்தாலும், தங்கள் பாடபுத்தகங்களை எப்படி கேள்விக்குப் பதில் சொல்லும் வண்ணம் வாசிக்கிறார்களோ, அவ்வாறே அன்னியமத நூலையும் வாசிக்கிறார்களேயன்றி அதில் நம்பிக்கையும் பக்தியும் வைத்து வாசிப்பதில்லை. அவர்கள் கல்வி முடிந்துவிட்டபின் அதைக் கனவிலும் நினையார்கள். எவ்வளவு உயர்ந்த உத்தியோகஸ்தனாய்விட்டாலும் அவன் குடும்பத்திற் கட்டுப்பட்டு தன் மதாசாரப்படியே நடக்கவேண்டியவனாய்விடுகிறான். இது விஷயத்தில் நம் ஆடவர் மாதர்களின் பிரியப்படி நடக்கவேண்டியவர்களாகிறார்கள். ஆகையால் நமது மதாசாரத்திற்கும் தெய்வபக்திக்கும் நம்மாதர்கள் காவலாயிருக்கும்வரை ஆடவர் அவற்றை விடமாட்டார்கள் என்று அறிந்தே, மாதர்களுக்கே நமது மதத்தைப்போதித்தால் பிறகு சுலபமாய் ஆடவரும் திரும்புவார்களென்று கருதியே, அன்னியமதஸ்தர் நம் நாட்டில் பெண்பாடசாலைகளை வைக்கத் தொடங்கினார்கள். அதிலும் அவர்கள் கருத்து நிறைவேறாவிடினும் நேரிட்ட சில கெடுதிகளால் நம்மவர்கள் எச்சரிக்கை யடைந்துவிட்டனர்.

இவ்வாறு நமது லௌகிக மதாசாரங்களுக்குக் காவலாளிகளென்று புகழ்பெற்ற மாதரில் சிலரே, இப்போது தமது பெண்பிள்ளைகளைத் தகாத ஆசாரங்களில் பழக்குகிறார்களென்றால், அந்தோ இது எத்தகைய விபரீதச் செய்கை. நாடகங்களால் ஆடவரே அனேகர் கெட்டிருப்பதும், பெண்களில் சிலர் அச்சேர்க்கைவாசனையாலேயே பழிபெற்றதும் யாவரும் அறிந்த விஷயம். நமது பெண்களை அன்னியமதஸ்தர் பாடசாலைக்கனுப்பினால் நமது மதாசாரங்களுக்கு இடையூறு நேரிடுமென்றே இந்து பாடசாலைகளை ஏற்படுத்தி, தம்மக்களை அங்கனுப்பும் அறிவாளிகளாகிய பெற்றோர் "குளிக்கப்போய் சேறுபூசிக்கொண்டது" போல் தம்மக்களுக்கு நாடகம் கற்பிக்கவிடுகிறார்கள். மக்களை நல்வழிப்படுத்த அமர்த்தப்பட்ட இந்து உபாத்தியாயரில் சிலர் வேறு ஒருவரைக் கொண்டு பெண்களுக்குப் பாடசாலையில் நாடகம் கற்பித்து நாடகமே நடத்துகிறார்கள். அந்தோ இதுமட்டுமோ, பிறகு பெண்களைப் பகிரங்க நாடக அரங்கத்திற்கு (பிஸ்க்யுத் ஹால்) அழைத்துச்சென்று அங்கு வேடந்தரித்து நடிக்கச் செய்கிறார்கள். அந்தோ இதனால் விளையத்தக்க கொடிய தீங்குகளை நினைக்கும்போதே அறிவாளிகளின் உளம் கலங்கிப் பதைக்கும் என்பது உண்மை.

அந்தோ, இத்தகைய உபாத்திமாரால் நம்நாடு சீர்படுமோ? பெண்களுக்கு நகத்தில் வெள்ளை பூசுகிறார்கள். அன்னியநாட்டார் செய்வதைக் கண்டதே அது நம் நாட்டிற்கு அவசியமா, அதனால் நன்மையுண்டா என்பதை யோசியாமலே பின்பற்றுவது அறிவாளிகள் செய்கையாகுமா?

கற்பரசிகள் என்று புகழ்ப்பெற்ற நம்மாதர், நமது மதாசாரங்களையும் நம் முன்னோர்களாகிய மகான்களால் ஏற்படுத்தப்பட்ட தேசாசாரங்களையும் பாதுகாக்க

வேண்டிய தம் கடமைத்தொழிலைமறந்து அதற்கு மாறாகத் தாமே அவற்றின் அழிவிற்கு வழிதேடுவதாயின், அந்தோ, இவர்கள் புகழும் பெருமையும் குன்றுவதோடு ஆண்டவனுடைய தண்டனைக் காளாவார்கள் என்பது திண்ணம்.

நமது அரிய சகோதரிகளே! தயவுசெய்து இதைமறவாதீர்கள். நமது கல்வியறிவுள்ள சகோதரியார்கூறிய மேற்கண்ட வியாசத்தைப் பலதரம் கவனத்தோடு வாசித்து, நீங்கள் அதன்படி நடக்கவேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான பிரார்த்தனை. உங்கள் கீர்த்திக்குப் பங்கம்நேராது அது நிலைத்தோங்கவும், ஆண்டவன் ஆக்கினைக்குள்ளாகாது அவர் இன்னருளைப்பெறவுமே மனந்திரும்பி நமது சகோதரியார் போதனைகளின்படி நடக்கவேண்டுமாய் உங்களை வேண்டிக்கொள்கிறோம். கருணாநிதியாகிய பரம்பொருள் அருள் புரிவாராக.

ஓம் தத் ஸத்.

பத்திரிகாசிரியர்.

---

## கற்கோட்டை—நாவல்

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

அச்சமயம் காரியஸ்தர் இராணியின் செவியில் "இவளுக்குப் பைத்தியம் பைத்தியம்" என்றார். இராணி அவ்வார்த்தைகளைக் கேட்டதே அவள் கண்களில் ஒருவிதப் பிரகாச முண்டாயிற்று. அவள் தங்கம்மாள் அருகிற் சென்று குனிந்து உற்றுநோக்கி காரியஸ்தரிடம் வந்து "ஆம் பாபம், புத்தி சபலித்து விட்டது. பரிதாபம் பரிதாபம். நீர் சென்று தூர்க்காளை யிங்கனுப்பும்" என்றாள்.

காரியஸ்தர் சென்றபின் இராணி தன்னோடு தனித்திருப்பதை யறிந்தே மூதாட்டி திடுக்கிட்டு "இருகரங்களையும் கூப்பிக்கொண்டு" மகாராணி! இக்கதையை நம்பவேண்டாம். நம்பவேண்டாம். உடனே என் சகோதரனை விட்டுவிடும்படி சட்டளை பிறப்பித்துவிடும். அவன் ஒருபோதும் அப்படிச் செய்திரான். உமது இரகசியத்தை இவ்வளவு காலமாய் நான் வெளியிடாமலிருக்கிறேன் என்பதைச் சிந்தித்துப்பாரும்" என்றாள்.

இராணி—"உஸ்! உஸ்! பாபம். எழுந்திரு. எழுந்து என் சொந்த அறைக்கு வா. உன் நன்மைக்கு வேண்டிய யாவும் நான் செய்கிறேன்" என்றாள்.

மூதாட்டி கண்ணீர் விட்டுக்கொண்டே அரசியின் பின்சென்றாள். பாபம் இராணி மனப் பூர்வமாகவே கருணையோடு தனக்கு உபசார வார்த்தை கூறுகிறாளென்று நம்பினாள். இராணி அங்கு சுவரிலிருந்த ஒரு கள்ளக் கதவின் இரகசிய மறையைத் தொட்டதும் கதவு திறந்தது. உட்பக்கம் ஒரு சிறு கதவும் அதேமாதிரி திறக்கப்பட்டது. அச்சமயம் மற்றொருவழியாய் தூர்க்காள் அங்கு வந்தாள்.

தூர்க்காள் என்பவள் இராணியின் அந்தரங்க வேலைக்காரி. அவளுக்கு வயது ஐம்பதிருக்கும். ஆனால் அவள் சுமார் ஆறடி உயரமும் பலம் பொருந்திய அவயவங்களையு முடையவள். அவள் முகம் விகாரமாயும் கண்போர்க்கு பீதியை யுண்டாக்கத் தக்கதாயு மிருந்தது. அவள் தலை உரோமங்கள் முள்ளம் பன்றிபோல் சிலிர்த்துக்கொண்டிருக்கும். அவள் நீக்ரோஜாதியைச்சேர்ந்த செவிடும் ஊமையுமாகியவொருமாது. இராணி பழக்கத்தால் சமிக்கைகளால் அவள் தன்கருத்தையறியும்படிசெய்யவும், அவள் வெளியிடவிரும்புவது இன்னதென்றுதெரிந்துகொள்ளவும் கூடும். இராணி இரண்டொரு சமிக்கைகளா



லேயே அவளுக்குத் தன் கட்டளையை வெளியிட்டாள். தங்கம்மாள் கலவரமும் திகிலுமடைந்து இராணியின் முகத்தைப்பார்க்க. இராணி "ஒன்றுமில்லை. பயப்படாதே, எல்லாம் உன்னன்மைக்கே இதோ இந்தவழி என்அறைக்குச் செல்வது" என்று தான் திறந்த இரண்டாவது கதவண்டை அழைத்துச் சென்றாள்.

அச்சமயம் தூர்க்காள் தன் இரு கரங்களாலும் தங்கம்மாளைச் சேர்த்துப் பிடித்துத் தூக்கிக்கொண்டு அங்கிருந்த இன்னொரு கள்ளக்கதவைத் தன்காலால் உதைத்துத் திறந்து அங்கிருந்து மேல் நோக்கிச் செல்லும் படிகளின் வழியாய்ச் சென்றாள். அவள் தங்கம்மாளைத் தூக்கிக்கொண்டே ஒரு கரத்தால் அவள் வாயை மூடிக்கொண்டபடியால், தங்கம்மாளுக்குக் கூச்சலிடவும் முடியவில்லை. கடைசியில் மேல்மாடியி லுள்ள இரகசியமான சிறைச்சாலைபோன்ற ஒரு அறைக்கு அப்பரிதாபமான மூதாட்டி கொண்டுபோகப் பட்டாள்.

இராணி உடனே கள்ளக் கதவுகளை மூடிவிட்டு மணியடிக்கும் கயிற்றை யிழுத்ததும், இன்னொரு வேலைக்காரி வந்தாள். இராணி யவளைநோக்கி "எனக்குச் சுகக்குறைவா யிருப்பதால் டாக்டர் பராங்குசனை யுடனே யிங்கு அனுப்பு" என்று கட்டளை யிட்டாள். வேலைக்காரி அவ்வாறே யனுப்புவதாய்த் திரும்பிச் சென்றாள். இரண்டொரு நிமிடங்களில் டாக்டர் பராங்குசன் என்ற இராஜ வைத்தியர் அரசியின் சமுகத்தில் வந்து நின்று வந்தன மளித்தார்.

டாக்டர் பராங்குசன் என்பவன் அறுபது வயதுள்ளவன், சற்று மெலிந்த தேகமும் கொஞ்சம் வளைந்த முதுகு முடையவன். கபட சிந்தனையும் சுயநலத்தில் கருத்தும் உடையவன். கள்ளங்கபடமறியாதவன்போல் மேல் அந்தஸ்திலுள்ளவர்களின் கருத்தை யறிந்துகொண்டு, அதற்குத் தக்கபடி தாளமடிப்பதில் நன்றாய்ப் பழகியவன். இராணி ஒருவரைக் கொல்ல நினைத்து இவனை யழைத்து,

"இதோ இம்மனிதன் உள் வியாதியால் மிக்க வருந்துகிறான். இது நீடித்தகாலம் இவனை யிம்சித்துக் கடைசியில் கொன்றேவிடும்போ லிருக்கிறது. நீர் என்ன நினைக்கிறீர் சோதித்துப்பார்த்து கூறும்" என்றால்,

"ஆம். கொடியவியாதி, தீராதது ஆனால் பாபம் நெடுநாள் இம்சித்தே கொல்லும்" என்று கூறுவான்.

இராணி "ஐயோ பாபம், இவன் இம்மை யனுபவிப்பதைக்காண எனக்கு மிக்க மனவருத்தமா யிருக்கிறது. பாபம் எப்படியும் இறக்கப் போகிறான். இந்த இம்சையை யனுபவியாது சீக்கிரம் போய்விட்டால் உத்தம மல்லவா?" என்றால்,

பராங்குசன் ஆகா. தங்கள் கருணையே கருணை. பிறர் துன்பத்தைக் கண்டு சகிக்காத உள்ளம், இப்படிப்பட்ட சமயத்தில் அவனை நிம்மதியோடு இறக்கச் செய்வது பெரும்புண்ணியம். ஆனால் அறிவில்லாத கன்மனமுடைய பாமரர் அப்படிக் கருதமாட்டார்கள். ஆதலால் தாங்கள் செய்யும் இப்பெரிய உபகாரத்தை யாருக்கும் வெளியிடவேண்டிய அவசியமே யில்லை. இதோ ஒரு நொடியில் நான் இவனுக்கு ஒரு நோயும் தெரியாவண்ணம் செய்கிறேன் என்று கூறி அவனை ஒரே பெருந்தூக்கத்திற்கு அனுப்பிவிட்டு இராணி யளிக்கும் பெருந் தொகையைச் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்வான். டாக்டர் பராங்குசனுடைய குண விசேடம் ஒருவாறு அறியப் பட்டதால், இனி கதையைத் தொடர்ந்து செல்வாம்.

டாக்டரைக் கண்டதே இராணி அன்போடு "வாரும் உட்காரும்" என்றாள். டாக்டர் உட்கார்ந்தபின் இராணி அவனை நோக்கி, "டாக்டர்! எனக்கு

இராஜாங்க விஷயத்தில் எவ்வளவு தொல்லைகள் நேரினும் என் ஸ்தானபதேசம் அதனால் துன்பமடைகிறதில்லை யல்லவா ?" என்றான்.

டாக்டர் " ஆம் அது உண்மையே. நான் முப்பது வருடங்களாய்த் தங்களுக்கு வைத்தியரா யிருக்கும் புண்ணியம் பெற்ற அனுபவத்தால் தாங்கள் கூறுவது உண்மையென்று உறுதியாய்க் கூறுவேன் " என்றான்.

இராணி.—" ஆகையால் இப்போது உன்னை வரவழைத்தது எனக்காக வல்ல, வேறொருவருக்காகவே " என்றாள்.

டாக்டர்.—" தெரிந்துகொண்டேன் " என்றார்.

இராணி.—இவ்விஷயம் மிக்க நுட்பமான விஷயம். ஸர்தார் செல்வராயரைப் பற்றிய விஷயம் தெரியுமோ ?

டாக்டர்.—தெரியும் தெரியும், இப்போதுதான் யாவும் கேள்விப்பட்டேன்.

இராணி.—அப்படி யானால் நான் கூறுவது சுலபமாய் உனக்கு விளங்கும். செல்வராயருடைய தமக்கை தங்கம்மாள் என்பவளைப்பற்றியே நான் இப்போது கூறுவது. செல்வராயர் நெடுநாளாய் இராஜவிசுவாசம் பொருந்தி நடக்கும் பொது நலப்பிரியர். இக் குடும்பத்திற்கு இரக்கம் பாராட்ட வேண்டுமென்பது என் எண்ணம். சமீபகாலத்தில் அவர்கள் வீடு இராஜத் துரோகிகள் சந்திக்கு மிடமாகி விட்டது. நமது இராஜாங்கத்திற்கும் நமது பிராணனுக்கும் இடையூறு செய்ய சதியாலோசனைகள் நடக்கு மிடமாய்விட்டது. இம்மாது அதில் அதிகமாய்த் தலையிட் டிருக்கிறாள். இன்று நடந்த சம்பவங்களால் அவள் புத்தி சபலித்து பித்தங்கொண் டிருக்கிறாள். அவளை நமது தூர்க்காள் வசம் மேல்மாடியிலுள்ள அறையில் வைத்திருக்கிறேன். இப்போது இவள் சற்று சித்தம் தெளிவடைந்து நியாய சபைமுன் சாட்சியாய் நிறுத்தப்பட்டால், இவளிடமிருந்து வெளிவரும் சமாசாரங்களால் இவளுக்கும் இவள் குடும்ப முழுமைக்கும் அழிவு நேரிடுமென்பது திண்ணம். அவ்வாறு விட்டுவிட என்மனந் தாளவில்லை. தெரிகிறதா ?" என்றாள்.

டாக்டர்.—" மகாராணி ! தங்கள் சுபாவ குணம்போல் கருணை காட்டவே தங்களுக்கு எப்போதும் பிரியமாயிருக்கிறது. எல்லா ஜனங்களுக்கும் இத்தகைய அரசர் கிடைப்பதாயின் இம் மண்ணுலகம் விண்ணுலகாய் மாறிவிடும் " என்றான்.

இராணி.—அக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக இவள் சாக்ஷி கூறாதபடி செய்யவேண்டும். அம்மாதிரி இவளுக்கு புத்தி தெளிவடையா வண்ணம் செய்யத்தக்க மருந்து ஏதாவதிருக்கிறதா ?

டாக்டர்.—ஆகா இருக்கிறது.

இராணி.—அம்மருந்து அப்படியே தெளியாத பைத்தியத்தை யுண்டாக்கி, சமீப காலத்திற்குள் மரிக்கச் செய்யுமோ ? அப்படியாயின் ஒரு விஷயத்தில் மிக்க புண்ணியமேயாகும்.

டாக்டர்.—ஆகா அப்படியே செய்யும்.

இராணி.—என் டாக்டர் ! நான் கேட்பதற்கு உம்முடைய உண்மையான அபிப்பிராயத்தைக் கூறும். இப்போது உலக போகமனைத்தும் அனுபவித்துக் கழித்துவிட்ட இக் கிழவியை மரிக்கவிட்டு, அக்குடும்பம் முழுமையும் அழியாமல் காப்பாற்றுவது புண்ணியமா ? அல்லது நாமேன் இப்படிச் செய்யவேண்டும், நடக்கிறது நடக்கட்டும் என்று விட்டுவிட்டு, இவள்



சாக்ஷிகூறி இவள் மடிவதோடு, அக்குடும்பம் முழுதுமே யழியும்படி விட்டுவிடுவது புண்ணியமா ? கூறும் என்றாள்.

இராணிக்கு இக் கிழவி யெந்த விஷயத்தில் இடைஞ்சலா யிருக்கிறாளென்பது டாக்டருக்குத் தெரியாதேனும், எந்த காரணத்தாலோ இராணி இவள் மரணத்தைக் கோருகிறாள் என்று மட்டும் தெரிந்து கொண்டானானதால், " மகாராணியே, அப்படிக் குடும்பம் முழுதும் மடியும்படி விட்டுவிடுவது மகாபாபம். தங்கள் காருண்யம் வாய்ந்த மனம் ஒருபோதும் அப்படிச் செய்யச் சம்மதியாதென்று நான் அறிவேன். ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஒரு கிழவியை இறக்கும்படி விடுவதில் ஒரு தோஷமுமில்லை" என்றான்.

இராணி " இப்போதுதான் என் மனது சம்மதமடைந்தது. முன்னே கொஞ்சம் ஔஷதம் கொடுத்து, பித்தங்கொள்ளச் செய்து விட்டால் பிறகு இவளுக்குப் பைத்தியமென்று நீ யொரு நற்சாக்ஷி பத்திரம் கொடுத்தால் போதும். மருதூரிலுள்ள பைத்தியக்காரர் சாலைக்கு இவளைக்கொண்டு போய்விட்டால் அங்கு கருத்தாய்ப் பார்ப்பார்க ளல்லவா ?" என்றாள்.

டாக்டர், ஆகா தடையென்ன வென்றார். இராணி நீயும் பிரதிதினம் எனக்காக இவளைப்போய் பார்வையிட்டு மருந்தளித்துக் கொண்டே வந்தால் கொஞ்ச நாளையில் இறந்து போவாளல்லவா வென்றதற்கு, டாக்டர் தடையில்லையென்றார்.

இராணி.—நீர் எப்போது மருந்து கொடுக்க முடியும் ?

டாக்டர்.—இரண்டு மணி நேரத்தில் மருந்தைத் தயார்செய்து விடுவேன். ஆனால், அவள் நித்திரை செய்யும்போது கொடுப்பதே நலம்.

இராணி.—" அப்படியே செய்யும். இரவு பதினொருமணிக்கு அரண்மனையில் சத்தம் அடங்கிவிடும். நீ வருவதை யொருவரும் பார்க்கமாட்டார்கள். அவள் இருக்கும் அறைக்கு இரண்டு சாவிக ளிருக்கின்றன. ஒன்று தூர்க்காளிடம் இருக்கிறது. மற்றொன்று என்னிடமிருக்கிறது. தூர்க்காள் அந்த அறையைப் பூட்டிக்கொண்டு அடுத்த அறையாகிய தன் சயன அறையில் படுத்துக்கொண் டிருப்பாள். நீர் அவளை யெழுப்பவேண்டாம். என்னிடமிருக்கும் சாவியை யிதோ இக்கள்ளக்கதவின் பக்கத்தில் இந்த விடத்தில் வைத்துவைக்கிறேன். இனி நான் கூறவேண்டியது ஒன்று மில்லை யல்லவா," என்றாள்.

டாக்டர் " ஆகா, யாவும் தெரிந்துகொண்டேன். சரியாய் பதினொரு மணிக்கு மருந்தை யெடுத்துக்கொண்டு வருகிறேன் " என்று கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றான். அவன் வாக்காலாவது செய்கையாலாவது இராணியின் கருத்தை யறிந்தவன்போல் காட்டிக்கொள்ளவே யில்லை.

அவன் சென்றபின் இராணி தான் செய்த தந்திரமான ஏற்பாட்டை நினைத்து தனக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள். " செவிடும் ஊமையுமான தூர்க்காளுக்குத் தங்கம்மாள் என்ன கூறினும் விளங்காது. பைத்தியக்காரி யென்று அவளை பைத்தியக்காரர் சாலைக்கனுப்பிவிட்டால், அங்கு நடக்கும் கோரங்களைப் பார்க்கப்பார்க்கக் கொஞ்சநாட்களில் அவளுக்கு மெய்யாகவே பைத்திய முண்டாய்விடும். அங்கு இவள் என்ன கூறினும் யாவும் பைத்தியக்காரியின் பிதற்றலாய் மதிக்கப்படுமே யன்றி, உண்மையென்று மதிக்கப்படாது.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

காளயுக்திஸ்ரீ மாசிமீ —சாலிவாகன 1840—கலியுகாதி 5019,
பசலி 1327-28—கோல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1919ம்-ஸ்ரீ பிப்ரவரிமீ —மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரிமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | புத | திர-57-45 | புன-42-53 | சித்த 60 | புதுவர்த்தகம் செய்ய |
| 2 | 13 | வி | சதூ-56-38 | பூச-43-3 | அமி 43 சி | இராசி அனக்க |
| 3 | 14 | வெ | ○பௌர56-54 | ஆயி-44-30 | மரண 60 | கொடியாலம் உத்சவாரம்பம் |
| 4 | 15 | ச | பிர-58-18 | மக-47-7 | அ 47 சித் | திருவொற்றியூர் மகிழடிசே |
| 5 | 16 | ஞா | துதி-60-0 | பூர-50-57 | சி 47 அமி | சித்திரமெழுத [வை |
| 6 | 17 | தி | துதி-1-14 | உத்தி-55-56 | சித்த 60 | கன்றுகாலிகளை விற்க |
| 7 | 18 | செ | திரு-5-1 | அஸ்த-60-0 | சித்த 60 | 5-க்குள் மழை |
| 8 | 19 | புத | சது-9-35 | அஸ்த-1-39 | ம 2 சித் | திருவாரூர் உத்சவாரம்பம் |
| 9 | 20 | வி | பஞ்-13-51 | சித்-7-9 | சி 7 அமி | தனியநாள் |
| 10 | 21 | வெ | சஷ்-19-58 | சுவா-14-13 | சித்த 60 | |
| 11 | 22 | ச | சப்-25-3 | விசா-20-23 | சித்த 60 | |
| 12 | 23 | ஞா | அஷ்-29-21 | அனு-26-18 | மரண 60 | |
| 13 | 24 | தி | நவ-32-26 | கேட்-30-55 | சித்த 60 | |
| 14 | 25 | செ | தச-34-52 | மூல-34-32 | அ 35 சித் | |
| 15 | 26 | புத | ஏகா-35-45 | பூரா-36-53 | அமி 37 சி | |
| 16 | 27 | வி | து-34-47 | உத்தி-37-56 | சித்த 60 | |
| 17 | 28 | வெ | திர-33-39 | திரு-36-51 | ம 37 சித் | |
| 18 | 1 | ச | சது-31-1 | அவி-35-11 | சி 35 அ | |
| 19 | 2 | ஞா | ●அமா-27-30 | சத-32-2 | சித்த 60 | அமாவாசை விரதம் |
| 20 | 3 | தி | பிர-22-47 | பூரட்-31-44 | மர 32 சித் | ஜம்புகேசுவர பிரமோத்ஸவம் |
| 21 | 4 | செ | துதி-17-42 | உத்தி-28-17 | அமி 28 சி | சீமந்தம் [தம் |
| 22 | 5 | புத | திரு-12-6 | ரே-24-25 | மர 24 சித் | திருபகுடி விஜயராகவர்தீர்த் |
| 23 | 6 | வி | சது-6-14 | அசு-20-53 | அ 20 சி | 9-க்குள் மழை |
| 24 | 7 | வெ | பஞ்-0-22 சஷ்-54-12 | பர-16-15 | சித்த 60 | கிருத்திகை விரதம் |
| 25 | 8 | ச | சப்-49-18 | *கார்-12-34 | சித்த 60 | ஓமாரம்பம் செய்ய |
| 26 | 9 | ஞா | அஷ்-44-26 | ரோக-8-59 | அமிர் 60 | |
| 27 | 10 | தி | நவ-40-17 | மிரு-6-0 | அ 6 சித் | விளைந்த தானியமறுக்க |
| 28 | 11 | செ | தச-37-1 | திரு-3-52 | மர 4 சித் | கண்டியூர் கருடசேவை |
| 29 | 12 | புத | ஏகா-34-41 | புன-2-42 | சித்த 60 | விவாகம் [சேவை |
| 30 | 13 | வி | து-33-48 | பூச-2-41 | அமி 3 சி | மேலக்கோட்டை வைரமுடி. |

(1919ம்-ஸ்ரீ மார்ச்சுமீ)

| | | | |
|---|---|---|---|
| | | கேது | குரு |
| ர-சு செ | 4-கும்-புத 12-மீ-சுக் | | |
| புச | 14-மீ-செ 22-மீ-புத | | சனி |
| | ராகு | | |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | காளயுக்திஸ்ரீ மாசிமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 4 | 1919ஸ்ரீ பிப்ரவரிமீ 12உ | 8 |

## கடவுள் வணக்கம்

மாசுறி யுடுத்துமலை வனநெற் கொறித்துமுதிர்
வனசருகு வாயில்வந்தால்
வன்பசி தவிர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூலவனலைச்
சிரமள வெழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்லவென்று
சித்தசுக வபேக்ஷையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்தினா ரியாம்பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ வெலாமுடுத்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்தமின்றி
இரவுபக லேழையர்கள் சையோக மாயினோ
மெப்படி பிழைப்பதுரையாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன்றிருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே.

அத்தனைச் சிற்றம் பலவனை யென்னுயி ராகின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராதார மாகிய நின்மலனை
எத்தனை நாள்செல்லு மோமன மேகண் டடைந்துசுதற்கே.

# ஆனந்தபோதினி

காளயுக்தி௵ மாசிமீ ௧௨

## நமது விஷயம்

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபியும் கருணையங் கடலுமாகிய முழுமுதற்கடவுளின் கிருபா நோக்கத்தால் இம்மாத சஞ்சிகை நமது போதினிக்குச் சொந்தமாகத்தாபிக்கப்பட்ட, "ஆனந்த போதினி," அச்சுக்கூடத்தில் அச்சியற்றப்பட்டு வெளி வருகிறதென்பதை யறிய நமது சந்தாதாரர்களும், விஷயதானம்புரிவோருமாகிய அன்பார்ந்த நண்பர்கள் மிக்க களிப்பெய்துவார்களென்பதில் ஐயமின்றும்.

நண்பர்களே! நமது சஞ்சிகை, ஆரம்பமான இராக்ஷஸவருடம் ஆடிமீ முதல் கடந்த மாதம்வரையில் சென்னையின் கண்ணுள்ள ம-ா-ா-ஸ்ரீ P. R. இராமய்யர் அண்ட் கம்பெனியாருடைய பிரக்யாதிபெற்ற அச்சுக்கூடத்திலேயே அச்சியற்றப்பட்டு வந்தது என்ற விஷயம் யாவரும் அறிந்ததே. ஒருசஞ்சிகை புதிதாய் வெளிவரத் தொடங்கினால் கொஞ்சகாலம் கழிந்தபிறகே அதன் உருவமும் அச்சு அமைப்பு முதலியனவும் காண்போர்க்குத் திருப்திகரமான நிலைமையை யடைவதுண்டு. ஆனால் நமது சஞ்சிகையோ ஆரம்ப முதலே யாவர்களுக்கும் சந்தோஷத்தையும், தன்னிடத்து அன்பையும் உண்டாக்கத்தக்க உருவத்தோடும், அச்சு அமைப்பு முதலியவற்றோடுமே வெளிவரத் தொடங்கியது. இதுமட்டுமன்று. நடந்த கொடிய யுத்தத்தால் நேர்ந்த சொல்லொணு இடைஞ்சல்களினால்; சொந்த அச்சுக் கூடமுடையோர்கள்கூடத் தங்கள் சஞ்சிகைகளை மாதாமாதம் வெளியிடாது சிலசமயங்களில் இரண்டு மூன்றுமாதங்கள் சேர்த்து வெளியிடநேர்ந்தது. இச்சமயங்களிலும் மேற்கண்ட கம்பெனியார், தங்களுக்கு அபரிமிதமான வேலைகள் இருந்தபோதிலும், நமது போதினி ஒருமாதம்கூடத் தவிராமல் அந்தந்த மாதத்தில் வெளிவரும்படி அன்புபாராட்டி வந்தார்கள். கடவுள் கிருபையால் நமது சஞ்சிகை இவ்வளவேனும் விர்த்தியடைந்ததற்கு அவர்கள் செய்த பேருபகாரம் ஒரு காரணமாகும்.



இத்தகைய உபகாரிகள் இன்னும் அதிக கீர்த்திபெற்று நீடூழி நிலைத்தோங்க வேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியாகிய கண்ணுதற் பண்ணவனை மனதாரப்பிரார்த்திப்பதோடு, அவர்கள் செய்த பேருதவியை நாம் என்றும் மறவாது நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மாதச் சஞ்சிகை பெரியோர்கள் குறித்த சுபதினத்தில் "ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், புதிதாய்த் திறக்கப்பட்ட பிறகே அச்சிடத்தொடங்குவதால் ஒருகால் இது வெளிவரச் சற்று ஆலசியம் நேரினும், இனி மாதாரம்பத்திலேயே வந்துவிடும் என்ற நம்பிக்கையாலும் சந்தோஷத்தாலும் சந்தா நேயர்கள் இந்த ஆலசியத்தைக் கவனிக்கமாட்டார்களென்று நம்புகிறோம்.

கடவுள்தயவால் இப்போதுள்ள காகிதபஞ்சமும் கூடிய சீக்கிரத்தில் ஒழிந்துபோமாதலால் சஞ்சிகை எல்லா விஷயங்களிலும் இன்னும் அதிக திருப்தியை யளிக்கும்வண்ணம் நம்மால் கூடிய எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். ஆயினும் சந்தா நேயர்களின் அன்பும் ஆதரணையும் இன்றி யமையாதனவென்பது யாவருமுணர்ந்ததே. அதோடு சந்தா நேயர்களும், விஷயதானம் புரியும் நண்பர்களும் தாங்கள் நமது போதினியின் அபிவிர்த்திக்காக இதுகாறும் எடுத்துக்கொண்ட சிரத்தையைவிட இனி யெடுத்துக்கொள்ளும் சிரத்தையும், காட்டும் அன்புமாகிய பேருபகாரமே நல்ல பயனளித்து அவர்களுக்குப் புகழையும் புண்ணியத்தையும் உண்டாக்குமென்பதை மறவாதிருக்கவேண்டுமாய் இன்னொரு முறை கோரிக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

---

## வர்த்தகரின் கல்வி

கல்வி என்பது ஆறறிவுடைய மக்களாய்ப் பிறந்தவர், ஆணாயினும், பெண்ணாயினும், எச்சாதியாராயினும், எம்மதத்தவராயினும், எத்தொழிலைச் செய்பவராயினும், வித்தியாசமின்றி யாவருக்கும் அவசியமான ஒரு அருஞ்செல்வமென்பது அறிவாளிகளனைவரும் அறிந்த விஷயமேயாகும். கல்வியொன்றே சுலபமாய் மறுமைப் பயனை யளிக்கவல்லது. செல்வம், கல்வியின் உதவியிருந்தால்தான் மறுமைப்பயனையடைய வழி காட்டும்.

கல்வி அறிவைப்பிரகாசிக்கச்செய்கிறது. அதைக்கொண்டு அறிவாளிகள் புதிதாய்க்கண்டறியும் விஷயங்களனைத்தும் அவரவர் உள்ளத்திலிருந்தே அறியப்படுவதன்றி புத்தகங்களிலிருந்தில்லை. ஆன்றோர்கள் புதிதாய்க்கண்டறிந்து நூன்முகமாய் வெளியிட்டனவும் வெளியிடுவனவுமான விஷயங்களும், கல்விமான்கள் சாஸ்திர

ஆராய்ச்சிசெய்து புத்திநுட்பத்தால் புதிதாய்க் கண்டுபிடிக்கும் அற்புதமான விஷயங்களும் இவ்வாறு அறியப்பட்டவைகளே.

கல்வி ஜீவனத்திற்குமட்டும் உபயோகமாவதென்றெண்ணிக் கற்போர்கள் கல்வியாலாய பயனை யொருபோதுமடையமாட்டார்கள். நமது நாட்டில் பெரும்பாலார் படிக்கவும் எழுதவும் தெரிந்துகொண்டால் அதோடுகல்வி முடிந்ததென்று நினைக்கிறார்கள்.

உலகில் அற்பகல்வியைக்கொண்டும் கல்வியில்லாமலேயும் பொருள் சம்பாதிக்கக் கூடிய வழிகள் அநேகம் இருக்கின்றன. வர்த்தகம் செய்வோர், தரகுத்தொழில் செய்வோர், பலவகைப்பட்ட கைத்தொழில்கள் செய்வோர், கூலிவேலை செய்வோர், விவசாயம் புரிவோர் இவர்களெல்லாம் அவ்வழியைச் சேர்ந்தவர்களே.

மேல்நாட்டிலும் ஜப்பான் முதலிய தேசங்களிலும் இத்தகையோர்களும் ஏறக்குறைய கல்விகற்றிருப்பதால் அத்தொழில்களில் அவர்கள் மிக்கதேர்ச்சியடைந்து கீர்த்திபெறுவதோடு அதிக பொருளும் சம்பாதிக்கிறார்கள். அதனால் எல்லாவிஷயங்களிலும் மேன்மையுறுகிறார்கள். அந்தோ! நமது நாட்டிலோ அத்தகையோரனைவரும் கல்வியே தங்களுக்கு அவசியமில்லை யென்றும் தொழிலால் பொருள்சம்பாதிப்பதொன்றே உலகில் தாங்கள்செய்ய வேண்டிய வேலையென்றும் கருதுகிறார்கள். கல்வியின் பெருமையும் பயனும் இன்னவையென்றே அவர்கள் அறிவதில்லை. தங்கள் தொழிலையே கல்வியறிவோடு செய்தால் தாம் மிக்ககீர்த்தியும் அதிகபொருளும் சம்பாதிக்கலாமேயென்ற உண்மையை அவர்கள் உணர்ந்தவர்கள் அல்லர்.

நமது நாட்டில் அதிலும் தென்னாட்டில் கொஞ்சம் கல்விகற்றுவிட்டால் அவர்கள் இன்னொருவரிடத்தில் சேவகம் செய்வதையே கௌரவமாய் நினைக்கிறார்களேயன்றி மேற்கண்ட சுயாதீனமான தொழில்களைக் கௌரவமாய் நினைப்பதில்லை; அவற்றை அகௌரவத் தொழில்களாய்க் கருதுகிறார்கள். "அதமம் சேவகாவிர்த்தி," யென்பதை யவர்கள் உணர்ந்து நடப்பதில்லை.

அந்தோ! அநுபவத்தில் இவ்வாறு நடந்துகொண்டு, "நமது நாடு மற்றநாடுகளைப்போல் க்ஷேமமடையவேண்டும், மேலோங்க வேண்டும்," என்று வாய்ப்பறைமட்டும் அடித்துக்கொண்டிருந்தால் எப்போது க்ஷேமமடைவது? ஒருபோதுமில்லை.

கைத்தொழில் செய்வோரிலும் வர்த்தகர்களே நமது நாட்டில் அதிக பொருள் சம்பாதிப்பவர்கள். கைத்தொழில் செய்வோர்களுக்கு அதைக்கொண்டு தாங்களே வர்த்தகம் செய்யத்தெரியாது. ஆகையால் செய்தகூலி கிடைத்தால் போதுமென்றுசெய்த



சாமான் முதலியவற்றை அவர்கள் வர்த்தகரிடமே கொடுத்துவிட்டுக் கூலியைப் பெறவேண்டும். ஏன் இப்படி நேர்கிறதெனில் அடியோடு கல்வியில்லாக் குறையினாலேயே.

கல்விகற்கவும் பொருள்வேண்டும். அதிகவருமானம் சம்பாதிக்கும் வர்த்தகர்களே கல்வியைச் சட்டைசெய்யாதிருந்தால், கீழ்ப்பட்ட மற்றைய தொழிலாளிகள் எங்ஙனம் தங்கள் மக்களுக்குக் கல்வி கற்பிப்பார்கள். தங்கள் கையிலிருக்கும் தொழிலைக் கற்றுக்கொடுத்து அதோடு விட்டுவிடுகிறார்கள். கடைசியில் எங்காவது ஊரிலிருந்து ஒருகடிதம் வந்தால்கூட அதைவாசிக்கத் தெரியாமல் தந்தையை மகனும், மகன் தந்தையையும் நோக்கி விழித்துக்கொண்டே வீதியில்போய் நின்று யாராவது படித்தவர்கள் போகிறார்களாவென்று வழிபார்க்கிறார்கள்.

ஆகையால் இப்போது நமது நாட்டில் பொருளுடைய வர்த்தகர்கள்கூட கல்விகற்காம லிருப்பது மிக்க வெட்கக்கேடான அவமான விஷயமா யிருக்கிறது. 'இத்தனைக்கும் கல்வியறிவோடு வர்த்தகம் செய்தால் பிரக்கியாதி யடைந்து இன்னும் அதிகபொருள் சம்பாதிக்கலா,' மென்பதும், 'இப்போது நமக்கு எவ்வளவு செல்வமிருந்தும் கல்வியில்லாததால் கொஞ்சம் படித்துவிட்டு இன்னொருவருக்குக் கீழ்ப்பட்டு சொற்பசம்பளம் பெற்று ஜீவிக்கும் ஒரு 'உத்தியோகஸ்தருக்கு நாம் பயந்து பணிந்து நடக்கிறோம்; அத்தகையோர் நம்மை யலட்சியமாய் நடத்துகிறார்கள்; நாம் கல்விகற்றிருந்தால் அவர்கள் நமக்குத்தக்க மரியாதை காட்டுவதோடு நாம் அவர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டிய அவசியமிராது,' என்பதும் இவர்களுக்கு ஏறக்குறையத் தெரிந்தேயிருக்கின்றன.

இஃதன்றி கல்வியில்லாததால், இவர்கள் சரியாய்க் கணக்கு வைக்கவும் வர்த்தகத்தை யொழுங்காய் நடத்தவும் வகையின்றிக் குமாஸ்தாக்களை வைத்தாலும் அவர்கள் அவசியமான கணக்கு முதலியவை வைத்து ஒழுங்காக யாவும் நடைபெறச் செய்கிறார்களாவென்று கண்ணோக்கம் வைக்கவும் முடியாமல், வரவு இவ்வளவு செலவு இவ்வளவு இலாபம் இவ்வளவு நஷ்டம் இவ்வளவு என்று அறியவும் வழியின்றி, பலவித அநாவசியமான நஷ்டங்களுக்கும் வீண்செலவுகளுக்கும் ஆளாகிறார்கள். சரியாய்க் கணக்கு வைக்காததால் உத்தேசமாய் விதிக்கப்படும் வருமானவரி எவ்வளவு அதிகமாயினுங்கூட வயிறெரிந்து கொண்டேயாயினும் பேசாமல் கட்டிவிட நேர்கிறது.

அந்தோ! இத்தனையும் அநுபவமாய் அறிந்தும் இன்னும் நம் நாட்டுவர்த்தகர்கள் கல்விகற்று முன்னுக்குவர முயலாதிருப்பது

மிக்க அறியாமையாகும். நாம் இவ்வாறு கூறுவது சிலருக்கு ஒருகால் வருத்தத்தை யுண்டாக்கக்கூடும். ஆனால் சற்று சிந்தித்தால், நாம் கூறும் யாவும் உண்மையே யென்றும், தங்கள் நன்மையையும் நம் தாய் நாட்டின் க்ஷேமத்தையும் கோரியே அவை கூறப்பட்டன வென்றும் எளிதில் உணரலாகும். இதனால் மானக்கேடாகவு மிருக்கிற தென்பதற்கு ஒரு பிரத்தியட்ச அனுபவமான திருஷ்டாந்தமட்டும் கூறி இதைமுடித்து விடுகிறோம்.

சிலதினங்கட்குமுன் ஒரு பெரியவர்த்தகர் தம்மைச்சந்தாதாரராகச்சேர்த்துக்கொண்டு ஒருவருஷத்திற்குச் சஞ்சிகையனுப்பும்படி எழுதினார். நாம் நமது சஞ்சிகையில் வெளியிட்டுவரும் நிலையான விளம்பரத்தில் அறிவித்திருப்பதுபோல இவ்வருட ஆடிமாதமுதல் கிகழும் மார்கழிமாதம்வரை வெளியான ஆறுசஞ்சிகைகளையும் அனுப்பினோம். அதற்கு அவர்கீழ்க்கண்டபடி பதில்வரைந்தார்:—“நாம் சஞ்சிகை யனுப்பச்சொன்னால் மாதமொன்று யனுப்பாமல் மொத்தமாய் ஆறுசேர்த்து கத்தையாய் ஏன் அனுப்பினீர்கள். நான் இல்லாத சமயம் குமாஸ்தா அந்த வி. பி. யை வாங்கிவிட்டான். முன்போல் எங்களிடம் பலசரக்குகளும் அதிகமாய்ச்செலவாவதாயிருந்தால் சாமான்கள் பொட்டலங்கட்டவாவது உதவும் என்று கருதலாம். மறுபடி யுங்களுக்கே திருப்பி யனுப்பிவிடவே யிருந்தேன். ஆனால் மரியாதை யல்லவென்று பார்க்கிறேன். * *.”

அந்தோ நண்பர்களே! இது எத்தகைய துக்ககரமான விஷயம் பாருங்கள். கல்வியின் அருமையை யுணர்ந்திருந்தால் இவர் இப்படியும் எழுதுவாரோ. நமது சஞ்சிகைகள் பொட்டணங்கள் கட்டவும் இச்சமயம் உதவாது என்று இவர் கூறியது நமது மனதில் சுடர்வேல் பாய்ந்ததுபோ லிருந்தது.

ஓ! நமது நாட்டு வர்த்தக நண்பர்களே! உங்களில் கல்வியறிவுடையோரும் கல்வியருமை யறிந்தோரும், ‘இனியாவது இது விஷயத்தில் கடும்பிரயத்தனம் செய்து எல்லாவர்த்தகர்களும் தங்கள் மக்களுக்கு முன்னே நல்ல கல்விப்பயிற்சியை யளித்துப் பின்பு வர்த்தகத்திற்கு வேண்டிய கல்வியையும் அளித்துப் பிறகு வர்த்தகத்தில் பயில விடுவதற்குத் தக்க ஏற்பாட்டைச் செய்தால்தான் நமது தாய் நாடு க்ஷேமமடையும்,’ என்ற உண்மையை யுணர்ந்தொழுகும் வண்ணம் பிரார்த்திக்கிறோம்.

இப்போது நம் நாட்டு வர்த்தகர் சிமான்கள், தம்மக்களுக்குக் கொஞ்சம் எழுதப்படிக்கவும் சொற்பக் கணக்கும் மட்டும் தெரிந்தால் போதுமென்று அவர்களைக் கடையில் விட்டுவிடுகிறார்கள். இனியேனும் அவ்வாறு செய்யாமல் மேல்கண்டபடி போதுமான கல்விகற்பித்த பிறகே வர்த்தகத்தில் விடவேண்டுமென்பதே நமது



கோரிக்கை. எந்தவிஷயமும் அதற்குத்தகுந்த முயற்சியெடுத்துக் கொண்டாலன்றி ஒருபோதும் நிறைவேறாது. ஆகையால் இதில் கவனத்தைச்செலுத்தி நம் தாய்நாடு மேலோங்கும் வண்ணம் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். கருணை நிதியாகிய ஆண்டவன் அருள் புரிவானாக.

ஓம் தத் ஸத்.

---

## நித்தியவிதி—போஜனம்

(252-ம் பக்கத் தொடர்ச்சி)

“யோபந்த நவதக்லேசாந் ப்ராணிநாந் நசிகீர்ஷதி
ஸஸர்வஸ்ய ஹிதப்ரேப்ஸுஃ ஸுகமத்யந்த முச்நதே”

எவன் ஜந்துக்களைக் கட்டாமலும், கொல்லாமலும், வருத்தப்படுத்தாமலு மிருக்கிறானோ அவன் சகலத்துக்கும் மித்திரனாய் எல்லாச் சுபங்களையு மனுபவிக்கிறான்.

“நபக்ஷயதியோமாம் ஸம்விதிம் ஹித்வாபிசாசவத்
ஸலோகேப்ரியதாம்யாதிவ்யாபிச்ச நபீட்யதே”

பிசாசைப்போல எவன் விதியில்லாமல் மாமிசத்தைப் புசியாமலிருக்கிறானோ அவன் உலகத்தில் எல்லாருக்கும் பிரியனாயும் நோயற்றவனாயும் ஜீவிப்பான்.

“அநுமந்தா விசஸிதா நிஹந்தாக்ரய விக்ரயீ
ஸம்ஸ்கர்த்தா சோபஹர்த்தாச பாதகச்சேதிகாதகஃ!”

பிராணியைக் கொல்ல உத்தரவு செய்கிறவன், அதைச் செய்கிறவன், மாமிசத்தை யறுத்தெடுக்கிறவன், அதை விற்கிறவன், அதை வாங்குகிறவன், அதைச் சமைக்கிறவன், பரிமாறுகிறவன், புசிக்கிறவன் இவர்களெல்லாரும் காதகர்கள் எனப்படுவார்கள்.

“ஸ்வமாம்ஸம் பரமாம்ஸேநயோவர்த்த யிதுமிச்சதி
ஸுநப்யர்சய பித்ருந்தேவாம் ஸ்ததோந்யோ நாஸ்த்யபுண்யக்ருத்”

எவன் யாகம், சிரார்த்தம் இவைகளிலன்றி மற்றொரு மாமிசத்தினால் தன் சரீரத்தைப் பருக்கச் செய்கிறானோ அவனைவிட மஹாபாபி உலகத்தில் வேறொருவரும் கிடையாது.

“வர்ஷேவர்ஷே சமேதேநயோயஜே தசதம்ஸமாஃ
மாம்ஸாநிச நகாதேத்யஸ்தயோ: புண்யபலம்ஸமம்”

நூறுவருடம் விடாமல் அசுவமேதயாகம் செய்கிறவனுக்கும், சாகிறவரையில் மாமிசம் புசியாமலிருக்கிறவனுக்கும் புண்ணியபலம் ஸமானமாயிருக்கும்.

“பலமூலா சனைர்மேத்யைர் முன்யந்தானாஞ்ச போஜனைஃ
நதத்பலமவாப்நோதி யந்மாம்ஸ பரிவர்ஜநாத்”

மாமிசத்தை விலக்கி யிருக்கிறவன் அடைகிற புண்ணியத்தை, வனத்திலிருந்து கந்தமூல பலங்களைப் புசிக்கிற முனிவரும் அடையமாட்டார்கள்.

"நமாம்ஸபட்சணே தோஷோ நமத்யே நமைதுனே
ப்ரவ்ருத்தி ரேஷாபூதாநாம் நிவ்ருத்திஸ்துமஹாபலா"

விதி விலக்கில்லாமல் மாமிசத்தைப் புசிப்பதும், மதுவை உண்பதும், ஸ்திரீசங்கமம் (பரஸ்திரீ கமனம்) செய்வதும், தோஷமாகாதென்று பிரவிருத்தி சாஸ்திரம் (சிற்றின்பத்தையே பெரிதெனக் கூறும் லௌகிக சாஸ்திரம்) கூறுகின்றது. நிவிர்த்தி (மோட்ச மார்க்கத்தைக் கூறும்) சாஸ்திரம் மாமிசபோஜனம் கூடாதென்று மறுக்கின்றது. நிவிர்த்தி சாஸ்திரம் கூறுவதே மஹா பலனை யளிப்பதாம்.

இவ்வாறு சகல ஸ்மிருதிகளுக்கும் மூலமாயுள்ள மநு ஸ்மிருதி கூறுகின்றது. இதனைக் கூர்ந்துணரும் பேரறிஞர், ஸ்மிருதிகள் மாமிச போஜனத்தை விதித்திருக்கின்றதென்று பூர்வ பட்சிகள் கூறும் வசனம் எம்மட்டில் பயன்படுமென்பதைக் கண்டறியாமற் போகார்கள். அன்றியும் புழு பூச்சிகளையும், காக்கை முதலிய பட்சிகளையும், மான் ஆடு முதலிய மிருகங்களையும் கொன்றவனுக்கு அந்தப் பிராணிகளுக்குத் தக்கவாறு பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருப்பதைப் பாராசாஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் மூன்றாவது அத்தியாயத்தில் மலினீகரண சங்கலீகரண பிராயச்சித்தங்களில் விரிவாய்க் காணலாம். ஆதலால் ஆஸ்திகர்கள் எவ்வகையிலும் ஜீவ இம்சை செய்யப்படாதென்பதே சாஸ்திரங்களின் கருத்து. இதுவே மோட்சாபேட்சை யுள்ளவர்களால் அனுஷ்டிக்கத்தக்கது. மற்றது (பிரவிர்த்தி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது) நாஸ்திகர்போன்றவர்களுக்கே தக்கது. புராணங்களிலும் இது விவரிக்கப்பட்டது. புராணங்கள் அநேகமாதலால் அவற்றை யெடுத்தெழுதுவது அசாத்தியமாம். வேத புராணங்களின் சாராம்சமாகிய ஸ்ரீ மஹா பாரதத்தில் மாமிசபோஜனங்களுக்காகச் சொல்லப்பட்டவைகளில் சிலவற்றை யெடுத்துக் காட்டுவாம்.

பிருகஸ்பதியை நோக்கி யுதிஷ்டிரர், 'சிறந்த தருமம் எது?' என்று கேட்டார். பிருகஸ்பதி, "வித்வான்! கொல்லாமையாகிய தருமத்தையே செய்யவேண்டும். தன்னை இம்சிக்காமலிருக்கிற ஜந்துக்களைக் கொன்று புசித்து சுகமடைய விரும்புகிறவன் மறுமையில் சுகத்தை அடையமாட்டான். தனக்கு எது விரோதமாய்த் தோன்றுகிறதோ அதைப் பிறருக்குச் செய்யலாகாது. தன் சுகத்தை யுத்தேசித்துப் பிற ஜந்துக்களை இம்சிக்காமலிருப்பதை விட மேலான தர்மம் ஒன்றும் கிடையாது. இது தான் சுருக்கமான தர்மம்" என்று கூறி மறைந்துபோனார்.

பீஷ்மர், "குழந்தாய்! யுதிஷ்டிரா! அஹிம்ஸையே சிறந்த தர்மம். அஹிம்ஸை நாலுவகை. அவையாவன: கொல்ல நினையாமை, சொல்லாமை, கொல்லாமை, கொன்றதைத் தின்னாமை என்பனவாம். பிற ஜந்துவின் மாமிசம் தன் புத்திரனுடைய மாமிசம் போன்றதே யென்று தெரிந்துகொண்டிருந்தும், ஆசையினால் புத்திகெட்டு மாமிசம் புசிக்கிறவன் நராதமனாவான். ஜீவனைக் கொன்று தின்பவன் தன் சுவாதீனமில்லாமலே பாப ஜன்மங்களையே எடுப்பான். பிறருடைய தன தானியங்களை அபகரிப்பவரும் மாமிசத்தை மெச்சுகிறவர்களும் சொர்க்கத்தினின்று தள்ளிவிடப்படுவார்கள். மாமிசத்தைப் புகழ்ந்து பேசுவதும் ஜீவ இம்சைக்குச் சமானமாகும். இந்தச் சரீரம் கடைசியில் நீருக்கப்படக்கூடியது. இயற்கையில் மலமும் புழுக்களும் நிறைந்திருப்பது. அநித்தியமானது. இப்படிப்பட்ட சரீரத்தைப் பிற ஜந்துவின் மாமிசத்தினால் போஷிப்பது தகாது. சிஷ்டர்களாகிய பலர் தமது சரீரத்தைத் தத்தம் செய்து பிற ஜந்துக்களைக் காப்பாற்றி யிருக்கிறார்கள். ஆதலால் கொல்லாமையே சிறந்த தருமம்."



யுதிஷ்டிரர்.—"பிதாமகரே! மாமிசத்தினால் சிராத்தம் செய்யலாமென்று முன் சொன்னீரே! கொல்லாமல் மாமிசம் எப்படிக் கிடைக்கும்? இது முரணாகிறதே; இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யவேண்டும்; இந்தச் சிறந்த தர்மத்தை நான் அனுசரிக்க விரும்புகிறேன்," என்றார்.

பீஷ்மர்:—அழகையும், தீர்க்காயுளையும், புத்தியையும், தைரியத்தையும், பலத்தையும், ஞாபக சக்தியையும் அடைய விரும்புகிற மனிதன் மாமிச பட்சணத்தை விட்டுவிட வேண்டும். மாதந்தோறும் அசுவமேத யாகம் செய்வதும் மாமிச பட்சணத்தை விடுவதும் சரியாகும். மாமிசந் தின்னாமலும், ஒன்றையும் கொல்லாமலும், கொல்விக்காமலு மிருப்பவன் சகல பிராணிகளுக்கும் அன்பனாகிறான்; எல்லாப் பிராணிகளாலும் வெல்லப்படாதவனாகிறான்; சாதுக்களால் கௌரவிக்கப் படுகிறான். மது மாமிசத்தை விட்டவன் சகல தர்மங்களையும், யாகங்களையும், தவங்களையும் செய்தவனாகிறான். ஒரு காரணம்பற்றிப் புசிக்க நேர்ந்தாலும் பிறகு கடுமையான தவம் புரியவேண்டும். சகல பிராணிகளுக்கும் அபயம் கொடுப்பதாகிய இந்தத் தர்மத்தை அனுசரிப்பது எல்லாவற்றிலும் மேலானது. தன் உயிர் தனக்குப் பிரியமா யிருக்கிறதுபோலவே எல்லாப் பிராணிகளுக்கும் இருக்கும். புத்தியும் பரிசுத்த மனசு முள்ளவர்கள் தம்மைப்போலவே மற்ற ஜீவன்கள் எல்லாவற்றையும் கருதவேண்டும். எறியப்பட்ட கழியினால் புல் அசையும்போதும் அதனால் பாபம் உண்டாகிறது என்றால், மற்ற பிராணிகளுக்குச் சொல்லவேண்டுமா? ஒரு தீங்கும் செய்யாத பிராணிகளுக்கு வியாதி யில்லாமலிருக்கும்போதே மாமிசம் தின்பவர்களால் மரணபயம் நேரிடுகிறதை நினைக்கும்போது சாதுக்களுக்குத் துக்கம் அதிகமாய் உண்டாகும். மாமிசம் விடுவது தர்மத்திற்குக் காரணம்; கொல்லாமையே சிறந்த தர்மம்; கொல்லாமையே சிறந்த தவம்; கொல்லாமையே சிறந்த சத்தியம். பிராணிகளைக் கொல்வதனாலேயே மாமிசம் உண்டாகிறது; வேறு வகையாலுண்டாவதில்லை. தின்பவனில்லாவிடில் கொல்பவனில்லை; கொல்கிறவன் சாப்பிடுகிறவனுக்காகவே அதைக் கொல்கிறான்; சாப்பிடுகிறவன் காரணமாகவே மிருக பட்சிகள் இம்சிக்கப் படுகின்றன. மாமிசபட்சணம் செய்வது நீதியல்லவென்று கருதினால் அப்போது இந்தக் கொலைபாதகமும் ஒழியும். ஜீவ இம்சை செய்கிறவர்கள் குறைந்த ஆயுசுள்ளவர்களாகவே ஜனிப்பார்கள். ஆகையால் தன் சுகத்தைக் கருதுகிறவன் மாமிச போஜனத்தை விடவேண்டும். இப்படிச் செய்வதனால் அது தனம், புகழ், ஆயுசு, சொர்க்கம் இவைகளைக் கொடுக்கும். கொல்கிறவனுக்கும் தின்னுகிறவனுக்கும் பாபம் சமானமாகவே யிருக்கும். விலைக்கு வாங்குகிறவன் தன் தனத்தினால் கொல்கிறவனாகிறான். சாப்பிடுகிறவன் புசிப்பதனால் கொல்கிறான். கொல்கிறவன் கட்டி அடித்துக்கொல்கிறான். கொலை யிப்படி மூவகையாக இருக்கிறது. ஜீவ இம்சை செய்யாதவன் மறுமையில் சகல சுகங்களை

யும் அனுபவிப்பான். ஆதலால் கோதானம், பூதானம், சொர்ணதானம் எல்லாவற்றையும் விடக் கொல்லாமையே சிறந்த தர்மமாம்.

இனி யாகத்திலும் சிராத்தத்திலும் மாமிச பட்சணம் செய்யுலாமென்று நூல்களில் கூறப்படுகிறது. அது தனக்கென்று கொல்லப்படாமல் சர்வத்துக்கும் கர்த்தனாகிய ஈசுவரனைக் குறித்துச் செய்யப்படுகிறபடியால் அது பாபம் ஆவதில்லை. சகல பிராணிகளுக்கும் உடையவனாகிய ஈசுவரனை, அவனுடைய சொத்தைக்கொண்டு ஆராதிப்பது குற்றப்படுவதில்லை. அப்படியின்றி மாமிசம் தின்னவேண்டுமென்கிற விருப்பத்துடன் யாகத்திலும் சிராத்தத்திலும் பிராணிகளைக் கொல்வது பாபமேயாம். அவன் நரகத்தையே அடைவான். மாமிசத்தைப் புசித்துக்கொண்டிருப்பவனும் இந்தத் தர்மத்தை யறிந்து மாமிசத்தை விட்டுவிடுவானானால் அதுவும் சிறந்த புண்ணியமாகும். ஏனென்றால் அவன் அப்பாவத்தினின்றும் விடுபட்டான். பிராணிகளைக்கொண்டு வருகிறவன், அதையேற்றுக்கொள்கிறவன், கொல்கிறவன், வாங்குகிறவன், விற்கிறவன், சமைக்கிறவன், புசிக்கிறவன் இவர்கள் எல்லாரும் பாவிகளே. பிரவிர்த்தி தர்மம், நிவிர்த்தி தர்மம் என்று இருவகைத் தர்மங்கள் சொல்லப்படுகின்றன. பிரவிர்த்தி உலகவாழ்க்கைக்குரிய தர்மம்; நிவிர்த்தி தர்மம் மோட்சத்துக் குரியது. பிரவிருத்தி மார்க்கத்தை அனுசரிப்பவர்களுக்கே இப்போது சொல்லிய தர்மம். நிவிர்த்தி மார்க்கத்தை அனுசரிப்பவர்களுக்கு எந்த வகையிலும் ஜீவ இம்சை ஆகாது. முந்திய கற்பங்களில் அன்னத்தையே பசுவாகச்செய்து யாகம்செய்து வந்தார்கள். அகஸ்திய மஹாரிஷி எல்லாத் தேவர்களையும் உத்தேசித்துப் பசுக்களைப் புரோக்ஷணம்செய்து யாகத்தில் கொல்லாமல் விட்டுவிட்டார். இப்படிச் செய்வதனால் தேவ பிதிர் காரியங்கள் கெட்டுப்போவதில்லை. மது பர்க்கத்திலும் பசுவையேற்பவன் அதைக் கொல்லாமல் விடுகிறதற்குரிய மந்திரங்கள் கேட்கப்படுகின்றன. ஆதலால் மாமிச போஜனத்தை விட்டுவிடுவதே சிறந்த தர்மம். கொல்லாமையே தர்மத்துக்கு இலக்கணமாகும். இந்தத் தருமத்தைச் செய்கிறவனும் பிறருக்குச் சொல்கிறவனும் துராசாரமுள்ளவர்களா யிருந்தாலும் நரகத்தை அடையமாட்டார்கள். அவர்கள் சொர்க்கத்தில் வசிப்பார்கள். ஆதலால் தன்னை யிரட்சித்துக்கொள்ள விரும்புகிறவன் நிவிர்த்தி மார்க்கத்தை யனுசரித்து ஜீவ இம்சை செய்வதை விட்டுவிடவேண்டும்.

பூமியைப் பரிபாலிக்கிற அரசன் மனிதர்களையும் பயிர்களையும் அழிக்கிற மிருகபட்சிகளைக் கொல்லவேண்டும். கொல்லாவிட்டால் பிரஜைகளைப் பரிபாலிக்க முடியாது. ஆதலால் வேட்டையாடுகிறது அவனுக்குத் தர்மமாக விதிக்கப்பட்டது. அவ்வேட்டையினால் சம்பாதிக்கப்பட்ட மாமிசத்தைப் புசிப்பதனால் அவனுக்குத்தோஷம் உண்டாகாது. தன்சுகத்தைக்கருதிக் கொல்வானானால் அது பாவமேயாம். ஏனென்றால் வேட்டையும் யுத்தம்போல்வதே. மிருகங்களை யெதிர்த்துக் கொல்வதனால் பிராணனுக்கே ஆபத்துண்டு.

(இன்னும் வரும்)

எஸ். சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

---



## மானம்.

1. உலகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்கள் செய்யவேண்டிய கடமைகள் பலவுள. எனினும் ஒவ்வொருவரும் தம் தம்மா லியன்ற அளவு நற்குண நல்லொழுக்கத்தில் ஒழுகி நடக்கமுயலவேண்டும். அந்நற்குண நற்செய்கைகளில் சிறந்தது மானம். மானம்: நன்மானம், அவமானம் என இரண்டுவகைப்படும். நன்மானமாவது: பிறமனிதருடைய ஏசல், தூற்றல், இகழ்ந்துபேசல் முதலியவைபோன்ற அவச்சொற்களுக்குப் பயந்து அவரவர்களுடைய நிலைமையில் ஒழுங்காக நிற்றலாம். அங்ஙனமின்றிப் பிறமனிதருடைய அவச்சொற்களை அசட்டைசெய்து பல இழிவான செய்கைகள் செய்தலுக்கு அவமானமென்று பெயர். இதனுடைய சக்திகள் ஆரம்பத்தில் நன்மையாகத் தோன்றினாலும் முடிவில் தீமையைத் தேடிக்கொடுக்கும். இன்னும் இது மனிதனுடைய மதிப்பை இழக்கச்செய்து அவமதிப்பைத் தேடிக்கண்டுபிடித்துக் கையின்மேல் பலனாகக் கொடுக்கிறது. நற்குணமுடைய பெரியோர்கள் முகத்தில் விழிக்கவொட்டாமல் தடுத்து அன்னவர்களின் வெறுப்பையும் பகையையும் தேடிக் கொடுக்கிறது. நற்குணத்தை வேரோடு நீக்கித் தீக்குணத்தை விர்த்திசெய்கிறது. இஃது இப்படியே இருக்கட்டும். மானத்தைக் கவனிப்போம்: இஃது அவமானத்திற்கு முற்றிலும் சத்ருவாயிருக்கிறது. சூரியனைக் கண்டால் பனியானது எவ்விதம் சென்று ஒளிந்துகொள்ளுமோ அவ்விதமாகவே மானமுள்ளவர்களிடம் அவமானம் கிட்ட அணுகாமல் அவர்களைக் கண்டமாத்திரத்தில் ஓடி ஒளிந்துகொள்ளுகிறது.

மானம் என்றைக்கும் நற்புகழையும் நற்கியாதியையும் சகல சம்பத்தையும், ஒருவனுக்குமட்டுமே யுண்டாக்காமல் அன்னவன் உதித்துவந்த குலத்திற்கும் சேர்த்து உண்டாக்குகின்றது. இது கெட்ட செய்கையினின்று ஒருவனைத் தடுத்து நல்வழிப் படுத்துகின்றது. யாவரும் புகழ்ந்து பேசக்கூடிய கீர்த்தியை இப்பூமியெங்கும் நிலை நிறுத்துவதோடுகூட அந்நற்கீர்த்தியை உதாரணமாகக் கொண்டு பல மனிதரையும் நடக்கச் செய்கிறது. ஆலவிருக்ஷத்தின் விதையானது கடுகிலும் சிறியதா யிருந்தாலும் அதினின்று புறப்படும் விருக்ஷம் எத்தனையோ பெரியதா யிருக்கிறது. அதுபோன்று இம்மானத்திற்குச் செய்யக்கூடிய சக்திகள் வெளித்தோற்றத்திற்கு மிகக் கொஞ்சமா யிருப்பினும் அவற்றின் மகிமைக்கு அளவே கிடையாது.

2. மனிதர்கள் எவ்விதக் குணத்தையும் அப்பியாசிக்க பிரியப்படுமுன் அதனால் உண்டாகும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, பின்பு அது நன்மையை விளைக்கக்கூடியதாயின் கைக்கொள்ளவும், தீமையை விளைக்கக்கூடியதாயின் விலக்கவும் வேண்டும். நன்மையைத் தரத்தக்கவைகளில் இம்மானம் ஒன்றென்பதும், தீமையைத் தரத்தக்கவைகளில் அவமானமொன்றென்பதும் யாவருக்கும் தெரிந்தவையே. அந்நன்மையான மானத்தை ஒரே நாளில் அப்பியாசத்திற்குக் கொண்டுவர முடியாவிட்டாலும் நாளடைவில் சிறிது சிறிதாகக் கொண்டுவந்து விடலாம். அப்படிச் செய்வதற்கு முக்கியமாய் வேண்டியவை விடா முயற்சியும் வைராக்கியமுமாம். இஃது உலகிலிருக்கும் தோட்டி முதல் தொண்டமான் வரையிலுள்ள சகல ஜாதி

ஆண் பெண் இருவகுப்பாருக்கும் மிகவும் உரியது. இதைக் கைப்பற்றி நடக்க யாதொருவிதமான பொருளும் சிரமமும் வேண்டியதில்லை யாகையால், யாவரும் இஃதை எளிதில் கைப்பற்றிக் கொள்ளலாம். இதையடையவேண்டுமென்ற பிரியம் ஒன்றுமட்டும் கொண்டால் போதும்.

3. காசிராஜன் பிரியபத்தினியாகிய குலசேகரி, (நல்லதங்காள்) தன்னுடைய நாத்தினார் அலங்காரி செப்பிய கடூரமான மொழிகளைச் சகிக்கக் கூடாமையால் இனிமேல் அவள் வீட்டிலிருப்பதும் அவமானமென்று எண்ணித் தன் ஏழுமக்களுடன் கானகஞ்சென்று கிணற்றில் வீழ்ந்து இறந்தனள். மானத்தைப் பெரிதாக மதித்தல்லவா அவள் உயிரிழந்தாள். அவள் இறந்ததின் பலன் என்னவென்பது யாவருமறிந்ததே.

ஸ்ரீராமபிரான் கேவலமான வண்ணாரப்பயல் சொன்ன அவமொழிகளைக் கேள்விப்பட்டமாத்திரத்தில் ஜானகியைக் காட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வரும்படி இலட்சுமணரிடம் சொன்னது எதன்நிமித்தம்? மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றல்லவா? முன்னாள் பாஞ்சாலியானவள் மானத்தைப் பெரிதாக மதித்து அதனை எவ்விதத் துன்பம் வந்துற்றபோதுங்கூடக் கைவிடப் படாதென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு வந்ததினால் துற்சாதனன் சபையில் துகிலுரியும்போது அன்னவளைக் கடவுள் அவமானத்தினின்று காப்பாற்றவில்லையா? இதுபோலவே எத்தனையோகோடி ராஜஸ்திரீகளும் ராஜாக்களும் உயிரை ஒரு பொருட்டாகமதியாமல் மானத்தை மட்டும் முற்றிலும் பெரிதாக நினைத்து எவ்வளவோ அரிய பெரிய காரியங்களைச் செய்திருக்கிறதை நாமனைவரும் புராணம், கதை முதலியவைகளில் படித்திருக்கின்றோம். கேவலம் மனிதனைக் காட்டிலும் கீழான அறிவையுடையதும், அற்ப ஜீவ ஜந்துக்களில் ஒன்றுமாகிய கவரிமானுமல்லவோ தன்னிடத்திலுள்ள மயிர்க் குஞ்சங்களில் ஒரு சிறுமயிர் நீங்கினும் அந்த அற்ப அவமானத்தைச் சகிக்கக் கூடாமல் மானத்தைப் பெரிதாக மதித்து அந்த இடத்திலேயே மரிக்கின்றது. ஆதலால் முன்னோர்களும் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கின்றார்கள்:—

"மானமுள்ளோர்க டன்னோர் மயிரறி னுயிர்வாழாத
கானுறு கவரிமான்போற் கமை பெறு புகழே பூண்பார்
மானமொன்றில்லார் தாமு மழுங்கலாய்ச் சழுங்கலாகி
யீனமாங் கழுதைக் கொப்பா யிருப்பரென் றுரைக்கலாமே."

(விவேக சிந்தாமணி)

இஃதிங்ஙனமிருப்ப இவ்வுலகின்கண் உத்தம ஜென்மமாகியதும், பஞ்ச அறிவோடும் பகுத்தறிவுடையதுமாகிய மானிட ஜென்மங்கள் மட்டும் கேவலமான தொழிலும், செய்கையும், பழக்கமும் செய்வது தகாத காரியங்கள் அல்லவா?

4. கண்களை, இமைகளானவை அவற்றிற்கு யாதொரு தீங்கும் சம்பவிக்காமல் எப்படிக் காப்பாற்றுகின்றனவோ அவ்விதமாக நாமும் கண்ணிற்கு ஒப்பான மானத்தை எவ்விதத்திலும் வழுவ விடாமல் பரிந்து காக்கவேண்டும். மேலும் நாம் நம்முடைய உடம்பை நல்ல துணிமணிகளாலும் நேர்த்தியான விலையுயர்ந்த ஆபரணங்களாலும் அழகு செய்வதும், சில சமயங்களில் அவற்றிற்கு யாதொரு இடையூறும் நேராவண்ணம் கவசமிட்டுக் காப்பதும்போலவே, உடலைக் காட்டிலும் அருமையான உயிரை



மானாபரணங்களாலும், அவ்வுயிர் உடல் மூலமாய் உதித்துவந்த குலத்தை மானக் கவசத்தாலும் பாதுகாக்கவேண்டும். உலகத்தில் யாவராலும் அதிக பிரியமாக விரும்பப்படுவது உயிர்; அவ்வுயிரோ சதா நிலைத்திராமல் உதித்து உதித்து அழிவதா யிருக்கிறது. ஆனால் ஒருவனால் அடையப் பட்ட கீர்த்தியானது அன்னவனுடைய உடலும் உயிரும் அழிந்து போனாலுங்கூட தான் அழியாமல் பூமியுள்ளமட்டும் எப்பொழுதும் நிலைத்திருக்கிறது. இது யாவருக்கும் தெரிந்ததாகையால் அழியு முயிரைக் காட்டிலும் அவ்வுயிரால் விரும்பப்பட்ட கீர்த்திக்குக்காரணமாகிய மானத்தையே முக்கியமாய் விரும்பி நேசிக்கவேண்டியது நம்மெல்லோருடைய அதி முக்கிய கடமை.

அப்படிக்கின்றி நாம் அம்மானத்தினின்று விலகி அவமானத்தைக் கைக்கொண்டால் துன்பத்திற்கு ஆளாவோம் என்பது நிச்சயம். உதாரணமாகப் பாருங்கள்: இப்பூவுலகின்கண் வாழும் மானிடர்களெல்லாராலேயும், கேவலமாயும் அசுசியாகவும் கருதப்படுவது மயிர்; அம்மயிரானது நாம் உட்கொள்ளும் உணவில் இருந்தால் நமக்கு அஃது அருவருப்பாயிருக்கிறது; அதை வீட்டுவாசலில் இருந்தாலுங்கூட அப்புறம் குப்பை முதலிய விடங்களுக்குக் காலாலேயும், கொம்பு தடி முதயவைகளாலேயும் தள்ளுகின்றோம். அப்படியெல்லாம் இருக்கப்பட்ட மயிரானது மனிதருக்கு மிகவும் சிரேஷ்டமான சிரசில் இருந்துவிட்டாலோ அஃதை எத்தனை பேர், தூசிமுதலியவைகள் நீக்குபவரும், வாசனைத் தைலமாட்டுபவரும், புஷ்பம் நகை முதலியவைகளால் அலங்கரிப்பவருமாய்விடுகின்றனர். இவ்வளவு மேன்மையும் சிறப்பும் மரியாதையும் அதற்கு எதனால் உண்டாயிற்று? அஃதிருக்க வேண்டிய நிலைமையி லிருந்ததினாலல்லவா? ஆகையால் உயிருள்ளவஸ்துவாயினும் உயிரில்லா வஸ்துவாயினும் அஃதஃதிருக்கவேண்டிய நிலையில் இருக்கவேண்டியது. அப்படிக்கின்றி யாவரேனும் தாம் அநுசரித்து நடக்கவேண்டியமான ஒழுக்கத்தினின்று விலகிவிட்டால் அவரை யாவரும் மிக்க கேவலமாகக் கருதுவார்கள்.

5. உலகத்தில் மனிதர்களுக்குக் குறைகள் பலவுள. சிலர் உண்ண உணவின்றியும், வேறு சிலர் உடுக்க ஆடையின்றியும், மற்றுஞ் சிலர் பொருள், கல்வியில்லாமலும் வருந்துகின்றனர். அக்குறைகள் கடவுளுடைய பாத பத்மங்களை அடைந்தாலொழிய இலகுவில் நீங்காது. அப்படிக் கடவுளின் பாதாரவிந்தத்தை அடைய வழிதெரிந்து கொள்ளாதிருப்பது முக்கிய குறை. அக்குறையை நமக்கு விளக்கிக் காட்ட இம்மானம்போன்ற அநேக மார்க்கங்கள் இருந்தும் நாம் அவைகளை ஆராய்ந்தறியாம லிருப்பது நமது குறை. அக்குறையை விளக்கிக் காட்டுவதெதுவெனின், இப்பொழுது உலகெங்கும் பிரசித்தி பெற்றுவிளங்கும், "ஆனந்தபோதினி" என்பதாம். இது லௌகீக வைதீக விஷயங்களையும், இன்னும் முக்கியமாய் வேண்டிய ஒழுக்க ஆசாரங்களையும் நன்கு விளக்கிப்போதிக்கின்றமையால் இதை வாசித்து, இதன்படி நடந்தால் நாம் நற்கதியடைவோமென்பது உண்மை.

6. ஆகையால், சகோதர சகோதரிகளே! நாம் மானத்தை உயிரினும் மேலாகக் கருதல்வேண்டும். நெருப்புத் தழலைத் தொட்டால் அஃது எப்படிச் சுட்டுவிடுமென்று பயப்படுகின்றோமோ அம்மாதிரி அவமானத்திற்கஞ்சி, அதற்கு விரோதியான மானத்தை எவ்வகைத் துன்பம் வந்தாலும்

கைவிடாமல் காப்பாற்றவும், "சிறந்த மானஸ்தன்," என்று பலரும்போற்றும் பெரும் புகழைச் சம்பாதிக்கவும் யாவரும் முயலவேண்டியது. அற்ப நாள் நாம் பூமியில் இருந்தாலும் சொற்பமானத்துடனாவது இருக்கவேண்டாமா? அரைக் காசுக்குப்போன மானம் ஆயிரம் ரூபாய் தரினும் திரும்பக் கிடைக்குமா? ஆதலால் எல்லா மாந்தரும் இதிற் சொல்லப்படும் உண்மையைக் கிரகித்து, பின் அதன்பிரகாரம் நன்மையை மட்டும் கைக்கொண்டால் உலகத்தை வருத்துகின்ற கணக்கி லடங்காத இம்சைகளும் இடுக்கண்களும் தாமே விலகிச் செங்கமலச் செல்வியின் பரிபூரண கடாட்சம் அவர்க்கு நன்றாய் அமையும். இதிற் குற்றம் காணின் ஆன்றோர் பொறுக்க. சுபம்.

பி. எஸ். குமாரவடிவேல், தென்கரை, பெரியகுளம்.

---

## "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

மேற்கண்ட நமது ஔவைபிராட்டியின் திருவாக்கு எத்தகைய அருமைவாய்ந்த தென்பது அறிவாளிகள் உணர்ந்ததே. உலகிலுள்ள செல்வமோ, செல்வாக்கோ, அதிகாரமோ உடையவர்களில் ஒருமனிதனை நம்பியுள்ளவனை எவ்வளவோ தைரியங்கொண்டு அகங்காரமுடையவனாகி விடுகிறான். இத்தனைக்கும் அச்செல்வ வந்தன் அல்லது அதிகாரி தன் பொருளுக்குச் சேதமின்றித் தனக்கும் சிரமமின்றி உதவிசெய்வதானாற்றான் தன்னை நம்பிய வொருவனைக் காப்பாற்றுவான். எல்லாம் வல்ல கருணாநிதியாகிய பரமன் தன்னை நம்பிய அடியார்களை யெவ்வித ஆச்சரியமான விதமாய்க் காப்பாற்றி அவர்கள் இடுக்கண்களை நீக்குகிறானென்பதை நாம் நன்குணர்ந்து ஆண்டவனிடம் அன்பும் நம்பிக்கையும் வைக்கமுயலவேண்டும் என்பதற்காக ஒரு சிறு திருஷ்டாந்தம் மட்டும் கூறுகிறோம்:—

முற்காலத்தில் மதுரைமாநகரில் பாணபத்திரனென்று பெயர்கொண்ட சிவபக்தர் ஒருவரிருந்தார். அவர் சிறந்த சங்கீதவித்துவான். தேவர்களாலே துதிசெய்யப் படுகின்ற அம்மதுரையம்பதியிலே எழுந்தருளியிராநின்ற சுந்தரேசுவாரை இரவும் பகலும் மனமுருகிப் பாடுதலேயன்றி அவர் வேறொரு தொழிலும் புரியார். அவரைப் பாண்டியனும் அன்புடன் பாராட்டித் தன்னுடைய சமஸ்தானத்தைச்சேர்ந்த சங்கீத வித்துவானாக அமைத்துப் பல சிறப்புக்களும் செய்துவந்தான். அவர் இத்தகைய உயர் நிலையை அடைந்தும் சிவபெருமானுடைய திருவடிகளையே துணையெனக்கருதி அவரையே சிந்தித்து வாழ்ந்திருந்தார். வடக்கேயிருந்து ஏமநாதனென்னும் சங்கீதவித்துவா னொருவன் பாண்டியன் சபையை அண்டைந்து தன்னுடைய கல்வித்திறத்தைக் காட்டித் தன்னை இசையில் வெல்பவர் எவருமில்லையென்று வாய்மதம்பேசி, 'கூடுமானால் சமஸ்தான வித்துவானாகிய பாணபத்திரன் எனக்கிணையாகப் பாடிப்பார்க்கலாம்,' என்று தற்பெருமைகூறிப் பாணபத்திரரை வாதிற்கழைத்தான். ஏமநாதனுடைய நிகரற்ற சங்கீதத்தைக்கேட்ட பாணபத்திரர் எங்ஙனம் இசைவாதிடுவதென்ற ஏக்கத்தைக்கொண்டாராயினும், எல்லாம் சிவன் செயலென்று எண்ணி அரசன் முன்னிலையில் மறுநாள் வாதிடுவதாக ஒப்புக்கொண்டு திருக்கோயிலின் கண்ணேபோய் மதுரேசனை வணங்கி, "எம்பெருமானே! தேவரீருடைய அருளாகியதுணை யிக்காலத்தில் முழுதும்



வேண்டும்," என்று துதித்துக்கொண்டுபோய்த் தன் வீட்டிலிருந்தார். அப்பால் இந்திர விமானத்திலே நிலைபெற்று விளங்குகின்ற சோமசுந்தரக் கடவுள், தமதன்பனது இசைப்பகையை வெல்லத் திருவுளங்கொண்டு, விறகு சுமந்து விற்கிற கிழவனாகத் தமதிச்சைப்படி அழுக்குப்பிடித்த கந்தைத்துணியை இடையில் சுற்றிக்கொண்டும், விறகுச்சுமையைத் தலையிற்கொண்டும், வீதிதோறும் வாங்கத்தகாத விலைகூறிக்கொண்டும் ஏமநாதன் றங்கியிருந்த விடுதியின் தலைவாயிற் றிண்ணையில் ஒருபுறம் விறகுக் கட்டை இறக்கிவிட்டுத் தாம் களைப்பாறுவார்போல இருந்தனர். சிறிது பொழுதிற்கெல்லாம் அவர் சாதாரி என்ற இராகத்தைப் பாடத்தொடங்கினார். அன்பே உருவெனக்கொண்ட பெருமானே பாடினால் அந்தச் சங்கீதத்திற்கு இசைந்த சங்கீதமுமுண்டோ? அந்த கானத்தால் கல்லுமுருகிற்று; சராசரப்பொருள்கள்யாவும் அசைவற்று நின்றன. இந்த ஆச்சர்ய தேவகானத்தைக்கேட்ட ஏமநாதன் வெளியேவந்து விறகுத்தலையனைநோக்கி, "இவ்விதமான அற்புதகானஞ்செய்யும் நீயாவன்?" என்று வினவினான். அதற்கு விறகுத்தலையன், "ஐயா! யான் இவ்வூரில் வாழ்பவன்; பாண்டியன் அவைக்களத்துப் பாணபத்திரனுக்கு அடிமை; எனக்கு வயது மூத்தமையால் பாணபத்திரன், 'இனி நீ இசைபாடுதற்குத் தகுதியல்லை' யென்று என்னைத் தள்ளிவிட்டான். அதுமுதல் நான் விறகுவெட்டிச் சுமந்து வாழ்ந்து வருகிறேன்" என்றுகூறி மறைந்தார். இதைக்கேட்ட ஏமநாதன், "இசை பாடுதற்குத் தகுதியற்றவனென்று தள்ளப்பட்டவன் பாடுங்கானம் இவ்விதமிருந்தால், இதைக் கற்றுக்கொடுத்த பாணபத்திரனை இசையில் வெல்பவர் யாவரோ?" என்று கவலைகொண்டு, அன்றிரவு ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிப்போனான். ஆகையால் ஆண்டவனிடம் அன்பும் நம்பிக்கையும் வைத்தால் நமக்கு ஒருதுன்பமும் வாராது.

ப. அ. ப. பனையப்பசெட்டி, நெய்க்குப்பை.

---

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(259-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "ஊக்கமது கைவிடேல்."

நாகலிங்கம், சுப்பிரமணியன் என்னும் இரண்டு மாணவர்கள், ஒரு கலாசாலையில் கல்வி பயின்று வந்தார்கள். ஆனால், இவர்கள் வசித்த ஊர், ஒரு சிற்றூராயிருந்தபடியாலும், அங்கே பாடசாலை யில்லாதபடியாலும் பக்கத்தில் மூன்றுகல்தூரத்திலிருந்த ஒரு நகரத்திற்கு இவர்கள் தினந்தோறும் கால்நடையாகச் சென்று கல்விகற்றுவர நேர்ந்தது. அதனால் சில மாதங்கள் கழிந்தபிறகு நாகலிங்கம் அயர்ச்சியடைந்து, தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு, நடந்து போய் வருவதற்கஞ்சிப் படிப்பை நிறுத்திவிடக்கருதி ஒரு நாள், சுப்பிரமணியனிடத்தில், "சகோதரா! என்னால் தினந்தோறும் நடந்துவர முடியவில்லை; நான் படிப்பை நிறுத்திவிட நினைக்கிறேன்," என்றான். அதைக்கேட்டவுடன் சுப்பிரமணியன், முன்னே திண்ணைப்பள்ளிக்கூடத்திற் படிக்குங்காலத்தில் 'ஒரு காரியத்தில் பிரவேசித்தால், இடையில் நிகழும் அற்பசிரமங்களை உத்தேசித்து

அதனை விட்டுவிடாமல் ஊக்கத்துடன் செய்தே முடிக்கவேண்டும்,' என்னும் கருத்தடங்கிய, "ஊக்கமது கைவிடேல்," என்னும் ஆத்திசூடி வாக்கியத்தை உபாத்தியாயரிடம் நன்றாகக்கற்றுணர்ந்தவனாதலால், ஊக்கத்தைக் கைவிடலாகாதென்னுங்கருத்துடையவனாய் நாகலிங்கத்தை நோக்கி, "நாகலிங்கம்! நீ சிறிது கஷ்டத்தை உத்தேசித்துக் கல்வியை விடுதல் சரியன்று; இப்பொழுது கொஞ்சம் சிரமப்பட்டாலும் பின்னை கல்வியால் பெருஞ்சுகத்தை யடையலாம்; எதிலும் ஊக்கத்தைக் கைவிடலாகாது; 'ஊக்கமதுகைவிடேல்,' என்னும் நீதிவாக்கியத்தை நம் திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார் முன்னே நமக்கு அடிக்கடி போதித்துவந்தது உன் ஞாபகத்தில் இல்லையா? நீ படிப்பை விடாதே," என்றான். அதற்கு நாகலிங்கம், "போ! போ!! உனக்குக் காலில் புஷ்டியிருக்கிறது; அதனால் நீ நடக்க அஞ்சுகிறாயில்லை; நானோ இன்னும் சில தினங்கள் நடந்தால் ஒன்றுக்கும் உதவாமல் வீட்டிலேயே விழுந்து போவேன்; இந்தப் படிப்பினால் வரும் சம்பாத்தியம் எனக்கு வேண்டியதில்லை; நான் வேறு தொழில் செய்து ஜீவித்துக்கொள்வேன்," என்று சொல்லிப் பள்ளிக்கூடத்திற்குப் போவதை நிறுத்திவிட்டான்.

பின்னர் சுப்பிரமணியன் விடா முயற்சியாய்க்கல்வி கற்று, உயர்ந்த பரீக்ஷைகளிற்றேறி, ஒரு நகரத்தில் சிறந்த உத்தியோகம் பெற்று ஐசுவரியத்துடன் வாழ்ந்தான். நாகலிங்கமோ, கல்வியை நிறுத்திவிட்ட காரணத்தால், ஒரு தொழிலும் செய்ய வகையறியாது சில வருடங்களில் சகிக்க முடியாத வறுமையடைந்து, கூலி வேலை செய்யத் தலைப்பட்டுச் சுப்பிரமணியன் இருக்கும் ஊரிலேயே போய்ச் சேர்ந்து, கூலிக்கு மூட்டை தூக்கிக் கொண்டு திரிந்தான். ஒரு நாள் சுப்பிரமணியனுடைய வேலைக்காரன் கடைக்குப்போய் விறகுக்கட்டு வாங்கி அதனை, கூலிக்காரனாகத் திரிந்த நாகலிங்கம் தலைமேலேற்றி அவனை யழைத்துக் கொண்டு வந்தான். அவன் விறகுக் கட்டைக் கொண்டு வந்து வீட்டிற் போட்டு விட்டுக் கூலிவாங்கும் பொருட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான். மூட்டை தூக்கித் தூக்கி அவன் முதுகெல்லாம் தழும்பேறிப் போயிருந்தது. அப்போது கூலி கொடுக்க வந்த சுப்பிரமணியன் அவனைப் பார்த்து நாகலிங்கமென்றுணர்ந்து, "நாகலிங்கம்! 'ஊக்கமது கைவிடேல்,' என்ற நீதியை மறந்ததால் வந்த தீங்கை உணர்ந்து கொண்டாயா? நீ கல்வி கற்றிருந்தால் இந்த நிலைமைக்கு வரமாட்டாயல்லவா?" என்றான். நாகலிங்கம் அவனைத் தன்னுடைய பாலிய சிநேகனென்றுணர்ந்து அவன் முகத்தை நோக்கி ஒன்றுஞ் சொல்லாமல் கண்ணீர் விட்டழுதான். பின்னர் சுப்பிரமணியன் அவனுக்கு ஒரு வேலை கொடுத்து அவனை ஆதரித்தான். ஆதலின் ஒவ்வொருவரும், "ஊக்கமது கைவிடேல்," என்பதைக் கவனித்து நடத்தல் வேண்டும்.

(தொடரும்.)

S. V. ஆறுமுகன்.

## பால்தாயின்பானம்.

சென்ற 1918 ஜூன் ஜூலை 'பெண்கல்வியின் 269-ம் பக்கத்தில் உள்ள **"குழந்தைகளின் விஷயம்"** என்ற தலைப்பின் கீழ், 'பால் கொடுக்கும் காலத்தில் விலக்கப்பட வேண்டிய அன்ன பானங்கள்' என்ற விஷயத்தில் கூறிய பானங்களைக்கவனிக்குங்கால் பகரொணுப் பாடுபட்ட நிர்தமனம்.

"பலமான தேயிலைக் கஷாயம் மதுபானங்கள் நன்மையுண்டென்று தாதிகளும் தாய்களும் ஓர் தூர்அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்களென்றும், இலேசான தேயிலைக்கஷாயம் அவ்வளவு கெடுதியானவை யல்ல. ஆகையால் அவற்றை நாளுக் கொருதரம் சாப்பிடலாம்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து அதிகமாய்ச் சாப்பிட்டால் மட்டும் கெடுதியே தவிர, கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் கெடுதியில்லையென விளங்குகிறது. அதிகமாய்ச் சாப்பிட்டால் கெடுதி செய்யும்போது, கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் அதற்குத்தகுந்த கொஞ்சக் கெடுதி ஏற்படாதா? நாகம், தேள் முதலிய குட்டியாயிருந்தாலும் அவற்றிற்குத் தகுந்த விஷம் இராதா? இவை சிறியவை தானே, இவற்றிற்கு விஷம் ஏது என்று அவற்றைத் தொடுகிறோமா? பாஷாண மென்று தெரிந்தும், அதிகம் சாப்பிட்டால் கெடுதி யென்றும் கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் கெடுதியில்லை யென்றும் கொஞ்ச மாகவாவது சாப்பிடுகிறோமா? கொஞ்சமாகவாவது சாப்பிட்டால் கெடுதி ஏற்படாதா? கட்டாயம் ஏற்பட்டே தீருமன்றோ? தெரிந்திருந்தும் இவற்றை அருந்து வானேன்—தொடுவானேன்?

கனம். ஆர். இராகவேந்திரராவ். பீ. ஏ; எம். பி. ஸி. எம் (சென்னை பிரதமடாக்டர்) அவர்கள், குழந்தைகளின் பாதுகாப்பு விஷயமாய், தாய்க்கு ஒத்துக் கொள்ளும் ஆகாரம் என்பதைப் பற்றி எழுதுங்கால்; "பிறக்கப் போகும் குழந்தையின் நன்மையை உத்தேசித்து, தாயின் தேகாரோக்கியத்தை அவளுடைய கர்ப்பத்திலிருந்தே கவனிக்க வேண்டியது அவசியம். புஷ்டியைக் கொடுக்கக் கூடிய ஆகாரங்களை அவள் யதேஷ்டமாய்ச் சாப்பிடவேண்டும். **காபி, டீ முதலிய பானங்களை குடிக்கவேகூடாது**" என்று கூறுகின்றார்கள்.

மகா ள-ள-ஸ்ரீ அ. சேதுராமையரவர்கள் தாமெழுதியுள்ள அருமையான 'விவசாயபோதினி' என்னும் நூலில், '**தேயிலை ஒரு பிரமை உண்டாக்கும்** அல்லது **மயக்கம் தரக்கூடிய** சத்தை உடைத்தாயிருக்கும் **பயிர்**' என்கிறார்.

சென்னை வில்ஸன் கம்பெனியார் "நம்மிந்தியா தேசத்தில் காப்பித் தண்ணீர், தேயிலைத் தண்ணீர் குடிப்பது அநேகருக்கு வழக்கம். இவைகள் சரீர ஆரோக்கியமுள்ளவைகளல்லவென்று தேர்ந்த டாக்டர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, காப்பியைக் குடிக்கும் எல்லா ஜனங்களுக்கும் உண்டாகும் வியாதிகள் அநேகம். அவைகளில் முக்கியமானது மதுமேகம் (Diabetes) அதாவது பகுமூத்திரம். காப்பியைக்குடித்து இப்படிப்பட்ட வியாதிகளைச் சம்பாதித்துக் கொள்வானேன்" என அறிவுறுத்துகின்றார்கள்.

இவ்விதம், அரிய பெரிய பிரமுகர்கள் காபி, டீ பானங்களின் தன்மையைக்கூறி எச்சரிக்கை செய்திருக்கும்போது, 'ஒளியைக்காட்டித் தக்ஷணமே மறையும் மின்னலைப் போன்று' நன்மையாகத்தோன்றுவதாகிய, மிகச்சிறிய, தற்போதைய குணத்திற்காகப் பருகிவிட்டு அதினாலும் நித்திரைக்குறைவும், இதினாலும் கண்ணெரிச்சல், சோம்பல் முதலிய இன்னல்களுக்கு உள்பட்டு சிரமப்படுவானேன்?

விரோதியானவன் பகைவனைக் கெடுக்கவேண்டுமென எண்ணங்கொள்ளின், அவனோடு நட்புகொண்டு, அவனுடைய இரகசியங்களையறிந்து, சமயத்தில் வஞ்சந்தீர்த்துக் கொள்ளுவதுபோல, சிறிய நன்மையைக்காட்டி பெரியதீமையை, கெண்டையைவிட்டு வராலை யிழுப்பதென்னும் பழமொழிக்கொப்பவன்றோ உண்டாக்கும்.

'பூனையைக்கண்டு புலிசூடிட்டுக் கொண்டது' என்ற கதையைப்போல் மேல் நாட்டாரைப்பார்த்து மத்திய காலத்தில் மேற்கூறிய வழக்கங்களை அநுசரித்த நாம், இப்பானங்களின் துர்க்குணத்தைக்கண்டு அவர்களே இவற்றை விலக்கிக் கொண்டுவரும்போது, 'செல்லும் செல்லாததற்குச் செட்டியாரிருக்கிறார்' என்ற—கதை—முதுமொழிக்கிணங்க நாம்மாத்திரம் அனுசரித்து அல்லல்களை அழைத்துக் கொள்வானேன்? "சரக்கு மலிந்தால் சந்தைக்குவரும்' என்பதற்கு ஏற்ப, எங்கு பார்த்தாலும் இவ்விஷம் பானங்கள் தானே! கள்ளுக்கடைகள் சாராயக்கடைகள் வரவரக்குறைந்து கொண்டும், பஜாரை விட்டு ஒதுங்கிக் கொண்டும் வரும்போது, இந்த பானங்களைச் சேர்ந்த அந்த பானங்களோ 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்திய' தென்பதுபோல் அவையோட, இவையாடி பலமாக அமருகின்றன—அமர்ந்திருக்கின்றன, சமயவர்கள் அக்கள்ளு சாராயங்களை விட்டு ஒழிக்க வேண்டியே, இப்பானங்களின்மீது விருப்பத்தை யூட்டி, அப்பானங்களின்மீது (கள் சாராயங்கள்) வெறுப்பை யூட்டுகின்றனர் என்பர் ஒருசாரார். இதையும், ஒப்புக்கொள்ள வேண்டியதே யெனினும்; 'அவன் மகன் அவன்தானே' என்பதுபோல், கள் சாராயங்கட்குத் தம்பிபோன்ற, காபி, டீ முதலியவையும் கெடவேண்டுவதுதானே! இவற்றை நீக்க, வேறு என்ன இவற்றைப்போல் புறப்படுமோ—புறப்படப் போகின்றதோ—எல்லாம் வல்ல ஒருவன் அரணாக இருப்பானாக.

'எங்குஞ் சுற்றி இரங்கரைச் சேவி' என்பதற் கிணங்க, எவ்வளவு கூறினும், காபி, டீ பானங்கள் கெடுதலென்பதே நாம் உணரவேண்டியதும், உணர்ந்து அவற்றைவிலக்க வேண்டியதும் அவசியமே.

மேற்கூறிய பிரமுகர்களின் அபிப்பிராயங்களையே, காபி டீ பானங்களின் விலக்கைப் பற்றிய வியாஸத்தில், 1917 அக்டோபர் மாதத்திய, நமது 'ஆனந்த போதினி' மூலமாயும் அறிவித்திருக்கிறேனென்பதையும் குறிப்பிடுவதோடு இவ் வியாஸத்தினையே 'பெண்கல்விக்கும் அனுப்பியுள்ளேனாயினும் நமது போதினியின் நேயர்களும் உணரும் பொருட்டு நமது ஆனந்தனுக்கும் அனுப்பலானேன்.

P. பரிமணப் பல்லவராயர்.

---

# பெண் கல்வி

(272-ம் பக்கத்தொடர்ச்சி)

ஞானதேகத்தை வளர்ப்பதற்கு கல்வி எப்படி அவசியமோ, அப்படியே ஸ்தூலதேகத்தைவளர்ப்பதற்கும் கல்வி உபயோகமாகின்றது. கல்வியினால் உண்டாகிற மனோற்சாகமும், ஞானசந்தோஷமும், நற்குண நற்செய்கைகளும் வியாதிக்குப் பிரதிபந்தகங்களாயிருக்கின்றன. அப்படியே தேகசுத்தமும், கிரகசுத்தமும், கிரமமான ஆகாராதிகளும், தேக சௌக்கியத்திற்கு முக்கிய சாதனங்களாயிருக்கின்றன. ஸ்திரீகள் படியாமையினால் தேகசுத்தமின்றியும், கிரகசுத்தமின்றியும், சமயோசித பரிபக்குவ ஆகாரங்களைச் செய்யத்தெரியாமலும், பரம்பரை வழக்கப்படி ஒரேதன்மையான ஆகாரங்களைச் செய்து வருகின்றனர். அதனால் வியாதிக்கிடமாகி நம்முடைய தேகங்களை வைத்தியர்களின் கையில் ஒப்புவிக்கும்படி சம்பவிக்கின்றது.

கல்வியின் பெருமை வாசா மகோசரமாயிருக்கின்றது. சிலர் செல்வப் பொருளிருப்பின் கல்விப்பொருள் அனாவசியம் என்கின்றனர். அந்தோ! அறிவாளிகளே! பிரகாசத்திற்கும், அந்தகாரத்திற்கும், புண்ணியத்திற்கும் பாவத்திற்கும், சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் எத்தகையபேதமோ, அத்தகைபேதம் செல்வப் பொருளுக்கும் கல்விப்பொருளுக்கும் உண்டாயிருக்கின்றது. செல்வம் புத்தியைக் கொடுக்கும் கல்வி புத்தியைக் கெடுக்கும், செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும், கல்விகொடுக்கக் கொடுக்க நிறையும். செல்வம் சில நாட்களில் நாஸ்தியாம், கல்வி அழியாத ஆஸ்தியாம். செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும், கல்வி யாவராலும் உபசரிக்கப்படும். செல்வம் காமாதிகளை யுண்டாக்கும், கல்வி காமாதிகளை நாசமாக்கும். செல்வர்களின் பேர் அயல்தேசங்களில் அப்பிரசித்தம், கல்விமான்களின் பேர் ஜகப்பிரசித்தம். கல்வியே தனம். கல்வியே கனம். கல்வியே அழகு. கல்வியே பூஷணம். கல்வியே பலம். கல்வியே சுகம். கல்வியே பாக்கியம். கல்வியே கவசம். நினைத்த வெல்லாந்தரும் சிந்தாமணியாகிய இக்கல்வியைக் கற்றவன் பூமண்டல மெங்கும் சஞ்சரிக்கிறவன் போல பூதபௌஷிய வர்த்தமானங்களை யெல்லாம் பல பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்து கொள்ளுகின்றனன். கல்லாதவனோ தன் தேசகாரியங்களையும், தற்காலத்திய வித்வான்களையும் தெரியாதவனாயிருக்கின்றனன். கற்றவனோ தற்காலத்திய வித்வான்களை மட்டுமன்று, பூர்வீகவித்வான்களையும் முகமுகமாகத்தரிசித்துச் சம்பாஷணம் செய்கிறவன் போல் அவர்களின் கிரந்தங்களிலுள்ள நீதிகளையும், அலங்காரங்களையும், வேதார்த்தங்களையும் கற்றுக் கொள்ளுகின்றனன்.

இத்தகைய பரம பிரயோஜனத்தைப் புருஷர்களாகிய நாம் மட்டும் அடைந்து, பெண்களை அடையச் செய்யாமலிருப்பது அநியாயத்திலும் அநியாயமன்றோ?

ஆனந்த போதினி சந்தாதாரர்களாகிய சோதர சோதரிகளே! பிறர் இதைக்கவனியாமற் போனால் போகட்டும். நாமாவது இனி நம்மில்லங்

களிலுள்ள பெண் குழவிகளை அஞ்ஞானமென்னும் அந்தகாரக் குகையில் தள்ளி மூடாமல் அப்பெண் குழவிகளைப் பள்ளியில் வைத்து, அக்குழவிகட்கு ஞானோதயமுண்டாகச் செய்து, நம் இந்து தேசம் முன்னுக்கு வருமாறு, எங்குநிறைந்த விறைவன் மலரடி காங்குலும் பகலும் நங்கருத்திவிருத்துவோமாக. சுபம். சுபம். சுபம்.

E. V. துப்புசாமி முதலி ஏழூர் (ராசீபுரம் தாலுகா).

---

## வினையாண்மை—(*Tact*).

மானிடராய்ப் பிறந்ததாலாய பயன் யாது? அறம், பொருள், இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களை யீட்டுவது என்பர். சிறிது, ஆழ்ந்து யோசிக்குமளவில் இந்நான்கினுள் வீடுபெறுவதுதான் ஜென்மசாபல்யம் எனத்தோன்றும். இதனையே, ‘உருவத்தாலாயபயன் பிறவித் துன்பத்தினின்றும் விடுவித்துக்கொள்வது’ என்பர் சான்றோர்.

சரீரசம்ரக்ஷணையோடு ஆன்மசம்ரக்ஷணையையும் செய்து கொள்ளும் திறமை மனிதர்க்கு மாத்திரமே வாய்ந்திருப்பது பற்றியன்றோ மேற்கூறிய ஆன்றோர் கொள்கையின் உண்மை யெளிது புலப்படும். சரீரத்துட்கட்டுண்ட ஆன்மாவுக்கு, சிறைநீக்கம் கிட்டுங்காலம், சரீரவாஞ்சை யற்றநாள் முதல்தான் ஏற்படும். அறியாமை, அகங்காரம், அவா என்ற முக்குற்றங்களினின்றும் நீங்கி, நல்வினை தீவினைகளால் வரும் சுகதுக்கங்களின் அநுபவப் பாசப்பயிர்களை வேரோடு பறிக்க முயலுவான், சுயாலயமின்றி, பிறர் நலங்கருதி, விருப்பு வெறுப்பின்றி எவரிடத்தும் சகோதரவாஞ்சை பூண்டு உதவி புரிதல்வேண்டும். ஏனைய பொருட்செல்வம்போ லல்லாது இகத்தில் சுகத்தையும் அகத்தில் பரத்தையும் அநுபவிக்கக்காட்டி, மறுமையில் மோட்ச சாம்பிராச்சியமாகிய வீட்டை யளிக்கும் செல்வம் மானிடர்க்குத் தருமமேயாம். இத்தகைய செல்வத்தைப்பெறுவதற்கு, கல்வி யின்றியமையாததுபற்றி,

“இம்மைபயக்குமால் ஈயக்குறைவின்றால்; தம்மைவிளக்குமால் தாமுளராக்கேடின்றால், எம்மையுலகத்தும் யாங்காணோம் கல்விபோல், மம்மராறுக்கு மருந்து,” என்று நாலடி கூறுகின்றது. நிற்க,

ஒருவன் திறமையும் பெருமையும் அன்னவன் செய்யும் தொழிலாலே விளங்குமாதலின், ‘வினை செயலாண்மை கல்வியறிவிலும் மேம்பாடுடையது,’ என்று சாலவும் தோன்றும். இவ்வினையாண்மை அநுபவஞானத்தைச் சார்ந்ததாதலின் அதன்பின் கவனிக்கலாயிற்று.

‘கேடில்விழுச் செல்வமாகிய’ கல்விப்பெருக்கால் பலவிதத்திலும் சகாயம் செய்யுந்திறமையும், பிறர்க்குதவிபுரியவேண்டுமென்ற நல்லெண்ணமும், பரிபக்குவமுமடைந்த பலர் தங்கள் எண்ணத்திற்கு மாறாக ஜனசமூகத்திற்கு பயன்படாது போகின்றனர். காரணம் வினைசெயல்வகையறியாக்குறையென்று தெரியவரும்.

வேண்டுமென்று உபகாரம் செய்யப்புகும் இத்தகையோர் கழுநீர்ப் பானையில் கையிட்டதுபோலும், குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்



16400

வது போலும், மனஸ்தாபத்தையும், அபவாதத்தையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அந்தோ! உசிதமில்லா வார்த்தைகளை முன்பின் யோசியாது பேசுவதினாலும், இங்கிதம் தெரியாத குறையினாலும், சொல்வன்மையில்லாத வறுமையாலும் இத்தகையார் கல்வித்திறம் குடத்தில் வைத்த விளக்குப்போல் பிரகாசிக்கிறதில்லை. ஒன்றைப்பற்றிப் பேசுங்கால் ஏனையோர் விஷயங்களைக் குறிப்பிடுவர் ஒருசமயம். மற்றோர் தருணத்திலும் விஷயத்தின் ஒற்றுமை வேற்றுமைகளைச் சீர்தூக்கியுணராகிற்பர். சிற்சில சமயங்களில், கவலையாலும், துக்கத்தாலும் துயருற்று வருந்தும் நண்பரையேனும் உறவினரையேனும் கண்டு தேறுதல் சொல்லப்புகுவரேல், தங்கள் சம்பாஷணையினால் ஆறுதலளிப்பதற்குப் பதிலாக உலையூட்டுங் கொலைவேல் போன்ற மொழிகளைச்சொல்லாநிற்பர், இத்தகைய பலரை நாம் அடிக்கடி பார்க்கிறோமன்றோ? அருகிலுள்ளார் இவர்களை நோக்கி, ‘உமக்கு ஒன்றும் தெரியாது, நீர் பெரியவர்தாம், வாயைமூடிக்கொண்டிரும்’ என்று சொல்வதையும் கேட்கின்றோமல்லவா? இப்பழிப்பிற்குக் காரணம் ‘கல்லாமையில்லை. உதவிபுரியவேண்டுமென்ற மேலானகுணமுடையவராகிய இவர்கள் கல்விச் செல்வம் பெரிதும் படைத்தும்,

‘நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன், உண்மையறிவே மிகும்’ என்றவாறு பிறருக்குப்பயன்படாமற்போவது வினையாண்மை யில்லாத குறைவினால் என்று சொல்லாமலே விளங்கும்.

மற்றொரு சார்பினரில் சிறுபான்மையோர், அறநூற்பயிற்சியில் சிறந்திலரேனும், ‘பொருள், கருவி, காலம், வினை, யிடனொடைந்தும், இருள்தீர எண்ணி’ச் செய்யும் இயல்பும் ஆண்மையுமுடையவராயிருக்கின்றனர். ‘சான்றாண்மை, சாயல், ஒழுக்கம் இவைமூன்றும் வான்றோய்குடிப்பிறந்தார்க்குப்படும்’ என்பதுபோல இவ்வினையாண்மை நற்குடியிற்பிறந்தாரிடமே காணப்படுவதென்றாலும், ‘கல்லாரேயாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகில், நல்லறிவு நாளும் தலைப்படும்’ என்பதால் சான்றோரினத்துடன் கூடி ஒழுகுவதால் இவ்வினைசெயல்வகை எளிதில் யூகமுள்ளார்க்கெய்தும்.

இவ்வாண்மையைச் சிலர் சாதுரியம் என்பர். சாமர்த்தியம் என்பதும் இதுவே. ஆங்கிலத்தில் இது, tact எனப்படும். இச்சாதுரிய முள்ளோர் தத்தம் சமயோசித நடவடிக்கைகளினால் சூழவிருக்கும் நண்பர்களுக்கும் உறவினருக்கும் சந்தோஷத்தையும் தைரியத்தையும் புகட்டாநிற்பர். இவர்களே பஞ்சாயத்து பேசும் சபைக்குரியவராகின்றனர். மதியூகியென்றும் பெயர் பெறுபவர் இவர்களே. இவர்கள் மனத்தில் ஊற்றுநீர்த்தரைபோல, ‘இந்தத் தருணத்தில் செய்யவேண்டிய செய்கை யிதுதான் என்றும், பேசவேண்டிய விஷயம் இது’ வென்றும் யோசிக்கும் சிரமம் சிறிதுமின்றி அப்போதைக்கப்போது மின்னல்போல் யூகம் தோன்றும் வில்லங்கங்களை விலக்குவதற்கும், மனஸ்தாபங்களை நீக்கிச் சமாதானம் செய்வதற்கும் முக்கிய துணைக்கருவியாம் இவ்வினையாண்மை. ஒழுக்கமும் அறிவுமுடையார்க்குப் பொறையும், வெகுளாமையும் எவ்வளவு மாண்புடையனவாமோ அவ்வளவு சிறந்ததாகும் வினையாண்மை பிறர்க்குதவிபுரியுமியல் புள்ளோர்க்கு.

மனைவிமக்கள், தாய்தந்தையர், சகோதரர் சகோதரிகள் ஒன்றுகூடியிராநின்ற ஒரு குடித்தனத்தில், இவர்களுக்குள் எள்ளளவேனும் மனத்

தாங்கல் உண்டாகாவண்ணம் நடத்தக்கருதும் புருஷனுக்கு வாழ்க்கைத் துணைநலம் போன்று இவ்வினையாண்மை இல்லறத்தேர்க்கொரு அச்சாணியாமென்பது அனுபவித்தவர்களுக்கே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். குடித்தனம் என்பது சாதாரணமானதல்ல. அரைத்தனத்திற்கு வேண்டிய சாதனங்கள் அவ்வளவும் அதற்கு வேண்டும். எல்லாச் சாதனங்களுள்ளும் வினையாண்மை மிகவும் சிறந்தது.

உயிரும் உடம்பும் போன்ற அருளும் அடக்கமும் சிறுமையுணீங்கிய இன்சொல்லும் வினையாண்மையு முன்னோர்க்குச் சதாகாலமும் கண்ணிமைகள் போல உதவி புரியும். கலகம் வந்தாழி, உற்றதோர் கலகத்தை யடக்கும் சாமர்த்தியம் இவர்கட்குண்டு.

இனத்தாருக்கும், பிறருக்கும் உதவி செய்து, சுய நலத்தை நழுவ விடுவதற்கு வினையாண்மை யின்றியமையாத தென்பது தெற்றென விளங்குமாதலின், பிறர் நலம் கருதி அன்பார்ந்த செயல்களினால் பிறவிப்பாசப் பயிரை யழிக்கமுயலுவார்க்கு கல்வியறிவு வாடாமாலையாயிருப்பது போல வினையாண்மையும் கைவருமாகில், 'பொன் மலர் நாற்ற முடைத்தன்றோ? 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்றாலும் 'செய்வினை செய்வான் செயல்முறை யவ்வினை, புள்ளறிவானுள்ளங்கொளல்' என்ற திருக்குறளின் கருத்துக்கிசைந்த சமயோசித வினையாண்மை வாய்க்கப் பெற்றவர்களே பெரும்பாலும் செல்வாக்கிலும் பெருமையிலும் ஓங்கிப்பரோபகாரிகளாய் உலகத்தில் நிலை பெற்று விளங்கி இறுதியில் பிறவிக்கட்டறுப்பட்டுய்வார்களாகையால் வினையாண்மையைப் பற்றி எழுதும் எவ்வளவும் மிகையாகாது.

N. S. இராமசந்திரய்யர். B.A.,
வேப்பேரி, மதராஸ்.

---

## ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.

அருமைச் சகோதர சகோதரிகளே:—சிலர் இங்கிலீஷ். எ. பீ. சி. டி. படித்தவுடன் தாங்கள் ஆங்கிலத்தை அடியோடு கற்றுக்கொண்டு விட்டதாகவும் தாங்கள் தமிழர்களல்ல வென்றும், இங்கிலீஷ் காரராய்ப்போய் விட்டதாகவும், ஆகாயத்திலிருந்து குதித்துவிட்ட மாதிரியும் நினைத்துக் கொண்டு தலைகால் தெரியாமல் ஆடுவதும், பேசுவதுமா யிருக்கிறார்கள்-இங்கிலீஷ் கொஞ்சந் தெரிந்தவர்களில் சிலர் கூடிக்கொண்டு, வழியில் போகிற ஆங்கிலம் கற்காதவர்களோடு ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். அவர்கள் ஆங்கிலம் படித்திருந்தாலல்லவா அவர்களோடு பேசுவார்கள். ஆங்கிலந் தெரியாததால் பேசாமல் போகிறார்கள். போகவே, அவர்களைப் பார்த்து நாயென்றும் - பேயென்றும் நாட்டுப்புறமென்றும் வாயில்வந்தபடி ஆங்கிலத்தில் வசைமொழி பேசுகிறார்கள். இது தவிர,

ஒரு பர்லாங்கு தூரம்போகவேண்டியதிருந்தாலும் ஜட்கா வண்டியில் போகிறார்கள். இன்னுங் கொஞ்ச காலஞ்சென்றால் முடக்குவாதக்காரனுக்கு வீட்டுக்குள் வண்டிவைப்பது போல் இவர்களுக்கும் வைக்கவேண்டுமென்று நினைக்கிறேன். இது சுருட்டுப் பிடிப்பதினால் உண்டாகும் பல கெடுதிகளில் ஒன்றாகிய கைகால் பிடிப்பினால் நடக்க முடியாமல் ஜட்கா



யில் போகிறார்களென்றும் மதிப்புக்காகவே போகிறார்களென்றும் தெரியவில்லை. இந்த இலக்ஷணத்தில் வேறே வழியில் சால்சடையாய்ப் போகிறவர்களைப் பார்த்து கர்நாடகம் என்று பரிகாசஞ் செய்கிறார்கள். இதுமாத்திரமா? 96-வயது சென்ற கிழவர்கள் மாதிரி கண்ணாடி சதா மாட்டிக்கொண்டிருக்கிறார்கள் - இது கண்புகையும் நெஞ்சுலரும் கைகாலயர்ந்து விடும்-சொல்லரிய மேனி வெளுத்துவிடும்-மெல்லமெல்ல-ஈரல் கருகி விடும் இந்திரிய நஷ்டமாம்-பாரப் புகையிலையின் பண்பு-என்ற பாடலை இவர்கள் நிரூபித்துக்காட்டுகிறார்கள்.

சுருட்டுப்பிடிக்கும் கெட்ட வழக்கத்தினால் கண்புகைவதால் கண்ணாடி மாட்டிக்கொள்கிறார்களென்றும், நெஞ்சுலர்ந்து நாக்கு வரண்டு போவதால் காபி தேயிலைத் தண்ணீரை அடிக்கடி பானம் பண்ணுகிறார்களென்றும், கைகா லயர்ந்து விடுவதால் ஒரு பர்லாங்கு தூரத்துக்கும் வண்டியில் போகிறார்களென்றும், மேனி வெளுத்துப் பலவீனப் படுவதால் அதை மறைப்பதற்கு காற்சட்டை கைச்சட்டை தொப்பி முதலியவைகளை மாட்டிக்கொள்ளுகிறார்களென்றும் நினைக்க வேண்டியதாயிருக்கிறது.

விபூதி முதலியவைகளை நெற்றியில் தரித்துக்கொண்டால் அகௌரவமென்று நினைக்கிறார்கள் - ஐயோ - அதோடு நிற்கிறதா - திரிபுண்டரமாக விபூதி தரித்திருந்தால் அவர்களைப் பார்த்து ஏளனஞ் செய்கிறார்கள் "இப்பதான் முருங்கைக்காய்ப் பூச்சுப் பூசிக்கொண்டு வந்து விட்டார்-ஐயா ரொம்பநாளாய் நோயாயிருந்தபடியால் இப்போது சூடு போட்டிருக்கிறது பாவம் இந்தச்சூட்டில் தேறினால்தான் தேறுவார்" என்றும் இன்னும் இது போன்ற பல கெட்டபேச்சுகளைப் பேசிப் பரிகசிக்கிறார்கள் - அந்தோ! இவர்களுடைய அறியாமையை என்னவென்று சொல்வது. இது மாத்திரமா? குடிக்கிற சட்டியையுங் கெடுக்கிறான் கன்னாரக் குப்பன் என்ற மாதிரி தங்கள் வீட்டிலுள்ள சிறுவர்களையும் விபூதி திருநாமம் முதலியவைகளைத் தரிக்கவொட்டாமற் செய்துவிடுகிறார்கள். இவர்கள் புத்தியை எதற்கு ஒப்பிடலாமென்று விளங்கவில்லை.

ஒருவனைப்பார்த்து பலஜாதிப் பயலென்று சொன்னால், அவன் தடிக்கம்பை யெடுத்துக்கொண்டு சண்டைக்கு வந்துவிடுவான். அப்படியிருக்க இங்கிலீஷ் படித்தவர்களில் சிலர் தாங்கள் தமிழராயிருந்தும் இங்கிலீஷ் படித்தவுடன் ஐரோப்பியர் மாதிரி காற்சட்டை கைச்சட்டையணிந்து கொண்டும் தொப்பி தரித்துக்கொண்டும் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் சாதி மூன்று பிரிவாய்ப் போய்விடுகிறது. * எப்படியென்றால் (1) ஆதியில் தமிழனாயிருந்தது (2) இங்கிலீஷ் படித்தவுடன் ஐரோப்பியனாய் ஆய்விட்டதாக நினைத்து விடுவது (3) இவனைப் பார்த்தவர்கள் இவன் தமிழனா-இங்கிலீஷ்காரனா-தமிழன் சாடையிருப்பதாலும், இங்கிலீஷ்காரன் மாதிரி காற்சட்டை கைச்சட்டை தொப்பி முதலியவை

---

* நான் ஆங்கிலம் படித்தவர்களையெல்லாம் இப்படிச் சொல்லவில்லை இக்கெட்ட வழக்கத்தைக் கையாடுகிறவர்களையும், இவ்வழக்கத்தைக் குற்றமற்றதாக நினைக்கிறவர்களையும் மாத்திரம் சொன்னதேயொழிய வேறல்ல.

களனிர்திருப்பதாலும் இரு பிறப்பனுயிருக்குமென்று நினைத்து விடுவது. ஆக மூன்றாவதால் இவனைப் பலசாதி யென்பதற்கு என்ன தடை.

ஆற்றைக் கெடுத்தது குருணி யென்பதுபோல் சிலர் இம்மாதிரியான கெட்டவழக்கங்களை யனுசரித்து வருவதால், இதைப்பார்த்த நம்பெரிய தமிழுலகத்தி லுள்ளவர்களில் முக்கால் வரிசைப் பேர்கள் அப்படியே நடக்க ஆரம்பிக்கிறார்கள். இன்னும் இந்த மாதிரியே நடந்துகொண்டிருந்தால் தமிழுலகம் முழுதும் அப்படியே நடந்துவிடும். ஆகையினால் இக் கொடியவழக்கத்தை யுடையவர்கள் நம் ஆசார அனுஷ்டானங்களைக் கெடுத்த பழி பாவங்களைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். சகோதரர்களே இங்கிலீஷ்படித்து பி. எ. பட்டங்கள் பெற்றிருந்தாலும் இன்னொருவரைப்பார்த்து அவர்கட்கு இங்கிலீஷ் தெரியவில்லையென்று பரிகாசஞ் செய்யாமலும் எளனஞ் செய்யாமலும் இருக்கும்படியாய் வேண்டிக் கொள்கிறேன் - இங்கொருகதையுங்கூறவேண்டி யிருக்கிறது.

ஐந்தாறு மாணவர்கள் கூடிக்கொண்டு தங்கள் மாதிரி இங்கிலீஷ் படித்தவர்கள் கிடையாதென்றும் தங்களளவாக ஒருவருக்குமே தெரியாதென்றும் வழியில் போகிறவர்களையும் வருகிறவர்களையும் ஆங்கிலத்தில் திட்டியும் வசைமொழி பேசிக்கொண்டும் பரிகாசஞ் செய்து கொண்டும் வந்தார்கள். இதைப் பார்த்துக்கொண் டிருந்த ஒரு ஆங்கிலம் படித்தவர் இவர்களுடைய கர்வத்தை யடக்க வேண்டுமென்று நினைத்து இரண்டு மூன்று போலீஸ்காரர்களை சாதாரண மனிதர் மாதிரி உடையணிந்து கொண்டு வரும்படிசெய்து தானும் ஒரு சாதாரண மனிதன் மாதிரி வேடந் தரித்துக்கொண்டு வெளிக்குத் தெரியாமல் போலீஸ்காரரையும் அழைத்துக்கொண்டு பையன்கள் நிற்குமிடம் வந்துசேர்ந்தார். இந்தச் சூதையறியாத பையன்களும் எப்போதும் பரிகாசஞ் செய்வதுபோல் பரிகாசஞ் செய்தார்கள். இவரும் சற்று கோபமடைந்தவர் மாதிரி, என்ன அய்யா இங்கிலீஷில் என்னென்னவோ என்னைத்திட்டுகிறீர்கள்போ லிருக்கிறதே" யென்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டார். அதற்குப் பையன்கள், "போ ஐயா உனக்கென்ன பைத்தியமா, இங்கிலீஷில் திட்டினால் உனக்கென்ன? தமிழில் திட்டினால் நீ கேட்பது நியாயந்தான். தமிழ்ப் படித்தவனைக் காட்டிலும் இங்கிலீஷ் படித்தவன் உயர்ந்தவனென்று உனக்குத்தெரியாதா. நீயும் இங்கிலீஷ் படித்திருந்தால் அந்தப் பாஷையிலேயே எங்களைத்திட்டு. ஏனப்பா திட்டுகிறாயென்று நாங்கள் கேட்டால் உன்கால் செருப்பால் எங்களை அடி. இங்கிலீஷ் படிக்காத நாட்டுப்புறத் தானாகிய நீ கொஞ்சமும் அஞ்சாமல் எங்களோடு வார்த்தையாடுகிறாயே. பேசாமல்போ பத்திரம். ஏதாவது பேசினாயோ, போலீஸில் அடைத்து விடுவோம்" என்று சொல்லி இன்னும் வாயில் வந்தபடி பேசினார்கள். இதைக்கேட்டு மாறு வேடமணிந்திருந்தவர் போலீஸ்காரரிடம் கண் சமிக்கை செய்யவே, எல்லோரையும் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனில் அழைத்துச் சென்றார்கள். பின்பு நியாயாதிபதி விசாரித்ததில் பையன்கள் பக்கம் குற்றம் ஏற்பட்டபடியால் ஒவ்வொருவனுக்கும் இருபத்தைந்து ரூபாய் வீதம் அபராதம் விதித்தார். ஆகையினால் சகோதரர்களே! தாங்கள் இங்கிலீஷ் படித்திருந்தால், இங்கிலீஷ் கற்காதவர்களைப் பார்த்து கேலி செய்வதும் நகைப்பதும் அடாது. முதலில் சந்தோஷமா யிருந்தாலும் பின்னால் கேட்டை விளைவிக்கும்.



இக்கெட்ட வழக்கம் நீங்கவேணு மென்றும், ஒவ்வொரு மாதமும் ஞானகுருவைப்போல் வந்து, ஞானம் பக்தி அறிவு சன்மார்க்கங்கள் முதலியவற்றைப் போதிக்கும் ஆனந்தபோதினியும், அதன் தந்தையாகிய ம-௱-௱-ஸ்ரீ நா. முனிசாமி முதலியாரவர்களும், அதன் தாயாராகிய ஆறணி குப்புசாமி முதலியாரவர்களும், அதன் அரியநண்பர்களாகிய சந்தாதாரர்களும் நீடூழிகாலம் வாழ வேண்டு மென்றும் பொன்னம்பலவனடியை யெண்ணி துதிக்கின்றேன் - சுபம்.

மடத்துக்குடிப்பட்டி - மு. வை. நல்லதம்பி (பயிற்சிசாலை.)

---

## மாதரொழுக்கம்.

ஒவ்வொரு குடும்பமும் - எவ்வளவு சிறியதா யிருந்தாலும் - ஒரு சிறு ராஜ்யத்திற்கொப்பா யிருக்கின்றது. அவ்விராஜ்யத்தை யாள்பவர் ஸ்திரீகளேயாவர். ஆகையாலேயே அவர்களுக்கு மனையாள், மனையாட்டி, மனைவி, இல்லாள் என்ற பட்டப்பெயர்களிடப்பட்டன. புருடர்க்கு இச் சிறப்புப் பெயர்கள் கிடையா. மனையான், மனையாளன், இல்லான் என்னும் பெயர்களைநாம் கேட்டிருக்கிறோமோ? அரசனின்றி அரசில்லையாமாறு போல் மனைவியின்றி மனையுமில்லை.

எப்படி ஒருராஜ்யமானது அதன் தலைவனாகிய அரசனது நன்னெறி தீநெறிகளின் காரணமாக நன்னிலைமையோ தீயநிலைமையோ அடையுமோ அப்படியே ஒரு குடும்பமும். எனவே புருடர்களின் இல்வாழ்க்கைக்குரிய சுகதுக்கங்கள் மாதர்கள் நடந்து கொள்ளும் மாதிரியின்படி ஏற்படுகின்றன. ஆதலின் சகோதரிகளே! நீங்கள் உங்களது நிலைமையும் பொறுப்பும் எவ்வளவின வென்பதை யறிந்து கொள்ளுங்கள். இஃதிங்ஙனமாக.

உலகத்தில், பொதுவாகப் பெண்கள் பொல்லாதவர்கள் என்னும் ஒருவாக்கியம் உலவுகின்றது. பெண்கள் என்றாலே, 'அப்பா, பெண்களா வெகு வாயலைக்காரிகள்! கூற்றினுங்கொடியர்' எனக்கூறுகின்றனர். "பெண்களைப் படைத்த நமனை யென்செயப்படைத்தாய்," என்னும் ஓர் செய்யுளும் இருக்கிறது? "பெண்கொண்ட பேர்ப்பட்ட பாட்டையும் கேட்டையும், பேசுவோமே நெஞ்சமே," யெனக் கூறிப்போந்தனர் ஓர் பெரியார். உங்களி லொருவராகிய ஔவையார், "தையல் சொற்கேளேல்," என்றதேன்? இன்னும் பலர் பலவாறாக உங்களைக் குறை கூறி யிருக்கின்றனரே:

இங்ஙனம், யாவரும் ஒருபடித்தாய்க் கூறுவதால், இதில் சிறிதளவேனும் உண்மையிருக்கின்றதென்று நம்பவேண்டி வருகிறதல்லவா! எவ்வளவோ வுயர்நிலையி லிருக்கவேண்டிய நீங்கள் எவ்வாறு தாழ்த்தப்பட்டிருக்கிறீர்களென்பதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். காரணம் உங்கள் நிலைமையையும் பொறுப்பையும் உங்களில் பெரும்பாலார் சரியாய் உணராதிருந்ததேயாம். உங்கள் முன்னோர்களாகிய சீதை யென்ன, தமயந்தி என்ன, சாவித்திரி யென்ன, நளாயினி யென்ன, இன்னும் எண்ணிலடங்காத பத்தினிமார்களென்ன, இவர்களுடைய சரித்திரங்களை யெல்லாம் வாசித்திருக்கிறீர்களா? அவர்தம் பூதவுடம் பழிந்தும் புகழுடம் பழிந்தனவோ? சந்திராதித்த ருள்ளளவும் அழியாது உலவுமென்பது சத்தியமன்றோ. அவர்களது பின்றோன்றிய நுங்கட்கு இத்தகைய இழிச்சொற்களுண்டாவது அந்தோ என்ன பரிதாபம்!

சோதரிகாள்! உங்களை யிழிவுபடுத்திக் கூறும் நோக்கங்கொண்டு இப்படி வரைந்தோம் என்று கருதாதீர்கள்; உங்கள் நடக்கையால் அம்மொழிகளை நீங்கள் பொய்ப்பிக்க முயலவேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான பிரார்த்தனையும் விருப்பமுமாகும். சிறந்த கற்புடைய புனிதவதிகள் இப்பொழுது மிருக்கின்றன ரென்பது ஒருவராலும் மறுக்கக் கூடாததோருண்மை. ஆயினும் அவ்வாறில்லாதாரின் பொருட்டு சில விதிவிலக்குகள் ஈண்டு வெளியிடப்படுகின்றன.

முதலாவது குடும்பமென்பது தென்னவென்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது. ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் தமதிரண்டொரு சிறாருடன் கூடிவாழ்வது மட்டுமே குடும்பமாகாது. மிருகங்களும் பறவைகளும் இவ்வாறு வசிப்பதைப் பார்க்கிறோம். பல்லோர் குழுமியிருப்பதே குடும்பம். மாமன்மார், மாமிமார், மைத்துனன்மார், நாத்திகள் முதலியவர்களிடத்தில், அன்னிய குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகிய உங்களுக்கு இயற்கையன்பு உண்டாய் விடாதென்பது சுபாவமே. உங்கள் விஷயத்தில் அவர்களுக்கு மப்படியே. இதுயாவர்க்கும் சுபாவமாயமைந்துள்ளதே. இத்தகைய குடும்பங்களிலிருந்து காரியங்களை நிர்வகிக்க உங்களுக்கு ஒற்றுமை யத்தியாவசியமானது. யாவரிடத்தும் அன்புகொண்டு, பேதபுத்தி பாராட்டாது, சொந்த தாய் தந்தை, சகோதர சகோதரிகளைப்போல உங்களால் கூடியவரையில் பாவித்தல்வேண்டும். ஏனெனில் அவர்கள் உங்கள் கணவரது பிரியத்திற்குப் பாத்திரமாகிய பந்துக்களன்றோ? கணவனுக்கு அதிருப்தியுண்டாகா திருக்க நீங்கள் நடந்துகொள்ள வேண்டியதவசியமன்றோ. ஒற்றுமையின்றி யாவரிடத்தும் பகைமைபாராட்டிவந்தால் அக்குடும்பம் சிறப்படையுமோ? 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.' "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்," என்பதைக் கனவிலும் மறக்கலாகாது. அன்பே அன்பைப் பெறும்.

இனி, கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றபடி எல்லா இந்திரியங்களிலும் சிறந்த கண்களுக்கு மையிட்டுக்கொள்வதில் உங்களுக்கு மிக்க விருப்பமுண்டல்லவா? ஆம், அம்"மை" யால் நீங்கள் அழகுள்ளவர்களாகின்றீர்கள். ஆகவே இவ்வெல்லா "மை" களிலும் சிறந்த "மை" யொன்றுண்டு. அதைத்தரித்துக்கொள்வீர்களாயின் உங்கட்குச் சமதையாரோர் எங்கு மில்லை யென்னலாம் படி உயர்ந்த அழகைப் பெறுவீர்கள். உங்களுக் கிஷ்டமானால் சிறிதும் பணச்செலவின்றியே அது பெறக்கூடியது. அதன் பெயரென்னென்பீரோ? அதுவே பொறு"மை." பொறுமையே பூஷணம் பொறுமையின் பெருமையை யாரே அளவிடவல்லார். பொறுமை கடலினும் பெரிது. அன்னியர் உங்களுக்கியற்றும் இன்னல்களையெல்லாம் பொறுமையோடு சகித்துக்கொள்ளுங்கள். தீமையோடு எதிர்க்காதேயுங்கள். தப்புவீர்கள். நீங்கள், குற்றமுள்ளவர்களா யிருந்தால் இது அனுபவிக்கவேண்டியதே யென்றும், குற்றமற்றவராயின் வினைப்பயனெனக் கருதியும் பொறுமையோடிருங்கள்; காரண மின்றி துன்பமிழைத்தோர் தங்கள் மனத்தாலேயே தண்டிக்கப் படுவார்கள்.

ஒற்றுமைக்கும் பொறுமை யவசியம். நீங்கள்மட்டும் மேற்கூறியபடி பொறுமையோடு நடந்து கொள்வீர்களாகில் கொஞ்ச நாட்களுக்குள் மிக்க நல்ல உத்தமிகள் என்று யாவராலும் கொண்டாடப்படுவதை யனுபவமாய்க் காண்பீர்கள்.



இதற்கடுத்தது இன்சொல். இதனால் யாவரையும் நாம் வசப்படுத்திக் கொள்ளலாம். உலகமே இன்சொல்லை யிச்சிப்பது. உபமானமாக கழுதையையும் குயிலையும் பாருங்கள். இன்னிசை பொருந்திய கோகிலத்தையோ, கர்த்தபத்தையோ நீங்கள் விரும்புவது. உங்கள்கணவர் முதலாயினோர் கோபித்துப் பேசும்போது நீங்களும் கோபித்துப் பேசாமல் நகைமுகத்தோடு இன்சொற்களை யியம்புவீராயின் அவர்களது கோபம் எவ்வளவோ சீக்கிரத்தில் சாந்தமடையும். உங்கள் மனதில் எவ்வளவு வருத்தமிருந்தாலும் வெளிக்குக் காட்டாமல் யாவரிடத்தும் இன்சொற் பகருங்கள்; அதனால் உங்களுக்குச் சுகமுண்டு. உங்கள் கணவர் பொருள் சம்பாதியத்தினிமித்தம் வெளிச்சென்று திரும்புகையில் பலவித எண்ணங் கொண்டவர்களா யிருப்பார்கள். சில சமயங்களில் வருத்த முற்றும் சில சமயங்களில் கோபங் கொண்டு மிருப்பர். உங்கள் மாதுரிய வசனங்களால் அவற்றை மாற்றவேண்டும். இல்லையானால் அவர்கள் கோபத்திற் காளாகி வெறுக்கப்படுவீர்கள்.

நீங்கள் குற்றமற்றோரா யிருக்கையிலும், புருடரால் கோபிக்கப் பட்டவர்களாயின், அவ்வேளையே எதிர்த்துப் பேசி உங்கள் நிர்தோஷத்தன்மையை நிரூபிக்கமுயலலாகாது. பாபங்களுக்கெல்லாம் தாய் தந்தையாகிய கோபம் சாந்தப்பட, மாதுர்ய வசனங்கள் வசனித்து மற்றொருசமயம் அதைப்பற்றிப் பொறுமையாய்க் கூறினால் தங்கள் குற்றத்தைத்தாங்களே உணர்ந்து நொந்துகொள்ளுவதுமன்றி, உங்களையும் சமாதானப் படுத்துவார்கள். உங்களுக்கும் ஆறுதலுண்டாகும். இதற்கு மாறாக நடந்து கொள்ளுவீர்களாயின், அதாவது கோபிக்கும் வேளையிலே எதிர்த்துப் பேசுவீர்களாயின், எரியும் தீயில் எண்ணெய் விடுவதுபோலக் கோபம் அதிகரித்து மிக்க துன்பத்தை யுண்டாக்கும். ஏனெனில் கோபம் தோன்றிய விடத்தே மனமும் தன் வயத்ததாகாது அதன் வயத்ததாய்விடும். மனமற்றபோதே அதன்தொழிலாகிய சிந்தனையுமறும்; அச்சமயம் நீங்கள் கூறுவது பயன்படாது. கனிந்தமொழியும் கடுமொழியெனவே கருதப்படும். "பெண்டிற் கழகெதிர் பேசா திருத்தல்," "எதிரிற் பேசும் மனையாளிற் பேய்நன்று," என்று ஆன்றோர் அருளியமொழிகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப்பண்டிதர் இராணிப்பேட்டை.

குறிப்பு:—நமது நண்பர் மேற்கண்ட வியாசத்தின் முதற்பாகத்தில் கூறியவை சில சகோதரிகளுக்குச் சற்றுகோபத்தை யளிக்கலாம் ஆனால் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால் அது அன்பால் தங்களுடைய நன்மைக்கே கூறப்பட்டதென்றும், மாதரைப்பற்றி யவ்வாறு கூறப்பட்டதற்கு மனந்தளாமலே அந்த அபிப்பிராயத்தை மெய்ப்பிக்கும் விதமாய் நடவாதீர்கள் என்றே கூற முயன்றார் என்றும் நன்கு விளங்கும். வண்டிகள், கால்நடைகள் சென்றுகொண்டிருக்கும் பாதைகளில் பல சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தால் அவர்களில் நமக்கு அன்பிருக்கும் நமது பாலர்களை மட்டுமே வைதும் அதட்டியும் வீடுசென்றும்படி துரத்துகிறோமேயன்றி, மற்ற பாலர்கள் விஷயத்தில் அவ்வாறு நடந்துகொள்கிறோமில்லை. அவ்வாறே நமது நண்பர் அன்பினால் மாதர்களைப் பற்றி யவ்வாறு கூறப்பட்டிருப்பதை யெடுத்துக் காட்டினரேயன்றி வேறல்ல.

(பத்திராசிரியர்)

# *அரிவாட்ட நாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே கணமங்கலம் என்கின்ற ஊரில் இல்லறத்தை ஒழுங்காக நடத்துகின்றவரும் மிகுந்த செல்வமுள்ளவருமாகிய தாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுக்குச் செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் தினந்தோறும் கொண்டுபோய் அமுது செய்வித்து வருவார். இப்படிச் செய்யும் காலத்திலே கடவுளுடைய திருவருளினாலே அவருக்கு வறுமை உண்டாயிற்று. உண்டாகியும் அவர் கூலிக்கு நெல் அறுப்பவராகித் தாம் கூலியாகப் பெற்ற செந்நெல்லெல்லாம் சுவாமிக்கு அமுது செய்வித்து கார் நெல்லைக்கொண்டு தாம் ஜீவனம் செய்துவந்தார். செய்யும் நாளிலே, பரமசிவன் அவ்வூரிலிருக்கின்ற வயல்களிலுள்ள நெல்லெல்லாம் செந்நெல்லாகும்படி அருள் செய்ய, நாயனார் மனமகிழ்ந்து தினந்தோறும் வயல்களுக்குப் போய் நெல்லறுத்து, கூலி வாங்கி, இப்படிக் கிடைத்தது பரமசிவனருளே என்று சுவாமிக்கு அமுது செய்விப்பாராஞர். இப்படி நடக்கின்றபடியால் நாடோறும் உணவு இல்லாமைபற்றி, மனைவியார் வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குப் போய் இலைக்கறி கொய்து சமைத்து வைக்க தாயனார் அதை உண்டு முன்போலத் தம் திருப்பணியைச் செய்தார். செய்யும் நாளிலே. தோட்டத்திலுள்ள இலைக்கறியெல்லாம் அற்றுப்போக, மனைவியார் தண்ணீர் வார்க்க, அதனைப் பானம் பண்ணி, திருப்பணியைச் செய்து வந்தார். இப்படிச் செய்து வரும் நாளிலே ஒரு நாள் முன்போலச் சுவாமிக்கு அமுது செய்யும்பொருட்டு செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவும் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டுபோக மனைவியார் பஞ்சகவ்வியங்கொண்டு அவருக்குப் பின்னாக நடந்தார். முன் செல்கின்ற தாயனார் பசியினாலே கால்தள்ளாடித்தவறி விழ, மனைவியார் பஞ்சகவ்வியக் கலயத்தை மூடியிருந்த கையினால் அவரை அணைத்தார். அதனால் எல்லாம் கமரிலே சிந்திப் போகக்கண்டு தாயனார், இனிக்கோயிலுக்குப் போவதனால் பயன்யாது? என்று துக்கித்து, இங்கே சிந்திய செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவையும் கடவுள் அமுது செய்தருளும் பேற்றைப் பெற்றேனில்லையே என்று அரிவாளினாலே தம்முடைய கட்டியை அரியத்தொடங்கினார். அப்பொழுது அவ்வடியார் தம்முடைய கழுத்தை அரிகின்ற கையைத் தடுக்கும்பொருட்டு பிரபஞ்ச மெங்கும் வியாபித்திருக்கின்ற பரமசிவன் உயர நீட்டிய திருக்கரமும் மாவடுவைக் கடித்தலால் உண்டாகின்ற விடேல் விடேல் என்னும் ஓசையும், கமரினின்றும் ஒக்க எழுந்தன. தாயனார், பரமசிவனுடைய திருக்கரம் வெளியில் வந்து அரிவாள் பிடித்த தம்முடைய கையைப் பிடித்த பொழுது பயங்கொண்டு, முந்திய துன்பம் நீங்கி, மனமிக மகிழ்ந்து, அவர் தமக்குச் செய்த திருவருளை வியந்து அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார், சுவாமி இடபாரூடராய்த் தோன்றி, நீ கமரிடத்தில் வைத்த அன்பினாலே செய்த செய்கை நன்றாயிருக்கின்றது. நீ உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில்

* பெரிய புராணத்திலிருந்து நமது ஆனந்தபோதினியின் அன்பர்களுக்காக வடித்து எழுதப்பட்டது.



வாழ்ந்திரு என்று சொல்லி, அவர்கள் உடன் செல்லப் போயருளினார். அந்தத்தாயனார் என்பவர் இங்கே சிந்தியவைகளைப் பரமசிவன் அமுது செய்யப் பெற்றேனில்லையே என்று துக்கித்து அரிவாளினாலே, தம்முடைய கழுத்தை அரிதலுற்றபடியால், அவருடைய பெயர் அரிவாட்ட நாயனார் என்றாயிற்று.

S. அகிலாண்டம் பிள்ளை. சோமபுரம்.

---

## ஒரு விஞ்ஞாபனம்.

மகா-ள-ள-ஸ்ரீ ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர் அவர்கள் சமுகத்திற்கு கோயமுத்தூர் என். வேணுகோபால் புத்தகசாலை மானேஜர் சிறு விஞ்ஞாபனம். ஐயா சென்ற ஆடிமீ வெளிவந்த ஆனந்தபோதினியில் எஸ். வி. பழனியப்பன் என்பார் எழுதிய நல்லொழுக்கம் என்னும் விஷயத்திற்கு ஆவணிமீ சஞ்சிகையில் ஒரு அறிவிப்பு எனத் தலையங்கமிட்ட விஷயம் என்னால் எழுதப் பட்டுளது யான் எழுதிய அவ்விஷயத்திற்கு ஐப்பசிமீ சஞ்சிகையிலும் மார்கழிமீ சஞ்சிகையிலும் மறுப்புகள் காணப்படுகின்றன. சிற்க அடியேன் இப்பொழுது இவ்வாசகம் எழுதநேரிட்ட காரணம் யாதோவெனில் இதிலிருந்து ஓர் பெருமையை அடையவேண்டுமென்றாவது அல்லது மறுப்புக்குமறுப்பு எழுதவேண்டுமென்றாவது முன்வரவில்லை. ஆயின் சிலர் என்மீது கொண்டிருக்கும் அருவருப்பையும் மனவருத்தத்தையும் நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டே இச்சிறுவிஷயம் எழுதத்துணிந்தனன். அதாவது மேற்படி எஸ். வி. பழனியப்பன் எழுதிய நல்லொழுக்கவிஷயம் விசிஷ்டாத்வைத சித்தாந்த தத்துவஞானவிளக்கம் என்னும் நூலினின்றும் மொழி பெயர்க்கப்பட்டதை ஞாபகப்பிசகாய் ஸ்ரீமான் யாழ்ப்பாணநல்லூர் ஆறுமுக நாவலர் நான்காம் பால பாடத்திலிருந்தெழுதப்பட்டது என்று எழுதியனுப்பி விட்டேன். இது விஷயம் தவறிவிட்டதைப்பற்றி நண்பர்கள் மன்னித்தருளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்றியும் மேற்படியார் எழுதிய விஷயம் எந்த நூலினின்றும் எடுத்து எழுதப்பட்டிருந்ததோ அப்புத்தகத்திலுள்ள விஷய மடங்கிய பக்கங்களைக் கிழித்து இத்துடன் அனுப்பியிருக்கிறேன். தயவுகூர்ந்து அதையும் கீழேவரைந்து காட்டும்படிக்கும் என் குற்றத்தை நீக்கியருளும்படிக்கும் இதனால் கேட்டுக்கொள்ளுகிறேன்.

N. வேணுகோபாலன்.
மானேஜர்,
N. வேணுகோபாலபுத்தகசாலை,
கோயமுத்தூர்.

குறிப்பு:—நண்பர்களே! இவ்வருட சஞ்சிகைகளின் 32-ம் பக்கத்தில் மொட்டகுறிச்சி (போர்ட் பாடசாலை) S. V. பழனியப்பன் என்ற நண்பர் "நல்லொழுக்கம்" என்ற விஷயத்தை வெளியிட்டதும், 47-ம் பக்கத்தில் (கோயமுத்தூர் புத்தகசாலை) N. வேணுகோபாலன் என்ற நண்பர் அதைப்பற்றி "அறிவிப்பு" என்ற விஷயத்தை வெளியிட்டதும் பிறகு 223-ம் பக்கத்தில் (கோயமுத்தூர்) P. M. R. மாணிக்கசுந்தரம் பிரகர் என்ற நண்பர் அந்த அறிவிப்பிற்கு மறுப்பு வெளியிட்டதும், அதன்

கீழ் நாம் வரைந்துள்ள குறிப்பும் சந்தாநேயர்கள் அறிந்தவிஷயமே. இப்போது, "அறிவிப்பு" என்ற விஷயத்தை யெழுதிய N. வேணுகோபாலன் என்ற நண்பர் மேலே வெளியிட்டிருக்கும் விஷயங்களை வாசிப்பதோடு, நண்பர்கள் மேற்கூறப்பட்ட விஷயங்களையும் ஒருமுறை நோக்கும்படி கோருகிறோம்.

முன் நாம் குறிப்பெழுதியபோது நாம் கருதியவாறின்றி இப்போது தான் இவ்விஷயத்தின் உண்மை அத்தாட்சியோடு வெளிவந்தபடியால், இதற்கு ஒரு முடிவுரை கூறவேண்டியது அவசியமாகிறது. முன்பு நமது நண்பர் N. வேணுகோபாலன் தமது அறிவிப்பில் S. V. ப. என்பவர் நாவலருடைய வாசக புத்தகத்திலிருந்து தமது விஷயத்தை யெழுதியுள்ளார் என்று தவறாய்த்தெரிவித்ததால் நாம் 224-ம் பக்கத்தில் வரைந்த நமது குறிப்பில் அவ்வாறு எழுத நேர்ந்ததற்காக இப்போது மிக்க விசனமுறுகிறோம்.

ஒருவரும் பிறக்கும்போதே கல்வியறிவோடு உதிப்பதில்லை யென்பது யாவரு மறிந்ததே. நமக்கு முன்பிறந்தோருடைய நூல்களிலிருந்தே நாம் யாவும் கற்றுக் கொள்கிறோம். அப்படி யிருந்தும் ஒருவன் அவ்வாறே தான் கற்றுத் தன் அறிவை விர்த்திசெய்துகொண்டபின், தன் மனப் பெட்டியில் சேகரித்துக்கொண் டிருக்கும் விஷயங்களைத் தன் அநுபவத்தோடு தன் சொந்த மொழிகளால் பிறருக்கு நன்கு புலப்படும் வண்ணம் அமைத்து வெளியிடும் விஷயமே 'அவன் எழுதியது' என்று கூறப்படுகின்றது. நூற்களும் இவ்வாறே.

அப்படிக்கின்றி ஒரு குறித்த நூலைப்பார்த்து அதிலுள்ள விஷயங்களை முழுதும் அவ்வாறேயாவது, இடையிடையில் விட்டாவது, அங்கொரு வார்த்தை இங்கொருவார்த்தை மாற்றியாவது எழுதப்பட்ட விஷயம் 'அவன் எழுதியது' ஆகாது. அத்தகைய வியாசங்களை யெழுதுவோர், இது இன்ன நூலிலிருந்து எழுதப்பட்டது, அல்லது அதிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது, அல்லது இன்ன நூலையாதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது என்றேனும் வெளியிடல் வேண்டும்.

இப்போது நமது நண்பர் S. V. பழனியப்பன் என்பவர் எழுதியுள்ள "நல்லொழுக்கம்" என்ற விஷயம் "தத்துவஞான விளக்கம்" என்ற ஒரு பழைய நூலிலிருந்து எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. ஆனால் முழுதும் அப்படியே எடுத்துக்கொள்ளப்படாமல் இடையிடையில் ஒவ்வொரு விஷயம் விடப்பட்டும் எங்கோ ஒவ்வொரு வார்த்தை மாற்றப்பட்டும் இருக்கின்றன. ஆகையால் இந்த விஷயம் மேற்படி நூலிலிருந்து எழுதப்பட்டது, அல்லது அதிலிருந்து பொறுக்கி எடுத்து எழுதப்பட்டது, என்றுவது கூறப்படவேண்டுமே யன்றி, இதை யொருவர் தாமாய் எழுதியதென்று கருத நியாயமில்லை.

நண்பர் N. வேணுகோபாலன் என்பவர் வெளியிட்ட அறிவிப்பிற்கு மறுப்பெழுதிய நண்பர் P. M. R. மாணிக்கசுந்தரம் பிரதர், "N. வேணுகோபாலன் தமது அறிவிப்பில் குறித்தபடி இது நாவலர் நூலிலிருந்து வரையப்பட்டதல்ல, "தத்துவஞானவிளக்கம்" என்ற நூலிலிருந்து எழுதப்பட்டது" என்று கூறுது N. வேணுகோபாலன் என்ற நண்பர் எழுதிய தவறினால் சேர்ந்த அநுகூலத்தை யாதாரமாகக் கொண்டு தமது மறுப்பை வெளியிட்டதற்கு மிக்க விசனிக்கிறோம். ஏனெனில் இவர் தமது நண்பர்



S. V. ப. விற்காகப் பரிந்து வந்து தம்மறுப்பை யெழுதியவரையில் இவர் உண்மையறிந்தே யெழுதியிருக்கவேண்டும். "தத்துவஞானவிளக்கம்" என்ற நூலில் பிரஸ்தாப விஷயங்கள் அடங்கியுள்ள 37 முதல் 44-ம் பக்கம் வரையிலேயே நம்மிடம் அனுப்பப்பட்டிருப்பதால் அதன் நூலாசிரியர், சரியான பிரசுரகாலம் முதலியன விளங்கவில்லை. ஆனால் அப்பக்கங்களின் தோற்றத்தால் அது ஒரு பழையநூல் என்று மட்டும் ஊகிக்கத்தக்கதா யிருக்கிறது.

இதே அறிவிப்பைப்பற்றி 147-ம் பக்கத்தில் "நண்பர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்." என்றவிஷயத்தை வெளியிட்ட தா. கி. தேசிகர் (அனுமங்கப்பட்டு) என்ற நண்பரும் இதை கவனிக்குமாறு கோருகிறோம். N. வேணுகோபாலன் என்ற நண்பர் ஆறுமுக நாவலர் வாசகத்திலிருந்து வந்த விஷயம் எழுதப்பட்டதென்று தவறாய்த் தெரிவித்ததே, தா. கி. தே. என்ற நண்பரும் அவ்வாறு எழுத நேர்ந்ததற்குக் காரணம் என்பது இப்போது யாவர்க்கும் நன்கு புலப்படும்.

முடிவில் இவ்விஷயத்தைப் பற்றி நாம் மிக்கவிசனிக்கிறோம். விஷயதானம் புரியும் நண்பர்கள் இனியேனும் ஆனந்தன்மேல் கிருபை பாலித்து இத்தகைய விஷயங்கள் நடைபெறற்கு இடங்கொடாதொழுகும் வண்ணம் மிகவும் பிரார்த்திக்கிறோம். பத்திராதிபர்.

## கம்பரை யிழித்துக்கூறிய துண்மையா ?

மேற்கண்ட தலைப்பெயரிட்ட விஷயமொன்றை நமது சந்தாநேயரில் ஒருவராகிய D. M. சிவபாக்கியம் பிள்ளை (வெல்லிங்டன், நீலகிரி) என்பவர் நமக்கு அனுப்பியுள்ளார்-அதன் முற்பாகத்தில், நமது சஞ்சிகையின் 208-ம் பக்கத்தில் "கம்பனை யிழிவாய்க் கூறுவானேன்" என்ற வியாசத்தில் "பெண்கல்வி" என்ற சஞ்சிகையின் 304-வது பக்கத்தில் பிரசுரித்திருப்பதாய்க் கூறப்பட்டுள்ளதும் நடராஜன் என்பவரால் எழுதப்பட்டதுமான விஷயத்திற்கு மறுப்பு எழுதி யிருக்கிறார்.

ஆனால் அதில் நடராஜர் எழுதிய விஷயத்தை தவறென்று கண்டித்தெழுதவாவது, அல்லது தமது ஆன்மார்த்த குருவென அவர்கூறும் சிவத்தியாகனந்தன் என்பவர் எழுதியபடி அகலிகை சாபவிமோசனம் பொய்யே யென்று நிரூபிக்கவாவது முயலாது (சுபட்சத்தைத் தாபிப்பது, பிறபக்ஷத்தைக் கண்டிப்பது என்ற இரண்டையும் விட்டு) தமது குரு மகரிஷியென்றும் தற்காலத்து இறைவனருளால் காரணார்த்தமாய்ப் பூவுலகிற்கனுப்பப்பட்ட மஹானென்றும், * இன்னும் பலவாறாய்ப் புகழ்ந்து கூறி அத்தகைய மகான்வார்த்தையை மறுக்காது அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டுமென்று முடிக்கிறார்.

இக்காரணத்தோடு 'பெண்கல்வி' யிலுள்ள விஷயத்திற்கு மறுப்பெழுதும் நமது நண்பர் அதை யச்சஞ்சிகையிலேயே வெளியிடுவது உசிதமாதலாலும் அப்பாகத்தை நாம் ஈண்டு வெளியிடல் அநாவசியமாயிற்று.

இனியவர் தம்கடிதத்தின் பின் பாகத்தில், சீடன் என்பவர் நமது சஞ்சிகையின் 208-ம் பக்கத்தில் "கம்பனை யிழிவாய்க் கூறுவானேன்"

* இங்கு பெரிய எழுத்திலுள்ளவை அவர் மொழிகளே.

என்ற தலைப்பெயரோடு வெளியிட்டிருக்கும் விஷயத்தை மறுத்தெழுதினர். அப்பாகத்தைமட்டும் கண்டு வெளியிடுகிறோம். அது பின்வருமாறு:—

" * * * * * * *

* * * * * * *

இல்லாத ஒரு விஷயத்தை உண்டென்று ஒப்புக்கொண்டு நம்புவதில் உலகத்தோர்க்கு என்ன கெடுதியுண்டாகும் எனச் 'சீடன்' என்பவர் ஆனந்தபோதினி டிசம்பர் சஞ்சிகையிற் கேட்பது நியாயமா? பெரியோர் கூறிய வாக்குக் குற்றங்களில் வெற்றுரையாடல் ஒரு குற்றமல்லவா? பொய் குறளை வன்சொல்லோடு இப்பயனில் சொல்லுஞ் சேர்த்துக் கணிக்கப்படவில்லையா? அதனால் 'சீடன்' என்று கையொப்பமிட்டவர் பொய்யைப் பொய்யெனக் கூறியதற்காக எமது குருநாதனை யிழித்துக் கூறுவது சரியன்றெனவே யெனக்குத் தோன்றுகிறது. உலகத்து ஜன நிலையின் மன நிலையைத் தூக்கத்தினின்று தட்டி யெழுப்பி அதனை மீண்டும் மீண்டும் ஸ்வப்ன நிலைக்குச் செல்லாதபடி ஜாக்கிரதைப் படுத்தும் அவரது மொழியைக் கேவலம் தமது கல்விப் பெருமையையும் வாசாலகத்தையுங் காட்டவந்தவர்களது மொழிபோலக் கருதாது, இத்தகைய பெரியார்களது வாக்கிலிருந்து வரும் ஸாரநிறைந்த வார்த்தைகளை யொவ்வொருவரும் கேட்டுக் குணப்படுவார்களென்று நம்புகிறோம். சாபானுக்கிரகசக்தி யுண்டென அநுமானத்தால் மாத்திரமே யன்றி பிரத்தியட்சத்திலும் இப்பெருந்தகையாரிடத்து யாம் பலவாறும் கண்டுள்ளோம் என்பதையும் நம் நண்பர்கள் அறிவார்களாக.

வெல்லிங்டன்
13—1—19. சிவபாக்கியம்."

நேயர்களே!—சிவபாக்கியம் என்ற நண்பருடைய மேற்கண்ட மொழிகளையும், சீடன் என்பவர் 208ம் பக்கத்தில் எழுதியுள்ள விஷயத்தையும் நண்பர்கள் ஒத்திட்டுப்பார்த்தால் உங்களுக்கே யுண்மை சுலபமாய் வெளியாகிவிடும். ஆகலால் நாம் இதைப்பற்றி இரண்டொரு விஷயங்களை மட்டும் சுருக்கமாய்க்கூறி முடித்து விடுகிறோம்.

நமது சந்தா நேயர் மேலே கூறியுள்ள வாற்றால் 'சீடன்' அகலிகை சாபவிமோசனத்தை நடக்காத விஷயம் என்று நம்புவதாகவும், இல்லாத ஒரு விஷயத்தை உண்டென்று ஒப்புக்கொண்டு நம்புவதில் உலகத்தோர்க்கு என்ன கெடுதி யுண்டாகும் என்று கூறியதாகவும் தெரிகிறது.

நேயர்களே! 208-ம் பக்கத்தில் சீடன் கூறியிருப்பதை வாசித்தால் அவர் அகலிகை விஷயம் மெய்யென்றே தாயுமானவர் மேற்கோளோடு தாபித்திருப்பதுமன்றி, இதைப் பொய்யென்றுமுன் இது என் மெய்யல்லவென்பதை நிரூபிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறாரென்றும், இன்னும் (209ம் பக்கத்தின் ஆரம்பத்தில்) நமது முன்னோரின் சாபானுக்கிரகசக்தியையும் அரியதெய்வீகச்செயல்......முதலிய வற்றையும் அறியாதாரே யிதைப் பொய்யென்று கூறுவர் என்று மொழிந்திருக்கிறாரென்பதும் அங்கை நெல்லிபோல் விளங்கும். அப்படியிருக்க, இந்த நண்பர் சீடன் வார்த்தைகளை யிவ்வாறு நேர்மாறாக மாற்றி வெளியிடுவதால் இவர் மனமும் வாக்கும் ஒருமித்துப் பேசுகிறாரா வென்பதை நீங்களே சிந்தித்துப்பார்க்கக்கோருகிறோம்.



தம்மால் குருவாக மதிக்கப்பட்டவர் மகரிஷியென்றும் அவர் சாபானுக்கிரக சாமர்த்திய முடையவரென்றும் நம்புவதோடு, அவர் மொழிகளுக்கு மறுத்துக்கூறாது யாவரும் ஸார நிறைந்த அவ்வார்த்தைகளைக் கேட்டுக் குணப்பட வேண்டும் என்றும் கருதும் இவர், முன்னோர்களின் சாபானுக்கிரக சாமர்த்தியங்களையும், ஸ்ரீராமரைப் போன்ற அவதார தெய்வங்களின் தெய்வீக வல்லமையையும், தாயுமானவர் முதலிய ஞானிகளின் வாக்கையும் அலட்சியமாய்க் கருதிப் பொய்யென்று கூறத் துணிவது என்னமதியோ நீங்களே சிந்தித்தல்வேண்டும்.

தாம் குருவாய்க் கருதும் சிவத்தியானனந்தர் என்பவரை யிவர் எவ்வளவோ உயர்த்திக் கூறுவதைப் பற்றி நாம் ஒன்றும் புகலவில்லை. ஏனெனில் ஒருவர் இன்னொருவரைக் குருவாய் நம்பிப் புகழ்ந்து கூறுவதை நாம் மறுத்துக் கூறப்புகுவது அநாவசியமும் பாபமுமான காரியமே. அதோடு அவரைப் பற்றி நாம் சுத்தமாயறியோம்.

ஆனால் இதுகாறும் சமயாசாரிகள் முதலிய மகான்களும், உலகில் தோன்றிய தாயுமானவர், பட்டினத்தடிகள், குமரகுருபர சுவாமிகள், குமார தேவர், சாந்தலிங்கர் முதலிய எண்ணரிய ஞானிகளும் பொய்ச் சமயங்களைக் கண்டித்து, உலகிற்கு மெய்ஞ்ஞானத்தைப் போதித்து, அடியார்களுக்கு நல்வழிகாட்டும் தொண்டையே மேற்கொண்டார்களன்றி தீட்டின மரத்திலேயே கூர்பார்ப்பது போல் நம்முன்னோர் நூல்களைக் கற்று அதனால் உண்டான அறிவு வளர்ச்சியைக் கொண்டு, அவர்களால் நமது நன்மைக்காக இயற்றப்பட்ட புராண இதிகாசங்கள் முதலிய அவர்கள் மொழிகளிலேயே குற்றங்கள்கூறிக் கண்டித்து, அதற்காக வாதஞ் செய்யும் தொழிலில் தலைப்பட்டவர்களாவது, அத்தகைய விஷயங்களுக்கு இடந்தந்தவராவது உண்டென்று நாம் இதுகாறும் கேள்விப்படவில்லை.

சீடன் கூறியது "முன்னோர்களை அலட்சியமாய்க் கூறலாகாது, அவர்கள் மொழிகளில் அநாவசியமான குற்றங்களை யேற்படுத்தலாகாது, அவர்கள் அபூர்வவல்லமைகளில் அவநம்பிக்கை வைத்து அவற்றைப் பொய்யென்று கருதலாகாது" என்பதேயன்றி, இந்த நண்பர் கூறுவதுபோல் அவர் ஒருவரையும் இழித்துக் கூறவில்லையென்பது, அவர் வியாசத்தால் நன்கு விளங்குவதால் நாம் அதைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை.

விஷயம் இவ்வாறிருப்பதாலும், நமது நண்பர் சீடன் கூறியவற்றை மாறாக வெளியிட்டதாலும், நாம் உண்மையை யுணர்ந்து கொள்ளலாமாதலால், இத்தகைய அநாவசியமான வாதங்களுக்கு இனி நமது சஞ்சிகை இடந்தராது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## பொது அறிவிப்பு.

சந்தா நேயர்களும், விஷயதானம் புரியும் நண்பர்கள், சஞ்சிகாபிமானிகளும் தயவு செய்து இந்தவேண்டுகோளைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

1. சிலர் தங்களுக்குப்பிரியமான ஒரு நூலிலுள்ள ஒரு விஷயத்தைப் பற்றி, அல்லது தங்களுக்குத் தோன்றிய ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி

எழுதி அதற்குச்சஞ்சிகையில் விடையளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சிலர் பயனற்ற விஷயங்களைப்பற்றியும் சந்தேக நிவர்த்திசெய்யும்படி எழுதுகிறார்கள். ஒருவர் "ஜீவவதை செய்யலாகாது மாமிசம் புசிப்பது மகா பாபம் என்று ஜீவகாருண்யத்தைப்பற்றி மிக்க விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. அதில் எனக்கொரு பெரிய சந்தேகம் தோன்றியிருக்கிறது அதற்கு விடை விபரமாய்ச் சஞ்சிகையில் தெரிவிக்க வேண்டும். அச்சந்தேகமாவது:—புலிமட்டும் மனிதரையும் ஆடுமாடுகளையும் கண்டால் ஜீவகாருண்யம் பாராமல் கொன்று தின்று விடுகிறதே, அதுமட்டும் ஏன் அப்படிச்செய்கிறது?" என்று கேட்கிறார்.

நேயர்களே! சந்தேகம் என்றால் பலருக்கும் சந்தேகம் உதிக்கத்தக்க விஷயமாயும், அச்சந்தேக நிவர்த்தி யாவர்க்கும் அவசியம் வேண்டியதாயும் யாவரும் விரும்பத்தக்கதாயும் இருத்தல் வேண்டும். ஒருவர்க்குமட்டும் திருப்தியளிக்கத்தக்கதாயிருக்கும் விஷயங்களைச் சஞ்சிகையில் வெளியிடல் உசிதமாகாது. தனித்தனியாய் அவரவர்களுக்கும் விடையளிப்பதற்கு நமக்கு அவகாசமில்லை. ஆகையால் நேயர்கள் இது விஷயத்தில் நம்மை மன்னிக்க வேண்டுகிறோம்.

2. சிலர் தங்களுக்குப் பிரியமான ஒரு விஷயத்தைப்பற்றி, அல்லது தங்கள் அனுபவப்படி அவசியம் என்று தமக்குத் தோன்றும் எந்த விஷயத்தைப்பற்றியாவது வியாசம் எழுதிச்சஞ்சிகையில் வெளியிடவேண்டுமென்று கேட்கிறார்கள். அவ்வாறு கோரப்பட்ட விஷயம் பொதுவாய் யாவர்க்கும் பிரியத்தையும் பயனையும் அளிக்குமென்றும், இதுகாறும் அத்தகைய விஷயம் வெளியிடப்படாததால் நாம் வெளியிடவேண்டியது அவசியமென்றும் தோன்றினாலன்றி, ஒவ்வொருவர்பிரியப்படிக்கும் நடப்பது சாத்தியமாயிராதென்று தெரிவித்துக்கொள்கிறோம்.

3. அனேகர் தாங்களே வலிய எழுதும் ஒரு விஷயத்தைப்பற்றி விடையளிக்கத் தபாற்பில்லை யனுப்பாமலே, தங்கள் கடிதத்திற்கு விடையளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். பயனற்ற கேள்விகளைக் கேட்டு அதற்கு விடையளிக்கும்படிக்கும் அப்படி யெழுதுகிறார்கள். அத்தகையோர் நாம் விடையளிக்காததற்கு நம்மேல் குறைகூறா திருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

விஷயதானம் புரியும் நண்பர்கள் தமிழ்மாதம் 15-உ. க்குள்ளாவது இங்கிலீஷ் மாதம் 30உ க்குள்ளாவது அனுப்பிவிட்டால்தான் அடுத்த (தமிழ்) மாதச்சஞ்சிகையில் அதை வெளியிட அனுகூலப்படும் என்பதை மறவாதிருக்கக் கோருகிறோம்.

(பத்திராசிரியர்.)

---

## வைத்தியக் குறிப்பு.

(119-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதைக் கண்ணுறும் எனது சகோதர சகோதரி சந்தாதாரர்களாகிய உங்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், சிலகாலமாய் எனக்கு நேரிட்ட சில சந்தர்ப்பக் குறைவினால் என் புல்லறிவிற்கு எட்டிய வரையில் எழுதி வந்த வைத்தியக் குறிப்பு விஷயதானம் நின்றிருந்ததைப் பற்றி விசனிக்கிறேன். அதுவிஷயமாய்ப் பல நண்பர்கள் கடித மூலமாய்க் காரணங்



கேட்டிருகின்றபடியால், அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்துடன் இது தெரிவித்துக்கொள்ளப் படுகிறது. மேல் நாட்டு வைத்தியம் பரவியிருக்கும் இந்நாளில் நம் நாட்டு வைத்தியத்தின் பெருமை குன்றியிருப்பது சகலர்க்கும் தெரிந்த விஷயமே; ஆனாலும் இதைப்பற்றி விரிவாய் எழுத மனமில்லையாயினும் நண்பர்கள் பொருட்டுச் சிறிது எழுதுகின்றேன். சில பண்டிதர்களும் பிரபுக்களும் முறையிடும் வாக்கியங்களைக் கொண்டு சில நாளைக்கு முன் நமது சென்னை இராஜப்பிரதிநிதி சபையில் சில அங்கத்தினர்களால், 'நமது ஆயுர்வேத ஔஷதங்களைப் பலர்க்கும்பயன்படுமாறு இராஜாங்கத்தார் ஏன் உபயோகித்தலாகாது, என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, பிரதான மெம்பர்களால் அவ்வாறு கேட்கப்பட்டகேள்வி நிராகரிக்கப்பட்ட விஷயம் சகலரும் உணர்ந்ததாகும். அதை முன்னிட்டுப் பலர் பல சபைகள்கூடி, நிராகரித்தது பிசகெனப் பேசினதாய்த் தெரியவருகின்றது. இதை முன்னிட்டு நமது சென்னை மேல் நாட்டுப்பிரதான வைத்தியர் செய்த யுக்தியாவது:—ஸ்ரீமான் டாக்டர் கோமன் என்பவரை ஆயுர்வேத ஔஷதங்களைப் பரிசீலனை செய்து உபயோகப் படும்படியான ஔஷதங்களைக் கண்டு பிடிக்குமாறு சொல்ப காலத்திற்கு நியமித்துள்ளதாய்த் தெரிகின்றது. இந்நியமனத்தால் ஒரு பிரயோஜனமும் விளையாமல் போவதுமன்றி, ஆயுர்வேத ஔஷதங்கள் உபயோக மற்றன வென்று மேல் நாட்டு அதிகாரிகள் நிராகரிப்பதற்கு ஒரு பெரும் சகாயமா மென்று சொல்லலாம்; எப்படியெனில், சாதாரணமாய் ஒரு மேல் நாட்டு வைத்தியர், அபாரமாய் இருக்கப்பட்ட, நமது ஆயுர்வேத சாஸ்திரங்களை நன்கு உணராமலும் சிலகாலமாவது ஔஷதங்களின் உண்மை முறைகளைத் தெரிந்து செய்வதில் சிரத்தை யெடுத்துக் கொள்ளாமலும் பலவிடங்கட்குச் சென்று, ஏதோசில வைத்தியர்களைக் கூப்பிட்டு உங்களிடம் இருக்கும் மருந்துகளைக் கொடுங்களெனச் சிலவியாதிகளைக் குறிப்பிட்டு கேட்பதனால் என்ன ஔஷதங்கள் இவர்களுக்குக் கிடைக்கப் போகின்றதென்று தெரியவில்லை. நமது இந்து தேசமானது வெகுநாட்களாய்ச் சீர்திருத்தம் குறைந்து தலை கெட்டுக் கிடக்கும் இந்நாளில் ஒழுங்காய் சாஸ்திர விற்பத்தியுடன் மஹான்களின் முறைகளை ஆதரிப்பவர் பெரும்பான்மையும் இல்லை யெனவே சொல்லலாம். இத்தகைய இக்காலத்தில் இவர்கள் செய்யும் பரிசீலனையின் முடிவால் உண்மை மருந்துகளைத் தெரிந்துக் கொள்ளாமல் ஏதோ சில ஔஷதங்களைச் சிற்சில பண்டிதர்களைக் கேட்டு தெரிந்து கொண்டு, அம்மருந்தில் குணமில்லை யென்றும் மேல் நாட்டு மருந்தே விசேடமென்றும் வெகு சுலபமாய் ஆயுர்வேதத்தை நிராகரித்து விடுவார்களென்பது திண்ணம். ஆனால் இதைக் கண்ணுறும் நமது சகோதர சகோதரிகளும், வைத்திய பண்டிதர்களும் இந்நாளில் செய்ய வேண்டிய வேலை யாதெனின், நமது ஆயுர்வேதம் நீடித்தோங்க மேல் நாட்டார்களின் உதவியைக் கோராமலே ஆங்காங்கு ஆயுர்வேத பள்ளிக் கூடங்களும், ஆயுர்வேத சிகிச்சாசாலைகளும் ஏற்படுத்தல் அவசியமாம். இதற்கு முக்கியமாய் தற்காலத்தில் செய்யவேண்டிய காரியம் யாதெனில், மேல் நாட்டாரைப்போல் நம் நாட்டாரும் முதல் முதல் வைத்திய பத்திரிகைகள் நடத்த ஆரம்பித்தல் வேண்டும். அப்பத்திரிகைகளில் ஒவ்வொரு பண்டிதர்களும் அவரவர்கள் செய்து வரும் சிகிச்சைகளையும் வியாதிகளின் மூலங்களைக் கண்டு பிடித்த விதங்களையும் தெளிவாக ஒளிப்பில்லாமல் ஔஷதங்களின் விவரத்தோடு வெளிப்படுத்தல் வேண்டும். அன்றியும் பல வைத்திய

சங்கங்கள் ஏற்படல் வேண்டும். அச்சங்கங்களில் வாரத்திற்கொரு முறை பலபண்டிதர்களும் அவரவர்களால் கையாளப் பட்ட ஔஷதங்களின் இரகசியங்களை ஒருவருக்கொருவர் தாராள மனதுடன் வெளிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். நமக்குத் தெரிந்த ஔஷதங்களின் முறைகள் அன்னியர்க்குத் தெரிந்தால் நமக்கு இலாபம் உண்டாக மாட்டாதென்னும் குறுகிய எண்ணம் எதுவரையில் நம்மவர்களை விட்டொழியாதோ, அதுவரை நம்தேசம் முன்னடையாதென்பது திண்ணம். முன்னோர்கள் ஔஷதங்களை இரகசியமாய் உபயோகிக்க வேண்டு மென்ற விதியேற்படுத்தியிருப்பது உண்மையே யாயினும், அந்த இரசிய மென்பது நோயாளிகளுக்கும் வைத்திய பண்டிதர்களல்லாதவர்களுக்கும் சொல்லக்கூடாதென்பதே ஒழிய, வைத்திய பண்டிதர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் சொல்லிக் கொள்ளக் கூடாதென்பதல்ல.

முன்னோர், சகலரும் கையாண்டு உஜ்ஜீவிக்கும் வண்ணம் முறைகளை எழுதிவைத்தார்களே ஒழிய, தற்காலத்தைப் போல் ஒருவர் தனக்குத் தெரிந்ததை வேறுயாருக்கும் சொல்லாமல் தன்னோடு அழிந்துவிடு மாறு செய்யவில்லை. ஆகையால் நம் தேச ஔஷதங்கள் விருத்தி யடைய வேண்டுமானால் சகலரும் தங்கள் தங்களுக்குத்தெரிந்துள்ள அருமை வாய்ந்த மருந்துகளை, பலவைத்திய பண்டிதர்களும் அறிந்து பலர்க்கும் பயன் படுமாறு செய்வித்தல் தற்காலத்தில் அவசியமாயிருக்கின்றது. இல்லையேல் நாளடைவில் நமது சிகிச்சைகள் நாசமடைவதோடு பூராவும் நம் தேசத்தில் ஆயுர்வேதம் என்னும் பெயர் இல்லாமல் போய்விட மேல்நாட்டார்களால் நேரிட்டாலும் நேரிடும். நமது தேசப்பெருமைவாய்ந்த சிகிச்சைகள் சில வாசிப்பில்லாத தாழ்ந்தவர்களும் ஔஷதங்களின் குணகுணங்களை உணராது சிகிச்சை செய்யும் பண்டிதர்களு மாகியவர்களால் செய்யப்பட்டதே நம் நாட்டு வைத்தியம் பலரால் கைவிடப் பட்டதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆனபடியால் தற்காலம் பண்டிதர்களெனப் பேர் வாய்ந்த சில சுதேச வைத்தியர்களுக்கு உணர்த்த வேண்டியவை யென்னவெனில், அவர்களுக்கு தேக தத்வங்களையும், அவயவங்களின் நிலைமையையும், இருதயம், குரல்வளை, பித்தாசயப்பை, ஜீரணப்பை, உதிரப்பை, நீர்ப்பை, மலப்பை, குடல் இவைகள் இருக்கு மிடங்களும், இவைகளின் பேதத்தால் உண்டாகக் கூடும் வியாதிகளின் லக்ஷணங்களையும் நன்றாயுணருமாறு செய்வித்தல் வேண்டும். அன்றியும் இனிவரும் பண்டிதர்களுக்கு கலாசாலை ஏற்படுத்திச் சில காலம் அக்கலாசாலையில் பயின்று தேர்ச்சியடைந்த பிறகு வெளிவந்து சிகிச்சை செய்ய ஆரம்பிக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

ஒரு சுதேச வைத்தியர் விஷஜுரத்தால் பீடிக்கப்பட்ட வியாதியஸ்தருக்கு அநேக நாட்களாகப் பலமருந்துகளைக்கொடுத்துச் சரீரத்தை உஷ்ணிக்கச் செய்து இருமல் முதலிய பல வியாதிகளும் மேற்கொண்டு தொந்தரவு செய்யுமாறு செய்து விட்டார். அவ்வியாதியஸ்தர் மனம் நொந்து மேல்நாட்டு வைத்தியரிடம் செல்லும்படி நேரிட்டது. அவர் பார்த்த வுடனே உன்வயிற்றில் ஜுரக்கட்டியானது இருக்கின்றதென்றும், அதற்கு நீ ஒரு மாதம் வரை கொய்னா மருந்தை உபயோகித்து வந்தால் குணமடைவாயென்றும் சொன்னார். அவ்வண்ணம் அநுஷ்டித்து அவர் குணமடைந்து மீண்டும் அச்சுதேச வைத்தியரிடம் சிகிச்சை செய்து கொள்வதினின்றும்



நீங்கி விட்டார். அதற்கு என்ன காரணம் என்று யான் கேட்டதற்கு "அச்சுதேச வைத்தியருக்கு என் வயிற்றிலிருக்கும் கட்டியை உணரும் திறமையின்மையால் ஜுரக்கட்டிக்கு கொடுக்க வேண்டிய ஔஷதங்களை விட்டு சாஸ்திரங்களில் கூறிய சகல மருந்துகளையும் உபயோகப்படுத்தி என் சரீரத்தை நலிக்கச் செய்து விட்டார். கடைசியில் மேல்நாட்டு வைத்தியரால் நான் குணமடைந்தேன். ஆனபடியால் இச்சுதேச வைத்தியர்களுக்கு உள்ளே யிருப்பதை உணரும் திறமையின்மையால் இவர்கள் பலமருந்துகளை கொடுத்து சரீரத்தைக் கெடுத்துவிடுகின்றார்கள் ஆனபடியால் சுதேச வைத்தியத்தில் எனக்கு நம்பிக்கையில்லை" யென்று சொன்னார். இதனால் நாம் உணர்ந்து கொள்ளவேண்டியது யாதெனில் நம்நாட்டு வைத்தியர்களைச் சீர்திருத்த ஏதுவின்மையால் நம்முன்னோர்களின் அருமைவாய்ந்த சிகிச்சைகள் பயனற்றனவென மதிக்கப்படும்படி நேரிடுகின்றது. அது போல் அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லக் கூடுமானாலும், இவைகளால் இனி நாம் தெரிந்து செய்துகொள்ளவேண்டிய திருத்தம் யாதோ அதை ராஜாங்கத்தார் உதவி யில்லாமல் நாமே செய்துகொள்ள வேண்டு மென்பது என்சிற்றறிவிற்கு தோன்றியபடியால் இதை வெளியிடலாயினேன். இனி பழையபடி வியாதிகளின் காரணங்களையும் சிகிச்சைகளையும் தெரிந்த வரையில் அடுத்த சஞ்சிகையில் எழுதத் தொடங்குவோம். கடவுள் அருள்புரிவாராக. (தொடரும்)

டாக்டர் M. மாசிலாமணி முதலியார்.

---

## கற்கோட்டை—நாவல்

(279-ம் பக்கத்தொடர்ச்சி.)

டாக்டர் பராங்குசன் தினம் அக்கு சென்று அவளுக்கு ஔஷதமளிப்பானானதால், சில நாட்களுக்குள் அவள் மடிவாள்; அதோடு நமது இரகசியத்தை யறிந்த ஒரு ஆசாமியும் ஒழிகிறாள். அப்புறம் நாம் அஞ்ச வேண்டிய காரணமேயில்லை" என்று சிந்தித்துச் சந்தோஷத்தோடு அறையை விட்டு வெளிச்சென்றான்.

அந்தோ, கெட்ட எண்ணமுடையவர்களுக்கு, "எங்கும் நிறைந்த ஒருவன் நமது உள்ளத்திலேயே யிருந்து நமது எண்ணங்களைத்து மறிகிறான். அவன் நமது கெட்ட எண்ணம் நிறைவேறும்படி விடுவானா, நமக்குத் தக்க தண்டனை விதிப்பானல்லவா?" என்று மனதில் உதிப்பதில்லை.

இராணி அறையைவிட்டு வெளிச் சென்ற இரண்டு நிமிடங்கள் கழித்து, அங்கிருந்த ஒரு உடுப்பு அலமாரி திறக்கப்பட்டதும் அதன் உள்ளேயிருந்து கோகிலம் வெளிவந்தாள். அவள் முகம் சவம்போல் வெளுத்திருந்தது. நடந்த விபரீதமான சதியாலோசனைகளைக் கேட்டதாலும், எந்த சமயம் தான் ஒளிந்திருப்பதை யிராணி கண்டுவிடுவாளோவென்ற திகிலாலும், அவள் மனம் மிக்க கலவரமடைந்து முகம் விகாரப்பட்டிருந்தது.

முன்பு கோகிலம் தங்கம்மாளிடம் சம்பாஷித்த பிறகு அவளுக்கும் இராணிக்கும் என்ன சம்பாஷணை நடக்கிறது பார்ப்போமென்று கருதி

இராணியும் தங்கம்மாளும் சம்பாஷித்த அறையிலுள்ள கள்ளக்கதவின் பின் மறைந்து உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள். நடந்த சம்பாஷணையும் பிறகு இராணி தூர்க்காளை வரும்படி கூறியதையும் கேட்டாள். இராணியின் பெரிய இரகசியம் எதுவோ தங்கம்மாளுக்குத் தெரிந்திருக்கிறதென்றுமட்டும் தெரிந்துகொண்டாள். ஆனால் அது இன்னதென்று புலப்படவில்லை. தூர்க்காள் வருமுன் இராணி தங்கம்மாளைத் தான் அழைத்துக்கொண்டு தன் அறைக்குச் செல்ல இரகசியக்கதவைத் திறந்தபோது, கோகிலம் ஓடிப்போய் இராணியின் அறையிலிருந்த உடுப்பு அலமாரியில் நுழைந்து கதவை மூடிக்கொண்டாள். பிறகு தூர்க்காள் வந்ததும், அவள் தங்ககம்மாளைத் தூக்கிச் சென்றதும், பிறகு டாக்டர் வந்தபின் நடந்த இராணியின் சதியாலோசனைகளும் யாவும் கேட்டாள். இராணி சென்ற பிறகு கோகிலம் இப்போது நாம் எப்படி இந்த அநீதச் செய்கைகளைத் தடுக்கலாகும் என்று சற்றுநேரம் சிந்தித்துத் தனக்குள் ஒரு தீர்மானம் செய்துகொண்டு, அங்கிருந்து புறப்பட்டு இராணி யச்சமயம் வழக்கமாயிருக்கும் அறைக்குச் சென்றாள். அங்கு இராணி யில்லை. காப்டென் தினகரன் மட்டும் முகவாட்டத்தோடு உட்கார்ந்திருப்பதைக் கண்டு திரும்பிவிட முயன்றாள். அவள் நோக்கத்தை கண்ட தினகரன்,

"ஆ! கன்னிகையே, என்னைக்காணவும் உனக்கு வெறுப்பா யிருக்கிறதோ. நான் அவ்வளவு கெட்டவனாய்விட்டேனே?" என்றான்.

கோகிலம் :—"இல்லை யில்லை. அப்படியல்ல" என்று கூறிக்கொண்டே அவன் அருகிற்சென்று "இப்போது வந்த சமாசாரம் தெரியுமோ?" என்றாள்.

தினகரன் :—ஆம் தெரியும், அரியநாயகி யகப்படவில்லையாம். அதைக் கேட்டே இராணி நாலாதிக்குகளுக்கும் ஆட்களை யனுப்பி யிருக்கிறாள்.

கோகிலம் :—இராணி எப்படியாயினும் அரியநாயகியை யுனக்கு மணம் புரிவித்தே திருவதென்று பிரதிக்கினை செய்து கொண்டிருக்கிறாள். நான் காதால் சற்று முன்பு கேட்டேன்.

தினகரன் :—"அடடா இதென்ன அநீதம். நான் தப்புவதற்கு ஒருவழி தான் இருக்கிறது. அதாவது சொல்லாமல் எங்காவது போய் மறைந்திருந்து இக்குழப்பங்களெல்லாம் ஒழிந்தபின் தலைகாட்ட வேண்டும். ஆ! இராணி மட்டும் என் மனப்பிரியப்படி மணம் புரிந்து கொள்ளுமாறு விட்டுவிட்டால்......"

கோகிலம் :—அப்போது அரியநாயகியை மணம்புரிந்து கொள்ள மாட்டாயோ? அவள் மிக்க வனப்புடையவளாயிற்றே.

தினகரன் :—அரியநாயகி வனப்புடையவளே யென்பதிற் றடையில்லை. ஆனால் என் மன விருப்பத்திற்குப் பொருந்தியமாதிரி யல்ல. மேலும் அவளை விட அதிக காலமாய் நான் அறிந்திருக்கும் ஒரு கன்னிகையின்மேல் என் விருப்பம் உறுதியாய் நிலைத்து விட்டிருக்கிறது. இப்போது என் மனதிலிருந்த பெரிய இரகசியத்தை யுன்னிடம் கூறிவிட்டேன். ஆனால் ஆள் யாரென்பதை யிப்போது கூறலாகாது. இன்னம் அதற்கு வேளை வரவில்லை......

கோகிலம் :—அல்லது என்னிடம் கூறப் பிரியமில்லையோ?



தினகரன் :—"ஆ! தவறாய் எண்ணிவிட்டாய், அடடா, உன் மனதிற் படவில்லையா. வேறு யாருமல்ல. நான் என் அன்பு முழுமையும் நாட்டி யிருப்பது உன்மேல்தான்" என்றான்.

இதைக்கேட்ட கோகிலம் உள்ளம் பூரித்தாள். ஏனெனில் அவன் மேல் அவள் காதல்கொண்டிருந்தாள். இருவருக்கும் பரஸ்பர அன்பிருக்கிறதென்று வெளியானதே தினகரன்,

"ஆ! எந்தத் தெய்வமாவது என்னை யிந்த இக்கட்டினின்றும் மீட்டுவிட்டால்" என்றான்.

கோகிலம்:—"அப்படியே நடக்கும். அதற்குவழி யிருக்கிறது. விபரம் இப்போது கூறச்சமயமல்ல. ஆனால் உனக்கு நம்பிக்கை யுண்டாக ஒரு சங்கதிமட்டும் கூறுகிறேன். உன்மேல்கொண்ட காதலால் நீ அரியநாயகியை மணக்காதபடிசெய்ய நானே அவளையிங்கிருந்து தப்பிப்போய்விடும்படி உதவி செய்தேன். இப்போது நடக்க வேண்டியதில் நீ யெனக்கு உதவிசெய்ய வேண்டும். இரவு பத்து மணிக்கும் பதினொரு மணிக்கு மிடையில் நீ ஆயுதசாலையில் என்னைச் சந்திக்க வேண்டும்," என்றாள்.

தினகரன் அவ்வாறே யொப்புக் கொண்டபின் கோகிலம் வெளிச் சென்றாள்.

## 23-வது அத்தியாயம்.

இரவு மணி சுமார் ஒன்பதரை யிருக்கும். இராணி போஜனம் முடித்துக் கொண்டபின் தன் படுக்கை யறைக்குச் சென்று, ஒரு பெட்டியிலிருந்த ஒரு சாவியை யெடுத்து, அடுத்த அறையிலிருந்த இரகசிய அறையினருகில் கதவிற்கருகில், டாக்டருக்குக் காட்டிய விடத்தில் வைத்து விட்டுத் தன் மஞ்சத்தில் சயனித்துக் கொண்டாள்.

பிறகு கால்மணி நேரங்கழித்து கோகிலம் கையில் ஒரு தீபத்தோடு மெதுவாய் அங்கு வந்து அந்தத் திறவுகோலை யெடுத்துக்கொண்டு இராணிக்குச் சந்தடி கேட்கப் போகிறதென்று அச்சத்தோடு மெதுவாய்ப் படிகளில் ஏறிச்சென்றாள். அங்கு அத்தகைய சுழல்படிக ளிருப்பது மட்டும் கோகிலத்திற்குத் தெரியுமேயன்றி, அது எங்கு செல்கிறது என்று தெரியாது. அதில் ஏறிச் சென்றபோது, அம் மார்க்கம் ஒரு கோபுரத்திற்குள் ஏறிச் செல்கின்றதென்று தெரிந்தது. முதலிலிருந்தே மேலிருக்குக் ஸ்தலம் சிறைச்சாலையா யுபயோகப்படுவதற்கென்றே உத்தேசிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று அவள் மனதிற்குப் புலப்பட்டது.

கோகிலம் உச்சிக்குச் சென்றதே அங்கிருக்கும் காட்சியைக் கண்டு திடுக்கிட்டாள். அதாவது அங்கு கூடம்போன்ற விடத்தில் இரண்டு அறைகள் இருந்தன. அவ்வறைகளின் கதவுகளுக் கிடையில் பூரண கவசமணிந்த ஒரு வீரன்கையில் ஒரு பெரிய கண்டகோடரி வைத்துக்கொண்டு நிற்கிறான். அவன் இடுப்பில் அகன்று நீண்ட ஒரு வாளாயுதம் தொங்கிக் கொண்டிருக்கிறது. கோகிலம் அவ்வுருவத்தைக் கண்டதும் திடுக்கிட்டுத் திகைத்தாளேனும், அவ்வுருவம் சற்றும் அசையாது நிற்பதை யறிந்து, ஓகோ, இதுகவசமணியப்பட்ட ஒரு சிலாவுருவமென்று அறிந்து தைரியத்தோடு முன் சென்றாள்.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

காளயுக்திஞு பங்குனிமீ சாலிவாகன 1840-கலியுகாதி 5019,
பசலி 1327-28—கோல்லம் 1093-94,
இங்கிலீஷ் 1919-ம்ஞு மார்ச்சுமீ—ஏப்ரல்மீ

| பங்குனிமீ | மார்ச்சுமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | வெ | திர-33-55 | ஆயி-3-49 | மர-60 | மரணயோகம் மரணயோகம் |
| 2 | 15 | ச | ச-35-31 | மக-6-11 | சித்-6 மர | தனியநாள் |
| 3 | 16 | ஞா | ○-58-15 | பூர-9-51 | சி-10 அமி | 7-க்குள் மீனம் விவாகம் |
| 4 | 17 | தி | பிர-40-49 | உத்-14-33 | சித்த-60 | சீமந்தம் |
| 5 | 18 | செ | து-46-31 | அஸ்-19-55 | சித்த-60 | கரிநாள் |
| 6 | 19 | பு | தி-51-37 | சித்-26-29 | சித்த-60 | தென்னை கமுகுநட |
| 7 | 20 | வி | ச-56-39 | சுவா-32-49 | அ-33 சித் | வஸ்திரதாரணம் |
| 8 | 21 | வெ | பஞ்-60-0 | விசா-39-5 | சித்த-60 | பசுக்களை வாங்க |
| 9 | 22 | ச | பஞ்-1-47 | அனு-44-51 | சித்த-60 | வித்யாப்பியாசம் |
| 10 | 23 | ஞா | சஷ்-5-59 | கேட்-49-48 | மர-50 அ | கடன்விமோசனம்செய்ய |
| 11 | 24 | தி | சப்-9-9 | மூல-52-3 | சித்த-60 | |
| 12 | 25 | செ | அ-11-11 | பூரா-56-20 | சித்த-60 | |
| 13 | 26 | பு | நவ-11-53 | உத்-56-42 | அமி-57 சி | |
| 14 | 27 | வி | தச-11-8 | திரு-57-49 | சித்த-60 | |
| 15 | 28 | வெ | ஏ-9-38 | அவி-56-59 | சித்த-60 | |
| 16 | 29 | ச | துவா-8-5 | சதை-54-58 | மர-60 | |
| 17 | 30 | ஞா | திர-3-4 | சது-55-19 | சித்-55 அ | |
| 18 | 31 | தி | ●அ-53-1 | உத்-48-50 | சித்த-60 | |
| 19 | 1919ஞ ஏப்ரல்மீ 1 | செ | பிர-47-29 | ரேவ-45-4 | சித்த-60 | |
| 20 | 2 | பு | து-41-28 | அசு-41-5 | சித்த-60 | |
| 21 | 3 | வி | தி-35-29 | பர-36-54 | சித்த-60 | |
| 22 | 4 | வெ | ச-29-35 | * கார்-32-57 | சித்த-60 | கிருத்திகை விரதம் |
| 23 | 5 | ச | பஞ்-24-8 | ரோக-29-24 | அ-30 சித் | கரிநாள் |
| 24 | 6 | ஞா | சஷ்-18-9 | மிரு-26-23 | சித்த-60 | அமாவாசை, தர்ப்பணம், |
| 25 | 7 | தி | சப்-15-29 | திரு-24-22 | சித்-24 அ | உதயம் கிருஷிசெய்ய |
| 26 | 8 | செ | அ-11-40 | புன-22-45 | சித்த-60 | பொன்னுருக்க; மழை |
| 27 | 9 | பு | நவ-9-23 | பூச-22-25 | சித்த-60 | பசுக்களைவாங்க |
| 28 | 10 | வி | தச-8-15 | ஆயி-23-16 | சித்-23 மர | ஓமாரம்பம் செய்ய |
| 29 | 11 | வெ | ஏகா-8-26 | மக-25-24 | சித்-25-சி | புதுதானியம் புசிக்க |
| 30 | 12 | ச | து-10-3 | பூர-28-46 | சித்-29 மர | தானியம்வீட்டில்சேர்க்க |
| 31 | 13 | ஞா | திர-12-40 | திர-12-40 | அமிர்-60 | சூளையில் தீவைக்க |
| 1 | 14 | தி | சித்தாத்ரி தமிழ் வருஷப்பிறப்பு. | | | |

| | | | |
|---|---|---|---|
| ர-பு செசு | | கே | குரு |
| | 9-மே-சுக் 23-மே-செ | | சனி |
| | ராகு | | |

PRINTED AND PUBLISHED BY N. MUNISAMI MUDALIAR, AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY, STREET, MADRAS.

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

164

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 4 } காளயுக்திஞு பங்குனி மீ கஉ
1919ஞு மார்ச்சு மீ 14உ { பகுதி 9

12 APR 1919 MADRAS

### கடவுள் வணக்கம்.

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடயா னைகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே
யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லா விடந்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள நீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்சொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே.

நாற்றச் சடலத்தை யொன்பது வாசல் நடை மனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக் கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர் கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்கு முண்டோகதி சேர்வதுவே.

பொய்யா ருலக நிலையல்ல கானற் புனலெனவே
மெய்யா வறிந்தென்ன வென்று விதனை விடப்படுமோ
கையான் மௌனந் தெரிந்தே கல்லானிழற் கண்ணிருந்த
வையாவப் பாவென் னரசேழைக் கன்னுடை யாரமுதே.

# ஆனந்தபோதினி

காளயுக்தி௵ பங்குனி௴ ௧௨

## நற்புத்தி.

ஒருவர் நற்குணங்களைப் பொருந்தி நன்னெறிகளில் ஒழுக வேண்டிய முறைகளைப் போதிப்பதற்கே நற்புத்தி கூறல், நற்புத்தி புகட்டல் என்று பெயர். இந்நற்புத்தியை மனிதர் சாதாரணமாய் மூன்று வழிகளி லடையலாகும்.

1. நூற்களின் வழியாயடைவது.

2. பிறர் போதிப்பதால் அடைவது.

3. உலகத்தில் நடக்கும் சம்பவங்களையும், அவற்றாலுண்டாகும் நற்பயன் கெட்டபயன்களையும் கண்டு, அந்த அனுபவத்தால் அடைவது.

1-வதாகிய நூற்களின் வழியாய் நற்புத்தி யடையலாமென்பதால் நூற்களில் நற்குணங்களும் நன்னடக்கைகளும் போதிக்கப்பட்டிருக்கின்றன என்று உணரலாம். ஆனால் அப்படிப்போதிக்கப்பட்டிருப்பதில் சாதாரணமாய் இரண்டு விதங்களுண்டு. எவ்வாறெனின்:—

நீதி நூற்கள், இதிகாச புராணங்கள், ஆன்றோர்களால் நமக்கு வழி காட்டிகளாக அருளப்பட்ட ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, குறள், நாலடியார் முதலிய இன்னும் அநேக நூல்கள் நேரே நற்புத்திகளைப் புகட்டுகின்றன. அந்நூல்களை வாசிப்போர் அவற்றில் கூறப்படும் நற்புத்திமதிகளைச் சுலபமாயுணர்ந்து கொள்ளலாகும்.

சரித்திரங்கள், கதைகள், நாவல்கள், சில புராணங்கள், இத்தகைய நூல்களிலும் நல்ல நீதிகளும் புத்தி மதிகளும் அடங்கியிருக்கின்றன. ஆனால் அந்நூல்களை வாசிப்போர் அவற்றில் கூறப்பட்டுள்ள செயல்களினால் நேரிடும் பயனைக்கொண்டு, அவற்றில் அடங்கியுள்ள நீதிகளையும் புத்திமதிகளையும் கிரகித்துக் கொள்ளவேண்டும். இதற்கு ஒரு சிறு திருட்டாந்தமட்டும் கூறுகிறோம்:—

கந்தன் என்ற ஒருவன் தன் எதிர் வீட்டுக்காரனாகிய பொன்னுசாமி என்பவனுடைய க்ஷேமத்தைக் கண்டு மிக்க பொறாமை கொண்டு அவனுக்குத் தீங்கு செய்யக்கருதினான். இதற்காக அவன் அயல் ஊரிலிருந்த ஒரு கள்ளனுக்கு நூறு ரூபாய் கொடுப்பதாகவும், கள்ளன் பொன்னுசாமியின் வீட்டைக் கொள்ளையிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தான். கள்ளனுக்குப் பொன்னுசாமியின் வீடாவது கந்தன் வீடாவது இருக்குமிடம் தெரியாது. ஆகையால் கந்தன் அதை விவரித்துக் கூறத்தொடங்கித் தான் வசிக்கும் வீதியின் பெயரையும் அவ்வீதி யிருக்குமிடம், அதற்கு வரவேண்டிய பாதை முதலியவற்றையும் கூறியதும், கள்ளன், "இவ்வளவுபோதும்; வீதியை ஐயமின்றி யறிந்துகொண்டேன். இனி பொன்னுசாமியின் வீடு ஒன்றே தெரியவேண்டும். இரவில் அடையாளம் தவறிவிடலாகும். நான் சொல்கிறபடி செய்தால் ஒரு தவறும் நேராமல் காரியம் நிறைவேறிவிடும். நான் காகிதத்தாற் செய்யப்பட்ட ஒரு தாமரை மலரைத் தருகிறேன். நீ யதைக் கொண்டுபோய் நாளையிரவு எட்டு மணிக்குமேல் வீதியில் சந்தடியடங்கியதே அந்த மலரைப் பொன்னுசாமி வீட்டுத் தெருக் கூரையில் சொருகிவிடு. மறுநாள்காலை யவன் வீடும் அதிலுள்ள யாவும் வெந்து நீறாய்ப்போயிருக்கப் பார்த்துக்கொள்," என்று கூறி, அத்தாமரை மலரைக் கந்தனிடம் அளித்தனுப்பினான்.

கந்தன் அக்கள்ளன் கூறியபடி மறுநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு வீதி பூரண நிச்சந்தடி யடைந்தபின் புஷ்பத்தைப் பொன்னுசாமி வீட்டின் கூரையிற் சொருகிவிட்டுச் சந்தோஷத்தோடு போய்ச் சயனித்துக் கொண்டான்.

அரைமணி நேரங் கழித்து, பொன்னுசாமிக்குக் கொஞ்சம் அறிமுகமானவனும் கந்தனுக்கு விரோதியானவனுமாகிய சுந்தரம் என்பவன் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்து வீட்டிற்குத் திரும்பி வருபவன் அவ் வீதிவழியே வரும்போது பொன்னுசாமி வீட்டண்டை வருகையில் நிமிர்ந்து பார்த்தான். காகிதமலர் பிரகாசமாய்க் கண்களுக்குப் புலப்படவே யருகிற் சென்று அதையெடுத்துப் பார்த்தான். அச்சமயம் அவன் மனதில் திடீலென்று ஒரு யோசனை யுதித்தது. அதாவது, "பொன்னுசாமி யெங்கிருந்தோ யிதைக் கொணர்ந்து அழகிற்காகத் தன் வீட்டில் சொருகிவைத்திருக்கிறான். நாம் இதையெடுத்துக் கந்தன் வீட்டில் சொருகி விட்டால், காலையில் இருவர்க்கும் சச்சரவு நேர்வதோடு கந்தனை யாவரும் தூஷித்திகழ்வார்கள்," என்றெண்ணி, அந்த மலரைக் கந்தன் வீட்டிறப்பில் சொருகிவிட்டுப் போய்விட்டான்.

இரவு சுமார் ஒருமணிக்குக் கள்ளன் தன் கூட்டாளி யொரு

வனைத் தனை கட்டிக்கொண்டுவந்து புஷ்பம் சொருகி யிருந்த வீட்டைத் தெரிந்துகொண்டு, தன் புஷ்பத்தை யெடுத்துக்கொண்டு வீட்டின் முன்பக்கம் பின்பக்கம் இருபுறங்களிலும் தீ வைத்து விட்டுச் சென்றான். கடைசியில் கந்தன் நூறு ரூபாய் கூலிகொடுத்துத் தன்வீட்டைத் தானே கொளுத்திக் கொண்டதாய் முடிந்தது.

நேயர்களே! இத்தகைய கதைகளைப் பெரும்பாலர் வாசித்ததே ஒரு வேடிக்கையாய் மட்டுமே யிதைக் கருதி யடுத்த நிமிடம் மறந்துபோவார்கள். இத் தகையோர் தாங்கள் வாசிப்பதின் பயனை யொருபோதும் அடையார்கள். கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்கும் அறிவாளிகள் இதில் அடங்கியுள்ள புத்திமதியைக் கிரகித்துக் கொண்டு நற்பயனடைவார்கள். இக்கதையால் பொறாமை என்பது ஒரு கெட்டகுண மென்றும், மகா பாதகமான செயல்களையும் செய்யும்படி அது தூண்டுகிறதென்றும், அக்குணத்தால் அவன் இவ்வுலகில் கெடுதியும் அபகீர்த்தியும் அடைவதோடு மறுமையிலும் நரக வேதனை யடைவானென்றும், ஆகையால் மனிதன் எப்போதும் அக்குணம் தன் மனதில் உண்டாகாதபடி மிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்றும் உணரலாகும். நண்பர்களே! எந்த நூலை வாசித்தாலும் காலங்கழித்தலுக்காகவும் வேடிக்கை யார்த்தமாகவும் மேல்போக்காய் வாசிப்பதோடு விட்டு விடுகிறவர்கள் ஒருபோதும் அறிவாளிகளாகமாட்டார்கள் என்பதையும், ஒவ்வொரு நூலிலும் பொதிந்து கிடக்கும் நீதிகளையும் புத்திமதிகளையும் கிரகித்துக்கொள்வதே அறிவாளிகளுக் கழகாகு மென்பதையும் நாம் மறக்கலாகாது.

2-வதாகிய பிறர் கூறும் புத்திமதிகளை மேற் கண்டதிலும் விசேஷமான வைகளாக நாம் கொள்ளவேண்டும். ஏனெனில் அத்தகையோர்களிற் பெரும்பாலர் தங்கள் அனுபவத்தால் விஷயங்களின் உண்மைகளை யறிந்து கூறுபவர்கள்

ஆனால் மதியீனத்தால் அனேகர் இத்தகைய புத்திமதிகளையே மிக்க அலட்சியம் செய்வதோடு, புத்தி கூறுவோரையும் அலட்சியமாய்ப் பேசி விடுகிறார்கள். அந்தோ! இது பெருந்தவறே யாகும். இக்காலத்தில் செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து முதலியவைகளையுடையவன் கூறும் மொழிகளையே மிக்க சிலாக்கியமாய் எடுத்துக் கொள்கிறார்கள். ஒருவன் வறிஞனாய் மட்டும் இருந்து விடுவானாகில் அவன் எத்தகையோனாயினும் அவன் மொழி பிறரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சிலர் முதலில் கெட்ட விஷயங்களில் அறியாமையால் பிரவேசித்து விட்டு அவற்றால் நேரிடும் தீங்குகளை யனுபவமாயறிந்து



பிறகு அவ்வழிகளினின்றும் திரும்பியோ, திரும்பக் கூடாமலே யிருந்து கொண்டோ, அத்தகைய விஷயங்கள் தீயவைகளென்று பிறர்க்குப் புத்திமதி கூறுகிறார்கள். அத்தகையோர் புத்திமதியை நாம் மிக்க விசேஷமானதாய்க் கருதி யேற்றுக் கொள்ளவேண்டும். அதனால் நாம் நன்மையடைவோம்.

அதைவிட்டு, "அடடா! இவனே அம்மாதிரி நடந்து வந்தவர்களில் முதல்பேர்வழியா யிருந்தான். இவன் இன்னொருத்தருக்குப் புத்திகூற வந்துவிட்டான்," என்று புத்திகூறுவோரையே யிகழ்ந்து கூறி அவர்கள் புத்திமதியை யலட்சியம் செய்துவிடுவது பெரும்பாலருக்குச் சுபாவமாயிருக்கிறது. இது அறிவுடையோர் செய்கையாகாது. அப்புத்தி மதிகள் அக் கெட்டநடக்கையால் வரும் தீமைகளை யனுபவமாய் அறிந்தோரால் கூறப்படுவதால், அத்தகையோர் புத்திமதிகளையே நாம் விசேஷமாய்க் கொள்ளவேண்டும். உண்மையில் (ஏதோ தவறித் தீயவழியில் பிரவேசித்து விட்டாலும்) அவர்கள் அறிவுடையோரேயாவர். ஏனெனில் சாதாரணமாய் உலகில் ஒருவன் ஒரு கெட்டவழக்கத்தைக் கைக்கொண்டால் மற்ற பேருக்கு "அது நல்லதே அதில் ஒரு குற்றமுமில்லை" என்றே உபதேசிப்பான். இதுவே பெரும்பாலோர் வழக்கம். தான் அப்படிச் செய்வதாலேயே, அது குற்றமென்று அவன் மனச்சாட்சிக்குத் தெரிந்திருப்பினும், அன்னியர் முன் அது குற்றமற்றதென்றே சாதிப்பான். இத்தகையோர் ஒருபோதும் அறிவாளிகள் அல்லது நல்லவர்கள் என்று கருதப்படத் தக்கவர்களாகார்கள். அறிவாளி "நானே அப்படிச் செய்கிறேனெனினும் அது கெட்டவழக்கமேயாகும். அதனால் பலகெடுதிகளிருக்கின்றன. ஆகையால் அந்த நடக்கைக் குள்ளாகாதீர்கள்," என்றே அன்னியர்க்குப் போதிப்பான். அத்தகையோர் புத்திமதி நம்பத்தக்கதும், விசேஷமானதுமாகும். அதையிகழ்ந்து விடுவதால் நாம் அடையக் கூடிய நன்மையை யிகழ்ந்து விடுகிறோம்.

"நான் சொல்கிறபடி நட; ஆனால் நான் நடக்கிறபடி நடவாதே," என்ற பழமொழி யிதையே விளக்கிக் காட்டுகிறது.

3-வதாகிய புத்திமதி உலகில் ஒருவன் நடக்கும் நடவடிக்கைகளையும் அதனால் அவன் அடைந்த பலனையும் உணர்ந்து நாம் புத்தி யடைதல். அது ஆழ்ந்த மதியுள்ள அறிவாளிகளாலேயே அடையத்தக்கது. இதை விரிக்கிற் பெருகும்.

பத்திரிகைகளின் மூலமாய் நாம் வாசித்தறியும் புத்திமதிகள், ஒருவர் நமக்கு நேராய்க் கூறும் புத்திமதிகளேயாகும். இப்போது நம் தாய்நாடு அடைந்திருக்கும் சீர் கேடான நிலைமையைக்

கண்டு மனந்தளராது நாம் க்ஷேமமடைய வேண்டுமென்று நம் நாட்டிலுள்ள அறிவாளிகளும் பெரியோர்களும் பத்திரிகைகளின் மூலமாய் நமக்குக் கூறும் புத்திமதிகள் இத்தகையனவே. ஆனால் அந்தோ! பெரும்பாலர் அவற்றைக் கதைப்புத்தகங்களிலுள்ள சம்பவங்களாகமதித்து மேற்போக்காய் வாசித்து, "பேஷ்! இவர் நன்றாயெழுதியிருக்கிறார். க. சோ. நா. சு. என்பவர் மித்திரனில் நேற்று "நம்நாட்டுக் கைத்தொழில்," என்று எழுதி யிருந்தாரே, அது மிக்க நேர்த்தியானவியாசம். ஆ! அவர்கல்வியெங்கே அவர் பிரசங்கம் செய்தாலும் அப்படித்தான். அன்று——————ஹாலில், "நம் தாய்ப்பாஷையின் சீர்கேடு," என்பதைப்பற்றிப் பேசினார். சும்மா ஒரு மணிநேரம் சரமாரியாய்ப் பொழிந்து விட்டார்....." என்று இவ்வாறு பயனற்ற பேச்சுக்களைப் பேசிவிட்டு, அந்த ஆன்றோர் கூறிய அரிய புத்திமதிகளை யப்போதே யடியோடு மறந்து விட்டு மறுநிமிடம் அழியும் யாக்கைக்கு உணவுதேடும் மிருகத்தொழில் ஒன்றிலேயே மனநாடியவர்களாய்ச் செல்கிறார்கள். இவ்வாறு இவர்கள் எத்தனை யுகங்கள்தான் பத்திரிகைகளை வாசித்தாலும் ஒருகாலும் ஈடேறப்போகிறதில்லை. அந்தோ! எப்போதுதான் ஆன்றோர்கூறும் அப்புத்திமதிகளை யுணர்ந்து. அவ்வழிகளில் நடந்துய்யும் வண்ணம் நம்மவர்கள் வைராக்கியமும் சிரத்தையும் கொள்வார்களோ நாமறியோம். எல்லாம் வல்ல பரமபதியே கருணைகூர்ந்து இது விஷயத்தில் நமக்கு நல்லறிவளிக்கும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

சமயோசிதப்படி, "இக்காலத்தில் நமக்குக் கூறப்படும் முக்கியமான புத்திமதியென்ன," என்பதைப்பற்றி மறுமுறை கூறுவோம். கருணாநிதி யருள்புரிவாராக.

ஓம்தத்ஸத்.

---

## தெய்வச்செயலின் அந்தரங்கம்.

(265-ம் பக்கத்தொடர்ச்சி.)

தெய்வச்செயல் அந்தரங்கமாக இருப்பானேன்? எல்லாம் வல்ல இறைவன், தன்நீதி மறைபொருளாயிருப்பின் பலர் சந்தேகத்தினலேவீழ்ந்து, நம்பிக்கையற்றோராய் விடுவரென்பதை யறியாரோ?

ரஹஸ்யம்! ரஹஸ்யம்! வேதாந்த ரஹஸ்யம்! சித்தாந்த ரஹஸ்யம்! எல்லாம் ரஹஸ்யமே! காரணம்யாது?

மதஸம்பந்தமான ஸாஸ்திரங்களெல்லாம் ரஹஸ்யமாகப் பெரியோர்களிடமிருந்தே அறிய வேண்டுமாம்.

என்னே ரஹஸ்யம்! தெய்வச்செயல், வேதாந்த ஸித்தாந்தமாகிய மதஸம்பந்தமான ஸாஸ்திரங்கள் இவையெல்லாம் ரஹஸ்யமாகவே யிருக்க



வேண்டியது அவசியமே; இல்லாவிடில், கண்டவர்களெல்லாம், யாவற்றுக்கும் பிசகான அர்த்தங்களையும், வியாக்கியானங்களையும் செய்து கொண்டு, தான் ஞானஸித்தனாகப் பிதற்றுவரன்றோ?

உண்மையில் ரஹஸ்யத்திற்கே ஓர்விதப் பிரத்தியேக மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எவ்விஷயத்தையும் ரஹஸ்யமென்ற போர்வையால் மூடியிருக்கும்வரை அதன்மதிப்பிற்கு பயம் நேரிடுவதில்லை. ஸ்திரீ புருஷ சரீர அமைப்பைப் பிறந்தமேனிக்கே பார்க்கப் புகுவோமாயின் உடனே உயிர்துறக்க விரும்பும் மானவஸ்தையைத் தந்துவிடும். இதை உத்தேசித்தே வஸ்திர பூஷணாதிகளால் நம்மை அலங்கரித்துக் கொள்ளுகிறோம். வைத்தியன் மருந்துகளின் ரஹஸ்யத்தைச் சொல்லி விட்டால் அவனது வைத்தியம் செவ்வையாக நடைபெறாது. ஜோஸ்யனுக்கும் இப்படியே; எல்லாவற்றையும் சிறிதும் ஒளிக்காது உண்மையாகவே கூறிவிடுவானேயாகில், ஜோஸ்யனுக்கு வரும்படிக் குறைவு நேரிடுவது கட்டாயம். ஒரு ராஜ்யத்தின் ராஜதந்திரங்களும் சட்டங்களும் ரஹஸ்யமாகவே இருக்க வேண்டும்;—இருக்கின்றன. இவ்விதம் ரஹஸ்யமாக இருக்கும் ராஜதந்திரம் முதலியவற்றை அறிந்துகொள்ள வேண்டியதை உத்தேசித்துத் தானே எல்லா ஐரோப்பிய வல்லரசுகளும் துப்பறியும் உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

ரஹஸ்யத்தின் மதிப்பிற்கு உதாரணமாக ஓர் கதை கூறுவோம்:—

முன்னோர்சமயம் ஓர் பிராம்மணன் ஓர் ஊர்வழியே சென்றுகொண்டிருக்கையில் வழி நடையலுப்பினாலும், பசிதாகத்தினாலும் களைப்புற்று பிராம்மகுலத்தில் பிறந்த ஓர் உலோபியின் வீட்டையடைந்து, "சிறிதசனம் அளிக்க வேண்டும்," என, அவ்வுலோபி; "யாரையா? போம்; போம்," என்று கோபத்தோடு நவின்று, "இது சத்திரமல்ல," என்று அதட்டவும், வந்த பிராம்மணர், "ஆயின் அந்த ஊரிற் செய்ததுபோல செய்தாற்றான் இவனாட்டம் அடங்கும்," என்று தனக்குட்டானே கூறிக்கொள்வதேபோல், உலோபியின் காதுகளில் விழும்படி புகன்று, தன் மேல்அங்கவஸ்திரத்தையெடுத்து, அவ்வீட்டுத் திண்ணைமீது விரித்தான். இதைக்கேட்ட அந்த உலோபி, "இதேதடா இது? என்ன செய்து விடுவாரோ" என்று பயந்து, வந்தவருக்கு உபசாரஞ்செய்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, உண்டியுதவிப் பின் சாவகாசமாக, "ஸ்வாமி! அவ்வூரிற் செய்தகாரியத்தைப் பற்றித் திருவுளம் பற்ற வேண்டும்," என, அவர், "அவ்வூரிலும் இப்படித்தான் ஓரகத்திற்சென்று அசனம் கேட்டதற்கு, அவர்கள் அளிக்கவில்லை; உடனே யெது எப்படியானாலும் சரி யென்று (ஓர் அங்கவஸ்திரத்தைக் காட்டி) இம்மேலுத்தரீயத்தை அவ்வீட்டுத் திண்ணையின்மீது விரித்து இடதுகையைத் தலைக்கணையாக வைத்துக்கொண்டு படுத்திருந்து வெயில் தாழ்ந்தவுடன் வேறோரூர் சென்றேன்," என்றனராம். அற்பவிஷயங்களிலெல்லாம் ரஹஸ்யம் எவ்வளவுதூரம் உபயோகப்படுகிறது? இப்படியிருக்கக் கடவுளின் அனந்தகல்யாண குணச்செயல்கள் இரஹஸ்யமாகவே யிருக்கவேண்டுமென்பது நாம் கூறாமலே விளங்கும். இதற்குமேல் கூற எனக்குத் தெரியவில்லை. பிழையுளதேல் கற்றுணர்ந்த பெரியோர் பொறுப்பாருகடவின.

ஓம்தத்ஸத்.

T. J. ரெங்கநாதன், [illegible], தஞ்சாவூர்.

* குறிப்பு:—நமது நண்பர் மேலே கூறியவாறு அநேக விஷயங்கள் நமது நன்மைக்காகவே இரகசியமாய் வைக்கப்பட் டிருக்கின்றன. அ[illegible]லும் கடவுளுடைய கிருத்தியங்கள் அவ்வாறே நிகழ்கின்றன. யாவற்றையும் அறிந்து கொள்ளத்தக்க சாத்திரங்களனைத்தும் மனிதனிடம் இருந்தபோதிலும், பகவான் ஆத்மாக்களின் வினைக்கீடாய்ப் போகங்களை யூட்டிவைக்கும் இரகசியத்தை மனிதன் அறிந்து கொள்ளமுடியாது. இப்போது நாம் ஜோதிடம் பார்த்தே பலகாரியங்களைச் செய்கிறோம். முக்கியமாய்க் கலியாணத்தை யெடுத்துக்கொள்வோம். ஜோதிடரை யழைத்துப் பெண்ணின் ஜாதகம் பிள்ளையின் ஜாதகம் இரண்டையும் கொண்டு, அல்லது ஜாதக மின்றேல் பேரைக்கொண்டு நட்சத்திரங்களைக் கண்டறிந்தாவது, இருவருக்கும் பொருத்தம் நிமித்தம் சரியாயிருக்கின்றனவா வென்று அறிந்தபின்பே யாவரும் கலியாணம் செய்கிறார்கள். ஜோதிடருக்குக் காசு கொடுக்கச் சக்தியின்றேல் சகுனமாவது பார்க்கிறார்கள்.

அப்படியிருந்தும் பல விடங்களில் மணமுடிந்த மறுநாளே மணமகள் விதவையாய்விடுகிறாள். இத்தகைய கோரசம்பவம் பலநாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தேயிருக்கிறோம், இப்போதும் பார்க்கிறோம். இதே சென்னையில் நடந்த சித்திரை, வைகாசி, ஆனிமாதங்களில் மணமுடிந்த கன்னிகைகளில் சுமார் ஏழெட்டுப்பேர் ஒருவாரம் முதல் மூன்றுமாதங்களுக்குள்ளாகவே மங்கிலியங்களை யிழந்தார்கள். இருவர்களில் ஒருவர் இருவர் தவிர மற்றபேர்கள் தங்கள் கணவன்மாரிடம் வாய்ப்பேச்சுக்கூட பேசியறியார்கள். அந்தோ இவர்களுக்காகப் பார்த்த ஜோதிடத்தால் என்னபயன் கிடைத்தது? இவர்களிருவர்க்கும் மணம் முடிந்தால் இப் பெண் சீக்கிரம் அமங்கலியாகும் என்றாவது, இந்த வரன் சீக்கிரத்தில் இறந்துபோவான் என்றாவது எந்த ஜோதிடனாவது கூறிவிட்டிருக்கலாகாதா? பிரபல ஜோதிடராயிருந்து சுமார் நூறு ஜாதகங்களைச் சோதித்து அவற்றில் தீர்க்காயுளுள்ளதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதகத்தையுடைய வரனுக்கே தன் புத்திரியைக் கொடுத்து, இரண்டு மூன்று தினங்களுக்குள்ளேயே அவள் விதவையாகக் கண்ட சம்பவங்கள் பலவுள.

இப்படி நேரிடுவானேன். ஜோதிட சாத்திரம் பொய்யா? ஒரு காலுமில்லை. மற்றபடி முன்னாடி யிவர்கள் இப்படிநேருமென்பதை யறிந்துகொள்ளமுடியாமற்போனதேன் எனின்:—

ஆண்டவன் இரகசியங்களை யறிந்து கொள்ள மனிதனால் முடியாது. குறித்த புருடனைக் குறித்த கன்னிகைமணம்புரிந்து குறித்தகாலத்தில் அப்புருடனை யிழக்கவேண்டும் என்றும், அவனும் அக்காலத்தில் மரிக்க வேண்டுமென்றும் அவர்கள் வினைப்படி யமைத்திருக்கிறான். அப்படியிருக்கச் சிற்றறிவுடைய மனிதன் அந்தச் சர்வக்ஞனுடைய எண்ணத்தை யறிந்து கொண்டு அவன் ஏற்பாட்டிற்குத் தப்பித்துக் கொள்ளமுடிமோ? ஒருபோதும் முடியாது. ஆகையால் எத்தகைய சாமர்த்திய ஜோதிடனாயிருந்தாலும் இத்தகைய விஷயங்களை முன்னாடி யறிந்துரைக்க முடியாது. காரியம் நடந்துவிட்டபின் அதைப்பற்றி அதே ஜோதிடனைக் கேட்டால், "கிரகத்தின் மாறுதலைப்பற்றி கணக்குப்பார்த்ததில் பிசகு நேர்ந்துவிட்டது" அல்லது "தோஷமென்னமோ இருந்ததுதான். ஆனால் குருவின் பூரணப் பார்வையிருப்பதால் ஒன்றும் செய்யாதென்று கருதினேன். இப்போது பார்த்தால் குருவுக்கு கால்பார்வையே யிருக்கிறது," அல்லது



ஆயுள் ஸ்தானாதிபதி வலுத்திருக்கிறான், நல்லவனோடு சம்பந்தப்பட்டிருக்கிறான், என்று பார்த்தோம். ஆனால் அந்தவீட்டையே பாபியாகிய நீசன் பார்க்கிறான். அதைக் கவனிக்காமற் போய்விட்டோம். ஊம்—விதிக்குத்தப்ப யாரால் முடியும். அவ்வளவுதான் அமைப்பு. இப்படி விமரிசையாய்க் கலியாணம் நடக்கவேண்டும், மறுநாளே அவள் அமங்கலியாக வேண்டும் என்று கருவிலேயே அமைத்துவிட் டிருக்கிறானே. அதற்குத்தப்ப யாரால்முடியும்?" என்று கூறுவார். திருவிளையாடற் புராணத்தில் பழியஞ்சியபடலத்தைக் கண்ணுற்றால் ஆண்டவன் இரகசியங்கள் எத்தகையவென ஒருவாறுணரலாகும்.

மதவிஷயமான சம்பந்தங்களாகிய உபதேசம், மந்திரம், முதலியவைகளும், வைத்தியம்முதலியனவும், இரகசியங்களையுடையனவாக விருப்பதும் நமது நன்மையைக் கருதியே. எவ்வாறெனின்:—

மனதிற்கு அபாரமும் ஆச்சரியமுமான சக்தியிருக்கிறது. அது பல வழிகளில் சிதறிச்செல்லும் தன் சக்தியை ஒரேவிடத்தில் நிலைக்கச் செய்யுமாயின், அது நம்பித்துணியும் எக்காரியமும், கோரிக்கையும், யாவும் கட்டாயம் நினைத்தபடி நிறைவேறும்.

எவ்வளவோ தெய்விகமாகிய சக்திகளை யளிக்கும் மகா மந்திரங்களும் கடையியில் பார்த்தால் ஒருவிதசத்தத்தை வெளியிடும் குறியாகிய அக்ஷரங்களேயாகும். "சே; இது நமக்கு முன்னமே தெரியும்; இந்த எழுத்துகள்தானா பெரியமந்திரம்!" என்று அலட்சியமாய்க் கருதிவிட்டால், அம்மந்திரங்களால் ஒரு பயனுமடையமாட்டோம். அவ்வாறே ஔஷதங்களும். நமக்குத்தெரிந்த சாதாரண இலை, வேர், கிழங்கு, புஷ்பம், விதைகள் முதலியவைகளே அரிய ஔஷதங்களாகின்றன. ஆனால் அந்தந்த ஔஷதத்திற்கு ஏற்பட்டுள்ள அளவின்படி அவை ஒன்றுசேர்க்கப்படின், தனித்தனியாய் அததற்குரிய குணங்கள் மாறி அபூர்வமான விசேஷகுணம் அந்த ஔஷதத்திற்கு உண்டாகிறது. நோயாளிகள், "வயித்தியர் ஏதோ உயர்ந்த மருந்து கொடுக்கிறார். நமது நோய் தீர்ந்துவிடும்," என்று நம்பிக்கொண்டு அந்த மருந்தையுட்கொள்வதை விட்டு, "சே சுக்கு, மிளகு, * * இவைகள் சேர்ந்ததுதானா! இதனால் நோய் நீங்கிவிடுமா!" என்று அலட்சியத் தோடும் ஐயத்தோடும் உட்கொண்டால் நோய்தீர்வது சந்தேகமே.

மன நம்பிக்கையாகிய, மனோவல்லமைக்கு அபூர்வ சக்தியுண்டென்பதற்கு ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம்:—

நெபோலியன் சக்ரவர்த்தி ஒருநாள் இரவு யுத்தகளத்தில் பாளையமிறங்கி யிருக்கும் தமது சேனையில் இராக்காவலர் எச்சரிக்கையாய்க் காவலிருக்கிறார்களா வென்று சோதனைசெய்யச் சென்றார். ஓரிடத்தில் ஒரு போர்வீரன் தன் கையில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு காவல் நின்றவன் அப்படியே உறங்கிவிட்டான். அவன் நின்றவிடத்திற் கருகில் ஒரு பழுதாய்விட்ட பீரங்கி விழுந்து கிடந்தது. நெபோலியன் அந்த வீரனைநோக்கிச் செல்லும்போது அவன் பேசாமலிருக்கவே, அவர் மெதுவாய் அவனருகிற்சென்று அவன் கையிலிருந்த துப்பாக்கியை மெதுவாய் எடுத்துக்கொண்டு சற்று எட்டப்போய் நின்று, போர்வீரரை மேல் அதிகாரிகள் எச்சரிக்கை செய்யும் குறிப்புவார்த்தையாகிய அட்டென்ஷன் (Attention) என்று அதிகாரத் தொனியாய்க் கூறினார்.

அப்போர்வீரன் உடனே விழிப்படைந்து தான் நித்திரைபோய் விட்டது பெருங்குற்றமென்றும், இப்போது எதிரில் நிற்பது சக்ரவர்த்தியென்றும் ஏககாலத்திலுணர்ந்ததோடு கையிலிருந்த துப்பாக்கி நழுவிக் கீழே விழுந்துவிட்டிருக்கிறதென்றெண்ணிக் கொண்டான். அச்சமயம் அவன் அடைந்திருந்த திகிலாலும் கலவரத்தாலும், பூரண காக்கிரம் அடைந்து முன்பின் விஷயங்கள் மனதிற்கு வரா முன்னமே இந்த நினைப்புண்டானதால், துப்பாக்கி என்ற ஒரு நாட்டமே அவன் மனதில் நிலைத்திருந்தது. அந்த நாட்டத்தோடு கீழே பார்த்தபோது அருகிலிருந்த பீரங்கியே தன் துப்பாக்கியாய்த் தோன்ற அது துப்பாக்கியேயென்ற நினைப்போடு அதைச்சட்டென்றெடுத்துத் துப்பாக்கியைப்போல் கையில் பிடித்துக் கொண்டு சக்ரவர்த்தியின் கட்டளைப்படி எச்சரிக்கையாய் நிமிர்ந்து நின்று வந்தனம் செய்தான்.

இக்காட்சியைக் கண்ட சக்ரவர்த்தி மிக்க வியப்பால் பிரமித்து ஆகா! வென்று சற்று அருகிற்சென்றார். அதற்குள் போர்வீரன் தன் துப்பாக்கி சக்ரவர்த்தியின் கையிலிருப்பதைக் கண்டதும் தான் தூக்கிக்கொண்டது பீரங்கியென் றுணர்ந்தான். அதேவினாடி அதைத்தாங்கச் சக்தியற்றவனாய்ப் பொத்தென்று பூமியில் விட்டுவிட்டான். பிறகு சக்ரவர்த்தி சோதித்தபோது அப்பீரங்கியை ஒரு மயிரிழையளவு நகர்த்தவும் அவனுக்கு வல்லமையில்லையென்று தெரிந்தது.

நெபோலியன் சக்ரவர்த்தி மனோசக்தியை யொருவாறு அனுபவமாயறிந்தவராதலால் அவன் பீரங்கியைத் தூக்கியதன் காரணத்தை யுணர்ந்து கொண்டார்.

இக்காரணங்களால் மனதிற்கு அலட்சியம் அவநம்பிக்கை சந்தேகம் முதலிய வுண்டாகாதிருப்பதற்காக மேற்கண்ட விஷயங்கள் இரகசியத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமென்றுணர்ந்தே அறிவாளிகளாகிய நம் முன்னோர் அவ்வாறு ஏற்பாடு செய்திருக்கின்றனர்

**பத்திராசிரியர்.**

---

## “தையல் சொற்கேளேல்.”

நேயர்களே! மேற்கண்ட வாக்கியம் நமது ஔவை பிராட்டியாரால் அருளப்பட்டதென்பது தமிழ்மக்கள் யாவரு மறிந்ததே. இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள வார்த்தைகளின்படி, “மாதர்களின் வார்த்தையைக் கேட்கலாகாது,” என்று பொருள் படுகிறது. அதாவது ஒருவனை நோக்கி “உன் மனைவிபேச்சைக் கேளாதே” அல்லது “உன் மனைவி சொல்கிறபடி நடவாதே” என்று கூறுவதுபோ லிருக்கிறது. நமது ஆன்றோர் நூல்களிலேயே, “மனைவி தன் கணவனுக்குச் சமயோசிதப்படி யோசனை கூறுவதில் அமைச்சனைப்போல் இருக்கவேண்டும்,” என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாற்றால் இது ஒன்றுக் கொன்று மாறுபடத் தோன்றுவதால் இதற்குச்சரியான பொருள் எதுவோவென்று நேரிடும் சந்தேகத்தை விளக்கிக் கூறவேண்டு மென்று ஒரு நண்பர் கோருகிறார். ஆதலால் இதைப்பற்றி நமது ஆனந்தனில் வரைய நேரிட்டது.



இல்லறத்தில் மனைவி, கணவன் இருமைப் பயனையு மடைவதற்கு இன்றி யமையாத துணையாவள். அவளின்றேல் இல்வாழ்க்கையே யின்றாம். அவள் நீங்கினால் ஆடவனுக்கு உலக சுகம் அடியோடு ஒழிந்ததேயாகும். நம்முன்னோரியற்றிய நூல்களில் நற்புடைய மனைவிக் கிருக்கவேண்டிய குணங்களில் தன்கணவனுக்குச் சமயோசிதமான யோசனைகளையும் சில சமயங்களில் புத்திமதிகளையும் கூறுவதில் மந்திரியைப்போலிருக்கவேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது. மனைவியின் பேச்சைக் கேட்க வேண்டாமென்றவிதி இதற்கு முரணாக விருக்கிறது. மேலும், குடும்ப விஷயங்களில் சிற்சில சமயங்களில் கணவன், மனைவியின் அபிப்பிராயத்தை யறிந்து நடக்க வேண்டிய சம்பவங்கள் நேர்கின்றன. சில விஷயங்கள் மனைவியை யன்றி வேறுயாரிடத்திலும் கூறத்தகாதனவைகளாயும் சம்பவிக்கின்றன. உலகில் அனேகம் இல்லறவாசிகள் இதை யனுபவமா யுணர்ந்திருப்பார்கள் என்பது நிச்சயம். அனுபவம் இவ்வாறிருக்க, “மனைவி பேச்சைக் கேட்காதிரு,” என்று கூறுவது தவறாயன்றோ தோன்றுகிறது.

ஆனால் ஔவையார் தன் போன்ற மகளிர்க்கு அகௌரவத்தை யுண்டாக்கத்தக்க அத்தகைய கட்டளையை நியாயமின்றிக் கூறியிருப்பாரென்று நாம் சற்றும் கருதலாகாது. ஔவையார் மட்டுமல்ல, பொய்யா மொழியாராகிய தெய்வப் புலமைவாய்ந்த திருவள்ளுவ நாயனாரும் தாம் அருளிய திருக்குறளில் “பெண்வழிச் சேறல்” என்ற அத்தியாயத்தில்,

“கேவலமாகிய மிருக சுகத்தை யனுபவிப்பதன் காரணமாக மனைவி மேல் வாஞ்சை கொண்டு அவள் சொற்படி நடப்பவன் இல்லறத்தின் பயனை யடையமாட்டான்,” என்றும், தன் ஆண்மையை விட்டு மனையாளின் பெண்மையை விழைந்தவன் அடைந்த செல்வம் அவனுக்கு நாணுதலையே யளிக்கும்,” என்றும், மனையாளுக்கஞ்சி நடக்கும் புருடன் மறுமைப் பயனையிழந்து விடுவதோடு, அவன் பிறரை யாளுந்தன்மையுடையவனெனினும் அது நல்லோரால் கொண்டாடப் படமாட்டாது,” என்றும், நாணின்றி மனைவியின் ஏவற்படி நடப்பவன், மாதரினும் தாழ்ந்தவனாவன்,” என்றும் இன்னும்பிறவும் கூறியிருக்கிறார். இது மட்டுமல்ல. பெரும்பாலான மாதரிடம் சில குற்றங்களுள வென்ற உலக வதந்தி நீண்ட காலமா யிருந்துவருகிறது. அவை யெவையெனில், உலோபகுணம், கிடைத்தமட்டில் திருப்தியின்மை, முன்யோசனைக்குறைவு, இரகசியத்தை மனதிலடக்கிவைத்துக் கொண்டிருக்கும் சக்தியின்மை (குந்திதேவி, கர்ணன் தன் மூத்தகுமாரன் என்பதை ஐவர்க்கும் கூறாமல் மறைத்து வைத்திருந்ததால் ‘மாதர் மனதில் எந்த இரகசியமும் தங்காமற் போகவேண்டும்’ என்று தருமர் சாபமிட்டதாய் ஓர் வதந்தியுண்டு), மிக்க சீக்கிரத்தில் இளகிவிடக்கூடிய மனமுடைமை முதலியவைகளே.

இவ்வாற்றால் ஔவை பிராட்டியார், ‘தையல் சொற்கேளேல்’ என்று கூறியதற்கும் ஆதாரங்கள் உளவெனத்தெரிகிறது. மனைவி கணவனுக்குச் சமயோசிதயோசனை கூறுவதில் மந்திரிபோலிருக்கவேண்டும் என்பதற்கும் நியாயமிருக்கிறதென்று முன்னமே கூறினோம். இதனால், “தையல் சொற்கேளேல்,” என்று ஔவை கூறியது தவறென்று கருதலாகாது. ஆனால் அதிலுள்ள வார்த்தைகளால் தோன்றும் வாச்சியார்த்தத்தையே அதற்கு முடிவான பொருள் என்று கொள்ளலாகாது. மாறாய்த்தோன்றும் இரண்டபிப்பிராயங்களுக்கும் பொதுவாகவே பொருள் கொள்ளவேண்டும்.

அதாவது, "தையல் சொற்கேளேல்" என்றால், "எப்போதும் மனைவி கூறும் எந்தச் சொல்லையும் ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு மாறாகவே நட, அவள் குளியுங்கள் என்றால் அன்றைக்கு குளிக்காதே; அவள் கோயிலுக்கு என்னை யழைத்துப் போங்களென்றால் நீ போகாதே" என்று அர்த்தம் செய்து கொள்ளலாகாது.

மற்றபடி என்னதான் பொருள் எனின்:—

கண் மூடித்தனமாய் எல்லா விஷயங்களிலும் மாதர் பேச்சைக் கேட்டுக்கொண்டே நடக்கலாகாது. ஆடவன், ஒரு விவகாரத்தில் தான் இப்படி நடந்து கொள்ளவேண்டியதே தகுதி யெனமனதிற்றிடமாய்த் தெரிந்த பின்பு, மாதரிடம் வைத்த காதலாலோ அச்சத்தாலோ தன் மனதிற் கொவ்வாதிருக்கும் மாதர் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு தன் அபிப்பிராயத்திற்கு மாறாக நடக்கலாகாது. அவர்கள் யோசனை நமது மனச்சாட்சிக்கு ஒத்ததாகவும் நமக்கு நன்மையையும் கௌரவத்தையுமே யளிக்கத்தக்கதாகவும் இருந்தால் அந்த யோசனையை யேற்றுக் கொள்ள வேண்டியதே. சுருக்கமாய்க் கூறும் பட்சத்தில் மனைவிமேல் வைத்துள்ள வாஞ்சையாலோ அல்லது அவள் விஷயத்தில் கொண்டுள்ள அச்சத்தாலோ அவள் வார்த்தைக்கு மறுத்துக்கூற மனம் பிடிக்காததற்காகவே மனைவியின் பேச்சுப்படி நடந்து விடுவது ஒருபோதும் புருடத்தன்மையாகாது. மாதரில் மிக்க உலோபகுணம் பொறாமை பாரபட்சம் உடையவர்களும் உளர். அத்தகையோர் தாம் கூறும் யோசனையால் நமது கணவனுக்குப் பாபமும், இழிவான பெயரும், கௌரவத்தாழ்வும் உண்டாகுமே யென்பதைச் சற்றும் கவனியாது, தங்கள் விருப்பத்தைத் திருப்தி செய்து கொள்வதற்காகத் தகாதயோசனையைக் கூறுகிறார்கள். கணவர்செய்யக் கருதும் புண்ணியச் செயல்களையும் தடுத்து அவர்களிடம் பாபமூட்டையும் அகௌரவமும் விருத்தியடையும்படி செய்து விடுகிறார்கள். இத்தனைக்கும் புருடனிடம் விசுவாசமாகவே நடந்து கொள்கிறார்கள். இத்தகையோர்களு மிருப்பதாலேயே சிலர் மாதர்களைப் பேய்களென்றும் எமன்கள் என்றும் இழித்துக் கூற நேர்ந்தது.

ஆடவன் தான் எது செய்வதாயினும் தனக்குப்பாபமாவது, அகௌரவமாவது, வேறு தீங்காவது நேரிடாவண்ணம் தனக்குள் சிந்தித்துத் தன் தீர்மானப்படியே எதையும் செய்வதுதான் உத்தமம். அவனே புருடன் என்றழைக்கப்படற் குரியவன். தன் வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியின் சகலகுணங்களையும் முதலிலேயே நன்றாயறிந்துகொண்டு, நமக்கு இவ்வுலகில் நல்ல புகழையும் கௌரவத்தையும், புண்ணியத்தையும் உண்டாக்கத்தக்க யோசனைகளையே கூறும் புத்தி யிவளிடமிருக்கிறதாவென்பதை யறிந்துகொண்டு, அப்படி யுடையவளாயின், அவள் கூறும் தகுதியான யோசனைகளை யெடுத்துக்கொள்ள வேண்டியதே. சில விஷயங்களில் அத்தகைய மனைவியின் அபிப்பிராயத்தைக் கேட்டும் நடக்கலாம். அப்படிக்கின்றி மேற்கூறப்பட்டபடி மனைவியின் சொல்லுக்கு மாறாய் நடக்க முடியாததற்காக தையல் சொற்படி நடத்தல் தகாதென்பதே ஔவையார் கூறியதன் கருத்தாகும்.

சீடன்.

---



## மாதரொழுக்கம்.

(307-ம் பக்கத் தொடர்ச்சி.)

செல்வர் வீட்டுப்பெண்களிற் சிலர், தங்கள் வீட்டுவேலைகளை யெல்லாம் ஏவலாளர் வசம் ஒப்புவித்துவிட்டு ஆடை யாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு, பூமிக்குப் பாரமாகத் திரிவதைப்பார்த்து, "ஐயோ! இவர்கள் எவ்வளவு சுகத்தி லிருக்கிறார்கள். இவர்களது கணவரைப் போன்ற பூமான்களுக்கு வாழ்க்கைப்படாது இந்தத்தடி முறியனைக் கட்டிக்கொண்டு நித்திய தரித்திரராய் உண்ண வுணவும், உடுக்க வுடையுமின்றி, உடல்வருந்த உழைக்கலாச்சே," எனப்புகலும் புண்ணிய வதிகளையும் பார்க்கிறோம். என்ன அறியாமை! இதுவோ சுகம்! வேலைகள் செய்யவே கடவுள் நமக்குக் கரசரணாதி அவயவங்களைக் கொடுத்திருக்க, அவற்றை உபயோகிக்காது விடின், அவர் சித்தத்திற்கு விரோதமாக நடந்துகொண்டவர்களாவது மன்றி, நமது உபயோகத்திற்காகச் செய்யப்படும் மேசை, நாற்காலி முதலியவைகள் உபயோகிக்கப் படுவதின்றேல் கெடுதல்போல அவற்றாலாகும் பிரயோஜனத்தையு மிழந்தவர்களாவோம். சிலகாலம் கண்களைத் திறவாமல் மூடிக்கொண்டே யிருந்தால் அவை பார்க்கும் சக்தியை யிழக்கும். கஷ்டப்பட்டு வேலைசெய்தால் சரீரதிடமும், அதனால் மனோவல்லமையும் உண்டாகும். இனி,

பணக்காரர் வீட்டுப் பெண்களெல்லாம் சந்தோஷமாகவே யிருப்பார்களென்பதில்லை. பலவிஷயங்களில் மற்றையர்களிலும் பாக்கியவீனர்களாகவே யிருப்பார்கள். சுகத்தையும், துக்கத்தையும் கலந்தே அனுபவிக்கவேண்டிய இடமன்றோ இவ்வுலகம்? "நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம் விதியின் பயனேபயன்," என்றபடி, நாம் நமது பூர்வகருமானு சாரத்தின்படியே இன்பத்தையோ, துன்பத்தையோ அனுபவிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். ஆகையால், மாதர் தம் நாயகர் மூடராயினும், குரூபிகளாயினும், நிஷ்டூரகுணிகளாயினும், வறிஞராயினும், வெறுப்புக் கொள்ளாமலும்—குடியர், திருடர், முரடரா யிருப்பின்—சாத்தியமானால் நல்வழிப் படுத்தியும்—இன்புற்று வாழவே பிரியப்பட வேண்டுமே யன்றி, அவர்களது குற்றங் குறைகளைக் கேட்டோர் பல்லைக் காட்டும்படி தூற்றலாகாது. தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும். அவர்களது துன்பங்களுக்காக மனம் துடித்து வருந்தாதவள் மடியின்கண் வைக்கப்பட்ட நெருப்புக் கொப்பாவாள். (துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.)

என தருமைச் சகோதரிகளே! இதுகாறும் கூறியதும் கூறாது விடப்பட்டவையுமாகிய பலநீதிகளை முன்னரே பல முறைகளில் நமது ஆனந்தபோதினி உங்கட்குச் செவ்வனே போதித்திருக்கின்றமையின், மேலும் விவரிப்பது அவசியமன்றாகலின், எல்லாவற்றிலும் மிகுந்த மேன்மை பொருந்தியதும், அளவிடற்கரிய ஆற்றலுடையதுமான ஓர் விஷயத்தை மட்டும் சுருங்கக்கூறி முடிக்கின்றேன். அவ்விஷயம் யாதோவெனின் அது கற்பே. உங்கட்குக் கணவர் சொரூபம் கடவுட்சொரூபமே. கணவரைப் போற்றல் கடவுளைப் போற்றலே. ஆகவே, கணவர்ப் பழிச்சல் கடவுட் பழிச்சலே. "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" யென்றார் ஓர் மெய்ஞ்ஞானியாரும். கணவரை வஞ்சித்துக் கடவுளைப் போற்றலால் யாது பயன்? கணவரையே பிரத்தியக்ஷ தெய்வமாகக் கருதிப் பூசிக்கும் மகளிர்

தம் மாண்பு மிகுதலத்து மதிக்க வல்லதோ ! தெய்வமும் வந்தேவல் செய்யுமே, மழை பெய்யெனப் பெய்யுமே.

"தெய்வந்தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை," என்னும்,

பொய்யா மொழியைப் பாருங்கள். இக்கருத்தொன்றே முற்கூறிய வற்றிற் கெல்லாம் தாயகமானது. இஃதொன்றாலேயே எல்லாம் வந்தமையும். ஆஹா ! கற்பின் மகிமையே மகிமை. சிருட்டி, திதி, சங்கார கர்த்தாக்களாகிய திரிமூர்த்திகளையும் அஞ்சும்படி செய்வாயெனில், ஓ தெய்வீகம் பொருந்திய கற்பே ! உன்மகிமையை அறிவார் யார்? சகோதரிகளே! தமயந்தி தன்னைக் காமுற்ற கானவனைக் கரியாக்கியதும், சாவித்திரி காலனைத் தொடர்ந்து தன் காதலனுயிரைக் கைக்கொண்டதும் எதனால்? கற்பின் மகிமையாலன்றோ? ஆகையால், நீங்கள் எதை இழந்தாலும் கற்பை மட்டும் இழக்காதீர்கள். கணவர் மொழியைத் தட்டி நடக்கலாகாது. அன்னியனைச் சேரும்படி கட்டளை யிட்டாலும் சரி, பிள்ளையைக் கொலைபுரியப் பணித்தாலும் சரி; தடுக்கலாகாது. "கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை," என்றாள் நமது ஞானத்தாய். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் இந்நான்கு குணங்களையு முடையவளே பெண்ணாவாள். மற்றையவள் பெண்ணல்ல, இல்வாழ்பேயே.

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு. ... ... ... (நளவெண்பா)

பெண்களுக்கு மானம் பெரிது. பரபுருடரைப் பார்த்தலும், அவரெதிரிற் செல்லலும், அவர்களது செல்வம்முதலிய பெருமைகளைப் பேசலுமாகா. சொந்த சோதரனேனும் அவனோடு தனியிடத்திருந்து பேசலாகாது. நீங்களே உங்களைக்காத்துக் கொள்ள வேண்டியவர்கள். காவல் தானே பாவையர்க்கழகு, மற்றையர் காப்பு பயனற்றது.

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் ! மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. ... ... ... (குறள்)

வேறு புருஷனோடு சம்பந்தப் பட்டிருப்பது மாத்திரமல்ல? மனத்தால் நினைத்தலும் விபசாரமே. இதுபற்றி ஓர் பெரியோர் கூறியிருப்பதாவது—நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், யாவரும் ஆணானால் ஒரு ஸ்திரீயை,— பெண்ணானால் - ஒரு புருஷனை - இச்சையோடு பார்த்தபோதே தன் இருதயத்தில் அவர்களோடே விபசாரம் செய்தாயிற்று.—என்பதே,

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே; அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங் கொடுத்தாலும் வாராது. கேவலம் மிருகமாகிய கவரிமானது தன் சரீரத்துள்ள உரோமங்களி லொன்று பிடுங்கப்படுவதை யாற்றாது. ஆவியிழக்கின்ற தென்றால் மானத்தின் பெருமையும் அதனை யிழப்பதினிழிவும் எத்தன்மையதா யிருத்தல் வேண்டும். ஆகையால் சகோதரிகளே! எந்நாட்டினும், எச்சாதியினு மில்லாத கற்புத்தன்மை வாய்ந்த ஸ்திரீரத்தினங்களின் வழி வந்தோராகிய நீங்கள் தற்காலம் நடைபெறும்



அன்னியநாகரீக நடபுடல் என்ற பேய்க்குரங்கின் கைக்கொள்ளி யாகாது, உங்கள் முன்னோரின் அளவிலாப் பெருமையை நிலைநிறுத்தப் பாடுபடுங்கள். எல்லாம் வல்லவனும், எங்கு முள்ளவனுமாகிய இறைவன் இன்னருள் புரிவாராக. சுபம்.

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப்பண்டிதர், இராணிப்பேட்டை.

## கீழ்தரப் பாடசாலைகளின் நிலைமை.

நமது ஆனந்தபோதினி, பொது விஷயங்களாயிராமல், என்னமோ பாடசாலைகளைப் பற்றியும் உபாத்திமார்களின் குறைகளைப்பற்றியுமான விஷயங்களையும் தன்னகத்தில் கொண்டு வருகின்றதே யென்னும் ஆசங்கை சிலர்க்கு உண்டாகலாம். ஆதலால் அன்னவர்களுக்கு உரைப்பது யாதெனில், பாடசாலைகளும் உபாத்தியாயர்களுமாகிய இவர்களைப்பற்றிய விஷயங்களும் பொதுவே! எங்ஙனமெனில், கல்வி-இதிலும் கீழ்தரக்கல்வி எத்தகையோர்க்கும் இன்றியமையாததே. இத்தகைய கல்வியைப் போதிக்கும் உபாத்தியாயர்களும் இன்றியமையாதவர்களே! இவர்கள் யாதொரு கவலையுமின்றிக் களங்கமற்ற மனத்தோடு இருந்தாற்றானே, கல்வி போதித்தற்கு இயல்புடையதாகும்? அவ்விதமின்றி சதா தம் குடும்பக் கவலைகளும், போதாத சம்பளத்தால் வேறு வரும்படிக்கு யோசனைகளும் உள்ளவராயிருப்பின் இவர்களின் உத்தேசம் எங்ஙனம் நிறைவேறும்? ஆகவே, இவர்களின் நிலைமையைப்பொறுத்ததன்றோ, இவர்கள் போதிக்கும் மூலாதாரக் கல்வியும்? இவர்களின் நிலைமையை யேற்றவாறு அமைப்பின், கல்வியும் தக்கவாறு ஏற்றமுறும். உற்றால் நந்தேசமும் நன்மையிது தீமையிதுவென அறிந்து நடுநிலைமையையடைந்து பண்டைய நிலைமையையும் புகழையும் பெறும். ஆதலின் இவர்களின் விஷயங்களே எவ்விஷயங்களிலும் முதன்மையானதால் நமதானந்தனும் சகோதரர்களும் இத்தகைய விஷயங்களை இஷ்டமுடன் ஏற்று, இக்கீழ்தரக்கல்வி ஏற்றமடையுமாறு நன்னிலைமைக்குக் கொண்டுவருவார்களென்று எண்ணியே இத்தகைய விஷயங்களை ஆனந்தபோதினிக்கு அனுப்பிவர முற்பட்டேனென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிற்க, "இப்பொழுது இந்த (திருப்பத்தூர்) ரேஞ்சுக்கு வந்திருக்கும் ஸப் அஸிஸ்டென்டு இன்ஸ்பெக்டரும் மற்றும் படித்தவர்களும் எல்லாரும் உபாத்திமைத் தொழிலைப்பற்றி புகழ்ந்து சொல்லுகிறார்கள். ஆனால், படித்தவர்களெல்லாம் தாங்கள் விர்த்திக்கு வரக் காரணமாயிருந்த உபாத்திமார்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க மேன்மேலும் முயற்சி செய்யாமல் இருப்பது உபாத்தி மார்களுக்கு அதிருப்தியைக் கொடுக்காமலிராது.

அந்தோ ! கூலி வேலையாட்கள் முதல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வரையில், குறைவான சம்பளத்திலிருப்பவர்களுக்கு பஞ்சப்படியும் சண்டைக்காக அலவன்ஸும் கொடுத்தும் சம்பளத்தையும் உயர்த்தியும் உதவிசெய்திருக்க, இந்த ரேஞ்சிலுள்ள உபாத்தியாயர்களுக்கோ இதுவரையில் பஞ்சப்படியும் கொடுத்ததாகத் தெரியவில்லை, யுத்தப்படியும் கொடுக்கவில்லை. உபாத்திமார்களுக்குக் கொடுக்கும் இச் சம்பளமே (ரூ. 11) அதிகமென்று நினைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால் உபாத்திமார்களுக்குச் சம்பளம் குறைவென்றும், இவர்களாலேயே தேசம் முன்னுக்கு வரவேண்டியதாதலால் இவர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்றும் ஒவ்வொரு உபந்யாஸத்திலும் மேடைகளிலும் கூக்குரலிடுகிறார்களே யொழிய காரியத்தில் சம்பளத்தை உயர்த்தி, அவர்களின் ஜீவனோபாயத்துக்கு வேண்டியவளவு உதவி செய்தபாடில்லை. இக்கஷ்டத்தினால் மாணாக்கர்களுக்குத் தகுந்தபடி போதிக்கும் நல்ல உபாத்திமார்கள் கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் வேறு ஜீவனோபாயம் தேடிக் கொள்ளுகிறார்கள். கொஞ்சமாய்ப்படித்து அக்கறையும் பயிற்சியுமில்லாத உபாத்திமார்கள் (ரூ. 8 கூட சம்பாதிக்க முடியாதவர்கள்) வந்து சேருவதினால் தேசத்தை எவ்வளவு முன்னுக்குக்கொண்டு வரமுடியுமோ, நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

இத் திருப்பத்தூர் ரேஞ்சில் அநேகமாக ஒவ்வொரு பாடசாலையிலும் தேர்ச்சியாகாதவர்களே இருந்து வருகிறார்கள்.

உபாத்திமார்கள் அகப்படாமல் சில பாடசாலைகளை மூடிவிட்டிருக்கிறார்கள். இவைகளுக்குக் காரணம் ஜீவனோபாயத்திற்குப் போதாச் சம்பளமேயாம். ஆகையால் மேல் கண்டவைகளை கவர்ன்மெண்டாரும் தாலுக்கா போர்டு முதலிய அனைவரும் கவனித்து கஷ்டங்களை நிவர்த்திக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்,'' என சமீபத்திய சுதேசமித்திரனுக்கு ஒரு நிருபரிடமிருந்து கடிதம் வந்ததாகக் காணப்படுகின்றது.

மேலே மித்திரனது வியாசத்தின் 2-வது பாராவில் சொல்லியபடி கல்கத்தா, ஹௌரா, ராஜிலிங், ரங்கப்பூர் ஆகியவிடங்களில், உணவுப் பொருள்களின் கிராக்கிக்காக மாதமொன்றுக்கு 12-ரூபாயும் அதற்குக் குறைந்தும் சம்பளம் வாங்குவோருக்கு ஒருரூபாயதிகமாகப் பஞ்சப்படி கொடுக்கும்படி 21-2-18-க்கு முன்பே உத்திரவாயிருக்கிறது.

13-3-18-ல் வரவு செலவு திட்டத்திற்காக நாகப்பூரில் கூடிய மத்திய மாகாணங்களின் சட்டசபை மீட்டிங்கில், 30-ரூ. சம்பளத்துக்குக் குறைவான பெயர்வழிகளுக்குப் பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறது.

ஐக்கியமாகாணங்களைச் சேர்ந்த அலகாபாத்தில் (உணவுப் பொருள்கள் விலைதூக்கி விற்பதைக் கருதி) இம்மாகாண லெப்டினெண்ட் கவர்னர், 1918-எப்ரல் முதல் தேதிமுதல் அற்ப சம்பளத்துக்கு வேலை செய்யும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு, 16 ரூபாய்க்கு மேல் 30 ரூபாய்க்குள்ளாக சம்பளம் வாங்குவோருக்கு 2-ரூபாயும், 16 ரூபாய்க்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு ஒரு ரூபாயும் பஞ்சப்படிகொடுக்க 1-4-18-க்கு முன்னமேயே தீர்மானித்திருக்கிறார்.

1917-ம் வருஷ நவம்பர்மாதம் 1-ந் தேதி முதல் தபால் தந்தி இலாகா சிப்பந்திகள் அனைவருக்கும், அவரவர் சம்பளத்தில் 100-க்கு 5-வீதம் யுத்தப்படி கணக்கிட்டு சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுமென்று இந்தியாமந்திரி 1-3-18-க்கு முன்பே வாக்களித்திருக்கிறார்.

ரயில்வே சிப்பந்திகளுக்கும் இச்சகாயம் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றதாம்.



மேலேகூறிய எல்லா இலாகாக்களுக்கும் மூலமாகிய இந்தக் கல்வி இலாகாவில் 'மூலவருக்கே மொந்தை தண்ணீரில்லை. ஆலயமுழுதும் அபிஷேகமா' என்ற பழமொழியானது தற்போது ஆம் என்று நிதர்சனமாகின்றது.

மேற்கூறிய திருப்பத்தூர் ரேஞ்சில்தான் இவ்விதமென்றாலோ, லால்குடி ரேஞ்சைச் சேர்ந்த திரிசிராப்பள்ளி, முசிரி தாலுகா போர்டுகளிலும் இவ்விதந்தானிருக்கின்றது. சேலம் முதலிய இடங்களில் யுத்தப்படி கொடுத்திருக்கிறார்கள்—முன்பிருந்தே கொடுத்து வருகிறார்களெனவும் தெரிகிறது.

'இந்த ராஜதானியில் மற்ற ஆபீஸுகளைப் பார்க்கிலும், இதர மாகாணங்களின் கவர்ன்மெண்டு ஆபீஸுகளிலும், இந்த ராஜதானியிலுள்ள அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீஸ், போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஆபீஸ், போஸ்ட் தந்தி, டிப்டிஅக்கவுண்டண்ட் ஜனரல் ஆபீஸ்களிலும் அவர்களுடைய சம்பள விகிதங்களும் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

'குமாஸ்தாக்களுக்கு 20-ரூபாய்க்குக் குறைந்த சம்பளமில்லை' என்று 13-3-18 ல் கூடிய சென்னை சட்ட சபையில் கனம் போலாவரம் ஜமீன்தாரவர்கள் ஷராப்புகளின் சம்பளத்தைப் பற்றிப் பேசுங்கால் சொல்லியிருக்கிறார். இப்போது ஷராபுகளுக்கு 15 அல்லது 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இனி 15,18,20, ஆகச் செய்துவிட வேண்டுமென்று ரெவினியூ போர்டார் பிரேரேபணை செய்திருக்கிறதாகவும், அந்தப்படி செய்ய கவர்ன்மெண்டார் உத்தேசிப்பதாகவும், நிர்வாக சபை மெம்பர் கனம் ஸர் காரீடியூ அவர்கள் பேசியிருக்கிறார்.

எல்லா இலாகா தாரர்களுக்கும் இன்றியமையாத மூலகாரணமாயுள்ள இக்கல்வி இலாகாவின், கீழ்தரப் பாடசாலைகளின் உபாத்திமார்களுக்கு 10-ரூபாயிலிருந்து ஒரு ரூபாயதிகமாகச் செய்து 11-ரூபாயாகக் கொடுப்பதாக, நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் கூறியிருக்கிறார்கள். இது, மேலே கூறிய மற்ற இலாகாக்களுக்கும் இவ்விலாகாவுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதன்றோ? இது, 'மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் ஈடு' காண்பிப்பதுபோலு மன்றோ? இந்தயுத்த—அகவிலை காலத்தில் இதுவும் போதாதாயினும், இந்த ஒரு ரூபாயும் 1917 எப்ரல் முதல் அமுலுக்கு வந்து 1918 மே மாதம் வரையில் கிடைக்கவேண்டிய மொத்தத்தொகை திரிசிராப்பள்ளி, முசிரி தாலுகா போர்டுகளிலிருந்தும், ஏழை உபாத்திமார்களுக்கு இன்னும் கிடைக்காதிருப்பது என்னே! மற்ற இடங்களிலும் இவ்விதந்தானோ என்னமோ தெரியவில்லை? 1917 ஏப்ரலிலிருந்து சில இடங்களுக்கும் மார்ச்சிலிருந்து சில இடங்களுக்கும் கொடுக்கப்படும் காரணமும் தெரியவில்லை.

சமீபத்தில் நடந்த சட்டசபை மீட்டிங்கில், கல்வி யபிவிருத்தியில் அதிக நாட்டமுள்ள கனம் மெம்பரொருவர் இவ்வுபாத்திமார்களுக்கு ரூ. 12-க்குக் குறையாமலாவது சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டதாகவும், அதற்குக் கனம் ஸ்டோன் துரையவர்கள் சமீபத்தில் தான் கொஞ்சம்(ஒருரூபாய்) அதிகமாகச் செய்திருப்பதாகவும், இப்போது இவ்விதம் இயலாதென்றும், இனி கவனிக்கப்படுமென்றும் இயம்பியதாகத் தெரியவருகிறது. ஆனால் 'எல்லாருக்குமே 12. ரூபாய்க்குக் குறையாமல்

சம்பளத்தை உயர்த்தப்போகிறோம்’என்று கனம் துரையவர்கள் 13-3-13-ல் நடந்த சட்டசபையில் கூறியிருப்பதாகத் தெரிகிறது. தற்போதும் கூடிய சீக்கிரம் ரூ. 12. ஆகிவிடுமென்று ஆங்காங்கு சிலர் கூறிக்கொள்ளுகிறார்கள். ஆயினும், தற்போதே தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களில் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் ரூ. 12-க்குக்குறையாமல் கொடுத்து வருகிறதை அறிவதோடு இந்த லால்குடிரேஞ்சு சம்பந்தப்பட்ட திருச்சிதாலுகா போர்டிலும் புதிதாக ஏற்பட்ட பாடசாலை உபாத்திமார்களுக்கு மட்டும் ஆரம்பத்திலேயே ரூ. 12 சம்பளம் கொடுக்கிறார்கள். அநேக வருஷகாலம் உழைத்துக் கொண்டிருக்கும் உபாத்திமார்களுக்கோ அதற்குக் குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு கிடைத்து வருகிறது?

மித்திரனது வியாசத்தின் கடைசிப் பாராவில் கூறுகிறபடி, உபாத்திமார்கள் கிடைக்காததற்குக் காரணம் போதிய சம்பளம் இல்லாமையே என்பது யாவருக்கும் எளிதில் புலப்படும். போதிய சம்பளம் கிடைப்பின், இத் தொழிலைவிட உத்தமமானதும் சௌகரியமானதும் வேறு இல்லையென்று தக்கவர்கள் வரலாம். போதிய சம்பளத்தைக் கவனிப்பதற்குக் காரணம் எத்தகைய ஜீவன்களுக்கும் இன்றியமையாத ஜீவனோபாயமே.

ஆகவே, எல்லாவற்றிற்கும் இன்றியமையா இக்கீழ்த்தர ஆரம்பப் படிப்பின் அவசியத்தை இவ்விலாகா அதிகாரிகளும் ஜனப் பிரதிநிதிகளும் நன்குணர்ந்திருப்பினும், ‘சுடர் விளக்கெனினும் தூண்டுகோலொன்று வேண்டும்’ என்பதற்கிணங்க, மறுபடியும் உணரும் பொருட்டு, எல்லாம் வல்ல ஏகநாயகன் அவர்களுக்கு இனிதுணர்த்தி, ஏற்றவாறு ஏற்றது இயற்றும்படி தனது இன்னருளால் தூண்டுதல் செய்வாராக.

P. பரிமணப்பல்லவராயர்,
உபாத்தியாயர்.

குறிப்பு:—பத்திரிகை சஞ்சிகை முதலியவற்றிலுள்ள விஷயங்களை வாசிப்போர் பெரும்பாலும் அவ்விஷயங்களை வாசித்து மனதில் கிரகித்துக்கொண்டு அறிவு விசாலத்தையோ, உலக அனுபவத்தையோ, புது விஷய உணர்ச்சியையோ பெறுகிறார்கள். அதற்குமேல் அவற்றைப்பற்றியவர்கள் கவனிக்கவேண்டிய கவலை யொன்றுமில்லை.

ஆனால் மேலே நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ பரிமணப்பல்லவராயரவர்கள் பொதுநலங் கருதி யெழுதியுள்ள விஷயம் அத்தகையதல்ல. அதை வாசிப்போர்களில் அக்குறையை நீக்க முயற்சியெடுத்துக்கொள்ளத் தகுதியுடைய உத்தியோகஸ்தர்கள், சட்ட சபையிலுள்ள கனவான்கள், செல்வாக்குடையோர், ஆகிய இத்தகையோர் நமது தாய் நாட்டின் க்ஷேமாபிவிர்த்திக்கு முக்கிய இடையூறா யிருக்கும் இப்பெருங் குறையை நிவர்த்தி செய்யக் கடினமுயற்சி யெடுத்துக்கொள்ளாவிட்டால், இத்தகைய முறையீடுகளெல்லாம் அந்தோ! பாலைவனத்தில் பெய்த மழையாய்விடும். துரைத்தன இலாகாக்களின் சீர்திருத்தங்களைப்பற்றியும், நூற்றுக் கணக்காய் ஆயிரக்கணக்காய் சம்பாதிக்கும் உத்தியோகஸ்தர்களின் படி, பிரயாணச்செலவு முதலிய சௌகரியங்களை யதிகப்படுத்த மசோதாக்கள் தயார்செய்து சட்டசபையில் அவற்றிற்காக வாதம் செய்து ஜெயம் பெற்றுக் கௌரவமடையும் இக்கனவான்கள் நமது கல்வியபிவிர்த்திக்கு இன்றியமையாத இவ்வுபாத்திமார்களின் குறையை நீக்கமுயல்வது ஒரு கௌரவ முயற்சியல்லவென்று கருதாமல், இப்பெரும் புண்ணியச் செயலை



மேற்கொண்டு நமது நாட்டிற்கு நன்மை புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். துரைத்தன இலாகாக்களில் காலம் செழிப்பா யிருந்தபோதே 15 ரூபாய் குறைந்த சம்பளமாய் ஏற்படுத்தப்பட்டிருக்க, புத்தியால் வேலை செய்யும் இந்த உபாத்திமார்கள், அவ்வளவிற்குக்கூட அருகரல்லாதாராய் மதிக்கப்பட்டிருப்பது மிக்க பரிதாபமே.

பத்திரிகாசிரியர்.

---

## நித்தியவிதி—போஜனம்

(290-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகையால் உயிருக்குத் துணிந்து பரப் பிரயோஜனார்த்தமாக வேட்டையாடுவதும் அரசர்களுக்குப் புண்ணியமேயாம். ஒவ்வொரு ஜந்துவுக்கும் தன் ஜீவனிடத்தில் அதிகப் பிரியமுண்டு. அது இறக்கும்போது மரணதுன்பத்தை யடைந்தே ஜீவனைவிடும். ஆதலால், உயிருக்கு ஆசைப்படும், அந்தப் பிராணிகளைக் கொன்று தின்பவர் மறுஜன்மத்தில் அந்தப் பிராணிகளாலேயே கொன்றுதின்னப் படுவார்கள். அதனாலேயே அதற்கு மாம்ஸம் என்று பேரிடப்பட்டது. “மாம்”-என்னை, “ஸ:”-அவன், என்று பொருளுள்ள இரண்டு சொற்கள் கூடி “மாம்ஸ:” என்று ஆயிற்று. இதனாற் போந்தபொருள் யாதெனின் அவன் என்னைத்தின்றதனால் நான் அவனைத் தின்கிறேன், என்ற கருத்தை அடக்கிநிற்பது மாம்ஸம் என்பது என்று, மனுவும் வியாசரும் கூறினார்கள். ஆகையால் எவன் எந்தச்சரீரத்துக்கு எவ்வகையான இம்சையைச் செய்கிறானோ அவன் அந்தத்தேகத்தை யெடுத்து அந்தப் பிராணிகளால் கொல்லப்படுவான். கட்டுகிறவன் கட்டப்படுவான், அடிப்பவன் அடிக்கப்படுவான், கொல்கிறவன் கொல்லப்படுவான், யாகம், தானம், தீர்த்தஸ்நானம் இவைகளெல்லாம் கொல்லாமைக்கு ஈடாகாது, கொல்லாமையே சிறந்ததர்மம்; கொல்லாமையே இந்திரிய நிக்கிரகம், கொல்லாமையே சிறந்ததானம், கொல்லாமையே சிறந்த யாகம்; அஹிம்ஸைக்கு அழிவில்லாத தவபலனுண்டாகும். எத்தனை நூற்றாண்டுகள் கூறின போதிலும் அஹிம்சையின் பெருமையை சொல்லிமுடியாது. அதன்மகிமை அளவிடப்படாது. இந்தத் தர்மத்தை நீ கைவிடாமல் செய்து கொண்டுவா.” என்று பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு உபதேசித்ததாகப் பாரதம் கூறுகிறது. புராணம் முதலிய வைதிக நூல்களெல்லாம் இவ்வாறே கூறுகின்றன. இதுகாறுங் கூறியது மாம்சபோஜனம் வைதிக சாஸ்திர சம்மதமன்றென்பதை விளக்குதற்கேயாம். தேவபிதிர்க்களை யாராதிப்பதற்காக ஜீவ இம்சைசெய்யலா மெனவும், அதுவும் நரகத்துக்கே உபாயமெனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலாற் பரதகண்டவாசிகளுக்கு மாம்சபட்சணம் விலக்கப்பட்டதே யாமென்பது புலப்படும். வனத்தில் வசிக்கும் வானப் பிரஸ்தர்கள், புலி, பருந்து முதலியவற்றால் கொன்றெறியப்பட்ட ஜந்துக்களை யெடுத்துவந்து பக்குவம்செய்து உண்ணலாமென்று விதிக்கப்பட்டதே யன்றி ஜந்துக்களை யிம்சித்துப் புசிப்பது விலக்கப்பட்டது. ஆதலாலும், ஔஷதிகளோ சரீரபுஷ்டிக்குச் சிறந்தபதார்த்தங்களென்றும் அவற்றைப் புசிப்பதே சரீரபலத்துக்குத் தக்கதென்றும் வைத்தியநூல்கள் கூறுதலாலும் மாம்சபோஜனம் ஒதுக்கத் தக்கதேயாமென்க.

அப்படியானால் ஓஷதிகளுக்கும் ஜீவனுண்டு. அவற்றை யிம்சிப்பதும் பாபமாகாதோ வென்று சிலர் கேட்பதுண்டு. அது அவ்வளவு சிறந்த கேள்வியன்று. ஏனென்றால் எல்லாப் பொருள்களுக்கும் ஜீவனுண்டு. மனதைப் பிரதானமாய்க் கொண்டு பஞ்சேந்திரியங்களால் அறியும் அறிவினையுடைய ஜந்துக்களை வதைப்பதே யிம்சையாம். மரணதுக்கம் முதலிய துன்பங்களை உணரத்தக்க ஜீவன்களை வதைப்பதே இம்சை யென்னப்படுவது 'புன்மரமுதலியவுற்றறியு மோரறிவு யார்" என்றதனால் செடிகொடி யாதி தாவரப் பொருள்களுக்குப்பரிசவுணர்ச்சி ஒன்றேயுண்டு. ஆயினும் அநுபவிப்பதற்குரிய மனமென்னும் கருவி அவற்றுக்கு அவ்வியக்தமாம் (வெளிப்பட்டிருக்கவில்லை) ஆதலால் இன்பத்தையேனும் துன்பத்தையேனும் அவை யுணர்வதில்லை. அதனால்தான் காற்று வெயில் மழை முதலியவற்றால் அவை நாசமடைவதில்லை. பாதியங்கத்தை வெட்டியெறிந்தாலும் அவை அழிந்து போகாமல் மீண்டுந்தளிர்த்துச்செழிக்கும். பஞ்ச இந்திரியங்களையும் மனதையு முடைய ஜந்துக்களுக்கு அவ்வாறில்லை. ஒரு உறுப்பைவெட்டினாலும் அவை பிழைப்பதரிது. தாவரங்களோ, மயக்க மருந்தால் மனமயங்கின மனிதர் சரீரத்தில் சத்திரமிட்டறுத்தாலும் உணராமலிருப்பதுபோலவே துன்பத்தை யுணர்வதில்லை. துன்பத்தை யுணராமையால் அது இம்சை யெனப்படுவதில்லை. அப்படியாயினும் அதுவும் பாவமேயாகுமென்பது சாஸ்திரங்களின் கருத்து. அதனால்தான் செடி கொடிகளின் கிளை யிலைகளை முறித்தவன் மறு ஜன்மத்தில் குஷ்டவியாதி முதலியவற்றால் பீடிக்கப்படுவான் என்பதாதியாகிய வியாதி மூலத்தையும் அது தீர்வதற்குரிய பிராயச்சித்தத்தையும் விதித்திருக்கின்றது. நால்வகைத்தான தோற்றப் பொருள்களில் எதற்குத் துன்பத்தை யுண்டாக்கினபோதிலும் பாபமென்றே கருதப்படும்.

தாமாகவே யிறந்துபோன ஜந்துக்களைப் பக்குவப்படுத்திப் புசித்தால் பாபமாகாது என்று வானப்பிரஸ்தர்களுக்கு விதித்திருப்பதினால் அது இம்சையல்லவென்பது சாஸ்திரசம்மதம். ஆதலால் நன்செய் புன்செய்கைகளில் வளர்ந்து தாமகவே மடிந்தபின் அப்பயிரை அறுத்து எடுக்கப்படும் தானியம் முதலியவற்றைப் புசிப்பதனால் அதிக பாபம் சம்பவியாது. ஆயினும் அரிசி உளுந்து துவரை முதலியவற்றைப் பக்குவப்படுத்திப் புசிப்பதிலும் சிறிது பாபமுண்டு என்பதே தர்மசாஸ்திரங்களின் கருத்து. அந்தப் பாபம் நீங்குவதற்கே பஞ்ச மஹா யக்ஞங்கள் விதிக்கப்பட்டன. ஆதலால் தான் புசிப்பதற்கென்று சமையல் செய்யாமல் தேவபிதிர் திருப்தியையும் அதிதி பூஜையையும் உத்தேசித்துச் சமையல் செய்து, தேவ பூஜையாகிய எக்ஞத்தைச் செய்து, அதிதிகளுக்கு அன்னமிட்டபின் புசிக்கவேண்டும். இதையே, "சிருஷ்டி காலத்தில் சர்வேசுவரன் எக்ஞங்களுடன் பிரஜைகளைச் சிருஷ்டித்து ஜீவர்களே! இந்த எக்ஞங்கள் உங்கள் அபீஷ்டங்களைக் கொடுக்கக்கடவன. எக்ஞங்களால் நீங்கள் தேவர்களுக்குத் திருப்தி செய்வித்தால் அவர்கள் உங்களுக்கு வேண்டிய போகவஸ்துக்களைக் கொடுப்பார்கள். தேவர்கள் கொடுத்த பொருள்களால் தேவர்களுக்குத் திருப்தியுண்டாக்காமல் தானே புசிக்கிறவன் திருடனென்பது நிச்சயம். தேவாராதன சொரூபமான இந்த எக்ஞத்தைச் செய்து மிச்சத்தைப் புசிப்பவனை எவ்வகைப்பட்ட பாபமும் அணுகாது. அவன் பரிசுத்தனாய் மோட்சத்தையடைவான். தேவாராதனைக்கென்று நினையாமல் தனக்கென்று எவன் சமைக்கிறானோ



அவன் பாபத்தையே புசிக்கிறான். இந்தப் போஜனம் பாபரூபமாய் நரகப் பிராப்தியை உண்டு பண்ணும். ஆதலால் தனஞ்சயா! தேவனுக்கென்றே சமைத்துத் தேவாராதனையைச் செய்து அதிதிகளுக்கு இட்டுப் பின் புசிப்பதே மோட்சகாரணமாகும். மற்றது நரக காரணமாகு" மென்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் அருளிச் செய்தார். ஓரறிவுடைய தாவரப் பொருள்களைத் தின்பதினாலுண்டாகும் பாபம் தேவாராதனத்தால் தீரும் என்பது தர்மசாஸ்திரங்களின் கருத்து. வரிவஞ்சி யிம்மட்டில் நிறுத்தி எடுத்துக்கொண்ட போஜன விஷயத்தைச் சற்றுக் கவனிப்போம்.

தேவாராதனை முடிந்தபின் ஒரு முகூர்த்தகாலம், அல்லது ஒரு பசு கறக்குங்காலம், அல்லது நமக்கு இச்சையுள்ள காலமட்டும் அதிதிகளின் வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் அதிதி பூஜை அல்லது மனுஷ்ய எக்ஞமென்று கூறப்படுவது. அதிதியை ஆராதியாமல் புசிப்பது கூடாதென்கிற விதியுமுண்டு. அதிதி பூஜையால் கஷ்டம் நேரிடாது. ஏனென்றால் அதிதி என்பதன் பொருள் நாள் கடவாதவன் என்பது. இதனால் முன் ஒருபோதும் வந்திராதவனும், அவ்விடத்தில் புசிக்க வேறு மார்க்கமில்லாதவனுமான புதியமனிதனே அதிதியென்று கூறப்படுவான். அவன் அன்று பகல் இரவு ஆகிய இருவேளை மாத்திரம் அதிதியாவான். மறுநாள் விடிந்தால் அவன் அதிதி ஆவதில்லை. இப்படிப்பட்ட அதிதி எப்போதும் சம்பவிப்பதில்லை யாதலால் அதிதிபூசை எளிதில்செய்யக் கூடியதே. அவனுக்காக வேறொன்றும் அதிகமாகச் செய்யவேண்டியதில்லை. அன்றுதினம் எந்தப் பதார்த்தங்கள் பாகம் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவற்றையே அதிதிக்குப் படைக்கவேண்டும். தேவபூசை முடிந்து போஜனம் செய்யும் சமயத்தில் வருகிறவன் சிநேகிதன், பகைவன் மூர்க்கன், மூடன், பண்டிதன், பாமரன், என்று கவனியாமல் எவனானாலும் அவனுக்கு அன்னமிட்டுபசரிக்க வேண்டும். அவனை யாராதிப்பது சொர்க்கத்துக்குக் காரணமாகும். வேற்றூர்களி லிருந்து நெடுந்தூரம் வழிநடந்து களைத்துப் பசிதாகங்களால் வருந்திப் போஜனத்தை உத்தேசித்து வருகிறவனே அன்றையதினம் அதிதியாவான், இப்படியே சாயங்காலம் வருபவனும் அவ்விரவு மட்டும் அதிதியாவான். இவனைக் கடவுளாகப் பாவித்துப் பூசைசெய்ய வேண்டுமென்றும், அவன் குலகோத்திரங்களை விசாரிக்க வேண்டியதில்லை யென்றும், அவனை உபசரிப்பதும் தேவாராதனையே யாமென்றும், அது மோட்சத்துக்கு ஏதுவென்றும் தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அன்றியும் அதிதி எவன்வீட்டில் உபசரிக்கப்படாமல் திரும்புகிறானோ அவன் வீட்டில் செய்யப்படும் தேவ பிதிர்க்காரியங்கள் அத்தனையும் பலன் கொடாமல் வியர்த்தமாய்விடும். உபசரிக்கப்படாத அதிதி யானவன் அந்தவீட்டு எஜமானனுக்குத் தன் பாபங்களைக் கொடுத்து விட்டு அவனுடைய புண்ணியங்களை யெல்லாம் கைக்கொண்டு போகிறான் என்று மனுஸ்மிருதி, விஷ்ணு ஸ்மிருதி முதலிய கூறின. அதிதியைப் பூஜியாத பிராம்மணன் அப்பொழுதே சண்டாளனாகிறான் எனப் பாரதம் அசுவமேத பர்வத்தில் கூறப்பட்டது. குதிரை குடையுள்ளவன் (தனவந்தன்) அதிதியாக வந்தால் அவனுக்கு அன்னம் கொடுத்து உபசரிக்கிறவன் இந்திரபதவியை அடைவான். தேவபூஜை முடிவில் அதிதியாக வந்தவன் கோஹத்தி,

பிரமஹத்தி, பித்ருஹத்தி முதலிய மஹா பாதக உபபாதகங்களைச் செய்தவனாயிருந்தாலும் அதைக் கவனியாமல் அவனை யுபசரிப்பது தான் அதிதி பூசையினிலக்கணமாமென்று நூல்கள் கூறுகின்றன. அப்படி வந்த அதிதி சொர்க்கத்தை அடைவிக்கத்தக்கவனாகிறான் என்றும் கூறுகின்றன. ஆதலால் தேவாராதனை செய்து தேவனுக்கு அர்ப்பிக்கப்பட்ட போஜன பதார்த்தங்களைப் பிக்ஷுகர்களுக்கும் அதிதிகளுக்கும் பகிர்ந்து கொடுத்து மிஞ்சி யதைப் புசிக்கவேண்டும்; அது மோட்சமார்க்கமாம் என்பது ஆரியோத்தமர்கள் கண்டவழியாம். அன்றியும், சுமங்கலி, தூக்கப்படுவோர், கர்ப்பிணி, விருத்தர், பாலர் இவர்களை முதலிற் புசிப்பிக்கச் செய்து பின்பு தானும் தன் பத்தினியும் புசிக்க வேண்டுமென்றும் நூல்கள் கூறுகின்றன.

இவற்றால் ஆரியோத்தமர்கள் புசிப்பதும் மோட்சமார்க்கத்தை உத்தேசித்தே யென்றும், மற்றவர்களைப்போலச் சரீரம் பருத்துப் புஷ்டியடைந்து உலகச் சிற்றின்பங்களையே பயனாகக் கொண்டதல்ல வென்றும் இனிது புலப்படும். இனிக் கூறும் போஜன நியமனங்களால் அது விளங்கும். போஜன விஷயத்தில் நீர்த்தபாத்திரம், உண்கலம், உட்காருந்திசை, உட்காரு முறைமை, உணவுகொள்ளு முறை, அப்பொழுது அனுஷ்டிக்க வேண்டிய விதி, பரிமாறுவோர் இவைகளைப்பற்றிய சில விசேஷங்களுண்டு. அவைகளைச் சற்று விவரியாமற் சென்றால் இந்தப் போஜனப் பிரகரணத்துக்குப் பயனுண்டாகாமற் போய்விடும். ஆரிய சித்தாந்தமும் விளங்காது. ஆரியர் தாங்கள் போஜனம் செய்வதற் கேற்படுத்திய விதிகளும் உபகாரமாகவே யிருக்கின்றனவென்பதை மேதாவிகள் உணராதிரார்கள். யாம் இங்கு எழுதுவது கல்வி கேள்விகளிற் சிறந்துவிளங்கும் பண்டித சிகாமணிகளுக்கல்ல. ஆனந்தபோதினியைப் படித்துணர விரும்பும் யாவரையும் ஸ்திரீகளையும் உத்தேசித்தே யாதலால் நீண்ட இந்த உபந்யாசத்தால் பண்டிதோத்தமர்கள் மனச் சோர்வடையா திருக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

சிவானந்த சாகரயோகீஸ்வரர்.

---

## கைவல்ய நவநீத வசனம்.

### பாயிரம்.

ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட இந்நூல் வேத முடிவைக்கூறும் முக்கியமான ஞானநூலென்பதும், இப்பிறவிப்பெரும் பௌவத்தைக் கடந்து துக்க நிவர்த்தியும் தடையற்ற அழியா ஆனந்தமுமாகிய முத்தியாங்கரை சேரவேண்டினர்க்கு இது இணையிலாத் தெப்பம்போன்ற தென்பதும் நம்மவரனைவரும் அறிந்த விஷயமே.

ஆன்றோர்கள் மதவிரோதத்திற்குக் காரணங்களாகாதலின் எல்லா மதங்களும் அவர்கட்குச் சம்மதமேயாம். ஏனெனில் எல்லா மதங்களின் முக்கியக்கருத்தும் ஒன்றே யென்றும், அவற்றில் பகிர்முகத்தில் தோன்றும் முக்கியமல்லாத அம்சங்களைப் பற்றிய சில வித்தியாசங்களும் காலதேச வேறுபாட்டால் ஏற்பட்டனவே யன்றி வேறில்லை யென்றும், எல்லாமதங்களுக்கும் கடவுள் ஒருவரே யாதலின் கடவுளுக்கும் எல்லாமதங்களும் சம்மதமே யென்றும் அவர்களறிவார்கள்.



அவ்வாறிருக்க அநாதியாகிய ஒரு வேதத்தையே ஆதாரமாகக் கொண்ட பல கொள்கைகளையுடைய நம்மவரிற் சிலர், தமது கொள்கையே சரியான தென்றும் பிறன் கொள்கை தவறென்றும் துவேஷங்கொண்டு அதைக் குற்றங் கூறுகிறார்கள். இத்தகையோர் பெரும்பாலும் தமது கொள்கையைப் பூரணமாய் ஆராய்ந்துணர்ந்து, அதன்பின் எதிரியின் கொள்கையைத் துவேஷபுத்தியின்றி யாராய்ந்து அநுபவத்தில் இரண்டிலும் ஏதேனும் வித்தியாச முளதாவென்று சிந்திக்காமலே, தங்கள் கொள்கையைப் பரோக்ஷமா யுணருமுன்பே பிறர் கொள்கைமேல் துவேஷம் கொள்வதையும், அதன்மேல் குற்றங் கற்பிப்பதையுமே முதற்பாடமாகக் கற்றுக்கொள்கிறார்கள்.

சிலர் "வேதாந்தம் ஏகான்மவாதம்; அதாவது நானே பிரமம் என்று போதிக்கிறது" என்று கூறுகிறார்கள். கல்விமான் என்று பலரால் மதிக்கப்பட்ட ஒருவர் ஒருவிடத்தில் (பெரியபுராணம்) பிரசங்கம் செய்யும்போது "கைவல்யம் என்ற ஏகான்மவாதநூல் ஒன்றிருக்கிறது. அதில் கனவு பொய்யென்றும் அதைப்போல் உலகம் பொய்யென்றும் கூறியிருக்கிறது. கனவு பொய்யென்று எப்படி கூறலாம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், பாசுபதம் பெற்றதாக அர்ச்சுனனும் கண்ட கனவுகளை, கனவு பொய்யல்லவென்பதற்கு அத்தாட்சிகளாகக் கூறியபின், கைவல்லிய நூலையும் ஸ்ரீமத்சங்கராச்சாரிய சுவாமிகளையும்சேர்த்து தூஷித்தார். ஆனால் சிலநாட்களுக்குள் அவரே இன்னொரு பிரசங்கத்தில் (கந்தபுராணம்) "கனவு பொய், சாதாரணமாய் ஒரு சங்கதி பொய்த்துப் போனால் அது கனவாய் முடிந்தது என்று கூறுகிறார்களல்லவா, கனவில் ஒருவன் ஒருபுதையல் கண்டெடுத்ததாகக் காண்கிறான். விழித்துப் பார்த்தால் புதையல் இருக்கிறதா?" என்று கனவு பொய்யெனத் தாமே நிரூபித்தார்.

அந்தோ! இத்தகையோர் கல்வியும் மதநூலாராய்ச்சியும் யாதுபயனளிக்கும்? இத்தகையோரே ஓர் நிலையான உண்மையைக் கைப்பற்றாது துவேஷபுத்தியால் எதிலும் குற்றங் கூறுகிறவர்கள். தவறாய் அர்த்தம் செய்துக் கொள்வோர் எதிலும் உண்டு. அவர்கள் அறியாமையால் அப்படிக்கூறுவதைக் கொண்டே ஒரு கொள்கையைத் தூஷிப்பது அறிவாளிகள் தன்மையாகாது. வேதாந்தத்தில் மகா வாக்கியங்களாகிய, அகம் பிரம்மாஸ்மி, அயம் ஆத்மாபிரம்மம், முதலியவை விவகரிக்கப்படுகின்றன. முன்னடி கைவர வேண்டிய சாதனங்களை யடையாமலே ஆரம்பத்திலேயே முடிவான விஷயத்தைக் கூறும் இத்தகைய நூலை (சரியான ஆசானிடமின்றித்) தாமே கற்க முயல்வோர் நானே கடவுள் என்பது முதலிய தவறான அபிப்பிராயங்களைக் கொள்ள லாகும். அதையுணராது வேதாந்தத்தின் கொள்கையே ஏகான்மவாதம் என்று கூறுவதும், வேதாந்திகளனைவரும் அதே கொள்கையை யுடையவர்கள் என்று கருதுவதும் பெருந்தவறேயாகும். ஐக்கியத்தை யடைவதில் அய்யர் தோன்றுகிறுப்பதற்காக "ஆன்மாவும் பரமான்மாவும் ஒரேயினமன்றி சற்றும் பேதமில்லை." குடசலம் கடலில் கலந்தால், தான் அதில் மறைந்து கடலாகவே தோன்றுவதுபோல், நீயும் தானென்பதற்று பிரம்மத்தில் ஐயிக்கியமடைந்து பிரம்மமயமாவாய் என்று கூறப்பட்டிருக்கிறதேயன்றி வேறில்லை.

சித்தாந்த சாத்திரங்களிலும் "சிவோகம்" முதலிய வாக்கியங்களுள் மாணிக்கவாசகர் "நாம் சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்றும் "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே" என்றும், தாயுமானவர் "என்னைத் தானாக்கிக் கொண்ட சமர்த்தைப் பார் தோழி" என்றும் அருளியிருக்கிறார்கள். "நீ அதுவா யிருக்கிறாய்" என்று பொருள்படும் 'தத்வமசி' என்ற வேதவாக்கியத்தாலேயே அது என்ற பதிப்பொருள் வேறென்றும் நீயென்ற சிவன் வேறென்றும், நன்கு விளங்குகிறது. பிறகு மாணிக்கவாசர் "நாம் சிவமானவா பாடி" என்பதுபோலவும், தாயுமானவர் "அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்" என்பது போலவும் நீ பிரம்மமாகிறாய் என்று கூறப்பட்டிருக்கிறது. வேதாந்தத்தில் நீ கோயிலுக்குப்போகாதே, அங்குள்ள கடவுளை வணங்காதே யென்று கூறியிருக்கவில்லை. அஞ்ஞானதசையில் பதிக்குவேறாயிருக்கும் சீவனாகிய ஆன்மா ஞானநிலையில் பதியோடு இரண்டற்ற நிலையையடைகிறது. அப்படிக்கின்றி என்றுமே சிவம் வேறு சீவன் வேறாகவே யிருக்குமென்று கருதல் தவறேயாகும். என்றும் வேறாயின் இரண்டாகிய நிலையில் முத்தி எவ்வாறு கூடும்? பிறவியெவ்வாறொழியும்? என்று மில்லை. கைவல்லியம் ஞானத்தைப்போதிக்க வந்த நூலாதலின் சரியை கிரியை யாதிகள் அதில் கூறப்படவில்லை. தாயுமானவரும், "எனக்கினிச் சரியையாதிகள்போதும், யாதொன்று பாவிக்க நான் அதுவாதலானுன்னை நானென்று பாவிக்கின் அத்துவித மார்க்க முறலாம்" என்று கூறியருளினார். இது சிவோகம் பாவனையையே குறிக்கிறது. தானற்ற பின் இருப்பது ஒன்றேயாதலால் "தானென தன்மயமேயல்லா லொன்றைத் தலையெடுக்கவொட்டாது..." என்றும், "தாக்கு நல்லானந்த சோதி. அணு-தன்னிற் சிறியவெனைத் தன்னருளாற், போக்கு வரவற்றிருக்கும், சுத்த, பூரணமாக்கினான் புதுமைகாண் மின்னே" யென்றும் அருளினார்.

இரண்டு கொள்கைகளின் கருத்தும் அனுபவமும் ஒன்றேயன்றி எள்ளளவும் பேதமில்லை யென்றே மகான்களாகிய அனுபவஞானிகள் அருளியிருக்க அதையுணராமலே த்வேஷ புத்தி கொண்டு குற்றங் கூறுவது நூலுணர்வை மட்டும் கிரகித்துக்கொண்டு உண்மையை யறிய ஆராய்ச்சி செய்யாதார் தன்மையேயாகும்.

இத்தகையோர்களது தவறான மொழிகளைக் கேட்கும் சிலர் வேதாந்தமே அப்படித்தான் கூறுகிறதாக்கும் என்ற தப்பு அபிப்பிராயங்கொண்டு கைவல்லிய நூலின்மேல் விருப்பங்கொள்ளத் தடுமாற்ற முறுகிறார்கள். இக்காரணத்தால்தான் நாம் முகவுரையாய் இவ்விஷயத்தைக் கூறவேண்டியதாயிற்று.

இந்நூல் எல்லாசாதனங்களும் கைவந்தபின் தன்னையறிந்துத் தலைவனில் இரண்டறக் கலக்க வேண்டியதைப்பற்றி மட்டுமே போதிப்பதால் இது எம்மதத்தினரும் எவ்வருணத்தாரும் வாசித்துணரத்தக்க பொது நூலாயிருக்கிறது. இத்தகைய அருமை வாய்ந்த நூல் பாக்களாய் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு இது காறும் நான்கைந்து உரைகள் எழுதப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆயினும் கடைசியாக பூலோக கயிலாயமென்னும் சிதம்பர க்ஷேத்திரத்திலெழுந்தருளி யிருந்த மகானாகிய கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் எழுதியருளிய தத்துவார்த்த தீபம் என்னும் உரையே மிகச்சிறந்ததென்று யாவராலும் மதிக்கப்படுகிறது.



இத்தகைய உரைகளிருந்தும் இந்நூல் இலக்கண விலக்கிய வாராய்ச்சி கொஞ்சமேனும் உடையோர்மட்டுமே வாசித்துணரத் தக்கதா யிருக்கிறது. ஆதலின் யாவரும் சுலபமாய் வாசித்துணரும் வண்ணம் இது வசன நடையில் எழுதப்படவேண்டியது அவசியமே. அவ்வாறே இரண்டொரு வசனங்களும் எழுதப் பட்டிருப்பதாய்க் கேள்வி. ஆயினும் சுருக்கமாகவும், முக்கியமான விஷயங்களை விளக்கிக் காட்டியும், ஆண் பெண் இருபாலாரும் சுலபமாய் வாசித் தறிந்துகொள்ளும் வண்ணம் எளிய நடையிலும் வசனரூபமாக நமது ஆனந்தபோதினியில் வெளியிடவேண்டுமெனச் சந்தா நேயர்களில் பலர் விரும்பியபடியால் இதை யெழுத நேர்ந்தது.

பரம தயாநிதியாகிய பரசிவமே அடியேன் சிற்றறிவிற்குத் துணையின்று உண்மைக்கு மாறுபடா வண்ணம் வழிகாட்டியா யிருந்து, இது இனிது முடியுமாறு அருள்புரிய வேண்டும் என்ற பிரார்த்தனையோடு இதை எழுதத் தொடங்குகிறோம். பிழைக ளுளவேல் ஆன்றோர் பொறுக்கப் பிரார்த்திக்கிறோம்.

## நூல்.

### கடவுள் வணக்கம்.

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலத் தாத்திற் சிவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி.

(இதன் பொருள்.) பொன், பூமி, மாதர் இவற்றின்மேல் ஆசையுடையோர் (அஞ்ஞானிகள்) உள்ளத்திலும், இவற்றில் ஆசையில்லாதார் (ஞானிகள்) உள்ளத்திலும், (பேதமின்றி) ஆகாயத்தைப்போல் எதிலும் தாக்கற்று சிவசாட்சி மாத்திரமாய் விளங்கி யிராநின்ற, எல்லா பூமிகளுக்கும் மேலான எழு ஞானபூமிகளிற் சிறந்த துரியபூமியிற் பொருந்தி யொளிரும், சச்சிதானந்த சொரூபியாகிய பரம்பொருளின் அடிகளை வணங்குவாம்.

(இந்நூலின் மூலத்தில் குருவணக்கம் முதலிய இன்னும் சில வணக்கங்க ளிருக்கின்றன. அவற்றில் குருவணக்கத்தின் கவியைமட்டும் இங்கு குறித்துவிட்டு விஷயத்தை யாரம்பிக்கிறோம்.)

### குருவணக்கம்.

என்னுடை மனது புத்தி யிந்திரிய சரீர மெல்லாம்
என்னுடை யறிவி னாலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடை குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே.

[குருசிஷ்ய சம்வாத ரூபமாக அருளப்பட் டிருக்கும் இந்நூல் 1.வது தத்துவ விளக்கப் படலமென்றும், 2-வது சந்தேகந் தெளிதற் படலமென்றும் இரண்டு படலங்களாக வகுக்கப்பட் டிருக்கிறது.]

## தத்துவ விளக்கப்படலம்.

தத்துவ விளக்கப்படலமெனின் தத்துவங்களை விவரித்துக்கூறும் பாகம் என்பதாம். நித்திரை செய்யவிரும்புவோன், முன்னடியே யதற்கு வேண்டிய மிருதுவான படுக்கை, மேல்விரிப்பு தலையணை முதலியவற்றை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமன்றோ. அது போலவே ஒரு பொருளை யடைய விரும்புவோன், அப்பொருளின் தன்மையை யுணர்ந்து அதனால் கிடைக்கும் பயனை யனுபவிப்பதற்குத் தகுதியான நிலைமையை முன்னடி யடைய வேண்டும். அவ்வாறே ஒரு நூலை வாசித்து அதிற் கூறப்பட்ட பயனை யநுபவமாய் அடைய விரும்புவோன், முன்னடி யதற்கு வேண்டிய சாதனங்களை யடையவேண்டும். இங்கு அடைய வேண்டியது ஆன்மார்த்தமாதலால், அதை யடைவதற்குத்தக்க மனோ நிலைமையை முன்னடி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகையால் இந்நூலாசிரியரும், இந்த ஞானநூலை வாசித்து இதன் பயனை யடைய விரும்புவோர் முன்னடி யடையவேண்டிய சாதனங்கள் இன்னவை யென்று ஆரம்பத்திலேயே கூறுகிறார். அச்சாதனங்கள் நான்கு பிரிவாய்க் கூறப்பட்டிருப்பதால் அவற்றிற்குச் சாதனசதுஷ்டயம் என்று பெயர்.

## சாதன சதுஷ்டயம்.

இந்நூலுக் கதிகாரியாவோன் அடையவேண்டிய சாதனங்கள் நான்கு. அவை பின்வருமாறு :—

1. நித்தியா நித்திய வஸ்து விவேகம்,
2. இகபர விராகம்,
3. சமாதி சட்சம்பத்தி,
4. முமுட்சத்துவம், என்பவைகளே.

**1-வது.** நித்தியா நித்தியவஸ்து விவேகம் எனின் இப்பிரபஞ்சத்தில் எது என்று மழியாமல் நித்தியமாயுள்ள வஸ்து, எது அப்படிக்கின்றி அநித்தியமாய் அழிந்து போகத்தக்க வஸ்து என்ற உண்மையை யறிந்து கொள்ளுதல். இதற்குத் **திருக்குத்திரிசிய விவேகம்** என்றும்பெயர். திருக்குஎன்றால் நாமரூபமின்றி என்று மழியாதுள்ள நித்திய வஸ்து; திரிசியம் என்றால் நாமரூபமாய்த் தோன்றும் அழியத்தக்க அநித்திய வஸ்துக்கள். **திருக்குத்திரிசிய விவேகம்** (அல்லது திருக்குத்திருசிய விளக்கம்) என்ற ஒரு நூலே யிருக்கிறது. அதில் இது நித்தியம் இது அநித்தியம் என்று விவரமாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

சச்சிதானந்த இலக்ஷணமுடைய பரம்பொருளும், ஆன்மாவும் மட்டுமே என்று மழியா நித்தியப் பொருள்களென்பதும், மற்றபடி நாமரூபமாய்த் தோன்றும் எல்லாப் பொருள்களும் அழியும் அநித்தியப் பொருள்களே யென்பதுமே இதன் உண்மை.

**2-வது** இகபர விராகம் என்றால், இவ்வுலகத்திலுள்ள போகபாக்கியங்களிலும், பரலோகமென்ற தேவலோகத்திலுள்ள போக பாக்கியங்களிலும் வெறுப்படைதலாம்.

ஏனெனில், இப்போக பாக்கியங்கள் அநித்தியமும், ஜடமும், துக்கமுமானவை. இப்போக பாக்கியங்களை யடைவதற்கு அவசியமான பொருள்



தேடுவதில் மிக்க கஷ்டமும் தொல்லையும் உண்டு. அடைந்த பின்பும் அதைக் காப்பாற்றுவதில் கள்ளர் விரோதிகளாதியர் பயமும் பலகஷ்டங்களு முண்டு. அதோடு அவையழியாம லிருக்கத் தக்கவையுமல்ல. அவைகள் நமக்குச் சொந்தமென்றும் நாம் அவற்றை யநுபவிப்போமென்றும் நாம் நம்பியிருக்க, எதிர்பாராத காலத்தில் தென்புலத்தான் வந்து உயிரைக் கவர்ந்து செல்ல அந்தோ சொல்லொணா வேதனையோடு யாவற்றையும் விட்டுச் செல்லவேண்டி நேர்கிறது.

இந்த உலக போகங்களில்தான் இவ்விதக் கஷ்டங்களுண்டு, தெய்வலோக போகங்களில் கூடவா துன்பங்களுண்டு என்றால், கட்டாயம் உண்டு தான். அங்கும் காமக்குரோதாதி குணங்களுண்டாதலால் துன்பங்களுண்டு. தேவர்களுக்கரசனாகிய இந்திரனே இராக்கதரால் படாதபாடு பட்டிருக்கிறான். இந்திரன்முதல் அனேகதேவர்கள் ரிஷிகளின் கோபத்திற்காளாகிச் சாபனைகளை யேற்றுக்கொண் டிருக்கின்றனர். தக்கன் செய்த யாகத்திற்குச் சென்று அதனால் கொடிய துன்பங்களை யடைந்திருக்கிறார்கள். வியாதிகளால் வருந்துகிறார்கள். இவ்வுலக வாழ்க்கை இரும்பு விலங்கெனின் தேவலோக வாழ்க்கை பொன்விலங்காகும். இரண்டும் விலங்கே. நாமரூபமுடைய ஜன்மம் எத்தகைய தெனினும் அதில் துன்ப மிருந்தே தீரும்.

ஆகையால் நித்தியமாகிய பேரின்ப வீட்டையடைய விரும்புவோர் மேற் கண்டவற்றை நன்குணர்ந்து, இவ்விரு வுலகபோக பாக்கியங்களையும் இச்சிக்காமல் வெறுக்கவேண்டும். நாம் பல ஜன்மங்களில் இவற்றை யனுபவித்திருக்கிறோ மாதலின், ஒரு காலத்தில் நாமே மிக்க பிரியத்தோடு உண்ட ஆகாரத்தை வாந்தியெடுத்தால் பிறகு அதை விரும்பாது எப்படிக் கண்ணால் பார்க்கவும் வெறுப்படைகிறோமோ, அவ்வாறே இந்த இகபர போகங்களை வெறுக்க வேண்டும்.

**3-வது :**—சமாதி சட்சம்பத்தி என்றால், சமம் முதலிய ஆறு குணங்கள் என்று பொருள். அவை, (1) சமம் (2) தமம் (3) விடல் (4) சகித்தல் (5) சமாதானம் (6) சிரத்தை என்ற ஆறு குணங்களாம். (தொடரும்)

சீடன்.

---

## அகங்காரம்.

வினையாண்மையை யுடையார் பெருமை யடைவார் என்று மதித்தோமன்றோ? 'பெருமை பெருமிதமின்மை, சிறுமை பெருமித மூர்ந்துவிடல்' ஆதலின் அகங்காரம் என்ற வீண்பெருமை அறிவுடையார் வெறுக்கத் தக்க அவகுணமானது பற்றி வினையாண்மைக்குப் பின் 'அகங்காரம்' என்பதைப் பற்றி ஈண்டு ஆராய்வோம்.

ஜீவராசிகளுக்கு இயல்பிலேயே உடன் பிறக்கும் சில அவகுணங்கள் உள. அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்பன. மதம் என்ற அவகுணம், சிறுபான்மை காம விகாரத்துள்ளழுத்தும், பெரும்பான்மை அகங்காரம் என்ற வீண்பெருமை பாசத்தால் கட்டுப்படச் செய்யும்.

முதல் முதலில் ஒருவன் தன்னைப் பற்றி விசேஷமாய் நினைத்து தனக்கில்லாத குணங்கள் உள்ளனவாகக் கருதி பிறர் தன்னைப் பெருமையாகப் பேசக்கேட்பதில் பிரியப்படுவோன். சாதாரணமாகத் தம்மை யிருந்த அழகு

வாய்ந்தவர் என்று எண்ணுவர் அகங்காரப் பேய் பிடித்த ஒரு சாரினர். மற்றொரு சாரினர் தன்னுடையகுரல், குழலினுமினிது குயிலினுமினிது எனப் பெருமை கொள்வர். பிறிதொரு சாரினர் ஸ்திரீஜாதிகள் பிரியப்படும் குணங்கள் பலவும் தன்னிடத்து அமைந்துள்ளனவென்று கருதுவர். பிறரிடத்தில் எந்த எந்த குணாதிசயம் தன்னுடைய மனதைக்கவர்ந்து கொள்ளுமோ அந்தந்த குணாதிசயங்கள் தன்னிடத்திலுள்ளன வென நினைக்கு மெவனும் அகங்கார மென்ற அவகுணத்தை ஓர் ஆபரணமாகக் கொள்ளா நிற்பவன் என்பதில் ஐயம் இல்லை. அகங்காரத்திற்கு ஆதிகாரணம் இத்தன்மையாகவே இருக்கின்றது.

தன்னிடத்தில் இல்லாத ஒன்றை, தன்னிடத்தில் உள்ளதென்று நினைப்பவன், மனப்பால் குடிக்கிறவனென்றே கொள்ளலாமன்றோ! தனக்கும் பிரயோசனமின்றி பிறருக்கும் உபயோகமின்றியிருக்கும் இக்குணத்தைச் சிறந்ததெனப் பூணுவர் பேதையர். கல்வி, அறிவு, மதி, யூகம், இவைகளினாலாகிய விசேஷ பலனாகிய விவேகம் என்றதோர் பேறு பெறாதவர்கள் இவர்கள். இவ்வவகுணம் பூண்டவர்கள் (புருடரேனும் ஸ்திரீகளேனும்) யாவரேனும் சன்மார்க்க நெறியுள்ளவராக இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஏனெனில் மானிடப் பிருகிருதிகளுக்குள்ள உயர்தர உணர்ச்சிகள் இவர்களிடத்தில் இல்லா தொழிவதின் பயனாகப் பொதுவாக ஈரம், இரக்கம், தயை, தாக்ஷிண்யம், அன்பு முதலிய நற்குணங்கள் இவர்களிடம் தேய்பிறைச் சந்திரன் போன்று கலைகுறைந்து மங்கிப் போகும். இயல்பிலேயே உடன் பிறக்கும் நற்குணங்களை அழிக்கா நிற்கும் இவ்வகங்காரம் விளையும் முன்னரே, வேருடன் பிடுங்கி விடாவிடில் நெற்பயிருடன் கூடப்பிறக்குங் களைகளைப்போலத் தீங்குபயக்குமாதலின், புத்திசாலிகள் வெறுக்கத்தக்க குணமாகும் இந்த அகங்காரம் என்ற அவகுணம்.

மேலும் அகங்காரம் உள்ளவன் செய்யத்தகாததைச் செய்வன். தகுதவன் (அகங்காரமற்ற குணவான்) அப்படிச் செய்யா தொழிவன். அன்றியும், அவன், தன்னிடத்திலுள்ள குற்றங் குறையை உன்னாநிற்பன். அகங்காரமுடையோன், தன்னை அறியாதவனாவன். தன்னையறியாதவன், பிறரையறிய வல்லவனாவனோ? பிறரையறியான், பிறர்படும் கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து கொள்ளத்தான் மாட்டுவனோ? இங்ஙனமாக இத்தகைய அறிவிலி பிறருக்கு ஏதும் நன்மை செய்யக்கூடுவனோ? பிறர்க்குதவி புரியான். இவன் மானிடஜன்மம் பெற்றதினால் பெரும் பயனென்னே?

இவன் தன்னுடைய மேம்பாட்டுக்கேனும், முயற்சிசெய்து தன்னை விருத்திசெய்துகொள்ளும் சக்தியற்றவனாகின்றானாதலின், சோற்றுக்குக் கேடாய் பூமிக்குப் பாரமாயிருக்கும் மனிதப்பதர்களைக் காட்டிலும், பிறர்க்குக் கேடு பயக்கும் தன்மைவாய்ந்திருப்பது நிமித்தம், மனிதப்பதரினும் பதரெனக் கருதப்படுவான். இதற்குப் பெரும்பாலும், அகங்காரமே காரணமாயிருப்பதுபற்றி, இவ்வவகுணத்தைச் சற்றும் அடையாதிருக்க எச்சரிக்கையாயிருக்கும் வண்ணம் நம் சகோதர சகோதரிகளுக்கு எங்கணும் நிறைந்த இறைவன் அருள் புரிவாராக.

N. S. இராமசந்திரய்யர். B.A.,
17, வெள்ளாளத் தெரு,
வேப்பேரி, மதராஸ்.



## வாய்மை.

வாய்மை, மெய்மை, உண்மை, சத்தியம், இவை ஒரு பொருட் சொற்கள். வாய்மையாவது பொய் சொல்லா திருத்தலாம். பொய்யாவது நடந்ததொன்றிருக்க மற்றொன்றைச் சொல்வதும், ஒன்று நடவாதிருக்க அதை நடந்ததாகச் சொல்வதும், நடந்ததை நடக்கவில்லையென்று சொல்வதும் போல்வன.

அப்படிப் பொய் சொல்வதால் விளையுங் கேடுகள் பல வாதலாலும், பொய் சொல்லாமல் வாய்மையே அதாவது உண்மையே சொல்வதால் உண்டாகும் நன்மை அதிகமாதலாலும்,

"வாய்மை கடைப்பிடி."

என்று பெரியோர் நமக்கு கட்டளை யிட்டிருக்கின்றனர்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்." (குறள்)

"நாம் பொய் சொன்னது எவருக்கும் தெரிந்தா லல்லவோ குற்றம். நாம் சொன்னது ஒருவருக்கும் தெரியாதே" என்று நினைத்து ஒருவன் பொய் சொல்வானாயின், அவன் சொன்ன பொய்யை வேறொருவரும் அறியாவிட்டாலும், அவன்மனம் அந்தப்பொய்யை அறியுமாதலால் அவனுக்குத் தண்டனை அவன் மனத்தாலேயே கிடைக்கும். நாம் உண்மையைச் சொன்னோம், உண்மையைச் செய்தோம் என்று நம்மனதுக்கு திருப்தியாக நடந்தால் அது உலகத்துக்கு திருப்தியாக நடந்ததற்கு ஒத்ததுமல்லாமல் அதற்கேற்பட்ட பயனும் புகழும் கிடைக்கும்.

"கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொரு ளடக்கம்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சோற்றுறுதி
கண்டிடிற் சத்திய வசனம்..............
என்றும்..........................................
"........................
உண்மையில்லாதவர்க்கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வமேது. (குமரேச சதகம்)

என்றும் ஆன்றோரருளியபடி மனிதனின் சொல்லை உறுதிப்படுத்துவது சத்திய வசனமே. அப்படி வாய்மை யில்லாதவன் எவ்வகை அறங்களையும் நற்செய்கைகளையும் செய்தகாலத்தும் அவை அவனுக்கு பயனளிக்க மாட்டா.

இசையா வொருபொருளில் லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை — நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றமு டைத்து. (நாலடியார்)

கிடையாத பொருளை இல்லை யென்று சொல்லுதல் குற்றமாகாது. கேட்டோன் அலையும்படி செய்து பொய் சொல்லுதல் செய்ந்நன்றி கொன்ற பாவத்திலும் குற்றமுடையதாகுமாம்.

இனி,

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."
"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்." (குறள்)

என்றதனால், உள்ளதை உள்ளபடி சொல்லுதல் மாத்திரம் வாய்மையாகாது என ஏற்படுகிறது. அதாவது வாய்மை பிறருக்குக் கொஞ்சமும் தீமையைக் கொடாததாக இருக்கவும் வேண்டும். மெய்மையும் பொய்மையும் அதனதனால் விளையும் பயனுக்குத்தக்கபடி நல்லதும் கெட்டதுமாகும். ஆகவே நன்மையை விளைவிக்கும் பொய்ச் சொற்களும் மெய்ச் சொற்களாகவே எண்ணப்படும். பொய்யைச் சொல்லுதல் நன்மையை உண்டாக்காத பொழுதும், நடந்த உண்மையைச் சொல்லுதலால் தீங்கு உண்டாகும் பொழுதும் அவை யிரண்டும் பொய்ச் சொற்கள் கூறியதையே யொக்கும்.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."
"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மை யினல்ல பிற." (குறள்)

மற்றைய ஒளிகளாகிய விளக்குக ளெல்லாம் அஞ்ஞானமாகிய அகத்திருளைப் போக்கமாட்டாமை யாலும், பொய்சொல்லாமை யென்னும் விளக்கு அகத்திருளைப்போக்க வல்லதாதலாலும் அவைகளிலும் இதற்கு மேம்பாடுடைத்து. இத்தவாய்மையானது எந்த சாஸ்திரத்தாலும் உயர்ந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

சத்தியத்தைக் கைப்பிடித்ததாலுண்டாகும் புகழுக்கும், சத்தியம் தலைகாக்கும் என்ற பழமொழியினுண்மைக்கும் அரிச்சந்திரன் சரித்திரம் ஒன்றே போதிய சான்றாம்.

V. மீனாக்ஷிசுந்தரம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

---

## வைத்தியக் குறிப்பு.

(317-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் விஷகரத்தின் இலக்ஷணங்களையும் அவற்றின் சிகிச்சைகளையும் சொன்னோம். இப்பொழுது ஜ்வரமென்பது யாது என்னும் கேள்வியால் சகல ஜ்வரங்களின் காரணங்களையும் நிரூபித்து, அவற்றின் சிகிச்சையும் சொல்லத்துணிவோமாக. ஜ்வரமென்பது என்ன என்னும் கேள்விக்கு விடையாவது சரீரத்தின் கண் தோன்றியிருக்கும் அக்கினியுடைய பாகத்தின் மிகுதித்தன்மை குறிக்கும். அக்கினியின் மிகுதித் தன்மையே சகல ஜ்வரங்களுமெனச் சொல்லப்பட்டாலும் அவற்றிற்கு வெவ்வேறு நாமங்கள் கூறப்படுவானேன் என்றால், கீழ்வரும் சமாதானத்தை சொல்லிய பிறகு வியாதியின் பாகு பாடுகளை நிரூபிப்போம். சாதாரணமாய் நம் தேகத்தில், சீதளம், உஷ்ணம், சயம், வாயு, என்னும் இவற்றின்பேதத்



தால் சகல நோய்களும் உண்டாகின்றதேயானாலும் ஜ்வரங்களுக்கு கூறப்படும் காரணங்கள் பலவற்றுள் முக்கியமாய் நமது ஜீரணப் பையினின்றும் இருதயத்திற்குச் சென்று அவ்விடமிருந்து சகல தாதுக்களிடத்திலும் ரத்தத்தை பரவச்செய்கின்ற வாயுவே பிரதானமாய் எடுத்துக் கொள்ளலாம்.

இருதயத்தின் கண்ணின்றும் வெளிக் கிளம்பும் ரத்தமானது வாயுவின் வேகத்தினால் சரீரமுழுமையும் பரவுகின்றது. இதற்கே (உஸ்வாஸம் நிஸ்வாசம்) என்னும் பெயர். அப்படிப் பரவும் சமயத்தில் ரத்தத்திலுள்ள மலினத்தினாலோ உஸ்வாசத்தினால் ஏற்படும் தாரதம்மியத்தினாலோ, மெல்லிய நரம்புகளின்வழியாய் ஓடும் ரத்தமானது தடைப்பட்டு மீண்டும் உஸ்வாசிக்கும் பலத்தினால் புதிய ரத்தம் சென்று மோதும்போது மெல்லிய நரம்புகள் பிளவுபட்டு இரணம் உண்டாகிறது. அத்தகைய ரணம் உண்டாகி சீழ் பிடிக்குங் காலத்தில் சரீரமுழுமையும் விஷமாகி உஷ்ணம், அதிகரிக்கின்றது. அத்தகைய உஷ்ணத்தையே ஜ்வரமென வழங்கி வருகிறார்கள். அந்த இரணம் உண்டாகு மிடத்தில் பேதத்தை காண்பிப்பதற்காகவே ஜ்வரங்களுக்கு பலவிதப் பெயர்கள் வைத்தார்கள். அதாவது:—சிரசின்கண் உண்டாகும் ரணங்களுக்கு (இன்புளுவன்ஸா) பித்த சீதளஜ்வரம், (நிமோனியா,) கபவாதஜ்வரம் (டைப்பாய்ட்) சன்னிபாதஜ்வரம், என்னும் இத்தகைய வெவ்வேறு பெயர்கள் வழங்கப்படுவதால் கபவாத மென்றால், குரல்வளைகளில் உண்டாகிய இரணமென்றும், சன்னிபாத மென்றால் அடிவயிற்றின் கண் உண்டாகிய இரணமென்றும், தெரிந்துக் கொள்ளுகிறோம். இப்படி இடங்களின் பேதத்தைக் குறித்து ஜ்வரங்களின் நாமங்கள் ஏற்பட்டதாய் தெரிந்துக்கொள்ள வேண்டும். இதுவிஷயம் (லோவிஸ்-கூனி) என்பவர் தன்னுடைய சாஸ்திரத்தில் விஸ்தாரமாய் எழுதி யிருக்கின்றார். இஃது அல்லாமலும் ஜ்வரங்களுக்கு வேறு பல காரணங்களும் சொல்லக்கூடுமே யானாலும் முக்கியமாய் இரணங்களால் ஜ்வரம் உண்டாகின்றது என்பதை மறுப்பாரில்லை. எப்படி ஒரு மனுஷனுடைய சரீரத்தில் உண்டாயிருக்கும் அவயவங்களின் பேதத்தை உணரும் வண்ணம் சிரசு, கண் மூக்கு, செவி, கை, கால், என்னும் வேறுவேறு நாமங்களால் அவயவங்களின் பேதத்தை எளிதில் உணருகிறோமோ அவ்வாறே சரீரத்தின்கண் உண்டாகும் இரணங்களின் பேதத்தை ஜ்வரங்கள் என்னும் பல பேர்களால் உணர்ந்துக் கொள்ளுகின்றோம். இதைத் தவிர வேறு காரணங்களால் ஜ்வரத்தை நிரூபிக்கக் கூடியவர்கள் உலகில் பலர் இருப்பினும், இரணமின்றி ஜ்வரமென்று சொல்லும் நாமத்திற்கு அர்த்தம் ஏற்படாதென்றே நினைக்கிறேன். இப்பொழுது சுலபமாய் ஒரு விதத்தில் சகல ஜ்வரங்களின் காரணங்களையும், நாமபேதத்தையும், நிரூபித்தோம். இவற்றிற்குச் சிகிச்சைசொல்லுங்கால் கணக்கற்ற விதமாய், பலர் பலவிதமாய்ச் சிகிச்சை சொல்லக்கூடும். எவ்வித சிகிச்சையேயானாலும் இரணங்கள் ஆறின பிறகே ஜ்வரமென்னும் நாமம் நாசமடையு மென்பது திண்ணம். இனி எனக்குத் தெரிந்த சில சிகிச்சைகளை ஜனங்களுக்குச் சொல்லி மேற்படி ஜ்வரங்கள் எப்பொழுதும் சரீரத்தை அணுகா வண்ணம் செய்து கொள்ளும் மார்க்கத்தையும் எழுதுவோமாக.

(தொடரும்.)

டாக்டர், M. மாசிலாமணி முதலியார்.

## ஓர் கடிதம்.

பத்திரிகாசிரியரவர்கட்கு,

ஐயா, சென்ற மார்கழியில் வெளிவந்த ஆனந்தபோதினியின் 227-ம் பக்கத்தில் கே. ஆர். கணபதிப் பிள்ளை, குனியமுத்தூர் என்ற கையெழுத்திட்டு நமது கடமைகளைப் பற்றிய சில குறிப்புகள் என்ற தலையங்கத்துடன் வெளிவந்த விஷயம், சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள் எழுதிய இந்து பைபில் என்னும் பெயர் பூண்ட புஸ்தகத்தின் 289-ம் பக்கத்தில் தருமம் என்னும் வியாசத்தி லடங்கி யுள்ளது. இவர் அப்புஸ்தகத்தை மூடி வைத்துவிட் டெழுதி யிருப்பரேல் எங்கேனும் ஒரு வார்த்தை மாறுதலடைந் திருக்கும். அவ்விதம் இல்லாதபடியால் திறந்து வைத்துக்கொண்டு பார்த்தெழுதினா ரென்பதே யென்றுணிபு. ஐயமின்றேல் புஸ்தகத்தைக் கண்ணுறில் தெரியவரும்.

வே. சபாபதி, முல்லைத்தீவு, சிலோன்.

குறிப்பு:—நாம் எத்தனைதரம் வேண்டிக்கொண்டாலும், சற்றேனும் கருணையின்றி, தங்கள் யோக்கியதையையும் கவனிக்காது, இவ்வாறு நமது சஞ்சிகைக்குத் தாழ்வுண்டாக்க முயல்வோரைப்பற்றி நாம் என்னதான் கூறுவதென்று அல்லது செய்வதென்று நமக்கு விளங்கவில்லை. நமக்கு இவ்வாறு மனவருத்த மளிப்பது புண்ணியமென்று இவர்கள் கருதுகிறார்களோ அறியோம். கடவுள்தான் இதைக்கவனிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதை யன்றி வேறென் செய்வது!

பத்திரிகாசிரியர்.

---

## நாட்டுவைத்தியம்

நமது சஞ்சிகையில் நண்பர் ம-ா-ா-ஸ்ரீ டாக்டர், M. மாசிலாமணி முதலியாரவர்கள் கைம்மாறுகருதாமல் தேச நன்மைக்காக வென்றேவெளியிட்டுவரும் வைத்தியக் குறிப்பு என்ற விஷயங்களால் நாட்டுவைத்தியத்தின் தன்மையைப்பற்றி நம்மவர் ஒருவாறு உண்மையை யறிந்திருக்கலாகும்.

அந்தோ நமது நாட்டாரிடம் உள்ள துர்வழக்கங்களில் மிக்க கெடுதியை விளைவிக்கும் ஒரு வழக்கம் இருக்கிறது. அதாவது, நெடுங்காலமாய் நமக்கு அனுபவமாய் நற்பயனை யளித்து வந்த ஒரு ஆசாரத்திலோ ஒழுக்கத்திலோ, ஏதோ ஒன்றில் காலவித்தியாசத்தால் ஏதேனும் குறைநேர்ந்து, அது முன்போல் பயனளிக்கவில்லை யென்று கொஞ்சம் தெரிந்தால், அக் குறையை நீக்கி அதைப் பழையபடி பயனளிக்கச் செய்வதை விட்டு, அந்த ஆசாரத்தையோ வழக்கத்தையோ அடியோடு தொலைத்து விடுகிறார்கள். இன்னொரு பெரிய தப்பு அபிப்பிராயம் இது விஷயத்தில் இவர்களுக்கு முக்கிய தூண்டுதலா யிருக்கிறது. அது என்ன அபிப்பிராயமென்றால், எந்த விஷயத்திலும் நமது பூர்வீக ஆசாரத்தைக் கைவிட்டு அன்னிய ஆசாரத்தைக் கைக்கொண்டால் நாம் நாகரீக மடைந்ததாகக் கௌரவம் பெறுவோம் என்று கருதுவதே யாகும்.

இதோடு, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவியற்கையாலே," என்ற ஒரு மேற்கோளை யெதற்கும் ஆதாரமா யெடுத்துக்



கொள்கிறார்கள். "பழையனவால் கெடுதியென்ன? இதுகாறும் அவற்றில் தோன்றாத கெடுதி யிப்போது தோன்றியதன் காரணமென்ன? புதியன நமக்கு வேண்டுவது அவசியம் என்பதற்கு என்ன காரணமிருக்கிறது? இந்த மாறுதலால் நமக்கு அனுபவத்தில் நன்மை நேரிடுமா, தீமை நேரிடுமா? இந்த மாறுதல் எப்போதும் நீடித்து நிலை நிற்கக்கூடியதா?" என்ற ஒன்றையும் இவர்கள் சிந்திப்பதேயில்லை. இன்னும் யோகப்போகத் தானியங்களைப் புசிப்பது மிக்க பழைய வழக்கமென்று மண்ணைத் தின்ன வேண்டும் என்பார்கள் போலிருக்கிறது. காலவியற்கையை மட்டும் காரணமாகக் காட்டும் இவர்கள், தேசவியற்கைப்படி ஏற்பட்டுள்ள ஆசாரம் முதலியவற்றை மாற்ற நினைப்பது அறிவின்மையல்லவா வென்பதைச் சற்றும் கருதாது மயங்கி நடப்பது மிக்க விசனிக்கத் தக்க விஷயமே.

இச் செய்கை யெப்படி யிருக்கிறதெனில் திருப்தியாய்ப் பால்கொடுத்துக்கொண்டிருந்த பசு, பலஹீனம், வியாதி முதலிய எதனாலாவது குறைவாய்க் கொடுக்க நேர்ந்தால், அதற்குச் சிகிச்சை செய்து அதனிடத்தேற்பட்ட குறையை நீக்கி, அது பழைபடி பால் தரும்படி செய்வதை விட்டு அதையுடனே கசாப்புக்காரனுக்குக் கொடுத்துவிட்டு அண்டை வீட்டுக்காரன் பசுவை வாங்கத் தீர்மானிப்பவன் செய்கைபோ லிருக்கிறது. அண்டைவீட்டுக்காரனோ தன் பசுவை விலைப்படுத்த இவன் பசுவில் இல்லாத குற்றங்களையும் கற்பித்துக் கூறுகிறான் என்பதை யிவன் உணர்வதில்லை.

இவ்வாறே நம்மவர்கள் இப்போது நமது புராதனமான புகழ்பெற்ற வைத்திய சாத்திரங்களையும் வைத்தியர்களையும் அவமதித்து அலட்சியம் செய்கிறார்கள். நமது நாட்டில் வைத்திய சாத்திரம் பூர்வீகமுதலே இருந்து வருகிறது. நம் முன்னோர்களில் பிரக்யாதி பெற்ற மகரிஷிகளே வைத்திய முறைகளைக் கண்டுபிடித்து அருமையான நூற்களை யெழுதி யிருக்கிறார்கள். ஔஷதத்திற்கு வேண்டிய மூலிகைகளனைத்தும் நமது நாட்டில் கிடைக்கும். புதிதாய்க் கொண்டுவரப்பட்ட சுத்தமான மூலிகைகைகளைச் சேர்த்தே நம்மவர் மருந்துகளை யப்போதைக்கப்போது செய்து கொள்வது வழக்கம். மருந்துகளில் மாத்திரை, பஸ்மம், செந்தூரம், சூரணம், இலேகியம், எண்ணெய், தைலம், திராவகம் முதலிய பல விதங்களுண்டு. இவைகளில் ஒவ்வொன்றிற்கும் ஆயுட்பிரமாணம் உண்டு. அதாவது இவ்வளவு காலம் வரையில் கெட்டுப் போகாமல் (தன் குணத்தை யிழந்துவிடாமல்) இருக்குமென்று காலவரையுண்டு. ஏனெனில் உஷ்ண தேசத்தில் எந்தப் பண்டங்களும் சீக்கிரம் அழிவடையும்.

மேல் நாட்டாரோ இங்கும், இன்னும் இதர கீழ்நாடுகளிலும் இருந்து மூலிகைகளை யுலர்த்திக்கொண்டுபோய் பெரும்பாலும் எல்லா ஔஷதங்களையும் திராவகமாகவே செய்து வைத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு திராவகமாய்ச் செய்யவும் பிறகு அது கெடாதிருக்கச் செய்யவும் வேறு சில வஸ்துக்களும் அதில் சேர்க்கப் படுகின்றன.

நேயர்களே! இந்த விவரங்களாலேயே இரண்டிற்கு முள்ள வித்தியாசங்களையும் தாரதம்மியங்களையும், நீங்கள் பெரும்பாலும் உணரலாகும். இத்தகைய மேன்மைவாய்ந்ததும் தேசசுபாவத்திற் கொத்ததுமான வைத்தியத்தை நம்மவர் அலட்சியம் செய்வது, அந்தோ! எவ்வளவு விசனிக்கத் தக்க விஷயம். நமது நாட்டில் உற்பத்தியான, மருந்தே கொஞ்சம் உரு மாறி மேல்நாட்டுப் பெயரோடு அதிக விலைக்கு நமக்கு அளிக்கப்பட்டால்

அதை நாம் உயர்வாக மதிக்கிறோம். இது அந்த மருந்தில் என்னென்ன வஸ்துக்கள் சேர்த்திருக்கின்றன வென்று அறிந்து கொள்ளாத குறையாற் செய்யும் குற்றமே யாகும்.

நமது நாட்டுவைத்தியர்களிடம் நேரிட்டிருக்கும் குறையை நீக்கி நம் முன்னோர் முறைகளைக் கையாடி நாம் பயனடைவதோடு நம் தாய் நாட்டிற்கும் பல நன்மைகளைச் செய்வதை விட்டு, நமது நாட்டு வைத்தியர்களையும் நம் முன்னோர் ஔஷதமுறைகளையும் இகழ்ந்து கூறி அன்னிய வைத்தியத்தையே சிறப்பித்து அதன்படி சிகிச்சை பெறுவதே நாம் நாகரிகமடைந்ததாகக் கௌரவமடையும் வழியென்று கருதுகிறோம்.

கால் சட்டை பூட்ஸ் மாட்டிக்கொண்டு கோச் வண்டியில் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நோயாளியைப் பார்த்து, ஒரு கடிதத்துண்டில் மருந்து வகைகளை யெழுதிக் கொடுத்துச் செல்லும் வைத்தியரிடம் சிகிச்சை செய்து கொள்வதுதான் கௌரவ மென்று மதித்து, அவருக்கு ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ வண்டிச் சத்தமும், ஒரு முறை வீட்டிற்கு வந்து நோயாளியைப் பார்ப்பதற்கு இவ்வள வென்று ஏற்பட்டுள்ள கட்டண விகிதப்படி ஐந்து ரூபாய்வரை தக்ஷிணையும் அளித்து விடுகிறோம். (அவர் பார்த்துவிட்டுச் சென்ற மறு நிமிடமே நோயாளி இறக்கினும் சரியே.) அதன் பிறகு அவர் கொடுத்த சீட்டைக் கொண்டுபோய் மேல் நாட்டுமருந்துகள் விற்கும் கடையில் கொடுத்து கடைக்காரன் கேட்கும் விலையையளித்து மருந்தை வாங்கிவர வேண்டும். அச்சமயம் அவன் கடையை மூடிவிட்டிருந்தால் நோயாளியென்ன வேதனைப் படுவதாயினும் மறுநாள் கடைதிறக்கு மட்டும் அவன் அவஸ்தையை யநுபவிக்க வேண்டியதே. அத்தகைய ஆபத்தில் நாட்டுச் சிகிச்சையின் உதவியே தேடப்படுகிறது. ("சுவரிலெறிந்த கீரையையே யெடுத்து வையடி சுவைகெட்ட வெள்ளாட்டி," என்ற மாதர் பழமொழிபோல்). இரண்டு மூன்று ரூபாய் கொடுத்து மருந்து வாங்கிவந்து அதில் ஒருவேளை யருந்தியபின் வியாதி மாறுதலடைந்து வேறு மருந்து கொடுக்க நேர்ந்தால், முன்வாங்கிய மருந்தை கீழே கொட்டவேண்டியதே; அது பிறகு யாருக்கும் உதவாது.

சாதாரண வேட்டியுடுத்திக் கொண்டு நாம் கூப்பிடும்வேளைக்கு இரவு பகலென்று பாராமல் கால் நடையாய் வந்து, தான் முன்னாடியாய் பணச் செலவு செய்து முடித்து வைத்திருந்த மருந்தைத் தானே நோயாளிக்குண்பித்து பத்தியம் முதலிய யாவும் பலதரமேனும் சாந்தமாய்க் கூறிச் செல்லும் வைத்தியரிடம் சிகிச்சை செய்துக் கொள்வது கௌரவமல்ல வென்று கருதுகிறோம். அவர் தினம் இருமுறை மும்முறை வீதம் ஒருமாதம் வந்து மருந்துகொடுத்து நோயாளியைச் சுகப்படுத்திய பின்னும், ஸ்நானம் செய்து வைத்த பிறகு பணம் கொடுக்கலாமென்கிறோம். அப்போதும், நோய் தீர்ந்தபின் வைத்தியர் தயவு வேண்டிய தில்லை யாதலால், 2-ரூபா கொடுக்கலாமா 3-ரூபா கொடுக்கலாமா வென்று யோசனை நடக்கிறது. கடைசியில் வைத்தியர் நம் வீட்டிற்கு நடந்து வந்த கூலியே சரியாய்க் கிடைக்காது. அப்படியிருந்தாலும் நமது நாட்டு வைத்தியர்கள் நோயாளியின் குடும்பவருவாய்க்குத் தக்கவாறு கொடுக்கப்படுவதைப் பெற்றுக் கொள்பவர்கள். மேல் நாட்டுவைத்தியர்க்கோ, ஏழை பணக்காரன் எவனாயினும் சரி, அவருக்கேற்பட்டுள்ள கட்டணத்தைக் கொடுத்துவிட வேண்டியதே.



இவ்வாறு நாம் நம் நாட்டுவைத்தியர்களுக்கு உற்சாகக் குறைவுண்டாக்கி நமது வைத்தியமே க்ஷீணித்துப் போகும்படி நடந்து கொள்கிறோம். வேறெந்த நாட்டாரும் இத்தகைய இழிவும், தற்கொலைபுரிதலுக்குச் சமானமுமான காரியத்தைச் செய்யவேமாட்டார்கள். தன் வீட்டிலுள்ள கீரைச் சோறாயினும் அதைவிட்டு விட்டு, அயல் வீட்டிலிருந்து வரவேண்டியதும், தான் உயர்வான தென்று மயங்கிக் கருதுவது மாகிய அன்னியர் ஆகாரத்திற்கு எதிர் பார்ப்பவன், கடைசியில் ஒரு நாளைக்கு எதிர் பார்த்ததும் கிடைக்காமல், தன் வீட்டுக் கீரைச் சோறும் வழக்கம் தவறிவிட்டதால் பாகம் செய்து உண்ணமுடியாமல் பட்டினியாய் மடியவேண்டியதே.

ஜெர்மெனி முதலிய வெளிநாடுகளின் சாமான்களையே வாங்கி உபயோகித்து வந்ததால், கடைசியில் யுத்தம் நேர்ந்தது முதல் நம் நாட்டார் படும் பாடு யாவருமறிந்ததே. முத்துக்கொட்டை யென்னெயை யலட்சியம் செய்ததால் தற்சமயம் மண்ணெண்ணெய்க்காக ஜனங்கள் படும் கஷ்டம் கடவுளுக்கே அற்புதம். இவை யநுபவஸாக்ஷிகளல்லவா!

நேயர்களே! இவற்றைப் பற்றி நாம் இன்னும் அதிகமாய்க் கூறுவது மிகையாம். இனியேனும் நமது நாட்டார் மனந்திரும்பி சுதேசவைத்தியத்தைக் கௌரவப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவராவிட்டால் கடைசியில் பெரிய ஆபத்துக் குள்ளாக நேரிடுமென்பது நிச்சயம். கூடிய சீக்கிரத்தில் ஏழைகள் வியாதிவந்தால் சிகிச்சைசெய்துகொள்ள முடியாமல் மடியவேண்டியதாகும். நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மாசிலாமணி முதலியாரவர்கள் குறிப்பிட்டபடி இப்போது நமது நாட்டுவைத்தியர்களிடமுள்ள குறைகளை நீக்கி முன்னோர் ஔடதமுறைகளை முன்னுக்குக் கொண்டுவர முயலவேண்டும். தேசாபிமானமுடைய அறிவாளிகளும் செல்வவந்தரும் முன் வந்து இதற்குத்தக்க சங்கங்கள் முதலிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இத்தகைய விஷயத்தில் துரைத்தனத்தார் உதவியைக்கோரி அவர்களுக்குச் சிரமம் கொடுக்க நினைப்பது சற்றும் தகுதியற்ற யோசனையேயாகும். நமது சொந்த விஷயத்திற்கு நாம் சிரத்தையெடுத்துக்கொள்ளாவிடின் அது ஒருபோதும் நிறைவேறாது.

அறிவாளிகள் இவ்விஷயத்தை மேல்போக்காய் வாசித்து விட்டு விடாமல், தாய் நாட்டின் க்ஷேமத்தைக்கருதி தக்க எத்தனப் பிரயத்தனங்களை யெடுத்துக் கொள்வார்களென்று பிரார்த்திக்கிறோம். பசுபதியாகிய பரமன் திருவருள் பாலிப்பாராக.

ஓர் சுதேசி.

ஓம்தத்ஸத்.

---

## கற்கோட்டை—நாவல்.

(319-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்கிருந்த இரண்டறைகளில் வலப்புற அறையின் கதவு கொஞ்சம் திறந்திருந்ததால் உள்ளிருந்து தீபவொளி வெளியில் தெரிந்தது. கோகிலம் மெதுவாய்ச் சென்று அவ்வறையில் எட்டிப்பார்த்தாள். துர்க்காள் நித்திரை செய்து கொண்டிருக்கிறாள். அவளுடைய உஸ்வாச நிஸ்வாசம் துருத்தி ஊதுவதுபோல் நன்றாய்க் கேட்கிறது. அதை விட்டு இடப்புறமுள்ள அறை யருகிற் சென்று பார்த்தபோது, அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. தன்னிடமுள்ள திறவு கோலால் பூட்டைத் திறந்துவிட்டு அக்

கதவை மெதுவாய்த் திறக்க வாரம்பித்தாள். அதேவிநாடி முன் கூறப்பட்ட வீரன் உருவமும் கண்டகோடரி பிடித்தக்கையை யுயர்த்திக் கொண்டே கோகிலத்தின் பக்கமாய்த் திரும்ப ஆரம்பித்தது. கோகிலம் திடுக்கிட்டு கதவை விட்டுவிட்டாள். கதவின் அசைவு நின்ற விநாடியே அவ்வுருவமும் கொஞ்சம் திரும்பியநிலையில் அப்படியே யசையாது நின்றது. கதவை யின்னும் கொஞ்சம் திறக்க வாரம்பித்ததே, யவ்வுருவமும் பின்னும் திரும்ப ஆரம்பித்தது, கதவு பூரணமாய்த் திறக்கப்பட்டபோது அவ்வுருவம் முழுதும் திரும்பி நின்றது. அதன்மேல் கோகிலம் அதன் கீழ் எந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், கதவிற்கும் அதற்கும் சம்பந்தம் வைத்து அமைக்கப்பட்டிருப்பதால் கதவு திறக்கப்பட்டால் அது திரும்புகிறதென்றும் தெரிந்து கொண்டு தைரியமாய் அறைக்குள் சென்றாள்.

தங்கம்மாள் திகிலாலும் வியாகுலத்தாலும் நித்திரைவாராமல் விழித்திருந்தாள். கதவு திறக்கப்பட்டதை யுணர்ந்து தட்டென்று படுக்கையில் உட்கார்ந்தாள். மறுநிமிடம் கோகிலத்தைக் கண்டதும் முகமலர்ச்சியடைந்து ஆ! "நீ யென்னைக் கைவிடவில்லை" என்றாள்.

கோகிலம்:—"நான் ஒருபோதும் அப்படிச் செய்யேன். நீ யிந்தவிடத்தை விட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும்; சட்டென்று புறப்படு. ஆயுதசாலையில் உனக்கு உதவிசெய்ய ஒருவர் காத்திருக்கிறார்" என்றாள்.

தங்கம்மாள்:—"ஆ அப்படியானால் என்விலங்கைக் கழற்றக்கூட சாவி கொண்டுவந்திருக்கிறாயோ?" என்றாள்.

இதைக்கேட்ட கோகிலம் திடுக்கிட்டுக் குனிந்து பார்த்தாள்; தங்கம்மாளுடைய கால்களில் பலமான விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. அது மஞ்சத்தின் ஒருகாலோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதைக் கண்ட கோகிலத்திற்கு மிக்க துயரமும் கோபமும் உண்டாயின. ஆயுதங்கள் கொண்டுவந்தாலன்றி விலங்கைக் கழற்றமுடியாது. என்ன செய்வாள்!

பிறகு தங்கம்மாளை நோக்கி, "இராணி அரியநாயகியைத் தினகரனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமென்று ஒரே பிடிவாதமாய் நிற்கிறாள். அவளைத் தேட நாலாதிக்குகளிலும் வீரர்களை யேவியிருக்கிறாள்" என்றாள். தங்கம்மாள், "ஆனால் கற்கோட்டையில் அவளைக் கண்டுபிடிக்க இவர்களால் முடியவில்லை?" என்றாள்.

கோகிலம்.—"அம்மா! அரியநாயகி இன்னும் கற்கோட்டையிலிருப்பதானால் அபாயம் நேரிடாதென்று நினைக்காதே. இப்போது செல்வராயர் சிறைப்பட்டிருக்கிறார். அவர் புதல்வியும் அங்கில்லை, நீயுமில்லை. ஆகையால் இராணி அம்மாளிகை முழுமையும் தன் வீரர்கள் வசத்தில் வைத்துவிடுவாள்" என்றாள்.

தங்கம்மாள் பீதியடைந்து, "ஆம் ஆம், அரியநாயகிக்கு எச்சரிக்கை செய்யவேண்டும். என்ன செய்வேன்" என்று பரிதாபித்தாள்.

கோகிலம், "அம்மா, நீ யென்னைப் பூரணமாய் நம்பு. நான் கூறிய மனிதர் நம்பிக்கையானவர். அரியநாயகி மாளிகையில் எந்தவிடத்தில் மறைந்திருக்கிறாள் என்பதைத் தெரிவித்தால், அவள் எச்சரிக்கை யடையும்படி நான் செய்து விடுகிறேன். யோசிப்பதிலும் ஆலசியம் செய்வதிலும் பயனில்லை. சீக்கிரம் எந்த நிமிஷத்திலேனும் இங்கு டாக்டர் வந்துவிடுவான்" என்றாள்.



தங்கம்மாள் உடனே கற்கோட்டையில் கள்ள அறையிருக்கும் இடத்தையும் அதைத்திறக்கும் விதத்தையும் நன்றாய் விளங்கும்படி கோகிலத்திற்கு அறிவித்துவிட்டு, "இந்நேரத்தில் டாக்டர் ஏன் இங்குவருகிறான்?" என்றாள். அதன்மேல் கோகிலம் இராணியும் டாக்டர் பாராங்குசனும் பேசிக்கொண்ட சதியாலோசனை முழுதும் தங்கம்மாளிடம் கூறிவிட்டு, நீ தூங்காமல் விழித்துக்கொண்டேயிரு; பத்திரம், தூங்கினால் வாயில் மருந்தை யூற்றிவிடுவான். அவன் தருகிற எம்மருந்தையும் சாப்பிடாதே. நீ சந்தேகிப்பதாகவும் காட்டிக்கொள்ளாதே. நான் எப்படியாவது உன்னை விடுதலைசெய்யச் சீக்கிரம் வழிதேடுவேன் பயப்படாதே" என்றாள்.

தங்கம்மாள் கோகிலத்தைப் பலவாறுபுகழ்ந்து, "குழந்தாய், நீ மகா உத்தமகுணம் வாய்ந்தவள், நீ செய்யும் இவ்வுபகாரங்களை நான் என் உயிருள்ளமட்டும் மறவேன். கடவுள் உனக்கு எப்போதும் துன்பம் நேரா வண்ணம் பாதுகாத்து வருவார். உனக்குப் பூரண சுகத்தையும் செல்வத்தையும் மனமொத்த கணவனையும் தீர்க்காயுளையு மளிப்பார்" என்று மனதார வாழ்த்தினாள்.

மேற்கண்டவாறு தங்கம்மாள் தன் நன்றியைக் கூறத்தொடங்கும் சமயம் தூர்க்காள் பாதி திரும்பியிருக்கும் சிலையின் மறைவில் நின்று கொண்டு, அறைக்குள்ளிருக்கும் இருவர் முகங்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறாள். கோகிலம் பார்த்தபோது அவள் நித்திரை செய்துகொண்டிருந்தது உண்மையே. வேறு எந்த சந்தடியாலும் அவள் விழித்துக் கொள்ளவில்லை. மற்றபடி எவ்வாறு விழித்துக்கொண்டாளெனின், அவள் சயனித்திருக்கும்போது கையில் ஒரு கம்பியைப் பிடித்திருந்தாள்; அக்கம்பியின் ஒருமுனை கவசந்தரித்த உருவத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அக்கம்பி பூமியின் கீழ்வழியாய்வந்து தூர்க்காள் அறையில் வெளிப்பட்டு அவள் தலைமாட்டின் வழியாய்ச் செல்கிறது. சிலை திரும்பும்போது கம்பி இழுக்கப்படுகிறது. இக்கம்பியிருப்பது இராணிக்கு கூடத் தெரியாது. அதனால்தான் இராணி டாக்டர் தூர்க்காளை யெழுப்பாமலே தங்கம்மாளிருக்கும் அறைக்குள் சென்று வரலாகும் என்று எண்ணிக்கொண்டாள். அக்கம்பியைத் தூர்க்காள் தற்செயலாய்க் கண்டு தெரிந்துகொண்டு யாரிடமும் கூறாதிருந்தார்கள். அந்த எந்திரம் கயலாபாய் இராணியின் முன்னோர் ஒருவர் காலத்தில் அமைக்கப்பட்டது.

தூர்க்காள் மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்து கோகிலம் அறையைவிட்டுப் புறப்படுவதை யறிந்ததே, துரிதமாய்த் தன்னறைக்குச் சென்று தூங்குபவள் போல் அபிநயித்துக்கொண்டிருந்தாள். கோகிலம் தங்கம்மாளுடைய அறையின் கதவை மூடும்போது சிலை பழைய நிலைக்குத் திரும்பியதோடு, உயர்த் தூக்கிய அதன் கோடரி பிடித்த கையும் பழைய படி கீழே தாழ்ந்துவிட்டது. அவள் அக் கதவைப் பூட்டிக்கொண்டு மெதுவாய்ப் படிக்கட்டுகளின் வழியாயிறங்கிச் சாவியை முன் இருந்த இடத்தில் வைத்து விட்டு ஆயுதசாலைக்குச் சென்றாள். அவ்விடத்தில் முன் ஏற்பாட்டின்படி தினகரன் ஆயத்தமாய் வந்திருந்தான்.

கோகிலம் படிகளில் இறங்கியதே, தூர்க்காள் தன் அறையைவிட்டு வெளிப்பட்டு மெதுவாய் இறங்கி நேராய் இராணியின் படுக்கை யறைக்குள் நுழைந்தாள். இராணி இன்னும் விழித்துகொண்டிருந்தபடியால், இருவருக்கும் நேர்ந்த சமிக்கையான சம்பாஷணைமூலமாய்ச் சற்று நேரத்

திற்குள் இராணி தன் செய்கைகளுக்கு விரோதமாக ஏதோ சதியாலோசனைகள் நடந்துகொண் டிருக்கின்றன வென்று தெரிந்து கொண்டாள். உடனே ஒரு சால்வையை மேலே போர்த்துக்கொண்டு மெதுவாய் வெளியறைக்கு வந்தாள். அச்சமயம் டாக்டர் பராங்குசன் உள்ளே வந்தான். இராணி அவன் தோளைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு, "சாவியை நான் அந்த இரகசிய அறையின் கதவருகில் வைப்பதாய்க் கூறியதைப்பற்றி நீ யாரிடமாவது பிரஸ்தாபித்தாயா?" என்று அதட்டிக் கேட்டாள்.

டாக்டர் திகிலும் கலவரமுமடைந்து, "அந்தோ! தங்கள் இரகசியத்தை நான் ஒருவரிடம் கூறுவேனோ! ஒருபோதும் அப்படிச் செய்யவே மாட்டேன்" என்றான்.

இராணி.—"அப்படி யிருந்தும் கோகிலத்திற்கு எல்லாம் தெரியுமென்றே தோன்றுகிறது" என்றதே,

டாக்டர்:—"ஹா! நான் கோகிலத்தை யிப்போதுதான் பார்த்தேன். அவள் தாழ்வாரத்தின் வழியாய் ஆயுதசாலையை நோக்கித் துரிதமாய்ச் சென்றுகொண்டிருக்கிறாள். அவள் இருந்த மாதிரியால் நான் சந்தேகங்கொண்டு, என்கையிலிருந்த தீபத்தை யணைத்துவிட்டு மறைந்துநின்று பார்த்தேன்" என்றான்.

இராணி "போதும் போதும். நீர் இங்கேயேயிரும்" என்று கூறிவிட்டு, துர்க்காளை அவள் அறைக்குச் செல்லும்படி சமிக்கை செய்துவிட்டுத் துரிதமாய் நடந்தாள்.

அரண்மனையில் பல இரகசியவழிகளுண்டு. ஆகையால் இராணி சற்று நேரத்திற்குள் ஒரு இரகசியவழியாய் ஆயுதசாலை யருகிற் சென்றாள். அங்கு சுவரில் ஒரு சிறு கள்ளச்சாளரம் உண்டு. இராணி அதை மெதுவாய்த்திறந்து ஆயுத சாலைக்குள் நோக்கினாள். அங்கு எரியும் தீபவொளியால் கோகிலமும் காப்டென் தினகரனும் ஒருவர் தோள்மேல் ஒருவர் கை போட்டுக்கொண்டு சம்பாஷித்துக்கொண் டிருப்பதைக் கண்டாள்.

கோகிலம் கற்கோட்டையில் அரியநாயகி ஒளிந்துகொண்டிருக்கும் கள்ள அறை யிருக்குமிடத்தையும், அதைத்திறக்கும் விதத்தையும் யாவும் தெளிவாய்ப் புலப்படும்படி கூறி, அரிய நாயகிக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று கூறினாள். தினகரன்,

"ஆ! என் கண்மணியே, கட்டாயம் ஒரு நொடியிற் சென்று உன் கோரிக்கையை நிறைவேற்றுவேன்" என்றான்.

மேற்படி சம்பாஷணை முழுமையும் ஒரு வார்த்தை யேனும் விடாது கேட்ட இராணி அதைவிட்டுத் திரும்பித் துரிதமாய்த் தன் அறைக்குச் சென்று டாக்டர் பராங்குசனை நோக்கி "எல்லாம் கண்டுபிடித்துவிட்டேன். நீர் துரிதமாய் உள்வாசலண்டை செல்லும். அங்கு இப்போது கங்காஸிங் காவல் இருக்கிறான். தினகரன் உள்வாசலைக் கடக்க வரும்போது அவனைச் சிறைப்படுத்தும்படி கங்காஸிங்குக்கு நான்கட்டளையிட்டதாய்க் கூறிவிட்டு, அங்கிருக்கும் முனிஸிங்கிடம், ஆறு குதிரை வீரரோடு உடனே வெளியில் புறப்பட அவன் ஆயத்தமாகவேண்டுமென்றும், என்னுடைய குதிரையும் தயார் செய்யப்படவேண்டு மென்றும் நான் கட்டளையிட்டதாய்க்கூறும். சீக்கிரம் போம்! சீக்கிரம்!" என்றாள். அவ்வாறே டாக்டர் துரிதமாய் சென்றார்.



இராணி உடனே வெளியே செல்வதற்கு ஆயத்தமாய் வேறுடையணிந்து துர்க்காளறைக்குச் சென்று அவளை யழைத்துவந்து தன் படுக்கை யறையில் விட்டு, "இங்கு நில்" என்றுகூறிவிட்டு, நேராய்க் கோகிலத்தின் பள்ளியறைக்குச்சென்றாள். கோகிலம் அப்போதுதான் படுக்கையுடுப்பை யணியத் தன் உடுப்பைக் களையத் தொடங்குகிறாள். இராணி திடீரென்று அறைக்குள் வந்ததைக் கண்டதே கோகிலம் திடுக்கிட்டுப் பெருந்திகிலடைந்தாள்.

இராணி முகக்குறியால் ஒன்றும் வெளியிடாமல் "ஹா! நீ யின்னம் படுத்துக்கொள்ள வில்லையா! இதுவும் நற்காலமே. உன்னிடம் ஒரு இரகசிய விஷயம் பேசவேண்டும்; என் கூடவா!" என்று திரும்பினாள். இராணி யவ்வாறு கூறியும் கோகிலத்திற்கு உண்டான திகிலும் கலவரமும் சற்றேனும் ஒழியவேயில்லை. அவள் ஏதோ கனவில் நடப்பவள் போல இராணியின் பின்னால் சென்றாள்.

இராணியும் கோகிலமும் இராணியின் படுக்கை யறைக்குள் நுழைந்ததே, அங்கிருந்த துர்க்காளைக் கண்டதும் கோகிலத்திற்குப் பாதி பிராணன் போய்விட்டது. நடுக்கத்தோடு இராணியின் முகத்தை நோக்கினாள். அச்சமயம் இராணியின் பார்வை மிக்க கோரமாயும் கடினமாயும் இரக்கமற்றதுமாயுமிருந்தது. இராணி துர்க்காளை நோக்கிக் கையில் ஒரு சமிக்கை செய்தவுடனே, இராக்ஷசிபோன்ற அவள் கோகிலத்தைச்சென்று போல் தூக்கிக்கொண்டு, கூச்சலிடாதபடி ஒரு கையால் அவள் வாய்ப்புறத்தைக் கெட்டியாய் அழுத்திக்கொண்டு, ஒரு நொடியில் படிக்கட்டுகளின் வழியாய் ஏறித் தன் அறைக்குக் கொண்டுபோய்விட்டாள்.

*  *  *  *

இப்போது கற்கோட்டையில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். செல்வராயரும் தம்புசாமியும் காயமடைந்த திரவியசுந்தரம் பிரபுவை இரகசியமான அக்கள்ள அறையில் விட்டுவிட்டு கதவை மூடிக்கொண்டு வெளிச்சென்றதே, அரியநாயகி யவனருகிற்சென்று குனிந்து அவன் முகத்தைப் பார்த்ததும் மிக்க வியப்பும் துயரமுமடைந்தாள். அச்சமயம் வெளியில் செல்வராயரைக் கைது செய்யும்படி முனிஸிங் தன் ஆட்களுக்குக் கூறியது அவள் செவிகளில் விழவில்லை.

அக் கள்ள அறையில் எப்போதும் கொஞ்சம் ஜலம் வைக்கப்பட்டிருப்பது வழக்கம். அரியநாயகி பிரபுவின் காயத்தைக் கண்டதும், உடனே தன் கைக்குட்டையால் அதைக் கட்டி இரத்தப் போக்கை நிறுத்தி, அவர் முகத்தைச் சலத்தால் கழுவி ஸ்மரணைவரச் செய்து கொஞ்சம் சலம் குடிப்பாட்டினாள். அதன்மேல் பிரபு களைதீர்ந்து மெது வாய்ச் சம்பாஷிக்க முயன்றார். தான் அங்கு வரநேர்ந்த காரணத்தையும் மாறுவேடமணிந்த விதத்தையும் கூறி, தன் தம்பிகள் கண்ணபிரானைக் காப்பாற்ற வெண்ணங்கொண்டு சென்றிருப்பதை அரியநாயகியா லறிந்து அவர்கள் செய்கையை மெச்சிக்கொண்டார். அதன்பிறகு இராணியிடம் அரியநாயகி தன் மேல் காதல்கொண் டிருப்பதாய் ஒப்புக்கொண்ட விஷயத்தையும் அதை யிராணி தன்னிடம் கூறியபோது தானும் ஆம் என்று ஒப்புக்கொண்டதையும் கூறி, "அரியநாயகி! நீ அச்சமயத்திற்கு அவ்வாறு கூறவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கு மென்று நான் அறிந்தே அதைப் பொய்ப்படுத்தலாகாதென ஒப்புக்கொண்டேன்" என்றார்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்தி௵ சித்திரைமீ சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020,
பசலி 1328-29—கோல்லம் 1094-95,
இங்கிலீஷ் 1919-ம்௵ எப்ரல்மீ—மேமீ

| சித்திரை மீ | எப்ரல் மீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | ஞா | திர-13-4 | உத்-33-47 | அ-60 | தமிழ் வருஷப்பிறப்பு. |
| 2 | 14 | தி | ச-16-31 | அஸ்-38-48 | சித்-60 | சர்வமுகூர்த்தம். |
| 3 | 15 | செ | ○-21-0 | சித்-44-52 | சி-60 | சித்திராபௌர்ணமி. |
| 4 | 16 | பு | பிர-26-3 | சுவா-51-17 | சித்த-60 | விருக்ஷம் வைக்க. |
| 5 | 17 | வி | து-31-5 | விசா-57-36 | சித்த-60 | கிணறு, குளம் வெட்ட. |
| 6 | 18 | வெ | தி-35-48 | அனு-60-0 | சித்த-60 | கரிநாள். |
| 7 | 19 | ச | ச-40-0 | அனு-3-28 | சித்த-60 | குளோபோட, நகைசெய்ய. |
| 8 | 20 | ஞா | பஞ்-43-0 | கேட்-8-46 | ம-9 அ. | பும்சவனம், சீமந்தம். |
| 9 | 21 | தி | ச-44-57 | மூல-12-49 | சித்த-60 | கிழங்குகள் நட. |
| 10 | 22 | செ | சப்-45-39 | பூரா-15-45 | சித்த-60 | கரும்புநட. |
| 11 | 23 | பு | அ-45-0 | உத்-17-24 | சித்த-60 | |
| 12 | 24 | வி | நவ-43-19 | திரு-17-53 | சித்த-60 | |
| 13 | 25 | வெ | தச-40-15 | அவி-17-12 | சித்த-60 | |
| 14 | 26 | ச | ஏ-36-19 | சதை-15-29 | அ-15 ம. | |
| 15 | 27 | ஞா | து-31-37 | பூர-12-50 | சித்-12 அ. | |
| 16 | 28 | தி | திர-26-23 | உத்-9-44 | சித்த-60 | |
| 17 | 29 | செ | ச-20-37 | ரேவ-6-1 | சித்த-60 | |
| 18 | 30 | பு | ●-14-37 | அசு-1-58 | ம-2 சி-56 | |
| 19 | 1 | வி | பிர-8-34 | * கார்-53-51 | மர-60 | |
| 20 | 2 | வெ | து-3-29 | ரோக-50-17 | சித்த-60 | |
| 21 | 3 | ச | ச-52-9 | மிரு-47-4 | சித்த-60 | மேற்கே பிரயாணம். |
| 22 | 4 | ஞா | ப-17-54 | திரு-44-38 | சித்த-60 | ஆயுதம் பழக்க. |
| 23 | 5 | தி | ச-44-28 | புன-45-35 | அ-45 சித் | சீமந்தம், கர்ணவேதை. |
| 24 | 6 | செ | சப்-42-13 | பூச-42-31 | சித்த-60 | சபை சேர்ப்பிக்க. |
| 25 | 7 | பு | அ-41-1 | ஆயி-43-6 | சித்த-60 | ஆயுதம் சொன்ன. |
| 26 | 8 | வி | நவ-41-3 | மக-44-52 | அ-57 சித் | வற்றுக்கால் தோண்ட. |
| 27 | 9 | வெ | தச-42-25 | பூர-47-58 | சித்த-60 | ருதுசாந்தி. |
| 28 | 10 | ச | ஏகா-45-0 | உத்-52-12 | மர-60 | .............. |
| 29 | 11 | ஞா | து-48-34 | அஸ்-57-28 | அ-57 சித் | சீமந்தம், விவாஹம். |
| 30 | 12 | தி | திர-52-56 | சித்60-0 | சித்த-60 | சர்வமுகூர்த்தம். |
| 31 | 13 | செ | ச-57-52 | சித்-3-25 | சித்த-60 | |

1919௵ மே மீ

| | | | |
|---|---|---|---|
| புத | ரவி செ | சுக் கே | குரு |
| | 23-மே-பு<br>24-மீ-சுக் | | சனி |
| | ராகு | | |

PRINTED AND PUBLISHED BY N. MUNISAMI MUDALIAR, AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

17 MAY 1919
184

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 4 } சித்தார்த்தி௵ சித்திரை மீ கஉ
1919௵ எப்பிரல் மீ 13உ { பகுதி 10

## கடவுள் வணக்கம்.

எந்நாளு முடலிலே யுயிரா முனைப்போ
விருக்கவிலை யோமன மெனும்
இயானுமென் னட்பாம் பிராணனு மெமைச்சடம
மென்றுனைச் சித்தென் றுமே
அந்நாளி லெவரோ பிரித்தா ரதைக்கேட்ட
வன்றமுத லின்று வரையும்
அநியாய மாயெமை யடக்கிக் குறுக்கே
யடர்ந்தாசு பண்ணி யெங்கண்
முன்றுக நியென்ன கோட்டை கொண்டாயென்று
மூடமன மிகவு மேச
மூண்டெரியு மனவிட்ட மெழுகா யுளங்கருகன்
முறைநமை யோபதி னைபிரங்
சொன்றுது நின்னரு ளிரங்கவிலை யேயினிச்
சுகம்வருவ தெப்படி சொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே.

---

கள்ளம் பொருந்து மடநெஞ்சமே கொடுங் காலர் வந்தால்
உள்ளன் பவர்கட் குண்டோ விலையே யுலகின்ற வன்னோ
வள்ளம் பொருந்து மலரடி காண மன்றுடி யின்ப
வெள்ளச் செம்பாதப் புணையே யல்லாற் கதியே திலையே.

தன்மய மான சுபாவத்தின் மென்னத் தலைப்படுங் கால்
மின்மய மான சுகம் யாதுரைத்தென் வெளியி லாய்ந்த,
சின்மய முத்திரைக் கையே மெய்யாகத் தெளிந்து நெஞ்சே
தின்மய மென்மய மெல்லா நிறைந்த திரா மயமே.

# ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ சித்திரை௴ க௨

## தற்கால புத்தி மதிகள்.

நம் நண்பர்களாகிய சகோதர சகோதரிகளே! கடந்த சஞ்சிகையில் வெளிவந்த "நற்புத்தி" என்ற விஷயத்தின் இறுதியிற் கூறியபடி, இப்போது நமது தாய் நாட்டிலுள்ள ஆன்றோர்களும் அறிவாளிகளும் தற்காலத்திற்கு நம் முன்னேற்றத்திற்குத் தக்கவை யென்றும் அத்தியாவசியமானவை யென்றும் அறிந்து கூறும் புத்திமதிகள் யாவை யெனக்கவனிப்போம். அவற்றில் முக்கியமானவை கீழ்க் குறிக்கப்பட்டவைகளே யென்பது, தாய்நாட்டின் தற்கால நிலைமையை யுணர்ந்து அதன் க்ஷேமாபி விர்த்தியில் கருத்து வைத்திருக்கும் அறிவாளிகளனைவரும் அறிந்த விஷயமே. அவற்றை யொவ்வொன்றாய் விவரிப்போம்:—

(1) தாய்ப்பாஷையை யபி விர்த்தி செய்தல்.

நேயர்களே ஒரு பொருளை நாம் அடைய வேண்டியதோ அல்லது ஒரு காரியத்தை நாம் செய்யவேண்டியதோ எவ்வளவு அவசியம் என்பதை நாம் எவ்வா றுணரலாமெனின், அவை யில்லாமையால் நமக்கு நேரக்கூடிய கெடுதிகள் எவ்வளவு அதிகமாயிருக்குமோ, அவ்வளவிற் கவ்வளவு அவை நமக்கு அவசிய மென்று உணரலாகும்.

இப்போது நம் நாட்டில் தாய்ப்பாஷை யெவ்வளவு குன்றியிருக்கிறதென்பதையும் அதனால் நேரிடக்கூடிய தீங்குகள் எவ்வளவென்பதையும் சற்று சிந்திப்போம்:—

நம் தாய்ப்பாஷை முன் இருந்த சீரும் சிறப்பும் இழந்து இப்போது எவ்வளவோ குன்றிப்போயிருப்பது யாவரும் அறிந்த விஷயமே. இதற்குக் காரணம் நாம் அன்னிய பாஷையில் கல்வி கற்க நேர்ந்திருப்பதே. ஆயினும் நாம் இராஜபாஷையை யெவ்வளவு கற்க வேண்டியது அவசியமோ அந்த எல்லையோடு நில்லாமல் அதைப்பேசுவதே கௌரவமும் நாகரீகமுமாகும் என்ற வீண் மயக்கங்கொண்டு, நம் தாய்ப்பாஷையை யலட்சியஞ்செய்து வருகி



றோம். ஆகையால் நம் தாய்ப்பாஷை குன்றுவதற்குக் காரணம் நாமாகவே யிருக்கிறோமென்பது வெளிப்படை. நம் நாட்டார் தவிர உலகிலுள்ள வேறு எந்த நாட்டாரும் மாதுர்த் துரோகமாகிய இத்தகைய செய்கையைச் செய்யவே மாட்டார்கள். அந்தோ இதனால் நேரிடக்கூடிய தீங்கு எவ்வளவு என்பதை நாம் சற்றும் சிந்திப்பதேயில்லை. இது என்ன காலக்கொடுமையோ? யாரிட்ட சாபமோ அறியோம்.

இதனால் நேரிடும் கெடுதிகள் ஒன்றிரண்டல்ல, கொஞ்ச நஞ்சமல்ல. சாதாரணமாய்த் தமிழ்ப் பாஷையைப் பேசும்போது பல ஆங்கில வார்த்தைகளை யிடையிடையே கலந்து பேசுகிறார்கள். இதனால் தாய்ப் பாஷையின் வார்த்தைகள் வரவர ஒவ்வொன்றாய் அடியோடு மறக்கப்படுகின்றன வென்பதை யனுபவமாய்க் காணலாம்.

அன்னிய பாஷைக் கல்வி நமக்கு வயிற்றுப்பிழைப்பிற்கு மட்டுமே உபயோக மாகிறதன்றி வேறொன்றுமில்லை. அதைவாசிப்போர் பெரும்பாலும் துரைத்தன சேவகத்திலேயே பிரவேசிப்பதால் அவர்கள் பாடசாலையில் வாசிக்கும் இரசாயனம், தாவரம், தர்க்கம், வானசாத்திரம் முதலியயாவும் அவர்கள் பரீட்சைகளில் தேருவதற்கு மட்டும் பயன்படுகின்றனவே யன்றி மற்றபடி அவர்களுக்காவது தாய் நாட்டிற்காவது வேறெவ்விதப் பயனும் அவற்றால் உண்டாவதில்லை. வெறும் படிப்பு எப்போதும் பயனற்றதே. அதனால் ஆன்மார்த்தத்திற்கு ஒரு பயனுமில்லை. அதனால் நன்னடக்கையாவது, மனச்சுத்தியாவது, கடவுள் பக்தி, ஜீவிரக்கம், சாந்தம் முதலிய எந்த நன்மையாவது உண்டாகாது. அகங்காரம் வேண்டுமாயின் அதிகமாகும்.

அந்த வெறும்படிப்பாவது தாய்ப்பாஷையிலிருந்தால் கொஞ்சம் பயனுண்டு. எவ்வாறெனின் நமது கல்வியின் தொடக்கத்திலிருந்தே நீதி நூல்களும் மதசம்பந்தமான விஷயங்களும், கடவுள் பக்தியை யளிக்கும் விஷயங்களும் போதிக்கப்படுகின்றன. நமது தாய்ப் பாஷையை அலட்சியம் செய்வதால் நமது சந்ததியார் மதக் கல்வியே யின்றி கேவலம் இரைதேடுவதும் தின்பதுமாகிய தொழில்களை மட்டும் செய்யும் விலங்குகளாக நாளடைவில் மாறிவருகிறார்கள். அதோடு அன்னிய பாஷையைமட்டுமே கௌரவமானதாகக்கருதிக் கற்பதால், அதுசம்பந்தமான ஆசாரங்கள் நடவடிக்கை பழக்கங்கள் முதலிய வாசனை யேறயேற இன்னும் பெருந் தீங்குகளுக் காளாகிறார்கள். ஆன்மார்த்த விஷயங்க ளடங்கியநூல்கள் யாவும் நம் தாய்ப்பாஷையிலேயே இருக்கின்றன. வேறெப் பாஷையிலும் அப்படிப் பட்டவை கிடையா. நமது முன்னோர் நூல்களின் அருமையை யறிந்து ஆயிரக் கணக்கான வைமல்கள்

தூரத்திலிருப்பவர்கள் நமது நூற்களைக்கொண்டு போய் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் செய்கை குளத்திலுள்ள தாமரை மலரின்தேனைக் காட்டிலிருக்கும் தேனீ, வண்டு முதலியவைகள்வந்து கொண்டுபோவதுபோலிருக்கிறது. அந்தோ நமது செய்கையோ, தான் பிறந்து வளர்ந்து வசிக்கும் தடாகத்திலேயே யிருக்கும் அரியதேனை யறிந்துகொள்ளாதிருக்கும் தவளையின் செய்கைபோ லிருக்கிறது. நமது சந்ததியாருக்கு மதக்கல்வி யில்லாது போய்விட்டால்கொஞ்ச காலத்தில் நம் நாடு என்ன நிலைமைக்கு வருமென்பதை யிதை வாசிப்போரே சிந்தித்துப் பார்க்கலாகும். அதை நினைக்கும் போதே அறிவாளிகளின் உள்ளம் நடுங்கி ஆவி சோர்ந்துவிடு மென்பது திண்ணம். நமது தேசாசாரம் மத சம்பந்தமுடையதாதலால் மதக் கல்வி குறைந்தால் ஆசாரமும் கெடத் தொடங்கும். இதையிப்போதே யனுபவமாய்க் காணலாகும். இத்தகைய ஆபத்துகளை யுண்டாக்கும் இக்குறையை யுடனே நீக்கமுயலாது வளரவிட்டிருப்பது மிக்க வெட்கக்கேடான விஷயமன்றோ.

தாய்ப்பாஷையில் உண்டாயிருக்கும் அபிமானக்குறைவோடு அன்னிய பாஷையைப் பேசுவதே மிக்க நாகரீகமும் கௌரவமுமாகுமென்று கருதும் மதிமயக்கம் கூடச்சேர்ந்து நம்மவர்களிடம் உண்டாக்கியிருக்கும் சில சேஷ்டைகள் பார்ப்போர் அருவருப்போடு ஏளனம் செய்யத்தக்கவைகளா யிருக்கின்றன. அவற்றில் இரண்டொன்றைமட்டும் அத்தாட்சிகளாக ஈண்டு கூறுகிறோம்:—

தமிழில் கொ-மு-சுப்பிரமணியன் என்பதைச் சிலர் முதல் எழுத்துகளை ஆங்கில எழுத்துகளா லெழுதினால்தான் கௌரவமென்று கருதியோ அல்லது அதுதான் இலக்ஷ்மீகர மென்றெண்ணியோ K. Rm. சுப்பிரமணியன் என்று எழுதுகிறார்கள். அதைப் பார்க்கிற ஆங்கில எழுத்துகள் எழுதத்தெரியாதவர்களில் சிலர் சத்தமாவது அந்த சத்தமாயிருந்தால் பெரும் புண்ணியமென்றெண்ணி, கெ-ஆர்யம்-சுப்பிரமணியம் என்று எழுதுகிறார்கள். இன்னும் பூரண நாகரீகமடைந்ததாகவும், நாமும் மேல் நாட்டாருக்குச் சம அந்தஸ்தில் வந்துவிட்டோமென்று கருதும் சிலர் சுப்பிரமணியம் என்பதை யஸ்-மணியம் என்றும் 'சபாபதி' என்பதை யஸ் பதி என்றும் எழுதுகிறார்கள். இதையாங்கில எழுத்துகளால் எழுதி வாசித்தால் 'யஸ்-பாதி' என்றும் சத்திக்கும். வேதாசலம் என்ற பெயரை V. Chalam (வி-சலாம்) என்றும், தணிகாசலம் என்பதை T. Chalam (டி-சலம்) என்றும் எழுதும் மிக்க தேர்ந்த சீர்திருத்தக் காரரும் உளர். அந்தோ மருந்தை மருந்தென்று அறியாது தின்று விட்டாலும் நோய் தீர்வதுபோலும், நெருப்பை நினையாமலும் கண்ணால் பாராமலுமே அதைத் தீண்டி



விட்டாலும் அது சுடுமாறுபோலும், ஆண்டவனை நினையாமலே அவன் மகிமைபொருந்திய திருநாமங்களாகிய மகாமந்திரங்களை வாயால் கூறினாலும் கொஞ்சம் புண்ணியம் கிடைக்கும் சித்த சுத்தியுண்டாகும் என்று ஆழ்ந்த யோசனைசெய்து சுப்பிரமணியன்-வடிவேலன்-சீதா ராமன்-சபாபதி-நடராஜன்-நாராயணன் நமசிவாயன் முதலிய நாமங்களைக்கொண்டு நம்மக்களையழைக்க வேண்டுமென நம் முன்னோர்களாகிய அறிஞர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அத்தகைய நாமங்களை நாம் மேல்கண்டவாறு சின்னபின்னப்படுத்தி அவற்றின் அரியபொருளை யழித்து விடத் தொடங்குவது பெரும்பாதகத்தை மூட்டைகட்டித் தலைமேல் சுமந்துகொள்வ தாகுமன்றி வேறில்லை யென்பதை இன்னமும் நம்மவர் உணராதிருப்பது மிக்க பரிதாபமே யாகும்.

இத்தகைய திருட்டாந்தங்களையும், தாய்ப்பாஷையில் நாம் சிரத்தை கொள்ளாவிட்டால் நேரிடக்கூடிய கெடுதிகளையும் நாம் பூரணமாய் விவரிக்கப்புகுந்தால் சஞ்சிகையில் இடம் போதாதென்றஞ்சியே யிதோடு நிறுத்துகிறோம்.

(2) இன்னொரு முக்கியமான விஷயம் ஆசாரச் சீர்திருத்தம்.

ஆசாரங்கள் அந்தந்தத் தேசத்திற்குத் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. காலத்திற்குத்தக்கவாறு அவைமாறிச்சீர்திருத்தமடையவேண்டியது நியாயமே. திருந்துவது சீருக்காகவே யன்றி இருக்கிற சீரை யழித்துக்கொள்ள வல்ல வென்பது கருத்தில் வைக்கப்படவேண்டும். அதிலும் நமது இலௌகிக ஆசாரங்கள் பெரும்பாலும் மத சம்பந்தமானவை. நமது முன்னோர்கள் எந்த ஆசாரவழக்கத்தையும் ஆன்மலாபத்தைக் கருதி ஆழ்ந்த பொருளமைத்தே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதோடு சுகாதாரத்தையும் கவனித்தே ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நம்மவர்களோ நமக்கு காலப்போக்கின்படி எந்த சீர்திருத்தம் அவசியமோ அதைக் கவனிக்காமலே விட்டு விட்டு, கண்மூடித்தனமாய் அன்னியர் ஆசாரத்தைப் பின்பற்றுதலே சீர்திருத்தமும் நாகரீகமுமென்று கருதி நடக்கிறார்கள். அதிலும் வெளித்தோற்றமான விஷயங்களில் மட்டுமே யவ்வாறு செய்கிறார்களன்றி, அன்னியரிடமுள்ளதும் நமக்கு நன்மையை யளிக்கத் தக்கதுமான நடக்கையில் அவர்களைப் பின் பற்றுவதில்லை. காக்காய் கத்தினால் இது சுபாவம், இதுதான் அதன் இயற்கைக் குரல் என்று யாவரும் கருதி அதைக் கவனிக்கமாட்டார்கள். ஒருகாகம் குயிலின் மேல்தோலைப் போர்த்துக் கொண்டிருப்பதை யாரேனும் கண்டால் இதுவும் குயில்தான் என்றே எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால் அது "கா! கா!" என்று கத்த ஆரம்பித்தாலோ, அது

எவ்வளவு நகைப்பிற்கிடம்? அதைக்காணும் குயில்களுக்கு அது எவ்வளவு ஏளனத்திற்கிடம் "ஓகோ கோ இம்மூடக்காகம் குயிலாய் விடலாமென்று நம்போல் வேடமணிந்துகொண்டது. கடைசியில் தன் இயற்கைக் குரலையே காட்டிவிட்டது. நமது இனிய குரல் இவைகட்கு எப்படி வரும்?" என்று பரிகாசஞ் செய்யுமல்லவா. நம்மவர் செய்கைகளும் அப்படியே யிருக்கிறது.

நம்மவரில் சிலர் தங்கள்தொழில் முறைமையில் மேல் நாட்டாரைப்போல் வெளித்தோற்றங்களை யமைத்துக் கொள்கிறார்கள். மற்ற விஷயங்களிலும் மேல்நாட்டு வர்த்தகர்போல் நீதியாகவும் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடந்துகொண்டு அவர்களைப்போல் விர்த்தியடைந்தால் அது தக்க செய்கையேயாகும். அவர்களைப் போலவே "கறார் கடை" என்று பலகை தொங்கவைத்து விடுகிறது. ஆனால் அதிக இலாபம் கூட்டி யிருப்பதை யறிந்துகொண்டு ஒரு கிராக்கி வாங்காமல் திரும்பி விடுவதானால் அவனுக்குமட்டுமே தயவாய்க் கொடுப்பதுபோல் அபிநயம்செய்து குறித்த விலைக்குக் குறைத்துக் கொடுத்து விடுகிறார்கள்.

சிலர் மேல் நாட்டாரைப்போலவே கடிதத்தில் தலைப்புகள் யாவும் அச்சடித்து வைத்துக்கொள்கிறார்கள். நமது நீதிப்படி யவ்வாறு செய்வது குற்றமென்று நாம் கூறவில்லை. ஆனால் நமது ஜாதிக்கும் மதத்திற்கும் தக்கவாராய் பெற்றோரால் நமக்கு இடப்பட்டு வழங்கிவரும் பெயரை விட்டுவிட்டு, மேல்நாட்டு நாமத்தை யேன் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது நமக்குவிளங்கவில்லை. இது நமது கௌரவத்தையும் நம் முன்னோர் கௌரவத்தையும் நாமே அழித்துவிடும் செய்கை யென்று நம்மவர்க்குப் புலப்படாதிருப்பது மிக்கவிசனிக்கத்தக்க விஷயமே. நாகரீகமடைந்த வேறெந்த நாட்டாரேனும் இம்மாதிரி காரியத்தைச் செய்கிறார்களா? ஒருக்காலும் செய்யார்கள்.

அவ்வாறு மேல்நாட்டாரைப் போல் மேல் தோற்றத்தைச் செய்துகொண்டு அவர்கள் போல் ஒழுங்காய் நடந்து கொள்கிறார்களா? அதுமட்டும் "பழையகந்தனே கந்தன்" என்றபடிதான். "இன்னபொருள் இந்தவிலைதான் எக்காரணத்தாலும் விலையில் என்னளவும் குறைக்கப்பட மாட்டாது. பேரம் பேசும் கடிதங்களுக்கு பதில் அனுப்பப்படமாட்டாது" என்று மூன்றுதரம் எழுதினாலும், அதன் பிறகும், "நாங்கள் உங்களிடம் இன்னும் அனேகம் சாமான்கள் வாங்க விருக்கிறோம், ஆகையினால் நமக்கு மட்டும் முக்கால் விலைக்கு அவசியம் கொடுக்கவேண்டும் ... ..." என்று பதில் எழுதுகிறார்கள். இதுதானா மேல் நாட்டார் போல் வர்த்தகம் செய்யும் ஒழுங்கு? இத்தகைய நடக்கையே மேல் கண்ட காகத்தின் நடக்கையென்று நாம் கூறியது.



இவற்றைப்பற்றி இன்னும் விரிவாய்க் கூறப்புகின் சஞ்சிகை யிடந்தராது.

நண்பர்களே! நாம் இவ்வாறு கூறுகிறோமென்பதற்காக நம்மேல் வருத்தங் கொள்ளமாட்டீர்களென்று நம்புகிறோம். வைத்தியன் கத்தியால் இரணத்தை யறுத்து அச்சமயம் நோயைக் கொடுத்தாலும் அவன்மேல் யாரும் மனஸ்தாபங் கொள்வதில்லை. எத்தகைய சீர்திருத்தத்தை நாம் அடைவது அவசியம்? எது தகாதது? என்று ஆராய்ந்து பார்த்தே அன்னியர்கள் செய்கைகளைப் பின்பற்றவேண்டும்.

நாகரீக மயக்கங்கொண்டு நம்மவரிற்பலர் இப்போது தகாத ஆசாரங்களை யனுசரிக்கத் தொடங்கியிருப்பதால் நம் நாட்டிலுள்ள ஆன்றோர் சமயோசிதமான புத்திமதிகளை நமக்குப் புகட்டுகிறார்கள். நாம் பத்திரிகை சஞ்சிகை முதலியவற்றில் அவற்றை மேல்போக்காய் வாசித்து மறந்து விடுவதில் ஒருபயனுமில்லை. அதனால் அவர்கள் கூறுவதும் நாம் பத்திரிகை முதலியவற்றை வாசிப்பதும் ஒருபயனு மின்றிப்போம். ஆகையால் சகோதர சகோதரிகளே! ஆன்றோர் கூறும் விஷயங்களை வாசித்து மனதில் வைத்து அதன்படி நடக்க நாம் முயலவேண்டும். மற்றப்பேருக்கும் அப்படிச்செய்யும்படி போதிக்கவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை. அப்படிச் செய்தால் கருணாநிதியாகிய பரமேசன் நாம் க்ஷேமமடைந்து முன்னுக்கு வரும்படிக்கும் நம்தாய் நாடு பூர்வம்போல் செல்வமுஞ்சீரும் அடைந்து மற்ற நாடுகளைப்போல் முன்னேற்ற மடையும் படிக்கும் அருள் புரிவாரென்பது நிச்சயம்.

ஓம் தத்ஸத்

## விதியும் மதியும்.

விதி என்பதற்கு ஊழ் வினை கருமம் என்று பல பெயர்கள் உண்டு. விதி என்றால் முன் ஜென்மங்களில் செய்த நல்வினை தீவினை காரணமாய் இந்த ஜென்மத்தில் நாம் அனுபவிக்கும் வினைகள்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" (குறள்.)

அதாவது "விதியைவிலக்க என்ன தந்திரம்செய்யினும், அத்தந்திரத்தின் வழியாகவோ வேறொதன் வழியாகவோ விதியே முன்வந்து நிற்கும் ஆதலின் அதற்கிருக்கும் வல்லமை வேறெதற்கு மில்லை," என்பதாம்.

'விதியினால் வாழ்வதல்லால் வேதத்தோர் தங்கள்
மதியினால் வாழ்வதொன்றில்லை'

என்ற பெரியோர் வாக்கும் காண்க. சற்று நாம் யோசித்துப் பார்ப்போமானால் அவரவர் செய்த வினையை அவரவர் அனுபவிக்க வேண்டியது

தானே! தினையை விதைக்கிறவன் தினையை அறுப்பானல்லவா. அதுபோல ஒருவன் செய்த வினை திரும்பவும் அவனுக்கே வருகிறது. அதாவது நல்வினையினா லின்பமும் தீவினையினால் துன்பமும் ஏற்பட்டு இன்ப துன்பங்களில் கிடந்து உழலுவன். உலகத்தில் அனேகவிதமான இன்பமும் துன்பமும் ஒவ்வொருவரும் அனுபவிக்கக் காண்கிறோம். அதாவது சிலர் ஏராளமாய்ப் பொருள் சம்பாதியம் செய்கிறவர்களானாலும் கல்வியில்லாமலும் இன்னும் பலர். எவ்வளவோ கற்றறிந்தும் தரித்திர திசையிலும் வேறு சிலர் கல்வியும் பொருளும் இருந்தும் சரீர சுகமில்லாமலும் இன்னும் பல விதமாய் உலகம் நடைபெற்று வருகின்றது.

> "குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
> நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

என அதிவீரராம பாண்டியன் கூறியுள்ளார். இவற்றிற் கெல்லாம் யாதுகாரணமென்று ஆராய்ச்சி செய்யுங்கால் உலகத்தில் ஒவ்வொருவர்களும் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடி கருமத்தைச் செய்கிறதனால் அதற்குத் தக்க விதமாய் அதன் பலனாகிய இன்பமும் துன்பமும் அனுபவிக்கின்றார்கள். கருமம் மூவகைப்படும், அதாவது ஆகாமியம், ஸஞ்சிதம், பிராரத்துவம், என்பனவாம். இவை முன்பே சஞ்சிகையில் விளக்கப் பட்டிருக்கின்றன. இனி மதியைப்பற்றி ஆராய்வோம். மதியென்பதற்கு அறிவு, ஞானம், என்று இன்னம் பற்பல நாமங்களுள. உலகத்தில் அறிவானது முன் ஜென்மங்களில் உண்டான பழக்கங் காரணமாய் பல திறப்பட்டு ஏற்றமும் குறைவுமாய் இருக்கப் பார்க்கின்றோம். 'விதிபடவரினும், மதிபடவுரை' என்றது ஔவை வாக்கு.

> "ஊழையும் உப்பக்கம் காண்ப ருலைவின்றி
> தாழா துஞற்று பவர்"

என்றார் நாயனார். இதனால் விதியையும் மதியால் வெல்லலாம் என்பதே பெரியோர் துணிபு. அதாவது வினையால் இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்று என்பது கருத்து. காகமானது கோடிசேர்ந்தாலும் ஒரு கல்லின்முன் எதிர் நிற்காது. அதுபோல கருமங்கள் கோடிகூடினாலும் கடவுளின் கருணைப் பிரவாக அருளைத்தாகமாய் நாடியவிடத்து விதியினால் ஏற்பட்ட இன்ப துன்ப உணர்ச்சி தோன்றா. அதாவது விதியை மதி அடக்கிக்கொள்ளுகிறது. முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் என்னும் பழமொழிப்படி தனது அறிவைக்கொண்டு முயற்சி செய்கிறவர்கள் அதற்குத் தகுந்த பலனை யடைவார்கள்.

> 'தெய்வத்தா னாகா தெனினும் முயற்சி
> மெய் வருந்தக் கூலிதரும்' என்பது பொய்யா மொழி.

வியாபார நுட்பமெல்லாம் தெரிந்த. ஒருவன் மலிந்த இடத்தில் சரக்குகள் வாங்கி பிரியமான இடத்திற்குக் கொண்டுபோய் விற்க வேண்டுமென்று கப்பலில் ஏற்றுமதி செய்தான். அவன் செய்யவேண்டிய முயற்சி செய்தாய்விட்டது. கப்பல் கடலில் புயல்காற்றினால் மூழ்கிவிட்டது. அதனால் இவனுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இவன் யாதுசெய்வான். இவன் செய்த முயற்சிக்கு விரோதமாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக்காரணம் என்னவென்று யோசிப்போமானால் அதுவே பிராரத்துவம்; எவ்வளவு முயற்சி செய்தாலும் அவனுடைய வேண்டிய லபிதமில்லாவிட்டால் கிட்டாது.



> "நன்றாங்கா னல்லவாக் காண்ப வன்றாங்கா
> லல்லற் படுவ தெவன்"

என்ற வண்ணம் நல்வினையினால் இன்பத்தை அனுபவிக்கக்கண்டவன் தீவினையினால் துன்பமடையும்போது, அது தீவினையின் பயனென்று மன அமைதியுடன் இராமல் கவலை யடைவது எதை நினைத்து? அதாவது கவலையடைய வேண்டியதில்லை என்பதனால் அறிவுடையோர் கவலை யடையமாட்டார்.

> "வாழ்வது வந்தபோது மனத்தனில் மகிழ வேண்டாம்
> தாழ்வது வந்தாலும் தளர்வரோ தக்கோர் மிக்க
> ஊழ்வினை வந்தபோது ஒருவரால் விலக்கப் போமோ
> ஏழையாய் இருந்தோர் பல்லக் கேறுதல் கண்டிலீரோ"

என்ற விவேகசிந்தாமணியில் கூறியதும் கவனிக்கத்தக்கது. வாழ்வு வந்த காலத்தில் மனமகிழ்ச்சியில்லாமலும் தாழ்வு வந்த காலத்தில் மனம் தளர்ச்சி யடையாமலும் இருப்பதே மன அமைதி. அவ்விதம் மனம் அடங்கினால் உலகம் பூராவும் தனக்குள் அடங்கியதாகும். உலகம் தனக்குள் அடங்கவே உலகமும் மனமும் காரணமா யேற்பட்ட விதியும் மதியில் அடங்கும் ஆதலால் விதியும் மதிக்குட்பட்டதென்று 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' விளங்க வில்லையா? அறிவுடையோன் எப்போதும், ஊக்கமும், சுறு சுறுப்பும், முயற்சியும் உடையவன். அறிவில்லாதவனே சோம்பலும், மனத்தளர்ச்சியு முள்ளவன். அறிவில்லாதவனையே விதி தன் வசப்படுத்தி இன்ப துன்பங்களுக் காளாக்கும். அறிவு விர்த்திக்கு வேண்டுவது கல்வி கேள்வி ஆராய்ச்சியும், அவ்விதம் ஆராய்ந்தறிந்த விஷயங்களை சிந்தித்து அதன்படி நடத்தலுமேயாம்.

நிலையானதை அறியும் அறிவே, நிலையான இன்பத்தைக் கொடுக்கும். அப்படி அறிந்த அறிவுடையோரே, நிலையில்லாதவற்றை அறியும் புல்லறிவினால் செய்த கருமத்திற்காக ஏற்பட்ட விதியையும் அதனால் ஏற்படுகிற இன்ப துன்பங்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் தனக்குள் அடங்கி நிலையான இன்பத்தை அனுபவிக்கப் பாத்திர முடையவர்களாவார்கள், எனவே நித்தியத்தைப்பற்றி கூறும் சாஸ்திரத்தில் தெளிந்து ஒழுகும் அறிவுடையோர்களே விதியை வெல்லக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். மற்றவர்களெல்லாம் விதியின்படியே தங்களறிவை இயக்கவிட்டு நல்வினையினா லின்பமும் தீவினையினாற் றுன்பமும் அனுபவிக்கும் பிறவித் துன்பப்பெருங் கடலில் மூழ்கிக் கிடப்பர். இனி நாம் ஒன்றை நினைத்தால் அதன் முடிவு வேறொன்றாய் ஏற்படுவதும் அன்றி நினைத்தபடியே கை கூடுதலும், அல்லாமலும் ஒன்றையும் நினையாத ஒரு சம்பவம் திடீரென ஏற்படுவதும் ஆகிய இவைகளுக்கெல்லாம் யாது காரணமென்று ஆராய்வோமானால் இவையெல்லாம் கடவுள் செயலே. இனி செயல்கள் 'ஜீவச் செயல், கடவுள் செயல்" என இருவகைப்படும். ஜீவச் செயலாவது அறிவினாலும், அறியாமை காரணமாகிய யான் எனது என்னும் செருக்காலும் செய்யும் நல்வினை தீவினைகளே. கடவுள் செயலாவது அவரவர்கள் செய்யும் கருமத்துக்குத் தக்க பலனைக் கொடுப்பதாகும்.

V. கடலைமுத்துப் பிள்ளை.

இராயபுரம்.

## மோரின் குணம்.

செந்தமிழ் நண்பர்காள்:—

நமது ரத்தக்குழாய்களில் உள்ள அழுக்கு ஸம்பந்தமான அசுத்த பதார்த்தங்கள் எல்லாவற்றையும், மோரின் புளிப்பானது எளிதில் கரைத்து விடுகிறது. ஆதலால் அந்தக்குழாய்கள் வழியாக இரத்தம் ஓட, தேகத்தின் பூட்டுகளில் இம்மாதிரியான அழுக்கு சம்பந்தமான வஸ்துக்கள் தங்க இடமில்லாமலும், சதைப்பாங்கில் விஷவஸ்துக்கள் தங்க இடமில்லாமலும் போகின்றது. மேலும், அழுக்குச் சம்பந்தமான வஸ்துக்கள் தங்குவதால், ரத்தக்குழாய்களில் தடிப்பு ஏறிப் பலஹீனம் உண்டாகின்றது. ஆகையால் மோரைத் தாராளமாகச் சாப்பிட்டு வந்தால் தேகத்தில் மிகுதியாகும் அசுத்த பதார்த்தங்கள் சேரா. வியர்வை, சிறுநீர், பித்தம், முதலியவைகள் ரூபமாக அசுத்தம் வெளியில் போகாமல் இருப்பதால் கீல் பிடிப்பு என்ற நோய் உண்டாகின்றது. அத்தகைய வியாதிக்கு மோரே தக்க மருந்து. இதன் உபயோகம் விஷபதார்த்தங்களை எளிதில் தேகத்தை விட்டு வெளியாகும்படி செய்கின்றது. மோர் சீரணப்பையை நல்ல நிலையில் வைத்துக் கொள்வதுடன் பரிசுத்தமான இரத்தத்தை உண்டாக்குகிறது. இனிப்பு மோரைப் பூட்டுகளில் வலி வீக்கம் முதலியன உடையவர்கள் தாராளமாகச் சாப்பிடவேண்டும்.

S. ஜெகந்நாதம் பிள்ளை,
ஸ்கூல் மானேஜர், எலையூர்.

---

## உபாத்தியாயர் இருக்கவேண்டிய முறைமை

(271-ம் பக்கத்தொடர்ச்சி.)

1-வது கருவியாகிய வாய்மூலமான பரீக்ஷை:—இதில் காலம் சேதமாகாது. வியாசம் எழுதத் தெரியாதவர்கள் நன்றாய் பதில் சொல்லுவார்கள். நியாயம் உண்டாகும் (அதாவது பதில் சொல்லுகிறவன் எழுதாமலிருந்தால் அவனை எழுதும்படி உபாத்தியாயர் செய்கிறார் எழுதினவன் பதில் சொல்லாதிருந்தால் அவனைப் பதில் சொல்லுவதில் தேர்ச்சி அடையும்படி செய்கிறார்.)

இதில் உபாத்தியாயரின் கவனம் அதிகமாக இருக்கவேண்டும். ஏனென்றால் தெரிந்த பிள்ளைகளுடன் தெரியாத சோம்பேறிப் பிள்ளைகள் போய்ச் சேர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டு பதில் சொல்லுவார்கள். கேள்வியானது அந்த வகுப்பிலுள்ள மாணாக்கர்கள் அறிந்து பதில் சொல்லக் கூடியதாக இருத்தல்வேண்டும்.

கேள்வி கேட்கவேண்டிய முறை:—1. இன்றைய பாடம் ஆரம்பிப்பதற்கு முந்தி நேற்று கற்றுக் கொடுத்த பாடத்தைக் கேட்கவேண்டும்.

2. மத்தியில் கேட்பது—அதாவது இன்றையதினம் இப்பொழுது சொல்லிக் கொடுப்பதை கவனித்து வருகிறார்களா இல்லையா என்று சந்தேகம் உண்டாகும்போது, முன் கற்பித்ததைப் பற்றி கேள்வி கேட்பது.



3. கடைசியில் நாம் இதுவரையில் சொல்லியதைக் கவனித்து வந்திருக்கிறார்களா என்பதற்கு;

கேள்வியை அனுஷ்டிக்கும்விதி:—

1. கேள்வி சுலபமாயும் அளவாகச் சுருக்கமாகவும் இருக்கவேண்டும்.

2. மாணாக்கர்களின் சக்தியைப் பொருத்தினதாக இருத்தல் வேண்டும்.

3. கேட்கிற கேள்விகள் நாம் அப்போது, போதிக்கும் புத்தகத்தில் அவர்களுக்கு நடந்த அல்லது நடக்கும் பாடத்திலுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

4. தகாத கேள்விகள்கூடாது. அதாவது 1. மாங்காய் புளிக்குமா புளிக்காதா? 2. நாலும் மூணும் ஏழுதானே. 3. யானைக்கு கால் நாலு தானே என்ற இப்படிப்பட்டவை.

மேற்கூறியவற்றில் நாம் அங்கீகரிக்கவேண்டிய பதில்களாவன:—

1. சரியான பதில். 2. கேட்டதற்கு தகாததாக இருந்தபோதிலும் அந்த மாணாக்கன் யோசித்துச் சொன்னால் அங்கீகரிக்கலாம். அப்படி அல்லாமல் நாம் கேட்டதற்குத் தகாததாக பிழைபதில் யோசியாமல் சொன்னால் ஒருபோதும் அதை அங்கீகரிக்கக் கூடாது. (தொடரும்)

T. P. ராஜகோபால செட்டி, உபாத்தியாயர், A. V. ஸ்கூல்,
நெல்லிகுப்பம்.

---

## நித்தியவிதி—போஜனம்.

(312-ம் பக்கத்தொடர்ச்சி)

காலையில் பசுவின் மெழுகினால் மெழுகி அலகிட்டுச் சுத்தமாயிருக்கிற இடத்தில் கிழக்குமுகமாகவேனும் தெற்குமுகமாகவேனும் உட்கார வேண்டும். மேற்குமுகமாக உட்காருவது அவ்வளவு நிஷேதிக்கப்பட்டதல்ல. வடக்குமுகமாக ஒருபோதும் உட்கார்ந்து புசிக்கக்கூடாது. இதில் ஒரு இரகசியம் உண்டு. வடதிசையிலிருந்தே பூமியின் மஹாசக்தி தெற்கு நோக்கிச் செல்கின்றது. இதைத்தான் மின்சார சக்தியென்று கூறுவர். வடக்குநோக்கி உட்கார்ந்தால் அந்தச் சக்தி வயிற்றில்தாக்கும். அதனால் மந்தம் அஜீர்ணம் முதலிய ரோகங்கள் உற்பத்தியாகும். அதனால்தான் வடதிசை வடகீழ்த்திசையிலிருந்து காற்று வீசும்போது அஜீர்ணம் வாந்தி பேதி முதலிய கொடிய நோய்களுண்டாகின்றன. இது பிரத்தியட்சம். சிராத்த தினத்தில் பிதிர்ஸ்தானத்திலிருந்து புசிக்கிறவர்கள் வடமுகமாக உட்காருவது வழக்கம். அவர்கள் எவ்விதத்திலும் இரண்டாம்வேளை புசிக்கக் கூடாது. ஒரேவேளைதான் உண்ணவேண்டும். வடமுக நோக்கி உட்கார்ந்து புசித்தால் ஜீரணம் எளிதிலாகாது. ஆகாரமும் தேடாது என்பதுபற்றியே அவர்களுக்குமாத்திரம் அவ்வாறு விதிக்கப்பட்டது. விசேஷ தேவஸ்தானத்திலிருப்பவர்கள் கீழ்த்திசைநோக்கி உட்காருவது வழக்கம். ஏனெனில் மின்சாரசக்தி வயிற்றின்மேல் வேகமாய்த் தாக்காமல் பக்கத்தில் உராய்ந்து செல்லுமாதலால் அவ்வளவு கெடுதியில்லை. ஆயினும் ஜீரணம் மெதுவாகும். அவர்களுக்கும் ஒரேவேளை போஜனந்தான் விதிக்கப்பட்டது

தென்முகம்நோக்கி உட்கார்ந்தால் அந்தச்சக்தி முதுகின்மேற் படுவதால் யாதொரு கெடுதியும் சம்பவியாது. தென்றற் காற்றின் விசேஷம் என்பது எல்லாரும் அறிந்ததே. அது உலர்த்தன்மையோடு வருவதால் ஜீரணத்துக்கு அனுகுணமாகவே யிருக்கும். சீக்கிரம் ஜீரணமாக்கும். இதுபற்றியே சரீரபுஷ்டியை விரும்புகிறவன் தென்முகமாக விருந்து புசிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. வேறு ஸ்மிருதிகளில் கிழக்குமுகமா யுட்கார்ந்து புசித்தால் ஆயுள் விருத்தியாம், தெற்குமுகம் நோக்கியிருந் துண்டால்கீர்த்தியுண்டாம், மேற்குமுகமாயின் சம்பத்துண்டாகும். சத்தியத்தை மாத்திரம் விரும்பினவன் வடமுகமாக விருந்து புசிக்கலாமென்று கூறப்பட்டுள்ளது. ஈண்டு சத்தியம் என்றது பிரமத்தை. பிரமத்தியானிகளுக்கு ஒருவேளை ஆகாரமே விதிக்கப்பட்டமையால் அது உசிதமானது காண்க. தென்முகம்நோக்கி ஒன்றும் செய்யலாகாது என்றும் கூறியது. சரீரத்துக்குப் புஷ்டியைக் கொடுக்கும் என்றதனால் அறிவுகெடும் என்பது கருத்து. எவ்வெப்பதார்த்தங்கள் அதிக புஷ்டியைக் கொடுக்குமோ அவைகள் அறிவைக் கெடுக்குமென்பது நூல்களின் கருத்து. அறிவைக்கெடுக்குமென்று கூறினால் சூட்சமத்திலும் அதிசூட்சமமாய் எவ்விதக் கருவிகளாலும் அறியப்படாததாயுள்ள பரப்பிரமத்தை அறியும் அறிவைக் குறைக்குமென்பது கருத்து. உலகத்துக்குரிய சிற்றின்பானுபவங்களுக்கு வேண்டிய சிற்றறிவை விருத்தியாக்குவதால் நன்மை தீமைகளைப் பகுத்தறிதலாகிய பேரறிவு குறையும். ஆதலால் மோட்சத்தை விரும்புகிறவர்களுக்குச் சரீரமதம் கூடாமைபற்றி அவ்வாறு கூறியது. இவற்றை விரிக்கப்புகின்நூல்விரியுமாதலால் இது நிற்க.

போஜனம்செய்கிறவர்கள் நீரருந்தும் பாத்திரம் ஒன்று தமக்கெனத் தனியாக வைத்திருத்தல் வேண்டும். பிறர் குடித்த பாத்திரத்தை உபயோகிக்கக்கூடாது. ஏனெனில் பிறரால் தொடப்பட்ட பாத்திரத்தில் அவர்களுடைய சரீராம்சம் கலந்து நிற்பதால் அநேக கெடுதிகள் உண்டாகும். அப்பாத்திரங்களும் வெள்ளி தங்கங்களாற் செய்யப்பட்டதானால் சிலாக்கியமுடையன. அதற்கியலாதவர்கள் தாமிரம் வெண்கலமுறி முதலியவற்றை உபயோகிக்கலாம். காலையில் நீர்திரட்டித் தேற்றாம் வித்தால் தெளிவித்துச் சுத்தமான மண்பாண்டத்திலிட்டுக் குளிர்ச்சியுள்ள பாதிரி புஷ்பம் முதலியவற்றால் வாசனை யூட்டப்பட்டதும், திரிபலை என்கிற கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவற்றின் பதங்களினாலாவது, இவற்றுள் ஒன்றினாலாவது பரிசுத்தமாக்கப்பட்டதுமான சுத்த ஜலத்தை வைத்துக்கொள்ள வேண்டும். வெந்நீராயின் தாம்பிர பாத்திரத்தில் வைக்கக்கூடாது. வைத்தால் உஷ்ணம்பட்டவுடன் அது களிம்பாகிய விஷத்தைக் கக்கும். வெந்நீர் வைப்பதற்கு வெண்கல வெள்ளிப்பாத்திரங்களே யோக்கியமுடையன. வைத்தியசாஸ்திரங்களில் குடிக்கத் தகுந்தது வெந்நீரேயென்று கூறுகின்றது. அதைக் கைபொறுக்க ஆற்றியே குடிக்க வேண்டும். இதை

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி"

என்ற தேரையர் வசனத்தாலுணர்க. நீர்சுருக்கி என்றது நன்றாய்க் காய்ச்சி என்பது பொருள். மோர்பெருக்கி என்றது தண்ணீர்விட்டு நன்



றாய்க் கரைத்துத் தெளியவைத்து என்றுகொள்க. நெய் உருக்கி என்
பதற்குப் புதிதாக வெண்ணெயை உருக்கி என்பதே பொருளாம். உறை
ந்த விழுதான நெய்யையும் உருக்கியே உபயோகிக்க வேண்டுமென்பது
கொள்க. இரண்டு என்றது மலஜலங்களை. பெண்ணின்பால் ஒன்று என்
றது காம இச்சையையாம். வெந்நீர் பித்தோஷமானதும் ஆகாரத்தை
ஜீரணியாக்கும் சக்தியுள்ளது என்பதும் வைத்தியநூலின் கருத்து. இவ்
வெந்நீரை எல்லாரும் விரும்புவதில்லை. குளிர்ந்த நீரையே அருந்த விரும்பு
வார்கள். ஆதலால் குளிர்ந்தநீரையே குறித்தோம். குளிர்ந்த நீரில்வேறொரு
விசேஷமுண்டு, அதுவரும். தங்கம் வெள்ளிகளின் சத்து சரீரத்தில் சேர்
தால் உதிரம் சுக்கிலம்முதலியன சத்திபெறும் ஆதலால் அதுவே உத்தமம்.
உண்ணுதற்குரிய கலம் வெள்ளி தங்கம் வெண்கலம் இலை இவைக
ளாம். இவற்றில் ஒன்றை நன்றாய் மெழுகிச் சுத்தமாக்கப் பட்டதும் மண்
டலமிடப்பட்டதுமான சமபூமியிலிட்டு அதில் அன்னம் முதலிய பதார்த்
தங்களை வைத்துக் கொண்டு புசிக்கவேண்டும். வெண்கல பாத்திரமானால்
அது அறுபத்து நாலுபல நிறைக்கு மேற்பட்டதா யிருக்கவேண்டும் என்
றும், அதற்குக்குறைந்த பாத்திரத்தில் புசிக்கக்கூடாது என்றும் கூறப்
பட்டுள்ளது. வெள்ளி தங்கங்களுக்கு இந்த நியமமில்லை. சில நூல்களில்
வெண்கல பாத்திரம் நூற்றிருபது பல நிறையுள்ளதாக இருக்க வேண்டு
மென்று கூறப்பட்டிருக்கிறது. இலைகளில் துவருள்ள இலைகளே போஜ
னபாத்திரத்திரமாக உபயோகப்படுத்தப் படவேண்டு மென்பது விதி.
துவர் ஜீரணத்தைச் சீக்கிரம் செய்விக்கு மியல்புள்ளது. போஜனம் செய்
பவனுக்கு அது ஜீரணமாவதே பிரயோசனமாதலால் இலைகளையே வழக்க
மாக உபயோகப் படுத்துகிறார்கள். அன்றியும் எல்லாராலும் எளிதிலடை
யக் கூடியதுமாம். இலைகளில் வாழையிலை, ஆலிலை, புரசஇலை, பலாஇலை,
தாமரையிலை முதலியவை போஜன பாத்திரங்களாகும்; இவற்றுள்ளும்
தாமரை பலா முதலியன சிலாக்கியமாகா. வெள்ளாலிலை யாயின் மிக்க
நன்மை தரும். துவருள்ள இலைகள் மிக்க விசேஷ மென்று சில வைத்தி
ய நூல்கள் கூறுகின்றன. துவர் அன்னத்தைச் சீக்கிரத்தில் ஜீரணப்பிக்
கும். பின்வரும் செய்யுட்களால் உண்கலங்களின் தன்மை நன்கு விளங்கும்.

---

"தங்கக் கலத்திலுண்ணத் தாதுவிர்த்தி யும்பசியும்
பொங்கமிடு திடமும் பூரிப்பு—மங்குறையும்
பித்தசோ கப்பிணியிப் பேருலகை விட்டகலுஞ்
சுத்தரசத் தீங்கனியே சொல்.

வெள்ளிக் கலத்திலுண்ண வீறி வருகபமும்
துள்ளியெழு பித்தமும்போஞ் சொல்லவோ—விள்ளரிய
காந்தியுண்டா நாளுங் களிப்புண்டாந் தேகத்திற்
சேர்ந்திவரும் வாதமுண்டாஞ் செப்பு.

செம்புக் கலத்திலுண்ண தேகவா ரோக்கியமாம்
பம்பிரத்த தோஷம் பறக்குங்காண்—அம்புவியில்
அண்ணியிடுங் காந்தி யணங்கே விழியொளியாம்
புண்ணியமு நண்ணும் புகல்.

தாம்பிரத்தில் வெள்ளியந் தான்கலக்க வெண்கலமென்
றும்பெயர் பெறுங்கலத்தி லன்னமுண்ணில்—தேம்புகின்ற

சோபமொ டாத்தபித்தத் தோன்றவறி யாதனங்கள்
சாபமெனச் சொன்னூதலே சாற்று.

தொக்கி னுறுமின்னுஞ் சுகபோகமு மன்னு
மக்கினி மந்த மபலமொடு—இக்குகொல்
பாழை யிலேப்புமறும் பன்னுபித்த முஞ்சமனும்
வாழை யிலேக்குணரு வாய்.

பலாயிலையி லுண்ணப் பதுங்கின்ற பித்தங்
குலாவி யெழும்பிக் குதிக்கு—முலாவிவரு
கன்ம மகோதரநோய் காணுந் தகலாத
குன்ம மகலுங் குறி.

தாமரைப்பன் னத்திலுண்டாற் றங்கரிய வுட்டிணமாம்
காமவா தந்தினந்து நன்னுங்காண்—தாமுறு
அக்கினி மந்தங்க ளுண்டன்றே மலர்த்திருவத்
திக்கினி விராலெனவே தேர்.

சொல்லுகின்ற மேகத்தைத் துஷ்டவக்க கடுப்பைக்
சொல்லுகின்ற நீரிழிவைக் கொல்லுங்காண்—நல்லாவின்
பாலும் விழுதும் பழமும்விதை யும்பூவும்
மேலு மிலேயுமென வின்"

இவற்றால் உண்கலங்களின் நன்மை தீமைகளை யுணர்ந்து கொள்க. தாம்பிரத்தைச் சிலாகித்துக் கூறினும் அது புளிப்பு இனிப்பு உப்பு கார முதலிய சுவையுள்ள பதார்த்தம் பட்டமாத்திரத்தில் தன்னிடத்திலுள்ள களிம்பைக் கக்கும். அக்களிம்பு கொடிய விஷமாம். ஆதலால் தனித்த செம்பு பாத்திரத்திற் புசிக்கலாகாதென்று ஸ்மிருதிகளும் வேறு சில வைத்திய நூல்களும் கூறுகின்றன. வெண்கலத்தில் செம்பும் ஈயமும் கலந்திருத்தலால் அவ்வீயம் தாம்பிரத்தின் களிம்பாகிய விஷத்தை வெளிவராமலடக்கும். கிரகஸ்தாச் சிரமத்தாருக்குச் சுக்கில விருத்தியை அளித்துச் சிற்றின்பத்தில் விருப்புண்டாக்கு மாதலால் அது இல்லறத்தாருக்கே சிறந்தது. சந்நியாசி, விதவை, பிரமசாரிகளுக்கு விலக்கப்பட்டது. மண்பாண்டம் யாதொரு குற்றமுமின்றிச் சிறந்திருப்பது. ஆயினும் வியாதிக்காரர்கள் பாபிகளுடைய பரிசமுண்டாயின் உடனே தோஷத்தை யடையும். ஆதலால் மண்கலத்தில் புசித்தலும் விலக்கப்பட்டது. தனவந்தர்கள் தங்கம் வெள்ளிப்பாத்திரத்தில் புசிக்கத்தகும். அத்துணைச் செல்வமில்லாதார் வெண்கலப் பாத்திரத்தில் புசிக்கலாம். தனவான்கள் ஏழைகள் எல்லார்க்கும் வாழை. ஆல், முதலிய இலைகள் சிறந்தனவாம். மண் பாண்டம் தான் அடைந்த பொருள்களின் குணத்தை யுடனே கிரகிக்கும் தன்மையுடையது. குஷ்டம் மேகம் அபஸ்மாரம் முதலிய வியாதிக்காரர்களால் தீண்டப்படின் அவ்வியாதியைக் கிரகித்து நாளடைவில் உண்பவனைக் கெடுக்குமியல்புடைமை பற்றியே விலக்கப்பட்டதாதலால், அந்தப் பிருதிவி சம்பந்தமுடைய பீங்கான், எனேமல் முதலிய நூதனக் கைத்தொழிற் சாமான்களும் போஜனருக மாகாதெனக் கழிக்கப்படுவனவே யன்றிக் கொள்ளத்தகுவன வல்ல வென்க.

(தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.



191

மாணவர் பக்கம்

## "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"

இது நமது நாட்டில் வெகுகாலமாக வழங்கிவரும் ஓர் பழமொழி. அதாவது பயிரிட்டுச் சேகரித்த தானியத்தை நல்ல காற்று வீசும்போதே தூற்றி, பதர், குப்பை, கூளம் முதலியவை நீக்கிச் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதே. ஓர் தேசத்தின் பழமொழிகள் எல்லாம் அந்தந்த ஜனங்களின் வழக்க பழக்கங்களையே பெரும்பாலும் ஒத்திருக்கும். அதற்கு மேற்சொல்லிய பழமொழியையே ஓர் உதாரணமாய் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் நமது தேசத்தில் பயிரிட்டு ஜீவனம்செய்வதே வெகுகாலந்தொட்டு நமக்குப் பிரதானமானதாய்க் கருதப்பட்டு வருகிறது. ஆதலால் பயிர்த்தொழிலைப் பற்றி அநேகம் பழமொழிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதையொட்டியே அறுவடையான தானியத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை முன்னிட்டு இப்பழமொழி ஏற்பட்டது என்னலாம்.

ஆனால் பழமொழிகள் யாவும் அதன் பதங்களால் விளங்கும் ஒரு விஷயத்தைமட்டுமே கூறுவதல்ல. ஏனெனில், இப்பழமொழியின் பொருள் காற்று நன்றாய் வீசும்போது தானியங்களைச் சுத்தமாய் தூற்றி வைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதா னென்றாலும் நாம் அவ்வொன்றிற்கே இதை உபயோகப்படுத்தாமல் இன்னும் பல சந்தர்ப்பங்களிலே உபயோகிப்பதைக் காணலாம். ஆகையால் இந்தப் பழமொழியின் பதங்களின் பொருள் ஒருவாறாய் இருப்பினும் முக்கிய கருத்து பொதுவாய் "நாம் செய்யவேண்டிய காரியத்தை அதற்குத் தக்க சமயம் இருக்கும்போதே செய்து முடித்துக் கொள்ளவேண்டும். சமயம் தவறிவிட்டால் காரியம் கைகூடாது,". என்பதே. உதாரணமாய் நதிகளில் வெள்ளம் வந்து நாடெங்கும் பாயுங் காலத்திலோ அல்லது நல்ல மழைபெய்து பயிரிடுவதற்கு சௌகரியமாய் இருக்குங்காலத்திலோ கவனியாமல் இருந்துவிட்டால், பின்னர் வெள்ளமும் மழையும் வற்றிய கோடைகாலத்தில் பயிரிடப் பிரவேசிப்பது எவ்வளவும் பொருந்தாத செய்கையாகும். வெள்ளம்வந்தால் அப்பொழுது தடுக்க முடியாது என்பதை அறிந்து வெள்ளமில்லாத காலத்திலேயே அணையைப்போட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதைப்போலவே நமது வாழ்நாள்களிலுள்ள ஒவ்வொரு சமயத்திலும் கவனித்து நடக்கவேண்டியதே. குடும்பக்கவலையொன்றுமில்லாது தமக்குவேண்டிய சௌகரியங்களைக் கவனிக்க வீட்டிலுள்ள பெற்றோர் முதலிய பெரியோர்கள் இருக்கும் சமயத்தில் தமது காலத்தை வீணில் செலவிடாமல் சிறு பிராயத்திலேயே கல்வி கற்பதில் மிகக் கவனம் செலுத்தவேண்டும். அன்றேல் பின் வாழ்நாட்களில் சம்பாதிப்பதற்குத் தகுந்த சாமார்த்தியம் அறிவு முதலியவையில்லாமல் கஷ்டப்படவேண்டியிருக்கும். அதுவுமன்றி சம்பாதிக்கும் போதே, ஆபத்துக் காலத்திலும், சம்பாதிக்கமுடியாத கிழத்தன்மையிலும் ஓர் ஆதாரவாய் இருக்கும்படி நமது வரும்படியில் கஷ்டமாயிருப்பினும் கொஞ்சம் கொஞ்சமாய் மீத்திவைத்துக்கொள்ளவேண்டுவது அவசியம். பின் வாழ்நாட்களைக் கவனியாமல், "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" என்று அவ்வப்போது கிடைப்பதை "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்" என்ற மூட நம்பிக்கை கொண்டு ஆராயாது செலவு செய்து விட்டு அநே

கள் கஷ்டப் படுவதை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிக் கஷ்டப்படும் பொழுது, "ஐயோ நாம் பால்யத்தில் சம்பாதித்த காலத்தில் கவனியாமல் வீண்செலவு செய்து விட்டோமே, சிறு பிள்ளையாய் பள்ளியில் படிக்கும்போது கவலையில்லாமல் உபாத்தியாயர்கள் போதிப்பதை யெல்லாம் அலக்ஷியம் செய்து விட்டு இப்பொழுது சம்பாதிக்க வழியின்றி யிருக்கின்றோமே" என்று தத்தளிக்கிறார்கள். யாவும், "பருவத்தாலன்றிப் பழா" என்றபடி எந்தெந்த காலத்தில் எதெதைச் செய்யவேண்டுமோ அந்தந்த காலத்திலேயே அதனைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டும்.

D. உலகநாதன்,
குடந்தை.

குறிப்பு:— மாணவர்கள் விசேஷமா யிதைக் கவனிக்க வேண்டும். ஏனெனில் பாலியவயதில் வாசிப்பு கஷ்டமும் பிரிய மற்றதுமாகவே தோன்றும். ஏனெனில் கல்வியில்லாவிடின் பின்னால் நேரிடும் கஷ்டத்தைப் பற்றி அப்போது சிந்தனை யில்லை. ஆகையால் "இந்தப் பாலியவயதிலேயே நாம் அக்கரை யோடு கல்வியைக் கற்கவேண்டும். இது போய் விட்டால் பிறகு கல்வி கற்கமுடியாமல் ஆயுள் முழுமையும் வருந்தவேண்டும்" என்பதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.

"எந்த காரியத்தையும், அதற்கு அனுகூலமான சந்தர்ப்பம் இருக்கும் போதே முடித்துக்கொள்ளவேண்டும். அப்போது அசிரத்தையாயிருந்து விட்டால் பிறகு அக்காரியம் கைகூடாது" என்பதே இதனால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய புத்திமதி.

பத்திரிகாசிரியர்.

---

## பிரபஞ்ச உற்பத்தி.

சென்ற கார்த்திகை மாத ஆனந்த போதினியின் 174-ம் பக்கத்திலுள்ள கார்த்திகை 'ஸ்ரீபதரிசன வியாஸத்தில், 176-ம் பக்கத்திய வசனத்தின் இரண்டாவது வரியில் 'சிவபரஞ்சுடர் தன்மயமாகவே பிரபஞ்சத்தை உற்பத்தி செய்தனர்' என, மகா - ா - ா - ஸ்ரீ எஸ். அயோத்திராம் அவர்கள் எழுதியிருக்கின்றனர்.

பிரபஞ்ச உற்பத்தி செய்தவர் பிர்மா - பிர்மா என்று யாவரும் பறைபெறும் படி உரைத்துக் கொண்டிருப்பதையும் அதுவே உண்மையென்றும் உணர்ந்திருந்த காலத்து, அயோத்திராம் அவர்களின் உரைமூலனுக— சந்தேகமாகத் தோன்றவே, அதன் உண்மையை அறியும் பொருட்டு; வேதவியாஸ முனிவரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்காந்த புராணத்து ஊருத்திரசங்கிதையின், அருணாசலப்புராணத்து இரண்டாவது திருமலைச் சருக்கத்தினை ஆராயுங்கால், பிரபஞ்ச உற்பத்தி செய்தவர் பிர்மாவேயாயினும், இதன் உற்பத்திக்கு மூலகாரணமாயுள்ளவர் சிவபிரானே யென 5 - 6 - வது செய்யுட்களால் தெரியலாயிற்று, அச் செய்யுட்களாவன:—

"ஒடுங்கு காலினி லயனரி யுருத்திரன் மகேச
னெனுஞ் சதாசிவன் விந்துநாதஞ் சத்தி செறியே
யடங்கிடும் பாசி வத்தினிற் பரசிவ மனைத்துங்
கடந்த தத்துவ முடிவிலே நின்றது கருதி"



"பரசி வத்தினில் வருபரா சத்தியாற் குடிலை
விரவி யும்பர தத்துவ மடைவிலே விரித்த
மருது மைவரு மொடுங்கிய முறையிலே வந்தா
ாிமகன படைத் திடுவது நினைந்தன னகத்தில்."

இம் மூலரகசியத்தை யாவரும் உணரும் பொருட்டு, இதை நமது போதினிக்கு எழுதியனுப்பலானேன். இந்த ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாக நின்ற, சந்தேகவாக்கியத்தின் ஆக்கியோராகிய அயோத்திராம் அவர்கட்கு வந்தனமளிக்கின்றேன். இதைப் போன்ற அரிய விஷயங்களைத் தன்னகத்தே கொண்டு, சந்தேக ஆராய்ச்சிகள் செய்து இயற்கையறிவை அபி விருத்தி செய்து கொள்ள, மாதமாதம் நம்மகத்தே வந்து மகிழ்ச்சியைக் கொடுத்து நன்மையை யூட்டித் தீமையை யோட்டி நம்மைப் புனிதர்களாகச் செய்யும் நமது ஆனந்த போதினியின் மகிமையை யாவரும் அறிந்ததே.

இத்தகைய போதினியா மிறைவனெனு மானந்தன்
கைத்தலத்தில் வந்துகின்று கல்வியெனு மமுதத்தை
இத்தநியி லூட்டிடவே என்னதவஞ் செய்தனரோ
எத்தருமஞ் செய்தனரோ இத்தரணி மாந்தர்களே.

இன்னதவ மென்றும் இத்தகைய வரமென்றும்
இன்னவனென் னாவாற் செப்பொணுமோ வானுஞ்
அன்னதொரு வானந்த வறிவுச் சுடர்கொளுத்தி
என்றென்றும் வாழியென ஏற்றிடத்தா னென்னுளமே.

P. பரிமளா பல்லவராயர்.

---

## நம் நாட்டு பூர்வீக கிரந்தங்கள்.

மிகவும் முக்கியமான ஒரு விஷயம் என்ற தலைப்பிட்டு, 28-12-18, சுதேசமித்திரனில் அடியில் வருமாறு பிரசுரித்திருக்கிறது:—

"நமக்கு ஜீவாதாரமாயுள்ள மற்றொரு விஷயமுளது. அவ்விஷயத்தைச் சமாதானக் கான்பரன்ஸில் பிரிட்டிஷ் கவர்ன்மென்டும் இந்தியா கவர்ன்மென்டும் வற்புறுத்திச் சொல்லவேண்டும். அது என்ன வென்றால், "நமது முன்னோர்களாகிய ரிஷிகள் நம் அறிவு வளர்ச்சிக்கேற்ற மிகவும் விசேஷமான கிரந்தங்களைக் கணக்கில்லாமல் எழுதிவைத்திருந்தனரென்று எல்லாருக்கும் தெரியும். முகம்மதியரின் ஆட்சிகாலத்திலே அந்தக் கிரந்தங்கள் அவ்வப்போது நம்மை விட்டுப் போய்விட்டன. அவை போக எஞ்சியுள்ள அருமையான கிரந்தங்களில் சிலவோ, முன்னம் இங்கு வந்து போன ஜெர்மன் பிரயாணிகளால் ஜெர்மனிக்குக் கொண்டுபோய் விடப்பட்டன. இப்பொழுது அவைகள் ஜெர்மனியிலிருக்கின்றன. ஜெர்மனியிடமிருந்து வாங்கப் போகும் யுத்த நஷ்ட ஈட்டின் ஒரு பகுதியாக அந்த அருமையான ஏட்டுச் சுவடி கிரந்தங்களையும் திரும்ப வாங்கிவிட வேண்டும். அக் கிரந்தங்களை வைத்திருப்பதற்கு உரித்துக்களாகிய நாமே உரியவர்களும் தகுதியுள்ளவர்களுமாவோம்" என்று, 27-12-1918 ல் டில்லியின்

நடந்த 'அகில இந்திய ஹிந்து கான்பரன்ஸில்' அக்கிராசனம் வகித்த ராஜா ஸர் ராமபாலஸிங் அவர்கள் சபையோர்க்கு அறிவித்து ஞாபக மூட்டியதற்கு அவர்களுக்கு நன்றி பாராட்ட இந்திய சகோதரர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கின்றோ மன்றோ?

இதை யொரு தீர்மானமாகக் கொண்டுவந்து அங்கீகரித்து பிரிட்டிஷ் கவர்ன்மென்டுக்கும், இந்தியா கவர்ன்மென்டுக்கும், சமாதானக் கான்பரன்ஸிற்குச் சென்றிருக்கும் நமது இந்தியப் பிரதிநிதி யவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுவார்கள்—தெரிவித்துக் கொண்டிருப்பார்கள் என்றும் எண்ணும் நாம், அவர்கள் நன்முயற்சி இனிது முடியுமாறு எல்லாம் வல்ல பரம்பொருளைத் துதிப்போமாக.

குறிப்பு:—மேற்கண்ட விஷயத்தால் நம் முன்னோர்களின் கல்வியாராய்ச்சியும் சாத்திரங்களும் எவ்வளவு அரியவை யென நாம் உணரலாகும். ஜெர்மெனி மட்டுமல்ல, இன்னும் பலதேசத்தாரால் நம் முன்னோர் நூல்கள் கொண்டுபோகப் பட்டன. இப்போதிருப்பதைப்போல் அக்காலத்தில் ஒரு நூலில் பல பிரதிகள் கிட்டா - ஒருவரிடமுள்ள ஒரு அரிய நூலை யின்னொருவன் விரும்பினால் நூலுடையோன் கேட்கும் பொருளைத் தந்து அவன் அனுமதி பெற்று, அந்த நூலைப்பார்த்து தானே ஒரு நகல் எடுத்துக் கொண்டு வரவேண்டும். ஓலையில் தெளிவாய் எழுதக் கூடியவர்கள் சிலரே யிருப்பார்கள். பெரும்பாலும் அத்தகைய ஒருவனுக்குக் கூலி கொடுத்தே எழுதிக்கொள்ளவேண்டும். மேல் கண்டவாறு யாத்திரைக்காரர் கொண்டு போனவை போக, நம் நாட்டின்மேல் படையெடுத்து வந்த அன்னிய நாட்டரசர்களில் மதத் துவேஷமுள்ளவர்கள் அநேகம் அரியநூல்களைத் தீக்கிரையாக்கினார்கள். கொஞ்சம் அறிவுள்ளவர்கள் அகப்பட்டவற்றைக் கொண்டுபோய்விட்டார்கள்.

நமது முன்னோர்களோ அப்போது தங்கள் சொத்தையும் உயிரையும் கொடுத்தேனும் நூல்களைக் காப்பாற்றத் தங்களாலானவரை பாடுபட்டார்கள். சோமநாதபுரம் கோவில் 12-ம் முறை ஒரு மகம்மதிய அரசனால் கொள்ளையடிக்கப்பட்டபோது, கோயிலின் கீழுள்ள நிலவறைகளில் அநேகம் அருமையான நூல்களிருந்தன. நம்முன்னோர்கள் "கோயிலிலுள்ள எல்லாத் திரவியத்தையும் எடுத்துக்கொண்டு போ - இந்த ஓலைச் சுவடிகளை மட்டும் விட்டுவிடு" என்று வேண்டிக் கொண்டும் அம் மூட அரசன் கேளாது யாவற்றையும் தீக்கிரையாக்கினன். (தேசசரித்திரம்.)

நேயர்காள்! இன்னும் எஞ்சியுள்ள நூல்களில் எவ்வளவோ வெளிவராமலும், பொருளுரைக்கப் படாமலு மிருக்கின்றன. இத்தகைய அரிய பொக்கிஷங்களை நாம் அனுபவித்துப் பயனடைய முயல்வதற்கு மாறாக, நம் தாய்ப்பாஷையையே யலட்சியம் செய்யத் தொடங்குவது எத்தகைய மதியீனமான செய்கையாகும்? கடவுள் நம் மனதைத் திருத்தி நம் வீண்பிரமைகளை நீக்கி நம் தாய்ப்பாஷையிலும் முன்னோர் நூல்களிலும் சிரத்தாபக்தியை நமக்குண்டாக்குமாறு, அக் கருணாநிதியை மனதாரப்பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்!

---



## கண்ணப்ப நாயனார்.

பொத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவியின் பெயர் தத்தை. அவ் விருவர்களுக்கும் நெடுங்காலம் புத்திர பாக்கிய மில்லாதிருந்தது. கடைசியாக கடவுளின் திருவருளினாலே தத்தை யானவள் கருப்பவதியாகி ஒரு புத்திரனைப் பெற்றாள். அப் பிள்ளையை நாகன் தன் கையிலே எடுத்த பொழுது திண்ணென்னவாயிருந்த படியால், அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டான். அத்திண்ணன் வளர்ந்து, உரிய பருவத்திலே வில் வித்தை கற்று மகா சமர்த்தராயினர். நாகன் வயோதிகனானபடியால் வேட்டை முயற்சியிலே இளைத்தவனாகி, தன் அதிகாரத்தைத் திண்ணனுக்கு அளித்தான். ஒருநாள் திண்ணனார் வேடர்களோடு வனத்திலே சென்று வேட்டையாடும் பொழுது ஒரு பன்றியானது வேடர்களினால் கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து மிகுந்த விசையுடன் ஓடியது. அதைக் கண்ட திண்ணனார் அதைக் கொல்ல நினைத்து அதைத் தொடர்ந்து விரைந்து பின் சென்றார். நாணன் காடனென்ற இரண்டு வேடர்களும் அவரைப் பின்பற்றினார்கள். அந்தப் பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒரு மரத்தின் நிழலிலே நின்றது. அதைக் கண்டு திண்ணனார் உடைவாளை யுருவி அதைக் கொன்றார். பின்பு பன்றியை நெருப்பிலே காய்ச்சித்தின்ன எண்ணி மலைப்பக்கத்திலுள்ள பொன்மூகலியாற்றிற்குப் போனார்கள். அதைநோக்கி நடந்து, அரைக்காதவழி தூரத்திற்கு அப்பால் இருக்கிற திருக்காளத்தி மலையைக் கண்டு, அங்குள்ள குடுமித் தேவரைத் தரிசிக்க எண்ணங் கொண்டார்கள். ஆற்றைக் கடந்து அதன் கரையிலுள்ள மர நிழலிலே கொண்டுவந்த பன்றியை நெருப்பில் காய்ச்சச் சொல்லிவிட்டுத் திண்ணனார் நாணனோடு அளவில்லாத பேராசையுடன் மலையின்மேலேறிச் சிவலிங்கப் பெருமானைக் கண்டார். கண்டமாத்திரத்தில் பரமசிவத்தின் திருவருட் பார்வையைப் பெற்று முன்னுள்ள குணங்கள் மாறி, சிவபெருமானிடத்தில் வைத்த அன்புருவமானார். உடனே ஓடிச் சென்று அக்கடவுளைத் தழுவி மோந்து முத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்று இரண்டு கண்களிலும் கண்ணீர் சொரிய ஆனந்தபரவசரானார். "துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கிற காட்டிலே நீர் துணையின்றி தனியேயிருப்பது யாது" என்று சொல்லி துக்கித்துப் பின் ஒருவாறு தெளிந்து, "இவருடைய முடியிலே நீரைவார்த்து பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ" என்றார். "ஐயோ இவருக்கு அமுது செய்ய இறைச்சி கொடுக்க ஒருவரும் இல்லையே, இறைச்சி கொண்டுவரும் பொருட்டு இவரைப் பிரியவோ மனமில்லையே, இதற்கு யாது செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு சிறிது தூரம்போவார். திரும்பிவருவார். சிவலிங்கத்தைக் கட்டி அணைத்துக்கொள்வார். மீளப்போவார். சிறிது தூரம்போய் அத்தியந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப்பார்த்து நிற்பார். "நீர் தனியே யாதொரு துணையுமின்றி இங்கே இருக்கிறபடியால் யான் உம்மை பிரியமாட்டேன். உமக்கு பசி மிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன். ஐயையோ! நான் யாது செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் இடைவிடாது பொழிய நிற்பார். பின்பு போய் வரத் துணிந்து, கையாலே கும்பிட்டு, மலையினின்றும் இறங்கி, ஆற்றைக் கடந்து அங்குள்ள சோலையிலே புகுந்தார். அங்குள்ள பன்றியை நெருப்பிலே வதக்கி, அத

னுடைய இனிய தசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்து, அம்பிலே கோர்த்து நெருப்பிலே காய்ச்சி, பதமாக வெந்தவுடன் சுவை பார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டு மெல்ல அதுக்கிப் பார்த்து, மிக இனியனவாகியவைகளை யெல்லாம் தேக்கிலையில் வைத்துக் கொண்டு, திருமஞ்சன மாட்டும் பொருட்டு ஆற்று நீரை வாயினால் முகந்து, பூக்களைக் கொய்து தலைமயிரிலே சொருகிக் கொண்டு, சுவாமியை நினைந்து பதைபதைத்து ஏங்கி, மனோகதியும் பின்னிட ஓடிப்போய் கடவுளை அடைந்தார்.

அடைந்து, அவருடைய திருமுடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயிலுள்ள திருமஞ்சன நீரை திருமுடியின்மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையிலுள்ள பூக்களை எடுத்து திருமுடியின் மேலே சாத்தி, தேக்கிலையிலுள்ள மாமிசத்தைத் திருமுன்னே வைத்து "சுவாமி கொழுமையான இறைச்சிகளை நெருப்பிலே பக்குவப்படுத்தி சுவை பார்த்துப் படைத்தேன். எம்பெருமானே இதை அமுது செய்தருளும்" என்று சொல்லி உண்பித்தார். பின்பு அக்கடவுளின் அருகில் தானே நின்று, துஷ்ட மிருகங்களால் அப்பெருமானுக்கு யாதொரு துன்பமும் உண்டாகாதவாறு அன்று இரவெல்லாம் கண்விழித்தபடியே பாதுகாத்திருந்து, பொழுது விடிந்தபிறகு அக் கடவுட் பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொணரும் பொருட்டு மலைச்சாரலுக்குப் போனார். இது நிற்க: சகலகுணங்களிலும் தேர்ந்தவரும், திருக்காளத்தியப்பரை சைவாகம விதிப்படி நாள்தோறும் பூசிப்பவருமான சிவகோசரியார் காலையில் எழுந்திருந்து ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு, சுவாமியை வழக்கம்போல் பூசை செய்ய நினைத்து, பூசாத் திரவியங்களோடு சந்நிதானத்தை அடைந்து, அங்கு கிடக்கும் எலும்பையும் இறைச்சித் துண்டையும் கண்டு, யாரோ துஷ்ட வேடன் அவ்வாறு செய்ததாக எண்ணி மிகவும் மனம் நொந்து வருந்தினர்; பின்பு மனச் சங்கடத்தோடு அதை சுத்தி செய்து சம்புரோக்ஷணமுஞ் செய்து முறை தவறாமல் பூசையை முடித்து தபோவனத்தை அடைந்தார்.

வேட்டைக்கு சென்ற திண்ணனார் மிருகங்களைக் கொன்று, அவற்றின் இறைச்சியை முன்போல பக்குவப்படுத்தி, அதனோடு கொம்புத்தேனைப் பிழிந்து கலந்து தேக்கிலையில் வைத்து, முன்போல பூசை திரவியத்தோடு மலைமேல் ஏறி மெய்யன்போடு அப்பெருமானைப் பூசித்து இரவெல்லாம் பாதுகாவலாக கண் விழித்திருந்தார். இதை நாணனால் கேள்விப்பட்ட நாகன் திண்ணனாரைத் தனது வழியில் திருப்ப முயன்றும் முடியாதது கண்டு, சிந்தை நொந்து தனது ஊருக்குத் திரும்பிவிட்டான். சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவரை நாள்தோறும் பூசித்துப் பாதுகாத்து, காலையில் பூசைக்குரிய பொருள்களைத் தேடிவெளியிற் செல்வதும், அவ்வேளையிற் சிவகோசரியார் வந்து இறைச்சி சிந்தியிருத்தலைக்கண்டு துக்கித்து அவ்வாறு செய்தவனைப்பழித்து, சுத்திசெய்து ஆகமவிதிப்படி அருச்சித்து "இந்த அநீதம் நிகழாதபடி அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தார். இந்தப்படியே நாலைந்துநாட்கள் கழிந்தன. திருக்காளத்தியப்பர் சிவகோசரியாரின் மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு ஒரு நாள் இரவில் அவர் சொப்பனத்திலேதோன்றி, "அன்பனே என் சந்நிதானத்தில் இறைச்சி சிந்துபவனை வேடனென்று நினையாதே. அவன்



அன்பே உருவமானவன்; அவன் அன்பின் செயலை நாளை உமக்கு விளக்குவிப்போம், நீ நாளைக்கு நமக்குப் பின்பக்கத்தில் ஒளிந்திருந்துபார்" என்று கூறி மறைந்தருளினர். சிவகோசரியார் கண்விழித்து எழுந்து அச்சமும் ஆச்சரியமும் கொண்டு, காலையில் சென்று பொன்முகலி யாற்றில் ஸ்நானம் பண்ணி மலைமேல் ஏறி முன்போல சுவாமியை அருச்சித்து, அவருக்குப் பின்பக்கத்தில் ஒளிந்திருந்தார்.

வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார், பூசைப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு திரும்பும்போது சில அபசகுனங்கள் தோன்றக் கண்டு "இந்த சகுனங்களெல்லாம் உதிரங் காட்டுகின்றன. ஆ கெட்டேன் என் கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன ஆபத்து சம்பவித்ததோ அறியேனே" என்று மனங்கலங்கி விரைந்து ஓடிவரலானார். அடியார்களுடைய பக்தி வலையில் அகப்படுகிற பரமசிவன் திண்ணனாருடைய அன்புமுழுதும் சிவகோசரியாருக்கு காட்டுவிக்கும் பொருட்டு திருவுளங்கொண்டு தம்முடைய வலக்கண்ணினின்று இரத்தம் சொரியப் பண்ணினார். வரும்போதே அதனைக் கண்ட திண்ணனார் வாயிலுள்ள திருமஞ்சனம் சிந்த, கையிலுள்ள இறைச்சி சிதற, அம்பும் வில்லும் விழ, உள்ளம் பதைபதைத்து நிலத்திலே வீழ்ந்தார். பின்பு எழுந்துபோய் இரத்தத்தைப் பலமுறை கையினாலே துடைக்க அது ஒன்றும் பயன்படாதது கண்டு, ஒன்றும் தோன்றாதவராகி பெருமூச்சுவிட்டு திரும்பிப்போய் விழுந்தார். பின்பு ஒருவாறு தெளிந்து அம்புவில்லுடன் சுவாமிக்கு தீங்கு செய்தவரைத் தேடித்திரிந்தார்.

ஒன்றையுங் காணாதவராகி, திரும்பிவந்து குறைவில்லாத துன்பத்தினாலே சுவாமியைக் கட்டிக்கொண்டு கண்ணீர்சொரிய அழுதார். பச்சிலை மருந்துகளால் ஆற்றலாமென்று எண்ணி வனங்களெங்குந் திரிந்து, பலவகையான பச்சிலைகளைப் பிடுங்கிக்கொண்டு விரைந்துவந்து அம்மருந்துகளைப்பிழிந்து அவர் கண்ணிலே வார்த்தார். அதனால் அக்கண்ணிலிரத்தம் தடைபடாமையைக்கண்டு, ஆவிசோர்ந்து "இனி நானிதற்கு என்ன செய்வேன்" என்று ஆலோசித்துக்கொண்டு நின்றார். "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி ஞாபகத்திற்கு வர, மனமகிழ்ச்சியோடு திருமுன்னே இருந்து அம்பை எடுத்துத் தம்முடைய ஒரு கண்ணைத் தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினார். அப்பின மாத்திரத்தில் இரத்தம் தடைபட்டதைக் கண்டார். உடனே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்து குதித்துப் பாய்ந்தார். கைகளைக் கொட்டி ஆரவாரித்தார் கூத்தாடினார். இப்படி சந்தோஷ சாகரத்திலே உலாவும்பொழுது திண்ணனாருடைய பேரன்பை சிவகோசரியாருக்குப் பின்னுங் காட்டப் பிரமசிவம் திருவுளங்கொண்டு தம்முடைய மற்றையிடக் கண்ணிலும் இரத்தம்சொரியப் பண்ணினார். அதுகண்ட திண்ணனார் உடனே தமது பேருவகை மாறி பெருந்துன்பமடைந்து பின்னர் ஒருவாறு தெளிந்து "இதற்கு அஞ்சேன், மருந்து கைக்கொண்டிருக்கிறேன்" என்று துணிந்து தமது மற்றைக்கண்ணையும் தோண்டி அப்புமாறு உறுதிகொண்டு, கடவுளின் கண் இருக்குமிடம் தெரிதற்காக தமது செருப்புக் காலைக் கடவுளின் இடக்கண்ணருகே ஊன்றவைத்துக்கொண்டு, பரமசந்தோஷத்தோடு தம்முடைய கண்ணை தோண்டும்படி அம்பைவைத்தார். அப்போது தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றாதவராகி "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப" என்று அருளிச்செய்து அவருடைய கண்ணைத் தோண்

டும் கையைத் தமது திருக் கையால் பிடித்துக்கொண்டார். உடனே இரத்தம் தானே நின்றுவிட்டது. வானவரெல்லாம் ஆச்சரியமடைந்து பூமாரி பொழிந்தனர். மகாஞானியாகிய சிவகோசரியார் இந்த சமாசாரம் முழுவதையுங் கண்டு அத்தியந்த ஆச்சரியமடைந்து, சுவாமியை வணங்கினார். அன்றைநாள் முதலாக திண்ணனார் தமது கண்ணை அப்பியது காரணமாகக் கடவுளின் கட்டளையால் கண்ணப்பர் என்னும் பெயரையே பெரியோர்கள் வழங்குகின்றார்கள்.

நெடுங்காலமாக உஷ்ணமாகிய அக்கினிமத்தியில் நின்று ஐம்புலன் வழியே செல்லாதபடி மனதை ஒடுக்கி அருந்தவஞ் செய்கின்றவர்களுக்கும் கிட்டாத பரம்பொருளாகிய கடவுள், ஆறுநாளுக்குள்ளே பெருகிய அன்பு மேலிட்டினாலே திண்ணனாருடைய கையைத் தமது திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு "நிஷ்களங்கபக்தியை யுடைய கண்ணப்பா, நீ நமக்கு வலப்பக்கத்திலே நில்" என்று திருவருள் புரிந்தார். இதைப்பார்க்கிலும் மனிதன் பெறவேண்டிய பெறும் பேறுயாது ?

* இஃது பெரிய புராணத்திலிருந்து உண்மையான பக்தியை உதாரண மூலியமாக உணர்விக்கும் பொருட்டு எடுத்தெழுதியது,

P. S. குமாரவடிவேல்,
தென்கரை, பெரியகுளம்.

---

## ஸன்மார்க்க விதிகள்.

சகோதர சகோதரிகளே, நாம் உலகில் சுகஜீவியாயும் சந்தோஷத்துடனும், சகல சம்பத்துடன் வாழ்வதற்கு முதன்மையானது :—

1. தெய்வபக்தி.—தெய்வபக்தி இல்லாதவர்களுக்கு யாதொரு காரியமும் கை கூடாது, முதல் கோணினால் முற்றும் கோணும் என்றபடி நமக்கு தெய்வபக்தி அத்யாவஸ்யம்.

2. பொய்.—நாம் பொய் சொல்லாமல் இருப்பதே தெய்வத்துக்குப் பிரீதியான காரியம், தவிர்த்து, சொன்னால் என்ன ? என்று சொன்னோமானால் நம் மீதில் கடவுளுக்கு வெறுப்பு உண்டாகிறது. அம்மாதிரி கடவுளுக்கு நம்மீது வெறுப்புண்டாயின், நமக்கு எவ்வளவு துன்பங்கள் உண்டாகும் என்பதைச் சிந்தியுங்கள்.

3. களவு.—பிறர் பொருளின் மீது ஆசைவைத்து அபகரிக்கும்படிக்கு மனத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அதுவே திருட்டுத் தனமாகும், ஆகையால் திருடக் கூடாது.

4. பொறாமை.—நம்மைக் காட்டிலும் மேலான தன்மையிலிருக்கிறவர்களைக் கண்டு நாம் பொறாமை படக்கூடாது. நமக்கு உள்ளதைக் கண்டு நாம் திருப்தி அடைய வேண்டுமே ஒழிய நமக்கு மேல் பதவியில் உள்ளவர்களைக் கண்டு வருத்தப்படும் மனமே பொறாமை குணம் என்று சொல்லப்படும். நம்மைக் காட்டிலும் கீழான நிலையிலுள்ளவர்களைக்கண்டு நமக்கு இம்மட்டில் கடவுள் அளித்த பாக்கியத்துக்குச் சந்தோஷிக்க வேண்டும்.

5. பூததயை.——இரக்கம், சகல ஜீவர்களிடத்தில் கருணை.



6. ஈகை.—என் சாணுடம்பை ஒரு சாணாக்கிக் கொண்டு நம்மிடம் வந்து யாசிப்பவர்க்கு நாம்கொடுத்து உதவும் படியான உத்தமமான குணத்தை நாம் தேடிக் கொள்ளவேண்டும் அதுவே மேலான குணம், ஆகையால் இரப்போர்க்கு ஈதலை மறக்கலாகாது.

7. "தந்தை தாய்ப்பேண்" என்ற ஔவை வாக்குப்படி பெற்றோர்களாகிய பிதா மாதாக்களை அவர்கள் வாழ்நாளிலும் வயது முதிர்ந்த பிறகும் மிக்க அன்புடன் பாதுகாப்பது மக்களின் கடைமை. ஒரு விதத்திலும் அவர்கள் மனம் நோகாதிருக்கும்படி நாம் நடந்து கொள்ளவேண்டும். அதுவே நம் க்ஷேமத்திற்கும் காரணம்.

8. அடக்கம்.—அதாவது மரியாதை என்பது அவஸ்யம்:— நடத்தல், உட்காருதல், குனிதல், நிமிரல், பார்த்தல், பேசல் முதலானவைகளில் பதட்டம் கூடாது. நிதானத்துடன் அமரிக்கையாயும், கீழ்ப்படிந்து நடந்து கொள்ளவேண்டும். (அடக்கம் ஆயிரம் பொன் தரும்)

9. கொல்லாமை.—ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவஜந்துக்களைக் கொலை செய்வதும், புசிப்பதும் மஹா பாவம். கொலை செய்யும் தொழில் நரகத்திற்கு ஆளாக்கும் ஆகையால் ஜீவஹிம்சை செய்யக் கூடாது.

10. பிறரை இகழாமை.—பூர்வ ஜன்மத்தில் செய்த கர்ம வசத்தினால் சிலர், கூன், குருடு, செவிடு, முதலானவர்களாய் பிறப்பதும் நன்றாய்ப் பிறந்து அங்கஹீனங்கள் ஏற்படுவதும் இயல்பு. அப்பேர்க் கொத்தவர்களை நன்றாயிருப்பவர்கள் பார்த்து பரிஹாசம் செய்வது மஹாபாபம். அவர்களைப் பார்த்த மட்டில், ஐயோ! பாபம் என்று இரங்கின மனமுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

11. கோள் சொல்லாமை.—எப்பொழுதும் ஒருவரிடம் உள்ள விஷயத்தைக் கிரஹித்து, ஒன்றுக்குப் பத்தாய் எதிரிகளிடம் சொல்லி மூட்டி வைப்பதே கோள் சொல்வதாகும். எது சொல்லலாமோ அதைச் சொல்லலாம், சொல்லத் தகாதவைகளைச் சொல்லி ஒருவருக் கொருவர் பெரிய மனஸ்தாபமடையதற்கு இடம் உண்டாக்கிவிட்டு வேடிக்கைப் பார்ப்பவனே கோள் சொல்லும் மனிதனாவான். அம்மாதிரி வேடிக்கை பார்ப்பவனுக்கு, கெடுதலுண்டாகும் ; கெடுவான் கேடு நினைப்பான்.

குற்றங்களை மன்னித்து குணங்களை கிரஹித்தும் யாவரும் பயனடைய வேணுமாயும், அளவிலடங்காத ஆனந்தத்தை உண்டு பண்ணிக்கொண்டு வருகிறதும், உலகத்துக்கே ஓர் ஆபரணம்போல் விளங்குவதுமாகிய நம் ஆனந்தன் நீடூழிகாலம் நடந்துவர நாம் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

T. N. கிருஷ்ணையர், டீசர்,
போர்டு எலிமெண்டரி பாடசாலை, நாகைய நல்லூர்,
முசிறி சேர்க்க.

## பழமொழிகள்.

(282-ம் பக்கத் தொடர்ச்சி.)

171 கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்லர்.
கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொடு, பாத்திரம் அறிந்து பிச்சையிடு.
கோபமுள்ள இடத்தில் குணம் உண்டு.
சாக்ஷிக்காரன் காலில் வீழ்வதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.
சாண் செடியில் முழத்தடி வெட்டலாமா?
சிங்கத்தின் காட்டைச் சிறுநரி வளைத்தாற்போல்.
சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரைபோல்.

இயற்கையாய் மலர்ந்த தாமரைமலர் காலக்கொடுமையால் தன் உருவமும் அழகும் இழக்கப்பெறும். ஆனால் சித்திரத்தில் தீட்டிய மலரோ என்றும் தன் பொலிவு குன்றப்பெறாது இலங்கும். ஒரு வஸ்துவுக்கு இயற்கையில் உண்டாகக்கூடிய அழிவைச் செயற்கை உபாயமாகிய சித்திரத்தொழிலால் வாராமல் தடுக்கலாம் என்று இது காட்டுகின்றது.

சித்திரத்துக் கொக்கே ரத்தினத்தைக் கக்காய்.
சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
180 சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து.

(சிலையில் எழுத்து — கல்லிற்பதித்த எழுத்து) இளமையிற் கற்ற கல்வி நீடித்திருக்கும் என்பது பொருள்.

சீரங்கத்தில் உலக்கை கொடுத்ததுபோல்.
சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம்.
சுவர்க்கும் காது உண்டு.
சுவர் இருந்தல்லோ சித்திரம் எழுதவேண்டும்.
சூரியனைக் கண்ட பனிபோல்.
செத்தவன் கண் செந்தாமரைக் கண்.

எவ்வளவு துஷ்டனானாலும் செத்தவனை நல்லவன் என்று புகழ்வது உலகத்தார் சுபாவம்.

செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.

செழுங்கிளை—பந்துஜனங்கள்.

செவிடன் காதில் சங்கூதினது போல்.
சேற்றில் நாட்டிய கம்பம் போல.
190 ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.

பிரம தியானத்தில் ஆழ்ந்த ஞானியை இவ்வுலக சம்பந்தமான சுகதுக்கங்கள் பீடியா என்றவாறு.

தரித்திரப் பட்டாலும் தைரியம் விடாதே.
தலை இருக்க வால் ஆடுமா?
தலை இடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
தலைச்சன் பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக்காரிக்கு மருத்துவம் சொன்னாற்போல்.
தலைக்குமேல் வெள்ளம் சாண் ஓடி என்ன, முழம் ஓடி என்ன?
தன்னுயிரைப் போல் மன்னுயிரைக் காக்க.

அரசன் தன் பிரஜைகளைத் தன்னுயிராய்ப் பாவித்து அன்புடன் ஆளவேண்டும் என்றபடி.



தன் குற்றம் தனக்குத் தெரியாது.
தன் வினை தன்னைச் சுடும்.
தன்னைக் கொல்லவந்த தாயையும் கொல்லலாம்.
200. தாமரை இலையில் தண்ணீர்த் துளிபோல்.

(i.) தாமரை இலையில் உள்ள நிர்மலமான நீர்த்துளி, அதில் பட்டும் படாததுமாய் உருண்டை வடிவாகி நின்று மரகதத் தட்டில் முத்திட்டதை ஒத்தொளிரும். (தொடரும்.)

---

## கணவனும் மனைவியும்.

அரவநெடுங்கடலாடை யவனியிற்றோன்றிய ஆடவர் பெண்டிர் என்னும் இருபாலருள் எவ்வகுப்பினரையேனும் முற்றும் நல்லவர்களென்றேனும், கொடியரென்றேனும் கூறுதல் கூடாது. நல்லார் பொல்லார் எல்லாரிலு முண்டு. உண்மை யிவ்வணமாக, பேதைப் பெண்டிரே பெரிதுங் கொடியரெனப் பேசுகின்றனர் பல்லோர். அவர்கள் அவ்வாறிருப்பதற்கும் எந்த காரணங்களில்லாமலில்லை. ஒழுக்கத்திற்கு அறிவே காரணம். இயற்கையாக அவ்வறிவு யாவர்க்கு முளதேனும், மாசுபடிந்த மாணிக்கம்போல் மங்கிக் கிடக்கு மவ்வறிவு கல்வி யென்னும் சாணைக்கல்லில் தேய்க்கப் பட்டாலன்றி பிரகாசியாது. அக்கல்வி யறிவைப் பெண்கள் பெற்றனரோ வெனின் இல்லை யென்பதே விடையாம். பெண்கல்வி யத்தியாவசியகமெனப் பல்லாரும், பத்திரிகைகளும் பேரிரைச்சலிடுகின்றன வேனும், அஃது பலவேறிடங்களிலும் பரவியுள்ளதெனப் பகரலாமேனும், உபயோகமற்ற குழந்தைக் கல்வியளவாகவே யுள்ளதாதலின் இல்லை யென்பதிழுக்காகாது. கணவனிடத்தில் தாயைப்போலவும், பாரியாளைப் போலவும், மந்திரியைப் போலவும், வைத்தியனைப் போலவும் நடந்து கொள்ள வேண்டியவளுக்கு இத்தகையகல்வியோ உதவுவது? தம் பெண்களுக்கு இத்தன்மைய கல்விதான் வேண்டும் எனத் தாய் தந்தையரும், தம் மனைவி இத்தகைய கல்வி கற்றவளா யிருத்தல்வேண்டும் எனக் கணவரும் முயன்று அத்தகைய கல்வி மாதருக்கிடையில் பரவச் செய்யாதவரையில் இக்குறை நம்மினின்று நீங்குவதில்லை. தவிர,

பெண்கள் பதினைந்து, பதினாறு பிராயத்தளவிலே விவாகம் செய்விக்கப் பட்டவர்களாய்க் குழந்தைப் பருவ முதல் பிரியாதிருந்த பெற்றோரை விட்டு, முன்பின்னறியாத மாமிவீட்டை யடைகின்றனர். அவர்கள் நிர்வகிக்க வேண்டிய வேலைகளைக் கவனிக்கு மிடத்துப் போதிய யுக்தவயதாகவுமிருக்கவில்லை. கிணற்றுத் தவளைகளைப் போல வீட்டுக் குள்ளேயே அடைந்து கிடந்தவர்களாதலின் உலகானுபவமுமின்று. முதிர்ந்தவயதும், நிரம்பியகல்வியும், மிகுந்த உலகானுபவமும் நிறைந்த ஆடவரே அளவிலாக் குற்றங்களியற்றுகின்றனரென்றால், அவற்றிற்கு முற்றும் எதிரிடையான பேதை மாதரைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ. விவாக காலத்தில் தம்பதிகள் பல்லோர் குழுமியுள்ள கூட்டத்திடை நின்று அக்கினி முதலிய கடவுளாதிய "ஒருவரைவிட்டொருவர் பிரியாது 'இன்பிலும் துன்பிலும், வாழ்விலும் தாழ்விலும் மலரும் மணமும்போலும், நகமும் சதையும் போலும், நாமகளும் பொருளும் போலும் ஒருமித்து வாழக்கடவோம்'" எனச் சத்தியம் செய்து

சொன்றுகின்றனர். இவ்விஷயம் நம் மித்துக்களுள் அறிந்தோர் சிலர்; அறியாதார் பலர். காரணம் பிரஸ்தாபவிஷயங்களை மந்திரரூபமாயுள்ள பைபைக்குத பாஷையில் பௌரோகிதாலேயே கூறப்படுதலேயாம். இந்த தம்பதிகளின் ஸ்வய பாஷையில் அவர்களையே கூறும்படிச் செய்யின் எத்தனையோ நன்மைக் கிடமுண்டாகும் எனக்கருதற்கிடமாகின்றது. தேசாபிமானிகளும் கல்வி யாளருமாகிய பெரியோர் கவனிக்க வேண்டிய அம்சங்களி லிதுவுமொன்று.

ஸ்ரீமான் ஆதனி, குப்புசாமிமுதலியாரவர்கள் நமது ஆனந்தபோதினியில் 'மாமியும் மருகியும்' என்னும் வியாஸத்தில் மாமிமார் மருகியரைப் படுத்தும் பாடுகளைச் செவ்வனே விளக்கியுள்ளார்.

மனைவி எல்லா விஷயங்களிலும் புருடனுக்கு கீழ்ப்படிய வேண்டியவளென்பது யாவராலும் ஒத்துக்கொள்ளப் படவேண்டியது. கணவன் மனைவிக்குக் கடவுளைப் போன்றவன். தாய் தந்தையரை விட்டுப் பிரிந்து தன்னையே பற்றுக் கோடாகக் கொண்டுள்ள மனைவிமாட்டு நடந்துகொள்ளு மாறெங்ஙன்? கேவலம் சிற்றின்ப நுகர்ச்சி யொன்றினையே கொண்டு, ஆரம்பத்தில் அவளது வார்த்தைகளுக் கெல்லா மிடங்கொடுத்துக்கொண்டே போவது வம்பாக முடியும். தனிமையில் அவள் நடந்து கொள்ள வேண்டிய விதிக ளின்னின்னவை யென்றும், அவ்வாறு ஒழுகிய உத்தமிகளின் சரிதைகளையும் கூறி அவளைத் திருப்பவேண்டும். அவளிடம் தோற்றும் சிறிய சிறிய குற்றங்களையும், அப்போதைக்கப்போது எடுத்துக் காட்டல் வேண்டும். நல்ல உத்தமிகளின் சரிதைகளையும் தெய்வபக்தியைப் புகட்டும் நூல்களையும் வாசிக்கச் செய்வதால் மிருகசுபாவத்தையும் மாற்றிவிடக் கூடும். இன் சொல்லா லாகாததேது? எத்தனைக் காதலிருப்பினும் புறத்தே காட்டாதடக்கி,

நேசனைக் காணுவிடத்து நெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெப்பொழுது மப்படியே - வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர் தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில் ... ... ... என்னும்

ஆன்றோர்வாக்கின்படி ஒழுகவேண்டும். அவ்வாறன்றி நியசாரியங்களை அவள் மனங்கோணுதிருக்க வேண்டுமெனை மினைத்துக் கண்டியாது விடில் தென்றல் முற்றிப் பெருங் காற்றுவதுபோல் விபரீதமாகி அவனையுங் கெடுத்து தானும் துன்பமடைந்து இம்மைப் பயனையிழத்தலே பயனாகும். மனைவியை மிருகத்தன்மையாக அடிப்பதாலும் உதைப்பதாலுமே திருத்தி விடான்.

அனேக குடும்பங்களில் ஆடவர் மனைவியரை மிக்க கொடுமையாக நடத்துகின்றனர். மனைவி தம் சரீரத்தின் சாயலைப் போன்றவளாதலின் குற்றங் குறைகள் சிறிது நிகழினும் பொறுத்துக் கொள்வதே கடமையாகும். வேலியே பயிரை மேய்ந்தால் பயிரைக் காப்போர் யார்? தன் தாயார் முதலானவர்கள் மனைவி விஷயத்தில் கொடுமையாய் நடந்து கொள்வதா யறிந்தால், அதைக் கணவன் தடுப்பது குற்றமாகாது. எத்தனையோ குடும்பங்களில் கணவனும் மனைவியும் ஒத்துவாழாது பிரிந்து வருந்துவதைக் கண் கூடாகக் காணலாம். பேதைப் பெண்களை இவ்வாறு அலைக்கழிப்பதால் யாது பயன்?

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்து
காக்கிலென் காவாக்கா லென்



(தன் கோபம் எங்கு பலிக்குமோ அங்குத்தான் அதை வெளியாகாதபடி தடுப்பதே பொறுமையாகும். அது பலிக்காத விடத்தில் கோபத்தை யடக்கிக் கொள்வதாலும் காட்டுவதாலும் என்ன பயன்?)

ஆசையால் யாவரும் அன்புள்ளவராய்ச் சிறிது குற்ற மிழைப்பினும் கடிந்து இன் சொற்களா லறிவுறுத்தித் திருத்தி ஆடையாதிகளளித்துக் களிப்போடு வாழ்தலே நலம். சிறக,

நாம் பிறரிடம் நடந்து கொள்ள நினைக்கிறபடி பிறர் நம்மிடம் நடந்து கொண்டால் நமக்கெவ்வாறிருக்கும் என்றுயோசித்து, நமக்குப் பொருந்துவதாயின் செய்க. உன்னைப்போல் பிறனையும் நேசி, என்பது ஆன்றோர் கட்டளையாயிருக்கிறது. இவ்வாறாக, தன் மனைவி அன்னிய புருடனைப் பார்த்தலையும் சகியாத ஒருவன் தான் மாத்திரம் தன்னிச்சைப் படி பரஸ்திரீகளைக் கூடியிருப்பதாமோ? நமக்குண்டாகும் கோபத்தைப் போலன்றோ அவர்கட்குமுண்டாகும். தன்தேகத்தை அவளுக்குச் சமர்ப்பித்துவிட்ட பின்பு வேறொருவரிடம்தர வேறு உடலேது.

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர் மனைக்கே பீடழிந்து நிற்பர் ... ... ... ... என்றபடி

ஸ்திரீகள் மட்டும் கற்புக் கெடாமல் பர புருடனைப் பார்த்தலுமாகாது; புருடர் கண்ட கண்ட பெண்களோடு கலந்திருக்கலாம் என்பது வேதக் கட்டளையோ?

எம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர் பொருள்
தார மென் றிவற்றை
நம்பினார் இறந்தால் நமன் தமர்பற்றி எற்றிவைத்
தெரியெழு கின்ற
செம்பினாலியன்ற பாவையைப் பாவி தழுவென
மொழிவதற் கஞ்சி.

*   *   *   *   *
*   *   *   *   ஆயவார்.

தம்மில் வாழ்பவரை நோக்கினன் தடங்கண் மினை

அம்மவோ வென இருப்புமுளை கொண்டறைதியால்,
எனக் கூறியிருப்ப தெதற்கு?

விவாகத்திற்கு முன் ஓர் பரத்தையோடிருந்த ஒருவன், மனைவியைக் கொண்டபின் அப்பரத்தை யழைக்க என் சரீரம் ஒருத்திக்கு சொந்தமாக்கப்பட்டதால் உன்னுடையதாக்க வேறு சரீர மென்பாலில்லை யெனக் கூறியதாக ஓர் கதை கூறப்படுகின்றது. ஆதலின் கண்பர்களே தம் மனைவியரிடம் அநுபவிக்கும் இன்பத்தை விட வேறொருசுகம் அன்னியரிடமில்லை. மேற் கூறப்பட்டுள்ள செய்யுட்களால் பரஸ்திரீ கமனம் செய்வோர்க்கு எத்தகைய தண்டம் விதிக்கப் படுகின்றது என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். மனைவியர்க்குத் துரோகஞ் செய்யாதேயுங்கள்.

குறிப்பு:— இது அவ்வழியி லொழுகுவோர்க் கென்று கூறப்பட்டது. மற்றையோர்க் கன்று.

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப் பண்டிதர், ராணிப்பேட்டை.

குறிப்பு:—நமது நண்பர் அன்போடெழுதிய இந்த வியாசத்தில் மூன்று முக்கியமான விஷயங்கள் அடங்கியுள்ளனவெனக் கூறலாம். இவற்றைப்பற்றி, சுருக்கமாய் இரண்டொரு மொழிகள் கூறுவது அநாவசியமாகாது எனக் கருதுகிறோம். அவ்விஷயங்கள் (1) பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டியது? (2) மாதர் கற்புடையோரா யிருக்க வேண்டும் என்ற விதி ஆடவர்க்கு மட்டுமில்லையா? (3) கலியாணச் சடங்கு நடக்கும் காலத்தில் சதிபுருடர் இருவரும் ஒருவருக்கொருவர் செய்து கொடுக்கும் பிரமாணிக்கங்கள் அடங்கிய மந்திரங்களைத் தமிழில் யாவர்க்கும் விளங்கும்படி கூறச் செய்வது நலமல்லவா? என்பவைகளே.

1. நமது அரிய சகோதர சகோதரிகளே! நமது தாய் நாடாகிய புண்ணிய பூமி கல்வியிற் சிறந்து கற்பு நிறைந்த மேதாவிகளாகிய மாதரசிகளை யுடையதென்று பூர்வகமுதல் புகழ் பெற்றிருக்கும் நாடென்பதும் இத்தகைய கீர்த்தியை உலகிலுள்ள வேறெந்த நாடும் பெற வில்லை யென்பதும் யாவரும் அறிந்ததே. இடையில் இராஜாங்கமாறுதல்களால் நேரிட்ட சில காரணங்களால் மாதர்களின் கல்வி க்ஷீணதசை யடையத் தொடங்கிற்று. இப்போது அதைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகவே அறிவாளிகளாகிய நம் நாட்டு ஆன்றோர்கள் எல்லாம் முயற்சி செய்கிறார்கள்.

பூர்வ காலத்து மாதர்கள் தம் தம் தாய்ப்பாஷையிலேயே தம் தம் மதத்தைச் சேர்ந்த கல்வியாளர்களிடம் கல்வி கற்றார்கள். அந்த ஆன்றோர்களும் பெண்கட்கு அவசியமாய் இருக்க வேண்டிய நற்குண நன்னடக்கைகளையும், இல்லறம் நடத்தும் விதிகளையும், ஈசுரபக்தி, பதிபக்தி, ஆன்மார்த்தம் முதலியவற்றைப் பெறும் மார்க்கங்களையும் போதிக்கும் நூல்களையே அவர்கட்கு கற்பித்து வந்தார்கள். இவற்றோடு மாதர்கள் தம் தம் அகங்களிலிருந்தபடியே கஷ்ட மின்றி செய்யத்தக்க அருமையான கைத்தொழில்களையும், கேட்போர் மனம் உருகும்படி பக்தியோடு பகவானைத் துதிக்கும் பாடல்களைப் பாடவும் கற்று வந்தார்கள். இன்னும் உயர்தர அந்தஸ்திலிருந்த மாதரசிகள் அவரவர்கள் நிலைமைக்குத் தக்கபடி அவசியமான சாத்திரங்களையும் கற்று வந்தார்கள்.

அரசாண்ட மாதரசிகள் சேனைகளை நடத்தி யுத்தம் புரியும் சக்திபெற வில் வித்தை, மல் யுத்தம், வாள் சண்டை முதலியவற்றிலும் தேர்ச்சியடைந்திருந்தார்கள். சுருக்கிக் கூறும் பட்சத்தில் சோதிட சாத்திரத்தில் வல்லுனரும், மல் யுத்தம், வாட்போர் செய்வதில் கை தேர்ந்தவர்களுமாகிய மாதர்கள் பலரை யின்றும் நம் நாட்டில் காணலாகும்.

அந்தோ! இக்காலத்தில் நமது அருமை மக்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியோ கடவுளுக்கே ஒப்படைக்கப்படவேண்டும். உற்று நோக்கின் உள்ள நோயை விருத்தி செய்து ஆயுளைக்குறைக்கும் ஔடதத்தை யருந்துவதிலும், அதைத் தீண்டாது ஆண்டவன்மேல் பொறுப்பை வைத்து நோயை யனுபவித்துக்கொண் டிருப்பதே நலம் என்பது போல், பெண்களுக்குக் கல்வியில்லா திருப்பதே நலம் என்று கருதத் தக்க நிலைமையிலிருக்கிறது.

இதற்குக் காரணம் நம் ஆண் மக்களுக்கு ஆரம்பத்தில் தாய்ப்பாஷையில் நமது இலௌகீக மதா சாரங்களை கற்பிக்காது அவர்களை யன்னிய பாஷையில் பயில விட்டு, முடிவில் அவர்களுக்குத் தம் தாய்ப்பாஷையில்



அபிமானக் குறைவும், மதாசாரங்களில் அலட்சியமும் உண்டாகும்படி நாமே செய்துவிட்ட கொடுஞ் செயலேயாகும்.

மேற்கண்ட தாய்ப்பாஷைக் கல்வி யவர்களுக் கில்லாததால் நம்முன்னோர் ஆசாரங்களின் உண்மையை அவர்களறிய வழியற்றுப் போகவே, அவற்றை மதியாது நாகரீகப் பேயாற்பிடியுண்டு அன்னியர் ஆசாரங்களைப் பின்பற்றத் தொடங்கி விட்டார்கள். அதனால் பிள்ளை பரீட்சையில் தேறியதே இனி உத்தியோகத்தில் சேர வேண்டியதே குறையென்று கருதிய தாய் தந்தையர் உடனே ஒரு செல்வவந்தனுடைய அழகிய மகளைப் பேசி முடித்து விடுகிறார்கள். தாயார் பிள்ளையிடம் சென்று சந்தோஷத்தோடு,

"மகனே! நல்ல குலத்தில் ஒரு பெண்ணை முடிவு செய்து வந்திருக்கிறேன். அவள் அழகில் குறைவில்லை. தந்தைக்குப் பூமி காணி முதலிய சொத்து விசேஷம். நல்ல சீதனம் கொடுப்பார்கள். எல்லா நகைகளும் போட்டு அவர்களே கலியாணமும் செய்து வைக்கிறார்கள். இதோடு நன்றாய்ப் படித்தவள் ..." என்று அவள் கூறும்போது,

**பிள்ளை:**— "என்ன படித்திருக்கிறாள்?" என்கிறான்.

**தாய்:**— "ஏன்? அவள்படிப்பை யாவரும் மெச்சிக் கொள்கிறார்கள். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் யாவும் நன்றாய் ஓதத்தெரியும், புராணங்களெல்லாம் தெரியும். குறள்கூடப் பாதி அர்த்தத்தோடு தெரியுமாம். வேலையில் மிக்க சுறுசுறுப்பு, எல்லாவித பதார்த்தங்களும் பட்சணங்களும் சேர்த்தியாய் நொடியில் செய்கிறாள். எனக்கே ஆச்சரியமாய் விட்டது. நல்ல ஆசாரமுடையவள். இதோடு மிக்க அடக்கமுடையவள். அண்ணனிடம்கூட தலைகுனிந்தபடி பேசுகிறாள். தங்கமான பெண் ... ..." என்று கூறிக் கொண்டிருக்கும் போதே,

அவன் மேல் இருக்கும் நாகரீகப் பேயின் ஆவேசம் வந்து விடுகிறது. உடனே வெறுப்போடு தாயை நோக்கி "போ போ! நல்ல பெண்ணைப் பார்த்து விட்டாய் படித்து விட்டாளாம், கடைசியில் சட்டி சுரண்டத்தான் உதவுவாள். அந்தப் பண்டாரப் பாட்டெல்லாம் இரவில் பிச்சைக்கு வருகிறவனெல்லாம் பாடுகிறான் பார்க்க வில்லையா? தலையே குனிந்து இருளாம். பேஷ்! உன்னைப் போலவே ஒரு சாம்பிராணி என்று சொல். அப்படிப் பட்ட அநாசாரமெல்லாம் இங்கே யாருக்கும் வேண்டாம். அப்படிப் பெண்பார்க்கிறதா யிருந்தால் நான் சொல்கிறபடி யிருக்கவேண்டும். தமிழும், புராணமும், தாயுமானவரும் இந்தப் பழையகாலக் குப்பை வண்டி காவேனு - சாவேனு - போவேனு படிப்பெல்லாம் இங்கே யாரும் சட்டை செய்கிறவர்களில்லை. இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். சோறாக்கி வேலை தெரிய வேண்டும் என்ற அவசியமொன்று மில்லை. உன்னைப் போல அடுப்பூதிக்கொண்டு இருக்கவும் வேண்டாம். அதற்கெல்லாம் ஏற்பாடு செய்து கொள்ள எனக்குத் தெரியும். என் சிநேகிதர் வந்தால் அவர்களோடு தாராளமாய் இங்கிலீஷில் பேசவேண்டும். தலைகுனிந்துகொள்கிறது, கதவின் பின்னே பூனைபோல் பதுங்குகிறது இந்த அநாசாரம் எல்லாம் உதவாது. நன்றாய்ப் ப்ரீயாய்ப் பேச வேண்டும்; கவுன் பூட்ஸ் முதலியவை யணிந்துகொண்டு தாராளமாய் நாலுபேரோடு புழங்கப் பழகிய நாகரீகவதியா யிருக்கவேண்டும். கம்பத்தில் சேலை சுற்றியது போல் இடுப்பிலே துணியைச் சுற்றிக்கொள்கிறது, முகத்திற்கு மஞ்சள் சாயம் போட்

டுக் கொள்கிறது, நெற்றியிலே கரும்புள்ளி செம்புள்ளி வைத்துக் கொள்கிறது, இந்தக் குரங்கு வேடமெல்லாம் என்னிடம் உதவாது. அந்தப்பூஜாரிப் பாட்டுகளுக்குப் பதிலாக பியானோவில் நல்ல இங்கிலீஷ் நோட்டுகள் வாசிக்க வேண்டும். வாசிக்க மட்டும் தெரிந்தால்கூட போதும். என் சிநேகரில் ஜோஸப் என்பவருக்கு வெகு நேர்த்தியான இங்கிலீஷ் நோட்டுகள், லவ்ஸாங்க்ஸ் (Love Songs — காதற் பாட்டுகள்) எல்லாம் தெரியும். அவரைக் கொண்டு கற்பிக்கச் செய்வேன். நன்றாய் நாகரீகத் தோற்றத்தோடு என் நண்பர் சபையில் கூடஉட்கார்ந்து பேசவும், பாடவும், சதுரங்கம் சீட்டு முதலிய ஆடவும் கூடிய புத்தியுடைய நாகரீகவதியே வேண்டும்" என்று கூறினான்.

நேயர்களே நம்பிள்ளைகளை, வயிற்றுப் படிப்பிற் காசைவைத்து நம் தாய்ப்பாஷையை முதலில் போதிக்காமல், இத்தகைய இரண்டுகால் மிருகங்களாய் நாமே யாக்கிவிட்டால், நமது பெண்மக்கள் எக்கெதியாவர்களென்று தயை செய்து சற்று சிந்திக்கும்படி யுங்களை மிகவும் பிரார்த்திக்கிறோம். இந்த நச்சு நாகரீக மயக்கமென்கிற சிறு செடியை முளையிலேயே கிள்ளி யெறியாவிடின் கொஞ்சகாலத்தில் நம் தாய்நாடு என்ன கெதியாகு மென்பதையும் சற்று சிந்தியுங்கள்.

பெண்கல்வி பெண்கல்வி யென்று எங்கும் பறை முழக்கமாயிருந்தாலும் நமது பெண்களுக்கு இன்னின்ன விஷய சம்பந்தமான கல்விதான் வேண்டுமென்று ஒரு வரம்பு ஏற்படவேண்டும். ஆன்றோர் அதைப்பற்றி சிரத்தை யெடுத்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி மறுமுறை விரிவாய்க் கூறுவோம். இடவசதிக்கஞ்சி இதோடு நிறுத்துகிறோம்.

2. 3. வது விஷயங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருப்பதால் அவற்றை ஒன்று சேர்த்தே விவகரித்தலாகும்.

கலியாண காலத்தில் கூறப்படும் சத்தியங்களால் சதி புருஷன் இருவரும் ஒருவரை நோக்கி யொருவர் "என் தேகமுழுதும் என் பூரண அன்பும் உனக்கே தத்தம் செய்துவிடுகிறேன். உயிருள்ளமட்டும் உயிரும் உடம்பும் போலும்; பூவும் மணமும் போலும் ஒருமித்து சுகதுக்கங்களைச் சமமாயனுபவிப்போம். ஒருவரை யொருவர் துரோகம் செய்தால் இன்னின்ன நரகமடைவோம்..............." என்ற கருத்துகள் அடங்கிய பிரமாணிக்கங்களைக் கூறுகிறார்கள் என்று விளங்குகிறது. மேலும் மனைவி சோரம் செய்தால் என்ன பாபமடைவாளோ, அதற்குச் சம அளவு பாபத்தையே கணவன் தன் மனைவியை விட்டு வேறு மாதை யிச்சித்தால் அடைவான் என்பது சத்தியம். அந்தோ! அச்சுலோகங்கள் ஸம்ஸ்கிருதபாஷையில்கூறப்படுவதால் அது யாவர்க்கும் விளங்குவதில்லை. அப்பாஷையைக் கற்காதவர்கள் அதை யுச்சரிப்பதே கஷ்டமாகையால் புரோகிதர் அதைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூறி மாப்பிள்ளையைக் கூறச் சொல்கிறார். மாப்பிள்ளை காதில்கேட்ட அளவு வாயில்வரும் சத்தப்படி முணமுணத்துக்கொண்டே ஓமத்தில் நெய்விட்டுக்கொண்டோ புரோகிதர் காட்டும் இடத்தில் புஷ்பம் அக்ஷதைகளை எறிந்து கொண்டோ, எப்போது இந்தப் புகைப்படலத்தை விட்டு வெளிக்கிளம்பலாமோ என்ற சிந்தனையிலிருக்கிறான். அதிலும் கொஞ்சம் எ. பி. ஸி. தெரிந்தவனும் செல்வவந்தனாகவுமிருந்தால் "சரி சுவாமி" என்று தலையசைத்து விடுகிறான். உடனே சுவாமி மெயில் வண்டிபோல் (இடையிடையில் விட்டு விட்டேனும்) தானே மந்திரத்தைக் கூறி விடு



கிறார். இக்காரணத்தால் இந்த உண்மையே பெரும்பாலர்க்குத் தெரியாது. மாதர்களே "அவன் ஆண்பிள்ளை, பத்து கூத்தியார் வைத்துக்கொள்வான், தினம் ஒரு தாசியல்ல பத்து தாசி வீட்டிற்குப் போய் வருவான். அவனுக்குத்தகும், நீ பெண்பிள்ளை, இன்னொருவனை எடுத்தும் பார்க்கலாமோ" என்று பேசிக் கொள்கிறார்களென்றால், ஆடவர் அபிப்பிராயம் எம்மட்டிருக்கும்? ஆகையால் இதைத் தமிழில் சொல்லும்படி ஏற்பாடு செய்வது மிக்க அவசியமே.

இதைப்பற்றியும் பிறகு விரிவாய்க் கூறுவோம்.

பத்திராசிரியர்

---

## கைவல்ய நவநீத வசனம்.

(347-ம் பக்கத்தொடர்ச்சி)

இவற்றில்:—

1. சமம்- என்பது அகக்கரண தண்டம்.

[அகக்கரணம் என்றால் உள்ளேயிருக்கும்கரணம், அதாவது அந்தக் கரணம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் என ஐந்து குணங்கள் அடங்கிய மனமே அந்தக் கரணமாகும். மனம் இச்சா சொரூபம். அந்த இச்சை காரணமாக அது தன் பிரியப்படி சதா அலைந்து கொண்டும் ஒரு சிந்தனையிலிருந்து மற்றொரு சிந்தனைக்குப் பாய்ந்துகொண்டுமே யிருக்கும். இதுவே பிறப் பிறப்பாகிய பெருந்துன்பத்திற்குக் காரணமானது. இம்மனதை அதன் பிரியப்படி செல்லவொட்டாது தடுத்து அடக்கலே அகக்கரண தண்டமாகும்.]

2. தமம்:—புறக்கரண தண்டம்.

மேற்கூறியபடி அடக்கப்பட்ட மனதை இந்திரியங்களின் வழியே சென்று சத்த, ஸ்பரிச, ரூப, இரச, கந்தம் என்ற விஷய சுகங்களை யடையவொட்டாது தடுத்தலாம்.

3. விடல்:—விடல் என்றாலும் உபரதி என்றாலும் ஒன்றே. ஸ்திரீ, தனம், ஜாதியபிமானம் முதலியவை பொருந்திய சகல கருமங்களையும் துக்கத்திற்கேதுவே யென்றுணர்ந்து அவற்றிற் பிரவேசியாது வெறுத்து விடலே உபரதியாகும்.

4. சகித்தல்.— சகித்தல் எனினும் திதிட்சை யெனினும் ஒன்றே.

காமக் குரோதாதி குணங்களை யடக்குதலும், சுக துக்காதிகள் சேர்ந்தால் இவை பிராரப்தவினைப்படி வந்தவை யெனப் பொறுத்துக் கொள்வதே சகித்தல் என்பதாம்.

5. சமாதானம்.— சித்தத்தை விடயங்களில் செல்லவொட்டாது தடுத்து, நாம் கேட்டறிந்த ஞான விஷயங்களிலும் சதா சிந்தனையிலுமே சதா நிலைத்திருக்கும்படி செய்தலே சமாதானம் எனப்படும்.

---

இத்தகைய [ ] வட்டங்களுக்குள் எழுதப்பட்டவை, விஷயங்கள் கூடிய வரையில் நன்றாய் விளங்குவதற்கும், குறிப்புப் பொருளாகவும் மறைபொருளாகவும் உள்ளவை வெளிப் படையாய்த் தெளிவதற்கும் எழுதப்பட்ட 'குறிப்புகள்' என உணரவேண்டுமேயன்றி - நூலிலேயே உள்ளவை யெனக்கருதி விடலாகாது.

6. சிரத்தை.—பரமாசாரியரிடத்திலும், ஞானநூல்களிலும் பக்தியும் அன்பும் வைத்தல்.

ஈஸ்வரனிடம் பூரணபக்தி வைக்க வேண்டும் என்பதும் இதில் அடங்கியிருக்கிறது. ஞானாசாரியர் பகவானே என்பது கொள்கை.

4. முத்தியை விரும்பு மிச்சை.— இதே முமுட்சுத்துவம் என்பது. அதாவது நாம் மோக்ஷத்தை யடையவேண்டும் என்ற விருப்பம்.

[இது தீவிரதரமானதா யிருத்தல் வேண்டும். சாதாரணமாய் மோக்ஷம் வேண்டும் என்ற எண்ணம் யாவர்க்குமே யுண்டு. இது மந்த வைராக்கியமே யாகும். மேற்கண்ட சாதனங்களை யடைந்த ஒருவன், யாவும் துக்கமென் றுணர்ந்தவனாய், பாலைவனத்தில் தாகவிடாய் கொண்டவன் எத்தகைய ஆவலோடு ஜலத்தைத் தேடுவானோ, தலையில் தீபற்றியவன் எப்படி பதை பதைப்போடு அதே ஆவலாய் ஜலத்தைத்தேடுவானோ அவ்வாறே, மோக்ஷ மார்க்கத்திற்கு ஆவல்கொள்வான். இதுவே தீவிரதர வைராக்கியமாகும். இத்தகைய மோக்ஷ இச்சையே பயனளிக்கும்.]

[மேற்கூறியவற்றோடு ஞானநூல் ஆராய்ச்சி செய்யும் அதிகாரிக்கு குக்கும அறிவு இருத்தல் வேண்டும். அதாவது அவன் புத்தி நுட்பமுடைய வனாயிருத்தல் வேண்டும். புத்தியில் (1) மிருத்து புத்தி, (2) தாருபுத்தி, (3) சிலா புத்தி, (4) வேணு புத்தி, (5) தைலபுத்தி, என ஐந்து வகைக ளுண்டு. இவற்றுள்:—

1. மிருத்துபுத்தி;— மிருத்து என்றால் மண்; மண்சுவரில் ஆணி யடிப்பதும் மறுபடி பிடுங்கி விடுவதும் மிக்க சுலபமாயிருப்பதைப் போல, குருவிடம் கேட்டவற்றை உடனே அறிந்து கொண்டு சற்று நேரத்திற்குள் அடியோடு மறந்து விடுவதாகும்.

2. தாருபுத்தி:—தாரு என்றால் மரம். அவற்றுள் பச்சை மரத்தில் ஆணியடிப்பது சுலபம். ஆனால் பிறகு கஷ்டத்தோடு அதைப்பிடுங்குவதும் சாத்தியமல்ல. அதைப்போல் குருவிடம் கேட்டவற்றைச் சுலபமாக மனதில் பதித்துக் கொண்டு அதை மறவாமலும் அதிகத் தெரியாமலும் இருப்பதாம்.

பட்ட மரத்தில் ஆணி யடிப்பதும் வருத்தம். அப்படி யடித்தாலும் கொஞ்ச காலத்தில் கழுவி விழுந்து விடும். அது போல் கேட்ட விஷயங்கள் புத்தியிற் பதிவது கஷ்டம். அப்படிப் பதிந்தாலும் கொஞ்ச காலத்தில் மறந்து போம்.

3. சிலா புத்தி:—கருங்கல்லில் நாலு துளைகள் செய்து ஒரு துளையில் உளிவைத்தடித்தால் (மற்றதுளைகள் வழியாகவும் பிளந்து) கல் இரண்டாய்ப் பிளந்து விடுவதுபோல், சக்தியான இடங்களில் குறிப்பான ஒரு பொருளைக் கூறினால் அதைக் கொண்டு மற்ற வற்றையும் தெரிந்து கொள்வது.

4. வேணு புத்தி:— வேணு என்றால் மூங்கில். மூங்கிலின் கணுவில் ஒரு பக்கம் உளிவைத்தடித்தால் இரு பக்கங்களும் பிளந்து கொள்வது போல், ஒருவிஷயத்தைக் கேட்டது கொண்டே முன்பின் தொடர்களையும் தெரிந்து கொள்வது.

(5) தைலபுத்தி:—தைலம் என்றால் எண்ணெய். இனைற்று ஜலத்தில் ஒரு துளி எண்ணெயை விட்டால் அது ஜலமுழுதும் பரவிவிடல் போல், குரு சுருக்கமாய்க் கூறியதைக் கொண்டே பூரண விஷயங்களையும் தெரிந்து கொள்வதாம்.

இவற்றில் சிலை, வேணு, தைலங்களைப் போன்ற புத்தியுடையவனே இத்தகைய ஞான நூலைக்கற்க அதிகாரியாவான்.]

[இங்கு இன்னொரு விஷயம் கூற வேண்டுவது அவசியமாயிருக்கிறது. அதாவது:—மேற்கண்ட சாதனங்கள் எல்லாம் கைவந்த பின்புதானே நாம் இந்நூலை ஆராயப்புகவேண்டும் என்று கருதிவிடலாகாது. அப்படிக் கருதுவது கடலில் அலை நின்றபிறகே குளிக்கலாம் என்று கருதுவதுபோலாகும். இச்சாதனங்கள் கை வந்தவன் தன்னைத்தா னறிய வேண்டிய வேலை யொன்றே பாக்கியன்றி மற்றபடி யவன் ஞானிக்குச் சமதையானவனே. தன்னை யறிந்தபின்பே மேற்கண்டவை சுபாவமாய்த் தோன்றும். ஆகையால் முதலில் பக்தி கட்டாயம் வேண்டும். அது எவ்வளவு திடமாயிருக்கிறதோ அவ்வளவு சுலபமாய் யாவும் கை கூடும். ஈஸ்வரன்மேல் வைத்த பூரண அன்பை வழி காட்டியாய் முன்னிட்டே மேற்கண்ட மனதை யடக்குதல் முதலியவற்றை அப்பியாசித்துக்கொண்டே ஆராய்ச்சியில் தொடங்க வேண்டும். "இதுவே நமது கட்டாயத்தொழில். மற்ற உலக விஷயங்கள் வெறுப்போடு நாட்சனியத்திற்காக செய்யும் அன்னியர் வீட்டு வேலை" என்றே உறுதியாய் உள்ளத்தில் கருதி யிருக்க வேண்டும்.]

குறிப்பு:— இம்மாதம் அசௌக்கியத்தால் கொஞ்சமாகவே எழுத நேர்ந்ததற்காக மிக்க விசனிக்கிறோம். (தொடரும்.)

சீடன்.

---

# வைத்தியக் குறிப்பு.

(351-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுபவாத ஜுரமென்னும் வியாதி இருவகைப்படும். அவற்றில் ஒன்று ஏழுநாளைக்கும், மற்றொன்று 14-நாளைக்கும் நீடித்திருக்கும். இதை மேல் நாட்டு சிகிச்சை முறைப்படி சிங்கில் நிமோனியா வென்றும், டபில் நிமோனியா வென்றும் சொல்வார்கள். சிங்கில் நிமோனியா என்றும் சுபவாத ஜுரத்திற்கு ஏழு நாட்களென்றும், டபில் நிமோனியா வென்னும் ஜுரத்திற்கு 14-நாட்களென்றும் வரையறுக்கப்பட் டிருக்கின்றது. ஆனால் சாதாரணமாய் இந்த ஜுரங்களின் காரணம் குரல் வளையில் ஏற்பட்ட ரணம் என்று சொல்லலாம். அத்தகைய குரல்வளை நம்முடைய சரீரத்தில் இரண்டாய் அமைக்கப்பட் டிருக்கிறபடியால் அவ்விரண்டு குரல்வளைகளிலும் ஏற்படும் இரணங்களுக்கு டபில் நிமோனியா வென்றும் ஒரு குரல் வளையில் உண்டாகும் இரணங்களுக்கு சிங்கில் நிமோனியா வென்றும் வழங்கிவருகிறார்கள். இத்தகைய வியாதியை இந்திய பண்டிதர்கள் நாடியினுலும் ஆங்கில பண்டிதர்கள் இருதயத்தின்கண் உண்டாகும் சத்தத்தாலும் உணர்ந்து கொள்கின்றார்கள். இந்தியர்கள் இத்தகைய ஜுரங்களுக்கு அநேக விதமான பஸ்பங்களும், செந்தூரங்களும், மூலிகைகளும், கஷாயங்களும், தைலங்களும், உபயோகித்து வியாதியை குணப்படுத்துகின்றனர்.

ஆங்கிலேயர்கள் சுவாசகோச திராவகத்தாலும், குரல்வளையில் ஏற்பட்டுள்ள வீக்கங்களை நிவர்த்திக்க மேல் போகும் சிகிச்சைகளை உபயோகிப்பதாலும் சுகப்படுத்துகிறார்கள். சாதாரண மனிதர்களும் இந்த ஜுரத்தின் வித்தியாசத்தை உணரவேண்டுமானால், அத்தகையவர்கள் கவனிக்கவேண்டிய அம்சங்க ளெவையெனின்?:—

வியாதியஸ்தருக்கு ஜுரம் வந்தவுடன் இலேசான இருமலுடன் இலேசான ஜுரத்தோடு கோழை விழுதலுடன் விடா ஜுரம் காய்ந்துக் கொண்டிருக்குமானால் இதை சிங்கில் நிமோனியாவென்று அறியவேண்டும். மேற் சொன்ன குறிகளுடன் ஆயாசம், சுவாஸ மதிகரித்தல், ஜுரம் மிகுதியாய்க் காய்தல், கபம் அதிகமாய் விழுதல், முதலிய குணங்களை உடைத்தான வியாதியை டபில் நிமோனியா வென்று தெரிந்து கொள்ளலாம். இத்தகைய டபில் நிமோனியா மிகவும் அபாயகரமான தெனச் சொல்லலாம். இதனால் கணக்கற்றவர்கள் மாய்கின்றார்கள். ஆங்கில சிகிச்சைகள் அவ்வளவு பயன்பட்டு வருகின்றன வெனச் சொல்வதற்கில்லையே யாயினும் வியாதியின் நுட்பங்களை அறிந்து அதனால் கெடுதிகள் விளையா வண்ணம் குறித்த தினங்கள் வரையிலும் அளவுப்படி பாதுகாத்து வருகின்றார்கள். இதுவே ஆங்கில வைத்தியர்கள் செய்யும் சிகிச்சை. ஆனால் நம் நாட்டாரில் அநேகர்கள் வியாதியின் தன்மையை யுணராது பற்பல ஔடதங்களைக் கொடுத்து வியாதியஸ்தருக்குப் பலவிதத் துன்பங்களை யுண்டுபண்ணக் கூடுமென நினைப்பதற்கிடமே யாகிலும், கற்றறிந்த அறிவாளிகளானோர் வெகு ஜாக்கிரதையாயும், மிகச் சுலபமாயும் வியாதியை யுணர்ந்து சிகிச்சை செய்வார்களென்றும், உயர்ந்த அநுபவ முள்ளவர்களென்றும், பற்பல ஔடதங்களின் சிகிச்சைகளாலும் சொஸ்தம் அடைவிப்பார்களென்றும் நம்பலாகுமென்பதில் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது.

மேல் நாட்டவர்கள்செய்யும் சிகிச்சை:-உள்ளுக்குக் கொடுக்கும் ஔடதம்.

| | |
|---|---|
| அமோனியா கார்ப் | $\frac{1}{4}$ கிரைன் |
| லைக்கர் அமோனியா ஆஸிடேஸ் | 1 டிராம் |
| டிஞ்சர் ஸெனிகா. | 3 துளி |
| டிஞ்சர் டெஜிடலிஸ் | 2 துளி |
| சிரப் டோலு | 2 துளி |
| கிரிய சோட்டால் | 1 துளி |

இது ஒருவேளை மருந்து. இப்படி 4-மணி நேரத்திற்கு ஒருதரம் ஒவ்வொருவேளை மருந்தை உபயோகப்படுத்தி வருவதுடன் அடியில் கூறும் சிகிச்சைகளும் செய்து வருகின்றார்கள். அவை யாவை யெனில்,

1. ஆன்டி பிளோஜிஸ்டின் என்னும் மருந்து. 2. ஆளி விரை மாவை கொதிக்கவைத்து மார்பில் தடவுதல் ஆகிய இவைகளேயாம்.

(தொடரும்.)

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்,



## கற்கோட்டை—நாவல்.

(359-ம் பக்கத்தொடர்ச்சி.)

அரியநாயகி.—“ அந்தோ, பிரபுவே இராணி செய்தது பெரிய அக்ரமம். அவள் மிரட்டலுக்குப் பயந்து நான் அவள் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிவிட நேர்ந்தது. அவளே யாவும் உத்தேசித்துத் தீர்மானித்துக் கொண்டாள். அந்தக் கலியாண ஏற்பாடு யாவற்றிலும் அக்ரமம்......” என்றதே,

பிரபு திடுக்கிட்டு எந்தக் கலியாணம் என்றார். அதன்மேல் அரிய நாயகி, தினகரனை மணம் புரியும்படி தன்னை இராணி கட்டாயம் செய்ய முயன்றதைக் கூறியதே, பிரபு பிரமித்து,

“என்ன! தினகரனை மணம்புரிய உனக்கு விருப்பமோ?” என்றார்.

அரியநாயகி, “ அந்தோ! தினகரனை இன்றுதான் நான் முதல் முதல் கண்டதே. எந்த ஸ்திரீயேனும் இரண்டு மூன்று மணிநேர அறிமுகமே யுடைய ஒருவனை மணம்புரிய விரும்புவாளோ” என்றாள்.

பிரபு.—“ஆம். உண்மையே, ஆனால் அந்தக் காரணத்தைக் கொண்டு நான் உன்னை மணம்புரிய விரும்புவதைத் தடுக்காதே. தெய்வச் செயலால் நாம் இந்த விஷயங்களில் சம்பந்தப் பட்டிருக்கிறதே நம்மிருவர் வினைகளும் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிகிறது. ஆனால் இந்த நிலைமையில் என்னை மணந்து கொள்ளும்படி நான் உன்னைக் கேட்கலாகாது. ஆயினும் கடவுள் தயவால் என் நிலைமை நாளைக்கு அல்லது இன்னும் அரை மணிநேரத்திலேயே யென்னமாய் மாறுமோ யாருக்குத் தெரியும். நீயும் என்னை விரும்புகிறாய் என்று தெரிந்தால் இப்போது அதுவே யெனக்குப் போதும். அந்தச் சந்தோஷமே எனக்கு உற்சாகத்தையும் பலத்தையு மளிக்கும்” என்றார்.

அரியநாயகி சிறு பெண்ணல்ல. சமயோசித நிலைமையை யறிந்து நடக்கும் அறிவுடையவள். ஆகையால் அவள் பிரபுவை நோக்கி,

“பிரபுவே! நான் மனதிலுள்ளதையே கூறுவேன். தங்கள் மேல் எனக்குப் பிரியமேயில்லை யென்றாவது, தாங்கள் கூறிய மொழிகளால் நான் சந்தோஷ மடையவில்லை யென்றாவது கூறுவேனாயின் பொய் கூறியவளாவேன். ஆனால் அத்தகைய விஷயத்தைப் பற்றிப் பேச இது சமயமே யல்ல. அடுத்த விநாடி என்ன சம்பவிக்குமோ தெரியாது. ஆகையால் தற்சமயம் சிநேகர் என்ற முறையோடே மட்டும் சம்பாஷிப்போம். இச்சம்பாஷணை யித்துடன் நிற்கட்டும்” என்றாள்.

பிரபு அவள் புத்திக்கும் குணத்திற்கும் சந்தோஷ மடைந்து “நான் இங்கு வந்து என்னேர மாயிற்று? வீரர்களெல்லாம் போய்விட்டிருந்தால் செல்வராயர் என்னைக்காண இன்னும் வராமலிருப்பாரா?” என்றார். அரியநாயகி, “ஆம் ஆம்” ஒருசமயம் அவர்கள் இன்னும் செல்லவில்லை போலும். எப்படியாயினும் செல்வராயர் வருவார் என்றாள். அச்சமயம்

பிரபு களைப்பினால் நித்திரை யடைந்தார். அரியநாயகி "செல்வராயர் ஏன் இன்னும் வராமலிருக்கின்றார் என்றும் தங்கம்மாள் சுமார் மூன்று மணிக்கு இராணியிடம் சென்றவள் இன்னும் ஏன் திரும்பிவரவில்லை யென்றும் கலவரத்தோடு சிந்திக்கலாயினாள். காலம் கழிந்து கொண்டே போகிறது. பிரபுவும் நித்திரையிலேயே யிருக்கிறார். அரியநாயகி தீபத்தை யேற்றி "ஏன் செல்வராயர் இன்னும் வரவில்லை. வீட்டிலுள்ளோ ரனைவரும் சங்கரிக்கப்பட்டார்களோ, அல்லது சிறையாக்கப் பட்டார்களோ! வீடேகாலியாய் இருக்கிறதோ! போர்வீரர்க ளிருந்தால் காலடிச் சத்தமாவது கேட்குமே. நாமாவது வெளியிற் சென்று பார்க்கலாமா" வென்று சிந்திக்கச் சிந்திக்க அவள் மனம் ஒருவழியில் நிலைப்பட வில்லை.

கடைசியில் மெதுவாய் வெளியிற் சென்று பார்ப்பதெனத் தீர்மானித்தாள். "ஹா! ஹா! கதவை யெப்படி திறப்பது?" என்று திகைத்தாள். ஏனெனில், தங்கம்மாள் மனக்குழப்பத்தால் கதவை வெளியிலிருந்து திறக்கும் இரகசியத்தைமட்டும் கூறினாளன்றி உள்ளே சென்றபின் கதவு தானே பூட்டிக்கொள்வதால், மறுபடி திறக்க உட்பக்கம் எங்கு யந்திர மிருக்கிற தென்பதைக் கூற மறந்து விட்டாள். அரியநாயகி தன்னாலான மட்டும் பார்த்தும் முடியவில்லை. எப்படியாவது உடைக்கப் பார்க்கலாமென்றால், ஒரு சமயம் போர் வீரர் இன்னும் போகாதிருந்தால், நம்மையும் இந்தப் பிரபுவையும் நாமே அவர்களிடம் சிறையாய் ஒப்புவித்த விதமே யாகும் என்று சிந்தித்தாள். இப்போது அவள் மனோநிலைமை எவ்விதமிருக்கு மென இதை வாசிப்போரே சிந்தித்துக் கொள்ள வேண்டுமே யன்றி நாம் வரைய முயல்வது அவமாகும்.

சிந்தித்துச் சிந்தித்து மனோவேதனையால் நித்திரை செய்யும் பிரபுவினருகில் உட்கார்ந்த அரியநாயகி, ஆயாசமடைந்து தானும் நித்திரை போய் விட்டாள். காலம் கழிந்து கொண்டே போயிற்று. நடு இரவு ஆயிற்று அச்சமயம் ஒருவித சத்தத்தையும் பயங்கரமான கூச்சலையும் கேட்டு இருவரும் திடுக்கிட்டு திகிலோடு விழித்துக் கொண்டு பார்த்தார்கள்; இரகசிய அறையின் கதவு திறக்கப்பட்டிருப் பதையும், கண்ணில் கோபத்தனல் வீச பயங்கரமான விகாரமாறுதலடைந்த முகத்தோடு இராணி வாசற் படி யருகில் நிற்பதையும், இன்னும் பின்னால் நாலைந்து வீரர்கள் நிற்பதையும், இரண்டு மூன்றுபேர் தீவட்டிகளைக் கையில் பிடித்து நிற்பதையும் கண்டு பிரமையும் திகிலும் வியப்பு மடைந்து இடி விழுந்த நாகம் போல் ஆவி சோர்ந்தார்கள்.

---

## 24-வது அத்தியாயம்.

தன் அம்மானாகிய சுந்திரநாயகம் பிரபுவிடம் சிக்கிய நமது கதாவீரனாகிய கண்ணபிரான் பிரபுவைப்பற்றி கவனிப்போம். கண்ணன் அவ்வாறு சிக்கி ஒருவாரமாயிற்று. இந்த ஒருவாரமாய் அவன் இலிங்கபுரம் ஜில்லாவின் கடலோரத்திலிருக்கும் கரும்பூர் என்ற நகரில் சிறை வைக்கப் பட்டிருக்கிறான். அவ்வூரில் காலியாயிருந்த ஒரு பெரியமடம் போன்ற கட்டிடமே தற்சமயம் சிறைச்சாலையாக உபயோகிக்கப் பட்டது. அக் காலத்தில் அந்த இராஜாங்கத்தில் இராஜத் துரோகிகளாகிய குற்றவாளிகள் மிக்க கடினமான சிறையில் வைக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் நமது கண்ணபிரானுக்கு மட்டும் யாவும் மிக்க சௌகரியமாகவே நடந்துவந்தது.



அவன் அக்கட்டிடத்தின் மத்திய பாகத்தில் ஒரு விசாலமான அறையில் சிறை வைக்கப்பட்டிருந்தான். அந்த அறையின் இருபுறங்களிலும் இரண்டு சாளரங்களுண்டு. அவை யிரண்டும் இரண்டு முற்றங்களைப் பார்த்தபடி இருக்கின்றன. இரண்டிலும் வீரர்கள் காவலிருக்கிறார்கள். ஆகையால் தப்பித்துப்போக நினைப்பது அசாத்தியமாகவே முடியும். அப்படி அறையை விட்டு எப்படியேனும் வெளிப்பட்ட போதிலும், சுற்றியிருக்கும் இரண்டு மூன்று மதிற் சுவர்களைக் கடந்தாலே அக்கட்டிடத்தை விட்டு வெளிதாண்டியதாகும். ஆகையால் கண்ணபிரான் யாவும் சிந்தித்து, அந்த எண்ணத்தை யடியோடு விட்டு விட்டான்.

சிறை செய்யப் பட்ட எட்டாவதுநாள் மாலைப்போது கண்ணபிரான் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு அங்கிருக்கும் மஞ்சம், மேஜை, நாற்காலிகள், எழுதுகருவிகள், தனக்கு அளிக்கப்படும் முதல் தரமான போஜனம், யாவையும் நோக்கி "ஹா! இச் சமயத்தில் யார் என் மேல் இரக்கமும் அன்பும் வைத்து இவ்வித சௌகரியங்களை யெனக்களிப்பது என்று சிந்தித்தான். அந்த ஜில்லாவிற் குற்ற விசாரணை நியாயாதிபதியா யிருப்பவர் ஸர்தார் அமிர்தநாயகம் என்பவர். அவர் கரும்பூரிலேயே வசிப்பவர். சுமார் அறுபது வயதுடையவர். ஜீவகாருண்யமும், தெய்வ சிந்தனையும், நீதிநெறியுமுடைய மிக்க செல்வவந்தர். கண்ணபிரான், தான் முதல்நாள் அங்கு கொண்டுவரப் பட்டபோது அவரைக்கண்டான். அப்புறம் அவர் அங்கு வரவில்லை. அவரே சிறைச்சாலைக்கும் அதிகாரி. அவர்தான் நமக்கு இத்தகைய உதவி புரிந்திருக்கவேண்டும் என்று கண்ணபிரான் கருதக் காரண முண்டு.

கண்ணபிரான் மேற்கண்டவாறு தன் தற்கால நிலைமையையும் தன்காதலியாகிய கமலாம்பாளையும், திரவிய சிங்கம் பிரபு கற்கோட்டைக்குச் சென்று கமலாம்பாளிடம் கொடுக்கும்படி தான் கொடுத்தனுப்பிய அடையாளத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டாரோ இல்லையோ வென்பதைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டேயிருக்கையில் காவலர் தலைவன்வந்து வந்தனமளித்து,

"பிரபுவே, எஜமான் அமிர்தநாயகம் ஸர்தார் வந்திருக்கிறார். தங்களுக்கு ஆக்ஷேப மில்லாவிட்டால், சற்றுநேரம் தங்களிடம் வார்த்தையாட விரும்புவதாகச் சொல்லச் சொன்னார்" என்றான்.

தன்னைப் பற்றி இராணியின் கட்டளை யென்னவென்றறிந்துவர இந்திரபுரிக்கு ஒரு ஆள் சென்றிருக்கிறானென்றும் அவன் திரும்பிவந்து சேரவேண்டிய காலம் நெருங்கி விட்டதென்றும் கண்ணபிரான் அறிவான். காலம் நெருங்க நெருங்க அவன் மனப் பதைப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் தன்மேல் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்திற்கு மரண தண்டனைதான் கிடைக்குமென்று அவனுக்குத் தெரியும். ஒரு சமயம் இராணி கருணைகூர்ந்து பிராணபிட்சை தருவதாயினும், மரணபரியந்தம் ஏதாவதொரு கோட்டையில் சிறைவாச தண்டனை தப்பாது என்பதும் தெரியும். ஆகையால் நியாயாதிபதி வருவதைக் கேட்டதே, இந்திரபுரியிலிருந்து சமாசாரம் வந்துவிட்டதோ! என்ன சமாசாரமோ! என்று அவன் மனம் துடிதுடித்தது. முகம் விகாரமடைந்தது. அக்குறிப்பை யறிந்த காவலன்,

"பிரபுவே! விசேட மொன்றுமே யில்லை. ஸர்தார் அவர்கள் சிநேக பாவமாய்த் தங்களிடம் பேசவேண்டியே வருவதாய் இயம்பும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டார்" என்றான்.

கண்ணபிரான்.—"ஆ! அப்படியா! எனக்கு இங்கு இவ்வளவு சௌகரியம் ஏற்பட்டிருப்பது அவருடைய அன்பினாலும், உன்னுடைய இரக்க குணத்தாலுமே யென்று கருதுகிறேன்" என்றான்.

காவலன்.—"பிரபுவே, என்னுடைய பிரியம் எவ்வாறிருந்த போதிலும் நான் கட்டளைமீறி யென்னளவும் செய்யச் சக்தனல்ல. செய்தால் என் ஜீவனுதாரமே போய்விடும். தங்களுக்கு நடக்கும் யாவைக்கும் அவர் கிருபையே காரணம். வேறொருவரும் ஒன்றும் செய்ய முடியாது" என்றான்.

கண்ணபிரான், "அப்படியா! ஆயினும் நான் உங்களிருவர்க்கும் நன்றியுடையவனு யிருக்கிறேன். சர்தார் அவர்களை வரவேற்க மிக்க ஆவலுடையவனு யிருக்கிறேன் என்று அவரிடம் கூறு" என்றான். அவன் சென்ற இரண்டொரு நிமிடங்களில் ஸர்தார் அமிர்தநாயகம் கண்ணபிரான் இருக்கும் சிறையகத்தில் பிரவேசித்தார்.

சர்தார் கண்ணபிரானைக் கண்டதும், "பிரபுவே, தாங்கள் இங்கு கொண்டுவரப்பட்ட தினம் தாங்கள் காட்டிய சமிக்கையால் தாங்கள் நமது சங்கத்தைச் சேர்ந்த சகோதரர் என்றறிந்து தங்களிடத்தில் கடமைப்படி அன்பு பாராட்டினுலும், சாதாரணமாகவே தங்கள் விஷயத்தில் நான் மிக்க பரிதாபமடைகிறேன். ஏனெனில் தங்களைப்போன்ற வாலிபன் இந்த வயதில் இராஜாங்கச் சூழ்ச்சிகளில் நுழைந்து சதியாலோசனைச் சங்கதிகளில் சேர்ந்து இராஜாங்கத்தை யழிக்கவும் இராஜாவிற்குத் தீங்கிழைக்கவும் துணிவாரென்பதை நான் நம்பவில்லை. தங்கள்மேல் இக்குற்றம் கோள்மூட்டும் வஞ்சகரால் அபாண்டமாகவே சுமத்தப்பட்டிருக்க வேண்டுமென்பதே யென் அபிப்பிராயம்" என்றார்.

கண்ணபிரான்.—"ஸர்தார்! தாங்கள் நினைப்பதேயுண்மை. கடவுளறியநான் இராஜவிசுவாசியே. மேலும் நான் புதுமதத்தைச் சேர்ந்து அதன் வழிகளையனுசரிப்பவனே. கடவுளறிய நான் எவ்விதச்சதியாலோசனையிலும் சேரவில்லை. ஆ! தங்கள் விசுவாசத்திற்கு நான் எவ்விதமாய் என் நன்றியைக் காட்டுவேன். தாங்கள் என் விஷயத்தில் விசுவாசங் காட்டியதோடு என் இரண்டு ஆட்களுக்குங்கூட......" என்றபோது.

ஸர்தார்.—"ஓ! ஒன்றும் சொல்லவேண்டாம். ஜீவகாருண்ய முடைய எவனும் இப்படி நடந்துகொள்ள வேண்டியதே. நீர் நிரபராதி யென்றே என் புத்தியிற்பட்டது. அன்று காலை நீர் இங்கு சிறைசெய்யப்பட்டபின் உமது மாமன் என்னிடம் இரகசியமாய் உம்முடைய ஆட்கள் இருவரும் பெரிய இராஜத் துரோகிகளென்றும் மிக்க அபாயகரமானவர்களென்றும் தெரிவித்தார். ஆனால் நான் சோதித்துப் பார்த்ததில் அவர்கள் யோக்கியர்களென்றே தெரிந்தது. நான் அவர்களை யிஷ்டம்போற் செல்லும்படி கூறிவிட்டும், அவர்கள் தங்கள்மேல் வைத்த விசுவாசத்தால் சிறைச்சாலைக் கருகிலேயே அடிக்கடி காணப்படுகிறார்கள். அதனால் அவர்கள் தங்களை விடுதலைசெய்து கொண்டு



போவதற்காக முயற்சி செய்கிறார்களென்று அவர்கள் மேல் அபவாதமாகவேனும் யாராவது குற்றம் சாட்டக்கூடும். இவ்வூர் அதிகாரி இரக்கமான மனமுடையவனல்ல. ஆகையால் நான் அவர்களுக்கு அதைப்பற்றி யெச்சரிக்கை செய்தேன்" என்றார்.

கண்ணபிரான்.—"ஆ! தங்களுடைய இத்தகைய கருணைக்கும் விசுவாசத்திற்கும் கடவுளே பிரதியுபகாரம் செய்யவேண்டும்" என்று மிக்க மனவுருக்கத்தோடு கூறினான்.

ஸர்தார்.—'பிரபுவே! நான் தங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன். நாம் இப்போது தங்களிடம் சம்பாஷிப்பது பூரண சிநேகமுறைமையே யன்றி வேறில்லை. ஆகையால் தாங்கள் என்னிடம் எதைக் கூறினாலும் அதைப்பற்றி அச்சமடைய வேண்டாம்" என்றார்.

கண்ண.—"ஸர்தார்! நான் தங்கள் அன்பை யிவ்வளவு அறிந்தபின் என் விஷயம் எதையும் கூறப் பின்னிடையேன்" என்றான்.

ஸர்தார்—அன்று தாங்கள் என்முன் கொண்டுவரப்பட்டபோது, தாங்கள் இன்னாரென்று ருசுப்படுத்த தங்கள் அம்மானுகிய சுந்தரநாயகம் பிரபு எதிரில் வந்தார். அவரைக் கண்டவுடனே தாங்கள் ஏதோ கோபத்தோடு அவரைத் தூஷிக்கப் போவதுபோல் கரங்களை நீட்டினீர். நான் முதலில் ஒருமாதிரியாய் நினைத்தேன். அதாவது தங்கள் நெருங்கிய சுற்றத்தாராயிருந்தும் அவரே தங்களைப் பிடித்துக் கொடுத்த துரோகத்திற்காகத் தூஷிக்க முயன்றீர்களாக்குமெனக் கருதினேன். ஆனால் உடனே அவர் முகம் சவம்போல் வெளுத்து விட்டதைக்கண்டதே, அது அவர் அஞ்சத்தக்க விஷயமா யிருக்க வேண்டுமென்று தோன்றியது. தாங்கள் மறுபடி கோபத்தைத் தணித்துக் கொண்டீர்கள். உடனே யவர்முகம் தெளிவடைந்தது. உண்டான கலவரத்தையும் கிலியும் அவர் மிக்க சாதுர்யத்தோடு மறைத்து விட்டார்.

கண்ண.—"ஸர்தார்! அவர் என்னைப்பிடித்துக் கொடுத்ததற்கு எனக்குக் கோபம் வரவில்லை. அடடா, அவர் செய்யமுயன்ற இன்னொரு சதியிருக்கிறதே, அதைக் கேட்டால் சிங்கத்தின் இருதயம்போன்ற இருதயத்தை யுடையவன் உளங்கூட நடுங்கிவிடும். எனக்குமட்டுமல்ல என்போன்ற தன் சுற்றத்தான் இன்னொருவனுக்கும் அப்படியே செய்யமுயன்றார். ஆனால் கடவுள் எங்களிருவர்மேலும் கருணை காட்டினார். அன்று எனக்கு முதலில் கோபமே வந்தது. பிறகு சிந்தித்தேன். நான் பூரணமாய் சிக்கிக்கொண் டிருக்கிறேன். இப்போது அவன் விஷயத்தை வெளியிடுவதில் எனக்கொரு பயனுமில்லை. அதோடு அவன் அது தற்செயலாய் நேர்ந்ததென்று வர்ணம் கொடுத்து விடுவான். இப்போ தில்லாவிட்டாலும் இன்னொரு காலத்தில் அதை வெளியிடுவேன். இப்போது அவன் எனக்காகத் தன் ஆளை இராணியிடம் அனுப்பியது பெரியமாயம். வெளிக்கு எனக்கு நன்மை செய்வதாகத் தோன்றவும் அந்தரங்கத்தில் தீங்கிழைக்கவுமே. அவன் பெரிய சதிக்காரன் என்று கருதுங்கள். (தொடரும்)

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்தி ௵ வைகாசி ௴ சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020,
பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1337.
இங்கிலீஷ் 1919-ம் ௵ மே ௴—ஜூன் ௴

| வைகாசி ௴ | மே ௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | பு | ○-40-0 | சுவா-9-49 | சித்த-60 | புண்யகாலம். |
| 2 | 15 | வி | பௌ2-58 | விசா-16-14 | சித்த-60 | ............... |
| 3 | 16 | வெ | பிர-7-34 | அனு-22-13 | சித்த-60 | விவாஹம், சீமந்தம். |
| 4 | 17 | ச | து-11-32 | கேட்-27-30 | சித்த-60 | எந்திரவேலை. |
| 5 | 18 | ஞா | தி-14-36 | மூல-31-51 | அ-32 சி | கர்ணவேதனம், விவாஹம் |
| 6 | 19 | தி | ச-16-32 | பூரா-35-6 | சி-35 ம | கணிதாரம்பம், கரும்புநட- |
| 7 | 20 | செ | பஞ் 17-10 | உத்-37-2 | சித்த-60 | கரிநாள். |
| 8 | 21 | பு | ஷ-16-29 | திரு-37-43 | சி-37 ம | விதைவிதைக்க, ஏற்கட்ட- |
| 9 | 22 | வி | சப்-14-38 | அவி-37-15 | சி-37 ம | சங்கீதாரம்பம். |
| 10 | 23 | வெ | அ-11-39 | சதை-35-44 | சித்த-60 | குதிரைவாங்க. |
| 11 | 24 | ச | நவ-7-45 | பூர-33-20 | ம-33 சி | |
| 12 | 25 | ஞா | ஏ-54-41 | உத்-30-17 | அமிர்-60 | |
| 13 | 26 | தி | து-51-53 | ரேவ-26-40 | சித்த-60 | |
| 14 | 27 | செ | திர-45-51 | அசு-22-44 | சித்த-60 | |
| 15 | 28 | பு | ச-39-49 | * பர-18-41 | சி-19 அ | |
| 16 | 29 | வி | ●-33-55 | கிரு-14-40 | மர-60 | |
| 17 | 30 | வெ | பிர-28-18 | ரோக-10-54 | ம-11 சி | |
| 18 | 31 | ச | து-23-17 | மிரு-7-35 | சித்த-60 | |
| 19 | 1 (1919 ௵ ஜூன் ௴) | ஞா | தி-19-53 | திரு-4-52 | சித்த-60 | |
| 20 | 2 | தி | ச-15-21 | புன-3-8 | அ-3 சி | |
| 21 | 3 | செ | ப-12-15 | பூச-2-11 | சித்த-60 | கரும்பு கேழ்வரகு நட. |
| 22 | 4 | பு | ஷ-11-18 | ஆயி-2-32 | சித்த-60 | நவக்கிரக ஆராதனை. |
| 23 | 5 | வி | சப்-11-26 | மக-4-5 | அ-4 சி | சர்வமுகூர்த்தம். |
| 24 | 6 | வெ | அ-12-42 | பூர-6-53 | சித்த-60 | ............... |
| 25 | 7 | ச | நவ-15-7 | உத்-10-51 | மர-60 | ............... |
| 26 | 8 | ஞா | தச-18-35 | அஸ்-16-0 | அ-16 சி | சர்வமுகூர்த்தம். |
| 27 | 9 | தி | ஏ-22-49 | சித்-21-46 | சி-22 அ | விவாஹம், சீமந்தம். |
| 28 | 10 | செ | து-27-37 | சுவா-28-6 | சித்த-60 | வியாபார ஆரம்பம். |
| 29 | 11 | பு | திர-32-32 | விசா-34-32 | சித்த-60 | சர்வமுகூர்த்தம். |
| 30 | 12 | வி | ச-37-12 | அனு-40-43 | சித்த-60 | சர்வமுகூர்த்தம். |
| 31 | 13 | வெ | ○-41-13 | கேட்-46-17 | ப-46 அ | ............... |
| 32 | 14 | ச | பிர-14-15 | மூல-50-50 | சித்த-60 | மாச சங்கிரமணம். |

| | | | |
|---|---|---|---|
| | புத | ர.செ கே | சுக் குரு |
| | 9-விரு பு<br>19-கட-சு<br>25-மி-புத | | சனி |
| | ராகு | | |

Printed and Published by N. Munisami Mudaliar, at the "Ananda Bodhini" Press, 15, Venkatesa Maistry Street, Madras.

ஓம்
பரப்பிரம்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 4 | சித்தார்த்தி ௵ வைகாசி ௴ க௳ 1919 ௵ மே ௴ 14௳ | பகுதி 11

## கடவுள் வணக்கம்.

மின்போலு மிடையொடிய மொடியுமென மொழிதல்போன்
மென்கிலம் பொலிகளார்ப்ப
வீங்கிப் புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்னுவலாய்
என்போல லைந்தவர்கள் கற்றோர்கள் கல்லார்கள்
இருவர்களி லொருவருண்டோ
வென்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை
யார்பா லெடுத்துமொழிவேன்
அன்பால் வியந்துருகி யடியற்ற மரமென்ன
வடியிலே வீழ்ந்து வீழ்ந்தெம்
அடிகளே யுமதடிமை யாங்களென றுசால்வருக்
கறமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோமயானந்தமே.

ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற் கரிய வுனைத்
தோயும் படிக்குக் கருணை செய்வாய் சுகவான் பொருளே
தாயும் பிதாவுந் தமருங் குருவுந் தனி முதலு
நீயும் பரையு மென்றே யுணர்ந்தே னிதுநிச் சயமே.
அல்லும் பகலு முனக்கே யபய மபய மென்று
சொல்லுஞ்சொ லின்னந் தெரிந்த தன்றே துதிப்பார்கண் மனக்
கல்லுங் கரைக்கும் மௌன வுனது கருணை யென்பாற்
செல்லும்பொழு தல்லவோ செல்லுமே னத்த சித்த சுத்தே.

# ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ வைகாசி௴ கவ

## சதி புருடர்.

சதிபுருடர் எனினும் மனைவியும் கணவனும் எனினும் ஒக்கும். ஒருகுடும்பத்தில் இவர்களே பிரதான மானவர்கள். இவர்களே இல்லற கர்த்தாக்கள். இல்லறதர்மம் இவர்களால்தான் நடைபெற வேண்டியது. பிரஜாவிர்த்தி யிவர்களால்தான் உண்டாக வேண்டியது. குடும்பத்தில் இவர்கள் இருவர்க்குமுள்ள கடமைகளையும், இருவர்க்குமுள்ள தாரதம்மியத்தையும், இவர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் பற்றி சற்று கவனிப்போம்.

குடும்பத்தில் இருவருக்கு முள்ள கடமைகளைச் சிந்திக்கும் போது கணவனைவிடப் பன்மடங்கு கஷ்டமான கடமைகள் மனைவிக்கே ஏற்பட்டிருக்கின்றன வென்று அநுபவத்தால் எளிதிலுணரலாகும். எவ்வாறெனின் ;—

ஒருபெண் தன் தாய்வீட்டில் சுமார் பனிரண்டு வயதுவரையில் வளர்ந்து வருமட்டும் ஒரு கவலையும் இல்லை-சாப்பிடுவதும், விளையாடுவதும்-வயது ஏற ஏறக் குடும்பத் தொழில்களில் தாய்க்குத் தன் சக்தியானமட்டில் உதவிசெய்ய வேண்டியதுமே. புத்தியறிந்து அதற்குமேல் வயது ஏறஏறக் கவலைகள் முளைக்கத் தொடங்குகின்றன. “ஓகோ ! தாய்வீடு நமக்குச் சதமல்ல, என்றைக் கிருந்தாலும் கடைசியில் ஒரு கணவனை மணம் புரிந்துகொண்டு அவன் மனைக்குப்போய்ச் சேரவேண்டியதே” என்ற உண்மை மனதிலுதித்து விடுகிறது. இன்னும் கொஞ்சம் அறிவு விளங்க விளங்க இது முதலே கவலைகள் அதிகரிக்கின்றன. உலக சம்பவங்கள் செவியில் கேள்விப்படக் கேள்விப்பட கலவரமும் பீதியுங்கூட உண்டாகின்றன. அண்டை வீட்டுக்காரியாவது, சுற்றத்தாளாகிய யாராவது ஒருத்தி தன் தாயிடம்வந்து, பேசும்போது அடியிற்காணும் சம்பாஷணை தன் செவிகளில் விழுகிறது:—

வத்தமாது, “அம்மா என்குறையைக்கொஞ்சம் கேட்டாயா?” என்கிறாள். தாய் “ஆ ! வா அம்மா வா - மகளைப் பார்க்கப் போ



யிருந்தாயே, எப்போது வந்தாய் ? என்ன சங்கதி ? மகள் க்ஷேமந் தானே ?” என்கிறாள்.

அம்மாது :—அந்த வயிற்றெரிச்சலை யேன்கேட்கிறாய். அந்த வீட்டில் என்பெண்ணைக் கொடுத்ததைவிட ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டிருந்தாலும் நிம்மதியா யிருந்திருக்கும்.

தாய் :—ஏது எப்படியாயினும் புருஷனும் மனைவியும் மனமொத்திருக்கிறார்களோ யில்லையோ ? புருஷன் அனுகூலனா யிருந்தால் மற்றபேரைப்பற்றி என்ன அக்கறை ?

வத்தமாது :—அந்தப் படுபாவிதான் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண் டிருக்கிறான் - அதை யறியாமல் மகளைக்கொடுத்துவிட்டேன் - அவன் அவளிடம் முகங்கொடுத்துப் பேசுவதேயில்லை. என்னேரமும் கைக்கு அகப்பட்டதை யெடுத்துக் கொண்டு கொன்றுவிடுகிறான். மாமியாரோ பிள்ளைவந்ததே ஏதாவது கோள் மூட்டி அவன் தன் மனைவியை யடித்த பின்பே யவனிடம் குலவுகிறாள். அவளே தன் மகனுக்கு போசன மளிக்கிறாள்.

நேயர்களே ! இச்சம்பாஷணையைக் கேட்டது முதல் பெண்ணுக்கு “அந்தோ ! நமக்கு எத்தகைய புருடன் வருவானோ! மாமியார் எப்படிப்பட்டவள் வருவாளோ !” என்ற வியாகூலம் உண்டாய் விடுகிறது. இதுமட்டுமல்ல; ஆண்பிள்ளை தான் பிறந்தது முதல் தன் முன்னோர்களின் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தனாய் விடுகிறான். செல்வம் பொருந்திய குடும்பத்தில் பிறந்தபிள்ளை தான் செல்வவந்தனென்றே உணர்கிறான். கொஞ்சம் புத்தியறிந்தது முதல் அப்பெருமையும் சந்தோஷமும் அவனுக்குண்டு.

அந்தோ ! பெண்களோ, எவ்வளவு செல்வம் பொருந்திய குடும்பத்தில் பிறந்தாலும் புத்தி யறிந்து உலகபோகங்களை யநுபவிக்கத் தொடங்கும் சமயத்தில் அவர்கள் நிலைமை யடியோடு மாறி விடுகிறது. சற்றேறக்குறைய அவர்களுக்கு அது ஒரு வித மறு பிறப்பென்றே கூறலாம். மணம் முடிந்தது முதல் கணவன் வீடே அவள் வீடு. கணவன் சொத்தே அவள் சொத்து. கணவன் தன் தந்தையினும் செல்வவந்தனா யிருந்தால் மிக்க சந்தோஷமே. தன் தாய் வீட்டினும் கணவன் வீடு மிக்க ஏழ்மையான நிலைமையிலிருந்தாலோ மிக்க துயரமும் கௌரவத் தாழ்வு மடைகிறாள். அதோடு தன் கணவன் தன் சகோதரர்களை விட அதிக கல்விமானாகவும் கௌரவ முடையவனாகவும் இருந்தால்தான் தனக்குப் பெருமையும் சந்தோஷமு முண்டு. அப்படிக்கின்றி கணவன் தன் சகோதரரினும் குறைந்த கல்விமானா யிருந்தால் தனக்கு மிக்க அகௌரவமே. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து கணவனிடம் சென்றபின் செல்வத்தை யநுபவிக்கும் பெண்களில் சிலர் அகங்

காரமும் பெருமையுமடைந்து, பெற்றோர், சகோதரர் மற்றுமுள்ள சுற்றத்தார், இவர்களை அலட்சியமாகவும் அகௌரவமாகவும் நடத்துவதுண்டு. ஆனால் அவர்கள் அதற்காகக் கடவுள் தண்டனையை யநுபவிப்பார்களென்பதில் சற்றும் சந்தேகமேயில்லை.

இவ்வாறு பலவிதக் கலவரங்களை யநுபவித்துக் கொண்டு கடைசியில் விதிப்பயன்படி ஒருவனை மணம் செய்து கொள்கிறாள். தாய் தந்தையர் இவள் க்ஷேமமா யிருக்க வேண்டுமென்றே ஜோதிடம் பார்த்தும், பல வழிகளிலும் பிள்ளையின் நிலைமையைப்பற்றி விசாரித்தும் எவ்வளவோ ஜாக்கிரதையோடு கலியாணம் செய்து கொடுத்தாலும் அவள் விதிக்குத் தக்க கணவனேதான் வந்தமைகிறான் என்பது திண்ணம்.

கலியாணமானதே பெற்றோர் சகோதர சகோதரிகள் முதலிய யாவரையும் விட்டு, தனியே முன் பின் அறிமுக மில்லாத புது மனிதர்களிருக்கும் ஒரு குடும்பத்தில் போய்ச் சேரவேண்டும். மேலும் அக்குடும்பத்தின் முதல்தரப் பொறுப்புகளை யேற்றுக் கொள்ளும் தொழிலில் அமரவேண்டும். அதற்கு மேல் அங்கு புதிதாய் ஏற்படும் கஷ்டங்களோ கொஞ்சமல்ல. ஈண்டு விரிவிற்கஞ்சி அவற்றைச் சுருக்கமாகவே கூறி, மேற் செல்வோம்.

கணவனுக்கும் மனைவிக்கும் உண்டாயிருக்கும் சம்பந்தங்களால் சுபாவமாகவே மனைவிக்குக் கணவன்மேல் அன்புண்டாய் விடுகிறது. ஆனால் மாமியார்மேலும், கணவன்கூடப் பிறந்தவர்கள் மேலும், இன்னும் உள்ள அவர்களின் சுற்றத்தார் மேலும் அவ்வாறு சுபாவமாய் அன்புண்டாகக் காரணமில்லை. ஆகையால் கணவனுக்குத் திருப்தி செய்வதற்காக அவர்களிடத்தில் அன்பு காட்டி நடந்துகொள்ள வேண்டும். இது கஷ்டமானதொழிலேயாகும்.

அவர்களும் ஆரம்பமுதல் தன்னிடம் பட்சத்தோடு நடந்து வந்தால் சீக்கிரம் பரஸ்பர அன்பு நிலைத்து விர்த்தியாய் விடுகிறது. ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் அப்படிச் சம்பவிப்பதில்லை. மருமகள் வந்த பிறகே மாமியார் தன் குடித்தனத்தையும், குடும்ப சொத்துகளையும் தனக்கே உரித்தானவை யென்று மதிக்கத்தொடங்குவதோடு, மருமகளை யொரு வேலைக்காரிபோல் நடத்தவும், அவளை நம்பாமல் அரிசி, பருப்பு, மிளகாய், புளி, முதலியவற்றை யெல்லாம் பெட்டிகளில் வைத்து பூட்டிச் சாவியைத் தானே வைத்துக்கொண்டு, வேளை வேளைக்கு வேண்டியவற்றை யளந்து கொடுக்கவும் தொடங்குகிறாள். அதோடு மருமகள் மேல் குற்றம் கண்டு பிடித்து அதைப்பலருக்குக் கூறுவதையே முக்கியவேலையாய் வைத்துக் கொள்கிறாள். இத்தகைய அறிவிலிகளின் கொடுமைகளைப் பற்றி இங்கு அதிகம் கூற இடம்போதாது.



இவர்கள் அப்படி நடந்துகொண்டாலும் மருமகள் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு அடங்கி மரியாதையோடும் அன்போடும் நடந்துகொள்ள வேண்டியவளா யிருப்பதால் அவள் கஷ்டத்திற்கு அளவேயில்லை.

சில மனைவியர்கள், கணவன் சற்று குறைந்த அறிவுடையவனா யிருந்து தன்மேல் அளவு மீறிய அன்புகாட்டி தன் மனப்போக்கின்படி நடக்கத் தொடங்கிவிட்டால், தங்கள் மாமியார் மைத்துனன்மார் முதலியவர்களை மிக்க அலட்சியமாய் நடத்துவதோடு புருடனையே மதிக்காமல் அவன் பிரியத்திற்கே மாறாய் நடந்து குடும்பத்தில் மிக்க துயரத்தையும் கணவனுக்கு அகௌரவத்தையும் கெட்ட பெயரையும் உண்டாக்குகிறார்கள்.

இது கல்வியில்லாக்குறைவால் நேரிடுவதேயாகும். ஆயினும் நாம் கடந்த சஞ்சிகையில் இது சம்பந்தமான வியாசத்திற்கு எழுதிய குறிப்பில் கூறியபடி, பெண்களுக்கு இப்போது பெரும்பாலும் கற்பிக்கப்படும் கல்விமுறையில் இந்திய ஒழுக்கம் ஒரு போதும் மாறாது; அதற்குமாறாய் அகங்காரமும், நமது ஆன்மார்த்த இலௌகீக அசாரங்களில் அவமதிப்பும், துராசாரங்களும், நாஸ்திகமும் உண்டாகித் தாய்நாட்டிற்குச் சொல்லொணாக் கேட்டையே விளைவிக்கும். மற்றவையுண்டாயினும் நாஸ்திகம் எப்படி யுண்டாகுமெனின், நமது மக்களுக்கு நாம் நமது மதக்கல்வியைப் போதிக்காததாலும், நமது மதாசாரங்களைத் தாழ்வுபடுத்தி அன்னிய மதாசாரங்களையே நாகரீகமானவையென்றுகூறும் நூல்களையவர்கள் கற்கவிடுவதாலும், அன்னியமதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு அவர்களை யனுப்பி நமது மதத்தை யிழிவு படுத்திக்கூறும் அன்னிய மதஸ்தர்கள் அவர்களுக்குக் கல்விபோதிக்கும்படி விடுவதாலும் அவர்களுக்குத் தமது சொந்த மதாசாரங்களில் அன்புநீங்கி அலட்சியம் ஏற்பட்டுவிடுகிறது சுபாவமே. அன்னியமதத்திலோ நமது மக்களுக்குப் பற்றுண்டாவது சாத்தியமானதல்ல. இதனால் நாஸ்திகம் தானே உண்டாய்விடுகிறது.

**நமது பெண்களுக்கு வேண்டிய கல்வி எதுவெனின் :—**

1. நமது தாய்ப்பாஷையைக் குற்றமின்றி தெளிவான நடையில் எழுதவும், பதம் பிரித்துவாசிக்கவும் சாதாரணமான தோத்திரங்கள் முதலிய பாட்டுகளுக்குப் பொருளறிந்து கொள்ளவும் போதுமான இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தால் போதும்.
2. கணக்கு—குடும்பத்திற்கு வேண்டிய வரவு செலவு கணக்கைத் தப்பின்றி வைக்கவும், ஒரு வேலைக்காரனிடம் பணம் கொடுத்து சாமான்கள் வாங்கிவரச் செய்தால், அவன் அந்தந்த சாமானுக்குக் கணக்கின்படி விலை கொடுத்து சரியான மிச்சப்

பணத்தைக் கொண்டு வந்திருக்கிறுன் என்பதை யறிந்து கொள்ளவும் அவசியமான கணக்கு மட்டும் தெரிந்தால் போதும்.

3. இவையன்றி இவர்கள் அவசியம் கற்கவேண்டிய நூல்கள்;-

பெண்களுக்கு அவசியமாய் வேண்டிய அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு என்ற குணங்களைப்பற்றி தெளிவாகவும், விரிவாகவும் கூறும் நூல்களும், கற்பின் இலக்ஷணங்களையும், பெருமையையும், அதனுல் அடையக் கூடிய நன்மைகளையும், அத்தகைய கற்பினுல் தெய்வ வல்லமையோடு மகிமை பெற்று விளங்கிய நம் நாட்டுக் கற்பரசிகளின் சரித்திரங்களையும் கூறும் நூல்களும். இவை யன்றி நமது இலௌகிக மதாசாரங்களைப் பற்றி கூடியவரையில் அவற்றின் ஒப்புயர்வற்ற தன்மையைத் தெளிவாய் விளக்கிக் காட்டிப் போதிக்க வேண்டும். ஈசுர பக்தியை விளைவிக்கத் தக்க தேவார திருவாசக பிரபந்த மாதி தோத்திரங்களை நன்றாய் வாசிக்கக் கற்பிக்க வேண்டும். பெண்கள் தம் பெற்றோர் முதலியவர்களிடமும், புருடன், மாமிமார், நாத்திமார், மைத்துனன்மார், சுற்றத்தார் இவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகளையும், குடும்பத்தில் கவனிக்க வேண்டிய சுகாதாரவிதிகள், குழந்தைகளை வளர்க்கும் முறைமைகள், ஈசுரபக்தி, பொறுமை, கருணை, தான தருமம் சமையல் செய்யும் முறைமைகள், இத்தகையவற்றைப் போதிக்கும் நூல்களைக் கற்பிக்க வேண்டும்.

நமது மகிமை பொருந்திய தாய்நாட்டில் சத்தியம், வாய்மை, ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, இராஜபக்தி, தேசபக்தி முதலியவற்றால் பிரக்யாதிபெற்று பூத உடம்பு நீங்கினும் என்றும் புகழுடம்போடிருக்கும், அரிச்சந்திரன், நளன், பாண்டவர், முதலிய ஆன்றோர் சரித்திரங்களையும், இதிகாச புராணங்களையும் மதசாத்திரங்களையும் பின்னுல் அவர்களே வாசித்துணர்ந்துகொள்ளும் வண்ணம் பயிற்சி செய்யப்பட வேண்டும். மதக்கல்வியில் எவ்வளவு அதிகம் கற்பதாயினும் நலமே.

4. பூகோளசாத்திரம்:—இது சாதாரணமாய் யாவரும் அறிந்திருக்க வேண்டிய நூல்களில் ஒன்று. ஆனுல் நமது பெண்மக்கள், பூமியின் வடிவம், அதிலுள்ள பலதேசங்கள், கடல் மலை நதிகள், முக்கிய நகரங்கள், முதலியவற்றின் இயற்கை யமைப்பையும், பூகோளபடத்தில் அவற்றின் இருப்பிடத்தைக் கண்டு தெரிந்து கொள்ளவும் கற்றுக்கொண்டால் போதுமானது. ஆனுல் தாய்நாட்டைப் பற்றிமட்டும் சற்று விவரமாகவும் அதிலும் அவரவர்கள் வசிக்கும் இராஜதானியைப் பற்றி ஜில்லாக்கள், நதிகள், மலைகள் நகரங்கள், விளைபொருள்கள் முதலியவிசேஷங்களோடும் தெரிந்து கொண்டிருப்பதுமிக்கநலம்.



இத்தகைய கல்வியைவிட்டு அவர்களுக்கு அநுவசியமான அன்னிய ஆசாரங்கள் சரித்திரங்கள் முதலிய வற்றையும், அவற்றோடு சம்பந்தப்பட்ட அன்னிய பாஷையையும் கற்றுக்கொடுப்பது மிக்ககெடுதியாகவே முடியும்.

இனி மனைவிக்கும் கணவனுக்கு முள்ள கடமைகளையும், தாரதம்மியத்தையும், ஒருவருக் கொருவர் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகளையும் பற்றிக்கூறித் தொடங்கிய விஷயத்தைச் சுருக்கமாய் முடிப்போம். குடும்பத்தில் கணவனுக்குள்ள கடமைகளைக் காட்டிலும் மனைவிக்கே மிக்க அதிக கஷ்டமான கடமைகளிருக்கின்றன. ஆடவன் தொழில் செய்து பொருள் சம்பாதித்து அதை முழுதுமோ, குடும்பச் செலவிற்கு வேண்டிய அளவோ, மனைவியினிடம் கொடுத்து விடுவதோடு அவன் கடமை முடிந்துவிடுகிறது. குடும்பத்திற்கு வேண்டியவற்றை வாங்கி, அவற்றை வீண் செய்யாமல் சிக்கனமாய்ச் செலவு செய்தல், புருடன் மனதிற் கிசைந்த அன்னகாரங்களை ருசியாய்ச் சமைத்து அவனையும் மக்களையும் மாமியார் மாமனுர் முதலிய அனைவரையும் போஷித்தல், அவர்கள் மனங்கோணுதபடி வேண்டிய உபசாரங்களைச் செய்தல், விருந்தினரை யன்போடு உபசரித்து உண்டியளித்தல், எந்த விஷயத்திலும் கணவன் மனதிற்கு வருத்தம் வராதபடி சாக்கிரதையாய் நடந்து கொள்ளுதல், முதலிய எல்லாப் பொறுப்பான கடமைகளும் மனைவியுடையனவையே.

இத்தகைய மனைவிக்கும் கணவனுக்கும் உள்ள தாரதம்மியமும் சம்பந்தமும் எத்தன்மையன வென்று பார்ப்போம்.

கணவனும் மனைவியும் உடல் இரண்டும் உயிர் ஒன்றும்போல் பரஸ்பர அன்போடு மரணமட்டும் மனம் ஒருமித்து இல்லற தருமத்தை நடத்த வேண்டியவர்கள். மனைவி கணவன் சொல்லுக்கு மாறு கூறுமல் அவனையே கடவுளாகப் பாவித்து நடக்க வேண்டியவள். கணவன் எப்படிப்பட்டவனுயினும் அவன் மேல் வெறுப்பு கொள்ளாமல் அவனுக்குப் பணிவிடை செய்வதையே தன் தேவ பூசையாய்க் கொள்ளவேண்டியவள். அவளே கற்புடையவள். அவள் முடிவில் என்றும் அழிவில்லாப் பதவியை யடைவாள். திரிமூர்த்திகளும் அவளுக்கு அஞ்சுவரெனின் அவள் மகிமையைப்பற்றி நாம் இன்னும் விரித்துரைக்க வேண்டுவதில்லை. மனைவி அவ்வாறு தன் கணவனிடம் அடிமைபோல் நடந்து கொண்டாலும், அவர்களுக்குள்ள தாரதம்மியம், குருவும் சீடனும், தந்தையும் மகனும், இராஜனும் மந்திரியும், உயர்ந்த கல்வியறிவும் மூத்த வயது முடையவனும் தாழ்ந்த கல்வி யறிவும் குறைந்த வயதுமுடையவனுமாகிய இரண்டு பிராணசிநேகர்கள், ஆகிய இவர்களுக்குள்ள தாரதம்மியத்தைப் போன்றதேயன்றி, மிருகத்தைப் போல் விலைக்கு வாங்கிய அடிமைக்கும் எஜமானுக்கும் உள்ள தார தம்மியத்தைப் போன்றதல்ல.

அல்லது வேலைக்காரனுக்கும் எஜமானுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் போன்றது மல்ல.

இவ்வாறிருப்பதால் இவர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? மனைவி தன் கணவனிடமும் மாமனார் மாமியார் முதலியவர்களிடமும் நடந்துகொள்ள வேண்டிய முறைமையைப்பற்றி ஒருவாறு கூறியே யிருக்கிறோம். அந்த நெறி பெரும்பாலார்க்குத் தெரிந்துமிருக்கிறது. மாமியார் மாமனார் கணவன் இவர்கள் தங்கள் குடும்பத்திற்கு வந்த மருமகளை யெப்படி நடத்த வேண்டிய தென்பதையே அனேகர் உணராமலும் பலர் உணர்ந்தும் நியாயப்படி நடவாமலும் இருக்கக் காண்கிறோம்.

மாமியார் கல்வியறிவுடைய புத்திசாலியா யிருந்தால் மருமகளை அவ்வார்த்தை குறிக்கும் அர்த்தத்திற் கொப்ப, தன் மகன் ஒருவளை மணந்து கொண்டு போய் விட்டதால் அவனுக்குப் பதிலாகக் கடவுளாலளிக்கப்பட்ட இரண்டாவது மகளென்று கருதி, அவளை யன்போடு நடத்துவாள். மருமகள் கிடைத்ததே "அப்பா! நமக்கிருந்த குடும்பபாரம் ஒழிந்தது. இனி நாம் நிம்மதியாய் ஒரு கவலையுமின்றி ஈசுரத்தியானத்தில் காலத்தைக் கழித்து நற்கதியடைய முயலவேண்டும்" என்று தீர்மானித்துக் கொஞ்சநாள் வரையில் மருமகளைக் குடும்ப விவகாரங்களில் பழக்கவைத்துப் பின்பு நிம்மதியாயிருப்பாள். அப்படி யிருக்கச் சில மாமிமார்கள் மருமகளைப் படுத்தும் பாடோ கடவுளுக்கே அற்புதம். மாமனாரும் மருமகளை மகளாகவே பாவித்துப் பட்சத்தோடு நடத்த வேண்டும். ஆனால் சிற்சில அறிவிலிகள் கடுமையாக நடத்துவதோடு அவமரியாதை யாகவும் வைகிறார்கள்.

கணவன் "தன் மனைவி தன் தேகத்தில் பாதி யென்றும், சுகதுக்கங்களில் தனக்குச்சமபாக முடையவளென்றும், எப்போதும் அவளுக்குத் துரோகம் செய்யாமல் அவளை யன்பாய் நடத்தி யாதரிப்பதாகவும், தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சம்பந்தம் தெய்விகம் பொருந்திய தாகையால் உயிருள்ள வரையில் ஒருவரையொருவர் வெறுக்காமல், ஒருவருக்கொருவர் துரோகம் செய்யாமல், மனவருத்தமுண்டாகும்படி நடந்து கொள்ளாமல், அன்பு பொருந்தி இல்லறத்தை நடத்தக் கடவோம் என்றும், ஒருவருக்கொருவர் துரோகம் செய்தால் இன்னின்ன நரகதண்டனைகளை யடையக்கடவோம்" என்றும் கலியாணச் சடங்குகள் நடக்கும் காலத்தில் அஷ்டதிக்குப்பாலர்கள், ஆகாயவாணி, பூமாதேவி முதலியவர்களைச் சுட்டிக்காட்டி சத்தியம் செய்கிறான் - மனைவியும் அவ்வாறே செய்கிறாள்.

இதனால் மனைவிமட்டும் கணவனைத் தெய்வமாகக்கருதி பூசித்து அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டியவள் என்ற ஒரு விதி



யாசம் தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும் மனைவி தன்னிடம் நடந்து கொள்வது போலவே கணவனும் மனைவியிடம் நடந்து கொள்ள வேண்டியவனே யென்று நன்கு விளங்குகிறது.

அவ்வாறிருந்தும், சிலகணவன்மார் மிக்க மூடத்தனமாய் நடந்துகொண்டு மனைவிமாருக்குத் துயரத்தையும் வெறுப்பையும் உண்டாக்குகிறார்கள். சில அறிவிலிகள் உண்ணும் பொருள்களில் கூடத் தாங்கள் உண்பதைவிடத் தாழ்ந்த பொருள்களையே மாதர் உண்ணவேண்டுமென்று கருதுகிறார்கள். சில மதியீனர், "நம்மனைவியும் தாயாரும் நமது ஆதரவில் இருப்பவர்களாயிற்றே, நாம் அருந்தும் பண்டங்களை யவர்களும் குறைந்த அளவாயாவது அருந்த வேண்டுமே, இன்றேல் இது கேவலம் வஞ்சனை யல்லவா" என்பதைக்கூடக் கருதாமல், அந்த இரண்டுமாதர்கள் பாகத்தைக் கூடக் கேட்டு வாங்கியேனும் தாங்களே தின்றுவிடுகிறார்கள்.

சிலர் மனைவியைப் பெயரிட்டாவது சமிக்ஞை வார்த்தைகளாலாவது அழைப்பதை விட்டு "அடியா! என்னடி!" என்று கூப்பிடுகிறார்கள். அற்ப குற்றத்திற்காக, தாசி, வேசி, கழுதை, நாய் முதலிய அசேதகமான மொழிகளால் வைகிறார்கள். அவர்கள் பெற்றோர்களையும் சேர்த்துத் திட்டுகிறார்கள். இரண்டு கால் மிருகங்களுக்குச் சமதையான சில கணவன்மார், கையில் அகப்பட்டதை யெடுத்து அடிக்கவும் அடிக்கிறார்கள். ஒரு பெண்ணைப் பேசும் போதே "என்ன நகைகள் போடுகிறீர்கள்? என்ன சீதனம் கொடுக்கிறீர்கள்?" என்று பிரமாதமாய்க் கேட்டுக்கொள்வதோடு, பெண் வீட்டின் நிலைமையையும் நன்றாயறிந்து கொள்கிறார்கள். அப்படி யிருந்தும் பிறகு மாமியாரும் கணவனும் அடிக்கடி அப்பெண்ணை "உன் அப்பா வீட்டு பவிஷு தெரியாதோ? நீ கொண்டு வந்த சீதனந்தான் இங்கே வீடுநிறைய இருக்கிறதோ? படுக்கப் பாயும் குடிக்கத் தகரச்சோடுதபலைக்குங் கூட வழியில்லாமல் வந்தது யாருக்கும் தெரியாதோ? ..." என்று வைகிறார்கள். நேயர்களே! அந்தப் பெண்ணின் மனம் அதைக்கேட்டு எவ்வளவு வேதனைப்படும் என்பதைச் சற்று சிந்தியுங்கள். அந்தப்பெண் மேல் என்ன குற்றமிருக்கிறது? அதையறியாது அவளை யவ்வாறு மனவருத்தமடையச்செய்யும் மூடர்களை ஆறறிவுடைய ஜன்மத்தில் சேர்ப்பதா, ஐந்தறிவுடைய வர்க்கத்தில் சேர்ப்பதா?

கணவனோ "தான் எத்தனை வைப்பாட்டிகளை வைத்துக்கொண்டாலும் குற்றமில்லை, தன் மனைவி மட்டும் அன்னிய ஆடவரோடு வார்த்தையாடவும் கூடாது; நமக்கு வேலைசெய்யவும் நமது மிருக இச்சையைத் தணித்துக்கொள்ளவுமே நாம் இவளை விலைக்கு வாங்கியிருக்கிறோம்," என்று எண்ணி யிருக்கிறான். பெரும்பாலான ஆடவர் தாங்கள் பரஸ்திரீ கமனம் செய்வதால் குற்றமில்லையென்றே கருதியிருக்கிறார்கள்.

அந்தோ! இதற்குக் காரணம் கலியாண காலத்தில் நாங்கள் செய்யும் பிரமாணம் வட மொழியிலிருப்பதால் அது இன்னதென்றே அவர்களுக்குத் தெரியாது. வட மொழியில் கூறப்படும் அதற்குப் பொருள் இன்னதென்று அதைக் கூறும் புரோகிதர்களில் அநேகருக்கே தெரியாது. வட மொழியில்தான் கூற வேண்டுமென்று விதியிருந்தாலும், அப்படிக் கூறியபின் மணமகன் மணமகளுக்கும் சபையிலுள்ளோருக்கும் விளங்கும்படி தாய்ப் பாஷையில் அதைக் கூறச்செய்வதில் ஒருகுற்றமு மில்லை. அந்த வடமொழி சுலோகங்களையும் அவற்றின் தமிழ் அர்த்தத்தையும் யாரேனும் புண்ணியவான்கள் நமக்கெழுதி யனுப்பினால் அவற்றை வெளியிடச்சித்தமா யிருக்கிறோம். இது பெரும்புண்ணியச் செயலாகும். நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்குழைக்கும் அறிவாளிகள் கலியாண காலங்களில் அவற்றைத் தாய்ப் பாஷையில் கூறச்செய்வதற்காகத் தகுந்த முயற்சி யெடுத்துக்கொள்வார்களாயின் அவர்கள் நம் நாட்டு ஆடவர் மாதர் இருபாலார்க்கும் பெரிய நன்மையைச் செய்தவர்களாவார்கள். அநேகரை நரகவேதனை யடையாது தடுத்து, அநேககுடும்பங்கள் பெருந்துயரத்தையும் துன்பங்களையும் அடையாவண்ணம் காபாற்றுவதனால் விளையும் பெரும் புண்ணியத்தைப் பெறுவார்களென்பது சத்தியம். ஆன்றோர்கள் இதைக் கவனிக்க வேண்டுமாய் கருணையங் கடலாகிய பரம் பொருளைப் பிரார்த்திப்போமாக. ஓம் தத்ஸத்.

---

## சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

நமது அன்பார்ந்த சந்தாநேயர்களே! விஷயஞானம் புரியும் கல்வியாளராகிய நண்பர்களே! யாவும் ஆக்கி யளித்துத் துடைக்கும் அருளுருவாகிய அநாதியாம் பரமன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நீண்ட ஆயுளையும், சுகக்ஷேமத்தையும், இவ்வுலகில் குறைவற்ற இன்பத்தையும், மறுமையில் நித்தியானந்தப் பேற்றையும் அருளுமாறு முழுமனதோடும் பிரார்த்தித்து, கீழ்க்கூறப்படும் வேண்டுகோளை யொவ்வொருவரும் சற்று மனம் வைத்துச் செவியேற்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

அரியநண்பர்களே! சச்சிதானந்தப் பரம் பொருளின் கருணைகடாட்சத்தால் ஆனந்தபோதினியில் உங்களுக்கு ஏற்பட்ட அபிமானத்தாலும், அன்பாலும், அதன் அபிவிர்த்திக்காக நீங்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையாலும் நமது ஆனந்தனின் நான்காவதாண்டு செவ்வனே முடிந்து ஐந்தாவது ஆண்டுபிறக்க இன்னும் ஒரு மாதமே யிருக்கிறது.

நேர்ந்திருந்த மகாகொடிய யுத்தத்தால் தனக்கு வேண்டிய சௌகரியங்களில் குறைவு நேர்ந்ததன் நிமித்தம் நமது ஆனந்தன் சில கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டிருப்பினும், பிரதி மாதமும் தவறாமல் உங்களை வந்து தரிசித்து வருவதும், இப்போது ஆனந்தனுக்கு வேண்டிய வோர் முக்கிய உதவி ( அச்சுக்கூடம் ) கிடைத்திருப்பதும் நீங்களறிந்த விஷயங்களே.



அச்சுக்கூடம் ஏற்பட்டும் நாம் நியாயப்படி எதிர்பார்த்த பலன் என்னமோ கிடைக்கவில்லை. ஏனெனில் யுத்தம் நின்று விட்டபோதிலும் ஐரோப்பாவில் இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய இரண்டொரு நாடுகள் தவிர மற்றவற்றிலெல்லாம் கட்சிபேதங்கள் ஏற்பட்டுக் குழப்பங்களை நடத்திக்கொண்டிருப்பதால், சமாதான ஏற்பாடுகள் இன்னும் பூரணமுடிவிற்கு வரவில்லை. இதனால் காகிதம், மசி, யந்திரச்சாமான்கள் முதலிய அச்சுக்கருவிகளெல்லாம் இன்னும் உயர்ந்த விலையிலேயே யிருக்கின்றன. சந்தாவோ குறைந்த அளவிலேயே இருந்து வருகிறது.

நண்பர்கள் இந்த உண்மையைக் கருத்தில் வைத்து இந்த நான்கு வருடங்களாக நடந்து கொண்டதுபோல், ஐந்தாம் வருடமும் நம்மானந்தனை யாதரிப்பதோடு உங்கள் நண்பர்களையும் சந்தாதாரராய்ச் சேரும்படி ஸிபாரிசு செய்யவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். இவ்வருட மாசி மீ பத்திரிகையின் 288-வது பக்கம், 3-வது பத்தியில் நாம் கூறியபடி நண்பர்கள் இனி யெடுத்துக்கொள்ளும் சிரத்தையே ஆனந்தனுக்கு மிக்க பயனளிக்கும். ஆனந்தன் விஷயத்தில் பூரண அபிமானமும் அன்பும் வைத்துள்ள நண்பர்களுக்கு இது விஷயமாய் நாம் அதிகம் கூறவேண்டுவது அனாவசியமேயாகும்.

நண்பர்களே! ஐந்தாவது வருட சந்தாத்தொகையை மணியார்டர் மூலமாய் ஜூலை மாதம் 1உ க்கு முன்பே நம்மிடம் வந்து சேருமாறு அனுப்பும்படி 3-வது வருடக்கடைசியில் கேட்டுக்கொண்டிருந்தும், மிகச் சிலரே யவ்வேண்டுகோளுக்கு மனமிரங்கினார்கள். அநேகர் ஜூலை மாதத்தில் 4-வது வருட வி.பி. கள் அனுப்பப்பட்டபின்பு மணியார்டர் அனுப்பினார்கள். பலர் மிக முக்கியமான சந்தா நெம்பரைத் தெரிவிக்காமலும், அவர்களில் சிலர் தங்கள் விலாசத்தையும் தெரிவிக்காமலும் மணியார்டர் அனுப்பி விட்டு நமக்கு மிக்க தொந்திரை யளித்ததோடு பத்திரிகை வரவில்லையென்று தங்களுக்கும் மனக்கவலையை யுண்டாக்கிக் கொண்டு நமக்கு நிஷ்டூரமாகக் கடிதங்களும் எழுதினார்கள். இரண்டொரு சிறு விஷயங்களைச் சற்று மனதில்வைத்து நடந்துகொண்டால் நமக்கும் வீண் சிரமமில்லாது போவதோடு, சந்தா தாரருக்கும் பத்திரிகை ஆலஸ்யமாவது தவறுதலாவது இன்றிச்சரியாய் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் நண்பர்கள் கீழ்க்காணும் விஷயங்களை இம்முறையாவது கவனித்து நடக்கும்படி பிரார்த்தித்துக் கொள்கிறோம்:—

1. சந்தா தாரர்கள் மணியார்டர் மூலமாய் சந்தாத் தொகையை யனுப்பிவிடுவதால் அநேக கஷ்டங்கள் நேரிடாமற்போகும். அவ்வாறு உதவிபுரியும் நண்பர்கள் 1919 ௵ ஜூன் மீ 30 உ-க்குள் நம்மிடம் வந்து சேரும்படி சந்தாதொகையை மணியார்டர் மூலமாகவே யனுப்பிவிடவேண்டும்.

சந்தா நம்பரையும் விலாசத்தையும் கூபனில் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

2 ஐந்தாவது வருட பத்திரிகை வேண்டாதவர்கள் தயவு செய்து மேற்கண்ட 30—6—1919-க்குள்ளாகவே தெரிவித்து விடவேண்டுமாய் மிகவும் வேண்டிக்கொள்கிறோம்.

கடந்த வருடம் அநேகர் முன்னாடி தெரிவிக்காமலே பிறகு வி.பி. யை வாபீஸ் செய்தார்கள். சிலர் சந்தா நம்பர் விலாசம் இரண்டையும் தெரி

விக்காமலே "எனக்கு 4-வது வருட சஞ்சிகை யனுப்பவேண்டாம்" என்று எழுதிக் கையொப்பம் மட்டும் வைத்துவிட்டார்கள். அவர்கள் வி.பி. யை வாபீஸ் செய்துவிட்டு "நான் முன்னமே அனுப்பவேண்டா மென்று தெரிவித்திருக்க நீர் வி-பி யனுப்பவேண்டிய காரணமென்ன?" என்று நமக்கு எழுதுகிறார்கள். அந்தோ இதுதானு சஞ்சிகை யபிமானிகளாகிய அறிவாளர்செய்யும் உதவி?

3. வெளி நாடுகளில் பினங்கு, மலாக்கா, சிங்கப்பூர் இந்த இடங்கள் தவிர வேறிடங்கட்கு வி-பி யெடுக்கப்படுவதில்லை. ஆகையால் வெளி நாட்டுச் சந்தாதாரனைவரும் மேற்கண்டபடி 30—6—1919-க்குள் இங்கு வந்து சேரும்படி சந்தா தொகையை முன் பணமாகவே யனுப்பிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். அப்போது தான் பின் சஞ்சிகைகளும், அவர்களுக்கு ஆலசிய மின்றி வரும்.

இம்முறையாவது நண்பர்கள் இவற்றைக் கவனித்து நடந்து கொள்வதால் நமக்குப் பெருதவி செய்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

நேயர்களே! சந்தாதாரர்களின்மேல் விலாசங்களை இனி அச்சியந்திரத்திலே யனுப்பத்தொடங்கி யிருக்கிறோம். அதில் அவர்கள் பெயருக்குமுன்பு இருப்பதே சந்தாநம்பர் என்று அறிந்து கொள்ளக் கோருகிறோம். இம் மாதமே சிலருக்கு அச்சடித்த விலாசமே வரும். சீக்கிரத்தில் யாவர் விலாசங்களும் அச்சியற்றி முடித்துவிடும். ஆதலால் சிலருக்கு மட்டும் அச்சடித்து வந்ததே நமக்குவரவில்லையே யென்று ஒருவரும் மனவருத்த மடையாதிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஆண்டவன் அருள்புரிந்து நமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத்சத். பத்திராதிபர்.

## "தாய்ப்பாஷைமூலம் கல்விகற்பித்தல்"

தாய்ப்பாஷை மூலம் கல்வி கற்பிக்கவேண்டுமென்னும் விஷயம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் கல்விகற்பதினுலுண்டாகும் கஷ்டம் இரண்டு. முதலாவது ஆங்கிலத்தைப் போன்ற அந்நியபாஷை கற்பது கஷ்டம். இரண்டாவது அப்படி அந்நியபாஷையைச் சிரமப்பட்டு கற்றும் தகுதியான பிரதி பிரயோஜனமின்றிப் போதல். அநேக கஷ்ட நஷ்டங்களுக்குட்பட்டு வருஷக்கணக்காய் உருப்போட்டுக் கதறி, பி. ஏ. பட்டம் பெறினும் அன்னியர்களைப் போல் தலைநிமிர்ந்து வருவது மிகவும் துர்லபம். இதற்கு இரண்டு காரணங்களுண்டு:—

முதலாவது ஆதனமுறைகளை நவீனபாஷையில் ஏககாலத்தில் கற்பதனுல் விஷயஞானம் தெளிவாய்த் தெரிவதில்லை. மற்றவர்கள் அந்நிய நாட்டினின்றும் வந்தவுடன் அரசாங்கத்தாரால் இந்தியர்களைவிட மேலானவர்களாக மதிக்கப்படுதல். இந்திய சரித்திரக்காரரான ஸ்ரீமான் யதுநாத சர்க்கார் அவர்களும் முகத்திலரும்பு முளையாத ஆக்ஸ்பர்ட் B. A. ஒருவரும் ஒரு உத்தியோகத்திற்கு விண்ணப்பிக்க, கவர்ன்மெண்டார் இந்த இரண்டாவதான ஆக்ஸ்பர்டு பி. ஏ. யை எடுத்துக் கொண்டதே இதற்கு நிதர்சனம். இன்னமிதுபோன்ற கஷ்டங்கள் நம்மவரின் மனதில் ஆழ்ந்து பதிந்துவருவ



தால் வீண் மனோவியாதி ஏற்படுவதற் கென்னதடை? மேலும் பரீக்ஷைக்குப் போகும் மாணவர்களில் நூற்றுக்கு 80 பேருக்குமேல் தேறாமல் போகிறது எதனுல்? சிறுவயதிலிருந்து அந்நியதேசியக் கல்வி முறையில் மூழ்கியிருப்பதால் நாளடைவில் அந்நியர்களாகவே மாறிவிடுகிறார்கள். இதனுல் நமது பெருமை தங்கிய ஹிந்துமதப் பூர்வீக தர்மங்கள் சிதைந்து நமது மாணவர்களுக்குத் தாய் நாட்டின் மீதும் தாய்ப்பாஷையின் மீதும் அபிமானமின்றி சேர்விரோதிகளாகி விடுகிறார்கள். ஆங்கிலக் கல்வியினுல் ஆண்மையை விருத்தியுண்டா? இன்னும் அந்நியபாஷையின் கஷ்டங்களை எழுதவென்றால் இடம்போதாது. ஆதலின் சுருக்கி வரைகிறோம்.

உலகத்தில் பிறதேசங்களிலும் தாய்ப்பாஷைமூலமே கல்வி கற்பிக்கப் படுகிறது. இந்தியாவில் அந்நியபாஷையில்தான் கல்வி கற்பிப்பதெனில் இது விசித்திரமெனவே கருதவேண்டும். உதாரணமாக இங்கிலாந்தில் ஜர்மனியோ அல்லது பிரஞ்சுபாஷையோ எதிலாவது கல்விகற்பித்தால் அத்தேச மாணவர்கள் சம்மதப்படுவார்களா? அப்படிக் கற்றாலும் எத்தனைபேர் தேறுவார்கள். இதைச் சொல்லவேண்டியதே யில்லை. அதுபோலவே இந்தியர்களுக்கும் கஷ்டம் ஏற்படுவதை யாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. இத்தற்கால இந்திய மாணவர்களின் ஸ்திதியைச் சற்று கவனிப்போம். நமது சிறுவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து பிரதி விஷயமும் அந்நிய பாஷையில் கற்பிக்கப்படுவதனுல் விஷயஞானம் குறைவா யிருக்கிறது. இதுவிஷயமாய் ஸ்ரீமான் யதுநாத சர்க்கார் காட்டிய சிறு உதாரணம் பின்வருமாறு: "சாதாரணமாய் நமது சிறுவர்கள் 16 அல்லது 17 வது வயதில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் சேருவார்கள். இந்துதேச சரித்திரம் இங்கிலீஷில் எழுதப்பட்டிருப்பதால் அவர்களுக்கு கஷ்டம் தோன்றாமலிருக்குமாறு 150 பக்கங்கொண்டு சுருக்கி எழுதியிருக்கிறார்கள். அதனுல் இந்திய சிறுவர்களுக்கு இத்தேச சரித்திரஞானம் மிக அற்பமாயிருக்கிறது. இங்கிலாந்தில் அதே வயதுடையவர்களுக்கு தம் தாய்ப்பாஷையிலேயே எழுதப்பட்ட பாடங்களை போதிப்பதால் அவர்களுக்கு தம்தேச சரித்திர ஞானம் விருத்தியாகிறது. அதுபோல் நமது மாணவர்களுக்கும் தாய்ப்பாஷையில் சரித்திரஞானம் புகட்டினுல் அவர்களைவிடச்சிறந்த மேதாவிகளாகிவிடுவார்கள். தவிர, நவீன முறைகளைச் சாத்திர ரீதியாய்ப் பரிசோதித்து அநேக புதிய முறைகளையும் கண்டு பிடித்துவிடுவார்கள். அந்நியபாஷைமுறையால் தான் நமது மாணவர்கள் சரித்திர ஞானம் ஆலோசனசக்தி முதலியன இன்றி வீண் சிரமம் ஏற்பட்டு கஷ்டப்படுகிறார்கள். இவ்வித காரணங்களினுல் இந்திய பி.ஏ.க்களை அந்நிய நாட்டினர் கேவலமாய் மதிக்க வழி ஏற்படுகிறது.

சிறுவர்களின் ஆலோசனு சக்தி விருத்தியடைவதே கல்வியின் முக்கிய நோக்கமாயிருக்கிறது. அப்படிப்பட்ட சக்தியைப் பெறவேண்டின் அந்நிய பாஷை பிரயோஜனமில்லை. மாணவர்கள் எந்த பாஷையில் யோசனை செய்வதும் பேசுவதுமா யிருக்கிறார்களோ அப்பாஷையிலேயே கல்விகற்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் சகல சக்திகளும் அபிவிருத்தி யடையும்.

14-வது 15-வது நூற்றண்டுகளில் இங்கிலாந்தில் "லாடின்" பாஷையில் கல்வி கற்பித்தார்கள். அதனுல் பல கஷ்டங்களேற்பட்டு ஜன சமூகத்திற்குப் போதுமான கல்வி பரவாததினுல் பிறகு தாய்ப்பாஷையில் (இங்கிலீஷ்) கல்வி கற்பிக்கத்தொடங்கின நாள் முதல் எவ்வளவோ மாணவர்கள்

மேலான ஸ்திதிக்கு வந்ததுந் தவிர அத்தேசம் இப்போதிருக்கும் இறந்த நிலைமைக்கும் அது காரணமாயிருந்தது.' இதனுலேயே தாய்ப்பாஷை மூலம் கல்வி கற்பிக்க வேண்டுவதவசியமென்பது புலப்படும்.

இனி இதுபோன்ற கல்விமுறை நிலை நிறுத்தும் வழியை ஆலோசிப்போம். சாதாரண எலிமெண்டரி பாடசாலைகளில் அந்நியபாஷை கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. கற்பித்தாலும் கொஞ்சம் போதும். ஸ்கூல்பைனல் வகுப்பு வரையில் பாஷா விஷயங்களே யன்றி மற்றபாகங்களெல்லாம் தாய்ப் பாஷையிலேயே சொல்ல வேண்டியது. இதனுல் மாணவர்களுக்கு விஷயஞானம் விருத்தியாகும். ஸ்ரீ ரவீந்திர நாத் டாகூர் சொல்லியபடி இம்முறையை அனுஷ்டித்தால் சாஸ்திர பாடங்கள் கற்பது மிக எளிது. இங்கிலீஷில் வாசிக்க ஓய்வு நேரமுண்டு. சாஸ்திர ஞானமும் அந்நிய பாஷா ஞானமும் விருத்தியாகும். தற்கால இந்திய பி-ஏ. க்களுக்குத்தாய்ப் பாஷையில் அபிமானமேயில்லையாதென்று மேலேசொல்லியுள்ளோம். அதனுத் தாய்ப் பாஷையில் ஒரு சபையில் பேசவே தெரியாமல் விழிக்கிறார்களென்பதுதான் உண்மை. இப்புதிய முறையில் இம்மாதிரி கஷ்டங்கள் நேராது. ஆகையால் இம்முறை அனுஷ்டிக்கவேண்டியது கடமை.

கலாசாலைகளிலும் பிரகிருதி சாஸ்திரம் (பிஜிக்ஸ்), இரசாயன சாஸ்திரம் (கெமிஸ்டிரீ), முதலிய சாஸ்திரங்கள் தாய்ப்பாஷையிலேயே போதிக்க வேண்டும். இன்னொரு விஷயமும் இவ்விடம் குறிப்பிட வேண்டியதவசியமாகிறது. அதாவது நம் இந்தியாவில் முக்கியமான பாஷைகள் பல இருப்பதால் பாஷைகளை அனுசரித்து ஒவ்வொருவர் சர்வகலாசங்கம் (யூனிவர்ஸிடி) அமைத்தல் வேண்டும். அப்போதுதான் அந்தந்த பாஷைக்கும் சிறப் பேற்படும். நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு தேசியக் கல்வியே அவசியமானதால் இப்பெருந் தர்ம காரியத்தை நிறைவேற்ற நமது தேசபக்தர்களான ஸ்ரீ ரவீந்திர நாத் டாகூர், பெஸண்ட், சரோஜனி தேவி, அரண்டேல், மோதிலால் கோஷ், முதலியவர்கள் பாடு படுகிறார்கள். ஆதலால் நம்மிந்தியரெல்லாரும் தேசியக்கல்வியைப் பிரதிகிராமந்தோறும் வியாபிக்க நமது சக்தி யெல்லாம் உபயோகித்தல் வேண்டும். தேசியக்கல்வி யென்பதென்ன? விதேசியகல்வி யென்பதென்ன? தேசியக் கல்வி என்பது நமது தாய் நாட்டைப் பற்றிய சரித்திரங்கள். அதாவது ஸ்ரீ ராமர், சீதை, பாண்டவர்கள், சந்திர குப்தன், சாலிவாஹனன் முதலிய சிறந்த நமது முன்னோர்களைப் பற்றியதும் நமது தேச ஆசாரங்களைப் பற்றியதுமே. விதேசியக் கல்வியாவது:—

இடாலி, ஜர்மனிபோன்ற அந்நியநாட்டு சரித்திரங்கள்; ஆல்ப்ஸ் மலைகள் ஷேக்ஸ்பியர்முதலிய அந்நிய நாட்டுகவிகள் முதலியவைகளைப் பற்றிப்போதிப்பதுவிதேசியக்கல்வி. நந்தமிழ் மாணவனுக்குஜெருசலேம், ஆல்ப்ஸ், போன்ற அந்நியப்பெயர்களைகற்பித்தால் அவனுக்குவாயில் நுழைவதேகஷ்டம். அதை நினைப்பில்வைத்து பரீக்ஷைசெய்யவேண்டுமாகில் மிக்ககஷ்டம் உண்டு. ராமர் கிருஷ்ணர் அரிச்சந்திரன் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில் நமது இந்திய மாணவர்களுக்கு சொல்லாமலே தானேவரும். ஆகையால் நமது இந்திய சிறுவர்களுக்கு தாய்ப் பாஷை மூலம் கல்விகற்பித்து சுதேசஞானம் அடைந்த பின் விதேசஞானம் தெரிந்து கொண்டால் போதுமானது. இத்தாய்ப்பாஷைக் கல்வி முறையை நமது நாட்டில் அவசியம் ஏற்படுத்தி நம்மவர்கள் நவீனசாஸ்திர ஆராய்ச்சிகள்செய்து,உலகத்தின் மதிப்பிலார்முத



ஒரு கௌரவ சமூகத்தவராய் வெளிவந்து பிரகாசிக்கவேண்டி ஒவ்வொரு இந்தியனும் இது "எனது தாய்நாடு" "தாய்ப்பாஷை" என்று போற்றி அபிவிருத்திக்காக உழைக்கக் கடவன். அவ்வாறே ஆண்டவன் அருள்புரிவராக. ஓம் தத்ஸத்.

வந்தேமாதரம்

சி. இராமசாமி செட்டி.

மஹாதேவி, நாமக்கல்.

---

## ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

[296-ம் பக்கத் தொடர்ச்சி)

### "என்னெழுத்திகழேல்."

ஒரு நகரத்தில், தனவந்த ரொருவருக்கு ஆதிமூலம் என்ற ஒரு புத்திரனிருந்தான். இவனை மேற்கூறிய தனவந்தர் உரிய பருவத்தில் பாடசாலைக் கனுப்பிக் கல்வி கற்றுவரும்படி செய்ததோடு, உபாத்தியாயரிடத்தில், "ஐயா! நம்முடைய புத்திரனுக்கு மற்ற எல்லாக் கல்விகளைக் காட்டிலும், இலக்கணத்தையும், கணக்கையும் அழுத்தமாகக் கற்பித்து வர வேண்டும்; இவ்விரண்டுந் தான் மனிதர்க்கு முக்கியமாக வேண்டியவை; இவ்விரண்டையும் கற்காதவர்கள், பிழையின்றி ஒரு கடிதமாவது எழுதத் தெரியாமல், கல்வி யறிவுள்ளவர்களிடத்தில் அவமானப் படுவார்கள்; கணக்குத் தெரியாமல் பல பொருள் நஷ்டத்திற்கும் உள்ளாவார்கள்; உலகம் இவ்விரண்டு கல்விகளுக்குள்ளாகவே அடங்கியிருக்கின்றது; இவ்விரண்டையுங் கல்லாமல், மற்றகல்விகளில் எவ்வளவு கற்றபோதிலும் பிரயோசனமில்லை." என்று தெரிவித்திருந்தார். அதனுல் அந்த உபாத்தியாயர், ஆதிமூலத்திற்கு, 'எண் என்னும் கணக்கையும், எழுத்து என்னும் இலக்கணத்தையும் இகழ்ந்து கைவிடாதே,' என்னும் கருத்தடங்கிய, "எண்ணெழுத்திகழேல்." என்னும் ஆத்திசூடி சூத்திரத்தை அடிக்கடி எடுத்துச் சொல்லிப் போதித்துத் தினந்தோறும் கணக்கு நூலையும் இலக்கண நூலையும் கற்பித்து வந்தார்.

அவர், அவ்வாறு கற்பித்து வந்தும், கணக்கும், இலக்கணமும் பள்ளிப் பிள்ளைகளுக்கு மிகவும் கஷ்டமாயிருப்பது இயற்கை யாதலால், ஆதிமூலம் அந்தக் கஷ்டத்திற்கஞ்சி, அவர் எவ்வளவு கற்பித்தபோதிலும் அவற்றை அசட்டை செய்து, "கணக்கை இப்பொழுது படிக்காவிட்டால் காரியமொன்று மாகாதோ? நாம் வெளியேறி வியாபார காரியங்களிற் பிரவேசிக்கும்போது கணக்கு தானே வந்துவிடும்; அதற்காக இப்பொழுதே ஏன் கஷ்டமெடுத்துக் கொள்ள வேண்டும்; இலக்கணம் படிக்காவிட்டால் என்ன காரியம் கெட்டுப்போகும்; இப்போது இலட்சம் இலட்சமாகச் சம்பாதிக்கும் வட்டிக் கடைவியாபாரிகளெல்லாம் இலக்கணம் படித்துக் கொண்டுதானு சம்பாதிக்கிறார்கள்; எழுத்துப் பிழையானுலும், எப்படியிருந்தபோதிலும் சங்கதியை மாத்திரம் ஒருவாறு தெரிந்து கொள்ளும்படியான கடிதமாத்திரம் எழுதப் பழகிக்கொண்டு தானே காரியம் நடத்தி வருகிறார்கள்," என்று இக்காலத்திற் சில மாணவர் நினைப்பதுபோல நினைத்து அவ்விரண்டிலும் சரியான கவனம் செலுத்தாமலே யிருந்து வந்தான். இவனுடைய தந்தையோ, 'நம்முடைய புத்திரன் கணக்கையும், இலக்கணத்தையும் சரியாகவே கற்றுவருவான்,' என்று நினைத்துக்கொண்டிருந்தார்.

இப்படி யிருக்கும்போது, ஒரு நாள் ஆதிமூலத்தின் தகப்பனார் தம் வீட்டில் நடக்கும் ஒரு விசேஷ காரியத்திற்கு 'மாவிலை வேண்டியது அவசியமா யிருந்தபடியால், ஆதிமூலத்தை அழைத்து, பொன்னன் என்னும் ஒரு தோட்டக்காரனுடைய இருப்பிடத்தைத் தெரிவித்து, "அடே குழந்தாய்! பொன்னனிடம்போய் மாவிலை வாங்கிக் கொண்டுவா," என்று கூறியனுப்பினார். ஆதிமூலம் இலக்கணம் படிக்காதவனாகையால், 'மா-இலை' என்பது வகரவுடம்படு மெய் பெற்று, 'மாவிலை,' என்றாகியிருப்பதைத் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாமல், தன் தகப்பனார் மாமரத்தின் இலையை வாங்கிக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறா ரென்பதை விட்டு, அந்த வார்த்தைக்குத் தன் புத்திபோனபடியே, 'மாவின் விலை' என்று அதில் வெளிப்படையாக எளிதில் தோற்றிக்கொண் டிருக்கிற அர்த்தத்தைக் கொண்டு, தன் தகப்பனாரிடத்தில் அந்தத் தோட்டக்காரன் எதோ மாவை விலைக்கு வாங்கி யிருப்பானென்றும், அதற்கு விலையாக எற்பட்ட பணத்தைத்தான் அவர் அவனிடம் வாங்கி வரச் சொல்லி யிருப்பாரென்றும் நினைத்து, அந்தத் தோட்டக்காரனிடம் போய், "ஐயா! நீர் என் தகப்பனாரிடத்தில் மா வாங்கி வந்தீராமே, அதற்கு ஏன் இன்னம் பணம் கொடுக்காமல் வைத்துக்கொண் டிருக்கிறீர்? கடன் வாங்கினால் அதை நாணயமாகச் செலுத்திவிட வேண்டாமா? ஆளனுப்பிக் கேட்கும் வரையிலா அதை வைத்துக்கொள்ளுகிறது?" என்று, தகப்பனார் கட்டளையைத் தீவிரமாக நிறைவேற்றுகிற தாகவும், தன்னை மகா புத்திசாலி யென்றும் தீர்மானித்துக் கொண்டு கண்டிப்பாகக் கேட்டான்.

தோட்டக்காரன் மிகுந்த கோபமுள்ளவனாதலாலும், தான் அந்த மாவையும் ஆதிமூலம் தகப்பனாரிடத்தில் வாங்கவில்லை யாதலாலும், அவனுடைய வார்த்தையைக் கேட்டவுடனே சீறி, "என்னடா அயோக்கியப் பயலே! நான் என்ன கஞ்சிக்குச் செத்தவனா? உன் தகப்பனிடத்தில் நான் எப்போது மாவைக் கடன் வாங்கினேன்? என்ன அயோக்கியத் தனமாக வந்து பேசுகின்றாயே," என்று முன் பின் யோசியாமல் அவன் கன்னத்தில் ஓங்கி இரண்டு அறை அறைந்துவிட்டான். அவ்வாறு அறையவே தான் கடன் கேட்டதற்குத் தோட்டக்காரன் அக்கிரமமாக அறைந்து விட்டதாகவே ஆதிமூலம் நினைத்து ஓவென்று கதறிக்கொண்டு தன் தகப்பனாரிடம் ஓடி, "அப்பா! நான் அந்தத் தோட்டக்காரனிடத்தில் போய்க் கண்டிப்பாகப் பணம் கேட்டதற்கு அவன் என்னைக் கன்னத்தி லறைந்து விட்டான்," என்று கூறினான். அதைக் கேட்டவுடனே அவர் அதிசயித்து, "நீ என்னடா கேட்டாய்? அவன் ஏன் உன்னை அடித்தான்?" என்று கேட்டார். ஆதிமூலம், "அப்பா! நான் ஒன்றும் அக்கிரமமாகப் பேசவில்லை! 'மாவாங்கிய பணத்தைக் கொடு, எத்தனை நாளாகிவிட்டது,' என்று நியாயமாகத்தான் கேட்டேன்; இப்படிக் கேட்டதற்குத்தான் அவன் கன்னத்தி லறைந்து விட்டான்;" என்றான். இதைக் கேட்டதும் அந்தத் தனவந்தருக்குத் தம் குமாரன் அறியாமையைப்பற்றி எற்பட்ட கோபத்திற்கு அளவேயில்லை; அதனால் அவர், ஆதிமூலத்தை நோக்கி, "அடே மடையா! நான் உன்னிடம் மாவின் இலை வாங்கி வரச் சொன்னதற்கு நீ போய் அவனிடம், 'மாவுக்கு விலைப் பணம் கொடு,' என்று கேட் டிருக்கின்றாய்; அதனாற்றான் அவ்வாறு அவன் அறைந்தான்; இது, நீ இலக்கணத்தைச் சரிவரப்படிக்காததனால் வந்த தோஷமல்லவா? இன்னும் இரண்டு அறை கொடுக்காமற் போனானே," என்று பல்லைக் கடித்துக்



கொண்டு அவரும் ஆதிமூலத்தின் முதுகில் நான்கு அறை அறைந்தார். ஆதிமூலம் இரண்டு பக்கத்திலும் அறை வாங்கிக்கொண்டு மிக்க மனவருத்தத்தோ டிருந்தான்.

மற்றொரு நாள் அந்தத் தனவந்தர் ஆதிமூலத்தினிடம் ஒருவராகன் கொடுத்து கடைத்தெருவிற்குப் போய் அரிசி வாங்கிக்கொண்டு வரும்படி, சொல்லி அவனையனுப்பினார். அவன் ஒரு கடையிற்போய்க் கடைக்காரனிடத்தில், "ஐயா! ஒருவராகனுக்கு எவ்வளவு அரிசி போடுகிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கவன், "வராகனுக்கு நான்கு மரக்கால்" என்றான். ஆதிமூலம், "அப்படியானால், எனக்கு ஒருவராகனுக்கு அரிசிபோடுங்கள்" என்றான். அந்தக் கடைத்தெருவில், மரக்கால் ஒன்றுக்குநான்குபடி என்று கணக்கு எற்பட் டிருந்தபடியால், கடைக்காரன் அந்தக் கணக்கின்படி நான்கு மரக்காலுக்குப் பதினாறு படியென்று கணக்கிட்டுப் பெரியபடியால் பதினாறுபடி அரிசியை அளந்து போட்டான். ஆதிமூலமோ கணக்கைச் சரிவரக் கற்றுக்கொள்ளாததால் அவனுக்கு எந்தக்கணக்குமே தெரியாது. அதனால் அவன் மரக்காலுக்கும் படிக்கும் வித்தியாசந் தெரியாமல், மேற்கூறியபடிகடைக்காரன்பதினாறுபடிஅளந்துபோட்டவுடனே, "ஐயோ! இந்த வியாபாரி மறதியாகப் பதினாறு மரக்கால் அளந்துபோட்டு விட்டான்; இவனுடைய சொத்து நமக்கு எதற்காக? நமக்கு நான்குமரக்கால் தானே சேரவேண்டும்; அதிகமாகப் போட்ட அரிசியை இவனுக்கே கொடுத்து விடவேண்டும்" என்று மகா தருமசிந்தனை யுடையவனாய்க் கடைக்காரனை நோக்கி, "ஐயா! எனக்கு நான்கு மரக்கால்தான் சேரவேண்டும்; நீங்கள் மறதியாகப் பதினாறு மரக்கால் அளந்துபோட்டு விட்டீர்கள்; ஐயோ! பாவம்! நீங்கள் மறதியாகப் போட்டாலும் நான் உங்கள் சொத்தை அபகரிக்கமாட்டேன்; அதிகமாகப் போட்ட பனிரண்டு மரக்காலையும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்றுகூறினான். அந்தக்கடைக்காரன் எப்பொழுதும் பிறரை எமாற்றிப் பொருள் சம்பாதிப்பதிலேயே நோக்க முடையவனாதலால், ஆதிமூலம் மேற்கூறியபடி சொன்னவுடனே, "ஓகோ! இவன் எதை யெதையோ படித்துவிட்டுப் புதிய நாகரீகமென்று சில அருவருக்கத்தக்க நடத்தைகளைக் கொண்டு உலகவியலை ஒன்றுந் தெரியாமல் திரியும் சிலபேதைகளைப்போலப் பயனற்றபடிப்புப் படித்தபேர்வழியா யிருக்கின்றான்; இவனுக்குக் கணக்கே தெரியாதுபோ லிருக்கின்றது; இவன் படிக்கும் மரக்காலுக்கும் வித்தியாசந் தெரியாமல் பேசுகின்றான்; மெத்தவும் நலந்தான்; நாம் ஒன்றும் சொல்லாமல் பனிரண்டு படி அரிசியையும் எடுத்துக் கொள்ளவேண்டும்," என்று புன்சிரிப்புடனே ஆதிமூலத்தை நோக்கி, "ஐயா! நான் என்ன செய்வேன்; எத்தனையோ பேருக்கு எத்தனை யெத்தனை விதமாகவோ அரிசி அளந்து போடவேண்டியிருக்கின்றது; இதனாலேயே எனக்கு மறதி அதிகமாக வந்துவிடுகிறது," என்று சொல்லிக் கொண்டே பனிரண்டு படி அரிசியையும் எடுத்துக் கொண்டான்.

அதன் மேல் ஆதிமூலம், தான் சத்தியமாக நடந்து கொண்டதற்குத் தன் தகப்பனார் மிகவும் மகிழ்ச்சியடைவா ரென்று நினைத்துக் கொண்டே விரைவிற் போய் இந்தச் சமாசாரத்தை அவரிடம் தெரிவிக்க வேண்டுமென்று தன் மூடமதியால் ஒரு வராகனுக்குப் பெற்ற நான்குபடி அரிசியையும் தூக்கிக் கொண்டு தகப்பனாரிடம் சென்று, "அப்பா! இன்றைக்கு அரிசிக்காரன் மோசம் போக விருந்தான்; மறதியாக ஒரு வராகனுக்குப் பதினாறு மரக்கால் அரிசி போட்டு விட்டான்; இப்போ தேற்பட்ட விலைப்

படி. நமக்கு நான்கு மரக்கால்தான் சேரவேண்டும்; ஆதலால் அவன் அதிகமாகப் போட்ட அரிசியை நான் திரும்பக் கொடுத்து விட்டேன்" என்று சந்தோஷமாகக் கூறினான். இதைக் கேட்டவுடன் அவர், "இஃதென்ன அதிசயமாயிருக்கின்றதே! மற்றியானுலும் பனிரண்டு மரக்கால அதிகமாகப் போடுவான்; எதோ அரிசியை அளந்து பார்க்கலாம்," என்று ஆதிமூலம் கொண்டுபோயிருந்த அரிசியை அளந்து பார்த்தார். நான்கு படி அரிசியே இருந்தது. அதனால் அவர் நகைத்து, "கடைக்காரன் சரியாகத்தான் நான்கு மரக்காலுக்குப் பதினறுபடி அளந்து போட்டிருப்பான்; நம்முடைய பிள்ளை, கணக்கைச் சரியாகப் படிக்காத தோஷத்தால் படிக்கும் மரக்காலுக்கும் வித்தியாசந் தெரியாமல் ஏமாந்து போய் நம்மிடம் வந்து, தரும நெறிகண்டவன் போற் பேசுகிறான்; இவனுடைய மதியீனத்திற்கு என்ன செய்கிறது?" என்று கோபித்து ஆதிமூலத்தை நோக்கி, "அடா பேதையே! ஒரு மரக்காலுக்கு நான்குபடி; அந்தக் கணக்கின்படியே அவன் நான்கு மரக்காலுக்கும் பதினறுபடி அளந்து போட்டு, நீயே திருப்பிவிடுத்துக் கொள்ளச் சொன்ன படியால் உன்னை மடையனென்று நினைத்துப் பனிரண்டு படியையும் எடுத்துக் கொண்டான்; மரக்காலாலேயே அளந்து போட்டிருந்தாலல்லவா உன்னுடைய அபிப்பிராயம் சரியானதாகும்; அவன் படியால் அளந்து போட்டிருக்கும் போது நீ இவ்வாறு கணக்கிடலாமா? இன்னும் மரக்காலுக்கும் படிக்கும் வித்தியாசந் தெரியவில்லையே; நீ என்ன கணக்குப் படித்தாய்? முன்னொரு சமயம் மாவிலை வாங்கிக் கொண்டுவரச் சொன்னதற்கு மாவுக்கு விலை கேட்டுத் தோட்டக்காரனிடம் அறைவாங்கிக் கொண்டுவந்தாய்; இன்றைக்கு இவ்வாறு செய்தாய்; கணக்கும் இலக்கணமுந் தெரியாத நீ உலகத்திலிருந் தென்ன பிரயோசனம்? "எண்ணெழுத்திகழேல்." என்று ஔவை கூறியிருப்பதை நீ சற்றும் கவனிக்கவில்லையா?" என்று இரண்டு கன்னத்திலும் ஓங்கி அறை கொடுத்தார். ஆதிமூலம் அடி பொறுக்க முடியாமல் விம்மி விம்மி அழுது கொண்டிருந்து பின்னர் அவன் தனக்குள் தானே, "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதைப் பற்றி உபாத்தியாயர் போதித்து வந்ததை நாம் கவனிக்காமல் போனதனால் நமக்கு இக்கதி நேர்ந்தது; இனி அவ்விதமிருக்கலாகாது," என்று நிர்மானித்து அது முதல் கவலையுடன் கணக்கு நூல்களையும், இலக்கண நூல்களையும் வாசித்து அவற்றில் தேர்ச்சி அடைந்து உலக சம்பிரதாயங்களில் 'மிகவும் கெட்டிக் காரனுனன். ஆதலின், ஒவ்வொருவரும், "எண்ணெழுத் திகழேல்" என்னும் ஔவை திருவாக்கைக் கவனித்து நடத்தல் வேண்டும். (தொடரும்)

S. V. ஆறுமுகன்.

## நித்தியவிதி—போஜனம்.

[374-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்திரர், சகோதரர், பௌத்திரர்களுடன் கூட உட்கார்ந்து புஜிக்கலாம். வாயசம் சுவானம் முதலியவற்றுக்கு அன்ன மிடுதலாகிய பூதபலியைச் செய்து அதிதிக்களுந்தி மிகுந்திருக்கும் பரிசுத்தமான அன்னத்தை இலையில்விட்டுக்கொண்டுஅதன்மேல் உருக்கினநெய்வார்த்துப்பரிசேஷணம் செய்து அதன்பின் பிராண ஆகுதியும் செய்யவேண்டும். பரிசேஷணம் செய்வதென்றல் சுத்தமான குளிர்ந்த ஜலத்தைக் கலத்திலிருக்கும் அன்



னத்தின்மேல் புரோக்ஷணம் (தெளித்தல்) செய்து, அதன்பின் நீரால் பரிசேஷணம் (பாத்திரத்தைச் சூழ நீரைப் பிரதட்சணமாகச் சுற்றி விடுதல்.) செய்யவேண்டும். இதனலென்ன பிரயோசனம் எனின்கூறுதும்: அக்கினியாற் பாகம் செய்யப்பட்டுச் சூடாயிருக்கிற அன்னத்தின் ஆவி முகத்திற் பட்டால் பலநோய்களை உண்டாக்கும்; முக்கியமாய்க் கண்ணுக்குக் கெடுதியுண்டாம். அமிர்தமயமான சுத்தஜலத்தை அன்னத்தின்மேல் தெளித்துப் பரிசேஷணம் செய்வதால் அவ்வுட்டின ஆவியின் உக்கிரம் சிறிது அடங்கி அன்னமும் அமிர்தத் தன்மையை அடையும். இந்தப் பரிசேஷணம் த்விஜர்களுக்குவேத மந்திரத்துடனும் மற்றவர்களுக்குத் தந்திரமாத்திரமாகவும் விதிக்கப்பட்டது. இவ்வேதமந்திரம் பிரமதியானத்தைக் குறிக்கின்றது. போஜனம் செய்வதும் ஆரியர்களுக்கு ஒரு தவமேயாகும். ஆதலால் பரிசேஷணம் செய்த உடனே ஒரு உத்தரணி சுத்தஜலத்தை வேதமந்திரமோதிப் பிரமதியானத்துடன் உட்கொள்ள வேண்டும். இதற்கு ஆபோஜனம் என்று பேர். இந்த ஆபோஜன நீர் ஸோமபானத்துக்குச் சமானமென்று வைதிக நூல்கள் கூறுகின்றன. ஏனெனில் பிராணுக்கினி ஹோத்திரம் என்கிற ஒரு வேள்வி யிங்கு செய்யப்படும். புறத்தில் செய்யப்படும் அக்கினிஹோத்திரம் த்விஜர்களுக்கு மாத்திரம் உரியது. போஜனகாலத்தில் செய்யப்படும் இந்தப் பிராணுக்கினி ஹோத்திரம் எல்லா வருணத்தாரும் செய்யத்தகுவது. இதைச் செய்வதினுல், "தினந்தோறும் வேதமந்திரங்களினுல் செய்யப்படும் அக்கினிஹோத்திரபலனும் வேள்விகளின் பலனுமுண்டாம்" என்று வேதமே கூறுகின்றது. இதனுல் சரீரபிவிருத்தியைக் குறித்துப் போஜனம் செய்வதும் ஒருவகையான தவமாகவே ஆரியர்களாற் கொள்ளப்பட்டதன்றிக் கேவலம் சிற்றின்பத்தையே கருதியதன்றென நன்கு விளங்கும். அதனைச் சிறிது விளக்குவாம்.

சரீரத்துட்செல்லும் பதார்த்தங்களைப் பாகம் பண்ணும் அக்கினி ஐந்து என்பர். இவ்வக்கினிகள் பதார்த்தங்களையேயன்றி இரத்தம் முதலிய வற்றையும் பக்குவம் செய்யும். வேள்விகளில் குறிக்கப்படும் காருகபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணக்னி, ஸப்யம், ஆவஸத்தியம் என்பன போலச் சரீரத்தினுள்ளும் ஜாடரன், ஆஸ்யன், ஹார்த்தன், புருமத்தியன், காபாலன் என ஐவகை அக்கினிகள் கூறப்படுகின்றன. இவற்றுள் ஜாடரன் என்பது நாபிஸ்தானத்திலுள்ள மூலாக்கினி. இதுவே மூலபித்தமாம். இதுதான் உண்ட பதார்த்தங்களைச் சீரணம் செய்விப்பது. ஆஸ்யன் வாயில் நீர் வடிவமாயுள்ளது. இதனையே சொள் என்பர். இதுவும் ஜீரணத்துக்குக் கருவியாம். ஹார்த்தன் என்பது இருதயஸ்தானத்திலிருந்து இரத்த சோதனை செய்யும் சுக்கில சாரமாயிருப்பது. புருமத்தியன் என்பது இலலாடஸ்தானத்தில் இரண்டு புருவங்களுக்கும் இடையிலிருப்பது. இது சரீரத்தில் நடக்கும் ஒரு தொழிலிலும் சம்பந்தப் படுவதில்லை; இது யோகிகளால் தரிசிக்கப்படுவது; சகுணபிரமபிரதிநிதி யென்றும், ஜோதி லிங்கமென்றும் புகழ்ந்து கூறப்படுவது. காபாலன் என்பது கபாலஸ்தானத்தில் நிரூபிபாஷாண ரூபமாயுள்ளது; பெரிய பிரகாசமாயுள்ளது, யோகிகள் நிர்விகற்பசமாதியில் கண்டு தரிசித்துக்களிப்பது; பிரமரந்திரத்தினை யூடுருவிச் சென்று யோகிகள் இதனை யடைந்து மரணமற்று இருப்பர். இந்த அருமையான யோகவித்தையாலேதான் பூர்வத்தில் எத்தனையோ பேர்கள் அநேக கற்பகாலங்களைக்கண்டு வாழ்ந்தார்கள் என்று நூல்கள் புகழ்ந்து கூறுவதும். இவ்வைந்து அக்கினிகளையும் குறித்துச் செய்யப்படும் ஹோம

மே பிராணாக்கினி ஹோத்திரம் என்று வேதம் கூறியது. பிராணாக்கினி ஹோத்திரத்துக்கு முதலில் புரோக்ஷணம் பரிசேஷணம், வியாகிருதி, காயத்திரிகளுடன் கூடின தெய்வமந்திரத்தால் செய்யப்படுவது. அம்மந்திரங்களின்கருத்தென்னவெனின், "எல்லாமாகிய கடவுள் ஒருவனே! அவன் அருளிய அன்னம் அவன் கிருபையால் பக்தியை விருத்தியாக்கி அருளை விளக்கி அவியாத பேரொளியாய் நின்று காப்பாற்றவேண்டும்" என்று பரபிரமத்தைப் பிரார்த்திப்பதேயாம். பிறகு எங்கும் நிறைந்து நிற்கும் அக்கினி சொரூபியான பரப்பிரமத்தைச் சரீரத்துக்குள்ளிருக்கும் பஞ்சப்பிராணாக்கினி ரூபமாகப் பாவித்து நெய்யோடு கூடின அன்னத்தை ஒரு கழற்சிக்காய் அளவெடுத்துப் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்கிற பிராண வாயுக்களுக்கு ஹோமம் செய்ய வேண்டும். அவ்வன்னத்தில் யாதொரு சுவையும் சம்பந்திக்கக்கூடாது. பிறகு பரப்பிரமத்தை யுத்தேசித்து ஆறும் ஆகுதி கொடுக்கவேண்டும். அதன்பின் புசிக்க வேண்டும். புசிக்கும்போது ருசி முதலியவற்றைக் கருதாமலும், வாய்திறந்து பேசாமலும், சர்வவியாபியாகிய பிரமத்தின் தியானத்துடன் புசிக்க வேண்டும்.

"தினந்தோறும் புசிக்கிற அன்னம் பிரம சொரூபமாகையால் அதை நிந்தியாமல் பூசித்துப் புசிக்க வேண்டும். குற்றங்கூறாமல் புகழ்ந்தே புசிக்க வேண்டும். அன்னத்தைப் புகழ்ந்து புசித்தால் அது தைரியம், பலம் இவைகளைக் கொடுக்கிறது. நிந்தித்தால் அவ்விரண்டையு மழித்துப்போடுகிறது. அதிகமாகப் புசித்தால் நோயும், ஆயுள் குறைவும், சொர்க்காதிபோகக் குறைவும், புண்ணியக் குறைவும், உலகநிந்தையும் உண்டாகும். புசிக்கும்போது மௌனமாகவே புசிக்க வேண்டும்" என்று மனுஸ்மிருதி கூறுகின்றது. மௌனமென்றது பிரமதியானம். "மனைவியோடு சரசமாய்ப் பேசிக்கொண்டும், கோபக்குறிப்புள்ள வசனங்களைப் பேசிக்கொண்டும் உலக விவகாரங்களைப் பேசிக்கொண்டும் புசிக்கலாகாது" என்று வேறு ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதன்கருத்து என்னவெனில், 'ஒருவன் எந்த எண்ணத்துடன் புசிக்கிறானோ அத்தன்மையாகவே அன்னரசம் பரிணமிப்பதும்' என்று வைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. அக்காரணத்தினாலே சரசசம்பாஷணை செய்து கொண்டு புசித்தால் அவன் சித்தம் சிற்றின்பத்திலே விருப்ப முள்ளதாய் விருத்தியாகும். துக்கம் கோபம் முதலியவற்றோடு புசித்தால் சித்தமும் அவ்வகைக் குணங்களுள்ளதாகவே விகாரப்படும். இதனை, மனைவியை எதிரில் வைத்துக்கொண்டு புசிப்பவர்கள் அதிக சிற்றின்பப் பிரியராய் மனைவி வசப்பட்டொழுகுதலே பிரத்தியட்சமாய்க் காணலாம். அன்னமயமாகவே சித்தம் மாறுதலால், யாதொரு சிந்தனையுமின்றிப் பிரமத்தியானத்துடன் புசித்தால் அந்த அன்னம் அமிர்தமயமாய் ஞானத்தையும், ஆரோக்கியத்தையும் தரும். இதுபற்றியே சாஸ்திரங்கள் மௌனவிரதத்தை விதித்தது.

"புசிக்கும்போது அன்னத்தை நிந்தியாமலும், சிந்தாமலும் புசிக்க வேண்டும். பழம், பணியாரம், கிழங்கு முதலியவற்றை முன்னாலேயே பொடிசெய்து வைத்துக்கொள்ள வேண்டும். பல்லாற்கடித்தாவது, நகத்தாற் கிள்ளியாவது புசிக்கலாகாது" என்று போதாயனர் கூறினார். "அன்னத்தை வாய்கொள்ளும் அளவாகவே எடுத்துப் புசிக்க வேண்டும். அதிகமாய் எடுத்து வாயிலிட்டுக்கொண்டு கையில் மிச்சம் வைத்திருக்கலாகாது. ஒருகவளத்தில் மிகுந்த சோற்றை எறிந்துவிட வேண்டும் என்றும்" பாரதம்



கூறுகின்றது. வாயின் எச்சிலோடு கலந்த அன்னத்தில் சாறும் சேர்த்தால் அது விஷத்தன்மையை அடையும். பல் நகம் முதலியவற்றுக்கு இயல்பிலேயே விஷகுணமுண்டு. ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது. முன் புசித்து ஜீரணமாகாம லிருக்கும்போதும், தனக்கு ஜீரணமாகாத வஸ்துக்களையும் புசிக்கக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

"அற்ற தறிந்தே யறப்பசித்துத் தீயனத்தைக்
குற்றதறிந் துண்ண லுணவு"

(முன்புண்டது ஜீரணித்த பிறகு நல்ல பசியுமுண்டான பின்பே போஜனம் செய்ய வேண்டும்: அப்போதும் தம் தேகத்திற்கும் காலத்திற்கும் ஒத்துக் கொள்ளத்தக்க வற்றையே புசிக்க வேண்டும்)

எனத் திருவள்ளுவநாயனாரும், சித்தர் பெருமானாகிய தேரையரும் கூறியுள்ளார்கள். அதனால் நல்லபசி யுண்டானபின் தன் ஜீரணசக்திக்கு ஏற்ற பதார்த்தங்களைத் தன் சுய அனுபவத்தால் அறிந்துகொண்டு அவற்றையே புசித்தல்வேண்டும். அவ்வாறின்றிக் காலை எழுமணிக்கு இட்டலி உப்புமா காப்பியுண்டும், ஒன்பதரை மணிக்குப் பகற் போஜனமும், ஒன்று இரண்டுக்கு நடுவில் சிற்றுண்டி காப்பியும், ஐந்து மணிக்கு தேத்தண்ணீர் முதலியவும், இரவு எட்டுமணிக்கு இராப்போஜனமும், படுக்கும்போது பாலும் உண்டுவருவதால் யாதொரு பிரயோஜனமும் இல்லையாம். அப்படிச் செய்வதனால் நல்லபசி யுண்டாகாது. நல்ல பசியின்றிப் புசிப்பதால் ஜீரணசக்தி குறையும். அதனால் பல நோய்களுண்டாம். முக்கியமாய் மலச்சிக்க லுண்டாவது நிச்சயமாம். இதனைப்பட்டண வாசிகளிடத்தில் பிரத்தியட்சமாகக் காணக்கூடும். இந்தக் கஷ்டங்களைத் தமது போதிவாற்கண்டுணர்ந்த பெரியோர்கள் இரண்டுதரமே போஜனம் செய்யும்படி விதித்தார்கள். ஸ்மிருதிகளும் வைத்திய நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. "பகலிலும் இரவிலுமாக் இரண்டு தரம் புசிக்கவேண்டுமே யன்றி மத்தியானகாலங்களில் புசிக்கலாகாது. இது அக்கினி ஹோத்திரத்துக்குச் சமானம். மத்தியில் புசிப்பதை வேதம் நிந்திக்கின்றது" என்று மனுகூறினார். 'மத்தியான்னத்தில் ஒருவேளை புசித்து மத்திய காலத்தில் தண்ணீர் கூடக்குடியாமலிருந்து இரவில் ஒருதரம் புசிக்கிறவன் சொர்க்கத்தில் நெடுங்காலம் வசிக்கிறான்' என்று பாரதம் கூறியது. ஜாடராக்கினி சிலருக்கு அதிகமாய் ஜ்வலிக்கும். அவர்கள் ஆகாரம் அதிகமாயுண்ண வேண்டும். அவர்கள் மூன்றுவேளை புசிக்கலாமென்று சிலவைத்திய நூல்கள் கூறுகின்றன. அதுபற்றியே தேரையரும்,

"திண்ம மிரண்டேயுண் டப்பிமுக்காற் கொள்ளின்
சின்மதலே காளைகடல் சேர்பருவ—நன்புருத்தம்
ஒன்றுக்கு ஞன்றுக்கு ளொருமிரண் டுக்குநெய்பர்
நன்றுக்குத் தீயார் நடந்து" என்று கூறினார்.

மூன்றுதரம் புசிக்க வேண்டுமானால் காலையின் முதல் முகூர்த்தமாகிய மூன்றேமுக்கால் நாழிகைக்குள்ளும், மத்தியான்னம் பதினைந்து நாழிகைக்குள்ளும், இரவு ஏழரை நாழிகைக்குள்ளும் பசியாகிய தீயையுடையவர்கள் புசிக்கலாமென்று பெறப்பட்டது. இங்கே பகல் பதினைந்து நாழிகைக்குள்

என்று கூறியிருப்பினும் பதினோர் நாழிகைக்கு மேல் பதினெட்டே முக்கால் நாழிகைக்குள் என்று வேறு நூல் கூறுகின்றது. இவ்வாறன்றிச் செல்வச் செருக்கு கௌரவம் சிற்றின்ப நுகர்ச்சி முதலியவற்றை முன்னிட்டு வரையறையின்றி நினைத்த பொழுதெல்லாம் சோற்றையும் சிற்றுண்டிகளையும் புசிப்பவர் நோய்கட்கெல்லாம் உற்பத்திஸ்தானமாயிருந்து ஆயுட்குறைவையும் எய்திக் கெடுவார்கள் என்பது கற்றறிந்த நமது முன்னோரின் கருத்து. பாரதகண்டத்தின் சீதோஷ்ண நிலைமையையும், இந்நிலத்திலுற்பத்தியாகும் பதார்த்தங்களின் குணவிசேஷங்களையும், இதில் வசிக்கும் மனிதருடைய சரீரவியல்பையும் ஆராய்ந்து கூறிய அமுதவாசகத்தை யிகழ்ந்து அந்நியரது கொள்கையைப்பற்றிப் பலதரம் புசிப்பது ஆரியகுலத்தார்க்கு ஆகாதென்று தெளிக. அது அறிவாளிகள் செய்கையுமன்று. அந்தந்த நாட்டின் சீதோஷ்ண இயற்கைக்குத் தக்கவாறு இவ்விஷயங்கள் அமைந்திருக்கின்றன வென்பதை யிவர்கள் அறியாதவர்களா யிருக்கிறார்கள்.

புசிக்கையில் மதுரமான வஸ்துவை முதலிலும், பிறகு உப்பு, புளிப்பான பதார்த்தங்களையும், அதன்பின் காரமுள்ளதையும் புசிக்கவேண்டுமென்றும், ஆதியில் ஜலரூபமான பதார்த்தங்களையும், பின் கடினமானவற்றையும், அதன்பின் ஜலரூபமான வஸ்துக்களையும் புசிக்க வேண்டுமென்றும் இப்படிப் புசிப்பவனுக்குப் பலம் ஆயுள் ஆரோக்கியம் முதலியவை சித்திக்குமென்றும் புராணம் கூறுகின்றது. இதனையே,

"ஆதியி னிப்புநடு வாம்பிரநீ ருப்பொசோ
காதி புறைப்பப்பா லத்தத்திற்—கோதிலவர்ப்
பாந்ததியுப் பூறியகா யாதிவகை சேருணவை
மாந்ததி சுகத்தை யுறுவாய்"

என்றதனால் தேரையரும் விளக்கியருளினார். அதாவது, முதலில் இனிப்பு, நடுவில் புளிப்பு, உருப்பு, கீரை முதலியகாரம், கடைசியில் துவர்ப்பு, தயிர், ஊறுகாய் இம்முறையாக ஆகாரங்கொண்டால் சுகமுண்டாகும் என்பதாம். அன்றியும்,

"முக்கா லுணவன்றி யெத்தேதி கட்கு முழுவுணவில்
அக்கா லணமன்ன சாகாதி கூடி யரையதிற்பால்
சிக்கா வருமதம்பு தக்கிரங் காலுண்டிச் சேடம்வெளி
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமின்றே"

என்றதனால் அன்னம் கறி முதலிய அரைவயிற்றுக்கும், பால் நீர் மோர் கால்வயிற்றுக்குமாக முக்கால் வயிற்றுணவே கொள்ள வேண்டும். கால் வயிறு சும்மா விடவேண்டும். ஏனெனில் ஜாடராக்கினியும் பிராணவாயுவும் சஞ்சரிப்பதற்கு. அப்படிச் செய்யாவிட்டால் வாயுவும் அக்கினியும் சஞ்சரிக்க இடமில்லாமையால் உண்டவை ஜீரணமாகா. அதனால் ஆரோக்கியக் குறைவுண்டாம் என்று விளக்கப்பட்டது.

உண்டி, நக்கல், பருகல், விழுங்கல், தின்னல் என நால்வகைப்படும். இதுவே நால்வகை யுண்டி யெனப்படும். அவையாவன:—பச்சடி, தொகையல் முதலியன நக்கல்; பாயசம், பானம், நீர்மோர் முதலியன பருகல்; அன்னம் விழுங்கல், கறிகள் பட்சணங்கள் தின்னல். அங்ஙனங் கூறியவதனால் அன்னத்தைக் கவளமாய் வாயிலிட்டு விழுங்கவேண்டுமே யன்றிப் பல்லால் மென்று தின்பது மறுக்கப்பட்டது. கறிவகைகளுடன் கூட்டி மென்று



தின்பதுமாகாது. வாய்கொள்ளும் அன்னத்தை உருண்டையா யெடுத்து வாயிலிட்டு விழுங்க வேண்டுமென்பது நூல்களின் கருத்து. ஏனெனில், "மெது கண்டத்துவாரங் கொள்ளுமான அன்னத்தை மெதுவாய் விழுங்க வேண்டும். இதனால் கண்டத்துக் கமைக்கப்பட்ட புழையின் அளவு சுருங்காமலும், பெருக்காமலு மிருக்கும்; அதனால் அதினூடும் நீர் வற்றாமலிருக்கும் மலாசயம் கனமுள்ளவஸ்துக்களால் நிரம்புதலால் அதிகமாய்ச் சுருங்காமலிருக்கும். அதனால் மலம் தடையின்றிக் கழிந்து சுகம் விருத்தியாகும். மென்று தின்பதனால் மெதுத்தன்மையை அடைந்த அன்னம் சிறிது சிறிதாக இறங்குவதால் மலாசயம் சுருங்கும். சுருங்கவே மலச்சிக்க லாதி நோய்கள் தடையின்றி யுற்பத்தியாகும்" என்று சித்தர்கள் வைத்தியநூல்கள் கூறுதலாலென்க. அன்னத்தை நன்றாய்மென்று தின்ன வேண்டு மென்று ஆசார விளக்கநூல் கூறுதலால் அதனோடு மாறுகொளக்கூறல் எனாதாமெனின், அது நமது தேசவாசிகட்கு இதத்ததல்ல வென்று மறுக்க. ஏனெனில், அன்னமென்பதையே யறியாமல் வெந்ததும் வேகாததுமாகிய மாம்சத்தையும், உரொட்டி பழம் கிழங்கு முதலியவற்றையுமே உண்டு ஜீவிப்பவர் மென்றே விழுங்க வேண்டும்; அவர்களுக்கு வேறுவிதியில்லை. மெல்லாமல் விழுங்கி விட்டால் மாம்சாதிகள் ஜீரணமாகா. அத்தகையார்க்கென்றே ஏற்பட்ட நூல்களையே சப்பிரமாணமாகக் கொண்டு பரதகண்டவாசிகளும் அன்னத்தை மென்று விழுங்கவேண்டுமென்பது அறிவுக் கழகன்றாமென்க. தத்தம் தேசம், பதார்த்தம், சரீரவியல் இவைகளை யறிந்து அதற்கொப்ப நடப்பதே அறிவுள்ளவர்களுக் கழகாமென்க. அத்தன்மையை யறிந்துகொண்டே நமது ஆரியப்பெரியோர் நக்கல், பருகல், விழுங்கல், மெல்லல் என உண்டியை நால்வகையாகப் பகுத்து வைத்தது முணர்க. விரிக்கின் மிகவிரியு மாதலா லிம்மட்டில் நிறுத்துக. (தொடரும்)

திரு-அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்.

---

## கைவல்ய நவநீத வசனம்

(393-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய வேண்டின் அதற்கு வேண்டிய சாதனங்களனைத்து மிருந்தால்தான் அத்தொழிலைச் செய்து முடிக்கலாகும். (வெளியூரிலுள்ள ஒருவனுக்கு நாம் கடிதம் எழுத வேண்டுமாயின் அதற்குக் கடிதம், மசி, இறகு முதலியவை வேண்டுவதுபோல்). ஆகையால் மோக்ஷத்தை யடைய விரும்புவோன் மேற்கூறப்பட்ட நான்கு சாதனங்களையும் அடையவேண்டியது அவசியம். ஆயினும் இந்நூல் எல்லார் புத்தியிலும் நுழையாது. முன் சென்ற பல ஜன்மங்களில் நிஷ்காம கர்மங்களை யநுட்டித்துச் சித்தசுத்தியடைந்த தீவிரதர பக்குவியின் புத்தியில் மட்டுமே நுழையும். இத்தகையவனே இந்நூலுக் கதிகாரியாம். இதையன்றி இன்ன ஜாதியான், இன்ன ஆசிரமத்தான் என்ற நியமமில்லை.

அத்தகைய சாதனங்களையடைந்த தீவிரதர பக்குவி யொருவன் தாபத்திரியங்களாகிற அக்கினியைச் சகிக்கமாட்டாது, கொடிய வெய்யிலில் அகப்பட்டு வாடித்தவிக்கும் புழுவைப்போல் பதைத்து, சம்சார தாபத்தை ஒழிக்கவல்ல ஞானத்தை யடையவேண்டு மென்று மிக்க ஆவல்கொண்டான்.

[தாபத்திரியங்கள் மூன்று. (1) ஆதியாத்மிகம், (2) ஆதிதெய்விகம், (3) ஆதிபௌதிகம்.

1. ஆதியாத்மிகம் என்பது பசி, தாகம், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுக்கு நேரிடும் இடையூறுகள், தேகத்திற்குண்டாகும் பல வியாதிகள் இவற்றாலுண்டாகும் துக்கமாகும்.

2. ஆதிதெய்விகம் என்பது:—அரக்கர், பேய்கள், கிரகாதிகள், மழை இடி முதலியவைகளால் வரும் துக்கமாகும்.

3. ஆதிபௌதிகம் என்பது:—கள்ளர் முதலிய இதரமனிதர்கள், மிருகங்கள், சர்ப்பாதிகள் முதலிய இதரபிராணிகள், இவற்றால் நேரும் துக்கமாகும்.

இத்தகைய பக்குவமுடைய இவன், மனைவிமக்கள், பொருள் என்னும் மூவேடணை (மூவாசை) யாகிய விலங்கினின்று விடுபட ஆவல் கொண்டு, அடவியில் வேடனது வலையிற் சிக்கிய மான் அதிலிருந்து தப்பித்துக் கொண்டால், எப்படி மறுபடி வேடன் கையிற் சிக்காமல், அத்திக்கையே திரும்பிப்பாராமல் ஓடுமோ அதுபோல், சம்சாரபந்தத்தை விட்டு ஓடுகிறான். அப்படியோடியவன் வீணே போய்விடாமல் இப்பிறவிப் பிணியை யொழிக்கும் மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கவல்ல ஞானாசிரியர் எங்குளரோவென்று மிக்க பதைபதைப்போடு தேடிச் சென்று முறைப்படி அவரைத் தரிசித்து அவர் பாதபத்மங்களில் வணங்குகிறான்.

[குருக்களில் இரண்டுவகையுண்டு. (1) காரிய குரு, (2) காரண குரு. தன் ஜீவனார்த்தத்தி னிமித்தம் சமயதீட்சை, சரியை கிரியை யோகங்களைப்பற்றிய போதனைகள், கர்மகாண்ட விதிப்படி ஏற்பட்டுள்ள சடங்குகள், ஆகிய இவற்றைச் செய்பவரே காரிய குரு.

ஒரு கைம்மாறும் வேண்டாது கருணையால் நமது அஞ்ஞானத்தைப் போக்கி ஞானோபதேசம் செய்து நமது பிறவிப் பெரும் பிணியை யொழிப்பவரே காரண குரு. இவரே ஞானாசிரியர். இவரையே தற்சீடன் சாட்சாத் பரம்பொருளாகவே மதித்து இவருக்கே தன் உடல், பொருள், ஆவி, மூன்றையும் தத்தம் செய்ய வேண்டியவன்.]

அவ்வாறு ஆசாரியர் பாதங்களில் சேவித்துக்கொண்ட சீடன், அவர் சந்நிதானத்தில் நின்றுகொண்டு அஞ்சலியஸ்தனாய் கண்ணீர் பெருக்கி, "என்னையனே! நிலையற்ற சம்சாரவாழ்வின் தீராத்துயரால் அடிமை மிக்க துன்பப்பட்டு வாட்டமடைந்துள்ளேன். கருணையே திருவுருவாக எழுந்தருளியிருக்கும் எம்மாரியரே! அடியேன் உள்ளம் துக்க நிவர்த்தியடைந்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும் வண்ணம், ஒன்றுக்குள் ஒன்றாய்ப் பின்னிக் கொண்டிருக்கும் பஞ்சகோசங்களாகிய பந்தத்தை யறுத்து நாயேனை இரக்ஷித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

[பஞ்சகோசம் எனின் ஐந்து கோசங்கள் என்று பொருள். கோசம் என்றால் இங்கு உறை அல்லது ஒன்றின் மேலுள்ள போர்வை என்று பொருள். அந்தக்கரணம், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள், இவை ஐந்து வகையாய்ப் பிரிந்து ஆன்மாவின் உண்மை சொரூபத்தை உறைகள் போல் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் இவற்றிற்குக் கோசங்கள் என்று பெயர்வந்தன. இவற்றைப்பற்றிய விவரம் பின்னால் வருவதால் இங்கு இவ்வளவோடு நிறுத்துகிறோம்]



அவ்வாறு விண்ணப்பித்துக்கொண்ட சீடனைக் குருவானவர், ஆமைபோல் (அவன் அஞ்ஞானம் ஒழிந்து தன் நிஜசொரூபத்தை யுணரவேண்டுமென்று) தம் திரு உள்ளத்தில் பாவித்து, மீனைப்போல் (அவனது வினைகள் அழியும்படி ஞானப்பார்வையாகிய) தமது கருணை நோக்கத்தினால் பார்த்து, பட்சியைப்போல், (இவனுக்கு ஆன்மதரிசனம் கிடைக்க வேண்டுமென்று அஸ்தமஸ்தக சையோகஞ்செய்து (அதாவது அவன் சிரசின் உச்சியில் தமது திருக்கரத்தை வைத்து), அவனைத் தமது சந்நிதானத்தில் இருக்கச்செய்து,

"குழந்தாய்! உனது பிறப்பிறப்பாகிய பெருந்துன்பத்தை யொழிக்கும் உபாயம் ஒன்றுண்டு. அதை யுனக்கு உபதேசிப்பேன். நீயந்த உபதேசத்தைத் தவறாமல் அநுஷ்டிப்பாயானால் உன்னைத் தொடர்ந்துள்ள இப்பிறவிப் பிணி ஒழிந்துபோம்" என்றருளினார்.

[இங்கு கூறப்பட்ட ஆமை, மீன், பறவைகளின் திருஷ்டாந்தம் என்னவெனில்:—ஆமை கரையில் முட்டையிட்டுவிட்டுப் பிறகு தான் எங்கிருந்தாலும் அதன் நினைவு வரும்போது அம்முட்டையை மனதில் பாவிப்பதால் அம்முட்டை குஞ்சாய்விடுகிறது என்பதும், மீன் தன் சினையை யுற்று நோக்குகிறதால் அது குஞ்சாய் விடுகிறதென்பதும், பறவை தன் சிறகினால் தன் முட்டையைத் தடவி யணைத்துக்கொள்வதால் அம்முட்டை குஞ்சாய் விடுகிறதென்பதும் ஆகிய இவை திருஷ்டாந்தங்களாக நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.]

குருவானவர் உன் பிறவிப்பிணி யொழியுமென் றருளியதைக் கேட்ட சீடன், வெயிலால் தகிக்கப்பட்டவன் குளிர்ந்த ஜலத்தில் மூழ்கினாற் போல உளங்குளிர்ந்து ஆனந்தக்கண்ணீர் விட்டு மறுபடி அவர் பாதங்களில் வணங்கிப் பின்வருமாறு விண்ணப்பம் செய்துகொண்டான்:—

"சுவாமிகளே! தங்கள் உபதேசப்படி நடந்து கொள்ள அடிமை சக்தியற்றவனாயிருப்பினும் தேவரீரது கிருபா கடாட்சத்தால் அடியேனை யாண்டுகொள்ள வருகுவீர். என் பிறவியை யொழிக்கக் கூடிய உபாயமொன்றுண்டென்று அருளினீர்களே. அதை அடியேனுக்கு உபதேசித்துப் பிறவிப்பெருந் துன்பத்தினின்றும் அடியேனை மீட்டருள வேண்டும்." என்றான்.

இவ்வாறு விண்ணப்பித்துக் கொண்டும் சீடன் அகங்காராதி மனோவிர்த்திகள் ஒழிந்தவன் என்றறிந்து கொண்ட குரு, அவன் தன் ஆன்மாவின் நிஜசொரூபத்தை யடையும்படி உபதேசம் செய்யத் தொடங்கினார்:-

"கேளாயப்பா புத்திரனே! ஆன்மசொரூபமாகிய தன் நிஜவடிவை மறந்து மாயையிற் சிக்கி, தான் சீவனென்றும், கர்மங்களைச் செய்து அதற்குத் தக்க பாப புண்ணியங்களை யனுபவிக்கிறவனென்றும் நம்புவதாகிய மயக்கத்திற் சிக்கியிருப்பவன், தன் நிஜவடிவைக் காணுமட்டும் பிறப்பிறப்பாகிய காலசக்கிரத்தில் ஓயாது சுழன்று துக்கப் பட்டுக்கொண்டேதான் இருப்பான்.

ஆகையால் ஒருவன் தன் நிஜவடிவை யறிவானேல் தான் சீவனல்லவென்றும் சீவசாக்ஷியாகிய கூடஸ்தன் அல்லது ஆன்மாவே தானென்றும் உணர்ந்து, அதனால் தன்னை ஆன்மாவாகவே யறிந்து, பிறகு தன் ஆதா

தத் தலைவனை பரமான்ம சொரூபத்தையு முணர்ந்து, அச்சொரூபமே தானாகும் பிரம்மான்ம ஐக்கியமுற்று இப்பிறப்பிறப்பாகிய பெருந்துன்பத்தினின்று விடுபட்டு நித்தியானந்தப் பதவியை யடைவான். ஆகவே நீ யாரென்ற உண்மையை நீயறிந்து கொண்டால் உனக்கொரு கெடுதியு மில்லை. நீயென்னை வேண்டிக் கொண்டமையால் இந்த இரகசியப் பொருளை யுனக் குபதேசித்தேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆசான் கூறிய மொழிகளின் உண்மைப் பொருளை யுணராமல், அதற்குச் சாதாரணமாய்ப் பொருள் கொண்ட சீடன் அவரை நோக்கி,

"சுவாமிகளே! தாங்கள், என்னைச் சுத்த மூடனாக்கருதி யிவ்வாறு அருளினீர்கள் போலும். தன்னை யின்னாரென்று அறியாத மனிதனும் உலகில் உண்டோ? (நான், தசரதன் மகன் இராமன் என்று தன்னைக் குறித்து யாவரும் அறிவதுபோல்) அப்படியிருக்க அவர்களெல்லாம் பிறப்பதும் இறப்பதுமாகிய துன்பசாகரத்தில் உழன்றுகொண் டிருப்பானேன்? தங்களையே மாதா பிதா குரு தெய்வமாக நம்பிச் சரணடைந்த அடியேனுக்கு அவ்வுண்மையை யுள்ளவாறு விளக்கியருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

குரு:— "சமஸ்தங்களுக்கும் புலப்பட்டு நமக்கு அன்னியமாய் நம்மால் அறியப்படும் சடப்பொருளாகிய இத்தூலதேகம் இன்னதென்றும், இதற்குள் இருந்து இதையாட்டிவைக்கும் சித்துப் பொருளாகிய தேகி இன்னவனென்றும், வேறு பிரித்தறியக் கூடியவன் எவனோ, அவனே தன்னைத் தானறிந்தவனாவான்" என்றார்.

சீடன் இம்மொழிகளைக் கேட்டு வியப்புற்று, "சுவாமீ! இத்தூல தேகத்தை யன்றி தேகி யென்று வேறொருவன் இருக்கிறானா? அவன் யார்? காணவில்லையே. இருந்தால் தோன்ற மாட்டானா?" என்றான்.

குரு:—குழந்தாய்! இத்தேகத்தையன்றி வேறே தேகி யென்றொருவன் ஏது? இருந்தால் தோன்றமாட்டானா? என்று கூறினையல்லவா? நல்லது,

நீ கனவு காணும்போது, இந்தத் தேகம் நீ யென்ற நினைப்பிருக்கிறதா? தேகத்திற்கு யாரேனும் தீங்கு செய்ய அதன் அருகில் வந்தால், நீ அதை யுணர்கிறாயா? இல்லை. அப்படியிருக்க அக்கனவில் இருந்துகொண்டு விஷயங்களை யறிபவனார்? கனவு நீங்கி ஒன்றுமே தோன்றாது சர்வசூனியமா யிருக்கும் காடாகாரமான சுழுத்தியில் இருந்து கொண்டு அச்சுகத்தை யநுபவிப்பவன் யாவன்? இவ்வாறு சொப்பன சுழுத்திகளில் சேட்டை யற்றுத் தனக்கு யாராவது தீங்கிழைக்கவரின் அதையும் உணரும் சக்தியின்றிக் கிடந்த தேகத்திற்குள் இருந்துகொண்டு, (ஒரு மாட்டுருவத்திற்குள் மனிதன் புகுந்து கொண்டு அதை யியக்கிவைப்பது போல்) சாக்கிரத்தில் இத்தேகத்தை யாட்டிவைத்துச் சத்தாதி விஷயங்கள் முதலியவற்றையும், முன் சொப்பனத்தில் நடந்தவற்றையும், சுழுத்தி யநுபவத்தையும், யாவற்றையும் உணரும் அறிவு சொரூபமானதுதான் ஏது? கூறு பார்ப்போம்!" என்றார்.

[கனவிலும், நித்திரையிலும் தேக சம்பந்தம் தோன்றாமலே நான் என்ற ஒன்று இருக்கிறது. அது சாக்கிரத்தில் தேகசம்பந்தத்தோடு இருக்



கையில் மேல்கண்ட கனவு சுழுத்தி நிலைகளை யுணர்கிறது. எவ்வாறெனில், "இராத்திரி நான் இன்னின்ன விதமாய்க் கனவு கண்டேன்" என்றும் "ஒன்றுமே தெரியாமல் நிம்மதியாய்ச் சுகமாய் நித்திரை செய்தேன்" என்றும் கூறுவதோடு, சொப்பன சுழுத்தி நிலைமைகளில் கட்டை போல் கிடந்த தேகத்தைத் தன் பிரியப்படி யாட்டி வைப்பதன்றி, தேகத்திலுள்ள ஞானேந்திரியங்கள் மூலமாய் சகல விஷயங்களையும் அறிந்து கொள்கிறது. இதனால் தேகமட்டு மல்லாமல் அதற்கு அன்னியமான வேறே யொருவஸ்துவும் இருக்கிறதென்றும், தேகம் தானே ஒன்றும் செய்யமுடியாதென்றும், அந்த அன்னியவஸ்துவான நான் என்பதே யதை யாட்டிவைக்கிறதென்றும், ஆழ்ந்து சிந்தித்தால் அறியலாம். இதன்றி சாக்கிரத்திலேயே இந்த நான் என்பது சகல இந்திரியங்கள் அந்தக்கரணங்களோடும் கூடியிருந்தும் ஒவ்வொருசமயம் ஏதோ ஒருவிஷயத்தில் ஆழ்ந்த சிந்தனையி லிருக்கும் போது, நான் என்பது தேகத்தையே யடியோடு மறந்து விடுவதை யநுபவமாய்க் காணலாம். அச்சமயம் கண் விழித்தபடியிருந்தும் எதிரில் சென்றோரை யிந்த நான் காண்பதில்லை. சமீபத்தில் ஒருவர் தன் பெயரைக் கூப்பிட்டழைத்தாலும் கேட்பதில்லை. ஏனெனில் அச்சமயம் நான் என்பது தேகத்தையே மறந்திருந்ததால் இந்திரியங்களின் வழியேசென்று விஷயங்களை யுணரவில்லை. இதனாலும் நான் என்பதனால் இயக்கப்பட்ட தேகம் அன்னியமே யன்றி "நான்" என்பதல்ல வென்று தெரிகிறது. இதோடு தேகத்தை மறந்தபோதும் தேகம் தோற்றாத கனவு சுழுத்தியிலும் நான் என்பதிருக்கிறது; ஆனால் "நான்" என்பதை மறந்து தேகம் என்ற ஒன்று எப்போது மில்லை. இதனால் நான் என்பதுதான் யாவற்றையும் உணரும் சித்துப்பொருள் என்றும், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியாகிய மூன்று காலங்களிலும் உள்ள பொருள் என்றும், தேகம் ஒன்றையும் அறியாத அசத்தென்றும், ஒருகாலத்தில் இருந்தும் ஒரு காலத்தில் இல்லாமலும் போவதென்றும் நன்கு விளங்குகிறது.]

குரு அருளிய இவ்விஷயங்களைக் கேட்ட சீடன்,

"சுவாமி! சாக்கிரத்தில் எல்லா விஷயங்களையும் காண்பதும், பிறகு சாக்கிரத்தில் கண்ட நினைவு முழுதும் நீங்கிச் சொப்பனத்தில் விஷயங்களை யறிவதும், பின்பு அச்சொப்பனம் போய் நித்திரையில் ஒன்றும் தோன்றாத சூனியத்திலிருப்பதும் தினம் அநுபவிக்கிறேன். சொப்பன சுழுத்திகளில் இருப்பது தேகத்திற் கன்னியமான வேறே யேதோ ஒன்று போல்தான் தெரிகிறது. ஆயினும் மனதில் சற்று படுகிறது, சற்று நேரத்திற்குள் (ஜலத்தைப் பாசி மறைப்பது போல்) மறைந்து விடுகிறது. தயை புரிந்து அது அநுபவமாய் விளங்கும் வண்ணம் உபதேசிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

சீடன் கூறியவற்றைச் செவியேற்ற ஆசிரியர், அவனுடைய நிஜ சொரூபத்தை யவனுக்குக் காட்டத்தொடங்கினார். ஆனால் அச்சொரூபம் அதி சூக்குமமானது. இந்த ஊனக்கண்களால் காணக் கூடிய தூலப் பொருளல்ல. அதனால் அதை நேரே சுட்டிக்காட்டல் சாத்தியமல்ல. இப்போது உலகில் அதி நுட்பமாய் வானத்தில் தோன்றும் மூன்றாம் பிறைச் சந்திரனைக்கண்டு கொண்ட ஒருவன் அதை யின்னொருவனுக்குக் காட்ட வேண்டின் முன்னே மரம், கட்டிடம் முதலிய தூலவுருவம் ஒன்றைக் காட்டி (அதோ அந்த அரசமரத்தில், அதோ போகிறதே அந்தக்கிளையில்

ஒரு வாக யிருக்கிறதுபார். அதற்குநேராய் வானத்தில் பார்! என்று) அதன் மூலமாய் அம்மூன்றாம் பிறையைக் காட்டுவதுபோலவும்; மிகநுட்பமாய்த் தோன்றும் அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவோர் அதற்கருகிலிருக்கும் பெரிய நட்சத்திரங்களை முன்னே காட்டி (அதோ சதுரமாய் நான்கு நட்சத்திரங்கள் தெரிகின்றனவா? அதில் ஒன்றின் கீழ் வால்போல் வளைவாய் மூன்று நட்சத்திரங்கள் தெரிகின்றனவா? அக்கடைசி நட்சத்திரத்திற்குக் கிழக்கே ஒரு சாண் தூரத்தில் ஒரு நட்சத்திரம் மிகச் சிறிதாய் மினுக் மினுக் என்று ஜொலிக்கிறதுபார்! அது தான் அருந்ததி என்று) அவற்றின் மூலமாய் அந்த அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவது போலவும், குரு வானவர் தூலரூபமாய்ப் புலப்படும் தேகம், உலகம் முதலியவற்றின் உண்மைச் சொரூபத்தை முன்னே விளக்கிக்காட்டி அதன் பின் யாவற்றிற்கும் மூலகாரணமான அதிசூக்குமமான பொருளைப் பின்பு காட்டத் தொடங்கினார்.

(இதற்கு மேல் குருவானவர் பிறப் பிறப்பாகிய பந்தத் திற்கும், அவற்றின் நிவர்த்தியாகிய மோக்ஷத்திற்கும் காரணம் கூறத்தொடங்குகிறார்.)

“புத்திரா! பந்த மோக்ஷங்கள் இரண்டிற்கும் ஆரோபம் அபவாதம் என்பவைகளே காரணமாகும். அதாவது, ஆரோபம் அல்லது அத்தியாரோபம் என்பது பந்தத்திற்கும், அபவாதம் மோக்ஷத்திற்கும் காரணமாம். இவை யிரண்டிற்கும் யுக்திகள் என்று கூறப்பட்டிருக்கிறது. இவற்றில் பந்தத்திற்கு காரணமாகிய ஆரோபத்தை முந்திக் கூறுதும் கேட்பாயாக.

(பந்தலக்ஷணத்தை முன்பு அறிந்து கொண்டால் மோக்ஷலக்ஷணம் பிறகு விளங்கும் என்று வாசிட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.)

## ஆரோப லக்ஷணம்.

ஆரோபம், அத்தியாசம், கற்பனை, பிராந்தி என்பன ஒரே பொருளையுடைய சொற்களே. உண்மையாய் இருக்கிற ஒரு பொருளை இல்லாத வேறொருபொருளாகக் (மயக்கத்தால்) காண்பதற்கே அத்தியாரோபம் அல்லது ஆரோபம் என்று பெயர். அதாவது தோன்றிக்கொண்டிருக்கும் உண்மையான ஒரு பொருளை இல்லாத வேறொரு பொருள்போல் தோன்றுதல். எதுபோலெனின்:—

வெய்யிலில் நாம் சென்றுகொண்டிருக்கும்போது ஒரு சிப்பி வீதியில் கிடந்தால், சூரிய கிரணத்தால் அது ஜொலிக்கிறதைக் கண்டும் நாம் அது வெள்ளியென்று கருதிவிடுகிறோம்; கொஞ்சம் இருட்டாயிருக்கும் இடத்தில் ஒரு கயிறு விழுந்து கிடந்தால், திடீரென்று அதைக் கண்டதும் அது பாம்பு என்று கருதிப் பயந்து விடுகிறோம்; நல்ல கோடைகாலத்தில் வெட்டவெளியான மைதானத்தை நோக்கினால், அது ஜலம் நிறைந்தவிடம் போல் தோன்றுகிறது. இவையனைத்தும் ஆரோபமேயாம். (தொடரும்.)

சீடன்.

## ஜாதி பேதம்.

முதல் முதலில் மக்கள் காட்டு பிராணிகளைப் போல், காடுகளில் சஞ்சரித்துக் கொண்டு, வேட்டையாடியும், காய் கனி கிழங்குகளைப் புசித்தும் வாழ்ந்து வந்தார்கள். பின் நாளடைவில் மிருகத்தன்மை போன்ற



இந்த ஜீவனத்தை யொழித்து, கோபாலர் ஜீவனத்தைக் கைக்கொண்டனர். மூன்றாவதாக விவசாயத் தொழிலைக் கைக்கொண்டு, நிலைத்திருக்கத் தலைப் பட்டனர்.

விவசாயத் தொழிலைக் கைக்கொண்ட சமயத்தில்தான் ‘ஜாதி’ என்பது ஏற்பட்டது. சௌகரியத்தின் பொருட்டு, வேலையைப் பகுத்து, ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொன்றைக் கைக்கொள்ளவேண்டியதாயிற்று. பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு விதமான ஜாதி ஏற்பட்டன. இவ்வாறு தொழில் நிமித்தம், ஏற்பட்ட நான்கு வருணத்தினருள்ளும், முற்காலத்தில் யாதொரு சச்சரவும் கிடையாது. அவர்கள் யாவரும் கள்ள மின்றி உள்ளத்தால் பரஸ்பரம் நேசித்து உழைத்து வந்ததனால், நம் தாய் நாடான இந்தியாவானது செல்வக் கடலில் வாழ்ந்திருந்தது. ஆகவே ஒருகாலத்தில் இந்த வேலைப் பகுப்பால் ஏற்பட்ட ஜாதிபேதத்தால் நன்மை இருந்ததாகவே தெரிகிறது.

தற்காலத்தில் இதன் நிமித்தமாய் நம்முள் ஏற்பட்டிருக்கும் பிரிவுகளுக்கு ஒரு கணக்கில்லை. இதற்குக் காரணம் என்ன? பல்லாண்டுகளாய் உயர்ந்த வருணத்தினரான அந்தணர் செய்த சுய முயற்சியாலா அல்லது வேறு விதத்தாலா? என்பதைச் சிறிது சிந்திப்போம்.

ஆய்ந்தாராயுமிடத்து, தற்கால நாகரிகத்தால் ஏற்பட்டிருக்கும் நூதன ஜீவனமே இவற்றிற் கெல்லாம் காரணமென்பது பல பெரியோர்களின் கருத்து. நூதன இயந்திரங்களால் கைத்தொழில் மிகுந்த விருத்தி யடைந்திருக்கின்றது. எத்தொழிலும் மிகவும் எளிதாய், எவனும் கையாளத் தகுந்த விதத்தில் இருப்பதால், எவர்க்கும் ஒரு விதமான நாகரிகப் பற்றுதல் ஏற்பட்டு விட்டது. இத்துடன் பொருளாசையும் சேரவே எல்லோரும் அவரவர் இஷ்டம்போல் தங்களுக்கிசைந்த தொழிலைக் கைப்பற்றிக் கொள்ளத் தலைப்பட்டனர். இதன் நிமித்தம் ஒவ்வொருவரும் தங்கள் முன்னோராசாரத்தைக் கைவிட்டுவிட்டார்கள். ஆகவே,

“எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பர்.”

என்ற முதுமொழிப்படி, தற்கால நாகரிக காலம், யாவரும் முன்னோராசாரத்தைத் தழுவ முடியாதகாலமாய் விட்டது. அவர்களுக்குச் சாவகாசம் கிடைக்காமையே இதற்குக் காரணமாதலால், ஒரு வருணத்தினர் மற்றொரு வருணத்தினரைக் குறைகூற இடமில்லை.

இன்னும், தற்கால நிகழ்ச்சியில் அநுபவமூலமாய்ப் பார்க்கும் விஷயத்தில், பொருளுடையவர்கள்தான் பெரியஜாதியிலுள்ளவர்களாய்க் கருதப் படுகின்றனர். இந்த விதமாய், செல்வவிஷயத்திற் பார்க்குமிடத்தில், ஏராளமான செல்வவான்கள் இருப்பது பிராமணர்களிலன்று; ஆனால் இதரஜாதிகளிலேயே என்பது யாவரும் அறிந்த விஷயம். அந்தணர்கள் தங்கள் பெண்டுபிள்ளைகள் உஜ்ஜீவனார்த்தம் தங்கள் முன்னோர் ஆசாரத்தைக் கைவிட்டு எத்தொழிலுக்கும் தயாராக யிருக்கவேண்டி யிருக்கிறது. (அந்தோ! பரிதாபம்!)

ஆனால் ஜகத்பிதாவாயிருக்கும் கடவுள், எளியவர்க்கு எளியவனாயிருக்கிறான். அது பற்றித்தான் எச்சாதியிலும் எளியவர் சதா இன்புற்றிருக்கிறார் போலும். எளியர் எங்கும் வெற்றியே பெற்று மகிழ்கின்றனர். எவனுமொருவன் உண்மையான மனத்துடன் உழைக்கும் பக்ஷத்தில், அவனுக்கு

ஈசுவர கருணை லபிக்கும் என்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. அவனே அந்தணன் எனலாம். அவன் வேதங்கள் ஓதுதல் வேண்டாம், தற்காலத்து இதர ஜாதியர்களைப் போல் பிராமணர்களுடன் உண்ண விரும்பாமலே, என்னையன் அருளமுதத்தை உண்ணலாமே. ஏனென்றால் சர்வேசுவரன் நினைக்கு ஓர் பாத்திரமாய் விளங்கிக்கொண்டிருக்கிறான்.

ஆகையால் நாம் யாவரும் ஜாதி வித்தியாசச் சச்சரவை நீக்குவோம். எளியவர்க் குழைத்து இன்புற முயற்சிப்போம். அன்பான சிந்தை புடையவர்களே அறிவுடையோரென் றறிந்து, எவ்வுயிர்பால் அன்பு பற்றி ஒழுகுவோம்; அதன் பயனுயுள்ள பேரின்பக்கடலில் வாழ்வோம். பொறுமையால் எழும் 'நான்' என்னும் மமதையை விட்டு நல் வழிப்படுவோம். அவ்வரிய போதனையே நம் ''ஆனந்தபோதினி''யின் ஆழ்ந்த கருத்தென்பதை நன் கறிந்து, அவ்விதம் ஒழுக அருளும்படி ஈசனை வேண்டிக் கொள்வோம்.

N. சுப்பிரமணிய ஐயர்,
கிழக்கு இரத வீதி, நாகர் கோவில்.

குறிப்பு:—நம் நண்பர் கூறியபடி ஜனங்கள் விவசாயத் தொழிலைச் செய்து கொண்டும் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டும் ஜீவித்து வந்த போதுதான் தொழிற் பிரிவினையால் நால்வகைச் சாதிகள் யேற்பட்டன. எவ்வாறெனின்;—

ஜனசமூகம் ஜீவித்திருப்பதற்கு இரண்டொரு வகைத் தானியங்களை மட்டும் பயிர் செய்து உற்பத்தியாக்கிக் கொண்டால் போதாது. ஆகாரத்திற்கே பலவித தானியங்கள், கிழங்குகள், காய், கீரைவகைகள் வேண்டும். வியாதி வந்தால் அதை நிவர்த்தி செய்து கொள்ளக் கிழங்கு ரூபமாகவும், இலைரூபமாகவும், வித்து, பட்டை, பூ ரூபங்களாகவும் உள்ள பலவகை ஔஷதங்கள் வேண்டும். இவையாவும் பூமியினின்றே உற்பத்தியாக்கப்பட வேண்டும். உலோகங்கள், கல்வகைகள் முதலிய சில இயற்கைப் பொருள்களும் வேண்டும். அவைகளும் பூமியினின்றே மனிதன் முயற்சியால் தோண்டி யெடுக்கப்பட வேண்டும்.

அப்படி உற்பத்தியாக்கப்படும் பண்டங்கள் யாவுமே ஒரே பூமியில் உற்பத்தியாகா. மண்ணின் தன்மைக்குத் தக்கபடி சிற்சில பண்டங்கள் சிற்சில பூமிகளில்தான் உற்பத்தியாகும். இதனால் ஒரு நாட்டிலுள்ளோர் தங்கள் நாட்டில் உற்பத்தியாகாத பண்டங்களை, அவை உற்பத்தியாகும் வேறு நாடுகளிலிருந்தே கொண்டுவர வேண்டும். இவர்கள் நாட்டி லுற்பத்தியாகும் பண்டங்களில் சிலவோ பலவோ அந்த நாடுகளில் உற்பத்தியாகா. ஆகையால் இவர்கள் நாட்டுப் பொருள்கள் அவர்களுக்கு வேண்டியிருக்கும். இக்காரணத்தால் இந்த நாட்டிலுள்ளோர், சிலர் தங்கள் நாட்டு விளைபொருள்களில் வேண்டிய அளவு கொண்டுபோய் அன்னிய நாட்டாரிடம் கொடுத்துப் பதிலுக்கு அந்நாட்டுப் பொருள்களில் தங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்வார்கள். ஒருவகுப்பார் நாட்டின் க்ஷேமத்திற்காக இத்தொழிலையே செய்ய வேண்டியவர்களானார்கள். அதனால் ஜனசமூக க்ஷேமத்திற்காக இவர்கள் இப்படிச் செய்துகொண்டேயிருந்தால் இவர்கள் குடும்பம் எப்படி ஜீவிப்பது? இதற்காக ஒரு ஏற்பாடு செய்து கொண்டார்கள். எப்படியெனில், இவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று அங்கு உற்பத்தியாகும் கடலையை ஒரு படி கடலைக்கு (தாங்கள் கொண்டுபோன நெல்லில்) இரண்டுபடி நெல் வீதம் கொடுத்து வாங்கிவந்தார்களாயின், தங்கள் நாட்டிற்கு வந்தபின் அக்கடலை வேண்டுவோர்க்கு ஒரு



படி கடலைக்கு இரண்டரைப்படி நெல் வாங்கிக் கொண்டு கொடுப்பார்கள். மீதி இவர்கள் அதிகமாய் வாங்கும் அரைப்படி நெல் இருக்கிறதே, இது தான் இவர்கள் கஷ்டத்திற்குக் கூலி. இதற்கே இலாபம் என்று பெயர். ஆதியில் இவ்வாறே ஒரு பண்டத்தைக் கொடுத்தே ஒரு பண்டத்தை வாங்கிக்கொண்டிருந்தார்கள். இதற்கே பண்டமாற்றுதல் என்று பெயர். நமது நாட்டில் இப்போதும் இப்புராதன வழக்கம் நடைபெற்று வருவதைக் காணலாம். அரிசி, நெல் முதலிய தானியங்களைக் கொடுத்தே கீரை, பழங்கள், கறிவேப்பிலை முதலியவற்றை ஜனங்கள் வாங்குவதைத் தினந்தோறும் காணலாம். கிராமங்களில் இவ்வழக்கம் அதிகமாய் நடைபெறுகிறது.

நேயர்களே! இத்தொழில் செய்வோரே வர்த்தகர் என்னும் வைசியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். போகப்போக இவர்கள் ஒரு இனமாய்ச் சேர்ந்துகொண்டு நன்மை தீமைகளில் ஒரு ஒற்றுமையாய் உழைத்துக் கொண்டும் வந்து, முடிவில் கொள்வினை கொடுப்பினைகளையும் தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொண்டார்கள். இதனால் இவர்கள் நாளடைவில் ஒரு தனிச்சாதியாய்ப் பிரிந்துவிட்டார்கள். ஆயினும் இவ்வளவு தூரத்திற்கு வந்தது நெடுநாட்களுக்குப் பின்பே. அது வரையில் தொழிலில் மட்டும் பேதமேயன்றி மற்ற எல்லா விஷயங்களிலும் சிறிதும் வித்தியாசமென்ப தில்லை. அக்காலங்களில் எவன் வேண்டுமாயினும் அத்தொழிலைச் செய்யத் தொடங்கி அந்த வகுப்பில் ஒருவனாய் விடலாம்.

இந்த வர்த்தகர் காடுமலைகளின் வழியாய்த் தங்கள் பண்டங்களை யெடுத்துச் செல்லவேண்டும். இவர்களைக் கள்ளர் சூறையாடக்கூடும். மேலும் ஒரு ஊரார் சற்று ஏமாறும் சமயம் பார்த்து அன்னிய ஊரார், கள்ளர் முதலியோர் இவர்கள் கால் நடைகளைக் களவாடிக்கொண்டு போவதோடு, இவர்களின் வீடுகளிற் புகுந்து கொள்ளையடித்து ஆண்பெண்களைச் சிறையாக்கிக் கொண்டுபோகவுங்கூடும். ஆதலால் அப்படிப்பட்ட சமயங்களில் தங்கள் நாட்டு ஜனங்களின் உயிர்களையும் பொருள்களையும் காப்பாற்றவும், வந்த கள்ளர் முதலிய எதிரிகளை யடித்துத் துரத்தவும் சிலர் அதற்கென்று எப்போதும் ஆயத்தமா யிருக்கவேண்டும். இவர்கள் வில்வித்தை வாள்வித்தை முதலியன கற்று, தேகப்பயிற்சி செய்து பலமடைந்து, எப்போதும் சண்டைக்குச் செல்ல சந்தோஷ முடையவர்களாய், முன்வைத்த காலைப் பின்வைக்காத சூரதீரர்களாய், தங்கள் உயிரை யொரு திரணமாய் மதித்துத் தாய்நாட்டையும் ஜனங்களையும் காப்பாற்ற இரத்தத்தைச் சிந்தும் சுத்தவீரர்களா யிருக்கவேண்டும். இவர்களே க்ஷத்திரியர்கள் என்றழைக்கப்பட்டார்கள்.

இப்போது இத்தகைய வீரர்கள் கூட்டம் எதிரிகளோடு சண்டை செய்யப் போகும் சமயத்தில் ஒருவன் பேச்சை யொருவன் கேட்காது அவனவன் தானே எஜமானுயிருக்கப் பிரியங்கொண்டு, தங்களுக்குள் சச்சரவை யுண்டாக்கிக்கொண்டால், இவர்களனைவரும் எதிரிகளால் கொல்லப்பட்டழிவதோடு, எதிரிகளால் நாடும் அழிக்கப்படும். ஆதலின் இவர்கள் கட்டுக்குலையாமலிருக்கச்செய்து இவர்களை யடக்கி யாண்டு, சண்டைகாலங்களில் இவர்களைச் சமயோசிதப்படி பலபிரிவுகளாய்ப் பிரியச்செய்து சண்டையிட வழிகாட்டி, எதிரிகளைத் தோற்கடிக்கச் செய்யவும், யுத்தகாலத்தில் இவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் ஆகாரம் முதலியவைகளும் அப்போதைக் கப்போது கொடுத்துதவவும் ஒரு தலைவன் வேண்டும். அவனும்

இவர்களைப்போல் சுத்தவீரனும், அதோடு நற்குலத்தவனும், புத்தி, யுக்தி, ஜீவகாருண்யம், சத்தியம், பாரபட்சமின்மை முதலிய குணங்களை யுடையவனும், யாவருடைய க்ஷேமத்திலும் கருத்துடையவனும் அவர்களுயிரைத் தன்னுயிர்போல் கருதிப் பாதுகாப்பவனும் இருக்கவேண்டும்.

இக்கூட்டத்தவர்களே ஜனங்களுக்கும் நாட்டிற்கும் வேலிபோல் பாதுகாப்பாயிருப்பவர்களாதலால் இத்தலைவனையே ஜனங்களனைவரும் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் தலைவனாக ஏற்றுக்கொண்டார்கள். இவனே அரசன்.

இவர்கள் தேச க்ஷேமத்திற்காகவே தொழில் செய்ய வேண்டியவர்களானதால் தேச ஜனங்களே இவர்கள் ஜீவியத்திற்குப் பொருளுதவி செய்யவேண்டும். இதற்காக யாவர்க்கும் தலைவனாய் ஏற்பட்ட அரசனும் ஜனங்களில் அறிவாளிகளாகிய தலைவர்களும் கூடி, ஜனங்களில் அவரவர்களின் வருவாய்க்குத்தக்கபடி பிரிவுபோட்டுப் பணம் தண்டுகிறார்கள். மேற்கூறப்பட்ட தலைவர்களாகிய அறிவாளிகளே அரசனுடைய மந்திரிமார். அவர்கள் கூட்டத்திற்கே மந்திராலோசனை சபையென்று பெயர். அப்படி வசூலிக்கப்பட்ட பணமே அரசிறை அல்லது வரி. இப்பணத்தில் அரசன் தன் அந்தஸ்திற்குத் தக்கபடி ஜீவிக்க அவனுக்கு ஒரு பாகம் அளிக்கப்படுகிறது. மற்றதில் சேனைவீரர் சம்பளம், மற்ற சிப்பந்திகள் சம்பளம், இதன்றி ஜனங்களின் சௌகரியத்திற்கு வேண்டிய பாதை செப்பனிடல், பயிரிட ஏரிகள் கட்டல் முதலிய செலவுகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவைகட்கும் ஜனங்களின் சௌகரியங்களுக்கும் இன்னும் அவசியமாய் வேண்டிய மற்ற வேலைகளுக்கும் போதுமான பணத்திற்காக நில வரி, தொழில் வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, முதலிய பலவரிகளை அரசன் தன் சபையாரோடு ஆலோசித்து விதிக்கிறான்.

இப்படி யேற்பட்ட இந்த இராஜாங்கத்திலுள்ள ஜனங்களுக்கு மிக்க முக்கியமான இன்னொரு குறை யிருக்கிறது. அதாவது ஆன்மார்த்த இலாபமே. கடவுளைப்பற்றிய ஞானத்தை புணர்ந்து அவ்வருளைப் பெற்று பிறப்பிறப்பை யொழிக்க வல்ல மோக்ஷ மார்க்கத்தைப் போதிக்க அதற்கென்றே சிலர் வேண்டும். அவர்கள் வேறு தொழில் செய்யாமல் வேதமோதி, அரசன் முதல் அனைவர்க்கும் அவரவர்கள் ஒழுக வேண்டிய நீதி மார்க்கங்களையும், கடவுள் வழிபாட்டினையும் போதித்துத் தாங்கள் சன்மார்க்கத்தில் நடந்து மற்றபேர்களையும் அவ்வாறு நடக்குமாறு போதித்துக்கொண்டும், அரசன், செங்கோல், குடிகள், தேசம், தருமம் இவர்களின் க்ஷேமத்திற்காக யாக யக்யாதிகளை செய்து கொண்டுமே இருக்க வேண்டும். இவர்கள் வேத முணர்ந்து பிரமஞானத்தை யடைந்தவர்களாயிருக்க வேண்டியது. ஆதலால் இவர்களே பிராம்மணர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இவர்களனைவர்க்கும் தேகத்தால் செய்யவேண்டிய வேலைகள் பலவிருக்கின்றன. அவற்றைச் செய்யச் சிலர் இருந்தாலன்றி உலக விவகாரம் நடைபெறாது. இவ்வகை யூழியம் செய்பவர்கள் சூத்திரர் என்ற பெயரை யடைந்தனர்.

இந்த நான்கு வகுப்பாரும் ஜனசமூகம் என்ற ஒருமனிதனுக்கு நான்கு கரங்களைப் போன்றவர்கள். நம் நாட்டிலுள்ள இந்த நான்கு வகுப்பாரும் சேர்ந்த ஒரு கூட்டத்திற்கே ஹிந்துக்கள் அல்லது இந்தியர் என்று பெயர்.



ஒரு குடும்பத்தில் மூத்த சகோதரன் இளைய சகோதரன் என்ற தாரதம்மியமும் மரியாதை பேதமும் இருந்த போதிலும், யாவரும் ஒரே தாய் தந்தையர்க்குப் பிறந்த சகோதரர்களாயிருப்பது போல், இந்நால் வகுப்பாரும் சகோதரர்களே யாவர்.

ஆதியில் வேதமோதி அந்த நெறியில் நின்று அனேகர் அந்தணரானார்கள். நாம் வைசியர் விஷயமாய் மேலே கூறியது போல் காலவித்தியாசத்தால் பிற்காலத்திலேயே இவர்களுக்குள் பூரணப் பிரிவினையும் பல சில்லரை ஜாதிகளும் ஏற்பட்டன.

ஜனங்களில் சுத்தமற்றவர்களாய், ஆசாரக் குறைவுடையவர்களாய், சுத்தமில்லாதவர்களாய், அசுத்த ஆகாராதிகளை யருந்துவோராய், தேகசுத்தம் உடைத்தற்று மற்றுப்பார்ப்போர் தீண்டவும் பிரியமில்லாத வண்ணமாய் யார் நடந்துகொண்டார்களோ அவர்களே தீண்டாதவர்கள், நீசர்கள் என்ற கூட்டமாய்ப் பிரிந்தார்கள். ஆயினும் அவர்களும் மற்றபேர்களிடம் தொழில் செய்து ஜனசமூகத்தோடு கலந்தே ஜீவிக்கிறார்கள். அவர்களும் ஜனசமூகத்திற்கு அவசியமானவர்களே.

பிராம்மணர் அறிவினால் தங்கள் தொழிலைச் செய்வோர். அறிவு லலாட ஸ்தானத்திலிருப்பதால் அவர்கள் சிருஷ்டி கர்த்தாவின் முகத்தினின்று உதித்தார்களென்றும், க்ஷத்திரியன் தன் புயவலியால் தன்தொழிலைச் செய்யவேண்டியதால், தோள்களில் உதித்தானென்றும், வயிறு சகல ஆகாரங்களையும் தனக்குள் சேர்த்துவைத்துக் கொண்டு தேகமுழுதும் போஷிப்பதுபோல் வைசியர் சகல பண்டங்களையும் சேமித்து வைத்துக் கொண்டு ஜனங்கள் போஷணைக்கு உதவுவதால், அவர்கள் வயிற்றிலுதித்தார்களென்றும், பாதங்கள் தேக முழுமையும் தாங்குவது போல் மற்ற சூத்திரர்கள் மூவருணத்தார்க்கும் அவசியமான தொழில்களைச் செய்வதால் பாதங்களில் பிறந்தார்களென்றும் உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தொழிற்பிரிவினையால் ஏற்பட்ட ஜாதிபேதம் இப்போது கால வேறுபாட்டால் தொழில் நியமம் ஒழிந்துபோய், ஜீவனார்த்தம் எவரும் எத்தொழிலையும் செய்யத் தொடங்கிவிட்டிருந்தும், ஜாதிப்பிரிவினை மட்டும் ஒழியவில்லை. முற்காலத்தில் பிராம்மணர் மேலே கூறிய தமக்குரிய தொழில்களை மட்டும் செய்துகொண்டிருந்தபோது, அரசனும் குடிகளும் அவர்கள் ஜீவனத்திற்கும் யாக யக்யாதிகளுக்கும் வேண்டிய பொருளையளித்து வந்தார்கள். இப்போது அவ்வாறளிப்பாரற்றுப் போகவே, விதியின்றி யவர்கள் வேறுதொழிலையேனும் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வாறே மற்றையோரும்.

நண்பர்களே! நாம் நால்வரும் சகோதர பாவத்தோடு, ஒருவரை யொருவர் அவமதிக்காது, இகழ்வு படுத்தாது, ஒற்றுமையாய் உழைத்தால் ஆண்டவன் நம்மை முன்னேறும்படி செய்வதில் ஐயமில்லை. வரம்பு கடந்து பொறாமையாலோ வேறெக்காரணத்தாலோ ஒருவகுப்பினரைத் தாழ்விப்போர், அல்லது அவமதித்து ஒரு வகுப்பினர் மனநோகச் செய்வோர் ஒருபோதும் க்ஷேமமுறார்கள். அதன்றி அத்தகையோர் நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கே இடையூறிழைப்பதால் ஆண்டவன் கோபத்திற்காளாவார்கள்.

பத்திராசிரியர்.

# பெண்கல்வியும் சங்கீதமும்.

சங்கீதம் தெய்வீக சாத்திரமென்றும் தேவர்கட்குப் பிரியமானதென்றும் கூறப்பட்டிருக்கிறது. மகான்கள் உயர்ந்த பண்களில் பகவான்மேல் பக்திரசம் நிரம்பிய பாசுரங்களைப்பாடி யருள்பெற் றிருக்கிறார்கள் என்று அறிகிறோம். இராவணன் சாமவேதகானம்பாடி பரமசிவத்தினிடம் வரங்களைப் பெற்றான் என்று கூறப்பட்டிருக்கிறது. பக்திமார்க்கத்தில் உபயோகப் படுத்தப்பட்டபோது சங்கீதத்தின் பெருமை யிவ்வாறிருக்கிறது.

இதன் மற்றொரு சுபாவத்தைக் கவனிப்போம். சிற்றின்ப இச்சையை நாடி விலைமாதின் அகத்திற்கு ஒருவன் சென்றால் அவள் முதலில் பிடில் வீணை முதலிய கருவிகளைக் கொண்டு இனிய கீதங்களைப் பாடி யவன் மனதில் சிற்றின்ப ஆவல் உண்டாகும்படிச் செய்கிறாள். ஞான நூற்களில், சங்கீதம் செவிப்புலன் வழியாய் அனுபவிக்கும் இந்திரிய சுகமாகிய விஷய சுகமே யென்றும், இது தீங்கை விளைவிக்கத் தக்க விஷய போகங்களைச் சேர்ந்ததே யென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதற்குத் திருஷ்டாந்தமாய் நாகம் இனிய சத்தத்தைக் கேட்பதில் மிக்க பிரியங் கொண்டிருப்பதால் அச்சத்தத்தால் மயங்கிப் போய் மனிதனிடம் சிக்கிக் கொள்கிற தென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதனால் சங்கீதம், செல்வம், வாள் இவற்றைப்போன்று நல்ல பயன் கெட்டபயன் இரண்டையும் உண்டாக்கத்தக்கது என்று நன்கு புலப்படுகிறது. அதாவது செல்வமுடையோன், "ஆ! நாம் பூர்வம் செய்தபுண்ணியத்தால் கருணாநிதியாகிய ஆண்டவன் இப்பிறப்பில் நமக்கு நல்ல செல்வத்தை யளித்திருக்கிறார். நாம் இப்போது இதை ஆண்டவன் அவனடியார், ஏழைகள் இவர்கள் விஷயத்திலும் பொது நலத்திற்கும், தான தருமங்களுக்கும் செலவழித்துப் புண்ணியம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்" என்றுகருதி அவ்வாறே நடந்து கொண்டால் அச்செல்வத்தால் இம்மையில் புகழும் மறுமையில் நற்பதவியுமடைகிறான். அப்படியின்றி, "நமக்குச் செல்வ மிருப்பதால் நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை" என்று மமதை கொண்டு, நல்லோர் பெரியோர் யாவரையும் அலட்சியம் செய்து எந்த அக்கிரமத்தையும் துணிந்து செய்யத் தொடங்கினால் பெரும் பாபத்திற்காளாகிறான். அதைப்போலவே ஒருவனிடம் ஒரு கத்தி சிக்கினால் அதைக் கொண்டு அவன் நல்ல காரியத்தைச் செய்து புண்ணியத்தைச் சம்பாதித்தாலும் சம்பாதிக்கலாம்; துர்க்கிருத்தியங்களைச் செய்து பாபத்திற்காளாயினும் ஆகலாம்.

சங்கீதமும் அவ்வாறே. பக்தி சம்பந்தமான சங்கீதத்தால் கெடுதி சம்பவியாது. நமது பெண்களுக்குச் சிறு வயதிலேயே சாதாரணக் கல்வியோடு அவர்கள் புத்தியின் வளர்ச்சிக்குத் தக்கபடி மதக்கல்வியையும் போதிக்க வேண்டும். அச்சம்பந்தமாக நம் முன்னோராகிய மகான்களால் அருளப்பட்டு அவர்களுக்குப் பரமனருள் கிடைக்கும்படி செய்த தேவாரம், திருவாசகம், பிரபந்தம், திருப்புகழ் தாயுமானவர் முதலியவற்றைப் பக்தியாய்ப் பாடும்படி கற்றுக் கொடுக்க வேண்டியதே.

அப்படியின்றி, இக்காலத்தில் பாடப்படும் துரடி சாடி மெட்டுகள், டப்பாக்கள், இன்னும் இப்போது புதிது புதிதாய் ஏற்படும் வர்ணமெட்டுக்கள் முதலியவற்றைக் கற்பித்தல் சற்றும் தகாத காரியமே. இவற்றால் பின்



னால் கெடக்கூடிய பெருந் தீங்குகளுக்கு ஓர் எல்லையில்லை. நாடக சங்கீதத்தால் நமது நாட்டில் அநேகம் ஸ்திரீகள் பெருந்துன்பத்திற்கு ஆளா [illegible]லவித்துக் கலங்குவதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண் டிருக்கும் இந்த நம் பெண்கட்குப் பாடசாலைகளில் அனுவசியமும் அனாவசியமுமான பாட்டுகளை யெல்லாம் கற்பிக்கிறார்கள்.

பெண்கல்வி விர்த்தியடையவேண்டுமென்று ஆன்றோர்கள் சிரத்தை யெடுத்துக்கொண்டு பாடசாலைகளை ஏற்படுத்தி, சன்மதத்தைப்பற்றிய கல்வியையும் போதிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். அப்படியிருந்தும் குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டது போல், இத்தகைய இரண்டொரு தகாத விஷயங்களுக்கு இடங் கொடுப்பதால் நம் மக்களுக்கு நாம் நன்மை செய்யக் கருதிக் கடைசியில் தீங்கு செய்ததாக முடிவது நிச்சயம் என்பதைப்பற்றி நண்பர்கள் கவனிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

முற்காலத்திய உபாத்திமார்களுக் கிருந்ததைவிட இப்போதிருக்கும் உபாத்திமார்களுக்குள்ள தொழில் மிக்க கடினமானது. எவ்வாறெனின்;- முற்காலத்திய உபாத்திமார் கல்வியைமட்டும் போதிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள். அதோடு சுபாவமாகவே நன்னடக்கையைப் பற்றி போதித்தார்கள். இப்போதுள்ள உபாத்திமார்கள் அதைமட்டும் செய்தால் போதாது. இக்காலத்தில், நாகரீகமென்றும் நாகரீகச் சீர்திருத்தம் என்றும் கூறப்படும் மதிமயக்க [illegible] பலரைப் பிடித்துக் கொண்டு பெருந்துன்பத்தை விளைவிக்கும் பாதையில் அவர்களை இழுத்துச் செல்கிறது. ஆடவர்களிலேயே பலர் அதன் மாயையில் சிக்குண்டிருக்கிறார்களென்றால், மாதரும். சிறு பெண்களும் சிக்குவது வியப்பாகாது. அதனால் அவர்கள் நம்முன்னோர்களின் ஆசாரத்தைக் கைவிட்டு மதிமயங்கி தமக்குத் தகாததையும் தீங்கை விளைவிக்கத் தக்கவையுமாகிய அன்னிய ஆசாரங்களைப் பின் பற்றத் தொடங்குகிறார்கள்.

அந்தோ! நமது பெண்மக்கள் இப்பெரிய ஆபத்தில் சிக்கிப் பிறகு நம் நாட்டிற்கே வறுமை யுண்டாக்கா முன்னம், அவர்களை அந்நிய வழியில் பிரவேசிக்காதபடி பாதுகாக்க வேண்டிய சிரத்தையை யெடுத்துக்கொள்ள வேண்டியவர்கள் நம் சகோதரர்களாகிய உபாத்திமார்களே யன்றி வேறு யாருளர்? மேற்கூறியபடி நம் பெண்மணிகளுக்குக் கடவுள்மேல் பாடும் பக்திவிளைவிக்கும் ஆன்றோர்களது தோத்திரப் பாக்களையன்றி, வேறுவித சங்கீதங்களைப் போதிப்பது தீயவழிகளில் ஒன்றே. சிலர் பாட்டாய்க் கற்றுக் கொடுத்தால் எதையும் பிரியமாய்க் கற்றுக் கொள்வார்களென்று கருதலாகும். இது தவறான அபிப்பிராயமே. பாட்டை மட்டும் அவர்கள் கற்றுக் கொள்ளக்கூடும். ஆனால் அப்படிக் கற்றுக் கொள்வது பாட்டின் சங்கீதத்திலிருக்கும் இனிமைக்கேயன்றி வேறில்லை. அந்தப் பிரியமே அவர்கள் மனதில் விர்த்தியடைகிறதன்றி, அவர்கள் அறிவு விர்த்தியாவதற்கு வேண்டிய விஷயமொன்றும் அவர்கள் மனதிற் பதிவதேயில்லை. இப்போது பாடசாலைகளில் வாசிக்கும் பெண்கள் வீடுகளில் கூட்டமாய்க் கூடிக்கொண்டு பலவிதப்பாட்டுகளைப் பாடுவதையும், சில பாட்டுகள் நடனத்தோடு பாடப்படுவதையும் காண்கிறோமேயன்றி, உட்கார்ந்து புத்தகத்தை வாசித்து அதில் அறிந்துகொள்ளத் தக்கவையாய்த் தோன்றும் விஷயங்களைப் பற்றி கேட்டுக் கற்றுக்கொள்வதைக் காண்பதரிது. இது பிரத்தியக்ஷ அநுபவமாய் நடக்கும் உண்மை. அந்தோ! அவர்கள் மனதில் நாம் வளரவிடும் இச்

சங்கீத ஆசையும் இன்பமும் எத்தகைய விபரீதங்களையுண்டாக்கும் என்பதைப்பற்றி சற்று சிந்தித்தால், நம் பெண்மக்களின் க்ஷேமாபிவிர்த்தியைக் கோரும் உபாத்திமார் ஒவ்வொருவரும் இந்த விஷச் செடியை யிப்போதே வேரோடு களைந்தெறிவார்கள் என்பது நிச்சயம். இதனால் நேரிடக்கூடிய பெருந்தீங்கைப்பற்றி அனுபவமான ஒரு திருஷ்டாந்தமட்டும் கூறி இவ்விஷயத்தை முடிக்கிறோம். இப்போது நாம் கூறப்போவது உண்மையாகவே நடந்த சம்பவம். இதில் கூறப்படும் ஆட்கள் இன்னும் ஜீவியமாயிருப்பதால் அவர் பெயர்கள் இவற்றை மறைத்து விஷயத்தை மட்டும் கூறுகிறோம்:—

மேற்கண்டவாறு சங்கீதமெட்டுகளில் சிறுவயதிலிருந்து பயிற்சியடைந்த ஒரு நற்குலக் கன்னிகை இருநூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் ஒரு கௌரவம் பொருந்திய உத்தியோகஸ்தருக்கு வாழ்க்கைப்பட்டாள். அவர் தாய்ப்பாஷையையும் நம்முன்னோர் ஆசாரங்களையும் அலட்சியம் செய்து, கண்மூடித்தனமாய் மேல் நாட்டு ஆசாரங்களைப் பின்பற்றும் மதிமயக்கக்காரரில் ஒருவர். ஆகையால் தமது மனைவி அவள் பிரியப்படி தனியாகவே நாடகங்களுக்கும் சுற்றத்தார் சினேகர் இவர்கள் இல்லங்களுக்கும் சென்று வரும்படி தாராளமாய் விடுவதே நாம் நாகரீகச் சீர்திருத்தமடைந்ததற்குத் தகுதியான நடக்கையென்று கருதி அவ்வாறே நடந்து வந்தார்.

இவர்கள் தென்னாட்டில் ஒரு நகரத்தில் இருந்தார்கள். அங்கு வந்து ஒரு நாடகக்கம்பெனியார் நாடகம் நடத்தி வந்தார்கள். மேற்கண்டமாது நாடகம் நடக்கும் ஒவ்வொருநாளும் போய்ப் பார்த்து வருவது வழக்கம். அவள் கணவனது தொழில் முறைமையில் எப்போதும் யாராவது சில மனிதர்கள் அவரிடம் வந்து கொண்டேயிருப்பார்கள். ஆகையால் அவர் உத்தியோகத்திற்குச் செல்லும் காலம் போக மற்ற காலங்களில் வீட்டை விட்டுக் கிளம்புவது மிக்க அரிது.

நாடகத்திற்குச் சென்றுகொண்டிருந்த அம்மாது, ஒருநாள் தன் வேலைக்காரி மூலமாய் அந்த நாடகத்தில் இராஜ வேடந்தரிப்பவனை வீட்டிற்கு வரவழைத்து, அவன் பாடும் பாட்டுகளில் தனக்குப் பிரியமான சிலவற்றை யெழுதித் தரும்படி கேட்டு வாங்கிக்கொண்டாள். பிறகு அவற்றை யவளுக்குப் பாடக் கற்பிப்பதற்காக அம்மனிதன் அடிக்கடி அங்கு வந்து போகும் வழக்கமுண்டாய் விட்டது. கணவன் தன் மனைவி சங்கீதத்தில் பிரிய முடையவளாதலால் பாட்டுகள் கற்றுக்கொள்ள அவனை வரவழைக்கிறாளென்று பேசாமலிருந்தார்.

கொஞ்சகாலம் கழித்து அந்த நாடகக் கூட்டத்தார் அந்த நகர்க்குச் சுமார் இருபது மைல்கள் தூரத்திலிருக்கும் வேறொரு நகர்க்குச் சென்று அங்கு நாடகம் நடத்தத் தொடங்கினார்கள். இந்த இரண்டு நகரங்களின் மார்க்கமாகவும் தென் இந்தியா இருப்புப்பாதை செல்கிறது. அம்மாது இரவில் சுமார் ஏழுமணிக்குத் தன் ஊரிலிருந்து புறப்படும் வண்டியிலேறி மறுபடி காலை 4 மணி வண்டியில் திரும்பி வந்து விடுவது சௌகரியமாயிருந்தது. ஆகவே அம்மாது தன் சுற்றத்தாள் ஒருத்தி ஒரு ஊரில் வியாதியுற்றிருப்பதாகவும் அவளை யடிக்கடி தான் போய் கண்டுவிட்டு வரவேண்டுமென்றும் கணவனுக்கு சாக்கு கூறிவிட்டு நாடகம் நடக்கும் தினங்களில் அங்கு போய்வரும் நடக்கையுடையவளானாள். உண்மையில் இவள் நாடகம் பார்க்கப்போவதில்லை. இராஜ வேடக்காரன் மூலமாய் ஸ்திரீபாகத்தை



நடிக்கக் கற்றுக்கொண்டு, இவள் அங்கு சென்று ஸ்திரீயின் பாகத்தை நடித்து விட்டு வந்துகொண்டிருந்தாள்.

நேயர்களே! சகோதர சகோதரிகளே! இத்துயரமான சம்பவத்தை இன்னும் விஸ்தாரமாய்க்கூற நமக்குப் பிரியமில்லை. சுருக்கமாக முடிவைக் கூறிவிடுகிறோம். மற்ற விஷயங்களைச் சுலபமாக நீங்களே யூகித்துக் கொள்ளலாகும். கடைசியில் இவள் ஒரு நாள் நாடகத்திற்குச் சென்றவள் வீட்டிற்குத் திரும்பி வரவேயில்லை: ஆனால் மறுநாள் கணவனுக்குக் கடித மூலமாய்ச் சங்கதியை யறிவித்து விட்டாள். அந்தோ! முதலில் கொஞ்சகாலம் அவள் அந்த இராஜ வேடக்காரனோடு சந்தோஷமாய் நடித்துக் கொண்டிருந்தாலும் பிற்காலத்தில் (இப்போதும்) அவள் நிலைமையும், அவள் படும்பாடும், அனுபவிக்கும் துன்பங்களும் கேட்போர் கண்களில் நீர் வடியச் செய்யுமென்பதில் சற்றும் ஐயமேயின்றாம்.

நண்பர்களே! இதே காரணத்தால் நம் நாட்டில் அனேகம் மாதர் எவ்வளவோ துன்பமடைந்ததை நாம் கண்டிருக்கிறோம்; இப்போதும் காண்கிறோம். அந்தோ இன்னமும் அந்த வீண் மயக்கத்தில் சிக்கி நம் பெண்களுக்குத் தீங்கை நாமே யுண்டாக்குதல் பாபகரமான செயல் என்பதை யினியேனும் சிந்தித்து நடக்க வேண்டாமோ. உபாத்திமைத் தொழில் புரியும் கல்விமான்களே இத்தீங்கை நிவர்த்திக்க முயலவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். தாய் தந்தையர்களும் இதைப்பற்றி சிரத்தை யெடுத்துக் கொள்ள வேண்டும். இன்றேல், பின்னால் பெருந் துக்கத்தை யனுபவிக்க நேரிடும். உபாத்திமார் இது விஷயத்தில் கவனத்தைச் செலுத்தினால் ஆண்டவன் அவர்களது உத்தியோக முறைமையிலுள்ள குறைகளை நீக்கிப் பூர்வீகம்போல் அவர்களுக்குக் கௌரவத்தையும், நிம்மதியான சுகவாழ்க்கையையும், க்ஷேமத்தையு மருளுவார் என்பது உண்மை. தம்தத்தலத்.

ஓர் பெண்மணியின் தந்தை.

குறிப்பு:—இது உபாத்திமார்களும் தாய் தந்தையர்களும் அவசியம் கவனிக்க வேண்டிய விஷயமாகும். இதில் கூறியிருப்பதுபோல் இந்த சங்கீதப்பாட்டுகளால் பெருந் தீங்கு விளைவது உண்மையே. நமது பெண்களின் பூர்வீகக் கௌரவத்தை நிலை நாட்டவும், தேச க்ஷேமத்தைக் கோரவும் விரும்பும் அறிவாளிகள் இத்தகைய கெடுதியை யுண்டாக்கும் போதனையை யுடனே யொழிக்க முயல்வார்களென்று நம்புகிறோம். கருணாநிதியாகிய பரமன் அருள் புரிவானாக. பத்திரிகாசிரியர்.

---

## கற்கோட்டை—காவல்

(399-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் இப்போது ஏன் அவன்விஷயத்தை வெளியிடவில்லையெனின், வெளி யிட்டால் அதனால் நேரிடும் அவமானம் குடும்ப முழுமையும் சாரும். மேலும் அவன் ஏகபுத்திரன் இராணியிடம் நல்ல அந்தஸ்தில் இருக்கிறான். அவன் மேலான அந்தஸ்திற்கு வருவான். இச்சங்கதி வெளியானாலோ, தந்தை மகன் இருவர்க்கும் அழிவுநேரிடும். அவன் எனக்கொரு கெடுதியும் செய்யாதவனாயின் அவனுக்குத் தீங்கிழைக்க எனக்கு மனம் வரவில்லை. இவனால் நான் மரணதண்டனை யடைந்தால் அதனால் இவனுக்கு உண்டாகும் உலக அபவாதமே இவனுக்குப் போதும்......" என்றான்.

ஸர்தார்.—"அப்பிரபுவே தங்களுடைய பொறுமையையும், உதாரகுணத்தையும், பெருந்தன்மையையும் நான் மெய்யாகவே மிகவும் கொண்டாடுகிறேன். இத்தகைய உத்தமனுக்கு ஆண்டவன் கட்டாயம் உதவிபுரியாமற் போகார். இன்னொரு சங்கதி: தாங்கள் அப்பிரபுவின் மாளிகையில் பிடிக்கப்பட்ட இரவு அங்கு ஏதோ இரத்தக்களரியான சண்டை நடந்ததாகவும், உமது மாமனுடைய ஆட்களில் இருவர் மிக்க காயமடைந்ததாகவும் ஒருவன் கொல்லப்பட்டதாகவும் பிரஸ்தாபம். அதோடு குணசேனவென்று திரவியலிங்கம் பிரபுவின் பெயரும் கூறப்பட்டது" என்றார்.

ஸேனன்.—ஆம். நான் தங்களிடம் இரகசியமாய்க் கூறுகிறேன். திரவியலிங்கம் பிரபுவும் அங்கிருந்தார். என் மாமன் இன்னொரு சுந்தரத்தானுக்கும் சதிசெய்ய முயன்றான் என்று நான் கூறியது அவரைத்தான். நான் தன் சதியை வெளியிடாததற்குப் பதிலாக என்மாமன் அப்பிரபுவைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலிருக்கிறான். நான் அதையும் கருதியே அவன் சதியை வெளியிடவில்லை. திரவியலிங்கம்பிரபு காட்டிற்குள் வந்திருப்பதாய் வெளியில் தெரிந்தால் எங்கும் தேடி யவரைப்பிடிக்க முயல்வார்கள். பரிசாய்க் கிடைக்கும் பணத்திற் காசைப்பட்டு கல்நெஞ்சர்களும் துஷ்டர்களுமாகிய அநேகர் அவரைத் தேடிப்பிடிக்கக் கிளம்பி விடுவார்கள். இராணியிடம் சென்றவன் எப்போது வருவானோ? என்றான்.

ஸர்தார்.—"சாதாரணமாய் மூன்று நான்கு நாட்களில் இங்கிருந்து ஒருவன் இந்திரபுரி சேரக்கூடும். இன்று அவன் சென்று 8-வது நாள் ஆகிறது. வரவேண்டிய சமயமே" என்றார்.

அச்சமயம் ஒரு ஆள் ஓடிவந்து ஸர்தாரை நோக்கி, "கடலோரத்தில் ஒரு கப்பல் மிக்க ஆபத்தில் சிக்கிக்கொண்டு சேதமடையும் சமயத்திலிருக்கிறது" என்றான். அதைக்கேட்டதும் ஸர்தார் கண்ணபிரானை நோக்கி, "நான்போய் வருகிறேன். இங்கே இந்த ஆபத்து அப்போதைக்கப்போது சம்பவிப்பதுண்டு. உடனே சென்று தக்க உதவி புரிய வேண்டும்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு துரிதமாய் ஆளின் கூடவே சென்றார்.

இரண்டு மூன்று நாட்களாக காற்று மும்முரமாய் வீசிக் கொண்டிருக்கிறது. கடந்த இரவு புசல்காற்றடித்தது. கரும்பூர் துறைமுகத்திற்கருகில் கடலில் குத்துப்பாறைகள் அதிகம் ஆகையால் அங்கு அப்போதைக்கப்போது கப்பல்கள் அப்பாறைகளில் மோதிச் சேதமடைவதுண்டு. ஆகையால் இப்படிப்பட்ட சமயத்தில் எந்தக் கப்பலாவது புயற்காற்றிற்குப் பயந்து சற்று தூரத்திலுள்ள நதியில் நுழைந்துகொள்ள முயலுமாயின் பெரும்பாலும் காற்றினால் பாறையின்மேல் மோதப்பட்டு சேதமடையுமென்று அவ்வூரார்க்குத் தெரியும். அச்சமயம் பொழுதுசாய்ந்து இருள்மூடிவரும் சமயமாக விருந்ததால் சேதமடையும் கப்பலிலிருந்து கரையில் ஒதுக்கப்படும் பொருள்களைக் கொள்ளை கொள்வதற்காக அநேகர் கரையோரத்தில் கும்பகூடி யிருந்தார்கள்.

ஸர்தார் அமிர்தநாயகம் மிக்க கருணையுடைய சீமான். கப்பற் சேதம் வரும்போது, அவர் தன் ஆட்களில் சிலரோடு சென்று மேற்கண்டபடி கொள்ளையடிக்கும் ஆசாமிகளைப் பிடித்துத் தண்டித்து அக்கொடிய பழக்கத்தை யடக்குவதிலும், சேதமடைந்த கப்பலிலுள்ள ஆசாமிகளுக்கு வேண்டிய உதவிசெய்து அவர்களைக் காப்பாற்ற முயல்வதிலும், மிக்க



சிரத்தையெடுத்துக் கொள்பவர். அதனால்தான் ஒரு கப்பல் சேதமடையும் சமயத்திலிருக்கிறதென்று தன் ஆள் கூறியதும் கண்ணபிரானை விட்டுவிட்டு அவ்வளவு துரிதமாய்ச் சென்றார்.

அவர் உடனே தன் குதிரைவீரரில் எட்டுப்பேரை யழைத்துக்கொண்டு கடலோரத்திலிருந்த ஒரு உயரமான பாறையின்மேல் ஏறிப்பார்த்தார். கடலோ உயரப்பொங்கிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. காற்றோ மிக்க உக்கிரமாய் வீசிக்கொண்டிருக்கிறது. எங்கும் காரிருள் சூழ்ந்து கொண்டது. கடலில் சுமார் கால்மைல்தூரத்தில் கப்பலின் கொடி மரத்தில் கட்டப்பட்ட மூன்று இராந்தல்கள் மினுக்குமினுக்கென்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. கரையில் வேறு சில ஜனங்களும் நின்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் வேடிக்கை பார்க்க வந்தவர்கள். கொள்ளையடிக்க வந்தவர்கள் எங்கு இருப்பார்களென்று ஸர்தாருக்குத் தெரியும். ஆகையால் தன் ஆட்களில் இருவரை அங்கே நின்று குதிரைகளைப் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டு, மற்ற ஆட்களை யழைத்துக்கொண்டு அங்கிருந்து நடந்து சென்றார்.

ஸர்தாரும் அவர் ஆட்களும் கரையோரம் பாறைகளுக்கு இடையிலுள்ள சந்துகளின் வழியே யிறங்கி கீழ்மட்டத்திலுள்ள ஒருபாறைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பாறை பெரிய பாறையினடியோரமே இருபதடி அகலமும் இருபதடி நீளமுமிருக்கும். அது போகப் போகச் சரிவாய் கடலுக்குள் செல்கிறது. ஸர்தார் கருதியபடி கொள்ளைக்காக வந்தவர்கள் அங்கு இருந்தார்கள். இருள் அதிகமாயிருந்தாலும் ஸர்தார் வந்ததை யவர்கள் எப்படியோ தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்களுக்குள் அதிருப்தியும் வெறுப்புமான ஒருகூச்சலுண்டாயிற்று. ஆனால் பாறைமேல் அலைமோதும் இரைச்சலில் அவர்கள் கூச்சல் அவ்வளவாய்க் கேட்கவில்லை.

ஸர்தார் முதலியவர்கள் நிற்குமிடத்திற்குப் பின்புறம் உள்ள பெரிய பாறையில் ஒரு குகை யிருந்தது. அவர் கட்டளைப்படி அவர் ஆட்கள் அக்குகையின் வாயிலில் அங்கிருந்த சிலகட்டைகளைக் குவித்து தீமூட்டி வெளிச்சமுண்டாக்கினார்கள். இது, "இந்த இடத்திற்குவந்தால் அபாயமின்றிக் கரையிறங்கலாம். இங்கு உதவிக்காக ஆட்களிருக்கிறோம்" என்று கப்பலிலிருப்போர்க்குத் தெரிவிப்பதற்காக.

இந்த வெளிச்சத்தால் கப்பலிலுள்ளோர் தங்களுக் குதவியிருப்பதைத் தெரிந்துகொண்டதோடு, கொள்ளை யடிக்க வந்தவர்களும் ஸர்தார் அவருடைய வீரர்கள், அவர்களிடமிருக்கும் ஆயுதங்கள், யாவற்றையும் கண்டு சோர்வடைந்தார்கள். வெளிச்சத்திலிருந்து பார்த்தபோது கப்பலின் அடிப்பக்கம் சுமாராய்த் தெரிந்ததோடு கப்பல் சுமார் 250-கஜ தூரத்திற்குள்ளாகவே (சுமார் அரைக்கால்மைல்) இருக்கிறதென்று தோன்றியது. அவர்களுக்கு உதவிசெய்வதையும் கொள்ளையைத் தடுப்பதையும்பற்றி ஸர்தார் சிந்தித்தார். ஏனெனில் கப்பலிலுள்ளோர் அனைவரும் மடிய வேண்டுமென்பது கொள்ளையடிப்போர் கருத்து. அப்போது சாமான்களைப்பற்றி சொந்தம்பாராட்ட ஒருவருமில்லாமற் போவார்கள். இதற்காக யாராவது தப்பித்தவறி மெதுவாய் கரைக்கு வந்தாலும் இச்சண்டாளர் அவர்களைப் பிடித்துக் கடலிலேயே தள்ளி விடுவார்கள். அன்றியும் கப்பலிலிருந்து ஜனங்கள் படகிலேறி கரைக்குவருவதாயின், இவர்கள் கரையிறங்க நல்லவிடம் காட்டுபவர்கள் போல், அப்படகு கீழ் மறைந்திருக்கிற ஒரு பாறையில் மோதியுடையத்தக்க வழியைக் காட்டுவார்கள். (தொடரும்)

**ஆரணி. குப்புசாமி முதலியார்.**

“ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்

சித்தார்த்தி௵ ஆனிமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020-

பசலி 1328-29—கொல்லம் 1094-95 - ஹிஜரி-1337-

இங்கிலீஷ் 1919-ம்௵ ஜூன்மீ—ஜூலைமீ

| ஆனிமீ | ஜூன்மீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | ஞா | அ-46-23 | பூரா-54-23 | சி-54 அ | கரிநாள். |
| 2 | 16 | தி | தி-47-1 | உத்-56-35 | ம-57 அ | ............... |
| 3 | 17 | செ | ச-46-23 | திரு-57-34 | சித்த-60 | சர்க்கட |
| 4 | 18 | பு | பஞ் 44-34 | அவி-57-24 | சித்த-60 | சர்வமுகூர்த்தம். |
| 5 | 19 | வி | ஷ-41-35 | சதை-56-3 | சித்த-60 | பூமிகொள்ள |
| 6 | 20 | வெ | சப்-37-41 | பூரா-53-52 | சித்த-60 | கரிநாள். |
| 7 | 21 | ச | அ-32-57 | உத்-50-50 | சி-51 அ | வடக்கே பிரயாணம் |
| 8 | 22 | ஞா | நவ-27-35 | ரேவ-47-19 | சி-47 அ | குருசாந்தி |
| 9 | 23 | தி | தச-21-49 | அசு-43-25 | சித்த-60 | வாசை, தெய்வ சேவைக்க |
| 10 | 24 | செ | ஏ-15-48 | பர-39-20 | சித்த-60 | ............... [யோகம் |
| 11 | 25 | பு | து-9-40 | * திரு-35-15 | அ-35 சி | உதண்முக மந்திரப்பிர |
| 12 | 26 | வி | திர-3-38 | ரோக-31-25 | மர-60 | |
| 13 | 27 | வெ | [illegible]-52-50 | மிரு-28-1 | சித்த-60 | |
| 14 | 28 | ச | பிர-48-16 | திரு-25-12 | சித்த-60 | |
| 15 | 29 | ஞா | து-44-15 | புன-23-12 | சித்த-60 | |
| 16 | 30 | தி | தி-42-22 | பூச-22-9 | சித்த-60 | |
| 17 | 1919௵ ஜூலைமீ 1 | செ | ச-40-46 | ஆயி-22-11 | சித்த-60 | |
| 18 | 2 | பு | ப-40-36 | மக-23-25 | சி-23 அ | |
| 19 | 3 | வி | ஷ-41-43 | பூர-25-56 | சி-25 ம | |
| 20 | 4 | வெ | சப்-44-0 | உத்-29-39 | சி-29 அ | |
| 21 | 5 | ச | அ-47-18 | அஸ்-34-25 | மர-60 | |
| 22 | 6 | ஞா | நவ-51-31 | சித்-40-4 | சித்த-60 | ............... |
| 23 | 7 | தி | தசு-56-14 | சுவா-46-15 | அ-46 ம | விவாஹம், சீமந்தம். |
| 24 | 8 | செ | ஏ-60-0 | விசா-52-42 | ம-53 சி | ............... |
| 25 | 9 | பு | ஏ-1-11 | அனு-58-56 | சித்த-60 | முகூர்த்தக்கால்நட |
| 26 | 10 | வி | து-5-48 | கேட்-60-0 | சித்த-60 | வியவஹார ஆரம்பம். |
| 27 | 11 | வெ | திர-9-52 | கேட்-4-39 | ம-4 அ | ............... |
| 28 | 12 | ச | ச-12-59 | மூல-9-26 | சித்த-60 | தைலயந்திரம் ஸ்தாபிக்க |
| 29 | 13 | ஞா | ○-14-57 | பூரா-13-7 | சி-13 அ | ............... |
| 30 | 14 | தி | பிர-15-48 | உத்-15-43 | ம-16 அ | குருசாந்தி |
| 31 | 15 | செ | து-15-18 | திரு-11-59 | சித்த-60 | கிழக்கே பிரயாணம் |




Printed and Published by N. Munisawmi Mudaliar, at the “Ananda Bodhini” Press, 15, Venkatesa Maistry Street, Madras.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | சித்தார்த்தி௵ ஆனிமீ கூ | பகுதி |
|---|---|---|
| 4 | 1919௵ ஜூன் மீ 15உ | 12 |


## கடவுள் வணக்கம்.

ஆனிலே பெண்ணிலே பெண்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள் ளதோ
ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை
யடக்கியொரு கணமேனும் யான்
காணிலேன் திருவருளை யல்லாது மௌனியாய்க்
கண்மூடி யோடு மூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை யெழுப்ப வினைவும்
பூணிலே னிற்றைநாட் கற்றதுங் கேட்டதும்
போக்கிலே போக விட்டுப்
பொய்யுலக நடையிலே நடையினுங் கடையான
புன்மையே னின்ன மின்னம்
வீணிலே யலையாமன் மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

எல்லாஞ் சிவன்செய லென்றறிந் தாலவ னின்னருளே
யல்லாற் புகலிடம் வேறுமுண் டோவது கேகிலையா
தில்லாயுன் னுற்றமி யேற்குக் கதியுண்டிந் நீணிலத்திற்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்ன புகனெஞ்சமே.

ஒளியே யொளியி னுணர்வே புணர்வி னுவகைபொங்குங்
களியே களிக்குங் கருத்தே கருத்தைக் கவரக்கொண்ட
வெளியே வெளியின் விளைசுக மேசுகர் வீறுகண்டுந்
தெளியேன் றெளிந்தவ ரைப்போற்றி டேனென்ன செய்குவனே.

# ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ ஆனி௴ ௯

## தேசாபிவிர்த்தி.

தண்கடல் சூழ்ந்த இப்பூவுலகின்கண் ஆண்டவன் செய்திருக்கும் சிருஷ்டியின் அதியற்புதம் எத்தகைய மேதாவிகளின் புத்திக்கும் எட்டத்தக்கதல்ல. எண்ணிறந்த ஜன்மங்கள் எடுத்து எவ்வளவோ வினைகளையெல்லாம் அனுபவித்துக் கடைசியில் நிஷ்காமிய தவத்தால் சித்தசுத்தி யுண்டாகிப்பின் ஆண்டவன் அருளால் நான் என்பது என்ன என்ற ஆன்ம ஞானத்தைப்பெற்று, மனம் அவனிடத்து வைத்த அன்பின் உருவமாய் மாறிக் கரைந்து கரைந்து நான் என்கிற ஆணவம் தேய்ந்து தேய்ந்து, அந்த அருட்கடலில் தன்னையிழந்து, தான் என்றும் பரமான்மா என்றும் பேதமற்ற வொன்று நிலையில் அவனோடு இரண்டறக்கலந்து, என்று மழியாப் பேரின்பமாகிய முத்தியை யடையும் ஆன்மாக்களும், அச்சச்சிதானந்த சொரூபியின் பரமானந்த போகத்தை மட்டும் அனுபவிக்க உரியனவே யன்றி, அவனுடைய பஞ்சகிருத்தியங்களின் அந்தரங்கங்களையேனும், அவற்றை யெவ்விதம் அவன் தன் தொழிலற்ற நிலைமையில் சற்றும் சலனமின்றி யிருந்துகொண்டே நடத்துகிறானென்பதையேனும் உணரற்குரியவையல்ல.

இப்புவியில் ஆறறிவுடையமக்கள் ஜனித்ததற்கு முன், சிருஷ்டியில் எவ்வளவோ அற்புதமான மாறுதல்கள் நடந்து வந்தனவென்று அறிவாளிகள் உணர்ந்திருக்கிறார்கள். மேலும் மானிடர் ஜனித்த ஆதிகாலத்தில் சற்றும் நாகரீகமென்பதையே யுணராதவர்களாய் இருந்ததாகவும், ஒருகாலத்தில் மிருகங்களுக்குச் சமமாகவே இருந்தார்களென்றும் கூறப்படுகிறது. அதன்பிறகு நாட் செல்லச் செல்ல எல்லாவிஷயங்களிலும் விருத்தியடைவதிலேயே ஆவல் கொண்டவர்களானார்கள். ஆனால் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் அவ்விருத்தி ஏககாலத்தில் ஒரேயளவில் இருந்ததாய்க் காணப்படவில்லை. எவ்வாறெனின் மேல்நாடுகளில் இரண்டு மூன்று ஆயிரவருடங்களுக்குமுன் நாகரீகம் என்ற மணமே கிடையாது. அங்கிருந்தவர்கள் காட்டில் மரங்களின் கீழும், மலைப்பொந்துகளிலும், குகைகளிலும் வாசம் செய்துகொண்டிருந்தார்கள். பூமியை யுழுது பயிர்செய்ய அறியாததால் காட்டில் தங்கள் கைக்கு எட்டிய மிருகம் பட்சிகளைத் தந்திரமாய்ப்பிடித்து அவற்றின் மாமிசத்தையும், காய், கனி, கிழங்கு வர்க்கங்களையும் தின்று ஜீவித்து வந்தார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் நாகரீக தன்மையை யுணர்ந்து அன்னிய நாட்டாருடைய நாகரீகம், இலௌகிக மதாசாரங்கள் முதலியவற்றைப் பின்பற்றத் தொடங்கி அவற்றில் தங்களுக்கு அனுகூலமானவற்றை மட்டுமே பெற்றுக் கொண்டார்கள்.



அவர்கள் இன்னும் தங்கள் நாகரீக ஆசாரங்களில் சீர்திருத்தம் செய்து விர்த்தியடைந்துகொண்டே வருகிறார்கள். அந்த முயற்சியில் அவர்கள் சற்றும் சலிப்பதில்லை. அன்னியர் ஆசாரங்களையோ, அவர்களில் சொல்ப கல்வி அறிவுடையோர்கூட எடுத்ததே அலட்சியமாகவும் தூஷணமாகவும் கூறிவிடுவதில்லை. ஆனால் அவற்றைப் பற்றிச் சிந்தித்து ஆராய்ச்சிசெய்து, அவற்றின் பலாபலன்களை யுணர்ந்து, அவற்றில் தகுதியானவைகளைத் தாங்களும் அனுசரிக்கிறார்கள். இனி நமது தாய்நாட்டைப்பற்றிக் கவனிப்போம்.

மேல்நாடுகள் நாகரீகம் என்பதையே யுணராதிருந்தபோது, இன்னும் அதற்கு ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன்பே நம் நாடு நாகரீகம், இலௌகிகமதாசாரங்கள், கல்விச்செல்வம், பொருட்செல்வம் முதலிய யாவற்றிலும் தனக்கு ஒப்புவமையில்லாத மகா உன்னத நிலைமையிலிருந்தது என்பது உலகறிந்த உண்மையே. நாகரீகமே கிழக்கேயிருந்து மேற்கிற் சென்று பரவியது என்றே தெரிகிறது. அத்தகைய உன்னத நிலைமையிலிருந்த தெய்வீகம் பொருந்திய நம்தாய்நாடு, பிற்காலத்தில் கலியின் கொடுமையால் சம்பவித்த பலகாரணங்களால், நாளுக்குநாள் க்ஷீணதசை யடைந்து கடைசியில் இப்போதிருக்கும் பரிதாபநிலைமைக்கு வந்துவிட்டது.

இதுகாறும் தங்கள் நிலைமையைக்கவனியாமலே யிருந்துவிட்ட நம்நாட்டார் கொஞ்சகாலமாய் நீண்டநித்திரையிலிருந்து விழித்துக்கொண்டு, நாமும் முன்னேற்றமடைந்து நமதுநாடு பூர்வத்திலிருந்ததுபோல் சீரும்செல்வமு மடையும்வண்ணம் செய்யவேண்டும் என்று சிரத்தை யெடுத்துக்கொள்ளத் தொடங்கி யிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்தவிஷயமே. ஒருநாட்டார் க்ஷேமமடைய வேண்டுமாயின் கல்விச்செல்வம், பொருட்செல்வம் இவையிரண்டும் அவசியம் வேண்டும். ஒருநாடு மேலோங்கி வரவேண்டுமாயின் அந்நாட்டிலுள்ள சிலர்மட்டும் கல்விகற்றிருந்தால் போதாது. அதிலும் இப்போது நம்நாட்டிலிருப்பதுபோல, அக்கல்வியும் ஜீவனார்த்தத்திற்காகக் கற்றுக்கொள்ளும் அன்னியபாஷைக் கல்வியாயிருந்தால், அதனால் அந்நாடு ஒருபோதும் உண்மையும் நிலையுமான முன்னேற்றத்தை அடையாது.

ஒருநாடு நிலையான முன்னேற்றத்தை யடையவேண்டுமாயின் ஜனசமூகத்தில் பெரும்பாலோர் கல்வியடைந்திருக்க வேண்டும். அதுவும் தாய்ப்பாஷையில் கற்கவேண்டும். வர்த்தகம் செய்யும் முறைமையைக் கற்பிக்கும் நூல்களையும், பலவித கைத்தொழில்களைப் போதிக்கும் நூல்களையும், அவற்றிற்கு அவசியமாய் வேண்டிய பலசாத்திரங்களையும், இன்னும் இராஜாங்க முறைமைகள் முதலிய உலகஞானங்களைப் போதிக்கும் நூல்களையும் தாய்ப்பாஷையில் கற்கவேண்டும்.

நம் தாய்நாடு மிக்க செல்வக்குறைவை யடைந்திருக்கிற தென்பது யாவருமறிந்த விஷயமே. அக்குறைவு அனேக தீமைகளை யுண்டாக்குகிறது. நாம் செல்வமடைய வேண்டுமாயின் வறுமையை யதிகமாக்கும் காரணங்களை முன்னே ஒழித்துவிட்டுப் பிறகு செல்வத்தை யடையவேண்டியதற்கு அவசியமான முயற்சிகளைச் செய்ய வேண்டும். நமது நாட்டில் தேசாபிமானமுடைய அனேகம் அறிவாளிகள் நமது தாய்நாட்டின் க்ஷேமாபிவிர்த்திக்காகப் பாடுபட முன்வந்துழைக்கிறார்கள். இவர்களில் பலர் தாங்கள் சீர்திருத்தங்களையுண்டாக்குவதாக எண்ணிக்கொண்டு, உண்மையில் இப்போதிருக்கும் வறுமையை யின்னும் அதிகமாக வளரும்படி செய்து விடுகிறார்கள். இவர்கள் அன்னிய நாட்டார் ஆசாரங்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதுதான் நாகரிக சீர்திருத்தமென்றும், கௌரவமென்றும், அப்போதுதான் நாமும் மேல்நாட்டாருக்குச் சமதையாய் விடுவோமென்றும் பெரியமயக்கங் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வயிற்றுக்காகப்படித்த வெறும்படிப்பாகிய அன்னியபாஷைப் படிப்பும் சகவாசதோஷமுமே இவர்களுக்கு இம்மயக்கத்தை யுண்டாக்குகிறது. இவர்கள் தாய்ப்பாஷையில் தங்கள் இலௌகிக மதாசாரங்களைப்பற்றிய நூற்களைக் கற்காத குற்றமானது, இவர்கள் தங்கள் முன்னோர்களுடைய ஆசாரங்களை அலட்சியமாய்க்கருதி அவமதிக்கும்படிக்கும், அன்னியர் ஆசாரங்களைக் கௌரவமாய்க் கருதும்படிக்கும் செய்கிறது.

இதனால் நம்நாட்டார் மிக்க வறுமையிலிருக்கும் இச்சமயம் செலவைக் குறைப்பதைவிட்டு பீடி, ஸிகரெட், ஸோடா, லெமனேட், பயாஸ்கோப், நாடகம், மேல்பார்வைக்கு மட்டும் கண்ணுக்குப் பகட்டாய்த் தோன்றிச் சீக்கிரத்தில் பயனற்றுப் போகும் அன்னியநாட்டு விளையாட்டுச் சாமான்களைப் போன்றவற்றை யதிக விலைகொடுத்து வாங்குவது, முதலிய பல வீணான விஷயங்களில் பணத்தைச் செலவழிக்கிறார்கள். கூலிவேலை செய்யும் ஏழைகளும் இவ்வாறு நடக்கிறார்களென்றால், நம்நாடு இன்னும் க்ஷீணதசையை யடையுமென்பதிற் சந்தேகமென்ன. இதோடு அதிகமாய்ப்பொருள் சம்பாதிக்கும் வழியையறிந்து அதற்காக முயற்சி செய்பவர்களோ ஒருவருமில்லை.



இப்போது நாம் மேலேகூறியபடி நமது நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின் பாமர ஜனங்களில் பெரும்பாலோர் கல்விகற்று அனேக விஷயங்களை யுணரவேண்டியிருக்கிறது. இவர்கள் அப்போதனையை யெவ்வாறடைவது? பாடசாலைகள் வைத்து யாவர்க்கும் போதிக்க முடியுமா? ஒருபோதும் கூடாது. நம் நாட்டிலுள்ள தேசாபிமானிகளாகிய அறிவாளிகள், ஜனங்கள் உணர்ந்து நடந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமாகத்தான் போதிக்கிறார்கள். அப்பத்திரிகை முதலியவை யேற்பட்டது **தேசாபிவிர்த்திக்காகவே** யன்றி வேறில்லை. அவற்றின் மூலமாய்ப் பல அரியவிஷயங்களை மிக்க குறைந்த செலவில் அறிந்து கொள்ளலாம். ஆயினும், இப்போதிருப்பது போல் கொஞ்சம் படித்தவர்கள் சிலர் சிலர் ஆங்காங்கு வாசகசாலைகள், சங்கங்கள் முதலியவை ஏற்படுத்திச் சில பத்திரிகைகளை வாங்கி வாசித்து வருவதால்மட்டும் நமதுநாடு க்ஷேமமடைந்து விடாது. மேலேகூறியபடி பாமரஜனங்களும் பத்திரிகைகள் முதலியவற்றை வாசிக்கும்படி செய்யவேண்டும். அவற்றை வாசிப்பதால் அவர்கள் அடையக்கூடிய பலன்களைப்பற்றி அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

திருஷ்டாந்தமாய் இப்போது செல்வமும் சிறப்பும் பொருந்தி முன்னேறியிருக்கும் மேல்நாடுகள், அமெரிகா, ஜபான் முதலிய நாடுகளைக் கவனித்தால் அந்த வுண்மை அங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும். அவர்கள் ஒருநாடு க்ஷேமமடைவதற்குப் பத்திரிகைகளே முக்கிய கருவியென்று அறிந்து அவற்றை யேராளமாய் விர்த்தி செய்திருக்கிறார்கள். பாமரஜனங்களும் புதுசங்கதிகளை யுணர்வதன் ருசியை யறிந்ததே, ஒருவர் வாசிப்பதைக்கேட்க நாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைவிட நாமே வாசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற சிரத்தை யுடையவர்களாய்விடுகிறார்கள். திருஷ்டாந்தமாய் இப்போது நம் நாட்டில் பலவித நாவல்கள் எழுதப்பட்டுவருவதால் அனேகர் அவற்றை வாசிக்க விருப்பங்கொண்டே கல்விகற்றுக்கொண்டிருக்கிறார்கள். தாய்ப்பாஷையானதால் சுலபமாய்க் கற்றுக்கொள்ளுகிறார்கள். அந்த நாடுகளில் கூலிவேலை செய்வோர்களும் ஆங்காங்கு சிற்சிலர் சிறுசிறு சங்கங்களாய் ஒன்றுசேர்ந்து தலைக்குச் சொற்பதொகை பிரிவுபோட்டுக்கொண்டு தாய்ப்பாஷைப் பத்திரிகைகளை வரவழைத்து, வாசிக்கத் தெரிந்த ஒருவனை வாசிக்கச்சொல்லியேனும் கேட்டு விஷயங்களையறிந்துகொள்கிறார்கள். இதனால் அந்நாடுகளில் தினசரிப்பத்திரிகைகளுக்குக்கூட இலட்சக்கணக்கான சந்தாதாரர்களிருக்கிறார்கள்.

அந்தோ நமதுநாட்டிலோ அத்தகைய முயற்சியேகிடையாது. யாரேனும் ஒருவர் பத்திரிகைகளின் சிறப்பையும், அவசியத்தையும் பற்றிக்கூறினால், அவற்றைக் கேட்பவர்களில் ஒவ்வொருவர்

"இந்த ஆள் தான் நடத்தும் பத்திரிகை அதிகமாய்ச் செலவாக வேண்டுமென்று இப்படிக்கெல்லாம் கூறுகிறான்" என்கிறார்கள். அந்தோ! இவர்கள் மதியை யென்னென்றியம்புவாம்?

இப்போது நமது ஆனந்தபோதினி ஜனித்து நான்காவதாண்டு அடுத்த ஆனிமாதத்தோடு முடிவாகிறது. அடுத்த ஜூலை மீ 1-ம் உ 5-வதாண்டு பிறக்கிறது. இதுகாறும் பல்லாயிரம் பண்டிதர்களும் உபாத்திமார்கள், பெரியோர்கள் முதலியவர்களும் அதற்கு (நாம் கோராமலே) நற்சாட்சி பத்திரங்களை யளித்திருக்கிறார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் இச்சஞ்சிகை நம்நாட்டிற்கு மிக்க நலத்தை யளிக்குமென்றே புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். கடந்த நான்கு வருட அநுபவத்தால் சாதாரண ஜனங்களும் நல்ல அபிப்பிராயமே யுடைத்தாயிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் சிலர் இடையில் (வருடமுடிந்ததே), அடுத்த வருடம் சஞ்சிகை யனுப்பவேண்டாமென்று எழுதிவிடுகிறார்கள். அவர்கள் (பேசாமலிருந்து நாம் வி. பி. யனுப்பியபிறகு வாபீஸ் செய்து நமக்கு நஷ்டமுண்டாக்காமல்) அவ்வாறு முன்னறிவிப்பதற்காக நாம் உண்மையாகவே வந்தனமளிக்கிறோம். ஆனால் இதனால், இன்னும் நம்மவர்களில் பெரும்பாலர்க்கு இவற்றாலடையக் கூடிய பலன் இன்னதென்று தெரியவில்லை யென நன்கு விளங்குகிறது என்பதற்காகவே இதைக்கூறினோம். நமது நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின் இப்போதுள்ள பத்திரிகை சஞ்சிகைகள் இப்படிப் பல்லாயிரக்கணக்காய்ப் பெருகினும் போதாது.

இந்த உண்மையை யுணர்ந்து நமதுநாடு க்ஷேமமடைய வேண்டும் என்ற கருத்துடைய நமது அன்பார்ந்த சந்தா நேயர்களும், சங்கங்கள், சபைகள், இவற்றின் அவயவிகளும் பாமர ஜனங்களுக்குச் **சஞ்சிகையின்** பயனைப்போதித்துப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசிப்பதில் அவர்களுக்குப் பிரியமுண்டாகச் செய்தால், அது பெரும் புண்ணிய மளிக்கும் சிறந்த தேச ஊழியமாகும் என்பது உண்மை. நாம் மட்டும் வாசிப்பதில் தேசத்திற்கு ஒரு நன்மையு முண்டாகாதென்பதை நன்குணர வேண்டும். பரம தயாநிதியாகிய ஆண்டவன் நமது கோரிக்கையை நிறைவேற்றுமாறு பிரார்த்திப் போமாக.

ஓம் தத்ஸத்.

---

# கைகள்

நாம் சுகமாய் வாழ்வதற்காக நன்மை தீமைகள் இப்படிப்பட்டவை யென்று நன்றாய் அறிந்து கொள்ளும்படி மெய் வாய் கண் மூக்கு செவி முதலான இந்திரியங்கள் நமக்கு இயல்பாகவே ஆண்டவனால் அளிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் மெய் என்னும் இந்திரியம், வாய் கண் மூக்கு செவி என்னும் நான்கு இந்திரியங்களைப்போலாகாமல், நமது உடல் முழுதும் பரவி யிருக்கிறது. மெய் அல்லது துவக்கு (ஸ்பரிச உணர்ச்சியை யறியுமிந்திரியம்) என்னும் இந்திரியமானது பல விஷயங்களில் மற்ற இந்திரியங்களைவிட மிகவும் விசேஷமானது. கண் மூக்கு முதலிய இந்திரியங்களுக்கு, வெளியிலுள்ள விஷயங்களைக் கிரகிக்க வழியாயிருக்கிற கண்ணுருண்டை முதலியவைகளெல்லாம் தம் இருப்பிடத்திலேயே அசையாமல் நிலைபெற்றிருக்கின்றன. துவக்கு இந்திரியத்துக்கு இருப்பிடமோ தேக முழுமையும் பரவியிருக்கிறது. கண் காது மூக்கு இவைகள் மலர்ந்து தம்மிடத்திலேயே இருக்கின்றன. பலவித ஒளி ஓசை நாற்றம் என்கிற விஷயங்கள் தாமே அவற்றுள் வந்து புகுகின்றன. அவை வந்து உறுத்தும் போது, அவைகளைப் பாராமலும் கேளாமலும் மோராமலுமிருக்க நம்மால் முடியாது. ஸ்பரிச உணர்ச்சியோ அப்படியல்ல. பரிசிக்கத்தக்கவை இவை யென்பதையும் பரிசிக்கத்தகாதவை இவை யென்பதையும் கை கால் முதலியவை தாமே தெரிந்தெடுத்து, தமக்கு ஏற்றதையே பரிசிக்கின்றன.



கையானது தனக்கு விருப்பமான பொருள்களைக் கிட்ட வரவழைத்துக் கொள்கிறது. விருப்பமில்லாதவைகளைத் தூர ஒதுக்கி விடுகிறது. கண்ணோ அப்படியல்ல; எதிரிலுண்டாகும் எத்தகைய பயங்கரக் காட்சிகளையும் கண்டே தீரவேண்டும். அதைத் தடுத்துக்கொள்ள முடியாது. காதும் அப்படியே; எவ்வளவு அருவருப்பான சத்தமுண்டானாலும் அதைக் கேட்டாலொழியத் தீருமா? அப்படியே தனக்குள்ளே வந்தடைகின்ற பலவகைக் கெட்ட நாற்றங்களை மூக்கு மோராமல் மற்றென்ன செய்யமாட்டும்?

இப்படி பஞ்சேந்திரியமொவ்வொன்றும் தன்காரியமொன்றுக்கு மாத்திரமே கவலைப்படுகின்றதென்று கொள்ளவேண்டாம். மற்ற இந்திரியங்கள் உபயோகமற்றுப் போனால், அவற்றிற்கு பதிலாய் அவைகளின் வேலையையும் தானே செய்விக்கின்றது. குருடனுக்கு கை வழிகாட்டுகின்றது. கால் மேடு பள்ளங்களில் பிசகாமல் எச்சரிக்கையாய் அடிவைக்க முயலுகின்றது. கையானது எதிரிலிருக்கும் வஸ்துவைத் தெரிவிக்கின்றது. எழுத்துக்களின் வரிவடிவங்களை அறிகின்றது. இப்படிக் கண்ணில்லாதவர்களுக்குக் கண்ணாக வேண்டிய பற்பல காரியங்களையும் கை செய்து கொடுக்கின்றது.

செவிடனுக்கும் இப்படியே கை உபயோகப்படுகின்றது. பேச வாயில்லாமலும் கேட்கக் காதில்லாமலும் அல்லாடுகிற ஊமைக்குக் கை எத்தன்மையாக உபயோகப்படுகின்றது பாருங்கள்! அவன் கையாட்டங்களும் விரற்கூட்டங்களும் எதிரிலிருப்பவர் கண்களோடு எவ்வளவோ சாமர்த்தியமாகப் பேசி அவன் கருத்தைக் கண்ணாடிபோலும் காட்டுகின்றன.

இப்படி மற்ற இந்திரியங்கள் தமது இயற்கையில் குறைவுபட்டிருக்கும் போது மாத்திரந்தானா கை அவைகளுக்கு உதவுகின்றது? அவை சிறிதும் குறைவில்லாமல் செம்மைப்பட்டிருக்கும் காலத்திலும் கைகள் அவைகளுக்கு அதிக சாமார்த்தியத்தையும் பெருமையையும் உண்டாக்குகின்றன. கையானது கண்களின் பார்வை செம்மையாய்ச் செல்லும்படி அவற்றிற்கு வேண்டிய பல கருவிகளைக் கற்பிக்கின்றது. வெகுதூரத்திலுள்ள நக்ஷத்திரங்களின் வடிவங்களைக் கிட்டப் பக்கத்திலிருப்பவை போலப் பார்க்கத்தக்க கருவியான தூர திருஷ்டி கண்ணாடிகளையும், வெறுங்கண்ணால் கண்டறியக்கூடாத அதிசூக்ஷ்மமான பொருள்களைக்கூடத் தெளிவாய்ப் பார்க்கத்தக்க அணுதரிசினி யென்னும் கருவிகளையும் கற்பித்துக் கொடுப்பதோடு, அக் கண்களுக்கு யாதொரு விபத்தும் நேரிடாவண்ணம் காத்து

வருவது கையல்லவா. அப்படியே காதுக்கு இன்பமான சிறந்த நாதங்களை உண்டாக்கத்தக்க வீணைமுதலிய பல கருவிகளை உண்டு பண்ணி, அவற்றின் பலவகை நாதங்களின் விசேஷங்களின் வேற்றுமை காது செம்மையாய் கற்றுக் கொள்ளுகிற வரையில் அந்த வாத்தியங்களை ஒலிப்பித்துக் கொண்டிருப்பதும் கை தானே. கையானது நாசிக்கு வாசனையூட்டும் பொருட்டு பலவித வாசனை மலர்களையும் தொய்து கொடுக்கின்றது. நாசி எக்காலத்தில் எந்தவாசனையை விரும்பினாலும் கையானது அதைத்தேடிக் கொடுக்கச் சித்தமாய் இருக்கின்றது. ரசனேந்திரியத்திற்கிருப்பிடமான நாக்கைப்பற்றிப் பார்த்தாலோ அதற்கு வேண்டியபடி உபசரிக்கக் கையொன்றிராவிட்டால் அப்போதே உருசி யறிகிற விஷயத்தில் அதற்கிருக்கிற பெருமை போனதுதான். பலவாறு சொல்லியென்ன? மற்றெல்லா இந்திரியங்களைக் காட்டிலும் கையானது மிக்க சிரேட்டமானதாய் விளங்கி மனிதனுக்கு ஒரு முக்கிய வேலைக்காரனு யிருக்கிறது. ஏனெனில் அதுவே மற்ற இந்திரியங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறது.

இவ்வாறு மனிதனுக்கு கையானது பலவகையாய் உதவுவது மல்லாமல், அவனுடைய தைரிய சவுரியங்களையும், புத்தியுக்திகளையும், உற்சாக சாமார்த்தியங்களையும், தயை தாக்ஷணியங்களையும், விருப்பு வெறுப்புகளையும், இன்னும் இவ்வகைப்பட்ட பலவித மநோ குணங்களையும், பலவகையாக வெளிப்படுத்த முதற் கருவியா யிருக்கிறது. கையில் ஒருகத்தியைக்கொடுத்தால் அது அக்கத்தியைக் கொண்டு அவனுக்காக பகைவரோடு பலமாய்ப் போர்புரியும். கலப்பையைக் கொடுத்தால் அதைக் கொண்டு ஏருழும். ஒரு வீணையைக் கொடுத்தால் அதைக் கொண்டு விநோதமாய் வாசிக்கும். ஒரு வர்ணவத்தியைக் கொடுத்தால் அதைக் கொண்டு பலவிதமான சித்திர மெழுதும். லேகினியைக் கொடுத்தால் அதைக்கொண்டு அவனுக்கு பதிலாகப் பேசும். சபைகளில் சம்பாஷணை செய்யும்; கடவுள் கைங்கரியங்களும், கடவுள் துதியும், ஆசீர்வாதமும், நமஸ்காரமும் செய்வது கைகளேயாம்.

கைகள் செய்யக்கூடாத காரியங்களும் உலகத்திலுண்டோ? மலை போன்ற அபாரமான வேலைகளைக் கைகள் சுலபமாய் முடிக்கின்றனவன்றோ. 100 யானை கட்டினாலும் அசைக்கவொண்ணாத சுமைகளை நீராவியந்திரங்களினால் ஓர்கையால் இலகுவாக ஓட்டிக்கொண்டுபோகவில்லையா. பல்லாயிரம் மைல்களுக் கப்பால் உள்ளவர்களுக்கும் நேர் நேராகப் பேசுவதுபோல் அறிவிக்கும் தந்திகளும் கையினுடைய வேலையல்லவா. மேலும் யந்திரங்களென்ன, நீராவிக்கப்பல்களென்ன, ஆகாய நாவிய கட்டிடங்களென்ன, பெரிய பட்டணங்களென்ன, பல தேசங்களென்ன, பூமண்டலங்களென்ன, இவையெல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள். செவ்வையாய் ஊன்றிப் பார்த்தால் இப்பூ மண்டலமுழுதும் ஒரு கையின் திறமையாலே நடைபெறுகின்றது. நன்மை செய்வதும் கைகளே தீமை செய்வதும் கைகளே. உலகத்தை ஆளும் செங்கோல் பிடிப்பதும் கையே. பூர்வத்தில் பரமசிவம் ஜனகாதி முனிவர்களுக்கு மோனநெறியைக் காட்டியதும் கையேயாகும். இத்தகைய அருமைக் கரங்களை மாந்தர்களாகிய நமக்குப் பெருங்கருணைக்கடலாகிய பரம பிதா அளித்திருக்கும்போது, இக்கைகளை வைத்துக்கொண்டு நாம் சோம்பித் திரியாமல் ஏதேனும் ஓர் கைத்தொழில் புரிந்து பிறர்பொருளின் இச்சையின்றி வாழ்ந்து உலகினர்க்காக நன்மை புரியும் விஷயத்திலும், பரோபகாரத்திலும், பெரியோர்கள் சேவையிலும்,



தேவ திருப்பணிவிடைகளிலும், தர்மம் புரிவதிலும், சத்விஷயங்களிலும், உலகுக்கு நன்மைபயக்கும் பல விஷயங்களிலும் நமது கரங்களை உபயோகப்படுத்தி அதினால் வரும் இம்மைப் புகழ்பெற்று, மறுமைப் பயனாகிய நித்தியானந்தப்பெருவாழ்வையும்பெற் றின்புறுமாறு எல்லாம்வல்ல ஜகதீசனை அன்புடன் பிரார்த்திப்போமாக. சுபம்.

இந்த வியாசமானது 1877 வருஷத்திய "ஜனவிநோதினி" என்னும் பத்திரிகையின் VIII சஞ்சிகை யிலிருந்ததை ஒட்டி எழுதப்பட்டது. ஆன்றோர்மொழியொழுக்க.

குமான். செக்காரப்பட்டி.

---

## சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

நமது அன்பார்ந்த சந்தா நேயர்களே! விஷயதானம் புரியும் கல்வியாளராகிய நண்பர்களே! யாவும் ஆக்கி யளித்துத் துடைக்கும் அருளுருவாகிய அநாதியாம் பரமன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நீண்ட ஆயுளையும், சகஷேமத்தையும், இவ்வுலகில் குறைவற்ற இன்பத்தையும், மறுமையில் நித்தியானந்தப் பேற்றையும் அருளுமாறு, அவனை முழுமனதோடும் பிரார்த்தித்து, கீழ்க் கூறப்படும் வேண்டுகோளை யொவ்வொருவரும் சற்றுமனம் வைத்துச் செவியேற்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

அரிய நண்பர்களே! சச்சிதானந்தப் பரம் பொருளின் கருணைகடாட்சத்தால் ஆனந்தபோதினியில் உங்களுக்கு ஏற்பட்ட அபிமானத்தாலும், அன்பாலும், அதன் அபிவிர்த்திக்காக நீங்கள் எடுத்துக்கொண்ட சிரத்தையாலும் நமது ஆனந்தனின் நான்காவதாண்டு செவ்வனே முடிந்து ஐந்தாவது ஆண்டு பிறக்கப் போகிறது.

சேர்ந்திருந்த மகாகொடிய யுத்தத்தால் தனக்கு வேண்டிய சௌகரியங்களில் குறைவு நேர்ந்ததன் நிமித்தம் நமது ஆனந்தன் சில கஷ்டங்களையனுபவித்துக்கொண்டிருப்பினும், பிரதி மாதமும் தவறாமல் உங்களைவந்து தரிசித்து வருவதும், இப்போது ஆனந்தனுக்கு வேண்டிய ஓர் முக்கிய உதவி (அச்சுக்கூடம்) கிடைத்திருப்பதும் நீங்களறிந்த விஷயங்களே. அச்சுக்கூடம் ஏற்பட்டும் நாம் நியாயப்படி எதிர்பார்த்த பலன் என்னமோ கிடைக்கவில்லை. ஏனெனில் யுத்தம் நின்றுவிட்ட போதிலும் ஐரோப்பாவில் இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய இரண்டொரு நாடுகள் தவிர மற்றவற்றி லெல்லாம் கட்சிபேதங்கள் ஏற்பட்டுக் குழப்பங்களே நடந்துகொண்டிருப்பதால், சமாதான ஏற்பாடுகள் இன்னும் பூரணமுடிவிற்கு வரவில்லை. இதனால் காகிதம், மசி, எந்திரச் சாமான்கள், முதலிய அச்சுக்கருவிகளெல்லாம் இன்னும் உயர்ந்த விலையிலேயே யிருக்கின்றன. சந்தாத் தொகையோ குறைந்த அளவிலேயே இருந்து வருகிறது.

நண்பர்கள் இந்த உண்மையைக் கருத்தில் வைத்து, இந்த நான்குவருடங்களாக நடந்து கொண்டதுபோல், ஐந்தாம் வருடமும் நம்மானந்தனையாதரிப்பதோடு, உங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகச் சேரும்படி சிபாரிசு செய்யவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். இவ்வருட மாசி மீ பத்திரிகையின் 283-வது பக்கம், 8-வது பகுதியில் நாம் கூறியபடி

நண்பர்கள் இனி எடுத்துக்கொள்ளும் சிரத்தையே ஆனந்தனுக்கு மிக்க பயனளிக்கும். ஆனந்தன் விஷயத்தில் பூரண அபிமானமும் அன்பும் வைத்துள்ள நண்பர்களுக்கு இது விஷயமாய் நாம் அதிகம் கூறவேண்டுவது அநாவசியமேயாகும்.

நண்பர்களே! நான்காவது வருட சந்தாத் தொகையை மணியார்டர் மூலமாய் ஜூலைமாதம் 1 டக்கு முன்பே நம்மிடம் வந்து சேருமாறு அனுப்பும்படி 3-வது வருடக்கடைசியில் கேட்டுக் கொண்டிருந்தும், மிகச் சிலரே யவ்வேண்டுகோளுக்கு மனமிரங்கினார்கள். அநேகர் ஜூலைமாத மத்தியில் 4-வது வருட வி. பி. கள் அனுப்பப்பட்டபின்பு மணியார்டர் அனுப்பினார்கள். பலர் மிக முக்கியமான சந்தா நெம்பரைத் தெரிவிக்காமலும், அவர்களில் சிலர் தங்கள் விலாசத்தையும் தெரிவிக்காமலும் மணியார்டர் அனுப்பிவிட்டு, நமக்கு மிக்க தொந்தரை யளித்ததோடு, சஞ்சிகை வரவில்லையென்று தங்களுக்கும் மனக்கவலையை யுண்டாக்கிக் கொண்டு நமக்கு நிஷ்டூரமாகக் கடிதங்களும் எழுதினார்கள். இரண்டொரு சிறு விஷயங்களைச் சற்று மனதில் வைத்து நடந்துகொண்டால் நமக்கும் வீண் சிரமமில்லாது போவதோடு, சந்தா தாரருக்கும் சஞ்சிகை ஆலஸியமாவது தவறுதலாவது இன்றிச் சரியாய் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் நண்பர்கள் கீழ்க்காணும் விஷயங்களை இம்முறையாவது கவனித்து நடக்கும்படி பிரார்த்தித்துக் கொள்கிறோம்:—

1. சந்தா தாரர்கள் மணியார்டர் மூலமாய் சந்தாத் தொகையை யனுப்பிவிடுவதால் அநேக கஷ்டங்கள் நேரிடாமற்போகும். அவ்வாறு உதவிபுரியும் நண்பர்கள் 1919 ஞு ஜூன் மீ 30 டக்குள் நம்மிடம் வந்து சேரும்படி சந்தாத்தொகையை மணியார்டர் மூலமாகவே யனுப்பிவிட வேண்டும்.

சந்தா நம்பரையும் விலாசத்தையும் கூபனில் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

2. ஐந்தாவது வருட சஞ்சிகை வேண்டாதவர்கள் தயவு செய்து மேற்கண்ட 30—6—1919-க்குள்ளாகவே தெரிவித்து விடவேண்டுமாய் மிகவும் வேண்டிக்கொள்கிறோம்.

கடந்தவருடம் அநேகர் முன்னறித்தெரிவிக்காமலே பிறகு வி.பி.யை வாபீஸ் செய்தார்கள். சிலர் சந்தா நம்பர் விலாசம் இரண்டையும் தெரிவிக்காமலே "எனக்கு 4-வது வருட சஞ்சிகை யனுப்பவேண்டாம்" என்று எழுதிக் கையொப்பம் மட்டும் வைத்துவிட்டார்கள். அவர்கள் வி. பி. யை வாபீஸ் செய்துவிட்டு "நான் முன்னமே அனுப்பவேண்டா மென்று தெரிவித்திருக்க நீர் வி-பி யனுப்பவேண்டிய காரணமென்ன?" என்று நமக்கு எழுதினார்கள். அந்தோ இதுதானா சஞ்சிகை யபிமானிகளாகிய அறிவாளர் செய்யும் உதவி?

3. வெளி நாடுகளில் பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் இந்த விடங்கள் தவிர வேறிடங்கட்கு வி-பி யெடுக்கப்படுவதில்லை. ஆகையால் வெளி நாட்டுச் சந்தாதாரரனைவரும் மேற்கண்டபடி 30—6—1919-க்குள் இங்கு வந்து சேரும்படி சந்தாத்தொகையை முன்பணமாகவே யனுப்பிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். அப்போதுதான் பின் சஞ்சிகைகளும், அவர்களுக்கு ஆலஸிய மின்றி வரும்.



இம்முறையாவது நண்பர்கள் இவற்றைக் கவனித்து நடந்து கொண்டால் நமக்குப் பேருதவி செய்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

நேயர்களே! சந்தாதாரர்களின் மேல்விலாசங்களை இனி அச்சியற்றியே யனுப்பத்தொடங்கி யிருக்கிறோம். அதில் அவர்கள் பெயருக்கு முன்பு இருப்பதே சந்தாநம்பர் என்று அறிந்து கொள்ளக் கோருகிறோம். இம்மாதமே சிலருக்கு அச்சடித்த விலாசமே வரும். சீக்கிரத்தில் யாவர் விலாசங்களும் அச்சியற்றி முடிந்துவிடும். ஆதலால் சிலருக்கு மட்டும் அச்சடித்து வந்ததே நமக்கு வரவில்லையே யென்று ஒருவரும் மனவருத்தமடையாதிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஆண்டவன் அருள்புரிந்து நமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத்சத். **பத்திராதிபர்.**

---

## மனவுறுதி.

மனத்தை ஒரு காரியத்தில் நிலையாக நிறுத்துதலுக்கு மன வுறுதி யென்று பெயர். இந்த மன வுறுதியானது, உலகத்தில் செய்து முடித்தற்கரிய பெரிய செயல்களை யெல்லாம் நிறை வேற்றுவிக்கும்; அளவற்ற ஐசுவரியத்தைக் கொடுக்கும்; பலரும் கொண்டாடத் தக்க கௌரவத்தை யுண்டாக்கும்; தேக திடத்தைத் தரும்; மனக்கவலையையும், தேகப் பிணிகளையும், தரித்திரத்தையும், பகையையும் அடியோடு தொலைத்து விடும்; தினந்தோறும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை நல்கும்; பூரண ஆயுளை விருத்தி செய்யும்; மன்னர் மன்னர், மகான்கள் ஆகியவர்களுடைய சிநேகத்தை யுண்டாக்கும்; தவத்தை நிலைபெறச் செய்யும்; தெய்வ கிருபையைப் பெறுவிக்கும்; முடிவாகச் சொல்லுமிடத்து முத்திக்கும் இதுவே பெருஞ் சாதனமாகின்றது; இன்னும் நன்றாக ஆராயின், மன வுறுதியால் ஆகாத காரியம் உலகத்தில் ஒன்றுமில்லை யென்றே சொல்லலாம்.

இத்தகைய மன வுறுதியால், முற்காலத்தும், பிற்காலத்தும், மேன்மையடைந்தார் எண்ணிலர்; அவர்கள், மனோதிடத்தால் நிறைவேற்றி யிருக்கும் அரிய பெரிய காரியங்களையும், அவற்றால் அடைந்திருக்கும் அழியாப் புகழையும் நினைக்குந்தோறும் மனத்தில் அளவற்ற ஆச்சரியமும், அடங்கா மகிழ்ச்சியு முண்டாகின்றன.

முற் காலத்தில் தேவர்கள் மன வுறுதியால் பாற்கடலைக் கடந்து அமுதம் பெற்று நரை, திரை, மூப்பு, சாக்காடென்பவைகளை நீக்கிக் கொண்டனர்; பகீரதன் ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான்; (பெரிய காரியங்களைச் செய்து முடித்தற்கு, 'பகீரதப் பிரயத்தனம்,' என்று இன்னும் மனிதர் சொல்லி வருவதால் இவன் புகழ் விளங்குகின்றது) விசுவாமித்திரன் திரிசங்கு சுவர்க்க மென்னும் ஒரு சுவர்க்கத்தையே சிருஷ்டி செய்தான்; மார்க்கண்டர் என்றும் சிரஞ்சீவி யாயினர்; பிரகலாதன், தன் தந்தையால் செய்யப்பட்ட தீங்குகளுக்கெல்லாந் தப்பி மேன்மையடைந்தான்; இந்திரன் ஐந்தரு, சிந்தாமணி முதலியவற்றைப் பெற்றான்; குபேரன் இருநிதி படைத்தான்; நகுஷன் இந்திர பதம் பெற்றான்; சாவித்திரி தன் கணவனுயிரையும் மீட்டுக் கொண்டு வந்தாள்; கண்ணகி மதுரையை யெரித்துப் பத்தினிக் கடவுளாயினள்.

இக் காலத்திலும், மனவூக்கத்தினாலேயே மேல்நாட்டார் சிறந்தவர்களாய், எவ்வளவோ அருமையான காரியங்களை யெல்லாம் நிறைவேற்றிச் செல்வமும் கீர்த்தியும் பெற்று வருகின்றனர்; லண்டன் நகரிலுள்ள 'தேம்ஸ்' நதியின் நீரோட்டத்திற்குக் கீழே 'சர் - ஐ - மார்க்பிரன்னல்' என்பவர் சுரங்கப்பாலம் ஒன்றைக் கட்டி முடித்திருக்கின்றார்; இது மிகவும் ஆச்சரியமானது; இன்னும் சிலமேதாவிகள், 'டான்யூப்' நதியில் 4770 அடி நீளமுள்ள, 'திராஜன்' என்னும் பாலத்தைக் கட்டி முடித்திருக்கின்றனர்; அமெரிக்காவிலுள்ள 'நியூயார்க்' பட்டணத்திற்கும், 'புரூக்லின்' என்னும் இடத்துக்கும் இடையில் 5980 அடி நீளமான தொங்கும்பாலமொன்றைக் கட்டி முடித்திருக்கின்றனர்; 'பெல்ஜியம்' நகரத்தில் 3490 அடி ஆழமுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர்; இன்னும் பல அதிசயமான கட்டிடங்களையும் கட்டிமுடித்திருக்கின்றனர்; உயிர்ப் பிராணிகளைப் போல் தாமே தொழில் செய்யும் எண்ணில்லாத யந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர்; ஆகாயவிமானம், நீரில் மூழ்கிச் செல்லும் கப்பல், ரெயில் முதலியவற்றையும் தங்கள் புத்தி நுட்பத்தால் கண்டுபிடித்திருக்கின்றனர்; சிலர் தங்கள் ஆயுள் வரை நீண்டபிரயாணஞ் செய்து, மனிதர் போகக் கூடாத பற்பல தீவுகளையும், சிலநதிகளின் மூலங்களையும், பர்வதங்களின் முடிவையும், தக்ஷிண துருவம் முதலிய மனிதன் செல்லற்கரிய விடங்களையும் கண்டுபிடித் திருக்கின்றனர்; இவ் விஷயங்களில் தங்கள் உயிரையும் பலிகொடுத்துப் புகழை நிலைநிறுத்தி யிருக்கின்றனர்; இன்னும் இவர்களுடைய அரும் பெரும் காரியங்களையெல்லாம் விரிக்கிற் பெருகும். சுருக்கிச் சொல்லு மிடத்து இக் காலத்தில் இவர்கள் எதிலும் மனச்சோர்வு அடைவதில்லை; ஒரு காரியத்தில் பிரவேசித்தால் அதைமுடித்தே தீருவார்கள்; இவர்களில் ஒருவன் ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானத்தை அறிந்து வரவேண்டுமென்று புறப்படுவான்; அவன், தான் குறித்த விடத்தைக் காணாமல் நடு வழியில் இறக்க நேரிட்டால், தான் சென்றவரை கண்ட அதிசயங்களை எழுதி வைத்துவிட்டு இறந்து போவான்; பின்னர் அவன் பின்னேயோ அவனைச்சேர்ந்த மற்றொருவனோ பிரயாணஞ் செய்து முந்தினவன் சென்ற எல்லைக் கப்பாற் செல்வான்; இப்படியே பலர் பிரயாணஞ் செய்து உயிரைக் கொடுத்துக் கொடுத்து முடிவில் ஒருவன் குறித்த எல்லையைக் கண்டே தீருவான். அவர்கள் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதென்றால் அதை முற்றுறக்கற்றுக் கொள்வார்கள். இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வதனாற்றான் இக்காலத்தில் சகலவிதத்திலும் மேன்மை பெற்றிருக்கின்றார்கள்.

இக்காலத்தி லிவர்கள் மனோ வூக்கத்தினாலேயே இத்தகைய அரிய காரியங்களைச் செய்கிறார்கள். நம் முன்னோர்களோ, யாவற்றினும் சிறந்த (மனதைத் தன்வயப்படுத்திக் கொள்ளுவதாகிய) மனோவல்லமையைப் பெற்றிருந்ததால் சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத அதியற்புத காரியங்களை யெல்லாம் செய்தார்கள். அப்படியிருந்தும், நம் மிந்தியர்களோ இக் காலத்தில் எதையும் உறுதியாகச் செய்வதில்லை; ஒரு நல்லாசிரியனை யடுத்துக் கல்விகற்றுக்கொண்டு வரும்போதே, 'இவர் சரியானவரில்லை,' என்று அவரைத் தள்ளிவிட்டுக் கல்வியறிவில்லாத வேறு பலரிடத்துச் செல்வர்; ஒருவைத்தியனிடத்தில் நல்ல மருந்தையுண்டால், அதனை முழுது முண்டு குணங்காணுவதற்குள்ளாகவே அதைவிட்டு வேறு பலரிடத்துஞ் சென்று மருந்துண்பர்; ஒரு வியாபாரஞ் செய்தால் அத்தொழில் பூர்த்தியாகி அதில் இலாபம் வருவதற்குள்ளாகவே அதைவிட்டு வேறு தொழிலிற்பிரவேசிப்



பர்; ஒருவரோடு முதல்நாளிற் சிநேகஞ்செய்தால் மறுதினம் குடுமிபிடித்துச் சண்டையிட்டுக்கொள்வர்; ஒருவர் செய்யும் நற்காரியத்தில் பொறாமை கொள்வர்; இப்படியே நம்மிந்தியர் எதிலும் மனதைச் சிறிது போதாவது உறுதியாக நிலைநிறுத்துவதில்லை; இதனாலேயே இவர்கள் சகல சுகங்களையும் இழந்துவிடுகிறார்கள்; பெரும்பாலும் வறுமைத்துன்பங்களை அனுபவிக்கின்றனர்; மேலான பதவிகளையும் அடைவதில்லை.

இவற்றிற்கெல்லாம் உதாரணமாகப் பத்திரிகையின் விஷயத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டால் அதன்மூலம் மனவுறுதியில் மேல் நாட்டார் சிறந்தவர்களென்பதும், நம்மிந்திய (தமிழ்) நாட்டார் குறைந்தவர்களென்பதும் நன்கு விளங்கும். இங்கிலாண்டு முதலிய தேசங்களில் எத்தனையோ பத்திரிகைகள் இலட்சக்கணக்கான சந்தாதாரர்களை யுடையனவாய் வெளிக்கிளம்புகின்றன; அந்நாட்டார், 'பத்திரிகையே எல்லா நன்மைகளுக்கும் முக்கிய சாதனமாம்' என்பதை நன்குணர்ந்தவர்களாதலின், ஒவ்வொரு சந்தாதாரர்களும் பத்திரிகை வெளிவருஞ் சமயத்திற்போய், பெருமாள் கோவில் பிரசாதத்துக்கு ஜனங்கள் நெருங்கிக் கைநீட்டுவதுபோல், ஒருவர் மேல் ஒருவர்வீழ்ந்து பத்திரிகைகளை வாங்கிப்படித்து எந்நாளும் அவற்றைக் கைவிடாமல், பத்திராதிபர்களுக்கு மிகுந்த ஊக்கமளித்து அவற்றால் தாங்களும் பலவிதநன்மைகளையடைந்துவருகின்றனர். மேல்நாட்டார் விருத்தியடைந்ததற்குக் காரணம், அந்நாட்டார் மிகுதியும் பத்திரிகைகளை ஆதரித்து வருதலே யென்று சொல்லலாம்; இதனாலேயே எந்நாட்டிலும் மேல்நாடுகளில்பத்திரிகைகள் அதிகப்பட்டன. நம்மிந்தியர்களில்தமிழ்நாட்டார், பத்திரிகைகளின் விஷயத்தில் எப்படியிருக்கிறார்க ளென்பதைப் பற்றி ஆராய்ந்தால், அது மிக்கவிசனத்திற் கிடமாயிருக்கின்றது; ஒருவர் அதிகப் பிரயாசைப்பட்டு ஒரு பத்திரிகையை வெளிப்படுத்தினால், அதற்கு ஒரு ஆயிரம் சந்தாக்கள் சேர்வது மிகவும் கஷ்டம்; அப்படிச் சேர்ந்தாலும் சிலர் ஆறுமாதங்களுக்குள்ளேயே நழுவிவிடுவார்கள்; சிலர் வருடம்முடிந்தவுடன், 'அப்பா சனியன் தொலைந்தது' என்று, தங்களுக்குப் பத்திரிகை வேண்டாமென்று எழுதிவிடுவார்கள். இப்படியே இரண்டுமூன்று வருடங்களுக்குள் ஒவ்வொருவராக நழுவிப் பத்திராதிபரை வேலையின்றி மூலையில் உட்காரும்படி செய்துவிடுவார்கள்; பத்திரிகைகளில் மாதசஞ்சிகைகளின் நிலைமையோ மிகவும் பரிதபிக்கத்தக்கது; இவற்றிற்கு ஆயிரம் சந்தாதாரர்கள்கூடச் சேர்வது துர்லபம்; இவற்றின்சந்தாதாரர்களும் ஒரு வருடத்திற்குள்ளாகவே இவற்றைக் கைநழுவ விட்டுவிடுவார்கள்; இதனாலேயே இந்நாட்டில் இதுவரை எத்தனையோ பத்திரிகைகள் மேகத்தின் மின்னலைப்போலவும், நீர்க்குமிழிபோலவும்தோன்றி மறைந்திருக்கின்றன. சிற்சில பத்திரிகைகள் மட்டும் பத்திராதிபர்களுடைய அரும்பெரும் பிரயாசையின்மேல் மறைந்துவிடாமல் ஒருவாறு நடந்து வருகின்றன. எல்லா நன்மைகளையும் பயக்கத்தக்க பத்திரிகையின் விஷயத்திலேயே நம்மவர் இங்ஙனம் மனவுறுதியின்றி யிருப்பார்களானால், மற்றவிஷயங்களில் இருப்பதைப்பற்றி எடுத்துக்கூறவும் வேண்டுமோ?

நம்மவர் இவ்வாறு விருத்தியடையத் தக்க நற்காரியங்களில் மனவுறுதி வைக்காமலிருக்கும் வரையில் மேம்பாட்டையடையவே மாட்டார்கள்; எக்காலத்தில் ஒவ்வொரு நற்காரியத்திலும் மனவுறுதியைச் செலுத்தும் படியான புத்தி இவர்களுக்குண்டாகுமோ, அப்போதுதான் இவர்கள் க்ஷேமத்தை யடைவார்கள்; ஆதலின், ஓ நம் தமிழ்நாட்டு இந்திய சகோ

தார்களே! இதுவரை நாம் இருந்ததுபோலிராமல் நாம் சகல விதத்திலும் மேன்மையடைவதற்குத் தக்க காரியங்களில் மனவுறுதி வைக்க வேண்டும்; அவற்றுள்ளும் முக்கியமாகப் பத்திரிகைகளின் விஷயத்தில் விசேஷமான மனோதிடங் கொள்ளவேண்டும்; ஏனென்றால், பத்திரிகையே எல்லா நன்மைகளையும் போதிக்கக் கூடியதா யிருக்கின்றது; பத்திரிகையினிடத்தில் மட்டும் மனவுறுதியைச் செலுத்துவோமானால், எல்லாவிஷயத்திலும் அதைச்செலுத்தினவர்களாவோம். நாம் அவ்வாறு மனவுறுதிவைத்து எப்பொழுதும் கை நழுவவிடாமல் வாசித்து ஆதரித்து நன்மை பெறுவதற்கு, நம் ஆனந்தபோதினி மிகவும் பொருத்தமுடையதாகும்; ஏனெனில் பத்திரிகையைக் கை நழுவவிடும் இக்காலத்திலும் இது, பத்தாயிரம் சந்தாதாரர்களையுடையதாய் நிலவி வருகின்றது; இஃதிங்ஙனம் செல்வாக்குடன் நிலவிவருவதற்குக் காரணம், இது மிகவும் குறைந்த சந்தாவுடையதாயிருத்தலும், பல கல்விமான்களால் எழுதப்படும் அநேகம் அருமையான விஷயங்களைத் தான் கொண்டிருத்தலும், எல்லோரும் வாசிக்கத் தக்க எளிய நடைபெற்றிருத்தலுமேயாம். இதற்கு அடுத்த வருஷம் முதற்கொண்டு இன்னும் மிக்க கௌரவம் வாய்ந்த பல கனவான்கள் விஷயதானம் செய்வதாலும், வேறு வகைகளாலும் உதவிசெய்ய முன் வந்திருப்பதாக அறிகிறேன்; அதனால், நம் போதினி இன்னும் விசேஷ விருத்தியடையுமென்பது திண்ணம்.

ஆதலின் நன்மையான விஷயங்களுக்கெல்லாம் ஓர் உறைவிடமாகிய நம் ஆனந்தபோதினியை மனவுறுதியுடன் எல்லோரும் வாங்கி வாசித்து எப்பொழுதும் கை நழுவவிடாமல் ஆதரித்து, இதனுடைய நற்போதனையால், வேறு பற்பல நற்காரியங்களிலும் மனோதிடம் வைத்து இம்மை மறுமைப்பயன்களை யெல்லாம் பெற்றுய்யுமாறு கருணாநிதியாகிய பரம்பொருளை மிகவும் வேண்டுகிறேன்.

இங்ஙனம்

செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.

---

பரப்பிர்ம்மணே நம:

# மரியாதையின் பெருமை

மரியாதை என்பது இப் பூமியின்கண் ஜெனித்த மாந்தர்கள் அனைவர்க்கும் உரியதே. நாம் ஒருவரிடம் எவ்வளவு மரியாதை பாராட்டுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் நம்மிடம் மரியாதை காட்டுகிறார். நாம் ஒருவரை எவ்வளவு அலக்ஷியமாக மதித்து வாடா போடா என்று மதிப்பில்லாமல் நிந்தித்துப் பேசுகிறோமோ, அவரும் நம்மை நேரில் நிந்தித்துப் பேசாவிடினும் பின்னால் தூஷிக்க ஆரம்பிக்கிறார். ஆகையால் மரியாதையும் மரியாதை யின்மையும் நம்மாலேயே நமக்கு உண்டாகிறது. இதைக் குறித்தே அதிவீர ராமபாண்டியரும்,

"பெருமையும் சிறுமையும்
தான்தர வருமே."

என்றும் கூறியிருக்கிறார். ஆனால் அதற்கு உதாரணமாக நமது இல்லத்திற்கு உறவினர் அல்லது பெரியோர்கள் வந்தால், அவர்களை வாருங்களென்று மரியாதை செய்யாவிடின் அவர்கள் வந்து இயங்கினர்போல் நிற்பதுடன் முகவாட்டமும் அடைகிறார்கள். நாம்பின்னால் அவர்கள் வீட்டிற்



குச் சென்றால் நமக்கும் அவ்வாறே நடக்கிறது: ஆகையால் நாம் மரியாதை பாராட்ட வேண்டும்.

"அழையா விடத்தில்
நுழையாதே."

என்றும் ஒரு பழமொழி யுண்டு. ஆகையால் நாம் நம் மேலோர்களிடத்தும் கீழோர்களிடத்தும் எவ்வளவுக் கெவ்வளவு மரியாதையாய் நடந்து கொள்ள வேண்டுமோ அப்படியே நடந்து கொள்ள வேண்டும். மேலோர்களைக் கண்டால் அடங்கி ஒடுங்கி யிருக்க வேண்டும். அவர்களுக்குமுன் வீண் டம்பம் செய்து கொண்டு திரியக்கூடாது. இவைகளெல்லாம் கல்வியறிவுடையவர்களுக்குத்தான் நன்றாய்ப் புலப்படும். அதில்லாத மற்றவர்களுக்குப் புலப்படுவது அரிது. உபாத்தியாயர்களாகிய நாம் எல்லோரும் நம்மிடம் கல்வி கற்கும் மாணாக்கர்களையும் சீர்திருத்த முயல வேண்டுவது நமது கடமையாயிருக்கிறது. நமது மாணாக்கர்களிடத்தில் முக்கியமாக உண்மை, பரோபகார குணம், சத்தியம், நியாயம், தன்னடக்கம், மனத்தாழ்வு, மேலான எண்ணங்கள், உத்தமமான தைரியம், எல்லோரிடத்தும் மரியாதை, முதலிய நற்குணங்களை விர்த்தி செய்வது, சன்மார்க்கப் பயிற்சியின் நோக்கமாகும். குழந்தைகள் பால்ய முதற் கொண்டே சன்மார்க்கத்தி லொழுகுமாறு பயிற்றுவிக்கப் படவேண்டும். ஆரம்பத்தில் கெட்ட நடத்தையுள்ளவர்களைப்பிறகு சீர்ப்படுத்துவது மிகக்கஷ்டம். பாடசாலைகளின் உபாத்தியாயர்களாகிய நாம் போதனையைப்பற்றிக் கவனிப்பது அவசியமானாலும், சமயம் நேர்ந்தபோதெல்லாம் சன்மார்க்கத்தைப்பற்றியும் கவனிக்க வேண்டும். உபாத்தியாயரே நற்குண முன்னவராயும் நல்ல நடத்தை புள்ளவராயு மிருக்க வேண்டும். அவர் பிள்ளைகளுடன் கலந்து பழகி மாணவர்களை நல்வழிக்குக்கொண்டுவர வேண்டும். கர்வமுள்ளவர்களுக்கு அதன் கெடுதியை விளக்கிக் காட்டவே வேண்டும். மரியாதையின்மையை அப்போதக்கப்போது கண்டித்துத் தடுக்க வேண்டும். பெற்றோர்களையும் மேலோர்களையும் கனப்படுத்தச் சொல்லவேண்டும். ஆனால் கௌரவத் தாழ்வாகக் கெஞ்சிக்கேட்கும்படி பழக்கக்கூடாது. இது இழிவான குணமாகும். சன்மார்க்கத்திற் கேற்ற சில விதிகள் ஏற்படுத்துவதோடு அவை நன்குவிளங்கும்படி பிள்ளைகளுக்குத் திருஷ்டாந்தங்களோடு அவற்றை விளக்கிக்காட்டல் வேண்டும். உதாரணங்களெல்லாம் அவர்களுக்கு தெரிந்தவைகளாயும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியவைகளாகவு மிருக்கவேண்டும். சன்மார்க்கத்தின் மேன்மையை யறிவிக்கச் சிறுகதைகளை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். துன்மார்க்கர்கள் அகப்பட்டுக் கொண்டால் அவர்களுக்கு தக்க தண்டனை விதித்து யோக்கியதையைப் பற்றி நன்றாய் விளக்கி காட்டவேண்டும்.

கருணாநிதியாகிய பரஞ்சுடர் சீக்கிரத்தில் நமது மயக்கத்தை நீக்கி முன்னோரின் உண்மையையும் மகிமையையும் நாம் உணர்ந்து நல்வழியில் திரும்புமாறு அருள்புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். சுபம்

சீ. இராமசாமி நாயுடு, உபாத்தியாயர்,
செக்காரப்பட்டி

குறிப்பு.—மரியாதையென்பது நம்மிலும் உயர்ந்தோர்க்கு மட்டுமே செய்யவேண்டு மென்பதல்ல. யாவரிடத்திலும் மரியாதையாகவே நடந்துகொள்ள வேண்டும். வார்த்தைபேதமும் சத்தபேதமும் கேட்போர்

மனதில், அதற்குத்தக்கபடி, சந்தோஷத்தையோ, வெறுப்பையோ, துயரத்தையோ, கோபத்தையோ உண்டாக்கும் சக்தியையுடையனவா யிருக்கின்றன. இந்த உண்மையை உபாத்திமார் மாணவர்களுக்குத் திருஷ்டாந்தங்களோடு விளக்கிக்காட்டவேண்டுமாய்க் கோருகிறோம். மரியாதை காட்டுவதில் அவரவர்கள் தாரதம்மியத்துக்குத் தக்கவிதமாய்க் காட்டவேண்டுமேயன்றி நம்மிலும் தாழ்ந்தோரையும் சிறியோரையும்மட்டும் மரியாதையின்றி நடத்தலாகாது. வீட்டில் சில பெற்றோர்கள் சிறுவரைக் கண்டிக்கும்போதும் பயப்படுத்தும்போதும் இழிவானவார்த்தைகளால் வைகிறார்கள். சிறியோர்கள் தாங்கள் புதிதாய்க்கேட்கும் வார்த்தைகளையும், காணும்செய்கைகளையும் உடனே மனதில் கிரகித்துக் கொண்டு அப்படியே செய்யும் சுபாவமுடையவர்கள். ஆகையால் பெரியோர்கள் உபயோகிக்கும் கெட்ட மொழிகளையவர்கள் அப்படியே கற்றுக்கொள்கிறார்கள். அனேகம் தாய் தந்தையர்கள் இதையுணராமலே நடப்பது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம்.

மேல்கண்ட வியாசத்தில் உத்தமமான தைரியம் என்று கூறப்பட்டிருக்கிறதே, தைரியத்தில் அத்தகைய தைரியம் ஒன்றுண்டோவெனின், உண்டு தான். தைரியம் என்பது நினைத்தகாரியத்தை நிறைவேற்ற முயலும்போதும், மற்றகாலங்களிலும் நமக்கு நேரிடும் இடையூறு, துன்பம் முதலியவற்றிற்கு அஞ்சாதிருத்தல். ஆனால் ஒருவன் இராக்காலத்தில் களவாடல்; பொய்ச்சாட்சிகூறல், பெரியோரைத்தூஷித்தல், ஒருவரை யலட்சியமாய்ப் பேசுதல், முதலிய தீயநடக்கைகளைச் செய்வதில் எதற்குமஞ்சாத தைரியமுடையவனா யிருக்கிறான். அவன் பெயரைக்கேட்டதே யாவரும் நடுங்குகிறார்கள்; அத்தகையோன் தைரியம் ஒரு கௌரவமான தைரியமல்ல. அதனால் அவனுக்கு எள்ளளவேனும் புகழ் உண்டாகாது.

எளியவன் ஒருவன் பட்சத்தில் நியாயமிருக்கிறது. அக்கிரமஸ்தனாகிய அவன் எதிரி தன் வல்லமையால் அவனை யழிக்க முயல்கிறான். அந்த வலியவனுக்கு அஞ்சாமல் நீதியுடைய எளியவனுக்கு உதவிசெய்து அவனைக் காப்பாற்றுவதில் காட்டும் தைரியம் உத்தமதைரியம். அப்படியே நியாயமான ஒரு காரியத்தை நாம் செய்து முடிக்க முயலும்போது அதற்கு இடையூறு செய்யும் எதிரிகள் எப்படிப்பட்டவர்களாயினும் சற்றும் அஞ்சாமல் நின்று எடுத்தகாரியத்தை நிறைவேற்றுவதில் காட்டும் தைரியம் உத்தமதைரியமாகும். தருமயுத்தத்தில் பகைவர்க்கும் மரணத்திற்கு மஞ்சாது நின்று தன் இரத்தத்தைச்சிந்தும் சுத்தவீரன் தைரியமும் அத்தகையதே. இத்தகைய தைரியத்தால் கீர்த்தியுண்டாகும்.

உபாத்திமார்கள் இதுவிஷயத்தில் மிக்க ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். பாடசாலையில் கல்விபோதிக்கும்போதும் மற்ற காலங்களிலும் பிள்ளைகளுக்குத் தங்களிடம் அச்சமிருக்குமாறே நடந்துகொள்ள வேண்டுமாயினும், அன்பு மிருக்குமாறு அவர்களிடம் அன்புகாட்டியும் நடந்துகொள்ள வேண்டும். ஆனால் பிள்ளைகளுக்குத் தங்களிடமுள்ள அச்சம் ஒழிந்து தங்களை யலட்சியமாய்க் கருதும்படி நடந்துகொள்ளலாகாது. பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்ப தொருபக்கமிருக்க, தாய்தந்தையரைப்போல் அவர்கள் நடக்கை யொழுக்கங்கள் ஆசாரங்களைக் கவனித்து, அவர்களைச் சீர்திருத்தி நல்வழியில் நடக்கும்படி போதிப்பது தங்கள் கடமையென்பதை யுபாத்திமார் மறக்கலாகாது. அதனால்தான் அவர்களைக்கடவுளுக்கு இரண்டாவதாய் மதிக்கவேண்டுமென்று நீதிகூறப்பட்டிருக்கிறது.

பத்திரிகாசிரியர்.



## கடமையும் கீழ்ப்படிதலும்.

தேகமெடுத்திருக்கும் நமக்கு இதுகாறும் தெரிந்த எல்லாப்பிறவியினும் உயர்ந்தது மானிடப்பிறவி. இந்திராதி தேவர்கள், பிரமாதி கடவுளர், எண்ணரிய கணநாதர், நவநாதசித்தர்கள், இயக்கி ஆதியோர்கள், கந்தருவர் கின்னரர் முதலானவர்களுடைய மேலான பதவிகளைப் பற்றி நாம் சாஸ்திரங்களில் வாசித்திருக்கிறோம். ஆயினும் இப்பதவிகளிலுள்ளவர்கள் சூக்ஷ்ம சரீரிகளா யிருப்பதினால் நம் ஊனக் கண்களுக்குப் புலப்படார்கள். ஆனால், ஊர்வன, நடப்பன, பறப்பன, இருப்பனவாகிய அனைத்திலும் மேம்பாடுடையது மனிதப் பிறப்பு.

"அரிதரிது மானிடராதல் அரிது—மானிடராயினும், கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப்பிறத்தல் அரிது—பேடு நீங்கிப் பிறந்தகாலையும் தானமும் தவமும் தான்செய லரிது—தானமும் தவமும் தான் செய்வாராயின் வானவர்நாடு வழிதிறந்திடுமே." என ஆன்றோர் அருளியுளார்.

இம்மானிடப் பிறவியின் விசேஷமென்ன? முக்கியமாகப் பகுத்தறிவும், கர்த்தனை வழிபடும் சுபாவமுமாம். இவையிரண்டும் விருத்தியாக விருத்தியாக நாம் புருஷார்த்தத்தை அடைகிறோம். இப்புருஷார்த்தத்தை அடைவதற்கு முக்கிய உபாயங்களாக இருக்கின்றவை இவ்வியாசத்தின் விஷயமாகிய கடமையும் கீழ்ப்படிதலுமாம்.

பகுத்தறிவினால் கடமையை அறிந்து, கடவுள் கிருபையினால் அக்கடமையை நிறைவேற்றப் பலம் சம்பாதிக்க வேண்டும். கடமைகள் அனேகம் பாகுபாடு உடையன. வயது முதிர முதிரக் கடமைகள் விஸ்தரிக்கின்றன. சிறு குழந்தையின் கடமையென்ன? பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல். பாலியத்தில் பெற்றோர்க்குக் கீழ்ப்படியாத குழந்தைகள் வயது வரும்பொழுது நற்குண நற்செய்கை யுடையவர்களாதல் கடினம். "பிறர்சொல்வதைக் கேட்கமாட்டேன்" "எனக்கு அதைக்கண்டால் பிடிக்கவில்லை" "மற்றவர்கள் நினைப்பதும் சொல்வதும் எனக்கு லக்ஷியமில்லை" என்று பிடிவாதம் பிடிக்கும் வாலிபர்களுக்குக் கடமையென்ன, கடமைக்குக் கீழ்ப்படிதல் என்ன வென்பதே தெரியாமல் போய்விடுகின்றது. இதினால், பிறகு பெருந்தீங்கு விளைகின்றது.

குழந்தைகள் கடமை பெற்றோர்க்கு கீழ்ப்படிதல் போல, பெற்றோர்கள் கடமை குழந்தைகள் அக்கடமையைச் செய்ய வற்புறுத்தல் வேண்டியதாகும். "செல்லம்சீரழிக்கும்" என்னும் பழமொழிக்கிணங்க கண்டிப்பில்லாமல் குழந்தைகளை வளர்த்தால் குழந்தைகளுடைய குணவிருத்திக்கும் தேசநன்மைக்கும் இடையூறுண்டாகின்றது.

சில வீடுகளில், குழந்தைகள் பெற்றோர்களை வைவதையும், இகழ்ச்சியாய்ப் பேசுவதையும், அவமரியாதையாய் நடத்துவதையும் நம்மில் அனேகர் கண்டிருக்கலாம். குழந்தைகளிடத்திலுள்ள பிரியத்தின் மிகுதியால் சில பெற்றோர்கள் அவர்களைக் கண்டிக்கிறதில்லை. இன்னும் சிலர் குழந்தைகளிடத்திலுள்ள அதிக அன்பினால் அவர்கள் தங்களை வைதல் சந்தோஷம் உண்டு பண்ணும் ஒரு விளையாட்டென்று நினைக்கிறார்கள். இது தப்பான எண்ணம். ("Spare the rod and Spoil the Child") என்று இங்கிலீஷில் சொல்வதுபோல், குழந்தைகளைச் சரியானபடி கண்டித்து பய

பக்தியை இளம்பிராயத்திலேயே அவர்களுக்கு உண்டுபண்ணவேண்டியது பெற்றோர்களுடைய முக்கியமான கடமையாகும். சுருக்கத்திற்காகப் பெற்றோர்களென்று மாத்திரம் இதுவரையில் சொல்லப்பட்டது. குழந்தைகளை வளர்க்கும் கார்டியன்களுக்கும், குழந்தைகளிடத்து அன்பு பாராட்டும் மற்றவர்களுக்கும் இக்கடமை ஒக்கும்.

கல்விகற்கும் மாணாக்கர்கள் உபாத்தியாயர்களிடத்து நடக்க வேண்டிய முறைகளைப்பற்றி அதிகமாய் உரைக்கத் தேவையில்லை. குருபக்தியென்பது நம் தேசத்தில் பூர்வீகமாய் ஓங்கி வளர்ந்த தர்மமாகும். உபாத்தியாயர்களை அவமதித்துப் பேசுதல், கேலிபண்ணுதல், அவர்கள்மேல் கோள் சொல்லுதல் இவைபோன்ற செய்கைகள் மாணாக்கர்களுக்கு ஒருநாளும் நன்மைபயக்கா. நல்மாணாக்கன் தான் இவ்வித குற்றங்களில்லாம லிருப்பதுமன்றி மற்றவர்கள் இது விஷயத்தில் தவறுவார்களாயின், போதித்து அவர்களை நல்வழிக்குக் கொண்டுவர முயல்வான்.

குழந்தைப் பருவமும் மற்றப் பருவமும் கடந்து ஆண்மகனாய் உலக விஷயங்களில் அடிபட்டு இல்வாழ்க்கையைச்சரிவர நடத்துவதற்குக் கடமையும், கீழ்ப்படிதலும் இன்றி யமையாதனவாகும். இவையில்லாமல், பல இடங்களில் ஐயோ என்ன கேடுகள் விளைகின்றன. கடமையையும், கீழ்ப்படிதலையும் கைப் பற்றி நடவாதவர்களுக்கு மாத்திரம் இல்லை. அவரது உறவினர்களுக்கும், நண்பர் களுக்கும், ஜனசமூகத்திற்கும் அளவில்லாத் துன்பங்கள் உண்டாகின்றன.

குழந்தையா யிருக்கும்பொழுது தாய் தந்தையர்களையும், படிக்கும் பொழுது உபாத்தியாயர்களையும், அவமதிப்பவர்கள் பிற்காலத்தில் தங்களுடைய மனச்சாக்ஷியையும், ராஜாங்கத்தாரின் நியாயமான அதிகாரத்தையும், கடவுளையும், இகழச் சுலபமாகத் துணிந்து விடுவார்கள். உலக விவகாரங்களில் பிரவர்த்திக்கும் பொழுது தினம் தினம் சுய நன்மையைக் கருதலாமா? அல்லது பிறர் நன்மையைக் கருதவேண்டுமா? மனம்போனபடி நடக்கலாமா? அல்லது மனச் சாக்ஷியின்படி நடக்கவேண்டுமா? மனிதனுக்கு பயப்படலாமா? அல்லது கடவுளுக்குப் பயப்பட வேண்டுமா? என்று சந்தேகங்கள் தோன்றும். தன்னிஷ்டப்படி வளர்ந்து வந்தவனுக்கு சுய நன்மை தான் பெரிதென்று தோன்றும். மனம் போனபடி போவதே சரியெனப்படும். கடவுளிடத்தில் பயமென்பது இராது. ஆனால், நம்முடைய இதிகாச புராணங்களையும், உத்தம புருஷர்களுடைய சரித்திரங்களையும் வாசிக்கும்பொழுது அவர்களெல்லோரும் கடமையையும், கீழ்ப்படிதலையுமே வாழ்க்கைக்கு உறுதிபயப்பனவாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். கடவுள் கிருபையினால் உதாரணங்கள் எண்ணிறந்தன விருக்கின்றன. முக்கியமாயுள்ள சிலவற்றை இங்கு உரைப்போம்.

(1) இராமர் பிதுர்வாக்கிய பரிபாலனத்துக்காக அநேக கஷ்டங்களைச் சகித்தார்.

(2) விபீஷணர் நீதியைக் கடைப் பிடிப்பதற்கு சுபாவமான சகோதர வாஞ்சையை அடக்கி பகவானைச் சரணாகதியடைந்தார்.

(3) துஷ்டர்களை நிக்கிரகம் செய்வதற்கு அர்ச்சுனர் தம்முடைய சுபாவத்திற்கு மாறாக உற்றோர்களோடு போர் புரிந்தார்.



(4) 'பிரகலாதர்' கடவுள் சித்தத்தின்படி நடக்க, தானே கடவுள் என்று அகங்கரித்த தம் பிதாவாகிய ஹிரண்யகசிபுக் கிணங்காமல் அளவிறந்த பாடுகள் பட்டார்.

(5) சத்தியத்தைக்காப்பாற்ற 'ஹரிச் சந்திரன்' எல்லாவிதக் கஷ்டங்களையும் அனுபவித்தார்.

(6) 'தாயுமானவர்' தர்மத்துக்குக் கீழ்ப்படிந்து தம்மை தூர்ச்செய்கைக்கு உடன் படுத்த முயன்ற திரிசிரபுரம் ராணி வேண்டுகோளை மறுத்தார்.

(7) 'கோகலே' என்ற தேசாபிமானி தேச மாதாவை வழிபட்டு சுக போகங்களையும், உலக ஆடம் பரங்களையும் வெறுத்தார்.

மேற்கூறிய உதாரணங்களில் இம் மஹாபுருஷர்கள் பாமரர் நடையை அனுஸரித்து தங்களுடைய சுகலாபங்களை மட்டிலும் கருதியிருப்பார்களாயின் நம்முலகுக்கு எவ்வளவு நன்மைகள் இல்லாமல் போயிருக்கும் என்பதை யூகியுங்கள்.

நம் கடமையைச் செய்வதும், மேலான அதிகாரிக்குக் கீழ்ப்படிதலும் நம் சுபாவத்துக்குச் சற்று கடினமாகவே முதலில் தோற்றும். பழக்கத்தினால் சுலபமாய் விடும். குழந்தைகளுக்குத் தின்பண்டங்களில் மிகுந்த அவா விருக்கின்றது. ஆனால், வயது வந்த நமக்கு அளவுக்கு மிஞ்சினால் அவை பிணிக்குக்காரணம் என்று நமக்கு நன்றாய்த் தெரியும்.

குழந்தைகளுக்கு எண்ணெய் குடிப்பதிலும், மருந்து விழுங்குவதிலும் சுபாவமான அருவருப்பு இருக்கின்றது. ஆனால், நமக்கு அவற்றினால் வியாதி நீங்கி தேகசௌக்கியமுண்டாகிறதென்று நன்றாய்த் தெரியும். ஆகவே கீழ்ப்படிதல் என்ற நற்குணத்தைப் பெற்றோர்கள் இளம்பிராயமுதற் கொண்டே வற்புறுத்தவேண்டும். இதைவிளக்க 'மக்கட்குச்சத்துரு மாதா பிதா' வென்ற வாக்கியம் வழங்குகின்றது. பெற்றோர்கள் பாலியத்தில் குழந்தைகளைக்கண்டித்துக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யாவிடில் வயது வந்த பிற்பாடு பிள்ளை என் சொல்லைக் கேட்கமாட்டே னென்கிறான்; அவமதிக்கிறான் என்று குறை கூறுகிறார்கள். கிருஸ்துவர்களின் வேதமாகிய பைபிளில், 'ஆதாம்' என்றமுதல் மனிதன் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாததினால் தனக்கும் தன் சந்ததியாருக்கும் பாவத்தைச்சம்பாதித்துக் கொண்டானென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமும் குழந்தைகள்போல் உண்மையான நன்மையை விளைப்பனவெவை, கொடூரமான கேடுவிளைப்பனவெவை என்றுபலசமயங்களில் அறிய மாட்டாதவர்களாயிருக்கிறோம். இதைப்பற்றியே "பொருளலாப்பொருளை நாடும் புன்மையேம்" என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். குழந்தைகளுக்குப் பெற்றோரிடத்து அன்பு வளரவளர அவர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் எளிதாகிவிடுதல் போல, கடவுளிடத்து அன்புண்டாகவும் வயதுவந்த நமக்கும் கடமைகளைச்செய்வது அதிசுலபமாய் விடுகின்றது.

ஆகவே எல்லாக்கடமையிலும் முதன்மையான கடமையாயும், மற்றக் கடமைகளைச் சரிவரமுடிப்பதற்குக் குறையாத பலத்தை நமக்கு அளிக்கவல்லதாயுமிருப்பது கடவுள் பக்தி. கடவுள் பக்தி உள்ளவர்களுக்கு நான் என்கிற ஆணவமும் ஆசாபாசங்களும் குன்றிப் போகின்றது. இதனால்தான் மற்றக்கடமைகளைச் செய்வதும் நியாயமான அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதலும் கஷ்டமாகத் தோன்றுவதில்லை.

Liberty, Freedom என்று இங்கிலீஷில் சொல்லப்படுகிற தந்தந்திரம் (சுயேச்சைப்படி நடத்தல்) என்பதைத் தப்பர்த்தம் பண்ணுவதால் பெற்றோர்கள் உபாத்தியாயர்களிடத்து விசுவாசம் குறைகின்றது. குடும்பங்களில் கலகமுண்டாகிறது. ஜனசமூகத்தில் ஒற்றுமை யேற்படுகிறதில்லை. இராஜாங்கத் துவேஷம் முதலிய கேடுகளும் விளைகின்றன. ஜனசமூகத்தின் நன்மையைக் கருதினால் நாம் சுயநலம் பாராட்டமாட்டோம். நம்முடைய சொந்த அபிப்பிராயங்களையும் வெறுப்பு, விருப்புகளையும் தலைகிளம்பவிடோம். கடவுள் கட்டளையையும், மனச்சாக்ஷியின் கட்டளையையும், நம்சகோதரர்கள் நன்மையையும் சிரமேல் வைத்து ஒழுகினால் உண்டாகும் சாந்தியையும் மேலான சுகத்தையும் அடைவோம். மனதை யடக்கி, சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் கீழ்ப்படிந்து நடத்தலே நம் தேசத்தில் தோன்றிய பக்திசிரேஷ்டர்களின் ஆயுள் நோக்கமாக விருந்திருக்கிறது. மனம்போன விடத்துப் போகாதிருப்பதைப்பற்றி,

"காடுங் கரையு மனக்குரங்கு
கால்விட் டோட வதன்பிறகே
யோடுந் தொழிலாற் பயனுளதோ
வொன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா
யாடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற் கன்பு நிலை
தேடும் பருவ மிது கண்டீர்
சேர வாரும் சகத்தீரே" என்றும்,

இங்ஙனம் ஆசாபாசங்களை அடக்கிக் கடவுள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதினால் உண்டாகும் பேரின்பத்தைப் பற்றி,

"துன்றுமதி யாமனது பலிகொடுத் தேன்கர்ப்
துஷ்டதே வதைகளில்லை
தூரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பனன் பிஷேக நீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத் தியம்பிராண
னோங்கிபதி யாய தீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந் தமே
கள்ளமறி யூடுமே மென்னமௌ வெளியாய்க்
கலக்கவரு நல்ல வுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே."

என்றும் தாயுமானவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். ஆகவே இவ்வியாசத்தின் சுருக்கம் குழந்தைப் பருவத்திலும், இளம்பிராயத்திலும் தாய் தகப்பனைப் பணிந்து அவர்கள் சொற்படி நடக்கவேண்டும். கல்வி கற்கும் காலத்தில் சத்குருவாக்கியத்தின்படி நடக்கவேண்டும். காளைப் பருவத்தில் குடும்ப நன்மைக்காகவும், தேசநன்மைக்காகவும் கடவுளின்



சித்தத்தின்படி நம் கடமைகளைச் செலுத்தவேண்டும். ராஜாங்கத்தாருடைய நியாயமான அதிகாரத்துக்கு உடன்பட்டு நடந்து அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியை நாம் புரிந்து வரவேண்டும்.

இங்கிலாந்தில் 'Duty and discipline movement' என்று ஒரு கிளர்ச்சியுண்டாகி அதற்காகவே ஒரு சங்கமும் ஏற்பட்டு உழைத்து வருகின்றது.

K. நாராயணசாமி. பி. ஏ.
மானாமதுரை.

---

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(418-ம் பக்கத் தொடர்ச்சி)

### "ஏற்பதிகழ்ச்சி"

இஃது ஔவைபிராட்டியாரின் திருவாக்குகளிலொன்று:—"ஏற்பது=யாசிப்பது, இகழ்ச்சி=இழிவாகும்," என்பது இதன் பொருள்.

கநரி என்னும் பதியிலே, 'இராகவன்' என்னும் பிராமணச்சிறுவனொருவன், பள்ளிக்கூடத்தில் கல்விபயின்று வந்தான். அவனுக்கு உபாத்தியாயர், "ஏற்பதிகழ்ச்சி," என்னும் ஆத்திசூடி சூத்திரத்தையும், அதன் பொருளையும் அடிக்கடி போதித்து வருவதுண்டு. அங்ஙனம் போதித்தும், இராகவன் அந்த நற்போதனையை மனத்திற் கொள்வதில்லை; அவன், யாசகம் செய்வதிலேயே மிக்க விருப்புடையவனதலின், "இந்த வாத்தியார் கருநாடகத்துக்கிழவர்; பண்டைக்காலத்துக் கிழக்கள் தங்கள் மனம்போனபடி சொல்லிவைத்துவிட்டுப் போன சாஸ்திரக்குப்பைகளை உறுதியாக நம்புகிறவர்; யாசித்தல் இழிவென்கிறார்; நாம் ஒருவனிடத்தில் ஒன்றைக் கேட்கிறோம்; அவன் அதை மனமொப்பிக் கொடுக்கிறான்; அதனால் என்ன இழிவு? யாசிப்பதைப்போன்ற சுகமானதொழில் உலகத்தில் வேறொன்றுமில்லை; ஒருவன் நாள்முழுதும் கஷ்டப்பட்டாலும் காலணா கிடைப்பது அருமையாயிருக்கிறது; நாலுபேரிடத்தில் யாசித்தால் எவ்வித கஷ்டமுமின்றி அந்த காலணா கிடைத்துவிடுகிறது; இதையுணர்ந்தே பலர், தண்ணீர்ப்பந்தல் வைக்கப்போகிறதாகவும், மடங் கட்டப்போகிறதாகவும், குளம் வெட்டப்போகிறதாகவும், கோவில் கட்டப்போகிறதாகவும் பல பொய்யான விஷயங்களைச் சொல்லிப் பலரிடத்தில் எளிதில் பொருள் கவர்ந்து பத்தாயிரம் இருபதாயிரம் சேர்த்து வட்டிக்குக் கொடுத்துவிட்டுக் கால்மேல் கால்போட்டுக்கொண்டு சுகமாக ஜீவித்து வருகின்றார்கள்; வாத்தியாரைப்போல நீதிபடிப்பவர்களெல்லோரும் தரித்திரத்தால் கஷ்டப்படுகிறார்கள்; ஒருவன் கஷ்டமின்றி ஜீவிப்பதானால், பொய்யும் புரட்டுஞ் சொல்லி யாசகத்தொழிலையே நடத்தவேண்டும்" என்று ஆசிரியரை இழிவாகவும், யாசகத்தை உயர்வாகவும் பேசிப் பள்ளிக்கூடத்திற் படிக்கும்போதே பலரிடத்தும் சென்று பலவிதமான பாசாங்குகளைச் செய்து, தினந்தோறும் இரண்டணா நாலணா சம்பாதித்துக்கொண்டு வந்தான். அத்தொழில் அவனுக்கு உற்சாகமாகவே யிருந்துவந்தது.

இப்படி யிருக்கும்போது அவன் ஒருநாள் ஒரு கெட்டிக்காரராகிய செட்டியாரிடத்தில் யாசகம் பெறுவதற்குப்போய்க் கையில் மஞ்சளில் புரட்டின அரிசியாகிய அக்ஷதையை யெடுத்து, "செட்டியாரவாளுக்கு நீர்க்

சாயுளும், புத்திரசந்தானமும், நிறைந்தசம்பத்தும் உண்டாவதாக,'' என்று அந்தச் செட்டியார் கையிற் கொடுக்கப் போனான். அவர், இப்பேர்ப்பட்ட சோம்பேறிகளுடைய தொழில்களை யெல்லாம் நன்கறிந்த ஆசாமியாதலால், இராகவனைநோக்கி, "ஓய் பிராமணா! நில்லும்; என்ன கொடுக்கின்றீர்?'' என்றார். இராகவன், 'அக்ஷதை' என்றான். செட்டியார், 'இந்த அக்ஷதையை எதற்காக எனக்குக் கொடுக்கின்றாய்?' என்று வினவினார். அதற்கு இராகவன், "இதைத் தலையிற்போட்டுக்கொண்டால் அஷ்டஐசுவரியங்களுமுண்டாகும்'' என்றான். உடனே செட்டியார், 'இந்தச் சோம்பேறி இரண்டு மஞ்சளரிசியை நம்கையிற்கொடுத்துவிட்டு நம்மிடம் காசுவாங்கிக்கொண்டுபோகப் பார்க்கிறான்; இவனுக்கு நற்புத்திகூறி அவமானப்படுத்தி இவனை இத்தொழில் புரியாமற் செய்யவேண்டும்' என்றுகருதி, அவனை நோக்கி, " அந்தணர்பெருமானே! ஐயோ! என்விஷயத்தில் ஏன் இவ்வாறு வீண்பிரயாசை யெடுத்துக்கொண்டீர்? எனக்கோ கடவுள் நிறைந்த செல்வத்தைக் கொடுத்திருக்கிறார்; இதுவே எனக்குப்போதும்; இதற்குமேல் எனக்குத் தேவையில்லை; செல்வம் அதிகமிருந்தாலும் மிகுந்த கஷ்டமுண்டாகும்; நீர்தாம் கையிலொன்று மில்லாமல் தரித்திரப்பட்டு யாசிக்கும் பொருட்டு அக்ஷதை கொடுத்துக்கொண்டு திரிகின்றீர்; எல்லாச்செல்வங்களையுந் தரத்தக்க இந்த அக்ஷதையை என் பலர்க்கும் கொடுக்கின்றீர்? தரித்திரப்படுகின்ற நீரே அதைத் தலையிற் போட்டுக் கொள்ளக்கூடாதா? உமக்கே எல்லா ஐசுவரியங்களும் உண்டாகுமே; நீர் யாசிக்குந்தொழிலை விட்டுவிடலாமே; கையில் வெண்ணையைவைத்துக்கொண்டு ஏன் நெய்க்கலைகின்றீர்? சீக்கிரம் அக்ஷதையை உமது தலையிற் போட்டுக்கொள்ளும்! போட்டுக்கொள்ளும்!! அடா மதிகெட்ட மாடே! உனக்குப் பிழைப்பதற்கு வேறுமார்க்கம் கிடையாதா? சீ! போ போ!!'' என்றுகடிந்துபேசினார். அங்கிருந்தவர்களெல்லோரும் கைகொட்டி நகைத்தார்கள்.

இவ்வாறாகவே, இராகவனுக்கு முகம்வாடிப்போயிற்று; அவன் அதற்குமுன் யாசகத்திற்குப்போன விடங்களிலெல்லாம் இவ்வித அவமானம் நேர்ந்ததில்லை; பேதைகளாகிய பலர் அவனுக்குத் தடையின்றிக் காசு கொடுத்துவந்ததால் அத்தொழில் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. செட்டியார் மேற்கூறியபடி பேசவே அவனுக்குச் சகிக்க வொண்ணாத அவமான முண்டாகிவிட்டது; அதனால், அவன் "வாத்தியார், 'ஏற்பதிகழ்ச்சி' எனப்போதித்ததை அசட்டை செய்ததனாலல்லவா நமக்கு இவ்வித அவமானம் நேர்ந்தது,'' என்று உணர்ந்து, அன்றுமுதலே யாசகத்தொழிலை விட்டு வேறு நற்றொழிலிற் பிரவேசித்தான். ஆதலால், ஒவ்வொருவரும், இந்நீதியைப் பின்பற்றி யொழுகல் வேண்டும்.

(தொடரும்.)

S. V. ஆறுமுகன்.

---

## கைவல்ய நவநீத வசனம்

(428-ம் பக்கத்தொடர்ச்சி)

[இந்த விஷயத்தில் பெரிய வாக்குவாதங்களுக்கு இடமுண்டு. ஆனால் அவை பெரும்பாலும் கொள்கை பேதத்தால் உண்டாகும் அபேதைக் காரணமாக நேர்வதேயன்றி வேறில்லை. இப்போது நாம் அறிய வேண்டிய விஷயம் மனோ வாக்குக் கெட்டாதபடி மிக்க சூக்ஷுமமானது. அதை விளக்



கிக்காட்ட உலகிலுள்ள ஜடபதார்த்தங்களையே திருஷ்டாந்தமாகக் காட்ட வேண்டியிருக்கிறது. ஆகையால் தாஷ்டாந்தத்தை யுணர்வதற்கு திருஷ்டாந்தத்தில் எவ்வளவு பாகம் அவசியமாய் வேண்டியதோ அவ்வளவு வரையிலேயே தாஷ்டாந்தத்தோடு பொருத்திப்பார்த்துக் கொள்ள வேண்டுமேயன்றி, திருஷ்டாந்த முழுமையும் தாஷ்டாந்தத்தோடு ஒவ்வொரு அம்சத்திலும் பொருந்தி வரவேண்டுமென்பது அனவசியமான வீண் வாதமேயாகும்.

எவ்வாறெனின் ;—

"கந்தன் தன் நண்பனுக்கு ஆபத்தென்று கேள்விப்பட்டதே காற்றாய்ப் பறந்து சென்றான்'' என்றால், காற்று யாவற்றினும் அதி வேகமாய்ச் செல்லும் சக்தியுடையதாகையால், கந்தன் அதிவேகமாய்ச் சென்றான் என்று பொருள் கொள்கிறோம். இங்குக் காற்றுவேகம் என்கிற குணம் ஒன்றுமட்டுமே திருஷ்டாந்தத்திற்கு எடுத்துக்கொள்ளத் தக்கது. அதை விட்டு,

1. காற்று ஆகாயத்தினிடமாய் உண்டாயிற்று. கந்தன் ஆகாயத்திலிருந்தா உற்பத்தியானான்?

2. காற்று அதிவேகமாய் அடித்தால் பெரிய விருட்சங்களை யெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்து விடுகிறது; கந்தன் வேகமாய்ச் சென்றால் அப்படி மரங்கள் பிடுங்கப்படுமோ?

3. காற்று ஈரத்தை யுலர்த்திவிடும். கந்தன் உலர்த்துவானா?

என்று இத்தகைய கேள்விகளை யெங்கேனும் கேட்கலாமோ? இப்படிக் கேட்பது வீண்வாதமேயாகும். ஆதலால் ஆரோபத்தில் "உண்மையாய் இருக்கும் ஒருவஸ்து வேறொருவஸ்துபோல் தோன்றுதல்'' என்ற பாகம் மட்டுமே திருஷ்டாந்தத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு உண்மை புலனாகிறது.

அதாவது:—

பூரண இருளில் ஆவரணம் சம்பவிப்பதில்லை. ஏனெனில் அப்போது வஸ்துவே புலப்படுவதில்லை. சொல்ப இருளில் நேரிடும் நேத்திர தோஷத்தால் ஆவரணம் தோன்றுகிறது. ஆவரணம் என்ற மாயைக்கு வஸ்துவை யடியோடு மறைக்கும் சக்தியில்லை. அதன் விவரத்தை மட்டும் (விசேஷபாகத்தை) மறைக்கிறது; அதாவது ஏதோ ஓர் வஸ்து இருக்கிறது என்ற (சாமானியபாகமாகிய) தோற்றத்தை மறைப்பதில்லை. ஆனால் அந்த வஸ்துவின் விவரமான உருவத்தை மறைத்து வேறொரு உருவமாய்த் தோன்றச் செய்கிறது.]

தாஷ்டாந்தத்தில் சச்சிதானந்த இலட்சணத்தையுடைய பரமான்ம சொரூபத்தை, அவற்றிற்கு நேர் மாறான அசத்து, சடம், துக்கம், என்ற இலட்சணங்களையுடைய பிரபஞ்ச ரூபமாய்த்தோன்றும்படி மாயை செய்கிறது. அதாவது ஆன்மாவின் ஞான சொரூபத்தை யடியோடு மறைக்க அஞ்ஞானம் அல்லது ஆவரணம் என்ற மாயைக்குச் சக்தி யில்லை. அதாவது ஆன்மாவின் சாமான்ய பாகத்தில் அஞ்ஞானமில்லை. விசேட பாகத்தில் மட்டுமே யுண்டு. இதனால் ஞான மில்லாதவன் ஒருவனுமே யில்லை. அனுபவத்தில் நான் என்பதொன்றுண்டு என்பதும் கடவுள் ஒருவர் உளர் என்பதும் யாவர்க்கும் தெரியும். ஆனால் அந்த நான் என்பதன் உண்மை

யான சொரூபம் இன்னதென்றும் கடவுள் சொரூபம் இன்னதென்றும் மட்டும் தெரியாது. அப்பாகத்தில்தான் ஆவரணம் அல்லது மாயையென்ற திரை ஆன்மாவை மறைத்துக்கொண் டிருக்கிறது.

இந்த ஆவரணத்திற்கு கயிற்றில் அரவம் தோன்றல், கிளிஞ்சிலில் வெள்ளிதோன்றல், ஊஷரபூமியில் ஜலம் தோன்றல், என்கிற திருட்டாந்தங்களன்னியில், கட்டையில் மனிதன்போல் தோன்றல், ஒருவடிவமும் நிறமு மற்ற வானத்தில்கொப்பரை கவிழ்த்தது போன்ற ஒருவிதவடிவமும் நீல நிறமும் தோன்றுதல் முதலிய திருட்டாந்தங்களும் கூறப்படுகின்றன.]

ஆவரணத்தைப்பற்றி மேலே கூறிய திருட்டாந்தங்களைப் போலவே, எவ்வித ரூபமாவது நாமமாவது இல்லாமல், எங்கும் சமமாய், இரண்டின்றி ஏகமாய், ஞான சொரூபமாய், பூரணமாய் நிறைந்து நிற்கும் பிரம்ம சொரூபத்தில் தோன்றும் பஞ்சபூத விகாரங்களனைத்தும் இனிகூறப்படுகிற கற்பனையால் உண்டாயின வென்று அறிந்து கொள்ளக் கடவாய். அதுஎவ் வாறெனில் கூறுகிறோம் கேள்:—

ஆன்மா சாதாரண சுழுத்தியிலிருப்பதுபோல், சிருட்டிக்கு முன் எல்லா ஆன்மாக்களும் (பூர்வம் செய்த கர்மவாசனைகளோடு) அவித்தை யென்ற மாயையின் கண்ணே (மெழுக்குருண்டையில் தங்கப்பொடிகள் மறைந்து கிடப்பது போல்) மறைந்திருக்கும். (இவ் வான்மாக்கள் இனி ஜனித்துத் தம் கர்மங்களை யனுபவித் தொழிக்கவேண்டிய பரிபாககாலம் வந்தபோது,) ஈசுவரனுடைய கருணை நோக்கத்தால் மேற் கண்ட மாயை, தான் முன்னிருந்த (மறைவான) நிலைமையை விட்டு மூன்றுவித குணங்க ளாய் வெளிப்படும்.

[ஆவரணம் என்றால் மூடுதல் அல்லது மறைத்தல் செய்வது என்று பொருள். ஆன்மாவின் நிஜசொரூபம் தெரிய வொட்டாது மறைப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இதுவே கர்மங்களை ஆன்மாவோடு பொருத்தி வைக்கும் பசைபோன்றது. இது வெளிப்படத் தோன்றாதிருத்தலால் அவ்வியத்தம் என்று கூறப்பட்டது. (வியத்தம் = வெளிப்படத் தோன்றல். அவ்வியத்தம் = வெளிப்படாது மறைந்திருத்தல்). இந்த ஆவரணம் வித்தை யென்கிற ஞானத்தினால் அழிவதால் இதற்கே அவித்தையென்றும் பெயர். இது பிரபஞ்ச உற்பத்திக்கு ஓர் காரணமாயிருத்தலால் இதற்கு பிரகிருதி யென்றும் பெயர். இந்த ஆவரணம் பரமான்மாவையும், தன்னைத்தானறிந்த பிரம்ம ஞானியையும் தவிர மற்ற சீவர்களுக்கு ஆன்ம பரமாத்மாக்க ளின் சொரூபம் சற்றும் தெரியவொட்டாது திரைபோலும், மழைகாலத்து மூடுபனிபோலும் மறைக்கும். தாயுமானவர், "மாயையெனும் திரையை நீக்கி நின்னையாரறிய வல்லார்......" என்று கூறியது இந்த ஆவரணமாகிய திரையையே.]

## முக்குணங்களின் விவரம்.

(1) சத்துவம். (2) இராஜசம். (3) தாமசம்.

1. சத்துவகுணம்:— இதுவே உத்தமமானகுணம். இது வெண்மை நிறத்தையும், தெளிந்த சுத்த ஜலத்தையும் போன்றது.
2. இராசதகுணம்:—இது மத்திமமான குணம். சிவப்புநிறத்தையும் கலங்கிய நீரையும் ஒத்தது.
3. தாமதகுணம்:—இது அதமமான குணம். சுத்தக் கறுப்புநிறத்தையும், அசுத்தமான சாக்கடைச் சேற்று ஜலத்தையும் ஒத்தது.



சத்துவகுணம் சுத்த சாந்தம், ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, மோக்ஷ இச்சை, தெய்வசிந்தனை முதலியவற்றையுடையது. இரஜோகுணம் இவ் வுலக விஷயங்களிலும், உலக போகத்திலும் பிரியமுடையது. ஆவேசம், உரோஷம், சாதாரணகோபம், இச்சை, இவையாவும் இராசத குணங்களே. தமோகுணம் தன்னை மறந்த கோபம், அதிக ஊண்புசித்தல், அதிக நித் திரை, மயக்கம் முதலிய இழிவான குணங்களை யுடையது.

இம்மூன்று குணங்களும் எப்போதும் ஒன்றோடொன்று கலந்தே யிருப்பினும் ஒரு போதும் மூன்றும் சமமாயிராது.

எப்போதும் ஏதாவதொன்று மட்டும் மேலோங்கியும் மற்ற விரண்டும் தாழ்ந்துமே யிருக்கும்.

## இனிப்பிரபஞ்ச சிருட்டியைக் கிரமமாய்க் கூறத் தொடங்குவாம்.

[சிருட்டியில் கிரம சிருட்டியென்றும் உகபத் சிருட்டி யென்றும் இரு வகையுண்டு. இவற்றில் கிரமசிருட்டி என்பது, "ஆவரண சத்தியிலிருந்து ஆகாயம் உண்டாயிற்று, ஆகாயத்திலிருந்து வாயு உண்டாயிற்று, வாயுவி னின்று அக்கினியுண்டாயிற்று, அக்கினியிலிருந்து அப்பு உண்டாயிற்று, அப்புவினின்றும் பிருதிவியுண்டாயிற்று" என்று வரிசைக் கிரமமாய்க் கூறுவது.

உகபத் சிருட்டி யென்பது, 'வாயுவின் சேட்டையால் கடலில் எப்படி அலை, திவலை, குமிழி, நுரையாதிகள் ஏககாலத்திலுண்டாயிற்றோ, அவ் வாறே அகண்ட பரிபூரண சொரூபத்தில் அண்ட, சுரண, புவன போகங்க ளாகிய யாவும் அப் பரம்பொருளின் கிருபா நோக்கத்தாலேயே மாயா சம் பந்தத்தால் ஏககாலத்தில் தோன்றின" என்பதாம். உகபத் சிருட்டியே வேத சம்மதமாம் என்றும், யாவும் எங்கிருந்து உற்பத்தியாயினவோ அவ் வாறே அந்த விடத்திலேயே ஒடுங்கி மறைகின்றன, வென்ற உண்மையை நன்குணர்வதற்காகவே மேற்கண்ட கிரமசிருட்டி முறையாய்க் கூறப்பட் டிருக்கிற தென்றும் அருளப்பட்டிருக்கிறது].

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய பரப்பிரம்மத்தினிடத் தில், கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுவது போல், மூலப் பிரகிருதியென்ற ஒரு சக்திதோன்றியது. இப்படித் தோன்றுவதையே அத்தியாரோபம் என்றும் ஆரோபம் என்றும் கூறுவது.

[இச் சந்தர்ப்பத்திலும் பலவிதவாதங்களுக்கு வழி யுண்டு. ஆனால் அதன் முடிவான தீர்மானத்தை யறிந்து மேல் ஆராய்ச்சி செய்யலாம் என் றெண்ணுவது, கடலில் அலை நின்றபிறகு ஸ்நானம் செய்யலாம் என்று கருது வது போலவே யாகும். "பரிசுத்தமான பிரம்மத்தினிடத்தில் இம்மாயை எப்படி யுண்டாயிற்று? ஆன்மா கன்மம் செய்ததால் ஜனிக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி யிருக்க முதல் முதல் ஜன்மம் எடுத்தபோது அதற்கு முன் தேகமின்றி கன்மத்தை யெப்படிச் செய்தது? ஜன்மம் முன்பா கன்மம் முன்பா?" என்கிற கேள்விகளெல்லாம் ஒரு பொருளையே குறிக்கும். ஆன்மாக்கள் மாயையின் வயப்பட்டிருக்கிறவரையில் அம் மா யையின் உளவை யறியமுடியாது. மாயையை நீக்கிக்கொள்ள வழி கூறப் பட்டிருக்கிறது. அவ்வாறே முயற்சிசெய்து நீக்கிக்கொண்டால் எல்லா உள வும் அருளால் விளங்கிவிடும். அப்படிக் கண்டு திருப்தியடைந்தே நம்

றான்றோரெல்லாம் இவ்வுலகத்தி லிருந்துகொண்டே பேரானந்தத்தை யனுபவித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் மார்க்கம் மரணத்திற்குப் பிறகு மோக்ஷம் என்கிற ஒன்று வரும் என்று நம்பிக்கொண்டிருப்பதல்ல. இத்தேகத்தி லிருக்கும்போதே அங்கை நெல்லிக்கனிபோல் அப்பேரின்ப நிலையை யனுபவிப்பது. இஜ்ஜன்மத்தில் அல்லது சமீபஜன்மத்தில் மெய்ஞ் ஞானத்தையடையத் தடையாக விருக்கும் மிக்க தீவினையை யுடையோர், இச்சமாதானத்தால் திருப்தி யடையாமல் பிறப்பிறப்பாகிய பவக்கடலில் சுழன்று அவதிப்பட்டுக்கொண்டே யிருப்பார்கள். பரிபாகபக்குவமுடையோர் இத்தகைய சந்தேகங்களுக்கு மயங்காது ஆன்றோர் வாக்கில் நம்பிக்கை வைத்து மாயையையொழிக்க முயல்வார்கள்.

இன்னும் பிரம்மத்தையும் ஆத்மாவையும் போல் இம்மாயையும் அநாதி நித்தியமா, அநித்தியமா என்ற ஒரு கேள்வியிலும் வாதங்கள் நிகழ்கின்றன. இதில் சுலபத்தில் சமாதானமடையக் காரண மிருந்தும், கக்ஷி பேதத்தாலுண்டாகும் துவேஷ புத்தியால், அனுபவமாய் உண்மையையறிய முயல்வதைவிட்டுச் சிலர் வீண் தர்க்கவாதத்திலிறங்கி விரோதங்களையும் விபரீதங்களையும் உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

மாயை நித்தியமென்றுகூறுவதும் மகான்கள் எழுதிய நூல்களே. அவர்களும் ஆண்டவன் அருள்பெற்று முத்தியடைந்தவர்களென்பதே சர்வஜன சம்மதம். அம்மாதிரியே மாயை அநித்தியமென்பதும் வேதம் முதலிய பிரபல நூல்களில் கூறப்பட்டிருப்பதே. அக்கொள்கையின்படி முத்தியடைந்த ஆன்றோர் எண்ணிறந்தோர். அப்படி யிருக்க, ஒரு கட்சி கூறுவது மட்டும் எப்படிப்பொய்யாயிருக்கும் என்று இதைப்பற்றித்தர்க்கமிடுவோர் எண்ணித்திக்கலாகாது? சற்று சிந்தித்தால் சாதாரண அறிவுடையோர்க்கும் இரண்டு அபிப்பிராயங்களிலும் உண்மை யிருக்கவே வேண்டுமென்று புலப்படும். ஆனால் 'நித்தியம்' 'அநித்தியம்' என்ற நேர் விரோதமான இரண்டு இலக்ஷணங்களும் ஒன்றி னிடத்திலேயே யெப்படி யிருக்கும் என்கிற ஒரு ஆக்ஷேபனை தோன்றுகிறது.

ஆனால் இந்தச் சாத்திர ஆராய்ச்சியில் இத்தகைய சந்தர்ப்பங்கள் பல காணலாம். அவற்றில் திருஷ்டாந்தமாய் இரண்டொன்று மட்டும் கூறுகிறோம். பரமாத்மாவாகிய பரப்பிரம்மத்தின் இலக்ஷணங்களைப் பற்றிக் கூறும் வேதமே, பிரம்மம் அணுவுக்கு அணு(சிறியவற்றிற்கெல்லாம் சிறிது-அதினும் சிறியது கிடையாது) என்றும், மஹத்திற்கு மஹத்து (பெரிய வஸ்துக்களுக்கெல்லாம் பெரிய வஸ்து - அதினும் பெரியவஸ்து கிடையாது) என்றும் பிரம்மம் மனம் வாக்குகளுக்கு எட்டுமென்றும், அவைகளுக் கெட்டாதென்றும் — பிரம்மம் சமீபத்திற்குச் சமீபமென்றும், தூரத்திற்குத்தூரமென்றும் கூறுகிறது. இப்படி விரோதமாய்த் தோன்றும் இரண்டு இலக்ஷணங்களும் காரணத்தோடு நிரூபிக்கப்படுகின்றன. இவ்வாறு பலவுள. அவற்றை யாங்காங்கு குறிப்பிடத்துக் காணலாம்.

மாயை நித்தியமென்பதும் அநித்தியமென்பதும் அவ்வாறே. இரண்டிலும் உண்மையுண்டு. இது சமஷ்டி வியஷ்டி பேதத்தால் நேர்ந்தது. 'சமஷ்டி' எனல் பலகூடிய கூட்டம்; தோட்டம் என்பதுபோல். 'வியஷ்டி' என்பது தனி; மரம் என்பது போல்.

மாயை யொழிந்தாலன்றி மனிதன் மோக்ஷ மடைவதில்லை யென்பது யாவரும் அறிந்ததே. ஒருவன் சாதனங்களை யடைந்து மன நாசம் செய்து



எப்போது தன்னை யறிகிறானோ அப்போதே தன் வரையில் மாயையை யொழித்துக் கொண்டவனாகிறான். அனுபவத்தில் மனமே மாயையன்றி வேறு மாயையில்லை.

"மனமனம் எங்குண்டு மாயையும் அங்குண்டு
மனமனம் எங்கில்லை மாயையு மங்கில்லை
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை
பினையாய வேண்டா பிறந்தவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந்தானே" (பாரிதுறை)

என்று ஆன்றோர் அருளியவாற்றா லுணரலாம்.

இதனால் மாயை அநித்தியமென்று நன்குவிளங்குகிறது. "மாயை அநாதியாயிருப்பதாயிற்றே. அது எப்படி யழியும்?" என்று தனஞ்சயன் கேட்டதற்குப் பகவான் "ஒரு மலைக்குகையில் இருள் அம்மலை யுற்பத்தியான காலமுதலே யிருந்தாலும், தீபவொளியைக் கண்டதக்ஷணம் அழிவதுபோல் மாயை யநாதியாயினும் ஞானோதயத்தால் அழியும்" என்று அருளினார்.

இனி முத்தியடைவோர் அவர்கள் வரையில் மாயையை யொழித்துக் கொண்டாலும், பிரபஞ்சசிருஷ்டி முதலியவற்றிற்குக் காரணமாகிய ஜகமாயை யடியோடு அழிவதில்லை. அதனால் மோக்ஷமடைவோர் அடைந்துகொண்டேயிருப்பினும், பிரபஞ்சத்தில் நடக்கும் ஆண்டவனது பஞ்சகிருத்தியம் தடையின்றி நடந்துகொண்டே யிருக்கிறது. இவ்வாற்றால் மாயை நித்தியமென்பதும் உண்மையே.

ஆயினும் அஞ்ஞான நிலையிலுள்ள நாம் மாயையை யொழிக்க வேண்டியவர்களாதலால் மாயை அநித்தியம் என்கிற கொள்கையையே கடைப்பிடித்து முயன்றால்தான் அவ்வாறே யதை யொழிக்கத்தக்க உற்சாகமும் நம்பிக்கையும் நம்மில் ஜனிக்கும். இம்மாயையின் விஷயத்தைப்பற்றி பின்னால் சந்தேகத் தெளிதற் படலத்தில் விவரமாய்க் கூறப்படுகிறபடியால் ஈண்டு இம்மட்டில் நிறுத்துகிறோம்.] (தொடரும்.)

சீடன்.

## பழமொழிகள்

(385-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாய் அறியாச் சூலுண்டோ.
தாய்க்குப் பின் தாரம்.
தாய் வசை பிள்ளைக்குத் தாக்குமோ?
தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்.
தானே கனியாப் பழத்தைத் தடிகொண்டு அடித்தாற் கனியுமா?
தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்.
திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
திருடனைத் தேள் கொட்டினது போல்.
திருப்பதி அம்பட்டன் க்ஷவரம் செய்வது போல்.
210 தீ இல்லாமல் புகை எழும்பாது.
தீட்டின மரத்தில் பதம் பார்க்கிறதா?

தீபத்தில் ஏற்றிய தீவட்டி.
தீப் புண்ணாறும், வாய்ப் புண்ணாறாது.
தீயினால் சுட்ட புண் ஆறும்; வாயினால் சுட்ட புண், அதாவது, மனம் நோகும்படி கூறும் மொழிகளால் உண்டாகும் மனப்புண் ஆறாது என்பது.
தீராக் கோபம் போராய் முடியும்.
துணை போனாலும் பிணை போகாதே.
தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறது போல்.
துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா.
தேனுக்கு ஈயைத் தேடிவிட வேண்டுமா?
தொடையையும் கிள்ளித் தொட்டிலும் ஆட்டினாற்போல்.
220 நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பதுபோல்.
நத்தை வயிற்றிலும் முத்துப் பிறக்கும்.
நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.
நல்ல நாளில் நாழிப்பால் கறவாதது கன்று செத்தால் கலப்பால் கறக்குமா?
நா அசைய நாடு அசையும்.
நாடெங்கும் வாழ்ந்தால் கேடொன்றும் இல்லை.
நாடு காடாகும் காடு நாடாகும்.
நாய் விற்ற காசு குலைத்துக் காட்டுமா?
நாள் ஆற்றுகிறது நல்லார் ஆற்றார்.
நிழல் அருமை வெயிலில் போனால் தெரியும்.
230 நீண்டபுல் நிற்க நிழல் ஈயுமா?
நீரும் கொல்லும் நெருப்பும் கொல்லும்.
நீரை அடித்தால் நீங்கி விலகுமா?
நூற்றைக் கெடுத்தது குறுணி.
நெருப்பு ஆறும் மயிர்ப் பாலமும்போல்.
நெருப்பு என்றாலே வாய் வெந்து போமா?
நெருப்பைத் தலைகீழாய்ப் பிடித்தாலும் சுவாலை கீழ்நோக்குமா?
நெல்லுக்குப் பாயும் தண்ணீர் புல்லுக்கும் பாயும்.
நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
பகலிற் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே.
240 பசித்தவன் தின்னாததும் இல்லை, பகைத்தவன் சொல்லாததும் இல்லை.
பசுமரத்தில் ஆணி தைப்பதுபோல.
பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வதுபோல்.
படுக்கையின் சுகத்தை மெத்தை அறியுமா?
பற்றிப்பட்டு எரிகிற வீட்டில் பிடுங்கிக்கொள்ள இடம் கேட்டாற் போல்.
பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.
பண்ணின பாவம் பட்டால் தொலையும்.
பதறாத காரியம் சிதறாது.
பக்தி உண்டானால் முத்தி உண்டாம்.
பல துளி பெரு வெள்ளம்.
250 பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.



## நித்தியவிதி—போஜனம்

(423-ம் பக்கத்தொடர்ச்சி)

உப்பு, புளிப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு, இனிப்பு என அறுவகையான சுவைகளுள. இவற்றுள் இனிப்பு எல்லோராலும் விரும்பப்படுவதும், நாவுக்கு மிகுந்த உருசியைத் தருவதும், மனதுக் கிரம்மியமாயுள்ளதுமாயிருப்பினும் மற்றைய சுவைகளைப்போலச் சரீரத்துக்கு அவ்வளவு சௌக்கிய சுகங்களைக் கொடாது. அது பிரவிருத்தியை உண்டாக்கக் கூடியதாகையால் முதலிற் கொஞ்சம் உண்ணும்படி விதிக்கப்பட்டது. மதுர முள்ளதும், நெய்ப்புள்ளதும், ஸ்திரமுள்ளதும் சாத்துவிக ஆகாரமாம். இதனுள் அரிசி முதலிய தானியங்கள் அடங்கும். இவ்வாகாரத்தால் ஆயுள், ஆரோக்கியம், சுகம், பலம் இவைகளுண்டாகும். உப்பு, புளிப்பு, உறைப்பு, முதலியவும், அதிக சூடுள்ளதுமான ஆகாரம் இராஜஸாகாரம் என்னப்படும்; குரூரம், ரோஷம், கோபம் முதலியவற்றை யுண்டாக்கக் கூடியவைகளும் அடங்கும். மாமிசம் இதில் சேர்ந்ததே. இவ்வாகாரம் துக்கம் வியாதிமுதலியவைகளை உண்டாக்கும். அதிக நாட்பட்டதும், சத்தில்லாததும், துர்க்கந்த முடையதும், பழைய அன்னாதிகளும், எச்சிலாக்கப்பட்டவைகளும், பரிசுத்த மில்லாதவைகளும் தாமஸாகாரமாம். இது நோய், பலஈனம், ஆயுட்குறைவு இவைகளை உண்டாக்கும். சாத்துவீகாகாரம் யோகிகட்கு மிக்க பயனளிக்கும். கிரகஸ்தர்கள் மூவகையான உணவுகளையும் புசிக்க வேண்டும். சாத்துவிகமான மதுரரசம் வீரிய விருத்தியைக் கொடாதாகையால் கிரகஸ்தன் அதை அதிகமாகப் புசிப்பது கூடாது. முதலில் கொஞ்ச முண்டு பிறகு அறுசுவைப் பதார்த்தங்களையும் புசிக்க வேண்டும். ஆனால் தாமசமென்று குறிக்கப் பட்டதை மாத்திரம் விலக்கி விட வேண்டும்.

போஜனத்தில் அன்னமே பிரதானம்; மற்ற காய் கறி பதார்த்தங்கள் அவ்வளவு முக்கியமன்று; வெஞ்சனமாக உபயோகிக்கப்படுவன. ஆதலால் முக்கியமான அன்னம் குழைந்தாலது, நன்றாய்ச் சமையாமல் அரிசியாகவாவது இருக்கக்கூடாது. நன்றாய் வெந்து மலர்ந்திருக்கவேண்டும். அதிக சூடான அன்னமுங்கூடாது. மிதோஷ்ணமுடையதா யிருக்கவேண்டும். அரிசியில் சம்பாநெல் அரிசியே சிலாக்கிய முடையது. சம்பா, பூலவிதமானாலும் நன்மைதரத்தக்கதே. இதைப் புழுக்கியும், பச்சையாயும் குத்தி உபயோகிக்கலாம். ஆயினும் அவ்விரண்டுக்கும் குணவேறுபா டுண்டு. இதுகாறுங் கூறிப் போந்த தோஷங்களா லெழும்பயனை வைத்திய ஆதாரங் கொண்டு சிறிது கூறுவாம்.

"குழைந்தசோ றுண்ணிற் கொடுமேகங் காசம்
அழுந்துமக் கினிபு மாறும்—வழுத்திடச்செய்
துர்ப்பலமும் பீநசமுந் தோன்று மிவையர்க்குட்
பொற்படரு மாதே புகல்"

குழைந்த சோற்றையுண்டால் கொடிய மேகம், காசம், அக்கினிமந்தம், துர்ப்பலம், பீநசம், குன்மம் முதலிய நோய்க ளுண்டாகும்.

"நன்றாச் சமையா தெடுத்தண் டெச்சோறு
தின்றால் மலசலமுஞ் சிக்குமென்ப—தொன்றேகேள்
மற்றையநா ளுஞ்செரிக்க மாட்டா துவுடலிற்
சற்றும்வியா பிக்காது சாறு"

பதமாகாத சோற்றை யுண்டால் மலஜலச்சிக்கலும், அஜீர்ணவியாதியு முண்டாகும். அவ்வன்னசாரமும் சரீரத்தில் பரவாது. எனவே அவ்வன்னத்தினாலாகும் பயனாகிய இரத்தவிருத்தி முதலியனவு முண்டாகாவாம்.

“அதிசூடுகை யன்ன மாத்தபித்தந் தாகம்
பிதிரோது சித்தப் பிரமை—மதரோகம்
என்றுரைக்கு நோய்கட் கிடங்கொடுக்குந் தப்பாது
குன்றுரைக்கும் பூண் முலையே கூறு”

அதிசூடுகையன்னத்தினால் இரத்தபித்தமும், தாகமும் அதிகரிக்கும்; மதிமயக்கமுண்டாகும்; மதரோகம் எழும். (நாடிநரம்புகள் தளர்ச்சியும் அடையும்).

“அற்பச்சூட் டன்னம்வா தாதிகளாற் பிசகத்தால்
உற்பவித்த நோயை யொழித்துடற்கு—நற்பலத்தைச்
செய்யு மருசிதனைத் தீர்க்குஞ்சர் வோத்தமமாம்
பெய்யும்வளைக் கைமாதே பேசு”

மிதமானசூடுள்ள அன்னம் வாத பித்த சிலேத்துமங்களா லுண்டாகும் நோய்களையும், பிசகத்தாலுண்டாகும் நோயையும் (கபாலவிகாரத்தா லுண்டாகும் நோய்கள்) நீக்கும்; நல்ல வலுவைக் கொடுக்கும்; போஜனத்தில் ருசியில்லாமலிருக்கிற நோயையும் தீர்க்கும்; ஆதலால் அது மிகவும் சிறந்த உணவாம்.

“தென்புவியி லுளருஞ் செழித்துவள ருஞ்சாலி
வன்பு புழுங்கல் வடிசாதம்—முன்புணவே
வாயுவிலை பித்தால் வலியும்வன் றேயுமிலை
நோயுடையார்க் காகு நவல்”

புழுங்கலரிசிச் சோற்றில் வாயுவில்லை. அதனால் சரீரத்துக்குப் பலமு முண்டாகாது. வியாதியும் இடையாது. ஆதலால் வியாதிக்காரர்களுக்கு மிக்க சௌக்கியத்தைக் கொடுக்கும்.

“பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்
நிச்சயமாய்ப் பித்தத்தை நீக்குங்காண்—அச்சமற
மூத்திரகி ரிச்சரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த
மாத்திரமுண் டாக்கும் வழுத்து.”

பச்சரிசிச்சோறு பலத்தைத் தரும்; வாயுவை யுண்டாக்கு மென்பார்; பித்தத்தை ஒழிக்கும்; மூத்திரகிரிச்சரமென்னும் நோயை வராமல் தடுக்கும்; குழந்தைகளுக்கு மாந்தத்தை யுண்டாக்கும் என்பார்கள்.

“சுத்தவன்னஞ் சுற்றமிலை தோஷங் களையகற்றும்
மத்தாத்தே சிக்குமது முக்கியங்காண்—பத்தியத்திற்
காருமது முப்பிணிக்கு மாமவியுஞ்ச னங்கலந்தால்
எருமுண்டேறு மெல்லா மிரங்கு”

நன்றாய்ப் பக்குவமான சுத்த அன்னத்திற்கு ஒரு தோஷமுமில்லை. எல்லாத்தோஷங்களையும் நீக்கும். வாதம், பித்தம், சேத்துமம் என்கிற மூவகைப்பட்ட சரீரிகளுக்கும் ஒத்துவரும். பத்தியத்திற்கு நல்லது. அரியான வெஞ்சனங்களுடன் கலந்துண்ண எல்லாநோய்களும் தீரும். வியஞ்சனம்—குழம்பு, இரசம் முதலியன. இவ்வன்னத்தைப் புதிய பசுவின் நெய்யுடன் சேர்த்துப்புசிக்கப் பலமுண்டாகும். பித்தக்கிறுகிறுப்பை யொழிக்



கும். கண்ணுக்கு நல்லது. சீரணசக்திவளரும். நல்ல என் நெய்யுடன் கலந்துண்டால் மிகுந்த பலத்தைத்தரும். போகசக்தி யதிகரிக்கும். வாதரோகம், க்ஷயரோகம், மேகரோகமெல்லாந் தீரும். பசியுண்டாகும். இவைகளைப் பகுத்தறிந்து தத்தம் சரீரத்துக்கேற்றவாறுணர்ந்து புசிக்கவும். கடைசியில் புளித்த தயிரும் உப்புங்கலந்து புசித்தால் உண்ட ஆகாரமெல்லாம் நன்றாய்ச் சீரணமாகும்.

“மூத்ததயி ருப்புமுனை முன்பிறங்கு வத்துகளிற்
கோத்ததிரி தோடங் குடிவிலகும்—பூர்த்தியா
யுண்டபிறகு முற்குசடு வற்றலைவெ லாம்புழுக்கந்
கொண்டடாச் சீரணமா கும்”

என்றதனாற் கண்டு கொள்க.

உண்பதிலும் சில நியமனங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில வருமாறு. கட்டில் முதலியவற்றிலிருந்து கொண்டும், வாகனங்களிலிருந்து கொண்டும், படுக்கையி லிருந்து கொண்டும், கையிலேந்திக்கொண்டும், ஆசனத்தில் வைத்துக் கொண்டும், தனக்கு இடது புறத்தில் வைத்துக் கொண்டும், தலையில்வஸ்திரந் தரித்துக் கொண்டும், மடியின்மீது பாத்திரத்தை வைத்துக் கொண்டும், ஒரே வஸ்திரத்தை உடுத்துக் கொண்டும், பாதுகை செருப்பு அணிந்து கொண்டும் புசிப்பதுகூடாது என்பனவாம். இவற்றில் சிலவற்றைச் சிறிது விரிப்பாம். வாகனமென்றது யானை குதிரைகளை. ஜீவப்பிராணிகளின்மீது ஏறினால் அப்பிராணிகளின் சக்தி (குணம்) இவன் சரீரத்திலேறும். அவற்றுக்கு அதிக சக்தியுண்டு. அவற்றின் மீதிருந்து புசித்தால் அப்பிராணிகளின் சரீரகுணத்தினால் அன்னம் விகாரப்பாடடையும். அதனால் அன்னத்தாலாகும் பயனை யடையாமல் துர்க்குணமான வியாதிகளுண்டாகும்; ஏனெனில் ஆடவன் சரீர சக்தியை அவ்வாகனங்கள் ஆகருஷித்துக் கொள்ளுவதால். பாலர்களை ஆனையின்மே லுட்காரவைத்தால் அவர்களைப் பீடிக்கும் கக்குவான்முதலிய நோய்கள் நீங்கும். இதனால் அவற்றுக்கு ஆகருஷண சக்தியதிகமாயுண்டு என்றறியலாம். குதிரைமீதேறினாலும் “அமோத்கமம்” என்கிற கொடிய உஷ்ணம் உண்டாகும். அவ்வுஷ்ணம் தீர அவன் பால்குடிக்க வேண்டும். குடிக்கும்போது கீழிறங்கிக் குடித்து விட்டுச் சற்றுநேரம் கழித்தபின்பே குதிரைமேலேற வேண்டும். ஆனைலத்தியின் நீரைப்பிழிந்து புகையிலைப் பொடி அரைத்து முகர்ந்தால் அதிக காமமாயிருக்கும். கண்ணெரிச்சலாதி நோய்களுண்டாகும். இவற்றால் அம்மிருகங்களின் சரீர உஷ்ணம் மனிதர் சரீரத்துக்கு நோய்களை யுண்டாக்கத் தக்கது என்னலாம். அவற்றின் மேலிருந்து புசிக்கும்போது அவ்வாகாரம் அந்த உஷ்ணத்துடன் கலந்தே சரீரத்தி லுள் வியாபித்தால் பெருங் கெடுதி யுண்டாகுமென்பதில் தடையேயில்லை. இதுபற்றியே,

“பரியூர்வார் பாலருந்தல் பண்பா முடற்குக்
கரியூர்வார் பெண்ணின்பங் காணல்—பரிவாய்ச்
சிவிகை யூர்வார்க்கு மைத்தலின்பம் சேட்செல்வார்
பசியீய உண்டல் பயன்.”

(குதிரையேறுகிறவர்கள் பாலருந்துவதாலும் யானை யேறுகிறவர்கள் பெண்ணின்பம் கொள்ளுதலாலும், பல்லக்கு ஏறுகிறவர்கள், தேகத்தைப் பிடித்துவிடுவதாலும் நெடுந்தூரம் செல்கிறவர்கள் பசிக்க உண்பதாலும் பயனடைவார்கள்.)

என்று முன்னோர் கூறியுள்ளார். கட்டில் படுக்கை முதலியவற்றி லிருக்கும்போது மனம் சிற்றின்ப போகத்தைக் கருதாநிற்கும். அதனால் சயன்னமொழியும் அதுவும் விலக்கப்பட்டது. செருப்பு முதலியவற்றுக்கும் யானை குதிரைகளுக்குக் கூறியதுபோல பூஜித்துக்கொள்க. உண்ணும்போது பிராணவாயுவுக்கு வெளிவியாபாரமில்லை. ஆகாரத்தை உட்செலுத்துவதாகிய உள்வியாபாரமேயாம். மலஜலங்களை விடுங்கால் பிராணவாயுவுக்கு வெளிவியாபாரமுண்டு. ஆதலால் சரீரத்திலுள்ளிருக்கும் சில அசுத்தங்கள் ஆவிரூபமாய் மயிர்க்காலின் வழியாகக் கபாலத்தை யூடுருவி வெளிப்படும். வெளிக்காற்று பட்டவுடன் அவ்விடத்திலேயே உறைந்துவிடும். அப்படி உறையாதபடி தலையில் வஸ்திரந்தரிக்க விதிக்கப்பட்டது. உண்ணும்போது நெய்முதலியவற்றுடன் கலந்த அன்னசாரம் கபாலத்தை எட்டும். அது கபால ஸ்தானத்துக்குப் பலத்தையுண்டாக்கும். வஸ்திரத்தைச்சுற்றினால் அச்சக்தி வஸ்திரத்தினால் ஆக்ருஷிக்கப்படும். அதனால் கபாலத்தில் புழுவெட்டு முதலிய சில கொடிய நோய்களுண்டாவது நிச்சயம். இதுபற்றியே உண்ணுங்கால் தலையில் வஸ்திரந் தரித்தல் கூடாது என விலக்கப்பட்டது. தனக்கு இடதுபுறத்தில் வைத்துண்டால், குடல் மலாசய முதலியவற்றுக்கு இருப்பிடமாகிய அப்பாகத்தினின்று துர்ஆவி வெளிப்பட்டுப் போஜனத்துடன் கலக்கும். அதனால் பலகெடுதியான நோய்களுண்டாகும். அவ்வாகாரமும் விஷமயமாய்விடும். மற்றவைகளையும் இவ்வாறு ஊகித் தறிந்துகொள்ளலாம். உண்ணப்போகும்போது இரண்டு கைகள், இரண்டு கால்கள் முகமாகிய ஐந்து உறுப்புகளையும் நீரால் அலம்பிச் சுத்திசெய்துகொண்டு அவ்வீரம் உலர்வதற்குமுன் புசிக்க வேண்டுமென்பதும் விதியாம். புசித்தானபின் உத்தரா போஜனம் செய்து அம்மிகுதியான நீருடன் சிறிது ஆகாரத்தையும் கலந்து ரௌரவநரக வாசிகளான பிராணிகளுக்காகக் கீழே விட வேண்டும். உண்கலத்துக்குப் பக்கத்தில் விடவேண்டும். அதற்கு மந்திரமுமுண்டு. அம்மந்திரத்தில் "இது நரகவாசிகளை உத்தேசித்துக் கொடுக்கப்படுகிறது" என்பது விளங்கியிருக்கிறது.

இங்கு நரகவாசிகள் என்றது மஹாபாவகர்மத்தால் அநேககாலம் ரௌரவாதி நரகங்களிற் கிடந்து வருந்திப் பாபசேஷத்தால் ஸ்தாவராதி ஜன்மத்தில் வந்திருக்கிற ஜீவாத்மாக்களையேயாம். அவர்களையும் கிரகஸ்தன் ஆதரிக்க வேண்டும். உண்பதற்கு முன் காகம் சுவான மாதி பசு பட்சிகளுக்குத் திருப்தி யுண்டாக்கும்படி பூதபலி கூறப்பட்டது. இங்கு புசித்தான பின் ஸ்தாவராதி ஜந்துக்களையும் போஷிப்பது கூறப்பட்டது. அதிதிபூஜையாலும், பிட்சை யிடுதலாலும் மானிடயாகம் கூறப்பட்டது. ஒரு இல்லறத்தான் இந்தப் பஞ்சமஹா யக்ஞத்தை நாடோறும் செய்ய வேண்டும். அதனால் தேவர், பிதிர், மனிதர், பசு, பட்சிகள், ஸ்தாவராதிய இவ்வளவு பேரும் திருப்தி செய்யப்படுதலால், அந்தக் கிருகஸ்தன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு, நிர்மல சித்த முடையவனாய் மோட்சாருகனாவான். இதனால் ஒரு கிருகஸ்தன் தான் புசிப்பதும் தேவாராதனையாகவே முடியும். இத்துடன் போஜனம் முடிந்தது. வாயசாதி பலிகளின் பிரயோசனத்தைச் சிறிது கூறியபிறகு இரவைப்பற்றிச் சொல்வாம்.

(தொடரும்)

திரு-அ. சிவாநந்தநாதர யோகீசுவரர்.



## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

நண்பர்களே! நாம் எடுத்துக் கொண்ட இத்தேசத் தொண்டின் முதற் கடமையாவது:— சந்தாதாரர்களனைவர்க்கும் தவறின்றி மாதமாதம் கூடியசீக்கிரத்தில் சஞ்சிகையை யனுப்பிவர வேண்டியதேயாகும். ஆண்டவன் ஒருவனையே நம்பி, இதில் ஊதியம் கிடைக்குமென்பதை யெள்ளளவும் எதிர்பாராது இக்காகிதப் பஞ்சகாலத்தில் ஊக்கத்தோடு இதைவிடாது நடத்திவரும் நாம் மேற்கண்ட முதற்கடமையிலிருந்து தவறுவதற்கு என்ன காரணமிருக்கிறது? நம்மால் கூடிய வரையில் எவ்வளவோ சாக்கிரதையெடுத்துக் கொண்டு நேரில் இருந்து யாவர்க்கும் சஞ்சிகைகளை யனுப்பி வருகிறோம்.

கடவுள் தயவால் நமக்கென்று ஒரு அச்சுக்கூடம் கிடைத்தவரையில், அதனால் அடைய நியாயமாய் நாம் எதிர்பார்க்கும் அவ்வளவு நன்மைகள் கிடைக்காவிடினும், அம்மாதமுதல் சஞ்சிகைகளை யாவர்க்கும் தமிழ் மாதம் முதல் தேதியே யனுப்பி வருகிறோம். இக்கடமையினின்று நாம் வேறு யென்று தவறுதல், தற்கொலை செய்ய முயல்கின்ற மூடன் செய்கையென்றே அறிவாளிகளனைவரும் உணர்வார்கள். சிலர் சந்தா நம்பர் விலாசம் (சரியாய்ப் பெயரைக்கூட) ஒன்றுமே தெரியாது சஞ்சிகைகள் வரவில்லையென்று 2, 3, கடிதங்கள் வரைகிறார்கள். அவைகளைப் பத்திரமாய்க் கட்டி வைக்காது நாமென்ன செய்யக்கூடும்?

உண்மையில் பலவிடங்களில் சஞ்சிகை பிறரால் அபகரிக்கப்படுகிறது. சஞ்சிகை வரும் காலத்தில் எந்தச் சந்தாதாரரேனும் ஊரிலில்லாவிட்டால், அவர் தபாலதிகாரிக்குத் தெரிவித்துச் சென்றாலும் "உமது சஞ்சிகை வரவில்லை; வந்தால் கொடுத்து விட்டிருப்போம்" என்ற விடையேகிடைக்கும். இதைப்பற்றி நாம் பன்முறை தெரிவித்தும் சந்தா நண்பர்கள் அது விஷயத்தில் கவனம் செலுத்துவதைக்காணோம்.

இதுமட்டுமல்ல. நாம் எத்தனையோ முறைகள் வேண்டிக்கொண்டிருந்தும் இன்னும் அனேகர் சஞ்சிகை சேராத அதே தமிழ்மாதக் கடைசிக்குள் தெரிவிப்பதில்லை. (இந்தியாவாசிகள்) மூன்று நான்கு மாதங்கள் கழித்து ஏதாவது வீண்சாக்குக்கூறி அச்சஞ்சிகைகளை யனுப்பும்படி கேட்கிறார்கள். பலர் சந்தா நம்பரைத் தெரிவிக்காமல் இடம் மாறுவதை மட்டும் எழுதிவிட்டு, பின்னால் "நான் அப்போதே தெரிவித்திருக்கிறேன்" என்று நம்மேல் நிஷ்டூரமாய் வரைகிறார்கள்.

முதலிற் கண்ட விஷயங்களை நாம் முன்னமே பன்முறை தெரிவித்திருந்தும் சிலர்,

"சந்தாதாரர் அதிகமாய் விட்டதால் தாங்கள் இலட்சியம் செய்யவில்லை—தங்கள் அக்கறைக்குறைவாலோ—தங்கள் குமாஸ்தாக்களின் மூட்டாள்தனத்தாலோதான் சஞ்சிகை வந்து சேரவில்லை" என்று இன்னும் பலவாறாய் யோசிக்காமலே வரைந்து விடுகிறார்கள். அந்தோ! இங்கு ஏற்பாடுகள் எவ்விதமாய் நடைபெறுகின்றன என்பதை இவர்கள் சற்றும் அறியார்களாதலால் இவர்கள்மேல் நமக்கு வருத்தமில்லை.

இப்போது நாம் அறிவித்துக் கொள்வதாவது:— சந்தாதாரர்கள் நமது கோரிக்கைகளையும் மனதில்வைத்துக் கலந்து நடந்துகொண்டால்தான் இத்தகைய குறைகள் சேரா. இவ்விஷயம் தேசநன்மையைப் பொருத்தியது என்பதை நண்பர்கள் கவனத்தில் வைக்கவேண்டுகிறோம்.

இப்போது நாம் விலாசங்களை அச்சடிப்பதால், தவறாய் விலாசம் யாருக்கேனும் வந்துகொண்டிருந்தால், அவர்கள் தயவுசெய்து உடனே தங்கள் சரியான சந்தா நம்பரையும் சரியான விலாசத்தையும் தெரிவிக்கக் கோருகிறோம்.

நண்பர்கள் இனியேனும் சந்தாநம்பர், விலாசம் மாறுதல் முதலியவற்றைப்பற்றி நமது கோரிக்கைகளைச் சற்று மனதில் வைத்து நடந்துகொண்டால், சஞ்சிகை தவறின்றிவரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பத்திராதிபர்

---

## வைத்தியக் குறிப்பு.

(394-ம் பக்கத்தொடர்ச்சி.)

கபசுரத்திற்கு முசுமுசுக்கை, சீந்தில் கொடி, லவங்கப்பட்டை, அதிமதுரம், சாய்ப்பட்டை, மாவிலிங்கப்பட்டை இவைகள் வகைக்கு ¼ பலம் சேர்த்துத் தூளாக்கி, ½ படி சலம் விட்டு, ¼ படி கஷாயம் இறக்கி, நாள் ஒன்றுக்கு 3 தடவை, வேளை யொன்றுக்கு ஒரு அவுன்ஸ் அல்லது 1 பாலாடை சாப்பிட்டுவர கபவாத சுரம் நீங்கும். இன்னும் கணக்கற்ற சிகிச்சைகள் இருப்பதினால் இத்துடன் நிறுத்திக் கொண்டு வேறு விஷயமாய்ச் சிறிது சொல்லுவோமாகவும். சுரங்கள் பலவுள்ளபடியால் அவற்றை விஸ்தாரமாய்ச் சொல்ல அவகாசமில்லாவிட்டாலும் பொதுவில் சுரங்கள் உண்டாவதற்குக் காரணங்களினும், சுரம் முதலான வியாதிகள் உண்டாகாதிருக்கும் மார்க்கங்களிலும் சிலவற்றைச் சொல்வோம். சுரங்களின் காரணங்கள் மேற் சஞ்சிகைகளில் சொல்லியிருக்கின்றோம். சுரம் உண்டாகாமல் இருக்க வேண்டிய மார்க்கத்தை இப்போது சொல்லுவோமாக. நமது முன்னோர்கள் சுரம் உண்டாகாதிருக்க அநேகவித ஔடதங்களைக் கண்டு பிடித்தும் அதில் உள்ள குணங்களை விவரமாக எழுதிவைத்தும் பிறர்க்கு உபயோகமாகும்படிச் செய்வித்ததுமன்றி, வியாதிகள் உண்டாகாதிருக்க ஒரு சுலபமான வழியை ஏற்படுத்தி அவ்வழியில் சகலரும் ஒழுகும்படியான முறைமையையும் கூறியிருக்கிறார்கள். அவை யாவையெனில்; சௌசம், ஆசமனியம், பிராணாயாமம், ஸ்நாநம், சந்தியா வந்தனம் என்னும் அரிய விஷயங்களைச் சகலரும் செய்யும்படி ஏற்படுத்தி வைத்தார்கள். தற்காலத்தவர்கள் முன்னோர்களின் அரிய விஷயங்களின் கருத்தை யறியாமலே அறிவிலிகளாய் மாறினபடியால், சகலத்தையும் கைவிட்டுப் பலவித ஈனர்களாயும் மேல்நாட்டாரால் ஆட்டிவைக்கும் பொம்மைகளாகவும் விளங்குகின்றார்கள். மேற் சஞ்சிகையில் அவற்றின் இரகசியங்களை வெளியிடுவோமாக. (தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

---

## சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்

சகோதர சகோதரிகளாகிய சந்தா நேயர்களே! நாம் ஒவ்வொருவரும் நம் ஆனந்தனைப்போன்ற எத்தனையோ நண்பர்களைக் கண்ணுற்றிருப்பினும் நம் ஆனந்தனைப்போல் இத்தகைய அரிய பெரிய இலௌகீக வைதீக ஆன்மார்த்த விஷயங்களென்னும் கல்வியைக் கற்றுள்ளவரை நாம் இதுவரை பார்த்திருக்க மாட்டோம். நம் ஆனந்தனை நண்பனையடையப்பெற்ற நாம்



ஒவ்வொருவரும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியிருக்கின்றோமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

நம் ஆனந்தனைக் கண்டோர் களிக்கின்றனர். காணாதோர் கதறுகின்றனர். இத்தகைய உயிர்த் தோழனாகிய நம் ஆனந்தன் மாதம் மாதம் நமக்குத் தரிசனம்தந்து பற்பல அரிய பெரிய விஷயங்களாகிய கல்வியென்னும் அமுதத்தை நமக்கு ஊட்டுகின்றனன். இத்தகைய அமுதத்தை நாம்மட்டும் புசிப்பதில் யாதொரு பிரயோஜனமுமின்றாம். பத்திரிகைகளிலுள்ள வியாசங்களென்னும் விஷயங்களின் தித்திப்பறியாப் பாமரர்கள் அனந்தம்பேரிருக்கின்றனர். நம் ஆனந்தன் எப்படி தன்னிடமுள்ள விஷயங்களை நமக்கு மாதம் மாதம் ஊட்டுகின்றானோ, அதுபோல நாமும் இனிதினி அப்பாமரர்களுக்கு பத்திரிகையிலுள்ள விஷயங்களாகிய அமுதத்தை ஊட்டிப் பின்னர் நம் ஆனந்தனை அறிமுகமாக்கிவிடின் அப்பாமரர்களை நம் ஆனந்தன் நல்வழியில் திருப்பி அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தையகற்றிப் பிரகாசிக்கச் செய்கின்றனன்.

அதில் ஒரு நண்பரின் சங்கதியைச் சுருக்கி இதனடியில் சிறிது வரைவாம்:

1905-ம் வருஷத்தில் குப்புசாமி என்ற ஒரு நண்பர் என்னுடன் கூட வாசித்து வந்தார். பிரைமெரி பாஸானவுடன் மேற்கூறிய நண்பர் பாடசாலையை விட்டுநின்று விட்டனர். பாஸானதினம் புத்தகம் பலகையைக் கரத்தி லெடுத்தவர்தான். அதன் பின்னர் எத்தகைய புத்தகமாயினும், பத்திரிகையாயினும் கரத்தில் தொடும் வழக்கமேயில்லை. இதனைக் கண்ணுற்ற யான் ஆச்சரியமுற்றவனாய் சிற்சில சமயங்களில் போதித்தும் பயன்படவில்லை. பின்னர் ஓர் நாள் யான் ஓர் காரியார்த்தமாய் மேற்கூறிய நண்பரின் இல்லத்திற்குச்சென்றேன். கூட நம்நண்பனாகிய ஆனந்தனும் வந்திருக்கின்றனன். மேற்கூறிய நண்பர் நம் ஆனந்தனைக் கண்ணுற்றதும் என்னை விளித்து, 'நண்பரே! இச்சிறுவன்யாவன்? மிக்க காந்தியுடையவனாயிருக்கின்றனன். இவன் வரலாறியாது?' என வினவினர். நானு மிதுதான் சமயமென நம் ஆனந்தனின் விருத்தாந்தங்களையும் குணாதிசயங்களையும் எடுத்தோதி அன்று நம் ஆனந்தனை அவரிடமேயேவிட்டு வந்தனன். மறுநாள் அந்நண்பர் என்னிடம்வந்து, நம் ஆனந்தனின் குணாதிசயங்களை வெகுவாய்ப்புகழ்ந்து கூறி இரவு ஆனந்தன் எனக்கு வேண்டியவரையில் போதித்து என்னைத் துன்மார்க்கமாகிய நரகத்தில் விழச்செய்யாமல் நன்மார்க்கமென்னும் புண்ணியத்திற்குச் செல்ல வழிகாட்டிய நன்றிக்குப்பதில் வருஷாவருஷம் ரூபாய் ஒன்றல்ல இரண்டு மூன்றானாலும் கொடுப்பேனென்றும், நம ஆனந்தனை தன் ஆயுளுள்ளளவும் மறக்கேனென்றும் பிரதிக்ஞை செய்து இன்றளவும் அப்படியே நடந்துவருகின்றனர். பத்திரிகை யெனில் பாம்பெனநடுங்கிய நண்பருக்குத் தற்காலம் பத்திரிகையே பரமபதம். ஆனந்தபோதினி யெனின் ஆனந்தமடைகின்றனர். மாதம் பிறந்து முதல் தேதியானதும் போஸ்டாபீஸிற்குச்செல்வதும் வருவதும் இதுதான்வேலை.

நண்பர்காள்! இத்தகைய துர்க்குணமுடையவரை நற்குணமுடையவராகச் செய்தவர் யார்? நம் ஆனந்தனன்றோ; ஆதலால் சந்தாநேயர்களாகிய சோதர சோதரிகளே! நாம் ஒவ்வொருவரும் தக்க முயற்சியெடுத்து பாமரர்கட்கு நம்மாலியன்றவளவு உபதேசம் செய்து நம் ஆனந்தனை அறிமுகமாக்கி வைக்கின் நம் இந்து தேசம் எத்தகைய நிலைமையிலிருக்குமென்பதைச் சற்று சிந்தித்து யோசியுங்கள். நம் ஆனந்த

போதினி பத்திரிகைக்கு 1000 சந்தாதாரர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். வருஷந்தோறும் ஒவ்வொரு சந்தாதாரரும் புதிதாக ஒவ்வொருவரைச் சந்தாதாரராகச் சேர்க்கின் 2-வது வருஷம் 2000 பேர் 3-வது வருஷம் 4000, 4வ-து வருஷம் 8000-இப்படியே வருஷா வருஷம் பத்திரிகை அபிவிருத்தியடைகின்றது மன்றி நம் இந்துதேச மென்னும் பெண்பால் கல்வியென்னும் புருஷனை யடைய ஹேதுவாயிருக்கும். நண்பர்காள்! இதனைச் சற்று ஆழ்ந்து யோசியுங்கள். 1 மற்ற தேசங்களைப்போல் கல்விப் பிரகாசமின்றி மழுங்கிக்கிடக்கும் நம் இந்து தேசமானது கல்விப் பிரகாசமுற்று விர்த்தியடைகின்றது. 2 தன்னலங் கருதாது பன்னலங் கருதும் மகா ள-ள-ஸ்ரீ பத்திராதிபரவர்கட்கும் பத்திரிகாசிரியரவர்கட்கும் இதனால் எத்தகைய சந்தோஷம். நம் இந்து தேசம் கல்விப் பிரகாசமுற்று முன்னுக்கு வரின் நமக்கு எத்தகைய சந்தோஷம். இதைச் சற்று ஆழ்ந்து யோசிக்க உங்களை மன்றாடுகிறேன்! மன்றாடுகின்றனன். நண்பர்காள்! மகா-ள-ள-ஸ்ரீ மஹாத்மா காந்தி என்பவர் யாருக்காக இத்தகைய கஷ்டப்படுகின்றனர்; தம் பெண்டு பிள்ளை பிழைப்பதற்காகவா? அன்று பின் யாதுக்கெனின் உலகோபகாரார்த்தமாக. ஆகவே சந்தா நேயர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் இதை வாசிப்பதோடு விட்டு விடாமலும், சிரமத்தைப் பாராமலும் நாமெல்லோரும் பந்துக்களாயிருந்து நம் இந்து தேசமென்னும் பெண்பாலுக்கு கல்வியென்னும் புருஷனை மணம் செய்து வைப்போமாக. "முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்" "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தம் மெய்வருந்தக் கூலிதரும்" என்ற ஆன்றோர் வாக்கியத்தை ஆய்ந்தோய்ந்து பாருங்கள். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

V. துப்புசாமி முதலி.
வழூர் (ராசீபுரம் தாலூகா)

---

## கற்கோட்டை—நாவல்

(439-ம் பக்கத்தொடர்ச்சி)

கரையில் காட்டப்பட்ட குறிப்பைத் தெரிந்துகொண்டோம் என்ற அடையாளத்திற்காகக் கப்பலிலிருந்த நீலத் தீபம் கீழே இறக்கப்பட்டு மறுபடி உயர்த்தப்பட்டது. ஜனங்கள் யாவரும் இன்னும் கப்பலிலேயே யிருக்கிறார்களென்றும், கப்பல் பாறைகளுக்கிடையில் சிக்கிக்கொள்ள வில்லையென்றும், ஆனால் அதிகமாய் அசைவாடிக்கொண்டு தத்தளிக்கிறதென்றும் தெரிந்தது. பெரும்பாலும் அவர்கள் படகுகளிலேறிவர முயல்வார்கள் என்று பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அச்சமயம் ஏதோ ஒரு கறுத்த வஸ்து அலையில் வருவதாய்த்தெரிந்தது. உடனே ஸர்தாரும் அவர் ஆட்களும் சங்கிலிபோல் ஒருவரோடொருவர் கைகோர்த்துக்கொண்டு சரிவான பாறையின் வழியாய்ச்சென்று, கடைசியிலிருப்பவன் நீரில் இறங்கி அப்பொருளை யிழுக்க, மற்ற பேர் அவன் அலையா லடித்துக்கொண்டு போகாதபடி கோர்வையாய் நெடுகக் கரையில் ஒருவர்கரத்தை யொருவர் கோர்த்துக்கொண்டு உறுதியாய் நின்றார்கள். அகப்பட்ட பொருள் மனிதர்தேகமல்ல. வெளிச்சத்தில் கொண்டுவந்து பார்க்கப்பட்டபோது அது ஒரு நீண்ட பெட்டியாயிருந்தது. அதைத்திறந்து பார்த்தபோது அதில் பலதேசக் கொடிகளும் இருந்தன. ஒன்றொன்றாக எடுத்தபோது இன்னொரு கொடியிருந்தது. அது கறுப்புக்



கொடி. அதன்மத்தியில் ஒருமனிதனுடைய எலும்புத்தலையும் குறுக்காய் வைக்கபட்ட இரண்டு எலும்புகள்போலவும் வெள்ளைநிறத்தில் இருந்தன. அதைக்கண்டதே யாவரும் ஆச்சரியப்பட்டுக் கூவினார்கள். ஏனெனில் அது கடற்கொள்ளைக் காரருடைய கொடி.

## 25-வது அத்தியாயம்.

சேதமடையும் கப்பல் கள்ளக்கப்பல் என்றறிந்ததே ஸர்தார் அமிர்த நாயகம் மிக்க கோபமடைந்தாரேனும், தன் ஆட்களை நோக்கி, "கள்ளப் பயல்களாயினும் நாம் காப்பாற்றவேண்டியதே. பிறகு அவர்கள் சட்டப்படி தண்டனை யடையட்டும்" என்றார்.

அச்சமயம் கொள்ளையடிக்கவந்தஆட்கள் பெருங் கூச்சலிட்டார்கள் ஸர்தார் வந்திருப்பதால் கொள்ளை யடிக்க முடியாமற் போகவே, கப்பற் சேதமடைந்தோர்க்கு உதவி புரிந்தால் சன்மானம் கிடைக்குமென்று எண்ணினார்கள். கூச்சலைக் கேட்டதே ஸர்தாரும் அவர் ஆட்களும் அங்கு ஓடினார்கள்.

ஜனங்கள், "ஓ! அதோ அதோ ஒரு கழியின்மேல் இரண்டுபேர்" என்றுகூவினார்கள். ஸர்தாரும் அத்திக்கை நோக்கி, "ஆ! ஆம், ஆம். இரண்டு பேர். அதோ அதோ சமீபத்தில்" என்றார். சிலர் துணிந்து இறங்கி ஒரு கழியில் கட்டப்பட்டிருந்த ஒருமாதையும், அக்கழியைக் கஷ்டத்தோடு பற்றிக்கொண்டிருந்த ஒரு மனிதனையும் கரைக்குக் கொண்டுவந்தார்கள். அம்மனிதன் அழகான ஒரு அன்னிய நாட்டான். அவன் அந்த ஸ்திரீயைக் குனிந்து பார்த்து "மூச்சுவருகிறது, உயிரோடிருக்கிறாள்," என்றான்.

ஸர்தார் இவள் உன் மனைவியாவென்றதற்கு அவன் ஆமென்று கூறிவிட்டு, "நல்ல ஜனங்களே! எங்கள் இருவரையும் காப்பாற்றினதற்காக மிக்க நன்றிபாராட்டுகிறேன். தயவுசெய்து எட்டப்போய்விடுங்கள். இவளுக்கு ஸ்மரணைவரும்போது நான் தனியே கிட்ட விருக்கவேண்டும் இன்றேல் பயப்படுவாள்" என்றான்.

ஸர்தார்:—"இவள் பயப்படுவாளோ! அல்லது இவள் வாய் விட்டு எதையேனும் கூறிவிடுவாளென்று நீ பயப்படுகிறாயோ?" என்றார்.

அம்மனிதன் அவ்வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு ஸர்தாரை யுற்றுநோக்கி, "என்ன நீர் கூறுவதனர்த்தம்?" என்றான்.

ஸர்தார் உடனே பெட்டியிலிருந்த அந்தக் கறுப்புக் கொடியை யெடுத்து பந்தத்தின் வெளிச்சத்தில் அவன்முன் காட்டினார். அதைக்கண்டதே யவன் திடீரென்று ஒரு வேங்கையைக் கண்டமேஷம்போல் அலறி, "அட சனியனே!" என்று கூவிக்கொண்டே ஜனக்கூட்டத்தை யிருகரங்களாலும் விலக்கிக்கொண்டே யோடினான். அதைக்கண்டஸர்தார், "அடேயடே! பிடியுங்கள்! அவனைப் பிடியுங்கள்! விடாதே! விடாதே!" என்று கூவினார். ஜனங்கள் பிடிக்க முயன்றும் அம்மனிதன் ஆவேசங் கொண்டவன்போல் பாய்ந்தோடிக் கொந்தளிக்கும் கடலில் குதித்துவிட்டான்.

அதைக்கண்ட ஸர்தார் கோபமடைந்து, "அட கோழைகளே! அவனைப்பிடிக்காமல் விட்டுவிட்டீர்களே!" என்றார். அவர் ஆட்களில் ஒருவன் "கூடியவரையில் பார்த்தோம். மேலும் கடலில் மீனுக்கிரையாய் மடியவேண்டிய விதி யிருப்பவன் தூக்குமரத்தில் மடிவானா?" என்றான். கடற்

கொள்ளைக்கு மரணதண்டனை. இதனால் பிடிக்கப்பட்டாலும் அவன் தூக்கில் மடியவேண்டியவனா யிருப்பதால் அவன் அவ்வாறியம்பினான். சற்று நேரம் பார்த்தும் அவன் கடலில் எங்கும் காணப்படவில்லை. மேலும் அத்தகைய கொந்தளிக்கும் கடலில் ஒருமனிதன் எவ்வளவு கெட்டிக்காரனாயினும் மடியாமல் தப்புவது கஷ்டமாகையால், இந்நேரம் எந்தமீனாவது அவனை விழுங்கிவிட்டிருக்கு மென்றே யாவரும் கருதிக் கொண்டார்கள்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் கப்பலில் தெரிந்த மூன்று இராந்தல் வெளிச்சமும் திடீரென்று மறைந்துவிட்டது. "கப்பல் அப்படி திடீரென்று முழுகிவிடுமென்று நினைப்பதற்கில்லை. ஒருசமயம் நம்மையேமாற்றிவிட்டு ஆற்றில்போய் மறைந்துகொள்ளக்கருதி தீபங்களை மறைத்து விட்டார்களோ? அப்படியாயின் கடலில் குதித்த மனிதன் தப்பிப்போய்க் கப்பலி லேறிக்கொண்டானோ" என்று ஸர்தார் சிந்தித்தார். கடைசியில் அனைவரும் ஒரேவாக்காய் அவனும் தப்பிப்போக முடியாது, அக்கப்பலும் அந்த விடத்தைவிட்டு இப்படிப்பட்ட கடலில் செல்லமுடியாது, எல்லாம் கடலுக்கிரையாய் விட்டனவென்று கூவினார்கள். ஸர்தாரும் ஆம் அப்படித்தானிருக்கவேண்டுமென்று கூறிவிட்டுக் குகையில் இருக்கும் ஸ்திரீ யென்ன நிலைமையி லிருக்கிறாளென்று பார்க்கச் சென்றார்.

கடற்கரையில் இச்சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கும் அதே நாளிரவில் கண்ணபிரான் விஷயமாய் இராணியின் கட்டளையை யறிந்துவரச் சென்ற சுந்தரநாயகம் பிரபுவின் ஆள் சமீபத்திலுள்ள பெரிய கருப்பூரி லிருக்கும் அப்பிரபுவின் மாளிகையை நெருங்கி வந்துகொண்டிருக்கிறான். அப்பிரபுவும் "கண்ணபிரானுடைய மரணதண்டனை சீக்கிரம் வருமா, அவனுடைய திரண்ட ஆஸ்தி பூஸ்திதி, பணம் யாவற்றையும் நாம் அடையலாமா" என்று ஆவலோடு எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறார். அவன் இரத்னமாளிகையின் வாயிலில்வந்து குதிரையைவிட்டிறங்கியதும் "ஆ, மணவாளா, வா வா!" என்று சந்தோஷக்கூச்சல் கிளம்பியது.

மறுநிமிடம் அவன் பிரபுவின் முன் நின்று "பிரபுவே, சந்தோஷ சமாசாரம்" என்றான்.

**பிரபு.**—எனக்கா!

**மணவாளன்.**—"ஆம். தங்களுக்கே. நாளையதினம் கண்ணன் தலை தரையில் உருண்டுவிடும். நாளைமுதல் நான் தங்களைப் பெரிய பிரபுவேயென்று கூப்பிடுவேன்" என்றான்.

சுந்தரநாயகம் பிரபு ஓர் கீழ்தரப்பிரபுவே. மிக்க செல்வமும் கிடையாது. புராதனமாளிகைமட்டும் மிக்க கெம்பீரமானது. கண்ணபிரானுடைய மிக்க உயர்ந்தபட்டமும், திரண்ட செல்வமும் தனக்குக் கிடைக்குமென்பதால் அவன் மரணத்தில் சுந்தரநாயகர்க்கு மிக்க ஆவல். ஆயினும் கடவுள் எப்படி அவனுடைய பேராசைபொருந்திய கொடிய எண்ணத்தை முடிக்கிறார் பார்ப்போம்.

பிரபு கொண்டுவரப்பட்ட சங்கதியைக்கேட்டு மிக்க ஆனந்தமடைந்து "உனக்கு மிக்க பாரமான வெகுமதி கிடைக்கும். தற்சமயம் இதைப் பெற்றுக்கொள்" என்று தன் கையிலிருந்த மிக்கவிலையுயர்ந்த ஒரு மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்து, "நடந்த சங்கதி யென்ன?" என்றார்!

**மணவாளன்.**—நான், முதல், இராணியின் காரியஸ்தரைக் கண்டு கண்ணபிரான் தங்களிடம் வந்ததாகவும், தாங்கள் இராணியின் கட்டளைப்படி



யவனைப் பிடித்து நியாயாதிபதியிடம் ஒப்புவித்திருப்பதாகவும், ஆயினும் மிக்க விசனப்படுவதாகவும் கூறினேன். பிறகு இராணியின் சமுகத்தில் நான்கொண்டுபோகப்பட்டபோது, அங்கும் அப்படியே கூறினேன். நாம் உத்தேசித்தபடியே அவன் நடத்தைகள் எப்படியிருந்தவை யென்று என்னைக் கேட்டார்கள். அப்போது நானே கூறும் பாவனையாய் எவ்வளவுவரையில் கூறவேண்டுமோ அதற்கு அதிகமாகவே கூறினேன். அவனைவிட அயோக்கியன் உலகில் கிடைப்பது கடினம் என்று விளங்கும்படி கூறி, ஆனால் பாபம் பிரபுவுக்கு அவ்வளவும் தெரியாது என்று கூறினேன். கடைசியில் இராணி "சட்டத்தின்படி தக்கால சந்தர்ப்பத்தை யனுசரித்து எப்படி நடத்தவேண்டுமோ அவ்வாறேசிந்தித்து நடத்தும்படி நியாயாதிபதியாகிய ஸர்தார் அமிர்த நாயக மவர்களிடம்கூறு என்று கட்டளையிட்டதோடு, தங்களுடைய இராஜ விசுவாசத்திற்கு மிக்க சந்தோஷம் கொள்வதாய்க் கூறச் சொன்னார்கள்" என்றான்.

**பிரபு.**—"பேஷ், இது கொலை உத்தரவிற்குச் சமானமே. நியாயாதிபதி, விசாரணை முதலிய எதுவும் செய்யவேண்டிய அக்கறையே யில்லை, உடனே வேலையை முடிக்க வேண்டியதே" என்று சந்தோஷத்தால் பொங்கினார்.

**மணவாளன்**—"பிரபுவே, நாளை நான் இராணியின் கட்டளையைக் கூறிய உடனே ஆலசியமின்றி வேலைமுடிந்துவிட வேண்டும். ஏனெனில், கண்ணப்பன், நாம்தான் மடியப் போகிறோமே யென்று, படிகளின் சங்கதியை வெளியிட்டு விடுவானோவென்று அஞ்சுகிறேன்" என்றான்.

**பிரபு.**—ஆ! அன்று கண்ணன் அறியதினம் அப் படிக்கட்டுகளின் ஓர்பாகம் கீழ்விழுந்ததை யின்னும் சரிப்படுத்த வில்லையே!

**மணவாளன்.**— யாரேனும் நம்மவரில் ஒருவன் உதவியைக்கொண்டு செய்து விட்டிருக்கலாமே.

**பிரபு.**—"இன்னொருவரை யந்த இரகசியத்தில் சேர்ப்பது அபாயம்; ஆதலால், நீயே வரட்டுமென் றிருந்தேன்; நீ முன்னே போசனம்செய்து விட்டுவா" என்றார்.

மேற்கூறப்பட்ட படிக்கட்டுகளின் கீழ் ஓர் ஆழமுள்ள பெரிய கிணறு இருக்கின்றது. கீழுள்ள அடித்த சுவரில் ஒரு அறைக்குள் அதற்கு வேண்டிய எந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. படி விழுந்தபின் அந்த எந்திரத்திலுள்ள ஒரு சூத்திரக்கயிற்றின் உதவியால், ஒரே மனிதன் ஒரு சக்கரத்தைச் சுற்றிப் படிகளை, முன்போல் மேலுக்கு ஏற்றிப் பழைய நிலைமையில் பொருந்தும்படி செய்துவிடலாம். எந்திரத்தின் தலைப்பில் இரண்டு மரைகளிருக்கின்றன. அவற்றின் பக்கத்தில் தொங்கும் ஒரு பெரிய இரும்புச் சட்டத்தை மரைகளுக்கு நேராய் நிறுத்தி அம்மரைகளை முடுக்கிவிட்டால், படிகளின்மேல் மனிதர் ஏறினால் படிவிழாது. மரைகள் கழற்றப்பட்ட நிலையிலிருந்தால்தான் படி விழும். இந்த விவரம் வாசிப்பவர் மனதில் தங்கி யிருக்கவேண்டும்.

மணவாளன் போஜனம் முடிந்து வந்ததும், "பிரபுவே ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான். உடனே பிரபுவும் மணவாளனும் யாருக்கும் தெரியாமல் கீழிறங்கினார்கள். மணவாளன் கையில் ஒரு சுருளை கப்பிக்கயிறு எடுத்துச் சென்றான். (தொடரும்) ஆரணி. குப்புசாமி முதலியார்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்தி௵ ஆடிமீ —சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020-

பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1337-

இங்கிலீஷ் 1919-ம்௵ ஜூலைமீ —ஆகஸ்டுமீ

| ஆடி | ஜூலை | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | பு | தி-13-19 | அவி-16-58 | ம-17 சி | மாதப்பிறப்பு |
| 2 | 17 | வி | ச-10-29 | சதை-15-56 | ம-16 சி | கரிநாள் |
| 3 | 18 | வெ | பஞ்-6-37 | பூர-13-55 | சித்த-60 | ருதுசாந்தி |
| 4 | 19 | ச | ஷ-1-15 | உத்-11-8 | சித்த-60 | மேற்கே பிரயாணம் |
| 5 | 20 | ஞா | அ-50-50 | ரேவ-7-44 | அ-60 | சாத்திராப்பியாசம். |
| 6 | 21 | தி | நவ-44-45 | அசு-3-51 | சித்த-60 | விதை விதைக்க |
| 7 | 22 | செ | தச-38-40 | * கிரு-55-40 | சி-56 அ | கிருத்திகை விரதம் |
| 8 | 23 | பு | ஏ-32-43 | ரோக-51-48 | சித்த-60 | சீமந்தம், கர்ணவேதை |
| 9 | 24 | வி | து-27-1 | மிரு-48-13 | மர-60 | ............... |
| 10 | 25 | வெ | திர-21-48 | திரு-45-17 | சித்த-60 | கரிநாள் |
| 11 | 26 | ச | ச-17-17 | புன-43-3 | சித்த-60 | மேற்கே பிரயாணம் |
| 12 | 27 | ஞா | ●-13-36 | பூச-41-47 | சித்த-60 | அமாவாசை விரதம் |
| 13 | 28 | தி | பிர-11-0 | ஆயி-41- 2 | சித்த-60 | வைக்கிரக சாந்தி |
| 14 | 29 | செ | து-9-26 | மக-12-28 | சித்த-60 | கசம்தோண்ட |
| 15 | 30 | பு | தி-9-3 | பூர-44-36 | அ-60 | சித்திரம் எழுத |
| 16 | 31 | வி | ச-10-5 | உத்-48-0 | ம-48 சி | ............... |
| 17 | 1 | வெ | ப-12-23 | அஸ்-52-38 | அ-52 சி | சீமந்தம், விதைக்க |
| 18 | (ஆகஸ்டு 1919) 2 | ச | ஷ-15-55 | சித்-58-7 | ம-58 அ | ............... |
| 19 | 3 | ஞா | சப்-20-0 | சுவா-60-0 | சித்த-60 | |
| 20 | 4 | தி | அ-24-42 | சுவா-4-14 | மர-60 | |
| 21 | 5 | செ | நவ-29-33 | விசா-10-38 | ம-11 சி | |
| 22 | 6 | பு | தச-34-19 | அனு-16-57 | சித்த-60 | |
| 23 | 7 | வி | ஏ-38-28 | கேட்-22-49 | சித்த-60 | |
| 24 | 8 | வெ | து-41-40 | மூல-27-50 | அ-28 சி | |
| 25 | 9 | ச | திர-43-47 | பூரா-31-50 | சித்த-60 | |
| 26 | 10 | ஞா | ச-44-42 | உத்-34-38 | அ-60 | |
| 27 | 11 | தி | ○-44-17 | திரு-36-11 | அ-36 சி | |
| 28 | 12 | செ | பிர-42-37 | அவி-36-31 | சித்-36-ம | |
| 29 | 13 | பு | து-39-48 | சத-35-42 | சி-35 அ | பூமி, கிரகம் வாங்க |
| 30 | 14 | வி | தி-35-57 | பூர-33-48 | சித்த-60 | பயிர் ஏத்தம் போட |
| 31 | 15 | வெ | ச-31-21 | உத்-31-9 | சி-31 அ | கொடிகள் உதயம் |
| 32 | 16 | ச | ப-26-7 | ரே-27-53 | ம-28 அ | மேற்கே பிரயாணம் |

| | | | |
|---|---|---|---|
| | . | கே | செ |
| | 28-க-செ<br>18-கன்-க | | ர-பு<br>குரு |
| | | | சு-ச |
| | ராகு | | |

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR, AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

16400